# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXXVII (Nos. 1 to 5)

19th, 20th and 22nd to 24th March 1982

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

PRICE *Rupees* 1

122063

## .Y-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

19*th*, 20*th and* 22*nd to* 24*th March* 1982.

VOLUME CLXXXVII (Nos. 1 to 5).

## TABLE OF CONTENTS.

*Friday,* 19*th March* 1982.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council .. .. .. .. .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. | ix—xi |
| 1. Questions and Answers .. .. .. | 1—22 |
| 2. Announcement *re*— | |
| Expunction of certain portion of the Proceedings of the House, dated 5th March 1982 .. .. | 22—23 |
| 3. Privilege issue *re*— | |
| Circular of Secretary to Government, Education Department and the Director of School Education about sending of replies to representations made by Members of the Legislature .. .. | 23—29 |
| 4. Call Attention Notices— | |
| (1) Agitation launched by villagers affected by land acquisition for the Second Thermal Station in Neyveli and consequent dislocation of work in Thermal Station .. .. .. | 30—31 |

*Friday, 19th March* 1982—cont.


PAGES

(2) Disparity in service conditions of Doctors working in Rural Dispensaries and Urban Hospitals under Government control .. 32—34

5. Government Motion—

Policy Note on Education .. .. 34—100

6. Papers laid on the table of the House .. .. 100—104

*Saturday, 20th March* 1982.

1. Obituary reference *re* death of Thiru J. B. Kripalani .. .. .. .. 177—178

2. Government Motion—

Dispensing with Question Hour .. .. 178

3. Call Attention Notice—

Injuries caused to several persons due to Police firing on 13th February 1982 at K. V. Kuppam near Gudiyatham during Jallikattu festival .. 178—179

4. Discussion on the Policy Note on Education .. 179—350

5. Papers laid on the table of the House .. .. 351

*Monday, 22nd March* 1982.

1. Questions and Answers .. .. .. 355—379

2. Call Attention Notices—

(1) Setting fire to Thiruvalluvar Transport Corporation Delux bus and looting of personal belongings of passengers on 9th March 1982 on G.S.T. Road opposite to Meenambakkam Air Port. .. 379—380

(2) Stomach ache of 100 children belonging to St. John Britto Middle School, Thanjavur, consequent on their taking food in their hostel 331383

3. Presentation of the Final Statement of Supplementary Expenditure for 1981-82 .. .. 383-35




*Monday, 22nd March* 1982—cont.


PAGES

4. Statement correcting the answer to a supplementary question by the Minister for Irrigation .. 386

5. Government Motion—

Discussion on the Policy Notes on Medical and Public Health .. .. .. 386—498

6. Papers laid on the table of the House .. 499

*Tuesday, 23rd March* 1982

1. Questions and Answers .. .. 593—611

2. Information *re* alleged threatening telephone calls to a Member of the Council .. .. .. 612

3. Adjournment Motion *re*—

Wrong distribution of question paper at the S.S.L.C. Examination on 22nd March 1982, in Muslim Higher Secondary School, Triplicane .. 612—617

4. Call Attention Notice—

Appointment of Judicial Second Class Magistrates in contravention of the provisions of the Constitution of India .. .. .. 617—619

5. Government Motions—

(1) Election of 9 members to the Committee of Privileges .. .. .. .. 619—620

(2) Election of six members to the House Committee .. .. .. .. 620—621

6. Discussion on the Policy Note on Backward Classes and Adi-Dravidar and Tribal Welfare Department .. .. .. 621—703

7. Papers laid on the table of the House .. 703—785

*Wednesday, 24th March* 1982.

1. Questions and Answers .. .. .. 787—805

*Wednesday, the 24th March 1982*—cont.


| | PAGES |
|---|---|
| 2. Call Attention Notices— | |
| (1) Increase in rents of shops belonging to Cuddalore Municipality .. .. | 806—807 |
| (2) Spread of Pneumonia in Madras City .. | 807—810 |
| 3. Discussion on the Final Statement of Supplementary Expenditure for 1981—82 .. .. | 810—893 |
| 4. Papers laid on the table of the House .. .. | 893—894 |
| INDEX .. .. .. .. | 901—942 |


உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. | i—v |
| தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | vii |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் (தமிழ் அகரவரிசைப் படி தயாரிக்கப்பட்ட பட்டியல்) .. .. | ix—xi |
| 1 வினாக்கள்—விடைகள் .. .. .. | 1—22 |
| 2 அறிவிப்பு— | |
| 5-3-1982 அன்றைய மேலவை நடவடிக்கை குறிப்புகளிலிருந்து சில பகுதிகளை நீக்குவது குறித்து .. .. .. | 22—23 |
| 3 உரிமைப் பிரச்சினை— | |
| கல்வித்துறைச் செயலாளர், பள்ளிக்கல்வி இயக்குநர் ஆகியோர் மீது உரிமைப் பிரச்சினை குறித்து .. .. .. | 23—29 |
| 4 கவன ஈர்ப்பு— .. .. | |
| (1) நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம் அமைய இருக்கும் பகுதியில் நில ஆர்ஜிதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கிராம வாசிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருவதால் அனல் மின் நிலையப் பணிகள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து .. .. | 30—31 |
| (2) அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நகர்ப்புற கிராமப் புற மருத்துவ மனைகளில் பணியாற்றும் மருத்துவர்களிடையே பாகுபாடு இருப்பது குறித்து .. .. | 32—34 |
| 5 அரசின் தீர்மானம்— | |
| கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது விவாதம் .. .. .. | 34—100 |
| 6 அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 100—104 |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. THE HONOURABLE DR. V. R. NERUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education, Official Language and Handlooms.

8. THE HONOURABLE DR. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KULANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor-Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised, Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister for Public Works and Khadi, in charge of Khadi, Prohibition excluding grant of liquor permits passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு .கே ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு இராம எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி மற்றும் கைத்தறி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)-வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம்; கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்பு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி—(போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன். (கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவு சீட்டு. பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## மிழ்நாடு சட்டமன்றப் மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம.பொ. சிவஞானம்

மேலவைத் துணைத் தலைவர்

புலவர் புலமைப்பித்தன்

மாற்றுப் தலைவர்கள் பட்டியல்

1. திரு. சி. ரா. இலட்சுமிகாந்தன்
2. திருமதி. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி
3. திரு. ஏ. ஜே. தாஸ்
4. திரு. சி. ராமலிங்கம்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி. எஸ். சி.பி, எல்.,

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி. ஏ., பி. ஜி.எல்.பி. எல்.,

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு வீரசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11. சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி — கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சண்முகம், திரு. ப. உ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14 சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15 சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |

| தொடக்க இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 19 | தாமஸ், திரு. பா. ரா. | மதுரை—இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 | தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21 | தாராசெரியன், திருமதி. | நியமனம். |
| 22 | தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 | துரைசாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 | நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 | நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 | புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 | மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 | மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 | மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 | மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 | முத்து, திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 32 | முத்துசாமி, திரு. செ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 33 | முத்தையா செட்டியார், டாக்டர் ராஜா சர், எம். ஏ. | நியமனம். |
| 34 | முனுசாமி, திரு. பீ. | நியமனம். |
| 35 | லீலாவதி, செல்வி அ. | சென்னை—செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 | லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு—தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 | வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38 | வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 | வீரப்பன், திரு. இராம. (செய்தி - அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |



| தொடக்க இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 40 | வெங்கடேசன், ஈ. எஸ். | நியமனம். |
| 41 | ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்). | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42 | ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 43 | வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 | ஷை | ஷை |
| 45 | ஷை | சேலம் — தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 | ஷை | ஷை |
| 47 | ஷை | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 | ஷை | ஷை |
| 49 | ஷை | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 | ஷை | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 | ஷை | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 | ஷை | ஷை |
| 53 | ஷை | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 | ஷை | ஷை |
| 55 | ஷை | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 | ஷை | ஷை |
| 57 | ஷை | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 | ஷை | ஷை |
| 59 | ஷை | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 | ஷை | ஷை |
| 61 | ஷை | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 | ஷை | ஷை |
| 63 | ஷை | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்டமன்ற மேலவையின் அறுபத்தொன்றாவது கூட்டத் தொடர்.

வெள்ளிக்கிழமை, 1982 மார்ச் 19

பங்குனி 6, துன்மதி — திருவள்ளுவராண்டு, 2013

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Film Institute, Madras.*

* 169. *Q.*—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru K. RAMAMOORTHY) : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state the number of students studying in the various courses in the Tamil Nadu Film Institute, Adayar, Madras, as on 1st December 1981 ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : 1—12—1981 தேதிய நிலவரப்படி சென்னை, தமிழ்நாடு திரைப்படத் தொலைக் காட்சி தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பல்வேறு பயிற்சிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 144.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்தக் கல்லூரியில் படித்த மாணவர்கள் மிகுந்த பயனடைந்து வருகிறார்கள். அதனாலே இந்தக் கல்லூரியிலே படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ? மேலும் புதிய துறைகளையும் சேர்க்கும் எண்ணம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கடந்த ஆண்டுக்கு முன்னாலே இருந்த மாணவர்களின் எண்ணிக்கையைவிட கடந்த ஆண்டு ஒவ்வொரு துறையிலேயும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி இருக்கிறோம். இப்போது இருப்பதைத் தவிர மேலும் புதிய துறைகளை இப்போது ஆரம்பிக்கும் ஆலோசனை இல்லை.

[1982 மார்ச் 19

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : திரைப்படத் தொழில் பயிற்சி வகுப்புகளிலே படித்துவரும் மாணவர்கள், தங்களுடைய படிப்பை முடித்த பின்னர், அவர்களே சொந்தமாகத் திரைப்படம் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டால், இப்போது அரசு நிதியுதவி செய்ய முன்வருகிறதா ? அதற்கான திட்டம் ஏதேனும் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : திரைப்படத் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் சிறிது காலம் அனுபவம் பெற்ற பின்னர் படம் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டால்தான் அது பயனுடையதாக இருக்கும். படித்துவிட்டு வெளியே வந்தவுடனே சொந்தமாக ஆரம்பிப்பது என்பது நடைமுறையிலே ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்று. மேலும் அப்படி அனுபவம் இல்லாமல் வெறும் படிப்பிலே மட்டும் தேர்வு பெற்றிருக்கின்ற மாணவர்களை நம்பி அரசு முதலீடு செய்வது என்பது கொஞ்சம் யோசிக்க வேண்டிய விஷயம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தத் திரைப்படத் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயின்ற மாணவர்களில் யாரேனும் அவர்களின் பயிற்சிக்குப் பின்னாலே நம்முடைய செய்திப் படத் துறையிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது அவர்கள் வெளியிலே சென்று மிகப் பெரிய பிரபலமானவர்கள் என்ற அளவிலே வந்திருப்பவர்கள் யாராவது இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அகில இந்திய அளவிலே ஒளிப்பதிவாளர் பரிசு பெற்றிருக்கின்ற சிலர் இந்தத் தொழிற் பயிற்சிக் கல்லூரியிலேயே படித்து வெளியேறிய மாணவர்கள்தான். அகில இந்திய அளவிலே டி. வி. நிலையங்களிலும், மத்திய அரசிலும் மேலும் பல தனிப்பட்ட நிறுவனங்களிலும் இந்த நிறுவனத்திலே படித்து பயிற்சி பெற்றவர்கள் வேலைக்குச் சென்று புகழ் பெற்றிருக்கிறார்கள். தமிழகத்திலேகூட இப்போது 'புதிய அலை'—'நியூவேவ்' என்று சொல்லும் அந்த அடிப்படையிலே வந்து கொண்டிருக்கும் திரைப்படங்களைத் தயாரிப்பதிலே ஈடுபட்டிருக்கும் பலர் இந்தக் கல்லூரியிலிருந்து வெளிவந்திருப்பவர்கள்தான். நம்முடைய தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரியில் இப்போது இருக்கின்ற முதல்வர் அவர்களேகூட இந்தக் கல்லூரியிலிருந்து பயிற்சி பெற்றவர் என்பதுதான் எனக்குத் தெரிந்தவரை சரியான தகவல் என்று கருதுகிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : திரைப்படத் தொழில் பயிற்சி நிறுவனத்தில் எந்தப் பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்கள் அதிகமான அளவிலே வருகிறார்கள் ?



1982 மார்ச் 19]

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இப்போது 'இயக்குநர், ஒளிப்பதிவு' போன்ற அந்தத் துறைகளிலே மாணவர்கள் அதிகமான பேர் வருகிறார்கள். நடிப்பைப் பொறுத்தவரையில், மாணவர்கள் அதிகமாக வருகிறார்கள். மாணவிகள் அதிகமாக இல்லை.

திரு. பா. ரா. தாமஸ் : இந்தத் தொழிற் பயிற்சி நிறுவனத்திலே நமது அரசுக்குத் தேவையான விளம்பரப் படங்களை எடுத்து வருகிறதா ? இந்த நிறுவனத்தாலே நாம் பெரிய அளவிலே நன்மை பெற்று வருகிறோமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்தத் தொழில் பயிற்சி நிறுவனத்தின் சார்பிலே விளம்பரப் படங்கள் எடுக்கவில்லை. அரசின் சார்பிலே செய்திப் படங்கள் எடுப்பதற்கு அரசின் சார்பிலே கருத்து விளக்கப் படங்களை எடுப்பதற்கு, 'பிலிம்ஸ் டிவிஷன்' என்ற தனிப்பிரிவு ஒன்று இயங்கி வருகிறது.

## 'சிவப்புமல்லி'—'தண்ணீர் தண்ணீர்'

*170. வினா— திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 'சிவப்பு மல்லி', 'தண்ணீர் தண்ணீர்' ஆகிய திரைப்படங்களைத் தடைசெய்யுமாறு மாநில அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளது என்பது உண்மையா ?

(இ) இப்படங்களைத் தடை செய்யக் கூடாதென்றோ அல்லது தடை செய்ய வேண்டுமென்றோ கோரி, தமிழக அரசுக்கு மனுக்கள் வந்துள்ளனவா ?

(உ) ஆம் எனில், அவைகளின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) 'சிவப்பு மல்லி', 'தண்ணீர் தண்ணீர்' ஆகிய திரைப்படங்களைப் பற்றி அரசுக்கு சில மனுக்கள் வந்தன. அவற்றில் சிலர் அத்திரைப் படங்களைத் தடை செய்ய வேண்டும் என்றும், சிலர் தடை செய்யக்கூடாது என்றும் கோரியுள்ளனர். மேற்படி மனுக்களின் நகல்கள் மத்திய திரைப்பட தணிக்கைக் குழுவிற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த மனுக்களைத் திரைப்படப் பிரிவுக்கு அனுப்பிய போது மாநில அரசின் சார்பாக ஏதேனும் குறிப்புகள் அனுப்பப்பட்டதா ? குறிப்பிட்ட இந்தப் படங்களிலே ஆட்சேபகரமான

பகுதிகள் எவையேனும் இருக்கின்றன என்று அரசு கருதுகிறதா? இதுபற்றி மாநில அரசினுடைய திட்டவட்டமான கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்த இரண்டு படங்களுமே அநேகமாக திரையிடப்பட்டு முடிவுபெற்ற நிலையிலே இப்போது இருக்கின்றன. இந்தக் கேள்வி நீண்ட காலத்துக்கு முன்னாலே கேட்கப்பட்ட கேள்வி. விடை இப்போதுதான் வந்திருக்கிறது. மீண்டும் இதைப்பற்றி விவாதித்து அந்த விவரங்கள் பத்திரிக்கைகளிலே வருவதற்கு வழி வகுக்கும் வகையிலே மீண்டும் ஒரு விவாதமாக இந்தப் பிரச்சினை இருக்க வேண்டாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள் 'மத்திய அரசுக்கு அந்த மனுக்களை அனுப்பும்போது மாநில அரசினுடைய கருத்துக்கள் ஏதாவது தெரிவிக்கப்பட்டதா' என்று மத்திய அரசினாலே தணிக்கை செய்யப்பட்ட பின்னர் திரையிடப்பட்ட திரைப்படங்கள் இவைகள். ஆகவே, மாநில அரசு இதிலே எந்தவிதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை. மக்களுடைய கருத்துக்கள் மனுக்களாக வந்தன. அவைகள் அனுப்பி வைக்கப் பட்டிருக்கின்றன. இவைகளிலே ஆட்சேபகரமான எவையேனும் இருக்கிறது என்று அரசு கருதுகிறதா என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இந்தக் கேள்விக்கு உடனடியாக பதில் அளிக்கும் அளவுக்கு கருத்துக்களைச் சொல்ல முடியாது. அது விவாதத்துக்கு உரிய பிரச்சினையாக இருந்தாலும், அதனால் மாநில அரசுக்கு ஏதாவது சங்கடம் வந்துவிடும் என்று நாங்கள் எண்ணவும் இல்லை, கவலைப்படவும் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதிலே 'தண்ணீர் தண்ணீர்' என்ற படத்தை நானே பார்த்தேன். அந்தப் படத்தைப் பார்த்தபோது, பொதுவாக அரசியல் கட்சிகளைப்பற்றி, ஆட்சியிலே உள்ள குறைபாடுகளைப்பற்றி, போட்டியிடுகின்ற வேட்பாளர்களைப் பற்றிய குறைகள் சுட்டிக்காட்டப் பட்டனவே தவிர, குறிப்பிட்ட அரசைத் தாக்க வேண்டும் என்றோ, விமர்சிக்க வேண்டும் என்றோ அந்த அளவிலே கருத்துக்கள் இல்லை. என்னைப் போன்றவர்கள் சாதாரணக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் ஏற்படும் கருத்து அப்படி அல்ல. இதிலே வன்முறைக் கருத்துக்கள் இருப்பதாக, வன்முறையைப் பரப்பும் அளவுக்கு இதிலே கருத்துக்கள் இருப்பதாக ஒரு கருத்து மாநில அரசின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டதாக பத்திரிக்கைகளிலே வந்ததை நான் பார்த்தேன். இப்படிப்பட்ட நிலைமை வரும்போது, ஜனநாயகக் கருத்துக்களை வெளியிடும்போது, ஜனநாயக உணர்வுகளை வெளியிடும்போது அவைகளுக்கு முட்டுக்கட்டை போடும் முயற்சிகளிலே மாநில அரசு ஈடுபடலாமா? அது ஜனநாயக வளர்ச்சிக்கு நல்லதா?



மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாநில அரசு இதிலே எந்தவிதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை என்று நான் தெரிவித்ததற்குப் பிறகு, 'மாநில அரசு முயற்சிக்கலாமா, தடை போட முயற்சிக்கலாமா?' என்ற அளவிலே எப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. திரைப்படங்களைப் பார்ப்பதும், அதிலே வரும் கருத்துக்கள் எப்படி எப்படி தோன்றுகின்றன என்பதும் அவரவர்களுடைய மன நிலையைப் பொறுத்தது. பார்க்கும் கண்களின் கூர்மையைப் பொறுத்து, பார்வையின் கூர்மையைப் பொறுத்து, அல்லது அவர்களுடைய சூழ்நிலையைப் பொறுத்து இருக்கிறது. இந்தத் 'தண்ணீர் தண்ணீர்' விவாதத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தலைவர் அவர்கள் நான் விளக்கியதற்குப் பிறகும் கூட, இந்தக் கேள்வியை அனுமதித்து விட்டதன் காரணத்தாலே, அரசாங்கத்தின் சார்பிலே ஒரு கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சில நேரங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே கேட்டதைத் தானே திரும்பத் திரும்பக் கேட்கிறார்கள் என்று சொன்னாலும், மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள் நான் என்ன செய்வது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்கள் அனுமதித்து விட்ட பிறகு, அமைச்சர் அவர்களாலே பதிலளிக்க முடியவில்லை அல்லது பதில் அளிக்க முடியாமல் அமைச்சர் அவர்கள் மௌனமாக இருந்து விட்டார் என்ற குற்றச்சாட்டு வந்துவிடும். இருந்தாலும் பொது நன்மையைக் கருதி ஒரு கருத்தைச் சொல்கிறேன். திரைப்படங்களைப் பொறுத்த வரையில், அவைகள் இரண்டு வகைகளில் எடுக்கப்படுகின்றன. 'ரியல் ஆர்ட்ஸ் பிலிம்' என்ற வகையிலே ஒன்று. மற்றொன்று 'கற்பனையிலே சில நிகழ்ச்சிகளை மக்களுடைய மகிழ்ச்சிக்காக எடுப்பது' என்பது. அந்த 'ஆர்ட் பிலிம்' என்பது 'ரியலிசம்' — உண்மையான அடிப்படை நிலைமைகளை வைத்து எடுக்கப்படுவது என்று சொல்கிறார்கள். அது எந்த அளவுக்கு ரியலிசமாக இருக்கிறது, அது மக்களுக்கு எந்த அளவுக்குப் பயன்படும் அளவுக்கு இருக்கிறது. எந்த அளவுக்கு மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதெல்லாம் பிரச்சினைக்குரிய விஷயம். இந்தக் குறிப்பிட்ட 'தண்ணீர்-தண்ணீர்' என்ற படத்தில் அவர்கள் அரசியல்வாதிகளைக் கேலி செய்வதோ அரசாங்க நிர்வாகத்தைக் கேலி செய்வதோ என்பதைப் பொறுத்தவரையில், அது அவரவர்களுக்குரிய உரிமை.

(முற்பகல் 9—40)

யாரைப் பற்றியும் யாரும் கேலி செய்யலாம் என்று ஆரம்பித்தால், அதற்கு எல்லையே இருக்காது, வரைமுறையும் இருக்காது. அதோடு, யாரும்

அதிலிருந்து தப்பவும் முடியாது. தற்போது திரைப்படம் எடுப்பவர்கள் தங்களையே கேவலமாகச் சித்தரிக்கும் வகையில் திரைப்படம் எடுத்துக் கொள்கிறார்கள். அதை யாரும் தடுக்க முடியாது. நேற்றைக்குக்கூட நான் ஒரு திரைப்படத்தைப் பார்த்தேன். திரைப்படம் எடுக்கும் தொழிலில் ஈடுபடு கிறவர்கள் அனைவரும் கேவலமான உணர்ச்சிகளுக்காகவே அதில் ஈடுபடு வதைப்போல், அந்தத் திரைப்படம் எடுக்கப்பட்டு அது ஓடிக் கொண்டிருக் கிறது. அதைத்தான் 'நியு வேவ்' என்று சொல்கிறார்கள்.

(ஒரு குரல் : அந்தத் திரைப்படத்தின் பெயர் என்னவென்று அமைச்சர் அறிவிப்பாரா ?

அந்தத் திரைப்படத்தின் பெயரைச்சொல்லி அதற்கு நான் விளம்பரத்தைக் தேடித்தர விரும்பவில்லை. ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடு கிறார்கள். அவர்கள் திரைப்படங்களானாலும் சரி, பத்திரிக்கைகளானாலும் சரி அனைத்தையுமே வியாபாரமாக்கி அவர்களும் வியாபாரிகளாக மாறுகிறார்கள். எப்படி கள்ளுக்கடைக்குப் பக்கத்தில் காரசாரமான கறி உணவை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்கிறார்களோ, அது உடலுக்குக் கெடுதி பயப்பது என்றாலும் பரவாயில்லை என்று காரசாரமான உணவைக் கொடுத்து காசாக்க வேண்டும் என்று கருதுகிறார்களோ, அப்படியே இந்தத் துறையிலும் பத்திரிக்கைத் துறையிலும் பல்வேறு உணர்வுகளை இந்த நாட்டில் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

"தண்ணீர்-தண்ணீர்" என்ற படத்தைப் பொறுத்தவரையில், அதில் வரும் எந்தச் சம்பவத்தைப்பற்றியும் நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால் இந்த மன்றத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு நான் ஒன்றைக் தெரிவிக்க விரும்பு கிறேன். அந்தப் படத்தில் கிராம மக்கள் தண்ணீர் கொண்டு வருவதற்காக எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை அரசு தடுத்து நிறுத்துவதோடு அங்கே துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தியது என்று எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள். இதுதான் இந்த மாநிலத்தில் உள்ள நிதர்சனமான நிலையா ? அதுபோன்று இங்கே எங்காவது நடைபெற்றிருக்கிறதா ? என்ன நடந்தது என்பது நமக்குத் தெரியும். வாகைக்குளத்தில் வயிரம் அடைமக் கிடக்கும் நீரோடையிலிருந்து தண்ணீரை எடுத்து 45 கிராமங்களுக்குச் சுமார் ரூ. 1¼ கோடி செலவில் கொடுப்பதற்காக திட்டம் போடப்பட்டு. அதற்கான குழாய்கள் பதிக்கப்பட்ட நேரத்தில் அங்கேயிருக்கும் சில நிலச்சுவான்தாரர்களுடைய ஆளுகைக்குட்பட்ட மக்கள் அதை எதிர்த்து அங்கே தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று தடுத்து நிறுத்தி, அதற்காக பெண்களைக் கொண்டுவந்து முன்னாலே நிறுத்தி, இயந்திரங்களையும், குழாய்களையும் அடித்து நொறுக்கி



யதன் காரணமாக அந்தச் சூழ்நிலையில் துப்பாக்கிப் பிரயோகம் நடை பெற்றது. ஆக தமிழகத்தில் இருக்கிற நிலைமை, அல்லது இந்தியாவில் வேறு எந்தப் பகுதியிலும் இருக்கிற நிலைமை என்னவென்றால், தண்ணீர் கொண்டு வருவதற்காக யார்மீதும் எந்த அரசாங்கமும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய மாட்டார்கள். ஆனால் தண்ணீர் கொடுப்பதைத் தடுப்பதற்கான முயற்சிகள் இந்த மாநிலத்தில் நடந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் விட்டுவிட்டு, ரியாலிட்டி என்கிற பெயரில் இப்படி ஒரு நடைபெறாத, கற்பனையில்கூட நடக்க முடியாத ஒரு சம்பவத்தை நடந்தது போல் காண்பிப்பது சரியா என்பதுதான் நான் இந்த மன்றத்தின் மூலம் நாட்டு மக்கள் முன்வைக்கிற கேள்வியாகும். அதைப்பற்றி இந்த அரசு கவலைப்படவில்லை. எனவேதான் நான் முதலில் குறிப்பிட்டதைப்போல் அதிகாரபூர்வமாக எந்தக் கருத்தையும் இதில் மாநில அரசு தெரிவிக்கவில்லை. இப்படி இந்தப் படத்தைப்பற்றி விவாதம் வந்ததால்தான் மக்கள் கொஞ்சம் அதிகமாகப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : இந்தத் திரைப்படத்தை சென்சார் போர்டு அனுமதித்தது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அதிருப்தியைத் தெரிவித்தார் என்று மத்திய விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாகப் பத்திரிக்கைகளில் செய்திகள் வந்தன. அதைப் பற்றி இதுவரை முதலமைச்சர் அவர்கள் மறுப்பு எதும் தெரிவிக்காத காரணத்தால், மாநில அரசு இதுகுறித்து ஏதேனும் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது, காலைச் சிற்றுண்டி நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அவரது வீட்டில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது திரைப்படங்களைப்பற்றி பேச்சு வந்தபோது இந்தக் கருத்தை அவர்களிடம் எடுத்துச் சொன்னோம். இப்படி நாட்டில் நடக்காத ஒன்றை நடந்ததற்கு மாறாக, காட்சிகளை உருவாக்கி ஒரு படத்தை எடுத்திருக்கிறார்கள். இது மட்டுமல்ல, இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் பொருள்களையும் பாதுகாக்க வேண்டிய காவல் துறையினரையே கூட கேவலப்படுத்துகிற வகையில் அவர்களையெல்லாம் நகைச்சுவைப் பாத்திரங்களாக ஆக்கிக் காட்டி அவர்களை இழிவுபடுத்துகிறார்கள். நடைமுறைக்கு முற்றிலும் விரோதமாக அவர்களைச் சித்தரிக்கிறார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் விடுதலைப் போராட்ட இயக்கத்தின்போது. போலீஸ் துறை மீது வெறுப்பை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணி, அந்தக் காலத்தில் காவல் துறையைச் சார்ந்தவர்களை

"செந்தலைப் பூச்சிகள்" என்று சொல்லி இழிவுபடுத்துவது வழக்கம். அதன் காரணமாக அவர்களை நகைச்சுவைப் பாத்திரங்களாக ஆக்குவது வழக்கம். ஆனால் இன்றைக்கு ஜனநாயக நாட்டில் யாரிடம் நம்முடைய உயிரையும் உடைமைகளையும் பாதுகாப்பிற்காக விட்டிருக்கிறோமோ அவர்களைப் பற்றி கேலியாகவும் இழிவாகவும் சித்தரிப்பது எப்படி நியாயம் என்றுதான் கேட்கிறேன். தவறு செய்கிறவர்களைச் சுட்டிக் காட்டினால் சரி, ஆனால் அதற்காக அந்தத் துறையைக் கேவலப்படுத்தி, அசிங்கப்படுத்தி, அவர்களையெல்லாம் நகைச்சுவைப் பாத்திரங்களாக ஆக்கி படம் எடுக்கிறார்கள் என்றுதான் விவாதத்தின்போது கருத்து தெரிவிக்கப்பட்டதே தவிர, தனிப்பட்ட முறையில் எந்தப் படத்தைப்பற்றியும், எந்தக் கருத்தும் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அதே கருத்தைத்தான் இப்போதும் 'தண்ணீர் தண்ணீர்' படத்தைப் பொறுத்தவரையிலும் தெரிவிக்கிறோம்.

### சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட ஆசிரியர் பதவிகள்

*171. வினா——செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மாநகராட்சி உயர் நிலைப் பள்ளிகளுக்காக அரசால் 1980—1981-ல் ஒதுக்கப்பட்ட மொத்த பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தமிழ் ஆசிரியர்களின் பதவிகள் எத்தனை ?

(இ) இந்தப் பதவிகள் அனைத்தும் மாநகராட்சியால் நிரப்பப்பட்டு விட்டனவா ?

(உ) இல்லை எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஒன்றுமில்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

செல்வி ஆ. லீலாவதி : சென்னை மாநகராட்சி உயர் நிலைப் பள்ளிகளுக்காக 1980—81ல் ஒன்றும் இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்களே, அது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகளுக்கு எத்தனை பட்டதாரி ஆசிரியர் பதவிகள் ஒதுக்கப்பட்டன என்ற வினாவிற்கு ஒன்றுமில்லை என்றுதான் நான் சொன்னேன். ஒன்றுமில்லை என்றுதான் பதில் சொல்ல வேண்டும். காரணம் 1980-81-க்கு கல்வித் துறை மூலம் மாநகராட்சிக்கு ஒரு பட்டதாரி பணியிடம்கூட ஒதுக்கப்படவில்லை.

### துணைத் தலைமைப் பொறியாளர் பதவியை உயர்த்துதல்

*172. வினா——திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசிய நெடுஞ்சாலை துணைத் தலைமைப் பொறியாளர் பதவியை (Deputy Chief Engineer) கண்காணிப்புப் பொறியாளர் பதவி அந்தஸ்திற்கு உயர்த்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம், எனில் அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தலைமைப் பொறியாளர் பதவியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அத்தகைய தலைமைப் பொறியாளர்களுக்குத் துணையாக கண்காணிப்புப் பொறியாளர் பதவி அந்தஸ்தில் Deputy Chief Engineer என்ற பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தேசிய நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், அங்கேயிருக்கிற Deputy Chief Engineer பதவி என்பது Divisional Engineer அந்தஸ்தில்தான் இருக்கிறது. எனவே கிராமப் பணித்துறை, நிவாரணப் பணித்துறை போன்ற நெடுஞ்சாலைத் துறையின் இதர பிரிவுகளில் உள்ள தலைமைப் பொறியாளர்களுக்குத் துணையாக கண்காணிப்புப் பொறியாளர் பதவி அந்தஸ்தில் Deputy Chief Engineer பதவிகள் உருவாக்கப்பட்டிருப்பதுபோல் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவுக்கும் ஒரு கண்காணிப்புப் பொறியாளர் அந்தஸ்தில் ஒரு Deputy Chief Engineer நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படி அந்தப் பதவியின் தரத்தை உயர்த்துவதற்கான சூழ்நிலை இப்போது இல்லை. காரணம் நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி நிலையத்திற்கு என்று ஏற்பட்டிருக்கிற இயக்குநரகத்தில் இயக்குநராக இருப்பவர் கண்காணிப்புப் பொறியாளர் அந்தஸ்தில் இருப்பவராவார். எனவே இந்தப் பதவியின் அந்தஸ்தை உயர்த்துவதற்கான சூழ்நிலை

[1982 மார்ச் 19

இல்லை. என்றாலுங்கூட, ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் பதவியை தலைமைப் பொறியாளர் அந்தஸ்துக்கு உயர்த்துகிற சூழ்நிலை இருக்கிறது. அப்படி உயர்த்தும்போது இதையும் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இராமேஸ்வரம்—தனுஷ்கோடி சாலை.

*173. வினா——திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1964ஆம் ஆண்டு வீசிய புயலால் பாதிக்கப்பட்ட இராமேஸ்வரம்—தனுஷ்கோடி சாலை செப்பனிடப்படாததால் சுற்றுலாப் பயணிகளுக்கும், யாத்ரிகர்களுக்கும் சிரமம் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) & (இ) 1964 ஆம் ஆண்டிற்கு முன்னர் இராமேஸ்வரம்—தனுஷ்கோடிக்கு இடையில் சாலை எதுவும் இல்லை. பாம்பன்—தனுஷ்கோடி இடையில் இரயில்வே பாதை மட்டும்தான் இருந்தது. அப்பாதையும் புயலினால் அழிக்கப்பட்டுவிட்டது. தற்பொழுது தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடி வரை சாலை போடப்பட்டு, நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஏற்கனவே சாலை இல்லை. இப்போது புதிதாகச் சாலை போடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். புதிய சாலைக்கான செலவு எவ்வளவு ? அதில் இப்போது ஏதேனும் இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளனவா, தடைகள் ஏற்பட்டு உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அந்தச் சாலை எவ்வளவு செலவில் போடப்பட்டது அல்லது எவ்வளவு நீளத்திற்குப் போடப்பட்டது என்பதற்கான விவரம் என்னிடம் இல்லை. ஆனாலும், அந்தச் சாலை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு இப்போது நல்ல நிலையில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1982 மார்ச் 19]

### கௌசிக மாநதியின் மேம்பாலத்தை அகலப்படுத்துதல்.

*174. வினா——திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விருதுநகர் எல்லையில், விருதுநகர்—சாத்தூர் தேசிய நெடுஞ்சாலை எண் 7-இல், கௌசிக மாநதியினுடைய மேம்பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(உ) இல்லை எனில், இனிமேலாவது இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ)&(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. வி. வி. ஆனந்தம் : கௌசிக மாநதியின் மேலுள்ள மேம்பாலம் மிகவும் குறுகலாக இருக்கிறது. பாலத்தின் இருபக்கங்களிலும் முக்கியமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. பாலத்தின் வடபுறத்தில் பல எண்ணெய் ஆலைகள் இருக்கின்றன. தென்புறத்தில் இடுகாடு இருக்கின்றது. அதோடு தொழிற்சாலைகளும் இருக்கின்றன மற்றும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டும் அங்கே இருக்கிறது. அந்தப் பாலம் மிகவும் குறுகலாக இருப்பதால் பல நேரங்களில் போக்குவரத்திற்குத் தடை ஏற்படுகிறது. அது தேசிய நெடுஞ்சாலையில் ஒரு முக்கியமான பாலமாக இருப்பதால், இனிமேலாவது அதை விரிவுபடுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இது விருதுநகரின் பக்கத்தில் இருக்கிற பாலமாகும். 30 கண்களையுடைய சுமார் 4.85 மீட்டர் அகலம் மட்டுமே உள்ள பாலம். எனவேதான் தேசிய நெடுஞ்சாலைக்கு உரிய தகுதியுள்ள பாலமாக இதை மாற்ற வேண்டும் என்று அரசுக் குறிப்பு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு சுமார் 40 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே வரும் ஆண்டுகளில் நம் நிதி நிலையைப் பொறுத்துத்தான் இதை எடுத்துக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## Cultivable Lands donated to Government Hospitals.

* 175. Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) the names of Government Hospitals in the State, to which individuals have donated cultivable lands; and

(b) the annual income that each Hospital gets from out of these lands?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) அரசு கண்நோய் மருத்துவ மனை, சென்னை-8.

(இ) 1—7—1981-ல் இருந்து இந்த நிலமானது அறக்கட்டளை நிர்வாகத்தின் நேரடி கண்காணிப்பில் பயிர் செய்யப்பட்டுள்ளது. வருகிற ஏப்ரல் மாதக் கடைசியில் நடைபெறவிருக்கும் அறுவடை முடிந்து மகசூலை விற்றபின்பு தான் இதற்கான வருமானம் தெரியும்.

திரு. க. இராமமூர்த்தி : தஞ்சை மாவட்டத்திலுள்ள சுந்தரபெருமாள் கோவிலிலுள்ள அரசு மருத்துவ மனைக்கு இதுபோல் நிலம் ஒதுக்கீடு செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அந்த விவரம் வந்ததா ? இதுவரையில் வர வில்லையென்றால், அப்படி ஏதாவது நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது அரசின் கவனத்திற்கு வராமலே இருந்து கொண்டிருக்கும் நிலைமையைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ? ஏனென்றால் சுந்தரபெருமாள் கோவில் அரசு மருத்துவமனைக்குச் சொந்தமாக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில் அதிலேயிருந்து வந்த வருமானம் பல ஆண்டுகாலமாக என்னவாயிற்று என்பதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா ? இப்படி தமிழகத்திலே பல்வேறு மருத்துவமனைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்கள் அரசின் கவனத்திற்கு வராமலே இருப்பதுபற்றி அரசு மீண்டும் புனராலோசனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பியவுடனே இலாக்காவிடம் தொடர்பு கொண்டு இப்படி எங்கெங்கே இருக்கின்றன என்று கேட்டதற்கு, இந்த ஒரே ஒரு மருத்துவமனையைப் பற்றித்தான் விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் இன்னுமொரு தகவலைக் கொடுக்கிறார். நிச்சயமாக ஆதாரம் இல்லாமல் அவர் சொல்லமாட்டார். ஆகவே நிச்சயமாக அதை ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.





இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில்,

The entire lands are on lease with the Tamil Nadu Sugar Cane Farm Corporation Limited

அதற்காக 1—7—1974 அன்று கொடுக்கப்பட்டது. 30—6—1981 வரையில் லீஸில் இருந்து கொண்டிருந்தது. அதற்குப் பிறகு 150 ரூபாய் மாதத்திற்கு ரென்டாகக் கொடுக்கப்பட்டு, அந்தப் பணம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது முழுவதுமாக 'லீஸ்' எடுத்துக் கொண்டிருப்பதால், மகசூலான பிறகுதான் எவ்வளவு வருகிறது என்பது தெரியும்.

திரு. க. இராமமூர்த்தி : இரண்டாண்டுகளுக்கு முன்பு இது போன்ற ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது, அப்போதிருந்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், சுந்தரபெருமாள் கோவில் கிராமத்தில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது உண்மை என்றும் அதுபற்றி விவரம் கிடைத்திருப்பதாகவும், தெரிவித்தார்கள். ஆனால் பல ஆண்டுகளாக யார் இதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விவரம் இன்னும் வரவில்லை. நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது உண்மை என்று அறிவித்தார்கள். இதுபோன்ற மருத்துவமனைகளுக்கு தர்மமாக ஒதுக்கீடு செய்திருக்கக் கூடிய நிலங்களின் கணக்கு இந்தத் துறையின் கவனத்திற்கு வராமலிருப்பதற்குக் காரணம், மற்ற துறைகளின் ஒத்துழைப்பு இல்லை என்பதா அல்லது இந்தத் துறையினுடைய அலட்சியப் போக்கா என்பது தெரியவில்லை. இந்த நிலம் என்னவாயிற்று, அதிலே வருகின்ற வருமானம் என்னவாயிற்று என்று அறிவதில் கவலையற்ற நிலை இருக்கிறதோ என்ற அச்சம் இருக்கிறது. அதைப் போக்குகிற வகையிலே நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நம்முடைய இலாக்காவைப் பொறுத்தவரையில், எவ்வளவு நமக்குப் பணம் கொடுத்தாலும், நிச்சயமாக அதை ஏற்றுக்கொண்டு செயல்படக்கூடிய அளவுக்குத்தான் இருக்கிறோம். ஏனென்றால் இப்போது கிடைக்கக்கூடிய வருமானத்தை வரி போடுவதன் மூலம்தான் பெற வேண்டியிருக்கிறது. நன்கொடை கொடுத்தால் எடுத்துக் கொள்ளலாம். சில இடங்களிலே குத்தகைதாரர்கள் குத்தகையைக் கொடுக்காமலே இருந்திருக்கலாம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னமாதிரி, அதில் ஏதாவது மந்த நிலைமை இருந்தால், அதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதி கூறிக்கொள்கிறேன். முழு விவரத்தையும் பிறகு சொல்லுகிறேன். எனக்குக் கொடுத்திருக்கக்கூடிய பட்டியலில் ஒரே ஒரு

இடம்தான் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதிலிருந்து இப்படி இன்னும் பல இடங்களில் இருப்பதாகத் தெரிகிறது. அது பற்றி விசாரிக்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : உயிர் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் பயிர் பாதுகாப்பிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தச் சிரமத்தைத் தவிர்க்க இந்த நிலங்களை விற்று அதன்மூலம் வரும் தொகையை மருத்துவமனைகளுக்குப் பயன்படுத்துகிற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இது நல்ல யோசனை.

## *Dialysis Machine.*

* 176. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether it is a fact that there is a Dialysis Machine in Stanley Medical College Hospital, Madras :

(*b*) if so, whether there is any Nephrologist to operate the same; and

(*c*) if not, whether the Government will appoint a qualified person, so as to make the same useful to the Public ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கருவி தற்சமயம் தலைமை இயக்குநரால் இரண்டு செவிலியர் உதவியோடு இயக்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்குத் தனி சிறுநீரக சிகிச்சைப் பிரிவிற்கான மருத்துவ அதிகாரிகளும் பணியாளர்களும் நியமிக்கும் கோரிக்கை/குறிப்பு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know when this Dialysis machine was purchased and how long this matter, namely, the appointment of Nephrologist, has been under the consideration of the Government?

THE HON. DR. H. V. HANDE : Mr. Chairman, this instrument was purchased in 1977. But the point is that this instrument is not only used by Nephrologist but also in the intensive medical care department for dialysis. This was purchased in 1977. The cost of the equipment with its accessories is Rs. 1,02,040.





This machine is now operated by the Chief Anaesthetist of the Hospital with the help of two trained staff nurses. It is used in cases of acute renal failure due to metallic poisoning, mainly copper sulphate and also in the post-operative cases where acute renal failure develops. The total number of dialysis done so far is 20. In other words, this instrument is also used mostly and mainly in intensive medical care treatment. We are also thinking in terms of appointing a Nephrologist. But, Nephrologist's work is of such a nature that there is no emergency. But this instrument is also used for emergency. So, cases are being referred to Nephrologist in other hospitals.

THIRU A. R. DAMODARAN : May I know whether there is a Department of Urology in the Stanley Medical Hospital and whether there is a Urologist posted there?

THE HON. DR. H. V. HANDE : Yes, Sir, There is a post of Urologist and there is a Department of Urology also. Urology is slightly different from Nephrology. Urology is mostly related to surgical aspect, while Nephrology deals with medical aspect.

திரு. பா. ரா. தாமல் : சில ஆண்டுகளுக்கு முன்பு, நமது அரசு மருத்துவ மனையில் சிறுநீரக மாற்று சிகிச்சை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும், அதற்காக பல அடுக்கு மாடிக் கட்டிட ஆஸ்பத்திரி கட்டப்பட்டது என்றும் சொன்னார்களே, அந்த சிகிச்சை இப்போது மேற்கொள்ளப்படுகிறதா ? சிறுநீர் பிரிப்புக் கருவி, மாற்று சிகிச்சை செய்வதற்குத்தானே இருக்கிறது ? அந்த முறையில் எத்தனை பேருக்கு இவ்வாறு சிறுநீரக மாற்று சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அரசு பொது மருத்துவ மனையில் இதற்காக ஒரு துறையைத் துவக்கியிருக்கிறோம். ஆனால் டிரான்ஸ்பிளான்டேஷன் ஆஃப் கிட்னியைப் பொறுத்த வரையில், ஒரு டிப்பார்ட்மென்டை ஏற்படுத்திவிட்டோம் என்பதாலே மட்டும் அதைச் செய்துவிட முடியாது. அதற்கான சரியான டோனார் தேவை. சரியான சூழ்நிலை தேவை. டிஷ்யூ டோனார் தேவை. அந்த வகையிலே ராயப்பேட்டை மருத்துவ மனையிலே இரண்டு ஆப்பரேஷன்களைச் செய்து முடித்திருக்கிறோம். நேற்றைய தினமோ, அதற்கு முன்போ கூட ஒரு தாய் தன்னுடைய மகனுக்காக தானம் செய்திருக்கிறார். இன்னுமொரு பிரச்சினை என்ன

வென்றால், சரியான மாட்ச் ஆகக்கூடிய பிளட் குரூப் உள்ள கிட்னியைக் கொடுத்தால்தான் செய்ய முடியும். முதலில் செய்திருக்கக் கூடிய கேசைப் பொறுத்த வரையில், அண்ணன் தம்பிக்குக் கொடுத்திருக்கிறார். நேற்றைய முன்தினம் நடந்ததைப் பொறுத்த வரையில், தாய், மகனுக்குக் கொடுத்திருக்கிறார். இந்த இரண்டிலும் எந்தவிதமான செலவும் இல்லாமல் ஏழைகளுக்காக நடந்திருக்கின்றன. அகில இந்தியாவில், ஏழைகளுக்காக இப்படிப்பட்ட சிகிச்சையை அரசாங்க மருத்துவமனையில் செய்திருப்பது நம்முடைய தமிழகம்தான்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தச் சிகிச்சைக்காக ஆயிரக்கணக்கில் ஏழைகள் காத்திருப்பதாக வெளியே தகவல்கள். ஆனால் 1977-லிருந்து இன்று வரை 20 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஒருவேளை இந்த சிகிச்சை தேவைப்படுபவர்கள் மிகக் குறைவு என்பது பொருளா? இல்லையென்றால் இத்தகைய சோஃபிஸ்டிகேட்டெட் (Sophisticated) மெஷினரி தேவையில்லை என்ற அளவிலே இதை 'மெயின்டினென்ஸ்' செய்துகொண்டிருக்கிறோமா? அதுவே அவசியம்தானா என்பதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** கிட்னி - டிரான்ஸ்பிளான்டேஷனைப் பொறுத்தவரையிலே, அது அன்றாடம் நடைபெறுகின்ற அறுவைச் சிகிச்சையல்ல. அது முக்கியமான நேரத்திலே நடைபெறுகிறது. அதற்கு இரண்டு முக்கியமான தேவைகள் இருக்கின்றன. ஒரு உரிய டோனர் இருக்க வேண்டும். டோனர் கிட்னியை எடுத்துக் கொண்டு அதை மற்றவர்களுக்குப் பொருத்தும்போது ரிஜெக்ஷன் ஆகக்கூடாது. அது மட்டுமல்ல, ஆப்பரேஷன் பண்ணிய பிறகு அதை அவர்கள் தாங்கிக்கொள்ளக்கூடிய நிலைமைக்கு இருக்க வேண்டும். சில நோயாளிகள்தான் இருக்கிறார்கள். அதிகமான அளவுக்கு நிறைய பேர்கள் காத்துக்கொண்டிருக்கவில்லை. அதற்கு வேண்டியது ஒரு டோனர், அடுத்து ஒரு சரியான ரெசிபியண்ட். இப்படி இருந்தால் எந்த நேரத்திலும் கொஞ்சம்கூட தயக்கம் இல்லாமல் உடனடியாக ஆப்பரேஷன் செய்வார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்க வேண்டும்.

நிறைய கேஸ்கள் இல்லை, ஆகவே அந்தக் கருவியை வைத்துக்கொள்ளாமல் இருக்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். அதிலே 'காஸ்ட் இன்டெக்ஸ்' பார்க்க முடியாது. திடீரென்று ஆபத்து வந்தால் உடனடியாகப் பயன்படுத்துவதற்கு என்று அந்தக் கருவி தயார் நிலையிலே இருக்க வேண்டும்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே நான் அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்களைத்தான் கேள்வி கேட்கச் சொன்னேன். அங்கத்தினர் அவர்கள் திரு. இராமமூர்த்தி அவர்களோடு உடன்படிக்கை பண்ணிக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டீர்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. Minister mentioned that this dialysis machine was in the Intensive Care Unit. The Intensive Care Unit is meant for cardiac patients where the complications of renal failure may also occur. May I know, Sir, whether the dialysis machine is used for cases of kidney disease where dialysis is required for ordinary kidney diseases? The fact that there is no Nephrologist means that the machine is being severely under-utilised in the Stanley Medical College Hospital, because the Hon. Minister mentioned that it had been used only 20 times. There are thousands of patients, apart from cases of kidney transplantation, who require dialysis machine for ordinary functioning of the kidney itself. May I know whether the Hon. Minister has considered this aspect also?

The HON. DR. H. V. HANDE : Mr. Chairman, I agree with the hon. Member that this is an instrument which should not be under-utilised. But the problem is that this instrument is utilised not only for kidney transplantation but also for difficult cases of medical care. In the intensive care unit, we have got two sections—one is I.C.C.—intensive cardiac care and the other is intensive medical care. Whenever the kidney requires proper treatment, wherever we want blood to be purified and the kidney does not respond and when the kidney fails and in such cases where there is kidney failure, instead of the work being done by the kidney, the dialysis equipment does exactly the same work as that of the kidney and only in such cases it is used. I fully agree with the hon. Member and we are seriously thinking in terms of having a Nephrologist there. But the problem and as usual, our main problem is that when we increase the inputs in the City and urban areas, there is always the problem of our rural areas getting less attention. We have to find a via media and within the available funds, we are trying to expand the facilities in the City Hospitals quite fast without at the same time, sacrificing the interests of rural areas.

[1982 மார்ச் 19

## திருத்துறைப்பூண்டி பணிமனை

* 157 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகம், திருத்துறைப்பூண்டி பணிமனையைச் சார்ந்த பேருந்துகளை நிறுத்த போதிய இடவசதியில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இடவசதியை அதிகரிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இடவசதியை அதிகரிக்க திருத்துறைப்பூண்டி கிராம புல எண் 191/1-ல் உள்ள 2.39 ஏக்கர் நிலப்பரப்பை கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடிந்த பின்னர் இடவசதியை அதிகரிக்க ஆவன செய்யப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி சோழன் போக்குவரத்துக் கழகப் பணி மனையில் எத்தனை வண்டிகள் உள்ளன ? அத்தனை வண்டிகளுக்கும் அங்கே இடம் உள்ளதா ? இடம் இல்லாததால், அனுமதிக்கப்பட்ட நகரப் பேருந்து 4-ஏ விடப்படாமலேயே உள்ளதா ? அதை எப்போது விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அங்கே எத்தனை வண்டிகள் இருக்கின்றன என்ற குறிப்பு இல்லை. இடம் போதவில்லை என்ற குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் 2.39 ஏக்கர் கையகப்படுத்த நடவடிக்கைகள் இருக்கின்றன. பணி மனையில் இடம் இல்லை என்று பேருந்துகள் வெளியே நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அதன் காரணமாக எந்தப் பேருந்தும் விடுவது நிறுத்தப்படவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நான் சோழன் பேருந்துக் கழகத்தினுடைய மேனேஜிங் டைரக்டர் அவர்களைப் பார்த்து, அதைப்பற்றிக் கேட்டேன். 4-ஏ நகரப் பேருந்து அனுமதிக்கப்பட்டிருக்கிறது. திருத்துறைப்பூண்டியிலே அதை நிறுத்த இடம் இல்லை. அதற்குரிய இடத்தை, வசதியைச் செய்த பின்னாலே தான் இது விடப்படும் என்று என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசிலிக்க வேண்டும். அந்தப் பணி மனை விஸ்தரிப்புக்கு ஒதுக்கியிருக்கின்ற திட்ட ஒதுக்கீடு எவ்வளவு ? அந்தப் பணி மனை எப்போது கட்டிமுடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.



1982 மார்ச் 19]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த இடத்தை வாங்குவதற்கு ரூபாய் 24,736.30 காசுகள் ஆகும் என்று இருக்கிறது. அந்த இடம் கிடைத்த பிறகுதான் எந்த அளவுக்குக் கட்டிடம் கட்ட முடியும் என்பதைப்பற்றிச் சொல்ல முடியும். இந்தப் பேருந்து இதன் காரணமாக விடப்படாமல் இருந்தால், அதை விடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## போலி பயணச் சீட்டுகள்.

* 158 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்லவன் மற்றும் பெரியார் போக்குவரத்துக் கழகங்களைச் சார்ந்த பேருந்துகளில் கள்ள டிக்கெட்டுகள் வழங்கப்பட்டது, 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் கண்டுபிடிக்கப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

(உ) இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அனைவரும் எவ்வகையில் தண்டிக்கப்பட்டுள்ளனர் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 5—9—1981 அன்று பல்லவன் போக்குவரத்துக் கழக (மாவட்டப்பிரிவு) பேருந்தில் போலி பயணச் சீட்டுக்கள் வழங்கியது கண்டுபிடிக்கப்பட்டது.

(இ) தடம் 120 ‘ அ ’வில் (செங்கல்பட்டு-அனந்தமங்கலம் வழி-மதுராந்தகம், தொழுப்பேடு) இயங்கும் பேருந்தில் போலிப் பயணச் சீட்டுகள் வழங்கப்பட்டதை பல்லவன் போக்குவரத்துக் கழக (மாவட்டப் பிரிவு) போக்குவரத்துக் கண்காணிப்பாளர் (தெற்கு) சோதனையின்போது கண்டுபிடித்தார். இப் பயணச் சீட்டுகள் ஓரத்தியிலிருந்து திண்டிவனம் வரை வழங்கப்பட்டிருந்தன.

(உ) இதில் சம்பந்தப்பட்டுள்ள கழக நடத்துநர்களை காவல் துறையினர் கைது செய்து வழக்கு தொடர்ந்துள்ளனர். பல்லவன் போக்குவரத்துக் கழகம் (மாவட்டப் பிரிவு) இவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது. மேற்கொண்டு காவல் துறையினர் புலன் ஆய்வு செய்துவருகின்றனர்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பல்லவன் மற்றும் பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே இந்தக் கள்ளச் சீட்டுக்கள் வழங்கப்பட்டதன் அடிப்படையிலே அரசுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டம் எவ்வளவு என்று கணக்கிடப்பட்டதா ?

வேறு பல போக்குவரத்துக் கழகங்களிலும் இதுபோன்ற கள்ளச் சீட்டுகள் இருக்கின்றன என்பதுபற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா.?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு எவ்வளவு நஷ்டம் என்று இதிலே சொல்லிவிட முடியாது. இந்தப் பயணச் சீட்டுக்களை அவர்கள் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். தனித்தனியாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதை ஒட்டு மொத்தமாகக் கணக்கிட்டுச் சொல்ல முடியவில்லை. காவல் துறையைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்டவர்கள் இதிலே எவ்வளவு டிக்கட்டுகள் பயன்படுத்தியிருப்பார்கள் என்று புலன் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே முழுமையான விவரத்தைக் கொடுக்க முடியாது. வேறு எந்தப் போக்குவரத்துக் கழகத்திலேயும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதாகத் தெரியவில்லை. உடனடியாக இதற்கான ஏற்பாட்டைச் செய்து எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் கண்காணிப்பாக இருந்து பார்த்தோம். இதுபோன்ற நிலைமைகள் எங்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இந்தக் கள்ள டிக்கெட்டுகளை ஒழிப்பதற்கு என்று வெளிநாடுகளில் இருப்பதுபோல்—பேருந்துகளிலே பெட்டி இருக்கின்றது—அந்தப் பெட்டியிலே காசைப் போட்டுவிட்டு பயணம் செய்கின்ற முறையை அரசு ஏற்படுத்துமா ? ஓசிப் பயணம் போவதை விட்டு ஈசிப் பயணமாக போகின்ற நிலை இருக்கும். அந்த முறையைக் கொண்டு வருமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பெட்டியே அங்கே இருக்குமா என்ற சந்தேகம்தான் எனக்கு வந்திருக்கிறது. நாம் பெட்டியை வைத்துவிட்டாலும், பெட்டிக்குள்ளே காசு போடச் சொல்லிவிட்டாலும், காசு போட்ட பின்பு அந்தப் பெட்டி எங்கே போகும் என்பது தெரியாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்தக் கள்ள டிக்கெட்டுகளை வழங்கிய நடத்துநர்கள்மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த டிக்கெட்டுகள் எங்கேயாவது அச்சகத்திலேதான் அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அச்சகத்தார் யார் ? அந்த அச்சகத்தின் உரிமை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறதா ? அந்த உரிமையாளர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இதுபோன்ற நடைமுறைகள் இனி நடக்காவண்ணம் அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் என்ன என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே உள்ள வேலூரில் உஷா பிரிண்டிங் பிரஸ்ஸில் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். இந்த பிரஸ்ஸினுடைய உரிமையாளர் திரு. சுந்தரம், அந்த சுந்தரத்தினுடைய மகன் சோமு, ரவிச்சந்திரன், தேவராசன் ஆகிய நான்கு பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்த பிரஸ்ஸில் இருந்து கைப்பற்றப்பட்ட பொருள்களை இப்போது அரசின் சார்பில் காவல் துறையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற பிரச்சினைகள் இனிமேல் நடக்காமலிருக்க வேண்டும் என்பதற்காகத்தான், டிக்கெட் புத்தகங்களை அங்கே இருக்கின்ற துணை மேலாளர் நேரடியாகப் பார்த்து அதற்குப் பின்னால்தான் நடத்துநர்களிடத்திலே கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது அதிலே இருக்கின்ற நெம்பர்களை எல்லாம் அவர் பார்க்க முடியும். அப்போது ஒன்றுக்கு மேற்பட்ட இன்வாய்சுகளைப் பயன்படுத்தினார்கள். ஒவ்வொன்றாகப் பக்கங்கள் இருக்கும். அதிலே முதல் பக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு இரண்டாவது மூன்றாவது தாள்களை அவர்கள் சாதாரணமாக மாற்றிக்கொள்ள வாய்ப்பு இருந்தது. இப்போது அதன் அளவுகளை மாற்றி பெரியதாக ஏற்படுத்தி ஒரே பக்கமாகத்தான் இருக்க வேண்டும் என்று செய்திருக்கிறார்கள். அதுபோன்ற ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அதுபோன்று பரிசோதனை செய்பவர்களுக்கு முன்கூட்டியே எந்தெந்த டிக்கெட் புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னர் இப்படி இல்லை. இப்போது அவ்வாறு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அண்மையிலே நிர்வாக இயக்குநர் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் இரண்டு மூன்று ஸ்குவாட்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற இடத்துக்குப் போய் பரிசீலிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இன்னொரு சுலபமான முறை இருக்கிறது. பேருந்துகளிலே பயணம் செய்கின்றவர்கள் இறங்குகின்றபோது, அவர்கள் கையிலே வைத்திருக்கின்ற டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டுவந்து அந்த டிக்கெட்டுகள் சரியானவைதானா என்று பரிசீலிக்கப்பட்டு தெளிவுபடுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—10)

**திரு. க. இராமமூர்த்தி :** கள்ளப் பயணச் சீட்டுக்களை அச்சடித்த அச்சகத்திலிருந்து மொத்தம் எவ்வளவு பெறுமானமுள்ள கள்ளப் பயணச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டுள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டதா ? அதில் எவ்வளவு பயன்படுத்தப்பட்டதென்று கண்டுபிடிக்கப்பட்டதா ? இந்தக் கள்ளப்

[1982 மார்ச் 19

பயணச் சீட்டுக்களை வழங்கிய நடத்துநர் அந்தத் துறையிலே எத்தனை ஆண்டுக் காலம் அனுபவம் பெற்றவர்? அவர் அந்த அனுபவத்தின் அடிப்படையிலே செய்தாரா அல்லது தற்காலிகமாக எதையும் செய்ய முடியுமென்ற அளவிலே செய்தாரா என்பதை அரசு பரிசீலித்ததா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** எவ்வளவு அச்சடித்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. காரணம், டவுன் பஸ் டிக்கட்டாக இருந்தால், அதில் எவ்வளவு விலை என்று போட்டிருப்பார்கள். இது மொஃபசல் பேருந்துக்கான டிக்கெட். அதில் எழுதித்தான் தர வேண்டும். எனவே அந்தக் கணக்கைக் கண்டுபிடிக்க முடியாது. அந்தக் காரணத்தாலே எவ்வளவு பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் அந்தத் துறையிலே கொஞ்ச காலம் அனுபவம் பெற்றவர்கள்தான். பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசை காரணமாக இதைச் செய்திருக்கிறார்கள். இது குறித்து கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

### 5—3—1982 அன்றைய மேலவை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து சில பகுதிகளை நீக்குவது குறித்து

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 3.3.82 அன்று நடந்த அவை நடவடிக்கைகளில் தமது பேச்சின் சில பகுதிகளைத் தமக்கு அனுப்பவில்லை என்று திரு. க. இராமமூர்த்தி அவர்கள் 5—3—1982 அன்று அவையில் ஒரு பிரச்சினையை எழுப்பினார். 3 ஆம் தேதியன்றே மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்று வினவினார். அப்போது நான் அது இருப்பதில் பாதகமில்லை என்று சொன்னேன். பின்னர், அது குறித்த நடவடிக்கை சரியாக உள்ளதா என்று பரிசீலிப்பதற்காக, அந்தப் பகுதியை எனக்கு அனுப்பும்படி ஆணையிட்டிருந்தேன். அதன் காரணமாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அப்பகுதி அனுப்பப்படவில்லைபோலும். அதில் எந்தப் பகுதியும் நீக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1982 மார்ச் 19] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

சட்டமன்ற மேலவைத் துறை தலைவரின்கீழ் இயங்குகிறது. எனவே, துறை அலுவலர்கள் செயல் குறித்து ஏதாவது குற்றம் காணின், அதைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். அதை அவையில் எழுப்பினால் அவைத் தலைவர்தான் பதில் சொல்ல வேண்டும். அவ்விதம் எழுப்புவதும் அவைத் தலைவர் பதில் சொல்லுவதும் மரபல்ல. எனவே 5.3.82 அன்று அவை நடவடிக்கைக் குறிப்புகளில் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எழுப்பிய பகுதிகளைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

## 3. உரிமைப் பிரச்சினை

### கல்வித் துறை செயலாளர், பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர்மீது உரிமைப் பிரச்சினை குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. செ. முத்துசாமி ஆகியோர் மேலவை விதி 157ன்கீழ் தமிழக அரசு கல்வித் துறைச் செயலாளர், பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர்மீது உரிமைப் பிரச்சினையை அவையில் எழுப்புவதற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதிகளின்கீழ் வருகிறதென்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கல்வித் துறை செயலாளர் ரகசியக் கடித எண் 15027/ஈ2/81(9), கல்வித் துறை, நாள் 11-2-1982-ல் ஒரு ரகசியக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தினுடைய அடிப்படையிலே பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் ந.க. எண் 40786/2 நி.க.உஓ/அ1/சி1/82, நாள் 15—2—82-லே மாநிலம் பூராவும் இருக்கிற பள்ளித் துணை ஆய்வர், உதவிக் கல்வி அலுவலர் ஆகியோருக்கு அதனை சுற்றுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆணையிலே மூன்றாம் பத்தியிலே சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை ஆகியவற்றின் உறுப்பினர்கள், அரசு அங்கீகாரம் பெறாத சங்கங்களின் பிரதிநிதிகள், தலைவர்கள், செயலர்கள் என்ற முறையில் அனுப்பும் கடிதங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்படாத ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்களுக்கு பதில் அனுப்பத் தேவையில்லை எனவும் அக்கடிதங்களின்மீது வெளியிடப்படும் முடிவான ஆணையைப் பொறுத்தவரையில், மேலே பத்தி இரண்டில் குறிப்பிட்டுள்ள ஆணைகளின்படி செயல்படவும் அறிவுரை வழங்கப்படுகிறதென்று

குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலே பத்தி இரண்டில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், முடிவான நகலை மட்டும் தந்தால் போதுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர், அவர் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்குத்தான் தலைவராக இருக்க வேண்டுமென்றோ, அங்கீகரிக்கப்படாத சங்கத்திற்கு தலைவராக இருக்கக்கூடாதென்றோ கட்டுப்படுத்தும் அதிகாரம் யாருக்கும் கிடையாது. தொழிற் சங்கத்திற்குத் தலைவராக இருக்கலாம். அங்கீகரிக்கப்படாத எத்தனையோ சங்கங்களுக்குத் தலைவராக இருக்கலாம். ஆசிரியர் சங்கத்திற்குத் தலைவராக இருக்கலாம். சமூக நல இயக்கங்களுக்குக்கூட தலைவராக இருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் பிச்சைக்காரர் சங்கத்திற்குக்கூட தலைவராக இருக்கலாம். அதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பிச்சைக்காரர் சங்கம் அங்கீகரிக்கப்படாமல் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சந்தா கிடைக்காது. இல்லையென்றால் இருக்கலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இருக்கலாம். ஆனால் மேலவை உறுப்பினர் ஒருவர் போய் ஒரு அதிகாரியைப்பார்த்ததும், இவர் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் தலைவரா, அங்கீகரிக்கப்படாத சங்கத்தின் தலைவரா என்று அவர் ஆராய்ச்சி செய்து—அந்த அதிகாரி தேவையில்லா அந்த வகையிலான ஆராய்ச்சி செய்து—அந்த அடிப்படையிலே, அதற்குப் பின்னாலே இவரை மதிப்பது என்று சொன்னால், இதை என்னவென்று சொல்வது ? நான் எத்தனையோ சங்கங்களுக்குத் தலைவராக இருக்கலாம். அந்த அந்தப் பிரச்சினைகளைப்பற்றிச் சொல்லலாம். நான் மேலவை உறுப்பினரா இல்லையா ? இதுதான் கேள்வி. ஒரு அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் தலைவரா அல்லது அங்கீகரிக்கப்படாத சங்கத்தின் தலைவரா என்று ஆராய்ந்து அதற்குப் பிறகு விடை தர வேண்டுமென்று சொல்லுவதால், இந்த அவை உறுப்பினர் உரிமை பறிக்கப்படுகிறது. என்னை மட்டுமல்ல. சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்கள் எத்தனையோ பேர்கள் தொழிற்சங்கத் தலைவர்களாக இருக்கிறார்கள் அவர்கள் எல்லாம் சென்று விவாதிக்க ஆரம்பித்தால், அவர்களிடம் விவாதிப்பதற்கே முகத்தைத்திருப்பிக் கொள்ளும் நிலைமை இருக்கிறது. இதோடு





ஒருவர் வந்திருக்கலாம். அவர் பாதிக்கப்பட்டிருக்கலாம். அமைச்சரவர்கள் காரில் செல்லலாம். அமைச்சரைச் சந்தித்து அவர் மனு தரலாம். அவர் இந்நாட்டுப் பிரஜை அல்லவா. அப்போது அவரிடம் பேச மாட்டீர்களா ? சாதாரணமாக அங்கிகாரம் பெறாத பல சங்கங்கள் இருக்கின்றன, இந்த நாட்டிலே. அவர்களோடு பேச மாட்டீர்களா ? ஜனநாயகத்தில் ஒரு குடிமகன் மனு கொடுத்தால்கூட வாங்கிக் கொள்ள வேண்டும். பரிசீலிக்க வேண்டுமே ! கூட்டாகக் கொண்டு வந்துகொடுத்தால், வாங்க வேண்டாமென்று சொல்லுவது ஜனநாயகமா ? தனிப்பட்டவர்களாகவே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கும் முறையைப் பின்பற்றுங்கள் என்றால், இதைவிடக் கேவலம் வேறு என்ன இருக்கிறது? அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். அந்த உத்தரவு எந்த நோக்கத்தில் போடப்பட்டிருக்கிறது என்பதை அறிய வேண்டும். ‘ ரகசியம் ’ என்று போட்டதற்குக் காரணம், அப்படிப் போடுவது ‘ தப்பு ’ என்று அவருக்குத் தெரிந்த காரணம்தான். ஆகவே உத்தரவு எந்தச் சூழ்நிலையில் போட்டார்கள், யாரால் தூண்டப்பட்டு போட்டார்கள், எந்த அடிப்படையில் போடப்பட்டது, யாரை ஒழிக்கப்போடப்பட்டது, யாரை சப்போர்ட் செய்யப் போடப்பட்டது என்பதையெல்லாம், அவர்களை அழைத்து விசாரித்தால்தான் விளங்கிக்கொள்ள முடியும். ஆகவே, மாண்புமிகு தலைவரவர்களே, அருள்கூர்ந்து இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மன்றம் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் சட்டரீதியாக அமைக்கப்பட்டிருக்கிற ஒன்று. ஆசிரியர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற உறுப்பினர்கள் என்ற முறையில், சட்டமன்ற உறுப்பினர்களைக் கேவலப்படுத்துகிற ஒரு நிலை இந்த உத்தரவின் மூலம் ஏற்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் இப்போது போடப்பட்டிருக்கிற உத்தரவின் மூலம் பல விஷயங்கள் அரசியல் ரீதியாக, சட்டத்திற்கு முரணாக இருக்கின்றன. இந்த விஷயத்திலே சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களை இணைத்து உத்தரவு போடப்பட்டிருக்கிறது. கீழ் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகளிடத்தில் பிரச்சினைகளைக் கொண்டு சென்று விவாதிக்கிற போது, சட்டமன்ற உறுப்பினர்களை அவர்கள் கேவலப்படுத்துகிற மாதிரி விஷயங்கள் இருக்கின்றன. இதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்கும் மாண்புமிகு தலைவரவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். அங்கீகரிக்கப்பட்ட சங்கம், அங்கீகரிக்கப்படாத சங்கம் என்பது பற்றிய நடைமுறையையும் இதிலே சொல்லியிருக்கிறார்கள். அங்கீகரிக்கப்படாத சங்கம்

1982 மார்ச் 19] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

என்னுடைய தொகுதியிலே நடைபெறும் அரசு விழாக்களில் நான் புறக்கணிக்கப்படுகிறேன். ஆசிரியர்கள் மாநாடுகள் நடத்துகின்றபோது, அவரைப் போடாதீர்கள், போட்டால் அமைச்சருக்குக் கோபம் வரும் என்று சொல்லும் அதிகாரிகள் இருக்கிறார்களென்று சொன்னால், இது மேலவை உறுப்பினர் உரிமையைப் பாதிக்கிறதென்று, தலைவரவர்களே, உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்களும், உறுப்பினராக இருந்து தலைவராக வந்திருக்கிறீர்கள். மற்றவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மேலவை உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினராக . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது அங்கீகரிக்கப்பட்ட மன்றம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அங்கீகரிக்கப்பட்ட மன்றம் இது. இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கு இப்படிப்பட்ட கேவலமான நிலை என்று தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சி கூட வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் அங்கீகரிக்கப்படவில்லை. அப்போது அங்கீகரிக்கப்படாத கட்சி தான் இப்போது எல்லோருக்கும் அங்கீகாரம் தரும் இடத்தில் இருக்கிறது. இன்றைக்கு அங்கீகரிக்கப்படாத சங்கமாக இருப்பது, நாளைக்கு அங்கீகாரம் வழங்கக்கூடிய சங்கம் இருக்கும் இடத்திற்குக்கூட வரக்கூடும். நான் கேட்பது, அங்கீகரிக்கப்பட்ட சங்கமா, அங்கீகரிக்கப்படாத சங்கமா என்ற ஆராய்ச்சி எம்.எல்.சி., எம்.எல்.ஏ போனால் தேவையா என்பதுதான். அப்படியிருந்தால் எங்கள் பணியை நாங்கள் ஆற்ற முடியுமா? நாங்கள் ஒரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். ஆசிரியர்களுடைய பிரதிநிதி. ஆகவே நாங்கள் ஆசிரியர்களைப்பற்றி அதிகமாக எழுத வேண்டிய அவசியம் ஏற்படும். இதனாலே பல்வேறு பகுதிகளில் எங்களுக்கு மதிப்பில்லை, செல்வாக்கில்லை என்று சொன்னால், எதுவும் நடக்காது. பார்க்கவே வேண்டாம், பேசவே வேண்டாம் என்ற உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய அளவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது இந்த அவையின் உரிமை மீறிய செயலாகும். அதோடுகூட, இந்த உத்திரவு போட்டதன் காரணமாக நான் பதவி இழந்து விடுவேன் என்றோ, அடுத்த முறை வராமல் போய்விடுவேன் என்றோ நினைத்தால் அதற்கு நான் அஞ்சவில்லை. அதை சேலஞ்சாக ஏற்றுக் கொள்வேன். அதற்கு நான் அச்சப்படவில்லை. உத்தரவு என்ன போட்டிருக்க வேண்டுமென்றால், மேலவை உறுப்பினர், பேரவை உறுப்பினர் என்று வந்தால், அவர்களுக்கு பதில் அளிக்க வேண்டுமென்று இருக்க வேண்டும். தனிப்பட்டவர்கள் தந்த விண்ணப்பமாகக் கருதுங்கள் என்ற முறையில் இருக்கிறது. சாதாரணமாக வெளி நாட்டிலிருந்து



1982 மார்ச் 19] [திரு. செ. முத்துசாமி]

என்று சொன்னால், ஏற்கெனவே அதிகாரிகள் புரிந்துகொள்ளும் வகையில் ஆணை இருக்கிறது. ஏற்கெனவே இதுபற்றிய சுற்றறிக்கை அனுப்பப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இப்படி மீண்டும் ஒரு சுற்றறிக்கை செல்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்காக மட்டும், அவர்களைக் கேவலப்படுத்துவதற்காக மட்டும் இது அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஏற்கெனவே பி. அன்ட் ஏ. ஆர். துறையிலிருந்து ஆங்கிலத்தில் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையை அப்படியே பள்ளிக் கல்வி இயக்குநர் ஆங்கிலத்தில் அனுப்பியிருக்கிறார். இப்போது அதை தமிழில் மொழி பெயர்த்து அனுப்பியிருக்கிறார்கள். இந்த அளவுக்காவது தமிழில் சுற்றறிக்கை வருகிறதே என்பது குறித்து மகிழ்ச்சிதான். 3 ஆம் பத்தியிலுள்ள வார்த்தைகள் சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைக் கேவலப்படுத்துவதாக இருக்கிறது. இப்படிச் செய்வதன் மூலம் சாதாரணமாக இருக்கின்ற உதவி அலுவலர்கள், பஞ்சாயத்தில் இருப்பவர்கள், பள்ளித் துணை ஆய்வாளர்கள் இப்படிப்பட்டவர்களிடத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றால், எப்படி மரியாதை கொடுப்பார்கள்? சட்டமன்ற உறுப்பினர்களை ஏன் அந்த உத்தரவில் இழுக்க வேண்டும்? எப்பேர்ப்பட்ட தாக்கீது வேண்டுமானாலும் அனுப் பட்டும். ஆனால் சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் என்று அதில் குறிப்பிட்டுச் சொல்வது சரிதானா? சாதாரணமாக பேரவை உறுப்பினர்கள் யாராவது ஆசிரியர் இயக்கங்களுக்குத் தலைவர்களாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மேலவை உறுப்பினர்கள் 2 பேர் தான் ஆசிரியர் இயக்கங்களுக்குத் தலைவர்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர்கள் வேறு உரிமைப் பிரச்சினை எழுப்பப்போகிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : சட்டமன்றப் பேரவை உறுப்பினர் என்று அதில் இருப்பதால் தான் சொல்கிறேன். மேலவை உறுப்பினர் என்று போட்டிருந்தால், அதைப்பற்றி மட்டும் சொல்லியிருப்பேன். உறுப்பினர்கள், சங்கத் தலைவர்கள் என்ற முறையில் ஏன் சொல்ல வேண்டும்? ஆசிரியர்களுக்கு சேவை செய்துதான் மேலவை உறுப்பினர்களாக வர முடியும். ஆனாலும் சில நேரங்களில் அரசியல் வாதிகளும் வரத்தான் செய்கிறார்கள். முழுமையாக ஆசிரியர்களுக்காகப் பணியாற்றுபவர்கள், தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர்களாகத் தான் இருக்க முடியும். இதிலே சில நேரத்தில் அரசு சில பேருக்கு அங்கிகாரம் தருகிறது, சில நேரங்களில் அங்கீகாரம் தருவதில்லை. இதுவரை அங்கிகாரம் தேவையில்லை என்கிற நடைமுறை தான் இருந்து வந்தது. இதிலுள்ள சிக்கல்களை நான் சொல்

[திரு. செ. முத்துசாமி] [1982 மார்ச் 19

கிறேன். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படி புதிய பிரச்சினைகளை அரசு உருவாக்குவதன் மூலம் என்ன நன்மை ஏற்பட முடியும்? இப்படி உத்தரவு போட்டிருப்பதன் மூலம் ஆசிரியர் சங்கங்களின் தலைவர்களாக இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் பிரச்சினைகள் சம்பந்தமாக கீழ்மட்ட அதிகாரிகளைச் சந்திக்கச் சென்றால் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்திக்கச் சென்றால், கேவலப்படுத்துகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த உத்தரவை அரசாங்கம் தயவு செய்து பெருந்தன்மையுடன் ரத்து செய்ய வேண்டும். ரத்து செய்வதற்கான முன் உதாரணம் கூட இருக்கிறது. இதற்கு முன்பு போலீஸ் துறையிலிருந்து இரகசியமாகப் போடப்பட்ட ஓர் உத்தரவு பிறகு அரசால் ரத்து செய்யப்பட்டது. உறுப்பினர்களை சம்பந்தப்படுத்தி இப்படி உத்தரவு வருவது ஒரு முன் உதாரணமாக ஆகிவிடும். தவறான நடைமுறையாக ஆகி, உரிமையை பாதிப்பதாக ஆகிவிடும். இது சட்டமன்ற உறுப்பினர்களைக் கேவலப்படுத்துகிற ஒன்று. இது அவையின் உரிமை மீறிய ஒரு செயல். இதை விரிவாகப் பரிசீலிக்க, செயலாக்க அவையினுடைய உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, பிரச்சினைக்குரிய அரசுக் கடித ந. க. எண் 15027 இ2/81-9, கல்வித் துறை, நாள் 11—2—1982-ல் சட்டமன்றப் பேரவை மற்றும், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் உரிமையை மீறும் வகையில் எதுவும் இல்லை. இக்கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவுரைகள், ஆசிரியர்கள் சங்கங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி துறை அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டவையாகும்.

1978 ஆம் ஆண்டிலிருந்தே அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், அங்கீகரிக்கப்படாத சங்கங்கள் இவைகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் பற்றிய நடைமுறை விதிகளை அலுவல் நடைமுறை விதிகளின் ஒழுங்கிற்காக வரையறை செய்து தெளிவாக ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசுக் குறிப்பாணை எண் 68763 எ/78-1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர்) துறை, 16—11—1978 ஆம் தேதியிட்ட குறிப்பாணையில் வெகு திட்டவட்டமாக இதுபற்றி வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த அறிவுரைகள், அங்கீகரிக்கப்படாத சங்கங்கள், அவற்றின் அலுவல் பொறுப்பில் உள்ளவர்கள் பற்றியவை ஆகும். சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அரசுக்கு அனுப்பும்



1982 மார்ச் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

கடிதங்களுக்கு, பதில் அனுப்பத் தேவையில்லை என அறிவுரைகள் வழங்கப்படவில்லை. மாறாக, சட்டமன்ற ஆசிரியர் உறுப்பினர்களுக்கு பொதுவான ஆணைகள் அனுப்பப்பட வேண்டும் என பிரச்சினைக்கு உட்படுத்தப்பட்ட கடிதத்திலேயே வலியுறுத்தப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கது. இவ்வறிவுரைகளின்படி, சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத சங்கங்களுடன் எவ்வித சம்பந்தமும் இல்லாதிருந்தாலும் கூட, அச்சங்கங்கள் பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் அனுப்பும் கடிதங்களுக்குப் பதில் பெறத் தடையில்லை. இவ்வறிவுரைகளில் கூறப்பட்டிருப்பதெல்லாம், எல்லா அங்கீகரிக்கப்படாத சங்கங்கள் குறித்தும் பாரபட்சமின்றி ஒரே சீரான விதி முறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது தான். அங்கீகரிக்கப்படாத சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் யாராக இருந்தாலும், அச்சங்கங்கள் ஒரே மாதிரியானவைதான். அச்சங்கங்களின் தலைவர்கள், செயலர்கள் ஆகியோர் மேலவை உறுப்பினர்கள் என்பதால், அச்சங்கங்கள் பிற சங்கங்களினின்றும் வேறுபட்ட தனி உரிமை பெறுவதில்லை. ஆகவே, அங்கீகரிக்கப்படாத சங்கங்களின் தலைவர்கள், செயலர்கள் ஆகியோர் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த போதிலும், அவர்கள் அச் சங்கங்களின் தலைவர்கள், செயலர்கள் என்ற முறையில் அனுப்பும் கடிதங்களுக்கு பதில் அனுப்பத் தேவையில்லை என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் தான் தனி உரிமைக்குரியவர்கள் ஆகின்றனர். பிற சங்கங்கள், அமைப்புகள் ஆகியவற்றின் தலைவர்கள், செயலர்கள் என்ற முறையில் சட்டமன்ற உறுப்பினர்கள் உரிமைகளுக்கு உரியவர்கள் ஆவதில்லை. உறுப்பினர்கள் தங்களுக்குள்ள தனி உரிமைகளை, பிற அமைப்புகளின் பதவி இடங்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கோருவதும் சரியாக இருக்காது. அங்ஙனம் கொள்ளப்படுமானால், அவ்வுறுப்பினர்கள் பதவி வகிக்கும் அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்காமல் இருப்பதே உரிமை மீறல் எனக் கருதப்படுவதாகும். ஆகவே, பிரச்சினைக்குட்பட்டுள்ள கடிதத்தில் உள்ள அறிவுரைகளை அக்கண்ணோட்டத்தில் பார்ப்பது சரியில்லை. அதில் உறுப்பினர்களின் உரிமை மீறுவதாகக் கொள்ள எதுவுமில்லை. மாறாக, உறுப்பினர்களின் உரிமைகள் குறிப்பாகப் பாதுகாக்கப்பட்டு உள்ளன. அவ்வுரிமைகள் பிற அமைப்புகளின் பதவிகளுக்கு மாற்றப்படுவது மட்டுமே தவிர்க்கப்பட்டுள்ளது. ஆகவே இதில் எந்தவிதமான உரிமை மீறலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மண்புமிகு மேலவைத் தலைவர்:** இதுகுறித்து என்னுடைய தீர்ப்பு பின்னர் வழங்கப்படும்.

## 4. கவன ஈர்ப்பு

**(1) நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம் அமைய இருக்கும் பகுதியில் நில ஆர்ஜிதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கிராமவாசிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருவதால், அனல் மின் நிலையப் பணிகள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து.**

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"நெய்வேலியில் 2-வது அனல் மின்நிலையம் அமைய இருக்கும் பகுதியில், அப்பகுதியில் நில ஆர்ஜிதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கிராமவாசிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருவதால் அனல் மின்நிலையப் பணிகள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து".

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக, கரி எடுக்க நிலத்தைக் கொடுத்த அந்த ஏழையெளிய விவசாயிகளின், ஏழை எளிய கிராம மக்களின் வாழ்வு கருகிப்போய் விடக்கூடாது. அவர்களுடைய நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு, அவர்களுடைய நல்வாழ்வு கருதி சில கோரிக்கைகளைக் கேட்டார்கள். நெய்வேலி நிர்வாகத்தினர் இதுகுறித்து ஒரு உடன்பாட்டுக்கு வந்திருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கு காலியாகும் பணியிடங்களில் 60 விழுக்காட்டை இவர்களுக்கு ஒதுக்கி இரண்டு மூன்று வருடங்களில் அனைவரும் வேலையில் அமர்த்தப்படுவார்கள் என்பதை நிர்வாகம் ஒப்புக்கொண்டிருக்கிறது என்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அம்மேரி, கூவான்குறிச்சி போன்ற இடங்களில் நிலம் கொடுத்தவர்கள் 269 பேர். ஆனால் அவர்களுடைய குடும்பங்களிலுள்ள 658 பேர்களுக்கு இன்னும் வேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை. மிகப் பெரும்பாலோருக்கு இதுவரை வேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை. இதையும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அரசின் கொள்கையே ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு தரவேண்டும் என்பது தான். அதைத் தான் அரசு வலியுறுத்தியும் வருகிறது. இப்படிப்பட்ட நிலையில்

---

@ 104-173ஆம் பக்கங்களில் இணைப்பு Iஆக அச்சிடப்பட்டுள்ளது.



இன்றைக்கு அவர்களுடைய நிலத்தையும் இழந்து கஷ்டப்படும் நிலையில் அவர்களுடைய குடும்பத்தில் ஒருவர் விதம் வேலை தருவது தான் நியாயமான ஒன்று. இந்த நியாயமான கோரிக்கையை அமுல்படுத்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம் அமைக்க இருக்கும் பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுடைய சொத்துக்களுக்கு இழப்பீடு தரப்படுகிறது. அதுதான் சட்டப்படி உள்ள முறை. இருப்பினும் ஏற்படுகின்ற வேலைவாய்ப்புக்களில் மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கும் வேலை வாய்ப்பு தர வேண்டும் என்ற ஒரு கருத்தை அரசும் நெய்வேலி நிறுவனமும் ஏற்றுக்கொண்டு அங்கே வருகின்ற வெற்றிடங்களில் 60 விழுக்காடு பாதிக்கப்பட்டவர்களுக்கென தரப்படுகிறது. வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்துதான் வேலை கொடுக்க முடியுமே தவிர, வேலையற்றோரின் எண்ணிக்கையைப் பொறுத்து வெற்றிடங்கள் உருவாக்கப்படமாட்டாது.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணிகளை கொடுப்பது குறித்து தென்னாற்காடு மாவட்ட வருவாய் அலுவலரின் பிரேரபணையும் அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் என்ன பிரேரபணை சொல்லியிருக்கிறார்? அதுகுறித்து அரசு என்ன முடிவெடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இருக்கின்ற வெற்றிடங்கள் எந்த முறைவைப்பின் மூலம் தருவது என்பதுபற்றி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் ஆய்ந்து, எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் எடுத்து ஒரு பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாநில அரசுக்கும் அனுப்பியிருக்கிறார். இப்போது இருக்கின்ற காலியிடங்களின் எண்ணிக்கை குறைவு. வேலை வேண்டும் என்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. எப்படி முறைவைப்பது என்பதைப் பார்க்கும்போது, மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலிடம் என்ற வகையிலே விளக்க உரையிலே தரப்பட்டிருக்கும் முறைவைப்பு அடிப்படையில் புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறார்கள்.

(2) அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நகர்ப்புற கிராமப்புற மருத்துவ மனைகளில் பணியாற்றும் மருத்துவர்களிடையே பாகுபாடு இருப்பது குறித்து.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

" அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நகர்ப்புற கிராமப்புற மருத்துவமனைகளில் பணியாற்றும் ஒரே கல்வித் தகுதியுடைய மருத்துவர்களிடையே பாகுபாடு இருப்பது குறித்து "

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே இரண்டாவது பாராவிலே இவர்கள் தாங்கள் பணிபுரியும் இடத்திற்கேற்றவாறு அவ்வப்போது அரசு நிர்ணயிக்கும் விதம் பஞ்சப்படி மற்றும் இதர படிகள் பெறுகின்றனர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே உள்ள மருத்துவமனைகளிலே பணியாற்றும் மருத்துவர்களுக்கு இந்த அரசு ஒரு பாரபட்சம் காட்டுகிறது என்று இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. ஊராட்சி ஒன்றிய மருத்துவ அலுவலர்கள் மேல் படிப்புக்குச் செல்ல விரும்பும் போது, அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. ஆனால் அரசு மருத்துமனைகளிலே நகர்ப்புறங்களிலே பணியாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், நகர்ப்புறங்களிலே பணியாற்றுபவர்களுக்கு மொத்தத்தில் ஓராண்டு காலம் குறைத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் கிராமப்புறங்களிலேயிருந்து வருபவர்களுக்கு 3 ஆண்டுக் காலம் என்ற அளவிலே இருக்கிறது. ஆகவே, கிராமப்புறங்களிலே இருக்கும் மருத்துவர்களுக்கும், நகர்ப்புறங்களிலே இருப்பவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை அளித்து, இந்த வேறுபாடுகளை அகற்றுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, கிராமப்புறங்களிலே பணியாற்றும் மருத்துவர்களுக்குக் குறைவாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு உண்மையல்ல. காம்பென்சேட்டரி அலவன்ஸ் என்று அவர்களுக்கு 75 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

Compensatory Allowance of Rs. 75 per month for restricted private practice is sanctioned to Assistant Surgeons only in places where there will be Registered Medical Practitioners of the modern medicine. Special Compensatory Allowance of Rs. 75 per month for work in Municipal areas

@ 174-175ஆம் பக்கங்களில் இணைப்பு—ஆக அச்சிடப்பட்டுள்ளது.



என்றும் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் ரூரல் இன்சென்டிவ் அலவன்ஸ் என்ற முறையிலே ரூ. 10 கொடுக்கிறோம். இதெல்லாம் கொஞ்சம் கூட போதுமானதல்ல. இவைகளை இன்னும் உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் நியாயமானதுதான். இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கேள்வி மாதிரி சொல்லியிருக்கிறார்கள். போஸ்ட்-கிராஜுவேட்களுக்கு, ரூரல் பகுதிகளிலே இருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். புதிதாக மாற்றியமைத்திருக்கக்கூடிய ரூல்ஸ்படி கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. Broad Guidelines ஆகவே, ரூரல் பகுதிகளிலே இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அங்கே பணியாற்றும் டாக்டர்களுக்கு ஜாஸ்தியாகச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று இருக்கும் வாதம் நியாயமானதுதான். அதுபற்றி நிதி நிலைமையைப் பொறுத்து முடிவு எடுக்கப்படும்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்கப்படுவதாகக் கூறினாலும், அவர்களுக்கு வழங்கப்படவில்லை. மேல் பட்டப் படிப்புக்குப் போகும்போது நகர்ப்புறங்களிலே பணியாற்றுபவர்களுக்கு இரண்டு ஆண்டு என்றும், கிராமப்புறங்களிலே பணியாற்றுபவர்களுக்கு மூன்று ஆண்டு என்றும் வைத்திருக்கிறார்கள். மேலும் நகர்ப்புறங்களிலே இருப்பவர்களுக்கு 650 ரூபாய் என்றும் கிராமப்புறங்களிலே இருப்பவர்களுக்கு 350 ரூபாய் என்றும் உதவித் தொகை வழங்குகிறார்கள். இந்த நிலைமைகளை மாற்றி இரு சாராருக்கும் இந்தச் சலுகைகள் சமமாகக் கிடைக்கும் அளவுக்கு நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, ஒரேமாதிரியான குவாலிஃபிக்கேஷன் உடையவர்கள் கிராமப்புறத்திலே பணியாற்றினாலும் நகர்ப்புறத்திலே பணியாற்றினாலும் அவர்களுக்கு ஒரேமாதிரியான சம்பளம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இதுசம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். போஸ்ட்கிராஜுவேட்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. முன்பு பாரபட்சமான நிலைமை இருந்தது. அந்த நிலைமையை இப்போது மாற்றியமைத்திருக்கிறோம். இப்போதெல்லாம் ஒரேமாதிரியாக இருகிறது. கிராமப்புறங்களிலே பணியாற்றுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

சொன்ன கருத்துக்களைத் தீவிரமாகப் பரிசீலித்து, மேலும் என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றிப் பரிசிலிக்கலாம் என்பதை ஒரு வாக்குறுதி யாகக்கூட தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசின் தீர்மானம்.

### கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

மாண்புமிகு உறுப்பினர்கள் 5 பேர் இன்றைக்கே பேசவேண்டும் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் எத்தனை பேர் இன்றைக்கே பேசவேண்டும் என்று கேட்கவிருக்கிறார்களோ தெரியவில்லை. இருக்கும் நேரத்தை ஒழுங்காகப் பங்கிட்டால், ஒவ்வொரு வரும் 15-லிருந்து 20 நிமிடங்களுக்குள்ளாகத்தான் பேச வேண்டும். இதை விட இரட்டிப்பு மடங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் நாளையதினம் பேச இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1982-83ஆம் ஆண்டுக்கான கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுவதற்கான வாய்ப்பு தந்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பிலே கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதி மிகக் குறைவாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. இதைப் பரிசீலிக்க வேண்டும். மற்ற மாநிலங்கள் 30 சதவீதத் திற்குக் குறையாமல் கல்விக்காக ஒதுக்கியிருக்கின்றன. அப்படிப்பட்ட மாநிலங்கள் இந்தியாவிலே இருக்கும்போது, ஒரு முன்னேற்றமாக இருக்க வேண்டும் என்று கருதும் இந்த சர்க்கார் கல்விக்காக அதிகமான தொகை

@ 110 176 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இரண்டு அறிவிப்புக்களைச் செய்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஒரு தனியார் பள்ளியிலிருந்து இன்னொரு தனியார் பள்ளிக்கு ஆசிரியர்கள் மாறுதலில் செல்லும் வாய்ப்பு இதுவரையில் இல்லை. இப்போது அந்த வாய்ப்பை கல்லூரி ஆசிரியர்களுக்கு அளித் ததைப் போலவே, இங்கேயும் விஸ்தரித்திருக்கிறார்கள். அதை நான் வர வேற்கிறேன். பெண்கள் உயர் நிலைப் பள்ளிகளிலே, குறிப்பாக தர்மபுரி மாவட்டத்திலே இருக்கும் பெண்கள் உயர் நிலைப் பள்ளிகளிலே, கழிப்பிடங் களே இல்லை. அதுபற்றி பலமுறை சொல்லியிருக்கிறோம். இப்போது அதற்காக 1½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். மத்திய அரசு எப்போது அகவிலைப் படி உயர்வை அறிவிக்கிறதோ, அப்படி அறிவித்த உடனே நாங்களும் அகவிலைப் படி உயர்வைத் தருகிறோம் என்று சொன்னார்கள். இப்போது மத்திய அரசு அறிவித்ததற்குப் பிறகும், இந்த அகவிலைப் படி உயர்வு அறிவிக்கப்படாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்த அரசு இதுகுறித்து எப்போது அறிவிக்க இருக்கிறது? இந்த அகவிலைப் படி உயர்வை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். 'பல் தொழில் பயிலகங்களையும்' தொழிலியல் கல்லூரிகளையும் இன்னும் அதிகமாக ஏற்படுத்த வேண்டும். அதற்கு முன்னோடியாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 'இளம் பல் தொழில் பயிலகங்கள்'—ஜூனியர் பாலிடெக்னிக்ஸ் போன்றவைகளை ஏற்படுத்தி எல்லோருக்கும் அந்த வாய்ப்பினை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியா இப்போது தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்து வரு கிறது. மிகவும் வேகமாக முன்னேறி வருகிறது. இந்த நேரத்தில், தமிழகமும் தொழில் முன்னேற்றத்தில் தன்னை ஒப்படைத்துக்கொண்டு முன்னேறு வதற்கு 'பல் தொழில் பயிலகங்களையும்' தொழிலியல் கல்லூரிகளையும் இன்னும் அதிகமாக ஏற்படுத்தவேண்டும். அதற்கு முன்னோடியாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 'இளம் பல் தொழில் பயிலகங்கள்'—ஜூனியர் பாலிடெக்னிக்ஸ் போன்றவைகளை ஏற்படுத்தி எல்லோருக்கும் அந்த வாய்ப் பினை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி குறைவாக இருக்கிறது. தொழில் முன்னேற்றத்தில் இந்த அரசு அதிக நாட்டம் செலுத்த வேண்டும். இதற்கென்று இருக்கும் நிதி ஒதுக்கீட்டைக் கூடுதலாக்க வேண்டும். ஆசிரியர்களின் பணியிடங்களைப் பொறுத்தவரையில், இப்போது இருக்கும்

எண்ணிக்கை போதாது. இன்றைக்கு அரசாங்கம் அமுலில் வைத்திருக்கும் அரசாணையின் அடிப்படையில் பல்லாயிரக் கணக்கான இடங்கள் தேவைப் படும்போது, அதற்காக ஒதுக்கியிருப்பது 10 சதவீதம் கூட இல்லை என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

எனவே, இவைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் போதாது என்பதைச் சொல்லி, பதவி இடங்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்றும கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 100 பகுதி நேர தொழில் ஆசிரியர் பதவிகள் முழு நேர ஆசிரியர் பதவிகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் வரவேற் கிறேன். ஆனால் இன்னும் 200 அல்லது 300 பகுதி நேர தொழில் ஆசிரியர்கள்தான் மொத்தமாக இங்கே இருக்கிறார்கள் என்று நம்புகிறேன். சாதாரணமாக ரூ. 100 அடிப்படைச் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிற அவர்களைப் பொறுத்த வரையில், முழுமையாகவே அவர்கள் அனைவரும் முழு நேர ஆசிரியர்களாக அறிவிக்கப்பட வேண்டும் என்று கோரி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பகுதிநேர ஆசிரியர்களாக இருக்கும் அத்தனை தொழில் ஆசிரியர்களையும் முழு நேர தொழில் ஆசிரியர்களாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகக் கல்வி என்ற ஒரு வெளியீடு வருவதாக இந்தக் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு வெளியீடு வருவது என்பது உறுப்பினர்களான எங்களுக்கேகூட இதுவரை தெரியாது. எங்கள் யாருக்கும் அது வருவதில்லை. அதைத் தெரிந்து கொண்டால், அதன் மூலம் சில விவரங்களைத் தெரிவிக்கவும், சில ஆலோசனைகளைத் தெரிவிக்கவும், அதைப்போலவே சில விவரங்களைத் தெரிந்து கொள்ளவும் உதவியாக இருக்கும் என்பதால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதை அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் புதிதாக 4,433 நர்சரிப் பள்ளிகள் தொடங்கப்பட இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக நான் மகிழ்ச்சியடை கிறேன். ஆனால் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையே ஒரு கோடி ரூபாய்தான். அதாவது அதைப் பிரித்தால் ஒவ்வொரு நர்சரிப் பள்ளிக்கும் ரூ. 2,056 தான் வரும். இப்படி ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 2,056 ஒதுக்கீடு செய்தால், அந்த நிதியை வைத்துக்கொண்டு ஒரு வகுப்பைத் தொடங்கும் போது, யாரை நியமித்து எப்படி சம்பளம் கொடுத்து பிள்ளைகளைப்





பராமரிக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். ஒரு கோடி ரூபாய் என்பது பார்ப்பதற்குப் பெரிதாகத் தோன்றலாம். ஆனால் அதை 4,433 பள்ளிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கும்போது, எவ்வளவு வரும் என்பதைத்தான் பார்க்க வேண்டும். தற்போது வறுமையில் உள்ள சிறார்களுக்கு மதிய உணவு அளிப்பதற்காக என்று ரூ. 100 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி யிலிருந்து ஒரு சில கோடிகளையாவது இதற்கு ஒதுக்கி நல்ல முறையில் இளஞ்சிறார்களுக்கான பள்ளிகளைப் பராமரிக்க வேண்டும் என்ற ஆலோசனையை அரசின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, எப்போதோ ஒரு காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதியின் அடிப்படையிலே இன்னும் மதிய உணவுத் திட்டம் என்பது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், விலைவாசி உயர்ந்து விட்டது என்பதை இந்த அரசால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. விலை வாசி உயர்வின் அடிப்படையில் ஊழியர்களுக்கு அகவிலைப் படி உயர்வு அளிக்கிறது. ஆனால், பள்ளி மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில், விலைவாசி உயர்ந்ததாகவே இந்த அரசு ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. உணவுப் பொருள்கள் விலை ஏறவே இல்லை என்று கருதுவதைப்போல் இருக்கிறது. எப்போதோ நிர்ணயிக்கப்பட்ட 10 காசைத்தான் இப்போதும் அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. மேற்கு வங்கத்தில் மதிய டிபனுக்காக மட்டும் 35 காசுகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் இங்கே இன்னும் 10 பைசா மட்டுமே தரப்படுகிறது. கேட்டால், "கேர் நிறுவன உதவி" கிடைக்கிறது என்று சொல்லக்கூடும். கேர் நிறுவன உதவியைச் சேர்த்தால்-கூட—அது இரண்டு நாட்களுக்கு ஒருமுறைதான் வருகிறது—20 பைசாதான் ஆகிறது. இந்த 20 பைசாவில் எப்படி மாணவர்களுக்கு நல்ல உணவை வழங்க முடியும் என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு குரல் : எப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு மீனாட்சிசுந்தரம் அமைச்சராக மாறினார்? -(உறுப்பினர் திரு மீனாட்சிசுந்தரம் ஆளும்கட்சி உறுப்பினர் வரிசையில் அமர்ந்து அமைச்சரோடு பேசிக் கொண்டிருந்தார்.)

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எந்த இடத்தில் உட்கார்ந்திருக்கிறார் என்பதுபற்றி இங்கே பிரச்சினையைக் கிளப்பி யிருக்கிறார்கள். சற்று நேரம் அந்தப் பக்கத்தில் போய் உட்கார்ந்து பேசுவது என்பது தவறல்லவே.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினர் திரு முத்துசாமி அவர்களுக்கும் ஆசையாக இருந்தால் இங்கே வந்துவிடலாம்.

திரு செ. முத்துசாமி : அமைச்சர் பதவிக்கு வருவது என்பது வேறு. அமைச்சரின் அருகில் உட்கார்ந்து கொண்டு பேசுவது என்பது வேறு. அமைச்சர் அருகில் உட்கார்ந்து கொண்டு பேசினால் வசதியாக இருக்கும் என்றுதான் சொல்கிறார்.

ஆகவே, மதிய உணவுக்காகத் தற்போது வழங்கப்படும் உதவியான 10 காசு என்பதை குறைந்தபட்சம் 35 காசாகவாவது உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்பக் கல்விக்கு என்று தனி இயக்குநரகம் தேவை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த பிரச்சினைகளெல்லாம் இன்றையதினம் பெருமளவுக்கு வளர்ந்திருக்கின்றன. ஒரு லட்சம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையெல்லாம் இப்போது அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறோம். அவர்களின் பிரச்சினைகள் மிகப் பெருமளவுக்கு வளர்ந்திருக்கின்றன. எனவே இவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, ஆரம்பக் கல்விக்கென்றே தனியாக ஒரு இயக்குநரகம் தேவை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல, ஆரம்பக் கல்விக்கென்று தனி மாவட்டக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். அந்த அளவுக்குப் பிரச்சினைகள் இன்றையதினம் வளர்ந்திருக்கின்றன. நேரடியாக ஆரம்பப் பள்ளிகளையெல்லாம் அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரும் போது, அவர்களுக்கு என்று தனியாக மாவட்டக் கல்வி அதிகாரிகள் இருந்தால் தான், அவர்களின் பிரச்சினைகளை ஒழுங்காகத் தீர்க்க முடியும். அவர்களுக்கு என்று தனி அலுவலகங்கள் தேவை என்பதையும் நான் இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. அவர்களையெல்லாம் பராமரிப்பதற்காக என்று தனியாக 4 அல்லது 5 மண்டல இயக்குநர்களை அரசு நியமிக்க வேண்டும். இப்படி ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்காக என்று தனியாக இயக்குநரகத்தை உண்டாக்கினால், அதன் மூலம் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு இன்னும் பல நன்மைகளைச் செய்து தர முடியும். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கித் திருப்திப்படுகிற அரசு, அவர்களுக்கு உண்மையில் செய்ய வேண்டும் என்று விரும்பினால், கண்டிப்பாக அவர்களுக்கு என்று தனி இயக்குநரகத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இருக்கும் செயலகத்தில் சரியான அளவுக்கு 'ஸ்டாஃப்' கிடையாது. எந்த ஒரு புதிய அமைப்பு வந்தாலும், அதற்கு என்று தனி 'ஸ்டாஃப்' போட்டு செயலாற்ற வேண்டும். எனவே அந்த அடிப்படையில்



கூடுதலாகத் துணைச் செயலாளர்களை நியமித்து, அவர்களுக்கெல்லாம் போதிய அளவுக்கு அலுவலர்களைத் தந்து, புதிதாக ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற ஆலோசனையை நான் அவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, 'சிக் முனிசிபாலிடீஸ்' என்று சொல்லப்படும் நோய் வாய்ப்பட்ட, சரியான நிதி வசதியில்லாத நகராட்சிப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், அரசு முழுமையான அளவுக்கு மான்யம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளிகளுக்கெல்லாம் அந்த அளவுக்கு மான்யம் கொடுக்கும்போது, இத்தகைய நிதிவசதியில்லாத நகராட்சிப் பள்ளிகளுக்கு —குவாசி கவர்ன்மெண்ட் பள்ளிகளுக்கு ஏன் தரக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. 17 நகராட்சிப் பள்ளிகளை அரசே கடந்த ஆண்டுகளில் ஏற்றுக்கொண்டது. அவ்வாறு அரசுப் பள்ளிகளாக்கப்பட்ட அந்த 17 முன்னாள் நகராட்சிப் பள்ளிகளின் ஊழியர்களின் நிலை என்ன என்பது இதுவரை முடிவு செய்யப்படாமலேயே இருக்கின்றது. அவர்களையெல்லாம் அரசுத் துறையில் மேற்கொண்டு எவ்வளவு காலம் ஆயிற்று? அப்படியிருந்தும் அவர்கள்பற்றி இன்னும் ஒரு முடிவெடுக்கப் படாமல் இருப்பது எந்த வகையிலும் சரியல்ல என்பதை எடுத்துச் சொல்லி, விரைவில் அவர்களைக் குறித்து அரசு தக்க முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுக் கல்லூரிகளில் 10 ஆண்டுக் காலம் பணியாற்றிய ஆசிரியர்களுக்குப் பதவி மேம்பாடு அளிக்கப்பட வேண்டும் என்று கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியதன் காரணமாக ஒரு முடிவெடுக்கப்பட்டது. ஆனால் ஏப்ரல் 1980 ஆம் ஆண்டில் போராட்டம் நடந்தபோது, அப்போது மட்டும் அவர்களுக்குத் தரப்பட்டது. ஆனால் 1980 ஆம் ஆண்டுக்குப் பிறகு 10 ஆண்டுக் காலம் பணி முடித்தவர்களின் கதி என்ன? அதை அவர்களுக்கு இதுவரை அமுல்படுத்தாமல் இருப்பதன் காரணம் என்ன என்று கேட்க விரும்புகிறேன். ஒரு முடிவை எடுத்தால், அதைத் தொடர்ந்து அமுல்படுத்த வேண்டுமா இல்லையா? பத்து ஆண்டுக் காலம் தொடர்ந்து பணியாற்றிய துணைப் பேராசிரியர்கள், பேராசிரியர்களாகப் பதவி மேம்பாடு அளிக்கப்படுவார்கள் என்று முடிவெடுத்த பிறகு, இப்போது அது ஏன் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது? எதற்காக அந்த உத்தரவு நிலுவையில் வைக்கப்பட்டிருக்கிறது? கல்வித் துறையின் வேகத்திற்கு இது ஒரு சவால் அல்லவா? முன்னேற்றமாகச் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு முடிவை எடுத்துவிட்டு, அந்த முடிவை இப்போது தேக்க நிலையில் வைக்கலாமா? அதற்கு சட்ட ரீதியான தடை ஏதேனும் இருக்கிறதா? அல்லது வழக்கு மன்றத்தின் தடை ஏதேனும்

இருக்கிறதா? அல்லது மத்திய அரசின் தடைதான் ஏதேனும் இருக்கிறதா? இந்தத் தேக்க நிலைக்கு என்ன காரணம் என்றே எனக்குத் தெரியவில்லை என்பதால், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அரசு ஏற்கெனவே எடுத்த முடிவைச் செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 32 கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், வேறு பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற வேண்டும் என்றும் அப்போதுதான் பதவி உயர்வு அளிக்கப்பட முடியும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் தனியார் கல்லூரிகளுக்கு இத்தகைய நிபந்தனைகள் விதிக்கப்படவில்லை. இப்போது அந்த 32 பேர்களிலும் ஒன்பது பேர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படுவதாகவும் பின்னால் காலியிடங்கள் ஏற்படும்போது, மீதியுள்ள 23 ஆசிரியர்களுக்கு இந்தப் பதவி உயர்வு கொடுக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 23 பேர்களுக்கு ஏன் இப்போது செய்யப்படவில்லை என்றால், அவர்கள் சி பிளஸ் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த அரசு இத்தகைய உத்தரவு போடுவதற்கு முன்னால் சி பிளஸ் ஆக இருந்தவர்கள் எல்லாம் இப்போது புரபசர்களாகவும் பிரின்சிபால்களாகவும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் பணியாற்றும்போது, இந்த 23 பேர்களை மட்டும் ஒதுக்குவானேன் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், சி பிளஸ் என்றிருந்தாலும், எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் 23 ஆசிரியர்களுக்கும் அரசு ஒரு வழி செய்யக் கூடாதா என்று கேட்டு, உடனடியாக அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்தவரை; அவர்கள் எம்.பில். அல்லது பிஎச்.டி., முடித்தாக வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படவில்லை. ஆனால் அரசுக் கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 1982 ஆம் ஆண்டுக்குள் எம்.பில். அல்லது பிஎச்.டி.. முடிக்க வேண்டும் என்றும் அவ்வாறு முடிக்கவில்லை என்றால் அவர்களுக்கு ஊதிய உயர்வு—இன்கிரிமெண்ட்—கிடையாது என்றும் ஒரு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இப்படி தனியார் கல்லூரிகளுக்கு ஒரு நிலை என்றும் அரசுக் கல்லூரிகளுக்கு ஒரு நிலை என்றும் இருக்கக் கூடாது. எம்.பில். படிக்க எல்லோருக்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. அந்த நிலையில் இன்கிரிமெண்ட் நிறுத்தப்படும் என்று சொன்னால், அது எப்படி நியாயம் என்றுதான் கேட்க விரும்புகிறேன். கேட்டால் யு.ஜி.சி. நிபந்தனை என்கிறார்கள். நம் மாநிலத்தின் கல்விக் கொள்கையை வகுக்கும்போது யு.ஜி.சி. யோடு உட்கார்ந்து பேசித்தான் இதையெல்லாம் செய்கிறோம். எனவே இந்த வகையில் அவர்களுக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



தனியார் கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், எப்.ஐ.பி. திட்டத்தின்படி பிஎச்.டி. மற்றும் எம்.பில். படிப்பதற்காக சில ஆசிரியர்கள் அனுப்பப்பட்டார்கள். அப்படி அனுப்பப்பட்டவர்கள் ஆறு மாத காலம் அல்லது ஒன்பது மாத காலம் படித்த பிறகு, "நீங்களெல்லாம் எக்செஸ் டீச்சர்கள், இது நியூ அப்பாயின்ட்மெண்டுக்குத்தான் பொருந்தும் என்று சொல்லி, நீங்களெல்லாம் திரும்பக் கல்லூரிக்கே போய் விடுங்கள்" என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். Every rule has its own exception என்று சொல்லுவார்கள். இந்திய அரசியலில் எல்லா விதிகளுக்கும் ஒரு விதிவிலக்கு அல்லது தவிர்ப்பு இருக்கிறது என்பதை நாமெல்லாம் அறிவோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கும் ஒரு விதிவிலக்கை வாங்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக சில குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே இது சம்பந்தமாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டாவது இதில் சரியான முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் பல நேரங்களில் போராட்டம் நடைபெறுகின்றது. போராட்டம் நடத்துகிறார்கள், வெளியே போகிறார்கள், பிறகு உள்ளே வருகிறார்கள். ஆனால் அதன் தலைவர்களை மட்டும் 'சஸ்பெண்டு' செய்து வைத்திருக்கிறார்கள். இதை நீக்கி அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எழுந்துள்ள பிரச்சினையை அடுத்து ஒரு குழு போட்டிருக்கிறார்கள். மேலவையில் கல்வி குறித்த கொள்கைக் குறிப்பின்மீது விவாதம் வருகிறபோது, குழு அமைத்திருக்கிறார்கள். குழு அமைப்பது என்பது காலத்தை எடுத்துக்கொள்ள இருக்கிற ஒரு நல்ல நடைமுறை. அப்படி இதிலும் காலத்தை எடுத்துக்கொள்வதுபற்றி கவலைப்படவில்லை. ஆனால் அங்கே என்ன நடைபெறுகிறது என்றால் . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : "காலத்தை எடுத்துக்கொள்வது பற்றி கவலையில்லை" என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் குழுவை அரசு போடவில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகமே தன்னுடைய அதிகாரத்தின் அடிப்படையில் அந்தக் குழுவை நியமித்திருக்கிறது. எனவே அரசு போட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி** : காலையில் அதை நான் கேள்விப்பட்டேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம்தான் அந்தக் குழுவைப் போட்டது என்பதைத் தெரிந்துகொண்டேன். அதுவும் அரசாங்கமே அப்படி வலியுறுத்துவதற்கு முன்னால் அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக ஒரு தந்திரமாக இதைச்

[திரு. செ. முத்துசாமி] [1982 மார்ச் 19

(முற்பகல் 10-50)

செய்திருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். எனவே அதிலும் சரியான தீர்வு ஒன்றைக் காண அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருவதாக ஏற்கெனவே சொல்லப்பட்டு இன்னும் வராமலே இருக்கிறது என்று ஆசிரியர்கள் முறையிடுகிறார்கள். திருத்தத்தைக் கொண்டுவர முயற்சி எடுக்க வேண்டும். முதலமைச்சர் மேலவையிலே சொன்னதுதான் இது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஏற்பட்ட காலத்திலே இருந்து இன்று வரை 52 ஆண்டுக் காலத்திலே இத்தனை ஆசிரியர்கள் ஒட்டுமொத்தமாக டிஸ்மிஸ் செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து நியாயம் வழங்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர் கையிலே அதிகாரம் இருக்கிறது, ஆகவே அவர்தான் செய்ய வேண்டும். அவர்கள் என்ன செய்வார்கள்? எங்களிடம் வந்து சொல்வார்கள், நாங்கள் இங்கே வந்து நியாயம் வழங்குங்கள், தர்மத்தை நிலைநாட்டுங்கள் என்று கேட்கிறோம்.

தர்மபுரி மாவட்டத்திலும், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்திலும் மொழி சிறுபான்மையோர் பள்ளிகள் இருக்கின்றன. அங்குள்ள மொழி ஆசிரியர்களுக்கு சில சலுகைகளை வழங்க வேண்டும். மலையாளம், தெலுங்கு, சான்ஸ்கிரிட், கன்னடம், தமிழ் போன்ற ஐந்து மொழியாசிரியர்களும் அங்கே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்காக ஓர் உத்தரவு போட்டு தமிழாசிரியர்களைப் போலவே அவர்களுக்கும் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே ஒரு பிரச்சினையும் இல்லை. பணப் பிரச்சினை இல்லை. மனப் பிரச்சினைதான். அதிகாரிகளிடத்திலே கேட்டுப் பார்த்துவிட்டேன். இன்னும் முடிவாகவில்லை. ஆகவே முடிவு செய்யுங்கள், அதையும் விரைந்து செய்யுங்கள் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலே உள்ளவர்களுக்கு 'சீசனல் அலவன்ஸ்' கொடுக்க வேண்டும். நீலகிரி மாவட்டத்திற்கு ஆளுநர் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் சென்றால், அவர்களுக்கு சீசனல் அலவன்ஸ் வழங்கப்படுகிறது. மே மாதத்தில் அங்கு குளு குளு வசதிக்காக பலர் செல்வதால், விலைவாசி ஏறிவிடுகிறது என்பதால், அவர்களுக்கு அந்த அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. இங்கிருந்து போகிறவர்களுக்கு மட்டுமா விலை ஏறுகிறது, அங்குள்ளவர்களுக்கு விலை ஏறவில்லையா என்று கேட்க விரும்புகிறேன். அங்குள்ளவர்கள் இப்படித்தான் ரொம்பக் கடுமையாகக் கேட்கிறார்கள். நாங்கள் மனிதர்கள் இல்லையா, எங்களுக்கும் சீசனல் அலவன்ஸ் கொடுங்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 19] [திரு. செ. முத்துசாமி]

தாளவாடி பகுதி காட்டுப் பகுதி என்பதால் 20 சதவிதம் அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. அதை இப்போது நிறுத்திவிட்டார்கள். அந்தப் பகுதியைப்பற்றி கல்வியமைச்சருக்கே தெரியும். அவர் போயிருக்கிறார். கல்வியமைச்சருடைய பகுதிகூட. ஆகவே தயவு செய்து அந்த 20 சதவித அலவன்ஸ் மீண்டும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிக்கு போகாமலே ஊதியக் குழுவில் எழுதி விடுகிறார்கள். 60 கிலோ மீட்டர் தொலைவிற்கு ஆசிரியர்கள் தங்கள் தலையில் தூக்கிச் செல்கிறார்கள். வேறு வழியில்லை. ஆகவே அவர்களுக்கு அந்தப் படியை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சியாக விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. கல்வி அமைச்சருக்குச் சொந்தமான இடம். அங்கே உள்ள ஊழியர்களுக்கு மற்ற பகுதிகளில் தருவதைப் போல் வீட்டு வாடகைப் படியும், நகர ஈட்டுப் படியும் கொடுக்காமல் இருக்கிறார்கள். அவற்றை விரைவிலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம், திருச்சி பகுதிகளுக்கு வீட்டு வாடகைப் படி தரப்படாமல் இருக்கிறது. அதையும் உடனடியாகத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில், குன்னூர், அரவங்காடு கன்டோன்மென்ட் பகுதிகள் இருக்கின்றன. அங்கே இருக்கக் கூடிய ஒன்பது பள்ளிகள் ரூரல் இன்ஸ்டிடியூஷன் கீழும் வருவதில்லை, அங்கு பணியாற்றக் கூடியவர்களுக்கு வீட்டு வாடகைப் படியும் வழங்கப்படுவதில்லை. அந்தப் பிரதேசம் இந்திய யூனியனுக்கு உட்பட்டதா, தமிழகத்திற்கு உட்பட்டதா என்ற டிக்ளரேஷன் வராமலே இருக்கிறது. அது மத்திய பாதுகாப்பு ஜூரிஸ்டிக்ஷனில் இருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஊட்டிக்கு வந்தபோதுகூட, இந்தப் பிரச்சினையைப்பற்றிச் சொன்னேன். ஆகவே இப்போது அதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து அவர்களுக்கும் வீட்டு வாடகைப் படி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்காட்டில் வீட்டு வாடகைப் படி கொடுத்து வந்ததை இப்போது நிறுத்தி விட்டார்கள். ஏற்காட்டில் ஒரே தாலுக்கா, ஒரே பஞ்சாயத்து யூனியன்தான் இருக்கிறது. பஞ்சாயத்து பூராவும் கொடுக்க வேண்டும். அதற்கு ஒரு சந்தேகம் வந்து ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அது இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதிகாரிகளுக்கு வரும் சந்தேகங்களைத் தீர்க்க நான்கைந்து ஆண்டுகள் ஆகின்றன. பிறகு உத்தரவு போடும்போது, உத்தரவு போட்ட தேதியிலிருந்துதான் கொடுக்க வேண்டும் என்று நிதித் துறை கூறுகிறது. நிதித் துறை ஒரு கொள்கையை வைத்திருக்கிறது. அது வரையில் ...

வாங்காத ஏமார்ந்தவர்கள், எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்கும்போது, அவர்கள் அப்படிக் கேட்டு வந்த நாளில் இருந்துதான் கொடுப்போம் என்கிறார்கள். இது என்ன நியாயம் என்று தெரியவில்லை. நிதித் துறை சில விஷயங்களில் முன்தேதியிட்டு வழங்குகிறது. அதைப் போலவே ஆசிரியர்கள் விஷயத்திலும், சாதாரண ஊழியர்கள் விஷயத்திலும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈட்டிய விடுப்பு : அரசு ஊழியர்கள் 235 நாட்களுக்கு ஓராண்டில் வேலை செய்கிறார்கள். வருடம் பூராவும் வேலை செய்கிறார்கள் என்றாலும், 365 நாட்களில் 285 நாட்கள்தான் வேலை செய்கிறார்கள். அதைப் போலவே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் 220 நாட்களும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 200 நாட்களும் வேலை செய்கிறார்கள். அந்த விகிதாச்சாரப்படி ஈட்டிய விடுப்பு கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். 30 நாட்களுக்கு விடுப்பு கொடுத்தாலும், அந்தக் காலத்தில் பேப்பர் திருத்துகிறோம், சென்சஸ் எடுக்கிறோம், இன்னும் எத்தனையோ காரியங்களைச் செய்கிறோம். இது கல்வித் துறைக்கும் தெரியாதது அல்ல. தெரிந்திருந்தும் அதை உயர்த்த மனம் இல்லை. ஆனால் இப்போது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சியில் வெற்றி பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உரிமையோடு வாதாடி பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்வு நிலை, சிறப்பு நிலைக்கு உயர்வு : தேர்வு நிலை, சிறப்பு நிலை வழங்கும்போது ஒரு ஊதிய உயர்வாவது இருக்க வேண்டாமா? இல்லாவிட்டால் வெறும் சிறப்பு நிலை ஆசிரியர் என்று எழுதுவதற்கு மட்டும்தான் பயன்படும். அந்த அளவிற்குத்தான் அதிலே நன்மை இருக்கிறது. ஒரு ஊதிய உயர்வாவது போட்டுக் கொடுக்கக் கூடாதா? தேர்வு நிலை, சிறப்பு நிலை இல்லாதவர்களுக்கு அதை ஈடு கட்ட ஒரு ஊதிய உயர்வு தரப்படும்போது இவர்களுக்கு ஊதிய உயர்வு தராமல் இருப்பது என்ன நியாயம்? ஆகவே நல்ல நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் உயர்வு பெற செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பி.எட். தகுதி பெற வேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். தமிழாசிரியர்களும் பி.எட். தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தில் அவர்களுடைய பதவியை மேம்படுத்தியிருக்கிறார்கள். அதைப் போலவே தமிழாசிரியர்கள் பதவியை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி தர முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செகண்டரி கிரேடில்



பணியாற்றும் பி.டி. ஆசிரியர்கள் எம்.ஏ. படித்து விடுகிறார்கள். அவர்களுக்கு மேல் நிலைப் பள்ளிகளில் புரமோஷன் கொடுக்க வேண்டாமா? அதற்கு வழியில்லை. ஆகவே பணி விதிகளில் பி.டி. படித்த செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு எத்தனை சதவிதம் என்று வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விடுப்புப் பயணச் சலுகையை உடனடியாக, கர்நாடகாவைப் போல, இந்தியா பூராவும் போய் வருவதற்குத் தர வேண்டும். பாண்டிச்சேரி சிறிய மாநிலம். அங்கே தந்திருக்கிறார்கள்.

இருபது ஆண்டுகள் பணியாற்றிய பட்டதாரி தமிழாசிரியர்களுக்கு சிறப்பு நிலை வழங்கும் பிரச்சினையை விரிவு படுத்துங்கள். செகண்டரி கிரேட், ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு எப்படி சிறப்பு நிலை வழங்கப்பட்டதோ அதைப் போலவே பட்டதாரி தமிழாசிரியர்களுக்கும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில், பணி விதிகளின்படி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் நடந்தது. அவர்களுடைய பணியை வரன்முறைப் படுத்த வேண்டும் என்று விதி போட்டிருக்கிறோம். ஆனால் இன்னும் அந்த விதி அமுலாக்கப்படவில்லை. விதி எஃப்.ஆர். 22 பி-ஐப் பயன்படுத்தி பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று உள்ள விதியும் இன்னும் அமுலாக்கப்படவில்லை. உத்தரவு போட்டுவிட்டால் மட்டும் போதாது. அந்த உத்தரவுகள் கல்வித் துறையிலே அமுலாக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும்.

மேல் நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் பத்தாண்டுக் காலம் பணி புரிந்து, பி.டி. தகுதி பெற்றிருந்தால், பிறகு தலைமையாசிரியர்களாக எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்றால், அதற்குள் அவர்கள் ஓய்வு பெற்று விடுவார்கள். ஆகவே அதற்கு ஒரு சதவிகிதம் போட வேண்டும். பி.டி. ஆசிரியர்களுக்கு எத்தனை சதவிதம், தமிழாசிரியர்களுக்கு எத்தனை சதவிதம் என்று போட்டால், இரண்டு சாராருக்கும் திருப்தி இருக்கும். இதைச் செய்யக் கூடாதா? இரண்டு சாராரையும் கூட்டி வைத்துப் பேசி முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உட்படுத்தப்பட்ட பி.டி. ஆசிரியர்களைப்பற்றி எனக்கு முன் பேசியவர்கள் கூட குறிப்பிட்டார்கள். மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் தேர்வு எழுத முடியாது என்று சொல்லுகிறார்கள். அந்த நிலைமையிலே அவர்களுக்கு என்ன வழி செய்ய இருக்கிறார்கள்? அவர்கள்

அப்படியே போக வேண்டுமா? அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்தப் போகிறோமா இல்லையா என்பதைப்பற்றியெல்லாம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாக இல்லை. அதைத் தெளிவுபடுத்த வேண்டும். இதிலே விரைந்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த நவம்பர் 7 ஆம் தேதி தமிழாசிரியர்கள் கூட்டணி நாடு முழுவதும் சைக்கிள் பேரணி நடத்தி 18 அம்சக் கோரிக்கைகளைக் கொடுத்தது. அந்தக் கோரிக்கைகளைப்பற்றி இந்த அரசாங்கம் என்ன முடிவு எடுத்தது என்பது பற்றி இந்தக் குறிப்பிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அது குறித்து உடனடியாக முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நடுநிலை ஆசிரியர்கள் மன்றம் மாநிலம் பூராவும் பேரணி நடத்தி 6-2-1982 அன்று கொடுத்த கோரிக்கைகளைத் தீர்க்க இந்தக் குறிப்பிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அறிவிப்பிலேயாவது வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரச்சினைகள் தீர்க்க ஆசிரியர்களுக்கு என்று தனிக் குழு அமைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. இன்னும் தனிக் குழு அமைக்கப்படவில்லை. அந்தத் தனிக் குழுவை அமைத்து ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பென்ஷன்தாரர்கள் பிரச்சினை: எப்போதும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று அறிவிப்பு வரும். ஆனால் இந்தத் தடவை ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று அறிவிப்பு வரவில்லை. ஆகவே அவர்கள் தங்களுடைய பென்ஷன் நிலைமைகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்கிறார்கள். அறிவிப்பு வரும்போதாவது அதையும் சேர்த்து வெளியிடுங்கள் என்று நினைவுபடுத்துகிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை, அரசு ஊழியர்களாக ஆக்கினார்கள். 1—6—1981-க்கு முன்னால் இருந்த சம்பள நிலுவையை யார் கொடுப்பது என்று இன்னும் முடிவு செய்யவில்லை.

(முற்பகல் 11-00)

எவ்வளவு நாட்கள் கழித்துத்தான் முடிவு எடுப்பது? இந்தத் துறை, அந்தத் துறை என்று சொல்கிறார்கள். எந்தத் துறையாக இருந்தாலும், நாம் கொடுக்கத்தான் போகிறோம். அதை பஞ்சாயத்து யூனியன் மூலமாகக் கொடுக்கலாம் அல்லது பி.டீ.ஓ. மூலமாகக் கொடுக்கலாம், எப்படி இருந்தாலும், யார் மூலமாவது கொடுக்கத்தான் போகிறோம். ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது,



இது சரியாக இல்லை. அதை அரசு உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றை நான் கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அத்துடன் முடிக்க விரும்புகிறேன். அங்கீகரிக்கப்பட்ட சங்கம் அங்கீகரிக்கப்படாத சங்கம் என்று வைத்து ஒரு விதியைப் போட்டிருக்கிறார்கள். அதை கீழே இருக்கின்ற அதிகாரிகள் எப்படி புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அங்கீகார ஆணையில் தனி ஆசிரியர்கள் குறித்து சங்கம் பிரதிநிதித்துவம் செய்யக்கூடாது என்று தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது. ஒரு தனி ஆசிரியரை மாற்ற வேண்டுமென்று அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒரு பெடிஷன் போட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆசிரியரை மாற்றிவிட்டு, அவர்களுக்கு ஒரு நகல் போடுகிறார்கள். ஒரு தனிப்பட்ட ஆசிரியரை மாறுதல் செய்துவிட்டு, யார் புகார் செய்தாரோ அவருக்கு ஒரு நகல் அனுப்பியிருக்கிறார்கள். நான் அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு தலைவர் அவர்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன். இது போன்று காட்பாடி பஞ்சாயத்திலே ஏற்பட்டதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். அதன் மீதும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டேன். அதையும் தலைவர் அவர்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு ஒன்றே ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் மணி அடிப்பது, ஏதோ வேலை இல்லாமல் அடித்துக் கொண்டிருப்பதாக தயவு செய்து அங்கத்தினர் அவர்கள் நினைத்துக் கொள்ளக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, நான் விரைவாகவே முடித்துக்கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்களுடைய கோபாவேசத்திற்கு நான் ஆளாகி விடுவதற்கு விரும்பவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** கோபாவேசம் என்பதல்ல. ஒரு கட்டுப்பாடு என்றுதான் சொல்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** அங்கே ஒரு சுற்றறிக்கை போடப்பட்டிருக்கிறது. உண்ணாவிரதம் இருந்தால், பள்ளிக்கூட நாட்களிலே, உண்ணாவிரதம் நடத்தினால், ஊர்வலம் நடத்தினால், 400, 500 மாணவர்கள் இருக்கக்கூடிய இடத்திலே நடத்தினால் சம்பளத்தைப் பிடித்து விடுவதாக ஒரு சுற்றறிக்கை

போடப்பட்டிருக்கிறது. இதுவரையில் இந்த மாதிரி நடைமுறை இல்லை. சுதந்திரம் அடைந்த காலத்திலேயிருந்து இதுவரை இல்லை. நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கல்வித் துறையை நிர்வகித்து வந்தவர்கள். இப்படி ஊர்வலத்திலே பேசுவது, நடவடிக்கை எடுப்பது என்று ஆசிரியர்கள் செய்தால், அதை நசுக்குகின்றார்கள், சங்கடப்படுத்துகின்றார்கள் என்ற மாதிரி இப்படி ஒரு சுற்றறிக்கையை விட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை மேற்கொண்டிருக்கிறார்களே என்பதைச் சொல்லி, அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்பற்றிச் சிந்தித்து ஒரு நியாயமான தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுகின்றபோது, அவருடைய பேச்சை முழுவதுமாக கவனித்தால் அவர் முழுக்க முழுக்க ஆசிரியர்களைப் பற்றியே அவையில் பேசிக் கொண்டிருப்பது தெரிகிறது. இந்த அவையின் முன்னர் வைக்கப்பட்டிருக்கின்ற குறிப்பு கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு. ஆசிரியர்களைப் பற்றியது மட்டும் அல்ல. கல்வியைப்பற்றியும் கொள்கைக் குறிப்பிலே இருக்கிறது. ஒருவேளை ஆசிரியர்களைப் பற்றி மட்டுமே அவர்கள் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறார்களோ என்னவோ. ஆனால் அரசுக்கு கல்வியைப் பற்றியும் கவலைப்படுகின்ற நிலை இருக்கிறது. ஆகவே அந்த அடிப் படையிலேதான் ஒரு உத்தரவை நாங்கள் போட வேண்டியதாக இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : கல்வியைப்பற்றி கவலை இருக்கின்ற காரணத்தினாலேதான் நானும் பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறேன். தொழிற் கல்வி முன்னேற வேண்டும். மற்றதெல்லாம் முன்னேற வேண்டும், கல்விக் கூடங்கள் எல்லாம் நன்றாக நடக்க வேண்டும் என்பதற்காக ஆலோசனைகளை எல்லாம் சொல்லியிருக்கிறேன். ஆனால் நான் ஆசிரியர்களைப்பற்றி மட்டுமே முழுக்க முழுக்க பேசிக் கொண்டிருக்கவில்லை. அவர்களுக்குண்டான பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த ஊழியர்கள் உயர்ந்த நிலையில் இருந்தால்தான் கல்வி வெற்றி பெற முடியும், கல்வி வெற்றி பெறவேண்டும் என்றால், அவர்கள் பிரச்சினைகள் தீரவேண்டுமென்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் கேட்டுக் கொள்வது இத்தகைய சூழ்நிலைகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள், அதற்கெல்லாம் ஒரு தீர்வு காண வேண்டும் என்பதுதான்.

அடுத்து, அதிகாரிகள் பற்றிச் சொல்கிறேன். கூடுதல் இயக்குநர் ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். அவர் டூர் போகும்போது அங்கே இருக்கின்றவர்களைக் கூப்பிட்டு வைத்துப் பேசுகிறார்கள். ஒரு சங்கத்தைச் சேர்ந்தவரை மட்டும் வைத்துக்கொண்டு அவர்களிடம் பேசி அவர்கள் சொல்கின்றபடி புரோகிராம்



போட்டுக்கொண்டு போகிறார்கள். அப்படிப் போகின்றபோது. இப்படிப்பட்ட டிரான்ஸ்பர் பெடிஷன்கள் கொடுக்கின்றார்கள். அவர்கள் அதன்படி செய்கின்றார்கள். காட்பாடி விஷயம் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். இதுபோன்ற விஷயங்களில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : Hon. Deputy Chairman, Sir, I am indeed very happy to speak on the Policy Note on Education. After hearing the other hon. Member talking about provision of more facilities for the teachers, I thought that I could speak in detail about the advances that have been made in Education and about the responsibilities of the teachers towards their wards.

As I went through the Policy Note on Education, the first point that came to my mind was the education of the child at the pre-primary stage. We have read in the newspapers that 4,000 Nursery schools would be opened. This has been mentioned in the Policy Note also and a Committee has been appointed for this purpose. This Committee has gone into various details like the syllabus, etc. We are quite confident that this change of pattern in the Balwadi education will be a great improvement as it will give the child at the pre-primary stage the desire and the equipment to attend the primary schools.

As I went through the paragraphs in the Policy Note relating to High Schools and Higher Secondary Schools, I turned my attention to the details relating to the enrolment of girls in High Schools and Higher Secondary Schools. I find that in the High Schools, the enrolment of girls between the ages of 11 and 14 has been only 5 per cent and that in the Higher Secondary Schools the enrolment of girls between the ages of 14 and 17 has been only 2.42 per cent. This is quite a low figure when we consider the fact that we want more and more women to be educated so that they could be better citizens. Some years back, there was a National Council on Women's Education. It was a Central Committee appointed by the Government of India. There were also similar Committees in the States. I do not know whether such a Committee is functioning in this State. That Committee was very useful because we had a number

of women educationists on that Committee. They were constantly reviewing the percentage of enrolment of girls. Seminars were held and suggestions were made as to what would be the best way of enrolling more girls in the schools and of increasing the percentage of their enrolment. If such a Committee is not functioning, I request the Government to revive the Committee so that the enrolment of girls in schools could improve.

As I went through the paragraph relating to Teachers' training, I found that there had been a great advancement. Our State Council of Educational Research and Training deserves our commendation for the full utilisation of the funds that have been given to them. The National Council of Educational Research and Training has given its commendation for this. The Union Education Minister has also commended this and has said that Tamil Nadu is the first State which has not only fully utilised the available funds but has also done wonderfully well. Now, under the Teachers' Training Programme, the content of the material for teachers' education has been vastly improved. The programmes like the PCER, DACEP, and CAPE have also provided facilities for improving teachers' education. There has been a great improvement in the training programme and population education has also been included as a subject. I have only to request the Government that, since the percentage of teacher-trainees is quite small and since the institutions also are quite small in number, the teaching grants to these institutions may be made to be on a par with those for Higher Secondary Schools or High Schools.

(முற்பகல் 11-10)

Since the responsibility of teacher-trainees and the workload of the Headmasters and Headmistresses of these schools have considerably increased it would be well if they also receive aid from the Government. There are number of complaints that at the time of admission, money is received for admission of these trainees. If grants are given in full quota this particular ailment will be minimised.

As I went through the other programmes of the Government, I was greatly impressed with the programme of adult education. When we are thinking of adult education, I would like to say that the High Schools and Higher Secondary Schools have a responsi-



bility to society, namely, the responsibility of having the adult education centres for the benefits they are receiving from the Government. They are receiving so many facilities, including increase in the salaries of teachers. Each Higher Secondary School should, as a rule, be made to open one adult education centre. That alone will help us to spread adult literacy in a greater measure because more and more schools would conduct these adult education centres with the aid of parent-teacher association and the Government Adult Education Board.

Some time back I had suggested that there should be Physical Education Schools exclusively for women and I was very happy to find that one school was being opened in Coimbatore for these girls. But I do not know whether 'self-defence methods' find a place in the curricula. I have been insisting on this particular aspect because it is very necessary for women to protect themselves and it will be very practical and useful to include this in the syllabus, instead of merely having ordinary exercise. I do not mean that they should be trained to be warrior-like but at least they should have knowledge of self-defence and if the curriculum includes this item, it would be better and more and more number of girls will enlist themselves in N.S.S. and N.C.C. This will give them a kind of self-importance and they will also be able to move about the places where they are assigned duties. When we talk of equality, the women should not be kept in a position where they would be requiring protection and would be afraid of going anywhere. If they are given training in self-defence methods, by including this in the curricula, it will be better.

Regarding Government examinations, I would like to express my happiness because in the non-vocational course, the students are allowed to appear privately. This is a wonderful facility because a number of students who are not able to join Plus two stage and those who are employed elsewhere will have the facility to appear privately for Plus two examination, not in the vocational stream but in the non-vocational stream, and this will definitely increase our literacy percentage.

Before concluding, I would like to commend the great strides in the educational field. Since I have been attending a number of seminars and since I have been keeping close watch on the progress of education and since I have been in the educational

field for so many years, I would say that the progress made in our State is something very fantastic. I would like to congratulate our Education Minister, the Education Secretary and the Directorate of School Education on their wonderful work and I would like to say that in future also, this tempo should be kept up and whether there are funds or not, we will have to see that our children are educated properly.

Last, but not the least, I would like to say a few words on my very special subject of grants to the orphanages. In column 9 of the Performance Budget, it has been mentioned that there are 48,070 orphans 432 orphanages for whom grants to the tune of Rs. 58 lakhs are given. This was the position in 1980 and 1981 and it continuous to be so We see the teachers mentioning about the increased cost of living and they ask for more salaries and more Dearness Allowance. You can imagine how an institution can be run with the grant of Rs. 14 given for the maintenance of a child. Even though nothing about this has been mentioned in the Budget, I hope that when the Appropriation Bill comes, some better deal will be given to the orphans.

With these words, I thank the Deputy Chairman for giving me this opportunity.

செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு பால்வாடி ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரிப் பிரிவு ஏற்படுத்த வுள்ளதை நான் வரவேற்கிறேன். அங்கே ஆசிரியர்களை நியமிக்கும்போது நர்சரி டிரெயின்ட் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா அல்லது ஏற்கெனவே நர்சரிப் பள்ளிகளில் பல ஆண்டுகளாக மிகச் சொற்ப சம்பளத்தில் அனுபவம் உள்ள ஆசிரியர்கள் இருக்கிறார்களே, அவர்களை நியமிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். தமிழகத்தில் ஆங்கில மோகம் மிக அதிகமாக இருப்பதால், ஆங்கிலப் பள்ளிகளைத்தான் பெரும்பாலும் விரும்புவார்கள். எனவே அந்தப் பள்ளிகளுக்குப் போகாமல் இருக்க, நர்சரி ரைம்ஸ் போன்றவற்றை இந்தப் பள்ளிகளிலே சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்போது அவர்களை ஈர்க்க முடியும். இம்மாதிரி திட்டங்களுடன் நர்சரிப் பள்ளிகள் இருந்தால், மற்ற நர்சரிப் பள்ளிகள் வளராமல் இருக்க ஒரு வழிவகையாக இருக்குமென்பதை இந்த நேரத்தில் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





ஆறாவது திட்ட இலக்கைப் பொறுத்தவரை, 6—11 வயதுத் தொகுதி யினரைப் பொறுத்தவரையில், அந்த இலக்கு இப்போதே எய்தப்பட்டிருப்பதும், 11—14 வயது தொகுதியினரைப் பொறுத்தவரையில் அந்த இலக்கை மிஞ்சி இருப்பதும் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. தமிழகத்தில் அந்த அளவிற்கு மாணவ மாணவிகளின் தொடக்கக் கல்வி நன்றாக வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று குறிப்பிலே கூறியிருக்கிறார்கள் அது மகிழ்ச்சியான செய்தியாகவும், வரவேற்கத்தக்க செய்தியாகவும் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 1 முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு அந்தத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தைப் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் நீட்டிக்க வேண்டும். மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தை 'எக்ஸ்டென்ட்' செய்தால், மிக நன்றாக இருக்கும். தேர்வுக்குப் போகின்ற அந்தக் குழந்தைகளுக்கு உணவு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். உணவு இல்லாமையால் சக்தி குறைந்து, படிக்க முடியாமல் இருக்கிறார்கள். மிகத் திறமையாகப் படிக்கும் குழந்தைகள் உணவு இன்மையால் படிக்க முடியாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தை விரிவு படுத்தினால், அவர்கள் நல்லமுறையில் பயன் பெறுவார்கள். அவர்களுக்கு உணவு கொடுத்துப் படிக்க வைக்கும்போது, அவர்கள் நல்ல மதிப்பெண்கள் வாங்குகிறார்கள். உணவு இல்லாததால் அவர்களால் படிக்க முடியாத நிலை இருக்கிறது. முக்கியமாக மாநகராட்சிப் பள்ளிகளிலே அப் படிப்பட்ட நிலை அதிகமாக இருப்பதால், அந்தப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இலவசப் புத்தகங்கள், கற்பலகைகள் இவற்றையெல்லாம் ஜூன் மாதத்திலேயே மாணவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். சில சமயங்களில் ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் வரைகூட கொடுப்பதில்லை. நான் ஒருமுறை காஞ்சிபுரத்திற்குப் போய்ப் பார்த்தபோது, 30 பாடப் புத்தகங்கள் வேண்டிய பள்ளிக்கு, 4, 5 தான் கொடுக்கப்பட்டிருந்தன. ஒரு மாநகராட்சிப் பள்ளிக்கு 50 புத்தகங்கள் வேண்டியிருந்தது. ஆனால் 150 புத்தகங்கள் வந்திருந்தன. 100 புத்தகங்கள் கிடப்பிலே இருக்கிறது. அவர்களும் திருப்பிக் கொடுக்கவில்லை. அரசு நல்ல திட்டங்களை வகுத்திருந்தும், அதன்மூலம் பிள்ளைகள் பயன்பெறாமல் போவதற்கு சில அதிகாரிகள் காரணமாக இருப்பதால், அவற்றைத் தடுத்து திருத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[செல்வி ஆ. லீலாவதி] [1982 மார்ச் 19

(முற்பகல் 11-20)

கற்பலகைகளை குழந்தைகள் உடைத்து விடுகின்றன. பிளைவுட்டில் வர்ணம் தீட்டிய கற்பலகைகளை குழந்தைகள் கையில் கொடுத்து மாலையில் அவர்களிடமிருந்து வாங்கி ஆசிரியர்கள் பள்ளியிலேயே வைத்திருக்க வேண்டும். சில கான்வென்டுகளில் அப்படித்தான் செய்கிறார்கள். அவர்கள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போனால் உடைத்து விடுகிறார்கள். பள்ளியிலேயே ஒரு மூலையில் வாங்கி வைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்வது நல்லது.

அடுத்து, கட்டிடங்களைப் பொறுத்தவரையில், அரசு மிகவும் ஊக்கம் அளிப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அதை வரவேற்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அநேக கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக குழந்தைகள் குதூகலமாகப் படிக்கும் ஒரு நிலையை நான் பார்க்கிறேன். அதே நேரத்தில் சில பள்ளிகள் குறிப்பாக ஊத்துக்காடு போன்ற பள்ளிகள் கட்டிட வசதியில்லாமல் இடிந்திருக்கக்கூடிய நிலையும் இருக்கிறது. அங்கு 500 குழந்தைகள் படிக்கின்றன. 2 ஆண்டுகளாக பள்ளிக்கூடம் இடிந்திருப்பதால், மரத்தடியில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி உள்ள மிக ம் அவசியமான, அவசரமான இடங்களில் கட்டிடங்கள் கட்டித் தருவதில் அரசு முன்னுரிமை தர வேண்டும். அப்படிச் செய்து மாணவர்களுக்கு உதவ வேண்டும்.

அடுத்து, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களையும் அடிப்படை ஊழியர்களையும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக அரசு மாற்றியிருப்பது ஒரு மாபெரும் திட்டம். எல்லோரும் அதை ஆதரிக்கிறார்கள். அதேபோல் எல்லா தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்கள் என்று அரசு அறிவித்தால், அது மிகவும் வரப்பிரசாதமாக இருக்கும். தனியார் பள்ளிகளுக்காக போடப்பட்ட 1664, நாள் 4—9—1978 என்கிற அரசாணையைத் திரும்பப் பெற வேண்டுமென்று தனியார் பள்ளி சங்கம் மனு கொடுத்திருக்கிறது. இதனால் பல ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசு அதிகாரிகளுடைய ஆணைகளை அவர்கள் ஏற்று அமுல்படுத்துவதில்லை. பல ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியரை 'சஸ்பென்ட்' செய்கிற நிலை இருக்கிறது. சஸ்பென்ட் செய்யப்பட்ட ஒரு ஆசிரியர் 8 ஆண்டுகளாக கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலை இருக்கிறது. தனியார் பள்ளிகள் ஆசிரியர்களை 'சஸ்பென்ட்' செய்யக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவு ஒன்றை அரசு பிறப்பிக்க வேண்டும்.

கோயம்புத்தூரில் சமீபத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசுகையில், எல்லாப் பள்ளிகளையும் அரசு எடுக்க முடியாவிட்டாலும் கூட, தவறு செய்யும் பள்ளிகளை நிச்சயம் அரசு எடுக்கும் என்று உறுதி கூறியிருக்கிறார். தி நகர் பள்ளியில் அரசு தலையிட்டு நேரடி சம்பளம் கொடுக்கப்பட்டு



1982 மார்ச் 19] [செல்வி ஆ. லீலாவதி]

வருகிறது. ஆனால் அங்கு டி.இ.ஓ. ஆக இருக்கும் திரு. ரமணி அவர்கள் நேரடியாகச் சம்பளம் கொடுப்பது சிரமமாக இருக்கிறது என்று சொல்லி அரசு உத்தரவை மீறி நிர்வாகியுடன் ஒத்துழைத்து நிர்வாகி மூலம் அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறார். அதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். நிர்வாகி மூலம் சம்பளத்தைக் கொடுத்து அரசு கொடுக்கும் மானியத்தை ஈடு கட்ட முயற்சி செய்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடம் ஊழல் நிறைந்த ஒன்று. அதற்கு ஆதாரம் நிறைய இருக்கின்றது. இதை அங்குள்ள பள்ளி ஆசிரியர்களே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதுபற்றியெல்லாம் அரசு பரிசீலித்து உடனடியாக அந்தப் பள்ளிக்கூடத்தை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். இயக்குநரின் ஆணையை ஏற்றுக்கொள்ள தனியார் பள்ளிகள் மறுக்கின்றன. இன்னும் பல ஆசிரியர்களுக்கு பென்ஷன் கொடுப்பதில் மிக காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. தாம்பரம் தேசிய உயர் நிலைப் பள்ளியில் திரு. மகாலிங்கம் என்கிற பி.டி. ஆசிரியர் பணியாற்றி 1978 ஜூன் 30 ஆம் தேதி ஓய்வு பெற்றிருக்றார். இன்னும் அவருக்கு கிராஜுவுட்டி, பென்ஷன் போன்றவை கிடைக்கவில்லை. கிளரிக்கல் மிஸ்டேக்கினால் 3 முறை அவருடைய பேப்பர்கள் ஏ.ஜி. ஆபிசிலிருந்து திரும்ப வந்திருக்கின்றன. அவர் மிகவும் துன்பப்பட்டார். பல தடவை அலைந்திருக்கிறார். கடைசியில் டி.இ.ஓ. திரு. சிவதாணு பிள்ளை அவர்களை நேரில் பார்த்து முறையிடச் சென்ற வேளையில் கேவலப்படுத்தப்பட்டிருக்கிறார். பல முறை ஆசிரியர்களைக் கேவலப்படுத்தும் அந்த டி.இ.ஓ. வை மாற்ற வேண்டுமென்று கல்வித் துறை அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். கல்வி இயக்குநர் அவர்கள்கூட இம்மாதிரி அவர் நடந்து கொள்வது சரியல்ல என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனாலும்கூட இதுவரை எவ்வித நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்படவில்லை. இது குறித்து நான் வருந்துகிறேன். சில இடங்களில் 'தெய்வமே வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லை' என்று சொல்வது மாதிரி அரசு உத்தரவு போட்டாலும்கூட, சில அதிகாரிகள் அதைச் செம்மையாக அமுல்படுத்துவதில்லை. ஆகவே அந்தக் கல்வி அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். 'It is a sin to see you here—don't allow him here' என்று கிளார்க்கிடம் அந்தக் கல்வி அதிகாரி சொல்லியிருக்கிறார். இதைப் பரிதாபமாக அந்த ஆசிரியர் எனக்கு ஒரு கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார். இப்படிப்பட்ட அனுதாபமில்லாத அதிகாரிகள் மீது அரசு ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இயக்குநரிடம் கூறினோம். 'கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள், அவருக்கு புரமோஷன் கொடுத்து மாற்றம் செய்கிறோம்' என்று சொல்கிறார். அதற்காகவா நாங்கள் ஆதாரத்துடன் குறைகளைச் சொல்லி நடவடிக்கை எடுக்கச் சொல்கிறோம் என்பதைச் சொல்லி, அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காததற்கு என்னுடைய வருத்தத்தை ஆசிரியர்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[செல்வி ஆ. லீலாவதி] [1982 மார்ச் 19

அடுத்து, பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் 1 அம்சக் கோரிக்கையை வைத்திருக்கிறது. போன 10 ஆம் தேதி போராட்டத்தை நடத்த வேண்டுமென்று முடிவு செய்திருந்தார்கள். ஆனால் அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டார்கள். அவர்கள் 4 ஆண்டுகளாக பிரச்சினை குறித்து விடாது கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இளநிலை ஆசிரியர்கள் 5 மாதப் பயிற்சியை முடித்தால், அவர்களுக்கு இடைநிலை ஆசிரியர்கள் என்கிற பதவி அளிக்கப்படுகிறது. ஆனால் இன்டக்டட் ஆசிரியர்கள் 4 ஆண்டுகள் பணி புரிந்து, வெற்றிகரமாக மாணவர்களைத் தேர்ச்சி பெறச் செய்திருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம். போன்றவைகளைப் படித்துத்தான் வாய்ப்பினைப் பெற வேண்டுமென்று அரசாணை இருக்கிறது. இது சம்பந்தமான நியாயமான உத்தரவை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கை விவாதம் முடியும்போது பிறப்பிப்பார் என்று நான் நம்புகிறேன். இராமேஸ்வரத்தில் 'எக்ஸ்பென்சிவ் லொக்காலிட்டி அலவன்ஸ்' இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளத்தில் 20 சதவிகிதம் 'எக்ஸ்பென்சிவ் லொக்காலிட்டி அலவன்ஸ்' வழங்க வேண்டுமென்று இரண்டாவது ஊதியக் குழுவை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கோரியிருந்தார். ஆனால் அவர் தாமதமாகச் சிபாரிசு செய்திருந்தார். 'இரண்டாவது ஊதியக் குழு கொடுக்கவில்லை. ஆதலால் நாங்களும் கொடுக்க முடியாது' என்று மூன்றாவது ஊதியக் குழுவும் கூறிவிட்டது. அங்குள்ள ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இந்த அலவன்ஸ் வழங்கப்படாததுபற்றி ரொம்பவும் அவர்கள் வருத்தப்பட்டார்கள். இராமேஸ்வரம் தீவுப் பகுதிகளில் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்த்தி நிர்ணயம் செய்யப்படுகிறது. இது சாலை நிலைமையைக் கருதி செய்யப்படுகிற ஒன்று. அடுத்து பி.டபிள்யூ.டி. கான்டிராக்டர்களுக்கு தற்போது 106 சதவிகிதம் அதிகம் கொடுக்கப்பட்டு வருகிறது. வனத் துறையிலே இருப்பவர்களுக்கு மற்ற பகுதிகளில் வழங்குவதைவிட 3 மடங்கு கொடுக்கப்படுகிறது. எல்.ஐ.சி., 'இந்தப் பகுதி புயல் அடிக்கும் பகுதி என்பதால்', வீடு கட்ட கடன் கொடுப்பதில்லை. பி.ஆர்.சி. மலைப் பகுதி சாலைப் போக்குவரத்துக் கட்டணத்துக்கு ஈடாக இங்கு கட்டணத்தைக் கூட்டியிருக்கிறது. மலேரியாவால் பாதிக்கப்படக்கூடிய பகுதி இது. ஆங்கிலேயர் காலத்தில் இருந்து வந்த போக்குவரத்து வசதி அப்படியே இருக்கிறது. புதிய வசதி எதுவும் இல்லை. நவம்பர்-டிசம்பர் மாதங்களில் இப்போது இருக்கும் ஒரே போக்குவரத்து வசதியான ரெயில் போக்குவரத்து கூட கடுமையாக பாதிக்கப்படுகிற ஓரிடம் இது. மேற்கண்ட காரணங்களால் அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அவசியம் 'எக்ஸ்பென்சிவ் லொக்காலிட்டி அலவன்ஸ்' வழங்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்



1982 மார்ச் 19] [செல்வி ஆ. லீலாவதி]

(முற்பகல் 11-30)

களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு வீட்டுவசதி வாரியம் அமைத்து வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். இராமேஸ்வரம், மண்டபம் முகாமிலே ஒருசில வீடுகளே ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வீடுகளையும் இப்போது அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்து அவர்கள் அங்கிருந்து காலி செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு எலக்ட்ரிசிட்டி, தண்ணீர் போன்றவைகள் கொடுப்பதற்கான இணைப்பைத் துண்டித்திருக்கிறார்கள். இவற்றையும் அரசு தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்களின் சம்பள விதம் ரூபாய் 200 ஆக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. முன்பு அவர்கள் சம்பளம் ரூபாய் 18, டி.ஏ. ரூபாய் 300 என்று ஆகமொத்தம் ரூபாய் 318 பெற்று வந்தார்கள். முன்பு அவர்களுக்கு டிஏ ரூ. 200, சிசிஏ ரூ. 25, எச்ஆர்ஏ ரூபாய் 45 என்றெல்லாம் இந்த அடிப்படையிலே சிட்டியிலே இருப்பவர்கள் ரூபாய் 318 பெற்று வந்தார்கள். சிட்டியிலே இல்லாதவர்கள் ரூபாய் 200 மேலும் ரூபாய் 51 என்ற வகையிலே ரூபாய் 251 பெற்றார்கள். இப்போது மாற்றியமைத்திருக்கும் நிலைமையில் அவர்கள் ஏறக்குறைய 49 ரூபாய் குறைவாகப் பெறுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு 'பேசிக் பே' ரூபாய் 250 என்று வைத்தால், ஒரு ரூபாயாவது லாபம் கிடைக்கும் என்று கூறி, அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் போராட்டம் செய்யக்கூடாது என்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் 'நோ ஒர்க்—நோ பே' என்ற வகையிலே ஒரு ஆணையை அனுப்பியிருக்கிறார்கள். சாதாரணமாக கல்வித் துறையிலே பிறப்பிக்கப்படும் எல்லா ஆணைகளும் எங்களுக்கு வருவதில்லை. ஆனால் இந்த ஆணை உடனடியாக எனக்கு வந்துவிட்டது. போராட்டம் நடத்த வேண்டும் என்பது ஆசிரியர்களுடைய குறிக்கோள் அல்ல. பல துன்பங்களை அனுபவித்த பிறகு தான், ஆசிரியர்கள் போராடுகிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை எடுத்துக்கொண்டால், அங்கேயிருக்கும் ஆசிரியர்கள் எத்தனையோ நாட்கள் தியாகம் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களைக் குத்திக்கொண்டே இருந்தால், அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் தங்களுடைய போராட்டத்தின் மூலமாகத்தான் தங்களுடைய மனக் கொந்தளிப்பை எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. சுமுகமான முறையில் போராட்டங்களை அணுகாமல் இருப்பதால்தான், அவர்களும் இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால்தான், ஆசிரியர்கள் போராட்டத்தில் குதிக்கிறார்கள்.

இப்போது 7 அம்சக் கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடத்த வேண்டும் என்று இருந்தார்கள். அரசாங்கம் உடனடியாக கோரிக்கைகளைப் பரிசீலித்து நியாயம் வழங்கியிருந்தால், போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. கும்பகோணத்தில் சரஸ்வதி கேர்ல்ஸ் ஹையர் செக்கண்டரி ஸ்கூல் இருக்கிறது. அங்கே திரு. காசிராமன் என்பவர் நிர்வாகியாக இருக்கிறார். அங்கே இருக்கும் பெண்களை அந்த நிர்வாகி மிகவும் கேவலமாக நடத்திக்கொண்டிருக்கிறார். 700 ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்படவில்லை. நிர்வாகிகள் ஆசிரியர்களுக்குத் துன்பம் கொடுக்கும்போது, கல்வி இயக்குநர் மற்றும் அதிகாரிகள் உடனடியாக அதில் தலையிட்டு ஆசிரியர்களுக்கு நியாயம் வழங்கினால், ஆசிரியர்கள் நிச்சயமாக எந்தவிதமான போராட்டங்களிலும் இறங்க மாட்டார்கள். அவர்களுக்கு வேண்டியது எல்லாம் நியாயம் தான். அந்த நியாயம் அவர்களுக்குக் கிடைக்காவிட்டால், வேறு வழியின்றி பல காலம் பொறுத்திருந்து அதற்குப் பிறகு போராட்டத்தில் இறங்க வேண்டிய ஒரு சூழ்நிலையிலே அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது பள்ளிகளிலே தேர்வு நடக்கிறது. அதற்கு ஆசிரியர்கள் சூப்பர்வைசர்களாகப் போகிறார்கள். அதுசம்பந்தமாக, ஆசிரியர்களை நிர்ப்பந்தப்படுத்தும் விதத்தில் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கள் ஆசிரியர்களுக்கு ஒரு பான்ட் அனுப்பியிருக்கிறார். அதைக் கையொப்பமிட்டு ஒவ்வொரு ஆசிரியரும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு மறு அஞ்சலில் அனுப்ப வேண்டும். அது என்னவென்றால்—

"இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் மார்ச் 1982 உதவிக் கண்காணிப்பாளர் நியமனத்திற்கான ஒப்புதல் வரும் இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ்—மார்ச் 1982-க்கு தேர்வு மைய எண்ணுள்ள தேர்வு மையத்திற்கு உதவி கண்காணிப்பாளராக மாவட்டக் கல்வி அலுவலரால் அவரது: 8899-எச்./81 ந.க. எண்ணுள்ள நாளிட்ட செயல்முறைகளைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை, இதன்மூலம் அளிப்பதுடன், உதவிக் கண்காணிப்பாளராகப் பணிபுரிய எனது ஒப்புதலையும் தேர்வு நன்முறையிலும் திறமையுடனும் நடக்க முதன்மைக் கண்காணிப்பாளர், துறை அலுவலர் ஆகியோருடன் ஒத்துழைப்பேன் என்ற உறுதியையும் இதன் மூலம் அளிக்கிறேன்.

பின் வருங்காலத்தில் நான் எந்த ஒரு காரணம் பற்றியும் இந்தப் பொறுப்பினை மறுதளிக்க மாட்டேன் எனவும் உறுதி கூறுகிறேன்." இப்படிப்பட்ட ஒரு 'பான்ட்டை' ஆசிரியர்கள் கையெழுத்திட்டு அனுப்ப வேண்டும். ஆனால் ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. மாணவர்கள் கத்தியை



வைத்துக்கொண்டு பரீட்சை எழுதும் நிலைமை இருக்கிறது. சென்னையிலேயும் இந்த நிலைமை இருக்கிறது. ஆசிரியர்கள் தங்களுடைய உயிரைத் துச்சமாக நினைத்து அந்த இடத்திற்குப் போக வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பேனாக் கத்தி என்று பெயர் வைத்த தவறாக இருக்குமோ ?

**செல்வி ஆ. லீலாவதி :** அந்தப் பொறுப்பை மறுதளிக்க மாட்டேன் என்று ஆசிரியர்கள் உறுதிகூற வேண்டும். இந்த மாதிரி பான்ட் பத்திரத்தை அனுப்பி, ஆசிரியர்களைக் கொண்டு கையெழுத்திட வைத்து, அவர்களை ஒரு இக்கட்டான நிலைமைக்குக் கொண்டுபோய் வைக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு பத்து ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு உள்ள பல்வேறு சலுகைகளையும் அறிவிக்க வேண்டும். இப்படி, ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் பலன் அளிக்கும் நல்ல பல திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச அனுமதித்ததற்காக நன்றி கூறி, அமைகிறேன்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கொள்கைக் குறிப்பு மீது ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி மானியக் கொள்கைக் குறிப்பின் மீது ஆசிரியர்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் பேசுகின்றபோது, கல்வி வளர்ச்சிக்காக பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி ஆசிரியர்களுடைய பிரச்சினைகளையும் எடுத்துச் சொல்கிறோம். ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை ஆசிரியர்களுடைய நலன்கள் கவனிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே எடுத்துச் சொல்வதனாலே ஆசிரியர்களுடைய நலன்கள் கவனிக்கப்பட்டாலே கல்வியின் தரம் உயரும் என்று தெரிகிறது. ஆசிரியர்களைப் பற்றி மட்டுமே ஆசிரியர்களின் பிரதிநிதிகள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று கருதுவது கூடாது. கல்வியினுடைய நலன் கருதித்தான் ஆசிரியர்கள் பற்றி அவர்கள் பேசுகிறார்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பைப் படித்துப் பார்த்தேன். இதிலே பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. எனவே நான் ஒரு பாராட்டு, ஒரு வரவேற்பு, ஒரு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பாராட்டு எதற்கு என்று சொன்னால், 4,433 நர்சரி பிரிவுகள் பால்வாடி பள்ளிகளிலே ஏற்படுத்தப்படவிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த அவையிலே அதை நர்சரிப் பள்ளிகளாக மாற்றுங்கள் என்ற வேண்டுகோளை

யும் விடுத்திருக்கிறேன். அது ஏற்கப்பட்டதாகக் கருதி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் மற்றொன்றையும் சொல்லி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும் ஏற்கெனவே ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். பால்வாடியிலே பணியாற்றும் பாலசேவிகாக்களை எடுத்து அவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளித்து அவர்களை ஆசிரியர்களாக ஏற்று, அவர்கள் பணியிழப்புக்கு ஆளாகாமல் இருக்கும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்ன கருத்தை ஏற்றிருப்பதற்கு நன்றி. ஆனால் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்கள் படும் அல்லல்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இது தெரியும். இப்போது இந்த நர்சரிப் பள்ளிகளைத் தொடங்கும்போது, அடிப்படையிலே நல்ல நடைமுறைகளைக் கொண்டு வர வேண்டும் என்று ஆரம்பிக்கும் இந்தப் பள்ளிகளிலே, கூரைக் கட்டிடங்களைக் கொண்டு ஆரம்பித்து, பின்னர் நல்ல கான்கிரீட் கட்டிடங்களாக படிப்படியாக மாற்றி பல்லாயிரக்கணக்கிலே சம்பாதித்துக் கொண்டிருக்கும் அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி அப்பள்ளிகளையெல்லாம் அரசே ஏற்று ஒரு சீர்திருத்தம் கொண்டு வரும் அளவுக்கு இவைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்து, எதற்காக நான் வரவேற்கிறேன் என்று சொன்னேன் என்றால், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பேசும்போது ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்குத் தேர்வே கிடையாது என்று ஒரு அறிவிப்பை முன்பு செய்தார்கள். அப்படி தேர்வே கிடையாது என்றால், மாணவர்கள் பள்ளிக்கு வருவதற்கான அக்கறையே இருக்காது, பெற்றோர்களுக்கும் அவர்களைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்ற அக்கறை இருக்காது, அதைப்போலவே ஆசிரியர்களுக்கும் அவர்களைக் கண்காணிக்க சந்தர்ப்பம் இருக்காது. ஆகவே அப்படிப்பட்ட முறையில் ஒன்று முதல் மூன்றாவது வகுப்புவரை அவர்கள் அனைவரும் தேர்வு அடைந்ததாகச் சொல்வோமானால் இனி பள்ளிக்கு வராதவர்கள்கூட. குளக்கரையில் மீன் பிடிக்கிறவர்கள்கூட தேர்வு பெற்றதாக அறிவிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை நான் அப்போதே எடுத்துச் சொல்லி, அவர்களுக்குத் தேர்வு நடத்தப்படவேண்டும் என்று வற்புறுத்திப் பேசினேன். இப்போது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஒன்று முதல் மூன்றாவது வகுப்பிலுள்ள மாணவர்கள் அனைவருக்கும் தேர்வு உண்டு என்று பேரவையில் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் வரவேற்பு தெரிவித்து அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்



கிறேன். ஆனால் அதே நேரத்தில் "தேர்வு உண்டு, ஆனால் அத்தனை பேரும் தேர்வு அடைவார்கள்" என்று சொல்லியிருக்கிறாரே அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தேர்வில் ஒரு சிலரையாவது அந்தத் தகுதிக்குக் குறைந்தவர்களை நிறுத்தவில்லை என்று சொன்னால், பின்னாலே கல்வியின் தரம் உயரவில்லை, என்று ஆசிரியர்களான எங்கள்மீது குற்றம் சாட்டக்கூடாது, அப்படிக் குற்றஞ்சாட்டுவதால் என்ன பிரயோசனம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்து, கல்வியமைச்சருக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது முதல் வகுப்பு படிக்கிற மாணவன் தேர்வில் தோல்வி அடைந்தால், அதற்கு யார் பொறுப்பு? பத்தாம் வகுப்பு மாணவன் தோல்வியடைந்தால், அதற்குக் காரணம் எலிமெண்டரி ஆசிரியர் சரியாகச் சொல்லித் தரவில்லை என்று சொல்கிறார்கள். மேல் நிலைப் பள்ளியில் கேட்டால், ஹைஸ்கூலில் சரியாகச் சொல்லிக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களைக் கேட்டால், மேல் நிலை வகுப்புகளில் ஆசிரியர்கள் சரியாகச் சொல்லித் தரவில்லை என்று சொல்கிறார்கள். ஆக, ஆசிரியர்கள் எப்போது மாணவர்கள் தோல்வி அடைந்ததற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்? குறிப்பாக முதல் வகுப்பு மாணவர்களைப் பொறுத்தவரையில், அந்த ஆசிரியர்கள் எப்போது பொறுப்பேற்றுக்கொள்ள இருக்கிறார்கள்?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தொடக்கப் பள்ளி நிலையில் மாணவர்கள் தோல்வியடைகிறார்கள் என்றால், அதற்குப் பெற்றோர்கள்தான் காரணம் என்று நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்புவதே இல்லை. அடுத்த பிள்ளையைக் கவனிக்க முதல் பிள்ளையை வைத்துக்கொள்கிறார்கள் அல்லது வீட்டு வேலையைக் கவனிக்க வைத்துக்கொள்கிறார்கள். சரியாகப் பள்ளிக்கூடம் வந்த எவனும் தோற்றதாக வரலாறே கிடையாது. ஆகவே பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்களை அனுப்புவதற்கு அரசாங்கம் சரியான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மாணவர்களைக் கட்டாயமாகப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி அனுப்பாதவர்களைத் கண்டிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். அதைச் செய்யாமல் தேர்வே கூடாது. தேர்வு வைத்தாலும் அவர்களை நிறுத்தவே கூடாது என்று சொல்வார்களானால், கண்டிப்பாக இங்கே கல்வித்தரம் உயராது. அது உருப்படவும் செய்யாது என்பதை நான் கண்டிப்பாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இன்னொரு வகையிலும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இளநிலை ஆசிரியர்கள் 5,000 பேர்களை ஆண்டுதோறும் இடைநிலை ஆசிரியர்களாகப் பயிற்சி அளித்து மாற்றுகிற திட்டத்தை தற்போது 10,000 பேர்களுக்கு என்று உயர்த்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பாக போராட்டம் நடத்தப்பட்டபோதே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இதைப்பற்றித் தெரிவித்து அவர் இதை ஏற்றுக்கொண்டார். அந்த வகையில் இப்போது 10,000 பேருக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அப்படிப் பயிற்சிக்காக தேர்வு செய்யும்போது ஆசிரியர்களைப் பணி மூப்பின் அடிப்படையில் எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டதிலும் தற்போது தவறுகள் நடைபெற்று வருகின்றன. அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களைமட்டும் பயிற்சிக்காகத் தேர்வு செய்கிறார்கள். இந்த நிலைமை நீக்கப்பட்டு, உண்மையில் பணி மூப்பு அடிப்படையில் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் குறைபாட்டை நீக்க அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், கல்விக்காக 1980-81 ஆம் ஆண்டில் 25 விழுக்காடு நிதி ஒதுக்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் மொத்த வருவாயில் 23 விழுக்காடு அளவுக்கு கல்வி நிதி ஒதுக்கப்பட்டது. இப்போது 18 1/2 விழுக்காடு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், அரசு சார்பில் அதை 21.3 விழுக்காடு என்று சொல்லியிருந்தாலும், அது வருவாய் நிலையில் உள்ள செலவைப்பற்றிய கருத்தாகும். பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை என்று சொல்லி, 1,774 கோடி ரூபாய்க்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. அதில் ரூபாய் 318 கோடிதான் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றால், அது 18½ விழுக்காடு அளவுக்குத் தான் வருகிறது. வருவாயில் ¼ பங்கை கல்விக்காகச் செலவழித்தால், கல்வித் தரம் உயரும், கல்வியின் நிலை உயரும். எனவே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி என்பது வருங்காலத்திற்கான முதலீடு. இப்போதைக்கான முதலீடு அல்ல. வருங்கால முதலீடு விஷயத்தில் குறைத்து, தற்கால நிலைமையை இந்த அரசு பார்க்கிறது. எடுத்துக் காட்டாக பற்பொடி வியாபாரத்தைச் செய்கிறது. ஆகவே இதை விட்டுவிட்டு, கல்விக்குச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். கல்விக்குச் செலவு செய்வதை அலட்சியம் செய்யாதீர்கள். கல்விக்குச் செலவு செய்வதை அலட்சியம் செய்தால், வருங்கால சந்ததி பாதிக்கப்படும், அது நம்மைத் தூற்றும் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.





வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், 1980-81 ல் ஆசிரியப் பயிற்சி பெற்ற 7,000 பேருக்கு வேலை தரப்பட்டது 1981-82-ல் 1,650 பேருக்கு வேலை வாய்ப்பு தரப்பட்டது. இந்த ஆண்டில் 2,000 பேருக்கு வேலை வாய்ப்புத் தர இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தம் 40,000 ஆசிரியப் பெருமக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். எந்தக் காலத்திலே அவர்களுக்கெல்லாம் இந்த அரசு வேலைவாய்ப்பைத் தரப் போகிறது? இவர்கள் ஆட்சிக் காலத்தில் இவர்களுக்கு வேலை அளிப்பார்களா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஆனாலும் இவ்வளவு பேர்களுக்கும் வேலை வாய்ப்பை அளிக்க முடியும். எப்படி என்றால், இப்போது இங்கே அரசாங்கத்தின் சார்பில் ஒரு புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதத்தைப்பற்றிச் சொல்லுகிறபோது, தொடக்கப் பள்ளிகளில் அது 1:39 என்றும், நடுநிலைப் பள்ளிகளில் 1:38 என்றும், உயர்நிலைப் பள்ளிகளில் 1:24 என்றும், மேல்நிலைப் பள்ளிகளில் 1:27 என்றும் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அடித் தட்டில் இருக்கிற 1 முதல் 5 வகுப்புகளில் படிக்கிற மாணவர்களுக்குத்தான் குறிப்பாக ஆசிரியர்கள் மிகவும் கவனத்தோடு தனித்தனியாகக் கவனித்து போதிக்க வேண்டியிருக்கிறது. அங்கே தான் ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதம் மிகவும் குறைவாக இருக்க வேண்டும். மேலே போகப் போக "லெச்சர் மெத்தட்" இருக்கிற காரணத்தால், அங்கே எத்தனை பேர் வேண்டுமானாலும் உட்கார்ந்து கவனிக்க முடியும், கற்க முடியும். ஆனால் இப்போது தொடக்கப் பள்ளிகளில் உள்ள நிலைமை என்னவென்றால், அங்கே 39 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் 24 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை இருக்கிறது. இப்படி தலைகீழாக இருக்கிற நிலைமையை அரசு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு மாற்றியமைக்கும்போதுகூட, ஆசிரியர் மாணவர் விகிதத்தை எல்லா பள்ளிகளிலும் 1:20 என்று அமைத்தால் இந்த நாடு மற்ற நாடுகளைவிட கல்வியில் முன்னணியில் இருக்கிறதா இல்லையா என்று பார்க்கலாம் என்பதை ஒரு சவாலாக ஆசிரியர் சமுதாயத்தின் சார்பில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிச் செய்தால், உண்மையில் நாம் மற்ற நாடுகளைக் காட்டிலும் கல்வியில் இன்னும் சிறந்த முன்னேற்றத்தைக் காண முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வியின் தரத்தை உயர்த்த உறுப்பினர்கள் ஆலோசனைகளை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அந்த வகையில் ஒன்றிரண்டு கருத்துக்களை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரு பள்ளியில் 100 சதவீதம் தேர்வு பெறுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். உதாரணமாக புதுக்கோட்டையில் உள்ள இராணியார் அரசினர் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கே அலமேலு என்ற மாணவி இந்த

மாநிலத்திலேயே முதல் மாணவியாக தேர்வு பெற்றிருக்கிறார். அந்த மாணவிக்கு மட்டும்தான் சான்றிதழ், அந்த மாணவிக்கு மட்டும்தான் பாராட்டுவிழா. ஏன் அந்த மாணவியை உருவாக்கிய ஆசிரியருக்கு ஒரு பாராட்டு விழா நடத்தக்கூடாதா? அந்த ஆசிரியருக்கு ஒரு நன்சான்றிதழ் வழங்கக்கூடாதா? அவருக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் எதையாவது அரசு செய்யக்கூடாதா? மாணவருக்கு மட்டும்தான் பாராட்டு என்றால், அந்த மாணவரை அவருடைய பெற்றோரா அந்த அளவுக்குத் தயாரித்தார்கள் என்று கூட சொல்லிக்கொள்ள முடியும். எனவே ஆசிரியர்கள் அக்கறை காட்ட வேண்டுமென்றால், கல்வியின் தரம் உயர வேண்டுமென்றால், மாணவர்களை மட்டும் பாராட்டுவதோடு நின்றுவிடாமல், ஆசிரியர்களையும் பாராட்ட வேண்டும். அப்போதுதான் அவர்களும் கல்வியின் தரம் உயர வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களின் மாறுதல்களைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அரசுப் பள்ளிகளில் கல்வித் தரம் உயரும். நினைக்கிறபோதெல்லாம் அவர்களை மாற்றுகிறார்கள். இடைக் காலத்தில் பந்தாடுகிற மாதிரி ஆசிரியர்களை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிச் செய்தால், அவர்கள் எப்படி சரியாகப் பணியாற்ற முடியும்! அரசு கல்லூரிகளில்கூட அப்படிச் செய்யப்படுகிறது. மகப்பேறு விடுப்பு எடுத்துச் சென்று பின்னர் திரும்பி வருகிறபோது, அதுவும் பச்சைக் குழந்தையோடு வருகிறபோது, வேறு கல்லூரிக்கு மாற்றிவிடுகிறார்கள். இப்படிச் செய்வது நியாமா? தாய்க்குலத்திடமாவது கொஞ்சம் கருணை காட்டக்கூடாதா என்று கேட்டால், என்ன சொல்லுகிறார்கள் என்றால் "கோடை விடுமுறைகளில் மகப்பேறு நிகழும்படி நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்". இதுதான் அங்கே இருக்கிற அதிகாரிகள் கொடுக்கிற பதில் அதாவது அவர்களெல்லாம் டைம் டேபிள் போட்டுக்கொண்டு. . . இதற்கு மேல் நான் போகக்கூடாது. இப்படிச் சொல்வது நன்றாக இருக்கிறதா என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் சொல்லுகிறார்கள் என்றால், ஆசிரியர்கள் எப்படி கல்வியில் நாட்டம் செலுத்தி பயிற்றுவிப்பார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, 20 நாட்களுக்கு கேஷுவல் லீவ் கொடுக்கிறோம். சிறு விடுப்பு கொடுக்கிறோம். இந்த 20 நாள் விடுப்பையும் பணமாக மாற்றிக்கொள்ளலாம் என்று உத்தரவு போட்டால், எந்த ஆசிரியரும் லீவு எடுக்க மாட்டார். அதிக நாட்களுக்கு பணியில் தங்குவார்கள். இதுபோன்ற சின்னஞ்சிறிய சலுகைகளைக்கூடவா இந்த அரசு செய்யக்கூடாது?





ஆய்வுக்கூடங்கள் இல்லாத பள்ளிகள் இருக்கின்றன. ஆய்வுக்கூடங்களுக்கு உதவியாளர் வேண்டும். அதையெல்லாம் அரசு செய்ய வேண்டும். நூல் நிலையங்களில் தகுந்த வழிகாட்டிகள் இல்லை; நியமிக்க வேண்டும். பின் தங்கிய மாணவர்களுக்குத் தனியாக வகுப்பு நடத்த வேண்டும். அதற்காக இருக்கிற ஆசிரியர்களுக்கே ஓவர்டைம் ஒர்க் செய்ய அனுமதித்து அதற்கு உரிய பணத்தை ஓ.டி. யாகக் கொடுக்கலாம். இப்படிப்பட்ட சிந்தனைகள் வேண்டும். இதன் மூலமாகத்தான் தமிழகத்தில் கல்வியின் தரத்தை உயர்த்த முடியும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1977 தேர்தல் நெருங்கியபோது, தர்மபுரி மாவட்டத்தில் போய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதாவது ஆசிரியர்களின் குறைகளைப் போக்க ஒரு தனிக் குழு ஏற்படுத்த இருக்கிறேன் என்று அங்கே சொன்னார். எப்படி காவல் துறைக்கு ஒரு குழு ஏற்படுத்தப்பட்டதோ அதைப்போல் ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தப்படும் என்று சொன்னார். ஆனால் இன்றுவரை அப்படிப்பட்ட குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டதா என்றால், இல்லை. இப்போது 36 சங்கங்கள் நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் 2 சங்கங்கள் மட்டுமே அரசாங்க அங்கீகாரம் பெற்ற சங்கங்கள். அவர்கள்தான் குறைகளைச் சொல்ல வேண்டும். மற்றவர்கள் குறைகளைச் சொல்லக்கூடாது. மற்ற சங்கங்கள் ஆசிரியர்களின் குறைகளைச் சொல்லக்கூடாது என்று இந்த அரசாங்கம் ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறது.

அடுத்து, மாவட்ட-மாநில அளவில் ஒரு குழு நியமிக்கப்பட இருப்பதாகவும். அதில் அவர்கள்தான் இடம் பெறுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஏன்? மற்றவர்கள் எதையும் சொல்லக்கூடாதா? உங்கள் ஆட்சியில் மற்றவர்கள் யாரும் குறைகளையே சொல்லக்கூடாதா? சொன்னால் நீங்கள் கேட்கக் கூடாதா? நான் சொன்னால், அதைக் காது கொடுத்துக் கேட்கக்கூடாதா? நான் உங்கள் நண்பன் இல்லையா? நான் சொன்னால்கூட அதைக் கேட்கக் கூடாதா?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப் பார்த்து ஒருமுறை இவ்வவையிலேயே குறிப்பிட்டார். "நீங்கள் கல்வியமைச்சருக்கு நெருங்கிய நண்பராயிற்றே! உங்கள் பிரச்சினைகளைப் பேசியே தீர்த்துக் கொள்ளலாமே" என்று கேட்டார். அதைச் செய்யாமல் எதற்கெடுத்தாலும் போராட்டத்தில் ஈடுபடலாமா என்றும் கேட்டார். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் பேசித் தீர்த்துக்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1982 மார்ச் 19

கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் நீங்கள் அழைப்பதற்குத் தயாரா? தனியாக உட்கார்ந்து பேசத் தயாராக இருக்கிறேன். நீங்கள் அதற்குத் தயாரா? ஆனால் அதைச் செய்யாமல் என்னை பாதிக்கிற மாதிரி என்னை 'சேலஞ்சு' செய்கிற மாதிரி கல்வித் துறையின் செயலாளரை விட்டு ஓர் உத்தரவு போடுகிறார்கள் என்றால், என்ன அர்த்தம்? கல்வித் துறையின் செயலாளர் எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கிறார். "நான் என்ன செய்ய" என்று கேட்பதைப்போல்! பாவம், அவர் என்ன செய்வார்? என்னை ஏன் பேச்சுவார்த்தைக்கு அழைக்கவே இல்லை? இதைத்தான் நான் கேட்கிறேன்.

அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்குத்தான் பதில் அளிப்பது என்று சொல்லுகிறார்கள். ஆனால் என்னிடமிருந்து பிரிந்து போன ஒருவர் ஒரு ஐந்து பேரை மட்டும் வைத்துக்கொண்டு சங்கம் நடத்துகிறார். அவர் நாகர்கோயிலிலிருந்து முதலமைச்சருக்குத் தருவதற்காக ஒரு செங்கோல் கொண்டு வருகிறார். முந்தா நாள் நான் ஒரு செய்திப் படம் பார்த்தேன். அதில் தமிழ்நாடு அரசு செய்திப் படம் ஒன்றைப் பார்த்தேன். அங்கிகரிக்கப்படாத சங்கத்திற்கு பதில்கூட தரக்கூடாது என்று உத்தரவு போட்டுவிட்டு, ஐந்து பேரை மட்டும் வைத்துக் கொண்டு நடத்துகிற அந்தச் சங்கத்தின் பெயரைச் சொல்லி அதன் செயலாளர் ஒரு செங்கோலைக் கொண்டுவந்து முதலமைச்சரிடம் கொடுக்கிறார். அவருக்கு செய்திப் படத்தின் மூலமாக அரசாங்கத்தின் சார்பில் விளம்பரம் தேடித் தரப்படுகிறது. என்போன்றவர்களுக்கு அங்கீரிக்கப்படாத சங்கம் என்ற பெயரைச் சொல்லி, பதில்கூட தரமாட்டார்கள். ஆனால் அவருக்கு அரசுச் செலவில் விளம்பரம் தேடித் தருவார்கள். அதன் பொதுச் செயலாளர் முதலமைச்சர் அவர்களின் காலைத் தொட்டு கீழே விழுந்து கும்பிடுகிறார். அவர் முதலமைச்சரின் காலைத் தொட்டுக் கும்பிடுவதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அது அவருடைய உரிமை. ஆனால் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருப்பவர் ஒருவர் முதலமைச்சரின் காலைத் தொட்டு கீழே விழுந்து கும்பிட்டதைப் பார்த்து படம் பார்ப்பவர்கள் கிண்டல் செய்கிறார்கள்.

(முற்பகல் 11-50)

காலில் விழுந்தால் அங்கீகாரம் கிடைக்குமோ, சலுகைகள் கிடைக்குமோ என்னவோ தெரியவில்லை. இதையெல்லாம் செய்யாமல் தனிக் குழுவை அமையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 19] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

1—6—1981 முதல் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கினார்கள். ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பணியாளர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கினார்கள். "கண்டக்ட்ரஸ்" என்று சொல்லக்கூடிய, மாணவர்களை அழைத்து வந்து பள்ளியில் சேர்த்து பிறகு அனுப்புவதற்குத் துணையாக நடத்தாக்கியர்கள் உள்ளனர். அவர்களுக்கு மாத ஊதியம் 20 ரூபாய்தான். அதற்கு மேல் கிடையாது. அவர்களை அரசு எடுத்துக் கொள்ளவில்லை. இந்த அநியாயத்தைப் போக்குங்கள், அவர்களையும் வாழ வையுங்கள், அவர்களும் தாய்க் குலம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதற்குப் பிறகு, அந்த இலாக்காவினுடைய பணிகள் அதிகமாகி இருக்கின்றன என்பதால், கூடுதல் இயக்குநர் ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். தனியாக ஒரு இயக்குநரைப் போட வேண்டும் என்று நாங்கள் கேட்டோம். பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களையும், பள்ளிகளையும் கவனிக்க தனி இயக்குநரைப் போடுங்கள் என்று கேட்டோம். இப்போது நியமிக்கப்பட்டுள்ள கூடுதல் இயக்குநர் ரப்பர் ஸ்டாம்ப்பாக இருக்கிறார். பள்ளிக் கல்வி இயக்குநரிடம் போய் கேட்டுக் கொண்டுதான் ஒவ்வொன்றையும் செய்கிறார். தன்னிச்சையாக எதையும் செய்ய முடியாது என்ற நிலை இருக்கிறது. இதனால் என்ன ஆகிறதென்றால், ஆங்காங்கே பணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்த நிலையை மாற்றி, தொடக்கக் கல்விக்காக தனி தொடக்கக் கல்வி இயக்குநர் ஒருவரைப் போடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்குங்கள் என்று முன்பிருந்தே வேண்டுகோளை விட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போது ஊராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நிலுவைகள், கடன்கள் கிடைக்கவில்லை. உதவி கல்வி அலுவலர்களாக இருக்கிறவர்கள் மாதந்தோறும் இலட்சம் ரூபாயை கருவூலத்திலிருந்து பெற்று வந்து பட்டுவாடா செய்கிறார்கள். அவர்களுக்கு வேறு பணியில்லை. முன்பு ஆசிரியர்கள் பே மாஸ்டர்களாக இருந்தார்கள். இப்போது உதவிக் கல்வி அலுவலர்கள் பெத்த பே மாஸ்டர்களாக, அதாவது பெரிய பே மாஸ்டர்களாக இருக்கிறார்கள். இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பணத்தை அவர்கள் எடுத்து வருவதால், அவருக்கே ரிஸ்க் அதிகமாக இருக்கிறது. எனவே பழைய முறையில் ஆசிரியர்களே பே மாஸ்டர்களாக இருந்து பணத்தைப் பட்டுவாடா செய்கின்ற அளவிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊழல் மிகுந்த பள்ளிகளைப்பற்றி பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் சொல்லி வாதாடியபோது, "எல்லாப் பள்ளிகளையும் எடுக்கச் சொல்லு கிறீர்களே, பச்சையப்பன் அறக்கட்டளை போன்ற பள்ளிகளையும் எடுக்க வேண்டுமா? அவை நல்ல கல்லூரிகள் அல்லவா, அப்போது" என்பதை எடுத்துச் சொல்லி "ஊழல் மிகுந்த பள்ளிகளை அரசு ஏற்கும்" என்று சொன்னார். நம்முடைய கல்வியமைச்சர் அவர்களும் இந்த நடவடிக்கையில் முனைந்திருப்பதால், குறிப்பாக ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில், கொள்ளிடம் அருகில் ஆனைக்காரன் சத்திரம் ஸ்ரீராம் உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் பத்து ஆசிரியர்களுக்கு 1981 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் இன்று வரை சம்பளம் வழங்கப்படவில்லை. பெற்றோர்கள் கூட ஸ்ட்ரைக் செய்து வேறு இடங்களிலே மாணவர்களைச் சேர்த்திருக் கிறார்கள். சட்டம் இருக்கிறது. ஆனால் மாவட்டக் கல்வி அலுவலர் இது வரை ஒன்றும் செய்யவில்லை. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் இன்று வரை சம்பளம் வழங்காத இப்படிப்பட்ட பள்ளிகளையெல்லாம் விட்டு வைக்க வேண்டிய அவசியம் என்ன? அரசு ஏற்றால் என்ன?

தென்னாற்காடு மாவட்டத்திலே, கடலூர் கல்வி மாவட்டத்திலே பொட்ட வெளி உதவி பெறும் பள்ளியின் நிர்வாகி ஆசிரியர் பணத்தைக் கையாடல் செய் திருக்கிறார், பொய்யாக 'அக்விடன்ஸ்' தயார் செய்து பட்டுவாடா செய்திருக் கிறார். இதை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகும், இன்னும் ஒன்றும் செய்யவில்லை. அந்தப் பள்ளியை அரசு ஏன் எடுக்கக் கூடாது?

மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் கூறியதைப்போல, தியாகராய நகர் உதவிபெறும் மேல் நிலைப் பள்ளியின் நிர்வாகி, முதன்மைக் கல்வி அலுவலர் பள்ளிக்குள்ளே நுழையக் கூடாது, அதற்கு அவருக்கு உரிமை யில்லை என்று தடுத்திருக்கிறார்களே! இந்த அதிகாரம் அவருக்கு எப்படி தரப்பட்டது? அரசாங்கத்தையே கையாலாகாத அரசாங்கமாக ஆக்கும் அப்படிப்பட்ட பள்ளியை சவாலாக அரசு ஏன் எடுக்கக் கூடாது?

திருச்சியிலே புனித ஜோசப் கல்லூரி இருக்கிறது. இந்தக் கல்லூரியின் முதல்வர், சங்கத்தில் உள்ளவர்களைப் பழி வாங்க எடுக்கும் நடவடிக்கைகள், அக்கிரமங்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. அவரைப் பற்றிய ஒரு இரகசியம். அவருக்கு இரண்டு டேட் ஆஃப் பெர்த். இது குறித்து அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகச் சொல் லுகிறேன். அவருடைய சர்டிஃபிகேட்டில் உள்ள பிறந்த நாள் 1—5—1924. டையோசிசுடைய டைரக்டரியில் உள்ள பிறந்த நாள் 15—9—1923. இவ்வளவு பெரிய ஊழலைச் செய்துகொண்டு, மற்றவர்களை மிரட்டுவது, பழி





வாங்குவது, சட்டத்திற்குப் புறம்பாக நடப்பது என்ற நிலையில் இருக்கிறார். அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கொள்ளைக் கூட்டத்தினரைப்போல தனியார் பள்ளி நிர்வாகத்தில் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடுதல் பயிற்சிக்காக ஒரு ஊதிய உயர்வு கொடுத்ததற்காக நாங்கள் பாராட் டுகிறோம், அதை வரவேற்கிறோம். அதேபோல எமர்ஜென்சி கோர்ஸ் என்று சொல்லி ஓராண்டுக் காலம் பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் இருக்கி றார்கள். அதைப் போலவே உடற் கல்வி ஆசிரியர்கள், தொழிற் கல்வி ஆசிரி யர்கள், ஓவிய ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இடைநிலை ஆசிரியாக இருந்து புலவராக மாறியவர்கள் இருக்கிறார்கள். இடைநிலை ஆசிரியாக இருந்து பி.டி. பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஒரு நிலை ஆசிரியர்களுக்கு சலுகை வழங்கும்போது மற்ற நிலை ஆசிரியர்களுக்கும் அந்தச் சலுகையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பு நிலையை இடைநிலை ஆசிரியர்களுக்கும் வழங்கியிருக்கிறார்கள். பாராட்டுகிறேன்! இதிலே ஊதியத்தை நெக்ஸ்ட் ஸ்டேஜிலே ஃபிட் அப் பண்ண வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் பத்து ரூபாய் அல்லது ஐந்து ரூபாய் கூடுதலாக வருகிறது. சில பேருக்கு நிலுவை இரண்டு மாதங்கள் அல்லது மூன்று மாதங்களுக்குக் கிடைக்கிறது. ஆனால் யாருக்கும் நாற்பது ரூபாய்க்கு மேல் கிடைக்கவில்லை. நாற்பது ரூபாய், 30 பாய், 20 பாய் என்று கொடுத்துவிட்டு பத்திரிகைகளில், அதுவும் அரசாங்க கெசட்டில், "ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை—பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவு" என்று பொய்யான விளம்பரத்தைச் செய்கிறார்கள். அந்த நிலையை மாற்றி சரியான பயன் அளிக்கக்கூடிய வகையிலே செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். முதுகலை, இளங்கலை புலவர்கள், உடற் கல்வி ஆசிரியர்கள், ஓவிய ஆசிரியர்கள், தொழில் ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் ஆகிய அத்தனை பேருக்கும் தர முயற்சி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இடைநிலை ஆசிரியர்கள் முதுகலைப் பட்டம் பெறுகிறார்கள். அவர்களுக்கு மேல் நிலைப் பள்ளிகளில் பணி தாருங்கள் என்றால், அதிகாரிகள் அவர்களுக்கு உயர் நிலைப் பள்ளி வகுப்புகளை போதிப்பதில் பழக்கம் இல்லை என்று சொல் லுகிறார்கள். இது எப்படிப் பொருந்தும்? இன்றைக்கு நேரிடையான முறை யில் எம்.எஸ்ஸி. எம்.ஏ. படித்தாலும் அனுபவம் இல்லாமல் வருகிறார்கள். அவர்களை நியமிக்கும்போது, 20 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள் மேலும் படித்துவிட்டு வரும்போது அவர்களுக்கு வேலை தரவில்லை என்றால், இது எப்படிப் பொருந்தும்? இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து இதைப்

பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தகுதிக்கேற்ற ஊதியம் தந்தால்தானே தங்கள் தகுதிகளை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு வரும். அரசு இதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜாயிண்ட் டெபுடி இன்ஸ்பெக்டர் பதவியை எடுத்தபோது, அப்போதிருந்த இயக்குநர், " நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற பட்டதாரி ஆசிரியர்களை, எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர் எப்படி சூப்பர்வைஸ் செய்ய முடியும் ? ஆகவே அந்தப் பதவியை எடுக்கிறோம் " என்று சொன்னார். இன்றைக்கு மேல் நிலைப் பள்ளிகளில் எம்.ஏ., எம்.எஸ்ஸி. படித்தவர்கள் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அவர்களை பி.ஏ., பி.டி. படித்த சிஈஓக்கள் எப்படி 'சூப்பர்வைஸ்' பண்ண முடிகிறது ? கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களுக்கு எம்.ஃபில், இருக்க வேண்டுமென்று சொல்லும்போது, பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கு எம்.ஃபில் தகுதி இருக்க வேண்டாமா ? திரு. சிட்டி பாபுக்கும், திரு. மணிசுந்தரத்திற்கும் அந்தத் தகுதி உண்டா ? நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு இந்தத் தகுதி இருக்க வேண்டாமா ? ஊழியர்களாக உள்ளவர்களுக்கு மட்டும் தகுதி வேண்டும் என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும் ?

இன்றைக்கு அடிஷனல் டெபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் பதவிகளை உருவாக்கி பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தரவிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகள் இல்லை. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்களையும், கல்வியமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன், "எந்தவித வாய்ப்பும் இல்லாத செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு அந்தப் பதவியைத் தர முயற்சி எடுங்கள்".

பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தேர்வாணைக் குழுவின் மூலம் 1978 ஆம் ஆண்டில் சிறப்புத் தேர்வு நடைபெற்று நான்காண்டுகள் முடிந்த பிறகும், இன்னும் இறுதிப் பட்டியல் வெளியிடப்படவில்லை. நீதிமன்றத் தடை விலக்கப்பட்டுவிட்டது. பத்தாண்டுகளுக்கு மேலாக எந்தவிதச் சலுகையும் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு அவர்களுக்காக ஒரு உத்தரவு விட்டது அதில் அவர்கள் "will be regularised" என்று ஆணையிட்டு மூவாயிரம் பேர்களை நிரந்தரமாக்கினார்கள். உங்கள் ஆட்சியில் எஞ்சிய



ஏழாயிரம் பேர் நிலை என்ன ? கல்வி இலாக்கா நீங்கா துயில் கொண்டுள்ளது. அவர்களைத் தட்டி எழுப்பி விடுங்கள் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களைப்பற்றி எனக்கு முன்பு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். 1983-ம் ஆண்டுக்குள் அவர்கள் தகுதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். போராட்டத்தை விரும்பாத சில சங்கத்தினுடையவர்கள் இப்போது வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலை என்ன ? பசுவைக் கறந்துகொண்டு கிடைக்கு விரட்டுவதுபோல அவர்களிடம் பணியை வாங்கிக் கொண்டு, கல்வியின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்திக்கொண்டு திரும்ப பழைய இடத்திற்கே அவர்களை அனுப்பப் போகிறார்களா ? அவர்களை கீழே இறக்குவதானாலும் பெரிய அநியாயம். "அந்தச் செய்யாதீர்கள்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

இன்றைக்குத் தமிழ் ஆசிரியர்கள், தமிழ்ப் புலவர்கள் தலைமையாசிரியராக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் தமிழ்ப் புலவர் ; அவர்கள் இதிலே கோபப்படமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : நான் எதற்காகவும் யார் மேலும் கோபித்துக்கொள்வதில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : தமிழாசிரியர்கள் பி.டி. பட்டம் பெற்றபின் 10 ஆண்டுக் காலம் பணியிலே இருக்க வேண்டும் அல்லது 5 ஆண்டுக் காலம் இருக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் போடுகிறார்கள். தமிழாசிரியர்களைத் தலைமையாசிரியர்களாக ஆக்குவதாக விளம்பரம் செய்யப்பட்டு இருக்கிறது. எங்கேயாவது அப்படி ஆக்கியிருக்கிறார்களா ? உண்மையிலேயே தமிழாசிரியர்கள் மீது அரசுக்கு அன்பு உண்டா ? தமிழ் ஆசிரியர்கள் மீது பற்று உண்டா ? இருந்தால் அந்த நிபந்தனையை நீக்குங்கள். தமிழாசிரியர்கள் இரண்டாம் நிலை பணிக்காலம் சேர்த்திடுக என்று இருக்கிறது. முதல்நிலை பணிக்காலத்தை மட்டும்தான் கணக்கிலே எடுக்கலாம் என்று சொல்கின்றனரே அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போகின்றது. அவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பி.லிட். தேர்வு எழுதுவதற்கு எஸ்.எஸ்.எல்.சி. தகுதிதேவை இப்போது இருப்பதும் 11-ம் வகுப்பு. ஆகவே புதிய 10 ஆண்டுப் படிப்புக்குச் சமம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. புதிய முறையில் 10

[1982 மார்ச் 19

ஆண்டு படித்த தமிழ் ஆசிரியர்கள், அந்தப் 11-வது வகுப்பு படிக்காத காரணத்தினாலே, பல்கலைக் கழகத்திலே அவர்கள் பி.லிட். தேர்வு எழுதக்கூடாது என்று சொல்கிறார்கள். அதனால் பல்லாயிரக்கணக்கான தமிழாசிரியர்கள் தேர்வு எழுத முடியாமல் இருக்கிறார்கள். இப்போது அறிமுகப்படுத்திய மேல்நிலைப் படிப்பு 1978 ஆம் ஆண்டு அடிப்படையைக் கொண்டு, பணி முன் உரிமைப் பட்டியல் தயாரித்து, தமிழாசிரியர்கள் பணியிடங்கள், தலைமையாசிரியர் பணி இடங்களை வழங்க வேண்டும் என்று மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் முழுத் தகுதி பெற்றவர்கள், முதுகலைப் பணி ஆற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் இன்னும் பணிவரன்முறை செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் 10ஏ(1) ஆக இருக்கின்றார்கள். டெம்பரவரியாக இருக்கிறார்கள்.

மேல்நிலைப் பள்ளிகளில் பகுதி நேர ஆசிரியர்களாக, ரூ. 150 மட்டும் சம்பளம் வாங்கிக்கொண்டு பணியாற்றுகின்றார்கள். நாம் தொழில் கல்வியை வளர்த்துவிட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். இப்போது எத்தனை பேர்கள் பிளஸ் 2 படித்துவிட்டு தொழிற் கல்வியால் பணி பெற்றிருக்கிறார்கள்? எவ்வளவு பேர் இங்கே பயனடைந்து கொண்டிருக்கிறார்கள்? எங்கே தொழிற் கல்வியில் தரம் இருக்கிறது? ரூ. 150 தான் சம்பளம் கொடுக்கிறார்கள். அதுவும் டெம்பரவரியாக இருக்கிறார்கள். பகுதிநேர ஊழியர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் காலையிலேயிருந்து மாலை வரையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 150 தான் சம்பளம். அப்படிக் குறைந்த சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கின்றவர்களில் தகுதியுள்ளவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்க வேண்டும். அதன் மூலம் முழுமையாகத் தொழில் கல்வியை ஆக்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு முழு நேர வேலையைக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நடுநிலைப் பள்ளி தொழில் ஆசிரியர்கள் தங்களுக்கு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அதே சம்பளம் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது நிறைவேற்றப்படவில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்ற தொழிலாசிரியர்கள். 3 ஆண்டு பணியாற்றினாலே இடைநிலை ஆசிரியர் தேர்வு எழுதலாம் என



1982 மார்ச் 19] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

சட்டப் பேரவையிலே எங்கள் வேண்டுகோளுக்கிணங்க சொல்லியிருக்கிறார்கள். அதை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன். மீனாட்சிசுந்தரம் சொல்கிறேன் என்று செய்யாவிட்டாலும், அந்த ஏழை ஆசிரியர்களுக்காக சட்டமன்றப் பேரவையிலே சொன்னதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இடைநிலை, இளநிலை ஆசிரியர் 20 ஆண்டுகள் பணியாற்றினால் சிறப்பு நிலை வழங்கப்பட்டு இருக்கிறது. இந்நிலையை அவர்கள் பெற 1988 ஆகும். இவர்கள் டோடல் சர்வீஸ் 20 ஆண்டுக்காலம் என்று வந்து அவர்கள் அதை அடைவதற்குள்ளே ரிடையர்தான் ஆகிவிடுவார்கள். அதனால் அவர்கள் அந்தப் பலனை அனுபவிக்க முடியாமல் போய்விடும். ஆகவே அதைப்பற்றி அரசு பரிவோடு பரிசீலனை செய்ய வேண்டும்.

மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் ஒன்றும் செய்யவில்லை. மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சில, உதவியாசிரியர்களை விட குறைவாக ஊதியம் பெறுகிறார்கள். அந்தத் தலைமையாசிரியர்களுக்கு 1978-ல் போடவேண்டிய உத்தரவை 1981-லே போட்டிருக்கிறார்கள். என்ன தெரியுமோ? இவர்கள் நிர்வாக அலுவலர் தேர்வில் தேர்வு பெற்றால்தான், முதல் இன்க்ரிமென்ட், முதல் வளர் ஊதியம் பெற முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். 3 வருடங்கள் கழித்து இப்படி வருகிறது. அப்படிப் போடலாமா? முதலில் வளர் ஊதியத்தைக் கொடுத்து வருபவர்களுக்கு இப்படிக் கொண்டு வரலாம். இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. இது சரியாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்டக்டட் ஆசிரியர்கள் ரூ. 25 லிருந்து ரூ. 40 என்று உயர்வு சம்பளம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் தலைமை ஆசிரியர்கள் ரூ. 50 தான் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் அத்தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன். பயிற்றுநர்கள், விளக்குநர்கள் எல்லாம் எம். பில். பெற்றிருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஒரு புதிய உத்தரவு வந்திருக்கிறது. கல்லூரிக் கல்வி இயக்குநர் உதவிப் பேராசிரியர் பதவி உயர்வுக்கு வேண்டும் அதற்கு எம்.பில். வேண்டுமென்று சொல்லிவிட்டு,

அண்மையிலே பி.ஜி. பேராசிரியர்களுக்கு, சீனியாரிட்டி அடிப்படையிலே நியமிக்கலாம் எனவும் எம்.பில். தேவையில்லை என்று சொல்லிவிட்டு, இவர்களுக்கு ரூ. 1,200 சம்பளம் கொடுக்கப்படுகிறது. இப்படி ஒரு பதவி உருவாக்கப்பட்டிருக்கிறது. அது எப்படி சரியாகும்? அவர்களுக்கு மட்டும் M. Phil வேண்டும். இவர்களுக்கு வேண்டாமா? அந்த நிலை யாருக்காக உருவாக்கப்பட்டது? 10 ஆண்டுகள் உதவிப் பேராசிரியர்களாக இருந்தவர்கள் பேராசிரியர்களாக மாற்றப்பட்டு விட்ட சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பேராசிரியர்களாக மாற்றப்பட்டு விட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளைக் களையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்பற்றி எனக்கு முந்தியதாகப் பேசியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் அதுபற்றி விரிவாகப் பேச இருக்கிறார்கள். எனக்கு முன்னால் சில உறுப்பினர்கள் சொல்லியதையெல்லாம் நானும் வழிமொழிகிறேன். 4—3—1982 அன்று இரண்டு ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்திருக்கிறார்கள். 4 ஊழியர்களை 'சஸ்பென்ட்' செய்திருக்கிறார்கள். அங்கே பழி வாங்கும் நிலைமைகள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. அந்த நிலை மேலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்க அரசு யாரைக் கண்டு அஞ்சுகிறது என்று தெரியவில்லை. அந்தத் அவர்கள் கேட்ட, அரசு ஒப்புக்கொண்ட சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, வேண்டியவற்றைச் செய்ய முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எப்போது வேண்டுமானாலும் விஷயங்களை எடுத்துச் சொல்ல முடியும். கல்லூரி ஆசிரியர் வைத்த கோரிக்கைகளையெல்லாம் அவர்கள் நிறைவேற்றவில்லை. வருகிற 20 ஆம் தேதி மாவட்டத் தலைநகரிலே உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்கள். வருகின்ற 27 ஆம் தேதி சென்னையிலே உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்கள். அப்படி ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். கல்லூரி நூலகர்கள் ஆசிரியர்களுக்கு இணையாக நடத்தப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்து, சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. பாரதியார், பாரதிதாசன் பல்கலைச் சட்டத்திலே இது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்து நடுவண் அரசு அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. பல்கலைக் கழக மான்யக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. சென்னை உயர்நீதிமன்ற





தீர்ப்புகூட சாதகமாக இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக கல்வி அமைச்சர் அவர்கள் மேடையிலே ஆணையில் கையொப்பம் இட்டுவிட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் ஆணை எதுவும் வரவில்லை. கல்வி அமைச்சர் அவர்கள் கையொப்பம் இட்டபிறகும் காலதாமதம், எனவேதான் கூறுகிறேன் கல்வித்துறை ஆழ்ந்த நித்திரையில் இருக் இதைச் சொல்லி அடுத்து ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அடுத்து, ஒன்றே ஒன்று. தயவுசெய்து ஒன்றே ஒன்று சொல்லி முடிக்கிறேன். முதலமைச்சர் வறட்சி நிவாரணநிதி என்று ஒரு காலத்திலே, அதாவது இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே 1981 வது ஆண்டு என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நான் ஆசிரியராக இருந்தவன். மணி அடித்தால் நாம் அப்போதே விட்டுவிட்டு வகுப்பிலேயிருந்து போகிறோம். ஆனால் இங்கே மாத்திரம் அப்படி நடப்பதில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நாம் வெளியே போக விரும்புவதில்லை. உள்ளேயே இருந்து பேச விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: ஆசிரியர்களுக்குப் பேசும்போது மணியடிக்கவில்லையென்றால் பேசிக்கொண்டிருக்கிறார்கள். முக்கால் மணிக்கு ஒருமுறை அடிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு நன்றாக இருக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எங்கே என் பேச்சில் குறுக்கிடவே இல்லையே என்று இருந்தேன். இன்றும் குறுக்கிட்டு விட்டார்கள். எனக்கு அது நிம்மதியைத் தருகிறது. அதாவது இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கடந்த 1981-வது ஆண்டிலே தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி தலைவர்கள் வளம் நிவாரண நிதி தருவதாக ஒரு கூட்டத்திலே சொன்னார்களாம். அதாவது ரூ. 30 கோடிக்கு வசூலித்துத் தருவதாகச் சொன்னார்களாம். அதை வைத்துப் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் இப்போது ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அந்த நிதியை அவர்கள் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், நடுநிலைமைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களிடத்திலே வசூலித்து அவர்களே "டிராப்ட்" வாங்கி அரசுக்கு அனுப்பலாம் என்று எப்போதோ சொன்னதற்கு இப்போது ஆணை போட்டிருக்கிறார்கள். அவர்கள் யாரிடம் வேண்டுமானாலும் வசூலிக்கலாமாம். அந்த உத்தரவை வைத்துக்கொண்டு வசூலிக்கலாம் ஏதோ ஒரு சங்கம் சொல்லியிருக்கின்றது. மற்ற எல்லாச் சங்கங்களும் ஒப்புதல் அளிக்கவில்லை. இந்த முதலமைச்சர் வறட்சி நிவாரண நிதி என்ற பெயராலே தஞ்சாவூரில் மாயவரத்தில் கட்டாய வசூலே நடக்கிறது. அதிகாரிகள் மிரட்டுகிறார்கள். 'உத்தரவு வந்திருக்கிறது. முதலமைச்சர்

(பிற்பகல் 12-10)

வறட்சி நிவாரண நிதிக்கு தருகிறீர்களா இல்லையா? என்று கேட்கிறார்கள். என்று ஒரு சங்கத்தினர் மூலம் அந்த ஆணையை வைத்துக்கொண்டு ஆசிரியர்களை மிரட்டுகிறார்கள். அதிகாரிகள் தோளில் கை போட்டுக்கொண்டு அங்கிகாரம் பெற்ற சங்கத்தை வளர்க்கிறார்கள். அந்த அதிகாரிகள் என்ன உத்திரவு போடுகிறார்கள் சி.ஈ.ஓ.வுக்கு? தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி மாவட்டச் செயலாளர் அவர்களை வைத்துக்கொண்டு, என்னுடைய "டூர் புரோகிராம்" தயாரித்து ஏற்பாடு செய்யுங்கள் என்று போடுகிறார்கள். இதுதான் அவர்கள் பணியாற்றும் லட்சணமா? சி.ஈ.ஓ. அந்த சங்கச் செயலாளரைத் தேடிச் செல்ல வேண்டுமா? அவர்கள் நடத்தும் கூட்டங்களில் அதிகாரிகள் கலந்துகொண்டு இந்தச் சங்கத்தில் சேருங்கள் இதில் அங்கத்தினர் ஆகுங்கள் எனக் கூற வேண்டுமா? அங்கிகாரம் பெற்ற சங்கத்தை இவர்கள் ஏன் தோள்மேல் தூக்கிப் போட்டுக்கொண்டு ஆடுகிறார்கள்?

திரு. பா ரா. தாமஸ்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி அங்கிகாரம் பெற்றிருக்கிறதென்றால், ஓர் அரசாணையின் அடிப்படையில் அங்கிகாரம் பெற்றிருக்கிறது. நாங்கள் சார்ந்துள்ள சங்கம்கூட அங்கிகாரம் பெற்றிருக்கிறது. அதற்காக அவர்களைப்பற்றி விமர்சிக்கும்போது அதிகாரிகள் தோளில் தூக்கிக்கொண்டு போகிறார்கள் என்று சொல்லுவது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு முறையாகுமா என்று கேட்க விரும்புகிறேன். இவர்கள் அங்கிகாரம் பெறுகின்ற முறையில் அரசு ஆணைகள் இடச் செய்ய வேண்டும். அவையில் இல்லாதவர்களைப்பற்றி விமர்சிப்பது ஜனநாயகத்திலே நம்முடைய பண்பாட்டுக்கு, நம்முடைய பாரம்பரியத்திற்கு உரித்தாகாது என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினரவர்களை கேட்டுக்கொள்கிறேன். இல்லாத சங்கம்பற்றிப் பேசும்போது வெளியிலே அதை வைத்துக்கொள்வது நன்றாக இருக்கும் . . .

திரு. செ. முத்துசாமி: நாட்டிலே எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள் பேசிவிட்டார்கள்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினரவர்கள் இடையிலே கருத்து சொல்வதால், சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அரசாங்கத்திலே நடந்திருக்கிற நடைமுறையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார். அப்படி





அவர் பேசும்போது, அங்கிகரிக்கப்பட்ட சங்கம்பற்றி பேசலாமா என்று கேட்கிறார். சங்கத்தை எப்படி நடத்துகிறார்கள், எப்படித் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதைத்தான் சொல்லுகிறார். அப்படிச் சொல்வதால் சபையின் நாகரிகம், பண்பாடு எப்படிக் குறைவதாக அவர்கள் கருதுகிறார்கள்? . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசட்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஆகவே, நான் தோளில் போட்டுக் கொள்ள விரும்பவில்லை. யார் தோள் மீதும் ஏற விரும்பவில்லை. நாட்டிலே உள்ள அத்தனை பிரச்சினைகள் பற்றிப் பேசத்தான் அவை இருக்கிறது. இல்லாதவர்களைப்பற்றிப் பேசக் கூடாதென்று சொல்லிச் சொல்லி எதையும் மற்றவர்கள் பேசாமல் இருக்க வழி வகுக்கக்கூடாது. இந்த நிலையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அங்கே வறட்சி நிவாரண நிதி என்று கட்டாய வசூல் நடக்கிறது. தென் ஆற்காட்டிலேயும் நடக்கிறது. இதைத் தடுக்க வேண்டும். பொதுவாக அனைத்துச் சங்கங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு நிலையில், நடுநிலையில் நில்லுங்கள் 'கெடுவல்யான் என்பது அறிக நடுவொரீஇ அல்ல செயின்' என்று வள்ளுவன் சொன்னானே அதை டாக்டர் அவர்களே நீங்கள் அரசுக்கு எடுத்துச் சொல்லுங்கள் என்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 'தன் நெஞ்சம்' என்பதை விட்டுவிட்டீர்கள். ரொம்ப நன்றி.

* திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது பேசும் நல்வாய்ப்பு கொடுத்ததற்காக தங்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வி என்பது மிருகமாக அல்லது முரட்டுத்தனமாக இருக்கிற மனிதனைப் பண்படுத்த அமைக்கப்பட்ட ஒரு கருவி அல்லது தூண்டுகோலாகும். நாங்கள் கல்வியை பள்ளிகளிலே பெறுகிறபோது ஆசிரியர்கள் மிகச் சிறந்த முறையில், சிரமம் எடுத்துக்கொண்டு எங்களுக்கெல்லாம் அறிவுரைகள் சொல்லி, படிக்க வைத்தார்கள். இன்றைக்கு நம்முடைய மாநில அரசு கிட்டத்தட்ட இருபது விழுக்காடு வருவாயை கல்விக்கு ஒதுக்கி, இந்த நாட்டிலே உள்ள ஏழை. எளிய மக்கள் கல்வி கற்க வேண்டும் என்றும், ஏழை எளிய பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்க வேண்டுமென்றும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் கல்வி அமைச்சர் அவர்களிடம் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குப் பள்ளிக்கூடங்களிலே கைத்தறிப் பாடம் என்று சொல்லி, கைத்தறி ஆசிரியர்களை வைத்து நடத்தப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில், நான் அந்தத்

[திரு. சி. இராமலிங்கம்] [1982 மார்ச் 19

தொழிலில் இரண்டறக் கலந்து வாழ்க்கை நடத்துபவனாக இருப்பதால், சொல்கிறேன். எங்களுடைய வீட்டுப் பிள்ளைகள் தறி நெசவு செய்யக் கற்றுக்கொண்டு, அந்தத் தொழிலைச் செய்ய முடியாமல், வேறு வேலை தேடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே பள்ளிகளில் கைத்தறி நெசவு சொல்லிக் கொடுப்பதை அருள்கூர்ந்து மறுபரிசிலனை செய்ய வேண்டும். கைத்தறி ஆசிரியரை வைத்துப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை நிறுத்தி வைத்து, வேண்டுமென்றால், இயந்திர விசைத் தறிகளை இயக்குவதற்கும், மற்ற இயந்திரக் கருவிகளை வைத்து சாயம் போடுதல், ஆராய்ச்சி வேலைகள் செய்தல்,போன்றவற்றைக் கற்றுக் கொடுத்தால், எங்களுடைய பிள்ளைகள் மீண்டும் கைத்தறி நெசவு வேலைக்குப் போகாமல், வேறு வேலைகள் பெற்று ஊதியம் பெற வசதியாக இருக்கும். வருங்காலத்தில் ஆரம்பப் பள்ளியானாலும், உயர்நிலைப் பள்ளியானாலும், அங்கே கைத்தறிப் பயிற்சியை நிறுத்தி, வேறு துறைகளிலே பயிற்சி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கல்வியைப் பொறுத்தவரையில், தமிழ் கற்றுக்கொடுக்க வெளி மாநிலங்களுக்குச் சில உதவிகளைச் செய்ய முன்வந்திருக்கிறோம். குஜராத் மாநிலத்தில் நம் தமிழ் சமுதாய மக்கள் குடியேறியிருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் தனியார் பள்ளிகளிலே எட்டாம் வகுப்புவரையிலே படிக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் கல்வி பாதிக்கப்படுகிறது. எட்டாம் வகுப்பு மேலே எஸ். எஸ். எல். சி. படிக்க வேண்டுமென்றால் பள்ளிக்கூடங்கள் இல்லை. தமிழ் சொல்லிக் கொடுக்கும் பள்ளிக் கூடங்கள் இல்லை. எனவே நம்முடைய அரசு அந்த மாநில அரசோடு பேசி, அங்கே உயர்நிலைப் பள்ளிகளிலே தமிழை போதிக்கும்படி செய்து, அங்கேயே கல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும். அதைப் போல மராட்டிய மாநிலத்திலே கூட தமிழர்களுக்கு தமிழ்ப் பள்ளிக்கூடம் அரசுத் துறையிலே அதிகமாக இல்லை. அங்கே மேனேஜ்மென்ட் பள்ளிகளில் எட்டாம் வகுப்புவரை படிக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. மேற்கொண்டு அந்த மாநில மொழி அல்லது ஆங்கில கல்விக்குத்தான் போக வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு அது முடியவில்லை. அங்கேயும் இந்த அரசு ஆவன செய்ய தமிழ்க் கலாசாரத்தையும், தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் மொழியையும் போதிக்க, நிதி ஒதுக்கீட்டிற்கு ஒதுக்கி, அந்த மாநிலத்தில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு நல்ல வாய்ப்பை அளிக்க வேண்டும்.

உத்திரப் பிரதேசத்தில் வானொலி மூலம் தமிழ் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அப்படித் தமிழ் கற்றுக் கொடுக்கும் வானொலி நிலையத்தாருக்கு நான் என்னுடைய தனிப்பட்ட முறையிலும், நான் சார்ந்துள்ள அனைத்



1982 மார்ச் 19] [திரு. சி. இராமலிங்கம்]

திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வானொலியில் பணியாற்றுபவர்களைப் பார்த்து, இந்த முறை எதனால் வந்தது என்று கேட்டேன். அவர்கள் பதில் சொன்னார்கள். உத்திரப் பிரதேசத்தில் கிட்டத்தட்ட 16 இலட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை நாங்கள் ஏற்று, வானொலியிலே தமிழ் சொல்லிக்கொடுக்கிறோம். வானொலி மூலமாக தமிழ் கற்றுக் கொண்டவர், தமிழில் கடிதம் எழுதுகிறார்கள், பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். நாமும் அவர்களுக்கு தக்க ஊக்கம் கொடுத்து வானொலியில் செய்யப்படும் பிரசாரத்தை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, கடல் கடந்த பகுதிகளிலிருந்து, மொரிஷியஸ் தீவுகளிலிருந்து பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள்கூட அங்கே சென்றிருக்கிறார்கள். ஆசிரியர்கள் தேவை, புத்தகங்கள் தேவை என்று சொல்லுகிறார்கள். அரசுச் செலவிலே புத்தகங்களையும், ஆசிரியர்களையும் அனுப்ப வேண்டும். அங்கே உள்ள தமிழர்கள் சரியாகத் தமிழ் பேச முடியவில்லை. ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். அவர்களைத் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்ற வகையில் மாற்ற பல முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மலேசியா, சிங்கப்பூரில் தமிழ் எங்கே மறைந்து விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அங்கே சென்று பார்த்தபோது, மலேசிய அரசு அவர்களுடைய எழுத்தை எடுத்துவிட்டு, ஆங்கிலத்தில் போதிக்கிறார்கள். பள்ளிகள், கல்லூரிகளில் ஆங்கில எழுத்து மூலமாக மலேசிய மொழியைப் போதிப்பதால், அதைக் கற்கிறார்கள். தமிழைக் கற்கவும் ஏன் அந்த முறையைக் கொண்டு வரக்கூடாது என்ற எண்ணம் இருக்கிறது. நம்முடைய அரசு அந்த அரசோடு கலந்து பேசி, தமிழ் எழுத்துக்கள் சிறந்தவை என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் இருக்கிற தமிழர்கள்தான் பல தமிழ்ச் சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தப் பகுதி தமிழர்கள்கூட உயர் நிலைப் பள்ளிகளிலே தமிழ் படிக்க முடியாத அளவுக்கு — அந்த அரசு ஏற்றுக் கொள்கிறதோ, இல்லையோ — உள்ளூர நிறுத்தப்படுகிற மாதிரி இருக்கிறது. இது குறித்தும் அங்குள்ள அரசுடன் கலந்துபேசி, தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இந்தோனேசியத் தமிழர்கள் தமிழ் படிக்க முடியாமல் இருக்கிறார்கள். உலகத் தமிழ் மாநாட்டுக்கு அவர்கள் வந்தபோது, ஒரு கருத்தை அவர்கள் சொன்னார்கள். இங்கிருந்து கலாசாரக்குழு போல வாருங்கள். நாடகம், கூத்து, பரத நாட்டியம் போன்றவைகளை எல்லாம் தமிழிலே செய்தால், தமிழ் பண்பாட்டை நாங்கள் மறக்காமல் வாழ்வோமென்று சொன்னார்கள். கல்வி

யைப் பொறுத்தவரையில், பிற மாநிலங்களிலுள்ள, உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்குத் தேவையான அளவுக்கு இன்னும் அதிக நிதியை ஒதுக்க வேண்டும். உலகத் தமிழ் மாநாடு நடத்தினோம். தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தியிருக்கிறோம். அதன் மூலமாக இதற்குச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏழை எளிய கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளுக்கு கைத்தறி வேலை கற்றுக் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12—20)

அவர்களை உயர்த்த அவர்கள் நன்றாக வாழ பிற தொழில்களுக்கு அவர்களை மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். நெசவாளர் பயிற்சியை பள்ளிகளிலிருந்து எடுத்துவிடுவதுகூட நல்லது என்கிற ஆலோசனையை நான் கூறி, வாய்ப்பு கொடுத்தமைக்குத் தலைவரவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி அமர்கிறேன்.

திரு. க. அருணாசலம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83ஆம் ஆண்டுக்கான கல்வியைப்பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலேதான் பொதுவாக அறிவு வளர்ச்சி அதிகமான அளவில் வளர்ந்திருக்கிறது. 'எக்ஸ்புளோசன் ஆஃப் ஐடியாஸ், நாலெட்ஜ் எக்ஸ்புளோசன்' எல்லாம் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலே மிக அதிகமான அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்று வல்லுநர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள். பள்ளி வயது என்று ஒன்றை வைத்திருக்க வேண்டாம். பிறந்தது முதல் இறப்பது வரை படித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் நான் தமிழக அரசைப் பாராட்டுகிறேன். இப்பொழுது எல்லாப் பள்ளிகளிலும் சிறு குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் பிறந்ததிலிருந்து பயிற்சி கொடுக்கிற ஒரு திட்டம் இருக்க வேண்டுமென்று இப்பொழுது சொல்லியிருக்கிறார்கள். 4 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பாலவாடிகள் மூலம் படிப்பு சொல்லிக் கொடுக்க மையங்கள் நிறுவ ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த முயற்சி வெற்றி பெற வேண்டும். இரண்டு மூன்று ஆண்டுகளில் எல்லா ஊர்களிலும் இந்த மையங்கள் அமைய ஏற்பாடு செய்ய வேண்டும். இது சாத்தியம்தானா என்று பல பேர் நினைக்கக் கூடும். இன்றைக்கு ரூ. 100 கோடிக்கான ஒரு திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. அதுபோல் சத்துணவு அளிக்கும் திட்டத்தையும் அறிவித்திருக்கிறது. இவை எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், 2, 3 ஆண்டுகளுக்குள் அத்தனை சிறு குழந்தைகளுக்கும் நல்ல ஒழுக்கத்தை, கடமை உணர்ச்சியை, கட்டுப்பாட்டு உணர்வை, கல்வி



அறிவை பள்ளிக்கூடத்திற்கு அவர்கள் போகாமலேயே இந்த மையங்கள் மூலம் அவர்கள் பெற முடியும். அந்த வகையில் அரசு கொண்டு வந்திருக்கும் இத்திட்டத்தை நான் பாராட்டுகிறேன். அந்தந்த ஊர்களிலேயுள்ள படித்த பெண்களைக் கொண்டு மாதர் நல சங்கங்களிலே பொறுப்பேற்றிருப்பவர்களின் துணை கொண்டு, அவர்கள் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்தினால், மிகுந்த அளவு செலவு இல்லாமல் இத்திட்டத்தை நிறைவேற்றி விடலாம். நம் நாட்டில் மேல் நாடுகளைப்போல் செல்வ வளம் இல்லை. ஆனால் மனித வளம் நிறைய இருக்கிறது. அதுபோல தியாக வளம் நிறைய இருக்கிறது. கிராமப்புறங்களிலிருக்கிற பெண்களுக்கு 5 மாதப் பயிற்சி கொடுத்து அவர்கள் மூலம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மிகவும் நல்லது. பதிவு செய்த பல மாதர் நலச் சங்கங்கள் இருக்கின்றன. அவர்களுக்குச் சிறிய அளவில் நிதி கொடுத்து, மானியம் கொடுத்து இதனைச் செயல்படுத்த வேண்டும். இப்போது பொதுவாக தேசியமயமாக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. காரல் மார்க்ஸ் போன்றவர்கள் தேசியமயமாக்குதல்பற்றிக் குறிப்பிடும்போது "Means of Production" பற்றிதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத்தான் தேசியமயமாக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இன்றைக்குக் கல்வியைக்கூட தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்கிறோம். எங்கேயாவது தவறு நடந்தால், அதை 'ரெகுலேட்' பண்ண முழு அதிகாரம் அரசிடம் இருக்கிறது. அரசு ஊழியர்களாக ஆக்கிய உடனேயே அவர்கள் எல்லாம் சரியாக வேலை செய்வார்கள் என்று நினைப்பது கூட சரியல்ல. இதைப்பற்றிக் கல்வியமைச்சர் அவர்கள் இங்கே அவ்வப்போது சொல்லும்போது, நான் மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருக்கிறேன். எவ்வளவோ காரியங்களை இந்த அரசு இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். ஆசிரியர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அதோடு கூட, கட்டிடங்கள், லேபரட்டரிஸ் போன்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அதற்காக கொள்கை வகுத்துப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போது கல்வியுடன் சேர்த்து உணவையும் இலவசமாக அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கல்விக்காக மட்டும் இன்றைக்கு மொத்த வருவாயில் 22 சதவிகிதத்தை ஒதுக்கியிருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அரசைப் பாராட்டுகிறேன். கல்வி அவசியம் தான். அதன் மூலம் அவர்கள் ஓரளவுக்குக் கல்வியைத் தேடிக்கொள்கிறார்கள். அது சாத்தியமாகவும் இருக்கிறது. ஆனால் சிறு குழந்தை வயதிலிருந்தே அவர்கள் பள்ளிக்கூடம் செல்லாமல் ஆடல் பாடல் விளையாட்டு நடக்கக்கூடிய ஒரு மையத்தில் படிக்கிற படிப்பாக அது இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மையத்தில் அது சேர்த்தால்தான், சிறந்த ஒழுக்கத்தைப் பெற முடியும். கடமை உணர்வை

வளர்க்க முடியும். கட்டுப்பாடு உணர்வை வளர்க்க முடியும். உணர்ச்சிபூர்வமாக அவர்களால் வளர முடியும். ஆகவே சிறு வயதினருக்கான மையமாக இதை நடத்த வேண்டும். தொடக்கப் பள்ளிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் சாதிக்க வேண்டியவற்றை இப்போதே நாம் சாதித்து முன்னணியில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது பாராட்டத் தக்கது. இந்த விஷயத்தில் பல மாநிலங்கள் பின் தங்கியிருக்கின்றன. மிகவும் திறமையாக வேலை செய்ததன் காரணமாகத்தான் 95 சதவிகிதம் மாணவர்களை பள்ளிகளில் சேர்த்திருக்கிறார்கள். அப்படிச் சேர்க்க முயற்சி செய்தது சரிதான் என்று சொல்வதை என் அனுபவத்தின் மூலம் பார்த்தால் ஒப்புக் கொள்ள முடியாது. பள்ளிக்கூடம் மூலம் தான் குழந்தைகள் அறிவைப் பெற முடியும் என்று சொல்வதும் சரியில்லை. இதை மேல் நாடுகள் இன்றைக்கு ஒத்துக்கொண்டிருக்கின்றன. இப்போது ஏராளமான செலவில் பள்ளிக் கூடங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். இதை எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். முறை சாரா கல்வி, பள்ளி சாரா கல்வி என்று சொல்லி, சில இடங்களில்தான் இன்றைக்கு கல்வி முறையை ஆரம்பித்திருக்கிறார்கள். சிவகாசியில் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற சிறுவர்களுக்கு கல்வி அறிவுக்கான பயிற்சியை அளிக்க வேண்டும். நெசவுப் பயிற்சிப் பள்ளிகளில் வேண்டாமென்று இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே கைத்தறி அமைச்சராகவும் இருப்பதால், இதற்கு அவர்களே பதில் சொல்ல முடியும்.

**திரு. சி. இராமலிங்கம்** : நெசவுப் பயிற்சி பள்ளிகளில் கூடாது என்று நான் சொல்லவில்லை. விசைத்தறி போன்றவற்றைப் போட்டு அதை நவீனப்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தைத் தான் நான் சொன்னேன்.

**திரு. க. அருணாசலம்:** அப்படியென்றால் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெசவு செய்கின்ற வீட்டுக்குச் சென்றால், சிறு குழந்தைகளை வைத்து அந்த வேலைகளைச் செய்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு தினசரி அவர்கள் செய்கின்ற வேலையுடன் கூட ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் இத்தகைய மையங்களில் கல்வி கற்பதற்கான வாய்ப்பினை அளித்தால், எதிர்காலத்தில் அவர்களும் சிறந்த என்ஜினியர்களாகவோ, வல்லுநர்களாகவோ வரலாம். அவர்களும் எல்லாத் துறைகளுக்கும் வர வேண்டும். அவர்கள் எல்லாம் பள்ளிக்கூடத்திற்குச் சென்றால்தான் படிக்க முடியும் என்கிற நிலை இருப்பது சரியல்ல. மையங்களில் அவர்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலம் அவர்கள் திறமைசாலிகளாக, ஒழுக்கமுடையவர்களாக, உணர்ச்சி மிக்கவர்களாக ஆடல் பாடல் விளையாட்டுடன் கூடிய கல்வியைக் கற்பதன் மூலம் வர முடியும். பெற்றோர்களிடமிருந்து பெறு



கின்ற திறமைகள் வேறு இருக்கின்றன. ஆகவே குழந்தைகளுக்குக் கல்வியை போதித்துக் கொடுக்கின்ற பள்ளிக்கூடங்களாக அல்லாமல் அவை மகிழ்ச்சி மையங்களாக இருக்க வேண்டும். தொடக்கப் பள்ளி மாணவர்கள் தப்பித்து விடுகிறார்கள், 'டிராப் அவுட்' என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் நான் அதை 'டிராப் அவுட்' என்று சொல்லவில்லை. 'புஷ்ட் அவுட்' என்று சொல்கிறேன். ஆகவே அவர்களுக்குச் சரியான முறையில் வாய்ப்பு அளிக்க வேண்டும். இன்றைக்கு இலட்சக்கணக்கான பேர் பனை தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலைச் செய்பவர்கள் தங்களுக்கு உதவியாக இருக்க குழந்தைகளை வேலைக்கு அமர்த்திக்கொள்கிறார்கள். அவர்கள் தும்பைப் பிரிக்கிற வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த வேலையை சந்தோஷமாகச் செய்கிறார்கள். சிறுவர்களை ஏன் அந்த வேலையைச் செய்ய வைக்கிறார்கள் என்றால், அவர்கள் யாரையும் சுரண்ட மாட்டார்கள். இன்றைக்கு ஏராளமான சிறுவர்கள் தீப்பெட்டி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களில் பயிற்சி அளித்தால், எதிர்காலத்தில் அவர்களும்கூட வெவ்வேறு தொழில்களுக்கு உயர்ந்த நிலையில் போவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவர்களுடைய அறிவும் வளரும். ஆகவே இப்போது பள்ளிக்கூடங்களாக இருக்கின்ற ஒரு நிலைமையை மாற்றி, அவைகளை அறிவுக் கூடங்களாக ஆக்குகின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். அரசு "பள்ளி சாராக் கல்வி" என்கிற ஒரு திட்டத்தை உடனே கொண்டுவர வேண்டும். அறிவைப் பெற பள்ளிக்குச் செல்வது முக்கியம்தான். ஆனால் அதே சமயத்தில் வேறு ஒரு முறை மூலமும் அறிவைப் பெற முடியும் என்கிற நிலை இருக்குமேயானால், அதுபற்றியும் நாம் ஆராயத்தான் வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, இதுபற்றிச் சொல்ல வேண்டும். இதுபற்றி கல்வி மேதைகள் எல்லாம் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பள்ளிகளின் மூலம்தான் அறிவைப் பெற வேண்டும், கல்வியைப் பெற வேண்டும் என்கிற அவசியம் இப்போது இல்லை. 'வெஸ்டர்ன் இன்டரஸ்ட்' அதிகமாக இருக்கின்றவைகளுக்கெல்லாம் இப்போது அதிகமாக எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. அறிவை குழந்தைகளுக்கு பள்ளியின் மூலம்தான் கொடுக்க முடியும் என்ற பழைய நிலையை மாற்றி, வேறு முறையின் மூலம் அதைக் கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டும்.

மேல்நிலைப் பள்ளிகளில் அளிக்கப்படும் வொக்கேஷனல் கோர்ஸைப் பொறுத்தவரையில், ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு இதில் படிக்கிறவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டு வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 88 ஆயிரம் மாணவர்கள்தான் படிக்கிறார்கள் என்பதை நான்

தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இரண்டு லட்சத்துக்குமேல் மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கும் நிலையில் இந்தக் கோர்ஸைப் படிக்கிறவர்களின் எண்ணிக்கை 58 ஆயிரம்தான் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி முடிக்கும் வரையில் அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. க. அருணாசலம் : தொழில் கல்வி படித்தவர்கள் பின்னாலே அந்தத் தொழிலைச் செய்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. நான் ஆய்வு செய்து பார்த்தேன். அதற்காகவென்று போடப்பட்டிருக்கும் குழுவிடத்திலேகூட கேட்கலாம். என்னுடைய யோசனை என்னவென்றால், எந்த வேலை கற்றுக் கொடுக்கப்படுகிறதோ அந்த வேலை அந்த வட்டாரத்திலே, அந்த மாவட்டத்திலே செய்யும் தொழிலாக இருக்க வேண்டும். அதையும் எப்படிச் செய்ய வேண்டும் என்கிற வகையில் தொழில் முனைவோருக்கு வேண்டிய நிர்வாகப் பயிற்சியும் அதிலே சேர்க்கப்பட வேண்டும். ஒரு 20 மணி நேரம் அதிகமாகக் கண்டுபிடித்தால், அந்தப் பயிற்சியையும் கொடுக்கலாம். அப்படிச் செய்தால்தான், அந்தத் தொழிலைச் செய்து பிழைக்கலாம் என்ற நிலை வரும். இப்போது 150 ரூபாய் வாங்கும் ஆசிரியர்கள் அந்தத் தொழிலைச் சொல்லிக் கொடுக்கிறார் என்று சொன்னால், அவர் ஏனோதானோ என்றுதான் சொல்லிக் கொடுப்பார். பி.டி. அல்லது எஞ்ஜினியரிங் படித்தவர்களை வைத்துத்தான் சொல்லிக் கொடுக்க வேண்டும். நாம் சொல்லிக் கொடுக்கும் தொழிற் பயிற்சியின் நோக்கம் எப்படி இருக்க வேண்டும் என்றால், அங்கே தொழில் படிப்பவர்கள் மேல் நிலைக்குப் போகும் அளவுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். முறைசாரா கல்வி என்பது மட்டுமல்லாமல், அஞ்சல் வழிக் கல்வி, ஓப்பன் முறை கல்வி என்றெல்லாம் சொல்லக்கூடிய நிலைமை வந்து, பள்ளிக்கு வெளியேகூட கல்வியைப் பெற முடியும் என்ற நிலைமை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. சமுதாயத்திலே பல விஷயங்களை, எண்ணங்களை பள்ளிகளிலேதான் போய் பெற முடியும் என்ற எண்ணம் மாறுவதற்கு இந்த முறைக் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும். பள்ளியிலேயே சொல்லிக் கொடுக்கும் அதே பாடத் திட்டங்களை வைத்து அதையே அஞ்சல் மூலம் சொல்லிக்கொடுத்தால் இந்த நோக்கம் நிறைவேறாது. அப்படிச் செய்தால், அப்புறம் சர்ட்டிபிகேட் வாங்கிவிட்டு அரசாங்க வேலை வேண்டும் என்று வந்து நிற்பார்கள். அதை விட்டுவிட்டு, அவர்களுக்கு என்னென்ன வழிகளிலே கல்வி தேவையோ அந்தந்த வழிகளிலே கல்வி கொடுக்க வேண்டும்.



பல்கலைக் கழக நிலையிலே இந்த மாதிரி கல்வி இருக்க முடியாது. பல்கலைக் கழகங்களிலே விஞ்ஞானப் பாடங்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மனிதனை மறந்துவிடுகிறார்கள். இந்தக் காலத்திலே 'சோஷியல் சயன்ஸ்' என்ற முறையிலே, விஞ்ஞான முறையிலே காரண காரியத்தைத் தெரிந்து அறிவு பூர்வமாகக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்திலே அமைதி விஞ்ஞானம்--'பீஸ் சயன்ஸ்' என்ற ஒரு பாடத்தை ஆரம்பித்து, அது இப்போது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. பல்கலைக் கழக மானியக் குழு அதற்கு ஆதரவு கொடுக்கிறது. ஆனால் இந்த அரசு அதற்கு என்ன ஆதரவு கொடுக்கிறது, உங்களுடைய அரசு அதை ஏற்றுக்கொண்டிருக்கிறதா என்று அவர்கள் கேட்கிறார்கள். நம்முடைய அரசு தயங்குகிறது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இந்தத் துறையையும் ஊக்குவிக்க சீக்கிரமாக முடிவு செய்தால், ஆறாவது திட்டத்திலே பல்கலைக் கழக மானியக் குழு இதை ஏற்றுக்கொள்ள உதவியாக இருக்கும்.

பல்கலைக் கழகங்களிலே என்.சி.சி. மற்றும் என்.எஸ்.எஸ். போன்ற பணிகள் நடந்து வருகின்றன. என்.சி.சி. மாணவர்கள் திறமை பெற்றவர்களாக இருக்கிறார்கள். அதன் மூலமாக ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவையெல்லாம் வருகின்றன. என்.எஸ்.எஸ். மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு எந்தவிதமான பயிற்சியும் கொடுக்கும் திட்டம் இல்லை. சாரணர் இயக்கத்திலே தொண்டு செய்ய வேண்டும் என்று சொன்னால், நீந்தத் தெரிந்துகொள்ளுதல், சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்ளுதல், டிராஃபிக் சிக்னல் போன்றவையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். அதுமாதிரி என்.எஸ்.எஸ். மாணவர்கள் முகாம்கள் அமைத்து பயிற்சி கொடுத்து, நல்ல திறமை பெற்றவர்களாக அவர்களை ஆக்கி, அக்கம் பக்கத்திலே உள்ளவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே நிலைமைகளை உருவாக்கினால், அவர்களும் பயனுடையவர்களாகத்தான் இருப்பார்கள். அப்படிச் செய்தால், நாட்டைப் பாதுகாக்க முடியும். என்.சி.சி. போல பயனுடையதாக அவர்கள் ஒழுங்காக நல்ல முறையிலே வேலை செய்யப் பழகுவார்கள் என்ற அடிப்படையிலே, சாரணர் இயக்கத்திற்கு என்று இருக்கும் கோட்பாடுகளைப் போலவே, இந்த என்.எஸ்.எஸ். இயக்கத்திலே இருப்பவர்களுக்கும் கோட்பாடுகளை வகுத்து பயிற்சி அளிக்க வேண்டும். மத்திய அரசின் ஊக்கத்தினாலும் இந்த என்.எஸ்.எஸ். நடக்கிறது. இந்த விஷயத்திலே நம்முடைய மாநிலம் முன்னணியிலே இருந்தாலும், இதை இன்னும் நவீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு எந்த வேலை செய்தாலும், ஆராய்ச்சிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். ஆராய்ச்சிக்காக ஒரு அரை சதவிதம் தொகை ஒதுக்க வேண்டும். இது மிகவும் தேவை என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். எந்தத் தொழில் செய்தாலும், அந்தத் தொழில் பற்றிய மேல் ஆராய்ச்சியிலே நாம் ஈடுபட வேண்டும். நம்முடைய மாநிலத்திலே இருக்கிற கல்வித் துறையைப் பொறுத்த வரையில், ஒரு பயிற்சிதான் அவர்கள் கொடுக்கிறார்கள். அவர்களே இதையும் செய்வதைவிட, இலட்சக்கணக்கான ஆசிரியர்களையும் இந்தப் பணியிலே ஈடு படுத்தலாம். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களைக்கூட இதிலே ஈடுபடச் செய்யலாம். பள்ளிப் பாடத் திட்டத்திலே மாறுதல் போன்றவைகளைக்கூட ஆராய்ச்சி மூலம் செய்யலாம்.

முதியோர் கல்விக்காக நாம் ஒதுக்கியிருக்கும் தொகை, மிகவும் குறைவு. இப்போது 45 சதவிதம் பேர்கள்தான் அறிவு பெற்றவர்கள் இருக்கிறார்கள். 55 சதவிதம் பேர் தற்குறிகளாக இருக்கிறார்கள். அவர்களை எவ்வளவு சிக்கிரமாக, விரைவாக அறிவுடையவர்களாக ஆக்குகிறோமோ, அவ்வளவு சிக்கிரம் நம்முடைய நாட்டின் வளர்ச்சிக்கு நாம் உதவ முடியும். முதியோர் கல்வியில் பஞ்சாயத்து நிறுவனங்களையும் ஈடுபடுத்த வேண்டும். மேலும், தனியார் நிறுவனங்களையும் ஈடுபடுத்திக்கொள்ளலாம். இதிலே மத்திய அரசினர் சற்று தயக்கம் காட்டுவதாகத் தெரிகிறது. நம்முடைய மாநிலத்திலேயும்கூட, தனியார்கள் உதவி செய்தால், அதன் மூலமாகப் பலன் கிடைக்கும் என்ற நிலைமை ஏற்பட்டால் அவர்களையும் ஈடுபடுத்திக்கொள்ளலாம். இந்தப் பணி முழுவதையும் அரசின் சார்பிலே செய்யலாம் என்று இந்தப் பொறுப்பை அரசுத் துறையிடம் ஒப்படைத்துச் செயல்படுத்தினால், 'ஓவர்ஹெட் எக்ஸ்பென்ஸ்' மிகவும் அதிகமாகும். ஆகவே, அதைப்பற்றி யோசித்து விரிவான ஆய்வை மேற்கொண்டு, முதியோர் கல்வியை எப்படிச் செயல்படுத்துவது என்பதைப் பற்றி அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாடகத்தின் மூலம் கூட நாம் எதிர்பார்க்கும் பலனை அடையமுடியும். நாடகத்திற்காக இப்போது 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது இந்த அரசு. பண்பாட்டின் மூலமாகத்தான் சமுதாய மாறுதலை ஏற்படுத்த முடியுமென்று சொல்கிறார்கள் அறிஞர்கள். 'மாஸ் மீடியா கம்யூனிக்கேஷன்' எல்லாம் இதற்கு உதவுகின்றன. இப்போது ஆங்காங்கே பல 'டிரமேட்டிக் கிளப்'கள் எல்லாம் இருக்கின்றன. மாவட்டங்களிலே இருக்கும் நாடக மன்றங்களுக்கு உதவி செய்து ஓய்வு நேரத்திலே இளைஞர்களுக்கு நடிக்கவும் கதை எழுதவும் பயிற்சி கொடுத்து ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி சமூக நாடகங்களை எழுதி நடிக்க வைத்து அதன் மூலமாக நல்ல கருத்துக்களை மக்களின் மனதிலே பதிய வைக்கலாம். இரவீந்திர நாத் தாகூர் அவர்களே கூட, கிராம மக்களிடையே அறிவைப் பரப்பும் ஒரு வழியாக இந்த முயற்சியை மேற்கொண்டு



கதைகளையும், வசனங்களையும் எழுத வைத்து, இளைஞர்களைப் பயன்படுத்தி அந்த நாடகங்களை நடிக்க வைத்து, அங்குள்ள மக்களைச் சிந்திக்க வைத்திருக்கிறோம். ஆகவே, வட்டாரம் தோறும் நாடக மன்றங்களை அமைத்து நாடகத்திற்கு ஊக்கம் கொடுத்து, அந்த நாடகத்திற்கு வேண்டிய வசனங்களை எழுதிக் கொடுத்து, நல்ல பல நாடகங்களை நடிக்க வைத்து, அதன் மூலம் சமுதாயக் கருத்துக்களைப் பரப்பினால், நம்முடைய நாட்டிலே நல்ல முறையிலே முதியோர் கல்வி வளரும். கல்வியைப் பொறுத்தவரையில், பள்ளிக்கூடங்களைப்பற்றி மட்டுமே சிந்தித்துக்கொண்டிருக்காமல், வேறுபல முறைகளைப்பற்றியும் யோசிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12—40)

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கை பற்றிய விவாதத்தில் பேசுவதற்கான வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்விக்காக ரூ. 291 கோடி ஒதுக்கீடு செய்ததோடு, சமூக வளர்ச்சிப் பணிகள், கட்டிடங்கள், நகராட்சி, மாநகராட்சிக் கட்டிடங்கள், கடன் உதவிகள், அலுவலர் கட்டிடங்கள் போன்றவற்றிற்குமாகச் சேர்த்து ரூ. 319 கோடி ஒதுக்கீடு செய்து 23 விழுக்காடாக உயர்ந்திருந்தாலும், கடந்த ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அது சற்று வீழ்ச்சியடைந்திருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் அதே சமயத்தில் ஆதி திராவிட மக்கள், பின்தங்கியவர்கள், பழங்குடி மக்கள் ஆகியோரது பள்ளிகள், விடுதிகள் அவர்களுக்கான உதவித் தொகைகள், சீர்திருத்தப்பள்ளிகள் ஆகிய இவற்றிற்காகவும், கால்நடைக் கல்வி, மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி ஆகியவற்றிற்காகச் செலவிடப்படும் தொகை இந்தக் குறிப்பிலே வரவில்லை என்பது சற்று மன நிறைவை அளிப்பதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் இன்றைய சூழ்நிலையில் கல்வியைப் பொறுத்த வரையில், இது ஒரு பொற்காலம் என்று தான் நாங்கள் கருதுகிறோம். தொடக்க நிலையிலிருந்து, நடுநிலையிலிருந்து, உயர்நிலையிலிருந்து, மேல்நிலைக் கல்வியிலிருந்து பல்கலைக் கழகம் வரை ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டு அதற்கான முறையில் சிந்தனைகள் வளர்ந்து வருகின்றன என்பதும், பல்கலைக் கழகச் சட்டங்களேகூட திருத்தப்பட வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது என்பதும், அப்படித் திருத்துவதன் மூலம் ஜனநாயகமுறை இங்கே செம்மைப்படுத்தப்படுகிறது என்பதும் "தமிழகத்தில் கல்வித்துறையில் ஒரு பொற்காலம் உருவாகித் தோன்றியிருக்கிறது" என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

சில நிமிடங்களுக்கு முன்னால் நான் இங்கே ஒரு கருத்தைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வேறுபட்ட ஒரு கருத்தையும் இங்கே குறிப்பிட்டார்கள். சில தினங்களுக்கு முன்னால் இதே மன்றத்தில் சில சங்கங்களைச் சார்ந்தவர்களை "ஜால்ராக்கள்" என்றும் "செல்லப் பிள்ளைகள்" என்றும் சொல்லுகிற அவல நிலையைப் பார்த்தோம். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களிடம் நான் ஒன்றைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் சார்ந்திருக்கிற சங்கம்கூட அரசு அங்கிகாரம் பெற்றிருக்கிறது. என்னுடைய தோழமைச் சங்கமான தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியும் அரசின் அங்கிகாரத்தைப் பெற்றிருக்கிறது. அரசாணை எண் 2512-படி 24—11—1981-ல் இந்த அங்கிகாரம் வழங்கப்பட்டது. ஒரு சங்கத்தின் விதிமுறைகள், கட்டுப்பாடுகள், சட்ட திட்டங்கள் ஆகியவை எவ்வாறு அமைந்திருக்கின்றனவோ அதன் அடிப்படையில் அதற்கு அங்கிகாரம் வழங்கப்படுவதும் மறுப்பதும் அரசாங்கத்தின் உரிமையாகும். அதைப்பற்றிய கருத்தை எந்த ஒரு உறுப்பினரும் வெளியிடலாம் என்பதை நான் மறுக்கவில்லை. அதைக் குறை கூறவுமில்லை. அதை நான் பொறுத்துக் கொள்ளத் தயார். ஆனால் எங்களைப் பார்த்து "ஜால்ராக்கள்" என்று சொல்லப்பட்டபோதும், "செல்லப் பிள்ளைகள்" என்று சொல்லப்பட்டபோதும், நாங்கள் அமைதியாக இங்கே அமர்ந்திருந்தோம். ஆனால் இனி இத்தகைய வாசகங்கள் இங்கே அவையில் சொல்லப்பட்டால், நாங்களும் இனி எழுந்து நாங்களும் எங்களுக்குத் தெரிந்த வாசகங்களைச் சொன்னால், இந்த மன்றத்திற்குக் கேடு விளைவிக்கிறீர்கள் என்று எங்களை யாரும் கருதக்கூடாது என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே தங்கள் மூலமாக நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கும் மேலாக, தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளர் திரு. ஈஸ்வரன் அவர்களும், இராமநாதபுர மாவட்டத்தின் கல்வி அதிகாரி அவர்களும் கூட்டுக் கொள்ளை அடிக்கிறார்கள் என்று இங்கே பேசப்பட்டது. ஒரு சங்கத்தைப்பற்றிப் பேசுகிறபோது முறையோடு பேச வேண்டும். அந்தச் சங்கத்தின் நாணயமிக்க, கண்ணியம் மிக்க, ஒழுக்கக் கட்டுப்பாடுடைய ஒரு தலைவரைப்பற்றி, இங்கே அப்படி பேசப்படுவதை இனி எங்களால் பொறுத்துக்கொள்ள முடியாது . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. ஆனால் அப்படிக் குறிப்பிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார்கள். அது அவைக் குறிப்பில் இருக்கிறது. அப்படி அவர் சொன்ன வாசகங்கள் அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.





திரு. பா. ரா. தாமஸ் : தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி என்றால், அதைப்பற்றி இந்த மாநிலத்தில் தெரியாதவர் யாருமில்லை. அது எவ்வளவு பெரிய இயக்கம்? அதன் பொதுச் செயலாளரான திரு. ஈஸ்வரன் அவர்கள் எத்தகையவர், எத்தகைய பண்பாடு உடையவர்? சிறந்த பண்பாடு உடையதோடு, மிகுந்த நாணயம் மிக்கவர். அவரைப்பற்றி இந்த அவையில் கூட்டுக் கொள்ளை அடித்தார் என்று சொன்னதும், அதைச் சில பத்திரிகைகள் பிரசுரித்ததும், அந்த வாசகங்களை எல்லாம் எடுத்துப் போட்டு அதைத் தனியாக அச்சிட்டு என்னுடைய தொகுதியில் வழங்கப்பட்டதும் எப்படி முறையாகும் என்றுதான் நான் கேட்கிறேன் . . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இல்லாத ஒருவரைப்பற்றி இங்கே பேசக் கூடாது என்று சொன்ன அதே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம் மட்டும் இங்கே பேசிக்கொண்டிருப்பது எப்படி நியாயமாகும், அதற்கு மட்டும் அவர் மனம் எப்படி இடம் தருகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இல்லாதவரைப்பற்றி குறிப்பிட்ட காரணத்தால்தான் இங்கே சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வாறு பேச வேண்டிய நிலைக்கு நான் வந்ததற்காக உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். பெருமை மிக்க இந்த மன்றத்தில் ஆசிரியர்களின் பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டு, எங்களை நம்பி இருக்கிற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய இடத்தில் இருந்துகொண்டு அதைச் செய்யாமல் போட்டிக்காக சங்கங்களைச் சாடிக் கொண்டு அதன் பொறுப்பாளர்களைப் பற்றிப் பழி சொல்லிக்கொண்டு புழுதி வாரி, மண் வாரி வீசிக் கொண்டிருப்பது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சில குறைபாடுகள் அல்லது தவறுகள் செய்யப்படும்போது, அதற்குக் காரணமாக சில நபர்கள் அல்லது சில அமைப்புகள் இருக்குமானால், அதைப்பற்றி இந்த அவையில் கூறக்கூடாது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற வாதமா? மாண்புமிகு உறுப்பினர் ஒருவரைப்பற்றி உயர்ந்த கருத்தை வைத்திருப்பதைப்பற்றி யாரும் ஆட்சேபிக்கவில்லை. அப்படிப்பட்ட எண்ணத்தை வைத்துக்கொண்டிருப்பது அவருடைய உரிமை. ஆனால் ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக அவர் செய்கிற தவறுகள், அவரோடு கல்வி அதிகாரிகள் சேர்ந்து செய்கிற தவறுகள் ஆகியவற்றை இங்கே குறிப்பிடக் கூடாது

என்று அவர் சொல்லுகிறாரா? கேவலமான செயல் நடைபெறும்போது, நடந்த செயலையும் அதற்குப் பொறுப்பானவரையும் குறிப்பிடக்கூடாதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக சட்டமன்றப் பேரவையாக இருந்தாலும் சரி, மேலவையாக இருந்தாலும் சரி, ஒரு உறுப்பினர் தான் அப்படிப் பேசவில்லை என்று சொல்லிவிட்டால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அவையின் மரபாக இருந்து வருகிறது. அந்த அடிப்படையில் அவர் பேசவில்லை என்று சொன்னதை ஏற்றுக்கொண்டு, இதை இந்த அளவோடு விட்டுவிட்டு வேறு விஷயத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போவார் என்று நம்புகிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் அறிவுரை வழங்குகிறார்கள். அதை நன்றியோடு ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியைச் சார்ந்தவர் அவர். முகவை மாவட்டத்தில் நான் சென்றிருந்த போது, அங்கே இருந்த பலரும் என்னைப் பார்த்துக் கேட்டார்கள். "இந்த மாமன்றத்தில்தானே நீங்கள் அப்போது இருந்தீர்கள், என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? பிறர் எங்களைப்பற்றி அவதூறாகப் பேசும்போது நீங்கள் ஏன் எழுந்து தடுக்கவில்லை?" என்று கேட்டார்கள். நான் அப்போதே சொன்னேன். இந்த மன்றத்தில் ஏற்கெனவே ஒரு நல்ல பெயர் எங்களுக்கு இருக்கிறது. இந்த அவையை ஆசிரியர்களே ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள் என்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அன்றையதினம் நான் இராமநாதபுரம் மாவட்டக் கல்வி அதிகாரியைப்பற்றிப் பேசுகிறபோது, ஒரு ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேசினேன். இதை நான் சொல்லவில்லை. அங்கே இருக்கிற இளைஞர் நல மன்றம், முஸ்லிம் சங்கம், அகமுடையார் சங்கம், இன்னொரு சங்கம்—பெயர் எனக்கு நினைவில் இல்லை—ஆகியோர் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு ஒரு புகார் அனுப்பி அதன் நகலை எனக்கும் அனுப்பியிருக்கிறார்கள், அதன்மீது கல்வி அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்றுதான் கேட்டேன்.

திரு. பா. ரா. தாமஸ் : அரசாங்கத்தின் கடமை அதன்மீது விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம். நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் நேர்மையானவர்கள். நிச்சயமாக தவறு இருந்தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பார்கள். தவறு இருந்தால், நடவடிக்கை எடுக்கட்டும் என்றுதான் நானும்



சொல்கிறேன். ஆனால் அந்தப் பொதுச் செயலாளர் எப்படிப்பட்டவர் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தியாவின் சார்பில் பொதுச் செயலாளர் திரு. ஈஸ்வரன் அவர்கள் தாய்லாந்துக்குச் சென்றிருந்தார். அவர் என்னுடைய பகுதியைச் சார்ந்தவர். என்னுடைய தொகுதியைச் சார்ந்தவர். தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளர் என்றால், அது கண்டிப்பாகத் திரு. ஈஸ்வரன் அவர்களைத்தான் குறிக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் வார்த்தைக்கு நான் மதிப்புக் கொடுக்கிறேன். தயவுசெய்து இனி இம்மன்றத்தில் நாம் இப்படிப் பேசுவோமானால்—இதுவரை நாங்கள் அப்படிப் பேசவில்லை—மீண்டுமொரு முறை அப்படிப் பேசினால் பிரச்சினைகளை விட்டுவிட்டு, மன்றத்தின் நேரத்தை வீணாக்கிக் கொண்டு ஒருவரை ஒருவர் சாடுவதற்குத்தான் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறோம் என்றுதான் பொருள்படும். இப்படிப்பட்ட முறைகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். நாங்கள் இவ்வாறு பேசினாலும், நீங்கள் கண்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் எங்களைச் சார்ந்த அல்லது எங்களின் தோழமை சங்கங்களைச் சார்ந்தவர்களை இவ்வாறு இழிவுபடுத்தினால், நாங்களும் அந்த நிலைமைக்குத்தான் உள்ளாவோம். அதன் மூலம் நாம் அனைவரும் இந்த மாமன்றத்திற்குக் கெட்ட பெயரைத்தான் ஏற்படுத்துவோம் என்பதை மட்டும் சொல்லி இதை இந்த அளவோடு விட்டுவிடுகிறேன் என்று சொல்லி அமர்ந்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒருவர் சங்கத்தில் இருக்கிறார் என்பதற்காகவே அவரைப்பற்றிக் குறிப்பிடக் கூடாது என்றால் . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சங்கங்கள் இருக்கலாம், சங்கடங்கள்தான் இருக்கக்கூடாது என்கிறோம்.

திரு. செ. முத்துசாமி : ஒரு விளக்கத்தை மட்டும் நான் கேட்க விரும்புகிறேன். எல்லா சங்கத்திலும் பொறுப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எந்தத் தவறு செய்தாலும், இங்கே பேசக்கூடாது என்று உறுப்பினர் அவர்கள் சொல்ல முன்வருகிறாரா?

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரம் குறைகிற காரணத்தால், அதை உரிய அளவுக்கு நீட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தவறு என்பது எங்கே நடந்தாலும் சரி, எந்த அமைப்பில் நடந்தாலும் சரி, அதற்கு எந்த நபர் காரணமாக இருந்தாலும் சரி, அவருடைய பெயரைக் குறிப்பிடாமல் அவர் செய்கிற அல்லது அந்த அமைப்பு செய்கிற தவறுகளைச் சுட்டிக்காட்டுவதுதான் நமது கடமையாகும். ஆசிரியர் சமுதாயமே ஒருவரின் நடவடிக்கையால் பாதிக்கப்படும்போது, அதைக் கேட்கக்கூடாது என்று சொல்வது எப்படி நியாயமாகும்? அப்படிக் கேட்டால் தாங்கள் எங்கள் சங்கத்தின் சார்பாக எழுவோம் என்று எச்சரிக்கை விடுவது எந்த வகையில் நியாயம் என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன். தவறுகள் எங்கே நடைபெற்றாலும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் நாங்கள் இருக்கிறோம். எங்களைப் பார்த்து இப்படி எச்சரிக்கிற வகையில் கருத்தைச் சொல்வது சரியா?

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தங்களின் பாதுகாப்பைத்தான் நாடுகிறேன். ஒரு சங்கத்தைப் பற்றித் தாக்குகிறபோது, அதன் பொறுப்பாளர்களைப்பற்றித் தாக்கிப் பேசும்போது, அவர் இங்கே இல்லாத சூழ்நிலையில் அவர் தன்னைக் குற்றமற்றவர் என்று சொல்லி நிரூபித்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கும்போது, அப்படிப்பட்ட நிலையில் அனைவரும் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பது நியாயம்தானா என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் பேசும்போது, யாரையும் எச்சரிக்கவில்லை. ஏதாவது தவறு இருக்குமானால், அவர்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்றுதான் சொன்னாரே ஒழிய, குற்றச்சாட்டையே சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை. இனி திரு. தாமஸ் அவர்கள் தொடர்ந்து பேசுவார்.

திரு. செ. முத்துசாமி : சங்கத்தில் தவறு செய்தால் பேசக்கூடாது, அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரக்கூடாது என்றால், என்ன நியாயம் என்றுதான் கேட்கிறேன்.

(பிற்பகல் 12-50)

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்-பிரதிநிதிகளாகிய தாங்கள் எங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை ஏருக்காவிட்டால், எங்களுக்குள் மோதக்கூடிய அவல நிலை ஏற்பட்டுவிடக் கூடிய நிலை இருப்பதற்காக என்னுடைய வேதனையைத் தெரிவித்துக்கொள் கிறேன். தலைமைப் பொறுப்பில் உள்ள தாங்கள்தான் . . . .





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள்" என்று பேசுகிறபோதே தவறு வருவதைப் போல உணர்கிறேன். ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கலாம். எம்.எல்.சி. யாக வருவது என்பது தமிழகத்தினுடைய நல்லது, கெட்டதுகளைப்பற்றிப் பேச. தமிழகத்திற்குப் பாடுபடுவதற்காகத்தானே தவிர, ஆசிரியர்கள் நலனுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆசிரியர்கள் பிரதிநிதிகள் என்பதல்ல. அந்தத் தொகுதியில் யார் வேண்டுமானாலும் நிற்க லாம், ஆசிரியர்கள் மட்டும்தான் நிற்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. தயவு செய்து இந்த நிலையை உணர்ந்து கொண்டாலே, இந்த விவாதங்களில் முன் னேற்றத்தைக் காண முடியும் என்று கருதுகிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1—6—1981 அன்று ஊராட்சி ஒன்றிய ஆசிரியப் பெருமக்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறார்கள். எந்த நோக்கத்திற்காக அந்தப் பள்ளி கள் அரசால் எடுக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த நோக்கம் முழுமையாக நிறை வேற வேண்டுமானால், சில விதிமுறைகள், சட்டதிட்டங்கள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கல்வி உதவியாளர் இருக் கிறார். அவரை வைத்துக்கொண்டு கல்விக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே உள்ள அந்தப் பள்ளியின் கல்வி நிலை, மாண வர்களின் எண்ணிக்கை, அங்குள்ள சுகாதாரம், மாணவர்கள் டிராப் அவுட் இருக்கிறதா என்பதையெல்லாம் பார்த்து சீர்திருத்தம் செய்து தாம் உயர வேண்டுமென்றால், கல்விக் குழு என்ற அளவிலே ஒரு உதவி கல்வி அலுவலரை அமைக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏ.ஈ.ஓ., டெபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் ஆகியவர்களைப் பொறுத்தவரையில், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ரொட்டேஷன் முறையில் மாற்றப்பட்டு புதியவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்.

மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டமும், 100 கோடி ரூபாய் திட்டமும் இணைந்து செயல்படும் என்று சொன்னார்கள். இதிலே மூன்று இணைந் திருப்பதை நான் பார்க்கிறேன். இரண்டு வயது முதல் ஐந்து வயது வரை உள்ள பால்வாடி, நர்சரிப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளி ஆகிய மூன்றும், ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டிய நிலை இருக்கிறது. பால்வாடி சமூக நலத் துறையில் இருக்கிறது. பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத் தோடு இதை இணைக்கப் போகிறார்களா என்று தெரியவில்லை. நர்சரி பள்ளி நிர்வாகம் யார் கையில் இருக்கப் போகிறது? பால்வாடி ஆசிரியர் களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கப் போகிறோமா என்பது தெரிய

வில்லை. அல்லது வேலையில்லாமல் இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான இடைநிலை ஆசிரியர்களிடம் கொடுக்கப் போகிறோமா என்பதைச் சிந்தித்து நல்ல முடிவுக்கு வர வேண்டுமென்ற கருத்தை நான் கூறிக்கொள்கிறேன்.

தனியார் நடத்தும் பால்வாடி நிறுவனங்களை சமூக நலத் துறையிலிருந்து கல்வித் துறைக்கு மாற்றப் போவதாக அமைச்சர் அவர்களின் அறிக்கையைப் பார்த்தேன். ஆதி திராவிடர் பள்ளிகளும் கல்வித் துறைக்கு வரப் போகிறது. ஒட்டுமொத்தமாக கல்வித் துறையிலே அனைத்து நிர்வாகங்களையும் வகிக்கக் கூடிய நிலையில் விதிமுறைகளை மாற்றி அரசாணை வெளியிடும்போது, பதவி உயர்வுகளைப் பற்றிய உரிமையையும் வழங்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏ.ஈ.ஓ. பதவிக்கான காலியிடங்களை நிரப்ப ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு சீனியாரிட்டி லிஸ்டைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். 1—6—1981-க்கு முன்பு போட்ட லிஸ்ட்-படி இன்று நியமிப்பதில்லை. மாவட்டக் கல்வி அலுவலர் பதவிக்கு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் ஒரு முன்னுரிமைப் பட்டியலை வழங்கியிருக்கிறார்கள். இந்த இரண்டு பட்டியலையும் வைத்திருக்கிறார்கள். தகுதி, அனுபவம், காலம் இவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு நியமிக்கலாம் என்று கல்வித் துறையில் திட்டவட்டமாக ஓர் ஆணையை வெளியிட்டிருக்கிறார்கள். இதனால் ஒருவர் மேல் பழியைச் சுமத்தக்கூடிய அவல நிலை உருவாகி விட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் தயாரித்த லிஸ்டில் உள்ள ஆசிரியர்களை, 1970 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுத்து 1982 ஆம் ஆண்டில் பணியில் சேர்க்கும்போது, தேர்வில் வெற்றி பெற்றவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். 1971 ஆம் ஆண்டு தேர்வில் வெற்றி பெறாதவர்கள் பணியில் அமர்த்தப் படாமல் இருப்பார்கள். இதனால் அவர்கள் இவர்களையும், இவர்கள் அவர்களையும் குறை சொல்லும் அவல நிலை இருக்கிறது. ஆகவே திட்டவட்டமாக ஆணை ஒன்று வழங்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்தை அடிப்படையாக வைத்து, அதிலே 'மெரிட் அண்டு எபிலிட்டி' என்று சேர்த்துக் கொண்டால், பல முரண்பாடுகள் வருகின்றன. முன்புள்ள மாவட்ட ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுத்த ஆசிரியர்களுக்கும் சமமான வாய்ப்பு உருவாக்கக் கூடிய வகையிலே பணி விதியை அமைக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறேன்.

மாநிலத்தில் பல பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள் பணியிடங்களும், 300 பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களும், 50 உதவித் தலைமையாசிரியர்கள் பணியிடங்களும், 500 தமிழாசிரியர்கள் பணியிடங்களும் அறிவிக்கப்பட்டிருப்பதை



நான் வரவேற்கிறேன். பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பெருத்த அநீதி ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பட்டதாரி ஆசிரியர்கள் ஆங்கிலம், கணிதம், அறிவியல், சரித்திரம், பூகோளம் ஆகிய நான்கு பாடங்களை போதித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழாசிரியர்களை நான் வணங்குகிறேன். குறை சொல்லவில்லை. அவர்களை வரவேற்கிறேன், வரவேற்கிறேன், வரவேற்கிறேன். ஆனால் பட்டதாரி ஆசிரியர்கள் மூன்று பாடங்களையும், ஆங்கிலத்தையும் போதிக்கும்போது, அவர்களுக்கு ஏன் முன்னுரிமை கொடுக்கக் கூடாது? இப்போது மாநிலத்தில் கல்வி அதிகமாக இருக்கிறது. 'டிராப் அவுட்' குறைந்துவிட்டது. மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அதிகமான பள்ளிகள் உள்ளன. இந்த நிலையில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பணியிடங்கள் அதிகரிக்க வேண்டும்.

நாற்றங்கால் பள்ளிகளைப் பொறுத்த வரையில், 4,430 பள்ளிகள் இருக்கின்றன. ஒரு கோடி ரூபாயை வைத்து இவைகளை நிர்வகிக்க முடியாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி சொன்னார். நாற்றங்கால் பள்ளிகளை யார் நிர்வகிப்பது? சமூகநலத் துறையில் இருக்கப் போகிறதா, அல்லது கல்வித் துறையிலே வரப்போகிறதா என்பது பற்றி திட்டவட்டமான அறிக்கை இல்லை. இதற்காக ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

உயர் நிலைப் பள்ளிகளில் பணியிடங்களை நிரப்புவதில் என் பிளஸ் 1 என்று வைத்திருக்கிறோம். அதாவது நெம்பர் ஆஃப் செக்‌ஷன்ஸ் பிளஸ் ஹெட்மாஸ்டர் என்று வைத்திருக்கிறோம். அதனால் கல்வி பெரிதும் பாதிக்கப் படுகிறது. கணிதம், அறிவியல், சரித்திரம் ஆகிய ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு பட்டதாரி ஆசிரியர் என்றும் ஆங்கிலத்திற்கு என்று தனியாக ஆசிரியர் என்றும், தமிழுக்கு என்று தனியாக ஆசிரியர் என்றும் இருந்தால்தான், உயர் நிலைப் பள்ளியில் மாணவர்களின் தரம் உயரும் என்ற கருத்தை வலியுறுத்துகிறேன்.

எட்டாவது வகுப்பைப் பொறுத்த வரையில், இடைநிலை ஆசிரியர்கள் பி.டி. பட்டம் பெற்று பல ஆண்டுக் காலமாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் கணிதம், சரித்திரம், ஆங்கிலம் படித்தால்தான், தரம் உயரும் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த முறையில் 1969-லிருந்து இளநிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர் தகுதியைப் பெற்றிருந்தால், உடனடியாக இடைநிலை ஆசிரியரின் ஊதியத்தைப் பெற ஏன் வாய்ப்பு கொடுக்கக் கூடாது? அதை உடனடியாக வழங்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறேன்.

மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், இந்த ஆண்டு மேலும் திறக்கப் போகிறோமா இல்லையா என்பது தெரியவில்லை. வருகிற ஆண்டில் மேல் நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்காவிட்டால், அநேக பள்ளிகளில் சரியாக மாணவர்கள் இல்லாத நிலை இருக்கும். ஏற்கெனவே உயர்நிலை வகுப்புகளை நாடி வராத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தேவையான மேல் நிலைப் பள்ளிகளைத் திறக்க அனுமதி வழங்க வேண்டும்.

750 மாணவர்கள் இருந்தால், ஒரு உதவித் தலைமையாசிரியரைக் கொடுக்கிறோம். ஷிப்ட் முறையில் இருந்தால், இரண்டு பேரைக் கொடுக்கிறோம். ஆயிரம் மாணவர்கள் இருந்தாலும், அந்தப் பள்ளியில் ஷிப்ட் முறை இல்லாவிட்டால், அவர்களுக்குத் தண்டனையாக, ஒரே ஒரு தலைமையாசிரியரைக் கொடுக்கிறோம். ஷிப்ட் முறை இருக்கிறதோ இல்லையோ, 750 பேர் என்ற எண்ணிக்கையை வைத்து தலைமையாசிரியர் பதவியைத் தர வேண்டும்.

மேல்நிலைப் பள்ளிகளில் விளக்குநர்கள் இல்லை. ஒரு வகுப்பில் குறைந்தது 30 மாணவர்கள் இல்லாவிட்டால், ஆசிரியர்கள் மாற்றப்படக் கூடிய நிலை இருக்கிறது. 30 மாணவர்களுக்குக் குறைவாக இருந்தால், இரண்டு வகுப்புகளை இணைத்து ஒருவரையே பார்க்கச் சொல்லி மற்ற ஆசிரியரை வெளியே மாற்றக் கூடிய நிலை இருக்கிறது. இதனால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 30 மாணவர்கள் இல்லாமல் 20 மாணவர்கள் ஒரு வகுப்பில் இருந்தாலே அவர்களை அனுமதிக்கலாம், அவர்களை மாற்றத் தேவையில்லை என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆய்வுக் கூடங்களைப் பொறுத்த வரையில், "யானை வாங்கி வளர்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டு யானையை வாங்கிய பிறகு அங்குசம் இல்லை என்பதைப் போல இருக்கிறது. மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் கூடங்கள், ஆய்வுக் கூடங்கள் உருவாகியிருக்கின்றன. அங்கே சிறப்பான முறையில் சோதனைகள் நடைபெறுகின்றன. மாணவர்கள் ஆய்வுக் கூடங்களில் உற்சாகமாகப் பணியாற்றுகிறார்கள். நல்ல ஆராய்ச்சி செய்கிறார்கள். ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு உதவியாளர் தேவை. ஆனால் ஒரே ஒரு அட்டண்டர்தான் இருக்கிறார். ஆகவே ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியாக அட்டண்டர் இல்லாவிட்டால், யானை வாங்க வேண்டுமென்று ஆசைப்பட்டு வாங்கி வளர்த்துக் கொண்டு அங்குசம் இல்லாமல் இருக்கிறோம் என்பதைப் போலத்தான் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

சிறப்புக் கட்டணத்தைப் பொறுத்த அளவிலே, ரசாயன பாடத்திற்கு மாணவர்களுக்கு ரூபாய் 10 என்று இருக்கிறது. அதை ரூபாய் 30 என்று ஆக்க வேண்டும். அதற்கு மேல் நிலைப் பள்ளியிலே விதி இருக்கிறது.





ரசாயனம், கெமிஸ்ட்ரி பாடத்தைப் பொறுத்த அளவிலே, மாணவர்கள் ஒழுங்காக, முறையாக, முழுமையாக ஆராய்ச்சி செய்து படிக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் ரூபாய் 30 பெற வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அந்த அளவை உயர்த்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொழி ஆசிரியர்கள், மற்ற ஆசிரியர்கள் எல்லாம் 24 பாட வேளைகள் எடுக்க வேண்டும் என்று இருக்கிறது. 18 பாட வேளை போதும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். இன்றைக்கு டெக்னிக்கல் எஜுகேஷனில் அவர் ஆட்சியின் கீழ் 14 டெக்னிக்கல் மேல்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பள்ளியிலே தமிழாசிரியர் ஒருவருக்குத்தான் முதுகலைப் பட்டம் பெற்றிருந்தால், ரூபாய் 675 என்று கொடுக்கிறார்கள். எம்.எஸ்சி.பி.எட். அறிவியல் துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மற்ற துறைகளிலே பின்பற்றுகின்றபடி, ரூபாய் 675 அடிப்படை ஊதியம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கும் இந்த அடிப்படை ஊதியத்தை அதிகரித்து வழங்கவேண்டும். தொழில் பிரிவினைப் பொறுத்த வரையில், நல்ல வளர்ச்சி இருந்தாலும்கூட, மாணவர்கள் வெளியிலே வந்து தொழில் தொடங்கக்கூடிய அளவுக்கு ஊக்கம், நிதி ஆதாரங்கள், வாய்ப்பு வசதிகள் எல்லாம் செய்து தரவேண்டும். அந்த நிலைமைகளை உருவாக்க வேண்டும். இங்கே சங்கங்களைப்பற்றி பல துறைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக திரு. குழந்தைசாமி தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற, மேல்நிலைப் பள்ளி, பாலிடெக்னிக் பள்ளி இவைகள் தொடர்பான கல்விக் குழுக்களிலே தங்கள் கருத்துக்களைச் சொல்ல இடம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் பிரிவைச் சேர்ந்தவர்கள் அடிப்படை ஊதியம் ரூபாய் 525 என்று வாங்குகிறார்கள். ஆனால் தேர்வு நிலை ஊதியம் என்று வரும்போது, 600 ரூபாய் என்று இருக்கிறது. பிற துறைகளைப் பொறுத்து ரூபாய் 525 அடிப்படைச் சம்பளம் என்று வாங்கியவர்கள், அலுவலர்கள் எல்லாம் அடிப்படைச் சம்பளம் ரூபாய் 675 என்று வாங்குகிறார்கள். இவர்கள் எல்லாம் ஆசிரியர்களாக இருப்பதால், இந்த நிலைபோல் இருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக சிறப்பு ஊதியம் என்பதைச் சமமாகத்தான் கொடுக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

ஸ்கௌட்டிங், என்.எஸ்.எஸ். பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதைச் செயல்படுத்துவதன் மூலம் 20 ஆயிரம் பேர்கள் பயன் அடைவார்கள். ஒவ்வொருவரும் 120 மணி நேரம் பணியாற்றப்போகிறார்கள். நாட்டிலே உள்ள

மாணவர்களுடைய உழைப்பினை, திறமையை நாம் பயன்படுத்தப் போகிறோம். இது ஒரு அரசினுடைய நல்ல திட்டமாக இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே வேளாண்மைத் துறையிலே, உள்ளாட்சித் துறையிலே, கல்வித் துறையிலே, அறநிலையத் துறையிலே எல்லாம் பயன்படுத்த வேண்டும். இத்தனை துறைகளையும் இணைத்து ஒரு உயர் மட்டக் குழுகூட உருவாக்கலாம். கல்விச் செயலர் அவர்களை வைத்துக் கொண்டு, இதிலே என்ன செய்யலாம், அவர்களையெல்லாம் வைத்து என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்று பார்க்க வேண்டும். ஆலயங்களைப் பாதுகாப்பது, ஆலயங்களைச் சுகாதாரமாக வைத்துக்கொள்வது என்று வைத்துக்கொள்ளலாம். இப்படி பல துறைகளிலும் அவர்கள் செயல்பட வேண்டும். இணைத்துச் செயல்படவேண்டும். இப்போது காவல் துறையினர் இவர்களைப் பயன்படுத்துகிறார்கள். உயர்மட்டக் குழு ஏற்படுத்தி, எந்தெந்தத் துறையிலே எந்தெந்த முறையிலே இந்தத் திட்டத்தினைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள் போராட்டத்தைத் தொடங்க இருக்கிறார்கள். 'No work, no pay' அதை நாங்கள் வரவேற்கிறோம். நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால் அதில் நான் ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

No work, no pay. No termination, no non-payment. We want direct payment. because we are suffering a lot.
எந்த அளவுக்கு தனியார் பள்ளி ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பல முறைகள் நாம் முயன்றும்கூட நிர்வாகிகள் சட்டத்தின் சந்துபொந்துகளில் நுழைந்துகொண்டிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உள்ளதைப்பற்றி நமது மாண்புமிகு அங்கத்தினர் செல்வி லீலாவதி அவர்கள் சொன்னார்கள். மற்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். கடந்த 50 ஆண்டுகளாக நடைபெறாதவைகள் எல்லாம் நடந்திருக்கின்றன. 14 பேர்கள் வெளியிலே இருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் நமது மாண்புமிகு அங்கத்தினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேச இருக்கிறார்கள். அதைப்பற்றி நான் அதிகமாகப் பேசப்போவதில்லை. சட்டத் திருத்தம் செய்யப்போகிறார்கள் என்று அவர்கள் அங்கே காத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். அங்கே அவர்களே ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு, தவறான நிலைமைகளை உருவாக்கி, அங்கேயிருக்கின்ற போக்கினைக் கெடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்கி வருகிறார்கள். அதையெல்லாம் தடுக்க வேண்டும். ஆசிரியர்கள் மத்தியிலே ஒரு





நம்பிக்கையை உருவாக்கும் அளவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வெளியிலே இருக்கின்ற ஆசிரியர்களை பணியிலே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த அளவிலே, இப்படிப்பட்ட நிலை உருவாயிருக்கிறது. பல்கலைக் கழகங்களை ஜனநாயகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் நான்கு அகவிலைப் படிகளை அறிவித்திருக்கிறது. அகவிலைப் படியை உயர்த்த வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கேட்டால், கேலி செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆக இந்த நான்கு அகவிலைப் படியை மத்திய அரசு வழங்கியதும் நமக்கு அளிப்பதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் வருகின்ற ஏப்ரல் 1 ஆம் தேதி வாங்குகின்ற சம்பளத்தோடு இணைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பட்டதாரி ஆசிரியர்கள் சில குறைகளை வைத்திருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஏப்ரல் 1 ஆம் தேதி என்று குறிப்பிட்டார்கள். அதற்கு ஏதாவது முக்கியமான காரணம் உண்டா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : ஏப்ரல் 1 ஆம் தேதி வாங்குகின்ற ஊதியத்திலேயே பெற வேண்டும் என்று சொல்கிறேன். அதை ஏப்ரல் ஃபூல் ஆக்க வேண்டுமென்று சொல்லவில்லை. பட்டதாரி ஆசிரியர்கள் ஏழு அம்சக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதை நான் வலியுறுத்தத் தேவையில்லை, அது ஏற்கெனவே எல்லோருக்கும் தெரியும். இன்டக்டட் ஆசிரியர்கள் பிரச்சினைகள் தீரவேண்டும். எம்.ஏ., பி.டி., எம். எட். ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்க வேண்டும். பி.டி. பயிற்சிக்கு ஒரு ஊக்க ஊதியம் வழங்க வேண்டும். பணிப் பாதுகாப்பு சிரமைப்பு செய்வதற்கு ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். காரைக்குடியில் எஸ்.ஈ.ஆர்.டி. சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் நான்கூட பங்கு கொண்டேன். பூர்வாங்கமான முறையில் ஒரு ஆசிரியரைப் பணிநீக்கம் செய்யலாம் என்று அறிந்தாலொழிய, பணி நீக்கம் செய்யக்கூடாது என்று இருக்க வேண்டும். சஸ்பெண்ட் செய்வது என்பது ஒரு மாதத்திற்கு மேல் நீடிக்கக் கூடாது என்று இருக்க வேண்டும். தற்காலிகப் பணி நீக்கம் எனறாலும், ஒரு மாதம் தான் இருக்க வேண்டும். ஊதியம் நேரடியாக வழங்க வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக வேண்டிக் கொள்கிறேன். 'No work, no pay' என்று சொல்வதை நான் வரவேற்கிறேன். போராட்டம் செய்வதற்காக நாங்கள் துடித்துக்கொண்டிருக்கவில்லை.

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 மார்ச் 19

போராட்டம் செய்யவேண்டியவற்றிற்குத்தான் போராடிக்கொண்டிருக்கிறார்கள். சங்கத்தினுடைய நியாயமான, நேர்மையான கோரிக்கைகளை அறிந்து, அதற்கேற்ற ஆணைகளை அரசு பிறப்பிக்க வேண்டும். வருகின்ற 22 ஆம் தேதிக்குள் செய்துவிட வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். தொழில் கல்வியைப் பொறுத்தவரையிலே ஒரே ஒரு குறிப்பைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். 1978-79 லே மேல் நிலைப் பள்ளி ஆரம்பித்த பிறகு சட்டாம்பிள்ளை என்று ஒருவரை நியமித்து, அவர்களுக்கு மாதம் 20 ரூபாய் கொடுத்தோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக அவ்வாறு கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. சிறப்புக் கட்டணத்தை வழங்கவில்லை. அதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கம் செய்து அதிலிருந்து நிதி ஒதுக்க அனுமதித்தது. மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கள் அனுமதிபெற்று, அந்த மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அப்படி வாங்கமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. அதற்கு அரசு ஆணையிட வேண்டும். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த அளவிலே, அவர்களுக்கு மருத்துவ வசதி, சலுகைகள், மதிய உணவுத் திட்டம் உயர்த்துவது, தலைமை ஆசிரியர்கள் பணிக்கு ஏற்ற ஊதியம், படி கொடுப்பது, ஓய்வு பெற்றால் ரூபாய் 10,000, தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கான கல்விச் செலவுகளை ஏற்க திட்டங்களை நிறைவேற்றுவது இவைகளையெல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. மீண்டும் அவை நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-08)

### 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

123. Notification issued with G.O. Ps. No. 1249, Commercial Taxes and Religious Endowments, dated the 9th November 1981 regarding reduction in the rate of sales tax from 5 per cent to 2-1/2 per cent on tea sold at auction centres of Coimbatore and Coonoor. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].



1982 மார்ச் 19]

124. Notification issued with G.O. Ps. No. 1340, Commercial Taxes and Religious Endowments, dated the 10th December 1981 regarding exemption from levy of sales tax on the sale of fresh milk, recombined milk and milk drink for being sold as a beverage. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

125. Notification issued with G.O. P. No. 1288, Commercial Taxes and Religious Endowments, dated the 20th November 1981 regarding exemption from levy of sales tax on the sale of goods manufactured by inmates of Sri Sarada Sevashramam, Pallathur. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

126. Notification issued with G.O. Ps. No. 1176, Commercial Taxes and Religious Endowments, dated the 20th October 1981 regarding reduction in the rate of tax for automobile spare parts. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).].

127. Notification issued with G.O. Ps. No. 1219, Commercial Taxes and Religious Endowments, dated the 31st October 1981 regarding exemption from levy of sales tax on the sale of Zari by Tamil Nadu Zari Limited, Kancheepuram. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

128. Notification issued with G.O. Ps. No. 1273, Commercial Taxes and Religious Endowments, dated the 16th November 1981 regarding exemption from levy of sales tax on renewable energy equipments and devices and systems designed to use solar, biomass and wind energy. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

129. Notification issued with G.O. Ps. No. 1406, Commercial Taxes and Religious Endowments, dated the 24th December 1981 regarding exemption from levy of sales tax on sale of spectacle. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

130. Notification issued with G.O. Ms. No. 1417, Housing and Urban Development, dated the 27th October 1980 regarding approval of the Detailed Development Plan for Killiyur area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

131. Notification issued with G.O. Ms. No. 2742, Home (Tr.1), dated the 19th November 1981 regarding exemption from payment of tax for the vehicles which are not using the public roads. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

132. Notification issued with G.O. Ms. No. 2743, Home (Tr.1), dated the 19th November 1981 regarding concessional rate of tax to vehicle TMZ 4573 belonging to the Indian Council of Medical Research, Madras [Laid on the table of the House, under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

133. Notification issued with G.O. Ms. No. 1212, Industries, dated the 27th August 1981 regarding an amendment to the Tamil Nadu Small Scale and Cottage Industries Loan and Subsidy Rules, 1956. [Laid on the table of the House under section 19 (d) of the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Tamil Nadu Act V of 1923)].

134. Notification issued with G.O. Ms. No. 196, Prohibition and Excise, dated the 21st August 1981 regarding certain amendments to the Tamil Nadu Indian—made Foreign Spirits (Supply by whole sale) Rules, 1981. [Land on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act 1937 (Tamil Nadu Act X of 1937)].

*B. Reports, Notifications and Other Papers.*

*56. Policy Note on Education. (Tamil and English).

*57. Performance Budgets on School Education, Collegiate Education and Technical Education, 1982-83. (English).

£58. A Review of the Tamil Nadu Agro Industries Corporation Limited for the year 1981-82. (Tamil and English).



£59. Policy Note on Cinchona Department, 1982-83. (Tamil and English).

£60. Performance Budget on Cinchona Department, 1982-83. (English).

£61. Commercial Budget on Cinchona Department, 1982-83. (English).

£62. Policy Note on State Excise Department, 1982-83. (Tamil and English).

£63. Policy Note on Information and Film Technology, 1982-83. (Tamil and English).

£64. Policy note on Forest Department, 1982-83. (Tamil and English).

£65. Performance Budget on Forests, 1982-83. (English).

£66. Policy Note on Tourism, 1982-83. (Tamil and English).

£67. Policy Note on Food Situation in Tamil Nadu. (Tamil and English).

£ 68. Supplement to Demand No. 19—Sewerage and Water Supply, 1982-83. (Tamil and English).

69. A booklet on METRO Water, 1982. (Tamil).

£ 70. A booklet on Tamil Nadu Water Supply and Drainage Board, 1982. (Tamil).

£ 71. Policy Note on Leprosy Beggars Rehabilitation Programme, 1982-83. (Tamil and English).

£ 72. Policy Note on the working of the Stationery and Printing Department, 1982–83. (Tamil and English).

£ 73. Policy Note on Housing and Urban Development in Tamil Nadu, 1982–83. (Tamil and English).

£ 74. Policy Note on Fisheries, 1982-83 (Tamil and English).

75. Policy Note on Medical, 1982–83 (Tamil and English).

76. Policy Note on Public Health, 1982–83. (Tamil and English).

77. Note on Indian Medicine, 1982–83. (Tamil and English).

78. Performance Budget on Medical Services and Family Welfare, 1982-83. (English).

79. Performance Budget on Medical Education Department, 1982-83. (English).

[1982 மார்ச் 19

80. Performance Budget on Indian Medicine, 1982-83. (English).

81. Performance Budget on Public Health and Preventive Medicine, Primary Health Centres, State Health Transport Organisation, Drug Control Administration and Environmental Hygine, 1982–83. (English).

£ 82. Performance Budget on Fisheries, 1982-83. (English).

## இணைப்பு I

*[30 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

இரண்டாம் அனல் மின் நிலையம் அமைவதற்காக நெய்வேலி நிலக்கரி நிறுவனம் கோரியுள்ள நிலங்கள் அம்மேரி, கூனான்குறிச்சி (ஒரு பகுதி) ஆகிய கிராமங்களில் இருந்தன. கேட்கப்பட்ட நிலங்கள் விஸ்தீரணமும் கையகப்படுத்தி ஒப்படைக்கப்பட்ட நிலங்கள் விஸ்தீர்ணமும் வருமாறு :—

அம்மேரி.

| | கேட்கப் பட்ட நிலங்கள் விஸ்தீர்ணம். | கையகப் படுதப் பட்ட விஸ்தீர்ணம். | மீதம் உள்ளவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பட்டா நிலங்கள் | 99.04.0 | 95.35.0 | 3.68.5 |
| புறம்போக்கு & தரிசு நிலங்கள் | 18.90.5 | 18.90.5 | .. |
| நத்தம் | 0.35.0 | .. | 0.35.0 |

கூனான்குறிச்சி.

| | கேட்கப் பட்ட நிலங்கள் விஸ்தீர்ணம். | கையகப் படுத்தப் பட்ட விஸ்தீர்ணம். | மீதம் உள்ளவை. |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| பட்டா நிலங்கள் | 363.98.0 | 230.60.5 | 133.37.5 |
| புறம்போக்கு & தரிசு நிலங்கள் | 68.90.0 | 68.90.0 | .. |
| நத்தம் | 1.03.0 | .. | 1.03.0 |

* Sent by post to all M.L.Cs. on 16th March 1982.

£ Circulated to all M.L.Cs. on 18th March 1982.



1982 மார்ச் 19]

மீதமுள்ள நிலங்களுக்கு கையகப்படுத்தும் பணியும், மாறுதல் செய்யும் பணியும் முன்னேற்றத்தில் உள்ளன.

**வேலைவாய்ப்பு :**

கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு உரிய ஈட்டுத்தொகை பாதிக்கப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. எனினும் நில இழப்பினால் பாதிக்கப்பட்ட நபர்கள் தங்களுக்குப் புனர்வாழ்வும் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் வேலைவாய்ப்பும் கேட்டு வற்புறுத்தி வருகின்றனர். காலியாகும் மொத்த இடங்களில் 60 விழுக்காடு இடங்களுக்கு இரண்டு அல்லது மூன்றாண்டுகளில் நிலமிழந்த நபர்களை வேலைக்கு அமர்த்த நெய்வேலி நிலக்கரி நிறுவன நிர்வாகம் ஒப்புக்கொண்டு உள்ளது. இதற்குக் கீழ்க்குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகுதிளை நிர்வாகம் நிர்ணயித்துள்ளது:—

1. கல்வித் தகுதி. — ஐந்தாவது படித்திருக்க வேண்டும் அல்லது தமிழ் நன்றாக படிக்கத் தெரிய வேண்டும்.

2. வயது வரம்பு — தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினர் 45 வயது. இதரர் 40 வயது.

3. தகுதி. — பாதிக்கப்பட்ட நபர் அல்லது அவரது மகன் அல்லது (ஆண் வாரிசு இன்றி மகள் மட்டும் இருந்தால்) அவரது மருமகன்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனம் மக்கள் பிரதிநிதிகள் ஆலோசனையின் பேரில் தமிழக அரசு ஒப்புதலுடன் நிலமிழந்தவர்களை வகைப்படுத்த கீழ்க் குறிப்பிட்டுள்ள முன்னுரிமை நிர்ணயிக்கப்பட்டது.

முன்னுரிமை 1. — நிலங்கள் ஏதுமில்லாத வீடு மற்றும் வீட்டுமனை மட்டுமே வைத்திருந்து அதனையும் நில எடுப்பினால் இழந்து விட்ட நபர்கள்.

முன்னுரிமை 2. — தங்களுக்குச் சொந்தமான அனைத்து விளை நிலங்களையும் வீடு மற்றும் வீட்டுமனை முழுவதையும் இழந்து விட்ட நபர்கள்.

முன்னுரிமை 3. — தங்களுக்குச் சொந்தமான விளை நிலங்களை மட்டுமே இழந்துள்ள நபர்கள்.

முன்னுரிமை 4. — தங்களுக்குச் சொந்தமான விளை நிலங்களில் ஒரு பகுதியை மட்டுமே இழந்துள்ள நபர்கள் .

இரண்டாம் அனல் மின் நிலையம் அமைய கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் உள்ள கிராமங்களான அம்மேரி, கூனான்குறிச்சி ஆகிய கிராமங்கள் முதலில் பாதிக்கப்பட்டதால் இக்கிராமங்களில் நிலம் கையகப்படுத்தியதால் பாதிக்கப் பட்ட நபர்களின் பட்டியலை மேலே குறிப்பிட்டுள்ள வரைமுறைகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. இவற்றில் முன்னுரிமை 1 மற்றும் முன்னுரிமை 2-ன் கீழ் வரும் நபர்களுக்கு முதலில் வேலைவாய்ப்பளிக்கும் பணியை நெய்வேலி நிலக்கரி நிறுவன நிர் வாகம் மேற்கொண்டது. அதன்படி வேலையும் அளித்தது. இவ்விரண்டு கிராமங்களிலும் நிலமிழந்தோர் எண்ணிக்கையும் அவர்களில் வேலைவாய்ப் பளிக்கப்பட்டோர் எண்ணிக்கையும் பின்வருமாறு :—

| | அம்மேரி | | | கூனான் குறிச்சி | | |
|---|---|---|---|---|---|---|
| | நிலம் இழந்தோர் மொத்த எண்ணிக்கை. | வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டோர் எண்ணிக்கை. | மீதம் உள்ள நபர்கள். | நிலம் இழந்தோர் மொத்த எண்ணிக்கை. | வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டோர் எண்ணிக்கை. | மீதம் உள்ள நபர்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. முன்னுரிமை | 30 | 19 | 11 | 19 | 11 | 8 |
| 2. முன்னுரிமை | 49 | 39 | 10 | 56 | 42 | 14 |
| 3. முன்னுரிமை | 410 | .. | 410 | 195 | .. | 195 |
| 4. முன்னுரிமை | 10 | .. | 10 | .. | .. | .. |
| மொத்தம் .. | 499 | 58 | 441 | 270 | 53 | 217 |

புனர்வாழ்வு :

கீழே குறிப்பிட்டுள்ள கிராமங்களில் இந்த நிலமிழந்தோருக்கு வீட்டு மனையும் விளை நிலமும் அளிக்க புறம்போக்கு நிலங்கள் உள்ளது.

| | ஏ. செ. |
|---|---|
| கொல்லிருப்பு | 38.18. |
| எடைக்கல் | 1,361.06. |

முதல் சுரங்கத்திற்காக நிலங்கள் கையகப்படுத்தியதால் நிலமிழந்தவர்களுக்கு நெய்வேலி நிலக்கரி நிறுவனம் இந்திய அரசிடம் மான்யத் தொகையாக ரூபாய் 10 இலட்சம் பெற்று புனர்வாழ்வுப் பணிகளை ஏற்றுச் செய்தது. தற்போது கையகப்படுத்தியதன் காரணமாக நிலம் இழந்துள்ள நபர்களுக்கும்



முதல் சுரங்கத்தின்போது செய்தபடி நெய்வேலி நிலக்கரி நிறுவன நிர்வாகம் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது குறித்து தென்னாற் காடு மாவட்ட வருவாய் அலுவலரின் பிரேரணை அரசின் பரிசிலனையில் உள்ளது.

இரண்டாம் அனல் மின் நிலையம், நெய்வேலி :

நெய்வேலியில் இரண்டாம் அனல் மின் நிலையப் பணி நடந்து வருகிறது. சுமார் 4,268 ஒப்பந்தப் பணியாளர்களும் நெய்வேலி நிலக்கரி நிறுவன அலு வலர்களும் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நிலமிழந்தோர் கிளர்ச்சி :

அம்மேரி மற்றும் கூனான்குறிச்சி ஆகிய கிராமங்களிலுள்ள நிலமிழந்தோர் தங்களுக்கு புனர்வாழ்வும், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு வருக்கு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் வேலைவாய்ப்பும் அளிக்க வேண்டும் என வற்புறுத்தி வருகின்றனர். இவர்கள் கடந்த ஜனவரி மாதம் 4, 5, 6, 7 தேதிகளில் இரண்டாம் அனல் மின் நிலைய பிரதான வாயில் முன்பு கூடி ஒப்பந்தப் பணியாளர்கள் மின் நிலைய வேலைக்குச் செல்வதினின்றும் தடுத் தனர். நிலமிழந்தோர் குறைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் எனவும் காலம் நிர்ணயிக்கப்பட்ட வேலைக்குச் செல்பவர்களை தடுக்க வேண்டாம் என நெய்வேலி நிலக்கரி நிறுவன அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் கிளர்ச்சி செய்தவர்களிடம் தெரிவித்தனர். ஆயினும் அவர்கள் இவற்றை ஒப்புக்கொள்ளாமல் 169 நபர்கள் கைதாகினர். மாவட்ட மக்கட் பிரதிநிதிகள் மேற்படி இதர நிலமிழந்தோருடன் பேசியபின் 7—1—1982 அன்று மாலை கிளர்ச்சியை நிலமிழந்தோர் விலக்கிக் கொண்டனர். கைதாகிய 169 நபரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்த கிளர்ச்சியினால் 4—1—1982 அன்று இரண்டாம் அனல் மின் நிலையப் பணிகள் பூராவுமாக பாதிக்கப் பட்டது. கிளர்ச்சி நடந்த மற்ற நாட்களில், பணிக்கு வந்த அதிக நபர் களுடன் மின்நிலையப் பணிகள் தொடர்ந்தன. 7—1—1982-க்குப் பிறகு மின் நிலையப் பணி வழக்கம்போல் தொடர்ந்து நடைபெறுகிறது.

## இணைப்பு

(32 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

பொதுப் பிரிவிலும் (General side) மற்றும் இந்திய மருத்துவப் பிரிவிலும் பணிபுரியும் மருத்துவ அதிகாரிகளைக் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்யலாம்.

| கல்வி தொகுதி (1) | சம்பள ஏற்ற முறை (சாதாரண நிலை) (2) | சம்பள ஏற்ற முறை (தெரிவு நிலை) (3) |
| --- | --- | --- |
| எம். பி. பி. எஸ். | 750—50—1350 | 850—50—1200—60—1500. |
| டி. எம். எஸ். | ,, | ,, |
| எல். ஐ. எம். மற்றும் எல். எம். பி. | 600—30—750—35—890—40—1050 | 675—35—885—45 1200 |
| ஜி. சி. ஐ. எம். | ,, | ,, |
| **இந்திய மருத்துவப் பிரிவு :** | | |
| பி. ஐ. எம். பி. எஸ். | | |
| எம். மற்றும் எஸ். | ,, | ,, |

மருத்துவ அதிகாரிகளின் வெவ்வேறான சம்பள விகிதங்கள் இப் படிப்புகளில் சேருவதற்கான அடிப்படை தகுதிகள் மற்றும் படிப்புகளுக்கான கால அளவு இவற்றை கணக்கிற்கொண்டு அமைக்கப்பட்டதாகும்.

2. பொது பிரிவில் இவர்கள் உதவி அறுவை மருத்துவர்கள் என்றும் இந்திய மருத்துவ முறையில் இவர்கள் உதவி மருத்துவ அலுவலர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தாங்கள் பணிபுரியும் இடத்திற்கேற்றவாறு அவ்வப்போது அரசு நிர்ணயிக்கும் விதம் பஞ்சப்படி மற்றும் இதர படிகள் பெறுகின்றனர்.

3. கிராமப்புறங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு கீழே சொல்லப்பட்ட படிகள் வழங்கப்படுகின்றன :—

(1) மருத்துவமனை மற்றும் மருந்தகங்களிலிருந்து ஐந்து மைல்கள் அல்லது எட்டு கிலோ மீட்டர்கள் தூரத்திற்குள் தனிப்பயிற்சி செய்யும் மருத்துவர்கள் இருப்பார்களேயானால் இதுபோன்ற இடங்களில் இருக்கும் உதவி மருத்துவர்களுக்கு ஈட்டுத் தொகையாக மாதம் ரூபாய் 75 வீதம் அளிக்கப்படுகிறது.

(2) நகராட்சி அல்லாத இடங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு ஈட்டுத்தொகையாக மாதம் ரூபாய் 75 வீதம் அளிக்கப்படுகிறது.

(3) கிராமப்புறங்களில் பணி புரிவதற்காக ஊக்கப்படியாக ரூபாய் 10 வீதம் அளிக்கப்படுகிறது.



(4) மேலே சொல்லப்பட்ட படிகள் எல்லா உதவி அறுவை மருத்துவர்களுக்கும் அவர்கள் கல்வித்தகுதி மற்றும் சம்பள ஏற்றமுறை வித்தியாசமின்றி அளிக்கப்படுகிறது. எனவே படிகள் வழங்குவதில் யாதொரு ஏற்றத் தாழ்வில்லை.

(5) இந்திய மருத்துவப்பிரிவில் உள்ள உதவி மருத்துவர்கள் தனிப் பயிற்சி private practice செய்வதற்குத் தடையேதுமில்லையாதலால் இவர்களுக்கு ஈட்டுத்தொகை (Compensatory allowance) வழங்கப்படுவதில்லை.

(6) பட்ட மேற்படிப்பு படித்துள்ள மருத்துவர்களுக்கு இவர்களுடைய சம்பள ஏற்றமுறையில் இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

(7) இவர்களை தவிர பி 1 (B1 மற்றும் சி C பிரிவைச் சார்ந்த மருத்துவர்களும் மேற்கூறப்பட்ட தகுதியுடைய மருத்துவ அலுவலர்கள் கிடைக்கப்பெறாத போது முழு நேர உதவி மருத்துவ அலுவலர்களாய் நியமனம் செய்யப்படுவர்.

(பி 1 பிரிவு—அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் பயின்றவர்கள்.

சி பிரிவு—கிராம வைத்தியர் சான்றிதழ் பெற்றவர்கள் (முன்பு சென்னை அரசினர் இணைப்பு மருத்துவக் கல்லூரியில் ஆறுமாத பயிற்சி பெற்றவர்கள் இப்பயிற்சி இப்போது இல்லை.)

இம்மருத்துவர்கள் ரூபாய் 150-5-200 என்ற ஊதிய விகிதம் பெறத் தகுதியுடையவராவர். இவர்களது ஊதிய விகிதத்தை மாற்றியமைக்க தனி நபர் குழு (One Man Commission) பரிந்துரை செய்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(8) கிராம மருந்தகங்கள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பெறும் பகுதி நேர நிலையங்களாகும். இவற்றில் கிராம மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுகின்றனர். இவர்களில் பட்டப் படிப்பு தகுதிபெற்றவர்கள் அதாவது ஏ மற்றும் ஏ சிறப்பு (A or A special) பிரிவில் பதிவு பெற்றவர்கள் மாதந்தோறும் ரூபாய் 325 மான்யமாகப் பெறுவர். இதரத் தகுதியுடையவர்கள் மாதந்தோறும் ரூபாய் 240 மான்யமாகப் பெறத் தகுதியுடையவர்.

(9) உதவி மருத்துவர்களிடையே கல்வித்தகுதி வித்தியாச அடிப்படையின் காரணமாக அவர்களது பணி முறைமை, கடமை மற்றும் பொறுப்பு இவைகளில் ஏற்றத்தாழ்வில்லை. மேலும் கிராமப்புறங்களிலுள்ள மருந்தகங்களிலும் மற்றும் நகரப்புறங்களிலும் உள்ள மருத்துவமனைகளிலும் உதவி அறுவை மருத்துவர் நியமிப்பதில் யாதொரு பாகுபாடும் இல்லை.

(10) எனவே, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள அரசு மருத்துவ நிலையங்களில் பணிபுரியும் ஒரே கல்வித்தகுதியுடைய மருத்துவர்களிடையே பாகுபாடு ஏதுமில்லை.

## இணைப்பு III

(34 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க)

கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு.

### I தோற்றுவாய்.

கல்விச் செலவும் மாநில வரவு செலவுத் திட்டமும்.

கல்விக்காக 1982–83 ஆம் ஆண்டில் ''மானியக் கோரிக்கை
17—கல்வி''-ன் கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 291 கோடி அவ்வாண்டு
வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,370
கோடியில் 21.3 விழுக்காடாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1982–83 வரவு-
செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும்
செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | 1982–83 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 259. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்பு செலவு .. | 63 | .. | 63 |
| 277. கல்வி— | | | |
| 1. தொடக்கக் கல்வி | 1,27,95 | 4,32 | 1,32,27 |
| 2. உயர்நிலைப் பள்ளிக் கல்வி .. | 76,53 | 3,33 | 79,86 |
| 3. மேல்நிலைப் பள்ளிக் கல்வி .. | 14,44 | 9,93 | 24,37 |
| 4. கல்லூரிக் கல்வி .. | 26,39 | 3,12 | 29,51 |
| 5. சிறப்புக் கல்வி-முதியோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியவை. | 85 | 3,14 | 3,99 |
| 6. விளையாட்டும் இளைஞர் நலனும் மற்றும் தேசிய மாணவர் படை | 2,04 | 1,28 | 3,32 |
| 7. தொழில் நுட்பக் கல்வி .. | 8,78 | 4,43 | 13,21 |
| | 2,56,98 | 29,55 | 2,86,53 |





| | | | |
|---|---|---|---|
| 278. கலை, பண்பாடு— | | | |
| நுண் கலைக் கல்வி | 29 | 7 | 36 |
| கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு | 6 | 37 | 43 |
| தொல்பொருளாராய்ச்சி | 15 | 15 | 30 |
| ஆவணக்காப்பகமும் அருங்காட்சியகங்களும் | 43 | 13 | 56 |
| பொது நூலகங்கள் | 1,60 | 22 | 1,82 |
| | 2,53 | 94 | 3,47 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும் .. | 16 | | 16 |
| பெருமொத்தம் : | | | |
| மானியக் கோரிக்கை 17—கல்வி .. | 2,60,30 | 30,49 | 2,90,79 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1982–83-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| மானியக் கோரிக்கை 9.—265 ஏனைய நிருவாகப் பணிகள்—மாவட்ட விவரச் சுவடிப்பிரிவு | .. | 3 | 3 |
| மானியக் கோரிக்கை 28. சமுதாய வளர்ச்சிப் பணிகள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள் | .. | 9,50 | 9,50 |
| சமூகக் கல்வி .. | .. | 8 | 8 |
| நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்கான மானியம் | .. | 25 | 25 |
| கோரிக்கை 37—பொதுப் பணி—அரசுப் பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள் | 4 | 2 | 6 |

| | | | |
|---|---|---|---|
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் .. | 9,28 | .. | 9,28 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவுகள் | | | |
| 459. அலுவலகக் கட்டடங்கள் .. | .. | 11 | 11 |
| 477. கல்வி, கலைகள் பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவுகள் அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றுக்கான கட்டிடங்கள் .. | 5 | 6,42 | 6,47 |
| 677. கடன்கள்— | | | |
| தேசிய கடன் படிப்புதவித் தொகைகள் .. | .. | 45 | 45 |
| தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன்கள் .. | .. | 12 | 12 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன் .. | 7 | .. | 7 |
| 767. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடன்கள் | 71 | .. | 71 |
| மொத்தம் .. | 10,15 | 16,98 | 27,13 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1982–83-ல் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 318 கோடியாகும்.

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின்வருவதாகும். அதாவது ஆதி திராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள்; ஆதி திராவிடர் பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு, சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு ; மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால் நடை மருத்துவக் கல்வி ஆகியவகைக் கல்விகளுக்கு ஆகும் செலவு ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங்கள் எவற்றிலும் சேரவில்லை.



1982–83-ஆம் ஆண்டில் கல்விப் பணிக்கான திட்டச் செலவு—

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி ; 477. கல்விப் பணி குறித்த கட்டடச் செலவு, கடன் முதலியன) கல்விக்கான 1982–83-ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு : ("+" குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும் :—

| (1) | பொறுப் பேற்ற செலவினம். (2) | 1982–83-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| பொதுக் கல்வி. | | | |
| 1. பள்ளிக் கல்வி (மேல் நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) .. | 16,95 +2 | 3,53 | 20,48 +2 |
| 2. முதியோர் கல்வி .. | 1,11 +77 | 4 | 1,15 +77 |
| 3. கல்லூரிக் கல்வி .. | 3,17 +48 | 71 | 3,88 +48 |
| 4. விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் .. | 78 +60 | 21 | 99 +60 |
| 5. தமிழ் வளர்ச்சி— | | | |
| கல்வித் துறை | 1,08 | .. | 1,08 |
| தமிழ்க் கலைத்துறை | .. | 8 | 8 |
| 6. கட்டட வகையில் பொதுப்பணித்துறைச் செலவு. | 81 | .. | 81 |
| | 23,90 +1,37 | 4,57 | 28,47 +1,37 |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| தொழில் நுட்பக் கல்வி | 4,87 +10 | 1,12 | 5,99 +10 |
| கலைப்பணிகள்— | | | |
| கல்வித்துறை .. | 48 | 26 | 74 |
| தமிழ்க் கலைத்துறை | 26 | 17 | 43 |
| பெரு மொத்தம் .. | 29,51 + 1,97 | 6,12 | 35,63 +1,97 |

## II. பள்ளிக் கல்வி

### (i) பொது.

1. 1982–83 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 29. கோடியில் பள்ளிக் கல்விக்கு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூ. 239 கோடியாகும். 1981 அக்டோபர் 1-ம் தேதி அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் மாத்தம் 36 896 பள்ளிகள் இருந்தன. அவற்றில் முதல் நிலைப் பள்ளிகள் 27,767. நடுநிலைப் பள்ளிகள் 5,556. உயர் நிலைப் பள்ளிகள் 3,573 (1,405 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட). மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்ற வற்றோடு இணைந்த 137 பள்ளிகளும்—79 உயர்நிலைப் பள்ளி களும் 58 மேல் நிலைப் பள்ளிகளும்—மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையாகிய 36,896-ல் அடங்கும். அனைத்துப் பள்ளி களிலும் பணி செய்து வந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 2·71 இலட்சம். பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை 93.75 இலட்சம். பள்ளிகளின் நிருவாக வாரியான விவரங்களை இணைப்பில் காணலாம்.

2. 1982–83 ஆம் ஆண்டில் 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகள், நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து 150 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள் ; நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளின் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்த்து 500 தமிழாசிரியர் பதவிகள் ; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 50 தலைமை ஆசிரியர் பதவிகள் ; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 300 பி. எட். தர ஆசிரியர் பதவிகள் ஆகியவை ஏற்படுத்தப்படும். நடு நிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 100 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும்.



பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் :

3. இவ்வாண்டில் (1981–82) டிசம்பர் 1981 வரை நடத்தப் பெற்ற 50 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் ரூ. 63 இலட்சம் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது. பொது மக்களின் நன்கொடையைக் கொண்டு அதே காலக் கட்டத்தில் 49,378 மாணவர்களுக்கு சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

கல்வித்துறை நிருவாகம் :

4. தற்பொழுது தலைமைக் கல்வி அலுவலர்கள் 16 ; மாவட்டக் கல்வி அலுவலாகள் 51 ; பெண்கள் பள்ளி ஆய் வாளர்கள் 12; உதவிக் கல்வி அலுவலர்கள் 366; பள்ளித்துணை ஆய்வாளர்கள் 453 (பள்ளித்துணை ஆய்வாளர் சரகங்களின் பொறுப்பில் 411 பேர்களும், இயங்கும் அறிவியல் ஆய்வுக் கூட உந்து வண்டிகளின் பொறுப்பில் மற்றவர்களும்) உள்ளனர். 1982–83 ஆம் ஆண்டில் பெண்கள் பள்ளி ஆய்வாளர் பதவிகள் மேலும் இரண்டு புதிதாக ஏற்படுத்தப்படும். 1982–83-ல் மாவட்டக் கல்வி அலுவலர்கள்/பெண்கள் பள்ளி ஆய்வாளர் களுடைய நேர்முக உதவியாளர் பணியிடங்கள் 25 கூடுதலாக ஏற்படுத்தப்படும். இத்துறைக்காக ஒரு உள் தணிக்கைப் பிரிவும் அமைக்கப்படும். " தமிழகக் கல்வி " என்னும் காலாண்டு இதழினைப் பள்ளிக் கல்வி இயக்ககம் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

### (ii) இளஞ்சிறார் கல்வி.

தமிழக அரசு முதன் முறையாக 1982–83-ல் இளஞ்சிறார்கள் கல்விக்கென பெரிய அளவிலான ஒரு திட்டத்தினை தொடங்க விருக்கிறது. இளஞ்சிறார்களுக்குப் பள்ளி செல்லும் மனப் போக்கைப் புகட்டுவதன் மூலம் இளஞ்சிறார் கல்வியானது தொடக்கக் கல்வி வளரவும் உதவும். மேலும் இது பள்ளி செல்லும் வயதுள்ள சிறுமியர் தம் தம்பி தங்கையரைக் கவனித் துக்கொள்ளும் பொறுப்பிலிருந்து விடுபட்டு அச் சிறுமியர் பள்ளி செல்வதற்கும் உறுதுணை புரியும். பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்திலும் சிறுமியரிடையே தொடக்கக் கல்வியை மேலும் பரப்புவதற்கு குறிப்பான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. 1982–83-ல் தொடங்கவிருக்கும் இத்திட்டத்தின் முதற் கட்டமாக இம்மாநிலத்திலுள்ள 4,433 குழந்தைகள் நல மையங்கள் (பால் வாடிகள்) ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி பிரிவு ஏற்படுத்தப்படும். இந்த நர்சரி பிரிவுகளுக்கான பாடத் திட்டங் களை வகுப்பதற்காக 1981 நவம்பரில் ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கென 1982–83-ல் ரூ. 1 கோடி ஒதுக் கப்பட்டுள்ளது.

(iii) தொடக்கக் கல்வி.

1. வகுப்புகள் 1—5-க்குரிய 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 94.76 விழுக்காட்டினரும் வகுப்புகள் 6—8-க்குரிய 11—14 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 64.55 விழுக்காட்டினரும் இதுவரை (1981–82) பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்சத் திட்டத்தில் ஒரு அம்சம் ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் (அதாவது 1984–85-க்குள்) இந்தியா அனைத்திலும் 6—11 வயதுத் தொகுதியினரில் 95 சதவீதத்தினரும் 11—14 வயதுத் தொகுதியினரில் 50 சதவீதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது ஆறாவது திட்ட இலக்கு ஆகும். தமிழகத்தில் 6—11 வயதுத் தொகுதியைப் பொறுத்தவரை அந்த இலக்கு இப்பொழுதே எய்தப்பட்டு இருப்பதும், 11—14 வயதுத் தொகுதியினரைப் பொறுத்தவரை அந்த இலக்கை விஞ்சியிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது. இவ்விரு வயதுத் தொகுதிகளின் கீழ் 1981–82 ஆம் ஆண்டில் 1.83 இலட்சம் மாணவ மாணவியர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1981–82 ஆம் ஆண்டில் இருந்த 33,323 தொடக்கப் பள்ளிகளில் முதல் நிலைப் பள்ளிகள் (1—5 வகுப்புகள்) 27,767 நடுநிலைப் பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புகள்) 5,556 ஆகும். படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 70.12 இலட்சமாகும். பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,79,257 ஆகும். ஒட்டு மொத்தமான ஆசிரியர் மாணவர் விகிதம் 1 : 39 ஆகும்.

2. பள்ளியில் சேரும் (6—11 வயது) மாணவ மாணவியருள் தொடர்ந்து 5-ஆவது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியில் இருந்து நின்று விடுவோர் விழுக்காடு 1973–74 ஆம் ஆண்டில் 51 சதவிதமாக இருந்தது. 1980–81-ல் 30 சதவீதமாகக் குறைந்து உள்ளது. தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம்; இலவசமாகப் புத்தகங்கள் கற்பலகைகளை வழங்கும் திட்டம்; 1—3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறை (1977–78 முதல் அமுலாக்கப்பட்டது); போன்றவை வரவேற்கத்தக்க இம் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணங்களாகும்.

நண்பகல் உணவுத் திட்டம் :

3. முதல்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1—8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 20.51 இலட்சம் மாணவர்கள் நண்பகல் உணவு பெறுகின்றனர். ஆதி திராவிடர் நலத்துறையும் பிற்பட்டோர் நலத்துறையும் நடத்தி வரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1.65 இலட்சம் மாணவரும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். செங்கல்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு ஆகிய



மாவட்டங்களிலுள்ள மைய சமையற்கூடப் பகுதிகளில் செயல்படும் 97 சமையற் கூடங்கள் மூலம் 4.46 இலட்சம் பேரும் பிறபகுதிகளில் மற்றவர்களும் நண்பகல் உணவு பெறுகின்றனர். 1982–83 ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ரூ. 5,63 இலட்சம் செலவிடப்படும். சென்னையிலும் தூத்துக்குடியிலும் இரண்டு கிடங்குகள் கட்ட ரூ. 8 இலட்சம் உட்பட. (மேற்கண்ட 20.51 இலட்சம் மாணவர்களைத் தவிர சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 60,000 மாணவர்களும் நண்பகல் உணவு பெறுகின்றனர்).

4. மைய சமையற் கூடங்கள் இல்லாத பகுதிகளைப் பொறுத்தவரையில் மதிய உணவு மானியம் அந்தந்தத் தொடக்கப் பள்ளிக்கே நேரடியாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு மாநில அரசு ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 10 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டும் என்று உள்ளது. இவ்வாறு பெறும் 15 காசு மானியத்தோடு ''கேர்'' நிறுவனத்திலிருந்து ஆண்டுதோறும் கிட்டும் இலவசரவையையும் மதியஉணவுத் திட்டம் பயன்படுத்துகிறது. 1980–81 வரை கேர் நிறுவனம் ஆண்டுதோறும் சுமார் 20,000 டன் உணவை தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டத்திற்கு அளித்து வந்தது. ஓர் ஆண்டுக்கு மதிய உணவு அளிக்கப்படும் 200 நாட்களில் 100 நாட்களுக்குத் தேவைப்படும் தானியமும் 200 நாட்களுக்குமே தேவைப்படும் எண்ணெயும் 'கேர்' இலவச உணவு மூலம் பெறப்பட்டு வந்தது. மீதி 100 நாட்களுக்கான தானியச் செலவுக்கும் 200 நாட்களுக்கு ஆகும் மசாலா சாமான்கள், விறகுச் செலவு முதலியவற்றிற்கும் அரசு மானியமாகவும் உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகையாகவும் பெறப்படும். ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு 15 காசு என்ற தொகை பயன்படுத்தப்பட்டு வந்தது. நண்பகல் உணவுத் திட்டத்திற்காக 'கேர்' இலவச உணவினைப் பெற்று வரும் அனைத்து மாநிலங்களுக்குமே கேர் தந்துவரும் உணவின் அளவினை 1981–82லிருந்து படிப்படியாகக் குறைத்துவர கேர் நிறுவனம் கொள்கை முடிவு செய்து அதை அமுலாக்கி வருகிறது. இவ்வாறு கேர் உணவு படிப்படியாகக் குறைந்து 1985–86-ல் பெறும் கேர் உணவு 1980–81-ல பெற்றதில் பாதி அளவே இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது வழங்கப்படும் நண்பகல் உணவின் அளவினைத் தொடர்ந்து இதே அளவில் வழங்க, அரசு தன் நிதியிலிருந்து இனி வரும் ஆண்டுகளில் கூடுதலாகச் செலவு செய்யவேண்டியிருக்கிறது. 1981–82-ல் கேர் உணவின் அளவில் ஏற்பட்ட குறைவை ஈடு செய்ய ரூ. 45 இலட்சம் கூடுதல் செலவுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

இலவசப் புத்தகங்கள் கற்பலகைகள் வழங்குதல்.

5. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், 2—3 வகுப்புகளில் பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டு தோறும் 13 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். 1972–73-ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் வழங்குவதற்கு ஆகும் செலவினைத் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக அந்நிறுவனம் இப்பொழுது ஆண்டு தோறும் ரூ. 67 லட்சம் செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்கு சிலேட்டு இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டு தோறும் அரசு சுமார் ரூ. 7 இலட்சம் செலவிடுகிறது. 4—10 வகுப்புகளில பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் சுமார் 8 லட்சம் பேர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக இலவசப் பாட புத்தகங்களைப் பெற்று வருகின்றனர்.

புத்தக வங்கிகள்.

6. ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வாங்கும் செலவினைத் தவிர்ப்பது புத்தக வங்கிகளின் நோக்கமாகும். 1—10—81 நிலவரப்படி 32,630 பள்ளிகளில் இவ்வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. இவ்வங்கிகளில் மொத்தம் உள்ள புத்தகங்கள் 22 லட்சத்திற்கும் அதிகமாகும். அவற்றின் மதிப்பு ரூ. 32 இலட்சத்திற்கும் அதிகமாகும். பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்திற்கும் அதிகமாகும். உயர் வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங்களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும், இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அறிவியல் கல்வி

7. 1981–82-ல் அறிவியல் கருவிகளை வாங்குவதற்காக பள்ளிக்கு ரூ. 3,750 வீதம் 200 நடுநிலைப் பள்ளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. அப்பள்ளிகள் ஒவ்வொன்றும் பள்ளி நிர்வாக நிதி அல்லது பெற்றோர் ஆசிரியர் நிதியிலிருந்து மற்றொரு ரூ. 3,750 இவ்வகையில் செலவிடவேண்டும். இதே போன்று 1982–83-லும் 200 நடுநிலைப் பள்ளிகளுக்கு இவ்வசதி அளிக்கப்படும்.

8. தொடக்கப் பள்ளி மாணவர்களிடையே சுகாதாரக் கல்வி புகட்ட 'கேர்' நிறுவன உதவியுடன் திட்டம் ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.



தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள்

9. 1982–83-ல் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 10 கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ''சமுதாய வளர்ச்சி'' மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 9.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் மற்றும் நகராட்சித் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியம் தர ரூ. 22 இலட்சமும், அரசு தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 6 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள்

10. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1—6—81 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டிடப் பராமரிப்பு தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதும் பள்ளிக் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு உதவிக் கல்வி அலுவலர் வீதம், 366 உதவிக் கல்வி அலுவலர்களை நியமித்து அவர்கள் மூலம் இப்பள்ளிகளை பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு உதவிக் கல்வி அலுவலரின் அலுவலகத்திலும் 1 இளநிலை உதவியாளரும், 1 தட்டச்சரும் நியமிக்கப்பட்டுள்ளனர். கூடுதல் வேலைப் பளுவைச் சமாளிக்க ஒவ்வொரு மாவட்டக் கல்வி அலுவலரின் அலுவலகத்திலும் 1 உதவியாளர் பணியிடமும், 1 தட்டச்சர் பணியிடமும் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடக்கக் கல்விக்காகப் பள்ளிக் கல்வி (கூடுதல்) இயக்குநர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிய இம்மாபெரும் மாற்றம், தொடக்கக் கல்வித் தர உயர்வுக்கும், விரிவாக்கத்திற்கும் உறுதுணையான ஒரு முக்கியமான நடவடிக்கையாகும்.

நகராட்சி, மாநகராட்சித் தொடக்கப் பள்ளிகள்

11. 1981–82-ல், நகராட்சிகளும், சென்னை, மதுரை கோயம்புத்தூர் மாநகராட்சிகளும் நடத்தி வந்த தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,508 ஆகும் (1,107 முதல் நிலை மற்றும் 401 நடுநிலைப் பள்ளிகள்). நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன், அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையினை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கு நிதியில் துண்டு விழும் முழுத் தொகையினை அரசே ஈடு செய்து வருகின்றது.

## (IV) உயர் நிலைப் பள்ளிக் கல்வி.

1981–82-ல் தமிழ்நாட்டில் 14—16 வயதுத் தொகுதியினர் 17.25 இலட்சம் பேர்களுள், 41 விழுக்காடாகிய 7·13 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1981–82-ல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடைபெற்றுவந்த பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு:—

| | சாதாரணப் பள்ளிகள் (ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் உட்பட). | மைய அரசின் உயர்நிலைக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்தவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உயர் நிலைப் பள்ளிகள் | 2,089 | 79 | 2,168 |
| மேல் நிலைப் பள்ளிகள் | 1,347 | 58 | 1,405 |
| மொத்தம் | 3,436 | 137 | 3,573 |

1981–82-ல் மேற்கண்ட 3,573 பள்ளிகளில், வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின் வருமாறு:—

| | மாணவர்களின் எண்ணிக்கை. (இலட்சத்தில்) |
|---|---|
| 8 ஆம் வகுப்பும் கீழும் .. .. .. | 13.75 |
| 9—10 வகுப்புகள் .. .. .. | 7.13 |
| 11—12 வகுப்புகள் .. .. .. | 2.75 |
| மொத்தம் .. | 23.63 |



2. 1981–82-ல் அரசுப் பள்ளிகள் 97, நகராட்சிப் பள்ளிகள் 2, தனியார் பள்ளிகள் 19, ஆக மொத்தம் 118 உயர் நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. சிறுபான்மையினரால் புதிதாகத் திறக்கப்பட்ட தனியார் உயர்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை இதில் சேரவில்லை.

### அறிவியல் கல்வி

3. அறிவியல் ஆய்வுக்கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் 1981–82 முடிய 1,068 உயர்நிலைப் பள்ளிகள் பயன்பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளுக்குத் தேவையான அறிவியல் தளவாடங்களை மொத்தமாகப் பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி, அனுப்பி வைக்கிறார். அறிவியல் தளவாடங்கள் வழங்குவதற்கு 1981–82 வரை அளிக்கப்பட்ட, பள்ளிக்கு ரூ. 18,000 என்ற தொகை, 1982–83-ல் ரூ. 20,000 ஆக உயர்த்தப்படும். 1980–81-லிருந்து அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, இத்திட்டத்தின் கீழ் ஆய்வுக்கூட கட்டட வகையில் ஒரு பள்ளிக்கு ரூ. 80,000 செலவிடப்படுகிறது. உள்ளாட்சி மன்ற மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகள் கட்டடச் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 48,000 இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் ஆய்வுக்கூடக் கட்டிட மானியம் பெறுகின்றன. 1982–83-ல் மேலும் 25 உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.

4. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத, கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் கல்வி மாவட்டங்கள் 42-ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி செயல்பட்டு வருகிறது. மீதியுள்ள கல்வி மாவட்டங்களுக்கு, மேலும் 9 ஆய்வுக்கூட வண்டிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

5. மாநில அளவில் ஆண்டுதோறும் நடத்தும் அறிவியல் கண்காட்சி 1978-ல் மதுரையிலும், 1979-ல் கோவையிலும், 1980-ல் திருநெல்வேலியிலும், 1981-ல் திருச்சிராப்பள்ளியிலும் நடத்தப்பட்டது. மாணவர்களின் அறிவியல் திறனை ஊக்குவிப்பதும் அறிவியல் பயிற்றுந்தரத்தினை மேம்படுத்துவதும் இக் கண்காட்சிகளின் குறிக்கோளாகும்.

### நூலக வசதி

6. உயர்நிலைப் பள்ளிகளின் நூலக வசதிகளைப் பெருக்குவதற்காக 1982–83-ல் ரூ. 2 இலட்சம் செலவிடப்பட இருக்கிறது.

ஒலி-ஒளிக் கல்வி

7. 1982—83-ல் பள்ளிக் கல்வி இயக்ககத்திலுள்ள மாநிலத் திரைப்படச் சுருள் சேமிப்பகத்திற்கு ரூ. 48,000 செலவில் கூடுதலாகக் கல்வித் திரைப்படங்களும், திரைப்படச் சுருள்களும் வாங்கப்படும்; 30 தொடக்கப்பள்ளிகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்; ஒலி-ஒளிக் கல்வி தொலைக்காட்சிக் கல்வி பற்றிய கருத்தரங்குகள், பணிக்களரிகள் மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்த ரூ. 1,86,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் :

8. 1982—83 வரவு-செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்கான நிதி ஒதுக்க விபரங்கள் வருமாறு :—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிட மானியம். | | 3 |
| நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிட மானியம் : | | |
| "277. கல்வி"-இன் கீழ் .. .. | 2 | |
| "284. நகர்ப்புற வளர்ச்சி"-இன் கீழ் | 25 | 27 |
| அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் : | | |
| சிறு பணிகள் .. .. .. | 3 | |
| புதிய பணிகள் .. ... | 25 | |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1982—83-ல் நிதி ஒதுக்கம். | 29 | |
| வெள்ளம் முதலியவற்றால் சேதமாகும் கட்டிடங்களின் மராமத்துப் பணிக்காக. | 5 | 62 |
| மொத்தம் | | 92 |

மேலும் 1982—83-ல் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்காகத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் ரூ. 25 இலட்சம் வழங்க இருக்கிறது (அந்நிறுவனம் இதற்காக 1981-82-ல் ரூ. 28 இலட்சம் வழங்கியுள்ளது).

9. அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கடந்த பல ஆண்டுகளாக கவனிக்காது விடப்பட்டு வந்துள்ள கட்டட வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய பெருந்தொகையாகிய ரூ. 100 கோடி தேவைப்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தேவையைப் படிப்படியாகவாவது நிறைவேற்றுவதற்காக, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் போன்ற நிறுவனங்களிலிருந்து கடனுதவி பெற இயலுமா என்பது குறித்த முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது.



கல்விச் சலுகைகள், படிப்பு உதவித் தொகைகள் மற்றும் இதர ஊக்குவிப்புப் பணிகள் :

10. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1—12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் இலவசமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்புப் படிப்பு உதவித் தொகைகளையும், இதர வசதிகளையும் ஆதி-திராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். அதேபோன்ற வசதியை பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தைப் பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும், ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்கு புதிதாகப் படிப்பு உதவித் தொகைகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. ஒருமுறை உதவித் தொகையினை பெற்ற மாணவர் மேல்நிலைக் கல்வி உட்பட, பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித்தொகையினைப் பெறுவர்.

11. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்விவளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 1981—82 ஆம் ஆண்டில் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8, 9, 10 வகுப்புகளில் பயிலும் அம்மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் மொத்தம் 1½ மணிநேரம் உரிய ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு சுமார் 37,600 மாணவர் பயன் பெற்றனர். இந்த முன்னோடித் திட்டம் 1982—83-லும் தொடர்ந்து செயல்படும்.

12. இந்த சிறப்புப் பயிற்சித் திட்டம் 1982—83-ல் 300 மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு விரிவாக்கப்படும்.

V. பள்ளிப்பாடங்கள், பாடத்திட்டம், பாடநூல்கள்,

பள்ளிப்பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்களை தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் பின்வரும் திட்டப்படி வெளியிட்டு வருகிறது :—

பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்கள் அமுலுக்கு வரும் வகுப்புகள்.

| ஆண்டு. | கணிதம். | புவியியல். | அறிவியல். | வரலாறு. |
|---|---|---|---|---|
| 1981—82 | 4, 7, 9 | 4, 6 | 3, 4, 6 | 3, 4, 6 |
| 1982—83 | 5, 8, 10 | 5, 7, 9 | 5, 7, 9 | 5, 7, 9 |
| 1983—84 | .. | 8, 10 | 8, 10 | 8, 10 |
| 1984—85 | ... | ... | ... | .. |

[1982 மார்ச் 19

| ஆண்டு. | ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலத் துணைப் பாடம். | தமிழ்த் துணைப் பாடம். | தமிழ் இலக்கணம். |
|---|---|---|---|---|---|
| 1981–82 | 3 | 1—3 | .. | 9 | .. |
| 1982–83 | 4, 6 | 4, 6 | 6 | 6 | .. |
| 1983–84 | 5, 7, 9 | 5, 7, 9 | 7, 9 | 7 | 9 |
| 1984–85 | 8, 10 | 8, 10 | 8 | 8 | 8, 10 |

2. தமிழ்நாட்டுப் பள்ளிகளில் 6-ம் வகுப்பிலிருந்து அனைத்து உயர் வகுப்புகளுக்கும் ஒழுக்கம் மற்றும் சமூகக் கல்விக்கான பொருத்தமான பாடத்திட்டம் ஒன்றை வகுக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

3. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாட நூல்கள் மாவட்ட மற்றும் வட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் 52-ன் மூலம் மாநிலம் முழுவதும் 119 விநியோக மையங்கள் வழியாக விநியோகிக்கப்படுகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக இப்பாட நூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந்நிறுவனம் 1—12 வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களைத் தானே நேரடியாக 101 சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விற்பனை செய்கிறது.

நோட்டுப் புத்தகங்கள்—

4. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு, நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியினையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே செய்து வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள 224 பதிவு செய்யப்பட்ட தயாரிப்பாளர்கள் மூலம் மலிவுத் தாளைக் கொண்டு நோட்டு புத்தகங்கள் தயாரிக்கப்படுகின்றன. சமூக நலத்துறையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுக்கும், ஊனமுற்றோர் பணிபுரியும் நிறுவனங்களுக்கும் இதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இம் மாநிலத்திற்கு ஆண்டுதோறும் மொத்தம் 9,200 டன் மலிவு விலைத்தாள் தேவைப்படுகிறது. ஆனால் மைய அரசு ஆண்டுக்கு 5,300 டன் மலிவு விலைத் தாள் மட்டுமே ஒதுக்கீடு செய்கிறது. எனவே மாணவர்களுக்குத் தேவையான மலிவு விலை நோட்டுப் புத்தகங்களின் தேவையில் 60%-ஐ மட்டுமே தற்பொழுது பூர்த்தி செய்ய முடிகிறது.

(vi) ஆசிரியர் பயிற்சி.

பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் கடந்த பல ஆண்டுகளாகப் பெருமளவில் நிலவி வருவதால், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஓர்



1982 மார்ச் 19]

ஆண்டு விட்டு மறு ஆண்டு தான் மாணவர்கள், அதுவும் குறைந்த எண்ணிக்கையில் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். 1981–82-ல் ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் 30 மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

2. இளநிலை ஆசிரியர்கள் (ஹையர் கிரேடு), இடைநிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வியாராய்ச்சி-பயிற்சி நிறுவனம் 5 மாத அஞ்சல்-வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சி ஒன்றினை நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் பயன்பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1982–83-லிருந்து 5,000-லிருந்து 10,000 ஆக உயர்த்தப்படும்.

3. ஆங்கில மொழிப் பயிற்றுவிப்பு மேம்பாட்டிற்கான 10 மையங்கள் தமது பணிகளை பயனுள்ள வகையில் 1981–82-லும் தொடர்ந்துசெய்து வருகின்றன. இவ்வாண்டு 6—8 மற்றும் 9—10 வகுப்பு ஆசிரியர்கள் 1,350 பேர்களுக்கு இம்மையங்கள் ஆங்கிலம் கற்பித்தலில் 3 அல்லது 4 வார பயிற்சிகள் நடத்தின.

(vii) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்.

பள்ளிக் கல்வி இயக்ககத்தில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பணியில் தொடர்ந்து முக்கிய பங்கினை ஏற்று வருகிறது. இளநிலை ஆசிரியர்களுக்கான அஞ்சல்—வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சியை நடத்தி வருவதுடன் இந்நிறுவனம் 1—3 வகுப்பு ஆசிரியர்கள் தமிழாசிரியர்கள் போன்றவர்களுக்கான சிறப்பு மறுபயிற்சி வகுப்புக்களையும் நடத்தி வருகிறது. இந்நிறுவனம் ஆசிரியர்களுக்கான பல்வேறு பயிற்சித் திட்டங்களை நடத்தவும் கல்வியாராய்ச்சிகளை மேற்கொள்ளவும் 1982–83-ல் ரூ. 9·62 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் இந்நிறுவனம் செயற்படுத்தி வருகிறது :—

| திட்டம். | செயற்படுத்தப்படும் இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| (i) தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல். | 130 தொடக்கப் பள்ளிகள். |
| (ii) சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி. | 5 மாவட்டங்கள். |
| (iii) தொடக்கக் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்குதல் (பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட 9—14 வயதுத் தொகுதியினருக்கு பள்ளி சாராக் கல்வி முறையை உருவாக்குதல்). | 74 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள். |

இம் மூன்று திட்டங்கள் தமிழ் நாட்டில் நிறைவேற்றப்படும் பாங்கினைச் சாலச் சிறந்தது என தேசிய கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் பாராட்டியுள்ளது.

மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி—

3. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான "ஐக்கிய நாடுகள் நிதி" ( UNFPA ) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு 1980 ஏப்ரல் முதல் 1983 மார்ச் முடியவுள்ள மூன்றாண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. மாநில அரசும் தன் பணத்திலிருந்து இத் திட்டத்திற்காக அம்மூன்றாண்டு காலத்தில் ரூ. 3 இலட்சம் அளவில் செலவிடும். தமிழ்நாடு கல்வியாராய்ச்சி-பயிற்சி நிறுவனம் இத்திட்டத்தினை நிறைவேற்ற முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பல்வேறு மையங்களுக்கும் சென்று ஆசிரியர்களுக்கு மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி பற்றி போதிக்க வேண்டிய வல்லுநர் குழாமுக்கு பயிற்சியளிக்கப்பட்டு விட்டது. அனைத்து வகுப்புகளுக்குமான மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்விப் பாடத் திட்டங்களும் வகுக்கப்பட்டு விட்டன.

4. மேலும் தேர்வு முறைச் சீர்திருத்த ஆராய்ச்சி, சென்னையிலும், வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன்பெறுவதற்கான தொடர் கல்வி மையங்களை நடத்துதல் ஆகிய பணிகளிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி—

5. உயர்நிலைப் பள்ளிநிலையில், பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு, அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி ( Open School ) ஒன்றை உருவாக்குவதுபற்றி ஆலோசனை கூற குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வேலை செய்து வருபவர்கள், இல்லத்தரசியர் போன்றோருள் 8-வது தேறியவர்கள் இப்பள்ளி மூலம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பினைத் தொடர வாய்ப்பு ஏற்படும்.

(viii) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன்.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டது, ஆசிரியர்கள் சமுதாயத்தில் ஒரு பெரும் பகுதியினர் எய்திய முக்கியமான ஒரு நன்மையாகும்.

2. இளநிலை, இடைநிலை மற்றும் அவற்றுக்குச் சமமான நிலைகளிலான ஆசிரியர்களுள் 20 ஆண்டு தத்தம் நிலையில் திருப்திகரமான பணியாற்றுபவர்களுக்கு, அவர்கள் தம் பதவிக்



குரிய தேர்வு நிலையில் 10 ஆண்டு பணியாற்றி முடித்திராவிட்டாலும்கூட, சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1—6—1981 முதல் அமுலாக்கப்பட்டுள்ளது.

3. இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் எட்டாம் வகுப்பு/எஸ்.எஸ்.எல்.சி. தேறிய பின்னர், இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ளதைக் கருத்தில் கொண்டு 1—6—1981 முதல் அவர்களுக்கு அவரவர் ஊதிய விகிதத்தில் ஒரு ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

4. ஒவ்வொரு உயர்நிலை மேல்நிலைப் பள்ளியிலும், பள்ளித் தலைமையாசிரியரும், ஒரு இளநிலை உதவியாளரும் விடுமுறையல்லாத பணியை சார்ந்தவராகக் கருதப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. விடுமுறையில்லாத பணிக்கான ஈட்டிய விடுப்பு வசதிகளை அவர்கள் பெறலாம்.

தனியார் பள்ளிகள்

5. தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1973 மற்றும் அச்சட்டத்தின் கீழ் வகுத்த விதிகள், 1974 ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்து திருத்தங்களை வெளியிட அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக, பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் வல்லுநர்க் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

6. தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஓய்வுக்கால வசதிகள், இலவசமாக மூக்குக் கண்ணாடி மற்றும் காது கேட்கும் கருவிகள் பெறுதல்; அரசு நிதியிலிருந்து பல்வேறு முன்பணங்கள் பெறுதல் போன்று ஏறத்தாழ எல்லாக் காரியங்களிலும் அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களைப் போலவே சலுகைகளைப் பெறுகின்றனர்.

ஆசிரியர் நலனுக்கான தேசீய நிதி.

7. ஆசிரியர்களும் அவர்களது குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும் பொழுது, இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆசிரியர்களின் பிள்ளைகளில் பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் துறைகளில் மேற்படிப்பைத் தொடருபவர்களுக்கு ஆண்டுதோறும் 80 புதிய படிப்புதவித் தொகைகள் வீதம் 1977–78 முதல் இந்நிதியிலிருந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

8. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுடைய பிள்ளைகளில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு படித்துக் கொண்டிருப்பவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்த "ஆசிரியர் நலனுக்கான தேசீய நிதி"-யிலிருந்து நிதியுதவி அளிப்பதற்கான ஒரு திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஏற்பளித்துள்ளது.

மாநில விருதுகள்—

9. அனைத்து நிலையிலுள்ள பள்ளி ஆசிரியர்களுள் சிறந்த பணி ஆற்றுபவர்களுக்கு மாநில அரசு விருது வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது.

## III. மேல்நிலைப்பள்ளிக் கல்வி

1981-82 இல் செயல்பட்டு வந்த 1,347 மேல் நிலைப் பள்ளி களின் விபரங்கள் பின்வருமாறு (1981-82ம் ஆண்டு மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட 106 பள்ளிகள் உட்பட):—

| பள்ளியின் வகை. | எண்ணிக்கை |
|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. .. | 1,274 |
| ஆங்கிலோ-இந்தியன் .. | 26 |
| மெட்ரிகுலேசன் .. | 33 |
| தொழில் நுட்பப் பள்ளிகள். .. | 14 |
| மொத்தம் .. | 1,347 |

(மைய அரசின் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றுடன் இணைந்த 58 மேல்நிலைப் பள்ளிகளின், எண்ணிக்கை மேற் கண்ட 1,347 பள்ளிகள் என்ற எண்ணிக்கையில் சேர்க்கப்பட வில்லை).

1981-82-ல் இந்த 1,347 பள்ளிகளில் மேல்நிலைப் பள்ளி வகுப்புக்களில் பயின்று வந்தவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

| | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதலாம் ஆண்டு வகுப்பு .. | 87,525 | 57,083 | 1,44,608 |
| இரண்டாம் ஆண்டு வகுப்பு .. | 82,424 | 48,364 | 1,30,788 |
| | | | 2,75,396 |



### கூடுதல் பணியாளர்கள்.

2. 1978-79ல் மேல்நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவையில் பெரும் பகுதி, மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பதவிக்கு முழுத்தகுதி பெற்ற உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளி களுக்கு மாற்றம் செய்தும், முதுகலைப் பட்டத் தகுதி பெற்றிராத உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் நடத்த ''உட்படுத்தியும்'' பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாண்டும் அதற்குப் பின்னர் உள்ள ஆண்டுகளுக்கும் கூடுதலாகத் தேவைப்பட்ட மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இதுவரை மொத்தம் 7,040 மேல் நிலைப் பள்ளி ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவற்றோடு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங் கள் 200-ம், ஆய்வுக் கூட உதவியாளர் பணியிடங்கள் 900-ம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்கான பணி விதிகள் ஏப்ரல் 1981-ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப் பள்ளியிலிருந்து ''உட் படுத்தப்பட்ட'' ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் களாக முறையான நியமனம் பெறுவதற்கு, 1-7-1978-லிருந்து ஐந்தாண்டுகளுக்குள் பட்ட மேற்படிப்புத் தகுதி அடைய அனுமதி கப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் பெற்று வந்த சிறப்பூதியம் 1-9-1981 முதல் ரூ. 25-லிருந்து ரூ. 40 ஆக உயர்த்தப்பட்டது. இவ்வாசிரியர்கள் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்று முழுமையான தகுதி பெற உதவும் வகையில் அரசு சிறப்புப் பாடமுறைகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. அவர் களுடைய (பட்ட மேற்படிப்பிற்கான) படிப்புக் கட்டணத்தில் ஒரு பகுதியை அரசே ஏற்றுக் கொள்கிறது. மேலும் பள்ளி விடு முறைக் காலங்களில் பட்டமேற்படிப்பு வகுப்புகளில் கலந்து கொள்ள இந்த ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்கள் தம் குடும்பங் களை விட்டு அயலிடத்தில் தங்குவதற்கு ஏற்படும் செலவை ஈடு கட்ட இவர்களுக்கு ஆளுக்கு ரூ. 1,000 கடனாகவும் தமிழ்நாடு பாடநூல் நிறுவன நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

### மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள்.

4. 1981-82-ல் மொத்தம் 1,014 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன் றுக்கும் மேற்பட்ட தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ் வாறு கற்பிக்கப்பட்ட தொழிற் பாடங்களின் மொத்த எண்ணிக்கை 1,602 ஆகும். 1981-82-ல் மேல்நிலைப் பள்ளிகளில்

[1982 மார்ச் 19

பயின்று வந்த 2.75 இலட்சம் மாணவர்களில் 58,520 பேர் (அதாவது சுமார் 21 சத விகிதத்தினர்) பின்வரும் விவரப்படி தொழிற்பாடங்களைப் பயின்று வந்தனர் —

| தொழிற்பாட வகை. | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. வேளாண்மை .. | 4,561 | 35 | 4,596 |
| 2. மனையியல் .. .. | 73 | 2,818 | 2,891 |
| 3. வாணிகத்துறை .. | 20,884 | 10,617 | 31,501 |
| 4. பொறியியலும் தொழில் நுட்பவியலும். | 15,037 | 86 | 15,123 |
| 5. உடல் நலம் .. | 327 | 3,919 | 4,246 |
| 6. பலவகை .. .. | 66 | 97 | 163 |
| மொத்தம் .. | 40,948 | 17,572 | 58,520 |

5. முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்களைக் கற்பித்து வந்தவர்களான 491 முழு நேர தொழிற்பாட ஆசிரியர்களும், அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுவோரில் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும், பிற இடங்களில் வெளிநபர்களும் ஆக சுமார் 4,300 பகுதி நேர ஆசிரியர்களும் (மாதம் ரூ. 150 ஊதியத்தில்) தொழிற்பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். தொழிற்பாட மானிட்டர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

6. மேல்நிலைப் பள்ளித் தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல், அவர்கள் உயர்கல்வியும் தொடர்கல்வியும் பெற வழி செய்தல், போன்ற நோக்கங்களுடன், மேல்நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள் பாடத்திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்காக, 1982 சனவரியில் உயர்மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

## கட்டடங்களும் தளவாடங்களும்

7. 1978-79, 1979-80 மற்றும் 1980-81 ஆகிய ஆண்டுகளில் தொடங்கப்பட்ட 563 அரசு மேல் நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக்கூடமும் கட்ட



1982 மார்ச் 19]

பெருந்தொகையான ரூ. 10 கோடிக்கு அரசு ஏற்பளித்தது. 1981–82ல் தொடங்கிய அரசு மேல்நிலைப்பள்ளிகள் 67-க்கும் மொத்தம் ரூ. 1.68 கோடி செலவில் கட்டிடம் கட்டித் தர 1982–83ல் ஏற்பளிக்கப்பட்டு, அவ்வாண்டு அவ்வகையிலான செலவு ரூ. 1.34 கோடி அளவுக்குள் அடக்கப்படும். முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முற்றுப்பெறாமல் உள்ள மேல்நிலைப்பள்ளிக்கட்டட வேலைகளுக்காக 1982–83ல் ரூ. 87 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகள் அனைத்திற்கும் தேவையான ஆய்வுக் கூடத் தளவாடங்கள் வகையில மொத்தம் ரூ. 5 கோடி செலவிடப்படுகிறது. சிறு தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலமாக இத்தளவாடங்கள் வாங்கப்பட்டு, பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் மரச்சாமான்கள் வாங்குவதற்காக ரூ, 24 இலட்சத்திற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

9. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல்நிலைப் பள்ளி கட்டடங்கள் கட்டவும் தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்தது' இதுவரை இத்திட்டத்தின் கீழ் மானிய உதவிக்கு சுமார் 525 அரசு அல்லாத மேல்நிலைப் பள்ளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1982–83ல் இத்திட்டத்தின் கீழ் மேலும் பல பள்ளிகள் பயன்பெறும். இத்திட்டத்திற்கென அடுத்த ஆண்டு ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10, கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக் கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் நோக்குடன் ''கல்லூரி இணையங்களும் பாலிடெக்னிக் இணையங்களும்'' இயன்ற இடங்களிலெல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

11. மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்த அரசு இதுவரை ரூ. 13 இலட்சம் அளவில் செலவிட்டுள்ளது.

12. மேல்நிலைப் பள்ளிக் கல்விக்கு அரசு செய்யும் செலவினம் மிகுபயன் விளைவிப்பதாக அமைவதற்கும், அக்கல்வியை மேலும் விரிவாக்குவது குறித்த வரன் முறைகளை நிர்ணயிப்பதற்கும் ''மதிப்பீடு மற்றும் திட்டச்செயற்பாடு ஆய்வு இயக்குநர் மூலம் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை விரிவாக ஆய்வு செய்ய அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது.

[1982 மாக்ச் 19

## IV அரசுத் தேர்வுகள்

அரசுத் தேர்வுத்துறை 1975 பிப்ரவரியில் அமைக்கப்பட்டது மாநிலமனைத்துக்கும் நடைபெறும் முக்கியமான இரண்டு தேர்வுகளான உயர்நிலைப்பள்ளி இறுதி தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) மேல்நிலைப்பள்ளித் தேர்வு ஆகிய இரண்டு தேர்வுகளை நடத்தும் பெரும் பணியில் மதுரையிலும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ள இத்துறையின் வட்டார அலுவலகங்களும் பங்கு பெறுகின்றன. அவ்விரு தேர்வுகளுடன் தொழில் கல்வி, ஆசிரியர் பயிற்சி முதலியவற்றைச் சார்ந்த வேறு 38 தேர்வுகளையும் இத்துறை நடத்தி வருகின்றது. ஆண்டுதோறும் இந்த தேர்வுகள் அனைத்தையும் எழுதுபவர்கள் மொத்த எண்ணிக்கை 7 இலட்சம் ஆகும். மதுரை, கோயம்புத்தூர் வட்டார அலுவலகங்கள் தத்தமது வட்டாரங்களில் 1981 எஸ்.எஸ்.எல்.சி.. தேர்வை சிறந்த முறையில் நடத்தியுள்ளன. 1982–83ல் இத்துறைக்கு மற்றொரு வட்டார அலுவலகம் திருச்சிராப்பள்ளியில் **அமைக்கப்படும்.**



1982 மார்ச் 19]

2. இத்துறை நடத்தும் முக்கியமான தேர்வுகளை எழுதும் மாணவர் எண்ணிக்கை வருமாறு:—

| தேர்வு | 1981 மார்ச்/ஏப்ரல். தேர்வு எழுதியோர். | 1981 மார்ச்/ஏப்ரல். தேறியோர் விழுக்காடு | 1981 அக்டோபர் தேர்வு எழுதியோர். | 1982 மார்ச்/ஏப்ரல் தேர்வு எழுத இருப்போர் (தோராயமாக). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **எஸ்.எஸ்.எல்.சி,—** | | | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) | 3,10,389 | * | 91,664 | 3,50,000 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர் .. .. | 2,59,613 | 58 | .. | .. |
| ஆங்கிலோ–இந்தியன் .. .. | 2,500 | 83 | 492 | 3,000 |
| மெட்ரிகுலேசன் .. .. | 2,469 | 88 | 299 | 3,000 |
| மேல்நிலைப் பள்ளித்தேர்வு— | | | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) .. | 1,45,974 | * | 44,018 | 1,64,000 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர் .. .. | 1,23,757 | 61 | .. | .. |

* பகுதி முறைத் தேர்வு காரணமாக (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) எழுதுவோரில் தேறியோர் சதவீதம் கணக்கிட்டுத் தர இயலவில்லை.

[1982 மார்ச் 19

மேல்நிலைப்பள்ளித் தேர்வு—

3. மேல்நிலைப் பள்ளித் தேர்வைப் பொதுக் கல்விப்பாடங்கள் 27-க்கும் தொழிற்கல்விப் பாடங்கள் 66-க்கும் நடத்த வேண்டியிருக்கிறது. பல்வேறு பாடங்களின் தொகுப்புகள் 254 ஆகும். இவையனைத்துக்கும் தேர்வுகளை நன்முறையில் நடத்த சீரான ஒழுங்கு முறை வகுக்கப்பட்டுள்ளது. தொழிற் பாடங்களில் செயல்முறைத் தேர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தேர்வு முறை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

4. எஸ்.எஸ்.எல்.சி. தேறியுள்ளவர்களுள் 18 வயது முடிந்தவர்கள், 1981 எப்ரல் மேல்நிலைப் பள்ளித் தேர்விலிருந்து தொழிற்பாடம் இல்லாத கலைப் பாடங்களில் (அதுவும் செயல்முறைத் தேர்வு இல்லாத பாடங்களில்) தனிப்பட்ட முறையில் மேல்நிலைப் பள்ளித் தேர்வை எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1982 அக்டோபர் முதல் எஸ்.எஸ்.எல்.சி. மேல்நிலைப்பள்ளித் தேர்வுகளை தனிப்பட்ட முறையில் எழுதுவோர் நுழைவுச் சீட்டில் அவரவர் நிழற்படம் இருக்கும். தேர்வு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன் அவர்கள் நுழைவுச் சீட்டுக்கள் 150 விநியோக மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அம்மையங்களிலிருந்து தேர்வு எழுதுவோர் அச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி வங்கி முறை—

5. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் கேள்வி வங்கி முறையைச் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் கல்வித்தர மதிப்பீட்டுக் கோட்பாடுகளுக்கேற்ப ஆழ்ந்த யோசனையுடன் கேள்வித் தாள்களை தேர்வுக்காக வகுக்கவும், மாணவர்கள் தாம் பயின்றவற்றில் நம்பிக்கையுடன் தேர்வைச் சந்திக்கவும் இம்முறை வழிவகுக்கும்.

பிற தேர்வுகள்—

6. இத்துறை நடத்திவரும் பிற தேர்வுகளுள் முக்கியமானவை ஆசிரியர் பயிற்சிப் பட்டயப் படிப்பு (டிப்ளமா), மரவேலை, நெசவு, தையல் வேலை போன்ற தொழில் தேர்வுகள் ஆகியவையாகும். 14 வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளும் வகையில் நடத்தப்பெறும் தொடக்கப் பள்ளி இறுதி பொதுத் தேர்வு (இ.எஸ்.எல்.சி.) ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. 1981 டிசம்பரில் நடந்த இத்தேர்வில் சுமார் 2,800 பேர் கலந்து கொண்டனர்.



1982 மார்ச் 19]

## V. முதியோர் கல்வியும் பள்ளிசாராக் கல்வியும்.

முதியோர் கல்விக்கும் பள்ளிசாராக் கல்விக்கும் 1982–83 நிதிநிலை அறிக்கையில் ரூ.1.95 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

முதியோர் கல்வி.

2. எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் தமிழ்நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின்வருமாறு இருந்து வருகிறது.—

| சென்சஸ் ஆண்டு. | தமிழ்நாடு. | | |
|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1971 .. | 51.78 | 26.36 | 39.46 |
| 1981 .. .. | 57.19 | 34.12 | 45.78 |

| சென்சஸ் ஆண்டு. | இந்தியா. | | |
|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1971 .. .. | 39.51 | 18.44 | 29.34 |
| 1981 .. .. | 46.74 | 24.83 | 36.17 |

3. முதியோர் கல்வி மையங்களுள் பெரும்பாலானவை மைய அரசின் ஊரக (தொழிற் சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணியின் கீழோ அல்லது மாநில அரசின் முதியோர் கல்வித் திட்டத்தின் கீழோ செயல்படுவனவாகும்.

ஊரக (தொழிற் சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணி.

4. மைய அரசின் முழுப் பண உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தின் சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, நீலகிரி தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் 3,600 மையங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே உள்ள மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளனர். அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரி ஆசிரியர் மற்றும் பட்டதாரிகளிடையேயிருந்து மேற்பார்வையாளர் நியமிக்கப்படுகின்றனர்,

ஒவ்வொரு மையத்திலும் முதியோருக்கு கல்வி புகட்டுபவர்கள் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறி வேலை வாய்ப்பின்றியுள்ள இளைஞர்கள், பால்வாடி ஆசிரியர்கள் சிவில்/இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள், முறையான பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். இதற்காக அவர்களுக்கு முதியோர் கல்வி பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் இம்முதியோர் கல்வி வகுப்புகள் 10 மாத காலம் நடக்கின்றன. இம்மையங்கள் இத்தகைய 10 மாத வகுப்புகளை ஆண்டுக்கு ஒரு தொகுதியினர் வீதம் இரண்டு தொகுதியினருக்கு நடத்தி முடித்து விட்டு, இப்பொழுது மூன்றாவது தொகுதியினருக்கு எழுத்தறிவித்து வருகின்றனர். ஒவ்வொரு தொகுதி (10 மாத) வகுப்புகளையும் நடத்த சுமார் ரூ. 65 லட்சம் செலவாகிறது.

மாநில அரசின் முதியோர் கல்வித் திட்டம்.

5. இம்மாநிலத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் வரும் 61 ஊராட்சி ஒன்றியங்களில் 1980 பிப்ரவரி—மார்ச் மாதங்களில் மொத்தம் 6,100 முதியோர் கல்வி மையங்களை இவ்வரசு தன் நிதியிலிருந்து தொடங்குவதன் மூலம் ஒரு பெரும் முதியோர் கல்வி திட்டத்தை தொடங்கி வைத்தது. இம்மையங்களும் இரண்டு தொகுதியினருக்கு வகுப்புகள் நடத்தி முடித்துள்ளன. 1982 மார்ச் மாதம் மூன்றாவது தொகுதியினருக்காக வகுப்புகள் தொடங்க இருக்கின்றன. ஒவ்வொரு தொகுதி (10 மாத) வகுப்புகளையும் நடத்த சுமார் ரூ. 1.23 கோடி செலவாகிறது. ஊரக (தொழிற் சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணி திட்ட மையங்களைப் போன்ற மாநில அரசின் முதியோர் கல்வித் திட்டமையங்களும் செயல்படுகின்றன.



6. மேற்கண்ட இரு திட்டங்களின் கீழும் இதுவரை நடந்துள்ள எழுத்தறிவிப்புப் பணியின் விவரம் வருமாறு:—

எழுத்தறிவு பெற்ற முதியோர் எண்ணிக்கை.

| | ஆடவர். | மகளிர். | மொத்தம். | மொத்த எண்ணிக்கையில் சேர்ந்துள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவிப்புத் திட்டம் | | | | |
| 1-வது தொகுதி வகுப்புகள் 1979 ஜூலை—1980 அக்டோபர். | 95,000 | 27,000 | 1,22,000 | 40,000 |
| 2-வது தொகுதி 1980 நவம்பர் —1981 ஆகஸ்டு. | 63,000 | 62,000 | 1,25,000 | 55,000 |
| 3-வது தொகுதி 1981 நவம்பர் .. | 35,000 | 67,000 | 1,02,000 | 54,000 |
| (2) மாநில அரசின் முதியோர் கல்வித் திட்டம். | | | | |
| 1-வது தொகுதி வகுப்புகள் (1980).. | 97,000 | 96-000 | 1,93,000 | 78,000 |
| 2—வது தொகுதி (1981) .. .. | 77,000 | 1,21,000 | 1,98,000 | 1,06,000 |

இவ்விரண்டு திட்டங்களின் கீழும் பயன்பெறும் மகளிர் எண்ணிக்கையும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கையையும் வர வர அதிகரிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது.

[1982 மார்ச் 19

பிற அமைப்புகளின் எழுத்தறிவிப்புப் பணிகள்.

7. தமிழ்நாட்டில் தனியார் அமைப்புகள் 34, மைய அரசுப் பண உதவியுடன் நடத்திய 1,710 முதியோர் கல்வி மையங்களின் முதல் தொகுதி வகுப்புகளில் 63,[illegible]00 பேர் எழுத்தறிவு பெற்றனர். அவ்வகுப்புகள் 198[illegible]-ல் முடிவு பெற்றன. இரண்டாவது தொகுதி வகுப்புகளைத் தொடங்கி நடத்த மைய அரசுப் பண உதவி நீடித்தால் அவை தொடங்கும்.

8. ஏனைய அமைப்புகள் நடத்தி வரும் முதியோர் கல்வி மையங்களில் எழுத்தறிவு பெறுவோர் எண்ணிக்கை விவரம் வருமாறு:—

| | மையங்கள் எண்ணிக்கை. | பயில்வோர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கல்லூரி மாணவர்கள் .. .. | 600 | 17,000 |
| நேரு இளைஞர் மையங்கள் .. | 226 | 6,000 |
| உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள். | 295 | 7,000 |

தொடர் கல்வி மையங்கள்.

9. முதியோர் கல்வி நிலையங்களில் எழுத்தறிவு பெற்றவர்களுக்கு எழுத்தறிவுக்கு மேலான தொடர் கல்வி அளிப்பதற்கான மையங்களும் தகவனிறைவு வட்டாரங்கள் 61-ல் தொடங்கப்பட்டுள்ளன. 1982–82-ல் 100 மையங்கள் தொடங்கப்பட்டன. 1982–83-ல் மேலும் 122 மையங்கள் தொடங்கப்படும். அம்மையங்களில் அவர்களுக்குத் தகுந்த புத்தகங்களும் இதழ்களும் வழங்கப்படும்.

பிற திட்டங்கள்.

10. இத்துறையில் அமைக்கப்பட்டுள்ள, வெளியீட்டுப் பிரிவு மாத இதழ் ஒன்றையும், முதியோர் கல்வி, பள்ளி சாராக் கல்விப் பாட நூல்களையும் தயாரித்து வெளியிட இருக்கிறது. முதியோர் கல்வி பயிலுவோர்களுக்கு உதவக் கூடிய கல்வித் திரைப் படங்களைக் காட்டக் கூடிய வலம் வரும் உந்து வண்டி ஒன்று (ஒலி-ஒளி சாதனங்களுடன்) மதுரை மாவட்டத்தில் செயல்பட இருக்கிறது.



1982 மார்ச் 19]

தொழிலாளர் கல்வி நிலையம்.

11. அண்மையில் மைய அரசுப் பண உதவியுடன் இவ்வரசு தொழிலாளர் கல்வி நிலையம் ஒன்றை அமைக்க ஏற்பளித்துள்ளது. நகர்ப்புறங்களிலும் பிற தொழிற் பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கல்விப் பயிற்சிகளையும் பிற நடவடிக்கைகளையும் அது திட்டமிட்டு மேற்கொள்ளும். கல்வி அமைச்சர் தலைமையில் அமைந்த ஆளுகைக் குழு ஒன்று இந்நிலையத்தின் பணிகளை நிருவகித்துவரும்.

பள்ளி சாராக் கல்வி.

12. பள்ளிக்கே செல்லாதவர்களும், சென்று பின் இடையில் நின்றுவிட்டவர்களுமான 6—14 வயதுச் சிறுவர்களுக்கு கல்வி புகட்ட பள்ளி சாராக் கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன. 1981–82–ல் செயல்பட்ட இம்மையங்களின் எண்ணிக்கை 988 ஆகும். அவற்றில் 748 மையங்கள் 1980–81–லும் 240 மையங்கள் 1981–82-லும் தொடங்கப்பட்டன. 1982–83–ல் மேலும் 50 மையங்கள் தொடங்கப்படும். இம்மையம் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டு வேலை செய்யும். பத்துமாத வகுப்புகள் மூன்றை நடத்தும்—ஒவ்வொன்றும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்காக. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களில் இவ் வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 50 மதிப்பூதியம் பெறுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் சுமார் 30 மாணவர் பயில்கின்றனர்.

13. மேற்கூறிய 988 மையங்களுக்கும் மேலாக இராமநாதபுரம் மாவட்டம். சிவகாசி பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளி சாராக் கல்வி மையங்கள் 1981-82–ல் தொடங்கப்பட்டன.

## VI. கல்லூரிக் கல்வி

1. தமிழ்நாட்டில் கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை தற்பொழுது 187 ஆக உள்ளது. அவற்றில் பயில்வோர் எண்ணிக்கை 1980–81–ல் 1,54,700 பேர் ஆக இருந்தது 1981–82–ல் 1,77,10[illegible] ஆக அதிகரித்து உள்ளது. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கீழ் செயல்பட்டுவரும் இந்த 187 கல்லூரிகள் மற்றும் பிற கல்லூரிகளைப் பற்றிய விவரங்களை இணைப்பில் காணலாம்.

2. இத்துறையில் 1979-80 ஆம் ஆண்டு முதல் சென்னை கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஐந்து ஊர்களில் அந்தந்த வட்டாரத்துக்கு ஒன்று என்ற வகையில் கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அலுவலகங்கள் 5 செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வட்டார அலுவலகத்திலும், ஒரு துணை இயக்குநர் பிற பணியாளர்களுடன் வேலை செய்து வருகிறார். 1982-83 ஆம் ஆண்டில் இவ்வலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் மேலும் ஒரு உதவி இயக்குநர் பதவி ஏற்படுத்தப்படும்.

3. அண்மையில் பாரதியார் பல்கலைக் கழகமும், பாரதிதாசன் பல்கலைக் கழகமும் அமைக்கப்பட்ட நிலையில் பல்கலைக் கழக வாரியாக மேற்கண்ட 187 கல்லூரிகளின் விவரம் வருமாறு:—

| பல்கலைக் கழகம். | நிருவாக வரம்பிற்குட்பட்ட மாவட்டங்கள். | கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னைப் பல்கலைக் கழகம். | சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தர்மபுரி. | 44 |
| பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி. | 33 |
| பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை. | 33 |
| மதுரை காமராஜ் பல்கலைக் கழகம். | மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி. | 77 |
| | மொத்தம் .. | 187 |

4. புதிய பல்கலைக் கழகங்கள் இரண்டுக்கும் தேவையான நிலத்தை கையகப்படுத்துவதற்கும், மற்றும் தேவையான பல்வேறு வசதிகளைச் செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.





5. இவ்வாண்டில் (1981-82) நிறுவப்பட்ட மூன்றாவது பல்கலைக் கழகம் தஞ்சாவூரில் 1981 செப்டம்பரில் அமைக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகும்.

6. காரைக்குடியில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து அமரர் அண்ணா உறுதி அளித்தவாறு பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அப்பல்கலைக் கழகத்திற்கான தேவைகளைக் கண்டறிய 'வளாக அபிவிருத்திக் குழு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் மகளிர் பல்கலைக் கழகம் ஒன்றும் நிறுவப்பட இருக்கிறது.

7. 1981-82-ல் சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள 3 கல்லூரிகளையும் சேர்த்து இம்மாநிலத்தில் மொத்தம் 13 கல்லூரிகள் சுய ஆட்சி உரிமை பெற்றுள்ளன. அக்கல்லூரிகள் தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும் தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்கும்.

தொடர் கல்வி.

8. மாலை நேர வகுப்புகளை நடத்திவரும் கல்லூரிகளின் எண்ணிக்கை 33—மதுரை காமராஜ் பல்கலைக் கழகமும் சட்டக் கல்லூரிகளிலும் உட்பட. இம் மாலைநேர வகுப்புகளில் பயில்வோர் சுமார் 8000 பேராவர். மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் "உட்படுத்தப்பட்ட" ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் 1981-82-ல் "கோடை விடுமுறைக் கால வகுப்பு மற்றும் அஞ்சல் வழிக் கல்வி" தரும் முனைப்புத் திட்டம் ஒன்றின்கீழ் கணிதம், இயல்பியல், வேதியியல், விலங்கியல், தாவர இயல் மனையியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய பாடங்களில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் கல்லூரிகளில் நடத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 172 ஆசிரியர்கள் "எம். ஏ.-வும் 731 ஆசிரியர்கள் எம்.எஸ்.சியும் பயின்றனர். 1982-83-ல் அரசுக் கல்லூரிகளில் கூடுதல் மற்றும் புதிய மாலை நேர வகுப்புகளை துவங்குவதற்காக ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9. தற்போது மதுரை காமராஜ், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் அஞ்சல் முறை வகுப்புகளை நடத்தி வருகின்றன. 1981-82-ல் மொத்தம் 90,000 பேர் அவற்றில் பயின்று வந்தனர். மேலும், முறையான கல்வி பெறாதவர்களுள் 21 வயது நிரம்பியவர்களுக்காக மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் நடத்திவந்த "அனைவரும் படிக்கத் தக்க பல்கலைக் கழக" வகுப்புக்களில் ஏறத்தாழ 14,000 பேர் பயின்று வந்தனர்.

## கல்வித்தர மேம்பாடு.

10. முன் ஆண்டுகளின் போல 1981-82 லும், கல்லூரிகளில் குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள கல்லூரிகளில், பல இடங்கள் காலியாக இருந்தன. ஆங்கிலப் பாடமொழி வகுப்புகளில் 7,350 இடங்களும். தமிழ்ப்பாட மொழி வகுப்புகளில் 2,670 இடங்களும் ஆகமொத்தம் 10.020 இடங்கள் இவ்வாண்டு காலியாக இருந்தன. இந்த நிலை கல்லூரிக் கல்வி வசதிகளை மேலும் விரிவாக்க பொதுப்படையாகத் தேவை இல்லை என்பதைக் காட்டுகிறது. எனவே கல்லூரிக் கல்வி மட்டத்தில் தர உயர்விலேயே கவனம் செலுத்தப்படுகிறது.

11. கடந்த 4 ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகளில் புதிதாக 104 பட்ட வகுப்புகளும் 28 பட்ட மேல்படிப்பு வகுப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன. 1982–83 ஆம் ஆண்டில் புதிதாக பட்ட வகுப்புகள் தொடங்க ரூ. 10 இலட்சமும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 5 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

12. அண்மை ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகளில் பட்ட வகுப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் மாணவர் எண்ணிக்கை கூடியுள்ளதற்கேற்ப பெஞ்சு முதலிய மரச் சாமான்கள் வாங்க 1982–33-ல் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக் கூட வசதிகளைப் பெருக்க அண்மை ஆண்டுகளில் ரூ. 21 இலட்சம் செலவிடப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டில் இதற்காக மேலும் ரூ. 3 இலட்சம் செலவிடப்படும். அரசுக் கல்லூரி மாணவர்களுக்கான பாடப்புத்தக நூலகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அரசுக் கல்லூரிகளில் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் விளையாட்டுக் கருவிகள் வாங்கவும் 1982-83-ல் ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

13. வரும் 1982-83-ம் ஆம் ஆண்டில் கல்லூரிக் கட்டடங்கள்' மாணவர் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கும் மாணவர் வசதிக்கான உணவருந்தும் இடம், சிற்றுண்டிச் சாலை, மிதிவண்டி நிறுத்துமிடம், கழிவிட வசதிகள், பிற சிறு கட்டடப் பணிகள் போன்றவற்றுக்கும் கணிசமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இக் கட்டடப் பணிகளுக்காக 1982-83-ல் ரூ. 62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.—(புதிய வேலைகளுக்காக ரூ. 25 இலட்சமும் முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ள வேலைகளுக்காக ரூ. 37 இலட்சமும்).

14, கல்லூரி ஆசிரியர்களுடைய பயிற்றுவிக்குந்தர உயர்வுக்காக அவர்களை ஆராய்ச்சிப் படிப்பிற்கு அனுப்புவதற்கான் பல்கலைக் கழக மானியக் குழுவின் திட்டத்தின் கீழும் மாநில அரசே செயல்படுத்தும் திட்டத்தின் கீழும் ஆசிரியர்கள் ஆராய்ச்சிப் படிப்பிற்கு அனுப்பப்படுகிறார்கள். மாநில அரசுத் திட்டத்தின் கீழ் 1979–80—ல் 494 ஆசிரியர்களும், 1980–81 ஆம் ஆண்டில் 132 ஆசிரியர்களும் எம். பில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர். மேலும் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்.டி,) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் 29 பேர் இதுவரை முகாமையில் அனுப்பப்பட்டு உள்ளனர். தற்பொழுது அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் சுமார் 280 பட்டதாரி பயிற்றுநர்கள்/விளக்குநர்கள் உள்ளனர். அவர்களை ஆண்டுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கை வீதம் பட்ட மேற்படிப்புக்கு அரசின் செலவில் முகாமையில் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. 1981–82-ம் ஆண்டில் அவ்வாறு 30 பேர்கள் அனுப்பப்பட்டனர்.



15. கல்லூரிகளில் பட்ட வகுப்புகளில் இரண்டாம் பிரிவு பொது ஆங்கிலம், மூன்றாம் பிரிவில்—சிறப்பு ஆங்கிலம் ஆகியவற்றைப் பயிற்றுவிப்பவர்களுக்கும், எம்.ஏ. (ஆங்கிலம்) ஆசிரியர்களுக்கும் 1981–82—ல் மறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இத்திட்டம் 1982-83—லும் தொடரும். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் உள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கும் இது விரிவாக்கப்படும்.

## படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்.

16. கல்லூரிக் கல்வித்துறை நிர்வகித்துவரும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் முக்கியமானவற்றின்கீழ் பயன் பெறுவோர் விவரம் வருமாறு:—

| திட்டம். | 1981–82ல் புதிதாகத் தந்த உதவித் தொகைகள் எண்ணிக்கை | 1981–82ல் (புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை) எண்ணிக்கை | 1982–83-ல் வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள பணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் லட்சத்தில்) |
| (மேல் நிலைப் பள்ளி வகுப்புகளில் தரப்பட்டவை உட்பட | | | |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் .. | 1,700 | 5,205 | 60 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம் .. | 1,397 | 6,590 | 45 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய தேசிய படிப்புதவித் தொகை .. .. | 70 | 225 | 4 |

17. 1977–78-லிருந்து பட்ட வகுப்புகளிலும் அதற்கு மேலான வகுப்புகளிலும் பயிலும் ஆதி திராவிடர் பழங்குடிகள் ஆகியோருக்கு அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் எவ்வளவாயிருப்பினும் முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் துறை அவர்களுக்குப் படிப்புதவித் தொகைகளை அளிக்கிறது. பிற்பட்டவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து கிடைக்கின்றன. மேலும் ஆண்டுதோறும் ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுள் மேல் நிலைப் பள்ளித் தேர்வில் 60 சதவிதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ. 300 உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

கல்லூரிகளில் தமிழ்ப்பயிற்று மொழி.

18. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப் பணம் புத்தகப்படியாக ரூ. 180 தரப்பட்டு வருகிறது, 1980–81 ல் 18,040 பேர்களும், 1981–82 ல் 20,695 பேர்களும் இவ்வுதவிப் பணம் பெற்றனர். இத்திட்டத்திற்காக 1982–83 ஆம் ஆண்டில ரூ. 35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இது வரை 901 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. ரூ. 50 இலட்சம் விலை மதிப்புள்ள புத்தகங்கள் கல்லூரிகளிலுள்ள புத்தக வங்கிகளுக்கு இலவசமாக அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தை மதிப்பீடு செய்யவும் வருங்காலத்தில் புதிய வெளியீடுகள் பற்றித் திட்டமிடவும் அண்மையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

கல்லூரிகள் சுமுகமாக நடைபெறுவதற்கான நடவடிக்கைகள்.

19. கல்லூரிகளில் ஆசிரியர்கள், பிற பணியாளர், மாணவர்கள் ஆகியோரின் நலனைக் கவனித்துவர நலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர் அமைதியின்மையை குறைப்பதற்காக 1981 மே, சூன் மாதங்களில் அனைத்துக் கட்சிகளின் கூட்டங்கள் இரண்டு கூட்டி விவாதிக்கப்பட்டது. கல்லூரிப் பேரவைத் தேர்தல்களை அமைதியாகவும் குறுகிய காலத்திலும் நடத்திட வழிமுறைகள் வகுக்கப்படுகின்றன.

கல்லூரி ஆசிரியர் பிற பணியாளர்கள் நலன்.

20. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய்துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை. பல்கலைக்கழக மானியக் குழுச் சம்பள விதங்களை அளித்தது; தகுதி பெற்ற



பயிற்றுநர்களையும் விளக்குநர்களையும் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தியது; 10 ஆண்டு பணி முடித்த உதவிப் பேராசிரியர்களை 1-4-1980 முதல் பேராசிரியர்களாக உயர்த்தியது. உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் பணியாளருக்கு நேரடியாக சம்பளம் வழங்கியது மற்றும் ஓய்வூதியம், விடுப்பு, குழு ஈட்டுறுதித் திட்டம் ஆகிய விஷயங்களில் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிட்டும் அதே அளவு சலுகைகளை தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கியது ஆகியவையாகும். கல்லூரி ஆசிரியர்களுள் சிறப்பாக பணியாற்றுபவர்களைப் போற்றுவதற்காக 1979-80 முதல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாநில அரசு விருதளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டு அதன்கீழ் ஆண்டுதோறும் கல்லூரி ஆசிரியர்கள் 10 பேருக்கு ஆளுக்கு ரூ. 1,000 ரொக்கப் பரிசு, வெள்ளிப் பதக்கம், சான்றிதழ ஆகியவை அடங்கிய விருது அளிக்கப்படுகிறது.

சட்டக் கல்வி.

21. 1981–82-ல் சட்டக் கல்லூரிகளில் பயின்று வந்தோர் எண்ணிக்கை வருமாறு:—

முறையான பட்ட வகுப்புகள்.

| சட்டக் கல்லூரியின் பெயர். (1) | மொத்த மாணவர். (2) | அவர்களுள் தமிழில் பயின்றவர். (3) | மாலை நேர பட்ட வகுப்பு. (4) | பட்ட மேற் படிப்பு. (5) |
|---|---|---|---|---|
| சென்னை | 1,045 | 114 | 444 | 106 |
| மதுரை | 707 | 48 | 80 | .. |
| கோயம்புத்தூர் | 360 | .. | .. | .. |
| திருச்சிராப்பள்ளி | 360 | .. | .. | |

22. அண்மை ஆண்டுகளில் கோயம்புத்தூரில் சட்டக் கல்லூரிக்கு கட்டடம் மற்றும் மாணவர் விடுதி கட்டுவதற்காக ஏற்பளிக்கப்பட்டது. மதுரை சட்டக் கல்லூரிக்கு மாணவியர் விடுதி ஒன்று கட்டவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டு வரவு ரூ. செலவு மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரிக்கு கட்டடம் கட்ட ரூ. 10 இலட்சமும் மதுரை சட்டக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்ட ரூ. 5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## VII. தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக் கல்விக்காக 1982–83 ல் சுமார் ரூ. 15.66 கோடி (கட்டிடங்கள், கடன்கள் அண்ணா பல்கலைக் கழகத்துக்கு மானியம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின்கீழ் 7 பொறியியல் கல்லூரிகளும் 50 பல் தொழிற் நுட்பப் பயிலகங்களும் (மகளிர் பயிலகங்கள் ஏழும், தனித் தொழில் பட்டய-டிப்ளமோ-கல்வியகங்கள் எட்டும் உட்பட) 11 தொழிற்பாட மேல் நிலைப் பள்ளிகளும் உள்ளன.

[1982 மார்ச் 19

2. இவற்றில் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை பொறியியற் கல்லூரிகளில் (திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரியில் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கியுள்ள இடங்கள் உட்பட) முழு நேர பட்ட வகுப்புகளில் 1,475 பேர்கள்; பல் தொழில் நுட்ப பயிலகங்களில் பட்டயப் படிப்புகளில் 6,800 பேர்கள்; மற்றும் தொழிற்பாட மேல்நிலைப் பள்ளிகளில் 840 பேர்கள். பல் தொழில் நுட்பப் பயிலகங்களில் சேர அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதோடு பின்வருமாறு புதிய பல் தொழில் நுட்பப் பயிலகங்களையும் திறந்துள்ளதால் அப் பயிலகங்களில் சேர அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

| ஆண்டு. | | புதிதாகத் திறந்த பல்தொழில் பயிலகங்கள். |
|---|---|---|
| 1979-80 | .. | 1 |
| 1980-81 | .. | 5 (மகளிர் பயிலகங்கள் 2 உட்பட) |
| 1981-82 | .. | 6 (மகளிர் பயிலகங்கள் 2 உட்பட) |

அண்ணாமலை பல் தொழிற் பயிலகம், செட்டிநாடு மற்றும் முத்தையா பல் தொழிற் பயிலகம் அண்ணாமலை நகர் ஆகிய பயிலகங்களில் 1981-82-இல் ஷிப்டு முறை புகுத்தப்பட்டது. அவற்றில் இம்முறை செயல்படும் பாங்கைக் கவனித்த பின்னர் மற்றும் சில நிறுவனங்களுக்கும் இம்முறை விரிவாக்கப்படும். 1981-82 ல் திருநெல்வேலியில் புதிதாக ஒரு அரசு பொறியியற் கல்லூரி தொடங்கப்பட்டது.

பல்கலைப் பாடப் பிரிவுகளைத் தொடங்குதல்.

3. எந்தெந்தப் பாடங்களில் பயிற்சி பெற்றவர்கள் தற்போது தொழில் துறையில் தேவையோ அதைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் பல் தொழில் நுட்பப் பயிலகங்களில் வேலை வாய்ப்புக்கு இசைந்த புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்படுகின்றன. 1980-81, 1981-82 ஆண்டுகளில் பின்வரும் புதிய பாடமுறைகள் தொடங்கப்பட்டன:

பட்டய மேற்படிப்புகள் :

வார்ப்படப் பொறியியல்.
கட்டட அமைப்புத் தொழில் நுட்பவியல்.
தொழில் முறை மின்னணுவியல்.
இயந்திரப் பராமரிப்பு.
உற்பத்திப் பொறியியல்.



1982 மார்ச் 19]

பட்டயப் படிப்புகள்.

குளிர்பதன முறை மற்றும் குளிர் வசதி முறை.
உற்பத்திப் பொறியியல்.
மின்னணுவியல்.

விருப்பப் பாடங்கள் :

நவீன வேளாண்மைக் கருவி தொழில் நுட்பவியல்.
தொழில் முறை மின்னணுவியல்.
கருவியியல்.

4. 1982-83. ல் பல்தொழில் பயிலகங்களில் பின்வரும் புதிய பாடமுறைகள் தொடங்கப்படும்.

பட்டய மேற்படிப்புகள் :

| | |
|---|---|
| மையபல்தொழில் பயிலகம், சென்னை. | கருவி நுட்பவியல். |
| அரசு பல்தொழில் பயிலகம், வேலூர். | வார்ப்படப் பொறியியல். |
| நாச்சிமுத்து பல்தொழில் பயிலகம், பொள்ளாச்சி. | தொழில் முறைப் பொறியியல் |

பட்டயப் படிப்புகள் :

| | |
|---|---|
| பக்தவச்சலம் பல்தொழில் பயிலகம், காஞ்சிபுரம். | மின்னணுவியல் மற்றும் தொலை தொடர்புப் பொறியியல். |
| அரசு பல்தொழில் பயிலகம், நாகர்கோவில் | இயந்திர வடிவமைப்பு மற்றும் இயந்திரப்பட வரைவு (மகளிருக்கு) |

விருப்பப்பாடங்கள் :

| | |
|---|---|
| இராசகோபால் பல்தொழில் பயிலகம், குடியாத்தம். | பவர் சிஸ்டம். |
| பி. ஏ. சி. இராமசாமி ராசா பல்தொழில் பயிலகம், இராசப்பாளையம் | தொலைக்காட்சி மற்றும் அடிப்படைத்தொழில் நுட்பமும் பராமரிப்பு முறைகளும். |

பல்தொழில் பயிலகங்களுக்குக் கூடுதல் வசதிகள் :
அவற்றின் தரத்தை உயர்த்துதல்.

5. சென்னை, மையப் பல்தொழில் பயிலகத்தில் 1982–83-ல் மைக்ரோ பிராஸசர் அடிப்படையில் அமைந்த மின் கணக்கீட்டுப் பொறி ஒன்று அமைக்கப்படும் காரைக்குடி, அழகப்பா பல்தொழில் பயிலகத்திற்குக் கூடுதல் கட்டிடமும், மதுரை, தமிழ்நாடு பல்தொழில் பயிலகத்தின் குடிநீர் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டுக் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தொட்டியும் கட்டப்படும். பல்தொழில் பயிலக பாடத் திட்டங்களை வகுக்கும் மையம் ஒன்று 1982–83-ல் தொழில் நுட்பக் கல்வி இயக்கத்தில் தனியாக அமைக்கப்படும். பெரியார் மாவட்டம், அத்தாணியிலுள்ள சக்தி தொழில் நுட்ப பயிலகத்தில் மாணவர், விடுதி கட்ட 1982–83-ல் ரூ. 2 இலட்சம் கடனாக வழங்கப்படும்.

தொழில் நுட்பக் கல்வி இயக்கத்தின் கீழுள்ள பொறியியல் கல்லூரிகள்.

6. 1982-83 ல், பொறியியற் கல்லூரிகளில் பின்அரும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கப்படும்.

| | |
|---|---|
| அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக கல்லூரி, காரைகுடி. | நுண் அலை மற்றும் ஒளி அலை பொறியியல். |
| அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர். | செயல் முறை வெதியியல். |
| கோயம்புத்தூர் தொழில் நுட்ப நிறுவனம், கோயம்புத்தூர். | கணக்கீட்டுப் பொறி சார்ந்த வரைவு வடிவமைப்பு. |

7. கணக்கீட்டுப் பொறிகளை பயன்படுத்தும் பொருட்டு மாணவர்களுக்கு நடைமுறைப் பயிற்சியளிப்பதற்காக 1982-83-ல் சேலம் அரசினர் பொறியியற் கல்லூரியில் ரூ. 4.50 இலட்சத்தில் ஒரு சிறிய கணக்கீட்டுப்பொறி அமைக்கப்படும். ஒரு கல்லூரிக்கு ரூ. 1 இலட்சம் என்ற விகிதத்தில் செலவிட்டு 3 தனியார் பொறியிற் கல்லூரிகளின் நூலக வசதிகள் மேம்படுத்தப்படும். 1982–83-ல் கோவை அரசினர் பொறியியற் கல்லூரிக்கான மாணவர் விடுதி கட்டப்படும். மேலும் காரைக்குடி ஏ. சி. தொழில் நுட்பக் கல்லூரிக்கான குடிநீர் வசதியை மேம்படுத்தும் பணியும் 1982-83–ல் மேற்கொள்ளப்படும். அரசினர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு நவீன பயிற்றுங் கருவிகள் வழங்க 1982-83-ல் ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.





அண்ணா பல்கலைக் கழகம் :

8. பொறியியலிலும் தொழில் நுட்பத்திலும் தரமான உயர் கல்வி தரும் ஒரு சிறந்த மையத்தனை உருவாக்கும் நோக்கத்துடன் 4-6–1978 அன்று அண்ணா பல்கலைக் கழகம் சென்னையில் நிறுவப்பட்டது. பொறியியல் கல்லூரி, கிண்டி ஏ. சி. தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைந்திருந்த சென்னைப் பல்கலைக்கழகத் தொழில் நுட்பத் துறைகள்; அப்பல்கலைக் கழகக் கட்டிடக் கலை—நகர்புறத் திட்டப்பள்ளி; சென்னைத் தொழில் நுட்ப நிறுவனம், குரோம்பேட்டை ஆகிய நான்கு நிறுவனங்களை ஒருங்கிணைத்து அண்ணா பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. இப் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 3,900க்கும் அதிகமாகும்—அவர்களில் பட்ட வகுப்புகளில் 3,255 பேரும், பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் 686 பேரும் பயிலுகின்றனர். இவ்வெண்ணிக்கையில் 300 மாணவியரும் அடங்குவர். இப்பல்கலைக் கழகத்தில் 21 பட்ட வகுப்புப் பாட முறைகள் 31 பட்ட மேற்படிப்புப் பாட முறைகள், 7 பட்ட மேற்படிப்புக்கு உயர்ந்த நிலையில் பட்டயப் படிப்பு பாட முறைகளும் உள்ளன. கணிதம், இயல்பியல், வேதியியல் ஆகியவற்றில் எம்.பில். படிப்பதற்கான வசதிகளும், பொறியியல், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில், இறிவியல் ஆகிய துறைகளில் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகளும் இப்பல்கலைக் கழகத்தில் உள்ளன. நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் எத்தனால் ''ஐக் கொண்டு தானியங்கி உந்து வண்டிகளை இயக்குதல் போன்றவற்றில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சக்திவள ஆதாரங்கள்; கட்டிடத் தொழிலியல் ஆகியத் துறைகளில் ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக் கழகத்திற்கு திட்டமல்லாத மானியமாக ரூ.180 லட்சம் வழங்க 1982_83–ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது, அத்துடன் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியையும் பெற்று, மேலும் பல வளர்ச்சிப் பணிகளை அண்ணா பல்கலைக் கழகம் மேற்கொள்ள வகை செய்யும் பொருட்டு திட்டமானியமாக ரூ. 62 இலட்சம் தரவும் 1982–83–ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

9. இவ்வரசின் நிதியுதவியுடன் அண்ணா பல்கலைக் கழகம் தொலைவிலுணரும் ஆராய்ச்சி நிலையம் Remote sensing Centre அமைக்க அரசு ஏற்பளித்துள்ளது. பூமியிலுள்ள பல வகையான கனிமம் போன்ற மூலப் பொருட்களை ஆய்வு செய்து கண்டறிந்து, கணக்கெடுத்து, வகைப்படுத்தி பயன்படுத்தும் பணிகளுக்கு இந்நிலையம் உதவி புரியும். இதனால் வேளாண்மை, கனிமப் பொருட்களைக் கண்டுபிடித்தும் கணக்கெடுத்தல் போன்ற பல்வேறு துறைகளில் இம்மாநிலத்தில் உள்ள மூலப் பொருள் ஆதாரங்களை மிகு பயன் விளையும் வகையில் பயன்படுத்த இயலும்.

இதர நிறுவனங்கள் :

10. திருச்சிராப்பள்ளி வட்டாரப் பொறியியற் கல்லூரிக்கு மானியமாக ரூ. 28 இலட்சமும், சென்னையிலுள்ள கணித அறிவியல் நிறுவனத்திற்கு மானியமாக ரூ. 5 இலட்சமும் வழங்க 1982-83-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் மைய அரசு உதவியுடன் அமைந்துள்ள உணவுத் தொழில் பயிற்றகம் 1981-82 லிருந்து செயல்பட்டு வருகிறது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையங்கள் :

11. சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையங்கள் குறித்த திட்ட அறிக்கைகளைத் தயாரிக்கவும், அவற்றை அமைக்கும் பணியினை ஒருங்கிணைந்து கண்காணித்து வரவும் 1982 சனவரியில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

12. தேசிய அறிவியல் அருங்காட்சியகக் குழு இந்தியாவில் மொத்தம் அமைக்கப்படவிருக்கும் மாவட்ட அறிவியல் மையங்கள் ஐந்தில் ஒன்றினை திருநெல்வேலியில் அமைப்பதற்கு இவ்வரசு ஒப்புதல் அளித்துள்ளது. திருநெல்வேலியில் மாவட்ட அறிவியல் மையம் நிறுவுவதற்குத் தேவையான செலவினத்திற்கு இவ்வரசு தன் நிதிவளத்திலிருந்து ஏற்பளித்தும் உள்ளது.

VIII விளையாட்டு உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

(1) விளையாட்டும், உடற்பயிற்சிக் கல்வியும் :

விளையாட்டு மற்றும் இளைஞர் துறைக்காக 1982-83-ல் ரூ. 139 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்திற்கும் மாவட்ட விளையாட்டு அலுவலங்களுக்கும் 1982-83-ல் மேலும் சில கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு அவை வலுவாக்கப்படும்.

விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும் :

2. 1982-83 ஆம் ஆண்டில் சென்னை (ஒய்.எம்.சி.ஏ. உடற் பயிற்சிக் கல்லூரி), கோயம்புத்தூர் (பெரிய நாய்க்கன் பாளையம் மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி) அண்ணாமலை நகர் (இராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளி) ஆகிய மூன்று இடங்களில் தொடங்கப்பட்ட விளையாட்டுப் பள்ளிகள் நன்கு செயல் பட்டு வருகின்றன. அவை மூன்றிலும் சேர்த்து ஆண்டுதோறும் மொத்தம் சேர்க்க அனுமதிக்கப்பட்ட





மாணவர் எண்ணிக்கை 175 ஆகும். 1982-83-ல் கோயம்புத்தூர் (பீளமேடு) பி, எஸ். ஜி, ஆர். பெண்கள் உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்து, மாணவியர் விளையாட்டுப் பள்ளி ஒன்று புதியதாகத் தொடங்கப்படும் அப்பள்ளியில் 50 மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

3. 1980-81-ல் மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அந்தந்த வட்டாரங்களிலுள்ள மாணவர்களில் விளையாட்டுகளில் வல்லமைப் பெற்றவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி விடுதிகள் தொடர்ந்து செயல்படுகின்றன. ஒவ்வொன்றிலும் 30 பேர்கள் பயன் பெறுகின்றனர். 1982-83-ல் இவ்விடுதிகள் ஒவ்வொன்றிற்கும் பயிற்றுநர்கள் இருவர் வீதம் நியமனம் செய்யப்பட்டு இவ்விடுதிகள் வலுப்படுத்தப்படும்.

விளையாட்டு அரங்கங்கள் மற்றும் நீச்சல் குளங்கள் :

4. இராமநாதபுரம், நீலகிரி ஆகிய மாவட்டங்களைத் தவிர, பிற மாவட்டங்கள் அனைத்திலும் அந்தந்த மாவட்ட தலைமையிடத்தில் திறந்தவெளி விளையாட்டரங்கங்கள் ஏற்கனவே உள்ளன. அல்லது அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன, 1982-83-ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் ஒன்று அமைப்பதற்கு அரசு மானியம் அளிக்கப்படும். வட ஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் நீச்சல் குளம் கட்டுவதற்கு இதுவரை நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. 1982-83-ல் மேலும் ஒரு மாவட்டத் தலைமையிடத்தில் நீச்சல் குளம் கட்ட மானியம் தர ரூ. 7 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(i) விளையாட்டில் சிறந்த இளஞ்சிறாரைத் தேர்ந்தெடுத்தல் பயிற்றுதல்.

5. விளையாட்டுகளில் ஆற்றல் மிகுந்த சிறுவர் சிறுமியரை விளையாட்டு போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து அவர்களுக்குத் தீவிரமான பயிற்சியளித்து அவர்களது திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை ஏற்கனவே ஒரு திட்டத்தினை நடத்தி வருகிறது. 1982-83-ல் இத்திட்டம் இளஞ்சிறார் நிலைக்கும் விரிவாக்கப்படும்; அதன் மூலம் விளையாட்டில் ஆர்வமிக்க இளஞ்சிறார்களை பாலர் பள்ளி நிலையிலேயே தெரிந்தெடுத்து, அவர்களுடைய விளையாட்டுத்திறன் பேணி வளர்க்கப்படும். இக்குழந்தைகள் பின்னர் பள்ளிகளில் சேரும் பொழுது விளையாட்டில் சிறந்த மாணவர்களாகக் கருதப்பட்டு தொடர்ந்து ஊக்குவிக்கப்படுவர். வட்டாரத் தலைமை இடங்கள் 5 அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில்தேசிய மாணவர் படையில் சேர்க்க அனுமதித்துள்ள மாணவர்எண்ணிக்கை வருமாறு :—

| | பிரிவுகள்/ படைகள். | அலுவலர்கள். | மாண வர்கள். |
|---|---|---|---|
| முதுநிலைப் பிரிவு— | | | |
| மாணவர் .. .. | 45 | 218 | 17,370 |
| மாணவியர் .. | 5 | 43 | 3,680 |
| இளநிலைப்பிரிவு— | | | |
| மாணவர் .. | 616 | 616 | 61,650 |
| மாணவியர் .. | 51 | 51 | 5,200 |
| மொத்தம் .. | 717 | 928 | 87,900 |

6. 1982–33–ல் இத்துறை செயற்படுத்தவிருக்கும் புதிய திட்டங்கள் சில பின்வருமாறு—ஊரக விளையாட்டு மையங்கள் தொடங்குதல்; குழந்தைகளுக்கும் மாணவரல்லாத இளைஞர்களுக்கும் பயனளிக்கும் வகையில் மாவட்ட விளையாட்டுக் குழுக்களுடன் இணைந்த விழையணி (Hobby) மையங்கள் எட்டு அமைத்தல் ; தனியார் விளையாட்டுக் குழாம்கள்/நிறுவனங்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் வாங்கிட மானியம் அளித்தல்; முதலியனவாகும்.

(ii) சாரண—சாரணியர்.

7. தமிழ்நாட்டில் தற்போது 1.42 இலட்சம் , சாரண-சாரணியர் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலும் உள்ள சாரண-சாரணியர் எண்ணிக்கையில் நானகில் ஒரு பங்காகும். குடியரசுத் தலைவரின் 20–வது சாரண-சாரணியர் பேரணி வெகு சிறப்பாக சென்னையில் அண்மையில் நடைபெற்றது. அவ்வமயம் சாரண சாரணியர் இயக்கத்தின் தலை சிறந்த விருது தமிழக முதல் அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மாநில முதல்வர்களுள் நமது மாநில முதல்வருக்கே இவ்விருது முதற்கண் கிடைத்துள்ளது.

8. தமிழ்நாடு சாரண-சாரணியர் இயக்கத்திற்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் அரசு மானியம், 1981-82 ஆம் ஆண்டு முதல் ரூ. 30,000 விருந்து ரூ. 3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. சாரணர்-சாரணியருள் வசதிக்குறைவான குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்குவதற்காக 1981-82-ல் ரூ. 5 இலட்சம் செலவிட ஏற்பளிக்கப் பட்டுள்ளது. மாநில மட்டத்தில் சாரண-சாரணியர் அவ்வப்பொழுது முகாம் நடத்திக் கொள்வதற்கான 21 ஏக்கர் நிலப் பகுதி ஒன்றை செங்கல்பட்டு மரவட்டத்தில் ஆலர்தூர் என்னுமிடத்தில் மாநில அரசு வழங்கியுள்ளது. மாவட்டங்களிலும் முகாம் நடத்துவதற்காக இத்தகைய இடங்கள் ஒதுக்கப்படும்.

(iii) தேசிய மாணவர் படை.

9. தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்கத் தலைமையகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக



1982–83-ல் தேசிய மாணவர் படைக்காக மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 138 இலட்சம் செலவிடப்படும். இத்துறையில் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள்—அமைச்சுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், அடிப்படை உழியர்கள் முதலியோரின் எண்ணிக்கை 1,100 ஆகும்.

(iv) தேசியப் பணித் திட்டம்.

10. 1981–82 நிலவரப்படி, தமிழ் நாட்டிலுள்ள தேசிய பணித் திட்டத்தின் விபரங்கள் பின்வருமாறு :

| | பங்கு பெற்ற மொத்த மாண வர் எண்ணிக்கை. | ஆம் மொத்த மாணவர்களில் சிறப்புப் பயிற்சி முகாம் களில் பங்கு பெற்றவர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கல்லூரிகள் | 40, 000 | 20,000 |
| மேல் நிலைப்பள்ளி கள் (மேல் நிலைப் பள்ளி வகுப்புகள்). | 10,000 | 5,000 |
| | 50,000 | 25,000 |

தேசியப் பணித் திட்டத்தின் கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டு தோறும் பொதுத் திட்டத்தின் கீழ் ரூ. 60-ம் சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ரூ. 80-ம் செலவிடப்படுகிறது. இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும், மைய அரசும் 5:7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக்கொள்கின்றன. இதற்காக 1982-83-ல் மாநில அரசு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தொகையில் 7/12 பங்கு மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படும்.

11. 1982-83-ல் இத்திட்டத்தினை மேலும் 10,000 கல்லூரி மாணவர்களுக்கும் மேலும் 10,000 மேல்நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களுக்கும் விரிவாக்குவதற்கு மைய அரசு ஏற்பளித்துள்ளது.

12. மாணவர்கள் ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு அதன் மூலம் சமுதாய வளர்ச்சிக்கு தொண்டு செய்யும் வாய்ப்பினை தேயசிப் பணித் திட்டம் நல்குகிறது. முதன் முதலாக 1980-81–ல் இத் திட்டம் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் விரிவாக்கப்பட்டது. தேசிய மாணவர் படை சாரண சாரணியர் இயக்கம் ஆகியவற்றோடு இத்திட்டமும் தமிழ்நாட்டு மாணவர்கள் சமுதாயத் தொண்டில் பங்கேற்கும் வாய்ப்புக்களை நல்ல வண்ணம் அளித்து வருகிறது.

## IX நூலகங்கள் ஆவணக்காப்பகம், அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்வுத்துறை.

### (i) பொது நூலகங்கள்.

சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். அதில் 3.34 இலட்சம் புத்தகங்கள் உள்ளன. இதன் உறுப்பினர்கள் சுமார் 15,590 பேராவர். அரசு அமைத்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளின்படி. இந்நூலகம் நவீனமாக்கப்பட்டு வருகிறது. மாணவர்களின் வசதிக்காகத் தனியாக பாடப்புத்தப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. புத்தகம் பழுது பார்த்தல் கட்டடஞ் செய்தல் ஆகியவற்றுக்கான பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்நூலகத்திற்கு புத்தகங்கள் மற்றும் மரச்சாமான்கள் வாங்குவதற்கும், பிரதி எடுக்கும் நிழற்படக்கருவி ஒன்று வாங்குவதற்கும் சேர்த்து 1982-83-ல் மொத்தம் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. 1977 ஆகஸ்ட் முதல், நாகர்கோவிலில் உள்ள கவிமணி நிலைய நூலகமும், பொது நூலக இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகிறது.

3. கன்னியாகுமரி மாவட்டம் தவிர, பிற மாவட்டங்கள் அனைத்திலும், மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 15 நூலக ஆணைக் குழுக்கள் உள்ளன. மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 15 மாவட்ட மைய நூலகங்களும், 1,459 கிளை நூலகங்களும் உள்ளன. புதுக்கோட்டை மாவட்ட நூலக ஆணைக்குழு 1981 செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்திலும் நூலக ஆணைக்குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும். தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட மைய நூலகம் ஒன்று அமைப்பதற்காக 1982-83-ல் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. நூலக ஆணைக்குழுக்களின் கீழ் இயங்கும் அனைத்து நூலகங்களிலும் உள்ள நூல்களின் மொத்த எண்ணிக்கை 85 இலட்சமாகும். மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 9.35 இலட்சம். உறுப்பினர்களாக இல்லாதவர்களும் இந்நூலகங்களிலுள்ள நூல்களைப் பயன்படுத்தலாம். நூலகப் பணியிலுள்ளவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 3,500 ஆகும்.

5. 1980-81-ல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல் வரியாக ரூ. 127 இலட்சம் பெற்றன (சென்னை மாவட்டக் குழு பெற்ற ரூ. 30 இலட்சம் உட்பட). சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக்குழுக்கள் நூலக மேல்வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்கு சமமாக இணை மானியத்தையும் அரசிடமிருந்து பெறுகின்றன. 1973-74 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் விழுக்காடு புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றது. 1980-81-ல் நூலக ஆணைக் குழுக்களுக்கு அவ்வாறு வழங்கப்பட்ட புத்தகங்களின் மதிப்பு ரூ. 16 இலட்சமாகும்.



6. சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு மேற்கொண்டுள்ள கட்டட அமைப்புத் திட்டத்தின் கீழ், வட்டார நூலகங்கள் 3-க்கும் கிளை நூலகங்கள் 3-க்கும் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சேலத்தில், மாவட்ட மைய நூலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும், மாவட்ட மைய நூலகத்திற்காக ஒரு பல மாடிக் கட்டிடம் கட்டப்படும். 1981-82-ல் ஒதுக்கிய ரூ. 5 இலட்சம் அரசு மானியத்தையும், 1982-83-ல் ஏற்பளிக்க இருக்கும் ரூ, 5 இலட்சம் அரசு மானியத்தையும் பயன்படுத்தி, மாவட்டங்களிலுள்ள 20 கிளை நூலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டித் தர, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7. ஓய்வூதியம் மற்றும் குழு ஈட்டுறுதித் திட்டச் சலுகைகள் ஏற்கெனவே நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

8. அண்மையில் நூலகத் துறை மேற்கொண்டிருக்கும் புதிய பணிகளில் ஒன்று சென்னையில் வட்டார நூலகங்களிலும் மாவட்டங்களில் மாவட்ட மைய நூலகங்களிலும் மாதந்தோறும் குழந்தைகளுக்கேற்ற சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தலாகும். மேல்நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களின் பணியை (படிக்கும் போதே பணம் ஈட்டவகை செய்யும் நோக்குடன்) பயன்படுத்தி மாவட்ட மைய நூலகங்கள் புத்தகங்களை நூலக உறுப்பினர்களுக்கு கட்டண அடிப்படையில் வாரம் ஒரு முறை அவரவர் வீட்டிற்குச் சென்று கொடுத்துத் திரும்பப் பெறும் திட்டம் மற்றொரு புதிய பணியாகும்.

### (ii) ஆவணக் காப்பகம்.

தென் ஆசியாவில் தலை சிறந்த ஆவணத் தொகுப்புக்களைக் கொண்ட நிலையங்களில் ஒன்றாகத் திகழ்கிறது தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம். இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு நிருவாகத்துக்கும் பயன்படுகிறது. அதனுடைய பாதுகாப்பில் அரசு ஆவணங்கள், துறைத் தலைவர்கள் சிலர் ஆவணங்கள், பிற ஆவணத் தொகுப்புகள் ஆகியவை உள்ளன. இந்த ஆவணங்களில் ஒரு பகுதி மூன்று நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவையாகும். நவீன முறைகளின்படி ஆவணங்கள் இங்கு பாதுகாக்கப்படுகின்றன. ரூ. 6.50 இலட்சம் செலவில் நுண் நிழற்படக் கருவி ஒன்றினை நிறுவ 1981-82-ல் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. ஆவணக் காப்பகத்தின் ஆராய்ச்சிக் கூடத்தில், ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வட்டார ஆவண மையங்கள்

2. வரலாற்று, நிர்வாகச் சிறப்பு மிக்க பல ஆவணங்கள் பல்வேறு மாவட்ட அரசு அலுவலகங்களில் உள்ளன. அவற்றை ஆங்காங்கு வட்டார மையங்களில் சேகரித்து விஞ்ஞான முறையில் பாதுகாத்து வரும் நோக்குடன் முதற்கண் மதுரை, சிதம்பரம்,

கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வட்டார மையங்கள் அமைப்பதற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இவ்வட்டார ஆவணங்கள் தென்னிந்திய வரலாறு, மாவட்டங்களில் மக்கள் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் ஆகியவை குறித்து ஆராய்ச்சி செய்து எழுத பெரிதும் உதவும்.

தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு.

3. 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு வரலாற்று, சமுதாய விஷயங்கள் குறித்த ஆராய்ச்சியினை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் (இரண்டாண்டு கால) ஆராய்ச்சி மாணவப் பணியிடங்கள் நான்கினை வழங்கி வருகிறது. 1981-83 ஆம் ஆண்டுகளுக்கான இப்பணியிடங்கள் விரைவில் வழங்கப்படும்.

விவரச் சுவடிப்பிரிவு

4. மாவட்ட விவரச் சுவடிகளைத் திருத்தியமைத்து மீண்டும் எழுதுவதற்கான விவரச் சுவடிகள் பிரிவு இத்துறையின் கீழ் இயங்கி வருகிறது. புதுக்கோட்டை மாவட்ட விவரச் சுவடியின் அச்சு வேலை முடியும் தருவாயில் உள்ளது. தருமபுரி மாவட்ட விவரச் சுவடியின் இறுதி வடிவம் விரைவில் அச்சுக்கு அனுப்பப்படும். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கான விவரச் சுவடி வரைவுகளின் இறுதி வடிவங்கள் ஆயத்தமாகின்றன.

பயிற்சி.

5. அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ஆவணப் பராமரிப்பு குறித்த 15 நாள் பயிற்சி ஒன்றினை தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அளித்து வருகிறது. இதுவரை 11 பயிற்சிகள் நடந்து (50 அலுவலகங்களைச் சார்ந்த) 164 பேர் பயன் பெற்றுள்ளனர். இப்பயிற்சி 1982-83 லும் தொடர்ந்து நடைபெறும்.

வெளியீடுகள்.

6. ஆவணக் காப்பகத்தின் வெளியீட்டுப் பணியின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட ஆவணத் தொகுப்புகள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. ''சிறைகளிலிருந்து வெளிவரும் கைதிகளுக்கு உதவுவதற்கான மாநிலச் சங்கம்'', ''நீல் சிலை நீக்க மறியல் போராட்டம்'', 'கல்வி', 'திருநெல்வேலிக் கலவர சதி வழக்கும் ஆஷ் கொலையும்'', ''இந்தியாவில் வழக்கறிஞர் சங்கங்கள்'' ''நிதி'' ஆகிய பொருள்கள் பற்றிய ஆவணத் தொகுப்புகளை அச்சிட்டு வெளியிடும் பணிகள் பல்வேறு நிலைகளிலுள்ளன.

ஆவணக் காப்பக நூலகம்

7. தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம், நிறைய புத்தகங்களையும் ஆவணங்களையும் கொண்ட மாபெரும் நூலகங்களில் ஒன்றாகும். மற்ற பொது மற்றும் கல்லூரி/பல்கலைக் கழக நூலகங்களைப் போன்று அல்லாமல் புத்தகங்கள் மட்டுமின்றி



ஆவணக் காப்பக நூலகத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் வெளியீடுகள்—சென்சஸ் அறிக்கைகள், மாவட்ட விவரச் சுவடிகள், நிருவாக அறிக்கைகள் போன்றவை—ஏராளமாக தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தில் நாள்தோறும் சுமார் 100 புத்தகங்கள் வரப்பெற்று வகைப்படுத்தப்பட்டு, பட்டியலிடப் பெறுகின்றன.

(iii) அருங்காட்சியகங்கள்

சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள் அருங்காட்சியக இயக்குநரின் கீழ் செயல்படுகின்றன. திருச்சிராப்பள்ளியில் மாவட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. வேலூரில் ஒன்றும், ஈரோட்டில் ஒன்றுமாக 1982-83 ல் மாவட்ட அருங்காட்சியகங்கள் மேலும் இரண்டு அமைக்கப்படும்.

2. சென்னையில் ரூ. 29 இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் கட்டும் பணியும் சென்னை அருங்காட்சியகத்தைச் சார்ந்துள்ள தேசிய கலைக்கூடத்துக்கு ரூ. 25 லட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டும் பணியும் நடைபெற்று வருகின்றன.

(IV) தொல்-பொருள் ஆய்வுத்துறை.

மாநில தொல்-பொருள் ஆய்வுத்துறை பண்டைய வரலாற்றுச் சின்னங்களை பாதுகாத்தல் ; வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் காட்சியகங்கள் அமைத்தல் ; தமிழகத்தின் பண்டைய வரலாற்றை வெளிப்படுத்தும் கல்வெட்டுக்களை கண்டு பிடித்தல் ; வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழ்வாய்வு செய்தல் ; பண்டைய தமிழ் ஓலைச் சுவடிகளை சேகரித்து பாதுகாத்து வெளியிடுதல் ஆகிய தன்து பணிகளை முனைப்புடன் செய்து வருகிறது.

2. அண்மையில் கோவாவிலுள்ள ''தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சி நிறுவனத்தோடு'' இணைந்து இத்துறை காவிரிப் பூம்பட்டினத்திற்கு அப்பாலுள்ள கடலுக்கடியில் நடத்திய தொல்-பொருள் ஆய்வு பயனுள்ள முடிவுகளை தந்துள்ளது. தரங்கம்பாடி வரை நடந்த இந்த ஆய்விலிருந்து பூம்புகார் வானகிரி பகுதியில் கடலுக்கடியில் கட்டிடங்களும் மூழ்கிப் போன கப்பல்களும் புதைந்து கிடக்கின்றன என்பதாகத் தெரிய வருகிறது. இந்த ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

3. பண்டைய வரலாற்றுச் சின்னங்களை பழுதுபார்த்து பேணி வரும் பணி தொடர்ந்து விரிவாக மேற்கொள்ளப்படும் கங்கை கொண்ட சோழபுரம், கோவலன்பொட்டல் ஆகிய இடங்களில் இத்துறை மேற் கொண்டுள்ள அகழ்வாய்வுகள் தீவிரமாக்கப்படும். வரும் 1982—83ம் ஆண்டில் இத்துறை பின்வரும் புதிய பணிகளை மேற்கொள்ள திட்டங்கள் தீட்டியுள்ளது: அதாவது ஆசிரியப் பெருமக்கள் 200 பேர்களுக்கு கல்வெட்டு, பண்டைய வரலாறு

ஆகியவை குறித்து பயிற்சி அளித்தல் ; அண்மையில் அகழ்
வாய்வு மற்றும் கல்வெட்டுக்கள் மூலம் வெளியாகியுள்ள வர
லாற்றுச் செய்திகளை அறிஞர்களுடைய கவனத்துக்கு
கொண்டு வரும் வகையில் மாவட்டக் கருத்தரங்குகள் நடத்து
தல் ; சுற்றுலாத்துறையுடன் இணைந்து செஞ்சிக் கோட்டை
போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை சுற்றுலா
மையங்களாக மாற்றுதல் : தமிழக வரலாறு பற்றிய
புதிய கண்டு பிடிப்புகளை அறிஞர்கள் ஆராய்ந்து கல்வித்
திட்டத்தில் சேர்க்க ஆவன செய்தல் ; கல்வெட்டு ஆராய்ச்சியை
தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன்
இணைந்து மேலும் விரிவாக மேற்கொள்ளுதல் ; தமிழக
கோயில்களிலுள்ள பண்டைய ஓவியங்களை வேதியியல் முறையில்
தூய்மைப்படுத்தி பாதுகாக்கும் முயற்சிகளை விரிவாக்கு
தல் ஆகிய இந்த புதிய பணிகளை மேற்கொள்வதற்கான
திட்டங்கள் இத்துறையிடம் இருந்து வரப்பெற்று ஆய்வில் உள்ளன.

## X. தமிழ் வளர்ச்சி

### தமிழ்வளர்ச்சி இயக்ககம்.

அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணிகள் அனைத்திலும் தமிழைப் பயன்படுத்தச் செய்வதற்கான முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ் வளர்ச்சித் துறை எடுத்து வருகிறது. அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றுவதற்கான மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்று 1981–82-ல் 17 துறைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் அது மேலும் பல துறைகளுக்கு விரிவாக்கப்படும்.

2. 1867–1935 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களின் விவர அட்டவணை 19 தொகுதிகளாக இதுவரை வெளியிடப்பட்டுள்ளது. 1935-க்குப்பின் வெளியான தமிழ் நூல்களுக்கான விவர அட்டவணையைத் தொகுக்கும் பணி தொடருகிறது.

3. தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித்துறை செயல்படுத்தி வருகிறது. 1981–82-ல் இத்திட்டத்தின் கீழ் 7 புத்தகங்களின் ஆசிரியர்களுக்கு நிதியுதவி தரப்பட்டது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது பதிப்பை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலமாகத் தயாரித்து வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. சிறந்த தமிழ் நூல்களுக்கு விருது அளிக்கும் திட்டத்தின் கீழ் 1975–80 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களில் சிறந்தவற்றுக்கு 1982 ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாள் அன்று சனவரி 15) விருதுகள் அளிக்கப்பட்டன.





### தமிழ்நாட்டு வரலாறு.

5. தமிழ் நாட்டு வரலாற்றில் தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. சங்க காலப் பற்றிய இரண்டாவது தொகுதி இரண்டு பகுதிகளாக விரைவில் வெளியிடப்படும்.

### மொழி பெயர்ப்புப் பணி.

6. பிறமொழி நூல்களில் சிறந்தவற்றை தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்குமான திட்டத்தின் கீழ் இதுவரை மொழி பெயர்ப்பு நூல்கள் ஆறு வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு நூல்கள் விரைவில் வெளியாகும். மேலும் நூல்கள் மொழி பெயர்ப்புக்கு எடுக்கப்பட்டுள்ளன.

### தமிழ்க் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பாராட்டு.

7. இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று ; சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கிறித்துவ இலக்கிய வளர்ச்சிக்கு அறக்கட்டளை ஒன்று ; சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக ஒன்றும், பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் நினைவாக ஒன்றுமாக இரண்டு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆகியவற்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் ''விருது'' ரூ. 10,000, இதுவரை கவிஞர்கள் திருவாளர்கள் சுரதா, வாணிதாசன, எஸ். டி. சுந்தரம், பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், முத்துலிங்கம் ஆகியோருக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்தாளர்களுக்கான திரு. வி. க. விருது ரூ. 10,000 இதுவரை திருவாளர்கள் நாரண துரைக் கண்ணனுக்கும், அ.கி. பரந்தாமனாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

### வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஒய்வூதியம்.

8. மாத வருமானம் ரூ. 400-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு மாதம் ரூ. 250 வீதம் ஓய்வூதியம் தரப்படுகிறது. இதுவரை 120 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது.

### பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்.

9. பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவைகள் 24-க்கு தமிழில் பகுதிநேர பட்டய வகுப்புகள் தொடங்குவதற்காக இதுவரை நிறுவனத்துக்கு ரூ.15,000 வீதம் மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது, திருவனந்தபுரத்திலுள்ள '' திராவிட மொழிகளின் மொழியில் ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி ''யின் ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும் மானியம் தரபட்டுள்ளது.

10. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தமிழ் கற்றுக் கொள்ளப் பயன் படுத்தக்கூடிய பாடங்களைக் கொண்ட புத்தகம் ஒன்றை வெளியிடும் பணியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி

11. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் முதல் மடலத்தின் முதல் பகுதி—மொழியியலறிஞர் மறைந்த தேவ நேயப் பாவாணர் வர்கள் தொகுத்தது—விரைவில் வெளியிடப் படும். அவ்வகர முதலியின் மற்றப் பகுதிகளைத் தொகுக்கும் பணி தொடருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

12. உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தில் 19 ஆராய்ச்சி அலுவலர்கள், 12 முழு நேர ஆராய்ச்சி மாணவர்கள், டாக்டர் பட்டம் பெற ஆய்வு நிகழ்த்தும் 38 பகுதிநேர மாணவர்கள்; ஆகியோர் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை இந்நிறுவனம் வெளியிட்டு வருகிறது. வெளிநாட்டு மற்றும் பிற மாநில மாணவர்கள் 28 பேருக்கு இந்நிறுவனம் இவ்வாண்டு தமிழ் கற்றுத் தந்தது. தமிழ் இலக்கியக் கொள்கைகள் பற்றிய மாதாந்திர கருத்துக்களுடன் இந்நிறுவனம் இலக்கியம், பண்பாடு போன்றத் துறைகளில் தமிழரின் மரபுச் செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது. 1981-82-ல் வரலாற்று மரபுச் செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்கு நடத்தப்பட்டது. தமிழ், இலக்கியம், வரலாறு பற்றிய சிறந்த நூல்களும், இதுகாறும் வெளியிடப்படாத சில ஓலைச் சுவடிகளின் அச்சிட்ட வடிவங்களுமாக இதுவரை 44 தரமான நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தில் ''சுவடியியல்'', ''மொழிபெயர்ப்பியல்'' எனும் பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக் கழகம்.

13. இவ்வாண்டு 15-9-1981-ல் தொடங்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்வேறு புலங்களுடனும் துறைகளுடனும் செவ்வனே செயல்படுகிறது. அண்மையில் வெளியீட்டுப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அருகில் சுமார் 1,000 ஏக்கர் நிலம் இப்பல் லைக்கழகத்துக்காக, கையகப்படுத்தப்பட்டு வருகிறது. பல்கலைக் கழகத்திற்கான கட்டிட வேலை இன்னும் சில மாதங்களில் தொடங்க இருக்கிறது.

உலகத் தமிழ்ச் சங்கம்.

14. மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி அறிவித்த உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு நிறுவப்படும். இச்சங்கம் நிறுவுவதற்கான



நிலம் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த நிறுவனத்தில் தமிழ் மொழி வல்லுநர்கள் பணி புரிவர். இவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள். இந்தச் சங்கம் ஆராய்ச்சித் துறையில் முழுதன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்படும். அது உலகெங்கனும் உள்ள பல உலகத் தமிழ்ச் சங்கக் கிளை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இயங்கும் இச்சங்கம் நிறுவ 1982-83-ல் ரூ. 105 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

## XI. தமிழ்க் கலைகளும் பண்பாடும்

தமிழ்நாட்டின் கலைகளை ஊக்குவிக்கவும், மேம்பாடு அடையச் செய்யவும், அரசு பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. 1981 ஜூலை மாதம் அரசு தலைமைச் செயலகத் தில் செய்தி, சுற்றுலா (தமிழ்) பண்பாட்டுத்துறை என்று ஒரு துறை உருவாக்கப்பட்டது. அத்துறையின் மேற்பார்வையில் தமிழ் பழங்கலை இயக்ககம் என்ற பெயரில் ஒரு புதிய துறையும் உருவாக்கப்பட்டு ஒரு தனி இயக்குநரின் பொறுப்பில் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்.

2. கடந்த 26 ஆண்டுகளாக, இயல், இசை, நாடகம், நாட்டியக் கலைகளுக்குத் துணையாக இருந்து நல்ல பல திட்டங் களைத் தீட்டிச் செயல்பட்டு வரும் இம்மன்றம் இவ்வாண்டும் (1981–82) தனது முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்தியது. இவ்வாண்டு கலைத் துறையில் புகழ்பெற்ற 33 பெருமக்களுக்கு கலைமாமணி விருது அளித்து கௌரவித்தது. இளங் கலைஞர் களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் சுமார் 80 கலைஞர்களின் நிகழ்ச்சிகளை 16 சபாக்களில் நடத்த உதவி அளித்தது.

3. இம்மன்றத்தின் பணியினை மேலும் பரவலாக்கும் வகை யில் மாவட்டந் தோறும் கலை மன்றங்கள் அமைக்க அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இதன் நோக்கம் அந் தந்த மாவட்டத்தில் உள்ள கலை வடிவங்களை ஆய்ந்து, தேர்ந் தெடுத்து, அவை அழியாவண்ணம் பேணிக் காப்பதும், மாவட்டங் களிலுள்ள இளங்கலைஞர்களுக்கு ஊக்கமளிப்பதும் ஆகும். இப்பணிக்கு ரூ. 1.50 இலட்சம் வரும் நிதியாண்டில் செலவிடப் படும்.

தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு.

4. தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக் குழு தனது வழக்கமான திட்டங்களுடன் இவ்வாண்டு பின்வரும் முக்கியத் திட்டங்களை யும் செயல்படுத்தியது :—

(1) பள்ளிகளில் உள்ள ஓவிய ஆசிரியர்களுக்கு இன்றைய ஓவியச் சூழலில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்களைத் தெரியப் படுத்தும் வகையில், தமிழ்நாடு கல்வியாராய்ச்சி, பயிற்சி நிறு வனத்துடன் சேர்ந்து நடத்தி வரும் ஓவிய ஆசிரியர் மறு பயிற்சித்

திட்டம் குறிப்பிடத்தக்கது. இதுவரை சென்னை, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் கல்வி மாவட்டங்களில் சுமார் 110 ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் மேலும் பல மாவட்டங்களில் உள்ள ஓவிய ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும்.

(2) மாநிலங்களிடையே கலைக் கண்காட்சிகள் நடத்தும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கலைக் கண்காட்சி இராஜஸ்தானில் ஜெய்ப்பூரிலும், ஒரிஸ்ஸாவில் புவனேஸ்வரத்திலும் நடத்தப் பட்டது. இக்கண்காட்சிகளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

(3) குழுவின் காலாண்டு இதழ் ''நுண்கலை'' வெளியிடப் பட்டது.

(4) ''ஓவியர் உதவி நிதி'' ஒன்றை நிறுவ அரசு ரூபாய் ஒரு லட்சம் குழுவிற்கு மானியமாக அளித்துள்ளது.

(5) ஓவியம் நுண்கலைக் கண்காட்சிகளை மாவட்டத் தலைநகரங்களிலும் சிறிய நகரங்களிலும் நடத்துவதற்காகத் தக்க வசதிகள் கொண்ட ஒரு பேருந்து தயார் செய்யும் திட்டமும் மேற்கொள்ளப்படும். இதற்காக வரும் நிதியாண்டில் ரூ. 3.90 இலட்சம் ஒதுக்கப்படும்.

## இசைக் கல்லூரிகள்.

6. சென்னையிலும், மதுரையிலும் உள்ள அரசு இசைக் கல்லூரிகளும், திருவையாற்றில் உள்ள ஓரியண்டல் கல்லூரியின் இசைப் பிரிவும் இசையையும் பரத நாட்டியத்தையும் பயிற்று வித்து வருகின்றன. சென்னை இசைக் கல்லூரியில் இட நெருக் கடியைத் தீர்க்க ரூ. 6 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் ஒன்று 1982-83-ல் மேற்கொள்ளப்படும்.

7. அரசு இசைக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் முறை நவீனப்படுத்தப்படும். இசை, நாட்டியக்கலைகளின் நுணுக்கங் களை மாணவர் உணரும் வகையில் இத்துறைகளில் உள்ள மேதைகளைக் கொண்டு அக்கல்லூரிகளில் இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளும், விரிவுரைகளும் நடத்தப்படும். அத்தகைய மேதைகள் கலை நுணுக்கத்தை உணர்த்தும் ஒலிப்பதிவுகள், ஒளிப்பதிவுகள், ஆகியவற்றின் மூலமும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேவார, திருவாசக இசை நிகழ்ச்சிகளையும் இசை மேதைகளைக் கொண்டு நிருபணமாக இசைக் கல்லூரி மாணவர்கள் முன் நடத்துவிக்கவும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

## தமிழ்ப் பழங்கலை இயக்ககம்.

8. புதியதாக நிறுவப்பட்டுள்ள தமிழ்ப் பழங் கலை இயக்ககத்தின் முக்கிய குறிக்கோள்கள்—(1) தமிழ்ப் பழங்கலைகள் பற்றிய விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து வெளியிடுதலும்; (2) அக்கலைகள் அழியாமல் பாதுகாத்தலும் ஆகும்.



9. மேற்கூறிய குறிக்கோள்களின் அடிப்படையில் 1982-83-ல் இவ்வியக்ககம் கீழ்க்கண்ட புதிய பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(1) மாவட்டம் தோறும் கிராமங்களில் பழக்கத்தில் இருக்கும் அரிய கிராமியக் கலைகளைக் கண்டு ஆராய்ந்து, அவற்றின் விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து தமிழக கிராம மக்களின் வரலாறு கலாச்சாரம் வற்றை விளக்கும் கலைக் களஞ்சியமாக வெளியிடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கண்டு பிடிக்கப்படும் தொன்மையான கலைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக வரும் நிதியாண்டில் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) பழங்காலத் தமிழ்ச் சுவடிகள் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தலும், வெளியிடுதலும்.

(3) தமிழ்நாட்டு கிராம இசையோடு தமிழ்ப் பண்முறையைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் இசைப் பேரறிஞர்களின் இசை நிகழ்ச்சிகளை நாடாவில் பதிவு செய்யும் திட்டம் (டேப் ரிகார்டிங்)

(4) தமிழ்நாட்டில் விலைமதிப்பற்ற கலைப் பொருட்களும் தமிழ் ஓலைச் சுவடிகளும் பிற நாடுகளிலுள்ள பல கலைக் கூடங்களிலும், அரும் பொருட் காட்சியகங்களிலும் இருக்கின்றன. அவற்றைத் திரும்பக் கொணர அல்லது அவ்வோலைச் சுவடிகளை நுண்படம் எடுத்தும், கலைப் பொருட்களுக்கு மாதிரிப் படிவங்கள் பெற்றும் அந்த நுண்படங்களையும் படிவங்களையும் திரும்பக் கொணர நடவடிக்கை எடுக்கப்படும்.

## வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம்

10. வறுமையால் வாடும் ஏறத்தாழ 1,000 கலைஞர்கள் மாதந்தோறும் இத்திட்டத்தின் கீழ் ரூ. 150 ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகின்றது. ஓய்வூதியம் பெறுபவர் வறுமை நிலையிலே தொடர்ந்தால் மீண்டும் மூன்று ஆண்டு மூன்று ஆண்டாக புதுப்பிக்கப்படுகிறது. அவ்வாறு ஓய்வூதியம் பெறும் கலைஞர் இறந்து விட்டால் அவரது மனைவிக்குப் அவர் நிலையைப் பொறுத்து இறக்கும் வரை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்து இந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் இந்த ஓய்வூதியம் வகையில் மொத்தம் ரூ. 24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாண்டில் மேலும் 200 கலைஞர்களுக்கு புதிதாக நிதியுதவி அளிக்கப்படும்

11. அரசுக் கலைஞர்களை நியமிக்கும் திட்டமொன்றை இவ்வரசு 1979 முதல் செயற்படுத்தி வருகிறது. 1981 அக்டோபர் முதல் மேலும் பன்னிருவர் அரசுக் கலைஞர்களாக மூன்றாண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இளமையிலேயே நல்ல தேர்ச்சி பெற்றுத் தனக்கென கலைத்துறையில் ஓர் இடத்தினை பிடித்துள்ள சிறந்த கலைஞர்களுக்கும் ஊக்கமளிக்கும் வகையில் அரசு இளங்கலைஞர்கள் மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## இணைப்பு 1.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

(மாணவர்கள் இலட்சத்தில்)

| (1) | 1973—74 (2) | 1976—77 (3) | 1980—81 (4) | 1981—82 (5) |
|---|---|---|---|---|
| அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை— | | | | |
| வயதுத் தகுதி 6—11— | | | | |
| சிறுவர் .. .. .. | 30·45 | 31·93 | 33·69 | 34·19 |
| சிறுமியர் .. .. .. | 29·79 | 31·23 | 32·95 | 33·43 |
| மொத்தம் .. | 60·24 | 63·16 | 66·64 | *67·62 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | |
| சிறுவர் .. .. .. | 13·71 | 14·37 | 15·16 | 15·39 |
| சிறுமியர் .. .. .. | 13·40 | 14·05 | 14·83 | 15.04 |
| மொத்தம் | 27·11 | 28·42 | 29·99 | *30.43 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1980-81லிருந்து) | | | | |
| சிறுவர் .. .. .. | 11·31 | 11·86 | 8'54 | 8'74 |
| சிறுமியர் .. .. .. | 11·07 | 11·60 | 8'33 | 8'51 |
| மொத்தம் .. | 22·38 | 23·46 | 16'87 | 17'25 |

*1981-82ல் பல்வேறு வயதுத் தொகுதியினர் எண்ணிக்கை பின்வருமாறு கணக்கிடப்பட்டது— அதாவது 1981 சென்சஸ்படி தமிழக மொத்த மக்கள் தொகையை எடுத்துக் கொண்டு, அந்தந்த வயதுத் தொகுதியினர் 1971 சென்சஸ்-சில் எத்தனை சதவீதம் இருந்தனரோ அதே சதவீதம் 1981-லும் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை— | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | |
| சிறுவர் .. .. .. | 30·64 | 32·02 | 34·80 | 34·97 |
| சிறுமியர் .. .. .. | 23·74 | 25·50 | 28·66 | 29·10 |
| மொத்தம் .. | 54·38 | 57·52 | 63·46 | 64·07 |

| | | | | |
|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 11—14 | | | | |
| சிறுவர் .. .. .. | 9.10 | 9.74 | 11.48 | 12.03 |
| சிறுமியர் .. .. .. | 5.09 | 5.76 | 6.94 | 7.61 |
| மொத்தம் .. | 14.19 | 15.50 | 18'42 | 19'64 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1980–81 லிருந்து) | | | | |
| சிறுவர் .. .. .. | 4.97 | 5.34 | 4.45 | 4.56 |
| சிறுமியர் .. .. .. | 2.42 | 2.68 | 2.28 | 2.57 |
| மொத்தம் .. | 7.39 | 8.02 | 6.73 | 7.13 |



இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்—

| | | | | |
|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 6—11— | | | | |
| சிறுவர் .. .. .. | 100·6 | 100·3 | 103.30 | 1.2029 |
| சிறுமியர் .. .. .. | 79·5 | 81·7 | 86·97 | 87·05 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 90·2 | 91·7 | 95·22 | 94·76 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | |
| சிறுவர் .. .. .. | 66·3 | 67·7 | 75·73 | 78·18 |
| சிறுமியர் .. .. .. | 37·9 | 41·0 | 46·79 | 50·60 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 52·3 | 54·4 | 61·42 | 64·55 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1980–81-லிருந்து) | | | | |
| சிறுவர் .. .. .. | 43·0 | 44·9 | 52·07 | 52·26 |
| சிறுமியர் .. .. .. | 21·8 | 23·1 | 27·40 | 20·17 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 33·0 | 34·1 | 39·90 | 41·36 |

இணைப்பு 1 —தொடர்ச்சி.

பள்ளிக் கல்விபற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | | 1973–74. (2) | 1976–77. (3) | 1980–81. (4) | 1981–82. (5) |
|---|---|---|---|---|---|
| **ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை—** | | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் | .. | 26,726 | 27,306 | 27,648 | 27,767 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | .. | 5,773 | 5,730 | 5,658 | 5,556 |
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | 2,823 | 3,030 | 2,069 | 2,168 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | .. | .. | 1,300 | 1,405 |
| மொத்தம் | — | 35,322 | 36,066 | 36,675 | 36,896 |

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம் போன்ற வகையில் பிரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10-ம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—** | | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் | .. | 1,06,332 | 1,11,033 | 1,11,071 | 1,13,036 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | .. | 66,843 | 67,846 | 69,516 | 66,221 |
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | 65,959 | 72,838 | 32,427 | 33,280 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | .. | .. | 53,843 | 58,750 |
| மொத்தம் | .. | 2,39,134 | 2,51,717 | 2,66,857 | 2,71,287 |

**ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்—**

(1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகையில் சேர்த்து)—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல்நிலைப் பள்ளிகள் | .. | 35 | 36 | 40 | 39 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | .. | 33 | 33 | 36 | 38 |
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | 24 | 24 | 23 | 24 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | .. | .. | 27 | 27 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| (2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)— | | | | |
| முதல்நிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி. | 37 | 36 | 33 | 38 |
| நடுநிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 33 | 33 | 31 | 32 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 29 | 30 | 24 | 24 |
| மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | .. | .. | 20 | 20 |

1981–82-ல் (1981ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ஆம் நாள் நிலவரப்படி) தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த புள்ளி விவரங்கள்.

| பள்ளிகளின் வகைகள். (1) | | பள்ளிகளின் எண்ணிக்கை (2) | மாணவர்கள் (இலட்சத்தில்). (3) | ஆசிரியர்கள். (4) |
|---|---|---|---|---|
| முதல்நிலைப் பள்ளிகள். | | | | |
| அரசு .. .. .. .. | 1,445 | 27,767 | 44.72 | 1,13,036 |
| நகராட்சி .. .. .. .. | 1,107 | | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 20,270 | | | |
| தனியார் .. .. .. .. | 4,945 | | | |
| நடுநிலைப் பள்ளிகள். | | | | |
| அரசு .. .. .. .. | 190 | 5,556 | 25.40 | 66,221 |
| நகராட்சி .. .. .. .. | 401 | | | |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 3,015 | | | |
| தனியார் .. .. .. .. | 1,950 | | | |
| மொத்தத் தொடக்கப் பள்ளிகள் .. | | 33,323 | 70.12 | 1,79,257 |
| உயர்நிலைப் பள்ளிகள்—சாதாரணம். | | | | |
| அரசு .. .. .. .. | 1,547 | 2,021 | 7.23 | 30,180 |
| நகராட்சி .. .. .. .. | 69 | | | |
| தனியார் .. .. .. .. | 405 | | | |
| ஆங்கிலோ—இந்தியன் .. .. | | 18 | 0.12 | 398 |
| மெட்ரிகுலேசன் .. .. .. | | 50 | 0.22 | 821 |
| சி.பி.எஸ்.ஈ. முதலியன .. .. | | 79 | 0.37 | 1,881 |
| மொத்த உயர்நிலைப் பள்ளிகள் | | 2,168 | 7.94 | 33,280 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளிகள்—சாதாரணம். | | | | |
| அரசு .. .. .. .. | 639 | 1,288 | 14.45 | 53,734 |
| அரசு (தொழிற் நுட்பம்) .. .. | 14 | | | |
| நகராட்சி .. .. .. .. | 60 | | | |
| தனியார் .. .. .. .. | 575 | | | |
| ஆங்கிலோ—இந்தியன் .. .. | | 26 | 0.28 | 891 |
| மெட்ரிகுலேசன் .. .. .. | | 33 | 0.31 | 1,252 |
| சி. பி. எஸ். ஈ. போன்ற பள்ளிகள் — | | 58 | 0.65 | 2,873 |
| மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள் .. | | 1,405 | 15.69 | 58,750 |
| மொத்தம் உயர் நிலை மற்றும்—மேல் நிலைப் பள்ளிகள். | | 3,573 | 23.63 | 92,030 |
| மொத்தம் (அனைத்து பள்ளிகளும் சேர்த்து). | | 36,896 | 93.75 | 2,71,287 |
| | | மாணவர் .. | 53.36 | இலட்சம். |
| | | மாணவியர். | 40.39 | இலட்சம். |



நிருவாகவாரியாக, 1981–82-ல் இருந்த பள்ளி ஆசிரியர்களின் விபரங்கள்.

| பள்ளிகளின் வகை. | அரசு. | | நகராட்சி. | தனியார். | மொத்தம் | ஆசிரியர் விபரங்கள். | |
|---|---|---|---|---|---|---|---|
| | அரசுப் பள்ளிகள். | ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். | | | | ஆண். | பெண். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| தொடக்கப் பள்ளிகள் .. | 6,884 | 67,395 | 9,136 | 29,621 | 1,13,036 | 69,806 | 43,230 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 3,205 | 27,025 | 7,035 | 28,956 | 66,221 | 34,281 | 31,940 |
| உயர் நிலைப்பள்ளிகள் .. | 21,808 | .. | 1,455 | 10,017 | 33,280 | 21,492 | 11,788 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 25,503 | .. | 3,293 | 29,954 | 58,750 | 36,530 | 22,220 |
| மொத்தம்.. | 57,400 | 94,420 | 20,919 | 98,548 | 2,71,287 | 1,62,109 | 1,09,178 |

# இணைப்பு II.

## கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். (1) | 1973–74. (2) | 1976–77. (3) | 1980–81. (4) | 1981–82. (5) |
|---|---|---|---|---|
| 1. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | |
| (1) புகுமுக வகுப்பு .. .. | 72,646 | 84,257 | .. | .. |
| (2) பி.ஏ. .. .. .. | 51,698 | 44,697 | 53,903 | 58,902 |
| (3) பி.எஸ்சி. .. .. .. | 49,057 | 48,110 | 65,980 | 72,934 |
| (4) பி.காம். .. .. .. | 14,859 | 19,195 | 23,834 | 26,400 |
| (5) பட்ட மேற்படிப்பு .. | 6,993 | 7,043 | 10,994 | 12,904 |
| மொத்தம் .. | 1,95,253 | 2,03,302 | 1,54,711 | 1,71,140 |
| 2. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. | 2,969 | 3,733 | 3,857 | 4,031 |
| (2) தனியார் கல்லூரி சென்னை .. .. .. | 7,090 | 7,883 | 8,713 | 8,775 |
| மொத்தம் .. | 10,059 | 11,616 | 12,570 | 12,806 |



| | | | | |
|---|---|---|---|---|
| கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசு .. .. .. | 51 | 51 | 51 | 52 |
| (2) தனியார் .. .. .. | 127 | 138 | 136 | 135 |
| மொத்தம் .. | 178 | 189 | 187 | 187 |

* சிவகங்கை ஆர்.டி.எம். கல்லூரியை 1–7–1981 முதல் அரசு ஏற்றுள்ளது.

## பிற கல்லூரிகளுக்கான 1981–82-ம் ஆண்டு விவரங்கள்.

| வகை. | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | மாணவர் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| | அரசு. | தனியார். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) கல்வியியற் கல்லூரிகள் .. | 7 | 16 | 2,935 | 231 |
| (2) உடற்பயிற்சிக் கல்லூரிகள் | .. | 3 | 330 | 33 |
| (3) புலவர் கல்லூரிகள் .. | .. | 15 | 1,665 | 143 |
| (4) சமுதாயப் பணிப் பள்ளி .. | .. | 2 | 240 | 18 |
| (5) கிராமப்புற உயர் கல்வி நிலையம் | .. | 1 | 623 | 76 |
| (6) இசைக் கல்லூரிகள் .. | 2 | .. | 479 | 43 |
| மொத்தம் .. | 9 | 37 | 6,272 | 544 |

## இணைப்பு III.

### 1981–82-இல் தொழில் நுட்பக் கல்வி பற்றிய விவரங்கள்.

| | கல்வி நிலையங்களின் எண்ணிக்கை. (1) | மொத்த மாணவர் எண்ணிக்கை. (2) |
|---|---|---|
| 1 பொறியியற் கல்லூரிகள்— | | |
| (1) அரசு | 4 | 8,197 |
| (2) தனியார் | 3 | |
| (3) தன்னுரிமையுள்ளவை | 7 | 7,300 |
| 2 பாலிடெக்னிக்குகளும், சிறப்பு பட்டயப் படிப்பு நிலையங்களும்— | | |
| (1) அரசு | 20 | 21,366 |
| (2) தனியார் | 29 | |
| (3) தன்னுரிமையுள்ளவை | 1 | |
| 3 தொழிற் பாட மேல்நிலைப் பள்ளிகள்— | | |
| (1) அரசு | 11 | 1,680 |
| (2) தனியார் | 3 | |
| மொத்தம் | 78 | 38,543 |



---

சனிக்கிழமை, 1982 மார்ச் 20

பங்குனி 7, துன்மதி 2013, திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 1. இரங்கற் குறிப்பு.

### ஆச்சாரிய கிருபளானி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, தலை சிறந்த காந்தியவாதியும், முதுபெரும் தேசியத் தலைவருமான ஆச்சாரிய கிருபளானி அவர்கள் நேற்று பிற்பகல் அகமதாபாத்தில் திடீரென்று இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள் கிறேன். திரு. கிருபளானி 1888 ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் பெர்கூசன் கல்லூரியிலும், பம்பாய் பல்கலைக் கழகத்திலும் படித்துப் பட்டம் பெற்று, ஐந்து ஆண்டுக்காலம் கல்லூரிப் பேராசிரியாகப் பணி புரிந்தார். 1920-ல் ஒத் துழையாமை இயக்கத்தில் பங்குகொண்டு கதர் கிராம அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டார். தேசிய வித்தியா பீடத்தை நிறுவி அதன் முதல்வராக விளங்கி னார். 1934 முதல் 1946 வரை இந்திய தேசிய காங்கிரஸ் பொதுச் செயலாள ராகவும், 1946 முதல் 1947 வரை அதன் தலைவராகவும் பணியாற்றினார். 1951-ல் கிசான் மஸ்தூர் பிரஜா கட்சியைத் துவக்கி அதைப் பின்னர் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியுடன் இணைத்தார். அதைவிட்டு, 30 ஆண்டுகளுக்கு மேலாக எந்தக் கட்சியையும் சேராமல், தன் மனசாட்சியோடு நின்று தேசத் திற்கு வழிகாட்டிய பெருமை ஆச்சாரிய கிருபளானிக்கு உண்டு. அறிவு, வீரம், தியாகம், ஒழுக்கம், தேச பக்தி ஆகிய நற்குணங்கள் எல்லாம் ஒரு மனித வடி வில் காட்சி அளித்தது போல் ஆச்சாரிய கிருபளானி வாழ்ந்தார். 1946 முதல் 1951 வரை அரசியல் நிர்ணயசபை உறுப்பினராகப் பணியாற்றினார்.

[மேலவைத் தலைவர்] [1982 மார்ச் 20

அவரது மறைவால் நாடு ஒரு தலைசிறந்த தலைவரை இழந்துவிட்டது. அன்னாரது மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

## 2. அரசின் தீர்மானம்.

### வினா நேரம் கைவிடப்படல் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"மேலவை விதி 22 ஒத்திவைக்கப்பட்டு, இன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 22 ஒத்திவைக்கப்பட்டு, இன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

## 3. கவன ஈர்ப்பு.

குடியாத்தம் அருகே கே. வி. குப்பத்தில் 13—2—1982 அன்று ஜல்லிக்கட்டு திருவிழாவின் போது போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தால் பலர் காயம் அடைந்துள்ளது குறித்து.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன் :

" குடியாத்தம் அருகே கே. வி. குப்பம் என்னும் கிராமத்தில் 13-2-1982 அன்று மாடுவிடும் திருவிழா (ஜல்லிக்கட்டு) வின்போது போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தால் மக்கள் பலர் படுகாயம் அடைந்துள்ளதால் பொது மக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்டமும், பீதியும் குறித்து."



1982 மார்ச் 20]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே, அவை முன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, காளை விரட்டு போட்டியின் போது இரு கிராமத்தாரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது என்பது உண்மை தான். அப்போது காவலர் ஒருவர் இரு தரப்பாரையும் ஸ்டேஷனுக்கு வாருங்கள் என்று சொல்லியிருக்கிறார். எங்களுக்குள் பேசுவோம், போலீஸ் எதற்கு என்று கேட்ட நபரை காவல் நிலையத்திற்கு அழைத்துப்போய், அடித்திருக்கிறார்கள். அந்த ஆளை வெளியே விட வேண்டுமென்று மக்கள் அனைவரும் ஆர்ப்பாட்டம் செய்த போதுதான், தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. எனவே இது குறித்து விசாரணை செய்து, காவலர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல் காவல் துறையினர் அத்துமீறி நடந்திருந்தால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

## 4. கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது விவாதம்—தொடர்ச்சி.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு தலைவரவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். 1982-83 ஆம் ஆண்டில் 318 கோடி ரூபாய் அளவிலே கல்வித் துறை செலவு செய்யும். இது தவிர கல்விக்காக வேறு துறைகளில் செலவழிக்கின்றதையும் பார்க்கின்றபோது, நம்முடைய வருவாயிலே 21 சதவிகிதத்திற்குமேல் கல்விக்காகச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். இன்று 36,896 பள்ளிகளும், 2.71 லட்சம் ஆசிரியர்களும், 93.75 லட்சம் மாணவர்களும் அடங்கியதாக கல்வித் துறை இருக்கிறது. கல்லூரிகளை எடுத்துக்கொண்டால், 187 கல்லூரிகளும் 1,77,100 மாணவர்களும் இருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக இந்த ஆண்டில் 22,400 மாணவர்கள் கூடுதல் என்ற அளவில் கல்வி நிலை பெருகியிருக்கிறது. அதையொட்டி 2,200 ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு தருகிற நிலையையும் இந்த ஆட்சி உருவாக்கியிருக்கிறது. ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், 41,263 ஆசிரியர்கள் வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு

---

@352-353 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1982 மார்ச் 20

செய்திருக்கிறார்கள். இப்போது 2,200 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியிருந்தாலும், நாற்றங்கால் பள்ளிகளை உருவாக்கும்போது, மேலும் பல ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு பெறுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

கல்வி நிலையைப் பொறுத்தமட்டில், பள்ளிகளில் சேர்க்க வேண்டிய அளவில் 6 முதல் 11 வயது தொகுதியினர் 95 சதவிகிதமும், 11 முதல் 14 வயது தொகுதியினர் 50 சதவிகிதமும் எட்ட வேண்டுமென்று இந்திய அரசு எண்ணத்தை இப்போதே இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறதென்பது மகிழ்ச்சிக்குரியது.

அடுத்து, மேல் நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில், தொழிற் பாடங்களில் எண்ணிக்கை 1,602 என்ற அளவிலே இருக்கிறது. 1981-82-ல் மேல் நிலைப் பள்ளிகளில் 2.75 லட்சம் மாணவர்களில் 58,520 பேர், அதாவது சுமார் 21 சதவிகிதத்தினர் தொழிற் கல்வி பயின்றிருக்கிறார்கள் என்ற அடிப்படையைப் பார்க்கும்போது, இனி எதிர்காலத்தில் இந்த மாணவர்கள் வேலை வாய்ப்பு தேடி அலைய மாட்டார்கள் என்பதும், தாங்களே வேலையை உருவாக்கும் வலிமை பெற்றிருப்பதும் சிறப்புக்குரியதாகும்.

நிதி ஒதுக்கீடுபற்றி சில உறுப்பினர்கள் குறைபட்டுக்கொண்டார்கள். இந்திய அரசு நிதி ஒதுக்கீட்டில் இராணுவத்திற்கு அடுத்தபடி கல்விக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதோடு நம் மாநிலமும் பல கோடி ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறது. இந்த ஒதுக்கீடு சாதாரண மக்களுக்கு, ஏழை மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். இதற்குக் குறைவாக இருக்கிறது, இதற்குக் கூடுதலாக இருக்கிறது என்று சொல்லும் கண்ணோட்டத்தைக் காட்டிலும், இத்தனை கோடி ரூபாய் செலவு செய்கிறோம், சாதாரண மக்களுக்கு, கிராம மக்களுக்கு, ஏழை மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு அது போய்ச் சேருகிறதா என்றால், அதுதான் வேதனையான விஷயமாக இருக்கிறது.

Education for our People-A Policy Frame for the Development of Education-1978 என்ற அறிக்கையிலே,

"The formal education system in India is now a gigantic enterprise with about 7 lakhs institutions, 3.5 million teachers, 100 million students and an annual expenditure of 25 million rupees. And, yet, it hardly benefits the common people who are poor and very poor."

என்று சொல்லுகிறார்கள்.



1982 மார்ச் 20] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

இந்தப் பயன் யாருக்குப் போய்ச் சேருகிறதென்றால்,

But the main beneficiaries of the system are really the rich and well-to-do classes who form the top 30 per cent of the income-groups and who occupy about 70 per cent of the places at the secondary stage and about 80 per cent of the seats at the University stage.

அதாவது மேல் தட்டிலே இருக்கிற 30 சதவிகிதம் மக்களுக்குத்தான் இவ்வளவு கோடி ரூபாயும் போய்ச் சேருகிறது என்ற கருத்தைப் பார்க்கும்போது, இந்த அரசு ஏழைகளுக்கும், கிராம மக்களுக்கும், பின் தங்கியிருக்கிற மக்களுக்கும் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்திலே எந்த முறையிலே செயல்பட்டு வருகிறதென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அங்கீகாரங்களிலே ஒருவருக்கொருவர் மோதிக்கொண்ட நிலையிலே, உள்ளபடியே கல்லூரி ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கு இந்த அரசு என்ன செய்திருக்கிறதென்பதை அவர்கள் சொல்ல மறந்துவிட்டார்கள் கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், செனட், சிண்டிகேட்டில் இடம் பெறும் வழியைக் கண்டிருக்கிறது. 10 ஆண்டு பணி செய்த உதவிப் பேராசிரியர்கள், பேராசிரியர்களாக்கப்பட்டிருக்கிறார்கள். அரசுக் கல்லூரி ஆசிரியர் சங்கம் அங்கீகாரம் பெற்றிருக்கிறது. தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு வங்கி மூலம் நேரடி ஊதியம் பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. பள்ளி ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால், வழக்கமாக ஆண்டுதோறும் மாற்றும் முறை இல்லை. தேவை இருந்தாலொழிய, ஆசிரியர்களின் வேண்டுகோள் இருந்தாலொழிய மாற்றுதல் கூடாது என்ற நடைமுறையை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. மேல்நிலைப் பள்ளி துவக்கப்பட்டது 5,000 பட்டதாரி ஆசிரியர்கள் பதவி பெற்றார்கள். புதிதாக 5,000 முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் வேலை பெற்றார்கள். ஈர்க்கப்பட்ட பட்டதாரிகளுக்கு 25 ரூபாயிலிருந்து 40 ரூபாயாக உயர்வு பெற்றார்கள். இடைநிலை இளநிலை ஆசிரியர்களுக்கு அவர்கள் பெற்ற பயிற்சிக்காக ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-40)

இடைநிலை ஆசிரியர்களும் சிறப்பாசிரியர்களும் 20 ஆண்டு பணிக்கால அடிப்படையில் சிறப்பு நிலை எய்தியிருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்களை உயர் நிலை, மேல் நிலைப் பள்ளிகளில் துணைத் தலைமை ஆசிரியர்களாக நியமித்திருக்கிறார்கள். உள்ளாட்சி ஒன்றியங்களில் பணியாற்றிய 1 லட்சம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

சுயம்வரம் நடைபெறும்போது மாலை போட்டிருக்கிறவர்களைப் பார்த்து மாலை போடாதிருப்பவர்களுக்கு வயதாகிவிட்ட காரணத்தால், தள்ளாடிய காரணத்தால், கோபம் ஏற்படுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வயதின் காரணமாக அல்ல. தற்செயலாகத் தான் ஏற்படுகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சூழ்நிலை காரணமாக அவ்வாறு கோபம் வருவதாக இருந்தால்கூட, அடுத்த சுயம்வரம் வரும்வரை காத்திருப்பதுதான் முறை. ஆசிரியர் சங்கங்களுக்கு அங்கீகாரம் என்று வருகிறபோது, எப்போதிலிருந்து அவர்களை மதித்து வந்திருக்கிறார்கள் என்பதற்கான அறிக்கையே இருக்கிறது. அரசு ஆணை எண் 418, நாள் 24—2—1939-ல் இதுபற்றி தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

G.O. No. 418, Education, dated 24th February 1939 laid down rules to regulate the work of the Elementary School Teachers' Association with the following objects :—

"The Association shall have for its object the improvement of efficiency of teachers. It may also express opinion on the educational matters referred to it by the Director of Public Instruction. It shall not discuss political or non-educational subjects nor shall it take part in political and social activities". இந்த அடிப்படையிலே அப்போதிருந்த நடைமுறையின் அடிப்படையில்தான் இப்போதும் அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களே ஈடுபட்டிருக்கிற அரசியல் ஈடுபாடுகளுக்கு அது தடையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்களே அங்கீகாரம் தந்தாலும்கூட, வேண்டாம் என்று சொல்வது தான் சிறப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் கோப தாபத்தில் கோரிக்கைகளை வைத்திருந்தாலும் கூட, நானும் ஒரு சில கோரிக்கைகளை இங்கே வைக்கிறேன். 20, 25 ஆண்டு பணியாற்றிய உட்படுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் குறுகியகாலப் பயிற்சித் தகுதி பெற்ற ஆசிரியர்கள் ஆக வேண்டும். மேல் நிலைப் பள்ளிகளில் அனுபவம் மிக்க எவ்வளவோ ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பல்கலைக் கழகங்களின் மூலம் இதற்கு வழிவகை காண வேண்டும். அரசு ஊழியர்கள் 250 நாட்கள் பணிபுரிந்தால், அவர்களுக்கு 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்படுகிறது. ஆனால் ஆசிரியர்கள் 200 நாட்கள் பணிபுரிந்தால் கூட, அவர்களுக்கு 3 நாட்கள் தான் ஈட்டிய விடுப்பு வழங்கப்படுகிறது. இதை 23 நாட்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு எப்.ஆர். 22-பி படி





ஊதியத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். அரசு ஊழியர்களுக்கு 10 வருட பணி அடிப்படையில் தேர்வு நிலை மற்றும் அடுத்த பதவிக்குரிய ஊதிய நிர்ணயம் செய்வது போல், ஆசிரியர்களுக்கும் நிர்ணயிக்க வேண்டும்.

அடுத்து, ஆசிரியர் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி மற்றும் இட ஒதுக்கீடு உயர் நிலைப் படிப்பு வரையிலும் அளிக்க வேண்டும். இன்றைக்கு ஆசிரியர்களைப்பொறுத்தவரையில், அவர்கள் பள்ளிக்குச் சென்று பாடம் சொல்லிக் கொடுத்துவருகிறார்கள். அப்படி பள்ளிக்குச் சென்று பாடம் நடத்தி விட்டு வீட்டுக்கு வந்த பிறகு வெளியாருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். அப்படி வெளி பிள்ளைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது, தன் பிள்ளையை வெளியே அனுப்பி விடுகிறார்கள். இதன் காரணமாக தன் பிள்ளை படிக்காமல் போய்விடுகிறான். ஆதலால்தான் ஆசிரியர் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியும் இட ஒதுக்கீடும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் எண்ணத்தில் இருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இடைநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்காக ஒரு சிறப்பு ஊதிய உயர்வு அளிப்பது போல், பி.டி. பட்டம் பெற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரு சிறப்பு ஊதிய உயர்வு அளிக்க வேண்டும். அதுபோல் எம்.எஸ்ஸி. போன்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் எம்.எட். பயிற்சிக்கு ஊக்க ஊதியம் அளிக்க வேண்டும்.

பள்ளித் தலைமை ஆசிரியர் வரை அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும். ஊட்டி, மதுரை, வேலூர் ஆகிய இடங்களில் ஆசிரியர் இல்லங்கள் இருப்பது போல், பிற மாவட்டத் தலைநகர்களிலும் ஆசிரியர் இல்லங்கள் அமைக்க வேண்டும். குறிப்பாக, சென்னையில் இதைப் பெரிய அளவில் அமைக்க வேண்டும். அப்படி அமைக்கும்போது, அங்கு நூல் நிலைய வசதியும் இருக்க வேண்டும். ஆசிரியர்களுடைய பல பிரச்சினைகள் கவனிக்கப்படாமல் இருந்து வந்தது. ஆனால் இப்போது நல்ல முயற்சி எடுக்கப்பட்டு கவனிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் ஒவ்வொருவரும் தங்கள் பிரச்சினைகளை எடுத்து வைக்க சென்னைக்கு மாவட்டங்களிலிருந்து வர வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் இங்கு வாடகை அதிகமாக இருப்பதால், அவர்களுக்கு அது கஷ்டமாக இருப்பதால், ஆசிரியர் இல்லங்கள் அமைக்க வேண்டும்.

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1982 மார்ச் 20

பல்கலைக் கழக செனட், சிண்டிகேட் போன்றவைகளில் ஆசிரியர்கள் இருப்பதுபோல் மாணவர்களும் ஆசிரியர் அல்லாத அலுவலர்களும் இடம் பெற வேண்டும். 270 பி.எஸ்ஸி. பட்டதாரி பயிற்றுநர்களில் ஆண்டுக்கு 30 பேர் விளக்குநர்களுக்குரிய எம்.எஸ்ஸி-க்குரிய சம்பளத்தைப் பெறும் வாய்ப்பினைப் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், அனைவரும் இந்த வாய்ப்பினைப் பெற ஆண்டுகள் பல ஆகிவிடும். ஆகவே ஒட்டுமொத்தமாக அனைவரும் இதனைப் பெற வழி வகை காண வேண்டும்.

1977 ஆம் ஆண்டு டிசம்பர் 1 அன்று மூன்றாண்டு பணிமுடித்த பயிற்றுநர் விளக்குநர், துணைப் பேராசிரியர் போன்றவர்கள் எம்.பில். ஆக இருக்க வேண்டுமென்று அரசு கல்லூரிகளில் மட்டும் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் கல்லூரிகளில் இந்தக் கட்டாயம் இல்லை. ஆகவே அரசுக் கல்லூரிகளுக்கு இதைக் கட்டாயப்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். 1—4—1980 அன்று பத்தாண்டு பணிமுடித்த துணைப் பேராசிரியர், பிரச்சினை இன்னும் முடியவில்லை. ராஜாராம் குழு பரிந்துரைப்படி பணி வரன்முறை சம்பந்தப்பட்ட 400 பேர்களுடைய 10 ஏ 1 பணிக்காலம் ஒழுங்கு படுத்துதல் பற்றி விரைந்து முடிவெடுக்க வேண்டும். தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டம் குறித்து சங்கத்துடன் பேசி விரைவுபடுத்த வேண்டும்.

1 கோடி ரூபாய் செலவில் 4,434 நர்சரி பள்ளிகள்—நாற்றங்கால் பள்ளிகள் அமைக்க இருப்பது நல்ல முயற்சி. தனியார் நர்சரி பள்ளிகளில் சிலவற்றில் தவறு நடக்கலாம். குறைந்தபட்சம் தனியார் பள்ளிகளை கல்வித் துறையின் ஆணைக்கு உட்பட்ட அளவிற்கு, கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும். அந்த நாற்றங்கால் பள்ளிக்குரிய பாடத் திட்டம், கட்டிட வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், கட்டணங்களை நிர்ணயித்தல், ஒழுங்கு முறையைக் கடைப் பிடித்தல், ஆசிரியர்களுக்குச் சம்பளம் தருகின்ற முறை போன்றவற்றை வரன் முறைப்படுத்த வேண்டும். மாதிரிப் பள்ளி வட்டார அளவில் அமைய வேண்டும். வண்ண நூல்கள் வழங்கப்பட வேண்டும். நாற்றங்கால் பள்ளிகளிலேயே மாதிரிப் பள்ளிகளை ஏற்படுத்துவதன் மூலம் மற்ற பள்ளிகளும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற ஒரு நிலையை ஏற்படுத்த முடியும். தனியார் தான் நல்முறையில் நடத்த முடியும் என்ற நிலையை மாற்ற அரசு இந்த மாதிரிப் பள்ளிகளை அமைக்க வேண்டும். நர்சரிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதுபற்றி ஜெயசூரியா என்பவர் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். 45 மாணவர்களை முதலிலேயே சேர்ப்பதைவிட ஒவ்வொரு மாதத்திலும் 5 பேர் விதம் சேர்த்தால், மாணவர்கள் படிப்பில் ஆசிரியர்



1982 மார்ச் 20] [Thiru A. R. Damodaran]

in spite of what Dr. Janarthanam said, that if the backward communities and poorer sections in Tamil Nadu have come up to this extent today in our State, it is only because right from 1925, we have sought consciously to promote the education of backward sections; and if today we have technicians, lawyers, engineers and doctors from the backward communities and also from the Adi-Dravidar community, it is because of the conscious effort that has been made in Tamil Nadu to promote the opportunities for education for these sections of the people. The Hon. the Minister for Education, in spite of the complaints that have been made by the members of the Teachers' Association, has over the past three years made a deliberate conscious effort to improve rural education and one of the outstanding achievements of the Tamil Nadu Government has been the steady increase in allocation for high school and higher secondary education, particularly in the Plus Two stage to which today a sum of more than 20 crores of rupees has been allocated. All this has gone to benefit almost 700 schools in rural areas. This is undoubtedly one of the out-standing achievements and I will speak about that later.

Another thing on which I would like to compliment the Government is that for the past 15 years we have been complaining that sufficient funds have not been allocated for buildings—school buildings in the rural areas, and over the past three years one of the most welcome features of the Education Budget has been the increased allocation, both in plan as well as non-plan schemes, for building programmes in primary schools. A hefty allotment has been made this year for this as well as for the laboratories that have been constructed in the Plus Two Schools. The Government deserve our felicitations in this regard and although I shall be critical on other matters, nonetheless the Education Minister deserves this well-deserved credit for having taken up this large building programme in the rural schools.

One unfortunate aspect of this development is that the entire building programme has gone towards strengthening the academic courses in our Higher Secondary Schools. In other words, we have spent money on building laboratories and on providing these laboratories with equipments; but the same attention has not been paid to the students of vocational education. Members have complained that vocational education in the Plus Two courses deserves to be strengthened. On principle, we agree that education should be more and more vocationally biassed, especially at the Plus 2 stage, so that the

students may get employment opportunities. I am happy that the Government have appointed a High Level Committee to consider how these vocational courses could be strengthened not only in the Plus 2 courses but, I believe, also in the polytechnics. But, I would request the Hon. the Education Minister to ensure that adequate funds are spent for strengthening the vocational courses. You have for example, a tractor mechanics' course. How will the boys in that vocational course understand anything about a tractor's mechanism unless you have a tractor engine displayed in the class and a plastic model displayed so that the boys may rip open the tractor engine and assemble it themselves? In the vocational courses, you have to develop the skills of the hand. Therefore, I would plead with the Hon. Minister that, in the vocational courses, adequate attention should be paid to the equipments that are required. Then, you have the Commercial Practice course in which you are supposed to have 40 students and teach them typewriting. But there are only two typewriters in that class. One typewriter does not work and one typewriter is kept there for the teacher to operate. The boys will not learn typewriting unless you have at least ten typewriters for those classes. I would request the Hon. the Education Minister to consider this and, if necessary, approach the Government of India because this is an all-India scheme of education, and try to get increased Plan grants for the strengthening of the vocational courses in our Higher Secondary Schools.

Sir, I would next like to refer to a certain aspect of the educational system that exists today. In spite of the large amounts that we are spending, the educational system today is in a ferment for a variety of reasons. We have dissatisfied staff, disillusioned students, demoralised managements, debilitated Directorates and dismayed parents. Every centre in the educational field today is suffering from either a form of paralysis or a form of inertia. This is something which, to some of us who have been closely studying the educational system, is causing a great deal of anxiety because, quite apart from the fact that we are spending over Rs. 291 crores, the various complaints and grievances that are coming up before the Government are causing serious tensions in the educational system. In fact, it would not be false to say that those of us who are associated with such bodies as the Senate and the Syndicate and other academic bodies in the University find that almost 50 to 60 per cent of our time is being spent on attending to grievance problems of staff or non-teaching staff. I realise that the Hon. the Education Minister





is anxious to solve these problems. I have also mentioned that his patience and tolerance have sometimes led to exacerbation of these problems also. I would request him to evolve suitable grievence procedures and to free the Directorate in charge of educational administration—which should attend to development of new courses, development of new schools and development of syllabi—from the industrial relations problems, if I may term it so, that exist in our educational institutions. My Hon. friends and colleagues, members who are teachers' representatives, have catalogued a long list of grievances. I fully realise that it is impossible to solve all those grievances. But, I would like a separate wing to be created in the Directorate to deal with the industrial relations problems. I am sorry I have to call it industrial relations. But, this is one aspect of educational administration. We started with 600 schools in 1955 and today we are having 3,655 High Schools inclusive of the Higher Secondary Schools. But we are having the same type of educational administration to tackle the problems. The only thing is that instead of having one Director we may have four Directors and umpteen Joint Directors and Deputy Directors. But, that is not going to solve the difficulties that exist in the system itself. I would, therefore, request that a separate wing may be created in the Directorate to tackle individual as well as group grievances of staff so that the other development activities may not be distributed. As to how this will be done and what form it should take, I am afraid I am not able to offer a solution at this stage. But, if the matter is discussed in the Consultative Council, doubtless we can arrive at a settlement which would go to some extent to solve the many problems that face the educational system today.

In the matter of Universities, Sir, we now have five Universities in Tamil Nadu and we understand that another University is to be started at Karaikudi. I would like to say that in the allocation of funds to Universities, the block grants to Universities have to be increased because they are finding it extremely difficult to manage and to meet their commitments with the existing resources, not only their commitments to their staff but also their commitments for development and growth of new courses. The University Grants Commission is allocating resources but the State Government have to give a matching grant and in many Universities, complaint has been made that the State Governments are not giving these matching grants in time as a result of which there is some difficulty in formulating the development of new courses in our Universities.

[Thiru A. R. Damodaran] [1982 மார்ச் 20

The Anna University of Technology has received a substantial grant this year and I would like to express my thanks to the Hon. Minister on behalf of the Anna University of Technology because I happen to be a member of the Syndicate and it has received substantial allocation for the setting up of a Remote Sensing Centre. May I request the Hon. Minister to treat the other Universities also in this good fashion and see that new courses are developed? One of the difficulties with our Universities today is that we seem to operate with the same courses for the past 30 years. If one takes Mathematics he shall take Physics and Chemistry. If one takes Zoology, he should take Biology and Chemistry. New subjects and new groups are not being introduced and one particular feature of our Universities is that out of 1,71,000 students who are studying in the various courses, only 12,000 students are studying in the Post-graduate Courses. My Hon. Friend Dr. Janarthanam who has quoted profusely from foreign books should realise that in the United Kingdom and the United States, the percentage of post-graduate students is not below 20 per cent of the total strength enrolled in Universities. We are extremely weak in this area and this figure of 12,000 post-graduate students must jump to 24,000 within a period of 3 years. But that requires massive investment at the highest Degree level and I request this problem be considered in allocating grants for Universities.

Sir, a proposal has been mooted that we are going to have a Women's University in Tamil Nadu. I was wondering if the Hon. Lady Member Thirumathi Mandakini Krishnamurthi would refer to this. What is this Women's University that is going to be established in Tamil Nadu? Are we going to have it as an affiliating University? The U.G.C. has now said that a University must not be an affiliating University. In other words it must not be from Chengalpattu to Kanyakumari. This Women's University that the Government are going to have, is it going to be composed only of women? Or, as Abraham Lincoln said about democracy, of the people, by the people and for the people, is it going to be of the women, by the women and for the women only, or are males to be totally prohibited from having anything to do with Women's University? Is it going to be an affiliating University or is it going to be a residential university? In this age of eighties, apart from the various segregation problems that we have in our country, segregation by caste, sub-caste community and religion, are we going to have segregation by sex in University?



1982 மார்ச் 20]

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பெண்கள்பற்றி நாம் பேசுகிறபோது, சமுதாயத்திலே அவர்கள் பாதிப் பேர்களாக இருக்கிறார்கள். இந்த 30 ஆண்டு காலத்திற்குப் பிறகு, நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து எவ்வளவோ பெரிய தலைவர்கள் எல்லாம் எடுத்துப் பேசிய பிறகும், நாம் எதிர்பார்த்த அளவுக்கு எல்லாத் துறைகளிலும் பெண்கள் வரவில்லை. பெண்கள் தங்கள் உரிமைகளை அனுபவிக்கக் கூடிய அளவுக்கு நாட்டிலே நிலைமைகள் இல்லை என்பதையும் நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் பிரச்சினையை அவர்களே ஆராயவும், எந்தப் பிரச்சினையைப் பற்றியும் அவர்கள் முடிவெடுக்கவும், ஆராய்ச்சி செய்யவும் ஒரு மையம் தேவையில்லை என்று சொல்ல முடியாது. அது மட்டுமல்ல, பெண்கள் பல்கலைக் கழகம் என்று இதுதான் முதன்முதலாக திறுவுவது போல பேசிக்கொண்டிருக்கிறார்கள். பம்பாயிலேகூட பெண்கள் பல்கலைக் கழகம் இருக்கிறது. மற்ற காரியங்களைச் செய்யக் கூடிய பல்கலைக் கழகங்கள் இந்தக் காரியத்தையும் செய்யலாமே, கூடுதலாக ஏன் என்ற முறையிலே வேண்டுமானால் கேட்கலாமே தவிர, இது செய்யக்கூடாத ஒரு காரியம் இல்லை. இது தேவைப்படாத ஒன்று மாதிரி சொல்வது நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, it may be an Institute or a Deemed University. For example, you may convert the Queen Mary's College into a Deemed University and, thus, you may have a Women's University. But, if you are considering the establishment of an affiliating University and the affiliation of all the women's Colleges to the University, then, it is not acceptable. If you are going to have an Institute or a Deemed University, if you are going to convert one of the Colleges into a University, there is no objection at all. My only fear was this. In multiplying the Universities, you should either go by the principle of geographical division, as you have done in the case of the Universities at Coimbatore and Tiruchirappalli and the Madurai-Kamaraj University, etc., or you should go by the aspect of a functional University like the University of Technology. Some principle must be followed instead of announcing merely that a Women's University would be formed, without giving us details of what the University is going to be like. The Government are coming to the Legislature for funds and when we consider the fact that our existing Universities are being starved of funds, merely to increase the number of Universities may not be advisable in view of the constraints on resources.

If the Hon. the Education Minister says that the Women's University will be located in one place and that it will be a purely residential University like the Annamalai University, then I will accept it. If a Women's University of that type is started either in Madras or Thanjavur or in some other centre, then, that is an acceptable phase of development. But it should not be an affiliating University to affiliate Colleges that exist throughout Tamil Nadu.

Sir, the Hon. Member Dr. Janarthanam referred to the fact that English was being neglected in our schools in Tamil Nadu and this is a subject to which we have often referred. In fact, my distinguished colleague, Thiru Thomas, who is himself a teacher of great repute has mentioned that if we wish to strengthen English in our High Schools, we cannot escape having Branch XII English teachers to teach the students in our High Schools. If you really believe that English has to be learnt by our Tamilian students, then, you must strengthen English-teaching in our High Schools right from the 8th Standard onwards and you must have Graduates who have qualified themselves in Branch XII English to teach the students in those classes. There is no use of your attempting to teach English in any other fashion. We have reached a stage where not even 10 per cent of our Graduates in Tamil Nadu are able to qualify themselves to speak simple English and write simple English. Therefore, I would echo the plea made by my distinguished friend and request the Hon. Minister to ensure that the English language teaching is strengthened. If necessary, just as we have Tamil Pandits, we may have Branch XII English Pandits and they may also be exempted from getting the B. Ed. qualification. This may be done if there is any difficulty in getting teachers because it is a tremendous task in that we require teachers for 3,500 schools. During the initial period, you may not be able to get the required number of teachers with the qualifications of B.A. (English) and B.Ed. In that case you may even consider the creation of a new grade of English Pandits and give them the same benefits that you have given to the Tamil Pandits.

Sir, reference was made to the fact that in this year substantial increase in teachers' strength had been formulated by the Tamil Nadu Government. May I point out that, considering the increase in



students' enrolment, the number of teachers that the Government should have appointed for the Primary Schools and the Secondary Schools is at least three times what they have mentioned in the Budget documents? According to the figures given by them the pupil-teacher ratio in our primary schools is 39 in 1981—82, for which they are employing 1,13,000 teachers in our primary schools. Yesterday, one hon. Member said that he wanted the pupil-teacher ratio to be brought down to 20. They have worked out the pupil-teacher ratio taking into account all specialist teachers. If they take into account only the subject teachers, the ratio will be 1:45 or possibly 1:50. Even if they bring down the ratio to 35, considering the fact that there are 44 lakhs of children studying in our primary schools, 1,27,700 teachers would have to be employed. In other words, the difference of about 14,700 teachers would have to be appointed in our primary schools. Similarly, in the middle schools, if they bring down the ratio from the existing strength of 38 to 35, 5,834 secondary grade teachers would have to be appointed. The Hon. Minister may say that we have no funds. But, at the same time, he has to consider the fact that this ratio has to be brought down to a manageable strength. In many cases, the teachers' posts are sanctioned only in November and December just for the purpose of statistics to show, in the Budget documents, an increase in the number of teachers. The sanction of additional staff is not done prior to July. I would request the Hon. the Education Minister to ensure that all additional staff required in our schools are appointed prior to the 1st July every year, so that the students may be benefited by such appointment of additional teachers.

(முற்பகல் 10-20)

Only one point more and I have done. I read of an announcement by the Hon. the Minister for Backward Classes that he proposed to introduce a new classification among the backward classes, as the most backward classes. May I request the Government not to meddle with this matter at all? We have had a series of troubles while meddling with the reservation policy of the Government. If we introduce a new classification called the Most Backward Class, there will be no Backward Class left and everybody would be striving for conversion as the Most Backward Class. I would request the Government not to stir

up the hornet's nest, as they did when they revised the Reservation quota from 49 to 68 per cent, but to leave matters as they are, so that we may not create further sub-divisions in the sub-caste and castes that already exist in Tamil Nadu. There are enough social tensions and we should be very, very cautious in meddling with this matter.

Regarding admission to professional courses, now that we have five Universities in Tamil Nadu—Tiruchirappalli, Coimbatore, Madurai-Kamaraj and Madras and Karaikudi which is going to come, may I request the Government to consider the question of admission to professional courses even at this stage? When we have five different Universities with five different examinations with five different evaluations, how will we be able to equate the marks obtained in five different Universities for entrance to professional courses? I request the Government to have an entrance examination for admission to Engineering and Medical courses. I will speak about Medical College in the discussion on Policy Note on Medical and Public Health. But since the Hon. Minister is concerned with the Engineering and Business Administration courses, I would request him to dispense with the present system and to have a common entrance examination for admission to the professional courses and.........

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாட்டில் 5 யூனிவர்சிட்டிகள் இருந்தாலும், யூனிவர்சிட்டி மார்க்கை வைத்துக்கொண்டு மாத்திரம் சேர்ப்பதில்லை. ப்ளஸ் 2 ஹையர் செகண்டரி மார்க்கை வைத்துக் கொண்டு சேர்க்கிறோம். ஹையர் செகண்டரி என்பது தமிழ் நாடு முழுவதற்கும் ஒரேமாதிரி தான்.*

THIRU A. R. DAMODARAN: Sir, there are any number of courses for which Degree qualifications are also necessary, for example, Post-graduate Courses like M.Sc. and Master of Engineering. In fact, in the United Kingdom which faced this problem they have a common entrance examination for all the University Under-graduate courses, a common application paper and the student has to state his preference whether he wants to get admission into the Oxford or the Cambridge University and it is decided on the basis of the entrance examination results. I mention this because there are a lot of complaints



about mass copying and a boy who studies earnestly and seriously is at a clear disadvantage when his marks are compared to the marks of the student of an institution where the copying takes place. Yesterday the hon. Lady Member Selvi Leelavathi mentioned that the invigilators were being threatened with knives and deadly weapons. This is happening and we have got to recognise the fact. Purely from the point of view of honest and sincere students, if the Government have an entrance examination and if it is conducted in an impartial manner and in a way when the identity of the person who writes the answer paper is not known to the person who evaluates it—and this can be done by adopting the system followed in I.I.T. and oher Central Institutions by giving the answer papers a code number—and if we can see that the identity of the students is not known to the examiner, it will meet the needs. The Government may have their reservation policy also and the reservation of 50 plus 18 per cent of seats may also continue because it has been decided as a matter of policy. Out of the persons applying and coming within the reserved quota, we can select the students who are the most able to join the course. I would request the Government to have some thinking on this issue—perhaps we can discuss it in the Consultative Council—and ensure that we have a system which will be fair to all sections of the community. I mention this because the number of Universities will grow up to nine. You have to take a B.Sc. Graduate from Madurai-Kamaraj University into the M.Sc. course in the Madras University. Therefore, some type of entrance examination is unavoidable. If not this year, we may have to think of it next year.

Sir, one word more and that is with reference to the Central Schools that exist in our State. We have only 137 Central Schools. I believe there are some difficulties in getting No Objection Certificates from the State Government because the State Government do not want too many Central Schools in Tamil Nadu. These Central Schools are special schools catering to certain special sections like Central Government employees transferable all over India, the Defence Services, etc. While we have the Matriculation Schools and the Higher Secondary Schools which are now developing fairly fast in that we have 67 or 70 schools in the Matriculation sector, I would still plead with the Hon. the Education Minister that there should be no discrimination against the granting of No

Objection Certificates to the Central Schools. We should be liberal in this. It does not matter even if we have 100 more Central Schools. They are all fee-levying institutions and they receive no grant-in-aid from the State Government. I would plead with the Hon. Minister to be more liberal in issuing No Objection Certificates to these schools because they cater to certain special classes of people and are not given any grant-in-aid by the local Government.

Sir, I would commend the tremendous work done by the Directorate, in spite of all the complaints, because, as I said, the educational system is today subject to severe strains and stresses. Unless we are able to evolve some procedure whereby these grievances can be short-circuited, I am afraid the entire system is in danger of collapse because 70 per cent of the time of the various officers is being spent only on attending to grievances. My serious request to the Hon. Minister would be that this matter be considered in depth at the next Consultative Council meeting so that some amicable solution may be arrived at.

Thank you.

* திரு. வி. வி. வி. ஆனந்தம்: மாண்புமிகு தலைவரவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது அரசு கல்விக்காக ஏறத்தாழ 300 கோடி ரூபாய் செலவழிக்கிறது. இது போதாது என்பதே என்னுடைய கருத்து. கல்விக்காகச் செலவழிக்கும் பணம் பூராவும் ஒரு நல்ல மூலதனமாகும். சமுதாய வளர்ச்சிக்கு அது பெரிதும் உதவும். வருங்கால சமுதாயத்தைச் சீரும் சிறப்புமாக அமைப்பதற்கும் அது உதவியாக இருப்பதால், கல்விக்காக நாம் எவ்வளவு செலவழித்தாலும், அது சமுதாய வளர்ச்சிக்குச் செலவழித்ததாக எடுத்துக்கொள்ளலாம். குறிப்பாக 6 முதல் 11 வயதுத் தொகுதியில் உள்ள சிறுவர்களுள் ஏறத்தாழ 95 சதவிகிதத்தினர் இப்போது தமிழகத்தில் கல்வி பெறுகிறார்கள் என்பது ஒரு நல்ல செய்தியாகும். நமது தமிழகத்தில் நூற்றுக்கு நூறு அளவிற்கு 6 முதல் 11 வயது தொகுதியினர் கல்வி பெறுகிறார்கள் என்ற நிலை ஒரு சில ஆண்டுகளுக்குள்ளே நிறைவேறுமென்பதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். 6 முதல் 11 வயதுவரை உள்ள சிறுவர்கள் மனதில் எதுவும் நன்கு பதியும். அவர்கள் மனதில் நல்ல கருத்துக்களைப் பதிய வைக்கிற நல்ல சூழ்நிலை அந்த வயதில்தான் இருக்கிறது. அந்த வயதில் அவர்கள் நல்ல பழக்க வழக்கங்களையும், ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்கும்படியாகப்



பயிற்றுவிக்கப்பட வேண்டும். குறிப்பாக அவர்களுக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற அற நூல்களைப் பயிற்றுவிக்க வேண்டும். அவர்கள் அந்த அற நூல்களையெல்லாம் மனதிலே நன்கு பதிய வைத்து, மனனம் செய்துவிடுவார்கள். அந்த வயதில் அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களையும், அற நூல்கள் படிக்கும் வழக்கத்தையும் ஏற்படுத்துவது, அவர்கள் பிற்கால வாழ்க்கைக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். அதோடு சமுதாயம் நல்லதொரு சமுதாயமாக அமைய வாய்ப்பிருக்கும். மாணவர்—ஆசிரியர் விகிதாச்சாரத்தைக் குறைக்க வேண்டும். ஒரு ஆசிரியருக்கு 39, 40 மாணவர்கள் என்றிருப்பதைக் குறைக்க முயல வேண்டும். குறிப்பாக தொடக்கப் பள்ளிகளில் ஒரு ஆசிரியர் 40 சிறுவர்களைக் கவனிக்க வேண்டுமென்பது மிகவும் சிரமமான காரியம். ஒரு ஆசிரியர் 25 குழந்தைகளைத் தான் கவனிக்க முடியுமென்று நான் கருதுகிறேன். அப்போதுதான் ஒவ்வொரு மாணவனிடமும் தனிப்பட்ட அக்கறை காட்டி, அவர்களுடைய உள்ளத்திலே புதைந்துள்ள திறமையை வெளிக்கொண்டு வந்து, அவர்களுக்குக் கல்வி அளிக்க முடியும். எனவே மாணவர்—ஆசிரியர் விகிதாச்சாரத்தைக் குறைக்க வேண்டும். அப்படிக் குறைக்கும்போது, ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய நிலை ஏற்படும். அப்போது அரசாங்கத்திற்குப் பெரிய அளவில் பணம் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இருந்தாலும்கூட, இந்த முயற்சியைப் படிப்படியாகச் செய்து, ஆசிரியர்-மாணவர்கள் விகிதாச்சாரத்தைக் குறைத்துக் கொண்டே வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகளில் தொழில் பாடத் திட்டத்தை மாற்றியமைக்க உயர் மட்டக் குழு அமைத்திருப்பதை வரவேற்கிறேன். மேல் நிலைப் பள்ளிகளில் இன்டஸ்டிரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட் போன்று நிறைய ஏற்படுத்தி, மாணவர்கள் தொழிற் கல்வி பெற வாய்ப்பு அளித்தால்தான், அவர்கள் வாழ்க்கையில் சுயமாக வேலை வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

(முற்பகல் 10-30)

பழைய லார்ட் மெக்காலே பாடத் திட்டத்தின்கீழ் உள்ள முறைகளை இப்போதும் பின்பற்றுகிறார்கள். இத்திட்டம் கிளார்க்குகளை உருவாக்குகிற ஒரு பாடத் திட்டம். இத்திட்டத்தின் மூலம் நாம் எல்லோருக்கும் வேலைவாய்ப்பினை அளிக்கவும் முடியாது. தொழில் பயிற்சியுடன் கூடிய பாடத் திட்டமாக கல்வி முறை அமைய வேண்டும். இன்னும் நிறைய பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்த வேண்டும். நல்ல முறையில் நடைபெற்று வரும் தனியார் பள்ளிகளை ஊக்குவிக்க வேண்டும். இன்றைக்கு நமது கல்வியை அரசு விரிவுபடுத்திக் கொண்டே போகிறது. அதே சமயத்தில் கல்வியின் தரத்தையும் அரசு உயர்த்த

(திரு. வி. வி. வி. ஆனந்தம்) [1982 மார்ச் 20

வேண்டும். இப்போது பல கல்லூரிகளில் அடிக்கடி ஸ்டிரைக் நடைபெறுகிறது. இதனால் மாணவர்களின் படிப்பு தடைபடுகிறது. இன்றைக்கு விருதுநகர் கல்லூரியைப் பொறுத்தவரையில், அது பல வாரங்களாக மூடிக் கிடக்கிறது. குறிப்பாக இப்படிப்பட்ட சூழ்நிலைகளை அரசு தவிர்க்க வேண்டும். மாணவர்கள் ஸ்டிரைக் செய்வதைத் தடை செய்ய வேண்டும். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில். கல்வியின் தரம் குறைந்துவிட்டதோ என்று நான் சில சந்தர்ப்பங்களில் கருத வேண்டியிருக்கிறது. இப்போதெல்லாம் நமது பல்கலைக் கழகங்களில் படித்தவர்கள் பெரும்பாலும் ஐ.ஏ.எஸ். தேர்வில் தேர்வு செய்யப்படுவதில்லை. இப்படிப்பட்ட நிலை சரியல்ல. இதைப் போக்க வேண்டும். நம்முடைய கல்வியின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசு தமிழ் மொழியை போதனா மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. தாய் மொழி போதனா மொழி என்பது ஒரு நல்ல முடிவு. தாய்மொழியில் தான் பாடங்களை நல்ல முறையில் பயில முடியும். ஒவ்வொருவரும் தங்களுடைய தாய்மொழியைப் பயிற்று மொழியாக ஏற்றுக்கொள்வது தான் நியாயமானது. போதனா மொழியாக தமிழ் மொழியை ஏற்றுக்கொண்டால் தான் அவர்கள் கல்வியை எளிதாகக் கற்க முடியும். தட்டச்சு இயந்திரங்களிலும், அச்சுக்களிலும் எளிதாக மொழியை எல்லோரும் கற்கும் வகையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். இப்போது சில சீர்திருத்தங்களைச் செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். அத்துடன் இன்னும் சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். குறிப்பாக உயிர் மெய்யெழுத்துக்களில் இகரம், ஈகாரம் போன்றவற்றுக்கும் உகரம், ஊகாரம் போன்றவற்றுக்கும் ஒரே மாதிரியான குறியீடு முறையைக் கொண்டு வந்து தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்த வேண்டும். இப்போது ஒரேமாதிரியாக எழுத்துக்களை உபயோகப்படுத்த 'னா' 'றா' முறையைக் கொண்டு வந்திருப்பதுபோல் இதற்கும் கொண்டு வந்தால் தமிழ் எழுத்தைக் கற்க எளிதாக இருக்கும். இப்படிப்பட்ட தமிழ் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டால், தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்வதற்கும், லினோ டைப், மோனோ டைப் போன்றவற்றில் அச்சடிக்கவும், கற்கவும் எளிதாக இருக்கும்.

இந்த அரசு கல்விக்காக, கல்வி வளர்ச்சிக்காக சில புதிய கல்லூரிகளைத் தோற்றுவித்திருக்கிறது. இன்னும் தோற்றுவிக்க முயற்சி செய்கிறார்கள். கல்வி கற்கும் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி யிருக்கிறார்கள். 2 வயது முதல் 10 வயது வரை உள்ள சிறுவர்களுக்கு



1982 மார்ச் 20] (திரு. வி. வி. வி. ஆனந்தம்)

இலவசமாகக் கல்வியையும் அளித்து, சத்துணவையும் இலவசமாக அளிக்கும் திட்டம் வரவேற்கத் தக்க திட்டம். அந்தத் திட்டத்தை, குறிப்பாக நர்சரி பள்ளிகள் ஆரம்பிக்கப்பட இருப்பதால், அங்கு பயிலும் சிறுவர்களுக்கும் அமுல்படுத்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் நல்ல கல்வி அறிவைப் பெறுவதுடன், நல்ல சத்துணவையும் பெற வாய்ப்பாக இருக்கும். இதுவரை நான் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு **மாண்புமிகு** தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே கலந்து கொண்டு என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கல்வித் துறையைப் பொறுத்தவரையில், கடந்த ஓராண்டில் இந்த அரசு ஆசிரியர்களுக்காகச் செய்திருக்கின்ற சேவைகளை நான் எப்போதும் மறந்ததில்லை. அதற்காக என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிக்க மறுத்ததுமில்லை. அதற்கு உதாரணமாக நான் ஒன்றிரண்டை இங்கே சுட்டிக்காட்டவும் முடியும்.

பல்லாண்டு காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த, அரசுத் துறையிலே இரண்டு ஜாதிப் பிரிவுகள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இருந்த ஏ & பி பிரிவுகளுக்கு இணைப்பின் மூலம் தீர்வு கண்டது, மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில், அது பள்ளிக்கூடங்களில் தான் இருக்க வேண்டுமென்று திட்டவட்டமாக முடிவு செய்து அதன் காரணமாக கிராமப்புற ஏழையெளிய மக்களும் அந்த வாய்ப்பினைப் பெறும்படி செய்தது, ஒரு லட்சம் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றியது, புதிய பல் கலைக் கழகங்களைத் தோற்றுவித்தது, குறிப்பாக தமிழ் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தது போன்ற இன்னபிற நல்ல பணிகளை எப்போதும் சுட்டிக் காட்டி அதற்காக இந்த அரசை எப்போதும் பாராட்டி வந்திருக்கிறேன். அந்தக் கடமையை நான் எப்போதும் செய்திருக்கிறேன்.

ஆனால் இந்த அரசு இன்று கல்வியின் அடித்தளமாக இருக்கின்ற ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், ஆட்சிக்கு வந்த சமயத்தில் அவர்களை நடத்தியதைப் போல இப்போதும் நடத்துகிறதா என்ற கேள்வியை எழுப்பினால், உண்மையிலே நான் வருந்தத்தக்க பதிலைத் தான் கொடுக்க வேண்டியிருக்கும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு முதல் முறையாக ஆட்சிக்கு வந்தபோதும் சரி, இரண்டாவது முறை ஆட்சிக்கு வந்தபோதும் சரி, ஆசிரியர்கள்பால் மிக்க அனுதாபம்

காட்டினார்கள். முதலில் ஆட்சிக்கு வந்தபோது, ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க ஆர்வம் காட்டிய அந்தப் போக்கினைப் பார்த்து உள்ளபடியே நாங்களெல்லாம் மகிழ்ச்சியடைந்தோம். இரண்டாவது முறையாகத் தேர்தலுக்கு நின்றபோது, நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தபோது, ஒரு மாறுபட்ட சூழ்நிலை தமிழகத்தில் ஏற்பட்டது. அப்போது மேலவைத் தேர்தல் நடைபெற்றபோது, தமிழகத்தில் உள்ள 4 இடங்களில் 3 இடங்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆதரவு பெற்றவர்கள் பெற்றார்கள். "மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமஸ், செல்வி லீலாவதி, டாக்டர் சவார்த் தனம் ஆகியவர்கள் எங்களுடைய, அதாவது ஆளும் கட்சியினுடைய, ஆதரவு பெற்றவர்கள், இதிலிருந்து எங்களுக்கு எவ்வளவு ஆதரவு நாட்டில் இருக்கிறது என்பதை அறிய ஒரு வாய்ப்பு "யானை வரும் பின்னே, மணி ஓசை கேட்கும் முன்னே" என்று சொல்வார்களே, அதுபோல் எங்களுக்கு அடுத்த தேர்தல் முடிவு எப்படி அமையப் போகிறது என்பதை முன்கூட்டியே எடுத்துக்காட்டக் கூடிய ஒன்று" என்று அன்றைக்கு மிகவும் உற்சாகமாக கட்சித் தலைவர் பேசினார்கள். அதோடு கூட ஒரு கோடி ரூபாய் செலவு செய்தாலும் கூட கிடைக்காத விளம்பரம் இதன் மூலம் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்றும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். இப்படி எல்லாம் ஆசிரியர்கள்பால் அனுதாபத்தைச் சம்பாதித்துக் கொண்டிருந்த அரசு இப்போது மட்டும் அவர்களுடைய வருத்தத்தைச் சம்பாதிக்க ஆரம்பித்திருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கும் போது, உள்ளபடியே கவலைப்படுகிறேன். வருத்தத்துடன் இதைத் தெரிவிக்கிறேன். சமீப காலமாக ஆசிரியர்களுக்கு விரோதமாக அரசு அலுவலகங்களிலிருந்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன. ஆசிரியர்களுக்கு விரோதமாக அதிகாரிகள் நடந்துகொள்கிறார்கள். இதுபற்றியெல்லாம் சுட்டிக் காட்டினால், நடவடிக்கை எடுப்பதில்லை. ஒருகால் ஆசிரியர்கள்பால் இருந்த அனுதாபப் போக்கு இப்பொழுது விரோதப் போக்காக மாறியிருக்கிறதோ என்ற நியாயமான அச்சம் கூட எனக்கு ஏற்பட்டிருக்கிறது. பொதுவாகவே அரசு செய்கின்ற நல்ல காரியங்களை, சாதனைகளை பட்டியல் போட்டுப் பாராட்ட நாங்கள் எப்படி கடமைப்பட்டிருக்கிறோமோ அது போல் குறைபாடுகள் ஏற்படும்போது, நல்ல நண்பர்கள் என்ற முறையில், இடித்துச் சொல்லவும் நாங்கள் கடமைப்பட்டவர்களாவோம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். Mass Casual Leave போட்டால், Loss of pay என்று ஆணை போட்டிருக்கிறார்கள். இதுபோல் இன்னபிற ஆணைகள் சில இருக்கின்றன. இன்னின்ன காரணங்களுக்காக, இன்னின்ன விதத்தில் ஊதியத்தைப் பிடித்தம் செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு, கடைசியாக



ஒரு வார்த்தையை அதாவது 'Etcetra என்று போட்டிருக்கிறார்கள். அதாவது எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அர்த்தம்.

சாதாரணமாக ஆசிரியர்கள் அரசுக்கு எதிராக நடப்பவர்கள் அல்ல. அவர்களுக்கு ஏற்படுகிற பிரச்சினைகளை அரசின் உடனடி கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அப்படி கொண்டு வருவதன் மூலம் அரசின் உடனடி கவனத்திற்கு அது வந்து தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தான், ஆர்வத்தின் அடிப்படையில் தான் போராட்டங்களில் இறங்குகிறார்கள். அப்படியாவது தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று நம்புகிறார்கள். சாதாரணமாக அரசியல் கட்சிகள் நடத்துகிற போராட்டத்திற்கும் ஆசிரியர்கள் நடத்துகிற போராட்டத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. ஆசிரியர்கள் நியாயமான கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடத்துகிறார்கள். கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள்—நாங்கள் அவர் மீது இன்னமும் நல்ல மரியாதை வைத்திருக்கிறோம்—சொன்னதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போராட்டம் உச்ச கட்டத்தில் இருந்தபோது, கல்லூரி ஆசிரியர்களை அழைத்து அவர் ஒன்று சொன்னார். 'இன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன வாக்குறுதியை ஏற்று போராட்டத்தை நிறுத்துவது தான் நாட்டுக்கும் நல்லது, உங்களுக்கும் நல்லது. . இதையும் மீறி போராடினால், உங்களுடைய செல்வாக்கை இழப்பீர்கள்' என்று சொன்னார்கள். அரசியல்வாதிகள் போராட்டம் நடத்தினால், அது ஆட்சியைப் பிடிக்க. ஆனால் ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினால், அது அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக, எங்களுடைய கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும்போது, உண்மையிலேயே நாங்கள் அரசுக்குப் பாராட்டுகளை நல்லுணர்வோடு தெரிவிக்கிறோம். ஆனால் அரசியல் வாதிகள் அப்படி அல்ல. ஆகவே தான் ஆசிரியர்களுடைய போராட்டத்துக்கும் அரசியல்வாதிகள் போராட்டத்துக்கும் வித்தியாசம் உண்டு என்பதை அவர் சொல்லியதுடன், நல்லுணர்வோடு வாக்குறுதியை ஏற்று போராட்டத்தை நிறுத்திவிட வேண்டுமென்று சொன்னார்கள். 'நானும் அரசியல் அடிப்படையில் உள்ள ஓர் உறுப்பினராக இருந்தாலும் கூட, ஆசிரியர் பிரதிநிதி என்ற முறையில் உங்களுக்கு இதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்' என்கிற உணர்வோடு அவர்கள் அன்றைக்கு இதைச் சொன்னார்கள். அவருடைய அந்தப் பெருந்தன்மையை நான் அன்றைக்குப் பார்த்தேன். ஆகவே தான் நான் ஆசிரியர்களுடைய போராட்டத்துக்கும்

அரசியல் கட்சிகளுடைய போராட்டத்துக்கும் வித்தியாசம் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இருவரையும் ஒரே விதத்தில் எடை போடுவது தவறு. ஆசிரியர்களிடையே ஏன் இப்படிப்பட்ட போராட்டம் வருகிறது, எதற்காக வருகிறது என்று கேட்டால், அதற்குரிய பதிலைச் சொல்கிறேன். ஆசிரியர்களுடைய உண்ணாவிரதப் போராட்டத்தைக் கூட தடை செய்கின்ற ஒரு நிலைமைக்கு இன்றைக்கு நாடு போகுமானால், ஜனநாயகம் இந்த நாட்டை எந்த நிலைக்குக் கொண்டுபோய் நிறுத்தும் என்கிற அச்சம் எனக்கு உள்ளபடியே இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உண்ணாவிரதத்தை யாரும் தடை செய்யவில்லை. உண்ணாவிரதம் போன்ற நாட்களில் சம்பளம் இல்லை என்று தான் இருக்கிறதே தவிர, உண்ணாவிரதம் யாரும் இருக்கலாம், அதைத் தடை செய்யவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** உண்ணாவிரதம் இருந்தால், எந்த அலுவலகத்தின் முன்னே இருக்கிறார்களோ அந்த சம்பந்தப்பட்ட அலுவலகத்தினுடைய தலைவர் அனுமதி கொடுத்தால்தான், காவல் துறையினர் அனுமதி கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இது மறைமுகமாகத் தடைசெய்யும் ஒரு முயற்சி. இரண்டாவது, சம்பந்தப்பட்ட பள்ளிக் கல்வி அலுவலகத்தின் முன்போ அல்லது கல்லூரிக் கல்வி அலுவலகத்தின் முன்போ உண்ணாவிரதம் இருந்தால், அதற்கான காரணம் என்னவென்றால், அப்படியிருந்தால் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்கச் செய்யலாம் என்றுதான் இருக்கிறார்கள். இன்னொன்று, இந்த உண்ணாவிரதத்திற்கு வரும்போது ஆசிரியர்கள் Casual Leave போட்டுக்கொண்டுதான் வருகிறார்கள். அவர்கள் ஸ்டிரைக் செய்துவிட்டு வரவில்லை. தங்களுக்கு இருக்கின்ற தற்செயல் விடுப்புக்கு விண்ணப்பத்தைக் கொடுத்துவிட்டுத்தான் வருகிறார்கள். தற்செயல் விடுப்புக்கு விண்ணப்பம் கொடுத்துவிட்டு வந்தாலும் கூட, loss of pay என்று சொன்னால் எப்படி ? தயவுசெய்து இந்த ஆணையை ரத்து செய்யுங்கள். உடனடியாக வாபஸ் பெறுங்கள். மூன்று இலட்சம் ஆசிரியர்களுடைய விரோத உணர்வை சம்பாதிக்க வேண்டாம்.



ஆட்சிக்கு வரும் முன்னர் அனைத்து அரசியல் கட்சிகளுமே ஆசிரியர்களுக்கு அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று சொல்வார்கள். ஆனால் பிறகு அதை மறந்துவிடுகிறார்கள். தமிழ் நாட்டின் கடந்த கால வரலாறு இது. இதுதான் சரித்திரம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதற்கு ஆளாக வேண்டுமா என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், இந்த ஆணையை ரத்து செய்ய வேண்டும். ஆசிரியர்களின் விரோத உணர்வை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட சம்பாதிக்க வேண்டுமா ? ஆகவே, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வரும்போது, ஒருபுறம் ஆசிரியர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளுகின்ற . . .

* **திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ஆசிரியர்களின் விரோதப் போக்கை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட சம்பாதிக்க வேண்டுமா என்று கேட்டார்கள். அப்படியானால் வேறு யார் சம்பாதித்திருக்கிறார்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** இதற்கு முன்னால் ஆட்சியிலே இருந்த எல்லா அரசியல் கட்சிகளும் சம்பாதித்திருக்கலாம். நீங்களும் சம்பாதிக்க வேண்டுமா என்று கேட்கிறார். அதை கவனத்தில் வைக்க வேண்டும் என்று சொல்கிறார்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகின்றபோது, முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஆசிரியர்களுடைய நன்மையை மனதில் கொண்டு, அவர்கள்பால் மிகுந்த பற்று கொண்டு, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிறது என்ற அர்த்தத்திலேதான் பேசியிருக்கிறார்கள். அப்படிச் செய்யாமல் நீங்கள் தான் கெட்ட பெயரை சம்பாதிக்க வேண்டுமா என்ற அளவிலேதான் பேசியிருக்கிறார்கள். ஆனால் இடையிலே புகுந்துகொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மஞ்சள்குளிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இந்த அரசைப் பார்த்துத்தான் சொன்னார்கள். பக்கத்திலே இருப்பவருடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லக் கூச்சப்பட்டுத்தான் அவர் சொல்லவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் வெளிப்படையாகவே சொல்ல விரும்புகிறாரா ?

**திரு. செ. முத்துசாமி :** கல்வி இலாக்காவில் இதுவரையிலும் இப்படிப்பட்ட உத்தரவுகள் வரவில்லை. கடந்த காலத்தில் இப்படிப்பட்ட உத்தரவுகள் இல்லை. இப்போதுதான் வந்திருக்கிறது. இந்த அரசினுடைய போக்கு ஏன்

மாறியிருக்கிறது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி. கடந்த காலத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இல்லை என்றுதான் சொல்கிறார்கள். ஆகவே, அதை நீக்க வேண்டும் என்றுதான் கேட்கிறார்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திருக்குறளுக்குத் தான் பல உரை ; இதற்கும் இவ்வளவு உரையா !

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : விவாதம் திசை திரும்பிப் போகிறது. ஆசிரியர்கள்பால் மிகவும் அனுதாபமாக ஆரம்பத்திலேயிருந்து நடந்துவந்த அரசு தொடர்ந்து அப்படியே நடந்துகொள்ள வேண்டும். அந்தக் கொள்கையை, போக்கை மாற்ற வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவுரை கொடுக்கும்போதே இப்போது நல்லமுறையிலே நடக்கவில்லை என்ற ஒரு பொருள் புதைந்து கிடக்கிறது. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் ?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அதைத்தான் தெளிவாகச் சொன்னேன், விரோதப் போக்கு வளர்ந்துகொண்டே இருக்கிறதோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

* திரு. க. இராமமூர்த்தி : இதுவரையிலும் இருக்கும் ஆணைகள் விரோதப் போக்கை வளர்க்கவில்லை, இனிமேல் வருமோ என்று எண்ணத் தோன்றுகிறது என்கிறார்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்னாலே பார்த்தால் செட்டியார் குதிரை, பின்னாலே பார்த்தால் ராவுத்தர் குதிரை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தக் காலத்திலே எல்லாம் எப்படியெல்லாம் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்ற பட்டியலை இப்போது சொல்வது அவசியம் அல்ல. அது வேறு விஷயம். இது வேறு விஷயம். அதற்குள்ளே நான் போகவில்லை. இப்போது தமிழகத்திலே இருக்கும் மூன்று இலட்சம் ஆசிரியர்களுடைய நலனைப் பாதுகாக்க நான் பேசுகிறேன். ஆசிரியர் விரோத மனப் பான்மை என் வளர வேண்டும் என்பது தான் எனக்குப் புரியவில்லை. ஆகவே, அதை அரசு மாற்றிக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு உதாரணம் சொல்கிறேன். AIFAVCTO என்ற அமைப்பு—அதாவது அகில இந்திய பல்கலைக் கழக கல்லூரி ஆசிரியர்கள் அடங்கிய அமைப்பு—அவர்கள் அகில இந்திய அளவிலே



ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். தமிழ் நாட்டிலேயும் ஒருநாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். ஆனால் தமிழ் நாட்டில் மட்டும்தான் 15—11—1981 ஆம் நாள் வேலை நிறுத்தத்திற்காக ஊதியப் பிடித்தம் செய்யப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும் மாநிலங்களிலே கூட இந்த ஊதியப் பிடித்தம் செய்யப்படவில்லை என்று சொன்னால்—இந்த ஸ்ட்ரைக்கிலே ஈடுபட்டவர்களுடைய ஊதியத்தை நாங்கள் பிடிக்கிறோம் என்று சொல்லி, அதன் மூலமாக ஸ்டிரைக்குக்கு எதிராக நாங்கள் இருக்கிறோம் என்று மத்திய அரசுக்குச் சொல்லி நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இப்படிச் செய்திருக்கிறார்களோ என்று தெரியவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்துகொண்டிருக்கும் மாநிலங்களிலே கூட இப்படிச் செய்யவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, பரிட்சை நடத்தப்பட வேண்டிய நிலைமை இருந்தது. கல்லூரி ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக கல்லூரி மாணவர்கள் படிப்பு பாதிக்கப்படுகிறது என்பதோடு கூட, இன்றைக்கு கல்லூரிகள் இருக்கும் நிலைமைக்கு யார் பொறுப்பேற்றுக்கொள்கிறார்கள் என்ற பிரச்சினை பொதுமக்கள் மத்தியில் இருக்கிறது. இன்றைக்கு கல்லூரிகள் சரிவர இயங்கவில்லை. கல்லூரிகளிலே பரிட்சை நடக்கவில்லை. மாணவர்கள் ஒழுங்கீனமாக இருக்கிறார்கள். இதற்குரிய பொறுப்பை ஏற்கக்கூடிய நிலையிலே யார் இருக்கிறார்கள் ? பொதுமக்களைப் பொறுத்தவரையில், ஆசிரியர்கள் தங்களுடைய பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கருதுகிறார்களே தவிர, அவர்களுக்கு இதிலே பொறுப்பில்லை என்று, யாரும் ஒத்துக்கொள்ள முடியாது. ஆசிரியர்கள், அவர்களுடைய பிரச்சினை என்று மட்டும் அரசாங்கம் பேசிக்கொண்டு மாணவர்கள், பொதுமக்கள், அவர்களுடைய படிப்பு, நாட்டின் முன்னேற்றம் என்று கவலைப்படாமல் இருந்தால், இந்த வாதம் சரியாக இருக்குமே தவிர, அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பேசினால், இந்த வாதம் சரியாக இருக்குமா, மேலும் எவ்வளவு பலஹீனமானது என்பதும் தெரியும்.

திரு. செ. முத்துசாமி : ஆல் இந்தியா அளவிலே நடந்த இந்தப் போராட்டம் பீஹார் மாநிலத்திலேயும் நடந்தது. அங்கேயும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தார்கள். ஒருநாள் அந்த வேலை நிறுத்தத்தைச் செய்கிறார்கள் என்று சொன்னால், அடுத்த நாள் அதைக் காம்பென்சேட் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கும் நிலைமைகள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது இந்த அரசு மட்டும் என் சம்பளத்தைப் பிடிக்க வேண்டும் ? இன்னொரு நாள் வேலை செய்யுங்கள்

என்று சொல்லலாம் அல்லவா ; இந்த அரசு மட்டும் ஏன் சம்பளத்தைப் பிடிக்க வேண்டும், இன்னொரு நாள் வேலை செய்யுங்கள் என்று சொன்னால், இம்ப்ரூவ் ஆகாதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவர்கள் இஷ்டப்படி நடத்தியதன் விளைவாகத்தான் இப்போது பல தேர்வுகளின் முடிவுகள் வெளியே வரவில்லை. அதனால் இளைஞர்கள் எவ்வளவு பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் ? நான் விரும்புவது, அல்லது இந்த அரசு விரும்புவது, ஆசிரியர்கள் கோரிக்கை என்ற பெயரால் இந்த சமுதாயத்திலே இருக்கும் இளைஞர்களுடைய எதிர்கால வாழ்க்கையைப் பழிவாங்குவதை விரும்பவில்லை. அப்படிப்பட்ட அந்த நிலைமையைக் கட்டுப்படுத்த விரும்புகிறோமே தவிர இது ரூபாய், அணா, பைசா கணக்குப் பார்க்கும் பிரச்சினை அல்ல. இதிலே ஒரு கட்டுப்பாடு கொண்டு வந்து, முறையான முன்னேற்றம் காண, மாணவர்களுடைய எதிர்காலம் பாழாகாமல் தடுக்க, இளைஞர்களுடைய வாழ்க்கையைப் பாதுகாக்க—இந்த நிலைமைகளிலே யாராவது பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையை நாம் ஏற்படுத்தியாகவேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாணவர்களுடைய நலனுக்குப் பொறுப்பேற்றுக்கொள்வதில் ஆசிரியர்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு பிரச்சினைகள்—அந்தப் பிரச்சினைகளுக்கு எந்தெந்த அளவிலே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமோ அந்த அளவிலே பொறுப்பேற்றுக் கொள்ள நாங்கள் தயார்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இன்னொன்றையும் கூட நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தங்களுடைய கோரிக்கையைப் பற்றிப் பேசுகின்றபோது; மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் பரிட்சையைப்பற்றி ஒன்று சொன்னார்கள். அவர் பேசுகின்றபோது, ஒருபுறத்திலே மாணவர்கள் அடிக்க வருகிறார்கள், குத்த வருகிறார்கள், எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். இன்னொரு பக்கத்திலே பேசுகின்றபோது "எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆகவே, நாங்கள் பரிட்சையை பகிஷ்கரிக்கத்தான் செய்வோம்" என்று சொன்னார்கள். ஆகவே, என்ன காரணம் என்று தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதற்கு நாம் ஒரு தீர்வு காண வேண்டும். ஆகவே தான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதைப்போல 'கன்சல்டேட்டிவ் கமிட்டி'-யிலே



வைத்து இதைப்பற்றிப் பேசி தீர்வு காணலாம். ஆனால் கோரிக்கைகளுக்காக தேர்வைப் பகிஷ்கரிப்பது என்ற நிலை வந்தால், அந்த நிலையிலே அரசு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யும். அப்போது சில நடவடிக்கைகளை எடுக்கும்போது, இந்த அரசு ஆசிரியர்கள் விரோதப் போக்குடைய அரசு என்ற குற்றச்சாட்டைச் சுமத்தலாம். ஆனால் அரசாங்கம் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றாமல், தன்னுடைய கடமையை நிறைவேற்றாமல், சமுதாயத்திற்குச் செய்யவேண்டிய முதல் கடமையை நிறைவேற்றாமல் சும்மா இருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

(முற்பகல் 10-50)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் பேச விரும்பிய தேர்வு முறைப் பகுதிக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே விரைவாக என்னை அழைத்துவிட்டார்கள். நேற்று கூட சட்ட மன்றப் பேரவையிலே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளித்ததாக பத்திரிகையிலே படித்தேன். சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வின் முடிவுகள் தாமதமாக வருவதற்கு யார் காரணம் என்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் தேர்வு 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடந்தது. ஆனால் 1982 ஆம் ஆண்டு சனவரி 20 ஆம் தேதி வரை, பல்கலைக் கழகத் தேர்வு விடைத் தாள்களைத் திருத்துவதற்கான அறிவுரைக் குறிப்புகள் ஆசிரியர்களுக்குப் போய்ச் சேரவில்லை. வேண்டுமானால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதைச் சரி பார்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்வு முடிவுகள் தாமதமின்றி வெளிவராததற்கு பல்கலைக் கழகம் எந்த அளவிற்குக் காரணம் என்பதைப்பற்றி நாங்கள் பல்கலைக் கழகத்தைக் கேட்கிறோம். பல்கலைக் கழகத்திலேயிருந்து அனுப்பப்பட்ட விடைத்தாள்கள் 500 பேர்களிடத்திலிருந்து இன்னும் திரும்ப வரவில்லை என்று அவர்கள் ஆசிரியர்கள் மேல் குற்றச்சாட்டைச் சொல்லுகிறார்கள். ஆசிரியர்கள் தவறு செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது, இந்த அரசு பல்கலைக் கழக ஆசிரியர்கள் மீது விரோதப் போக்கை, விரோத எண்ணத்தைக் கொண்டிருக்கிறது என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இப்படிச் சொல்லுவதை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் ?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆசிரியர்கள் உண்மையிலேயே தவறு செய்திருந்தால், அதற்குரிய நடவடிக்கையை எடுத்தால், அந்தப் பிரச்சினைக்குள் நாங்கள் போக விரும்பவில்லை. ஆனால் ஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்ட விடைத்தாள்களைத் திருத்துவதற்குரிய அறிவுரைக் குறிப்புகளை பல்கலைக் கழக நிர்வாகம் ஆசிரியர்களுக்கு உரிய நேரத்தில் அனுப்பவில்லை. அதற்குப் பிறகு அனுப்பியிருக்கிறது. அதுவும் எப்படியென்றால், சிலர் அலுவலகத்திற்குச் சென்று கேட்டபோது, அவர்கள் கையில் கொடுத்திருக்கிறார்கள். சென்னையில் உள்ளவர்கள் அப்படி நேரில் சென்று பெற்றிருக்கிறார்கள். ஆனால் வெளியூர்களில் உள்ளவர்களுக்கு இது போய்ச் சேரவில்லை. குறிப்புகள் போய்ச் சேர்ந்த 15 நாட்களுக்குள் ஆசிரியர்கள் திருத்திக் கொடுக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிய நேரத்தில் திருத்திக் கொடுக்கிறார்கள். அவர்கள் திருத்திக் கொடுத்த பிறகும் கூட, இன்னும் Examination Board கூட்டப்படவில்லை. பி.ஏ., பி.எஸ்ஸி. மூன்றாம் செமிஸ்டரின் தேர்வு முடிவுகள் இன்னும் வரவில்லை. நான்காவது செமிஸ்ட்டர் தேர்வுகளை எழுத விரும்புகிற மாணவர்கள், இன்னும் மூன்றாவது செமிஸ்டரின் தேர்வு முடிவுகளே வரவில்லையே, என்ன செய்வது என்று பல்கலைக் கழக நிர்வாகத்தினரிடம் கேட்டால், எல்லோரும் இரண்டுக்கும் சேர்த்து பணம் கட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படியென்றால் மூன்றாம் செமிஸ்டரில் ஒருவர் கூட தேறாமல் அனைவரும் தோல்வி அடைந்துவிட்டார்கள் என்று கருதுகிறார்களா ? ஆகவே மாண்புமிகு கல்வயமைச்சர் அவர்கள் தயவுசெய்து இந்த விவாதத்தைச் சரி பார்த்து யார் தவறு செய்திருக்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மூன்றாவது செமிஸ்டர் தேர்வு முடிவு வராமல் பாதிக்கப்பட்டிருக்கிற மாணவர்களுக்கு, அவர்கள் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்துவதற்குரிய கடைசி தேதியை நீட்டிப்பு செய்ய உரிய அறிவுரையை பல்கலைக் கழகத்திற்கு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னுமொன்றைச் சொல்ல விரும்புகிறேன். பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு ஆகியவற்றுக்கான பொதுத் தேர்வுகள் நடைபெறுகின்றன. இலட்சக்கணக்கான மாணவர்கள் இத்தேர்வுகளை எழுதுகிறார்கள். விடைத் தாள்களை பத்து நாட்களில் திருத்திக் கொடுக்கிறார்கள். இலட்சக்கணக்கான மாணவர்கள் எழுதுகின்ற தேர்வுகளின் முடிவுகள் உரிய காலத்திலே வெளியிடப்படும்போது, மிக எளிதான பல்கலைக் கழகத் தேர்வு



முடிவுகள் உரிய காலத்தில் வெளியிடப்படவில்லையென்றால், அதற்குக் காரணம் யார் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரி பார்த்து— நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக் கொள்கையைப்பற்றி இன்னுமொன்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசினுடைய கல்விக் கொள்கையில் குழப்பங்கள் இருக்கின்றனவோ என்ற சந்தேகம் வருகிறது. இப்போது தாய்மொழி பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. ஒரு சில இடங்களில் தாய்மொழி பயிற்சி மொழியாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. தாய்மொழியில் படித்துவிட்டு வருகிற மாணவர்களுக்கு, ஆங்கிலம் பயிற்சி மொழியாக உள்ள கல்லூரிகளில் இடம் மறுக்கப்படுகிறது. இரண்டாவது, தாய்மொழியில் படித்துவிட்டு வரும் மாணவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் ஏதாவது முன்னுரிமை அளிக்கப்படுகிறதா என்றால் இல்லை. தாய்மொழியில் படித்த மாணவர்களுக்கு கல்லூரியில் இடம் கிடைக்காது, வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை கிடைக்காது, பின்னுக்குத் தள்ளப்படுவார்கள் என்ற அவநம்பிக்கையை அரசாங்கமும், கல்வித் துறையும் ஏற்படுத்தினால், எப்படி தாய்மொழி வளரும் ? மக்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் எப்படி நம்பிக்கை வரும்? ஆகவே கல்விக் கொள்கையிலே ஏதாவது குழப்பம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

தாய்மொழி பயிற்சி மொழியாக வளர வேண்டுமென்று விரும்பினால், தாய்மொழியில் படிக்கின்ற மாணவர்கள் மேற்படிப்புக்குப் போகும்போது, இடம் நிச்சயமாகக் கிடைக்கும், பின்னுக்குத் தள்ளப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதம் கொடுத்தாக வேண்டும். அதே போல அரசு வேலை வாய்ப்புகளில், தாய்மொழியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்ற உறுதிமொழியும் கொடுத்தாக வேண்டும். மொழிக் கொள்கையில் தாய்மொழிக்கு முதலிடம் என்று சொல்லும்போது, வேலை வாய்ப்பில் மட்டும் என் முன்னுரிமை கொடுக்கக் கூடாது ? நான் கூறிய இந்த இரண்டு உறுதி மொழிகளையும் அளித்து அமுல்படுத்தினால், தாய்மொழியில் மக்களுக்கு நம்பிக்கை வரும் என்பதை அரசுக்குத் தெரிவித்து, அதைப்பற்றிப் பரிசிலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேர்வு முறையைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்று மிகப் பெரிய கேலிக்குரியதாக இருக்கிறது தேர்வு முறை. " Mass Copying " என்ற மிகப்பெரிய சமுதாயத் தீமை வளர்ந்து கொண்டிருக்கிறது; இதற்கு யார் காரணம் என்பதை அலசிப் பார்க்க வேண்டும்.

உடனடியாக ஆசிரியர்கள் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. ஆசிரியர்கள் கட்டாயமாக தேர்வுப் பணிக்கு வர வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், தேர்வுப் பணியைப் புறக்கணிக்க வேண்டுமென்ற கோழைத்தன்மை படைத்தவர்கள் அல்ல. ஒரு சில நிகழ்ச்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதிலிருந்து அமைச்சர் அவர்கள் எடை போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டக் கல்லூரித் தேர்வுபற்றிச் சொல்லுகிறேன். 16—11—1981 அன்று காலை 9-30 மணிக்கு மாநிலக் கல்லூரியில் தேர்வு நடைபெற்றது. காலை 9-30 மணி முதல் 10-30 மணிவரை மாணவர்கள் யாரும் காப்பி அடிக்கவிடாமல் மேற்பார்வையிட்ட ஆசிரியர்கள் பார்த்துக்கொண்டார்கள். பிறகு தேர்வு மண்டபத்திலே ரகளை ஏற்பட்டது. அங்கே பெரிய குழப்பம் ஏற்பட்டது. உடனே மாநிலக் கல்லூரியின் முதல்வரிடம் சென்று ' இவ்வாறு செய்கிறார்கள், என்ன செய்வது ' என்று ஆசிரியர்கள் முறையிட்டார்கள். இப்படி ஒரு ரகளை ஏற்படும் போது தேர்வுப் பணி செய்ய முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். கட்டாயமாகத் தேர்வுப் பணியைச் செய்தேயாக வேண்டுமென்று முதல்வர் கட்டளையிட்டிருக்கிறார். எப்படிச் செய்வது ? இருக்கின்ற சூழ்நிலையோ பதட்டமான, கொந்தளிப்பான சூழ்நிலை. அங்குள்ள ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கிடையாது. அப்படி இருக்கும்போது தேர்வுப் பணியை எப்படிச் செய்வது ? ஆகவே பத்தரை மணியிலிருந்து 12-10 மணி வரை எந்தவிதமான மேற்பார்வையும் இல்லாமல் மாணவர்கள் தாராளமாகத் தேர்வை எழுதியிருக்கிறார்கள். இதற்கு மாநிலக் கல்லூரியின் முதல்வர் அனுமதி அளித்திருக்கிறார். அதற்குப் பிறகு 12-10 மணியிலிருந்து 2-10 மணி வரை ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தப்பட்டு மீண்டும் தேர்வுப் பணி நடைபெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேர்வு எப்படி நடைபெற்றிருக்கும் என்பதை யூகித்துக்கொள்ளலாம். இது ஒரு நிகழ்ச்சி: இதற்கு யார் காரணம் ?

அடுத்து, சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். சதக்கதுல்லா அப்பா கல்லூரியின் முதல்வர் தேர்வு சம்பந்தமாக முறைகேடாக நடந்திருக்கிறார் என்ற குற்றச் சாட்டு வந்திருக்கிறது. பொதுத் தேர்வு நடந்த மூன்று நாட்களுக்குப் பிறகு, தனியாகத் தேர்வு எழுத ஒரு மாணவனுக்கு அனுமதியளித்திருக்கிறார். நிர்வாகம் அவர் மீது சலுகை காட்டியிருக்கிறது. பிறகு பல்கலைக் கழகத்திற்கு முறையீடு அனுப்பப்பட்டது. பல்கலைக் கழகம் அந்த முதல்வர் மீது



நடவடிக்கை எடுக்க அச்சப்பட்டு, நடந்த தவறுக்காக அவர் மூன்று ஆண்டுகளுக்கு தேர்வுப் பணி செய்யக் கூடாது என்று மட்டும் அறிவித்திருக்கிறது. வேறு ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படி பல நிகழ்ச்சிகளை நான் சொல்ல முடியும். இப்படி " Mass Copying " என்ற சமுதாயத் தீமைக்கு அடிப்படைக் காரணம் என்ன ? அடிப்படையிலே உள்ள சமுதாயப் பிரச்சினைதான் காரணம், கல்விக் கொள்கையிலே இருக்கின்ற கோளாறுதான் காரணம், வேலைவாய்ப்பு உத்தரவாதம் தராதது ஒரு காரணம், நிர்வாகத்தினுடைய சுயநலப்போக்கு ஒரு காரணம்.

ஒரு செய்தியைச் சொன்னால், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் நம்புவார்களோ, நம்பமாட்டார்களோ தெரியவில்லை. ஒரு சில கல்லூரி நிர்வாகங்கள், தங்கள் கல்லூரி மாணவர்கள் மிக அதிகமான விழுக்காடு தேர்ச்சி பெற வேண்டுமென்று மாணவர்களை காப்பியடிக்க அனுமதிக்க வேண்டுமென்று அவர்களே ஆசிரியர்களை வற்புறுத்துகிறார்கள். இதை புலனாய்வுத் துறை மூலம் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். உண்மையில் அப்படி இல்லை என்றால் என்னுடைய குற்றச்சாட்டை நான் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன். பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளோடு கலந்து பேசுங்கள், யார் யார் இப்படிப்பட்ட கேவலமான முறையில் காப்பியடிக்க ஆசிரியர்கள் உடந்தையாக இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

பல்கலைக் கழகங்களை ஜனநாயகப்படுத்த வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் உரையிலே நமக்கு வாக்குறுதி தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் முடிக்கச் சொல்கிறார்கள். என்னுடைய பேச்சில் ஏராளமான குறுக்கீடுகள் தாராளமாக நடந்திருக்கின்றன. நான் எனக்குரிய நேரத்தில் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் 20 நிமிடங்களுக்கு மேலாகவே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பல்கலைக் கழகங்கள் பற்றி நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே, 21—6—1980-ல் நடைபெற்ற உரையிலே மிகத் தெளிவாகத் தரப்பட்டிருக்கிறது.

"A Bill will also be brought before this House to reorganis the administration of the Universities of Annamalai, Madras an Madurai-Kamaraj."

ஆனால் மதுரை-காமராஜ் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இந்தப் பல்கலைக் கழகங்களுடைய நிர்வாகச் சீர்திருத்தத்திற்கு என்று சட்டத் திருத்தம் கொண்டுவருகிறோம் என்று அரசு சொல்லி, முடிவெடுத்து இரண்டாண்டுகள் ஆகின்றன. இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர தாமதம் ஆவதின் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் எல்லாம் அவதிக்குள்ளாகிறார்கள் என்பதை அரசு உணர வேண்டும். இதிலே அரசு மெத்தனமாக நடந்து கொண்டால், பல்வேறு சமுதாயப் பிரச்சினைகள் மட்டுமல்ல, கல்விப் பிரச்சினைகள் மட்டுமல்ல, கொந்தளிப்புகள் ஏற்படும். அமைதியற்ற சூழ்நிலைகள் ஏற்பட்டுவிடும். அண்ணாமலைப் பல்கலைக் கழக பூமி கொந்தளிப்பான பூமியாக மாறிவிடக்கூடிய ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்படவிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 180 ஆம் ஆண்டு ஜூலையிலே இதேசட்ட மன்ற மேலவையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள், வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். சட்டத் திருத்தம் கொண்டுவரத் தேவைப்பட்டால், அவசரச் சட்டத்தின் மூலமாகக் கூட இதைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட —பல்கலைக் கழக ஆசிரியர்கள், அலுவலர்கள் அவரைச் சந்தித்தபோது—நமது மேலவை அங்கத்தினர் திரு. தாமஸ் அவர்களும் நானும் உடனிருந்தோம்—உறுதி அளித்தார்கள். அதற்குத் தக்க ஆலோசனை கேட்டார்கள். அதற்கு என்று ஐவர் குழு அமைக்கப்பட்டது. அதனுடைய ஆலோசனைகளை மூன்று மாதத்தில் அரசுக்குக் கொடுத்தது. அந்த அறிக்கையும் அரசினிடத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர அரசு பின்வாங்காது என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது அங்கே என்ன நடக்கிறது? அங்கே என்ன நடக்கிறது என்பது பற்றிச் சொல்கிறேன். அவர்கள் அங்கே போராட்டத்தில் ஈடுபட்டார்கள். 24 ஜனவரி முதல் பிப்ரவரி 1981 வரையிலே பல்கலைக் கழக ஆசிரியர்களும், அலுவலர்களும் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அந்தப் போராட்டம் முடிந்த பிறகு, ஆசிரியர்கள் சார்பில் நான் கொடுத்த வாக்குறுதியின்படி எல்லா சனிக்கிழமைகளிலும் வேலை செய்வார்கள் என்று சொன்னேன். அதன்படி அவர்கள் எல்லா சனிக்கிழமைகளிலும் வேலை செய்தார்கள். கோடை விடுமுறைக் காலம் வேண்டாம் என்றார்கள். அவர்கள் மாணவர்கள் நலத்திற்காக கோடை



விடுமுறைக் காலத்திலும் வேலை செய்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பத்தாண்டு காலமாக இல்லாத அளவில் மிக அதிகமான நாட்கள் அதிகமான வேலையை அவர்கள் செய்திருக்கிறார்கள். அதற்கு முன்பு 70, 80 நாட்கள்தான் வேலை நடக்கும். இப்படி போராட்டம், கிளர்ச்சி என்று நடைபெற்ற ஆண்டிலேயே ஓராண்டிலே எந்த அளவுக்கு பல்கலைக் கழகச் சட்டப்படி வேலை செய்ய வேண்டுமோ, அந்த அளவுக்கு வேலை நடைபெற்றிருக்கிறது. அதற்கு ஆசிரியர்கள் பரிபூரணமான ஒத்துழைப்பை அரசுக்கு அளித்திருக்கிறார்கள். சனிக்கிழமைகளிலே வேலை செய்திருக்கிறார்கள். விடுமுறை நாட்களிலே வேலை செய்திருக்கிறார்கள். கோடை விடுமுறை நாட்களிலே வேலை செய்திருக்கிறார்கள். அதற்கு நிர்வாகம் என்ன பரிசு அளித்திருக்கிறது? மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள் சொன்னார்கள்: இன்றைக்கு ஏழு ஆசிரியர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். நான்கு அலுவலர்கள், ஒருவர் அலுவலர் சங்கத்தின் செயலாளர், பொறுப்பாளர்கள் தற்காலிகமாக சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பாதுகாப்பை இந்த அரசு தந்திருக்கிறது? அரசு ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டாமா? இந்த சமயத்திலே நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுவது என்னவென்றால், அரசு நேரடியாக பல்கலைக் கழக நிர்வாகத்திலே தலையிடுவதற்கோ, அறிவுரை தருவதற்கோ அதிகாரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அங்கே அரசினுடைய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் சிண்டிகேட்டிலே இருக்கிறார்கள். அரசினுடைய அதிகாரிகள் அந்த சிண்டிகேட்டிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். Board of Selection- அரசாங்கத் சார்பிலே நியமிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பிரதிநிதிகள் ஏன் கேட்கக்கூடாது? ஆசிரியர்களுக்கு விரோதமாக நடந்துகொள்வது எங்களுக்கு உடன்பாடானது அல்ல என்று ஒரு கருத்தை ஏன் சொல்லக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் அதற்குப் பரிகாரம் காணக்கூடாது?

நான் அந்த ஊரைச் சேர்ந்தவன், அந்தப் பல்கலைக்கழகத்தின் மாணவன், அந்தத் தொகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையிலே எனக்கு அங்கே இருக்கின்ற விவரங்கள் மிகத் தெளிவாகத் தெரியும். முழுமையான விவரங்கள் தெரிந்திருப்பதனால், சொல்கிறேன். உண்மைகளைச் சொல்கிறேன். சென்ற முறை நான் சொன்னேன். துணை வேந்தர் அவர்கள் மீது ஒரு குற்றச் சாட்டைச் சொன்னேன். நமது மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் அதைக் குறித்து விசா

ரித்து அதற்கான பதிலைச் சொன்னார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வாறு சொல்லப்பட்ட குற்றச்சாட்டிற்கு ‘அதற்கு ஆதாரம் இல்லை. அவைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன’ என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னது எனக்கு ஒரு மகிழ்ச்சி. அதைப் பற்றி விசாரித்ததன் காரணமாக துணை வேந்தர் அவர்கள் செய்ய இருந்த, திட்டமிட்டிருந்த, எதிர்பார்க்காத, விரும்பத்தகாத அந்தக் காரியம் நிறுத்தப் பட்டது என்ற உண்மை வந்திருக்கிறது. இங்கே புலனாய்வுத் துறை இருக் கிறது. அதுபற்றி விவரங்கள் எல்லாம் ரெக்கார்டுகளிலே இருக்கின்றன. என்ன என்ன நடை பெற்றது என்பதெல்லாம் இருக்கிறது. அவர் எத்தனை முறை பம்பாய்க்குப் போனார் என்பதுகூட தெரியும். ஆற்றல் வாய்ந்த புலனாய்வுத் துறை இங்கே இருக்கிறது. அதன் மூலம் எல்லாம் தெரிந்துகொள்ளலாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் விசாரித்த ஒரே காரணத்தாலே, விரும்பத்தகாத, திட்டமிடப்பட்ட ஒரு காரியம் நிறுத்தப்பட் டிருக்கிறது. அதற்காக நான் முதல்வர் அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்பற்றிக் கேட்காமல் இருந் திருந்தால், ஒரு சமுதாயத் தீமை அங்கே நடைபெற்றிருக்கும். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய நிலைமைபற்றி அரசு இப்படி ஒரு மெத்தனமான போக்கில் இருக்கக்கூடாது. இதில் மிக விரைவான நட வடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று பல் கலைக்கழகங்கள் இப்படி விமர்சனத்திற்கு ஆளாகியிருக்கின்றன. தமிழகத் திலே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அதிகமான விமர்சனத்திற்கு ஆளாக் கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதிலே இன்னொன் றைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கத்திலே பல்கலைக்கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்கிறோம். திரு. கௌரிசங்கர் என்று ஒரு பதிவாளர் இருந்தார். 1980-லே அவர் ராஜிநாமா செய்தார். ராஜிநாமா செய்த பிறகு, உடனே அப்போது ஆக்டிங் வைஸ் சான்சலராக இருந்த திரு. கெய்வார் அவர்கள் இவர்மீது சில புகார்களை, குற்றச்சாட்டுக்களைச் சொல்லி Charge-sheet தந்திருக்கிறார். அதற்கான பதில் கேட்கப் பட்டிருக்கிறது. ஆடிட்டில் ஒரு அப்ஜெக்ஷன் இருக்கிறது. திரு கௌரி சங்கர் நியமனம் பொறுத்தவரையில், பல்கலைக் கழக ஆடிட் ரிப் போர்ட்டிலே இருக்கிறது. இதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதைச் சமர்ப்பிக்க இருக் கிறேன். அரசினுடைய அதிகாரிகளும் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். காரணம் அது அரசினுடைய துறையில் ஆடிட் செய்யப்பட்



டுள்ளது. கடந்த ஆண்டிலே, 1978-79, 1979-80-ல் திரு. கௌரிசங்கர் கூடுதலாக, சட்டவிரோதமாகப் பெற்ற ரூ. 28,343.29 Recovery செய்யப் பட வேண்டும். 25—8—1980 முதல் 31—12—1981 வரை 16 மாதங் களுக்கு அவருக்கு விதிமுறைகளுக்கு முரணான முறையில் ரூ. 24 ஆயிரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதைப் பிடித்தம் செய்ய வேண்டும் என்று இருக் கிறது. லையசான் ஆபிசராக நியமிக்கப்பட்டு, 8 ஆயிரம் ரூபாய் வரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 6 மாதங்களுக்குத் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி கிட்டத்தட்ட 60 ஆயிரம் ரூபாய் வரையில் அரசுப் பணத்திலிருந்து, ஏழை மக்களுடைய வரிப்பணத்திலிருந்து சட்டவிரோதமான முறையில், விதி முறைகளுக்கு முரணான முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கௌரி சங்கர் என்ற தனி நபருக்கு பல்கலைக் கழகம் சலுகை அளித்துச் செய் கிறது என்றால், அதனுடைய உள்நோக்கம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். அதைப்போல இந்த ஆடிட் ரிப்போர்ட்டிலே நிறைய குற்றச் சாட்டுகள் இருக்கின்றன. அந்த ஆடிட் ரிப்போர்ட்டில் உள்ள குற்றச்சாட்டுக் களை அலசிப்பார்த்து, அதன்படி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு பல்கலைக் கழகங்களுக்கு வழங்கிய பணத்தை எப்படி வேண்டுமானாலும் செலவு செய்யலாம் என்று இருப்பது முறை யானது அல்ல.

அடுத்து, அட்மிஷன்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நிரவாகத்திற்கு 20 பர்சென்ட் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது என்ன நடக்கிறது ? இன்றைக்கு அட்மிஷன் நடக்கிறது. பல்கலைக் கழகம் ஆரம்பித்து எவ்வளவு நாட்கள் ஆயிற்று ? அட்மிஷன் இப்போதுகூட நடக்க லாமா ? அப்படி நடக்க நாம் அனுமதிக்கலாமா ? அதை நிறுத்துவதற்கு நான் அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்கிறேன். வருகின்ற கல்வி ஆண்டி லிருந்து, பொறியியல் கல்லூரி, விவசாயக் கல்லூரி அட்மிஷன் வரும்போது, தமிழகத்தில் மற்ற கல்லூரிகளுக்கு எப்படி பொதுவாக ஒரு ‘Common Pool’ என்று வைத்து அட்மிஷன் செய்கிறார்களோ அது போல செய்ய வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், பொறியியல் துறையிலும், விவசாயக் கல்லூரியிலும், பி.டி.எஸ். கல்லூரியிலும் அட்மிஷனுக்கு ஒரு Common Pool அடிப்படையில் சேர்க்கின்ற அளவுக்கு முறைப் படுத்தினால், இந்த முறைகேடுகளைத் தவிர்க்கலாம். வேறு வழியே கிடை யாது என்று சொல்லிக்கொள்கிறேன். அதைப்பற்றியும் அரசாங்கம் பரி சீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் பிரச்சினைபற்றி விரிவாக நான் பேச விரும்பவில்லை. காரணம் ஏற்கெனவே என்னுடைய நண்பர்கள் அதைப்பற்றிப் பேசிவிட்டார்கள். எனக்குப் பேச நேரம் இல்லை. அவர்கள் பல கருத்துக்களை, கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். எனக்கு நேரம் இல்லாத காரணத்தினாலே விரிவுபடுத்த விரும்பவில்லை. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களும் முடிக்கச் சொல்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை மட்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

ஆளும் தரப்பிலே இருக்கிற அத்தனை பேருக்கும் நினைவூட்ட விரும்புகிறேன். தேர்தல் அறிக்கையிலே கொடுத்த வாக்குறுதி, ஆசிரியர்களுடைய குறைகளைத் தீர்க்க குழு அமைக்கப்படுமென்று கொடுத்த வாக்குறுதியை நாட்கள் கழித்து செயல்படுத்தப்போகிறீர்களா அல்லது விரைவாகச் செயல்படுத்தப்போகிறீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வி, அப்படிப்பட்ட குழுவை அமைத்தால்தான், ஒரு உயர் மட்டக் குழு அமைத்தால்தான், இன்று பள்ளிகளிலே, கல்லூரிகளிலே, பல்கலைக் கழகங்களிலே பணியாற்றும் ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்க முடியும். இல்லாவிட்டால் நாளுக்குநாள் குறைபாடுகள் பட்டியல் வளர்ந்துகொண்டே போகும். நாம் அளிக்கும் சலுகைகளில் பல முரண்பாடுகள் இருக்கின்றன. ஒரு தரப்புக்கு அளிக்கப்படும் சலுகை, இன்னொரு தரப்புக்கு இல்லை. ஊதிய அமைப்பிலேயே பல முரண்பாடுகள்; சர்வீஸ் கண்டிஷன்சில் பல குறைபாடுகள், பாதுகாப்பற்ற நிலைமைகள் இருக்கின்றன. இப்படிப் பல்வேறு குறைபாடுகள் இருப்பதால், உயர் மட்டக் குழு அமைத்தால்தான், தக்க பரிகாரம் காணலாம். இல்லாவிட்டால் குறைகள் பட்டியல் உயர்ந்துகொண்டே போகுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஒழுங்குபடுத்தும் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்க உயர் மட்டக் குழு அமைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதை நான் வரவேற்கிறேன். அந்தச் சட்டம் 1973-லே சட்டப் பேரவையிலும், மேலவையிலும் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்திலே உள்ள குறைபாடுகளைக் களைவதற்கு அமைக்கப்பட்டிருக்கிற அந்தக் குழுவிலே சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் யாரும் கிடையாது, மேலவை உறுப்பினர்கள் யாரும் கிடையாது. இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுத்திருந்தால், இந்தச் சட்டத்திலே உள்ள குறைபாடுகளை மற்றவர்களைவிட யதார்த்தமான ரீதியில் தெரிந்துகொண்டிருப்பவர்கள் என்ற முறையில், நல்ல யோசனைகளைச் சொல்ல முடியும். யாரை வேண்டுமானாலும் போடுங்கள். கல்வித் துறையில் அனுபவம் பெற்றவர்கள் பேரவையிலும், மேலவையிலும் இருக்கிறார்கள்.





அவர்களுக்கு ஏன் பிரதிநிதித்துவம் தரவில்லை என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இது குறித்தும் பரிசீலனை செய்ய வேண்டும். சென்னையிலே 10 லட்சம் ரூபாய் செலவிலே, . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த நேரத்திற்கும் அதிகமாகப் பேசியிருக்கிறார்கள். குறுக்கிட்டைக் கழித்தால்கூட, அதிகமாகப் பேசியிருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : துணைத் தலைவரவர்களே, விரைவிலே முடித்துக்கொள்கிறேன். சென்னையிலே 10 லட்சம் ரூபாய் செலவில் ஆசிரியர் இல்லம் கட்டப்படுமென்று இதற்கு முன் கல்விக் கொள்கைக் குறிப்பில் இருந்தது. அந்தத் திட்டம் என்னவாயிற்று என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆசிரியர்களுக்கான தேசிய நல நிதிக்காக Working Committee இருக்கிறது. 3 ஆண்டுகளாக அந்த ஒர்க்கிங் கமிட்டி கூட்டப்படவில்லை. காரணமென்ன? துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி கொடுக்க நல நிதியிலிருந்து நிதி உதவி கொடுக்க திட்டமிருந்தது. 6000 மனுக்கள் வந்தன. பணமில்லை என்பதால், அந்த மனுக்கள் பரிசீலிக்கப்படவில்லை என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களைப் பொறுத்தவரையில், சிதம்பரத்தில் மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகமும், போளூரில் ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகமும் அமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதற்கான விவரங்கள் வந்திருக்கின்றன. அந்த அடிப்படையிலே அந்த அலுவலகங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் காட்டுகின்ற உணர்வு, உயர் மட்ட அளவிலே சில அதிகாரிகளிடம் இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்கிறேன். அதை வரவேற்கிறேன். ஆனால் மாவட்ட அளவிலுள்ள அதிகாரிகள் பல தவறுகளைச் செய்கிறார்கள், பல முறைகேடுகளைச் செய்கிறார்கள், ஒழுங்கீனங்கள் செய்கிறார்கள். மாநில அளவில் உள்ள உயர் மட்ட அதிகாரிகள் பாராட்டுக்குரியவர்கள். கல்வி அமைச்சரின் உணர்வைப் புரிந்துகொண்டு செயல்படுகிறார்கள். ஆனால் மாவட்டங்களில் அதிகாரிகளின் போக்கு விரும்பத்தக்கதாக இல்லை. கல்வி அமைச்சருக்கும், அந்தத் துறைக்கும் அவப் பெயரைத் தருவதாக இருக்கிறதென்று சொல்லி, மாவட்டக் கல்வி அதிகாரிகள் இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள், முறைகேடுகள் ஆகியவற்றுக்கு ஆளாகாத வகையிலே தக்க நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுக்க

வேண்டுமென்று கேட்டு, கல்விக் கொள்கைக் குறிப்பிலே பேசிய இதர ஆசிரியர் தொகுதி உறுப்பினர்கள் வலியுறுத்திய அத்தனை கோரிக்கைகளையும் நானும் வலியுறுத்தி பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி சொல்லி, அமைகிறேன்.

THIRUMATHI TARA CHERIAN: Hon. Deputy Chairman, Sir, I rise to offer my remarks on the Policy Note on Education. Sir, I will try to be very brief in my speech. My ponit may not be very cohesive or linked up. But, as everyone in the House has gone through the Policy Note on Education, I hope that they will be able to understand what I am trying to say.

Sir, I would like to congratulate the Hon. the Minister for Education and his officers on the way in which they have brought out this Policy Note on Education. If all the allocations are taken into account, the proposed expenditure on Education during 1982-83 would be somewhere near Rs. 318 crores. It is very commendable that this sum is being set apart for Education. This is the first time that Tamil Nadu is aiming at a massive programme on pre-primary education. It is undoubtedly a very good augury considering the importance of providing universal elementary education to all children and, particularly, to the girls. Sir, at the same time, I was wondering about the wisdom of doing all these together within a short period of one year without having it phased. Sir, to start 4,433 child welfare Balwadis without having properly qualified nursery teachers is not going to be that easy. A number of Balwadis are already there. In this connection I must say that the voluntary organisation including the Indian Council of Child Welfare have done a lot for pre-primary education. I hope that nothing would be done to deter them from carrying on their good work. If they are allowed to function with a certain amount of independence and if they are given a certain amount of autonomy, it will be possible to have a kind of difference in the method of teaching which will be interesting to the children also instead of doing it in the stereo typed way. Then, to get the right type of trained nursery-teachers and the correct kind of equipments that we need for the pre-primary schools is not an easy joke. I am sure that the Hon. the Education Minister will go all out and work all the 24 hours to see that these schools are manned by properly trained nursery-teachers and also have the necessary equipments. There are some very good organisations like the





Bala Mandir and Stree Seva Mandir which make the equipments necessary for the pre-primary schools. It will be nice if the Government could place the orders for the equipments required by these schools with those organisations, instead of calling for tenders. The difference in prices may be only a few paise. But, such an arrangement will help the poor people and physically handicapped people who are looked after by those organisations. The policy at the national level has always been to leave the task of pre-primary education with the voluntary organisations. It is true that we are expecting the number of drop-outs to become less. But, unless the Balwadis are located near the elementary schools, the problem of drop-outs cannot be solved. I know that now some of the Balwadis are not located near the elementary schools. If the Balwadi is located near an elementary school, a six-year old girl studying in the school can take her two-year old brother and probably a three year old brother or sister along with her and leave them in the Balwadi. Therefore, when the Government decide upon the places where these Balwadis are to be located, they should see that the Balwadis are not located away from the elementary schools and the middle schools.

Sir, so much has been talked about the midday meals scheme. Now, we are going to have a Rs. 100 crore feeding programme for the children. I am not going into the details of the scheme. It is a very good scheme if it is worked properly. The implementation of the midday meals scheme starts in the kitchens. I think that the Education Department is feeding over 21 lakhs of school-children, of whom nearly 60,000 children study in the Corporation Schools, and that a sum of nearly Rs. 565 lakhs is being spent on this. I hope that I will not be misunderstood if I say that, once upon a time, I was myself in charge of the responsibility of providing midday meals to school-children. Therefore, I know that without spending much of money we can make the food more palatable. The vegetable-preparations and also the butter-oil and salad-oil preparations which are generally not acceptable to the children can be made more palatable by adding some mustard, etc., some cooks to that might the food palatable. I have myself found the food tasty by tasting some. Therefore, the persons who are in charge of cooking the food should be given some sort of refresher training so that the food that is being cooked by them is palatable. A number of Members have been criticising about the food being thrown out for pigs to

eat, etc. While all that may not be completely correct, there is a lot of room for improvement in the way we serve food for the children, under the midday meals scheme.

(முற்பகல் 11-20)

Sir, books and slates have already been talked about. But unless we give them to the children on time, there is no use. This is the month of March. From April onwards, the books that are to be given and even the notebooks have got to be sorted out so that the children get them on time. Reading habit has gone down completely and there is something wrong. Therefore, when we have so many Committees, we have to review the type of books that we are having in our book banks and to review the type of books that we have in our libraries. Particularly the books for children must be made attractive and they should be coloured books. Not only that. I have been seeing some of the books that come up as comics. There we have Indian mythology, Indian stories and religious books in beautiful colours and they are just like imported comics and they are all abridged ones. I have seen children going in for them very much. If such books are kept in some of our libraries, they will make the children take to reading which is going down very badly.

Coming to Collegiate Education, I think the time has come when we have to cry a halt to the formation of new Universities. I am sure the Hon. the Education Minister is not going to give more than what is allocated in the Budget. With the money available, to have necessary buildings, to have new staff and other facilities is not an easy joke.

I know the Hon. the Chief Minister was very happy when my colleague mentioned about the Women's University and wanted a woman to be the Vice-Chancellor of the University. I am not so much for it. 30 years ago the S.N.D.P. University was started for women and such a type of University may not be so much necessary now. Unless we have a different programme to give leadership to women and to make them participate in politics, there is no meaning, because we are only 4 or 5 women in this House. If we can educate the women properly and if this University will be different from others, then it is worth while having it.



There is a small note in the paper on 'Student Violence and the role of the Police'. I do not want to go into it in detail. Evidently it is being mentioned from Vice-Chancellor downwards that there is student violence and that we cannot get over it. The Director of School Education has laid the whole blame squarely on the ineffective and unattractive curriculum and has stated that we cannot make the bright student do the same thing which a sub-normal student is expected to do. One of the College Principals said that if the teachers were devoted to their work, there would have been no student indiscipline. One of the former Judges of the Supreme Court has given his verdict on this. Frustration of both sections, namely, students and the police as well as the existing political and social systems are responsible for the evil. Therefore, it is up to the various evaluation committees on Education to see how the curricula could be changed. Nothing can be static in this world and we have to go on changing things and we have to be on the move. We will have to make it interesting and attractive so that students will attend classes. Teachers have to command their respect and should not demand it. All this will go to help the solution of the problem. We should increase the autonomy of the colleges.

The Hon. the Education Minister has put into his Policy Note so many programmes to be started or to be expanded, particularly, Sports, Physical Education and Youth Welfare. I commend all of them most heartily. The Scouts and Guides had their wonderful rally recently in Madras and the Hon. the Chief Minister was presented with the highest award. The result of all such things has been that nearly 51 acres of land has been given by him. I think more could be learnt from the sports field than from the classrooms. Therefore, I do hope that it will be possible to make much improvement. I am saying it in a nice way.

THIRU K. RAMAMOORTHY: Does the hon. Member mean to say that the allotment of the land was in view of the award that had been given to the Hon. the Chief Minister?

THIRUMATHI TARA CHERIAN: No. not at all, Sir. My English speech has been mis-interpreted. With very good intentions, I have said it. The Hon. the Chief Minister can feel that the students need

this kind of open place where they can be free to have their activities. This is the kind of help which the Hon. the Chief Minister is extending in a wonderful manner.

Sir, I find that the activities of the N.C.C. and the N.S.S. are being expanded. I hope that these will be taken more to the Corporation Schools, Schools in the Panchayat Union areas, etc. When you put the boys and girls in uniforms of the N.C.C., etc., it develops a certain amount of discipline which is very necessary.

Sir, a fairly large amount of money has been set apart for non-formal education especially in areas where the Self-sufficiency Scheme is being implemented. I congratulate the Hon. the Education Minister on having done this. I find that over 68,000 adults have been benefited by non-formal education in the first phase and that 1,710 centres have been run by 34 voluntary agencies with the aid given by the Government of India, up to 1980. But, I do not know why it has been stopped with 1980. Probably, there is a time-limit stipulated by the Union Government. But, when the thing is going on so well, it is up to the Tamil Nadu Government and our Education Minister to see that it is not stopped and that the second and third phases are also taken up. Sir, it will become very difficult if each Department works in a water-tight compartment. Health, Education and everything else go hand in hand. The Hon. the Health Minister is here. He is thinking of many programmes to immunise the children from various diseases. If he sees to it that the Health Department and the Education Department work in co-ordination in getting the school-children immunised against diseases, it will be of great help to the children.

Sir, I do not know why the Government and also some hon. Members here are so very anxious that everything should be taken over by the Government. Now, the Panchayat Union schools have been taken over by the Government and thousands of teachers have become Government servants. The elections to the Panchayats and Panchayat Unions have not taken place. Therefore, the teachers of the Panchayat Union schools will be having only a kind of remote control. By that, there cannot be much of discipline and there will be demoralisation. What I am saying is that all the institutions need not be brought under



Government control. In education, autonomy really helps. Sometimes, Government control causes delays in making appointments to posts of teachers and the best people do not get selected under the Government rules. The Government procedure takes a long time and the vacancies remain unfilled for a long time. The suggestion that all institutions are to be brought under Government control only suggests totalitarianism. Now, we are having about 366 Panchayat Unions.

*திரு. சோ. ஆறுமுகம் :* மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் கூட அவையில் இல்லை. அமைச்சரவை என்பது வேறு. ஒருவேளை ஆளும் கட்சி உறுப்பினர்கள் இந்த கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது மாறுபாடான கருத்தைக் கொண்டிருக்கிறார்களா என்பதை நான், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* இப்பொழுது தான் வெளியே போயிருக்கிறார்கள். வந்து விடுவார்கள். அமைச்சரின் கருத்தை அவர்கள் ஏகமனதாக ஆதரிக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

THIRUMATHI TARA CHERIAN : It is a most appropriate answer, Sir.

*மாண்புமிகு திரு. எல். இராகவானந்தம் :* தவறாக இருக்கக் கூடாது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் யாரும் அவையில் இல்லையென்று சொன்னார்கள். நானும் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களும் இருக்கிறோம். நாங்கள் இருவரும் மேலவை உறுப்பினர்கள்தான். ஆளும் கட்சி உறுப்பினர்கள் என்று சொன்னதால் நான் சொல்கிறேன். ஆளும் கட்சி உறுப்பினர்கள் 2 பேர்கள் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி :* தவிர்க்க முடியாமல் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வெளியே செல்கிறார்கள் என்றால், அப்போது நடைபெறும் விவாதத்தைக் குறிக்கத் தான் வேறு அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன உணர்வு வேறு. (சிரிப்பு)

[1982 மார்ச் 20

(முற்பகல் 11-30)

*திருமதி தாரா செரியன் :* கேட்டுக்கொண்டிருக்கும் மற்ற மாண்புமிகு அமைச்சர்கள் கல்வி அமைச்சரிடம் சொல்வார்கள். Sir, there are 366 Panchayat Unions and the Government are taking over all the teachers. All of them haye to be paid their salaries by the Government and there has to be supervision. As the hon. Member Thiru Damodaran mentioned, there will have to be more Government officials to supervise their work. I am sure the Hon. the Minister for Education will look into it. All the teachers are anxious to get their salaries from the Government and I do not know what the trouble is. But the time has come for us to consider whether having too many Government officials will not lead to corruption, lapses and negligence.

In Social Work, the Government must support the voluntary agencies. It is very difficult to expect the Government servants to give dedicated service just like the voluntary workers. Voluntary workers will give their services spontaneously. When the question of financial assistance to voluntary agencies comes, they say that they have not got the money. They are people with golden hearts and they are willing to give all their time for this. But they have not got the money to commute. Please do not take away all the pre-primary schools from the voluntary agencies. I hope the Hon. Minister will consider this. This is the point I wanted to talk about.

I have had many critics whenever I speak before children. But one great credit that was given to me is that I do not repeat. Since entering this august House. I have been repeating many things and my request has not at all been answered. ஆனாலும் பெண்ணும் சமம் என்று சொல்லும் நிலை இருப்பதாகத் தெரியவில்லை. நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் இல்லை. ஆனால் முன்னாலே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலருக்கும் நல்லமுறையிலே 'ஆன்சர்' கொடுக்கிறார் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னை விட்டுவிடுகிறார். கேட்டால், எந்தவிதமான உத்தரவும் இல்லை. அப்படி உத்தரவு இல்லை என்று சொன்னால். . .

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படியே பேசினால், மேலும் 15 நிமிட நேரம் தருகிறேன்.



1982 மார்ச் 20] [Thirumathi Tara Cherian]

*திருமதி தாரா செரியன் :* நல்ல தமிழ் படித்த பிறகு கட்டாயம் பேசுகிறேன். Sir, like a parrot I have been repeating. Before the change of policy by the Government on reservation in educational institutions and in job opportunities, the Scheduled Caste and Scheduled Tribe people got 18 per cent the Scheduled Caste and Scheduled Tribe people got 18 per cent remaining 51 per cent which is open for open competition. The order of the present Government has resulted in the reduction of their chances to 32 per cent in the open competition. They are not eligible to get the same number of seats in open competition as they were getting before. All that I am saying is that when we look into the educational policy and when we find that the Hon. the Education Minister has realised that universal education is the only solution to bring uplift to the down-trodden and when we spend so much money on education, it is like showing the fine laddu in one hand and not giving it just because they do not belong to a particular class or community. By the way, I would like the Hon. Deputy Chairman to tell us whether the report of the Backward Classes Commission from Delhi has been placed on the table of this House. I think it has not yet come. My only request is that, when the allocation has gone up, if the seats intended for Scheduled Castes are not filled up fully because of non-availability of candidates, those seats may be left open for those who do not belong to that classification. The Education Minister is tolerant in giving answers to all others and he is not answering my questions. I am very keen to know the policy of the Government. The Prime Minister of India, during the last week, has spoken on the subject saying that this has to be looked into once or twice to see that equality among the socially and economically backward people is ensured. I am sure that it will be done.

Sir, recently, the Hon. the Education Minister attended one of the seminars where very many popular and world-famous educationists, particularly in the field of education of the physically handicapped, participated. The view that I have been expressing here frequently was reiterated by them also. The view was that by no stretch of imagination could the education of the handicapped people be pushed into the hands of the Social Welfare Department.

[Thirumathi Tara Cherian] [1982 மார்ச் 20

(Mr. Deputy Chairman sounded the gong)

Sir, this is a very important point because I am not getting any answer on this. The Education Ministry at the Centre has come out with a policy of integrating the normal children with the handicapped ones. They are very keen that it should be done and I am sure that the Hon. the Education Minister is aware of that. If that is to be so, in what way can the normal children come under the Social Welfare Department? The logical conclusion is that the normal children cannot come under the Social Welfare Department. The national perspective is to bring the normal children and the handicapped children together. I hope that the Hon. the Education Minister, after consulting the Hon. the Chief Minister, will do the needful in the matter. I have visited some institutions where the physically handicapped are educated. The Headmistresses and teachers of those institutions feel very much depressed about the institutions having to work under the Social Welfare Department. The Social Welfare Department is not, by any chance, qualified to manage the institutions for the physically handicapped. The Headmistresses of those institutions find it very difficult to get copies of various Government Orders through the Social Welfare Department. For example, many of the teachers in the institutions for the physically handicapped have not been given some allowances because the relevant Government Order has not gone to the Social Welfare Department from the Education Department.

Sir, I commend most heartily most of the things that the Hon. the Education Minister has stated in the Policy Note. I am sure that Tamil Nadu will go ahead in the field of education. An educated girl can educate the whole family. I hope that the number of drop-outs will come down. I hope that the Balwadis will be near the elementary schools and middle schools so that a little girl may not have to traverse long distances to put another child in a Balwadi. The policy regarding reservations also requires a change. The change has got to come because the Prime Minister has expressed her will.

With these words, I thank you for giving me this opportunity. I am sure the Hon. the Education Minister will kindly answer the few questions which I have requested to be answered. Thank you.



1982 மார்ச் 20] (திரு. ஆ. நல்லசிவன்)

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது என் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ரெவின்யூ செலவினங்களிலே சுமார் 21.43 விழுக்காடு உள்ள 290 கோடி ரூபாய் கொண்ட ஒரு பெரிய அயிட்டத்தை இங்கே வைத்து விவாதிக்கிறோம். இதிலே எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்ன மாதிரி போன வருஷம் இருந்த நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, விகிதாச்சாரத்திலே இந்த ஆண்டு நிதி குறைவாக இருக்கிறது. குறைவாக இருக்கும் இந்த நிலைமை எப்படியெல்லாம் பாதிக்கும் என்பதைப்பற்றி சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். 6 வயது முதல் 11 வயது வரையில் பள்ளிக்கு வரத் தயாராக இருப்பவர்களில் 1981-82-ல் சுமார் 95 சதவீதம் பேர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. யதார்த்தத்தில் போன ஆண்டில் இருப்பதைவிட அதிகமாக இருக்கும் என்று சொன்னால், இந்த அளவு பர்சென்டேஜ் என்று சொல்வது சரியாக இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். நானே 40 ஆண்டுகளுக்கு முன்னாலே செகண்டரி கிரேட் ஆசிரியராக இருந்தேன். நான் ஆசிரியராக இருந்த அந்த வட்டாரத்திலே பள்ளிக்குப் போகக்கூடிய வயதில் உள்ள பிள்ளைகள் பள்ளிக்கு வராமல் இருக்கும்போதே கூட, அவர்கள் பள்ளிக்கு வருகிறார்கள் என்று சொல்லி, அவர்களுடைய பெயரையும் எழுதி வைக்கும் பழக்கம் இருந்தது. அந்த அடிப்படையிலே பார்த்தால், 95 சதவீதம் பேர் வருகிறார்களா என்று பார்க்க வேண்டும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி பகுதியிலேதான் 95 சதவீதம் பேர் வருவார்கள் என்று மத்திய அரசு எதிர்பார்க்கிறது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இப்போது அந்த நிலைக்கு வந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை சரியாகப் பார்க்க வேண்டும். அதைப் போலவே, 11 வயது முதல் 14 வயது வரை உள்ளவர்களில் 50 சதவீதம் மாணவர்கள் தான் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியிலே வருவார்கள் என்று மத்திய அரசு எதிர்பார்க்கிறது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இப்போது 65 சதவீதம் பேர்கள் வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். இவ்வளவு அதிகமான பேர்கள் வருகிறார்கள் என்று பெருமைப்படும்போது, ஆசிரியர்கள் அந்த அளவுக்கு இருக்கிறார்களா என்றால் இல்லை. 1,000 பேர்கள்தான் செகண்டரி கிரேட் டீச்சர்கள் இப்போது அதிகப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, இந்த நிலையில் இப்போது இருப்பவர்களின்

எண்ணிக்கையை மூன்று மடங்காக்க வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது 'டிராப்-அவட்ஸ' 51 சதவிதத்திலிருந்து 30 பர்செண்டேஜ் வரையிலும் குறைந்திருக்கிறது. 1974-லே இருந்து இன்று வரை பார்த்தால் இந்த நிலைமை இருக்கிறது என்றும் சொல்கிறார்கள்.

(முற்பகல் 11-40)

1974-க்கும் இந்த ஆண்டுக்கும் இடையிலே 30 சதவிதம் இல்லாவிட்டாலும் குறைந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். டிராப் அவுட்டுக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று மாணவர்கள்-ஆசிரியர் விகிதம்தான். பள்ளிகளில்தான் அறிவு வளர்ச்சி ஆரம்பமாகும் நேரம். அப்படிப்பட்ட நிலையில் நாற்பது பிள்ளைகளை ஒரு ஆசிரியரிடம் ஒப்படைத்தால், அவர்கள் சத்தம் போடாமல் பார்த்துக்கொள்வதே பெரிய காரியம், ஒன்றும் சொல்லிக் கொடுக்க முடியாது. பணம் இல்லை என்பதால் 40 : 1 என்ற விகிதத்தை வைத்தோம் எனறு சொன்னால், பணத்தைக் கண்டுபிடிக்க வழி தேடலாம். 40 : 1 என்பது சையன்டிஃபிக் ஃபார்முலா மாதிரி. ஆனால் இதனுடைய விளைவுகளைப் பாராமல் விட்டுவிட வேண்டிய நிலை வரும். எனக்குத் தெரிந்த வரையில், 20, 25 குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதே கஷ்டமான காரியம். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாவது, மூன்றாவது வகுப்புகளுக்கு ஆசிரியராக நானே இருந்திருக்கிறேன். அப்போது எவ்வளவு சிரமப்பட்டேன் என்பது எனக்குத் தெரியும். இதற்கு பண வசதி இல்லாததுதான் காரணம் என்று தெளிவாகச் சொன்னால், நாம் எல்லோரும் சேர்ந்து பண வசதிக்காக என்ன செய்யலாம் என்று பார்க்கலாம். 20, 25 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மாணவர்கள்-ஆசிரியர் விகிதத்தைக் குறைப்பது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் உணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், 20 இலட்சம் பேர்களில் 4 இலட்சம் பேர்களுக்கு உணவளிக்கப் போகிறோம். பாக்கியுள்ளவர்களுக்குச் சாப்பாடு தரப்போவதில்லை. இதிலே கூட அரசாங்கம் பத்து சதவீதத்தையும், உள்ளாட்சி நிறுவனங்கள் 5 சதவீதத்தையும், கேர் பத்துப் பைசாவையும் கொடுக்கின்றன. இது தவிர பள்ளிக்கூடத்திலே உள்ள ஆசிரியர்கள் பொது மக்களிடத்திலே வசூலிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது இப்போது நடைபெறுகிறதா, இல்லையா என்று தெரியவில்லை. அதைப் போலவே ஐந்து பைசாவை உள்ளாட்சி நிறுவனங்கள் தருகின்றனவா என்றும் தெரியவில்லை. ரோடு போடவும், தண்ணீர் வசதி





செய்து தரவும் பண வசதி இல்லாமல் உள்ளாட்சி நிறுவனங்கள் திண்டாடுகின்றன என்று தகவல் இருக்கின்றது. இதற்காக அவர்கள் பணம் தருகிறார்களா என்று தெரியவில்லை. தருவதில்லை என்பதுதான் எனக்குக் கிடைத்த தகவல். அப்படி இருக்கும்போது பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு தரும் திட்டத்திற்காக அரசு கொடுக்கும் பத்துப் பைசாவும், கேர் நிறுவனம் கொடுக்கும் பத்து பைசாவும் தவிர நடைமுறையில் வேறு பணம் இல்லை. டிராப் அவுட்டுக்கு இதுவும் ஒரு காரணம். திரு. காமராஜ் அவர்கள் ஆரம்பித்த இந்தத் திட்டம், பள்ளிக்குக் குழந்தைகளை அனுப்புவதற்கு ஒரு காரணமாக இருந்தது. அதற்காக அவரை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அந்த நோக்கம் நிறைவேறுகிறதா ? மதிய உணவு குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டிய அளவிற்குக் கொடுக்கப்படுகிறதா என்றால், அவர்களுக்குத் திருப்தி அளிக்கக் கூடிய அளவிற்குக் கொடுக்கப்படவில்லை. திருப்தி அளிக்கும் வகையில் தராதது டிராப் அவுட்டுக்கு முக்கியமான காரணமா இல்லையா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு பக்கத்திலே மதிய உணவுக்குப் போதிய ஆள் இல்லை. இன்னொரு பக்கத்திலே ஆசிரியர்களுக்கு 'இன்டரஸ்ட்' இல்லை. ஆகவே 40 பிள்ளைகளை வைத்துக்கொண்டு மேய்க்கிற வேலைதான் நடக்குமே தவிர, சொல்லிக் கொடுக்க முடியாது. பணம் இல்லை என்பதால் 40 : 1 என்ற விகிதத்தை சிரத்தை இல்லாமல் டிராப் அவுட் ஆகமாட்டார்களா ? டிராப் அவுட்டுக்கு இந்த இரண்டும் முக்கியமான காரணங்களா இல்லையா என்பதை அரசு யோசிக்க வேண்டும்.

100 கோடி உணவுத் திட்டத்தைப்பற்றிச் சொல்லுகிறபோது, சர்க்காரே அதைச் செலவழிக்கப் போகிறதா, அதற்கான இன்ஃப்ராஸ்டிரக்சர் என்ன என்பது புரியவில்லை. பாலவாடியில் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் இருக்கிறார்கள். ஐந்து வயது முதல் 10 வயது வரை எலிமெண்டரி ஸ்கூலில் படிக்கிறார்கள். இவர்கள் இருவரையும் சேர்த்து அவர்களுக்கு ஒரு வேளைக்கு உணவு அளித்தால், அதன் மூலமாக டிராப் அவுட் குறையும், காரியமும் சாமர்த்தியமாக நடைபெறும். ஆகவே பாலவாடியையும், எலிமென்டரி பள்ளிகளையும் இணைத்து இத்திட்டத்தில் பயன்படுத்தக் கூடிய அளவிற்குச் செய்ய அரசு யோசிக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் உள்ள 90 ஆயிரம் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறார்கள். அதைப்பற்றிச் சொல்லும்போது, "Major steps to qualitative improvements towards expansion of

elementary education " என்று சொல்லியிருக்கிறார்கள். இது உண்மை யான ஒன்று. இன்னும் 80 ஆயிரம் பேர் தனியார் எலிமென்டரி பள்ளி களில் இருக்கிறார்கள். இது ஒரு மேஜர் ஸ்டெப் என்பது சரியென்றால், 90 ஆயிரம் பேரை அரசு ஊழியர்களாக ஆக்குவதும், 80 ஆயிரம் பேரை ஆக்கா மல் இருப்பதும் எப்படி சரியாகும்? ஒரே கல்வியைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கிடையில் பாரபட்சம் இருக்கலாமா என்று கேட்கிறார்கள். குறிப்பாக அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை. ஆகவே அவர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்குவது அவசியம். நான் பலதடவை பேசியிருக் கிறேன். முழு கிராண்டையும் அரசு கொடுக்கிறது. மெயின்டெனன்ஸ் கிராண்ட் கொடுக்கிறது. ஆனால் ஒரே ஒரு காரியம். கட்டிடம், ஃபர்னீச் சர், எக்விப்மென்ட் ஆகியவற்றை எடுப்பதாக இருந்தால் நிறைய கொடுக்க வேண்டியிருக்கும் என்று சொல்லுகிறார்கள். அதற்கான தொகையைக் கூட தொடர்ந்து கொடுக்க வேண்டியதில்லை. ஏனென்றால் அதற்காகப் போட்ட பணத்தை அவர்கள் ஓரிரு ஆண்டுகளிலேயே எடுத்துவிடுகிறார்கள். கட்டிடம், ஃபர்னீச்சர், எக்விப்மென்ட் இவைகளையெல்லாம் அரசு கொடுத்திருக்கிறது. அரசாங்கம் கொடுத்த மெயின்டெனன்ஸ் கிராண்டில் வாங்கியவைகள்தான் அவை. ஆகவே அவற்றை எடுப்பதை யாரும் தடுக்க முடியாது. பத்து, பதினைந்து வருடங்கள் கழித்து வாங்கிக்கொள்ளக் கூடிய பாண்டுகளைக் கொடுத்துவிட்டு ஏன் எடுக்கக் கூடாது? எலிமென்டரி பள்ளிகளை எடுப்பதன் மூலமாக 80 ஆயிரம் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கலாமே. ஏன் அப்படி ஆக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்பற்றி அரசு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே இன்னுமொரு விஷயம். முனிசிபாலிட்டி ஆசிரியர்களையாவது அரசு ஊழியர்களாக ஆக்கலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கட்சி ஆள்கின்ற மாநிலத்தில் இப்படிச் செய்திருக்கிறார் களா ? அப்படிச் செய்கிற நோக்கம் இருக்கிறதா ?

திரு. ஆ. நல்லசிவன் : நாங்கள் செய்தால்தான், நீங்கள் செய்ய வேண்டுமா? நீங்களே செய்யக் கூடாதா ? இன்னொரு மாநிலத்தை உதாரணத்திற்குக் கேட்கிறார்கள். நான் சொல்லுவது நம்முடைய கல்வி அனுபவத்திலிருந்து நாம் செய்ய வேண்டுமென்பது. மேற்கு வங்காளத்தில் எங்கள் அரசு வந்த பிறகு, எஸ். எஸ். எல். சி. வரையில் கட்டாயம் ஆக்கியிருக்கிறது. காங்கிரஸ் கட்சி இருந்தபோது அதைச் செய்யவில்லை. திரு. காமராஜ் அவர்கள்



துவக்கிய அதே நிலையிலே இருப்பானேன் ? அதற்கு மேலே போனால் என்ன? மேற்கு வங்காளத்தைப் பற்றிக் கேட்கும்போது அங்கே போனஸ் தருகிறார் கள், இங்கே போனஸ் கொடுக்கிறார்களா ?

THIRU A. R. DAMODARAN : Sir, neither in Kerala nor in West Bengal has it been possible for the Government to take over minority institutions. Why this talk about it unnecessarily when Article 31 of the Constitution has to be amended in Parliament ?

திரு. ஆ. நல்லசிவன் : நான் மைனாரிட்டி பற்றி மட்டும் சொல்லவில்லை. மைனாரிட்டி நிறுவனத்தை எடுக்க வேண்டுமென்றால், அரசியல் சட்டத் திருத்தம் செய்ய வேண்டியது அவசியம். மைனாரிட்டி இல்லாத எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்களை எடுக்க அரசு முயற்சி செய்யக் கூடாதா என்பதுதான் நான் கேட்பது.

THIRU A. R. DAMODARAN : That would be hostile discrimination and you will be only rousing the wrath of the Hindus.

திரு ஆ. நல்லசிவன் : அதாவது மெஜாரிட்டியாக இருக்கிற நாம் நாட்டை ஆளுவதாகப் பேசுகிறோம். இந்து மெஜாரிட்டியாக இருப்பதால், அவர்கள் நாட்டை ஆளுவதாக பேசுவதால், யார் மேல் கோபப்படுவார்கள் என்பது தெரியவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : It is an uncharitable comment on the very working of the constitution இந்துக்கள் நாட்டை என்பதல்ல. ஜனாதிபதியாக யார் யார் எல்லாம் இருந்தார்கள் என்பது அவருக்கே தெரியும். அவருக்குச் சாதகமாக இருப்பதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற அரசியல் சட்டப்படி இது மத சார்பற்ற அரசு என்ற முறையில் சிறுபான்மையோருக்கு பாதுகாப்புத் தர வேண்டுமென்ற நல்லெண் ணத்தின் அடிப்படையிலே எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் இன்றைக்கு சிறுபான்மையோருக்கு பாதுகாப்புத் தருகின்றன என்பது உண்மை. என் றாலும் மோசமான நிலையில் வைத்திருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சிலிருந்து தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறபடி நடவடிக்கை எடுத்தால், மெஜாரிட்டி மக்கள் மைனாரிட்டி மக்களைவிட கீழான நிலைக்குப் போவார்கள். மதச் சார்பற்ற அரசியல்

சமத்துவமான நிலைக்குக் கொண்டு வரக்கூடிய அளவிற்கு நமக்குச் சக்தியில்லை. எல்லோரையும் சமமான நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கக் கூடிய சூழ்நிலையை உண்டாக்க முயற்சி எடுக்க வேண்டும். இல்லையென்றால் மெஜாரிட்டி மக்களுக்குப் பாதகமான நிலையை எடுத்து அவர்களை மைனாரிட்டி மக்களை விட கீழான நிலைக்குக் கொண்டுவர முயற்சிப்பது விரும்பத்தக்கதல்ல.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குறுக்கீடுகள் அதிகமாக இருந்தால், இன்றைக்கு விவாதம் முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் மட்டும் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 11-50)

**திரு. செ. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இங்கே ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது. அதாவது மெஜாரிட்டி மைனாரிட்டி என்ற பெயரால் நடந்துகொண்டிருக்கின்ற இன்ஸ்ட்டிடியூஷன்களை எடுக்கும்போது, டிஸ்கிரிமினேஷன் வரும் என்று ஒரு வார்த்தை சொல்லப்பட்டது. இந்த மைனாரிட்டி என்ற சிறுபான்மையினர் நடத்தக்கூடிய பள்ளிகளிலே இருக்கும் ஆசிரியர்கள் வதைப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. மற்ற பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்களுக்கு இருக்கின்ற பாதுகாப்பு இந்தப் பள்ளிகளிலே இருக்கக் கூடிய ஆசிரியர்களுக்கு இல்லாததுபற்றியும் அந்த அக்கிரமங்கள் பற்றியும் தெரியும். இதற்காகத்தான் அந்தப் பள்ளிகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்ற கருத்து சொல்லப்படுகிறது. அதைப் பற்றி என்ன அபிப்பிராயம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சிறிய அக்கிரமங்களை ஒழிப்பதற்காக என்று பெரிய அக்கிரமங்களைச் செய்ய வேண்டுமா என்பதுதான் கேள்வி.

**திரு. ஆ. நல்லசிவன் :** நம்முடைய நாட்டின் கல்வியை அரசுப் பொறுப்பிலே வைக்கவேண்டும் என்பது ஒரு விரோதமான ஆர்குமெண்டாக இருக்கிறது. கேரளத்திலே அப்போது இருந்த கன்னியாகுமரியிலே கல்வி ஸ்தாபனம் எல்லாம் அரசுப் பொறுப்பிலேதான் இருந்தது. அங்கே இருந்தபோது இந்துக்கள் உரிமை பாதிக்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது ஒரு முக்கியமான பிரச்சினை என்பதால் குறுக்கிட்டுப் பேசுகிறேன். இப்போது குறிப்பிட்ட ஒரு உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி, சிறுபான்மையினர் இஷ்டப்படி கல்வி நிறுவனங்களை



ஆரம்பிக்கலாம், அரசு அவர்களுக்கு நிதி தர வேண்டுமென்று இருக்கிறது. அது மெஜாரிட்டி மக்களைவிட மைனாரிட்டி மக்கள் அதிக உரிமை பெற்றிருக்கின்ற நிலைமையாக இருக்கிறது. அது மட்டுமல்ல. நாம் அரசாங்கத்தைத் தான் ஒரு சாவரின் பாடி என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் அதைவிட உரிமை பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகள்தான் இருக்கின்றனவே தவிர, வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். மைனாரிட்டி என்ற அளவில் இந்த நாட்டிலே அரசியல் சாசனத்திலே ஒரு காலத்தில் அவர்களுக்குரிய பாதுகாப்பு மத ரீதியிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. கல்வியிலும் அவர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டது. அதை இந்த 20 ஆம் நூற்றாண்டிலேயும் அவர்கள் துஷ்பிரயோகம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் மைனாரிட்டியினர் உரிமைகள்பற்றி இருப்பதை அரசியல் சாசனத்திலே திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நாம் மைனாரிட்டி மெஜாரிட்டி உரிமைகள்பற்றி ஆர்குமெண்ட் செய்துகொண்டிருக்கிறோம். மெஜாரிட்டியினர்தான் நாட்டை ஆளுகிறார்கள். மெஜாரிட்டி என்று சொல்லும்போது, இந்துக்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டிய அவசியம் இல்லை. தனியார்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதுபோல பேசிக்கொண்டிருக்கிறார்கள். சுயேச்சையாக அவர்கள் நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்ற அளவில் ஆர்குமெண்ட் செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக்கூடங்களை அவர்கள் எதற்காக ஆரம்பிக்கிறார்கள் ? அவர்களுடைய மதப் பிரசாரம் அல்லது மதம் வளர வேண்டும் என்ற அடிப்படையிலே ஆரம்பிக்கிறார்கள். அவர்களுடைய மதத்தை வளப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அளவில் அவர்கள் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக ஒரு அரசு நடைபெற்றால், அதே நேரத்தில் மெஜாரிட்டி மதத்தினைப் பின்பற்றுகின்றவர்களுக்கு எதிராக அரசு செயல்படுவதாக இருக்கும். அப்படிச் செயல்பட்டால், நாம் மறைமுகமாக மைனாரிட்டி மதத்தினரை ஆதரிக்கக் கூடிய நடவடிக்கையாக அது ஏன் இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

திரு. ஆ. நல்லசிவன் : இந்த மைனாரிட்டி பள்ளிக்கூடங்களுடைய சிலபஸ் அவர்களால் போடப்படுவதில்லை என்று கருதுகிறேன். அவர்கள் அந்தக் காலத்தில் இருந்த நிலைமையில் இன்று இல்லை. மைனாரிட்டி பள்ளியில் அவர்கள் இஷ்டம்போல் இருக்கிறார்கள். 'செக்குலர் ஸ்டேட்' என்ற அளவில் நாம் இருக்கிறோம். மைனாரிட்டி பள்ளிகளில் அவர்களுக்கு மட்டும் இந்த உரிமையைக் கொடுத்துவிட்டு மெஜாரிட்டி இந்துக்கள் பள்ளிக்கூடங்கள் நடத்துகின்றவர்களுக்கு உள்ள உரிமையைப்பற்றிச் சொல்கிறார்கள். 'செக்குலர் ஸ்டேட்' என்று சொல்லிக் கொண்டும் இருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : இங்கே விவதத்தில் மைனாரிட்டி என்று சொல்லும்போது, ஒரு மதத்தின் அடிப்படையிலே மட்டுமல்ல சொல்வது. Linguistic minority 'லிங்குவிஸ்ட்டிக் மைனாரிட்டி' என்ற அடிப்படையி சொல்லவேண்டும். லிங்குவிஸ்ட்டிக் மைனாரிட்டி பள்ளிகளும் இருக்கின்றன. உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்கிறேன். கேரளாவைச் சேர்ந்தவர் ஒருவர் இங்கே பள்ளி நடத்துகிறார். மலையாளப் பள்ளி நடத்துகிறார். அவர் மைனாரிட்டி பள்ளி என்ற அடிப்படையிலே நடத்திக்கொண்டிருக்கிறார். மைனாரிட்டி என்பது இந்துக்கள் என்ற அடிப்படையிலே, அல்லது கிருஸ்தவர்கள் என்ற அடிப்படையிலே, அல்லது முஸ்லிம்கள் என்ற அடிப்படையிலே மட்டுமல்ல. இப்படிச் சொல்வது என்று போனால், கன்னியாகுமரியிலே இந்துக்கள் மைனாரிட்டியாக இருக்கிறார்கள்.

திரு. ஆ. நல்லசிவன்: 'லிங்குவிஸ்ட்டிக் மைனாரிட்டி' என்பது பற்றி நான் 'கொஸ்ட்டியன்' பண்ணவில்லை. மைனாரிட்டியினர் என்ற அளவில் தனியார் பாதுகாப்பு கொடுக்க முடியும்போது, அரசு கொடுக்க முடியாதா? நம் நாட்டிலே மைனாரிட்டி பள்ளிகள் தனியார் பள்ளிகளாகத்தான் இருக்க முடியுமா? அதற்குப் பொறுப்பு அரசு ஏற்க முடியாதா? இந்தப் பள்ளிக்கூடங்களை ஏற்றுக்கொள்வது பற்றி, இந்த கான்ஸ்ட்டிடியூஷனைச் சுட்டிக் காட்டுவதெல்லாம் பொருத்தமல்ல. நடைமுறையில் தனியார் கையிலே வியாபாரம் என்ற முறையிலே கொண்டு போகிறார்களே அதுதான் முக்கியம். இன்றைக்கு பிகாரிலே என்ன செய்யப்படுகிறது? பள்ளிக்கூடங்களுக்கு அரசே பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது. அங்கெல்லாம் இந்த ஆர்குமென்ட் வரவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தப் பள்ளிகளை எடுக்கின்றபோது, பள்ளிக்கூடங்கள், கட்டிடங்கள், தளவாடங்கள் வாங்குவதற்கு என்று அரசு நிதி ஒதுக்கிச் செய்கிறது. இவைகளுக்கும் செய்வது என்று வந்தால், பணப்பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்லட்டும், பரவாயில்லை. ஆனால் வேறு காரணம் சொல்ல வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். நம்



நாட்டிலே செக்குலர் ஸ்டேட் என்ற முறையை வளர்க்க வேண்டும் என்று சொல்கிறேன். இந்த மெஜாரிட்டியினருக்கும் உரிமை வேண்டும் என்று குழப்ப வேண்டியதில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது டெக்னிக்கல் எஜுகேஷன் பற்றியதாகும். நம் மாநிலத்தில் உள்ள எல்லா பாலிடெக்னிக்ஸ் மற்றும் ஹைஸ்கூல்களில் உள்ள பாலிடெக்னிக்ஸ் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், ஒட்டுமொத்தமாக 9,110 மாணவர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டில் ஹைஸ்கூல் மற்றும் ஹையர் செகண்டரி பள்ளிகளில் இருந்து எஸ்.எஸ்.எல்.சி., படித்தவர்கள் 2½ லட்சம் பேர்கள் அளவில் வெளியே வருகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மாநிலத்திலே இந்த டெக்னிகல் எஜுகேஷனுக்கு ஒதுக்கப்படுகின்ற அளவு 4.5 பர்செண்ட் தான். இது நம்முடைய நாட்டில் தொழில் வளர போதுமானதாக இருக்குமா என்று பார்க்க வேண்டும்.

அந்தத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. இதை அரசு கூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக இதில் ஷிப்ட் சிஸ்ட்டத்தை வைக்கலாம் என்று யோசனை சொன்னார்கள். அதை நாம் கட்டாயமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது இருக்கின்ற மாணவர்கள் ஷிப்ட் முறை வேண்டாம் என்று சொன்னால், அதை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. இன்னும் ஒரு ஷிப்ட் இணைக்கப்பட்டால், அதையும் வைக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். நாங்கள் அதை ஆதரிக்கிறோம். காரிய சாத்தியமாக இருந்தால், அந்த எண்ணிக்கையை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'மாஸ் காப்பியிங்' பற்றிச் சொன்னார்கள். இந்த 'மாஸ் காப்பியிங்' என்பதை நாங்கள் எதிர்க்கிறோம். அதிலே ஒரு விஷயம் சொன்னார்கள். 'மாஸ் காப்பியிங்' ஐப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே அதைப் பற்றி ஆர்குமென்ட் வந்தபோது, வெஸ்ட் பெங்கால் பற்றிச் சொன்னார்கள். அங்கே அவர்கள் ஒழுங்குபடுத்தியிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அந்த சமாசாரங்கள் பற்றி எல்லோருக்கும் தெரியும். நாங்கள் மாஸ் காப்பியிங்கை எதிர்க்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அரசு ஆணையிலே மாஸ் காப்பியிங் செய்ய ஆசிரியர்கள் காரணமோ, அதன் காரணமாக கிளர்ச்சி என்றெல்லாம் செய்கிறார்களோ என்று அச்சப்படுவதாகச் சொல்கிறார்கள். அதிலே உள்ள உண்மை நிலை என்ன என்று பார்க்க வேண்டும். அரசு அதிலே சீரியசாக இருக்க வேண்டும். அவர்கள் 16—11—1981

சட்டக் கல்லூரித் தேர்வில் நடந்தவற்றைப்பற்றி விவரமாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்திலே ரெஜிஸ்ட்ரார் ஒரு மணிக்கு வந்திருக்கிறார்கள். அங்கே ஆசிரியர்கள் மேற்பார்வை செய்திருக்கிறார்கள். அங்கே மாஸ் காப்பியிங் செய்கிறார்கள். ஆசிரியர்கள் கண்டிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் பாதுகாப்பில்லை. அதையெல்லாம் அவர்களே பார்க்கிறார்கள். முதல்வர் அவர்களே மேற்பார்வை பார்க்கச் சொல்கிறார்கள். ஒரு மணிக்கு மெட்ராஸ் யூனிவர்சிடி ரிஜிஸ்ட்ரார் வருகிறார். 'மாஸ் காப்பியிங்' இருக்கிறது. ஆனால் உபாத்தியாயர்கள் மேலே குற்றம் சொல்கின்றார்கள். அவர்கள் அந்த நேரத்தில் கிளர்ச்சி செய்கிறார்கள். அது குற்றம் என்று சொல்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டிலே என்ன உண்மை என்று சொல்கிறேன். அங்கே பிரின்சிபால் அவர்களே வருகிறார்கள். மற்றவர்கள் அங்கே காப்பியிங் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆசிரியர்களை மேற்பார்வையிடச் சொல்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பில்லை. அவர்கள் மாணவர்களைத் தடுத்தால் சண்டையிடுகிறார்கள் என்று சொல்கின்றார்கள். ஆனால் அந்த பிரின்சிபால் மீது நடவடிக்கை இல்லை.

நான் இன்னொரு விஷயம் சொல்கிறேன். காரைக்குடி அழகப்பா கல்லூரியிலே டிசம்பர் 1981-ல் ஒரே நேரத்திலே ஒரு பையன் இரண்டு பரிட்சைகள் எழுத அனுமதித்திருக்கிறார்கள். அந்தப் பையன் பாஸ் பண்ணியிருக்கிறான். இது அன்-செக்டாகப் போயிருக்கிறது. மேல் நிலைப் பள்ளிகளில் இவர்களை 'செக்' பண்ணுவதற்கு ஏற்பாடு இல்லை. ஆசிரியர்கள் கோரிக்கைகளை வைத்துப் போராடினால், அதையெல்லாம் ஒரு பெரிய குற்றமாக்கி, சர்குலர் எல்லாம் அனுப்புகிறார்கள் இந்த அதிகாரிகள். இந்தமாதிரி எல்லாம் நிர்வாகம் நடைபெறுகிறது. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு சின்டிகேட் மெம்பர் அவர்களே இதற்குக் காரணமாக இருக்கிறார்.. அவருக்கு என்ன பனிஷ்மெண்ட்? 3 வருடங்களுக்கு எக்சாமினர்ஷிப் இல்லை. காமராஜர் யூனிவர்சிடி மெம்பர் இப்படிச் செய்திருக்கிறார். அப்படி இருக்கும்போது, யாருக்கு பயம் இருக்கும்? யார் யார் சமாளிக்க முடியுமோ அவர்கள் சமாளித்துக்கொண்டு விடுகிறார்கள். இது தான் உண்மையான நிலைமை. மாஸ் காப்பியிங் என்பது மேல் மட்டத்திலே இருப்பவர்கள் அளவிலே இருக்கிறது. கீழ் மட்டத்திலே கண்டித்து என்ன பிரயோசனம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதிலே சீரியசாக இருந்தால்தான் அதைத் தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





(நண்பகல் 12-00)

(மாண்புமிகு துணைத் தலைவர் மணியடித்தார்)

தலைவரவர்களே, இப்போதுதான் கல்விபற்றி ஆரம்பித்திருக்கிறேன். நான் கல்வி பற்றிப் பேசவதே இல்லை.

ராக்கிங் முறையை எதிர்க்க வேண்டுமென்று எல்லா அரசியல் கட்சிகளும் முடிவெடுத்திருக்கிறார்கள். அது நிறைவேற்றப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர் சங்கத் தேர்தல்களைக் குறித்து ஒரு சீர்திருத்தம் செய்ய வேண்டும். அங்கே நடைபெறும் தகராறுகள் காரணமாக தேர்தல்களே வேண்டாமென்று ஒரு யோசனை வந்தது. அந்த யோசனை வேண்டாம். நாமினேஷனுக்குப் பிறகு அதிக நாள் இடைவெளி கொடுக்க வேண்டாம். 3, 4 நாட்கள் இடைவெளியில் தேர்தல்களை நடத்தலாமென்று சொன்னோம். அதைச் செய்யலாம்.

மாணவர்-ஆசிரியர் விகிதாச்சாரத்தைக் குறைக்க வேண்டும். 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று கேட்கிறார்கள். ஈட்டிய விடுப்பு 23 நாட்கள் கேட்கிறார்கள். ஓய்வு பெற்றால் 10,000 ரூபாய்; மத்திய அரசு அளித்துள்ள 4 டியர்னஸ் அலவன்ஸ் தவணைகள்—இவற்றைக் கொடுக்க வேண்டும். மேற்கு வங்கம் மாதிரி போனஸ் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட கோரிக்கைகள் இருக்கின்றன. ஆசிரியர்கள் சங்க அங்கீகாரம் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். மத்திய அரசு ஏற்கனவே அங்கீகாரம் குறித்து ஒரு நியதியைக் கையாளுகிறது. தொழிற்சங்க உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. எல்லாத் தொழிலாளர்களும் பாதிக்கப்படும் பிரச்சினையில், எது மெஜாரிட்டி சங்கமோ அவர்களுடன் நிர்வாகம் உடன்பாடு பண்ணிக்கொள்ளலாம். அப்படியில்லாமல் குறைவான உறுபபினர்கள் கொண்ட சங்கங்களாக இருந்தால், குறிப்பிட்ட சதவிகிதம் இருந்தால், அந்த சங்க உறுப்பினர்களின் பிரச்சினை குறித்து அவர்களுடன் பேசலாம். காமன் டிமான்டாக இருந்தால் மெஜாரிட்டி சங்கம் சொல்வதை ஏற்றுக்கொள்ளலாம். எனவே ஆசிரியர்கள் பிரச்சினையில் அனாவசிய மனக்கசப்பு வேண்டாம். தொழிற்சங்கங்களில் உள்ளதுபோல், மெஜாரிட்டி பெற்றுள்ள சங்கத்துடன் காமன் டிமான்ட் பற்றிப் பேசுவதற்கும், அந்தந்த சங்க உறுப்பினர்களின் பிரச்சினைகள் குறித்து அவர்களுடன் பேசவும்—இதற்கு குறைந்தது 10, 15 விழுக்காடு உறுப்பினர்கள் இருக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்தால், அங்கீகாரப் பிரச்சினை தீரும். . .

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல செய்த பிறகும், மின்சார வாரியத்திலே என்ன செய்கிறார்கள் என்பதுபற்றி மின்துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி. . .

(மாண்புமிகு துணைத் தலைவர் மணியடித்தார்)

விவாதித்த பிறகுதான் அமல்படுத்துகிறோமென்ற நிலைமை. . .

(மாண்புமிகு துணைத் தலைவர் மணியடித்தார்)

சொன்னார்கள். . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஒரு முறை சொன்னாலும் அதுதான், மற்றொரு முறை சொன்னாலும் அதுதான்.

திரு. செ. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, என்ன சொன்னீர்கள்?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் புரியாத மாதிரி ஒன்றும் சொல்லவில்லை. குறுக்கிட வேண்டாமென்றுதான் சொல்லுகிறேன்.

திரு. செ. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரே மாதிரிதானா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : எல்லோருக்கும் ஒரே மாதிரிதான்.

திரு. ஆ. நல்லசிவன் : அடுத்து, தன்னாட்சி முறை. தமிழ் நாட்டிலே 13 கல்லூரிகளுக்கு தன்னாட்சி முறை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாடு வேண்டாமென்பது என்னுடைய அபிப்பிராயம். நம்முடைய சமுதாயத்திலே பொது நன்மையைவிட சொந்த நன்மை மேலோங்கியிருக்கிறதென்ற சூழ்நிலையில் அரசாங்கக் கட்டுப்பாடு, யூனிவர்சிட்டி கட்டுப்பாடு இல்லாமல் தனியாரிடம் ஒப்படைப்பது நல்லதற்கில்லை. இப்படி கல்லூரிகளுக்கு தன்னாட்சி உரிமை கொடுப்பதை இத்தோடு நிறுத்த வேண்டும். இதனால் என்ன விளைவு ஏற்பட்டிருக்கிறதென்பதை ரெவ்யூ பண்ண ஏற்பாடு செய்யவேண்டும். தன்னாட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகளுக்கு அக்கடமிக் ப்ரீடம் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இப்போது பல்கலைக் கழகங்களிலே நடத்தப்படும் ரிசர்ச்சுகளே இமிடேடிங் ரிசர்ச்சாக இருக்கிறதென்று மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். மக்களுடைய தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் பொருளாதார நிலைமையை



அடிப்படையாகக் கொண்டு ரிசர்ச் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. கல்லூரிகளுக்கு அரசு கொடுக்கக்கூடிய அந்தப் பணம் இருக்கிறதே, அதிலே கை வைக்கத்தான் தன்னாட்சி முறை பயன்படுகிறது. வேண்டியவர்களுக்கு ஆசிரியர் பதவி கொடுக்க, வேண்டிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள அடானமி பயன்படுகிறது. அரசு விரும்பும் அக்கடமிக் ப்ரீடம் வரப்போவதில்லை என்பதை 13 கல்லூரிகளும் காட்டுகின்றன. எனவே இதை இதோடு நிறுத்தி, என்ன விளைவு இதனால் ஏற்பட்டிருக்கிறதென்பதை 'ரெவ்யூ' பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னாகள். ஆசிரியர்களோடு விரோதம் என்று சொல்லமாட்டேன். அரசுக்கு ஆசிரியர்கள் நடத்தும் போராட்டம் பற்றி எரிச்சல் இருக்கிறது என்று நினைக்கிறேன். விரோதம் என்று நினைத்துப் பாய்கிறார்களோ என்று சொல்லவில்லை. விரோதமென்று எண்ணி அவர்களை அழிக்கப் போகவில்லை என்று நினைக்கிறேன். ஆனால் எரிச்சல் இருக்கிறது. அவர்களுடைய கோரிக்கைகளை மீட் செய்வதில் அரசாங்கத்திற்குச் சங்கடங்கள் இருக்கின்றன. நம்முடைய சங்கடங்களை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை, இதனால் இக்கட்டான நிலைமை நமக்கு ஏற்படுகிறதே என்ற எரிச்சல் அரசுக்கு இருக்கிறது. ஆசிரியர்கள் என்ன சொல்லுகிறார்கள் ? போராட்டம் நடத்தி, அமைச்சர் அவர்களோடு பேசி, உடன்பாடு பண்ணிய பிறகு அதன் அடிப்படையிலே அரசு ஆணைகள் வருவதில்லை. அமைச்சரவர்களோடு பேசி முடிவெடுத்தால்கூட, அதை அமுல் நடத்தும் அதிகாரிகள் வர்க்கத்தின் அணுகு முறை வேறுமாதிரி இருக்கிறது. ஒரு கேள்வி கேட்கிறார்கள். 1—4—1980க்குப் பிறகு 10 வருடங்கள் பூர்த்தி பண்ணிய அசிஸ்டன்ட் ப்ரபெசர்கள் ப்ரபெசர்கள் ஆகிறார்களா இல்லையா ? அக்ரிமென்ட் போடப்பட்டிருக்கிறது. 1—4—1980 க்குப் பிறகு அசிஸ்டன்ட் ப்ரபெசர்கள். ப்ரபெசர்களா என்ற தெளிவற்ற நிலைமை இருக்கிறதே, இது அரசாங்கத்திற்குத் தெரியாதா ? இலாக்காவுக்குத் தெரியாதா ? 1—4—1980 எங்கே, 1—4—1982 எங்கே ? 2 வருடங்கள் விளக்கம் தர ஆகுமென்றால், எங்களுக்கு அதனால் சங்கடமில்லையா என்று கேட்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணியடித்தார்.)

விரைவிலே முடித்துவிடுகிறேன். அப்படி பல குறைகள் இருக்கின்றன பி.யூ.சி. எடுக்கப்பட்டதால், பல கல்லூரிகளில் ஆசிரியர்கள் சர்ப்ளஸ் ஆகிறார்கள். சர்ப்ளஸ் யார் யார் என்று தெரிவியுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படித் தெரிவிக்காததால், பி.யூ.சி. வகுப்புக்குச் சம்பந்தப்படாத ஆசிரியரை,

(திரு. ஆ. நல்லசிவன்) [1982 மார்ச் 20

நிர்வாகம் மாற்ற விரும்பினால், வேறு கல்லூரிக்கு மாற்றிவிடுகிறார்கள். பி.யூ.சி. நீக்கப்பட்டதன் காரணமாக, சர்ப்ளஸ் டீச்சர்களை ரீ-எம்ப்ளாய்மென்ட் செய்யலாமென்று இருக்கும்போது, யார் யார் சர்ப்ளஸ் என்று அறிவிக்க கால தாமதம் செய்தால், கல்லூரி நிர்வாகம் தனக்கு விருப்பமில்லாத, பி.யூ.சி-க்கு சம்பந்தமில்லாத ஆசிரியரை மாற்றிவிடுகிறார்கள். இந்த நிலையில் சுதந்திரம் கொடுத்துவிட்டோம், சங்கம் வைக்க உரிமை கொடுத்துவிட்டோம், அதனால் மேலேமேலே போகிறார்கள் என்று அரசு நினைக்கிறதோ என்னவோ. பள்ளிக்கூட ஆசிரியர்கள் எல்லாம், ஆசிரியர் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கல்வி இலாக்காவைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள், அவர்களை சரியாக வேலை வாங்குங்கள் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர், அலுவலகத்திலிருந்து சர்க்குலர் போகிறது. ஏற்கெனவே கள் குடித்த குரங்கு மாதிரி அவர்கள்—தனியார் கல்லூரி நிர்வாகங்கள்—இருக்கிறார்கள். இந்த முறையில் சர்க்குலர் போட்டால் எப்படி ? இவர்கள் எல்லாம் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள், வேலை பார்க்க வில்லையா என்று சர்க்குலர் அனுப்பினால், அவர்கள் சங்கம் வைக்க முடியுமா ? இப்படி ஒரு சர்க்குலர் போடப்பட வேண்டிய

(பிற்பகல் 12-10)

அவசியம் என்ன ? வேலை செய்யாத நாட்களுக்குச் சம்பளம் கிடையாது என்று இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே ஒரு சர்க்குலர் இதுசம்பந்தமாக இருக்கிறது. அதாவது ஏதாவது உண்ணாவிரதம், கிளர்ச்சி போன்ற சம்பவங்கள் நடந்தால் கூட, அதில் நியாயம் இருக்கிறது. கோரிக்கை நியாயமானது என்று அரசே ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு நிலை இருக்குமானால், பல சந்தர்ப்பங்களில் சம்பளம் கொடுக்கக் கூடிய நிலை இருந்து வந்தது. ஆனால் இப்போது ஆசிரியாகள் பள்ளிக்கூடம் வராமல் இருந்தாலும், ஸ்டிரைக் செய்தாலும் அந்த நாட்களுக்குச் சம்பளம் கிடையாது என்று சர்க்குலரில் சொல்லியிருக்கிறார்கள். அங்கு வேலை பார்க்கிறவர்களுக்கு சம்பளம் போட்டு ஏன் சிரமப்பட வேண்டுமென்ற நிலையைத் தவிர்க்க இப்படிச் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். இன்றைக்கு பேக்டரியில் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால், அதனால் உற்பத்திதான் பாதிக்கும். ஆனால் ஆசிரியர்கள் ஸ்டிரைக் செய்தால், மாணவர்களுடைய படிப்பு பாழாகிறது. ‘10 நாள் ஸ்டிரைக் செய்திருக்கிறீர்கள், ஆகவே உங்களுக்குச் சம்பளம் கிடையாது’ என்று அரசு சொல்லுமேயானால், ஆசிரியர்களும் உடனே நாங்கள் 4 லெசன்ஸ்-ஐப் படித்துச் சொல்லிக் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால் மாணவர்கள் ஒத்துக்கொள்வார்களா, இல்லை அரசுதான் ஒத்துக்கொள்ளுமா ? அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள்



1982 மார்ச் 20] (திரு. ஆ. நல்லசிவன்)

போராட்டத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் வெக்கேசன் பீரியடில் கூட பாடம் சொல்லிக் கொடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமி காந்தன் இங்கே குறிப்பிட்டார். கேஷுவல் லீவில் சென்று போராடினால் கூட, சம்பளம் கிடையாது என்று சொன்னால், அது சரிதானா ? எக்ஸாமினேஷனை ‘பாய்காட்’ பண்ணுவது பற்றிய பிரச்சினை வந்தது. போன வருடம் இதுசம்பந்தமாக ஒரு பில் கொண்டுவரப்பட்டது. பிறகு எல்லோரும் அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று வலியுறுத்தியதன் பேரில் அது முற்பகலிலேயே பேரவையிலேயே அது வாபஸ் பெறப்பட்டது. பிறகு பிற்பகலில் என்று கருதுகிறேன், மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது அதற்கு நன்றி என்று சொன்னார்கள். உடனே கல்வி அமைச்சர் அவர்கள் எழுந்து ‘பரீட்சை எழுதவும் விட மாட்டார்கள், பில்லையும் கொண்டு வர விட மாட்டார்கள்’ என்று சொன்னார்கள். அவர்கள் வெளிநாடு சென்று நேராக மேலவைக்கு பிற்பகல் 2 மணிக்கு வந்தார்கள் என்று நினைக்கிறேன். பேரவையில் நடைபெற்றது அவர்களுக்கு அப்போது தெரியாது. ஆகவே அதில் அவர்களுக்கு இஷ்டம் இல்லையென்று நினைத்தேன். ஆகவே, பில்லை வாபஸ் வாங்கிய பிறகு ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். இப்படி பில்லை வாபஸ் வாங்கிய பிறகு ஜி.ஓ. போட்டது சரியா ? போராட்ட முறை ஆசிரியர்களிடம் வேண்டாமென்று அரசு நினைத்தால், இதுகுறித்து எல்லோருடனும் பேசி முடிவுக்கு வர வேண்டும். நான் கேட்பதெல்லாம் இப்படி அரசே ஒரு சட்ட முன்வடிவைத் திரும்பப் பெற்ற பிறகு, எப்படி ஜி.ஓ. கொண்டு வரலாம் ? இப்போதெல்லாம் இந்த ஜி.ஓ. தான் அலை மோதிக்கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையில் அரசின் அணுகுமுறை சரியில்லை. ‘கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது’ போல் அரசின் நடவடிக்கை இருக்கிறது, ஆசிரியர்களிடம் மட்டும்தான் இப்படிச் செய்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் பேசும்போது, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றி குறிப்பிட்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், அதன் நிர்வாக அமைப்பிலே ஒரு பெரிய ஊழல் இருக்கக்கூடியதாக இருக்கிறது. இதுகுறித்து எத்தனை முறை யார் யார் இங்கே பேசியிருந்தாலும், அத்தனையும் உண்மை. அதுகுறித்து உள்ள யதார்த்த நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்களும் அப்பட்டமாகச் சொல்லித் தான் ஆக வேண்டும். அங்கு 27 வருடம் நல்லமுறையில் தமிழ் இணைப் போராசிரியாகப் பணியாற்றிய திருநாவுக்கரசு என்பவரை பணி நீக்கம் செய்திருக்கிறார்கள். 27 வருடம் அவர் அங்கு பணியாற்றியிருக்கிறார். அப்போதெல்லாம் நல்லமுறையில் பணியாற்றிய அவர் இப்போது சரியாக இல்லை என்று சொல்லி நீக்கியிருக்கிறார்கள். நான் சொல்கிறேன்

அது அல்ல காரணம். 1928 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆக்ட்-ஐத் திருத்த வேண்டுமென்று போராடினார்களே, அதில் 7 பேர் மீது நடவடிக்கை எடுத்தார்களே, அதில் ஒருவர் தான் இந்தப் பேராசிரியர். பேராசிரியர் ரெங்கநாதன், எம். ஆர். சுந்தரம், ஆர். எம், சுந்தரம் போன்றவர்களையெல்லாம் நிர்வாகத்தினர் பழி வாங்கியிருக்கிறார்கள். இரண்டு வருடம் ரிசர்ச் பண்ணிய ஸ்டுடென்ட் மூன்றாம் வருடம் ரிசர்ச் பண்ணக் கூடாதாம். அந்த ஸ்டுடெண்டின் ரெஜிஸ்டிரேஷனை 'கேன்சல்' பண்ணி விட்டார்கள். இதில் என்ன நியாயம் இருக்கிறது ? 2 வருடம் ரிசர்ச் பண்ணிய அவர் என்ன தப்பு பண்ணிவிட்டார் ? உதவித் தொகையையும் திரும்பக் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் உள்ளபடியே அந்த நிர்வாகத்துக்கு எதிராக 750 ஆசிரியர்கள் இதர ஊழியர்கள் போன்றவர்கள் கிளர்ச்சி செய்ததால்தான் இப்படியெல்லாம் செய்கிறார்கள். இப்படியெல்லாம் அங்கு பணியாற்றுகிற ஊழியர்களைப் பழி வாங்குகிறார்கள். இந்தப் பல்கலைக் கழக நிர்வாகத்தில் ஊழல் அதிகமாக இருக்கிறது. அங்கு பணியாற்றும் திரு. கௌரிசங்கருக்கு 650 ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்கக் கூடாது. ஆனால் 1,800 ரூபாய் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். இப்படி 28 ஆயிரம் ரூபாய் சம்பளமாகக் கொடுக்கப்பட்டிருப்பதைப் பிடியுங்கள் என்று ஆடிட்டர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் பிறகு அவர் வேலை செய்யாத நாட்களுக்குச் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். இப்படிக் கொடுக்கப்பட்ட 28 ஆயிரம் ரூபாயைப் பிடியுங்கள் என்று இரண்டாவது ஆடிட் ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். 16 மாதங்களுக்கு ரூபாய், 1,800 வீதம் ரூபாய் 28 ஆயிரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் இதுவரை பிடிக்கப்படவில்லை. 1975 ஆம் ஆண்டு சின்டிகேட்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒன்றில் 'நான்—டீச்சிங் சைடில்' இருப்பவர்கள் 60 வயதிற்கு மேல் ஆனவர்கள் பதவியில் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் "நான்—டீச்சிங் சைடில் அவருக்கு 60 வயதிற்கு மேல் ஆகிவிட்டது. அவருக்கு 1985 ஆம் வருடம் ஜுன் 30 ஆம் தேதி வரை எக்ஸ்டென்ஷன் வேறு கொடுத்திருக்கிறார்கள். அதுபோல் காரஸ்பான்டன்ட்ஸ் கோர்ஸ் டெப்புட்டி டைரக்டர் திரு. சோமசுந்தரம் அவர்களுக்கு 60 வயதிற்கு மேல் ஆகிவிட்டது. அவரையும் அப்பாயின்ட் செய்திருக்கிறார்கள்.

பட்ஜெட்டில் பேசும்போது உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி உற்பத்தியாளர்களுக்கும், நுய்ப்போர்களுக்கும் நியாய விலை கிடைக்கச் செய்து, இடைத் தரகர்களை ஒழிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். திரு. சோமசுந்தரம் அவர்கள் வைஸ் சான்சலராக இருந்தபோது 13 லட்சம் ரூபாய்க்கு அங்காடியின் மூலம் டென்டர் விடாமல் சாமான் வாங்கியிருக்



கிறார். பொதுவாகவே நாம் பார்க்கிறோம். ரோடு கான்டிராக்ட் விடுகிற போது கூட என்ன நடைபெறுகிறது என்பதைப் பார்க்கிறோம். சரக்குகளை அனுப்புவதில் கூட தவறு நடப்பதைப் பார்க்கிறோம். ஆகவே அவர்கள் சாமான்களை சிறப்பு அங்காடியில் வாங்கினால் என்ன ? இன்றைக்கு இருக்கக்கூடிய திரு. சிட்டிபாபு அவர்கள் கூட டென்டர் வாங்காமல், கூட்டுறவு அங்காடியும் வேண்டாம் என்று சொல்லி 13 லட்சம் ரூபாய்க்கு சாமான்களை வெளியிலிருந்து வாங்கியிருக்கிறார். இன்றைக்கு ஆசிரியர்களை மட்டும் புது கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள். ஆசிரியர்கள் அங்கும் இங்கும் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் செய்யக் கூடிய தவறுகள் அரசுக்குத் தெரியவில்லையா ? அதிகாரபூர்வமாக ஆடிட்டர் அவர்களுடைய ரிப்போர்ட்டே தவறு செய்திருப்பதாகச் சொல்கிறதே. இந்த விஷயம் எல்லாம் அரசுக்குத் தெரியவில்லையா ? ஆல் இன்டியா கவுன்சில் ஆப் டெக்னிக்கல் எஜுகேஷன் என்ன சொல்லியிருக்கிறது என்றால், ஒரு வருடத்திற்கு ஒரு என்ஜினியரிங் கல்லூரிக்கு 240 பேர்களுக்கு மேல் எடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறது. ஆனால் போன ஆண்டு 270 பேர்களை எடுத்தார்கள். இன்னும் எடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த ஆண்டு 346 பேர்களை எடுத்திருக்கிறார்கள். இதில் மேனேஜ்மெண்டுக்கு 25 பெர்சன்ட் கோட்டா உண்டு. இம்மாதிரி எம் ஏ, எம் எஸ்ஸி, எம் காம், எம் பி ஏ, பி. எட்., போன்றவற்றிற்கு எடுக்கிறார்கள். இது 1924 ஆம் ஆண்டு ஆக்ட்படி உள்ள சட்ட பூர்வமான ஓர் அமைப்பு. சின்டிகேட், செனட், அக்காடமிக் கவுன்சில் போன்ற அமைப்புகள் இருக்கின்றன. இது தனிப்பட்ட ஒரு பல்கலைக் கழகம். ஆனால் சட்டசபையில் கொண்டுவரப்படுகிற ஆக்ட்-படி இயங்குகிற ஒரு யூனிவர்சிட்டி இது. இப்படி அவர்கள் 346 பேர்களை எடுத்திருந்தால் கூட, பேக்வார்ட், ஷெட்யூஸ்ட் காஸ்ட் போன்றவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடங்களை ஒதுக்கினார்களா என்றால், அதுவும் இல்லை. இந்த அரசு அறிக்கை விட்டபோது என்ன சொன்னது ?

(பிற்பகல் 12-20)

ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் ட்ரைப், பேக்வேர்ட் கிளாஸ் போன்ற வகுப்பினருக்குக் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கண்காணிப்பு செய்து கொண்டிருக்கிறோம் என்று இந்த அரசு சொன்னது. ஆனால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே, இந்த ஆண்டு ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் ட்ரைப், பேக்வேர்ட் க்ளாஸ் போன்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட "கோட்டா" கொடுக்கப்படவில்லை. நேர்முகத் தேர்விலே அதிகமான மார்க் வாங்கியவர்கள் பெயர் இப்போது லிஸ்ட்டிலே தான் இருக்கிறது.

ஆனால் குறைந்த மார்க் வாங்கியவர்கள் 'மேனேஜ்மென்ட் 'கோட்டா' என்ற அடிப்படையிலே உள்ளே போயிருக்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்கள் ஏதாவது செய்தால், உடனே பூதக்கண்ணாடி போட்டு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதிலே என்ன செய்யவிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். (மணியடிக்கப் பட்டது) ஒன்றே, ஒன்று. . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஒன்றே ஒன்று தானே !

திரு. ஆ. நல்லசிவன் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இப்போது 20 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டிடம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். குறைந்த தொகையிலே டென்டர் கொடுத்தவருக்கு அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கான வேலை கொடுக்கப்படவில்லை. ஆனால், அதிகமான அளவிலே ரூபாய் குறிப்பிட்டு டென்டர் கொடுத்தவருக்கு அந்த வேலையைக் கொடுத்திருக்கிறார்கள். பப்ளிக் ஒர்க்ஸ் டிப்பார்ட்மென்ட்டின் எஸ்டிமேட் இல்லாமலேயே அண்ணாமலை யூனிவர்சிட்டியிலே காஸ்பான்டன்ஸ் கோர்ஸுக்கான கட்டிடம் 20 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் ஸ்காலர்ஷிப்—கிரான்ட்க்குக் கொடுக்கப்படும் தொகையை வேறு பொதுச் செலவுக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற நியதி இருக்கிறது. ஆனால் 1979-80 ஆம் ஆண்டிலே ஆடிட் ரிப்போர்ட் என்ன சொல்கிறது என்று பார்த்தால், 4¾ இலட்சம் ரூபாய் ஸ்காலர்ஷிப்புக்கு என்று கொடுக்கப்பட்ட தொகை, பின்னர் கொடுக்கப்பட்டாலும் ரூ. 4 இலட்சத்து 10 ஆயிரம் தான் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அது தவறு என்று ஆடிட் ரிப்போர்ட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 'போர்ட் ஆஃப் செலக்ஷன்' என்று ஒன்று இருக்கிறது. அது யூனிவர்சிட்டி கட்டிடத்திலே தான் கூட வேண்டும். ஆனால், அந்த போர்ட் யூனிவர்சிட்டியின் கட்டிடத்திலே கூடாமல் வேறு வெளியே எங்கோ கூடுகிறது. வெளியே செல்வாக்கு உள்ள இடத்திலே கூடுகிறது. இது குறித்து தான் சொல்வது சரி என்று சொன்னால், நடவடிக்கை எடுங்கள்.

இன்னொரு விஷயம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இப்போது பட்டப் படிப்பை நிறுத்திவிட்டார்கள். 1974 ஆம் ஆண்டு யூனிவர்சிட்டி கிரான்ட்ஸ் கமிஷன் வந்தபோது என்ன சொன்னார்கள் என்று சொன்னால், "நாங்கள் யூனிவர்சிட்டிக்கு வெளியே தனியான ஒரு ஏற்பாடாக பட்டப் படிப்பை வைத்துக்கொள்கிறோம், அதற்கு கிரான்ட்ஸ் தரவேண்டும்" என்று கேட்டார்கள். யூனிவர்சிட்டி கிரான்ட்ஸ் கமிஷனும் அதற்கு ஒத்துக்



கொண்டு ரூ. 6 இலட்சம் தந்தது. அதன் பின்னர் மேச்சிங் கிரான்ட்ஸ் வேண்டும் என்று சொல்லி, கல்வி இலாக்காவிலிருந்து அதுபற்றி எழுதி நமது அரசு 6 இலட்சம் ரூபாய் கொடுத்தார்கள். அப்போது வைஸ்-சான்சலராக இருந்த திரு. சோமசுந்தரம் அவர்கள் 1980 மே மாதத்திலே எழுதியிருக்கிறார்கள். ஆனால் 1981 செப்டம்பர் மாதத்திலே பட்டப்படிப்பு வேண்டாம் என்று நிர்வாகம் முடிவெடுத்திருக்கிறது. அதற்குக் காரணம் அந்தக் கல்லூரி ஆசிரியர்கள் அமைப்பிலே அவர்கள் சேர்ந்துகொண்டு, 1928 ஆம் ஆண்டு ஆக்டைத் திருத்த வேண்டும் என்று சொன்னதுதான். அந்தச சட்டம் ப்ரோ-சான்ஸ்லருக்கு இல்லாத அதிகாரங்களையும் வைஸ்-சான்சலருக்குத் தருகிறது. அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டுக்கு வெளியே போய் சில காரியங்களைச் செய்யும் அதிகாரத்தை அவருக்குத் தரும், ஆகவே, அந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று சொன்ன காரணத்திற்காக இந்தப் பட்டப் படிப்பு மூடப்பட்டிருக்கிறது. சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் போன்ற பகுதிகளிலே இருக்கும் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை எந்தக் கல்லூரிக்கு அனுப்புவார்கள் ? இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. வேறொரு கல்லூரிக்கு ஏற்பாடு செய்கிறோம் என்று அரசு சொல்கிறது. ஆனால் அந்த ஏற்பாடு இன்னும் பூர்த்தியாகவில்லை. அக்டோபரில் டிகிரி கோர்ஸ் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் செப்டம்பரிலே வேண்டாம் என்று முடிவு செய்தார்கள். கல்வித் துறைக்கே இது ஒரு களங்கமாகாதா ? அந்த இடம் இப்போது ஊழலின் உறைவிடமாக இருக்கிறது. இது ரெக்கார்ட் பூர்வமாக வருகின்ற ஆடிட்டிலே இருக்கிறது என்று சொன்னால், இதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், மக்கள் எப்படி இந்த அரசு அவர்களுக்கு நன்மைகளைச் செய்யும் என்று நம்புவார்கள் ? தமிழ் நாட்டிலே கல்வியிலே இது ஊழலின் உறைவிடமாக இருக்கிறது. இந்த அரசு கொடுத்த வாக்குறுதியையும் நிறைவேற்ற வேண்டும். இந்த ஆக்டைத் திருத்த வேண்டும். அப்படித் திருத்தாவிட்டால் இந்த அரசுக்குக் கெட்ட பெயர் தான் ஏற்படும். இந்த மாதிரி ஆசிரியர்களைக் கொடுமைப்படுத்தி, ஊழல் பண்ணிக்கொண்டிருக்கும் நிருவாகத்தின் மீது அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் நன்றாக இருக்கும் என்று சொல்லி, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கை பற்றிய குறிப்பின் மீது நடக்கும் விவாதத்தில் என்னையும் பேச அனுமதித்தற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 100

கோடி ரூபாய் ஒதுக்கி ஏழைக் குழந்தைகளுக்கு நண்பகல் உணவுக்காத் திட்டம் தீட்டியிருப்பதை நான் பாராட்டுகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், கல்வித் துறையும் திறமையாகச் செயல்படுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் நான் பாராட்டு கிறேன். புதிய யூனிவர்சிட்டீஸ் திருச்சிராப்பள்ளிக்கும் கோயம்புத்தூருக் கும் வர ஏற்பாடு செய்திருப்பதற்காக பாராட்டைத் தெரிவித்துக்கொள் கிறேன். உலகத் தமிழ் மாநாடு நடந்தது தொடர்பாக, தஞ்சாவூரில் தமிழ் பல்கலைக் கழகம் ஏற்படுத்தி, அதிலே ஆராய்ச்சி ஏற்பட, ஏற்பாடு செய்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக பண ஒதுக்கீடு செய்ததை, உலகத்தில் உள்ள தமிழர்கள் எல்லாம் பாராட்டு கிறார்கள். அங்கே செய்யும் ஆராய்ச்சி மற்ற நாடுகளுக்கும் அச்சிட்டு அனுப்பப்பட வேண்டும். ஆராய்ச்சி சம்பந்தமாக எல்லாப் பல்கலைக் கழகங்களும் இதுபோன்ற ஆராய்ச்சிப் பணிகளைச் செய்யும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களும் சொன்னார்கள். நான் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு யூனிவர்சிட்டியிலேயும் பழைய புரொஃபசர்கள் இருந்தால், பி.எச்.டி.-க்கு ஆராய்ச்சி செய்யும்போது, அந்தப் பழைய புரொஃபசர்களுக்கு எந்த சப்ஜெக்ட் தெரியுமோ அதற்கு மட்டும் தான் ரெஜிஸ்டர் செய்து கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. அப்படி குறிப்பிட்ட சப்ஜெக்ட்களில் என்று மட்டும் இல்லாமல், நமக்கு இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட்க்குத் தேவைப்படும் சையன்ஸ், மேத்தமாட்டிக்ஸ், அக்ரிகல்சர் மேலும் இதுபோன்ற பல சப்ஜெக்ட்களிலும் ஆராய்ச்சி செய்ய வேண்டும். வைஸ்-சான்ஸ்லருக்கும், சிண்டிகேட்டுக்கும் தெரியாமல் இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன. சாதாரணமாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வைஸ்-சான்ஸ்லரைக் கூப்பிட்டு இதுபற்றி ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும். செமஸ்டர் கோர்ஸ்பற்றி சொல்வதானால்—பொதுவாக மாணவர்கள் தேர்வை பாய்காட் செய்கிறார்கள். அது செமஸ்டர் முறை வந்த பிறகு அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்த செமஸ்டர் முறை தேவையில்லை. முன்பெல்லாம் 2 முறை அல்லது 3 முறைதான் பரிட்சை எழுதினார்கள். ஆனால் இப்போது 6 முறை பரிட்சை எழுதும் நிலைமை இருக்கிறது. இப்படி நடக்கும் பரிட்சைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். இப்போது இருக் கும் செமஸ்டர் முறையை எடுத்தால் பிள்ளைகள் படிப்பதற்கு வசதியாக இருக்கும். அந்தக் காலத்திலேயெல்லாம் இந்த மாதிரி கிடையாது. மேலும் கரஸ்பான்டன்ஸ் கோர்சை 'என்கரேஜ்' பண்ண வேண்டும். அது மிகவும் அவசியம். அது இல்லாவிட்டால் ரொம்ப பேர் படிக்காமல் போய்



விடுவார்கள். இப்போது ரொம்ப பேர் படிக்க ஆசையோடு இருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும், எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் கரஸ்பான்டன்ஸ் கோர்ஸ் நடத்த உதவி செய்ய வேண்டும். இப்போது இருக்கும் 5, 6 யூனிவர்சிட்டிகளிலேயும் இந்த நிலைமையை ஏற்படுத்தச் செய்ய வேண்டும். திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் போன்ற பல்கலைக் கழகங்களிலேயும் இந்த நிலைமையை ஏற்படுத்த வேண்டும். கல்லூரிகளுக்குப் போக முடி யாமல் இப்போது எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். இப்படிச் செய் தால் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். படிப்பு பற்றிய திட்டங் களைப்பற்றி ஆராய ஒரு கமிட்டி திரு. குழந்தைசாமி அவர்களின் தலைமை யில் வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கமிட்டியின் 'டெர்ம்ஸ்-ஆஃப்-ரெஃபரென்ஸ்' இன்னும் வரவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி முடிக்கும்வரையில் அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் : குழந்தைசாமி கமிட்டி பற்றி சுருக்கமாக வந்தது. அதிலே டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ் விரிவாகப் போட்டு, என்னென்ன படிப்புகள் படிக்கலாம், என்னென்ன பாடங்கள் வைக் கலாம் என்று யோசிக்கலாம். ஏனென்றால் 30 வருஷத்திற்கு முன்பிருந்த பாடங்கள்தான் இன்றும் இருக்கின்றன. ஒரு வேலைக்கு இன்டர்வியூவிற் குப் போகிறபோது, ஒரு கேள்வியைக் கேட்டால், அதை எங்கள் பள்ளிக் கூடத்தில் சொல்லித் தரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆசிரியர்கள் தங்களுக்கே சொல்லிக் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே சிலபசை மாற்ற வேண்டும். சாதாரணமாக இரண்டு மாதங்களிலேயே சில பசை மாற்றிவிடலாம். ஏப்ரல், மே மாதத்தில் மாற்றிவிட்டு ஜூலை மாதம் முதல், டெக்னிக்கல் எஜுகேஷன், சையன்ஸ், சரித்திரம், எல்லாவற் றிற்கும் மாற்றலாம். இதிலே சிரமம் கிடையாது. இதற்கு வைஸ்-சேன்சலர்கள் தலைமையில் ஒரு குழுவை ஏற்படுத்தினாலே போதும். ஹைஸ்கூல் பற்றிய விவரம் எனக்குத் தெரியவில்லை. ஹைஸ்கூல் பாடங் களையும் மாற்ற வேண்டியது வரும். ஹைஸ்கூலில் என்ஜினியரிங் கோர்ஸ் இருக்கிறது. அது நல்லதுதான். எல்லோரும் வேலைக்காகப் படிக் கிறார்கள். ஆகவே வேலைக்குத் தகுந்தபடி பாடங்களை மாற்ற வேண்டும்.

[டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்] [1982 மார்ச் 20

பாலிடெக்னிக்குகள் பற்றி பலமுறை சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு தாலுக்காவுக்கும் ஒரு பாலிடெக்னிக் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் கூட இதை விரும்புவார்கள் என்று நினைக்கிறேன். செங்கல்வராயன் பாலிடெக்னிக் ஆரம்பித்து 81 வருடங்கள் ஆகிவிட்டன. இப்போது அங்கு 60 பேர்தான் சேர்க்கிறார்கள். ஷிப்ட் சிஸ்டம் கொண்டு வர ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அதை 'இம்ப்ளிமென்ட்' செய்ய வில்லை. ஷிப்ட் சிஸ்டம் கொண்டு வந்தால், ரொம்ப சந்தோஷம். 80 வருஷமாக 100 பேர் சேர்த்துக்கொண்டு வந்தார்கள். இப்போது 60 பேர் தான் சேர்க்கிறார்கள். அதை 100 ஆகப் பண்ண வேண்டும். அல்லது டபுளாக ஆக்க வேண்டும். மேலும் பல சப்-ஜெக்டுகள் இருக்க வேண்டும். இப்போது மூன்று சப்ஜெக்டுகள்தான் இருக்கின்றன. எலெக்ட்ரானிக்ஸ், டெலி-கம்யூனிகேஷன், டெலிபோன் இன்டஸ்ட்ரீஸ், ஏய்ரோனாட்டிக்கல் போன்ற பல துறைகள் இருக்கின்றன. கோடம்பாக்கத்தில் உள்ள சுந்தரராஜன் பாலிடெக்னிக்கில் 10 சப்ஜெக்ட் வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் சுலபமாக எல்லாப் பாலிடெக்னிக்குகளிலும் வைக்கலாம். இப்போது 9 ஆயிரம் பேர் பாலிடெக்னிக்குகளில் படிக்கிறார்கள். இரண்டரை இலட்சம் பேர் ஹைஸ்கூலிலிருந்து பாஸ் செய்துவிட்டு வரும்போது அவர்கள் கல்லூரியிலும் சேர முடியவில்லை, பாலிடெக்னிக்குகளிலும் சேர முடிய வில்லை. ஆகவே எண்ணிக்கையை 100 ஆக உயர்த்தி, பல சப்ஜெக்டுகளை வைத்து, ஷிப்ட் சிஸ்டத்தையும் வைக்க வேண்டும்.

ஜூனியர் பாலிடெக்னிக்குகளை ஒவ்வொரு ஊரிலும் வைக்க வேண்டும். அதிலும் டபுள் சிஸ்டம் வைக்க வேண்டும். இதனால் செலவு நிறைய ஆகாது. அதில் முதல் வருஷம் கணக்கு சொல்லித் தருகிறார்கள். அடுத்த வருஷம் கொஞ்சம் டிராயிங் சொல்லிக் கொடுப்பார்கள். மூன்றாவது வருஷம்தான் லெபாரட்டரி வேண்டும். அது சாதாரண விஷயம். இந்த மூன்று வருஷத்திற்குள் ஏற்பாடு செய்யலாம். உடனடியாகச் செய்ய வேண்டுமென்று இல்லை. இந்த ஜூனியர் பாலிடெக்னிக்குகளை தமிழ் நாடு பூராவும் வைக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. அதிலே சப்ஜெக்டுகளையும் அதிகமாக வைக்க வேண்டும். அப்படி வைத்தால்தான் ரொம்பப் பேருக்கு உதவியாக இருக்கும்.

குழந்தைசாமி கமிட்டி டெக்னிக்கல் எஜுகேஷனைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. ஹையர் செகண்டரி ஸ்கூலுக்குத் தகுந்த மாதிரி "ரீ-ஓரியன்டேஷன்" செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது சிலபசை "ரீ-அரேன்ஜ்" பண்ண வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது நல்ல அபிப்பிராயம்.



1982 மார்ச் 20] [டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்]

பிற்போக்கு வகுப்பினருக்கு 51 சதவீதம் வைத்திருக்கிறார்கள். 18 சதவிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு 100 இடத்தைக் கொடுத்துவிடட்டும். முற்போக்கு சமுதாயத்தில் தெங்கணி, முஸ்லிம், நாட்டுக்கோட்டை செட்டியார், கோமிட்டி செட்டியார், ரெட்டியார் ஆகிய ஏழு, எட்டு பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு 25 சீட்டுகள் கொடுக்க வேண்டும். அதை அந்த நூறில் பங்கு போட வேண்டாம். இந்த 25-லேயும் பிரிக்க வேண்டாம். மெரிட்டில் விட வேண்டும். மெரிட்டில் விட்டால் ஒன்று வரும் அல்லது போகும். அப்படிச் செய்தால்தான் சரியாக இருக்கும்.

காலேஜில் பி.யூ.சி.-யில் 5 செக்ஷன்கள் இருக்கின்றன. அதில் 110 பேர்கள் படிக்கிறார்கள். 110-ஐ 125 ஆக ஆக்குவதில் சிரமம் இல்லை. டபுள் ஷிப்ட் வைத்தால், அது 250 ஆகும். ஐந்தாறு சப்ஜெக்ட்டுகளை வைத்தால் இன்னும் அதிகமாகும். முற்போக்குச் சமுதாயத்திற்கு படிக்க வாய்ப்புக் கொடுத்தால்தான், அவர்கள் பிற்போக்குச் சமுதாயத்திற்கு உதவ முடியும்.

இந்தக் கல்வி கொள்கை விளக்கக் குறிப்பை பூரணமாக ஆதரித்து, மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் இன்னும் நன்றாக அமைச்சரவையில் உள்ளவர்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கல்வியமைச்சர் அவர்கள் அதிகமாக ஆர்வம் எடுத்துக்கொண்டு உற்சாகமாக நடப்பதற்காக நான் அவரைப் பாராட்டி, வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைத் தெரிவிக்க மகிழ்ச்சியடைகிறேன். கொள்கைக் குறிப்பின் மீது பேசுவதற்கு முன்னதாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை முதலிலேயே பாராட்டிவிடுவது நல்லது என்று நினைக்கிறேன், அது கடமையென்றும் கருதுகிறேன். நான் முதலிலேயே 'பாராட்டு' என்று துவங்குவதால், முடிக்கின்றபோது அதிகமான இடித்துரைகள் இருக்குமோ என்ற சந்தேகம் இருந்தாலும்கூட, அதற்கு அவசியம் இல்லாத வகையிலே கல்வியமைச்சர் அவர்களுடைய அணுகுமுறை அமைந்திருக்கிறது என்பதற்காக பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்விக் கூடங்களில் ஒழுக்கத்தைக் காண்டாக வேண்டும், கல்விக் கூடங்களில் எப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டாலும், அந்தச் சூழ்நிலைகள் மிரட்டல்களாகத் துவங்கி, கல்வி நிறுவனங்கள் செயல்படுகிற முறையை பாதிக்கின்ற

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 20

நிலையை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக பல சந்தர்ப்பங்களில் அவர் தெரிவித்த கருத்துக்கள் அவரைப் பற்றியே கடுமையான விமர்சனம் செய்ய வாய்ப்பாக அமைந்தன என்றாலும் கூட, கடந்த மூன்றாண்டுக் காலத்திலே அவர் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதை என்னாலே ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது. கடந்த இரண்டாண்டுகளில் கல்விக் கூடங்கள் மூடப்பட்டுக் கிடந்த எண்ணிக்கையைப் பார்க்கும்போது, இந்த ஆண்டிலே பெருமளவிற்கு அந்த எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதால், கல்வித் துறையில் அந்த நல்ல முயற்சியில் ஈடுபட்டு அப்படிச் செய்திருப்பதற்காக நாட்டிலே இருக்கின்ற பொது மக்களுடைய சார்பிலே, மாணவர்களைப் படிக்க வைக்கின்ற பெற்றோர்கள் சார்பிலே, இந்த அரசுக்கு, அமைச்சருக்கு கல்வித் துறைக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். படிக்கவும் போகாமல் வேலையும் செய்யாமல் வீட்டிலேயே பிள்ளைகளை வைத்துக் கொண்டிருப்பது எவ்வளவு சிரமம் என்பதை அனுபவத்தில் உணர்ந்தவன் என்ற வகையில் அவர்கள் தொடர்ந்து கல்வி பயில முடிகிறது என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இருந்த நிலைமை இந்த ஆண்டில் தெளிவு அடைந்து ஓரளவிற்கு முன்னேறியிருக்கிறோம் என்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே பெருமளவிற்கு ஆசிரிய நண்பர்கள் ஒத்துழைத்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். ஆசிரியர் சங்கங்களுக்கு பல்வேறு குறைகள் இருந்தால் கூட, அவர்கள் இந்த முயற்சியில் துணை நின்றிருக்கிறார்கள் என்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஷிப்ட் முறை போட போராட வேண்டுமென்று நாங்களே சொன்னோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கூட சொன்னார்கள். மாணவர்களிலிருந்து ஆசிரியர்கள் வரை தொடர்ந்து இப்படியெல்லாம் மாற்ற வேண்டாம் என்று தெரிவித்திருந்து அவர்களே கூட முறையாக நடைபெற வேண்டும் என்று இடம் கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் காண முடிகிறது. அந்த அடிப்படையிலே கல்லூரிக் கல்வியைப் பொறுத்த வரையில், நாம் ஓரளவிற்கு முன்னேறியிருக்கிறோம் என்பது தெளிவு.

அங்கொன்றும் இங்கொன்றுமாக தேர்வு முறையில் ஏற்பட்டிருக்கக் கூடிய சீர்கேட்டை முழுமையாக நாம் களையவில்லை என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே கூட ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அந்த சூழ்நிலைக்கு ஒரு பரிகாரம் காண வேண்டும். ஒட்டுமொத்தமாக இன்னொருவரைப் பார்த்து எழுதுவது அல்லது புத்தகத்தைப் பார்த்து எழுதுவது என்ற நிலைமை பல இடங்களில் இல்லை. வசதி வாய்ப்புள்ள இடங்களில் அவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனுடைய



1982 மார்ச் 20] [திரு. க. இராமமூர்த்தி]

பலனை அனுபவிப்பவர்கள் யார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பெரிய நகரங்களில், அல்லது இதை முழுமையாக, திறமையாகப் பயன்படுத்துகிற பகுதிகளில் செய்வதால், எங்களைப் போன்ற பின்தங்கிய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது காப்பி அடிப்பவர்களைப் போல் பணம் செலவு செய்ய முடியாத பின்தங்கிய வகுப்பில் உள்ள பல பேர், "மாஸ் காப்பி" அடிக்க முடியாமல் போகிற, அவர்களைப் போல் மதிப்பெண் பெற்று கல்லூரிகளுக்குப் போக முடியாமல் போகிற, நிலைமை ஏற்படுகிறது.

(பிற்பகல் 12-40)

ஆகவே இந்த நிலைமையின் விளைவாக நன்றாகப் படிக்கக்கூடியவர்கள் அல்லது மற்றவர்களோடு சாதாரணமாகவே போட்டி போட்டுக்கொண்டு படிக்கின்ற மாணவர்கள், முன்னுக்கு வரக்கூடிய மாணவர்கள் முன்னுக்கு வரமுடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் தடுக்கப்படுகிறார்கள் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். அதற்கு நாம் பரிகாரம் கண்டாக வேண்டும். பல நேரங்களில் பல காரணங்களுக்காக நாம் பல்வேறு அரசியல் கட்சிகளை அழைக்கிறோம். சில நேரங்களிலே சில காரியங்களுக்கு அரசியல் வர்ணம் பூச வேண்டாம் என்பதற்காக அப்படி நடத்துகிறோம். ஆனால் கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே, நான் தெளிவாகச் சொல்கிறேன். அனைத்து அரசியல் கட்சிகளின் முடிவைக் காணுவது என்ற அடிப்படையிலே எல்லோரையும் திருப்தி பண்ணுவது என்பது நடக்காத காரியமாக இருக்கும். அதில் அரசு முடிவெடுத்தாக வேண்டும். அப்படி எடுக்கிற போது அது எதேச்சாதிகாரமாகச் செய்துவிட்டது என்ற எண்ணம் வரவே கூடாது என்று இருந்தால், மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதுபோல, ஒரு ஆலோசனைக் குழு அமைத்துக்கொள்ள வேண்டும். அதிலே பல தரப்பினரும் இருக்கட்டும். தமிழ் நாட்டிலே கொள்கை அடிப்படையிலே அரசியலுக்காக மட்டும் கட்சிகள் இல்லை. ஜாதிகளுக்காகவும் கட்சிகள் இருக்கின்றன. அவைகள் முகாமிட்டு விளையாடிக்கொண்டிருக்கின்றன என்பதையும் நம்மால் காண முடிகிறது. ஆக எந்த மாணவர்கள், பாதிக்கப்படுகிறார்கள், எந்தக் கல்லூரி பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையிலே பார்க்க வேண்டும். ஆனால் ஒட்டுமொத்தமாகப் பேசுகிறபோது, அதிலே அணுகுமுறை நல்ல முறையாக இல்லாமல் போனால், அதைத் தடுக்க முடியாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று சொன்னார்கள், காப்பி அடிப்பது பற்றிச் சொன்னார்கள். அப்படி காப்பி அடித்ததாக எங்கெல்லாம் பிடிபடுகிறார்களோ அவர்கள் மீது எடுக்கின்ற நடவடிக்கைகளைப்பற்றி நான் வேதனையோடு சொல்

விக்கொள்ள விரும்புகிறேன். எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். வேலூரில் உள்ள ஒரு கல்லூரியிலே 35 பேர்கள் ஒட்டு மொத்தமாகக் காபி அடித்ததாகச் சொல்கிறார்கள். அவர்களுடைய தேர்வு செல்லாது என்று முடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. கடைசியாக ஒரு மாணவன் மட்டும் தேர்வு பெற்றிருக்கிறான் என்றார்கள். கொஞ்ச காலத்திற்குப் பிறகு ஒரு மாணவன் தேர்தலிலே வெற்றி பெற்றான் என்று தகவல் வந்திருக்கிறது. நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், இப்படி காப்பி அடித்த பிறகுகூட, இன்றைக்குக் கொஞ்சம் செல்வாக்கு உள்ளவர்கள் கொஞ்சம் சலுகைகள் பெற முடியும் என்ற உணர்வு பொதுமக்கள் மத்தியிலே இருக்கிறது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எவ்வளவு உறுதியோடு இந்த நடவடிக்கைகளை எடுக்கிறார்களோ அதுபோலவே சில குறைபாடுகள் பற்றி அவர்கள் கவனத்திற்கு வந்தால், அதிலேயும் அவர்கள் உறுதியோடு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு இடம் கொடுத்தவர்கள், அது ஆசிரியர்களோ, கல்லூரி முதல்வரோ அல்லது வேறு அதிகாரிகளோ, அது யாராக இருந்தாலும் அந்தத் துறையில் தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

இன்னொன்று கல்லூரிகளைப் பொறுத்த வரையிலும், வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் என்ற முறையை நாம் கையாண்டு வருகிறோம். அதிலே பல்வேறு மாற்றங்கள் வந்திருந்தாலும்கூட, இன்றைக்கு உள்ள செய்யப்பட்டிருக்கின்ற முறையிலேயே இந்தக் கல்லூரி அட்மிஷன்களை நடத்த வேண்டும் என்று நினைக்கிறேன். இதிலே உண்மையில் என்ன நடக்கிறது என்றால் பல கல்லூரிகளிலே இடம் இருக்கிறபோது, குறிப்பாக டிகிரி வகுப்புகளுக்கு அல்லது போஸ்ட் கிராஜ்வேட் வகுப்புகளுக்கு இடம் இருக்கின்றபோது அதற்கான விண்ணப்பங்கள் நிறைய இருக்கிறபோது, அரிஜனங்களுக்கோ பின் தங்கியவர்களுக்கோ உள்ள விண்ணப்பங்கள் அதிகமாக இருக்கிறபோது, அதை முழுமையாகத் தேர்வு செய்ய முடியும். ஆனால் கொஞ்சம் நாள் தள்ளிப்போட்டுகொண்டு போய்விட்டு, சில காலத்திற்குப் பிறகு, அரிசனங்களுக்கு, பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலே மற்றவர்களைக் கொண்டு போய் புகுத்துகின்ற முறையை இன்றைக்கு சில கல்லூரிகள் பின்பற்றுகின்றன. சில கல்லூரி முதல்வர்கள் மனதில் அந்தக் கருத்து புகுந்திருக்கிறது. இதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இதிலே தெளிவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு இதிலே முறையான நடவடிக்கையை, சட்ட பூர்வமான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு



மாறாக நடைமுறைகள் இருந்தால், அதனைத் தடுக்க வேண்டும், அதற்கு கண்டிப்பான நடவடிக்கைகளை அரசு எடுத்தாக வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, கல்விக்கூடங்களில் சேர்ந்து படிக்கின்றவர்கள் இடையிலேயே விட்டு போகிறார்கள் என்று சொல்கிறார்கள். தொடர்ந்து படிக்காமல் விட்டு போகின்றவர்கள் (Drop outs) பற்றி ஒரு பெரிய விவாதமே நடைபெற்றிருக்கிறது. அதிலே ஒன்று சொல்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்காக, நகராட்சி மன்ற மன்றங்களுக்காக பள்ளிக்கூடங்கள் பல இதுவரையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கேதான் கோளாறுகள் வந்திருக்கின்றன. இந்த டிராப் அவுட்ஸ் என்பதைப் பொறுத்த அளவிலே, அரசாங்கம் அதிலே உள்ள உண்மையான நிலைமைகளைத் தெரிந்து நிவர்த்தி செய்ய வேண்டும். அதிலுள்ள குறைகளை நிவர்த்திக்க வேண்டும். இப்படி புள்ளிவிவரங்கள் நமக்கு எதிராக அமைவதனால் இந்த அரசுக்கு இழுக்கு என்று நினைக்கக்கூடாது. கல்வித் துறையைப் பொறுத்து அது தேவையில்லை என்று நான் கருதுகிறேன். காரணம் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த அளவிலே, கிராமப்புறங்களைப் பொறுத்த அளவிலே டிராப் அவுட்ஸ் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறது என்பதை என்னால் சொல்லாமலிருக்க முடியாது. அவர்கள் அங்கே தொடக்கப் பள்ளிகளை ஆரம்பிக்கின்ற நேரத்திலே அங்கே இருக்கின்ற ஆசிரியர்களுடைய எண்ணிக்கை குறையாமல் இருக்க வேண்டும் அல்லது ஒன்றிரண்டு ஆசிரியர்கள் கூடுதலாக ஆக்க வேண்டும் என்பதற்காக, இன்னமும் சொல்லப்போனால், பஞ்சாயத்து யூனியனிலே இன்னும் சில ஆசிரியர்களை நியமிப்பதற்கு என்று முன்கூட்டியே சில ஏற்பாடுகளைச் செய்துவிடுகிறார்கள். அந்த நேரத்திற்கு ஏற்ற அளவிலே தேவையான அளவுக்கு மாணவர்களை அங்கே கொண்டு வந்து உட்கார வைத்துவிடுகிறார்கள். அவர்கள் ஒரு வாரம் பத்து நாட்கள் வருவார்கள். அதற்குப் பிறகு வரமுடியாத நிலையில் இருப்பார்கள். அந்தச் சூழ்நிலைமைகள்தான் இருந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலைமைகளை நிவர்த்தி செய்தாக வேண்டும். இதைத் தவிர்த்தாக வேண்டும். இதிலே கல்வித் துறை மட்டும் செயலாற்றி விட்டது என்று சொல்ல முடியாது. கிராமங்களில் இருக்கின்ற பொருளாதார காரணமும் பெரிதாக இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைமைகள் இருக்கின்றன என்று கல்வித் துறை காட்ட முயற்சித்தால், கிராமங்களின் வளர்ச்சிக்கு இது வாய்ப்பாக இருக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிராமப்புறத்திலே கல்வி அறிவு மேலும் மேலும் வளர வாய்ப்பு இருக்காது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் கொடுத்திருக்கின்ற புள்ளி

விவரங்கள் கூட 1 முதல் 5வது வகுப்பு வரையில் இருக்கின்ற, பிரைமரி பள்ளிகளைப் பொறுத்தவரையில், 27,767 பேர்கள் 1 அக்டோபர் 1981 வரையில் இருக்கிறார்கள்; (Middle Schools) மிடில் ஸ்கூல்ஸ் என்று பார்க்கும்போது, 6 முதல் 8வது வகுப்பு வரையில் படிக்கின்ற பிள்ளைகள் என்று பார்க்கின்ற போது, 27 ஆயிரம் என்பது 5,556 ஆகக் குறைகிறது. கடைசியாக உயர் நிலைப் பள்ளிக்கு வருகிறபோது 3,573 என்று குறைகிறது. இந்த டிராப் அவுட்ஸ் எங்கே போகிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நகரங்களில் எண்ணிக்கை குறைவதில்லை. ஆனால் எங்கே குறைகிறது? தொடக்கப் பள்ளிகளிலேதான் கிராமங்களில் அந்த எண்ணிக்கை குறைகிறது. நகரத்திலே ஆரம்பப் பள்ளிகளிலே போய்ச் சேர்கின்ற மாணவர்கள் கடைசி வரையிலே படிக்கிறார்கள். கிராமப் புறங்களிலே பஞ்சாயத்து யூனியன் களிலே சேர்கின்ற மாணவர்கள் தொடர்ந்து படிக்கவில்லை. அவர்கள் படிக்க முடிவதில்லை. இடையிலே 'டிராப் அவுட்ஸ்' ஆகிப் போகிறார்கள். அந்தக் காரணத்தினாலேயே எண்ணிக்கை குறைகிறது என்பதைப் பார்க்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்வது வேண்டும். இந்தச் சூழ்நிலைகளை மனதிலே இருத்தி நாம் செயல்பட என்னுடைய கடமையாகும்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இன்னொன்றை அறிவித்தார்கள். நான் முன்னமேயே சொன்னதுபோல, அவர்களுடைய அணுகுமுறையிலே என்ன ஓட்டத்திலே எனக்கு எந்த மாறுபட்ட கருத்தும் கிடையாது. நல்ல எண்ணங்கள், நல்ல அணுகுமுறைகள்கூட நாம் அவசரப்படுவதன் காரணமாக அல்லது சில நேரங்களில், அளவுக்கு மீறிய வேகத்திலே நிலைநாட்ட வேண்டும் என்று கருதுகிறபோது, நம்முடைய நோக்கமே தவறிப்போவது உண்டு. இது ஒரு கோடி ரூபாய் திட்டமாகத்தான் இருக்கிறது. நடைமுறையிலே பஞ்சாயத்து யூனியன் அளவிலே, தாலுக்கா அளவிலே, மாவட்ட அளவிலே இதை நடைமுறைப் படுத்தியிருக்கலாம். ஆனால் மாநிலம் முழுமைக்கும் என்று அதைப்பற்றி அறிவிக்கப்பட்டுவிட்டது. நாற்றங்கால் பள்ளிகளைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு வேண்டிய பள்ளிக் கட்டிடங்கள் இருக் கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. பால்வாடியிலேயே இந்தப் பள்ளிக் கூடத்தை நடத்துவது என்ற முறை வந்தால், அந்தக் குழந்தைகள் இயற்கை கழிப்பிடங்களுக்கு எங்கே செல்வது என்று எனக்குப் புரியவில்லை. அதோடு மட்டுமல்ல, இவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற ஆசிரியர்கள் தகுதி பெற்ற ஆசிரியர்களாக இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட ஆசிரியர்கள் இருந்தால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளம் பற்றி நான் மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமஸ் அவர்களிடம் கேட்டேன்.



அவர்கள் குறைந்தது மாதம் ரூ. 300 ஆகும் என்று சொன்னார்கள். அவர்களை எப்படித் தேர்வு செய்யப்போகிறீர்கள்? பாலவாடி சேவிகாக்கள் ஆசிரியர்களாக இருக்கலாம் என்று சொல்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் என்று பார்த் தால், ரூ. 175 என்று சொல்கின்றார்கள். அதையே நாம் ரூ. 150 என்று வைத் தால் கூட, அதுவே கிட்டத்தட்ட ரூ. 80 லட்சம் அளவுக்கு வந்துவிடும்.

(பிற்பகல் 12-50)

ஒரு கோடி ரூபாய்க்குத் திட்டம் அறிவித்து, அதில் 80 லட்சம் ரூபாய் சம்பளம் என்றால், மீதியெல்லாம் எப்படி? திட்ட அறிவிப்புகள் நல்ல முறையில் இருந்தாலும்கூட, அதைச் செயற்படுத்த முடியாமல் போகுமானால், அரசாங்கம் அறிவிக்கும் திட்டங்களிலே மக்களுக்கு ஏற்படும் நம்பிக்கை அற்றுப் போய்விடுமென்று சொல்லுவது என்னுடைய கடமை. நாற்றங்கால் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஒரு இணைப்பு இருக்கிறது. 100 கோடி ரூபாய் திட்டமும் ஒன்றாக இணைகிறதோ என்று நினைக்கிறேன். 100 கோடி ரூபாய் திட்டம் 2 வயது குழந்தை முதல் துவங்குகிறது. ஒரு கோடி ரூபாய் திட்டமாகிய நாற்றங்கால் பள்ளி துவங்கும்போது, அதுவும் 2, 3 வயதுக் குழந்தைகளிலிருந்து துவங்குகிறது. இந்த இரண்டையும் இணைந்து செயல்படுத்தும் நிலைமை வரும்போது, பால்வாடி, அதற்காகும் செலவு, அந்தக் குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு எவ்வளவு செலவு என்று அணுகப் பட்டதா என்பது தெரியவில்லை. இப்படிப்பட்ட திட்டத்தைச் செயல் படுத்தும்போது, நர்சரிப் பள்ளிகளை நடத்துகின்ற அளவிற்கு ஆசிரியர் களுக்கு ஏற்கெனவே பயிற்சி கொடுத்திருக்க வேண்டும். அந்த அளவிற்குப் பயிற்சி கொடுத்திருக்கிறோமா? அவர்களுக்கு நாளையதினம் குழந்தைகளை வைத்து, நர்சரிப் பள்ளிகளை நடத்த அனுபவம் இருக்கிறதா? அந்தத் தகுதி இருக்கிறதா? தேவைப்படும் அளவிற்கு அந்தத் தகுதி உள்ளவர்கள் இருக்கிறார்களா என்று அணுகி, அந்த முறையில் தெளிவான அறிக்கை தந்திருந்தால், அந்தத் திட்டம் பற்றிய விவாதத்திற்கு மேலும் துணை சேர்ப்ப தாக அமைந்திருக்கும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்**: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம்பற்றி மாண்புமிகு கல்வி அமைச் சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நானும் தெரிவித்திருக்கிறேன். ஒன்றை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். தாய்மார்களிடம் ஒப்படைக்கப்படு மென்று பேசும்போது, படித்த, விதவையாக இருக்கும் தாய்மார்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். ஆகவே அதற்குரிய முறையில் திட்டங் களைத் தீட்டி ஒழுங்குபடுத்தப்படும். நர்சரிப் பள்ளிகள் என்று சொல்லு

கிறார்களே, அதைவிடச் சிறப்பாக இந்தப் பள்ளிகள் நடக்கும்படியாக ஏற்பாடு செய்யப்படுமென்பதையும், உணவுதான் கொடுக்கப்படும், அதோடு வாழ்க்கைமுறையிலே கல்வியும் இணைந்துவருமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்ததுபோல, அந்த எண்ணத்திலே, கருத்திலே மாறுபாடு கிடையாது. அது நல்ல நோக்கம். அந்த அளவிற்கு ட்ரெயினிங் (Training) கொடுத்திருக்கிறோமா? இதை நடைமுறைப்படுத்துகிறோமென்றால், 4,000 பால்வாடிகளிலே நர்சரிப் பள்ளிகள் நடந்தாக வேண்டும். 4,000 பேர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறோமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, பால்வாடிகளிலே மட்டும்தான் இது செயல்படுத்தப்படுமென்பது கற்பனையே தவிர வேறு ஒன்றுமில்லை. அது ஓரளவிற்குப் பயன்படுத்திக்கொள்ளப்படும். அப்படி இல்லாது பல அமைப்புகளும் உருவாக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : பால்வாடிகள் அல்லாமல் வேறு அமைப்புகளும் உருவாக்கப்படுமென்கிறபோது, அதற்கு வேண்டிய கட்டிட வசதிகள் இல்லை. இந்தத் திட்டத்தின் நோக்கத்தில் மாறுபாடு இல்லை ஆனால் . . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அதற்குத் தேவையான ஷெட் போன்றவைகளை எப்படி அமைப்பது, அதற்கு என்ன செலவு என்பது பற்றியெல்லாம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல. ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப் போன்ற அமைப்புகளிடம் இவற்றை அமைத்துக்கொடுக்கும்படி கேட்டிருக்கிறோம். பலர் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** துணைத் தலைவரவர்களே, ஆரம்பிக்கப்படுகிற நர்சரிப் பள்ளிகளிலே தமிழ் மட்டும் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுமா அல்லது ஆங்கிலமும் சொல்லிக்கொடுக்கப்படுமா? அதற்கான திட்டம் வகுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : ஆக, அந்தத் திட்டத்தை அறிவித்து, அதற்குப் பிறகு அதை நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுப்பதில் வேகம் காட்டுகிற முறை இருந்துகொண்டிருப்பதை யூகிக்க முடிகிறது. நான் சொல்லுவ



தெல்லாம், இந்தத் திட்டங்களை அறிவிக்கும்போது, முன்கூட்டியே அதற்காக சூழ்நிலைகளை எதிர்பார்த்து, சில நடவடிக்கைகளை எடுப்பது நல்லது என்பதுதான். நர்சரிப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், ஒன்று சொல்ல விரும்புகிறேன். பலரோடு கருத்து மாறுபாடு இருந்தாலும், என்னுடைய கருத்தைச் சொல்லாமல் இருக்க முடியாது. இப்போது பல நகரங்களில், மாநகரங்களில், இன்னும் சொல்லப் போனால் பெரிய பஞ்சாயத்துக்களில் நர்சரிப் பள்ளிகளை தனியார் நடத்துகிறார்கள். அங்கே பிள்ளைகள் வருகிறார்கள் என்றால், அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் இடமாகக் கருதி மட்டுமல்ல, அங்கே வெளியிலே மற்ற இடங்களிலே கிடைக்காத கல்வி கிடைக்கிறதென்ற உணர்வோடு வருகிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நான் பணிவோடு தெரிவித்தும் கொள்கிறேன். இப்போது நடைபெறுகின்ற நர்சரிப் பள்ளிகள்—நான் யாரையும் குறிப்பிட்டு குற்றம் சாட்ட விரும்பவில்லை—லாப நோக்குடன் நடத்தப்படுகிறதே தவிர, குழந்தைகளின் மேன்மைக்காக என்று நினைத்துவிடக்கூடாது. ஆகவே அதில் நாம் எச்சரிக்கையாக இருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : முதலமைச்சரவர்கள் நன்றாக அறிந்திருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். உண்மையிலேயே அவைகளை லாப நோக்கோடு நடத்துகிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். பான்டட் லேபரை விட கொத்தடிமைகளை விட மோசமாக, பட்டம் பெற்றவர்களை, நடத்துகிறார்கள். அவர்கள் 90 ரூபாய் சம்பளத்திற்குப் பணியாற்றுகிறார்கள். ஆனால் அது வேறு. இப்படி இருந்தாலும்கூட அங்கே குழந்தைகளைச் சேர்க்கிறோமென்ற நிலை வரும்போது, பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளிகளிலே, நகராட்சிப் பள்ளிகளிலே, அரசுப் பள்ளிகளிலே இருக்கின்ற கல்வியைவிட அவை பரவாயில்லை, கூடுதலாக இருக்கிறதென்ற உணர்வு பெற்றோர்களுடைய மனதிலே ஏற்பட்டிருக்கிறது. அதைக் களைய வேண்டியது இந்த அரசாங்கத்தின் கடமை. எங்கே சங்கடம் வருகிறது ? அங்கே ஆங்கிலம் அதிகமாகச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அங்கே வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. சில நர்சரிப் பள்ளிகளிலே இந்திகூடச் சொல்லிக் கொடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பேசும்போது, ஆங்கிலத்தின் ஸ்டேன்டர்ட் (Standard) குறைந்து போய்விட்டதென்று சொன்னார்கள். வேலை வாய்ப்புக்கு ஆங்கிலம் மிக மிகத் தேவைப்படுகிறது. 'ஆங்கிலத்தின் ஸ்டேன்டர்ட் குறைந்து போகிறது, அது குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னார்கள். வேலை

வாய்ப்புக்கு வேண்டிய மொழியைப் படிக்க வேண்டிய உணர்வு அவர்களுக்குத் தோன்றியிருப்பது போலவே, தமிழகத்தில் உள்ள பல லட்சக் கணக்கான, கோடிக் கணக்கான மக்களுக்குத் தோன்றியிருக்கிறது. ஆகவேதான் பல பேர் இந்தி இல்லாமல் முடியாதென்று உணர்ந்திருக்கிறார்கள். உணர்ந்துள்ள நிலைமை வந்திருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை நான் சொன்னேன். இந்தி மொழி பேசும் மாநிலங்களில் உள்ள மக்கள் இந்தி படித்துவிட்டு, வேலைக்குப் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் இந்தி படித்து, அங்கே வேலை பெற வசதியில்லை.

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய குழந்தைகள் இந்தியைப் படிக்க வைக்கிறேன். எனவே 'உங்களுடைய குழந்தைகள் இந்தி படிக்கவில்லை' என்று யாராவது சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, என்னால் வளர்க்கப்படும் குழந்தைகள் இந்தி படிப்பதில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : என்னுடைய குழந்தைகள்கூட இந்தி படிப்பதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : என் வீட்டுக் குழந்தைகள் இந்தி படிப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** துணைத் தலைவரவர்களே, தனித் தனியாக ஒவ்வொருவரும் சொல்வதைப் பார்த்தால், கட்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாமல் போய்விடும். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் அந்தக் கொள்கையில் தெளிவாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : உறுதியாக இருக்கிறோமென்று தெரிவித்ததால், அதை ஏற்றுக்கொள்ளத் தயார்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழையும் ஆங்கிலத்தையும் ஒழுங்காகப் படிக்கவில்லை என்பதுதான் என்னுடைய கவலை எல்லாம்.





திரு. க. இராமமூர்த்தி : தமிழை ஒழுங்காகப் படிக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கவலையெல்லாம். இந்தி படிக்காததன் விளைவை தமிழகத்திலுள்ள குழந்தைகள் அனுபவிக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய நோக்கம் எல்லாம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** விவாதம் எங்கோ போய்க் கொண்டிருப்பதால், நாங்களும் அடிக்கடி பேச வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்தியைப் படிக்காதவர்களுக்கு ஏதோ பெரிய ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்வது சரியல்ல. தமிழில் படித்தவர்களுக்கு வேலை இல்லை. அதுபோல் ஆங்கிலத்தில் படித்தவர்களுக்கும் வேலை இல்லை. இதுபற்றி நேற்றுகூட நீதிபதி ஒருவரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது மனம் விட்டு பேசினோம். இந்தி படிக்கிற பிள்ளைகளுக்குத்தான் வேலை கிடைக்கும் என்று சொன்னால், நம்முடைய ஒருமைப்பாட்டுக்கு அர்த்தமே இல்லை என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நான் சொன்னது தவறாகப் புரிந்துகொள்ளப் பட்டிருக்கிறது. நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தி படிக்காததால் தனிப்பட்டவர்களுக்கு எவ்வளவு பாதிப்பு என்பதல்ல பிரச்சினை. அதற்கு பயந்து யாரும் இந்தியைப் படிப்பது என்பதல்ல பிரச்சினை. அப்படி யாரும் இந்தியைப் படிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தவும் முடியாது. நமது குழந்தைகள் நாளை வளர்ந்த நிலையில், இந்தியை நாம் அன்றைக்குப் படித்திருந்தால், இந்த நேரத்தில் சௌகரியமாக இருந்திருக்குமே என்ற உணர்வு அவர்களுக்கே ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்று.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அப்படிப் பார்த்தால், இந்தி மட்டுமல்ல, வேறு எந்த ஒரு மொழியைப் படிக்காமல் இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் இந்தப் பிரச்சினை வரத்தான் செய்யும். உதாரணமாக பாரிசுக்கு வேலைக்குச் சென்றால், பிரஞ்ச் மொழி எனக்குத் தெரியவில்லையே என்ற பிரச்சினையும், ஈஜிப்டுக்குச் சென்றால் அந்நாட்டு மொழியைக் கற்றுக்கொள்ளவில்லையே என்ற பிரச்சினையும், அபுதாபிக்குச் சென்றால் அந்நாட்டு மொழியைக் கற்றுக்கொள்ளவில்லையே என்ற பிரச்சினையும், அதுபோல் ஜப்பான் நாட்டுக்குப் போனால் என்ன நிலைமை என்பதும் எல்லோருக்கும் தெரியும்—அப்படிப்பட்ட பிரச்சினைகள் வரத்தான் செய்யும். ஆங்கிலம் தெரிந்தவர்கள் கூட இன்றைக்கு பாரிசில் பிரஞ்சு மொழியைத்தான் பேசுகிறார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு

எங்கேயும் இருக்கின்றன. எங்கு போக வேண்டுமென்று விரும்புகிறார்களோ, எங்கு சென்று வாழ வேண்டுமென்று விரும்புகிறார்களோ—அப்படிப்பட்டவர்களுக்குத்தான் இந்தப் பிரச்சினை உண்டாகும். ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில், எல்லோருக்கும் சம உரிமை, சமத்துவம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இங்கு இரு மொழியை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மற்ற எந்த மொழிக்கும் இல்லாத தனித் தன்மை இந்திக்கு இருக்கிறது, அதைக் கற்றுக்கொண்டால்தான் நம் பிள்ளைகள் எதிர் காலத்தில் பிழைக்க முடியும் என்ற மிகப் பெரிய பிரச்சினைக்கு நாம் அடி கோலக் கூடாது. இந்தியை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னால், அந்தப் பிரச்சினைக்கு நாம் அடிகோலுகிறோம் என்று தான் பொருள்.

திரு. ஆ. நல்லசிவன் : இப்போது எல்லா மொழிகளும் தேசிய மொழிகளாக இல்லை. ஆங்கிலமும் இப்போது நடைமுறையில் பயன்படுத்தப்படுகிறது. இந்தியை மட்டும் தேசிய மொழியாக ஆக்க வேண்டுமென்று சொல்வதில்தான் பிரச்சினையும், தகராறும் வருகிறது. ஆகவே 18 மொழிகளையும் தேசிய மொழிகள் என்று மத்திய அரசு அங்கீகரிக்க வேண்டும். அப்படி அறிவிக்கும் வரை ஆங்கிலம்தான் நடைமுறையில் இருக்கும். இந்தியை மட்டும்—தேசிய மொழி என்று வற்புறுத்துவது சரியில்லை. அந்த வகையில் 18 மொழிகளும் தேசிய மொழி தான் என்று அறிவிக்கும் வரை அந்நிய மொழியை ஏற்றுக் கொண்டு திருப்தியடைய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : Sir, all languages are national languages and the contention of my hon. Friend Thiru Nallasivan is wrong. The dispute arose only regarding the official languages for purposes of the Union and that is where they are trying to have Hindi as the sole language and we want English also to be one of the languages.

திரு. ஆ. நல்லசிவன் : நான் சொல்ல விரும்புவது மத்திய அரசால் இந்த 18 மொழிகளும் ஆட்சி மொழி என்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதுதான். அப்படி அங்கீகரிக்கப்படாத காரணத்தால்தான், இந்தியில் நிர்வாகம் நடைபெறும் என்கிற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இடைக் காலத்தில் ஆங்கிலத்தில் ஆட்சி நடைபெறும் நிலை இருந்தது. அப்படி இந்தியை நடைமுறைக்குக் கொண்டுவருவதால் மற்ற மொழிகள் பாதிக்கப்படும் என்பதால், நாம் இந்தியை ஏற்றுக்கொள்ளாமல் ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே மத்திய அரசு 18 மொழிகளையும் தேசிய மொழியாக, ஆட்சி மொழியாக அங்கீகரிக்கும்வரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஆங்கிலம்தான் நடைமுறையில் இருக்கும்.



THIRU A. R. DAMODARAN : English has also been declared as a national language because Nagaland insisted that English should be one of the national languages.

திரு. க. இராமமூர்த்தி : ஆங்கிலத்தினுடைய இடத்தைப் பற்றிய விவாதத்திற்கு நான் போகவில்லை. அது வேறு பிரச்சினை. ஆனால் இந்தியே இல்லை என்ற உணர்வை தமிழகத்தில் மட்டும்தான் உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களில் இப்படி இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே 'உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்' என்கிற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உண்டாக்கி விட்டார்கள் என்பதை ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும். தலையில் சுமத்தப்பட்ட பிறகுதான், சுமத்துவதை அனுமதிக்க முடியாது என்ற நிலை வந்தது. இதுதான் நிலைமை.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். உண்டாக்கி விட்டார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அந்தச் சூழ்நிலை நம்மை அறியாமல் ஏற்பட்டு விட்டதா? வேறு பல காரணங்களால் ஏற்பட்டு விட்டதா? எப்போதோ ஏற்பட்டு விட்டதா? அதிலிருந்து வெளியே வர வேண்டாமா? Should we not wriggle out of the situation? அதனால் தான் அதன் விளைவை இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சிக்கலிலிருந்து வெளியே வந்ததால் தான் இப்போதைய கொள்கை ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டு பேசுகிறார்கள். 'உண்டாக்கி விட்டார்கள்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு அந்த நிலையை உருவாக்கிவிட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, நம் மாநிலத்தில் இரு மொழிக் கொள்கைதான் என்கிற திட்டத்தைத் திட்டவட்டமாக அறிவித்தார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோல், திராவிட இயக்கம் வாழ்கிறவரை அந்தக் கொள்கை இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுடைய கட்சியே ஆட்சிக்கு வந்தாலும்கூட, அந்த நிலையை மாற்ற முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் (கரவொலி).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்தக் கருத்துக்கு மாற்றுக் கருத்துடையவர்கள் தமிழகத்தில் ஆட்சிக்கு வர முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (பலத்த கரவொலி).

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இரு மொழிக் கொள்கை பற்றிய தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, காங்கிரஸ் கட்சி கூட அதை எதிர்க்கவில்லை என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். (சிரிப்பு)

திரு. க. இராமமூர்த்தி : அண்ணா அவர்கள் இரு மொழிக் கொள்கையை அறிவித்தபோது, நானும் சட்ட மன்றத்தில் அமர்ந்திருந்தேன். ஆதரித்தேன். (சிரிப்பு) ஆனால் அன்றைக்கே மிகத் தெளிவாக நாங்கள் சொன்னோம். ஆதரிப்பது என்பது வேறு. அன்றைக்கு அண்ணா அவர்கள் அதிலே மாறுபடவே இல்லை. அவர்களுடைய உணர்வு எப்படி எழுந்தது என்பதையும் சொல்கிறேன். இந்தி பேசுகின்ற மாநிலங்களில் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள். அல்லது மத்திய அரசின் தலையீடு காரணமாக, சூழ்நிலை காரணமாக, கட்டாயமாக ஏற்க வேண்டிய நிலையில் ஏற்றுக் கொண்ட சில மாநிலங்கள்கூட அதைச் செயல்படுத்தவில்லை. இரு மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில் It is a retaliatory step என்று தான் சொன்னார்கள். ஆகவே தான் நான் சொல்கிறேன், அண்ணா அவர்கள் மும்மொழித் திட்டம் கூடாது என்று சொல்லவே இல்லை. ஆனால் அன்றைக்கு மற்ற மாநிலங்களில் இருந்த சூழ்நிலையின் அடிப்படையில், இப்படி நாம் செய்வது நல்ல விளைவைத் தராதா என்ற அடிப்படையில்தான் அண்ணா அவர்கள் இதை அறிவித்தார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஒரு சில விளக்கம் சொல்கிறேன். மும்மொழிக் கொள்கை என்பதற்குரிய அடிப்படை என்ன என்பதைப் பற்றி விவாதிக்க நேரம் இல்லை. அதற்கு கல்வி அமைச்சர் அவர்கள் பதிலில் கூறட்டும். இங்கு இரு மொழிக் கொள்கை என்றே வைத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய தாய்மொழியில் பற்றுக் கொள்ள வேண்டும். அந்த முறையில் தமிழகம் தமிழில் பற்றுக் கொள்ள வேண்டும். 'நேஷனல் லேங்குவேஜ்' என்று சொன்னாலும் சரி அல்லது வேறு எந்த முறையில் சொன்னாலும் சரி, மும்மொழித் திட்டம் என்பது அடுத்த மாநிலங்களிலுள்ள



ஏதாவது ஒரு மொழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது. அப்படித் தான் நான் நம்புகிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொள்வார் என்று நம்புகிறேன். ஆனால் இரு மொழித் திட்டம் கொண்டுவாக் காரணம் இந்தி தான் ஆட்சி மொழி என்றால், இந்தியை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மும்மொழித் திட்டமே கிடையாது. அவர்களுடைய தாய்மொழி அவர்கள் மாநிலத்தில் ஆட்சி மொழியாக இருந்தால் அவர்களுக்கு இந்தி ஆட்சி மொழி ஆகிறது. ஆகவே அப்படிப்பட்ட மாநிலங்களைப் பொறுத்தவரையில், வேறொரு மொழியைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. காரணம் அங்கு ஆட்சி மொழி இந்தி ஆகிறது. ஆகவே இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு அது இலகுவாகக் கற்றுக்கொள்ளக் கூடிய ஒரு மொழி. அதனால் மும்மொழித் திட்டத்தின் வாயிலாக மற்றவர்களுக்கு பல தொல்லைகளைத் தந்தார்கள். இரண்டாவது மக்கள் என்கிற அளவிலே, தாழ்வுபடுத்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையில், தங்களுடைய தன்மான உணர்ச்சி மட்டுமல்ல, தங்களுடைய உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது என்பதற்காக மாநிலங்களில் அந்தந்த மாநிலத்தின் தாய்மொழி ஆட்சி மொழி, இந்தியத் துணைக் கண்டம் முழுவதற்கும் ஆங்கிலம் ஆட்சி மொழி என்று அவர்கள் சொன்னார்கள்.

(பிற்பகல் 1.10)

திரு. க. இராமமூர்த்தி : இதிலே உள்ள பிரத்தியட்ச நிலைமைகளிலே நம்முடைய தன்மான உணர்வுகளையும் திராவிட இயக்கத்தையும் போட்டு (confuse) 'கன்ஃப்யூஸ்' பண்ணுகிறோம். திராவிட மொழி பேசுகின்ற மற்ற மாநிலங்களிலே இந்தியும் இருக்கிறது. ஆந்திரா, கேரளா, கர்நாடகா . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அடிக்கடி குறுக்கிடக் கூடாது தான் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தான் பதில் சொல்லித் தீர வேண்டும் ; அதுதான் முறை ; அதுதான் உரிமை. இருந்தாலும் கொஞ்சம் கேட்டு வாங்கி இடம் பெற்றுக்கொள்கிறேன். மற்ற திராவிடம் என்று சொல்லும் பகுதியைச் சேர்ந்தவர்கள், ஒரு தவறைச் செய்கிறார்கள் என்பதற்காக தமிழகமும் அந்தத் தவறைச் செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே தான் அவர்களும் கொஞ்சம் கொஞ்சமாக நம்மை நோக்கி வருவார்கள் ; அப்படி வருகிற சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது என்று மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

[1982 மார்ச் 20

திரு. க. இராமமூர்த்தி : மற்றவர்கள் எல்லோரையும் விட நாம் தான் மொழியைக் காப்பாற்றுகிறோம் என்ற உணர்வு நமக்கு இரத்தத்தோடு ஊறி விட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஒன்றை ஞாபகப்படுத்து கிறேன். திரு. பொட்டி ஸ்ரீராமுலு எப்படி இறந்தார் ? ஆந்திரா பிரிய வேண்டும் என்பதுதான். ஆந்திரா பிரியும்போது அங்கே ஆட்சிமொழி தெலுங்கு தான். அங்கே அந்த உணர்ச்சி அவர்களுக்கு இல்லாமல் இல்லை. எல்லோருக்கும் மொழி உணர்ச்சி உண்டு. ஆனால் யார் முதலில் தொடங்கி னார்கள் என்று சொன்னால், 'ஐயா' அவர்கள் 50 ஆண்டு காலத்திற்கு முன்னாலே இங்கே தொடங்கினார்கள். பெரியார் அவர்கள் தொடங்கிய பின்னர், இது நீதிக் கட்சியிலிருந்து தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. அதுதான் நிலைமை. நாம் முதலிலே இருக்கிறோம், அவர்கள் பின்னாலே இருக்கிறார்கள், சீக்கிரம் வந்துவிடுவார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. பொட்டி ஸ்ரீராமுலு அவர்களைப்பற்றிச் சொன்னதாலே என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. மொழிவழி மாநிலங்கள் தேவை என்ற அடிப்படையிலே பிரிக்காமல், அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டாகிவிட்டது. அமுல்படுத்த வில்லையே என்பதுதான் காரணம். மொழிவழி மாநிலங்கள் பிரிவதற்கு முன் னாலே சென்னை இராஜதானியாக இருந்தபோதுகூட தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி பெருந்தலைவர் திரு. காமராசர் அவர்கள் தலைமையிலே தனியாக இயங்க ஆரம்பித்தது. இன்றைக்கு ஜனாதிபதியாக இருக்கும் மேதகு திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் தலைமையிலே ஆந்திர பிரதேஷ் காங்கிரஸ் கமிட்டி இயங்கியது. மொழிவழியாகப் பிரிந்த பிறகு கூட, 'ஆன் ஏ பிராக்டிக்கல் அப்ரோச்', நடைமுறையிலே எது சரியாக வரும் என்ற உணர்வு ஏற்பட்ட போது, ஆந்திரத்தோடு ஹைதராபாத்தையும் சேர்ந்த பகுதிகள் சேர்ந்துள்ள நிலையில் இன்றைக்கு அநேகமாக 3 பேரிலே 2 பேருக்கு இந்தி தெரியும் என்ற நிலைமை உள்ளது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மஹாத்மா காந்தி அவர்கள் போராடிய நேரத்தில் 'இந்தியா', 'இந்துஸ்தானியா' என்ற பிரச்சினை வந்தபோது அப்போது மஹாத்மா காந்தி அவர்களுடைய கருத்தாக என்ன இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் விளக்க வேண்டும்.



1982 மார்ச் 20]

திரு. க. இராமமூர்த்தி : எனக்கு பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சியிலே இருந்த காரணத் தினாலே அவர் என்னை சுலபமாகக் குறுக்கிட்டு மடக்க முடியாது. ஆனால் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இந்துஸ்தானியா, இந்தியா என்ற நிலைமைக்கு நான் வரவில்லை. இன்றைக்கு உள்ள நிலைமை, இந்தியினுடைய உருவமே மாறுபட்டு, இன்றைக்கு பிற மொழி களுடைய சொற்கள் எல்லாம் கூட அந்த மொழியிலே சுர்க்கப்பட்டு, அந்த மொழியை எவ்வளவு எளிதாக ஆக்க முடியுமோ அவ்வளவு எளிதாக ஆக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் சொல்வதை நகைச் சுவையாக எடுத்துக்கொள்ளலாம்—" கலப்படத்தைக் குறைப்போம். "

திரு. க. இராமமூர்த்தி : கலப்படத்தைக் குறைக்க வேண்டியதுதான். ஆனால் அறிவைப் பொறுத்தவரையில், கலப்படம் இல்லாமல் வளர முடியாது. பிற மொழிகளிலே உள்ள சாத்திரங்களை தமிழ் மொழியிலே மொழி பெயர்த்துத் தர வேண்டும், நம்முடைய மொழியிலிருந்து பிற மொழிகளிலே மொழி பெயர்த்துத் தர வேண்டும். இந்த இரண்டும் தான் முழுமையான அறிவு பெற துணை புரியும். இதற்கென்று நாம் பல்வேறு திட்டங்களைத் திட்டுகிறோம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அறிவிலே கலப்படம் இருக்கக்கூடாது, அறிவிலே பகுத்தறிவு இருக்க வேண்டும். அதுதான் கொள்கை. அறிவிலே கலப்படம் என்பதெல்லாம் நாம் தெரிந்தெடுப்பது. பாலையும் நீரையும் பிரித்துப் பார்க்கவேண்டிய சக்தி வேண்டும் என்று சொன்னால், அதற்குப் பகுத்தறிவு வேண்டும். அப்படித் தெரிந்து, எடுத்துக் கொள்ளும்போது அது நியாயத்தின்பாற்பட்டது மட்டுமின்றி, வாழ்க்கையின் பாற்பட்டதாகவும் ஆகிறது. இந்தக் கலப்படம் வாழ்க்கைக்கு அடிப்படையாக இல்லாமல் வேறாக மாறிவிடுகிறது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு வாதாடி நான் மீள முடியாதோ என்று நினைக்கிறேன். ஆனால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. பகுத்தறிவு 'தேர்ந்தெடுப்பது' என்று ஒத்துக்கொள்கிறேன். ஆனால், மொழியைப் பொறுத்தவரையில், ஒருமொழியின் சாத்திரங்கள் பிற மொழிக்குப் போக வேண்டும் என்பதை மறந்துவிட முடியாது. இன்னொன்று மற்ற மொழிகளைத் தவிர்த்துவிட்டு கலப்பின்றி ஒரு மொழி மட்டும் வளர்த் தால், அது எவ்வளவு கடும் தமிழாக இருந்திருக்கிறது என்பதையும் பார்க்க

வேண்டும். நடைமுறையிலே நாம் எல்லோரும் பேசுகின்ற தமிழ் அது அல்ல. திரு.வி.க. அவர்கள் பேசிய தமிழை என்னாலே புரிந்துகொள்ள முடிகிறது. படிக்க முடிகிறது. ஆனால் எல்லோராலும் முடியுமா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், 'கடும் தமிழ்' என்று ஒரு தமிழ் இல்லை. 'தனித்தமிழ்' என்று ஒன்று இருந்திருக்கிறது. ஆகவே, கடும் தமிழாக இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** அதிலே மாறுபாடு இல்லை. ஏற்றுக்கொள்கிறேன். தனித் தமிழாக மாற்றும்போது, அதை நாமே பயன்படுத்தவில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது--நான் பெயரைச் சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை— இன்றைக்கும் எம்.ஜி.ஆர். என்றுதான் போட முடிகிறது. அதுதான் (popular name) 'பாப்புலர் நேம்.' அதுபோல, அண்ணா அவர்களையும் கடைசிவரையில் சி. என். அண்ணாத்துரை என்றுதான் கையெழுத்திட்டார்கள். அதுதான் முறை. அதுதான் வழக்கம். வழக்கத்தை மாற்ற முடியாது. அதனாலேதான் ஆங்கிலத்தையும் சேர்த்திருக்கிறோம்; அப்படிப் போட்டுவிட்டதாலே அது கலப்படம் என்று சொல்லிவிட முடியாது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** என்னை எம்.ஜி.ஆர். என்று அழைத்தாலும், எம். ஜி. இராமச்சந்திரன் என்று அழைத்தாலும் சரி, இராமச்சந்திரன் என்று மட்டும் அழைத்தாலும் சரி, மக்களுக்கு எது புரிகிறதோ அதுதான். அந்த மக்கள் ஏற்றுக்கொண்டால்தான் நான் எம்.ஜி.ஆர். இல்லாவிட்டால் எம்.ஜி.ஆரும் இல்லை, இராமச்சந்திரனும் இல்லை. மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, 'இந்தி' இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற உணர்வு நியாயமாகவும், உண்மையாகவும் ஒரு காலத்திலே இருந்தது. இன்றைக்கு அந்த நிலைமை இல்லை. இன்றைக்கு இருக்கும் நிலைமையை இந்த அரசு புரிந்துகொள்ளவில்லை என்பதுதான். புரிந்துகொள்ளும் நேரம் உங்களுக்கு வரவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் 1982-ல் இந்திக்காக வாதாடுகிறார். எந்த காங்கிரஸ்காரருக்கும் இதுபற்றி துணிவு இல்லாத இந்த நேரத்திலே காங்கிரசைச் சேர்ந்த அவர் வாதாடிக்கொண்டிருக்கிறார். தயவு செய்து இந்திக்காக வாதாட வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



We are obsessed with certain things'—இந்திக்காக வாதாட வேண்டும் என்பதல்ல. என்னுடைய மாநிலத்திற்காக, என்னுடைய மாநிலத்துக் குழந்தைகளுக்காக நான் வாதாடுகிறேன். இன்றையதினம், எவ்வளவு பேர் இந்தி படிக்காததால் அவதிப்படுகிறார்கள் என்பதை நேரடியாகப் பார்க்க முடிகிறது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** இந்தி கற்றுக்கொண்டால், எல்லாப் பிள்ளைகளுக்கும் வேலை வாய்ப்பை அளிப்போம் என்று இந்தியாவில் இருக்கும் அரசு, பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வாக்குறுதி தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் ஒரு பதில் சொல்ல முடியும். சொன்னால் நன்றாக இருக்காது என்று இதுவரை சொல்லாமல் இருந்தேன். தனியாகப் பேசும்போது பல நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள், எல்லாக் கட்சியையும் சேர்ந்தவர்கள் 'இந்தி இல்லாமல் எவ்வளவு கஷ்டப்படுகிறோம்' என்று என்னிடம் சொல்லும் நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 'இந்தியால் சங்கடப்படுகிறோம்' என்றுதான் ஒருவேளை சொல்லியிருப்பார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் இன்னும் சொல்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் கேட்டதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பதில் சொன்னார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தனிப்பட்ட முறையில் ஒருவர் எங்கேயாவது போய் அங்கே டெலிபோன் டைரக்டரியை எடுத்துப் பார்த்தால், அது இந்தியிலே இருந்தால், இந்த இந்தி புரியாமல் போய்விட்டது, அந்த எண்களைக் கண்டுபிடிக்கக்கூட முடியவில்லை என்று சொல்வது கொள்கை ஆகிவிடக்கூடாது. அது எந்தக் குற்றச்சாட்டுக்கு அடிப்படையாக இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஆட்சியிலே இருப்பவர்கள் இந்தியை எப்படித் திணிக்கிறார்கள் என்ற நிலையிலே பேச உதவியாக அது இருக்கிறதே தவிர, அவர்கள் இந்தியை விரும்புகிறார்கள் என்று ஆகி விடாது என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களுக்கு மறந்துபோயிருக்கும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நினைவு இருக்கும். கட்டாய இந்தியைத்தான் தமிழகம் எதிர்த்தது, ஆனால் இந்தியை எப்பொழுதும்

[1982 மார்ச் 20

(பிற்பகல் 1-20)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல வேளையாக எனக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். கட்டாய இந்தி எதற்காக வந்தது? எந்த அடிப்படையில் கொண்டுவரப்பட்டது? பின்னாலே ஆட்சி மொழியாக ஆக்குவதற்காக. ஆகவே கட்டாய இந்தியை எதிர்த்தார்கள். அதனுடைய அடிப்படை ஆட்சி மொழியாக இந்தி வரக்கூடாது என்பது. இன்னுமொரு மொழி ஆட்சி மொழியாக, ஆங்கிலத்தைத் தவிர, வரக்கூடாது இந்தியத் துணைக் கண்டத்தில் என்று அதற்குப் பொருள்.

**திரு. க. இராமமூர்த்தி :** இதுதான் பொருள் என்றால், * * *

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, இது குறிப்பிலே இருக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். * * * தயவு செய்து எடுத்துவிடுங்கள். பத்திரிகைகளும் வெளியிட வேண்டாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் * * * குறிப்பிட்ட வரிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னைப் பொறுத்த வரையில், இந்தியிலே ஒரு கடுமையைக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதோடு, இந்தி படிக்கக் கூடிய, படிக்க விரும்பக் கூடிய மாணவர்களுக்கு அதற்கான வாய்ப்புகள் அளிப்பதிலே தவறு இல்லை என்பதை இந்த அரசு இப்போது உணரவில்லை என்றாலும்கூட, பின்னாலே உணர்கிறபோது, அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று. இங்கே, இந்தியை ஆதரித்துவிட்டு யார் ஆட்சிக்கு வர முடியும் என்று சொன்னார்கள். நான் அந்த விவாதத்திற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால் ஆட்சிக்கு வருவதற்காக மட்டும் என்பதல்ல, தமிழகத்தினுடைய எதிர்காலத்தை எண்ணி சில நடவடிக்கைகளை எடுக்கும்போது, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே போதிய கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1982 மார்ச் 20] [திரு. க. இராமமூர்த்தி]

இன்னுமொன்று. கல்லூரி ஆசிரியர்களுக்கு எம். ஃபில் (M. Phil.) படிக்க வாய்ப்புகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் எத்தனை பேர் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையைப் பார்க்கும்போது, 100, 200 என்ற அளவிலே கணக்கு வந்து கொண்டிருக்கிறது. ஆகவே எம். ஃபில் படிப்பதனாலே அவர்களுக்குப் பதவி உயர்வுகள், சலுகைகள் கிடைக்கும் என்ற நிலை இருக்கும்போது, படிப்பதற்கான வாய்ப்புகளை நிறைய தேடித்தர வேண்டும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சட்டக் கல்லூரியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசிவிட்டார்கள். நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். சட்டக் கல்லூரியை மூடிவிடுவதே நல்லது என்று எண்ணுகிறேன். காரணம், சட்டக் கல்லூரியில் மற்ற கல்லூரிகளில் நடைபெறுவதைப் போன்று நடைபெறவில்லை. தவறுகள், குறைகள் இருந்தால், அதைக் களைய முடியும். எனக்கு நேரிடையாக வந்து கொண்டிருக்கிற தகவல் அங்கே எப்போது யாருக்குள்ளே சண்டை வந்தாலும், காப்பி அடிப்பதாக இருந்தாலும், சாப்பிடுவதாக இருந்தாலும், படிப்பதாக இருந்தாலும், சொல்லிக் கொடுப்பதாக இருந்தாலும், ஜாதியின் அடிப்படையிலேதான் சண்டைகள் போட்டுக்கொள்வதாகத் தெரிகிறது. நாம் அளித்துக்கொண்டிருக்கும் கல்விக்கு இதைவிடக் கேவலம் வேறு இருக்க முடியாது. சட்டக் கல்லூரி என்பது (Post Graduate Institution) போஸ்ட்-கிராஜுவேட் இன்ஸ்டிடியூஷன். பட்டதாரிகளாக இருந்து மேற்பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் அவர்கள். அப்படிப்பட்ட கல்லூரி இதுபோன்ற கேவலமான நிலைமைக்கு ஆளாகியிருக்கிறது. சாதி அடிப்படையிலே சண்டை போட்டுக்கொண்டு கல்லூரியை மூடிவிட்டு பேரம் பேசிக்கொண்டிருக்கும் நிலையை உருவாக்கியிருப்பது நல்லதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "தயவு செய்து சென்னையிலே இருக்கின்ற சட்டக் கல்லூரியைக் கொஞ்ச காலத்திற்கு மூடிவிடுங்கள்" என்று கல்வியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக கல்லூரியை வேறு இடத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்றால், தென்னாற்காடு மாவட்டத்திற்கு வாருங்கள், உளுந்தூர்பேட்டைக்குப் பக்கத்திலே நிறைய இடம் இருக்கிறது. 100 ஏக்கர் இடத்தை எடுத்து சட்டப் பல்கலைக் கழகத்தை வேண்டுமானாலும் உருவாக்குங்கள். இங்கே தலைநகரிலே இருந்து

கொண்டு கீழ்த்தரமாக படித்த மாணவர்கள்—மாணவர்கள் மட்டும் காரணம் என்று சொல்லமாட்டேன், அதற்கு மேலாக ஒரு சிலர் தூண்டிவிட இரண்டு சாதியின் பெயரைச் சொல்லி—ஒருவரையொருவர் அடித்துக்கொள்வது என்ற நிலை இருப்பது, அதனுடைய விளைவாக கல்லூரி மூடப்படுவது, தேர்வுகள் நடைபெறாத நிலை இருந்து கொண்டிருப்பது நல்லதல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

பல கல்லூரிகளில் தேர்வுகளை சாதியின் அடிப்படையிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மாணவர்கள் மட்டும் காரணமல்ல. கல்லூரி களில் இருக்கின்ற ஆசிரியர்களும் அதற்குப் பொறுப்பாக இருக்கிறார்கள்—எல்லோரும் என்று சொல்லவில்லை, மிகக் குறைந்தவர்கள்—என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அப்படிப்பட்டவர்கள் துணை நின்று தூண்டிவிட்டு சாதிக் கலவரங்களை ஆங்காங்கே திட்டு திட்டாக உருவாக்கிக் கொண்டிருக் கிறார்கள். இதைக் களைய கடுமையான நடவடிக்கை எடுத்தாலொழிய, சாதி உணர்வுகள் தலைதூக்கி பல்வேறு உணர்வுகளை அழித்துவிடுகிற நிலைமையை உருவாக்கும் என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டும்.

நம்முடைய மாநிலத்தில் விளையாட்டுக்களைப் பொறுத்த வரையில், வேகம் காட்டியிருக்கிறோம். பல ஆண்டுக் காலமாக மிகுந்த அளவிலே புறக்கணிக்கப் பட்ட நிலை இருந்தது. இன்றைக்கு விளையாட்டுக்களுக்கு என்று "டைரக்டர் ஆஃப் ஸ்போர்ட்ஸ்" என்ற தனிப் பதவியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பல இடங்களில் போதுமான அளவிற்கு விளையாட்டுத் திடல் கிடையாது. ஆகவே வேகமாக நடவடிக்கைகள் நடைபெற வேண்டும். அதற்குப் பல்வேறு சலுகைகளைத் தர வேண்டும், அந்தத் துறையை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலிடெக்னிக்குகளைப் பொறுத்த வரையில், பெண்களுக்காக தனி பாலி டெக்னிக் வேண்டுமென்று சொன்னார்கள், வரவேற்கிறேன். சேலம்-தர்மபுரி மாவட்டங்களுக்காக சேர்த்து 3 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. திருச்சி மாவட்டத்திலே 3, திருநெல்வேலியிலே 2, இராமநாதபுரத்திலே 5, கோயம்புத் தூரில் 8, பெரியார் மாவட்டத்தில் 2, சென்னையிலே 6, வட ஆற்காடு மாவட்டத்திலே 2, தஞ்சை மாவட்டத்திலே 3, ஆனால் தென்னாற்காடு மாவட்டத்திலே ஒன்றுதான் இருக்கிறது. இதுதான் இன்றைக்குள்ள நிலைமை. பின் தங்கிய மாவட்டத்திலே தொழில் கல்வியைத் தந்தால் பின் தங்கிய மக்கள் வளர முடியும், எங்கே வாய்ப்புகள் குறைவாக



இருக்கின்றனவோ, எங்கே பொருளாதாரச் சுமை அதிகமாக இருக்கிறதோ அங்கே அதை ஆரம்பித்து அந்தப் பகுதிகளை முன்னேற்ற உரிய நடவடிக்கை களை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், பல கோரிக்கைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளில் சில நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்பது நல்லது என்று கருது கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது, பஞ்சப் படியைப் பொறுத்த வரையில், மைய அரசு அறிவித்தவுடனே தமிழக அரசும் அறிவிக்கும் என்று கூறினார்கள். ஆகவே உடனே செய்ய வேண்டும். எப்படியும் கொடுக்கப் போகிறீர்கள், காலம் தாழ்த்தாமல் கொடுப்பது அவர்களை மகிழ்ச்சிக் குள்ளாக்க முடியும் என்பதால் உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே ஈட்டிய விடுப்பு பற்றி ஒரு கோரிக்கையை வைத்திருக் கிறார்கள். 200 நாட்கள் வேலை செய்கின்றபோது 23 நாட்கள் ஈட்டிய விடுப்பு வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கோரிக்கையாக வந்தால்தான் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்பதில்லை. இவைகளை யெல்லாம் சுலபமாகத் தீர்க்க முடியும். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்குப் பதவி உயர்வு மிகக் குறைவு. ஆசிரியராக இருந்து தலைமை யாசிரியராக வரலாம். ஆசிஸ்டென்ட் புரபசராக இருந்து புரபசராக வந்து பிரின்சிபாலாக வரலாம். அந்தச் சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு, பத்தாண்டு கள் தொடர்ந்து பணியாற்றினால், பேராசிரியர் பதவி கொடுக்கப்படும் என்று சொல்லியிருப்பதைப் போலவே 20 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால், இன்னு மொரு பதவி உயர்வு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று சொல்லி பொதுவாக இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பு பல்வேறு முன்னேற்ற எண்ணங்களைக் கொண்டிருக்கிறது என்பதற்காக பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

என்னுடைய வேண்டுகோள் இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் சீராக அமைத்து, கல்வியை வளர்க்க வேண்டும் என்பது. நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், இதிலே இன்னும் கொஞ்சம் தீவிரமாக நடவடிக்கைகளை எடுத்து, இருக்கின்ற நிலைமைகளை உணர்ந்து, அதற்கேற்ற முறையிலே செயல்பட வேண்டும். கல்வித் துறையிலே தமிழகம் சிறந்து இருக்க வேண்டும்.

இந்தியாவிலேயே தலைசிறந்ததாக இருக்க வேண்டும் என்ற அளவுக்குச் செயல்பட வேண்டும், அப்படி அமைத்துக்காட்ட வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையில் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் மாலை 5 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-20)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

மீண்டும், அவை மாலை 5 மணிக்குக் கூடியது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்விதான் நாட்டினுடைய எதிர்கால சந்ததியினரை, நல்ல சமுதாயத்தை உருவாக்கும். ஆகவேதான் தமிழகத்தில் எந்த ஒரு ஆட்சியாக இருந்தாலும், கல்விக்கு அதிக முதலீடு செய்துகொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளில் முதலீடு செய்கின்ற நேரத்தில் லாப நஷ்டக் கணக்குப் பார்ப்பது இயற்கை. ஆனால் கல்வியிலே முதலீடு செய்யும்போது, நாட்டினுடைய வளர்ச்சி, எதிர்கால சந்ததியின் வளர்ச்சிபற்றிதான் அக்கறை கொண்டிருக்கிறோமென்ற காரணத்தாலேதான் அரசாங்கத்தினுடைய மொத்த வருமானத்திலே, செய்கின்ற செலவுகளிலே ஒரு கணிசமான தொகையை கல்விக்காக ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு 291 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். வருவாய்க் கணக்கிலாகும் மொத்தச் செலவான 1,370 கோடி ரூபாயிலே இது 21.3 விழுக்காடாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, 25 சதம், 26 சதம் வரையில் கல்விக்காகச் செலவிட்டிருக்கிறோம். அந்த வகையிலே பார்க்கும்போது, நம்முடைய கல்வி அமைச்சரவர்கள், நிதியமைச்சரவர்களிடமிருந்து வாதிட்டு ஏறக்குறைய 350 கோடி ரூபாய் கல்விக்காகப் பெற்றிருக்க வேண்டிய பணத்தைப் பெறத் தவறி விட்டாரோ என்று நான் எண்ணுகிறேன். அப்படி 291 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்ற பணத்தில் தொடக்கக் கல்விக்காக 132.27 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். அதற்குப் பிறகு இன்றையதினம்



எதிர்கால சந்ததியினரை நல்லமுறையில் உருவாக்க இருக்கின்ற மேல்நிலைக் கல்விக்கு 24.57 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். அதற்கடுத்து கல்லூரிக் கல்விக்கு 29.51 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். அதைப் போலவே தொழில் நுட்பக் கல்விக்கு 13.21 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், எதிர்காலத்திலே நல்ல கற்றறிந்த இளைஞர்கள், பட்டதாரிகள், தொழில் நுட்ப வல்லுநர்கள் இவர்களெல்லாம் உருவாக வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்தில், எத்தனை சதவீதம் இதற்காக ஒதுக்கியிருக்கிறோமென்று கணக்குப் பார்த்தால், கல்லூரிக் கல்விக்கு ஒதுக்கியுள்ள ரூ. 29.5 கோடி என்பது ஏறக்குறைய 2 சதவிகிதம் ; தொழில் நுட்பக் கல்விக்கு ஒதுக்கியுள்ள 13.21 கோடி ரூபாய் என்பது ஏறக்குறைய 1 சதவிகிதம்தான். ஆக எதிர்காலத்திலே நாம் இந்த நாட்டைத் தொழில் மயமாக்குவோம், அதற்கு நல்ல பொறியாளர்களை உருவாக்குவோம், விஞ்ஞானத்தைப் புகுத்துவோம் என்று ஒரு பக்கத்தில் பேசிக்கொண்டு, ஒரு சதவிகிதம்தான் இந்தத் துறைக்குப் பணத்தை ஒதுக்குகிறோமென்பதை எண்ணிப் பார்க்கும்போது, இன்னும் இதில் எந்த அளவிற்குக் கவனம் செலுத்த வேண்டுமென்பதை அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்யும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 2.71 லட்சம் என்றும் பயின்று வரும் மாணவர்கள் எண்ணிக்கை 93.75 என்றும் அமைச்சரவர்கள் புள்ளிவிவரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிட்டுவிட்டு, வயதுத் தொகுதிகளைக் குறிப்பிடும் நேரத்தில், 6 முதல் 11 வயது உள்ள சிறுவர், சிறுமியர்கள் 1973-74-ல் 60.24 லட்சம் என்றும் 1981-82-ல் 67.62 லட்சம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆண்டுக்காண்டு இந்தப் புள்ளி விவரங்கள், வளருகின்ற மக்கள் சமுதாயத்தில் ஏறிக்கொண்டு போவதுதான் இயற்கை. அதுவும் கல்வியிலே அக்கறை கொண்டிருக்கும் அரசாங்கம், அதிலே முழுக் கவனம் செலுத்துவதற்குப் பொருள் உள்ளதென்று அப்போதுதான் புரிந்துகொள்ள முடியும். 11 முதல் 14 வயது வரையில் 1973-74-ல் 27.11 லட்சம் ; 1981-82-ல் 30.43 லட்சம். இதைப் பார்க்கும்போது 27 லட்சத்திலிருந்து 30 லட்சம் என்று வளர்ந்திருக்கிறோம். ஆனால் 14-16 வயதுத் தொகுதியில் பார்த்தால், 1973-74-ல் 22.38 லட்சம் என்று இருந்தது 1981-82லே ஏறியிருப்பதற்கு பதிலாக 17.25 லட்சம் என்று குறைந்திருப்பதற்கு என்ன காரணம் என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. அதைப் போலவே 1981-82-ல் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறோமென்று

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] 1982 மார்ச் 20]

சொல்லி, அமைச்சரவர்கள் ஒரு கணக்கு கொடுத்தார்கள். இடைநிலை ஆசிரியர்கள் 1,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும்; உடற்பயிற்சி ஆசிரியர்கள் 150 பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று மொத்தத்தில் 2,000 பேர்களுக்கு வேலை கிடைக்குமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 40,000-க்கும் மேற்பட்டவர்கள் பயிற்சி பெற்று, எப்போது வேலை கிடைக்குமென்று எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்தில் 2,000 பேருக்கு வேலைவாய்ப்பு என்று சொல்லும் நேரத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு எந்தக் காலத்தில் வேலை கிடைக்குமென்ற எண்ணம் எல்லோருடைய மனதிலும் இருக்கிறதென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இளஞ் சிறார்களுக்குப் பள்ளி செல்லும் மனப் போக்கைப் புகட்ட 4,433 குழந்தைகள் நல மையங்கள் அமைக்கப்படுமென்றும், இதற்கு ஒரு கோடி ரூபாய் செலவிடப்படுமென்றும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி இருந்தாலும் அந்த மையங்கள் அமைக்கப்பட வேண்டியதுதான். 100 கோடி ரூபாய் பகல் உணவிற்காக செலவழிக்கப் போகிறோமென்று சொல்லிவிட்டு, மையங்கள் அமைக்கும் நேரத்தில் 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது எந்த விதத்தில் நியாயம் என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. அதைப்போலவே தொடக்கக் கல்வி—1 முதல் 5 வகுப்புகள்—6 முதல் 11 வயது தொகுதிச் சிறுவர்களில் 94.76 சதவிகிதத்தினரை நாம் பள்ளிக்கு இன்றைக்குக் கொண்டு வந்துவிட்டோமென்று பெருமைப்பட்டுக்கொள்கிறோம். இருந்தாலும்கூட 291 கோடி ரூபாய் செலவு செய்யும் நேரத்திலே கூட இன்னமும் நமக்குத் தெரியாமல் 5.24 சதம் மாணவர்கள் அங்கே மாடுகளை மேய்த்துக்கொண்டு, ஏரிக்கரையில் உலவிக் கொண்டு, மீனவர் சமுதாயத்தில் பிறந்து கடலிலே நீந்திக்கொண்டிருக்கிறார்களென்பதை எண்ணும் நேரத்தில், அது குறைந்தபட்ச சதவிகிதம் என்று சொன்னாலும், கட்டாயக் கல்வி என்று சொன்னாலும், 100-க்கு 1000 என்று சொல்லுமளவிற்கு அந்த எண்ணிக்கையை அடைய முடியவில்லை என்பதை எண்ணும்போது, நாம் அத்தனை பேரும் எடுத்துக்கொள்ளும் முயற்சி இன்னும் வெற்றி பெறவில்லை என்ற கவலை இருக்கிறது. 11 முதல் 14 வயதுத் தொகுதியில் 6 முதல் 8 வரை படிக்கும் மாணவர்கள் 64.55 சதவிகிதம்தான், இன்றையதினம் பள்ளிக்கு வரக்கூடிய வாய்ப்பைத் தந்திருக்கிறோமென்பதை எண்ணும்போது, அந்த சதவிகிதம்கூட இன்னும் கொஞ்சம் உயர்ந்தால்தான், நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு நல்லதென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில், ஆசிரியர்-மாணவர்கள் விகிதாச்சாரம் பற்றிக் குறிப்பிட்ட நேரத்தில், 1 : 39—ஒரு ஆசிரியருக்கு 39 மாணவர்கள்—என்ற



1982 மார்ச் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நிலை இருக்கிறது. ஒரு ஆசிரியர் 39 மாணவர்களுக்குக் கல்வி கற்றுத்தரும் வாய்ப்பை உண்டாக்கித் தந்திருக்கிறார்கள். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கல்வித் துறையில் மாற்றங்களைக் காண வேண்டுமென்று விரும்புகிறார்கள். அடிப்படைக் கல்வியில் அதிகக் கவனம் செலுத்தினால்தான் எந்த லட்சியத்திற்காக இவ்வளவு செலவு செய்கிறோமோ அதை எட்ட முடியும், எனவே குறைந்தபட்சம் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையில் மாற்றி அமைத்தால்தான், அடிப்படைக் கல்வியை நல்லமுறையில் மாணவர்கள் கற்க முடியுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு பக்கத்திலே 10 சதவிகிதத்திற்கு அதிகமான பணத்தை ஆரம்பக் கல்விக்குச் செலவழித்துவிட்டு மூன்றாம் வகுப்புவரை தேர்வு கிடையாது, 4, 5, வகுப்புகளில்தான் தேர்வு என்று சொல்லும்போது, நாம் அதைச் சாதனையாகச் சொல்லிக்கொள்வதில் கருத்து வேறுபாடு இடையாது; ஆனால் அது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் போடும் முதல், நாம் செலவழிக்கும் பணம் மூலம் ஆரம்பக் கல்வியிலே மாணவர்கள் முழுமையான அறிவு பெற்றிருக்கிறார்களா, முழுப் பலன் பெற்றிருக்கிறார்களா என்பதை அரசாங்கம் பார்க்க வேண்டும். 1, 2, 3 ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்குத் தேர்வே இல்லை என்ற நிலையை உருவாக்கினால், குறிப்பாக ஒன்றியப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு நிச்சயமாக படிக்க வேண்டும், பள்ளிக்குப் போக வேண்டும், பரீட்சை எழுத வேண்டும் என்ற எண்ணமில்லாமல் போகுமென்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 5-10)

அடுத்து, நண்பகல் உணவுத் திட்டம்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசு 10 காசும், உள்ளாட்சி மன்றங்கள் 5 காசும் மற்றும் 'கேர்' நிறுவனம் இவை எல்லாம் சேர்ந்து 20 லட்சம் பேர்களுக்கு உணவு அளிக்கும் வாய்ப்பை அளித்திருக்கிறார்கள். அதேநேரத்தில் 100 கோடி ரூபாய் இதற்காகச் செலவு செய்யப் போகிறோம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். அந்த மாணவர்கள் எங்கே இருக்கிறார்கள், எத்தனை சதவிகிதம் பேர் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 'கேர்' நிறுவனத்தின் நடைமுறைகளைப்பற்றி வருத்தமடைந்திருக்கிறார்கள். அவர்கள் தருகின்ற உதவிகளைக் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். 1982-83 ஆம் ஆண்டில் பாதியாக உதவி குறைந்து விடுமோ என்ற கவலையையும் தெரிவித்திருக்கிறார்கள். 100 கோடி ரூபாய் செலவிடும் நிலையில் நாம் கேர் நிறுவனத்திடம் இதற்காக வேண்டுகோள் அல்லது விண்ணப்பம் வைக்க

வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர்கள் கொடுக்கின்ற உதவிகளை நாம் முறையாகச் செலவிட அல்லது பயன்படுத்தக் கூட முயற்சி எடுக்கவில்லை. வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் எல்லாம் மதிய உணவுக் கூடம் அமைத்து அதிலிருந்து உணவைக் கொண்டு போய்க் கொடுக்கிறோம். அதில் தவறு ஒன்றும் நடைபெறவில்லை என்று அமைச்சரவர்கள் சொல்ல மாட்டார்கள். இருக்கின்ற குறைகளைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், அடிப்படை ஊழியர்கள் எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்திருக்கிறார்கள். அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கிவிட்டு டி.இ.ஓ. வுக்குக் கீழே இருக்கிற ஊழியர்களுடைய எண்ணிக்கையை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒவ்வொரு டி.இ.ஓ. வுக்கும் ஒரு உதவியாளரும், ஒரு தட்டச்சரும் என்ற முறையில் பதவி அளிக்கப்பட்டிருக்கிறது. டி.இ.ஓ. அவர்களின் எல்லைக்கு உட்பட்ட பள்ளிகளில் நிர்வாகம் சரியாக நடைபெறுகிறதா என்று பார்க்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் ஒரு உதவியாளரும், இரண்டு இளநிலை உதவியாளரும், ஒரு தட்டச்சரும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், ஓரளவுக்காவது அந்த நிர்வாகத்தைக் கண்காணிக்க முடியும். இன்றைக்கு உயர் நிலைப் பள்ளிகள் 2,168 இருக்கின்றன என்றும், மேல் நிலைப் பள்ளிகள் 1,405 இருக்கின்றன என்றும் ஆக மொத்தத்தில் மேல் நிலைப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் 3,573 இருக்கின்றன என்றும், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் 7 லட்சத்து 13 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள் என்றும், 11, 12 ஆம் வகுப்புகளில் 2 லட்சத்து 75 ஆயிரம் மாணவர்கள் பயில்கிறார்கள் என்றெல்லாம் சொல்லி பெருமைப்பட்டுக்கொள்கிறோம். ஆனால் அவர்களுக்குத் தேவையான அறிவியல் கல்வி எந்த அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் எண்ணிப்பார்க்க வேணும். அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரத்தைப் பார்த்தாலேயே இதுபற்றித் தெரிந்துகொள்ளலாம். அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைக்கும் திட்டத்தின்கீழ் 1,068 பள்ளிகளுக்கு இதுவரை இத்தகைய வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 1,100 பள்ளிகளில் அடிப்படை வசதிகள் கூட இல்லை. அங்கே படித்துக்கொண்டிருக்கிற மாணவர்கள் தான் சென்னை போன்ற நகரங்களில் படிக்கின்ற மாணவர்களோடு போட்டி போட வேண்டிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். சென்னை, கோவை போன்ற நகரங்களில் படிக்கிற மாணவர்களோடு தான் கிராமங்களில் குறைந்த அளவு வசதியுடைய பள்ளிகளில்





படிக்கும் மாணவர்களும் போட்டியிட வேண்டியிருக்கிறது. கிராமங்களில் படிக்கிற மாணவர்கள் விஞ்ஞான அறிவியல் கூட வசதியில்லாமல், ஆய்வுக் கூட வசதியில்லாமல், அடிப்படை வசதி கூட இல்லாமல், விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு சோதனை செய்து பார்க்காமல், தங்கள் படிப்பைப் படிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் சோதனைக் கருவிகளைக் கொண்டு சோதனை கூட செய்து பார்க்காமல், தங்களுடைய புத்தகத்தில் இருக்கும் பாடங்களைப் படித்து விட்டு, வேறு வழியில்லாமல் சென்னை போன்ற நகரங்களில் படிக்கிற மாணவர்களுடன் போட்டியிட வேண்டிய பரிதாப நிலை இருக்கிறது. இன்றைக்கு நாம் தகுதிபற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலை இருப்பது நியாயம் தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சென்னை போன்ற நகரங்களில் படிக்கிறவர்களுக்கு எல்லா வசதியும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் கிராமங்களில் எந்தவிதமான அடிப்படை வசதியோ, விஞ்ஞான அறிவியல் கூட வசதியோ இல்லாத நிலையில் படிக்கின்ற மாணவர்கள் சென்னை போன்ற நகரங்களுக்கு அல்லது கோவை போன்ற நகரங்களுக்கு வந்து மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி அல்லது வேளாண்மைக் கல்லூரி போன்ற படிப்புகளுக்குப் போட்டியிட வேண்டிய நிலை இருக்கிறது. இப்படி மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது, கிராமங்களில் அடிப்படை வசதி ஒன்றும் இல்லாமல் தேறி வருகின்ற மாணவர்களுக்கு என்று தனியாக ஒரு சதவிகிதம் இடத்தை ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எத்தகைய வசதியும் இல்லாமலேயே அவர்கள் நகரங்களில் படிக்கிற மாணவர்களை விட அதிகமாக மதிப்பெண்களைப் பெற்று தேறி வருகிறார்கள். ஆனால் அத்தனை வசதியும் இருந்தும், நகரங்களில் படிக்கிற மாணவர்கள் குறைந்த அளவு மதிப்பெண்களைத் தான் பெறுகிறார்கள். கிராமங்களிலும் நகரங்களில் இருக்கக்கூடிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால், நிச்சயம் நகரங்களில் படிக்கின்ற மாணவர்களை விட முதலிடத்தில் தேறி நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, நாம் தகுதி என்பதை வாதத்திற்காக, விளம்பரத்திற்காக வைத்துக் கொண்டிருக்கிறோமே தவிர, அது தேவையற்ற ஒன்று.

நூலக வசதிபற்றியும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். 1982-83ஆம் ஆண்டு உயர் நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பெருக்க எவ்வளவோ பணம் ஒதுக்கியிருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் 2 ஆயிரத்திற்கு அதிகமான உயர் நிலைப் பள்ளிகள் இருக்க, ஆயிரத்திற்கு அதிகமான மேல் நிலைப் பள்ளிகள் இருக்க, அவைகளின் நூலக வசதிக்காக 2 லட்சம்

ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்பதை நாம் பார்க்கிறோம். உள்ளபடியே நான் கணக்கிட்டுப் பார்த்தேன். ஒரு பள்ளிக்கூடத்திற்கு சராசரி 95 மாணவர்கள் நூலகத்திலிருந்து வாங்கி எந்த அளவுக்கு அவர்களுடைய பொது அறிவை வளர்த்துக்கொள்ள முடியும்? இதை எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்கு நாம் பொது அறிவுபற்றிக் கவலைப்படுகிறோம். இப்படி 100 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம் என்று சொல்லிவிட்டு, நூலகத்திற்காக 2 லட்சம் ரூபாய் ஒதுக்குகிறோம் என்று சொல்வது நியாயமல்ல.

அடுத்து, வெள்ளம், புயல் போன்ற காரணங்களால் பாதிக்கப்படும் கட்டிடங்களுக்கு வசதிபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட பள்ளிகளில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பள்ளிகளில் சரியான கட்டிட வசதி இல்லை. அவை கீற்றுக் கொட்டகைகளில் நடக்கின்றன; அவற்றில் லட்சக்கணக்கான மாணவர்கள் படிக்கிறார்கள். இன்றைக்கு வெள்ளம், புயல் போன்ற காரணங்களால் பாதிக்கப்படும் தமிழ் நாடு முழுவதுமுள்ள பள்ளிகளைப் பழுது பார்க்க 5 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடியே நான் கணக்குப் போட்டுப் பார்த்தால், ஒரு பள்ளிக்கு 500 ரூபாய் தான் வருகிறது. இன்றைக்கு குறைந்தபட்சம் 5 ஆயிரம் ரூபாய் இல்லாமல் ஒரு ஷெட் கூட போட முடியாது. இப்படியெல்லாம் சொல்லிவிட்டு 'இன்றுள்ள சூழ்நிலையில் அரசு உயர் நிலைப் பள்ளிகளுக்கு சகல வசதிகளையும் செய்ய வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 100 கோடி ரூபாய் தேவை' என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் அரசுக்கு ஒன்று சொல்கிறேன். இந்த அரசு இந்த ஆண்டு ஏழைப் பிள்ளைகளின் மதிய உணவுக்காக ஒதுக்கியிருக்கிற 100 கோடி ரூபாய் அப்படியே செலவாகாது. 20 லட்சம் மாணவர்கள் என்கிற அடிப்படையில் பார்த்தால் கூட, 30 கோடி ரூபாய் தான் செலவாகும். மிச்சம் இருக்கிற 70 கோடி ரூபாயும் இந்த வகைக்குச் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை, ஆகவே இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்கிற முடிவை எடுத்திருக்கிறது. அல்லது பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கிறது. இந்த இரண்டு முறையும் தேவைதானா? திடீரென்று 1 : 20 என்கிற விகிதத்தில் ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தைக் குறைக்கின்ற ஒரு கொள்கை முடிவை எடுத்தால், லட்சக்கணக்கான ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள். அப்போது லட்சக்கணக்கான ஆசிரியர்கள் இந்த இரண்டு முறைகளையும் அரசு பின்பற்றினால்,



கிடைக்க மாட்டார்கள். நாம் ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை என்பதற்காக அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்ற ஒரு முயற்சியைக் கைவிடுவது நல்லதல்ல. படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கிற வாலிபர்கள் ஆசிரியர் பயிற்சியை பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஏதோ என் மகன் ஆசிரியர் பயிற்சிக்கு போய்க் கொண்டிருக்கிறான் என்று பெருமைப்பட்டுக் கொள்கிற வாய்ப்பையாவது பெற்றோர்களுக்கு அரசு உண்டாக்கிக் கொடுக்க வேண்டும்

அடுத்து, மேல் நிலைப் பள்ளிகளில் தொழில் பாடங்கள் என்கிற புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மொத்தமுள்ள 2.75 லட்சம் மாணவர்களில் 58 ஆயிரம் பேருக்குத் தான் தொழில் பாடங்களைப் பயில்வதற்குரிய வசதி செய்யப்பட்டிருக்கிறது. வேளாண்மை சம்பந்தப்பட்ட படிப்பு 4 ஆயிரம் பேர்களுக்கும், பொறியியல் தொழில் நுட்பப் படிப்பு 11 ஆயிரம் பேர்களுக்கும் அளிப்பதற்கு வசதி குறித்து, இன்னும் இதுபோன்ற புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நாம் தொழில் பாடங்களுக்கு வசதியும் வாய்ப்பும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லும் அதே நேரத்தில் 2 லட்சத்து 75 ஆயிரம் பேர்களில் 58 ஆயிரம் பேர்களுக்குத் தான் தொழில் கல்வி வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அப்படி என்றால், மற்றவர்கள் வேறு ஏதாவது கல்வியைப் பெறுகிறார்கள் என்று தான் பொருள். நான் இதைக் குறிப்பிடக் காரணம் இந்த சமுதாயத்தில் ஏதாவது ஒரு தொழில் பாடத்தை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்தால் தான், அவன் எதிர்காலத்தில் நல்ல குடிமகனாக, தான் கற்ற கல்வியை வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தக்கூடியவனாக ஆவான். ஏதோ நானும் எஸ்.எஸ்.எல்.சி. அல்லது பிளஸ் 2 படித்திருக்கிறேன் என்று சொல்லி மற்றவர்களோடு சேர்ந்து ஊரிலே, வேலை கிடைக்கவில்லை என்று சொல்லி எல்லோரையும் போல் நானும் வேலையில்லாமல் இருக்கிறேன் என்று சொல்ல முடியும். ஆனால் உள்ளபடியே அவன் படிக்கின்ற படிப்பு பயனளிப்பதாக இருக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 1 லட்சம் பேர்களுக்காவது இந்தத் தொழில் கல்வியை படிக்கக்கூடிய வாய்ப்பினை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-20)

அதுமட்டுமல்ல. இன்றையதினம் பிளஸ்-2 என்று சொல்லும்போது, திரும்பத் திரும்ப கணிதம் படிக்கிறார்கள், விஞ்ஞானம் படிக்கிறார்கள். இல்லையென்று சொன்னால் காமர்ஸ் படிக்கிறார்கள். இப்படி இருக்கிறதே தவிர வேறு புதிய முறையில் அவர்கள் படிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1982 மார்ச் 20

(பிற்பகல் 5-20)

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், 14 முதல் 18 வயது குரூப்பிலே இருப்பவர்களை எடுத்துக்கொண்டால், இந்த வயதிலே வெளி நாடுகளிலே இருப்பவர்களைப் பார்த்தால், நான் சென்ற நாடுகளிலே குறிப்பாக ஜப்பானிலே 14 வயது மாணவன் டிரான்சிஸ்டர் செய்கிறான், 18 வயதிலே அவன் டி.வி., மற்றும் கேமராக்கள் போன்றவைகளைச் செய்கிறான். அந்த அளவுக்கு அறிவாற்றல் படைத்தவர்களாக நம் நாட்டிலே மாணவர்கள் இல்லை என்றால், நம் மாணவர்கள் போதுமான அளவுக்கு அறிவாற்றல் பெற்றவர்களாக இல்லை என்பதல்ல, அவர்களுக்கு அதற்கான பயிற்சிகள் அளிக்கப்படவில்லை. 10 வது படிப்பை முடித்துவிட்டு ப்ளஸ் 2 வுக்கு வரும்போது அவன் எந்தத் துறைக்குப் போக விரும்புகிறானோ அந்தத் துறைக்கான பயிற்சியை அளிக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொன்னால், அவன் டாக்டராக வேண்டும் என்று சொன்னால் பயாலஜி, அனாட்டமி போன்ற பாடங்களை அங்கேயே சொல்லிக்கொடுக்கலாம். பின்னர் அந்த மாணவர் மருத்துவத் துறைக்குப் போகும்போது, இதன் துணைகொண்டு அங்கே அவன் நல்லமுறையில் பயிற்சி பெற முடியும். அல்லது எஞ்சினியரிங் கல்லூரிக்குப் போக வேண்டும் என்று விரும்பும் மாணவனுக்கு திரும்பத் திரும்ப விஞ்ஞானப் பாடமும், கணக்குப் பாடமும் சொல்லிக்கொடுப்பதைவிட, அடிஷனல் சப்ஜெக்ட் என்று சொல்லி எஞ்சினியரிங் கல்லூரியிலே முதலாண்டிலே என்ன பாடத்தை படிக்கிறார்களோ அந்தப் பாடத்தை அங்கேயே அந்த மாணவனுக்கு வைத்தால் அதை நல்லமுறையிலே படித்துக்கொண்டு பின்னர் முன்னேற வாய்ப்பாக இருக்கும். இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாடத் திட்டத்தை மாற்றியமைக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மேல் நிலைப் பள்ளிகளில் போதுமான அளவுக்கு ஆய்வுக் கூடங்கள் இல்லை என்று சொல்லும்போது, அந்தக் குறையைப் போக்க கடந்த மூன்றாண்டுகளிலே 10 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம். ஆனால் 1981-82 ஆம் ஆண்டு இதற்கென்று 1.68 கோடி ரூபாய் தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, இந்த வேலைகள் எல்லாம் எப்போது முடிவு பெறும் என்ற ஐயம் வருகிறது. எழுத்தறிவு பெற்றவர்களுடைய எண்ணிக்கையைப் பார்த்தால், முன்பெல்லாம் சொல்வதற்கு நாம் பெருமைப்பட்டுக் கொள்வோம். 1971 ஆம் ஆண்டிலே ஆண்கள் 51.78 சதவீதம் பேர் படித்தவர்கள் இருந்தார்கள். பெண்கள் 26.36 சதவீதம் பேர் என்ற அளவிலே படித்தவர்களுடைய எண்ணிக்கை இருந்தது. 1981-லே படித்தவர்களின்



1982 மார்ச் 20] (திரு. ஆற்காடு நா. வீராசாமி)

எண்ணிக்கையைப் பார்த்தால், ஆண்களின் எண்ணிக்கை 57.19 சதவீதம் என்ற அளவிலே உயர்ந்திருக்கிறது. அது மொத்தத்தில் 5.41 சதவீதம் தான் உயர்ந்திருக்கிறது தமிழ் நாட்டில். நாம் இந்தியாவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் சொல்லிக்கொண்டிருப்பதெல்லாம் நாம் கல்விக்காக மானியம் வேண்டும் என்று கேட்கும்போது, நாம் தான் இந்தியாவிலேயே கல்வித் துறையிலே மிகவும் வளர்ச்சியடைந்துவிட்ட மாநிலம், ஆகவே, தமிழ் நாட்டுக்கு மானியம் கிடையாது என்று மத்தியிலே இருப்பவர்கள் சொல்லும் நிலைமை இருக்கிறது. ஆனால் உண்மையான நிலைமை என்னவென்று பார்த்தால், 1971-லே இந்தியாவினுடைய மொத்தத் தொகையின் சராசரியைப் பார்த்தால், 31.51 சதவீதமாக இருந்தது. 1981-லே 47.74 சதவீதமாக உயர்ந்தது. அதாவது எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறோம் என்று சொன்னால், நாம் 5.41 சதவீதம் தான் உயர்ந்திருக்கிறோம். ஆனால் அகில இந்திய அளவிலே ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி 7.23 சதவீதம். இந்த நிலைமைக்கு யார் பொறுப்பு ? நாம் இதற்காக எவ்வளவு தொகை செலவழிக்கிறோம் ? இந்தியாவிலேயே நாம் தான் முன்னணியில் இருக்கிறோம் என்று சொல்லி, நாம் பெருமைப்பட்டுக்கொள்கிறோம். ஆனால் அகில இந்திய அளவிலே போட்டியிடும்போது, நம்முடைய தரம் குறைந்திருக்கிறதே. அதற்கு யார் காரணம் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கண்டுபிடித்து அதற்குப் பரிகாரம் காண தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையிலே இப்படிப் பேசுவதற்குக் காரணம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே கொஞ்சம் அதிகமாகக் கவனம் செலுத்தக்கூடியவர்கள். அமைச்சரவையிலேயே தனக்கென்று இருக்கின்ற இலாக்காவின் வேலைகளோடு நின்று வேலைசெய்பவர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அதைப் போலவே அவருடன் அந்தத் துறையிலே இருக்கும் அதிகாரிகளும் இதிலே மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு வேலை செய்கிறார்கள். கல்வி என்று வரும்போது, பொதுவாக அதிலே வரும் பிரச்சினைகள் சமுதாயப் பிரச்சினைகளாக இருப்பதால், அதிலே அதிகமான அளவிலே குறைபாடுகளைக் காண விரும்பாவிட்டாலும் கூட, இருக்கின்ற குற்றங்களை எடுத்துச் சொல்வது இந்தத் துறை மேலும் திறமையாக, சிறப்பாகச் செயலாற்ற உதவும் என்பதால் சொல்கிறேன். கல்லூரிக் கல்வியை 1 இலட்சத்து 76 ஆயிரத்து 100 பேர்கள் படிக்கிறார்கள் என்று சொல்லும்போது, 180 கல்லூரிகளிலேயிருந்து அவர்கள் பட்டதாரிகளாக ஆகி வெளியே வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லும்போது, இந்தக் கல்லூரிகள் எல்லாம் சென்னைப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதி தாசன் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களோடு இணைக்கப்பட்டு நல்ல தரமான

கல்வியைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன், இப்போது பல்கலைக் கழகங்களிலே துணைவேந்தர்களை நியமிக்கிறோம். துணைவேந்தராக யாரை வேண்டுமானாலும் அரசாங்கம் நியமிக்கலாம். அரசாங்கத்திலே, கல்வித் துறையிலே மிகச் சிறந்த முறையிலே பணியாற்றக் கூடிய வல்லுநர்கள், அவர்கள் இயக்குநர்களாக இருந்தாலும். எந்தத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அதாவது டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன் என்று இருந்தாலும், டைரக்டர் ஆஃப் காலேஜியேட் எஜுகேஷன் என்று இருந்தாலும், யாராக இருந்தாலும், அவர்கள் எல்லாம் ஊக்குவிக்கப்பட்டால்—இப்போது யார் எல்லாம் இருக்கிறார்கள் என்று எண்ணிப்பார்த்து நான் சொல்லவில்லை—அவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட பதவிகளுக்கு வருவதற்கு, பல்கலைக் கழகத் துணை வேந்தர்களாக வருவதற்கு வாய்ப்பு அளிக்கும் நிலை வந்தால், அவர்களும் தங்களுடைய பணியை இன்னும் செம்மையாகச் செய்து, அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்புக்களிலே குற்றங்குறைகள் இல்லாமல் பணியாற்றும் நிலைமைகள் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கம் மாறலாம். ஆனால் நல்ல சிறந்த கல்வியாளர்கள், கல்வி அறிஞர்கள் அந்தத் துறையிலே பணியாற்ற வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு ஒரு உற்சாகத்தைக் கொடுப்பது என்பது எதிர்கால சமுதாயத்தை நல்லமுறையில் நாம் உருவாக்குவதற்குத் துணைபுரியும். ஆகவே, இதிலே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாடத் திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும்போது, எனக்குத் தெரிந்த ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகம் இருக்கிறதே அது நல்ல வரலாறு படைத்தது. 100 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. ஆனால் அங்கே. சொல்லிக்கொடுக்கப்படும் சப்ஜெக்ட்களைப் பார்த்தால், ஒரு சப்ஜெக்ட் என்று எடுத்துக்கொண்டால், 'எக்னாமிக்ஸ்' என்று பார்த்தால், ஒரு 100 ஆண்டுகளுக்கு முன்னாலே என்ன பாடத் திட்டங்களை வைத்தார்களோ அதையேதான் இப்போது வைத்துக்கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. அதிலே எந்தவிதமான புதுமையும் புகுத்தவில்லை. அந்தத் துறையிலே படிக்கும் மாணவர்கள்கூட இதையே சொல்கிறார்கள். ஆனால் டெல்லி யூனிவர்சிட்டியை எடுத்துக்கொண்டால், டெல்லி யூனிவர்சிட்டி என்று சொல்லும்போது நாம் அதை சாதாரணமாக மதிக்கிறோம். அது இப்போதுதான் வந்தது, அதற்கு அனுபவம் கிடையாது, அங்கே இருப்பவர்கள் எல்லாம்



திறமையற்றவர்கள் என்றெல்லாம் நினைக்கிறோம். ஆனால் டெல்லி யூனிவர்சிட்டியிலே ஏற்பட்டிருக்கும் டெவலப்மென்டைப் பார்த்தால், நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய டெவலப்மென்டைவிட மிகவும் சிறப்பாக இருக்கிறது. அவர்கள் அதிக அளவிலே வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். புதியவைகளைக் கண்டுபிடிக்கிறார்கள், கண்டுபிடிக்க அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட செய்திகள் அவர்களைப்பற்றி வந்துகொண்டிருக்கும்போது, நாம் நம்மைப்பற்றி வெறுமையான அளவிலே பெருமைப்பட்டுக்கொண்டு எங்கே ஏமாந்து விடுவோமோ என்றுதான் நான் அச்சப்படுகிறேன். இன்னொன்றையும் கேள்விப்பட்டேன். இப்போது இருக்கின்ற பாடத்திட்டங்களிலே மாற்றம் செய்ய வேண்டும் என்பதற்காக 'ரிஸ்ட்ரக்சர் ஆஃப் பேட்டர்ன்' என்ற அளவிலே கொண்டு வருவது என்றும், அதிலே பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.காம். போன்ற பாடத் திட்டங்களிலே மாற்றம் கொண்டு வரவிருப்பதாகவும் அறிந்தேன். பி.காம் என்று சொன்னால், அதிலே 'அக்கவுண்டென்சி' யும் பி.எஸ்ஸி. என்று சொன்னால் 'பிசிக்ஸ், கெமிஸ்ட்டிரி, நேச்சுரல் சயன்ஸ், அல்லது ஜுவாலஜி' போன்ற இப்படிப்பட்ட பிரிவுகளிலே ஏதாவது ஒன்றை மெயின் சப்ஜெக்டாக வைக்க வேண்டும். அதிலே மாணவன் திறமையான அறிவு பெற்று தேர்ச்சிபெற வேண்டும் என்ற நிலைமை வர வேண்டும். பி.காம். என்று எடுத்துக்கொண்டால், அதிலே மெயின் சப்ஜெக்ட் அக்கவுன்டென்சி என்று எடுத்துக்கொண்டால், அதிலே சிறப்பான முன்னேற்றம் காண வாய்ப்பு ஏற்படும். இப்போது கொண்டுவரவிருக்கும் பாடத் திட்டத்தில் 3 பாடங்கள் இருக்கும் என்றும், அந்த 3 பாடங்களையுமே கட்டாயமாக மெயின் சப்ஜெக்ட்களாக வைக்கப் போவதாகவும் நான் கேள்விப்பட்டேன். எப்படி கொண்டு வந்தாலும், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன், எந்தெந்தப் பகுதிகளிலே எப்படிப்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள், அங்கே என்னென்ன தொழில்கள் இருக்கின்றன என்ற வகையிலே பார்த்து, நம்முடைய தமிழகத்தை 4 பகுதிகளாகப் பிரித்து, கோவை, தர்மபுரி, சேலம் என்று சொன்னால், அந்தப் பகுதியிலே இருக்கும் பள்ளிகளிலே உள்ள மாணவர்கள் படிப்பதற்கு அந்தப் பகுதியிலே இருக்கும் தொழில் சம்பந்தமாக உள்ள ஒரு சப்ஜெக்டை ஆன்சிலரியாகவோ அல்லது அடிஷனல் சப்ஜெக்டாகவோ இணைத்து அப்படிப்பட்ட பாடத்தைத் தருவது தான் பொருத்தமே தவிர, எல்லாப் பாடங்களுமே மெயின் சப்ஜெக்ட் என்ற வகையிலே வர வேண்டும் என்று நினைத்தால், அது மாணவர்களுக்கு எதிர் காலத்திலே மிகவும் சுமையாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1982 மார்ச் 20

சுயாட்சி உரிமை தரப்பட்ட கல்லூரிகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 13 கல்லூரிகளுக்கு அந்த உரிமை தரப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக சட்டமுன்வடிவு வந்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொன்னேன். இருக்கின்ற கல்லூரிகளிலேயே பச்சையப்பன் அறக்கட்டளை யால் நிர்வகிக்கப்பட்டு, பழங்காலத்திலேயிருந்து அதிலேயும் பிராமணர் அல்லாதவர் என்று சொல்லப்படும் ஒரு கல்லூரி நல்ல முறையிலே நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக சிறந்த முறையில் நடந்துவருகிறது. அந்தக் கல்லூரிக்கு அந்தத் தனித்தன்மையைக் கொடுக்க வேண்டும் என்று சொன் னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வாக்குறுதி தந்தார்கள். இந்த ஆண்டு இல்லை, இருந்தாலும் அடுத்த ஆண்டு இதைப்பற்றி கவனிக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இதுநாள் வரையிலே அப்படிப்பட்ட தன னாட்சி உரிமை கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சுயாட்சி உரிமை கோரும் கல்லூரி கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அவர்களுடைய விருப்பத்தை ஒரு திட்டமாக பல்கலைக் கழகத்திற்கும், அரசுக்கும் தர வேண்டும். அந்த அடிப்படையில் தான் இந்த அரசு ஆதாரவைத் தர முடியும். அப்படிப்பட்ட ப்ரப்போசல்ஸ் வந்ததாக எனக்குத் தெரியவில்லை. வந்திருந்தால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

(பிற்பகல் 5-30)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட புரபோசல் வரவில்லையென்று சொன்னார்கள். இப்போது அங்கே இருப்பது எலெக்டெட் பாடியல்ல. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் தான் அங்கே இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படிப் பார்த்தால், எல்லா அரசுக் கல்லூரிகளுக்கும் நாங்கள் தான் மேனேஜ்மென்டாக இருந்து கொண்டிருக்கிறோம். அநத அடிப்படை யிலே அனுப்பப்படுவதில்லை. ஆங்காங்குள்ள கல்லூரிகளின் தலைவர்கள் புரபோசல் அனுப்ப வேண்டும். கல்லூரித் தலைவர்தான் தன்னாட்சி உரிமைப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர் எந்த அளவிற்குத் தயாராக இருக்கிறார், கல்லூரி தகுதியுடையதாக இருக்கிறதா என்பதைப் பொறுத்து இருக்கிறது அது. அவர் திட்டம் தயாரித்து அனுப் பினால் பரிசீலிப்பார்கள். அப்படித் தயாரித்து அனுப்பி, யாரும் மறுத்த தாகத் தெரியவில்லை. அப்படி அனுப்பியிருந்தால், அந்தக் கல்லூரிகளுக் குத் தன்னாட்சி உரிமை வழங்கத் தயாராக இருக்கிறோம்.



1982 மார்ச் 20]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கவனிப்பதாகச் சொல்லுவதால், அதை நான் வலியுறுத்திப் பேசவில்லை. அது கவனிக்கப்பட வேண்டிய கல்லூரி. அண்ணாவின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிற நாம் அவர் படித்த கல்லூரியை நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணமாகத்தான் இதைக் குறிப்பிட கடமைப் பட்டிருக்கிறேன்.

மாலை நேர வகுப்புகளில் பயிலுவோர்களின் எண்ணிக்கை எட்டாயிரம் என்று சொல்லுகிறார்கள். இது 15 ஆயிரமாக உயர்ந்தால் நல்லதுதான். அப்போது படித்த சமுதாயம் நாட்டிலே வளர்ந்து கொண்டிருக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்ளலாம். ஆனால் மாலை நேர வகுப்புகள் எப்போது துவங்கப்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு பச்சையப்பன் கல்லூரியில் டிசம்பர், சனவரி மாதத்தில் மாலை நேர வகுப் புகளில் மாணவர்களைச் சேர்த்திருக்கிறார்கள். இந்த ஏப்ரல் மாதத்தில் முதலாவது ஆண்டுத் தேர்வு எழுத வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாணவர்களை எப்போது வேண்டுமானாலும் சேர்க்கலாம் என்ற நிலை ஏற் பட்டால், மாலை நேர வகுப்புகளில் சேர்வதில் எந்தவிதமான பொருளும் இல்லை. ஜூன் மாதத்தில் கல்லூரிகள் திறக்கப்படுகின்றன என்றால், அதிக பட்சம் ஜூலை மாதத்திலாவது மாலை நேர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஓராண்டில் மாலை நேர வகுப்புகள் எப்போது வேண்டுமானா லும் ஆரம்பிக்கலாம், யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் சேரலாம் என்ற போக்கு கல்லூரிகளில் இருக்கக் கூடாது என்பதைத் தெரி வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே கல்லூரிகளில் இருக்கக் கூடிய இடங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கிராமப் புறங்களில் உள்ள கல்லூரிகளில் பத்தா யிரம் இடங்கள் கடந்த ஆண்டு காலியாக இருந்தன, மாணவர்களே வர வில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் ஆங்கிலப் பாடமொழி வகுப்பில் 7,350 இடங்களும், தமிழ் பாடமொழி வகுப்பில் 2,600 இடங்களும் காலியாக இருந்தன என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பார்க்கும் போது, பத்தாயிரம் இடங்கள் காலியாக இருந்தன என்று தோன்றுகிறது. ஆனால் சென்னை போன்ற இடங்களில் பல மாணவர்கள் கல்லூரிகளில் சேர இடம் இல்லாமல், கல்லூரிப் படிப்பு படிக்க வாய்ப்பு இல்லாமல் நின்று விடு கிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள கல்லூரிகளில் ஏன் பத்தாயிரம் இடங் கள் காலியாக இருந்தன என்று பார்த்தால், கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய மாணவர்கள் எதை விரும்புகிறார்களோ அந்தப் படிப்பு அந்தக்

கல்லூரிகளில் இல்லை. செய்யார் என்பது மேஜர் பஞ்சாயத்து. செய்யாரில் ஒரு கல்லூரி இருக்கிறது. அதிலே வெறும் சயன்ஸ் சப்ஜெக்ட் மட்டும் வைத்திருந்தால் காலியாகத்தான் இருந்திருக்கும். அங்கே பி.காம்., எம். காம்., வகுப்புகள் இருந்திருக்கின்றன. இதனுடைய விளைவு சென்னையில் இருக்க கூடியவர்கள் செய்யார் சென்றிருக்கிறார்கள். கோவையில் உள்ளவர்கள் கூட பி. காம்., எம்.காம். படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணமாக விண்ணப்பம் போட்டு செய்யாறுக்குச் சென்றிருக்கிறார்கள். மாணவர்கள் பி.காம்., எம்.காம்., போன்ற படிப்பைப் படிக்க விரும்புகிறார்கள். அந்தப் படிப்பு கிராமப்புறங்களில் உள்ள கல்லூரிகளில் இருந்திருந்தால், இடங்கள் காலியாக இருந்திருக்காது. அதற்கான நடவடிக்கையை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், சயன்ஸ் சப்ஜெக்ட் என்றால் லெபாரட்டரி வேண்டும். காமர்ஸ் சப்ஜெக்ட்டுக்கு அப்படி ஒன்றும் தேவையில்லை. பி.காம்., எம்.காம்., போன்ற படிப்பைப் படித்து விட்டு வந்தால் இன்றைக்கு வேலை சுலபமாகக் கிடைக்கிறது. நம்முடைய நாட்டில் படிக்கிறவர்கள் பெருமைக்காகவா படிக்கிறார்கள்? தங்கள் பெயருக்குப் பின்னால் பி.ஏ., பி.காம். என்று போட்டுக்கொள்ளவா படிக்கிறார்கள்? தங்கள் பிள்ளை பட்டம் பெற்றால், எதிர்காலத்தில் பட்டினி இல்லாமல் வாழ்வான் என்று கருதித் தான் நூற்றுக்கு 90 பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். அவன் படித்த படிப்பினால் அவனுக்குப் பயன் இல்லாமல் இருக்குமானால், அதற்குப் பிறகு இந்த நாட்டிலே நக்சலைட்டுகள் தோன்றுகிறார்கள். ஆகவே படிக்கின்ற படிப்பு வாழ்க்கையில் பயன் உள்ளதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட முறையில் நம்முடைய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். இனிமேல் பி. ஏ., பி. எஸ்ஸி. படித்துப் பயன் இல்லை. ஏற்கெனவே ஒரு இலட்சத்திற்கு அதிகமானவர்கள் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பதால், அவர்களுக்கு மாதந்தோறும் 50 ரூபாய் தருகிறோம். அது கூட, அதற்காக உள்ள விதிமுறையின் காரணமாக பத்தாயிரம் பேருக்கு மேல் வாங்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே படித்தால் மட்டும் போதாது, படித்த படிப்பு பயனுள்ளதாக இருக்க வேண்டும்.

நம்முடைய தகுதியைப்பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்கிறோம். எனக்கு அதிலே கருத்து வேறுபாடு இல்லை. மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது, நம்முடைய கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறது என்பதை நான் மறுக்க விரும்பவில்லை. ஆனால் தரம் எப்படிப் பயன்படுகிறது என்று



சிந்திக்கிறோமா? உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். இங்கே அரசியல்வாதிகள் இருக்கிறார்கள், அவர்களுக்கு அனுபவம் இருக்கும். பி.ஏ., படித்துவிட்டு மாணவர் ஒருவர் வேலை தேடி வந்தால், ஒரு விண்ணப்பம் எழுதிக் கொடு என்றால், விண்ணப்பம் சரியாக எழுதத் தெரியாமல் இருக்கிறார்கள். விண்ணப்பம் எழுதத் தெரியாமல், பி.ஏ., பட்டம் வாங்கிக் கொண்டு வந்தால், அதனால் என்ன பயன் என்பதைச் சிந்திக்க வேண்டும். கல்லூரியில் மூன்று ஆண்டுகள் படித்துவிட்டு வருகிறவனுக்கு விண்ணப்பம் எழுதத் தெரியவில்லை என்றால், அவன் பி.ஏ., பி.எஸ்ஸி., படித்துத்தான் என்ன பயன்? ஆகவே அடிப்படைக் கல்வியில் அரசு கவனம் செலுத்த வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படையையாவது கற்றுக் கொடுக்கிறோமா என்று பார்த்தால், இல்லை. ஆகவே அடிப்படையானவற்றைக் கற்றுக் கொடுக்க வேண்டிய முயற்சிகளை கல்வித் துறை எடுக்க வேண்டும். அதற்கேற்றாற் போல் பாடத்திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும். ஆங்கிலத்திற்கு என்று ஒரு பீரியட் வைத்து, வாரத்தில் 4 நாட்கள் ஆங்கிலம் படிக்கப் போ என்று சொல்லி, ஆங்கிலப் பாடப் புத்தகத்தைப் படித்துவிட்டு, அதை அப்படியே மனப்பாடம் செய்து கொண்டு வந்து தேர்வு எழுதிவிட்டு, அதிலே 45 மார்க் வாங்கினால் பாஸ் என்று சொல்லுவதை விட, அந்த நான்கு நாட்களில் ஒரு நாள் எதிர்காலத்திற்குத் தேவையான விண்ணப்பம், கடிதம், வியாபாரத் துறைக்குத் தேவையான கடிதம் ஆகியவற்றை எழுதும் பொது அறிவை வளர்க்கும் அளவிற்கு பாடத் திட்டங்களை மாற்றியமைக்க கல்வித் துறை சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அருமை நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சட்டக் கல்லூரியைப் பற்றிச் சொன்னார்கள். பொதுவாக இன்றைய தினம் கல்லூரிகளில் உள்ள ஊழல்களைப்பற்றி அதிகமாகப் பேசாததற்குக் காரணம், அது எல்லோருக்கும் தெரியும் என்பதுதான். எந்தக் கல்லூரியாக இருந்தாலும், கல்லூரி என். நர்சரிப் பள்ளியாக இருந்தாலும் கூட, பணம் இல்லாமல் இடம் கிடைக்காது என்ற நிலை இருக்கிறது. கல்லூரிகளில் ஊழல், பணம் வாங்குகிறார்கள் என்று சொல்லுவதை விட அதிலே உள்ள குழப்பங்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சட்டக் கல்லூரியில் எவ்வளவு குழப்பங்கள் இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். எப்போது வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன? மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி, சட்டக் கல்லூரியில் சாதிக் கலவரம் இருப்பதால், "அதை எங்கள் ஊருக்கு மாற்றுங்கள், நான் வேண்டுமானாலும் 100 எக்கர் தருகிறேன்" என்றார்.

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, நான் நிலம் தருகிறேன் என்று சொல்லவில்லை. எங்கள் ஊருக்குப் பக்கத்திலே உளுந்தூர்பேட்டையில் காடு இருக்கிறது. அங்கே வைக்கலாம் என்றேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : சட்டக் கல்லூரி மாணவர்களைக் காட்டுக்கு அனுப்பத் தயாராக இருக்கிறார்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினர், கலவரம் இல்லாமல், எப்படிப் பார்த்துக்கொள்வார் ?

திரு. க. இராமமூர்த்தி : கலவரம் இல்லாமல் பார்த்துக்கொள்ள முடியும். கலவரப்படாமல் மாணவர்கள் இருக்க வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : கல்லூரியைத் திறப்பதிலே அரசாங்கம் ஏன் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள் ? மாணவர்களுக்கு இன்டர்வியூ நடக்கிறது. இப்போதெல்லாம் அதிலே மெரிட் என்கிறார்கள். மெரிட்படி இன்டர்வியூ நடத்தினால் கூட, அதிக பட்சம் 15 நாட்கள் போதும். ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குள்ளே பொறியியல் கல்லூரியிலே மாணவர்களைச் சேர்த்துவிடுகிறார்கள். எந்தக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கிறார்களோ இல்லையோ, பொறியியல் கல்லூரியில் மாணவர்களை உரிய காலத்தில் சேர்த்து விடுகிறார்கள். ஆனால் சட்டக் கல்லூரியில் மட்டும் தாமதம் ஏன் என்று தெரியவில்லை. சட்டக் கல்லூரியில் பெரிய சட்டங்களை விவாதித்தா மாணவர்களைச் சேர்க்கிறார்கள் ? சட்டக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால், ஒரு மாத காலம் சட்டக் கல்லூரியே நடைபெறவில்லை. அது மட்டுமல்லாமல், போராட்டங்கள் நடைபெறுவது என்பது அதிகமாக வளர்ந்து வருகிறது. இதெல்லாம் சமுதாயத்திற்குச் செய்கிற நன்மையாக இருக்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் நுட்பக் கல்வியைப் பொறுத்த வரையில், பொறியியல் கல்லூரிகளில் 17,400 இடங்களை டிப்ளமா படிக்க வாய்ப்பு உண்டாக்கித் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல, இந்த அரசாங்கம் தன்னுடைய வருமானத்தில் ஒரு சதவீதத்தைத்தான் தொழில் நுட்பக் கல்விக்காகச் செலவழிக்கிறது என்பதை நினைக்கும்போது நான் வேதனைப்படுகிறேன்.



(பிற்பகல் 5-40)

நம்முடைய நாட்டு மக்கள் விஞ்ஞான ரீதியாக வளர வேண்டுமென்று நாம் நினைக்கும்போது, குறைந்தபட்சம் மூன்று தாலுக்காக்களுக்கு ஒரு பாலிடெக்னிக்கையாவது ஏற்படுத்த வேண்டும். பிளஸ் டூவில் கவனம் செலுத்துவதை விட இதில் கவனம் செலுத்தினால், நாட்டு மக்களுக்குப் பயன்படும். பாலிடெக்னிக்குகளில் படித்துவிட்டு என்ஜினியரிங் டிப்ளமா பெற்று, சிவில் என்ஜினியரிங் டிப்ளமா-ஹோல்டர் என்று வரும்போது சுலபமாக வேலை கிடைக்கும். இதைப் போன்று எத்தனையோ துறைகள் இருக்கின்றன. இப்போது சென்னையிலே ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் டி.வி. யை வைத்திருக்கிறார்கள். அதிலே பயிற்சி கொடுத்து ஒரு ஆயிரம் பேரை அனுப்பினால், அதைப் படித்த வாலிபர்களுக்கு உடனே வேலை கிடைக்கும் நிலையை உருவாக்க முடியும். ஆகவே பிளஸ் டூவில் அதிகக் கவனம் செலுத்துவதைவிட மூன்று தாலுக்காக்களுக்கு ஒரு பாலிடெக்னிக்கை ஏற்படுத்தி அதற்காக பணம் செலவழித்தால், உண்மையிலேயே இந்த நாட்டின் வளர்ச்சிக்காகச் செய்த முதலீடாக அமையும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். அப்படிப்பட்ட முறையிலே இதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாம் வளர்ந்துகொண்டிருக்கிறோம். கல்வித் துறையும் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்துகொண்டிருக்கிறது. பொறியியல் துறையில் போஸ்ட் கிராஜுவேட் படிப்புகள் எல்லாம் வருகின்றன. அந்தப் படிப்புகளுக்காக, பட்ட மேற்படிப்பு வகுப்புகள் பொறியியல் கல்லூரிகளில் தொடங்கப்பட இருக்கின்றன. அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி, காரைக்குடியில் நுண் அலை மற்றும் ஒளி அலை பொறியியல் (Microwave and optical Engineering) அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர், செயல்முறை வேதியியல், அப்ளைட் கெமிஸ்ட்ரி பற்றியது அதுபோலவே கோயம்புத்தூர் தொழில் நுட்ப நிறுவனம், கோயம்புத்தூரில் கணக்கிட்டுப் பொறி சார்ந்த வரைவு வடிவமைப்பு பற்றிய படிப்பு (Computor Aided Design of structures) என்று பல பி.ஜி. கோர்ஸ்களை எல்லாம் அறிவித்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட பல்வேறு பட்டப்படிப்புகளை இன்றைக்குத் தொடங்குகிறோம். அந்தப் படிப்பைப் படித்த பிறகு, அவர்களுடைய நிலை என்ன, அவர்களுக்கு என்ன திட்டம் இருக்கிறது என்ற கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பட்டங்களைப் பெற்றுவிடுகிறார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இவ்வளவு மூலதனத்தைப் போட்டு இந்தப் படிப்புகளைத் தொடங்குகிறோம். அந்தக் கல்வியை இந்த நாட்டிற்குப் பயன்படுத்த என்ன திட்டங்கள் வைத்திருக்கிறார்கள்? இந்தத் திட்டங்களை உருவாக்குவதிலே நாம் பெருமை பேசிக்கொண்டிருக்கிறோம். இந்தப் புதிய பாடத் திட்டங்களில் பயிற்சிபெற்று வருபவர்களை வைத்து நாம் என்ன திட்டங்களைச் செயல் படுத்தப் போகிறோம்? அவர்களுக்கு என்ன வாய்ப்புக்களை வழங்க முடியும் என்று பார்க்க வேண்டும். நாம் செலவிடுகின்ற பணம் வீண் விரயமாகிறதா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விளையாட்டுக்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். விளையாட்டுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளையாட்டுப் பள்ளியிலே சேர்க்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மொத்தம் 175 என்று சொல்லியிருக்கிறார்கள். ஏறத்தாழ 9, 10-வது வகுப்பிலே 7 லட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள். பிளஸ் 2 வகுப்பில் 2.5 லட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். இப்படி லட்சக்கணக்கிலே மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்று சொல்கின்ற சமயத்திலே விளையாட்டில் சேர்க்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 175 என்று சொல்வது உண்மையிலேயே வேடிக்கையாக இருக்கிறது. நாம் பெரும்பாலும் நல்ல விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும். இன்றையதினம் எவ்வளவு பெரிய கம்பெனியாக இருந்தாலும், அவர்களுக்கு அங்கே வேலை கிடைக்கிறது. இந்த விளையாட்டுப் பள்ளிகளில் படிப்பவர்கள் டிரில் மாஸ்டராகத்தான் வர வேண்டுமென்பது இல்லை. அவர்கள் இதில் நல்ல பயிற்சி பெற்று, நல்ல விளையாட்டு வீரராக இருந்தால், முக்கியமாக அவர்களுக்கு பாரி கம்பெனி, சதர்ன் ரெயில்வே மற்றும் கோச் பேக்டரி போன்ற இப்படிப்பட்ட துறைகளிலேகூட வேலை கிடைக்கிறது. நல்ல ஸ்போர்ட்ஸ்மேனாக இருந்தால், அவர்களுக்கு முதல் பிரிபரன்ஸ் கொடுத்து வேலை கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகியிருக்கின்றபோது, ஒரு ஆண்டுக்கு 175 மாணவர்களை அதிலே சேர்க்கப் போவதாகவும், பி.ஜி. கல்லூரியில் ஒரு 50 பேர்களைச் சேர்க்க முயற்சிக்கிறோம் என்றும் சொல்கிறார்கள். அதைக் கொஞ்சம் தாராளமான மனதோடு செய்ய வேண்டும். ஆயிரம் இரண்டாயிரம் ஸ்போர்ட்ஸ்மேன்களை உருவாக்கினால், அதிலே ஆபத்தில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.





தமிழ் நாட்டில், தற்போது 1.42 இலட்சம் சாரண சாரணியர்கள் உள்ளனர் என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாடு தேசிய மாணவர் படை இயக்கத் தலைமையகம் சென்னையில் உள்ளது என்றும் அதன் கட்டுப்பாட்டின் கீழ் 87,900 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன்: அது ஸ்கௌட்டாக இருந்தாலும் சரி, என்.சி.சி.யாக இருந்தாலும் சரி, அந்த அமைப்புகளில் எல்லாம் ஒரு லட்சம், 2 லட்சம் பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்று சொல்வது மட்டுமல்லாமல், அந்தப் பயிற்சியை கம்பல்சரி பயிற்சியாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பிட்ட பிள்ளைகள் அதாவது 8 வது, 9 வது, 10 வது, பிளஸ் 2 படிக்கின்ற நேரத்திலே அதை கம்பல்சரியாக வைக்க வேண்டும். என்.சி.சி.யில் சேர்ந்து, தேர்ந்திருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். இன்றையதினம் நாட்டிற்கு அபாயம் ஏதும் இல்லாமல் இருக்க ஒரு அடிப்படை இருக்க வேண்டும். இவ்வளவு படித்துவிட்டு ஒரு நாட்டுக்கு ஆபத்து என்று சொன்னால், அந்த அடிப்படையைக்கூட புரிந்து கொள்ளாமல் ஒரு மாணவன் இருக்கக்கூடாது என்ற காரணத்தினாலே, அதை ஒரு கம்பல்சரி எஜுகேஷனாக வைக்க வேண்டும். நாம் எப்படி கணிதத்திற்கு 35 மார்க்குகள், விஞ்ஞானத்திற்கு 35 மார்க்குகள், ஆங்கிலத்திற்கு 40 மார்க்குகள் என்று சொல்கின்றோமோ அதுபோல ஸ்கௌட்ஸ், என்.சி.சி. பயிற்சியை கம்பல்சரியாக ஆக்கி, அதிலே இவ்வளவு மார்க்குகள் வாங்க வேண்டும் என்று சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தமிழைப்பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் படிக்கும்போது உள்ளபடியே மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. நாம் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறோம்? எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்கிறோம். ஆனால் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை, 1981-82 முடிய 17 துறைகளிலேதான் நாம் இதுவரையில் அமுல் படுத்தியிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற குறிப்புப்படி, 17 துறைகள்தான். நான் கேட்கிறேன், நாம் இருப்பது தமிழ் நாடு, தமிழில்தான் பயில்வது என்று இருக்கிறது. எல்லாம் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். எல்லாத் துறைகளிலேயும் தமிழைக் கட்டாயப்படுத்துவதிலே என்ன தயக்கம் என்று தெரியவில்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். நான் ஒரு கடிதம் சீப் செக்கரட்டரி அவர்களுக்கு எழுதுகிறேன். பப்ளிக் டிப்பார்ட்மெண்டிலே

யிருந்து ஒரு பதில் கடிதம் ஆங்கிலத்திலே எழுதுகிறார்கள். பப்ளிக் டிப் பார்ட்மெண்ட்டிலேயிருந்து ஒரு கடிதம் சட்டமன்ற மேலவை உறுப்பினருக்கு வருகிறது. தமிழிலே எழுதினால் எனக்குப் புரியாதா? அல்லது தமிழில் அவர்களுக்கு எழுதத் தெரியாதா? இதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ் தெரியாத உறுப்பினர்களுக்கு ஆங்கிலத்திலே பதில் எழுதுவதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் பொதுப் பிரச்சினையிலேகூட ஆங்கிலத்திலேதான் எழுத வேண்டும் என்ற நிலை இருப்பது, நாம் தமிழ் வளர்ச்சியிலே எந்த அளவுக்கு அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறோம் என் பதைத் தான் காட்டுகிறது. இதிலே அர்த்தம் உள்ளதாகத் தெரியவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இங்கே கலைக்களஞ்சியம் பற்றித் தெரிவித்தார்கள். அதன் இரண்டாம் பதிப்பு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேண்டியதுதான். அது பாராட்டப்படவேண்டியதுதான். அதை நான் வரவேற்கிறேன். அந்தக் கலைக்களஞ்சியத்திலே தந்தை பெரியார் அவர்கள் வரலாற்றையும் பேரறிஞர் அண்ணா அவர்கள் வரலாற்றையும் இணைக்கக்கூடிய அள வுக்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 15-9-1981-லே தொடங்கப்பட்டது என்றும், அதற்கு ஆயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் அதில் ஒன்றே ஒன்று சொல்லிக்கொள்கிறேன். உரிமைக்காகச் சொல்கிறேன். இன்றையதினம் யூ.சி.ஜீ. ஒதுக்கீடு கொடுக்காமல் இருக்கலாம். நாம் அவசரப்பட்டு ஆரம் பித்த காரணத்தினாலே, அவர்களுடைய தயவை எதிர்பார்க்காமல் இருக்க லாம். இது ஒரு கவுரவப் பிரச்சினை. ஏனென்றால் இந்திக்கு என்று ஒரு யூனிவர்சிடி இருக்க முடியும் என்ற நிலை வந்தால்; தமிழ் நாட்டிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் இருக்க உரிமை படைத்தவர்கள் நாமும். மத்திய அரசில் யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனிடமிருந்து நிதி கிடைப்பதற்கு விண்ணப்பம் போட்டு அது கிடைக்கவில்லை என்று சொன்னால், அதைப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தாலும், அந்த நட வடிக்கைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கத் தயாராக இருக் கிறது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இவ்வளவு நாளாக தமிழ், தமிழ் என்று சொல்லி தமிழுக்காக உயிர் விட்ட, இந்தியை எதிர்க்கின்ற ஒரு மாநிலத்திலே, நம்



முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்களுக்கும் ஒரு உணர்வு இருக்கிறது. அதிலே அவருடைய உணர்வை நான் குறைவாகச் சொல்லவில்லை. அவர் இருப்பது அகில இந்திய கட்சி. ஆகவே அந்தக் கட்சிக் கொள்கையிலே அவருக்கு நம்பிக்கை இருக்கிறது. அதை வலியுறுத்த உரிமை இருக்கிறது. அதே உரிமை எனக்கும் இருக்கிறது. ஒரு குடிமகனாக தன்னுடைய லட்சியத்தை, கொள்கையை எடுத்துச் சொல்வதற்கு எனக்கும் உரிமை இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய லட்சிய மும் கொள்கையும், தமிழ்-ஐப் பயிற்சி மொழியாக ஆக்கி பிள்ளைகள் தமிழிலே பயில வேண்டும் என்பதுதான். அதை யாரும் பின்பற்றுவதாக இல்லை. உங்கள் குழந்தைகள் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு தாய் மொழியிலே படித்துக் கொண்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தமிழிலே படிக்கிறார்கள். நம் தமிழகத் தைப் பொறுத்த வரையிலே, இரு மொழிக் கொள்கைதான்; ஆளுங் கட்சியின் கொள்கையும்கூட அதுதான்.

திரு. க. இராமமூர்த்தி : இரு மொழிக் கொள்கையோடு தமிழைப் பயிற்சி மொழியாக கல்லூரி அளவிலே கொண்டுவர வேண்டும், உயர் நிலைப் பள்ளி அளவிலே தமிழ் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் கொள்கை. ஆனால் அது மற்றவர்களுக்குத்தான் அமுலாகிறதே தவிர, தலைவர்களுக்கு அமுல் ஆகிறதாகக் காணோம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அங்கத்தினர் அவர்கள் எந்தத் தலைவர் களை மனதிலே வைத்துக்கொண்டு சொன்னார்கள் என்று தெரியவில்லை.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் இந்தியைப்பற்றிப் பேசுகிறபோது உண்மையிலேயே ரொம்ப வேகமாக இருக்கிறார். அவர்கள் ஆல் இந்தியா காங்கிரஸ் கமிட்டியின் பி.சி.சி. மெம்பராக இருப்பார்கள் என்று கருதுகிறேன். டெல்லியிலே கமிட்டி நடக்கிறபோது, "இந்தியிலேதான் கமிட்டியிலே பேச வேண்டும். அவரவர்கள் பேசும்போது இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்ல முற்பட்டி ருக்கிறார்களா? அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அப்படிச் சொல்லி யிருக்கிறார்களா? அப்படிப் பேசியிருக்கிறார்களா?" என்று அறிய விரும்பு கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அன்றையதினம் திரு. காமராஜர் அவர்கள் அதையெல்லாம் எதிர்த்து நின்று, அப்படி இருக்கக்கூடாது என்று அகில இந்திய அளவிலே சொல்லி வெற்றிகரமாக இருந்திருக்கிறார். அவர்கள் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதைச் செய்வார்கள். அப்படிச் செய்தார்கள். ஆனால் உங்களைப் பொறுத்த அளவிலே, தமிழ் பயிற்சி மொழி என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையைச் சொல்லிக்கொண்டு நீங்கள் எல்லாம் எவ்வளவு தூரம் உங்களுடைய பிள்ளைகளை ஆங்கிலப் பயிற்சி மொழியிலே படிக்க வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : விவாதம் வேறு இடத்திற்குப் போகின்றது. அங்கத்தினர் அவர்கள் யாரை மனதிலே வைத்துக்கொண்டு சொல்கின்றார்கள் என்று தெரியவில்லை. நான் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, இரு மொழிக் கொள்கைதான். இங்கே நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அங்கத்தினர் திரு. இராமமூர்த்தியைக்கூட மாற்ற முடியவில்லையே என்றுதான் சொல்கிறேன். இந்த நிலை இருக்கும்போது, தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, இதை நம் நாட்டிலே நிறுவுவதற்கு நமக்கு முழுக்க முழுக்க உரிமை இருக்கிறது. அதற்கு யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் நிதி கொடுத்துத்தான் ஆக வேண்டும். அங்கீகாரம் கொடுத்தாக வேண்டும். அதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். நம்மாலே நடத்த முடியும் என்பது வேறு. நமக்குத் தகுதி இருக்கிறது. அது வேறு விவகாரம். ஆனால் அது அடிப்படை உரிமை. ஆகவேதான் இந்த அரசாங்கம் அதை விட்டுக் கொடுக்கக்கூடாது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மதுரையிலே உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்று அமைத்து, அது தமிழ் ஆராய்ச்சிப் பணியைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென்ற அளவில் அந்தச் சங்கத்திற்கு ரூ. 105 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று சொல்லியிருக்

(பிற்பகல் 5-50)

கிறார்கள். அதிலே எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடுமில்லை. ஆனால் தஞ்சையிலே ஒரு தமிழ் பல்கலைக் கழகம் நிறுவிவிட்டு, அதற்குப் பிறகு மதுரையிலே உலகத் தமிழ்ச் சங்கம் என்று சொல்லி, அங்கே தனியாகப் பணத்தைச் செலவு செய்து ஆராய்ச்சி, பல்கலைக் கழகத்திலே ஒரு ஆராய்ச்சி என்று சொல்வதைவிட, அவ்வளவு பணத்தையும் பல்கலைக் கழகத்திலேயே செலவிட்டு தமிழ் ஆராய்ச்சிப் பணியை இன்னும் தீவிரமாக்கினால், நாட்டுக்கு அதனால் நல்ல பலன் ஏற்படும். ஆகவே இதை அரசுக்கு யோசனையாகச்



சொல்லுகிறேன். நம்முடைய முயற்சிகளும், முதலீடும் பரவலாக்கப்பட்டு சிதறுண்டுபோவதைவிட, ஒன்றாக்கப்பட்டு நல்ல பணி நாட்டிலே நடைபெற்றால், அதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவேதான் திருக்குறள் பற்றி ஆராய்ச்சியானாலும் சரி, சிலப்பதிகாரம் பற்றி ஆராய்ச்சியானாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி, ஒரு இடத்தில் செய்யப்படுகிறது, அது இந்த நாட்டுக்கு, உலகத்திற்கு அளிக்கப்படுகிறதென்று நிலையை உண்டாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன்.

தமிழ் கலைகளும், பண்பாடும் என்று சொல்லி அதற்காகப் பணத்தைச் செலவழிப்பதாகச் சொல்லுகிறார்கள். அதுகுறித்து வருத்தப்பட்டுத்தான் ஆகவேண்டும். நமக்கிருக்கும் கலைகளும் பண்பாடும் உலகத்திலேயே யாருக்கும் கிடையாது என்று பெருமைப்பட்டுக்கொள்கிறோம். அது உண்மையும்கூட, தமிழர்களுக்கு உள்ள நாகரிகம், கலை, பண்பாடு வேறு யாருக்குமில்லை என்று பெருமையோடு, 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றை எடுத்துச் சொல்லி, அப்படிப்பட்ட கலைக்கும், பண்பாட்டுக்கும் சொந்தக்காரர்கள் என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் சமுதாயத்தில் இதற்கு நிதி ஒதுக்கம் செய்து, இந்தக் கலையை, பண்பாட்டை வளர்க்க முயற்சி எடுக்கிறார்கள் என்று எண்ணும்போது, மகிழ்ச்சி ஏற்பட்டாலும், இந்த நேரத்தில் ஒன்றை வருத்தத்துடன் சொல்லியாக வேண்டும். சனவரி 26 அன்று இந்தியத் தலைநகரில் குடியரசு தின விழாவில் இந்தியாவில் இருக்கக்கூடிய 22 மாநிலங்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டன. அந்தக் கலை நிகழ்ச்சியில் நமது மாநிலமும் கலந்துகொண்டது. அதில் எப்படிப்பட்ட நிகழ்ச்சியை உருவாக்கியிருந்தார்கள் என்பதை நினைக்கும்போது, உள்ளபடியே வருத்தமாக இருக்கிறது. ஒரு பக்கத்தில் இவ்வளவு செலவு செய்கிறோம். சிறந்த முறையில் தமிழ் பண்பாட்டை, கலையை வளர்க்கக்கூடிய தமிழ் நாட்டுக் கலைஞர்கள் கையிலே வேப்பிலையைக் கொடுத்து, வண்டியிலே ஊர்வலமாகப் போகச் செய்தார்கள். அதைப் பார்க்கக்கூட முடியாமல், நமது பிரதமர் அவர்கள் முகத்தை வேறு திசையில் திருப்பிக் கொண்டார்கள் என்பதை புகைப்படத்தில் பார்க்க உள்ளபடியே வேதனைப் படுகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த நிகழ்ச்சியை நடத்தியவர்களுக்குப் பரிசு கிடைத்ததாகத் தெரிவித்தார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, நிச்சயமாகக் கிடைத்திருக்க முடியாது. அமைச்சரவர்களுக்கு யார் சொன்னார்களோ, தெரியாது. தமிழ்நாட்டினுடைய நிகழ்ச்சிதான் அருவருக்கத்தக்கதாக இருந்தது என்று நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, மற்றவர்களும் சொன்னார்கள். விசாரித்துப் பாருங்கள். டி.வி.-ல் மற்றவர்கள் பார்த்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய கலைஞர்களை ஆடவிட்டால், அதில் மயங்கக்கூடியவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அப்படி நல்ல பெயர் பெற்ற மாநிலத்தின் சார்பில், ஏதோ ஒரு காரணத்தால், வேப்பிலையைக் கொடுத்து அனுப்ப வேண்டுமா என்பதுதான் என்னுடைய வருத்தம். ஆகவேதான் இதைக் குறிப்பிடுகிறேன்.

அடுத்து, அமைச்சரவர்களுக்கும், கல்வித் துறையில் உள்ள அதிகாரிகளுக்கும் வருத்தத்தோடு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். 291 கோடி ரூபாய் செலவு செய்து, கல்வியைப்பற்றிப் பேசுகிறோம். கொள்கைக் குறிப்பில் 70 பக்கங்களுக்கு மேலே எத்தனையோ புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த நாட்டிலே மிகமிகத் தேவையான ஒரு பொருளைப்பற்றி, ஒரு கல்வியைப்பற்றி ஒரு வார்த்தைகூட இதில் குறிப்பிடவில்லை. அதுதான் கமெர்ஷியல் எஜுகேஷன். இதை நான் குறிப்பிடுவது என்னுடைய கடமை. இந்தத் துறை இன்றைக்கு இந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதற்கு அடிப்படைக் காரணம் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, நான் பலமுறை சட்டசபையில் பேசிப்பேசி, நாவலர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி,

Typewriting, Shorthand, Accountancy, Banking, Theory and Practice of Commerce, Commercial Geography ஆகிய பாடங்களில் டிப்ளமோ பெற, ஹையர் கிரேட், லோயர் கிரேட் சர்ட்டிபிகேட் பெற எப்படியெல்லாம் முயற்சி எடுக்க வேண்டுமென்று சொல்லி, ஏற்கெனவே டைரக்டர் ஆஃப் பப்ளிக் இன்ஸ்டிரக்ஷன்கீழ் இருந்த பிரிவைத் தனியாகப் பிரித்து, டைரக்டர் ஆஃப் டெக்னிகல் எஜுகேஷன் உடன் சேருங்கள் என்று சொல்லி, அப்படிச் சேர்த்ததற்குப் பின்னாலே இன்று இந்தத் துறை வளர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே இன்றைக்கு ஏறக்குறைய 1,400 தனியார் இன்ஸ்டிடியூட்டுகள் இருக்கின்றன. அதிலே இந்தப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். 10 ஆம் வகுப்பு படித்துவிட்டு, ஏறக்குறைய 3 லட்சத்திற்கும் அதிகமான மாணவ, மாணவியர்கள் ஆண்டுதோறும் இந்த இன்ஸ்டிடியூட்டுகளிலே



பயிற்சி பெறுகிறார்கள். இந்தப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கிறது. பி.யூ.சி. +2 முடித்துவிட்டு, மூன்று ஆண்டுக் காலம் கல்லூரிப் படிப்பு படித்துவிட்டு, லட்சக் கணக்கிலே வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆனால் கமெர்ஷியல் இன்ஸ்டிடியூட்டுகளில் டைப்ரைட்டிங், ஷார்ட்ஹேன்ட் படித்து பாஸ் செய்த உடன் வேலைக்குப் போகிறார்கள். ஷார்ட் ஹேன்ட் ஹையர் கிரேட் பாஸ் செய்துவிட்டு வேலையில்லாமல் ஒருவன் இருக்கிறான் என்று அடையாளம் காட்டுங்கள் ; அப்படிக் காட்ட முடியாது. இன்றையதினம் லோயர் கிரேட் ஷார்ட் ஹேன்ட் பாஸ் செய்திருந்தால், எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் பதிவு செய்த அடுத்த வாரம் இன்டர்வியூ கார்ட் வருகிறது. அப்படிப்பட்ட கல்வியைப்பற்றி, நம்முடைய கல்வி அமைச்சரவர்கள் எந்தக் காரணத்தாலோ ஒரு இடத்தில்கூட குறிப்பிடவில்லை. இதை அவர்கள் கவனிக்க வேண்டும். என்னுடைய வேண்டுகோள் எல்லாம்—இப்போது இது டைரக்டர் ஆஃப் டெக்னிகல் எஜுகேஷன் அவர்கள்கீழ் இருக்கிறது. சிறுசிறு குறைபாடுகள் இருக்கும். இதற்கு முன்னாலே 'ஷார்ட்ஹேன்ட் டிக்டேடர்' வருகிறார் என்றால், நாங்கள் அவரைப்பற்றிப் பேசிப் பேசிச் சிரித்திருக்கிறோம். ஷார்ட்ஹேன்ட் டிக்டேஷன் கொடுக்கக் கூடியவர்கள் நல்லமுறையில் படிக்க வேண்டும், 'ப்ரேஸ்' Phrase தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் படிக்கும்போது ஒலி சிறப்பாக இருக்க வேண்டும். டைரக்டர் ஆஃப் டெக்னிகல் எஜுகேஷன் அலுவலகத்தில் முன்பு 'வாய்ஸ் டெஸ்ட்' எல்லாம் வைத்தார்கள். இப்போது அதை நிறுத்திவிட்டார்கள். ஏன் நிறுத்தினார்கள் என்று தெரியவில்லை. தமிழ்நாட்டில் படிக்கக்கூடிய மாணவர்களின் ப்ரனவுன்சியேஷன் வேறு ; கேரள மாணவர்களின் ப்ரனவுன்சியேஷன் வேறு. ஒரே ஆங்கிலம்தான். இருந்தாலும் ப்ரனவுன்சியேஷன் வேறு. இங்கே 'அகேஷன்' என்பதை அங்கே 'ஒகேஷன்' என்பார்கள். ஒலியை அடிப்படையாக வைத்துக்கொண்டு 'கோடு' போட வேண்டும். கோடு மாறிவிட்டால், சரியாக ரீ-ரைட், டிரான்ஸ்கிரைப் செய்ய முடியாது. ஆகவே 'வாய்ஸ் டெஸ்ட்' செய்ய வேண்டுமென்று சொன்னோம். இன்றையதினம் இவைகள் எல்லாம் கொஞ்சம் கவனிக்கப்பட்டு, வளர்ச்சி அடைந்திருக்கிறோமென்று சொன்னாலும், நான் கல்வி அமைச்சரவர்களிடம் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எப்படிப் பெண்களுக்குத் தனிப் பல்கலைக் கழகம் வேண்டுமென்று சொல்லுகிறோமோ, எப்படி தமிழுக்குத் தனிப் பல்கலைக் கழகம் வேண்டுமென்று சொல்லுகிறோமோ, மருத்துவத் துறைக்கு எப்படி தனி மருத்துவப் பல்கலைக் கழகம் வேண்டுமென்று சொல்லுகிறோமோ, அதைப்போல இதற்கு முதலிலே ஒரு தனி டைரக்

ரேட் ஏற்படுத்தி, டைரக்டர் ஆஃப் கமேர்ஷியல் எஜுகேஷன் என்று உருவாக்குங்கள். அப்படி உருவாக்கிவிட்டு, தமிழ் நாட்டில் 3 லட்சம், 4 லட்சம் மாணவர்கள் படிக்கும் இந்தத் துறையை அவர்களிடம் கொடுங்கள். தேர்வுகளைச் சிறப்பாக 'கன்டக்ட்' செய்யுங்கள். அப்போது எங்கேயிருந்து வேண்டுகோள் வருகிறதென்று பாருங்கள். டெல்லி பாராளுமன்றத்திலிருந்து வரும் டெல்லி பாராளுமன்ற ரிப்போர்டர்களில் பாதிக்கு மேலே தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் தான் இருக்கிறார்கள். டெல்லி செக்ரடேரியட்டிலே அசிஸ்டன்ட், சூப்பரின்டென்டென்ட்-ல் ஏறக்குறைய 40 சதவிகிதத்திற்குமேல் தமிழ் நாட்டுக்காரர்கள்தான் இருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், இந்தக் கல்வியெல்லாம் கற்று அவர்கள் அங்கே போய் குடியேறுகிறார்கள். இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட, நம்முடைய மாநிலத்தவர்கள்தான் இவற்றைப் பயில்வதிலே அதிக அக்கறை உள்ளவர்கள் என்ற எண்ணம் மற்ற மாநிலங்களில் இருக்கிறது. ஆகவே கல்வித் துறை அக்கறை செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கமேர்ஷியல் இன்ஸ்டிடியூட்டுகளைப் பொறுத்தவரையில், இன்ஸ்பெக்ஷன் செய்கிறார்கள். இன்ஸ்பெக்ஷன் செய்வதில் ஆட்சேபனை இல்லை. திடீரென்று வருகிறார்கள். அப்போது உரிமையாளர்கள் இருப்பதில்லை. வருவதைத் தெரிவித்துவிட்டு வந்தால் நல்லதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டைப்ரைடிங் தேர்வு பொறுத்து ஒன்று சொல்ல விரும்புகிறேன். வெளிநாடுகளில் இந்தக் கொள்கை பின்பற்றப்படுவதாக அறிகிறேன். இந்தி டைப்ரைட்டிங்கிலும் இதைப் பின்பற்றுவதாக அறிகிறேன். ஒரு மாணவன் தட்டச்சுத் தேர்வுக்குப் போகிறான் என்றால், குறிப்பிட்ட நேரத்தில்தான் அவன் ஆற்றலைக் கண்டுபிடிக்கிறார்கள். 15 நிமிடங்கள் ஸ்பீட் அடிக்க வேண்டும்; அதற்குப் பிறகு 2 மணி நேரத்தில் மேனஸ்கிரிப்ட் டைப் அடிக்க வேண்டும். 15 நிமிடங்களில், 2 நிமிடங்கள் நடுக்கம் வந்துவிட்டால், 'ஃபெயில்' தான். அந்த ஆண்டு படித்தது வீணாகிவிடும். முதலிலே ஸ்பீட், பிறகு மேனஸ்கிரிப்ட் என்பதை மாற்றி, முதலிலே மேனஸ்கிரிப்ட், கொடுத்தால் அதை நிதானமாக 'டைப்' செய்வார்கள். 2 மணி நேரத்தில் அவர்கள் செட்டில் ஆகிவிடுவார்கள். பிறகு ஸ்பீட் அடிக்கும்போது பயமில்லாமல், நடுக்கமில்லாமல் டைப் அடித்து நல்ல முறையில் தேர்வு பெறும் வாய்ப்பு இருக்கும். ஆகவே இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எத்தனை முறை வேண்டுமானாலும் எழுதலாம்.
தனித் தனியாகத் தேர்வு எழுதி, தேர்ச்சி பெறலாம். டைப்ரைடிங் தேர்
வில் முதல் தாள், இரண்டாம் தாள் என்றிருக்கிறது. ஸ்பீட், மேனஸ்
கிரிப்ட் என்று இருக்கிறது. இரண்டிலும் தேர்ச்சி பெற்றால்தான், சர்டி
பிகேட் கொடுக்கிறார்கள். 'ஃபெயில்' ஆகி விட்டால் அவ்வளவுதான்,
ஒன்றும் கிடையாது. ஃபெயிலானால் எதில் பெயில், ஸ்பீடிலா அல்லது
மேனஸ்கிரிப்டிலா ? ஸ்பீட் பாசாகி, மேனஸ்கிரிப்டில் இந்த முறை தோல்வி

(பிற்பகல் 6-00)

கண்டிருந்தால், அடுத்த முறை மேனஸ்கிரிப்ட் தேர்வு தனியாக எழுதிட அனும
திக்க வேண்டும். அதைப்போலவே மேனஸ்கிரிப்ட் தேர்வில் தேர்ச்சி பெற்றி
ருந்தால் அடுத்த முறை அவன் ஸ்பீடு தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும்.
இப்படியெல்லாம் மாணவர்களை உற்சாகப்படுத்துவதன் மூலம் இந்தத்
துறை மேலும் மேலும் வளரும். இதுபற்றி தொழில் நுட்ப இயக்கத்தில்
கவனிக்க நேரம் இல்லை. அவர்கள் இதைவிட பெரிய படிப்புகளையும்
நடத்தி வருகிறார்கள். அதிலே தான் கவனம் செலுத்த முடிகிறது.
ஆகவே இதற்கென்று தனியாக ஒரு டைரக்ட்ரேட் ஏற்படுத்த வேண்டுமென்று
நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாமக்கல் மாவட்ட கல்வி அதிகாரி பற்றிய குற்றச்சாட்டுக்கு
வருகிறேன். அவர் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. குறைகள்
இல்லாமல் ஒரு துறை இருக்க முடியாது. ஆனால் கல்வித் துறையினுடைய
நற்பெயரைக் கெடுக்க இப்படி ஒரு அதிகாரி அங்கே இருக்கிறார் என்பதை
யும் நான் சொல்லித்தான் ஆக வேண்டும், அந்தக் கல்வி அதிகாரியைப்பற்றி
வந்திருக்கிற புகாரை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம்
கொடுத்து விடுகிறேன். அதில் கூறப்பட்டிருப்பதையெல்லாம் படித்தால்
கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட குறைகள் எந்த நிலையிலும் இருக்
கக் கூடாது. குறைந்தபட்சம் கல்வித் துறையிலாவது இப்படிப்பட்ட
குறைகளைப் போக்க வேண்டும். அவர் எந்த முறையில் தவறான
காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்கிற விவரம் விண்ணப்பத்திலே சொல்லப்
பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் தயவுசெய்து
அமைச்சரவர்கள் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 மார்ச் 20

அடுத்து, கல்வியைப்பற்றிப் பேசுகின்றபோது உள்ளபடியே எனக்கு
இன்றைக்கு பத்திரிகைகளைப் பார்த்த உடன் அதிர்ச்சி ஏற்பட்டது. வட
ஆற்காடு மாவட்டத்தில் காவேரிப் பாக்கத்தில் ஒரு கான்வென்ட் தாக்கப்பட்
டிருக்கிறது. ‘அட்டாக் ஆன் கான்வென்ட் நியர் வெல்லூர்’ என்று எக்ஸ்
பிரஸ் பத்திரிகையில் வந்தது. ‘வயலன்ட் இன்சிடென்ட்ஸ் இன் நார்த்
ஆற்காட் டவுன்’ என்று இந்து பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இது
சம்பந்தமான பத்திரிகைச் செய்திகளை எல்லாம் நான் இங்கு படிக்க
விரும்பவில்லை. ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பிரச்
சினை உருவாகி, எல்லாக் கட்சிகளும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிற
நேரத்தில் இன்னொரு கன்னியாகுமரி, காவேரிப்பாக்கத்தில் உருவாகிவிடா
திருக்க இந்த அரசு எப்படி அணுக வேண்டுமோ அந்தமாதிரி அணுகி,
நாடெங்கும் இது பரவாமலிருக்கும் வகையில் விரைந்து நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்கள் படித்து விட்டு காலாண்டு, அரையாண்டுத் தேர்வு
எழுதிவிட்டு முழு ஆண்டுத் தேர்வு எழுதுகிறார்கள். முழு ஆண்டுத்
தேர்வு எழுதி அதில் வெற்றி பெற்றால்தான் அடுத்த வகுப்புக்குச் செல்ல
முடியும். அது தான் நியாயம். இதைத் தவிர வேறு ஒரு முறை இருக்கக்
கூடாது. உதாரணமாக 7-வது வகுப்பில் படிக்கிற ஒரு மாணவன்
காலாண்டுத் தேர்வு எழுதி, பிறகு அரையாண்டுத் தேர்வு எழுதி, அதற்குப்
பிறகு முழு ஆண்டுத் தேர்வு எழுதி. தேர்ச்சி பெற்ற பிறகு தான் 8 ஆம்
வகுப்புக்குச் செல்ல வேண்டும். அதுபோல் இதேமுறையைப் பின்பற்றித்
தான் 8 ஆம் வகுப்பிலிருந்து 9 ஆம் வகுப்புக்குச் செல்ல வேண்டும். அதே
சமயத்தில் இன்றைக்கு நாம் எவ்வளவோ பேசுகிறோம்—நாட்டிலே செல்
வாக்கு படைத்தவர்கள்—தங்களுக்கு செல்வாக்கு இருக்கிற ஓரே காரணத்
திற்காக அவர்கள் தவறு செய்வதற்கு அரசு அனுமதிக்கக் கூடாது.
உதாரணத்திற்கு நடைபெற்ற ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். ஒரு
மாணவன் 7 ஆம் ஆண்டு படிக்கிறான். காலாண்டுத் தேர்வு எழுதுகிறான்.
பிறகு அரையாண்டுத் தேர்வை எழுதவில்லை. முழு ஆண்டுத் தேர்வில் 2
பாடங்களை மட்டும் எழுதுகிறான். அப்படிப்பட்ட மாணவனை ஆசிரியர்
தோல்வியடையச் செய்வது தான் நியாயம். அதன்படி அந்த ஆசிரியர்
செய்கிறார். அதில் தப்பு இருக்க முடியாது. அதை எதிர்த்து மாண
வனின் தந்தை நீதிமன்றத்திற்குச் செல்கிறார். அவனை 7 ஆம் வகுப்பில்
தேர்ச்சி பெற்றவனாக அறிவிக்க வேண்டுமென்று நீதிமன்றத்தில்



1982 மார்ச் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கேட்கிறார்கள். நீதிபதியும் அவ்வாறு தீர்ப்பு வழங்குகிறார். அதற்குள்
ஓராண்டு ஆகிறது. அந்த ஓர் ஆண்டு அந்த மாணவன் வகுப்புக்குச்
செல்லவில்லை. பிறகு வழக்குமன்றத்திற்குச் சென்று அந்த மாணவன் 8
ஆம் வகுப்புத் தேர்வுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டுமென்று கேட்கிறார்
கள். அதற்கும் நீதிபதி சரி என்று சொல்கிறார். இன்றைக்கு அந்த
நீதிபதி அந்தப் பையனை 9 ஆம் வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டு
மென்று தீர்ப்பு அளித்திருக்கிறார். தீர்ப்புகள் எப்படியும் வரலாம்.
ஆனால் இதிலுள்ள உண்மை நிலையை எண்ணிப்பார்க்க வேண்டும். இது
பற்றி ஒரு நல்ல முடிவெடுத்த அந்தத் தலைமை ஆசிரியருக்கு இந்த அரசு
ஒரு அநீதியை இழைத்து விடுமோ என்று எண்ணக்கூடிய நிலைமை கூட
இருக்கிறது. அவர் வருத்தத்துடன் தெரிவித்துள்ள ஒருசில தகவலை
மட்டும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.
‘ஆரோக்கியசாமி என்பவருடைய மகன் ஆரோக்கிய ஜவகர் 7 ஆம் வகுப்
பில் காலாண்டுத் தேர்வை எழுதினான். அரையாண்டுத் தேர்வை எழுத
வில்லை. பிறகு முழுஆண்டுத் தேர்வில் 2 பாடங்களை மட்டும் எழுதி
னான். அவன் 7 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாததால் அவனுடைய பெயர்
கல்வி ஆண்டு துவக்கத்திலேயே தேர்ச்சி பெற்றவர்களின் பெயர் பட்டியலி
லிருந்து நீக்கப்பட்டது. அந்த நாள் முதல் அவன் பள்ளிக்கு வந்து
பாடங்களைப் பயிலவில்லை. சிறப்புக் கட்டணத்தைச் செலுத்தவும்
இல்லை. நீதிபதியின் இன்ஜங்சனுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்ற
ஒரே காரணத்திற்காக 8 ஆம் வகுப்பு காலாண்டு, அரையாண்டு, முழு
ஆண்டுத் தேர்வுகளை எழுத அனுமதிக்கப்பட்டான். மாயுரம் முனிசிப்
நீதிமன்றம் இப்போது அந்த மாணவனை 9 ஆம் வகுப்பில் சேர்த்துக்கொள்ள
வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இப்படி எல்லாம் அவர் தகவல்
சொல்லிவிட்டு இதற்கு மாவட்டக் கல்வி அதிகாரி உதவி செய்கிறார் என்று
எழுதியிருக்கிறார். இப்படி ஆரோக்கியசாமி போன்ற செல்வாக்கு படைத்
தவர்கள் தங்களிடம் இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி தங்கள்
பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமலேயே உயர் வகுப்புகளுக்குச்
செல்லலாம் என்று இருக்கக்கூடிய நிலை சரிதானா? அதோடு அந்த
ஆசிரியரை குரைநாடு பள்ளியிலிருந்து மாயூரம் பள்ளிக்கு மாற்றிவிட்டார்
கள். ஒரு நல்ல காரியம் செய்தார் என்பதற்காக எவ்வளவு தான் செல்
வாக்கு படைத்தவர்களாக இருந்தாலும், இப்படிச் செய்வது முறைதானா?
அந்த ஆசிரியர் வழக்கை நடத்த மாவட்டக் கல்வி அதிகாரி முன்பு உதவி
செய்து வந்தார். இப்போது முடியாது என்று சொல்லிவிட்டார். அவர்
மாறுதலாகியிருக்கும் நிலையிலும் வழக்கை நடத்த வேண்டியிருக்கிறது.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 மார்ச் 20

இப்படிச் செய்ய அனுமதிப்பது எதிர்காலத்தையே பாழாக்கும். ஒரு அநீதியை, அக்கிரமத்தை ஆதரித்து இப்படித் தீர்ப்பு வருவது வருங்கால மாணவர்களுக்கு மோசமான ஒரு எடுத்துக்காட்டு. எல்லா மாணவர்களும் இதே முன்மாதிரியைப் பின்பற்ற ஆரம்பித்தால், கல்வியின் தரம் எங்கே போய் நிற்கும் என்பதை ஆலோசித்து, நல்லுள்ளம் படைத்த அமைச்சர் அவர்கள் கல்வி அமைச்சராக இருக்கிற காரணத்தால், இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இந்த கேஸ் சுப்ரீம் கோர்ட் வரை போனால் கூட, எந்தக் காரணத்தைக் கொண்டும் விட்டுக் கொடுக்கக் கூடாது. எந்தத் தீர்ப்பு வந்தாலும், நாம் கவலைப்பட வேண்டாம். பள்ளிக்குச் செல்லாம லேயே கூட ஒரு மாணவன் புரமோஷன் பெற முடியும் என்கிற ஒரு தவறான நிலை வருமேயானால், நாம் கல்விக்காக எவ்வளவு தான் பணம் செலவு செய் தாலும் அதனால் பலனில்லை.

அடுத்து, நான் ஏற்கெனவே இக்கு குறிப்பிட்டிருக்கிறேன். ' கமர்சியல் எஜுகேஷன் ' பற்றி பல தடவை குறிப்பிட்டிருக்கிறேன். அதில் இன்னும் ஒன்றைக் குறிப்பிடுவது என்னுடைய நீங்காத கடமை என்பதால் குறிப் பிடுகிறேன். ஆங்கிலச் சுருக்கெழுத்துக்கு அகராதி இருப்பது போல் தமிழ்ச் சுருக்கெழுத்துக்கும் ஒரு அகராதி தேவை என்று திராவிட முன் னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நான் வேண்டுகோள் விடுத்தேன். அரசும் உடனே சட்டமன்றத்தைச் சேர்ந்த திருபர்கள் அடங்கிய ஒரு குழுவை நிய மித்து அகராதியைத் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் அதற்கு ஆவன செய்தது. அந்தக் குழு அவசரக் காலத்தில் கலைக்கப் பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எது செய்தாலும் அது தவறு என்று கருதக்கூடியவர்கள் இருந்ததால், அப்படிச் செய்தார்கள். அதற்குப் பிறகு இந்த ஆட்சியில் தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி வெளியிடப் பட்டிருக்கிறது. அதுபற்றி சில கருத்துக்களைச் சொல்வது என்னுடைய கடமை. இருபது ஆண்டுகளுக்கு முன்பே தட்டெழுத்து ஹைஸ்பீட் மற்றும் தமிழ்ச் சுருக்கெழுத்து ஹைஸ்பீடு தேர்ச்சி பெற்றவன் நான். இதே சட்ட மன்றத்தில் திருபாரகப் பணியாற்ற வரும்படி அழைத்தார்கள். ஆங்கிலச் சுருக்கெழுத்து அகராதி இருப்பது போல், பிட்மன் ஷார்ட்ஹான்ட் டிக்ஷனரி இருப்பது போல், தமிழில் ஒரு சுருக்கெழுத்து அகராதி எதிர்காலத்தில் வருமா என்று நான் ஒரு காலத்தில் கவலைப்பட்டதுண்டு. ஆனால் இப் பொழுது, ஏன் தான் இப்படி ஒரு தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி வந்தது என்று எண்ணுகிறேன். அந்த அளவுக்கு சம்பந்தா சம்பந்தமில்லாமல் சுருக்கெழுத்து பற்றிய எந்த விதிமுறையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.



1982 மார்ச் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சுருக்கெழுத்துப்பற்றி என்ன விதிமுறை இருக்கிறதோ அந்த விதிமுறை பின் பற்றப்படவில்லை. சுருக்கெழுத்துக்கு என்ன இலக்கணம் சொல்லியிருக்கிறார் களோ அது பின்பற்றப்படவில்லை. அதற்கு மாறாக அந்த நூலை உரு வாக்கிய ஆசிரியரால் ஸ்ட்ரோக்குகள், கோடுகள் வரையப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், தயவுசெய்து அந்தத் தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி நூல் அனைத்தையும் கலெக்ட் செய்து எங்கே யாவது கொண்டுபோய் வைத்து விடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு சட்டமன்ற மேலவையிலும், சட்டமன்றப் பேரவையிலும் இருக்கக் கூடிய சட்டமன்ற திருபர்களைப் போல் திறமையுள்ளவர்களை, விவரம் தெரிந் தவர்களை நாம் எங்கேயும் பார்க்க முடியாது. அவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்கள் மூலம் ஒரு புதிய தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதியை தயவுசெய்து வெளியிடுங்கள். ஏனென்றால் டிக்ஷனரி என்பது தனி மனிதனின் சொத்தாக இருப்பதில் பயனில்லை. அது ஒரு பொதுச் சொத்தாக, மக்களுக்குப் பயன்படக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். அந்த முறையில் இரண்டு அவையிலும் இருக்கக்கூடிய திருபர்களைக் கொண்டு இதிலுள்ள குறைகளையாவது களைய வேண்டும். என்ன குறைகள் இருக் கின்றன என்பதைத் தொகுத்துப் பார்த்தபோது, அதிலுள்ள குறைகள்பற்றி 22 பக்கம் அடங்கிய ஒரு அறிக்கையே வந்திருக்கிறது. இதை நான் அப் படியே படிக்க வேண்டுமானால். குறைந்தது 3/4 மணி நேரம் ஆகும். இதை நான் இந்த அவையில் படித்ததாக 'மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டாலும் சரி அல்லது இதிலுள்ள குறைகளைப் போக்க நட வடிக்கை எடுத்துக் கொண்டாலும் சரி, எதைச் செய்தாலும் ஏற்றுக்கொள் கிறேன். ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். இந்தத் தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி 625 பக்கங்களைக் கொண்டது. இதில் வரக்கூடிய தனிக்குறிச் சொற்கள், வினைச் சுருக்கங்கள் ஆகிய இரண்டையும் நீக்கி மீதமுள்ள பக்கங்களைப் பார்த்தால், பதிப்புரை துவங்கி நூல் பூரா குறைகள் கொண்ட தாக, முரண்பாடுகள் கொண்டதாக, பிழைகள் கொண்டதாக இந்த அகராதி உள்ளது. இதிலுள்ள பிழைகள் மிகவும் அதிகம். ஒவ்வொரு பக்கத்திலும் பிழைகள் இருக்கின்றன. விதிமுறைகள், குறித் தொடர்கள் ஏற்கெனவே இருக்கின்ற விதிமுறைகளுக்கு முரண்பட்டிருக்கின்றன. ஒரே வார்த்தைக்கு வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு குறிகளைப் போட்டிருக்கிறார்கள். இப் படி ஏறத்தாழ இந்த நூலில் 18 குறைகள் இருக்கின்றன. இப்படி முரண் பாடாக, குறைகள் கொண்டதாக, பிழைகள் கொண்டதாக இந்தத் தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி இருப்பதால் நாம் எந்த நோக்கத்திற்காக இதைக் கொண்டு வந்தோமோ அந்த நோக்கம் வெற்றி பெறவில்லை.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 மார்ச் 20

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது தான் முதல் புத்தகமா ?

ஆற்காடு திரு. நா. வீராசாமி : முதலிலேயே தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்
வெளி வந்திருக்கிறது. ஆனால் இது தான் தமிழ்ச் சுருக்கெழுத்து முதல்
அகராதி. இது குறித்து நாம் எல்லாம் பெருமைப்படுகிறோம்.

(பிற்பகல் 6-10)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முதன் முதல் தமிழிலே வந்ததா ?
முதல் புத்தகம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இதுதான் முதல் புத்தகம். முதன் முத
லாக வந்தது. வந்ததற்காகப் பெருமைப்படுகிறோம். வந்து எந்தப்
பலனை தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ அதற்கு நேர் மாறாக—
மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு ஷார்ட்ஹேன்ட் கொஞ்சம் பத்தாது என்று
நினைக்கிறேன்—மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு அந்த ஷார்ட்ஹென்ட்
புரியவில்லை என்றாலும், அந்த வார்த்தைகளைப் பார்த்தாலேயே எப்படி
இருக்கிறது என்று புரிந்துகொள்ளலாம். அந்த அளவிற்கு இந்த அகராதி
இருப்பதால் தான் சொல்கிறேன். பேச்சாளர்களை எடுத்துக் கொண்டால்
எந்த அளவிலே. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அநேகமாக அந்த விழாவிலே நானும்
கூட கலந்துகொண்டு பேசினேன் என்று நினைக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இதுபற்றி ஆளுநர் அவர்களிடத்திலே
கூட புகார் கொடுக்கப்பட்டது. அன்றையதினம் 'தினமணி', 'இந்தியன்
எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிகைகளிலே கூட அந்தச் செய்தி வந்தது. ஆகவே,
இப்படிப்பட்ட குறைபாடுகளைக் கொண்டிருக்கும் அந்தப் புத்தகத்தை உடன
டியாகப் பறிமுதல் செய்துவிட்டு, உடனடியாக ஒரு நல்ல சுருக்கெழுத்து
அகராதியை எழுத நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எல்லாவற்றிலும் தமிழ் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, போது
மான அளவுக்கு தமிழ் டைப்பிஸ்ட்களை, தமிழ் சுருக்கெழுத்தாளர்களை
வைத்திருக்கிறோமா என்றால் இல்லை. இப்போது நீதிமன்றங்களுக்கு
ஷார்ட்ஹென்ட் ரைட்டர்கள் தேவைப்படுகிறார்கள். இப்போது நமக்குத்
தேவையான பேர் எவ்வளவோ அதிலே 5 சதவீதம் பேர்கள் தான் தமிழிலே
பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இங்கே படித்துவிட்டு
இருக்கும் மாணவர்களை—வேண்டுமானால் எங்களைப் போன்று எதிர்க்



[திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கட்சிக்காரர்கள் நடத்தும் இன்ஸ்டிடியூட்களுக்கு அனுப்பாவிட்டாலும்—தமிழ் நாட்டிலே இருக்கும்—1500-க்கும் மேற்பட்டிருக்கும்—இன்ஸ்டிட்யூட்களுக்கு அந்த மாணவர்களை அனுப்பி பயிற்சி கொடுக்க வேண்டும். ஒரு 6 மாத காலத்திற்குள்ளாக லோயர் பாஸ் செய்ய வேண்டும், அடுத்த. . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கும் இன்ஸ்டிடியூட்டிலே என்னென்ன சொல்லித் தருகிறார்கள் ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : வணிக பயிற்சியிலே எல்லாம் சொல்லித் தருகிறோம். தமிழ் ஷார்ட்ஹென்ட். தமிழ் டைப்ரைட்டிங், இங்கிலீஸ் ஷார்ட் ஹென்ட், டைப்ரைட்டிங், அக்கவுன்டென்சி, பேங்கிங் போன்ற எல்லாம் சொல்லிக் கொடுக்கிறோம். ஒருவேளை எதிர்க்கட்சிக்காரர்கள் என்று சொன்னாலே, பலருக்குப் பிடிக்காது என்ற வகையிலே சொல்கிறேன் அப்படிப்பட்ட எங்களுடைய இன்ஸ்டிடியூட்களுக்கு இந்த மாணவர்களை அனுப்ப வேண்டுமே என்ற எண்ணம் இருக்குமானால், தனியார் நடத்தும் இன்ஸ்டிட்யூட்கள் இருக்கும் வேறு எங்கேயாவது அனுப்பி பயிற்சி கொடுங்கள். இந்த ஆண்டுக்குள் இத்தனை ஆயிரம் மாணவர்கள் தமிழ் ஷார்ட்ஹென்ட், தமிழ் டைப்ரைட்டிங் படிக்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டும்.

இப்போது பரிட்சைகள் நடக்கின்ற நேரம். மார்ச்-ஏப்ரல் என்று சொன்னால், பரிட்சை நடக்கும் நேரம் தான். இருக்கும் பாடங்களை ஆசிரியர்கள் முடிக்க வேண்டும். ஆனால் இந்த நேரத்திலே குடும்ப கார்டு களை வழங்குவதற்காக நகராட்சியிலே இருக்கும் பள்ளி ஆசிரியர்களை இந்தப் பணிக்குப் போகச் சொல்லியிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், சேலத்திலே இருக்கும் ஆணையர், நகராட்சிப் பள்ளிகளிலே ஆர். ஓ. சி. 4149/82 என்ற எண் உள்ள உத்தரவைப் போடவைத்து " "Order of appointment of Enumerators" என்று சொல்லி ஜி.ஓ.எம்.எஸ். நம்பர் எல்லாம் கொடுத்து, ஆரம்ப, உயர்நிலை, நடுநிலைப் பள்ளிகளுக் கெல்லாம் இப்போது தேர்வுகள் நடந்துகொண்டிருந்தாலும், "நீங்கள் குடும்பக் கார்டுகளை வழங்கும் பணிக்கு விரைந்து செல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். இப்படிச் சொல்வதன் மூலமாக ஆசிரியர்கள் பள்ளிகளிலே தாங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டிய பாடங்களைச் சரியாகச் சொல்லி கொடுக்கும் வாய்ப்பு ஏற்படுமா, அல்லது பரிட்சையை நடத்த முடியுமா என்று பார்த்து, இவைகளையெல்லாம் சீர்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் சொல்லும் குறைகளையெல்லாம் தமிழ் நாட்டின்

நன்மைக்காகத்தான் சொல்கிறேன் என்ற வகையிலே எடுத்துக்கொண்டு கல்வியைப் பற்றி இவ்வளவு தூரம் பேசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே இன்னும் இந்த இலாக்கா மிகச் சிறப்பாகச் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டு நாட்கள் கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். பல பிரச்சினைகளை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறையின் கீழ் நடைபெறுகின்ற பல்வேறு குறைபாடுகளையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அரசு தன்னுடைய கவனத்திலே எடுத்துக்கொண்டு தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமாக குறைபாடுகளைப் போக்கிக்கொள்ளவும், அந்த நல்ல யோசனைகளைச் செயல்படுத்துவதன் மூலமாக இந்தத் துறையினுடைய பணி மூலமாக சமுதாயத்தில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தவும் அரசு விரும்புகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்வதோடு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய மகிழ்ச்சியையும், நன்றியையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அவற்றிலே ஒருசிலவற்றுக்காவது நான் பதில் கூற வேண்டிய கடமையில் இருந்துகொண்டிருக்கிறேன். இங்கே பயிற்சி மொழிபற்றி நான் பேசுகிறபோது, ஒரு கருத்தைத் தெளிவாக்க விரும்புகிறேன். அண்மையில் பம்பாய் நகருக்குப் போக வேண்டிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் அங்கே தாராவியிலே இருக்கின்ற தமிழர்களின் பள்ளிக்குச் சென்றிருந்தேன். அங்கே இருக்கின்ற நண்பர்களுடைய ஒரேயொரு கோரிக்கை—நான் அங்கே போனதற்குப் பிறகு உணர்ந்துகொண்டது அவர்கள் என்னை அங்கே அழைத்ததே அதற்காகத்தான் என்று—பள்ளிக்கூடம் சம்பந்தமானது என்று உணர்ந்துகொண்டேன். அங்கே இருக்கும் ஏறக்குறைய 30 பள்ளிகளிலே 8-வது வகுப்பு வரையிலும் தமிழிலே சொல்லிக்கொடுக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்த மாணவர்கள் ஆங்கிலத்திலே தான் படிக்க வேண்டும். ஆசியாவிலேயே பெரிய சேரி என்று சொல்லக்கூடிய நிலையிலே இருக்கும் அந்த தாராவியிலே வாழும் ஏழைத் தமிழர்கள் தங்களுடைய குழந்தைகள் தமிழிலே தான் படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆங்கிலத்திலே அவர்களைப் படிக்கவைக்க விரும்பவில்லை.





ஆனால் இங்கே நாம் எடுத்துக்கொண்டால், கிராமங்களிலே இருப்பவர்கள் கூட தங்களுடைய குழந்தைகள் ஆங்லத்திலே தான் படிக்க வைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். குழந்தைகள் விரும்புகிறார்களோ என்னவோ, பெற்றோர்கள் அப்படி விரும்புகிறார்கள். அங்கே இருக்கும் பெற்றோர்கள் 'எங்களுடைய குழந்தைகள் தமிழிலே தான் படிக்கவைக்க வேண்டும்' என்ற கோரிக்கையை என்னிடத்திலே தந்து, “ இந்த நிலைமையை மராட்டிய அரசிடம் எடுத்துச்சொல்லி, மராட்டிய அரசின் மூலமாக எங்களுக்கு தமிழிலே படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தாருங்கள், அல்லது தமிழக அரசின் சார்பிலேயாவது இங்கே பள்ளிக்கூடங்களை நடத்துங்கள், அப்படி நடத்தி தமிழிலே மேற்கொண்டு படிக்க ஏற்பாடு செய்யுங்கள் ” என்று கேட்டுக்கொண்டார்கள். நான் அங்கே நேரடியாக ஒரு அனுபவத்தைப் பெற்றேன். ஏழைகள், பாமர மக்கள் தாங்கள் தமிழிலே படிக்க முடியாத நிலை இருக்கிறது என்று சொன்னால், அவர்கள் 7வது அல்லது 8வது வகுப்புக்கு மேல் தொடர்ந்து படிக்க முடியாமல் அவர்கள் அங்கே என்னென்ன தொழில்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் நேரடியாகப் பார்த்தேன். ஆகவே, சாதாரண மக்களுடைய நலனுக்காக, பாமர மக்களுடைய நலனுக்காக, முதல் தடவையாக பள்ளிக்கூடங்களுக்கு வருகின்ற குழந்தைகளுடைய நலத்திற்காக நாம் தமிழைப் பயிற்சி மொழி ஆக்கினால், அவர்கள் அதன் மூலமாக முன்னேற வாய்ப்பு இருக்கிறது என்பதையும், அதற்கு மேலாக பலர் விரும்புவதைப் போல எல்லாம் ஆங்கிலத்தில்தான் நடைபெறட்டும் என்று நினைத்தால், அந்த மக்கள் நிரந்தரமாக சமுதாயத்திலே பின்தங்கிய நிலையிலே தான் இருப்பார்கள், ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினருக்கு இவர்கள் அடிமைகள் போலத்தான் இருக்கும் நிலை ஏற்படும், அவர்கள் ஒரு நியாயமான தொழிலைச் செய்ய, ஒரு ஒழுங்கான தொழிலைச் செய்ய, பட்டம் பதவிகளைப் பெற்று சமுதாயத்திலே முன்னேற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதையும் நான் நேரடியாகப் பார்த்தேன். பயிற்சி மொழியாக தமிழ் இருக்க வேண்டும், அல்லது அப்படித்தான் இருக்க வேண்டும் என்று அறிஞர் பெருமக்கள் சொல்வது இப்படிப்பட்ட மக்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதற்காகவே தான். மேலும் சிந்தனை என்பதை எடுத்துக்கொண்டால், அதை தாய்மொழி மூலமாகத்தான் பெற முடியும். ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டும் நமக்குத் தேவையில்லை. இவர்களுக்கு ஆங்கிலம் தெரியும் என்று சொல்வதில் நமக்கு எந்தவிதமான லாபமும் இல்லை. இவர்களுக்குச் சிந்திக்கத் தெரியும், இவன் புதிதாக சிலவற்றைச் சிந்திக்கிறான், அதனால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடிகிறது

என்று சொல்வதில்தான் பெருமை இருக்கிறது. எம்.ஏ., எம்.எஸ்ஸி. படித்துவிட்டு ஏதாவது ஒரு பிரச்சினை என்று சொன்னால், அவனைக் கூப்பிடு, இவனைக் கூப்பிடு என்று சொல்லிக்கொண்டிருக்கும் நிலை இல்லாமல், அவனே அவனுடைய பிரச்சினைகளைத் தீர்க்கும் அளவுக்குச் சிந்திக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு அவனுடைய படிப்பு உதவ வேண்டும் என்று சொன்னால், தாய்மொழியிலே கல்வி பெற்று சிந்திக்கும் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். தாய் மொழியால் தான் அது முடியும். அதன் காரணமாகத்தான் நாம் தாய்மொழியிலே படித்து, சிந்திக்கத் தெரிந்த பல தலைவர்களைப் பெற்றிருக்கிறோம். அதற்கு ஒரு எடுத்துக்காட்டாகத் தான் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள். சிந்திக்கும் தொழில் நடைபெற வேண்டும், அதன் மூலமாக அறிஞர்கள் உருவாக வேண்டும் என்று நினைத்தால், அது தாய்மொழிக் கல்வியின் மூலமாகத் தான் நடைபெற வேண்டும். ஆங்கிலம் படிக்கிறார்கள் என்று சொன்னால்; தாய்மொழியிலே படிக்காமல் ஆங்கிலத்திலே படிக்கிறார்கள் என்று சொல்வதை ஏதோ ஒரு வரப்பிரசாதமாகவோ, ஒரு சலுகையாகவோ, ஒரு பெரிய பரிசாகவோ நினைக்கவில்லை. ஆனால் கூடுதலான ஒரு தடையாகத்தான் நினைக்கிறோம். ஒரு மாணவன் ஆங்கிலத்தில் படிக்கிறான் என்றால், அதற்கும் தன்னுடைய தாய்மொழியில் படிப்பதற்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. தாய் மொழியில் படிக்கும் மாணவன் ஆங்கிலத்தில் படித்துக் கொண்டிருப்பதைவிட பத்து மதிப்பெண்கள் அதிகமாக வாங்கமுடியும் அந்த வகையிலே மார்க் என்ற அடிப்படையிலே எங்கெங்கே போட்டியிட முடியுமோ அங்கெல்லாம் பத்து மார்க் அதிகமாக வாங்கி போட்டியிலே வெற்றி பெற வாய்ப்பு இருக்கிறது. தமிழில் படித்துக் கொண்டிருக்கிறவர்களுக்குச் சலுகை தர வேண்டுமென்று கேட்பதிலே கூட அடிப்படை இருப்பதாக நான் கருதவில்லை. இயல்பாக தமிழில் படித்தவர்கள் நல்ல மார்க் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழில் படிக்காமல் இருந்தால், இன்னும் மோசமான நிலையில் இருந்திருக்க முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆங்கிலத்திலே படிக்கின்றவர்கள் பணம் கட்டியாக வேண்டும். தமிழில் படிக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை என்பதால், ஹையர் வகுப்புகளில் முக்கியமான பாடங்களை தமிழில் வைத்திருக்கிறோம். மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் சம்பளம் வாங்கிக்கொண்டு ஆங்கிலத்திலே சொல்லித் தந்து கொண்டிருக்கிறார்கள். வேறு வகையிலே தமிழ் பயிற்சி மொழி என்பதை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறோம். தமிழிலேயே படிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தாதற்குக் காரணம், விவரம் தெரியாத நிலையில் பொது மக்களுடைய எதிர்ப்பு வரும் என்பதுதான். சொன்னால்



புரிந்துகொண்டு அதை எற்றுக்கொள்ளக் கூடிய நிலை மக்களிடத்திலே இல்லை என்பதால்தான் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் இயல்பாகவே மாணவர்களே விரும்பி தமிழில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். பி.யூ.சி. இருக்கும்போது எத்தனை பேர் படித்தார்கள், இதிலே எத்தனை பேர் ஆங்கிலத்திலே படித்தார்கள் என்பதை மனதிலே கொண்டு மேல்நிலை வகுப்புகளில் 11, 12 ஆவது வகுப்புகளில் எத்தனை பேர் படிக்கிறார்கள், அவர்களில் எத்தனை பேர் தமிழில் படிக்கிறார்கள் என்பதைப் பார்த்தால், கடந்த மூன்றாண்டுகளில் பயிற்சி மொழியைப் பொறுத்த வரையில் கணிசமான முன்னேற்றத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-20)

இன்னுமொரு சங்கடத்தைக் கூட கர்நாடகா மாநிலத்தில் உள்ளவர்கள் தெரிந்தவர்கள்: அங்கே கன்னடத்தை முதல் மொழியாக ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இரண்டாவது மொழியாக ஆங்கிலம் அல்லது தாய்மொழி என்றும், மூன்றாவது மொழியாக இந்தி என்றும் சொன்னதற்குப் பிறகு அங்குள்ள சிறுபான்மையோர் கன்னடத்தைக் கட்டாயம் படிக்க வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. அங்கே மும்மொழித் திட்டம் அமுலில் இருந்தாலும், அங்குள்ள சிறுபான்மையோர் மன நிறைவோடு வாழ முடியாத நிலையை கர்நாடகாவிலே உருவாக்கியிருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஆங்கிலம் கட்டாயமாக இருக்கிறது. தமிழ் அல்லது தாய்மொழி என்று இல்லை. சிறுபான்மை மக்களுடைய தாய்மொழிக்கும் உரிய மரியாதை தந்து,—அவர்கள் பஞ்சாபியாக இருக்கலாம், கேரளாவிலிருந்து வந்தவர்களாக இருக்கலாம், கர்நாடகாவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்—அவர்கள் தங்களுடைய மாநிலத்திலே இருந்தால் எத்தகைய கல்வியைப் பெறுவார்களோ அத்தகைய கல்வியைத் தருவதன் மூலமாக அவர்கள் தங்கள் மாநிலத்தை விட்டு வேறு மாநிலத்திற்கு வந்திருந்தாலும் வித்தியாசம் தெரியாத அளவிற்கு தங்களுடைய மாநிலத்திலே வாழுவதைப் போலவே உணர்வைப் பெறுகிறார்கள். நம்முடைய இருமொழித் திட்டத்தினால் சிறுபான்மையோருக்குக் கிடைக்கும் மனநிறைவு மும்மொழித் திட்டத்தை நிறைவேற்றுகிற பல்வேறு மாநிலங்களில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஆகவே பள்ளிகளில் பயிற்சி மொழி ஆங்கிலம் என்று சொல்லுகின்ற இந்த முடிவை, இப்போது இருக்கின்ற சூழ்நிலையில், இப்போது இருக்கின்ற அரசியல் அமைப்பு முறையில், நாம் வேறு பல மாநிலங்களோடு தொடர்பு

கொள்ள வேண்டிய நிலையில், புத்திசாலித்தனமாக எடுக்க வேண்டிய இந்த முடிவை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலே எடுத்து தொடர்ந்து பின்பற்றி வருகிறோம். இதன் மூலமாக தமிழக மக்கள் முழுப் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிற் கல்வியை வரவேற்றும், அது இப்போது இருப்பதைவிட நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்றும் கருத்துச் சொன்னதற்காக நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். தொழிற் கல்விக்கு வரவேற்பு கிடைக்க வேண்டும். தொழிற் கல்வியில் இன்னும் சிறப்பான முயற்சியினை மேற் கொள்ள வேண்டும். இன்றைய தினம் மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வியைப் புகுத்தியிருக்கிறோம். இரண்டரை லட்சம் பேர் உள்ள மேல் நிலைப்பள்ளிகளில் ஐம்பதாயிரம் பேர்தான் தொழிற் கல்வியை எடுத்திருக் கிறார்கள். நாம் யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. அவர்களே விரும்பி முன்வந்து படிக்கிறார்கள். ஆனால் மற்ற மாநிலங்களையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் கூட, பத்தாயிரம் பேருக்கு மேல் தேறுவதில்லை. ஆனால் தமிழ் நாட்டில் ஐம்பதாயிரம் பேர் தொழிற் கல்வியைப் படிக் கிறார்கள். அதுவும் இஷ்டப்பட்டுப் படிக்கிறார்கள். தொழிற் கல்விக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது என்பதற்கு இது அறிகுறியாகும். ஆனால் இதோடு திருப்தியடையவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த உணர் வோடு கருத்தைச் சொன்னார்களோ அதே உணர்வோடுதான் இந்தப் பிரச் சினையை நாம் அணுகுகிறோம். ஆகவே தொழிற் கல்வியில் நாம் திருப்தி அடையவில்லை. இன்னும் பல்லாயிரம் பேர் தொழிற் கல்வியைப் பெற வேண்டும், அதன் மூலமாக சமுதாயத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்புகிறோம்.

நான் அமெரிக்காவிற்குச் சென்றபோது அங்கே ஒரு, செய்தியைப் பார்த்தேன். அதை முன்பே கூட இங்கே சொல்லியிருப்பேன் என்று கருது கிறேன். அங்கே பத்திரிகையிலே ஒரு செய்தித் தலைப்பைப் பார்த்தேன். அங்கே வெல்டர், மெக்கானிக் போன்ற தொழில் துறைகளை 'ஆற்றல்கள்' என்று பேசுகிறார்கள். இத்தகைய "வைட்டல் ஸ்கில்ஸ்" 'முக்கியமான ஆற்றல்கள்' குறைந்துகொண்டே வருகிற காரணத்தால், அமெரிக்காவின் பொருளாதாரம் சீர்குலைகிறது என்ற கருத்தைப் பிரசுரித்திருந்தார்கள். ஆகவே ஒரு நாட்டினுடைய பொருளாதாரம் வளருவதற்கும், தாழ்வதற்கும் அந்த நாட்டிலே இருக்கின்ற இளைஞர்கள் மத்தியிலே நாம் வளர்கின்ற தொழில் ஆற்றல்கள்தான் அடிப்படை என்பதை அந்த ஒரு வரித் தலைப்பே



எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. அதிலே மிகுந்த கருத்தோடு சிந்தித்து ஆராய்ந்து பார்த்தால், ஒரு நாடு முன்னேறுவது அதன் இயற்கை வளங் களைப் பொறுத்ததல்ல, நாட்டிலுள்ள இளைஞர்கள் மத்தியிலே வளர்கின்ற தொழில் ஆற்றல்களைப் பொறுத்தது என்பதைத் திட்டவட்டமாகக் கருத முடிகிறது. ஆகவே தொழில் ஆற்றல்களை வளர்க்கும் குறிக்கோளோடு தொழிற் கல்வியை பல்வேறு மட்டங்களில் புகுத்திக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் சொல்லப் போனால் முந்தைய அமெரிக்கத் தூதுவராக இங்கே இருந்த பேராசிரியர் கால்பிரெய்த் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தார். டெல்லிக்கும் வந்திருந்தார், அவர் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்த போது வளருகின்ற நாடுகளுக்கு யோசனை ஒன்றைச் சொல்லியிருப்பதை நாம் பார்க்க வேண்டும். "கல்விக்காக எந்த அளவிற்கு முதலீடு செய்கிறார் களோ அந்த அளவிற்குத் தான் நாடு முன்னேற முடியும்" என்று சொல்லி யிருக்கிறார். அவருடைய கருத்தையும், இது போன்ற பல்வேறு நிலை களையும், பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றும் பல்வேறு நாடுகளில் வெற்றிகரமாக உள்ள கல்விக் கொள்கையையும் பார்க்கும்போது, நமக்குக் கிடைக்கிற ஒரே ஒரு பாடம், "எந்த அளவிற்கு தொழில் ஆற்றல்களை நம்முடைய இளைஞர்களுக்கு நாம் சொல்லித் தந்து வளர்க்கிறோமோ அந்த அளவிற்கு ஒரு நாடு முன்னேற முடியுமே தவிர வேறு அடிப்படையிலே அல்ல" என்பதைப் பூரணமாக உணர்ந்திருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல், நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்களை வகுப்பதற் காக நாம் உருவாக்கியிருந்த திட்டக் குழு தன் சார்பிலே வெளியிட்ட கல்விக் கொள்கை பற்றிய குறிப்பிலே,

"குழந்தை பருவத்திலிருந்தே சமுதாயத்தின் பயனுள்ள ஒரு உறுப்பின ராக முழுமை வாய்ந்த உடல் நலன் மற்றும் மன நலன் வாய்ந்தவர்களாக வளர வழி வகுத்தல்; மாநிலத்தின், நாட்டின், உலகத்தின் பண்பாடு மற்றும் வரலாற்றை உணர்ந்து அறிதல்; நாட்டின் ஒழுக்கம் மற்றும் ஆன்மீக கோட் பாடுகளில் ஈடுபாடு; அறிவியல் தொழில் நுட்பவியல் மற்றும் வாழ்க்கைத் தொழிலியல் அறிவை முழுமையாகப் பெறுதல்; அறிவியல் எல்லைகளை விரி வாக்கவும் மாநிலத்தையும், நாட்டையும் எதிர்நோக்கியுள்ள தொழில்—நுட்ப வியல் மற்றும் வளர்ச்சிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்; கல்வியைப் பரவலாக்குதல்; பல்வேறு நிலைக் கல்விகளுக்கு

மான வளர்ந்து வரும் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ; மாநிலத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாடும் பெரும்பான்மை மக்கள் கல்வியின் பயனை பெறும் விதத்தில் ஊக்குவித்தல் "

ஆகிய நோக்கங்களைத்தான், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், கொண்டு உள்ளது என்று தங்களுடைய நோக்கமாகக் கூறியிருக்கிறார்கள். இந்த நோக்கத்தோடுதான் நாம் இதை இங்கே செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதை தெளிவாகத் தெரிவித்துவிட வேண்டுமென்ற முறையில் தெரிவித்து நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம், இனிமேலும் எடுப்போம். குறிப்பாக தொழிற் கல்வியைப் பொறுத்தவரையில், இப்போது நடைபெற்று வருவதிலே திருப்தி இல்லை என்ற அடிப்படையிலேதான் பேறிஞர் அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் குழந்தைசாமி அவர்கள் தலைமையில் ஒரு குழுவை நாம் நியமித்திருக்கிறோம். பாலிடெக்னிக் கல்வியையும், ஐ.டி.ஐ. கல்வியையும், மேல்நிலைக் கல்வியிலே தரப்படுகிற தொழிற் கல்வியையும் அல்லது இந்த வரம்பிற்குள் உட்படாத வேறு முறையில் தர முடியும் என்று கருதப்படுமானால் அந்த முறைகளையும் பரிசீலித்து, இன்றைக்கு நாட்டிலே தரப்பட்டு வருகிற தொழிற் கல்வியில் என்னென்ன மாற்றங்களைச் செய்ய முடியுமோ அவற்றுக்கான யோசனைகளைச் சொல்லவும் அல்லது தொழிற் கல்விக்காக வேறு சில புதிய அமைப்புகளை உருவாக்க வேண்டுமென்று நினைப்பார்களேயானால் அத்தகைய யோசனைகளைச் சொல்லவும் வேண்டும் என்ற அடிப்படையில் நாம் அந்தக் குழுவை அமைத்திருக்கிறோம்.

உதாரணத்திற்கு, திருச்சியிலே கூட ஒரு கூட்டுறவுத் தொழில் கல்வி நிறுவனம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதை இப்போது நிறுத்தி வைத்திருக்கிறோம். வேறு சில பிரச்சினைகள் காரணமாக நிறுத்தி வைத்திருக்கிறோம்.

(பிற்பகல் 6-30)

ஆனால் அங்கே ஆறு மாதம் சொல்லித் தருவார்கள். மீதி ஆறு மாதம் ஏதாவது ஒரு தொழிற்சாலையிலே போய் அந்தப் பயிற்சியிலே மாணவர்கள் பங்கு கொள்வார்கள். அத்தகைய மாணவர்களுக்கு நல்ல தொழிற் கல்வியை அங்கே தந்துகொண்டிருந்தார்கள். அதுபோல பல்வேறு வகைகளிலே மாணவர்களுக்குத் தொழிற் கல்வி கொடுக்கிறார்கள். நான் ஸ்டேட்ஸ்ல் போய்ப் பார்த்தேன். அங்கே காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரைக்கும் தொழிற் கல்வி தந்துகொண்டிருக்கிறார்கள். முறையாக மாணவர்கள் படித்துக்கொண்



டிருக்கிறார்கள். வயது வந்தவர்கள் வந்து புதிதாகப் படிக்கிறார்கள். ஏற்கெனவே படித்து ஒரு தொழிலில் இருப்பவர்கள் மேலும் புதிய அறிவைப் பெறுவதற்காக, கன்டினியூயிங் எஜுகேஷன் என்று சொல்கின்ற அளவிலே மேலும் மேலும் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி தொழில் அறிவை மேலும் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டு அந்த முயற்சிகளை மேற்கொண்டு அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் அமெரிக்கப் பொருளாதாரத்தின் அடிப்படை என்று சொல்கின்ற அளவுக்கு அங்கே காரியங்கள் நடைபெறுகின்றன. தொழில் வளர வேண்டுமென்ற ஆசையை நாம் அவர்களைப் போல வைத்துக்கொண்டு முன்னேற வேண்டும் என்று ஆசைப்படுவோமானால், அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்கின்ற எல்லா முயற்சிகளையும் நாம் இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகளிலே நாம் ஈடுபட வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு கல்வித் துறை போய்க்கொண்டிருக்கிறது. நாம் கடந்த மூன்று ஆண்டு காலத்திலே எடுத்திருக்கின்ற முயற்சிகளைப் பார்த்தால், அதிலே எந்த அளவுக்கு கவனம் செலுத்தி வந்திருக்கிறோம் என்பது தெரியும். அதிலே மேற்கொண்டு நல்ல முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்பதில் மாண்புமிகு அங்கத்தினர்களும் அக்கறை காட்ட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தெளிவாக்கப்பட வேண்டும் என்ற அளவில்தான் நாம் கல்வித் துறை என்ற பெயரை கல்வி அறிவியல் தொழில் நுட்பத் துறை என்று மாற்றியிருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து 6 வயது முதல் 11 வயது வரை, 11 வயது முதல் 14 வயது வரை பள்ளிக் கல்வியில் சேர்ப்பது பற்றிய புள்ளி விவரத்தைப்பற்றி நான் விவரமாகத் தரவேண்டும் என்பதை என் கடமையாகக் கருதுகிறேன். காரணம் அண்மையிலே தேசிய அபிவிருத்தி கவுன்சிலில் நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் அவர்களுக்குத் தரப்பட்ட விவரத்தை வைத்து அவர்கள் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது கர்நாடகத்தைவிட அல்லது இன்னொரு மாநிலத்தைவிட தமிழ் நாடு கல்வித் துறையிலே பின்தங்கி இருப்பது போன்ற ஒரு உணர்வை படிக்கின்றவர்களுக்கு ஏற்படுத்தும். இப்படி ஒரு தவறு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்பதற்கான ஒரு விளக்கத்தை நான் இங்கே தரக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த விவரங்களை மாண்புமிகு அங்கத்தினர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(திரு. செ. அரங்கநாயகம்) [1982 மார்ச் 20

தொடக்கப் பள்ளி வகுப்புகளில் 6—11 மற்றும் 11—14 வயதுத் தொகுதியினரைச் சேர்ப்பது குறித்து ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகிய 1984-85-ல் இந்தியா அனைத்திலும் எய்த வேண்டும் என்று குறித்திருக்கும் இலக்குகள்—

6 முதல் 11 வயதுத் தொகுதியில் 95 பர்சென்டும்,

11 முதல் 14 வயதுத் தொகுதியில் 50 பர்சென்டும் ஆகும்.

14—3—1982 அன்று டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பிரதமர் அவர்கள் உரையில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் மேற்சொன்ன இலக்குகளுக்குக் குறைவான அளவே பள்ளிகளில் அவ்வயதுத் தொகுதி மாணவ மாணவியரைச் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகமும் சேர்க்கப்பட்டிருந்தது. இது சரியல்ல என்பதும், தமிழகம் ஏற்கெனவே அந்த இலக்குகளை எய்தி இருப்பதும், 1984-85-லும் அந்த இலக்குகளுக்குக் கூடுதலாகவே சாதனை செய்யும் என்பதும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அக்கூட்டத்திலேயே தெளிவாக்கப்பட்டது. இது குறித்து நிலைமையை நான் சற்று தெளிவாக்க விரும்புகிறேன்.

மாணவ மாணவியர் சேர்ப்பு விகிதம் என்பது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது :

"6 முதல் 11 வயதுத் தொகுதியினரை எடுத்துக்கொண்டால், அவ்வயது தொகுதியில் உள்ள மொத்தக் குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட வயதுத் தொகுதிகள் ஐந்தை—அதாவது 6 வயது முடிந்தவர்கள், 7 வயது முடிந்தவர்கள், 8 வயது முடிந்தவர்கள், 9 வயது முடிந்தவர்கள், 10 வயது முடிந்தவர்கள் ஆகியோர் எண்ணிக்கையைக் கூட்டவேண்டும். பின்னர் அந்த வயதுத் தொகுதியினர் பயிலக்கூடிய வகுப்புகளாகிய 1—5 வகுப்புகளில் பயிலுவோர் எண்ணிக்கையைக் கூட்டிட வேண்டும். மொத்த எண்ணிக்கையில் அவ்வாறு பயிலுவோர் எண்ணிக்கை எத்தனை விழுக்காடு என்று கணக்கிட்டு "பள்ளிகளில் சேர்ந்தோர் விழுக்காடு" கண்டுபிடிக்கப்படுகிறது.

ஒன்று முதல் ஐந்து வகுப்புகளில் பயிலுவோர் எண்ணிக்கையைப்பற்றி யாதொரு பிரச்சினையும் இல்லை.

ஆனால், 1 முதல் 5 வகுப்புகளில் பயிலுவதற்குரிய வயதுத் தொகுதியினர் எண்ணிக்கையைக் கணக்கிடுவதில் இவ்வரசு இதுவரை பின்பற்றியுள்ள முறைக்கும் மைய அரசு பின்பற்றியுள்ள முறைக்கும் வேறுபாடு உண்டு. மைய அரசு பின்பற்றும் முறையை மேலே சொல்லியிருக்கிறேன்.



1982 மார்ச் 20]

தமிழகத்தில் 5 வயது முடிந்தவர்கள் முதல் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். இந்த அடிப்படையில் 6 முதல் 11 வயதுத் தொகுதியினர் மொத்த எண்ணிக்கையைக் கணக்கிட இவ்வரசு இதுவரை, 5 பிளஸ் வயது முடிந்தவர்கள், 6 வயது முடிந்தவர்கள், 7 வயது முடிந்தவர்கள், 8 வயது முடிந்தவர்கள், 9 வயது முடிந்தவர்கள், 10 வயது முடிந்தவர்கள் ஆக வயதுத் தொகுதிகள் ஆறின் எண்ணிக்கை கூட்டப்படுகிறது.

இதிலிருந்து மைய அரசு கணக்கிடும் முறைப்படி, 1981-82-ல் தமிழகத்தில் 6 முதல் 11 வயதுத் தொகுதியினரில் பள்ளியில் சேர்ந்தோர் விழுக்காடு, 53.21, லட்சம் பேர்களில் 64.07 லட்சம் பேர் அதாவது 120 பர்சென்ட் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுவிட்டனர் என்று ஆகும். இருப்பதோ 53 லட்சம்; எப்படி 64 லட்சம் பேரைச் சேர்த்தீர்கள் என்று கேட்பது நியாயம். இந்த புதிர் கணக்கிற்கான விளக்கம் மைய அரசு கல்வித் துறை தயாரித்துள்ள 2-வது அனைத்திந்திய கல்வி நிலைக் கணக்கெடுப்பு அறிக்கையிலேயே தரப்பட்டுள்ளது. அது பின்வருமாறு :

ஆறு முதல் 11 வயதுத் தொகுதிக்கு பள்ளியில் சேர்க்கப்பட்டோர் 75 பர்சென்ட் என்றால் பொதுவாக அனைவருக்கும் தப்பர்த்தம் செய்து கொள்வது போல் 6 முதல் 11 வயதுத் தொகுதியினரில் 75 பர்சென்ட் பள்ளிகளில் படிக்கிறார்கள் என்பதல்ல அர்த்தம். பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புகளில் பயிலுவோருள் 6-க்குக் குறைந்தவர்களும் இருப்பர். 10-க்கு மேற்பட்டவர்களும் இருப்பர். ஒரு பகுதியில் 6 முதல் 11 வயதுத் தொகுதியினர் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்பட்டுவிட்டனர் என்ற நிலைமை எய்த வேண்டுமானால் (6-க்குக் குறைந்தவர்கள், 10-க்கு அதிகமானவர்கள் ஆகியோருள் 1 முதல் 5 வகுப்புகளில் பயில்வோர் இருப்பார்களாதலால்) மாணவர் சேர்க்கை 100-க்கு அதிகமாக இருக்கும். எடுத்துக்காட்டாக 1965-ல் கேரளத்தில் 6 முதல் 11 வயதுத் தொகுதிக்கு பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவிதம் 117 பர்சென்ட் ஆக இருந்தது ".

இதனைப் புரிந்துகொண்டால் முன் சொல்லியபடி தமிழகத்தில் மைய அரசு கணக்கிடும் முறைப்படி 6 முதல் 11 வயதுக்குப் பள்ளிகளில் சேர்ந்தோர் சதவிதம் 1981-82-ல் 120 பர்சென்ட் ஆக இருந்தது என்பது வியப்புக்குரியதல்ல. இதே கணக்கீடு முறைப்படி 1984—85-ல் 6 முதல் 11 வயதுத் தொகுதியில், மொத்தம் 51.61 லட்சத்திற்கு எதிராக 68.43 லட்சம் பேர்—அதாவது 133 பர்சென்ட் பள்ளிகளில் சேர்ந்திருப்பர். இது அகில இந்திய 6-வது திட்ட முடிவு (1984-85) இலக்கைவிட அதிகம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஆனால் எப்படி தமிழக அரசு பின்பற்றும் முறைப்படி 6 முதல் 11 வயதுத் தொகுதியில் 1981-82-ல் பள்ளியில் சேர்ந்தோர் விழுக்காடு 94.76 ஆக இருக்கிறதென்றால், 5 பிளஸ் முதல் 10 பிளஸ் முடிய 6 வயதுத் தொகுதியினர் மொத்த எண்ணிக்கை 67.62 லட்சத்தில் பள்ளிகளில் சேர்ந்த 64.07 லட்சம் பேர் என்பது 94.76 பர்செண்ட் ஆக இருக்கிறது. 1984-85-ல் நமது கணக்கு முறைப்படி மொத்தம் 5 பிளஸ் முதல் 10 பிளஸ் முடிய 6 வயதுத் தொகுதியினர் மொத்த எண்ணிக்கை 72 லட்சத்தில் 68.43 லட்சம் பேர் என்பது 93.5 பர்செண்ட் ஆக இருக்கும். மற்ற எல்லா மாநிலங்களும் மைய அரசும் பின்பற்றி வரும் முறையின்படி கணக்கிட்டால் தமிழகத்தில் 6 முதல் 11 வயதுத் தொகுதியில் பள்ளியில் சேர்ந்தோர் எண்ணிக்கை இப்பொழுதே 95 பர்செண்ட்டுக்கு மிக அதிகமாக இருக்கிறது என்பதும் 6-வது திட்ட இறுதியிலும் அவ்வாறே மிக அதிகமாக இருக்கும் என்பதும் தான் உண்மையான நிலைமையாகும்.

11 முதல் 14 வயதுத் தொகுதியினரைப் பொறுத்தவரையிலும், நிலைமைகள் இதேபோல்தான் உள்ளன.

அதற்கு அடுத்து கல்விக்கான நிதி ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு அங்கத்தினர்கள் கருத்துச் சொன்னார்கள்

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்த 1 முதல் 11 வயதுத் தொகுதியைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டு வந்தார்கள். மதிப்பிற்குரிய பிரதமர் அவர்கள் என்ன கருத்தைச் சொன்னார்கள் என்பதற்கான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அறிக்கையிலேயே இப்போது இங்கே கொடுத்திருக்கின்ற புள்ளி விவரத்திலேயே 14 முதல் 16 வயது அல்லது 17 வயது தொகுதி இருக்கிறதே அந்தத் தொகுதியில் 1973-74-ல் 22.38 லட்சம் மாணவர்கள் படித்திருக்கிறார்கள். ஆனால் 1981-82-ல் 17.25 லட்சமாகக் குறைந்து இருக்கிறதே அதற்கு என்ன காரணம் ? மீதி எல்லாத் தொகுதியிலும் உயர்ந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். 6 வயது—11 வயது தொகுதியிலே, 60.24 லட்சம் பேர்கள் என்பது 67 லட்சமாக உயர்ந்து வருகின்ற நேரத்திலே, குறிப்பிட்ட இந்தத் தொகுதியிலே மட்டும் 14-லிருந்து 16 வரையில் 22.38 லட்சம் என்பது 17 லட்சமாகக் குறைந்திருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 11-வது என்று இருந்ததை 10-வது என்று மாற்றும்போது அப்படி அதிலேயிருந்து குறைந்ததற்குக் காரணமாக இருக்கலாம். அதுபற்றிய விவரம் இப்போது இல்லை. இதுபற்றி பிறகு சந்தர்ப்பம் வரும்போது சொல்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர்கள் நிதி ஒதுக்கம் பற்றிச் சொன்னார்கள்.

மாநில அரசு வருவாய்க் கணக்கில் செய்யும் செலவில் கல்விக்கான நிதி ஒதுக்கம் (அதாவது கல்வி மானியத்தின்கீழ் செய்யும் நிதி ஒதுக்கம்) கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டுதோறும் ஏறத்தாழ 22 விழுக்காடு அளவுக்கு இருந்து வருகிறது. கடந்த காலத்தில் பார்ப்போமானால், 1955-56-ல் ரூ. 52 கோடியில் கல்வி மானியத்தின் கீழ் செலவு ரூ. 11 கோடி, அதாவது 21.08 பர்செண்ட். 1965-66-ல் ரூபாய் 181 கோடியில் கல்வி மானியத்தின் கீழ் செலவு, ரூபாய் 36 கோடி., அதாவது 20.94 பர்செண்ட். 1975-76-ல் ரூபாய் 558 கோடியில் கல்வி மானியத்தின்கீழ் செலவு, ரூ.123 கோடி, அதாவது 22 பர்செண்ட் என்று இருந்து வந்துள்ளது.

அண்மை ஆண்டுகளை எடுத்துக்கொண்டால், 1980-81-ல் ரூபாய் 1,152 கோடியில் கல்வி மானியத்தின்கீழ் செலவு, ரூபாய் 232 கோடி, அதாவது 20.1 பர்செண்ட். 1981-82-ல் திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 1,298 கோடியில் கல்வி மானியத்தின்கீழ் செலவு, ரூபாய் 262 கோடி, அதாவது 21.9 பர்செண்ட்.

(பிற்பகல் 6-40)

1982-83-ல் பட்ஜெட் மதிப்பீட்டில் ரூ. 1,370 கோடியில் கல்வி மானியத்தின் கீழ் செலவு ரூ. 291 கோடி, அதாவது 21.3 பர்செண்ட் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்வரை ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களுக்கு ஆன செலவு கல்வி மானியத்தின்கீழ் காட்டப்பெற்று வந்தது. இப்பொழுது 'சமுதாய வளர்ச்சி' மானியத்தில் காட்டப்படுகிறது. அவ்வகையில் 1981-82-லும் 1982-83-லும் ஆண்டுக்கு ரூ. 9½ கோடி அளவில் ஆகும் செலவையும் கணக்கில் கொண்டால், கல்விச் செலவு அவ்வாண்டுகளில் 22 பர்செண்ட் அளவில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. ஆர். தாமோதரன் : தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக எடுத்துக்கொண்டதால், அதற்காகும் செலவையும் அரசு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதையும் சேர்த்துப் பார்க்கும்போது, ஒதுக்கீடு குறைவாகத்தான் இருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நம்முடைய அமைச்சரவர்கள் 22 சதவிகிதமென்று குறிப்பிட்டதுபற்றி நான் கவலைப்படவில்லை. கல்விக்கு ஒதுக்கீடு குறைந்திருக்கிறதென்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது, 25 சதவிகிதம், 26 சதவிகிதம்வரை கல்விக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போது குறைந்திருக்கிறதென்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, என்னிடத்தில் தரப்பட்டிருக்கிற விவரங்களைத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதை சரிபார்த்து, தகவல்களைத் தருகிறேன்:

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் 1-6-1981 முதல் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்கள் ஆக்கியுள்ளமையை அனைவரும் வரவேற்றுள்ளனர். அவ்வாசிரியர்களுக்கான பணி விதிகள் வெளியாகும் வரையில் அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கைக் கட்டுப்பாட்டு அதிகாரம் பின்வருமாறு இருக்குமென்று ஆணையிடப்பட்டுள்ளது. அதாவது ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து வட்டாரக் கல்வி அதிகாரி கருத்துரு அனுப்பி மாவட்டக் கல்வி அதிகாரி இறுதி முடிவு செய்வார். 1-6-1981 க்கு முன்னர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் இட்ட ஒழுங்கு நடவடிக்கை ஆணைகளுக்கும், 1-6-1981 க்குப் பின்னர் மாவட்டக் கல்வி அதிகாரிகள் இடும் ஒழுங்கு நடவடிக்கை ஆணைகளுக்கும் எதிராக ஆசிரியர்கள் மேல்முறையீடு செய்துக்கொள்ளக்கூடிய அதிகாரி தலைமைக் கல்வி அதிகாரி ஆவார். மேல்முறையீட்டில் இடப்படும் ஆணைக்கெதிராகத் தரப்படும் மீள்பார்வை மனுக்களை (ரிவிஷன் பெட்டிஷன்) மீது பள்ளிக் கல்வி கூடுதல் இயக்குநர் ஆய்வு செய்து இறுதி முடிவு வழங்குவார்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு 1—6—1981-க்கு முற்பட்ட காலங்களுக்கும் எதிராக ஆசிரியர்கள் மேல்முறையீடு செய்துகொள்ளக்கூடிய அதி மூலம் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த நிலுவைகள் இதுவரை கொடுக்கப்படவில்லை என்ற சான்றிதழ் தந்து, அதன்பின் அந்த நிலுவைகளை அவர்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆணையிடப்படும்.



தனியார் பள்ளிகள்—தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளி (முறைப்படுத்துதல்) சட்டம், 1973 மற்றும் அச்சட்டத்தின்கீழ் வகுத்த விதிகள், 1974 ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்து திருத்தங்களை வெளியிட அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக பள்ளிக் கல்வி இயக்குநரின்கீழ் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டம் மற்றும் விதிகளில் தற்போது உள்ளபடியே ஆசிரியர்கள் நியமனம் மற்றும் தற்காலிக வேலை நீக்கம் பற்றி பின்வரும் பாதுகாப்புகள் உள்ளன :—

நியமனம்—முழுத் தகுதி பெற்றவர்களை முறையான காலி இடங்களில் (3 ஆண்டுகளுக்குத் தொடரக்கூடியவை) முறையாக நியமிக்கலாம்.

தற்காலிக வேலை நீக்கம்—தவறான நடத்தைக்காக விசாரணையை எதிர்நோக்கி இருந்தாலொழிய தனியார் பள்ளி ஆசிரியர்களையும் பிற பணியாளர்களையும் தற்காலிக வேலை நீக்கம் செய்ய முடியாது. அதுவும் தற்காலிக வேலை நீக்கம் செய்த நாளிலிருந்து 2 மாதத்திற்குமேல் அமுலில் இருக்காது. அந்த 2 மாதங்களுக்குள் விசாரணை முடிக்கப்படாவிட்டால் அவ்வாசிரியர் விசாரணைக்குப் பாதகமில்லாத வகையில் மீளப் பணிக்கு வந்ததாகக் கருதப்படுவார். என்றாலும், உரிய அதிகாரியின் முன் அனுமதியின் பேரில் தகுதியான காரணங்களுக்காக தற்காலிக வேலை நீக்கத்தை மேலும் இரண்டு மாதத்திற்கு அதிகப்படாமல் நீட்டிக்கலாம்.

மேற்கண்ட விதிமுறைகளைக் கட்டாயமாக நடைமுறைக்குக் கொண்டுவர பள்ளிக் கல்வி இயக்குநர் தக்க செயல்முறைக் கட்டளைகளை ஆய்வு அலுவலர்களுக்குப் பின்வருமாறு இட இருக்கிறார். அதாவது தற்காலிக வேலை நீக்கங்களைக் கவனிக்க உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலும் தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை முதன்மைக் கல்வி அதிகாரிகள் அலுவலகங்களிலும் தனிப்பிரிவுகள் அமைக்கப்படும். தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒருவார காலத்திற்குள் இந்தத் தனிப் பிரிவுகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அப்பிரிவுகள் அவ்விவரங்களைத் தொடர்ந்து மறு ஆய்வு செய்து அவற்றின் முன்னேற்றத்தைக் கண்காணித்து வரும். வேலை நீக்கம் பற்றிய தகவலை உரிய தகுதி வாய்ந்த அதிகாரி அறிந்ததும் அதற்கான காரணத்தை மேலாண்மையிடம் கேட்டுத் தெரிய வேண்டும். வேலை நீக்கம் செய்யப்பட்ட 2 மாதங்களுக்குள் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கி முடிக்கப்பட வேண்டுமென்பதை அவ்வதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். 2 மாதத்திற்கு மேல் வேலை நீக்கம் நீட்டிக்க வேண்டுமானால்,

அதற்கான கருத்துருவை 2 மாதம் முடிவதற்குப் போதுமான நாள் முன்ன தாகவே உரிய அதிகாரி பெற்று, அக்காலத்திற்குள்ளாகவே வேலை நீக்க நீட்டிப்பு ஆணையை வெளியிட வேண்டும். 2 மாத வேலை நீக்கம் முடிவ தற்கு போதுமான நாட்கள் முன்னதாகவே வேலை நீக்க நீடிப்பு கருத்துரு வராவிட்டால் அக்கருத்துரு நிராகரிக்கப்பட வேண்டும். 2 மாத வேலை நீக்கம் முடியும்போது தற்காலிக பணி நீக்கம் பெற்ற ஆசிரியர் மீளப் பணிக்கு வந்ததாகக் கருதப்படுவார். 2 மாதத்திற்குள் அவ்வாசிரியர்மீது சாட்டப் பட்ட குற்றச்சாட்டுகளின் போதுமான விவரங்களை உரிய அதிகாரிக்கு பள்ளி நிர்வாகம் தரவில்லையானால் அந்த வேலை நீக்கம் நியாயமற்றது என்று கொள்ள வேண்டும். 2 மாத காலம் முடிந்ததும் அத்தகைய ஆசிரியர் மீளப் பணிக்கு வந்ததற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டும். அத்தகைய ஆணைகளை நிர்வாகங்கள் நிறைவேற்றாவிட்டால், பள்ளிக் கல்வித் துறை ஆய்வு அதிகாரிகள், நேரிடைச் சம்பளப் பட்டுவாடா, நிர்வாக மானியத்தை நிறுத்தி வைத்தல், பள்ளி அங்கீகாரத்தை நீக்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு பள்ளி நிர்வாகமானது தனது தற்காலிக வேலை நீக்க ஆணையை நீக்கி உரிய ஆசிரியரை மீண்டும் பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அடிப்படையில் ஆய்வு அதிகாரிகள் கண்டிப் பான நடவடிக்கை எடுத்து தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வேலை நீக்கம் போன்றவற்றிலிருந்து தக்கப் பணி பாதுகாப்புத் தருவார்கள்.

அடுத்து, நர்சரிப் பள்ளிகள்—அதாவது ப்ரீ பிரைமரி எஜுகேஷன்—அதை நாம் முதன் முதலாக அமுலுக்குக் கொண்டு வருகிறோம். அதுபற்றிய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொது வாக அதை வரவேற்றிருக்கிறார்கள். ப்ரீ பிரைமரி எஜுகேஷன்—நர்சரி பள்ளிகள்பற்றி ஆர்வம் எடுத்துக்கொண்டதற்குக் காரணம், நாட்டிலே நிலவுகிற பல்வேறு பேதங்கள்தான். வசதி படைத்தவர்கள் தங்கள் 3 முதல் 5 வயதான குழந்தைகளுக்குச் சிறப்பு வாய்ப்பைத் தருவதன் மூலம் அவர்கள் தொடர்ந்து பல்வேறு போட்டிகளிலே முன்னேறிக்கொண்டு செல்வதும், சாதாரண குடும்பத்துக் குழந்தைகள் அந்த வாய்ப்பைப் பெறாது, பல்வேறு போட்டிகளிலே போட்டி போட முடியாமல், அதாவது மற்றக் குழந்தைகளோடு சமமான முறையில் போட்டி போட முடியாமல் இருக்கிறார்கள் என்பதும் ஒரு காரணமாக இருக்கிறது. 3 முதல் 5 வயது கால கட்டத்தில் அந்தக் குழந்தைகள் சிறப்பான வாய்ப்ப பெறாமல் இருக்கிறார்கள். 3 முதல் 5 வயது வரைக்கும் அறிவு வேகமாக வளருகிற தென்பதை அறிஞர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். அறிவு வேகமாக வளரும்



அந்தப் பருவத்தில் ஒரு பகுதி மாணவர்களை அந்த வாய்ப்பு பெற்றும், பெரும் பகுதி மாணவர்கள் அந்த வாய்ப்பைப் பெறாமலும் இருக்கின்றார்கள். அதனால் பல்வேறு போட்டிகளிலே சமமாகக் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலை இருப்பதைப் பார்க்கிறோம். அதற்காக சாதி அடிப்படையில் ஒதுக்கீடு செய்தாலும், அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்து, இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்து, இயல்பாக பேதங்களை ஒழிக்க இது நல்ல நடவடிக்கை என்று கருதி ப்ரீ பிரைமரி எஜுகேஷன கொண்டுவருகிறோம். 4000க்கும் மேற்பட்ட இடங்களில் அது துவங்கப்பட்டாலும், எல்லாக் குழந்தைகளுக்கும் நாளடைவில் அந்தக் கல்வியைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும்.

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவின் தொடக்க நிகழ்ச்சியின்போது மாண்புமிகு முதல்வரவர்கள் செய்த அறிவிப்புக்களில் பள்ளிக் கல்வியைச் சார்ந்த பின்வருவனவும் அடங்கும். பெண்கள் கல்வியையொட்டி அடுத்த ஆண்டு பெண்கள் பள்ளிகள் கணிசமாகத் தோற்றுவிக்கப்படும். இதனையொட்டி ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களின் எண்ணிக்கை 200 பேருக்குமேல் இருந்தால், அங்கு பெண்களுக்குத் தனியாக உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி துவக்கப்படும். எல்லாப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், இசை ஆசிரியை நியமிக்கப்படுவார்கள். ஆண், பெண் இணைந்து படிக்கும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களின் எண்ணிக்கை 100க்கு மேல் இருந்தால், அப்பள்ளிக்குத் தனி உடற்பயிற்சி ஆசிரியை நியமிக்கப்படுவார். இவற்றின் அடிப்படையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற நாம் இந்த ஆண்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். மேற்சொன்ன அறிவிப்புகளைச் செயற்படுத்து வதற்கான முதல்கட்ட நடவடிக்கைகளாக வரும் ஆண்டில் பெண்கள் உயர் நிலைப் பள்ளிகள் 10 புதிதாகத் திறக்கப்படும். உடற் பயிற்சி ஆசிரியை பதவிகள் 150 ஏற்படுத்தப்படும். இசை ஆசிரியை பதவிகளும் 150 புதிதாக வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும்.

அடுத்து, ஈட்டிய விடுப்புபற்றி ஆசிரியர் பிரதிநிதிகளும் ஆசிரியர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை ஆராய்ந்து, அது பற்றி ஒரு நடவடிக்கையை நாம் மேற்கொண்டிருக்கிறோம். கல்வித் துறையில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும், ஆரம்பப் பள்ளி முதல் மேல் நிலைப் பள்ளி வரை உள்ள ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்படுகிறது. இதைப் பெற அவர்கள் குறைந்தது 220 நாட்கள் ஒரு

வருடத்தில் பள்ளி வேலை செய்தாக வேண்டும். ஏற்கெனவே ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் 220 நாட்கள் வேலை செய்கிறார்கள். 1—6—1981 முதல் உயர் நிலைப்பள்ளி, மேல் நிலைப்பள்ளி ஆண்டு ஒன்றுக்கு 220 நாட்கள் வேலை செய்யும். இப்போது 200 நாட்கள் வேலை செய்கின்றது.

(பிற்பகல் 6-50)

இதில் பள்ளித் தேர்வு நாட்கள் அதாவது காலாண்டு, அரையாண்டு, ஆண்டுத் தேர்வு போன்றவற்றிற்கு சுமார் 20 நாட்கள் போய்விடும். எனவே 180 நாட்கள்தான் பள்ளிவகுப்புகள் நடைபெற்று வந்தன. இனி 1.6.1982 முதல் பள்ளி வகுப்புகள் 200 நாட்களும், எல்லாத் தேர்வுகளுக்கும் சேர்த்து 20 நாட்களும் ஆக எல்லாம் சேர்ந்து 220 நாட்கள் பள்ளிகள் வேலை செய்யும். 20 நாட்கள் அதிகமாகப் பள்ளிகள் வேலை செய்வதால் மாணவர்கள் அதிகப் பயன்பெறுவர். அனைத்து ஆசிரியர் சங்கங்களும் இதை வரவேற்பர் என்று நான் நம்புகிறேன். ஈட்டிய விடுப்பை ஆசிரியர்களுக்கு அளித்த முதல் மாநிலம் தமிழகம்தான். ஆனால் டில்லி மாநகர் போன்ற மத்திய பள்ளிகளில் இம் மாதிரி 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். எனவே இன்னும் ஒரு முன்னோடித் திட்டத்தைத் தமிழக அரசின் முதல்வர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த 10 நாள் விடுப்பை ஆசிரியர்கள் என்கேஷ் செய்து பணமாக ஆக்கிக்கொள்ளலாம். எந்தவித வேறுபாடும் இன்றி அனைத்து ஆசிரியர்களுக்கும் பள்ளிக் கல்வித் துறையில் இச்சலுகை வழங்கப்படுகிறது.

அடுத்து, இருபதாண்டுப் பணிக்கு சிறப்புநிலை, பட்டதாரி ஆசிரியர்கட்கு வழங்குதல்பற்றிச் சொல்கிறேன். அனைத்து வகை பள்ளிகளிலுமுள்ள பட்டதாரி ஆசிரியர்களிலும் அதே ஊதிய விகிதத்திலுள்ள இதர ஆசிரியர்களிலும் பணியில் சேர்ந்த நாள் முதல் 20 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு தேர்வு நிலையில் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கும் சிறப்பு நிலை வழங்கும் சலுகையைத் தர அரசு முடிவு செய்துள்ளது. ஆசிரியர் பணியின் தனித் தன்மையைக் கருதி இச்சலுகை தரப்படுகிறது. இதே போன்ற சலுகை ஏற்கெனவே இளநிலை இடைநிலை ஆசிரியர்கட்கு வழங்கப்பட்டுள்ளது.

அடுத்து, அரசுப் பணியிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு உள்ள துறைத் தேர்வு நீக்கம்பற்றிச் சொல்கிறேன். அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் துறைத் தேர்வுகளை எழுதி அவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும், அவ்வாறு தேர்ச்சி பெறாதவர்கள இரண்டாவதும் அதற்கு அடுத்த ஆண்டுகளுக்கான ஊதிய உயர்வுகளும் பெற இயலாத நிலை உள்ளது. இந்த நிலையை மாற்றி தகுதிகாண் பருவம் முடிப்பதற்குத் துறைத் தேர்வில் தேர்ச்சிபெற வேண்டியதில்லையென்றும் அவர்கள் எல்லா ஆண்டு ஊதிய உயர்வுகளும் பெற வழிசெய்யும் வகையிலும் பட்டதாரி ஆசிரியர்களுக்குத் துறைத் தேர்வுகளை நீக்கி ஆணை வெளியிடப்படுகிறது.





1-1-1971 முதல் அனைத்து ஆசிரியர்களுக்கும் பணியிடங்களில் 10 விழுக்காடு என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட தேர்வு நிலை, முதல் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்கட்கு மட்டும் தரப்படாமல் விட்டுப்போயிருந்தால் அவர்களுக்கு ஏற்பட்ட ஊதிய இழப்பை ஈடு செய்யும் வகையில் 1.9.1980 முதல் பணப் பயனுடன், 1.1.1971 முதல் 10 விழுக்காடு அடிப்படையில் தேர்வ நிலை இவர்களுக்கும் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கு அடுத்து, பள்ளிவேலை நேரம்பற்றிச் சொல்கிறேன். போக்குவரத்து நெரிசல் காரணமாய் சென்னை மாநகரில் காலை 9 மணி முதல் தொடங்கி நடைபெற்றுவரும் பள்ளிகள், சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் விரும்பினால், காலைப் பத்து மணிக்குத் துவங்க அனுமதிக்கப்படும். இப்படிப்பட்ட ஒரு முடிவையும் எடுத்திருக்கிறோம். ஆகவே இப்போது அறிவிக்கப்பட்ட சலுகைகளிலிருந்தாவது இந்த அரசு ஆசிரியர் விரோதப் போக்கு உடையதல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆசிரியர் பிரதிநிதிகள் மேஜையைத் தட்டக் காணோம்.

(சிரிப்பு—கரவொலி மேஜையைத் தட்டி ஆரவாரம்)

திரு. பா.ரா. தாமஸ் : வரிசையாக ஈட்டிய விடுப்பு குறித்தும், பணிக்காலத்தைப் பொறுத்தவரை 20 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு சிறப்புத் தேர்வு நிலை அளிப்பது குறித்தும், அதற்கு வேண்டிய தகுதிகள் குறித்தும், அதே நேரத்தில் இசை ஆசிரியர்களுக்குப் புதிய இடங்களை அளித்தது குறித்தும், மற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு வாய்ப்பினை அளித்தும் இங்கே அறிவிப்புகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் செய்தார்கள். இதைக்கேட்டு நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு இருக்கிறோம். அதற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்திலே பட்டதாரி ஆசிரியர் முற்போக்கு முன்னணியின் சார்பிலே என்னுடைய மனமார்ந்த

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 மார்ச் 20

நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஒரே ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். தனியார் பள்ளிகளிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு மேல் பணியில் இல்லாமல் இருந்தால், மீண்டும் அவர்களை பணியில் அமர்த்துவது சம்பந்தமாக ஆணை பிறப்பிப்பதாகச் சொன்னார்கள். இதுகாறும் வெளியேற்றப்பட்டவர்களுக்கு இந்தச் சட்டத்தை அமுல்படுத்தி அவர்களை மீண்டும் பணியில் அமர்த்தி அவர்களுக்கும் இந்த வாய்ப்பினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வழங்கு வார்களா என்பது குறித்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தலைவர் ஒரு கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறார். கல்வி அமைச்சர் அவர்கள் பல புதிய அறிவிப்புகளை அறிவித்து இந்த சபைக்கு கல்வியிலுள்ள முழு உரிமையையும், தன்மையையும் நிலை நாட்டியதற்கு தலைவருடைய மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

(சிரிப்பு—கரவொலி மேஜையைத் தட்டுதல்.)

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பல சலுகைகளை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றை நான் வரவேற்கிறேன். அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒரே ஒரு பிரச்சினை விடுபட்டிருக் கிறது. அதையும் கல்வி அமைச்சர் அவர்கள் செய்திருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ அது விடப்பட்டிருக்கிறது. பயிற்சி பெற்ற ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கும் மற்றும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் ஒரு இன்கிரி மெண்ட் அளிக்கப்படும் என்று இருக்கிறது. ஆனால் அதே சம்பளத்தில் இருக்கக்கூடிய மற்ற கேட்டிகரிகளுக்கு அது கொடுபடாமல் விடுபட்டிரு கிறது. அதே சமயத்தில் மற்ற பட்டதாரி தமிழ் ஆசிரியர்களுக்கும் அது விடுபட்டிருக்கிறது. அதையும் இதோடு சேர்த்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்தால், இன்னும் கூடுதலான ஆசிரியர்கள் மகிழ்ச்சி யடைவார்கள். அதற்குரிய ஏற்பாட்டைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எல்லாவற்றையும் அறிவித்து விட்டால், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு ஒன்றும் இல்லாமல் போய் விடும்.

(சிரிப்பு—பலத்த கரவொலி—மேஜையைத் தட்டி ஆரவாரம்)



1982 மார்ச் 20]

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வி சம்பந்தமான அறிவிப்புகளை, குறிப்பாக மேலவையிலே சற்று அதிகமாகத் தெரிவிக்கின்ற ஒரு வாய்ப்பினைத் தந்திருக் கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையிலே அவர்கள் இன்றைக்கு 4 சலுகைகளைப்பற்றிச் சொல்லியிருக் கிறார்கள். அதற்காக ஆசிரியர் சமுதாயத்தின் சார்பிலே அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஒரே ஒரு விளக்கம் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன். 20 ஆண்டு பணிக்கால அடிப்படையில் சிறப்பு நிலை அளிக்கப்படும் என்று அவர்கள் சொன்னார்கள். அது ஏற் கெனவே இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்குத் தரப்பட்டிருக் கிறது. மற்றவர்களுக்கும் அதை விரிவாக்கிச் சொன்னார்கள். ஆனால் தொடக்கக் காலத்திலே அவர்கள் எந்த நிலையிலே ஆசிரியர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டிருந்தாலும், அவர்களுடைய முழுப் பணிக்காலத்தையும் கணக்கிட்டு 20 ஆண்டுக் காலத்திலே அவர்கள் பல்வேறு நிலைகளில் பணி யாற்றிவிட்டு, இப்போது எந்த நிலையில் பணியாற்றினாலுங்கூட, இந்தச் சிறப்பு நிலை வழங்கப்படுமா ? அல்லது இப்போது அவர்கள் பணியாற்றுகிற அதே கேடருக்கு மட்டும்தான் வழங்கப்படுமா ? அந்த ஆசிரியர்களுடைய கோரிக்கையே அதுவாகத்தான் இருந்தது. அதை இந்த அரசு ஏற்றதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒரே நிலையில் அவர்கள் அதிக காலம் இருப்பதால்தான் நாம் இந்தச் சிறப்பு நிலை, தேர்வு நிலை எல்லாம் வழங்குகிறோம். அப்படி வருகிறபோதுதான் இப்படிப்பட்ட சலுகைகளை வழங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வது போல் செய்வோ மானால், இந்த மாதம் ஒரு புரமோஷன் வரும். அடுத்த மாதம் தேர்வு நிலை வரும். அதற்கு அடுத்த மாதம் சிறப்பு நிலை வரும். அப்படி வழங்கினால், மாதத்திற்கு ஒரு சலுகை என்ற அடிப்படையில் அது அமைந்து விடும்.

அடுத்து, பள்ளிக் கல்வி நிர்வாகம்பற்றிச் சொல்கிறேன். 1982-83-ல் மாவட்டக் கல்வி அலுவலர்கள்/பெண்கள் பள்ளி ஆய்வாளர்களுடைய நேர்முக உதவியாளர் பணியிடங்கள் 25 கூடுதலாக ஏற்படுத்தப்படும். இத்துறைக் கான ஒரு உள் தணிக்கைப் பிரிவும் (இன்டர்னல் ஆடிட் விங்) விரிவு படுத்தப்படும்.

1976ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் வரன்முறைச் சட்டம், பிரிவு 19-ன்படி பணி புரிபவர்களை தனியார் கல்லூரிகளில் வேலையிலிருந்து நீக்க, அல்லது எடுக்க, அல்லது தரத்திலிருந்து நீக்கும்முன் சம்பந்தப்பட்ட கல்லூரி இணைக்கப்பட்டிருக்கும் பல்கலைக் கழகத்தின் முன் ஒப்புதல் பெற வேண்டும். அது இன்றி தனியார் கல்லூரிகள் அப்படிச் செய்யக் கூடாது. மேலும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள எந்த ஒரு பணியாளரின் தற்காலிக வேலை நீக்கக் காலத்தையும் மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டிக்க வேண்டுமானால், தனியார் கல்லூரிகள் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகத்தின் ஒப்புதலைப் பெற்றுத்தான் செய்ய வேண்டும். பல்கலைக் கழகத்திற்குத்தான் அதற்கான உரிமை உண்டு. இந்தப் பிரிவினால் நடைமுறையில் பல நிர்வாகச் சிக்கல்கள் வருவதால், இதனை மாற்றி இந்தப் பிரிவிலுள்ள அதிகாரத்தைக் கல்லூரிக் கல்வி இயக்குநருக்குக் கொடுக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கேற்ப தனியார் கல்லூரிகள் வரன்முறைச் சட்டப் பிரிவுகளுக்கு உரிய திருத்தம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்

அடுத்து, அரசுத் தேர்வுகள்பற்றிச் சொல்ல முற்படுகிறேன். பொறியியல், மருத்துவம் போன்ற கல்லூரிகளில் சேரும் மாணவர்களில் சிலர் தாங்கள் மேல்நிலைப் பள்ளித் தேர்வு போன்றவற்றில் பெற்ற மதிப்பெண்களைத் திருத்திய சில நிகழ்ச்சிகள், சில மாநிலங்களில் நடைபெற்றுள்ளன. நம் மாநிலத்திலும் அத்தகைய நேர்வுகள் ஓரிரண்டு அரசின் பார்வைக்கு வந்துள்ளன. இப்போது மேல்நிலைப் பள்ளித் தேர்வுகள் என்பது ஒரு மிக முக்கியமான தேர்வாக ஆகிவிட்டது. அதில் பெறுகிற மதிப்பெண்களை வைத்துக்கொண்டு மருத்துவக் கல்லூரிகளிலும் பொறியியல் கல்லூரிகளிலும் சேரக்கூடிய வாய்ப்பை நம்முடைய மாணவர்கள் பெற்றிருக்கிறார்கள். இப்போது தேர்வு நடத்துவதைப் பொறுத்தவரையில், தேர்வைக் குறிப்பிட்ட காலத்திலே நடத்துகிறோம். மேலும் மைய முறை மூலம் விடைத் தாள்களைத் திருத்துகிறோம். அதற்குப் பிறகு அந்த மதிப்பெண்களைக் கம்ப்யூட்டரில் போட்டு, அந்தக் கம்ப்யூட்டர் ரிசல்ட்டைப் போட்டு. அதற்குப் பிறகு அந்த மார்க் ஷீட்டை அல்லது ரிசல்ட் ஷீட்டை நாம் மாணவர்களுக்குத் தருகின்ற ஒரு முறையை வைத்துக் கொண்டிருக்கிறோம். இதற்கு என்ன காரணம் என்றால், விடைத் தாள்களைத் திருத்த ஒரு ஆசிரியருக்கு அனுப்புகிறோம் என்றால், அங்கே போய் மார்க்கை அதிகமாகப் போடக்கூடிய அளவுக்கு செல்வாக்கு படைத்தவர்கள் தங்களுடைய அதிகாரத்தை அல்லது செல்வாக்கைப் பயன்படுத்தக்கூடும். அதைத் தடுக்க அல்லது



தனிப்பட்ட முறையில் செய்யக்கூடிய பல்வேறு தவறுகளை ஒழிப்பதற்கு என்று வைத்துக் கொள்ளலாம். இப்படி நம்முடைய அனுபவத்தின் அடிப்படையில் தமிழகக் கல்வித் துறை ஒவ்வொரு கால கட்டத்திலேயும் இப்படிப்பட்ட மாறுதலைக் கொண்டு வந்து கொண்டேயிருக்கிறது. இப்போது செகண்டரி கிரேட் மாணவர்களுக்கு நாம் மார்க் ஷீட் தருகிறோம். அதை அவர்கள் வைத்துக்கொண்டு பொறியியல் கல்லூரிகளுக்கு, மருத்துவக் கல்லூரிகளுக்கு அல்லது கலைக் கல்லூரிகளுக்கு விண்ணப்பம் அனுப்பி போய்ச்சேர வாய்ப்பு இருக்கிறது. அல்லது வேறு மாநிலங்களில் இருக்கிற கல்லூரிகளில்கூட போய்ச் சேரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த மார்க் ஷீட்டை வைத்துக் கொண்டு யாரும் விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பும் அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பும் இன்றைக்கு இருக்கிறது. இப்போது நாம் தருகிற மார்க் ஷீட்டை நாம் தந்திருக்கிறபடியே உள்ளபடியே வைத்திருக்கிறானா இல்லையா என்கிற ஐயம் ஏற்படுவதற்கு இடமிருக்கிறது. நாம் கொடுத்த மார்க் ஷீட்டைத் திருத்தினால் அல்லது அந்த மார்க் ஷீட்டைப்போல வேறொரு மார்க் ஷீட்டைக் கம்ப்யூட்டரில் தயாரித்தால், அல்லது யாராவது ஒருவர் இதையே தொழிலாகக் கொண்டு தயாரித்து அளித்தால்; இப்படிப்பட்ட நிலையில் நிறையப் பேர் வருவார்களேயானால், அப்போது அவர்கள் மிகப் பெரிய சமூக விரோதச் செயலைச் செய்தவர்களாவார்கள். அப்படி ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நாங்கள் உணர்ந்துதான் இந்த ஆண்டு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதாவது என்ஜினியரிங் கல்லூரியில் சேர்ந்திருக்கிற மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தந்திருக்கிற அந்த மார்க் ஷீட்டை—அந்த மதிப்பெண்களினுடைய விவரத்தை—தேர்வுத் துறையில் இருக்கிற அதே கம்ப்யூட்டர் மூலம் ஒப்பிட்டுப் பார்த்தோம் சரியாக இருந்தால் ஒன்றும் சொல்லாது தப்பாக இருந்தால் ' marks do not tally ' என்று சொல்லிவிடுகிறது. அப்படிப் போட்டுப் பார்க்கிறபோது, நேற்று அல்லது அதற்கு முந்திய நாள் ஒரு மாணவன் தன்னுடைய மார்க் ஷீட்டைத் திருத்தியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அது நம்முடைய கவனத்திற்கும் வந்திருக்கிறது. அந்த மாணவன் என்ஜினியரிங் கல்லூரியில் சேர்ந்து படிக்கிறான். அவன் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், அவன்மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டு, அவனுக்குரிய தண்டனையைப் பெற்றுத் தருவதிலே இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1982 மார்ச் 20

(பிற்பகல் 7—00)

1,500 மாணவர்களிலே ஒரு மாணவன் கிடைத்திருக்கிறான் என்பது எங்களுக்கு சந்தோஷம் தரக்கூடிய ஒன்றல்ல. ஆனால் அந்த மாணவன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்புவதும், இதை அடுத்த ஆண்டிலிருந்து எல்லாக் கல்லூரிகளுக்கும் நடைமுறைப்படுத்தப் போகிறோம், அதற்கான திட்டத்தை இப்போதே தயாரித்து விட்டோம் என்று சொல்வதும் எதிர்காலத்திலே இப்படிப்பட்ட காரியங்களிலே யாரும் ஈடுபடமாட்டார்கள், ஈடுபடக்கூடாது என்பதற்கு ஒரு எச்சரிக்கையாக இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த மாணவனுடைய பெயர் அமல்ராஜ். 1980 ஏப்ரல் மாதம் 9093 என்ற ரெஜிஸ்தர் நம்பருடன் மேல்நிலைப்பள்ளித் தேர்வை எழுதியவன். அவனுக்கு கணக்கிலே இருக்கும் மதிப்பெண் 111-ஐ 191 என்று திருத்தியிருக்கிறான். ஆங்கிலத்திலே வாங்கிய மார்க் எண்ணையும் திருத்தியிருக்கிறான். அது எதற்கு என்று தெரியவில்லை. அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே இதிலே நாம் எத்தவிதமான சுணக்கமும் காட்டமாட்டோம் என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகளிர் பல்கலைக் கழகம் நிறுவுவது குறித்து ஒரு அறிவிப்பு செய்திருந்தோம். அந்தப் பல்கலைக் கழகம் எப்படி ஏற்படுத்துவது என்பதைப் பற்றி ஆராய்ந்து, நமக்கு ஒரு அறிக்கை தர வேண்டும் என்பதற்காக—பொதுவாக பல்கலைக் கழகங்களை அமைக்கும்போது இப்படி ஒரு காரியத்தை நாம் செய்வோம்—அந்த நடைமுறைப்படி இதற்கும் ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்களின் தலைமையில் திருமதி லலிதா காமேஸ்வரன், திருமதி ராஜம்மாள் தேவதாஸ், டாக்டர் வி. சி. குழந்தைசாமி, டாக்டர் ராதா தியாகராஜன், திருமதி வசந்தி தேவி (எத்திராஜ் கல்லூரி முதல்வர்), பல்கலைக் கழக மானியக் குழு பிரதிநிதி ஒருவர் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை நாம் நியமித்திருக்கிறோம். அவர்கள் தரும் அறிக்கையின் அடிப்படையிலே மேல்நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம்.

அடுத்தபடியாக, கல்லூரிகளின் உடற் பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் நூலகர்கள் சம்பள விகிதங்கள், கலைக் கல்லூரி உடற் பயிற்சி இயக்குநர்கள் மூன்று பிரிவினர்களையும் உடற் பயிற்சி இயக்குநர் என்ற பெயரில் ஒரே பிரிவாக்கி சம்பள விகிதம் ரூபாய் 700—40—1,100-லிருந்து ரூபாய் 700—40—1,100—50—1,300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோன்ற சலுகைகள் கல்லூரி நூலகர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.



1982 மார்ச் 20] (திரு. செ. அரங்கநாயகம்)

முதுகலைப் பட்டப் படிப்புக் கல்லூரிகளில் பேராசிரியர் மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புத் துறை தலைவர் பதவியைத் திரும்பவும் ஏற்படுத்தி ரூபாய் 1,200—1,900 ஊதிய விகிதத்தில் அவர்களுக்கு ஊதியம் தர ஆணையிடப்பட்டுள்ளது.

தனியார் கல்லூரி ஆசிரியர், மாணவர் ஆகியோர் நலன் கருதி எடுத்துள்ள நடவடிக்கைகளும் தந்துள்ள சலுகைகளும் வருமாறு :—

கல்லூரி மாணவர்களைப்பற்றி பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களிலே முக்கியமான ஒன்று மாணவர்கள் மத்தியிலே இருக்கின்ற ஜாதி உணர்வுகள். நான் இங்கே பல்வேறு சந்தர்ப்பங்களிலே குறிப்பிட்டுள்ளதைப் போல, இன்றைக்கு கல்லூரி மாணவர்களிடத்திலே காணப்படும் ஜாதி உணர்வுகளும் அந்த அடிப்படையிலே அவர்கள் பிரிந்து நிற்பதும், அந்த அடிப்படையிலே அவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வதும் நம்முடைய கண் முன்னாலேயே தமிழ் சமுதாயத்தினுடைய எதிர்காலம் பாழாகிக்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கின்றன. இதை யாரும் விரும்ப மாட்டார்கள் என்பதையும் நாங்கள் உணர்கிறோம். ஆகவே நான் கூட பல்வேறு சந்தர்ப்பங்களிலே அரசியல் கட்சிகளின் சார்பிலே மாணவர்கள் இயக்கங்கள் நடைபெறுவதை கடுமையாகத் தாக்கிப் பேசி, இத்தகைய இயக்கங்கள் இருப்பதன் காரணமாக கல்லூரிகளிலே அமைதியின்மை இருக்கிறது என்று சொல்லி வந்தேன். ஆனால் இன்றைக்கு நாம் காண்பதெல்லாம் அத்தகைய அரசியல் இயக்கங்கள் பலஹீனப்படுமானால், அந்த இடத்திலே என்னென்ன தோன்றும் என்பதும், எத்தகைய கட்சிகள் தோன்றும் என்பதும், வளரும் என்பதும், அந்தக் கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும்போது கல்லூரி மாணவர்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்படுவார்கள் என்பதும் ஆன இத்தகைய ஒரு மோசமான நிலைமையைத்தான் நாம் இன்றைக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பட்டப் படிப்பு படிக்கின்ற அளவுக்கு வந்துவிட்ட மாணவர்கள் இத்தகைய மூட நம்பிக்கையின் அடிப்படையில், அல்லது இந்த சமுதாயத்தை இழிவுபடுத்த வேண்டும் என்று வைத்திருக்கும் ஜாதி முறைகளை ஆதரிக்கும் அடிப்படையில், அவைகளை ஒத்துக்கொள்ளும் அடிப்படையில் அந்த ஜாதி உணர்வுகளுக்கு பலியாகிறார்கள் என்பதை வேதனையோடு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள், பொறியியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள், மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள்,

சட்ட நுணுக்கங்களைப் பாடம் படிக்கும் மாணவர்கள் இவர்கள் எல்லாம் இத்தகைய உணர்வுகளுக்கு ஆளாவார்களேயானால், அவர்கள் இன்னும் ஐந்தாறு ஆண்டுகளுக்குப் பிறகு பல்வேறு பொறுப்புகளுக்கு வரும்போது அந்தப் பொறுப்புக்களை நீதி நியாயத்தின் அடிப்படையிலே, தர்மத்தின் அடிப்படையிலே நிறைவேற்றுவார்களா என்பது சந்தேகத்திற்குரிய பிரச்சினைதான். ஆகவே, வளரும் மாணவர்கள் சமுதாயத்திற்கு இந்த அவையின் சார்பாக நான் விடுக்கும் வேண்டுகோள் எல்லாம் எத்தனையோ கருத்துக்களைப் பேசிக் கொள்ளலாம், கருத்து மாறுபாடு கொள்ளலாம், ஆனால் ஜாதி உணர்வுக்கு அடிப்படையான கருத்துக்களை, ஜாதி உணர்வுக்கு ஆதரவான கருத்துக்களை ஏற்று அந்த அடிப்படையிலே மாணவர்கள் பிரிந்து நிற்பதை எந்த மாணவனும் ஆதரிக்கக்கூடாது என்பது மட்டுமல்ல, அதை எதிர்த்துப் போராடுபவர்களாக நம்முடைய மாணவர்கள் இருக்க வேண்டும், ஜாதி உணர்வுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்ற என்னுடைய வேண்டுகோளை இந்த அவையின் சார்பாக இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

நிர்வாகம் சரிவர இல்லாத கல்லூரிகளையும் நிர்வாகங்கள் தாமாகவே அரசிடம் ஒப்படைக்கும் கல்லூரிகளையும் அரசே ஏற்று நடத்துகிறது. உதாரணமாக வேலூர் தனபாக்கியம் கிருஷ்ணசாமி கல்லூரியை நிரந்தரமாக அரசு ஏற்று நடத்தி வருகிறது. உதகையிலுள்ள எமரால்ட் ஹைட்ஸ் கல்லூரியையும் அரசே நிரந்தரமாக ஏற்று நடத்த முடிவு செய்துள்ளது.

உபரி ஆசிரியர்கள் ஒரு தனியார் கல்லூரியிலிருந்து வேறு கல்லூரிக்கு மாற்றுப் பணித் திட்டத்தின் கீழ் அனுப்பப்படும்போது, அங்கேயே அவர்கள் நிரந்தரமாக இருக்க விரும்பினால், அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஒரு கல்லூரியிலிருந்து வேறு கல்லூரிகளுக்கு "மாற்றலில்" செல்ல சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் ஒப்புக்கொண்டால், அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதே சலுகை தனியார் பள்ளிகளுக்கும் தனியார் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்படுகிறது.

பண்டிகை முன்பணம், வெள்ளம் போன்ற நிவாரண முன்பணம் போன்றவை அரசுக் கல்லூரி ஆசிரியர்களையொப்ப அனுமதிக்கப்பட்டுள்ளன.

தனியார் கல்லூரி ஆசிரியரல்லாதோர் தகுந்த கல்வித் தகுதியைப் பெற்றால், அவர்களையும் கல்லூரி ஆசிரியாக நியமிக்கலாம் என்று ஆணை இடப்பட்டுள்ளது



தனியார் கல்லூரிகளில் சில ஆசிரியரல்லாதோர் பதவிகள் நெடுங்காலமாக மானியத்திற்கு அனுமதிக்கப்படாமலிருந்தது. அது ஒரு வெகு நாளைய பிரச்சினையாகும். அம்மாதிரி இருந்து வந்த 37 பேர் நலனைக் கருதி அவர்கள் பொருட்டு மானியம் வழங்க உத்தரவிட்டு இப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது.

நூலக ஆணைக் குழு பணியாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்குதல்—மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் கீழ் பணி செய்துவரும் அலுவலர்கள் தங்களை அரசு ஊழியர்கள் ஆக்க வேண்டும் என்று தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்துள்ளனர். அக் கோரிக்கையை அரசு ஏற்க முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது பதிப்பை தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலமாகத் தயாரித்து வெளியிட அரசு ஏற்பாடு செய்துள்ளது பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டமன்றத்திலும் வெளியிலும் தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளின் அடிப்படையில் வல்லுநர் குழு ஒன்றைக் கொண்டு கலைக் களஞ்சியத்தின் திருத்திய வடிவத்தைத் தயாரித்து பிறகே இரண்டாம் பதிப்பு வெளியிடுவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதைப்போல, இப்போது இருக்கிற கலைக் களஞ்சியத்தில் பல்வேறு வார்த்தைகள், பல்வேறு செய்திகள் இடம்பெறாமல் இருக்கின்றன. அதை பல்வேறு காரணங்களால் செய்திருக்கலாம். ஆனால் அந்தக் குறைபாடு இரண்டாம் பதிப்பு வெளியிடப்படும்போது தீர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு கட்டங்களிலேயிருந்து வந்தது. அதை அரசு ஏற்று திருத்தியதற்குப் பிறகு இரண்டாம் பதிப்பு வெளியிடுவது என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

அதைப் போலவே தமிழ் சுருக்கெழுத்து அகராதிபற்றிச் சொன்னார்கள். அதிலே இருக்கும் குறைபாடுகளைப்பற்றி எடுத்துச்சொன்னார்கள். அதையும் அரசு உணர்ந்து அதைத் திருத்தி அடுத்த பதிப்பு வெளியிடுவதற்கு ஒரு வல்லுநர் குழுவை அமைக்க அரசு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. செ. அரங்கநாயகம்) [1982 மார்ச் 20

ப்ரி-ப்ரைமரி எஜுகேஷனுக்காக 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்து சொன்னார்கள். இப்போது ஒதுக்கி யிருப்பது 1 கோடி ரூபாய்தான். ஆனால் நடைமுறையிலே தேவைப்படும் போது மறுநிதி ஒதுக்கீட்டில் தேவையான நிதியை ஒதுக்கி அதிலேயிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் பழம் கலை இயக்ககத்தின் சார்பில் சில திட்டங்களை நாம் நிறை வேற்றிக்கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் இருக்கும் அனைத்து மாவட் டங்களையும் 4 கலை வட்டாரங்களாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொன்றின் வரலாற்றையும், அவற்றில் இருக்கும் கிராமக் கலைகளையும், அவற்றின் சான்றுகளையெல்லாம் எடுத்து செம்மையாக எழுதி ஒவ்வொரு மாவட்டத் தையும் குறித்து 'டபிள் டெம்மி' அளவிலே 800 பக்கங்கள் கொண்டதொரு கலை வரலாற்று நூலாக வெளியிடுவதோடு ஆங்காங்கே சென்று கிராமக் கலைகளை ஒலிப்பதிவு செய்தும், திரைப்படங்களாக எடுத்தும் புதிய தலை முறையினரிடையே இந்த உயர்நெறிப் பண்புகளைப் பரப்பும் முறையில் அந்தப் பணி நடைபெற்று வருகிறது.

இரண்டாவது திட்டம், தமிழ்க் கலைச் சுவடிகளைத் திரட்டி வெளியிடுவது. இப்போது கங்கைகொண்ட நட்டுவனாரின் இசைப் பாடல்களையும், அறுபத்து நால்வரின் நாட்டிய இலக்கணங்களையும், ராம பாரத, வாசுதேவக் கவி ஆகியோரின் பழம் தமிழ் இசைப் பாடல்களையும் தொகுத்துள்ளோம். விரைவில் இவற்றை வெளியிடும் பணி நடந்து வருகிறது.

இன்னொரு திட்டம் தமிழ் நாட்டின் சிற்றூர்களில் இருக்கும் பழங்கால கிராமியக் கலைகளை ஒலிப்பதிவு செய்து பாதுகாப்பதோடு, தமிழகத்தின் தொன்மையான பண், இசை, அந்தப் பண்களின் பழைய வடிவுகள் எல்லா வற்றையும் ஒலிப்பதிவு செய்து பாதுகாக்கும் வேலையும் நடைபெற்று வருகிறது.

(பிற்பகல் 7-10)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

இக்காலத்தில் வழங்கிவருகிற பல இராகங்களோடு தொடர்புடைய இருபது பழந்தமிழ் பண்களை ஒலிப்பதிவு செய்துள்ளோம். இந்தப் பண் ஒலிப்பதிவு களோடு நமது நாட்டுப் பாடல்களை வழங்கி வரும் தொன்மையான இராகங்



1982 மார்ச் 20] (திரு. செ. அரங்கநாயகம்)

களையும் இனம் கண்டு தனித்தனி நாடாக்களில் ஒலிப்பதிவு செய்து வருகி றோம். இதன் மூலம் பழைய இசை வடிவங்கள் புதிய தலைமுறையின ருக்குக் கற்றுக் கொடுக்க வாய்ப்பாக அமையும்.

அதற்கடுத்து தமிழ் நாட்டு வரலாற்றின் இரண்டாம் தொகுதியில் சங்க காலத் தொகுதி என்னும் தொகுதி இரு தொகுதிகளாக தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனத்தால் அச்சிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. அவைகள் விரைவில் வெளியிடப்படும்.

அதைப்போலவே பாவாணர் தலைமையில் நடைபெற்ற காரியம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி தயாரிக்கும் காரியத்தைத் தொடர்ந்து நடத்தி, அச்சிடும் பொறுப் பேற்று, அதன் முதல் பகுதியை நாம் அச்சிட இருக்கிறோம். அது முடிந்த பிறகு வெளியிடப்படும். தொடர்ந்து அவருடைய திட்டத்தை நிறைவேற்று வதில் இந்த அரசு ஆர்வம் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. செ. முத்துசாமி: இதைப் பொறுத்தவரையில், தேவநேய பாவாணர் அவர்களின் முதன்மைத் தொண்டனாக இருந்த பெருஞ்சித்தரனார் அவர் களை இதிலே பயன்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்த சொற்பிறப்பியல் அகர முதலி தொடர்பாக அதிலே ஆர்வம் கொண்டுள்ளவர்களைக் கலந்து ஆலோ சிப்பதிலே நமக்குக் கருத்து வேறுபாடு இல்லை. இதிலே பல முறைகள் இருக்கின்றன. அதிலே பாவாணர் முறை ஒன்று. பாவாணர் முறையில் நம்பிக்கையுடையவர்களை, அவர் கருத்தை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களை நியமித்தால்தான், இந்தக் காரியத்திற்கு உதவியாக இருக்க முடியும். அந்த முறையில் குழுவை அமைக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அந்தக் குழுவை அமைக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

பயிற்சி மொழிபற்றி ஆரம்பத்திலேயே சொன்னேன். ஆட்சி மொழி பற்றிய ஒரு கருத்தை நான் சொல்லிக்கொள்ள வேண்டும். இந்தியா முழுவதும் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய கருத்து. அரசியல் ரீதியாக இருக்கின்ற பல்வேறு ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல் போகுமென்ற ஒரு காரணத்திற்காகத்தான் நாம் ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அதற்கு மாறாக எல்லா தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. நடைமுறைச் சிக்கல் காரணமாகவும், இப்போதுள்ள சூழ்நிலை காரணமாகவும் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

உத்தரப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இந்தி மாநில ஆட்சி மொழி யாக இருக்கிறது. ஆனால் அங்கிருக்கின்ற சிறுபான்மையோர் நலனுக்காக அரசியல் ரீதியாக உருது மொழியை ஆட்சி மொழியாக ஆக்க ஆக்கம் தந்து வருகிறார்கள், ஆதரவு தந்து வருகிறார்கள். மொழிவழி பிரிக்கப்பட்ட மாநிலங்கள் இருக்கின்ற சூழ்நிலையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு மொழி ஆட்சிமொழியாக இருக்கும் சூழ்நிலையில் இன்னுமொரு மாநில மொழி இருக்க வேண்டுமென்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். பல்வேறு மாநிலங்களில் பல்வேறு மக்கள் வாழ்கின்ற பல்வேறு பகுதிகளைக் கொண்டிருக்கின்ற பெரிய தேசத்திற்கு இன்னுமொரு மொழி ஆட்சிமொழியாக இருந்தால், அது இந்தியாவின் ஒற்றுமைக்கு நல்லது என்று கருதுகிறபோது, அந்தக் கருத் துக்கு மதிப்புத் தந்து அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, இப்போது விரும்புகிற வரைக்கும் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்று உத்தரவாதம் தந்திருப்பதைப்போல, உத்தரப்பிரதேசத்தில் எடுத்திருக்கிற நடவடிக்கையை முன்மாதிரியாகக் கொண்டு அகில இந்திய அடிப்படையில்கூட ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லிவிடுவார்களே. யானால், அதற்குப் பிறகு இது விவாதப் பிரச்சினையாக இந்த மன்றத்திலே மட்டுமல்லாமல் எங்கேயும் இருக்காது, மன நிம்மதியோடு வேறு காரியங்களை நாம் பார்க்கலாம்.

அதற்கடுத்து, மாணவர்கள் பார்த்து எழுதுவது என்பது பரவலாக இருக் கிறது என்பதை நாம் ஏற்றுக்கொண்டு, அந்தப் பிரச்சினையை அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே வைத்தோம். எல்லாக் கட்சித் தலைவர் களும் இங்கே பேசியதைப் போலவே, அங்கேயும் அதைக் கண்டித்துப் பேசி னார்கள். பார்த்து எழுதுவது என்பது, திருடுவதைப்போல சமுதாய



விரோதமான காரியம். இது வளர்வது என்பது சமுதாயத்திற்கு நல்லதல்ல. இதனால் நல்லவர்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இந்தப் பழக்கத்தால் யாருக்கும் பிரயோஜனம் இல்லை. எப்படியோ பல்வேறு காரணங்களால் வளர்ந்துவிட்ட இந்தத் தீமையை ஒழிப்பதில் அரசு அக்கறை எடுத்துக்கொண் டிருக்கிறது. இந்த ஆண்டே கூட சில முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கி றோம். மிக விரைவிலே, அதாவது ஏப்ரல், மே மாதத்தில் மறுபடியும் ஆலோசனைக் குழுவைக் கூட்டுவதன் மூலமும், அனைத்துக் கட்சித் தலைவர் களின் கூட்டத்தைக் கூட்டுவதன் மூலமும் பரிகாரம் தேட முடியும் என்று கருதுகிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை ஏன் கூட்டு கிறோம் என்றால், அரசியல் ரீதியாக ஆதரவு முழுமையாக இந்தச் செய லுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான். தப்பித் தவறி கூட ஒரு அரசியல் கட்சியாவது எதிரான நிலையை எடுத்துவிடக்கூடாது என்பதற் காகத்தான் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தையும் கூட்டி வருகிறோம். ஆகவே இந்தக் கருத்துக்களை ஆராய்ந்து பார்த்த பிறகு, எல்லாக் கட்சியினருடைய ஒத்துழைப்பையும் பெற்று, திட்டவட்டமான முடிவை நாம் எடுக்க விரும்புகிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், நாம் பார்த்து எழுதுகின்ற பழக்கத்தை ஏற்றுக்கொள்வதில்லை. இதை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை இந்தத் தீமையை ஒழிப்பதில் நாம் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்பற்றி இங்கே பேசினார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாணவர்கள் Mass copying செய்வதை ஆதரிப்பவர்கள் யாரும் இங்கு இருக்க முடியாது. ஆனால் Mass copying என்ற இந்த சமுதாயத் தீமையின் காரணமாக இருக்கின்ற தேர்வு முறையை மாற்றியமைக்க கல்வி நிபுணர்களைக் கொண்டு ஒரு குழுவை அமைத்து, அதில் கோளாறுகள் இருந்தால், அந்தக் கோளாறுகளை மாற்றியமைக்கலாம். வளர்ந்து வருகிற நாடுகளிலும், மேல் நாடுகளிலும் தேர்வு முறை எப்படி இருக்கிறது என்பதை ஆராய்ந்து அந்த முறையின் அடிப்படையில் இங்கேயும் தேர்வு முறைகளை மாற்றியமைத்தால், இதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காண முடியும் என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவந்து, அனைத்துக் கட்சியினருடைய ஒத்துழைப்பைக் கோரும் நேரத்தில், இதையும் பரிசீலனை செய்வார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* நாம் பேசுகின்றபோது, இப்படிப் பட்டதொரு கருத்தைச் சொல்லுகிறபோதுதான், அவர்கள் மாஸ் காப்பியிங் அடிக்கிறார்கள். தேர்வில் இருக்கின்ற கோளாறு என்ற நிலைமை வந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் அதைப்பற்றிப் பேசவில்லை. தேர்வு முறையை மாற்றியமைக்க வேண்டும் என்றும், பாடத் திட்டங்களை மாற்றி யமைக்க வேண்டும் என்றும் கருதுகிறோம். நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த அதே பாட முறையை 'எக்கனாமிக்ஸ்' துறை இன்றும் வைத்துக் கொண்டி ருந்தால் அந்த அடிப்படையிலே யாரிடத்திலும் நாம் போட்டி போட முடியாது. தரமான அறிவைப் பெற முடியாது. ஆகவே பாடத் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும், அதற்கேற்ப தேர்வு முறைகளை மாற்ற வேண்டும் என்று கருதி தனியாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

*திரு. செ. முத்துசாமி:* இப்போது வங்காள மாநிலத்தில் கடுமையான நடவடிக்கை எடுத்து மாஸ் காப்பியிங்கைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். பாடத் திட்டத்தை பின்னாலே மாற்றியமைக்கலாம் என்றாலும், அதற்கு முன் வங்காளத்தில் எடுத்த நடவடிக்கையை இங்கேயும் எடுத்து மாஸ் காப்பியிங்கைக் கட்டுப்படுத்த அல்லது ஒரு முடிவிற்குக் கொண்டுவர அரசு முயற்சிக்குமா ?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* மேற்கு வங்காளத்தில் போலீசைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அனைத்துக் கட்சியினரையும் கலந்து ஆலோ சிக்காமல் நாம் அதைப்போல திடீரென்று போலீசை கல்லூரிக்குள் கொண்டு வந்து நிறுத்தினால், இங்கே ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்து விடுவார்கள்.

*திரு. ஆ. நல்லசிவன்:* மேற்கு வங்காளத்தில் போலீசைக் கொண்டு செய் தார்கள் என்று சொல்லுவது சரியல்ல. அங்கே ஸ்டூடென்ட் ஃபெடரேஷன் ஆஃப் இந்தியா மாணவர்கள் மத்தியிலே பிரபலமடைந்திருக்கிறது என்பது ஒரு காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்திருக் கிறேன். அவர்கள் மூலமாக இதைச் செய்திருக்கிறார்கள்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* மேற்கு வங்காளக் கல்வியமைச்சர் எனக்குத் தெரிந்தவர்தான். அவரோடு பேசிக்கொண்டிருந்தபோது, இப்ப டிப்பட்ட கடுமையான நடவடிக்கை எடுத்துத்தான் கட்டுப்படுத்தியிருக்கி றோம் என்றார். அப்படித்தான் செய்ய முடியும். கடுமையான நடவடிக்கை எடுத்துத்தான் இதைத் தீர்க்க முடியும், வேறு எந்த முறையிலும் தீர்க்க முடியாது. அதற்காக அந்த மாணவர்கள் இயக்கத்தை இங்கே வளர்க்கின்ற அளவிற்கு . .



*திரு. ஆ. நல்லசிவன்:* எங்களுடைய மாணவர் இயக்கத்தை அமைச்சர் அவர்களுடைய தயவில் வளர்க்க நாங்கள் விரும்பவில்லை. அங்கே மாஸ் காப்பியிங்கைத் தடுக்க போலிசை வைத்துக்கொண்டு பண்ணும்போது, அதற் கான எதிர்ப்புகளை மாணவர்கள் மத்தியிலே விளக்கிச் சொல்லி, அவர்களை ஒத்துக்கொள்ள வைத்திருக்கிறார்கள் அந்தச் சங்கத்தினர். அப்படிப்பட்ட மாணவர் இயக்கம் அங்கே இருக்கிறது, இங்கே இல்லை.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* மாணவர்கள் இயக்கங்கள் அரசியல் ரீதியாக இல்லையென்றுதான் நாங்களும் கருத்து தெரிவித்திருக்கிறோம். மாணவர்கள் முழுமையாக அரசியலில் ஈடுபடக் கூடாது என்றாலும், நல்ல கொள்கைகளைப் பேச வேண்டும். நல்ல கொள்கையில் நம்பிக்கையுடையவர் களாக இல்லாத காரணமாகத்தான், இன்றைக்குப் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. அதோடுகூட மாணவர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. சில கல்லூரித் தலைவர்கள் கூட மாணவர்களை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அங்கே மாணவர் இயக்கத்தை வைத்துதான் அப்படி நடத்தியிருக்கிறார்கள் என்பதை இப்போதுதான் கேள்விப்படுகிறேன். அத்தகைய முயற்சிகளில் ஈடுபடக்கூடிய நிலைமையில் இப்போது நாம் இல்லை. என்ன நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும், எல்லோரும் சேர்ந்து முடிவு செய்தாக வேண்டும். ஆனால் இது ஒழிக்கப்பட வேண்டும், இந்தத் தீமை அகற்றப்பட வேண்டும் என்பதிலே எல்லோரும் கருத்து ஒருமித்திருக்கிறோம். மாணவர்களிடையேயும் இதற்கு நல்ல ஆதரவு இருக்குமென்று நம்புகிறேன்; அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று இந்தக் காரியத்தைச் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், மறுபடியும் சில பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. எந்தப் பிரச்சினைகளாக இருந் தாலும், பிரச்சினைகள் தோன்றுவது இயல்புதான். அப்படி பிரச்சினைகள் தோன்றுகிற போதெல்லாம், அரசாங்கம் தலையிடுகிற ஒழு முறையை ஏற் படுத்திக்கொள்ள விரும்பவில்லை. ஏற்கெனவே சில நிகழ்ச்சிகள் நடைபெற்ற போது, சில நடவடிக்கைகளை அரசு எடுத்தபோது பல்கலைக் கழகத்திலே அரசு தலையிடுகிறது என்ற குற்றச்சாட்டை அதிகமாகப் பேசி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1982 மார்ச் 20

(பிற்பகல் 7-20)

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

அரசாங்கம் பல்கலைக் கழகங்களினுடைய நிர்வாகத்திலே தலையிடுவது கூடாது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது ஒரு அட்டானமஸ் பாடியாக இருக்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் அதன் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் தோன்றி அதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் காரணமாக இருக்கும்போது நாம் நம்முடைய உறுப்பினர்கள் மூலமாக சில முயற்சிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த நிர்வாகத்தினரும் ஆசிரியர்களும் நம்மிடத்திலே வருகின்றபோது, அவர்கள் பின்னணியிலே இருந்துகொண்டு அவர்களைப் பேசச்சொல்லி, சில முடிவுகளை எடுக்கச் சொல்கிறோம். மதுரை காமராசர் பல்கலைக் கழக நிர்வாகத்திலே, அண்ணாமலைப் பல்கலைக் கழக நிர்வாகத்திலே அரசு தலையிடுவதாக பல பேர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர, உண்மையில் அங்கே நடந்தது என்ன? நாங்கள் அங்கே இரண்டு பேர்களும் பேசுவதற்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். அப்படி இருந்தாலும், அங்கே அவர்களுடைய பேச்சிலே தலையிடாமல் அவர்கள் பேசிக்கொள்வதற்கு நாங்கள் ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறோம். கூடுமானவரைக்கும் தன்னாட்சி உரிமையை மதித்துச் செயல்படுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் இப்போது ஏற்பட்டிருக்கின்ற சில பிரச்சினைகள் அரசு விரும்பக்கூடியவை அல்ல. அந்தப் பல்கலைக் கழகத்திலே அவர்களுக்கு இருக்கின்ற ஒரு அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சின்டிகேட் மெம்பர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அவர்கள் விசாரித்து அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள். அது எப்படி நடைபெறுகிறது என்பதை நம் அரசு கவனித்து வரும். தேவையான நேரத்திலே தக்க நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: 1978 ஆம் ஆண்டு சட்டத் திருத்தம் சம்பந்தமாக அரசு கொடுத்த வாக்குறுதியைப் பற்றி இப்போது அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1982 மார்ச் 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தையும், சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தையும், மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சட்டத்தையும் முழுமையாகவே ரிப்பேஸ் செய்வது என்கின்ற அடிப்படையிலே நாம் இப்போது பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் அது மாநிலச் சட்டங்களாக இருக்க வேண்டும் என்கின்ற அடிப்படையிலே இருக்கிறோம். அப்படி நாம் கொண்டு வந்துவிட்டால், அதற்குப் பிறகு மாநிலச் சட்ட மன்றத்திலேயே தேவையான திருத்தங்களைக் கொண்டுவரக்கூடிய அதிகாரத்தை நாம் பெற்றுவிடலாம். ஆகவே அதற்கு வகை செய்கின்ற முறையிலே இந்த மூன்று பல்கலைக் கழகச் சட்டங்களையும் ரிப்பேஸ் செய்கின்ற வகையில் செய்து முழுமையான மசோதாக்களாகக் கொண்டு வருவதற்கு இருக்கிறோம். அதற்கான பரிசீலனைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பரிசீலிக்கிறபோது, நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்ற கருத்துக்களை ஆராய்ந்து நாம் என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவைகளை எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்போர்ட்ஸைப் பொறுத்தமட்டில், இப்போது மிக இளம் வயதிலே இருக்கக்கூடிய குழந்தைகளுக்குக்கூட, நாம் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தின் அடிப்படையிலே அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக சில செயல் திட்டங்களை நாம் இப்போது கொண்டுவந்திருக்கிறோம். அந்த முறையில் சிறு வயதிலிருந்து அந்தக் குழந்தைகளுக்கு உள்ள ஆர்வத்தின் அடிப்படையில் நல்ல பயிற்சி தந்து ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற திட்டத்தை தமிழ் நாடு அரசு நிறைவேற்ற இருக்கிறது.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் ஸ்கௌட்ஸ் என்று வைத்துக்கொண்டு 175 பேர்களுக்குத்தான் பயிற்சி கொடுக்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். இதற்கு முன்னாலே ஒருவரும் இல்லை. இப்போது நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, இதைக் கொண்டுவந்திருக்கிறோம்.

மூன்று ஆண்டுக் காலத்திலே இப்போது இதைக் கொண்டு வந்திருக்கிறோம். இதனுடைய நடைமுறையைப் பார்த்து அதையும் கொண்டு வருவோம். இப்போதுகூட, பெண்களுக்காக கோவையிலே ஒரு பள்ளி ஆரம்பித்திருக்கிறோம். இந்தத் திட்டத்தினுடைய மிக முக்கியமான அடிப்படை, மற்ற மாணவர்களைப்போல இவர்களும் கல்வி பெறுவார்கள். ஆனால் இவர்கள் காலையிலோ மாலையிலோ அவருக்கு விருப்பமான விளையாட்டிலே சிறப்பான பயிற்சியைப் பெறுவார்கள். இந்த மாணவர்களுக்கு இலவசமாக தங்கும் விடுதியும், உணவும், படிப்பும் இந்த அரசு தரும். ஆக இந்த முறையில் அந்தப் படிப்பு அமையும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதற்காக ஆங்காங்கே போட்டிகள் வைக்கப்பட்டு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தப் பள்ளியிலே சேர்க்கப்படுகிறார்கள். அதிலே ஏதாவது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறைபாடுகள் காணுவார் என்றால், அதை என்னுடைய பார்வைக்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** இது ஒரு நல்ல ஏற்பாடு. மாணவர்களை அரசு தயாரிக்கிறது. அதுபோலவே இந்த ஏசியாட் 81 டெல்லியிலே நடக்கக்கூடிய ஸ்போர்ட்ஸை-ஐப் பார்ப்பதற்காக நம்முடைய பி.இ.டி. களுக்கு அவர்களுடைய பணத்திலேயே ஒரு ஸ்பெஷல் லோன் கொடுத்து, ஸ்பெஷல் காசுவல் லீவ் கொடுத்து அனுப்பினால், அவர்களே ஏற்பாடு செய்துகொண்டு பார்த்துவிட்டு வந்தால், இங்கே நல்ல முறையில் நவீனமான முறையில் எல்லாவிதமான பயிற்சியையும் அளிக்க வசதியாக இருக்கும். அதைப்பற்றி அரசு ஆராயுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி முன்னாலே கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இப்படி அனுப்புவதற்கான ஒரு கருத்தை நாம் மத்திய அரசுக்குச் சொல்லிக் கேட்டோம். அப்படிக் கேட்டபோது, அவர்கள் யாரையும் அனுப்ப வேண்



என்று சொன்னார்கள். காரணம் பெருமளவுக்கு கூட்டத்தை அங்கே எதிர்பார்க்கிறார்கள். தங்குவதற்கான வசதிகள் இருக்காது என்றுதான் நினைக்கிறார்கள். ஆகவே தொலை தூரத்திலிருந்து 100, 1,000 என்று வருவார்களானால், அவர்களாலே சமாளிக்க முடியாது. இடம் கிடைக்காமல் போய்விடும் என்ற அடிப்படையிலே அதைத் தவிர்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அங்கே பெருத்த நெருக்கடி ஏற்படும். ஆகவே இதை அவர்கள் ஊக்குவிப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும், போக விரும்புகின்றவர்களுக்கு ஏதாவது குறைந்தபட்சச் சலுகையாவது கொடுக்க முடியும் என்றால், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, செய்ய முடியும் என்றால், நாம் அதையும் பரிசீலிக்கலாம். இந்த விளையாட்டுப் போட்டி நடைபெறுவதற்குள்ளாக தக்க முடிவை நாம் எடுக்கலாம்.

அதற்கு அடுத்து, ஊரக விளையாட்டு மையங்களை நாம் அமைக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதுவரையிலே 178 மையங்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன. காட்டாங்குளத்தூரில் ஒரு மையத்தினுடைய தொடக்க விழாவிற்குச் சென்றிருந்தேன். அங்கே ஓட்டேரி, நந்திவரம் ஆகிய இரண்டு இடங்களிலேயும், 8 ஏக்கர், 4 ஏக்கர் நிலத்தில் மையங்கள் வைத்திருக்கிறார்கள். அந்தக் காட்டாங்குளத்தூரில் நல்ல மைதானம் இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற இளைஞர்கள் நல்ல ஆர்வத்தோடு இருக்கிறார்கள். பெரியவர்கள்கூட நல்ல ஆர்வத்தோடு இருக்கிறார்கள். அந்த ஊரக விளையாட்டு மையங்கள், நம்மைப் பொறுத்தவரையிலே, நன்றாகச் செயல்படும். இதுபோன்று மற்ற மையங்கள் செயல்படும் என்றால், நாம் எடுத்துக்கொள்கின்ற இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெறும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. இதிலே உள்ள அடிப்படை என்னவென்றால், பொழுதுபோக்குக்காக விளையாடுபவர்கள் இருக்கிறார்கள். உடல் நலனுக்காக விளையாடுபவர்கள் உண்டு. போட்டியிலே வெற்றி பெற வேண்டுமென்பதற்காக விளையாடுபவர்களும் உண்டு. இந்த ஊரக மையங்கள் மூலமாக, கல்லூரியில், பள்ளியில் பயிற்சி பெற வாய்ப்பு கிடைக்காமல் இருக்கின்றவர்கள், படிக்காதவர்கள் இளைஞர்கள் எல்லாம், இந்த மூன்று வகையினரும் அவர்

களுடைய ஆற்றல்களைப் பயன்படுத்திக்கொள்வார்கள். இவர்கள் எல்லாம் பல்வேறு போட்டிகளிலே கலந்துகொண்டு வெற்றி பெறக்கூடியவர்கள். 'எக்செலன்ஸ்' என்று சொல்வார்கள். அவர்களுக்கு எந்தத் துறையில் விருப்பம் இருக்கிறதோ அந்தத் துறையில் பயிற்சி பெற்று வெற்றி பெறுவார்கள். அவர்கள் இப்போது பயிற்சி பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். 'கோச்சிங் அண்டு டிரெயினிங்' என்று சொல்வார்கள். இப்போது அந்த வசதி இல்லாமல் இருக்கின்றனர். இன்றைக்கு நம் இளைஞர்கள் அந்த வாய்ப்பு கிடைக்காமல் இருக்கிறார்கள். அதைத் தவற விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறைபாட்டைப் போக்குகின்ற வகையில்தான் இந்தச் சீரிய முயற்சியினை மேற்கொண்டிருக்கிறோம். இந்த முயற்சி வெற்றி பெற்றால், நிறைய மையங்கள் ஏற்படுத்துவதற்கு இந்த அரசுக்கு ஆட்சேபணை இல்லை. நல்ல முறையில் நடக்கும் என்றால், நிறைய மையங்களைத் தோற்றுவிக்கலாம்.

திருவனந்தபுரத்திலே ஒரே ஒரு நீச்சல் பள்ளியினை ஆரம்பித்து அதிலே பயின்ற மாணவிகள், அகில இந்திய அடிப்படையிலே நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்று பல்வேறு தங்க மெடல்களைப் பெற்றிருக்கிறார்கள். அதுமாதிரி மையங்கள் சிறப்பாக நடைபெற்றால்கூட, நாம் இந்த மாதிரி போட்டிகளில் பங்கு கொண்டு பல பரிசுகளைப் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே நாம் நூற்றுக்கணக்கான மையங்களைத் திறக்கத் தயாராக இருக்கிறோம். அந்த அடிப்படையிலே நாம் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், மாண்புமிகு அங்கத்தினர்களும் இதிலே அக்கறை எடுத்துக்கொண்டு, நாம் விரும்புகின்ற அளவுக்கு இந்த மையங்கள் பாடுபடுவதற்கு வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே மட்டுமல்ல, இந்த மையங்களை அர்பன் ஏரியாக்களில்கூட அமைக்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறோம். ஒரு முன்மாதிரியாக, சென்னை நகரில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு பகுதியில்,



புதிய குடியிருப்புகளில் 24 இடங்களில் இந்த மாதிரி அர்பன் ஸ்போர்ட்ஸ் சென்டர்ஸ் என்று அமைக்கப்பட்டு வருகிறது. அதன் மூலமாக அங்கே இருக்கின்ற இளைஞர்கள் அந்த வாய்ப்புக்களைப் பெற இருக்கிறார்கள்.

அடுத்து, இளைஞர்களிடையே நல்ல பழக்கங்களை ஊக்குவிக்கவும், அவர்கள் பொன்னான நேரத்தை மகிழ்வுடன் கழிக்கவும், அவர்களை விளையாட்டுகளில் ஈடுபடுத்தவும் என்று எட்டு விளை நிலை மையங்களை ரூ. 70 ஆயிரம் செலவில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின்படி இளைஞர்கள் படம் வரைதல், களிமண்ணால் பொருள்கள் செய்தல், சிறு சிறு பொம்மை இயந்திரங்களை அவர்கள் தாங்களாகவே அமைக்க கற்றுத் தருவது, விஞ்ஞான அறிவியல் பொருள்களைச் செய்தல் ஆகியவற்றில் ஈடுபடுத்தப்படுவர். மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தி அதில் சிறந்த பயிற்சி பெற்ற இளைஞர்களாக ஆக்கி, அவர்கள் திறமையை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அகில இந்திய போட்டிகள் இளைஞர்களுக்கு நடத்தப்பட்டன. 1978-79-ல் இரண்டு போட்டிகளும், 1980-81-ல் 4 போட்டிகளும் 1981-82-ல் 5 போட்டிகளும் நடத்தப்பட்டன.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக இந்திய வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணி 4 தடவைகள் இதுவரையிலே நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீச்சல் போட்டி, நீச்சல் பந்து, சிறகு பந்து, படகோட்டும் போட்டி என்ற நான்கு போட்டிகள். 41 ஆண்களும் 16 பெண்களும் தமிழ் நாட்டின் வீரர்கள், வீராங்கனைகள் ஆசிய போட்டிகளுக்கான பயிற்சி முகாம்களில் பங்கேற்று வருகின்றனர். 40-க்கு மேற்பட்ட பயிற்றுநர்களும் நடத்துநர்களும் ஆசிய போட்டிகளுக்கு இதுவரையில் அழைக்கப்பட்டுள்ளனர்.

இப்போது செயல்படுத்தி வரும் திட்டங்களில் ஒன்று ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாடுத் திட்டம். அதன்மூலம் அவர்கள் சமூக வாழ்வில் முழு அங்கம் வகிக்கின்ற அளவுக்கு அவர்கள் உயர்த்தப்பட வேண்டும் என்பதாகும்.

(திரு. செ. அரங்கநாயகம்) [1982 மார்ச் 20

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(பிற்பகல் 7-30)

இந்த அடிப்படையில் தற்சமயம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டுவரும் பள்ளிகள் அனைத்தையும் கல்வித் துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமென்ற கருத்தரு அரசின் பரிசிலனையில் உள்ளது. இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தொண்டு நிறுவனங்கள் நடத்தி வந்த வயது வந்தோர் கல்வி மையங்களுக்கு மானியம் அளித்து வந்ததைத் தொடர்ந்து நீட்டிக்க தமிழக அரசு ஏதாவது செய்ய இயலாதா என்று கேட்டார்கள். இந்தத் தொண்டு நிறுவனங்கள்—வாலன்டரி ஏஜன்சிஸ்—வயது வந்தோர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் நல்ல பங்கெடுத்து, வெற்றிகரமாக நடத்தி வந்தார்கள். இதை அப்படிப்பட்டவர்களால்தான் நல்ல முறையில் செயல் படுத்த முடியும். காரணம், வயது வந்தோர் வருகிற அளவிற்கு இவர்கள் கூடுதலான அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அது தொண்டுள்ளம் படைத்தவர்களுக்குத்தான் இருக்க முடியும். சம்பளம் வாங்குபவர்களாலே அதைச் செய்ய முடியாது. ஆகவே அத்தகைய நிறுவனங்களை நாம் ஆதரித்து, அமைச்சர்கள் மாநாட்டிலே பேசினோம். இங்கேயிருந்து எழுதி னோம். அதை மத்திய அரசு பரிசிலனை செய்து, இன்றையதினம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த மானிய உதவியை, அந்தத் தொண்டு நிறுவனங்கள் வயது வந்தோர் கல்வி மையங்கள் நடத்துவதற்கு, எழுத்தறிவு மேம்பாட்டு மையங்கள் துவக்கவும் அனுமதிக்கிறோமென்று சொல்லி, அவர்கள் இன்றைய தினம் நம்முடைய கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

சட்டக் கல்லூரிபற்றி இங்கே பேசினார்கள். இப்போது அதுபற்றி சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். சென்னை சட்டக் கல்லூரி மாண வர்களிடையே இரு கோஷ்டிகளுக்கு இடையில் மன வேற்றுமை காரணமாக கடந்த சில நாட்களாக ஒரு இறுக்கமான நிலைமை இருந்து வந்தது. ஒரு கோஷ்டி மற்றொரு கோஷ்டியைத் தாக்க முனைந்துகொண்டிருந்தது. 10—3—1982 அன்று ஒரு கோஷ்டி சில மாணவர்களைத் தாக்கி, பொது அறையில் உள்ள கண்ணாடி சன்னல்களை உடைத்தது. நிலைமை மாற, கொந்தளிப்பு மனோநிலை மாற, 11, 12 ஆம் தேதி இரண்டு நாட்கள் கல்லூரி மூடப்பட்டது. அப்படியும் சில மாணவர்கள் கல்லூரிக்கு வந்து ஊறு விளை விக்கலாமென்று அஞ்சி போலீஸ் காவல் போடப்பட்டது. 10—3—1982



1982 மார்ச் 20] (திரு. செ. அரங்கநாயகம்)

கலவரத்திற்குக் காரணம், அன்று மதியம் 1-30 மணிக்கு ஜகன் மற்றும் ஜெய குமார் என்ற இரண்டு சட்டக் கல்லூரி மாணவர்கள் காசிமேட்டைச் சேர்ந்த சுமார் 50 குடிசைவாசிகளுடன் பெசன்ட் நகரில் உள்ள மாணவர் தலைவர் ராஜசுந்தரம் வீட்டில் கல் எறிந்தனர். பெசன்ட் நகரிலுள்ள சில உள்ளூர் காரர்கள் வந்தவுடன் இவர்கள் ஓடிவிட்டனர். 13, 14 விடுமுறை நாட்கள். மாணவர்களிடையே இருந்த மன வேற்றுமை தீரவில்லை. மீனவர், தேவர் மற்றும் வன்னியர் ஆகியோர்களுக்கிடையில் மன வேற்றுமை இருந்தால், மீண்டும் கல்லூரி திறந்தால், எங்கே மோதிக்கொள்வார்களோ என்று எதிர் பார்க்கப்பட்டு அவர்களுக்குள் ஒரு சுமுகமான நிலைமை ஏற்படுவதற்கும், நிலைமையில் இறுக்கத்தைத் தளர்த்துவதற்கும் வேண்டி, மேலும் சில நாட்கள் கல்லூரியை மூடி வைப்பது உசிதமென கல்லூரி முதல்வர் எண்ணினார். போலீஸ் பாதுகாப்பு கல்லூரிக்குப் போடப்பட்டது. கல்லூரி மாணவர் விடுதி சாதாரணமாக நடைபெற்று வந்தது. 16—3—1982 அன்று கீழ்ப் பாக்கத்திலுள்ள சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் மாணவர்கள் இரண்டு கோஷ்டியினர் விடுதிக்குள்ளும் பக்கத்தில் உள்ள ஓட்டல்களிலும் குடி போதையில் அடித்துக்கொண்டார்கள். இந்த மாணவர்களும், மற்றும் சில வெளி ஆட்களும் விடுதி காம்பவுண்டிற்குள் கற்களையும், சோடா பாட்டில் களையும் வீசினர். போலீஸ் ஸ்தலத்திற்கு விரைந்து வந்து, நிலைமையைச் சமாளித்தனர். மாணவர்களிடையே உள்ள கொந்தளிப்பு புகைந்துகொண் டிருப்பதால், 27—3—1982 வரை சட்டக் கல்லூரி மூடப்பட்டுள்ளது. விடுதியில் கலவரம் காரணமாக 17—3—1982 அன்று விடுதி மூடப்பட்டது. நிலைமை இப்போது கட்டுக்குள் இருக்கிறது. பதட்டமான நிலைமையில் மாணவர்கள் உள்ளபோது கல்லூரியைத் திறந்தால், மாணவர்கள் ஒன்று சேர்ந்துகொண்டு கலகம் ஏற்படவும், அதில் சமூக விரோத சக்திகள் சேர்ந்து நிலைமையை மோசமாக்கவும் வாய்ப்புண்டு. ஆகவே கல்லூரி 27—3—1982 வரை மூடி வைக்கப்படும். 28—3—1982 ஞாயிறு. 29—3—1982 முதல் கல்லூரியும், விடுதியும் செயல்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு துறைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக் களை நாம் இங்கே கேட்டிருக்கிறோம். பல்வேறு குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு யோசனைகளையும் சொல்லியிருக்கி றார்கள்: சிலவற்றுக்கு நான் பதில் சொல்லியிருக்கலாம். அல்லது சில குறை பாடுகளைக் களைய நடவடிக்கைகளை எடுத்துச் சொல்லியிருக்கலாம் . . .

திரு. ஏ. ஜே. தாஸ்: முதலாண்டு சேரும் மாணவர்கள் 'ராகிங்' என்று கல்லூரிகளில் 2 மாதங்கள் துன்பப்படும் நிலைமை இருக்கிறது. அதுபற்றி ஏதாவது அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 'ராகிங்' முறையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எல்லாக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் கண்டிக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றிக் கடுமையான நடவடிக்கை எடுக்க கல்லூரித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளை அரசு முழுமையாக ஆதரிக்கும். அதை ஒழிப்பதற்கு அரசு தக்க உத்தரவுகளைப் பிறப்பிக்கும்.

திரு. செ. முத்துசாமி : மாற்றுத் தலைவரவர்களே, ஒன்றே ஒன்று கேட்க விரும்புகிறேன். சாதனைப் பட்டியலிலே ஏற்கெனவே தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சாதனைப் பட்டியலிலே ஆசிரியர்களுக்குத் தனியாக வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டின் நிலை என்னவாயிற்று என்று இங்கே சொல்லப்படவில்லை. அதைப்பற்றி கல்வி அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வீட்டு வசதி வாரியத்தோடு பேசிக் கொண்டிருக்கிறோம். அந்த அளவிலே அது பரிசிலனையில் இருக்கிறது. முடிவு எடுக்கப்பட்டவுடன் ஆசிரியர்களுக்கு அந்த வாய்ப்பை நாங்கள் தர இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன யோசனைகளையும், அவர்களுடைய கருத்துக்களையும் அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு, எதிர்காலத்திலே பல நடவடிக்கைகளை எடுக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் 22—3—1982 **திங்கள்** காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-36)





### 5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

135. Notification issued with G.O. Ms. No. 1495, Industries, dated the 2nd November 1982 regarding reconstitution of the Tamil Nadu Khadi and Village Industries Board. [Laid on the table of the House under section 29(3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

### B. *Reports ; Notifications and Other Papers.*

83. Policy Note on Adi Dravidar and Tribal Welfare Department, 1982-83. (Tamil & English).

84. Annexures to Policy Note on Adi Dravidar and Tribal Welfare Department, 1982-83. (Tamil & English).

85. Performance Budget on Adi Dravidar and Tribal Welfare Department, 1982-83. (English).

86. Policy Note on Backward Classes Department, 1982-83. (Tamil & English).

87. Performance Budget on Backward Classes Department, 1982-83. (English).

88. Review of the Road Development Programmes in Tamil Nadu, 1981-82 and Programmes for 1982-83. (Tamil & English).

89. Policy Note on Agriculture, 1982-83. (Tamil & English).

90. Performance Budget on Agriculture Department, 1982-83 (Tamil & English).

91. A booklet on Achievements and Ambitions in Agriculture, (Tamil).

92. A booklet on Training-*cum*-Contract Programme in Agriculture (Tamil).

## இணைப்பு

(179ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அரசுக்கு கிடைத்த தகவல்களின்படி வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தம் அருகேயுள்ள கே. வி. குப்பம், காமாட்சி அம்மன் பேட்டையில் 13—2—1982 அன்று நடைபெற்ற காளை விரட்டு போட்டியின்போது அங்கு குழுமியிருந்த இரு சாராரிடையே குழப்பம் ஏற்பட்டது. அச்சமயம் பாதுகாவல் பணியில் ஈடுபட்டிருந்த காவலர்கள் தலையிட்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர முற்பட்டனர். இதில் கே. வி. குப்பத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காவலருக்கும் பொதுமக்களில் ஒரு பகுதியினருக்கும் மோதல் ஏற்பட்டது. காவலர்களின் செய்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் உள்ளூர் நபர்கள் சிலர் கே. வி. குப்பம் காவல் நிலையத்தின் முன்பு கூடி, காவல் நிலையத்திற்குள் நுழைய முற்பட்டனர். அவர்களை உதவி ஆய்வாளர் விரட்டினார். அந்த அமளியில் சக்கரவர்த்தி என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அவரை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து முதல் உதவி அளித்த பிறகு, காயமடைந்த நபரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்புவதற்கான முயற்சியில் உதவி ஆய்வாளர் ஈடுபட்டார். இதற்கிடையில் காயமடைந்த சக்கரவர்த்தி இறந்துவிட்டதாகப் புரளி பரவத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து கூட்டத்தினர் காவல் நிலையத்தைக் கற்களால் தாக்க ஆரம்பித்தனர். இதனால், காவல் நிலையம் சேதமாகி ரூ. 300-க்கு இழப்பு ஏற்பட்டது. கூட்டத்தினரின் கல்லெறிதலில் உதவி ஆய்வாளரும், காவலர் ஒருவரும் காயமடைய நேர்ந்தது. கூட்டத்தினரின் வன்முறை பெருகி வருவதைக் கண்ட துணை ஆய்வாளர் தற்பாது காப்புக்காகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆணையிட்டார். இதனைத் தொடர்ந்து வானத்தை நோக்கி ஐந்து தடவை ரவை தோட்டா (Buck shots) துப்பாக்கிப் பிரயோகமும், மூன்று தடவை தோட்டா துப்பாக்கி (Ball shots) பிரயோகமும் செய்யப்பட்டது. இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் யாரும் காயமடையவோ உயிரிழக்கவோ இல்லை. கூட்டம் கலைந்து சென்றது.



2. இச்சம்பவத்தில் காயமடைந்த சண்முகம், சக்கரவர்த்தி, குப்புசாமி ரெட்டியார் ஆகியோர் முதலுதவி அளிக்கப்பட்டு மேற்சிகிச்சைக்காக குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். காயமடைந்த துணை ஆய்வாளரும், உள்நோயாளியாக குடியாத்தம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். காயமடைந்த காவலர் புற நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டார். கூடுதல் காவல் படையும், எஸ்.பி-யும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இது சம்பந்தமாக பத்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினை மேற்கொண்டு பரிசிலனையில் இருக்கிறது. காவல் துறையைச் சேர்ந்தவர்கள் யாரேனும் அத்துமீறி நடந்து கொண்டுள்ளது உண்மையாக இருந்தால் அவர் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

3. இச்சம்பவம் தொடர்ந்து, கே.வி. குப்பத்திலும், சுற்றுப்புற கிராமங்களிலும் காவலர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். நிலைமை கட்டுக்குள் அடங்கி சுமுக நிலை நிலவுகிறது.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1982 மார்ச் 22.

பங்குனி 9, துன்மதி, திருவள்ளுவர் ஆண்டு 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1 வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கோயில்களுக்கு மின் கட்டணம்.

* 185. வினா—திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயில்கள், மசூதிகள், மாதாகோயில்கள் போன்றவற்றுக்கு குறைந்த மின் கட்டணம் நிர்ணயிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், நிர்ணயிக்கப்படவிருக்கின்ற கட்டணம் எவ்வளவு ?

(உ) இது எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ), (இ) மற்றும் (உ) : மின் கட்டண ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கோயில்கள், மசூதிகள் மற்றும் மாதாகோயில்கள் உட்பட, அனைத்து மின் பயனீட்டாளர்களுக்கும் மின் கட்டண விதங்களை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதுகுறித்து ஒரு நல்ல அறிவிப்பை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு மேலவையில் மின்சார வாரிய விவாதத்தின்போது குறிப்பிட்டார்கள். அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்றால், முடிவு எடுக்க இருக்கிறது என்று

[1982 மார்ச் 22

பொருளாகிறது. நிர்ணயிக்கப் போகின்ற கட்டணம் இப்போது இருப்பதில் பாதியாக இருக்கும் அளவுக்கு சலுகை கொடுக்கப்படுமா? எந்த நிலையில் பரிசீலனை செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இப்போது வீட்டுக்கு என்று ஒரு கட்டண விகிதம் இருக்கிறது. அதற்கு அடுத்து பொது நோக்கங்களுக்கு என்று ஒரு கட்டண விகிதம் இருக்கிறது. பொது நோக்கங்களுக்கு என்று இருக்கிற கட்டணத்தைக்கூட இரண்டாகப் பிரித்து வணிக நோக்கங்களுக்கு தனிக் கட்டணம், மற்றவைகளுக்கு தனிக் கட்டணம், எனச் செய்தால் ஓரளவு சலுகைக் கட்டணம் கிடைக்கும். இப்போது இதை நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்றால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற நிறுவனங்களுக்கும் பரிசீலனையின் முடிவில் சலுகை கிடைக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, இத்தகைய நிறுவனங்களுக்கு சலுகைக் கட்டணம் வழங்கப்படும் போது, கல்வி நிலையங்களுக்கும் சலுகைக் கட்டணம் வழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்படுமா? இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோயில்கள், மசூதிகள், மாதாகோயில்கள் போன்றவற்றுக்கு சலுகைக் கட்டணம் வழங்குவது பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றைக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிற எல்லா கல்விக் கூடங்களிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. தொடக்கப் பள்ளி, இடைநிலைப் பள்ளி, உயர் நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி இப்படி எல்லா கல்விக் கூடங்களிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இந்த இலவசக் கல்வி நிலையங்களில் வருமானம் எதுவும் இல்லாததால், இவற்றையும் பொது நோக்கங்களுக்காக இருப்பவையாகக் கருதி, சேவை நிலையங்களாகக் கருதி, கட்டணச் சலுகை வழங்குவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதைத்தான் நான் குறிப்பிட்டேன். ஜெனரல் பர்பசஸ் அதாவது பொதுக் காரியங்களுக்காக என்று இருப்பதை இரண்டாகப் பிரிக்கிறோம். ஒன்று வணிக ரீதியாக. இன்னொன்று வணிக ரீதியாக இயங்காதவை. அதாவது கமர்சியல் அன்ட் நான்-கமர்சியல் என்று இரண்டாகப் பிரிக்கிறோம். அப்படிப் பார்க்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கல்வி நிலையங்கள் அதில் வரும்.

Thiru A. R. DAMODARAN: Sir, may I know if this concession will also be extended to charitable institutions recognised by the Income-tax Department, such as Homes for the Physically Handicapped, Beggars' Homes, Orphanages, etc.?



1982 மார்ச் 22]

The Hon. Thiru S. RAMACHANDRAN: Sir, this will also be taken into consideration.

திரு. பா. ரா. தாமஸ்: வழிபடும் இடங்களுக்கு இதை வழங்கும்போது அலங்காரத்திற்காகப் பயன்படுத்துகிற இடங்களுக்கும், ஆலயங்களின் உள்ளே வழிபடுகிற இடங்களில் அலங்காரம் செய்கிற பகுதிக்கும் இதை வழங்குகிற கருத்து அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அலங்காரத்திற்கு தனியாக தற்காலிகமாக சப்ளை எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கு தனிக் கட்டணம். நிரந்தரமாக எந்தக் கோயில்களிலும் அலங்காரம் செய்வதில்லை

திரு. க. இராமமூர்த்தி: ஆலயங்களில், மத சார்பான பகுதிகளில், கட்டடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் இப்படிப்பட்ட இடங்களில் மட்டுமல்லாமல், ஊர் முழுமையும் கேட்கிற அளவிற்கு மைக்குகளை வைத்து விளம்பரப்படுத்துகின்ற அளவுக்கு காரியங்களைச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட ஆலயங்களுக்கு மின்சாரம் கொடுப்பதைத் தடை செய்வதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அத்தகைய தொந்தரவுகள் இருக்கிறது என்றால், காவல் துறை தான் அதுபற்றி கண்காணிக்க வேண்டும் (சிரிப்பு).

டாக்டர் இரா. சனார்த்தனம்: கோயில்கள், மசூதிகள், மாதா கோயில்கள் போன்றவற்றுக்குக் கட்டணச் சலுகை தரும்போது, பகுத்தறிவு மன்றங்களுக்கும் அது தரப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கடவுள் உண்டு என்று சொல்லுபவர்களுக்கு என்னென்ன சலுகைகள் உண்டோ அவை கடவுள் இல்லை என்று சொல்பவர்களுக்கும் உண்டு.

அட்டைபட்டி வாயிலாக கணக்கிடும் முறை.

* 186 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மின்சார அளவைக் கணக்கிட்டு வீடுகளிலேயே அதற்கான விலைப்பட்டியலை வழங்கும் திட்டம் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகிறதா?

(இ) இதற்காக மின் வாரியத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்காக இதுவரை புதியதாக பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு இதுகுறித்து ஏதேனும் புகார் வாரியத்திற்கு வந்திருக்கிறதா? வந்திருக்கிறது என்றால், குறைகளைக் களைய வாரியம் அல்லது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? குறிப்பாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு, வசூல் சரியான முறையில் ஆகவில்லை என்று சொல்வது உண்மையா? அப்படி என்றால், அதைத் தவிர்க்க வாரியம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டதற்குப் பிறகு, பொதுமக்களிடமிருந்து புகார் ஒன்றும் இத்திட்டம் குறித்து வரவில்லை. ஆனால் ஒரே ஒரு குறை பொதுமக்களிடம் இது குறித்து இருக்கிறது. ரீடிங் எடுக்கிற இடத்திலேயே, வீட்டிலேயே அவர்கள் பணத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பொதுமக்கள் விரும்புகிறார்கள். அந்த விஷப் பரிட்சையை இப்போது மேற்கொள்ள வேண்டாமென்று அரசு விரும்புகிறது. பணம் கட்டுவதை மட்டும் பொது மக்கள் பிரிவு அலுவலகத்தில் கட்டலாம். இல்லையென்றால் செக்கைத் தபால் மூலம் அனுப்பலாம். இன்னும் பரவலான அளவில் நூற்றுக்கு நூறு ரீடிங் கணக்கை எடுக்க முடியவில்லை. ஒரு பகுதி தொழிற்சங்கத்தினர் இந்த முறை கூடாது என்று சொல்லி ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அந்தப் பகுதியினர் இப்பணியைச் செய்யவில்லை. ஆதலால் இப்போது நூற்றுக்கு 66 சதவிகிதம் தான் ரீடிங் எடுக்கிறோம். ஆகவே, சில இடங்களில் குறிப்பாக ரீடிங் எடுக்க கணக்காளர்கள் வரவில்லை என்ற குறைபாடு பொதுமக்களிடம் இருக்கிறது.

Thiru A. R. DAMODARAN: Sir, at present the bills are being collected on certain dates and some inconvenience is experienced by consumers. May I know whether the commercial banks and the nationalised banks will also be authorised to collect these electricity bills? In such a case, much of the inconvenience of the consumers could be avoided.



The Hon. Thiru S. RAMACHANDRAN: Sir, I too had the same idea as the hon. Member has now. But, when this was tried in Delhi, what happened was that the collection agencies, that is, the commercial banks could not get their accounts reconciled promptly with those of the Electricity Board with the result that even where the current consumption charges had been paid, the Electricity Board staff were going on disconnecting the services. So, there again, the problem of reconciliation is the real impediment.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: வீட்டிலேயே அந்தக் கட்டணத்தை வசூலித்தால்தான், அது பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் தற்போதைக்கு அது ஒரு விஷப் பரிட்சை என்றும் குறிப்பிட்டார்கள். மாநிலம் தழுவிய அளவில் இப்பணியைச் செய்யாமல் ஒரு குறிப்பிட்ட பகுதியிலே பரிட்சார்த்தமாக இப்பணியைச் செய்தால், இதிலுள்ள சாதக பாதகங்களை அறிய வாய்ப்பாக இருக்கும். அதன் பிறகு தேவை என்றால், மாநிலம் தழுவிய அளவில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். ஆகவே இந்த முறையில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வீடுகளிலேயே கட்டணத்தை வசூலிக்கின்ற பொறுப்பை தொழிற் சங்கத்தில் ஒரு பிரிவினர் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. அவர்கள் இப்போது வேண்டாமென்ற கருத்தைச் சொல்கிறார்கள். ஆகவே நாம் இப்போது இத்திட்டத்தை அமுல்படுத்துகின்ற நிலையில் இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: வீடுகளிலே விவரப் பட்டியலை வழங்கும் திட்டத்திற்கு சில தொழிற் சங்கங்கள் மட்டுமே ஒப்புதல் அளித்திருப்பதாகவும், சில ஒப்புதல் அளிக்கவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஒப்புதல் அளித்த சங்கங்கள் எவை எவை? ஒப்புதல் அளிக்காத தொழிற் சங்கங்கள் எவை எவை? ஒப்புதல் அளித்த சங்கங்களின் மூலம் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன? ஒப்புதல் அளிக்காத தொழிற் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன? இவர்களுக்கு அரசு என்ன மாற்று ஏற்பாடு செய்ய இருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நமக்குத் தேவைப்படுகின்ற கணக்காளர்கள் 5,409. இதுவரையில் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளோர் 4,589. இதை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்கள்.

(முற்பகல் 9-40)

அதோடுகூட, அண்ணா தொழிலாளர் சங்கமும் இதை ஏற்றுக்கொண்டுள்ளது. இதை ஏற்றுக்கொள்ளாமல் உயர்நீதிமன்றத்திற்குப் போயிருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சங்கம், இன்னொரு சங்கம் காசாளர் சங்கம் என்ற பெயரிலே புதிதாகத் துவக்கப்பட்டிருக்கும் சங்கம். நீதிமன்றம் என்ன தீர்ப்பை அளிக்கிறதோ அதைப் பார்த்து அவர்களுடைய நிலைமைகள் எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தொழிற் சங்கங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னால், இப்படிச் செய்யலாம். சென்னையிலே படித்தவர்கள் அதிகமான அளவிலே இருக்கிறார்கள். கட்டணமும் ஒரே சீராக இருக்கிறது. ஆகவே, மக்களே அந்தக் கணக்கைப் பார்த்து அவர்களே கொண்டு வந்து கட்டுவதற்குத் தயாராக இருந்தால், அதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது நேர்மையைப் பொறுத்த காரியம்.

(மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் துணைக் கேள்வியைக் கேட்டுவிட்டு அவையை விட்டு வெளியே போய்விட்டார்).

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வியைக் கேட்டுவிட்டு போய் விட்டார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போலவே, நேர்மையும், போய்விடக்கூடாது என்பதுதான் எங்களுக்கு இருக்கிற அச்சம் எல்லாம். (பலத்த சிரிப்பு).

திரு. க. இராமமூர்த்தி : தொழிற் சங்கங்களிலே ஒரு பகுதி இதிலே ஈடுபடவில்லை என்று சொன்னாலும், இந்த முறை அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே இப்போது இந்தப் பணியை ஆற்றிக்



கொண்டிருப்பவர்கள் குறைவின்றி காரியமாற்றுகிறார்கள் என்ற நிலைமை இருந்தாலும், ரெவின்யூ பிரிவிலே ஓவர்ஸ்டாப் ஆக இருக்கிறார்களா என்று அரசு பரிசிலனை செய்யுமா ? அப்படியிருந்தால், அவர்களுக்கு இதுபோன்ற வேறு பணிகளைக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி ஒருசிலர் வேலை செய்யாமல் இப்போது இருக்கிறார்கள். அதுதான் நிலைமை. உயர்நீதிமன்றம் கடைசியாக என்ன தீர்ப்பு சொல்கிறதோ அதைப் பொறுத்துதான் அவர்கள் இந்த வேலைக்கு வர வேண்டும். இல்லையென்று சொன்னால், அவர்களுக்கு வேறு வேலை தர வேண்டும். அவர்களை வெளியே அனுப்ப முடியாது. இன்னொன்று என்னவென்றால், பொதுவாக நமக்கு மாதந்தோறும் 25 கோடி ரூபாய்தான் வருமானம் வந்தது. ஆனால் பிப்ரவரி மாதம் 32 கோடி ரூபாய் வருமானம் வந்தது. அதுவேகூட, 100-க்கு 60 சதவிதம்தான் எடுத்திருக்கிறோம். அப்படி 100-க்கு 60 சதவிதம் எடுத்தாலும், பிப்ரவரி மாதம் 32 கோடி ரூபாயும், மார்ச் 20 ஆம் தேதி வரையில் 22 கோடி ரூபாயும் வந்திருக்கிறது. இதிலே பழைய பாக்கியும் கொஞ்சம் சேர்ந்திருக்கிறது. இருப்பினும் 100-க்கு 60 என்றாலே இவ்வளவு வருகிறது என்ற நிலைமை இருக்கும்போது வருவாய் அதிகரிக்கும் நிலைமை இருக்கிறது.

## *Rubber based Industry.*

* 187. Q.—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Rural Industries be pleased to state, with reference to the answer given to a supplementary Question to Starred Question No. 271 on the Floor of the House on 12th May 1981 :

(a) whether there is any proposal under the consideration of the Government, to start a rubber-based industry in Kanyakumari District; and

(b) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வெற்கிலாம்பியில் நுரைப்பஞ்சு ரப்பர் உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவு சங்கம் ஒன்று 11—3—1981 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) வன இலாகாவின் கீழுள்ள ஒரு ஹெக்டேர் நிலத்தை இந்த தொழிற் கூட்டுறவு சங்கத்திற்கு மாற்றுவதற்குரிய ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. வருவாய்த் துறையிடமிருந்தும் தேவையான நிலம் பெற அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குவதற்கு வியாபாரிகளிடமிருந்து விலைப்பட்டியல் கோரப்பட்டுள்ளன.

திரு. பா. ரா. தாமஸ்: இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஆரம்பிக்கப்படும் தொழிற்கூடம் எப்போது ஆரம்பிக்கப்பட, எப்போது உற்பத்தியைப் பெருக்க இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: நிலம் பெறப்பட்டு, தேவையான இயந்திரங்கள் வாங்கப்பட்டு, விரைவாகத் தொடங்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இத்திட்டத்திற்கான முதலீட்டுத் தொகை எவ்வளவு? எத்தனை காலத்திற்குள் இந்தத் திட்டம் துவங்கப்பட்டு செயல்படுத்தப்படுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது—இதுபோன்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி: இந்தத் திட்டம் ரூபாய் 11 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களுக்குக் குறிப்பிட்டதைப்போல விரைவாகக் காரியங்கள் ஆற்றப்படும்.

### சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பாளர்கள்.

* 188 வினா—செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பாளர்களும் உதவி ஆய்வாளர்களும் ஒரே தகுதியினராகக் கருதப்பட்டும், முன்னவர்களுக்கு அதிக சம்பள விதமும், பின்னவர்களுக்குக் குறைந்த சம்பள விதமும் வழங்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், பின்னவர்களுடைய சம்பள விகிதத்தை முன்னவர்களுடைய சம்பள விதத்திற்கு உயர்த்துவதற்கு அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (இ) கண்காணிப்பாளர் பதவிகள் சில சென்னை மாநகராட்சியில் உள்ளன. ஆனால் உதவி ஆய்வாளர் பதவி என்று ஒன்றும் இல்லை. எனவே இக் கேள்விக்கு இடமில்லை.

செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு அமைச்சர் அவர்களே,

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஏன் என்னை அமைச்சர் ஆக்குகிறீர்கள்? (சிரிப்பு).

செல்வி ஆ. லீலாவதி: ஒருவேளை அமைச்சராக சீக்கிரம் வந்துவிடுவீர்கள். ஆய்வாளர்கள் அரசுப் பள்ளிகளிலே இருக்கிறார்கள். அவர்களுக்கும் கண்காணிப்பாளர்களுக்கும் ஒரே தகுதியாக இருந்தாலும், அவர்களுக்குச் சம்பளம் வெவ்வேறாக இருக்கிறது. அதைத்தான் குறிப்பிட்டேன். ஆகவே இந்த வித்தியாசத்தை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூலக் கேள்வி சென்னை மாநகராட்சியைப் பொறுத்தது. ஆனால் தற்போது கேட்கும் கேள்வி அரசுப் பள்ளியைப் பொறுத்தது. ஆகவே, இந்தக் கேள்வியை உரிய துறைக்குப் போட வேண்டும்.

### *Reddipalayam-Kannamangalam Link Road.*

* 189. Q.—Thiru S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether the link road leading to Reddipalayam from Kannamangalam in Arni Taluk, North Arcot District, has been brought under the control of the Highways Department;

(*b*) if so, whether any steps have been taken to remove the **encroachments on both sides of the road**, for forming the ditch; and

(*c*) the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இச் சாலை 1980-81 ஆம் ஆண்டு பேருந்து செல்லும் மார்க்கம் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்தபின் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையினால் மேற்கொள்ளப்படும்.

[1982 மார்ச் 22

(இ) சாலையின் அபிவிருத்தி வேலை செய்யும் போது ஆக்கிரமிப்புகளை முடிந்த வரை அப்புறப்படுத்தப்படும்.

(உ) சாலையின் எல்லையை சரிபார்த்து சாலையின் ஓரங்களில் கால்வாய் வெட்டப்படும்.

திரு. செ. முத்துசாமி : ரோடுகளின் எல்லையைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும் இந்த நேரத்திலே, அவ்வப்போது பக்கத்திலே இருக்கும் நிலச்சொந்தக்காரர்கள், நீர்வளம் இருக்கும் அந்தப் பகுதிகளையும் வெட்டி வெட்டி ரோட்டுப் பகுதிகளையும் தங்களுடைய நிலத்தோடு சேர்த்து விடுகிறார்கள். இப்போது கோர்ட்டுக்குப் போகும் நெருக்கடிகூட இருக்கிறது. அப்படி இருக்கும்போது, எவ்வளவு விரைவாக இதை எடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த பட்ஜெட்டிலேயே அவற்றை எடுக்கும் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்த வேலைக்கு 2 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய்க்கு கடந்த 14—10—1981-லே டெண்டர் கோரப்பட்டு முடிவுபெற்று, வேலைகள் நடந்து வருகின்றன. இது சம்பந்தமான வேலைகள் சீக்கிரம் முடிவுபெறும். சாலை ஓரங்களிலே ஆக்கிரமிப்பு செய்வதைப் பொறுத்தவரையில், ஆங்காங்கே நகரப் பகுதிகளிலே அதிகமான அளவிலே ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். தேசிய நெடுஞ்சாலைகளிலேயும் ஆக்கிரமிப்புகளைச் செய்கிறார்கள். இவைகளையெல்லாம் அப்புறப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. என்னதான் அப்புறப்படுத்தினாலும்கூட, ஒருமுறை அப்புறப்படுத்தின உடனேயே மீண்டும் ஆக்கிரமிப்புகள் செய்யும் சூழ்நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக கடும் எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உரிய நேரத்தில் எந்தெந்த நடவடிக்கைகளை எடுத்து, எந்தெந்த ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்க முடியுமோ அவைகள் செய்யப்படும்.

திரு. செ. முத்துசாமி : எமர்ஜென்சி இந்த நாட்டிலே இருந்தபோது இந்த ஆக்கிரமிப்புகளைப்பற்றியெல்லாம் நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் இப்போது சாதாரணச் சட்டங்கள் இருக்கும்போது, இப்படிப்பட்ட நிலைமைகளிலே இவைகள் எடுக்கப்படும்போதும் திரும்பவும் வந்து விடுகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது என்று சொன்னாலும், இருக்கிற சட்டங்களைக்



1982 மார்ச் 22]

கொண்டே அவற்றைச் சரிவர அமுல்படுத்தவில்லை. இப்போது இருக்கும் சட்டங்களின் மூலமும் தேவையான நடவடிக்கைகளை நாம் எடுக்க முடியும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்போது, சில இடங்களிலே கோயில்களைக் கட்டி விடுகிறார்கள். அதனால் ரோட்டிலே இட நெருக்கடி ஏற்பட்டு டிராபிக் போவதற்குக்கூட வசதியில்லாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அந்தமாதிரி இருப்பவைகளை மாற்றி கொஞ்சம் உள்ளே தள்ளி வைக்கத்தக்க வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ? அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அவசரக் காலம் மீண்டும் வரக்கூடாது என்றுதான் மக்கள் விரும்புகிறார்கள். இருக்கும் சட்டங்களை முறையாகக் கடைப்பிடிக்கும் நிலை வரும் என்று சொன்னால், கண்டிப்பாக இவைகளைத் தவிர்க்கும் சூழ்நிலை ஏற்படும். குறிப்பாக பொதுமக்கள் இதற்கு ஆதரவு தரவேண்டும். அதைப்போலவே இங்கே இருக்கும் மாமன்ற உறுப்பினர்களும் இருக்கும் நிலைமைகளை மக்களுக்கு நல்ல முறையிலே எடுத்துச் சொல்ல வேண்டும்.

THIRU A. R. DAMODARAN : Sir, is the Hon. Minister aware that in the Tambaram road, under the very eyes of the Government, on either side of the Trunk Road, there are encroachments ? There is no need for public co-operation. Ministerial co-operation is required for this. May I know whether such Ministerial co-operation will be extended?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அமைச்சர்களைப் பொறுத்த வரையில், நாங்கள் எப்போதுமே சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் இவைகளை அகற்றுவதற்கும் தயார். ஆனால் ' பொலிட்டிக்கல் பிரஷர் " என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நாளைக்கு ஒரு ஆக்கிரமிப்பு செய்துவிட்டு ஒரு கொடியையும் போட்டு, அதற்காகப் போராட்டங்கள் நடத்துவதும், ஆர்ப்பாட்டங்கள் செய்வதும்தான் இப்போது நடைமுறையில் இருக்கிறது. இந்த நிலைமைகள் தவிர்க்கப்பட்டால்,

கண்டிப்பாக ஆக்கிரமிப்புகளை எடுக்க முடியும். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் எல்லோரும் ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இதற்கு உதவி செய்தால், இவைகளையெல்லாம் அப்புறப்படுத்தலாம்.

திரு. செ. முத்துசாமி : அப்படியே, அந்த ஆக்கிரமிப்பைச் செய்கின்றவர்கள் ஏதாவது ஒரு கட்சிக் கொடியைக் கட்டிக்கொண்டு பாதுகாப்பு தேடிக் கொள்கிறார்கள். எந்தவிதமான பிரஷர் வந்தாலும், ஆக்கிரமிப்பு என்பது தனிப்பட்டவர்களின் சுயநலத்தின் அடிப்படையிலேதான் வருகிறது. மக்களுடைய பொது நன்மையைப் பாதித்து ஒரு தனி மனிதன் ஆக்கிரமிப்பு செய்து தன்னை வளர்த்துக்கொள்ள வைத்திருக்கும் முறைதான் இது. ஆகவே, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அல்லது எந்த அரசியல் கட்சிகள் குறுக்கிட்டாலும், எப்படிப்பட்ட பிரஷர் வந்தாலும் இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை நீக்க அரசாங்கம் சரியான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமா ? எங்களைப் பொறுத்தவரையில், முழு ஒத்துழைப்பும் தருவோம் என்று சொல்லி அரசு அவற்றில் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இப்போது புதிதாக என்ன கேள்வியைக் கேட்டிருக்கிறார் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் பொதுநலம் என்கிற போர்வையில் சுயநலம் வருகிறது. பொது நல மன்றங்கள் என்றும், சமூக சேவை மன்றங்கள் என்றும் பல நேரங்களில் பல இடங்களில் கட்டிவிடுகிறார்கள். இவைகள் எல்லாம் ஆக்கிரமிப்புகளே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நடைபாதைகளில் கட்டப்படும் இந்துக் கோயில்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று இடித்தால் இந்துக்களின் மனம் புண்படுகிறது, அதைப் போலவே கிருத்துவ அல்லது இஸ்லாமிய மதத்தைச் சார்ந்தவர்களின்





கோவில்கள் நடைபாதையில் கட்டப்பட்டு இடிக்கப்பட்டால், அது அவர்களின் மனதைப் புண்படுத்துகிறது. இவைகளையெல்லாம் அரசு கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. சுயநலத்தின் அடிப்படையில்தான் பல கோயில்கள் கட்டப்படுகின்றன. என்றாலும் அப்படிக் கட்டிவிட்ட பிறகு, எல்லோரும் அங்கே வந்து வழிபடுகிற நிலை ஏற்படுகிறது. எனவேதான் இவைகளை அப்புறப்படுத்தும்போது ஜனநாயகப் பண்புகளையும், மக்கள் மனம் புண்படாமல் இருக்க வேண்டுமே என்ற எண்ணத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

நாங்களேகூட, ஆளும் கட்சியாக இங்கே செயல்பட்டாலும், வெளியே ஒரு அரசியல் கட்சிக்குச் சொந்தக்காரர்கள் என்றுதான் செயல்பட வேண்டியிருக்கிறது. எனவே அப்படிப்பட்ட நிலையில் நாங்கள் கூட அரசியல் கட்சிக்குச் சொந்தக்காரர்கள் என்ற அடிப்படையிலும் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி: நடைபாதைகளில் திடீர் திடீர் என்று கோயில்கள் உண்டாகும்போது, அவை எந்த மதத்தைச் சார்ந்தவையானாலும் சரி, அவைகளுக்கு மதத்தின் அடிப்படையிலான புனிதத் தன்மை எதுவும் கிடையாது. எனவே இதன் காரணமாக அவைகளை அப்புறப்படுத்துவதற்கு என்று தனியாக நோட்டீஸ் எதுவும் கொடுக்காமலேயே திடீரென்று அவைகளை அகற்றும் நடவடிக்கையை அரசு மேற்கொண்டால், மற்றவர்கள் ஒன்றாகச் சேர்ந்து எதிர்க்கும் நிலை உருவாகாது. எனவே அந்த முறையில் செயல்பட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நடைபாதைகளில் உள்ள கோயில்களுக்குப் புனிதத்தன்மை எதுமில்லை என்ற கருத்தைச் சொல்வது சரியாக இருக்க முடியாது.

[1982 மார்ச் 22

திரு. க. இராமமூர்த்தி: நடைபாதைகளில் திடீர் திடீர் என்று கோயில்கள் உண்டாகின்றன . . . .

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: திடீரென்றுதான் சிலர் பக்தர்களாக மாறுகிறார்கள். ஆத்திகர்களாக இருந்தவர்கள் நாத்திகர்களாக ஆகிறார்கள். அதைப்போலவே நாத்திகர்களாக இருந்தவர்களும் திடீரென்று ஆத்திகர்களாக மாறுகிறார்கள். இது இப்போது இயற்கையாக நடைபெறுகிறது. கோயில்களைப் பார்க்கும்போது, உடனே கும்பிட வேண்டும் என்ற பயம் ஏற்படுகிறது. கோயிலைத் தாண்டி, தள்ளிப் போய்விட்டால் அதற்குப் பிறகு பயமில்லாமல் போய்விடுகிற நிலைமையும் இருக்கிறது. கோயில் இல்லை, கடவுள் இல்லை என்றெல்லாம் எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்ற எண்ணம் சிலருக்கு ஏற்படுகிறது என்றால், அது அவர்களின் மனதைப் பொறுத்தது. ஆனால் குறிப்பாக இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்றால், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, ஒத்துழைப்பைத் தந்தால், அவைகள் எப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளாக இருந்தாலும், நீக்கிவிடலாம். எனவே இத்தகைய சூழ்நிலையில் அரசியல் கட்சிகளும் சேர்ந்து ஒத்துழைப்பை நல்கினால், கண்டிப்பாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நடைபாதைகளில் கொடிகளைக் கட்டுவது, கட்டிடங்கள் கட்டுவது, அல்லது சிலைகள் வைப்பது, கோயில்களைக் கட்டுவது என்பன போன்ற எல்லாவற்றையும் தவிர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் நாங்களும் இன்றைய தினம் அமைச்சராக இருக்கும் மாண்புமிகு திரு. கிருஷ்ணசாமி அவர்களும், காவல் துறையை அணுகி, பொது இடங்களிலும், குறிப்பாக நடைபாதைகளில் யாரும் இப்படிப் பட்டவைகளைக் கட்டுவதில்லை என்று முடிவெடுத்து, எல்லாக் கட்சியினரின் ஒப்புதலையும் பெற்று, அவர்களிடம் கையொப்பத்தையும் வாங்கி சென்னை நகரில் உள்ள நடைபாதைக் கடைகள், நடைபாதைக் கோயில்கள், நடைபாதைகளில் உள்ள கொடிகள் ஆகியவற்றை அகற்றுவது என்று முடிவு செய்து அத்தகைய காரியங்களில் ஈடுபட்டோம்.



1982 மார்ச் 22]

இப்போது இந்த ஆட்சி வந்த பிறகு அந்த முறை போய்விட்டது. எனவே மீண்டும் அத்தகைய முறையைக் கடைப்பிடிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்ன கருத்துக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் கையெழுத்துப் போட்ட பின்னால், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் அதைக் கடைபிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், யார் யார் கடைப்பிடிக்கவில்லை என்றும் பார்க்க வேண்டும். கையெழுத்து போட்டவர்களே மீறிக் கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் அதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். கொடிக் கம்பங்கள் ரோட்டின் குறுக்கில் நடப்படுகிற சூழ்நிலை கூட இருக்கின்றது. எனவேதான் சொல்கிறேன், இந்தப் பிரச்சினையில் ஒரு ஒருமித்த கருத்தும், அனைவரின் ஒத்துழைப்பும் இருந்தால், இத்தகைய நிலைமைகள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட முடியும்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது எடுத்த முடிவை யாரும் மீறவில்லை என்பதை நான் மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலம் அமைச்சருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இங்கே தெரிவிக்கப்படுகிற அனைத்துக் கருத்துக்களுமே தலைவர் மூலம்தான் தெரிவிக்கப்படுகின்றன (சிரிப்பு).

திரு. ஆர். டி. சீத்தாபதி: அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், இத்தகைய ஆக்கிரமிப்புகள் அதிகமாகிவிட்டன. நடைபாதைகளில் அங்காடிகளை வைப்பது, நடைபாதைகளில் கொடிகளை நடுவது, நடைபாதைகளில் கோயில்களைக் கட்டுவது, நடைபாதைகளில் கட்டிடங்களைக் கட்டுவது என்பதெல்லாம் அதிகமாகிவிட்டன. போட்டிக்கு நாங்களும் செய்கிறோம். இல்லை என்று மறுக்கவில்லை. எனவே இதைத்

[1982 மார்ச் 22

தவிர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், இதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

Thiru A. R. DAMODARAN : Sir, in removing these encroachments, if they do it irrespective of Party politics, no complaints will be made. It is because some people are excluded from such removals that trouble arises. May I ask the Government to take positive steps, at least in Municipal areas, urban areas and metropolitan areas, to remove the encroachments without any discrimination? In such a case, complaints are not likely to occur.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகள் என்ற அடிப்படையில் பார்க்காமல், மொத்தமாக இவைக ளெல்லாம் ஆக்கிரமிப்புகள் என்ற வகையில் கணக்கெடுக்கப்பட்டு அப்புறப் படுத்தப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும். ஆனால் பல இடங்களில் பல ஆண்டுகளாகப் பெருமளவில் ஆக்கிரமிப்புகள் நடை பெற்று, பல கட்டிடங்களே உருவாகிவிட்டன. அவைகளெல்லாம் உரிய காலத்தில் அகற்றப்படாமை காரணமாக இப்போது அவைகளை அகற்றுவதில் பல இடர்ப்பாடுகள் எற்படுகின்றன. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்த நெய்வேலியின் சாலையில் இரு மருங்கிலும் கடைகள் கட்டப்பட்டு ஆக்கிரமிப்புகள் நடைபெற்றிருக்கின்றன. அங்கே நல்ல கட்டடங்களையே கட்டிவிட்டிருக்கிறார்கள். அந்தச் சாலையின் அகலம் 22 அடி தான் இருக்கிறது. ஆனால் அதன் அகலம் 150 அடி இருக்க வேண்டும். அதாவது 100 அடிக்கு மேலாகவே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. நிரந்தரமாகக் கட்டப்பட்டிருக்கிற அந்தக் கடைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கிறபோது, அவர்கள் இங்கே வந்து அரசியல் கட்சிகளின் சார்பில் கோஷம் போடுகிறார்கள். அரசியல் கட்சி களின் கொடிகளைக் காட்டுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக் கிறது. எனவே அவைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்ற எண்ணம்



1982 மார்ச் 22]

எங்களுக்கு இருக்கிறது. சாலைகளைப் பொறுத்தவரை, அவைகள் நல்ல சாலைகளாக, போக்குவரத்திற்குத் தடையில்லாமல் விஸ்தாரமாக இருக்க வேண்டும் என்றுதான் எண்ணுகிறோம். எனினும் இவைகளை நடைமுறைப் படுத்துகிறபோதுதான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்தச் சிக்கல்களைப் போக்குவதற்கு அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Municipal Higher Secondary School, Palani*

* 190. Q.—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that an Assistant Headmaster for Municipal Higher Secondary School, Palani, Madurai District has not been appointed in spite of the strength of the School being more than 1,500 students; and

(*b*) if so, the action to be taken thereon?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) நிரப்பப்பட்டுவிட்டது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: 1,500 மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர் நியமிக்கப்பட வேண்டும் என்று அரசாணை இருந் தாலும்கூட, இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில், அந்தப் பதவி மிகவும் காலம் கடந்துதான் நிரப்பப்பட்டிருக்கிறது. அப்படி நியமிக்கப்பட்ட ஆசிரி யருக்குத் தகுதி இருந்தும்கூட, காலம் கடத்தப்பட்ட காரணத்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே உதவித் தலைமையாசிரியர் பணி எந்தத் தேதியில் காலியானதோ அந்தத் தேதியிலிருந்தே அவருக்குரிய படிகள் முதலியவற்றைக் கொடுப்பதற்கு அரசு ஆணையிடுமா ?

[1982 மார்ச் 22

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்ட காரணத்தாலோ என்னவோ உடனடியாக அந்தப் பதவி நிரப்பப்பட்டிருக்கிறது. 28—11—1981-ல் உதவித் தலைமையாசிரியர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். அவர் அந்தப் பதவி காலியான தேதியிலிருந்தே, அதற்கான படிகள் முதலியவற்றைப் பெற வேண்டும் என்றால், அதற்கு விதிகளைப் பார்த்துத்தான் அப்படிக் கொடுக்க இயலுமா என்று சொல்ல முடியும். எனவே விதிகளை அனுசரித்து இதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: பட்ஜெட் கூட்டத்தின்போது அனுமதி அளிக்கப்படும் பணியிடங்கள் எல்லாம் பொதுவாக 5 அல்லது 6 மாதங்கள் கழித்துத்தான் அரசாங்கத்தால் அனுமதிக்கப்படுகின்றன. அதற்குப் பிறகு அவை நகராட்சிகளுக்கும் அரசுப் பள்ளிகளுக்கும் அளிக்கப்படுகின்றன. அதற்குப் பிறகு நகராட்சிகள் அந்தப் பணியிடங்களை நிரப்ப மேலும் ஐந்தாறு மாதங்கள் எடுத்துக் கொள்கின்றன. காரணம் பொலிடிகல் பிரஷர் காரணமாக யாரை அந்தப் பதவிகளுக்கு நியமிப்பது என்று முடிவெடுப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. இதன் காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து இத்தகைய நிலைமைகள் மற்ற எந்த நகராட்சிகளின் பள்ளிகளிலும் ஏற்படாமலிருக்க, உடனுக்குடன் பதவிகளை நிரப்ப நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இதில் பொலிடிகல் பிரஷர் ஏதுமில்லை. திரு அங்கமுத்து என்ற உதவித் தலைமையாசிரியர் 22—4—1981 அன்று அகால மரணம் அடைந்ததால், இந்தக் காலியிடம் ஏற்பட்டது. அந்த இடம்தான் 11-வது மாதத்தில் நிரப்பப்பட்டிருக்கிறது. நகராட்சி மன்றங்களில் உள்ள மேல் நிலைப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் எத்தனை பணி இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்ற குறிப்பு என்னிடம் இல்லை. இது பழனி நகராட்சிப் பள்ளியைக் குறித்தது. இப்போது அந்தப் பதவி அங்கே நிரப்பப்பட்டுவிட்டது.



1982 மார்ச் 22]

சேலம் மாவட்டம், மோகனூரில் உள்ள பயணிகள் விடுதி.

* 191 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டம், மோகனூரில் நெடுஞ்சாலைத்துறை நிர்வாகத்தின்கீழ் உள்ள பயணிகள் விடுதி எவ்வித வசதியும் இன்றி இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அப்பயணிகள் விடுதியை வசதியுள்ளதாக ஆக்க திட்டம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் மோகனூரில் உள்ள பயணிகள் விடுதி ஒரு சிறிய வீட்டைப் போலவே தோற்றம் அளிக்கிறது. அங்கே கார் நிறுத்துவதற்கான இடம் இல்லை, சுகாதார வசதிகள் சீர்கேடுற்றுள்ளன. குடி நீர் வசதியில்லை. சரியான வெளிச்சம் இல்லை. கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அது ஆற்றங்கரையில் அமைந்திருந்தாலும் சிறப்பான இடமாக இருந்தாலும் அங்கே இத்தனை வசதிக் குறைவுகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் நிறைய ஆலைகள் இருக்கின்றன. அதன் காரணமாக அதிகமான பயணியர் அங்கே வருகிற நிலை இருக்கிறது. எனவே இத்தகைய சூழ்நிலை காரணமாக அங்கே நான் குறிப்பிட்ட வசதிகளை ஏற்படுத்த அரசு முன்வருமா? இப்போது அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்றாலும், இனியாவது புதிதாக அவைகளை ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மோகனூரில் இருக்கின்ற பயணிகள் விடுதியைப் பொறுத்தவரையில், இருபதுக்கு இருபது என்ற அளவிலே கட்டப்பட்ட ஒரு அறை இருக்கிறது. அதிலே கட்டில் இருக்கிறது. ஒரு மெத்தை இருக்கிறது. ஒரு நாற்காலி இருக்கிறது. குளிக்கும் அறை இருக்கிறது. அங்கே ஒரே ஒரு குறைபாடு மட்டும் இருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடி நீர் அங்கே கிடைக்கவில்லை. அதற்காக அங்கே இருக்கக்கூடிய காவலர்

[1982 மார்ச் 22

மோகனூரிலிருந்து குடிநீர் கொண்டு வரவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட வசதியாக அறைகள் அங்கே பல இருக்கும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் ஏன் அங்கே போனார் என்று எனக்குப் புரியவில்லை. ஏனென்றால் மோகனூர் ஆலைக்குச் சொந்தமான நவீன வசதிகள் கொண்ட, குளிர்ச்சாதனம் பொருத்தப்பட்ட அறைகள் அங்கே இருக்கின்றன. அப்படிப்பட்ட அறைகள் இருக்கும்போது இப்படிப்பட்ட அறைக்கு எப்படிப் போனார் என்று தெரியவில்லை. (சிரிப்பு)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** வசதியுள்ள இடங்கள் ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை. எம்.எல்.சி. என்றாலும்கூட, மற்றவர்களுக்கு இருக்கின்ற வாய்ப்பு வசதிகள் எங்களுக்குக் கிடைப்பதில்லை. அப்படி கிடைக்காத நிலையில் கிடைக்கின்ற இடங்களில் தங்குகிறோம். அங்கே சர்க்கரை ஆலை இருப்பதால், அங்கு அடிக்கடி செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே சென்று பார்த்ததால்தான் இதைத் தெரிவித்திருக்கிறேன். வசதி படைத்த ஏ.சி. ரூம் கிடைத்தால், அங்கே தங்க முயற்சிக்கிறேன்.

அங்கே கட்டில் இருக்கிறது, மெத்தை இருக்கிறது, ஆனால் கொசு வலை இல்லை. கொசு கடிப்பது மிகத் தொல்லையாக இருக்கிறது. தண்ணீர் இருக்கிறது—குளிர்ந்த தண்ணீர் இருக்கிறது, ஆனால் சுடுநீர் இல்லை. புதிய கட்டிடம் இல்லை, ஒரு சிறிய வீடுதான் இருக்கிறது. இதையெல்லாம் அதிகப்படுத்த, விரிவுபடுத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அந்தப் பயணிகள் விடுதியின் சராசரி மாத வருமானம் 15 ரூபாய்தான். அப்படிப்பட்ட நிலையில் காவலாளி வைத்து அதைக் கவனிக்க வேண்டிய நிலை வேறு இருக்கிறது. ஆகவே அதற்கு மேலும் செய்ய வேண்டுமென்றால், அரசாங்கத்தின் பணம் நிறைய செலவாகும். ஆகவே அதை நவீனப்படுத்தாமல் அப்படியே வைத்து நடத்திக் கொண்டிருக்கிறோம். வேண்டுமானால் அந்த இடத்திலே இன்னுமொரு அறையைக் கட்ட முடியும். கட்ட வேண்டிய நிலைமை இருந்தால், பரிசிலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** நெடுஞ்சாலைத் துறையில் அதிகமான விபத்துக்கள் நேர்வதற்குக் காரணம் போதுமான பயணிகள் விடுதி இல்லாததுதான். போகனமான மோகனூரில் போகனமான விடுதிகளைக் கட்டா விட்டாலும், சிறிய பயணிகள் விடுதிகளையாவது கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?



1982 மார்ச் 22]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அதுபற்றிய பட்ஜெட் குறிப்புகள் கூட பேரவையிலே வழங்கப்பட்டன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் மட்டும் 6 இடங்களில் நவீன வசதிகள் கொண்ட 6 விடுதிகளை 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்ட திட்டம் இருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வரும் போதெல்லாம் மோகனூர் சர்க்கரை ஆலை "கெஸ்ட் ஹவுசில்" தங்குவதால், இந்தப் பயணிகள் விடுதியில் உள்ள குறைகள் அவருக்குத் தெரியவில்லை. ஆகவே இந்தப் பயணிகள் விடுதியிலே சென்று தங்கி, அங்குள்ள தேவைகளை அறிந்து வசதிகளை உண்டாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் வசதிகள் இல்லாத இடத்திலே எப்படி வருமானம் வரும்? ஆகவே அமைச்சர் அவர்கள் தங்கி அதைப் பழுது பார்க்க முயற்சி செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** வசதிகள் என்பது நம்மைப் பொறுத்தது, அவரவர் மனதைப் பொறுத்தது. ஒரு சிலருக்குக் குளிர்சாதன அறைகள் இருந்தால்தான், தங்க முடியும், இல்லாவிட்டால் முடியாது. ஒரு சிலருக்கு எதுவும் இல்லாவிட்டாலும், கட்டில், மெத்தை இருந்தாலே போதும். ஒரு சிலருக்கு தரை இருந்தாலே போதும். பொதுவாக நெடுஞ்சாலைத் துறைப் பயணிகள் விடுதிகளைப் பொறுத்தவரையில், குளிர் சாதன அறைகள் பொருந்திய அறைகளாக ஏற்படுத்த முறை அமைதிப்பதில்லை. இருக்கின்ற பயணிகள் விடுதிகளை நல்ல முறையில் கவனிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அங்குள்ள குறைபாடு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை என்பதுதான். சுடுநீர் தேவை என்று இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அதிகமாக சுடு நீரில் குளிக்கக் கூடாது. குளிர்ந்த நீரில் குளிப்பதுதான் மனதிற்கும், உடம்பிற்கும் நல்லது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் எந்தெந்த வசதிகள் இல்லையோ அவைகள் சீர் செய்யப்படும்.

## *Government General Hospital, Madras.*

* 192 Q.—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) the number of in-patients and out-patients who are receiving treatment daily for diabetes in Government General Hospital, Madras;

[1982 மார்ச் 22

(b) whether there is a separate Department for treatment of diabetes in that Hospital; and

(c) how many Doctors are serving in that Department?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) 1. தினசரி உள்நோயாளிகளின் சராசரி எண்ணிக்கை 30

2. தினசரி புறநோயாளிகளின் சராசரி எண்ணிக்கை 366

(இ) ஆம்.

(உ) 1. மருத்துவம்—நீரிழிவு கௌரவ பேராசிரியர் 2

2. நீரிழிவு பேராசிரியர் 1

3. உதவி ஆசிரியர் (நீரிழிவியல்) 3

4. உதவி ஆசிரியர் (கண் மருத்துவம்) 1

5. மகப்பேறு-மகளிர் நோயியல் உதவியாசிரியர் 1

6. உயிர்வேதியியல் உதவிப் பேராசிரியர் 1

7. கௌரவ உதவி மருத்துவர் (நீரிழிவு இதயப் பணி) 1

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்தத் துறையின் முக்கியத்துவத்தையும், இதில் பயன் பெறுவோர்களின் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு அரசு இதற்கென்று தனி கட்டிட வசதியை ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அந்த இடத்தில் இருக்கக்கூடிய கட்டட வசதியே போதும் என்று அரசாங்கம் கருதுகிறது. கட்டட வசதியைப் பொறுத்தவரையில், ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஏராளமான கட்டிடங்கள் இருக்கின்றன. அண்மையிலே கூட ஆறு அடுக்குமாடிக் கட்டிடத்தைக் கட்டி முடித்திருக்கிறோம். இன்னும் கட்டிடங்கள் கட்டுவதன் மூலமாக நெருக்கடி ஏற்படும் என்பதால், இப்போது கட்டிடம் கட்டும் உத்தேசம் இல்லை. ஜெயில் உள்ள பகுதியை நமக்குத் தரவிருக்கிறார்கள். அதை ஆர்ஜிதம் செய்யவிருக்கிறோம். மேலும் பாலிசியாக விஸ்தரிக்கக்கூடிய நோக்கில் காம்ப்ரஹென்சிவ் ஸ்கீமாகக் கொண்டு வர முடியும். பீஸ்மீலாகச் செய்வது பொருத்தமாக இருக்காது.



1982 மார்ச் 22]

திரு. செ. மூத்துசாமி: பொது மருத்துவ மனைக்குள் வியாதியஸ்தர்களைச் சென்று பார்க்கும்போது, "ஜெனரல் வார்ட்" என்ற இடத்தில் பல பகுதிகளில் நுழைந்து போக முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுகிறது. அந்த அளவிற்கு கழிவறைகள், சானிட்டரி கண்டிஷன்கள் இருக்கின்றன. ஒரு முறை சென்றுவிட்டு வெளியே வந்தால், அதற்குப் பிறகு அரை மணி நேரத்திற்கு மூக்கைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதை நான் பல முறை சென்று பார்த்திருக்கிறேன். அதிகாரிகளிடம் சொல்லியும் யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் 'சர்ப்ரைஸ் விசிட்' செய்யும்போது "ஜெனரல் வார்ட்"களுக்கும் சென்று பரிசோதனை செய்து அந்த நிலையைச் சீர்திருத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அரசு பொது மருத்துவமனையைப் பொறுத்தவரையில், அங்கிருக்கக்கூடிய பிரச்சினைகள்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்கே நன்றாகத் தெரியும். தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையைவிட ஏறத்தாழ 60 சதவீதம் அதிகமான நோயாளிகள் அங்கே அனுமதிக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஏறத்தாழ பத்தாயிரம் புற நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 35 ஆயிரம், 40 ஆயிரம் பேர் அங்கே வந்து வெளியே போய்க் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய கழிவறைகள் பத்தாயிரம் பேர் வந்து போனால் தாக்குப் பிடிக்க முடியும். அதற்கு மேல் வந்தால் தாக்குப் பிடிக்க முடியாது. ஆகவே பிரச்சினைகள் தொடர்ந்து இருக்க வாய்ப்பு இருக்கிறது. அதற்காக நாம் கவலைப்படவில்லை என்று பொருள் அல்ல. நாமும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது உயர் மட்ட அதிகாரி ஒருவரை அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசராகப் போட்டிருக்கிறோம். அவரே வந்து பார்த்து இன்னும் ஆட்களின் எண்ணிக்கையை உயர்த்தலாமா, நிரந்தரமாக 8 மணி நேரத்திற்கு ஒரு முறை ஷிப்ட் சிஸ்டம் வைத்து சுத்தப்படுத்தலாமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். போஸ்ட்-கிராஜுவேட் இன்ஸ்டிடியூஷனாக வைத்துக்கொண்டு ரெஃபரென்ஸ் வைக்கலாமா என்று பார்க்கிறோம். இப்படி பல்வேறு வகையில் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன்:** டையபட்டாலஜி ஆராய்ச்சி, பயிற்சி, பரிசீலனை நடத்த யுகோஸ்லோவியா போன்ற நாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைத்து பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளலாம் என்று அழைப்பு வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். தமிழ் நாட்டில் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று 'ஆஃபர்' இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ததா? அது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவன் அவர்களுக்கு ஒரு நல்ல செய்தியைச் சொல்லுகிறேன். யுகோஸ்லோவியா போன்ற நாடுகள் மட்டுமல்லாமல், "கம்யூனிஸ்ட் நாடுகள்" போன்ற அந்த இடத்திற்கும் அனுப்பலாம் என்று நானே பரிந்துரை செய்திருக்கிறேன். இப்போது இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால் "Exchange of technical knowhow between Western countries and India" என்று இருக்கிறது. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து வருகிறார்கள். நாமும் அங்கே அனுப்பிக் கொண்டிருக்கிறோம். ரஷ்யாவிலிருந்தும் வந்திருந்தார்கள், இன்னும் ஈஸ்ட் ஜெர்மனியில் இருந்தும் வந்திருந்தார்கள்.

We should have proper exchange of technical personnel between these countries also.

மற்ற பகுதிகளிலிருந்து வராமல் இருக்கிறார்கள். அதற்காகத்தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 10-10)

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்னாலிருந்து அரசு மருத்துவ மனையிலே இவ்வாறு நீரிழிவு நோயாளிகளுக்கு ஒரு குறிப்பிட்ட மரத்திலே செய்யப்பட்ட பாத்திரத்திலே வைத்து தண்ணீரைக் கொடுத்து சரிப்படுத்தலாம் என்று சொல்லப்பட்டு வருகிறது. அந்தப் பழக்கம் இருக்கிறதா? அதைத் தொடர்ச்சியாகச்





செய்கின்றார்களா? அந்த முயற்சியை நாம் இப்போது மேற்கொண்டிருக்கிறோமா? அதனால் எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, அப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆனால் it would not be proper. திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. அந்தத் தண்ணீரைச் சாப்பிடுகின்ற நேரத்திலே சில குறிப்பிட்ட கட்டுப்பாடுகளை, கன்ட்ரோல்களையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டியதாக இருக்கிறது. எத்தனை நாட்கள் அந்தத் தண்ணீரை வைக்க வேண்டும்? அந்தத் தண்ணீரை மாத்திரம் சாப்பிட வேண்டுமா? இத்துடன் வேறு உணவு என்ன என்பது எல்லாம் பிரச்சினையாக இருக்கிறது. சில கன்ட்ரோல்ஸ் இருக்கின்றன. அந்தத் தண்ணீரைக் கொடுத்து அந்த விஷயத்திலே எச்சரிக்கையாக இருப்பார்களானால், அப்போது பிளட்டிலே உள்ள சுகர் குறைந்துவிடும் என்கிறார்கள். அப்படி குறைந்திருக்கிறதா என்பதையும் சொல்ல முடியாது. மரப் பாத்திரத்தில் தண்ணீர் வைத்து சுகப்படுத்த முடியும் என்ற மாதிரி முடிவு வரவேண்டும் என்றால், ஒழுங்காக கன்ட்ரோல்ஸ் வைத்துக்கொண்டுதான் செய்ய வேண்டும். அந்த அளவுக்கு கன்ட்ரோல்ஸ் வைத்து அரசு நடத்த எந்தவிதமான பரிந்துரையும் நமக்குத் தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. வன ஈர்ப்பு.

**(1) 9—3—1982 காலை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு எதிரே ஜி. எஸ். டி. ரோடில் திருவள்ளுவர் கழக சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸை ஒரு கூட்டத்தினர் வழி மறித்து, பஸ்ஸுக்கு நெருப்பு வைத்துக் கொளுத்தி, பிரயாணிகளின் உடைமைகளைக் கொள்ளையடித்தது குறித்து.**

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்:

**9-3-1982 காலை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு எதிராக எதிராக ஜி.என்.டி. ரோடில் திருவள்ளுவர் கழக சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸை ஒரு கூட்டத்தினர் வழிமறித்து, பஸ்சுக்கு நெருப்பு வைத்து கொளுத்தி, பிரயாணிகளின் உடைமைகளைக் கொள்ளையடித்தது குறித்து.**

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1982 மார்ச் 22

“9—3—1982 காலை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு எதிரே ஜி.எஸ்.டி. ரோடில் சென்னையிலிருந்து சேலம் போய்க்கொண்டிருந்த திருவள்ளுவர் கழக சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸை ஒரு கூட்டத்தினர் வழி மறித்து, நிறுத்தி அதிலிருந்து பிரயாணிகளை வெளியேற்றி, பஸ்சுக்கு நெருப்பு வைத்துக் கொளுத்தி, பிரயாணிகளின் உடைமைகளைக் கொள்ளையடித்து, வேறு சில பஸ்களையும் போலிசாரையும் தாக்கி கலவரம் புரிந்தது குறித்து.”

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

*** திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பஸ்களைத் தாக்குவது, எரிப்பது, அதிலே வருகின்ற பயணிகளைக் கல்லால் அடித்து காயப்படுத்துவது என்பது மக்கள் விரோத செயல், தேச விரோத செயல், மக்கள் வரிப்பணத்தைப் பாழாக்கும் செயல் என்பதனை எல்லோரும் உணருகின்ற வகையில் இப்படித் தாக்கப்பட்ட, எரிக்கப்பட்ட பஸ்களை பொதுமக்கள் அதிகமாகக் கூடுகின்ற இடத்திலே நிறுத்தி வைத்து, அது தாக்கப்பட்டதற்கான சரித்திரத்தை மக்கள் அறியும் வகையிலே நிறுத்தி வைக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இது எல்லோருக்கும் தெரிகின்ற வகையிலே, மக்களும் அரசியல் கட்சிகளும் உணர்கின்ற வகையிலே, இப்படி பல இடங்களிலே நாங்கள் நிறுத்தி வைத்திருக்கிறோம். இந்தப் பேருந்தைக் கூட இரண்டு நாட்களுக்கு நிறுத்தி வைத்திருந்தோம் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, இந்தத் திருவள்ளுவர் கழக சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸில் பயணம் செய்த பயணிகளின் கதி என்ன? அவர்களுடைய உடைமைகள் என்ன ஆயிற்று? அவர்கள் ஒழுங்காக ஊர் போய்ச் சேர்ந்தார்களா என்பது பற்றி விவரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அந்த பஸ்ஸிலே பயணம் செய்த பயணிகள் ஓரத்திலே போய் நின்று கொண்டிருந்தார்கள். அதற்குப் பின்னாலே வேறு ஒரு பேருந்தின் மூலமாக அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

@ 500 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**(2) தஞ்சை செயிண்ட் ஜான் பிரிட்டோ நடுநிலைப்பள்ளி அனாதை இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்கள் 100 பேர் அவ்விடுதியில் சாப்பிட்டதால் கடும் வயிற்று வலியில் அவதிப்படுவது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்:

“தஞ்சை செயிண்ட் ஜான்பிரிட்டோ நடுநிலைப்பள்ளி அனாதை இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்கள் 100 பேர் அவ்விடுதியில் சாப்பிட்டதால் கடும் வயிற்று வலியில் அவதிப்படுவதால் பெற்றோர்கள், மாணவர்கள் இடையே தோன்றியுள்ள அச்ச நிலை குறித்து”.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை நிதி தந்து நடத்தப்படுகின்ற அனாதை இல்லங்களிலே, உணவு தயாரித்து வழங்குகின்றபோது, இந்த உணவிலேகூட மோர் சாதம், உலர்ந்த மீன் தூள், வெங்காயம் ஆகியவை தயாரிக்கப்பட்டிருந்த உணவைச் சாப்பிட்டதனாலேயே இந்த வயிற்று வலி வந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த வகையான உணவுதான் தயாரித்து வழங்க வேண்டும் என்று சமூக நலத் துறை அவர்களுக்கு அறிவுரை அளிக்குமா? ஆண்டுக்கு எத்தனை முறை அந்த அனாதை இல்லங்களிலே சமூக நலத் துறையைச் சார்ந்தவர்கள் சோதனையிடுகிறார்கள்? அப்படி இல்லை என்றால், இனிமேல் அடிக்கடி, 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது போய் சோதனையிட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் “மோர் சாதம், உலர்ந்த மீன் தூள்கள், வெங்காயம் எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், ஏதாவது வேறுவிதமான உணவை அவர்களுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும்” என்று சொல்கின்றார்கள். அதுபற்றி நல்ல கருத்துக்களை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு என்ன உணவைக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால், அது அனாதை இல்லங்களிலே இருக்கின்ற குழந்தைகள் உடல்

@ 501 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திருமதி கோமதி சீனிவாசன்] [1982 மார்ச் 22

நலத்திற்கு ஒப்புமாறு இருந்தால், அவர்களும் என்ன உணவு வேண்டுமென்று கேட்டால், அவர்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு சமூக நலத் துறையின் மூலம் அளிக்கப்படும். அநாதை இல்லங்களைப் பார்வையிடுவதற்கு சமூக நலத் துறையிலிருந்து வருடத்திற்கு இரு முறைகள் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 'நோய் நாடி' என்ற அடிப்படையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இத்தகைய அனாதை இல்லங்களிலே அவர்கள் அனாதைகள். அவர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்குகிறார்கள். அந்த உணவுப் பொருள்களிலே கலப்படம், விஷத் தன்மை வாய்ந்த பொருள்கள் இருந்ததால்தான், அவர்கள் இந்தக் கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். என்ன உணவு என்று கேட்பதைவிட, கலப்படம் அற்ற, விஷத்தன்மை வாய்ந்த பொருள்கள் கலக்காத உணவு கொடுக்க வேண்டும். ஆகவே அவற்றைப் பரிசோதிக்க என்று சமூக நலத் துறையில் டாக்டர்கள் நியமித்து அவற்றைப் பரிசோதிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் அவர்களைக் காக்க முடியுமே தவிர, அந்தக் கலப்பட உணவை உட்கொண்டு நோய்கள் வந்த பிறகு, காப்பாற்றுவதிலே பயன் இல்லாமல் போய்விடும். ஆகவே, 'நோய் நாடி, நோய் முதல் நாடி' என்ற முறையில் செய்வதற்கு அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அந்த உணவுப் பொருள்களைப் பரிசோதிப்பதற்காக டாக்டர் இருக்கிறார். அவர் பரிசோதித்த பிறகுதான் அந்த உணவுப் பொருள்களை சமைக்கக் கொண்டு போகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1981-82 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி நிலை அறிக்கையை இன்னும் பேரவைக்கு அளிக்கவில்லை.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கத்தினர் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் இரண்டு முறைகள் விளக்கம் கேட்கலாம். தலைவர் அவர்கள் இல்லை என்று சொன்னால் அது வேறு. நான் ஒரு கேள்விதான் கேட்டேன்.



1982 மார்ச் 22]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் ஒவ்வொருவரும் இரண்டு கேள்விகள் கேட்க முடியாது. அதிலே ஒன்றும் விவாதம் வேண்டுமென்று கேட்க முடியாது. அது மரபு அல்ல. அவையின் மரபிற்கு முரணானது. ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள். ஆளுக்கு ஒரு கேள்வி என்று கேட்டாகிவிட்டது. இரண்டு கேள்விகள் ஒவ்வொருவரும் கேட்பது மரபல்ல. எப்போதும் நடப்பதுதான். உங்களுக்கு மட்டும் விதிவிலக்காக நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி எழுந்தார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உட்காருங்கள், உட்காருங்கள். இரண்டு கேள்விகள் அனுமதிக்கலாம். இரண்டு கேள்விகள் அனுமதித்தாகி விட்டது.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்கள் கேள்வி கேட்டு நாங்கள் பதில் சொல்கின்ற நிலைமை ஏற்படலாமா? அதனால்தான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நான் விதி விலக்கு வேண்டுமென்று கேட்கவில்லை. இதுதான் விதி என்று சொல்லிவிட்டால் சரி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு கேள்விகள் அனுமதிக்க வேண்டும். அனுமதித்தாகிவிட்டது. ஒரு உறுப்பினர் முதலில் கேள்வி கேட்டார்கள். அடுத்து ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இரண்டு கேள்வியாகிவிட்டது. அதுதான் விதி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

**3. 1981-82 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையை அளித்தல்.**

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 502.67 கோடியில், ரூ. 235.73 கோடி வருவாய் கணக்கிலும், ரூ. 266.94 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் வருகின்றன. பல்வேறு கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள தொகை பற்றிய விவரங்களும் கூடுதல் நிதி ஒதுக்கத்திற்கான காரணங்களும் இத்துடன் இணைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் துணை மானியக் கோரிக்கை வைக்கப்பட்ட

[திரு. கா. இராசா முகமது] [1982 மார்ச் 22

பின்னர் அனுமதிக்கப்பட்ட செலவினங்களும் இப்போதுள்ள நிதி ஒதுக்கத்துக்கு மேற்பட்டுக் கூடுதலாக நிதி ஒதுக்கம் தேவைப்படுகிற செலவினங்களும் இந்த மதிப்பீடுகளில் உள்ளன. இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு இனங்களில் முக்கியமான சில திட்டங்களைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. ஆதி திராவிடர்களின் நலனைக் கட்டிக் காப்பதிலும் அவர்கள் ஏழ்மைக் கோட்டிற்கு மேலாக வர அவர்களுக்கு உதவி செய்வதிலும் இந்த அரசு கண்ணும் கருத்துமாய் இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த நோக்கத்தை எய்தும் பொருட்டு, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு மூலதனத்திற்கு ஒரு கோடி ரூபாய் மேற்கொண்டும் வழங்கப்பட்டுள்ளது. இக் கழகம் ஆதி திராவிடர்களின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பழங்குடியினர் பள்ளிகளுக்காகக் கட்டிடம் கட்ட மேற்கொண்டும் ரூபாய் 12 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிட மாணவர்களுக்கு மெட்ரிக்குக்கு மேற்பட்ட படிப்பு பயில, உதவித் தொகை அளிக்கும் பொருட்டு, மேற்கொண்டும் ரூபாய் 22.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. இந்த ஆண்டில் 150 வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக இந்த அரசு மேற்கொண்டும் ரூபாய் 33.57 கோடி அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீட்டில் இதற்கான அனுமதி உள்ளது.

4. கிராமப் பகுதிகளில் கடன் வழங்குவதில் முக்கிய நிறுவனமாக விளங்கி வருகின்ற கூட்டுறவுக் கடன் வழங்கு நிறுவனங்களை வலுப்படுத்த எல்லா முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொண்டு வருகிறது. கிராமக் கடன் வழங்கு கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக இந்த மதிப்பீடுகளில் மேலும் ரூபாய் 80.36 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு வேலை வாய்ப்பு அளிக்க கூட்டுறவு நூற்பாலைகளில் பங்கு மூலதனமாக முதலீடு செய்யும் பொருட்டு மேற்கொண்டும் ரூபாய் 153.75 இலட்சம் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவுத் தொடக்கச் சங்கத்தின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக, இறுதித் துணை மதிப்பீடுகளில் மேற்கொண்டும் ரூ. 100 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.



1982 மார்ச் 22] [திரு. கா. இராசா முகமது]

5. கல்வி கற்பதற்கான வாய்ப்புகளையும் கல்வியின் தரத்தையும் எல்லா நிலைகளிலும் உயர்த்துவதே இவ்வரசின் குறிக்கோளாகும். தமிழ்ப் பல்கலைக் கழகத்தையும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தையும் ஏற்படுத்துவதற்காக இந்த மதிப்பீடுகளில் மேற்கொண்டும் ரூ. 56 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

6. சாலைகள் அமைப்பதில் இவ்வரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இதன்பொருட்டு, இந்தத் துணை மதிப்பீடுகளில் மேலும் ரூபாய் 5.27 கோடி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. உலக வங்கி சத்துணவுத் திட்டத்தின்கீழ் துணை நிலையங்களை அமைப்பதற்காக ரூபாய் 1.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. போக்குவரத்து நிறுவனங்கள் திறமையுடன் செயல்படுவதற்கு உதவி அளிக்கும் பொருட்டு, இந்தத் துணை மதிப்பீட்டில் பல்லவன் போக்குவரத்து நிறுவனத்திற்கு ரூ. 2.59 கோடியும் தந்தை பெரியார் போக்குவரத்து நிறுவனத்திற்கு ரூபாய் 1.50 கோடியும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

8. முதியோர் உதவித்தொகை, கைம்பெண்கள், உடல் ஊனமுற்றவர் உதவித் தொகை வழங்கும் தற்போதைய திட்டத்தில் மேற்கொண்டும் 17,934 பேர்களும் வேளாண்மைத் தொழிலாளர்களில் 30,000 பேர்களும் உதவித் தொகை பெறுவர். இக் கூடுதல் செலவிற்கு அனுமதி வழங்குமாறு இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

9. 150 காவல் நிலையங்களை ரூ. 3.50 கோடி செலவில் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ரூ. 75 இலட்சம் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10. அவையில் வைக்கப்பட்டுள்ள 1981-82 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கையில் உள்ள சில முக்கியச் செலவினங்களை மட்டுமே எடுத்துக் கூறியுள்ளேன். இந்தக் கோரிக்கைகளில் அரசு கேட்டுள்ள தொகைகளை வழங்கி, திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன்.

வணக்கம்.

**4. மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு துணை வினாவிற்கு அளித்த விடைக்குத் திருத்தம் குறித்த அறிக்கை.**

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 2—2—1982 ஆம் நாளன்று 1977 ஆம் ஆண்டிலிருந்து மாவட்டவாரியாக அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட புதிய பாசனத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி, எம்.எல்.சி. அவர்களின் வினாவிற்கு விடை அளித்ததைத் தொடர்ந்து மாண்புமிகு திரு. பா. ரா. தாமஸ், எம்.எல்.சி. எழுப்பிய ஒரு துணை வினாவிற்குக் கீழ்க்கண்டவாறு பதிலளிக்கப்பட்டது :—

" சிறுமலை ஆறு திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு உத்திரவிட்டு இருக்கிறது. எனவே, இப்போது பூர்வாங்கமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன ".

மேற்கூறிய பதிலுக்குக் கீழ்க்கண்ட திருத்தத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன் :—

" சிறுமலை ஆறு திட்டத்தை மீண்டும் பரிசீலித்து அரசு முடிவு செய்ய விரும்புகிறது. அதன் பிறகு பூர்வாங்கமாக மதிப்பீடு தயாரிக்கப்படும்.

5. அரசின் தீர்மானம்.

**மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.**

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள் @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

என்று முன்மொழிகிறேன்.

@ 502-592 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



உறுப்பினர்கள் பேசியதற்குப் பிறகு பதிலளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, இது ஒரு முக்கியமான கொள்கைக் குறிப்பு என்பதால், அது பற்றிய சில முக்கியமான திட்டங்களைப்பற்றி அமைச்சரவர்கள் முன்கூட்டியே தெரிவித்தால், விவாதத்தைத் தொடர துணையாக இருக்கும். மேலும் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுவது, சட்ட முன்வடிவு போன்றவை அவையில் வரும்போது சரி. கொள்கை விளக்கக் குறிப்பு அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதன் மீதுதான் விவாதம்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பு மானியக் கோரிக்கையாகப் பேரவையில் வந்துவிடுகிறது. அந்த விவாதத்தின் அடிப்படையில் சில விவரங்களை அமைச்சரவர்கள் தெரிவித்தபின், இங்கே விவாதம் நடைபெறுகிறது. எனவே புதிய விளைவுகள் பற்றிச் சொன்னால், அது தொடர்பாக முழுமையான விவாதம் நடைபெற வாய்ப்பு ஏற்படுமெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் குறிப்புகள்தான் அங்கே வைக்கப்பட்டது. இங்கேயும் அதை வைத்திருக்கிறோம். இதிலே ஒரே ஒரு விஷயத்தை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில் கொண்டு பேசினால், ஏதுவாக இருக்கும். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், 4.8 கோடி மக்கள் இருக்கிறார்கள். இந்த மானியத்தின்கீழ் இவர்களுக்காகச் செலவழிக்கிற தொகை சராசரி எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் எடுத்துக்கொள்கிற அவர்களுடைய இலாகா எடுத்துக்கொள்கிற 33 கோடி ரூபாயைக் கழித்தால், இந்தத் துறைக்கு 110 கோடி ரூபாய் கிடைக்கிறது. பேமலி ப்ளேனிங் எல்லாம் சேர்த்து அந்த அளவிற்கு வருகிறது. எனவே சராசரியாக ஒரு நபருக்கு ஒரு வருடத்திற்குச் செலவழிக்கக்கூடியது 20லிருந்து 22 ரூபாயாக இருக்கிறது.

Per capita expenditure under the various Directors of Public Health, Medical Education and Services, Primary Health Services, Indigenous Medicine, Siddha Medicine எல்லாவற்றையும் சேர்த்து இவ்வளவுதான் செலவழிக்க முடிகிறது. 20லிருந்து 22 ரூபாய்வரை தான் செலவழிக்க முடிகிறது. ஓவர்ஹெட் சேர்த்து இவ்வளவு மருந்துக்காகச் செலவழிக்கக் கூடியது ஒரு நபருக்கு சராசரியாக ஆண்டுக்கு 4 ரூபாயாக இருக்கிறது. இதுதான் நம்முடைய நிலைமை. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் முன்னேற்றத்தில் இருக்கிறோம், முன்னணியில் இருக்கிறோமென்றுதான் சொல்ல வேண்டும். இவ்வளவு குறைவாகச் செலவழித்தும், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, முன்னணியில் இருக்கிறோமென்று நம்மை நாமே பெருமைப் படுத்திக் கொள்கிறோமே தவிர, வேறொன்றுமில்லை. ஏழை மக்களுக்கு எந்த அளவிற்குச் செய்ய வேண்டுமோ அதற்கு வாதாட வேண்டும். சட்ட மன்றப் பேரவையிலே ஒரு கருத்தை நான் யோசனையாகச் சொன்னேன். அதற்குப் பிறகு அங்கே அதைப்பற்றி விவாதிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அது பத்திரிகையில் வந்திருக்கிறது. ஹாஸ்பிடல் கார்ப்பரேஷன் என்று துவக்கலாமென்று சொன்னேன். இப்போது நர்சிங் ஹோம்களில் ஏராளமான சார்ஜ் பண்ணுகிறார்கள். 300 ரூபாய், 400 ரூபாய் வருமானம் உள்ளவர்கள்கூட நர்சிங் ஹோமுக்குச் சென்று ஹைட்ரோசல் அல்லது ஹெர்னியா ஆப்பரேஷன் செய்துகொள்ள வேண்டுமென்றால், மனைவிக்கு Tubectory ஆப்பரேஷன் செய்ய வேண்டுமென்றால் 4,000 5,000 ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே மிடில் கிளாஸ் —ரூ. 400, ரூ. 500 வருமானம் உள்ளவர்கள் அத்தனைபேரும், மருத்துவ மனைக்கு வந்தாக வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், தனியாக கொஞ்சம் மருத்துவ மனைகளைத் துவக்கி, ஒரு கட்டணத்தை வசூல் செய்து, அதன்மூலம் அவர்களுக்கு ஓரளவிற்குக் கணிசமான Siphen them off to these nursing homes. என்கின்ற வகையில் நாம் செய்வதன் மூலமாக, அவர்களுக்கு நன்மைகள் கிடைக்கக்கூடும். இப்படிப்பட்ட கருத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்களெல்லாம் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். எந்த முடிவிற்கும் அரசாங்கம் வரவில்லை. நாம் செலவழிப்பதை அதிகப்படுத்த முடியாது. இப்போதே 10 சதவிகிதம் வந்து கொண்டிருக்கிறது. நம்முடைய





பட்ஜெட்டில் 10 சதவிகிதம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுகூடப் போதாது. 12 சதவிகிதம் எடுத்தால், கல்விக்குக் குறைந்துவிடும், மற்ற மானியங்களுக்குக் குறைந்து விடும். இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமையில் இருக்கிறோம். இருந்தாலும் மற்ற மாநிலங்களைவிட நன்றாக இருக்கிறோம். இன்னும் 200, 300 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டுமென்றால், ஏராளமான டாக்ஸ் போட வேண்டும். அப்போது விலைவாசி ஏறிவிடும். பல தொல்லைகள் வரும். இந்தச் சூழ்நிலையில் எப்படிச் செய்யலாம் என்று நல்ல யோசனைகள் சொன்னால், அது ஏற்றுக்கொள்கிற கருத்தாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், Transfer of resources ரிசோர்சஸ் முன்பெல்லாம் மெட்ரோபாலிடன் ஏரியாவிற்கு ஜாஸ்தியாக இருந்தது.

(முற்பகல் 10-30)

இப்பொழுது பெர்சன்டேஜைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். மருந்துகளுக்காக எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதைப்பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறோம். அதோடு மட்டுமல்லாமல், படிப்படியாக கிராமப் புறங்களில் எந்தவித வசதியும் இல்லாதிருந்த நிலையை மாற்றி, கொஞ்சம் ஜாஸ்தியாகச் செலவு செய்து ஓரளவுக்கு வசதியைச் செய்கின்ற தன்மையை ஏற்படுத்தியிருக்கிறோம். இது ஒரு புதுமையான மாறுதல் என்பதையும் நான் சொல்லியாக வேண்டும். அந்த வகையில் படிப்படியாக கிராமங்களுக்குச் செய்துகொண்டு வருகிறோம். அதுபோல் 'டிரான்ஸ்பர் ஆப் டெக்னாலஜி' என்கிற ஒரு கருத்தை அறிவித்தோம். அத்தகைய முயற்சியையும் ஆங்காங்குள்ள தாலுக்கா மருத்துவ மனைகளில் செய்து கொண்டு வருகிறோம். அந்த வகையில் சிகிச்சை அளிக்க மெட்ராஸ் சிட்டியிலிருந்து திருத்தணி போன்ற இடங்களுக்கு மெடிக்கல் எக்ஸ்பெர்ட்ஸ்-ஐ அனுப்பியிருக்கிறோம். டிஸ்டிரிக்ட்களுக்கும் தாலுக்காக்களுக்கும் அதுபோல் அனுப்பியிருக்கிறோம். தாலுக்கா மருத்துவ மனைகளில் இத்தகைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை எல்லோருக்கும் திட்டவட்டமாக எடுத்துச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், மருத்துவமனைகளில் இதுபற்றி எல்லோருக்கும் தெரிவதற்காக போர்ட் வைக்கக் கூட சொல்லியிருக்கிறோம். அந்த வகையில் அது வைக்கப்பட்டிருக்கிறது. என்னென்ன செய்து கொண்டிருக்கிறோம் என்கிற தகவலை பொதுமக்களுக்குச் சொல்ல ஏற்பாடு செய்திருக்கிறோம். இத்தகைய மருத்துவ வசதிகள் எல்லோருக்கும் தெரிந்தாக வேண்டும். அதுபோல் விலை குறைந்த மருந்துகளைப் பயன்படுத்துவதற்காக சித்தா போன்ற தமிழ் மருத்துவத்திற்கும் ஜாஸ்தியாகப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு சீனியர் மெம்பர். அவர்கள்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 மார்ச் 22

இது குறித்து விளக்கமளிக்க வேண்டுமென்று வற்புறுத்தியதன் பேரில் அவர்கள் கருத்துக்கு மதிப்பளித்து நான் இதைச் சொல்லியிருக்கிறேன். மீண்டும் நான் பேசிக்கொண்டேயிருந்தால், மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்படும். ஆரம்ப சுகாதார நிலையங்களை உயர்த்துவது என்பது சிக்கலானது. என்றாலும் ஒரு மாறுதலுக்காக, புதுமையாக நாங்கள் செய்திருக்கிறோம். மேலும் இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சொல்லப்பட்ட கருத்து.

"We must elevate the Primary Health Centres to the level of Taluk Headquarters Hospitals. One out of every four/five Primary Health Centres should be taken up in the Fifth Five Year Plan Period."

என்று ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே சில காரணங்களைச் சொல்லி அதைச் செய்ய முடியாது என்கிற நிலை இருந்தது. இதுபற்றி அதிகாரிகள் செய்ய முடியாது என்று சொன்னார்கள். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இது கொண்டு வரப்பட்டபோது, இது மிகவும் முக்கியமானது ஆயிற்றே என்று அவர்கள் சொல்லி, சென்ற ஆண்டு 6 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இத்தகைய வசதியைச் செய்திருக்கிறோம். பிறகு 24 ஆரம்ப சுகாதார நிலையங்களை புதியதாகத் திறந்திருக்கிறோம். இந்த ஆண்டும் உயர்த்த இருக்கிறோம். இப்படி படிப்படியாக கிராமப்புறங்களுக்கு வேண்டிய மருத்துவ வசதியைச் செய்து கொண்டிருக்கிறோம்.

Transferring the resources, transferring the technical know-how, transferring the advantages of medical profession and other ramifications to the rural centres.

என்ற அளவில் செய்து கொண்டிருக்கிறோம். வேகத்தில் இதைச் செய்ய முடியவில்லை. ஆனால் அந்தத் திசையில் இந்த இலாகா இப்பொழுது சென்று கொண்டிருக்கிறது. மற்ற கருத்துக்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதற்குப் பிறகு நான் சொல்கிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்ததற்கு மகிழ்ச்சி. ஆனால் ஒவ்வொரு கொள்கைக் குறிப்பிற்கும் இது ஒரு மரபாக ஆகிவிடக் கூடாது.



1982 மார்ச் 22]

THIRU A. R. DAMODARAN : Sir, I rise to compliment ...........

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்கு அல்ல. பொதுவாகச் சொல்கிறேன். 9 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நான் கேட்டுக் கொண்டதன் பேரில், சில பேர் விலகியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவர்கள் பேசும்போது, சுருக்கமாகப் பேசி விரைவில் முடிக்க ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கல்வி மானியம் போல் இது இரண்டு நாட்கள் நடக்காது. அவையை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க உறுப்பினர்கள் அனைவரும் சுருக்கமாகப் பேசி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : How many minutes, Sir ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 15 நிமிடத்திற்குள் முடியுங்கள்.

* Thiru A. R. DAMODARAN : Sir, I rise to compliment the Hon. the Minister for Health on having placed the Policy Notes before the House and I would like first to congratulate him for supporting the idea of a Medical University for Tamil Nadu which I whole-heartedly welcome. I understand that the All India Medical Council has also given its approval to this basic idea and I earnestly hope that before 1983-84, the Bill for the starting of the Medical University in Tamil Nadu will be placed before the Legislature so that it may become an accomplished fact. When we have a Medical University, not only the Medical Colleges but also the various research institutions could be affiliated to the University so that original research may be prompted in the medical field.

A related matter is the question of admission to medical colleges. Last year the Hon. the Minister for Health created an innovation in medical college admission, which I whole-heartedly endorse and support. I was not able to express my views in the Legislature because, as is usual with Ministers, they always make these announcements after the Legislature is adjourned, whether it is an increase in the power tariff, or an increase in the transport tariff, or an increase or decrease in the amount of subsidy that is paid to the Civil Supplies Corporation. In this matter of admission to medical colleges, the Hon. the Minister for Health made this announcement rather late and I was not

able to welcome it. I whole-heartedly welcome this proposal to reduce the marks for interview from 75 to 30 in the case of admission to medical colleges. He has quoted the judgment of a very distant High Court, Jammu and Kashmir High Court. I only wish that he would come nearer to South India and quote the judgment of the Kerala High Court where they have stated that interviews should not be there and that we should admit students in medical institutions only on the basis of an entrance examination. The results have been made very clear in today's papers and 192 persons who got admission in the previous list have not found their names in the list after appearing for the entrance examination. I would earnestly plead with the Hon. Minister—and I am not making any allegation that something wrong who occurred in the system of medical admission in Tamil Nadu; far be it from me to make that allegation; I am only saying that within the ambit of the reservation policy of the Government of Tamil Nadu, 50 per cent for Backward comunities and 18 per cent for Scheduled Castes and Tribes—we should have an entrance examination for our medical colleges so that only the ablest and the most meritorious among the backward classes and Scheduled Castes and Tribes and the other communities may be selected to our medical institutions. There is a deep sense of frustration amongst those who are not selected because they always seem to think, although it may not be correct, that something wrong is going on in interview committees. The amplitude of patronage has been considerably reduced by reducing the interview marks from 75 to 30. I would suggest that a system of objective questions and multiple choice questions—we do not want long essay type of questions—may be introduced. As I have said, absolute confidentiality should be maintained about the persons who write the examinations and those who correct the papers. There are various models which we could copy. Therefore, I would plead that with effect from 1982 onwards, admissions to medical colleges should be done directly on the basis of marks in entrance examinations. Not only that, Sir. It has long been suggested that the in-take in our medical colleges should be reduced to a maximum of 100 in each medical college. I would make this plea not with the intention of reducing it in Madras City where more candidates are being admitted to the Madras Medical College. But, I would request the Hon.



Minister to adopt, as a conscious policy, that by 1987, taking into account the population growth and the demand for extensive medical education from the rural areas, it should be the policy of the Tamil Nadu Government that every district should have a medical college and that the in-take should be fixed at 100 for each such college. We are at present admitting almost 1,100 students in our Medical Degree courses every year. Even if this policy is adopted, the admissions would reach the level of only 1,500 by 1987, which may not be an acceptable target to all concerned, including the All-India Medical Council. Apart from the starting of Medical Colleges in every district, may I plead with the Hon. Minister that Post-Graduate Diploma courses in various disciplines like Orthopaedics, Paediatrics, E.N.T., Gynaecology and Obstetrics, Dermatology, Ophthalmology and S.T.D. be started in the district hospitals? If these Post-Graduate Diploma Courses are started in the districts, the difficulty which is experienced today in getting Post-Graduates in these disciplines to serve in the rural hospitals—when I refer to the rural hospitals, I am not referring to the Primary Health centres but I am referring to the district headquarters hospitals and taluk headquarters hospitals—will be considerably solved. There will be a flow of talent from the metropolitan areas to the district headquarters and this will help a reat deal in attracting medical talent to our district hospitals. There is also an acute shortage of specialists in basic medical subjects like anatomy, physiology, microbiology, bio-chemistry and pharmacology. It is well-known that in our teaching hospitals including those at Chengalpattu and Thanjavur we do not have sufficient teachers with Post-Graduate qualifications to tackle these subjects. These are all non-practicing subjects in the sense that these doctors will not get any additional remuneration by private practice. Therefore, I would plead with the Hon. Minister that these doctors should be treated as a special class. If necessary, even if it is not possible to give a salary rise to them, a special allowance should be paid to them to compensate them for taking to these subject-specialities.

(Thiru A. R. Damodaran) [1982 மார்ச் 22

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

Sir, one complaint I must bring to the notice of the Hon. Minister is this. While I have the greatest respect and regard for the medical profession and while I do not wish to state that all of them are subject to the same defects, I may point out that teaching in medical colleges requires to be programmed and monitored in a better fashion. I have received complaints from many teaching hospitals—I will not mention the name because I do not want to single out any particular medical college for my criticism. But, I would like to say that many of the honorary people as well as the paid people who are designated as Professors are not interested in taking clinics in our hospitals. In fact, it is a sad feature, especially in Madras City, to find that whether they are paid or honorary surgeons, they come to the hospitals rather late—not all of them—but some of them come only at 11 or 11-30 a.m. after operating in some of the complexes that have been established in Madras City. I have no objection to such doctors doing those operations in those clinics but my only request is that they need not be continued in Government service if they are not interested in clinical work. Let us at least remove them from the teaching side: let us not designate them as Professors. I would request the Hon. Minister to consult the students, medical students and find out for himself as to how many Professors who have been designated as Professors are interested in conducting one or two clinics per week. We cannot blame the students today for not attending the colleges when we do not insist on the Professors, conducting clinics. It is not the theory class which the students require but it is the clinics that they want. I may inform the Hon. Minister that in Vellore Hospital a fixed time-table is given to both the under-graduate and post-graduate classes. A time-table is given for the whole year indicating the time and the Professor who will take the clinics in the Vellore Medical College Hospital. What can be achieved in one Vellore Medical College can certainly be achieved by the Hon. Minister if he sets his mind to it.

Let me now pass on to Medical Services and Family Welfare. The Hon. Minister has taken legitimate credit for the success of Family Welfare Programme in Tamil Nadu. Unfortunately, the shift in emphasis has been more towards tubectomy and laperos-



1982 மார்ச் 22] (Thiru A. R. Damodaran)

copy operation and we are going down as far as the vasectomy cases are concerned. This is a result of the Emergency excesses in 1975-76. According to the figures during the Emergency, it was somewhere about 5 lakhs. I think the male population should also be persuaded—I am not saying compelled—persuaded to subject themselves to vasectomy operation. I would request the Government to give due importance to vasectomy so that the male population can also contribute to this family welfare programme. I hope that without compulsion or coercion efforts will be made to motivate the male section to undergo this operation also.

Reference has been made to the treatment of communicable diseases and the Hon. Minister has taken a great deal of interest in the eradication of two particular diseases. Eradication is probably not the right word because leprosy cannot be totally eradicated. But I believe that modern leprosy treatment involves a multi-drug therapy because in the case of Dapsone it is found that resistance has been built up in those patients for this drug and multi-drug therapy is being advocated which includes the use of such drugs as Rifampicin and Lamprin. May I request the

(முற்பகல் 10.40)

Hon. Minister to see that these drugs are provided in all the rural areas of our State so that this disease may be treated even in the remotest parts of Tamil Nadu? May I also point out that while a number of Diploma Courses have been started by the Medical Colleges in our State, not a single Medical College in our State has attempted to affiliate itself to the Diploma Course in leprosy which has been recognised by the University of Madras and also by the All-India Medical Council ? In view of the Hon. Minister's interest in the eradication and cure of this disease, I would request that we programme to start this diploma course even from 1982-83 in at least the Chengalpattu Medical College Hospital which is very near the Government of India Research Centre in Chengalpattu.

Sir, regarding tuberculosis, the Hon. Minister has himself mentioned that a pilot project has been started in Chengalpattu with multi-drug therapy. In Madras City, I believe considerable success has been achieved in the treatment of tuberculosis where

the period of treatment has been cut down to eight months as against $1\frac{1}{2}$ years or 2 years under the normal drug therapy. I would request that in view of the heavy incidence of tuberculosis which is a debilitating disease as far as the working classes are concerned we must have the implementation of multi-drug therapy for the cure of tuberculosis. I hope that adequate funds would be provided for this purpose.

Sir, regarding malaria and filaria, we are all in despair because we are being bitten by mosquitoes day and night. The mosquito population has grown. Whatever success the Hon. Minister may have achieved in family welfare as far as human beings are concerned, here the mosquito population has multiplied needlessly under the administration of the Hon. Dr. Hande. I would request him to kindly ensure that some control measures are taken. There is no point in saying that 99 per cent of the mosquitoes are harmless because apart from the diseases like encyphalitis, malaria and filaria, these mosquitoes are very very troublesome particularly in the metropolitan areas where drainage and water-supply are neglected to a great extent. In spite of what the Government say that they are going to spend Rs. 38 crores on these, still we are having a lot of problems. I would request the Hon. Minister to kindly ensure that this mosquito nuisance is abated, if not eliminated. I realise the problem. The mosquitoes have developed a resistance to pesticide formulations. But, considering the fact that the Hon. Minister has allocated only Rs. 8.3 lakhs for medical research in a Budget of Rs. 112 crores, I would like to ask him whether this is a realistic figure for medical research. He should have allocated at least 2 per cent of his Budget for medical research. This is a country which has produced great research scholars in the field of medicine and I would, therefore, request the Hon. Minister to increase the allotment for medical research.

Sir, regarding hospital services, as I said, I realise the serious strain that the medical profession is being subjected to. There is no use criticising the doctors only for the inadequate or poor treatment or lack of attention in our hospitals. There are many basic amenities that are missing in our hospitals. The Hon. Minister has given figures of the number of beds in our mofussil hospitals including the taluk and district headquarters hospitals. He has also mentioned the number of in-patients that are being



admitted to these hospitals. According to the figures given by the Hon. Minister, the in-take of in-patients is more than 20,000 as against 13,000 beds. When the number of in-patients is almost 50 per cent over the bed-strength, it is not surprising that we find patients not only on the beds, under the beds, and by the side of the beds but also in the verandahs. The trouble is that the ratio of nurses, the ratio of auxiliary staff, the diagnostic laboratory facilities, the drugs and materials that are required in those hospitals are linked not to the in-patients but to the bed strength of those hospitals. I do not know if I am entirely correct but this is the impression I got. I do not think this is a realistic approach and the Government should link up all these facilities to the number of in-patients. May I also plead that the basic services in our hospitals such as the kitchen, laundry and sterilising equipment require to be modernised? Even in Madras we are using the equipments that are 50 years old. I have seen some reports which have been published saying that we are having food poisoning in some places and I may tell you that many diseases are being transmitted from the Central Kitchen in the General Hospital. I think it is time that we modernise these things. If we have the mind, we can easily modernise these facilities. I have myself information that in the General Hospital there are welfare organisations that are prepared to give ever-silver plates to serve food to the patients; but the food is served on plates which are absolutely dirty and crude and unhygienic. I would request the Hon. Minister to make an appeal to the Welfare Organisations which would be very happy to participate in this relief to the patients.

Next, I come to the communication system in our hospitals. I do not want a loud-speaker and mike to be introduced in the hospitals. When I had been to Chicago $1\frac{1}{2}$ years ago, I stayed with a medical doctor friend of mine. He took me to an evening party. Suddenly we heard a 'Beep, Beep' sound from his pocket. He took it out and he said, "I am called by my hospital which is 10 miles away." We can have this radio system for calling the doctors. I believe the Police will object to our doctors having this radio system because it will interfere with their network. We all know the work that is done by the Police Department. I do not want to go into it. I think in the interests of the medical

profession, we can have these radios—I do not know the exact equipment—and they may be provided with some equipment so that we may have a modern communication system. If we cannot have a radio net-work, may I suggest the use of television closed circuit so that the names of the doctors required urgently will come on the screen without any noise or disturbance to the patients ? Communication system in our hospitals requires to be improved. I am not suggesting that the Government should do it in all the 150 hospitals at one stroke, and it will be impossible, but it can be done step by step as it is being done in the case of other facilities like quarters for doctors, better emoluments for medical staff, etc. There is a feeling in our country that these pay scales are dictated by the Indian Administrative Services and they want to see that no other person in Government Service gets better scale of pay than the pay of Indian Administrative Service. I do not wish to detract from the merits of the members of the Indian Administrative Service. I think if we follow this philosophy, we will get only fourth rate and fifth rate persons in the medical profession. The Government will have to pay for quality and the medical profession today is one of the most highly paid professions in the world. If we give only 1,500 and 2,000 rupees, we would be only making them go to the poly-clinics that are being established and we will lose all the talent that can be

(முற்பகல் 10.50)

attracted to our Government hospitals. I think we must have a Special Pay Commission for our medical profession. We must treat them better and we must give them better conditions.

Sir, regarding blood bank, eye bank and kidney bank, these are all good ideas. But, may I point out that stricter monitoring and supervision are required of the blood banks that are existing in our major hospitals ? I do not wish to say much on this subject excepting to mention one thing. While a sum of Rs. 10 per bottle is given to the donor, the blood banks have been allowed to sell it at Rs. 25 per bottle to other institutions. I would like only to mention to the Hon. Minister that I have received complaints that blood is being sold at Rs. 150 per bottle and the difference is being pocketed by certain undesirable elements in the hospitals. These not wish to cast a general reflection on all those who are in-charge of blood banks. This is a matter in which the Hon.



Minister should ensure that stricter monitoring and security is exercised so that this sort of misuse does not occur in the case of blood banks. In the case of eye banks and kidney banks, I do not think I will have to tell the Hon. Minister of the terrible abuses that might creep in. They have already crept in, in the United States, where live patients are kept alive, all these organs are removed and later on they are allowed to die. We must have very strict supervision of these banks. I would request the Hon. Minister to evolve a suitable code and a suitable supervisory procedure by which such malpractices could be checked. We should also ensure that a licensing system is established so that private people do not establish, as they have established in other cases, private eye banks and private kidney banks unless they are subjected to certain licensing and regulation procedures of the Government.

Sir, we have been repeating for a long time that the accidents on our highways have increased in number. The Hon. Minister himself has mentioned that, of all districts in Tamil Nadu, in South Arcot district alone about 20,000 accidents take place. The next highest is only 11,000 or 12,000. I am very glad that he is establishing some facilities in Tindivanam, perhaps even in Villupuram, for the treatment of accident cases. I would request him to ensure that in the treatment of accident victims there is an improvement in the services because as the Hon. Minister knows, as a doctor, minutes make a difference. I would request him to ensure that these facilities are upgraded to the level required.

Sir, regarding Primary Health Centres, the Hon. Minister has increased the drug allocations to Rs. 20,000 per annum and to Rs. 20,000 for mobile units. We were pleading for an increase last year. I am grateful that the mobility of the Primary Health Services through mobile teams has been improved though not to the extent we would still desire. I would request that all petrol-driven vehicles may be condemned or withdrawn and only vehicles driven on High Speed Diesel may be provided. This would cut down recurring expenditure by more than 50 per cent. Not only that, Sir. The visits to villages should be monitored. Now that we do not have elected people in our Panchayats, there is no person to keep track.

(Vice-Chairman Thiru C. Ramalingam sounded the gong)

I will take only two more minutes, Sir. I would request the Hon. Minister to see that there is complete monitoring of these visits so that what is happening in some places now do not occur. Particularly, in Sevur village in Pavunjur Block of Madurantakam taluk, Chengalpattu district, they have not had a visit for the past one year. In that particular village, there are about 240 Adi-Dravidars. Unless we have some sort of a monitoring system, it will be very difficult to ensure that these visits are really carried out. I would also suggest that awards and incentives be given to the doctors of Primary Health Centres if they serve for three years. If the Government receive reports that these doctors have done good work, I would suggest that some preference may be shown to them. Perhaps, it is being done and I do not know. But, for admissions into post-graduate courses, some preference may be shown to the doctors who have served in rural areas for three years and more.

Sir, I would only suggest one more thing

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

While welcoming the various improvements to the Headquarters Hospitals which have been mentioned, like the generators to be installed, etc.—these are all necessary facilities—may I plead that all the basic facilities for emergency operations should also be provided in our Primary Health Centres?

Regarding the Hospital Corporation, I would like to reserve my views on this subject because if the Government are going to have a Hospital Corporation and add one more Corporation to the corporations that exist, over which the supervision of the Legislature is not going to be exercised in the fashion it should, it is likely to be used only by the upper middle class people. I do not think the Government will be able to siphon off as is anticipated, because the upper middle class do not go to the General Hospital and they still go only to Nursing Homes to get better treatment and they are not going to come to the Government Nursing Corporation because still the standard of treatment would be different. However, the Government can consider scheme of medical insurance as it exists in other countries





under which all of us can contribute according to our income. If such a law can be passed, we can certainly contribute to the Medical Insurance Scheme to help the Hon. Minister.

Regarding inadequacy of funds that he has mentioned, may I remind the Hon. Minister that inadequacy of funds does not seem to be a problem of the Tamil Nadu Government because a sum of Rs. 100 crores has been allotted for poor feeding programme? Probably if we can divert Rs. 20 crores from that, his budget would have certainly improved. My feeling is that it should have been done. We are not doing things according to priorities. But honest difference of opinion is possible. If the Government are not going to improve the medical services, rural health services, by providing Rs. 20 crores and if they are going to have a subsidised programme for feeding poor children, I think, while it is a good scheme, it is a diversion of resources from one necessary sector to another. Thank you.

The Hon. Dr. H. V. HANDE: Sir, one second. I want to tell the hon. Member that this Rs. 100 crore project is for feeding the poor children and whatever treatment we give, unless the poor children are fed, it is difficult to help them. Unless there is infrastructure for basic health, we will not be able to do anything. This is one of the reasons why we consider that it is the very basic ingredient even for our medical services.

(முற்பகல் 11.00)

Thirumathi MANDAKINI KRISHNAMURTHI: Hon. Deputy Chairman, Sir, I am indeed happy to speak on the Policy Note on Health. I have read both the Policy Notes and they are very progressive. I would like to compliment our very dynamic Health Minister on the very progressive policies that he has introduced both in the Policy Note on Medical and in the Policy Note on Health. The requirement of Primary Health Centres in our State is 740 and we are already having 405 Primary Health Centres. There is also another impressive thing. In 1977-78, there were only 24 mobile health teams. Now, we are having 249 teams which is something very fantastic. The introduction of more Primary Health Centres, their upgradation and more of mini-centres, introduction of health inspection programmes for

school children in the Primary Health Centres will all have a very salutary effect. But, when we consider the urban areas, there is no compulsory health inspection programme. I would suggest that health check-up should be made compulsory for school children in the pre-primary, primary, High School and Higher Secondary School levels. Now, we are talking in terms of catching them young for the purpose of education and we are also having a feeding programme to provide them nutrition. It is very necessary that we also catch them young in diseases for the purpose of saving them from diseases. The House Surgeons who have passed their Examinations and are doing their house-surgeoncy may be made to attend to health check-ups in the schools in the months of July and August when the school admissions would have been completed. If that is done, I think that the children could be protected from diseases like leprosy. The physical handicaps which they may have can be detected in time and their eye-sight afflictions can also be prevented. There should be a compulsion on the authorities of the schools to ensure a complete health check-up of the children and the check-up should be done by a group of House Surgeons. The House Surgeons will have a practical experience in examining the children and finding out the diseases. If the diseases are detected at an early stage, appropriate treatment given to the children would be useful and preventive.

Sir, while going through the paragraphs in the Policy Note relating to the Primary Health Programme, I found that training has been given for multi-purpose health workers to work in multi-purpose health centres. I would like again to make a plea that the girls who come out after studying Nursing in the vocational stream of our Higher Secondary Schools have a better training. Those who want to take up jobs immediately after they pass this course may be inducted into these multi-purpose health centres. By that, they will have a bright future. Those who want to go in for the three years' staff nursing course have been helped a lot. My plea to the Hon. the Health Minister that preference may be given to the Plus 2 girls or boys in the matter of their joining the nursing courses has now been implemented. I am most grateful that most of the girls who were found suitable have found places in the staff nursing courses.





But those who want to make the plus 2 course in nursing as a terminal course and those who are in need of jobs may be taken into the multi-purpose health centres. Now, what the Government are doing is that they are training some new people and are spending money on them. But, these girls have already been trained by the Education Department and they will be of great help. If my suggestion is accepted, the unemployment problem also could be solved to some extent.

While I was listening to the hon. Member who preceded me about the anti-malaria drive, the topic which I wanted to mention, I was thinking that the mosquito menace had increased. Though the Corporation has an Additional Health Officer in charge of malaria eradication, we have not been able to find a solution. But, what struck me was that we had a number of low-lying areas like the area near the old Oceanic Hotel. Those who come from Adyar including the Hon. Ministers who come from Adyar to the Secretariat, would have experienced the foul smell that comes from the areas near the previous Oceanic Hotel and those areas have become the breeding ground for mosquitoes. We have the traffic islands which are well maintained by the private firms. In the same way, the low-lying areas could be handed over to private firms for being converted into beautiful parks. If such a step is taken, the breeding of mosquitoes will be minimised and it is very necessary that we have this kind of programme to eradicate malaria.

The only other point that I would like to bring to the notice of the Hon. Minister is the anti-rabies programme which is very necessary during summer months. Whenever we ring up the Superintendent of the Zoo, who is in charge of catching the dogs, they come and catch the dogs but the people from the Animal Welfare Board or the Society for Prevention of Cruelty to Animals intercede and ask them to release those dogs. The menace is increasing because the population of dogs is on the increase. The charges for castration of the dogs in the private clinics seem to be somewhere around Rs. 75 per dog. I feel that something must be done in a drastic manner because some of the children are bitten and they have to be taken to the hospitals for a

number of days. I feel that the Veterinary Hospital should come in and they should take charge of these dogs and bring some kind of relief to the people.

With these words, I would like to thank again the Hon. the Health Minister, the Health Department and the team of officials for their good work and I wish them all success so that they will reach the target, in 2000 A.D. as proposed, of health for all.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவம், மக்கள் நல்வாழ்வு கொள்கைக் குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். காலத்தின் அருமை கருதி ஐந்து மணித் துளி அளவிலே முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். இந்த அரசின் முக்கிய கருத்தாக வெளியிட்டிருப்பது கி. பி. இரண்டாயிரம் ஆண்டில் அனைவரும் சுகாதார வசதியை அடைய உலகச் சுகாதார நிறுவனத்தின் எண்ணத்தின் அடிப்படையில் செயல்பட விழைகிறது என்பதாகும். கி.பி. இரண்டாயிரம் பற்றி டாக்டர் மு. வ. கனவு கண்டார். அந்தக் கனவின் ஒரு பகுதியை, மக்கள் நல்வாழ்வு என்ற அடிப்படையில் தமிழகம் எய்த, அரசு எடுத்த இந்த முயற்சிக்காக என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக டானிடா என்ற அனைத்து நாட்டு மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அவர்களே ஏற்று ரூபாய் 14.40 கோடி அளவிலே ஐந்தாண்டுகளில் நலிந்த பிரிவினர்களில் பெரும்பகுதியினர் வாழும் கிராமங்களில் நல்வாழ்வை ஏற்படுத்தும் நோக்கத்தை இந்த அரசு மனதிலே கொண்டு செயல்படுவதற்காக பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி மிகுந்த அளவிற்குப் பாராட்டக் கூடியதாகும்.

குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றிச் சொல்லுகிறபோது, தமிழகம் இன்னும் இந்தியாவிலே முன்னணியிலே இருக்கிறது. குறிப்பாக மக்கள் வளர்ச்சி 17.33 சதவிகிதம் என்ற அளவிலே நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற நிலையிலே இந்தியாவிலேயே தமிழகம் குடும்பக் கட்டுப்பாட்டில் முன்னணியில் இருக்கிறது. அதைச் சொல்லுகிறபோது நாடாளுமன்றத்திலே நம்முடைய எண்ணிக்கை குறைந்துவிடும் என்ற வருத்தம் இருந்தாலும், இப்போது நாடாளுமன்றத்திலே எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதைவிட எண்ணைப்போல இரண்டு பேர் இருந்தாலும் என்ன காரியமாற்றுகிறார்கள் என்பதுதான் முக்கியம் என்ற அடிப்படையிலே எண்ணிக்கையைப் பெரிதாக நினைக்காமல், குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மிகுந்த கவனம் செலுத்தி [illegible]



மாவட்டத்திலே இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களை அமைத்திருப்பதற்காக, அந்தப் பகுதி உறுப்பினர் என்ற முறையில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்பாக உடம்பு முழுவதையும் முப்பரிமாணம் எடுக்கும் கருவியை 1.5 கோடி ரூபாயில் அமைக்க இருப்பதும், இவ்வளவு பெரிய கருவியை அரசு வாங்கியிருப்பதும், சாதாரண ஏழை மக்களும் விஞ்ஞான வளர்ச்சிப் பயனைப் பெற வேண்டும் என்பதும் அரசின் நல்ல நோக்கமாகும்.

(முற்பகல் 11-10)

அரசின் சார்பாக பம்பாயிலே, கல்கத்தாவிலே, டெல்லியிலே இல்லாத ஒன்றை நம்முடைய அரசு துணிந்து செய்திருப்பது பாராட்டுக்குரிய ஒரு காரியம். இப்போது சண்டிகாரிலே, டெல்லியிலே, சென்னையிலே ஒன்றாக குப்தா என்ற தனிப்பட்ட நிறுவனம் இதை வைத்திருக்கிறது. தமிழ் மாநிலத்தைப் பொறுத்த அளவிலே, சில இடங்களில் இருக்கின்றன. இப்போது ஒரிசாவிலே நான் அதைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், சென்னையிலே தனியார் நிறுவனம் ஒன்று, இந்திய மெடிகல் சையின்ஸ் நிறுவனத்தில் ஒன்று, சென்னை பொது மருத்துவ மனையிலே ஒன்று, மதுரையிலே ஒன்று என்று இருக்கிறது. நம் மாநிலத்திலே இவ்வளவு விலை உயர்ந்த கருவியை, அரிய கருவியை வைத்திருப்பதை நாம் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தக் கருவி இல்லாதபோது, ஆஞ்சியோகிராம் முறையிலே ஒவ்வொருவரையும் குத்தி [illegible] கண்டுபிடிக்கின்ற முறை இருந்தது. அந்த முறையை மாற்றி, இந்த நோயாளிகளுக்கு எங்கே குறைகள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்கின்ற அளவுக்கு இந்த அரிய கருவியை வாங்கி வைத்திருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, அரசு பொது மருத்துவ மனையைப்பற்றி, தலைமை மருத்துவ மனையைப் பற்றி என் கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு இருந்தாலும் நம்முடைய மக்கள் வீட்டிலேயிருந்து உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து சாப்பிட வேண்டும் என்று இருக்கிறார்கள். அதுதான் உடல் நலத்திற்கு உறுதியானது என்று எண்ணுகின்ற நிலைமை இருக்கிறது. அது வசதி இருப்பதன் காரணமாகவோ, வீட்டு உணவு உண்ணுகின்ற விருப்பத்தின் காரணமாகவோ இருக்கலாம். அதன் காரணமாக, மருத்துவ மனையிலே ஒவ்வொரு நோயாளிக்கும் உணவு கொண்டு வருவதற்கு இரவிலே அவர்களைப் பார்த்துக் கொள்வதற்கு என்று பலர் வருகிறார்கள். அதன்

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1982 மார்ச் 22

காரணமாக சென்னை மருத்துவ மனையிலே ஆட்கள் நிறைந்து கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு, இதுபோன்ற பெரிய மருத்துவ மனைகளிலே உணவு உண்ணுவதற்கு அல்லது நடந்து செல்லமுடிகின்ற நோயாளிகள் அவர்களை வந்து பார்க்கின்றவர்களைச் சந்திப்பதற்கு என்று ஒரு தனி இடம் அல்லது மண்டபம் ஏற்படுத்தலாம். அங்கே அவர்கள் உணவை அருந்த ஏற்பாடு செய்யலாம். அங்கே கூட்டுறவுத் துறையிலே கடை வைத்து அந்த மருத்துவ மனைக்குள்ளேயே அவர்களுக்குத் தேவைப்படுகின்ற சோப், மற்ற உணவுப் பொருள்கள் ஆகியவற்றை வாங்கிக் கொள்வதற்கும், அதையும் சப்ளை செய்து, அவர்கள் அதைக் குறைந்த விலையில் பெறுவதற்கும் வழி செய்யலாம். அது ஏழை மக்களுக்குப் பெருத்த உதவியாக இருக்கும். அது மட்டுமல்ல. மருத்துவ மனையிலே தண்ணீர்க் குழாய்களைச் சரிப்படுத்துவதற்கு பி.டபிள்யூ.டி.-யை அணுகவேண்டியிருக்கிறது. ஆகவே அங்கே மருத்துவமனை சார்பாக ஒரு சப்-டிவிஷன் ஏற்பாடு செய்து அமைத்துக் கொண்டால், சிறப்பாக இருக்கும்.

இப்போது பொதுவாக பல்வேறு இயந்திரங்கள் எலக்ட்ரானிக் முறையிலே இயங்குகின்றன. அவைகளைக் கவனித்துக்கொள்ள எலக்ட்ரானிக்ஸ் செல் ஒன்று அங்கே அமைத்து அவைகளைக் கவனித்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு ஒரு வழிவகையைக் காணலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல லெபாரட்டரிசைப் பொறுத்தமட்டில், அங்கே பல பிரிவுகளாக இருப்பதற்குப் பதிலாக அவைகள் அனைத்தையும் ஒரே நிர்வாகத்தின் அடிப்படையிலே கொண்டு வருவது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மருத்துவ மனையைப் பொறுத்தமட்டில், அது பெருகுகின்ற நிலையில் இருக்கின்றது. இப்போது சிறைச்சாலையை இடம் மாற்றுகின்ற போது, அந்த இடத்திற்கும் மருத்துவமனை வரும்போது, மிகுந்த வசதியோடு, இருக்கின்ற நோயாளிகளுக்கு ஒரு பக்கமும், மற்றவர்களுக்கு இன்னொரு பக்கமும் என்ற அளவிலே இரண்டாகப் பிரித்துச் செய்தால் கூட்டங்கள் தவிர்க்கப்படும். இப்படி வியாதியஸ்தர்களைக் கவனிக்கின்ற நிலையிலே ஒரு புதிய கவனத்தைச் செலுத்தலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

செவிலியர் பயிற்சியைப் பொறுத்தமட்டில் எவ்வளவு வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு பயிற்சி தருவது என்ற நிலையை மாற்ற வேண்டும். இப்போது தனியார் மருத்துவ மனைகள் பெருகிக் கொண்டிருக்



1982 மார்ச் 22] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

கின்றன. வெளிநாட்டிலே அந்த வேலைக்கு வாய்ப்புக்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே செவிலியர்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்கள் இருக்கின்ற காரணத்தினாலே, இன்னும் அதிகமான பேர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு அரசு சிந்திக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மருந்துகளிலே கலப்படத்தைத் தடுப்பதற்கு அரசு எடுக்கின்ற முயற்சிகள் பாராட்டுக்குரிய காரியம். அத்துடன் மருந்து தயாரிப்பதில் அரசுப் பொது நிறுவனங்களும் ஈடுபடுவதற்கு அரசு ஊக்கம் கொடுக்கின்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறது. காரணம் பெரிய மருந்து கம்பெனிகள் எல்லாம் இன்னமும் வெளிநாட்டின் மூலதனத்துடன் இயங்குகின்றன. இதனால் வெளிநாட்டினுடைய ஆதிக்கமும் அதிலே இருக்கின்றது. அந்த நிலைமையை மாற்றி, அரசும் அதன் ஆதரவில் தனியாரும் மருந்துகளைத் தயாரிப்பதற்கு அரசு முனைப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான்கூட மெடிகல் ரெப்ரசன்டேடிவ் ஆக இருந்து பணியாற்றியவன். அந்த அனுபவமும் உண்டு. மருந்து தயாரிப்பதில் அரசு மிகுந்த அக்கறை காட்டுவதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, சித்தம் போக்கு சிவன் போக்கு என்று சொல்வார்கள். சித்தம் ஒரு போக்கிலும் சிவன் ஒரு போக்கிலும் இருந்ததால் தான் அப்படிச் சொல்லியிருப்பார்கள். அந்த மாற்றி சித்த வைத்தியத்திலே இந்த அரசு அக்கறை காட்டியிருக்கிறது. இதிலே தமிழக அரசு உரிய கவனத்துடன் செயல்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

செவ்விளநீர் என்று சொல்வார்கள். நாம் மேலாக சிவப்பாக இருப்பதைப் பார்த்து, சிவப்பு இளநீர் என்கிறோம். உள்ளபடியே அது செவ்விளநீர் என்றால், அந்த மரத்தையும் வெட்டினால், சிவப்பாக இருக்கும், உடைத்தாலும் சிவப்பாக இருக்கும் என்று அனுபவம் உள்ளவர்கள் சொல்வார்கள். அதுபோல அரசு ஒவ்வொன்றிலும் ஆராய்ச்சி செய்து நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கோவையைப் பொறுத்தமட்டில், கோவையிலே மருத்துவக் கல்லூரி ஒரு இடத்திலேயும், மருத்துவ மனை இன்னொரு இடத்திலேயும் இருக்கின்றது. இதனால் போக்குவரத்திலே அவர்கள் அல்லல்படுகிறார்கள். அதை எண்ணிப் பார்க்க வேண்டும். மருத்துவர்கள் இந்தப் போக்குவரத்திலே நேரத்தை வீணாக்குகின்ற நிலைமை இருக்கின்றது. இதைத் தவிர்க்க வேண்டும். தஞ்சையிலே எப்படி செய்கிறார்கள் என்றால், ஒரு 4,000 பேஷண்ட்டுகள் வருகிறார்கள் என்றால், அவர்கள் எல்லாம் ஊருக்கு வெளியே போய் கொண்

[டாக்டர் இரா. ஜனார்த்தனம்] [1982 மார்ச் 22

திருப்பிச் அனுப்புவதற்கு முடியாது என்பதால், தொழிலாளர்களை மட்டும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு போகின்றார்கள். அங்கே அவர்கள் வியாதிகளை குணப்படுத்துகின்ற முறையை கவனித்திருக்கின்றார்கள். அதுபோல கோவையிலேயும் செய்யலாம். அல்லது கோவையிலே இருக்கின்ற அரசினர் கலைக் கல்லூரியின் இடத்தையாவது மருத்துவக் கல்லூரியாக மாற்றிக்கொள்ளலாம். அது இடம் போதவில்லை என்றாலும், வேலூரிலே இருப்பதுபோல, 6 மாடி அல்லது 8 மாடி கட்டிடம் போல வைத்து செய்யலாம். ஊருக்கு நடுவிலே அமைகின்ற அளவுக்குச் செய்யலாம். அதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக டீன்க வருவதற்கு பலர் அச்சப்படுகிறார்கள், தயக்கம் காட்டுகிறார்கள் என்ற நிலை இருக்குமானால், அதைப்பற்றி அரசு கவனிக்க வேண்டும். பேராசிரியர்களாகப் பார்த்து ஒருவர் பொறுப்புக்கு வருவதுபோல இருக்க வேண்டும். ஒருவர் டீனாக இருக்கின்றபோது, இன்னொருவர் அவரிடம் துணை டீனாக இருந்து பயிற்சி பெற்று வருகின்ற நிலை இருக்கலாம். 3 ஆண்டுகளுக்கு அந்தப் பதவியில் மாற்றம் இருக்கலாம். ஒருவரை நீக்குவது என்றால், அரசும் நீக்கலாம். ஆனால் இருக்கின்ற நிலைமைக்கு ஏற்ப அவர்களே கூட அதைச் செய்து கொள்ளலாம் என்று அரசு அனுமதிப்பதன் மூலம், நல்லவர்கள் அனைவரும் வருகின்ற நிலை ஏற்படும். கேரளாவிலே ஒரு டீனாக இருப்பவருக்கு 2 லட்சம் ரூபாய் வரையில் பொருட்கள் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், இங்கே 5 ஆயிரம் ரூபாய் வரைதான் அனுமதிக்கிறார்கள். அப்படி இருப்பதால், மருத்துவ மனைகளிலே பல திட்டங்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாத நிலை இருக்கிறது.

மூட்டைப் பூச்சி மருந்து வாங்கக்கூட வேறு துறையை அணுகவேண்டியதாக இருக்கிறது. அவைகளையெல்லாம் அவர்களுடைய பொறுப்பிலே விடுகின்ற செயற்குறிப்பை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இறுதியாக, மருத்துவக் கல்லூரித் தேர்வு முறையிலே கேரளாவிலே இருப்பதுபோல ஒரு என்ட்ரன்ஸ் எக்சாமினேசன் வைக்கலாம். நம்முடைய விகிதாசார முறைத் தேர்வு என்று இருக்கின்றபோது நல்ல மாணவர்களை எடுக்கின்ற முறையில் தேர்வு செய்யலாம். அதோடு நேர்முகத் தேர்வில் கேள்வி கேட்கலாம். ஆயிரக்கணக்கான மாணவர்கள் வருகிறார்கள். ஒரே கேள்வியைக் கேட்டால் அதற்கு மறுநாள் வருகின்றவர்கள், அந்தக் கேள்விக்குத் தயாராகி விடுகின்றார்கள். தேர்வில் எப்படி மாற்றிக்கொண்டு



1982 மார்ச் 22] [டாக்டர் இரா. ஜனார்த்தனம்]

அங்கே இருப்பவர்கள் கேள்வி கேட்க முடியும்? அப்போது வேடிக்கையாக ஒரு கேள்வியைக் கேட்பார்கள். ஏன் என்று கேட்பது சரியல்ல. அப்படி வேடிக்கையாகக் கேள்வி கேட்கும்போது, அவர்கள் பதில் சொல்வது என்று இருந்தாலும், அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்கும்போது அவர்கள் பதிலிலிருந்து அந்த மாணவர்கள் மன நிலையைத் தெரிந்து கொள்கிறார்கள். அதைக் கண்டு பிடிக்கத்தான் அப்படிக் கேள்வி கேட்கிறார்கள். அதுதான் முறை. இப்படியெல்லாம் கேள்வி கேட்கிறார்கள் என்று தேர்வைப் பற்றி மற்றவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து, எந்தக் கேள்வியும் கேட்க முடியாது. கேட்க வேண்டிய கேள்வியைத்தான் கேட்டிருப்பார்கள். கேட்கக்கூடிய கேள்விகளைக் கேட்டுவிட்டார்கள் என்றால், அது 30 கேள்விகளுக்குள் தான் அடங்கிவிடும். இன்னொரு நாள், மூன்றாவது நாள் தேர்வுக்கு வருகின்ற மாணவர்களுக்கு என்ன கேள்வி என்று சொல்லி விடமுடியும். அதனாலே ஒரு என்ட்ரன்ஸ் எக்சாமினேஷன் என்று வைப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளிநாட்டு மாணவர்களுக்கு அதிகமான இடம் ஒதுக்க வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 100 இடங்கள் என்று ஒதுக்கப்பட்டது. படித்துவிட்டு வருகின்ற மாணவர்கள் அனைவருக்கும் வேலை தர முடியாது என்ற காரணத்தினாலே அதை தமிழக அரசு குறைத்தது. அந்த 100 இடங்களில் முன்பு இலங்கைக்கு ஒரு இடம் இருந்தது. அப்படி இருந்தபோது பேராசிரியர் அன்பழகனை அணுகியபோது, அவர்கள் 5 இடம் என்று மாற்றித் தந்தார்கள். அது போதாது என்று சொன்னபோது, "வருகின்றவர்களிடம் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று ஏதோ அவருக்கு ஆருடம் தெரிந்தவர் போல சொல்லி விட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் அல்லது வெளிநாட்டு மாணவர்களுக்கு ஒரு தனி மருத்துவக் கல்லூரி உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலைகளிலே விபத்துக்களைத் தவிர்க்க வேண்டும். அப்படி விபத்துக்கள் நடக்கும்போது, மருத்துவ வசதியளிக்க மொபைல் வேன்கள் இருக்க வேண்டும். அதற்கு ஒரு மொபைல் யூனிட் இருந்தால் நன்றாக இருக்கும். நெடுஞ்சாலையிலே விபத்துக்கள் நடக்கின்றபோது, மருத்துவ வசதி கிடைக்காமல் இருக்கின்றபோது இது பெரிய உதவியாக இருக்கும். அந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும். மருத்துவத் துறை பொருத்தவரை, உத்தர என்ற அளவில் வருகின்ற மாதிரி பல இருக்கின்றன. அதை மாற்றுகின்ற வகையிலே அரசு ஈடுபட்டிருக்கிறது. கிராமங்களிலே அந்த மாவட்டத்தில்

கூட்டுறவு முறையிலே ஒரு அமைப்பு வைத்திருக்கிறார்கள். இந்த கூட்டுறவுத் துறை மூலம் அந்தப் பேருந்துகளைப் பராமரிக்கலாம். அந்தப் பணிகளை அவர்களுக்குத் தருவது உதவிகரமானதாக இருக்கும். அதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

பல எண்ணங்கள் சொல்ல வேண்டும் என்று இருந்தாலும், காலம் இல்லாத நிலைமை காரணமாக இத்தோடு நிறுத்திக்கொண்டு அமைகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவத் துறை குறித்து கொண்டு வந்திருக்கக்கூடிய கொள்கைக் குறிப்பின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே 4.11 கோடி மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி ரூ. 110 கோடி என்று இருக்கிறது. இங்கேயுள்ள ஒரு நபருக்கு சராசரியாக ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 20, அதுவும் மருந்துக்காக ரூ. 4 மட்டுமே என்று இருக்கிறது. மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது இங்கே பரவாயில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் இதற்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த நாட்டில் எம்.பி.பி.எஸ். படித்து ஒரு மாணவர் வெளி வருவதற்கு ரூபாய் 75 ஆயிரம் அளவுக்குச் செலவழிக்கிறோம். இந்த ரூபாய் 75,000-ஐ நாம் செலவழித்து ஒரு மாணவரை உருவாக்கிய பின்னர், அவர் கிராமப்புற மக்களுக்குச் சேவை செய்கின்ற மன நிலைமையில் இல்லை. அந்த மன நிலை ஏற்படவில்லை. நான் இதற்கும் ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். ஒரு எம். பி. பி. எஸ் மாணவன் செலக்ஷன் என்ற அளவில் பார்க்கும்போது, மிலிட்டரியில் சேர்ப்பதாக இருந்தால், என்ன முறையைக் கையாளுகிறார்களோ அதைப்போல, கேரளப் பல்கலைக் கழகத்தில் அட்மிஷனுக்கு என்ன முறையை வைத்திருக்கின்றார்களோ, அந்த நடைமுறையை தமிழ் நாட்டில் கொண்டுவர வேண்டும். மருத்துவத் துறையில் கொண்டுவர வேண்டும். அப்படிச் செய்தால், [illegible] இடம் இருக்காது. இது என்னுடைய ஆலோசனை. அந்த முறையில் செலக்ஷன் நடக்க வேண்டும். ராணுவத் துறையிலே சேரும்போது, ஒரு ஆறு மாத காலம் கடுமையான பயிற்சியைக் கொடுக்கிறார்கள். அதுபோலவே [illegible] வருவாய்த் துறையில் ஒரு ஆறு மாதத்திற்கு பயிற்சி கொடுக்கிறார்கள். அந்த இளம் வயதிலேயே இருக்கக்கூடியவர்களுக்கு அந்த கடுமையான பயிற்சியைத் தரும்போது அவர்கள் [illegible] பெறுகிறார்



கள். அப்போதுதான் டிசிப்பிளின், ஒழுங்காற்றலைப் பெற்றவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்ட ஓராண்டுப் பயிற்சியை, அவர்கள் சாதாரண குடும்பத்தினைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அல்லது பெரிய பணக்கார இடத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்சரி, நல்ல செல்வாக்கிலே இருப்பவராக இருந்தாலும் சரி, ஒரே மாதிரியான கடுமையான பயிற்சியைப் பெறுவதன் மூலமாக அவர்கள் ஒழுங்காக இருக்க முடியும் என்ற ஆலோசனையை வழங்குகிறேன். இதைப்பற்றி மருத்துவத் துறை பரிசீலித்துச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்தாற்போல், கிராமங்களுக்குச் செல்லுவதற்கு இவர்கள் பயப்படுகிறார்கள். வருமானம் இல்லையென்று கருதுகிறார்கள். எனவே கிராமங்களுக்குச் செல்பவர்களுக்கு உயர்ந்த ஊதியம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்திலே பாரதப் பிரதமர் அவர்கள்கூட இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்ற ஆலோசனையை மருத்துவக் கவுன்சிலில் பேசும்போது, சொல்லியிருக்கிறார்கள். எனவே கிராமப் பகுதிகளுக்குச் செல்பவர்களுக்கு நல்ல ஊதியம், கூடுதல் ஊதியம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திலே ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று ரெயில்வே செல் நிதியில் ரூபாய் 55 லட்சம் சேமிக்கப்பட்டு, காத்துக் கொண்டிருக்கிறார்கள். டி.டி.சி. யில் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். இங்கே 500, 1,000 மாணவர்கள் என்று இருப்பதைவிட ஒவ்வொரு பகுதியிலும் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், பள்ளிகளிலே இளம் சிறார்களுக்குக் கண் நோய் வருகிறது வைட்டமின் ' ஏ ' போதாததால், கண் பார்வை மங்கி விடுகிறது. இன்ஃப்ராஸ்டிரக்சர்—வாழ்க்கையிலே நல்ல உணவு வழங்கும் நிலைமை இல்லை. அதனால் நோய்கள் ஏராளமாக வருகின்றன. டாக்டர்கள் சோறு போட முடியாது. அவர்களுக்கு மாத்திரை தருகிறார்கள். அவர்களுடைய நிலைமையை மாற்ற வேண்டும். மாணவப் பருவத்திலேயே நோயைக் கண்டு பிடிக்க இன்னும் அதிக மருத்துவர்களைப் போட வேண்டும். இப்போது பள்ளிகளில் எவ்வளவு பேர்களுக்குப் பார்த்திருக்கிறார்கள் என்பது புள்ளி விவரத்தில் இருந்தாலும், அது சந்தேகமாக இருக்கிறது. கல்விச் சாலைகளில் அவர்கள் அடிக்கடி வந்து பார்ப்பதில்லை. எல்லாக் கல்விச் சாலைகளிலும் மாணவர்களைச் சோதித்து, அடிப்படையாக இருக்கும் நோய்களுக்கு

மருந்து கொடுக்கும் பணியில் ஈடுபட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். சத்துணவுத் திட்டம்—100 கோடி ரூபாய் திட்டம் வைத்திருக்கிறார்கள். படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களைப் பரிசோதித்து, அவர்களுக்குச் சத்துணவு மாத்திரைகள் கொடுக்க இதிலிருந்து சில கோடி ரூபாயை ஒதுக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பான் நாட்டிலே 'ஓ' பிரிவு ரத்தம் உடையவர்கள், இன்னொரு 'ஓ' பிரிவு பெண்ணையோ, ஆணையோ திருமணம் செய்து கொண்டால், குழந்தைகள் ஆரோக்கியம் குறைந்தனவாகப் பிறக்கின்றன என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். எனவே 'ஓ' பிரிவு பெண், 'ஓ' பிரிவு ஆணைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாதென்று அங்கே தடை விதித்திருக்கிறார்கள். இங்கே பஞ்சாங்கம் பார்க்கிறோம், திதி பார்க்கிறோம், மற்றவைகள் பார்க்கிறோம். விஞ்ஞான உண்மையை நம்முடைய இந்திய நாட்டிலே மருத்துவக் கல்லூரியில் சேர்த்து, எல்லாத் திருமணங்களிலும் இப்படிப்பட்ட நிலைமைகள் நடக்கக் கூடாது என்பதற்காக, தக்க ஆலோசனைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜிப்மர் மருத்துவ மனையில் நோயாளிகள் அருமையாகப் பராமரிக்கப்படுகிறார்கள். அங்கே நோயாளியை 'அட்மிட்' செய்தால் எந்தவித சிபாரிசும் இல்லாமல் நல்ல முறையில் செய்கிறார்கள் என்று எல்லா நோயாளிகளும் ஒரு சேரச் சொல்லுகிறார்கள். அதைப்போல நம்முடைய ஜி. எச். வளர வேண்டும். அங்கே நிர்வாகம் நல்ல முறையில் அமைய வேண்டும். ஜி.எச்-ல் அட்மிட் செய்தால் அவர்களுக்கு எல்லாவித உதவிகளும் செய்து, நல்ல முறையில் சிகிச்சை அளித்து அனுப்புவார்கள் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். இப்போது ஜி.எச். நிலைமையைப்பற்றி அதிகமாக நான் சொல்ல வேண்டியதில்லை. அமைச்சரவர்கள் ஒரு டாக்டராக இருப்பவர்கள், அவர்களுக்கு அனுபவம் இருக்கும். அங்கேயுள்ள நிலைமைகளை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டேன். அதைப்பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டாம். அதைச் சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு மருத்துவப் படி வழங்குவது நல்லதென்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதை இன்னும் அமுல்படுத்தவில்லை என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எதிர்க் கட்சியிலே இருந்தபோது அமைச்சரவர்கள் அண்ணாவிற்கு நல்ல நண்பராக இருந்தவர். இப்போது மருத்துவத் துறை அமைச்சராக இருக்கிறார்கள். இப்போது அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[illegible] ட்ரீட்மென்ட் என்று சொல்லுகிறார்கள். இப்போது அந்த சி. எம். சி.யில்தான் வெற்றிகரமாகச் செய்கிறார்கள். மற்ற இடங்களில் அவ்வளவு சக்சஸ்புல் ஆக இல்லை என்று உணர்கிறார்கள், பலர் நம்புகிறார்கள். சி. எம். சி.யில் வெற்றிகரமாக நடக்கிறதென்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட சில கேஸ்களை சி.எம்.சி.-க்கு அனுப்பினால், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் 50,000 ரூபாய் செலவு செய்ய முடியாது. அப்படிப்பட்ட கேஸ்களை ஸ்பெஷல் கேஸ்-ஆக கருதி செய்து, அதற்காக நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புற்று நோய்க்கு அடையாறு மருத்துவ மனையில் நல்ல ட்ரீட்மென்ட் இருக்கிறது. அண்ணாவுக்கு அங்கே ட்ரீட்மென்ட் செய்தோம். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பலருக்குப் புற்று நோய் வருவதால், அந்த மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்க முடியவில்லை. அவர்கள் சார்ஜ் செய்கிறார்கள். அங்கேதான் கடைசி முயற்சியாகச் சேர்த்து காப்பாற்ற வேண்டுமென்ற நிலை வரும்போது, அவர்களுக்குப் போதிய நிதி உதவி அளிக்க ப்ரொவிஷன் உண்டாக்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கொல்லிமலை மூலிகைகளுக்குப் பெயர் பெற்ற, வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகும். அங்கே மூலிகைகள் வளர்த்து, சித்த வைத்தியத்திற்கு நல்ல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அல்லோபதி வைத்தியம், ஹோமியோபதி வைத்தியம் ஆகியவற்றால் தீராதது சித்த வைத்தியத்தால் தீருகிறதென்று சொல்லுகிறார்கள். கண் நோய்க்கு மருவூர்பட்டி என்ற கிராமத்தில் ஒரு பெண்மணி பச்சிலை மூலிகை மூலம் வைத்தியம் செய்கிறார்கள். கண்ணிலே பூ விழுந்தாலும், மற்ற நோய்களுக்கும் பச்சிலைச் சாற்றால் சரி செய்கிறார்கள். இன்னும் அந்தப் பெண்மணி உயிரோடு இருக்கிறார்கள். அப்படி சித்த வைத்தியத்தில் சிறந்து இருக்கிறவர்களை அழைத்து வைத்து, அவர்கள் எதைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கேட்டறிந்து, அவற்றை பயன்படுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே. மருத்துவம், மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இக்குறிப்பில் பல நல்ல திட்டங்கள் கொடுத்திருப்பதை நான் ஆசிரியர்கள் சார்பாகப் பாராட்டுகிறேன். பள்ளி செல்லும் குழந்தைகளிடையே தொழு நோய் உள்ளதா என்று கண்டறிய கிராம, நகரப் பகுதிகளில் 35 லட்சம் குழந்தை

[செல்வி ஆ. லீலாவதி] [1982 மார்ச் 22

களுக்குச் சிகிச்சை அளிப்பது குறித்து வரவேற்கிறேன், பாராட்டுகிறேன.
ஏனென்றால், குழந்தைகள் தொழு நோய்க்கு ஆளானால் அது அவர்களுடைய
குற்றமல்ல. எனவே அதைக் கண்டுபிடித்து, தடுத்து நிறுத்த அரசு முன
வருவதை நான் பாராட்டுகிறேன். அதே மாதிரி குடும்ப நலத் திட்டத்தைச
செயல்படுத்துவதில் எப்போதும் தமிழகம் முன்னணியில் விளங்குவது குறித்து
நான் தமிழக அரசைப் பாராட்டுகிறேன். காச நோய் தடுப்புத் திட்டத்தை
எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்த இருப்பதை நான் பாராட்டுகிறேன்.
ஏனென்றால் காச நோய் மிகக் கடுமையான நோய். முக்கியமாக ஆசிரியர்கள
அதனால் பாதிக்கப்படுகிறார்கள். அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும்
காச நோய் தடுப்புத் திட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்திருப்பதை
நான் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். சுகாதாரப் பாதுகாப்புப்
பணிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுப்பதையும் நான் வரவேற்
கிறேன்.

அரசு மருத்துவ மனைகளில் மிகச் சிறந்த முறையிலே மருந்துகள்
கொடுத்து, நோயாளிகளைக் குணப்படுத்துகின்றனர். ஒரு ஆசிரியர் ஒரு
நர்சிங் ஹோமில் இருந்தபோது, நல்ல முறையில் அரசு மருத்துவ மனையில்
சிகிச்சை செய்கிறார்களே, இந்த அளவிற்குப் பணம் இங்கு ஏன் செலவு செய்ய
வேண்டும், அங்கேயே சிகிச்சை பெற்றிருக்கலாமே என்று அவரிடம் சிலர்
கூறியதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். அதற்காக அரசுக்குப்
பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் அரசு
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி, சிலவற்றைக் குறிப்பிட விரும்பு
கிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கொசுக்கள்
தரும் தொல்லையைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். இதற்கு ஏதாவது ஒரு
வழி கண்டுபிடித்து, தமிழ் நாட்டிலே கொசுக்களை ஒழிக்க நடவடிக்கை எடுத்
தால்தான், மலேரியா நோயால் மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த
வாய்ப்பு ஏற்படும். பள்ளிக்கூடங்களில் மருத்துவச் சோதனை சில நேரங்
களில் வெறும் கண் துடைப்பாக இருக்கிறது. மருத்துவர்கள் நாக்கை நீட்டு
என்று சொல்லி, அவர்களுக்கு மருந்து எழுதிக் கொடுத்து விடுகிறார்கள்.
அவ்வாறு இல்லாமல் குழந்தைகளைப் பரிசோதித்து, அவர்களுக்கு வரும்
நோயைத் தடுக்க நடவடிக்கை எடுத்தால் நல்லது. அவர்கள் வருங்காலச்
செல்வர்கள். அவர்கள் திடகாத்திரமாக இருக்க வேண்டும். அதற்கு அரசு
நடவடிக்கை எடுக்க வேண்டும்.



1982 மார்ச் 22] [செல்வி ஆ. லீலாவதி]

(முற்பகல் 11-30)

நம் அரசு மருத்துவமனைகள் சிறப்பான முறையில், நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால் அதற்கான பொறுப்பு நம் செவிலியர்களிடம் இருக்கிறது. மருந்து போன்றவற்றை நோயாளிகளுக்கு அவர்கள் தான் தருகிறார்கள். இன்றைக்கு அவர்கள் 10 அம்சக் கோரிக்கை ஒன்றை வைத்திருக்கிறார்கள். அது அரசின் கவனத்திற்கு ஈர்க்கப்பட்டிருக்கிறது: 200 நோயாளிகள் இருக்கும் இடத்தில் ஒரே ஒரு செவிலியர் தான் இரவு நேரத்தில் இருக்க வேண்டிய நிலை இருக்கிறது. இரவு நேரத்தில் 200 ஆண் நோயாளிகளை ஒரே ஒரு நர்ஸ் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் அவர்களுக்குப் பணி புரிவதில் தயக்கமும், பயமும் இருக்கிறது. இப்படிப்பட்ட இடத்திலே ஆண் செவிலியரைப் போட்டால் பரவாயில்லை. அப்படி ஆண் செவிலியரைப் போட்டால், ஆண் நோயாளிகளுக்குச் செய்ய வேண்டிய முக்கியமான சில பணிகளை குறிப்பாக சவரம் செய்வது போன்ற பணிகளை அவர்கள் தயக்கமின்றி செய்ய முடியும். அந்த முறையில் அவர்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்த நியாயமான கோரிக்கையை அரசு ஏற்க வேண்டும். அவர்களுக்கு இதன் மூலம் ஒரு நல்ல பலன் கிடைக்க வாய்ப்பு உண்டாகும். சில ஆஸ்பத்திரிகளில் செவிலியர்கள் 10 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. டியூட்டி டைமைப் பொறுத்தவரையில் பல ஆஸ்பத்திரிகளில் காலையில் 7 மணியிலிருந்து 12 மணி வரையிலும், பிற்பகல் 1 மணி முதல் 4 மணி வரையிலும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் இப்போது 3 ஷிப்ட் வேண்டுமென்று கேட்கிறார்கள். 7 மணி நேரம் அவர்கள் வேலை செய்கிறார்கள். ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் 3 ஷிப்ட் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருப்பதால், அவர்களுடைய நியாயமான கோரிக்கையை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யூனிபாரம் அலவன்ஸ் ஆங்கிலேயர் காலத்திலிருந்தே 105 ரூபாய் அளிக்கப்படுகிறது. அவர்கள் ஒரு செட் சாக்சும், ஒரு செட் ஷூவும் வாங்க 65 ரூபாய் ஆகிறது. அவர்களுக்குக் குறைந்தது 5 செட் துணி தேவை. ஒவ்வொரு செட்டுக்கும் குறைந்தது, எம்.எஸ். 55 என்ற துணியை வாங்கினால்கூட, ஒரு யூனிபாரம் தைக்க அவர்களுக்கு 70 ரூபாய் ஆகிறது. இப்பொழுது வழங்கப்படும் தொகை மிகவும் குறைவு. மற்ற மாநிலங்களில் இதற்காக ரூபாய் 250 வழங்கப்படுகிறது. அவர்கள் அதிகமாகக் கேட்கவில்லை. இன்னும் குறைந்தது 30 ரூ கூடுதலாகக் கொடுத்தால், நலமாக இருக்கும் என்றுதான் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அதே போல் [illegible] அலவன்ஸ் 10 ரூபாய்தான் வழங்கப்படுகிறது. ஒரு துணி

துவைக்க டோபி 40 காசு எடுத்துக் கொள்கிறார். ஒரு செட் துவைக்கப் போட்டால், 2 ரூபாய் டோபிக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு நாளும் அவர்கள் வண்ணானிடம் துணியைப் போடக்கூடிய நிலை இருக்கிறது. மாதம் ஒன்றுக்கு அவர்களுக்கு இதனால் 60 ரூபாய் செலவாகிறது. இதற்கு 20 ரூபாய் அளிக்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையைத்தான் அவர்கள் வைத்திருக்கிறார்கள். இதையும் அரசு கவனத்தில் கொண்டு பரிசீலித்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ரேஷன் அலவன்ஸைப் பொறுத்தவரையில், செவிலியர்கள் நோய் வாய்ப்பட்டால், 30 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்தக் காலத்தில், இது போதாது. இதையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் ரூபாய் 75 இதற்காகக் கொடுக்கப்படுகிறது. நம் செவிலியர்களுக்கும் அதுபோல் கொடுத்து அவர்களுடைய பணியை நல்ல முறையில் செய்ய இன்னும் ஊக்குவிக்க வேண்டும். அவர்களுடைய பணி சிறப்பான பணி. ஸ்பெஷல் டிரெயினிங் அலவன்ஸ் ஆக அவர்களுக்கு 30 ரூபாய் தான் அளிக்கப்படுகிறது. அதையும் 50 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். இதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 3½ ஆண்டுகள் பயிற்சிக்குப் பிறகு, 20 ஆண்டுகள் பணி புரிந்த பிறகும், அவர்களுக்கு எந்தவித புரமோஷனும் கிடைப்பதில்லை. இன்றைக்கு மற்ற மாநிலங்களில் பணியாற்றும் செவிலியர்களுக்கு 10 ஆண்டுகளிலேயே புரமோஷனுக்கான சான்ஸ் இருக்கிறது. ஆகவே நம் மாநிலத்தில் பணியாற்றும் செவிலியர்களுக்கும் அத்தகைய வாய்ப்பினை அளித்து நியாயம் வழங்க வேண்டும். செவிலியர்கள் முழு நேரமும் ஆஸ்பத்திரியில் இருந்து நோயாளிகளைப் பார்த்துக்கொள்வதால், அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால், அரசு ஆஸ்பத்திரிகள் இன்னும் மேம்படும் என்று சொல்லிக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டுள்ள மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது என் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சேர்த்து இன்றைக்கு ஆக 150 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இந்த மொத்த தொகையில் 12 சதவிகிதம் வருகிறது. மிக முக்கியமான ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். சித்த வைத்தியத்திற்கு இந்த ஆண்டு 2 கோடியே 35



லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. சித்த வைத்திய முறைக்கு இன்றைக்கு அதிகமாக நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. காரணம் முன்பெல்லாம் நம்முடைய நாட்டு மக்களுக்கு வியாதியை நீக்குவதற்கு மருந்துகள் வேண்டாம், வேப்பங் குழையே போதும் என்கிற மனோபாவம் இருந்தது. ஆனால் இன்றைக்கு மருந்து வாங்கிச் சாப்பிட்டு அதன் மூலம் நோயைக் குணப்படுத்த வேண்டுமென்ற உணர்வு வந்திருக்கிறது. மருந்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டிய பொறுப்பு, கடமை அரசுக்கு இருக்கிறது. ஏற்கெனவே 'சிப்பார்' வைத்திய முறையை மேற்கொண்டிருந்தார்கள். இப்பொழுது சித்த வைத்திய முறையிலே நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து, உடனடியாக குணப்படுத்தக்கூடிய மருந்துகளை குறைந்த விலையில் உற்பத்தி செய்து நாட்டு மக்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் அரசுக்கு உண்டாகியிருக்கிறது. இந்த வகைக்காக இரண்டு மானியத்திலும் சேர்த்து 1.7 பெர்சன்ட் தொகை தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. சித்த வைத்தியம், அனுபவத்தின் அடிப்படையில், கிராமப்புற மக்கள் மத்தியில் இருந்து வந்தது. பல ஆண்டுகளாக இந்த முறை கிராமங்களில் கையாளப்பட்டு வந்தது. உடனடியாக நோய் தீரக் கூடிய மருந்துகளை சித்த வைத்தியத்தின் மூலம் தயாரிக்க அவர்களால் சில சந்தர்ப்பங்களில் முடியவில்லை. அப்படியே அனுபவத்தின் மூலம் மருந்துகளைத் தயாரித்துக் கொடுத்தாலும், பல சந்தர்ப்பங்களில் வியாதி தீருவதற்கு பதிலாகக் குணக்கேடு உண்டாகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைதான் கிராமப்புறங்களில் இருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், பல நூறு ஆண்டுகளாக அனுபவ பூர்வமாக ஆராய்ச்சி பூர்வமாக இருக்கின்ற மருந்துகளையெல்லாம் ஒன்று திரட்டி, ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உடனடியாக நோய் தீர்க்கூடிய மருந்துகளைக் கண்டுபிடித்து அவற்றை 'சிப்' ஆகத் தயாரித்து மக்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து, மருத்துவக் கல்லூரி அட்மிஷனைப் பொறுத்தவரையில், நாம் திரும்பத் திரும்பப் பேசுகின்றோம். அரசுத் தரப்பிலிருந்து இது குறித்து 'கன்வின்சிங்' ஆன பதில் இதுவரை இல்லை. நேர்முக இன்டர்வியூ குறித்து பிரச்சினை, தகராறு இருக்கிறது. இதுசம்பந்தமாக ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்கும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தர்க்கம் வந்ததை நாம் பார்த்தோம். 1980 ஆம் ஆண்டு மே மாதம் அண்ணா பத்திரிகையில் 'மெடிக்கல் போஸ்ட் கிராஜுவேட் கோர்சுக்கு நடந்த இன்டர்வியூவில் கூட அதற்கென்று போடப்பட்ட மார்க்கைத் திருத்த ஏற்பாடு நடந்தது' என்று செய்தி வந்தது. முன்பு

இருந்த ஆட்சிக் காலத்தில் அப்போதைய அமைச்சரால் இது செய்யப்பட்டது என்று அன்றைய பத்திரிகையில் தொடர்ந்து 6 பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு கூட, இதே அவையிலே மருத்துவக் கல்லூரி அட்மிஷனுக்காக இன்டர்வியூ மீது விவாதம் நடந்து, தகராறு பற்றிய பிரச்சினை எழுந்தது. அந்தத் தகராறு சுப்ரீம் கோர்ட் வரை போனது. அதற்குக்கூட அரசுத் தரப்பில் பதில் இல்லை. 'ஒரு கேள்விக்குத்தான் அவர் பதில் சொன்னார்' என்கிற விதத்தில் தர்க்கம் நடைபெற்றது. நான் என்ன சொல்கிறேன் என்றால் இந்த இன்டர்வியூ முறையை வைத்திருப்பதன் மூலம் வேண்டியவர்களுக்குச் சலுகை அளிக்கப்படுகிறது அல்லது வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்கிற குற்றச்சாட்டு வந்ததற்குப் பிறகு, அமைச்சருக்கும் அமைச்சரவைக்கும் கெட்ட பெயர் வந்ததற்குப் பிறகு ஏன் இதை வைத்திருக்க வேண்டும் என்பதுதான். அந்த முறையை அரசு ஏன் கைவிடக் கூடாது? இதற்கு 'கன்வின்சிங்' ஆக பதில் சொல்ல வேண்டும். அதை ஒத்துக்கொள்ளாது இன்டெலக்சுவலாக அரசு தரப்பிலிருந்து பதில் சொல்வது சரிதானா? இந்த நேர்முக இன்டர்வியூவை வைத்திருப்பதன் மூலம் அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படத்தான் வாய்ப்பு இருக்கிறது. இதை வைத்திருப்பதன் மூலம் அரசுக்கு என்ன நல்ல பெயர் ஏற்பட முடியும் என்று அறிந்துகொள்ள

(முற்பகல் 11-40)

விரும்புகிறேன். இப்படியிருப்பதால் அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுவதற்கு வழியிருக்கிறது. இந்த மாதிரி ஒரு வாய்ப்பு அதற்குத்தான் வழி வகுக்கிறது. நான் என்ன கேட்கிறேன் என்று சொன்னால், ஒரு மாணவன் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 பாஸ் பண்ணுகிறான். அல்லது பி.எஸ்.சி. பாஸ் பண்ணுகிறான் இந்தத் தேர்வுகளிலேயெல்லாம் மிகவும் திறமையாகப் பாஸ் செய்தவன் இந்த இன்டர்வியூவிலே மார்க் வாங்காமல் போகிறான் என்ற நிலைமை வரும்போதுதான், அந்த இன்டர்வியூவிலே தங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டுகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது கூட சொன்னார்கள், மெரிட் அடிப்படையிலேதான் இந்தத் தேர்வு இருக்க வேண்டும். பேக்வார்ட் மற்றும் ஷெட்யூல்ட் வகுப்பினரைப் பொறுத்தவரையில், அவர்களுக்கென்று தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்டிருக்கும் இடம் அப்படியே இருக்கட்டும். பாக்கியிருக்கும் இடங்களுக்கு மீதியிருப்பவர்களைப் போடும்போது அவர்களுக்கு ஏன் இந்த இன்டர்வியூ வேண்டும்? இம்மாதிரி விஷயங்களைக் கேட்கும்போது, இது மிகவும் 'இன்கன்வீனியன்ட்' ஆக இருக்கும் என்று நினைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமான பதிலைச் சொல்லாமல் போய்விடுகிறார்கள் என்று நினைக்கிறேன். இப்போது வைத்



திருக்கும் இந்த இன்டர்வியூ விஷயத்தில் என்னதான் அப்படிச் சிறப்பு இருக்கிறது? பல ஆண்டுகளாகப் படித்து பெற்றிருக்கும் திறமையை 'இன்டர்வியூ சிஸ்டம்' மூலமாக ஒரு 5 நிமிட நேரத்திலே கண்டு பிடிக்க முடியுமா? சிலர் சொல்வதுபோல, தமிழ் மக்கள் நினைப்பது போல, இந்த இன்டர்வியூ தவறான காரியங்களைச் செய்யத்தான் வழி வகுக்கிறது. முன்பு இது குறித்து ஒரு பிரச்சினை இந்த அவையில் வந்தபோது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் பலமுறை இங்கே மாறி மாறிப் பேசியிருக்கிறார்கள். இப்படிப் பேசுவதற்கு எங்கேயிருந்து இடம் வருகிறது? ஆகவே, இந்த இன்டர்வியூ முறையைக் கைவிட வேண்டும். அதற்குப் பதிலாக செலக்ஷனை மெரிட் அடிப்படையிலே செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கௌரவ டாக்டர்கள் பற்றிய பிரச்சினைபற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும். எதற்காக அந்தப் பதவி ஏற்பட்டது? ஒரு காலத்திலே இந்த டாக்டர்கள் தான் ஸ்பெஷலைஸ் செய்திருந்தார்கள், நிறைய பணம் செலவு செய்து படிக்கும் நிலை இருந்தபோது—அப்போது சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் ஸ்பெஷலைஸ் செய்யும் நிலைமை இல்லாததால்—இந்த நிலைமை அன்றைக்கு வந்தது. ஆனால் இன்றைக்கு அந்த நிலைமை இருக்கிறதா? இன்றைக்கு வேண்டும் என்று சொன்னால், அதற்கு வேறு வழிகள் இல்லையா? ஒவ்வொன்றுக்கும் போஸ்ட்கிராஜுவேட் கோர்சிலே சர்க்காரே பணம் செலவு செய்து அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும்போது, நமது சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலேயே ஸ்பெஷலிஸ்ட்கள் இருக்கும்போது, இந்தக் கௌரவ டாக்டர்கள் இல்லாமல் நாம் சமாளிக்க முடியாதா? இப்போது கௌரவ டாக்டர்கள் ஏன் இருக்கிறார்கள் என்று சொன்னால், ஆஸ்பத்திரிகள் தான் பேஷன்ட்களைக் 'கான்டாக்ட்' செய்யக்கூடிய இடம். அங்கே வரும் பேஷன்ட்களை அவர்கள் 'கான்டாக்ட்' செய்து, அவர்களுக்குத் தேவைப்படும் எல்லாவிதமான டெஸ்ட்களையும் சர்க்கார் செலவிலேயே செய்து, பின்னர் இந்தக் கௌரவ டாக்டர்கள் அந்த பேஷன்ட்களுக்கு அவர்களுடைய வீட்டிலே வைத்து பிரஸ்கிரிப்ஷன் எழுதிக் கொடுக்கிறார்கள். மேலும் இன்னொரு கம்ப்ளெயிண்ட் என்னவென்றால், ஆஸ்பத்திரிகளிலே 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்று பணியாற்றிக்கொண்டிருக்கும் டாக்டர்களுக்கு ப்ரமோஷன் இப்போது இல்லை. இந்த கௌரவ டாக்டர்கள் இருக்கும் இடங்களை அவர்களுக்குக் கொடுக்கலாம். இந்த கௌரவ டாக்டர்களால் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கும் டாக்டர்களுக்கு மிகவும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளில் இந்த கௌரவ டாக்டர்களுக்கு இப்போது

என்ன அவசியம்? நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், வெறும் பதில்களைச் சொல்லிக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, கௌரவ டாக்டர்களே இல்லாமல் ஆஸ்பத்திரிகளை நடத்திப்பாருங்கள். கௌரவ டாக்டர்கள் இருக்கும் ஆஸ்பத்திரிகளிலே உள்ள இம்ப்ரூவ்மென்ட்டையும், கௌரவ டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகளிலே உள்ள இம்ப்ரூவ்மென்ட்டையும் 'கம்பேர்' செய்து பாருங்கள். ஆகவே, அவர்களுடைய அசோசியேஷன் சொல்கிறது என்று விட்டுக் கொடுக்காமல் இதிலே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டாக்டர்களை வெளியே பிராக்டிஸ் பண்ண அனுமதிக்கக் கூடாது 'நான்-பிராக்டிஸ் அலவன்ஸ்' கொடுத்தால் பரவாயில்லை. இன்றைக்கு பிராக்டிஸ் செய்ய அவர்களை அனுமதித்ததன் காரணமாக அவர்கள் ஆஸ்பத்திரிகளுக்குப் பயன்படவில்லை. அரசின் சார்பிலே மக்களுக்குக் கிடைக்க வேண்டிய மருத்துவ வசதி இன்றைய தினம் கிடைக்காமல் இருக்கும் நிலைமைதான் இருக்கிறது. தாலுக்கா ஆஸ்பத்திரிகளிலே இருக்கும் ஒவ்வொரு டாக்டரும் தங்களுக்கென்று தனியாக டிஸ்பென்சரி வைத்திருக்கிறார்கள். ஆஸ்பத்திரிக்கு வரும் பேஷன்ட்களிடம், 'சாயந்திரம் டிஸ்பென்சரிக்கு வாருங்கள், நான் அங்கே 6 மணிக்கு வந்து விடுகிறேன்' என்று சொல்லி அனுப்பி விடுகிறார்கள். இந்தமாதிரி நிலைமைகள் நிறுத்தப்பட அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கௌரவ டாக்டர்களின் நிலைமை, அவர்களுடைய நடைமுறை இப்படி இருக்கும்போது, அரசே சம்பளம் கொடுக்கும் இந்த டாக்டர்களும் தாங்கள் வைத்திருக்கும் சொந்த டிஸ்பென்சரிகளுக்கு பேஷன்ட்களைக் கொண்டு போக ஆள் பிடிக்கும் இடமாக ஆஸ்பத்திரிகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது ஹைக்கோர்ட்டிலே ஜட்ஜ் இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் தங்களுடைய திறமையின் மூலமாகத்தான் அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை ஜட்ஜ் ஆகப் போடுகிறபோது அவர்கள் 'அட்வகேட்' ஆக சம்பாதித்ததைவிட குறைவாகத்தான் சம்பளம் வாங்கும் நிலைமை இருக்கிறது. ஆனால் அப்படிச் செய்வதன் நோக்கம் அவர்கள் சமுதாயத்திற்கு உதவ வேண்டும் என்ற அடிப்படையில்தான், அதற்காகத்தான் அவர்கள் ஜட்ஜாக நியமிக்கப்படுகிறார்கள். ஐ. ஏ. எஸ் அதிகாரிகளை நாம் நியமிக்கிறோம் என்று சொன்னால், அவர்கள் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்றுதான் அவர்களைப் போடுகிறோம். ஆனால் அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தைப் பார்த்தால், அவர்களுடைய திறமைக்கு அது போதாது தான். ஆனால் இன்றைய தினம் டாக்டர்கள் கிராமப் புறங்களிலே இருந்துகொண்டு மூன்று, நான்கு டிஸ்பென்சரிகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.





மோட்டார் சைக்கிளை வைத்துக் கொண்டு அவர்களுக்குக் கிடைக்கும் இடைவெளியிலே அந்த மூன்று டிஸ்பென்சரிக்கும் போய் சம்பாதிக்கிறார்கள். இப்படியே செய்தால், ஏழைகளுக்கு எப்படி மருத்துவ வசதி கிடைக்கும்? 1,400 டாக்டர்களை சமீபத்திலே ரெக்ரூட் செய்திருக்கிறோம். இப்படிச் செய்த பிறகும் கூட அவர்கள் கிராமப்புறங்களுக்குப் போகவில்லை. இவர்களைக் கேட்டால், "நாங்கள் அட்மிஷனுக்கே நிறைய கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அதை எப்படியும் திரும்ப சம்பாதிக்க வேண்டும்" என்று சொல்கிறார்கள். மார்க்கெட்டிலே மாப்பிள்ளை பார்க்கும்போது அவர்களுக்கு 50 ஆயிரம், 1 லட்சம் ரூபாய் என்றெல்லாம் இருக்கிறது. இந்த டாக்டர்கள் இப்படி சம்பாத்தியம் பண்ணுவதால், அது காரணமாக வரதட்சனை மார்க்கெட் கூட அவர்களுக்கு அதிகமாக இருக்கிறது. இந்த மாதிரி ஒரு 'பிரிவிலேஜ்ட் கிளாஸ்' என்ற வகையிலே அவர்கள் சம்பாதிக்கும் நிலைமையில் இருப்பதால், அவர்கள் துட்டாசை பிடித்தவர்களாக, பண ஆசை பிடித்தவர்களாக மாறும் நிலைமைதான் இப்போது இருக்கிறது. ஆகவே, 'நான்-பிராக்டிஸ் அலவன்ஸ்' கொடுத்து அவர்கள் பிராக்டிஸ் செய்வதை நிறுத்த வேண்டும். வேறு அதிகாரிகளுக்கு உள்ளதைப்போல கட்டுப்பாடுகள் இவர்களுக்கும் வேண்டும். அட்மினிஸ்ட்ரேஷனிலே கட்டுப்பாடு வேண்டும். அதைக் கொண்டுவர முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாநில மட்டத்திலே மருத்துவ ஆலோசனைக் குழு போட வேண்டும். கல்விக்கும், மின்சாரத்திற்கும் . வேறு பல காரியங்களுக்கும் இப்போது நாம் ஆலோசனைக் குழுக்களைப் போட்டிருக்கிறோம். இப்போது மருத்துவத்திற்கு ஏறக்குறைய 150 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இப்போது கிரான்ட் கொடுப்பதையும் அதாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல வேறொரு மானியத்தின் மீது ஒதுக்கப்படும் தொகைகளையும் எடுத்துக்கொண்டால், ஏறக்குறைய 200 கோடி ரூபாய் அளவுக்கு வருகிறது. அப்படி, ஏறக்குறைய 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து காரியங்களை ஆற்றும்போது, மின்சாரத் துறைக்கும், கல்வித் துறையிலும் இருப்பதுபோன்று இதற்கும் ஒரு 5 பேர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களிலே இருக்கும் பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு கண்காணிப்புக் கமிட்டி போட வேண்டும். அது சர்வ கட்சி உறுப்பினர்களையும் கொண்ட கமிட்டியாக இருக்க வேண்டும். இப்போது இருக்கும் கமிட்டிகளிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் இருக்கிறார்கள். இப்போது மதுரையிலே இருக்கும் இராஜாஜி ஆஸ்பத்திரியிலே இருக்கும் கமிட்டியிலே கூட வேறு

[திரு. ஆ. நல்லசிவம்] [1982 மார்ச் 22

கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லை. பல்வேறுபட்ட கருத்துக்களைச் சொல்வதற்கு சர்வ கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருக்க வேண்டும். கண்காணிப்புக் குழுவிலே சர்வ கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களையும் போட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களுக்கு டாக்டர்கள் போவதைப் பொறுத்தவரையில், பொதுவாக கிராமப்புறங்கள் என்றாலே யாரும் போக விரும்பவில்லை. சமீபத்திலே 1,400 டாக்டர்களை 'ரெக்ரூட்' செய்திருக்கிறோம். கிராமப்புறங்களிலே இருக்கும் பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே இப்போது டாக்டர்களே இல்லை. டாக்டர்களைப் போடும்போது, 'எங்களைக் கிராமப்புறங்களிலே போடக்கூடாது' என்று சிபாரிசு பிடிக்க வருகிறார்கள். இதற்கு எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-க்களை சிபாரிசு பிடிக்கிறார்கள். அப்படிச் செய்தால், கிராமப்புற மக்களுக்கு யார் பாதுகாப்பு? ஆகவே, இவர்களைப் போடும்போது, "கண்டிப்பாக குறைந்தது 2 வருட காலம் கிராமப்புறங்களிலே பணியாற்ற வேண்டும்" என்றும் 'அத்தியாவசியமான காரணங்கள் இல்லாமல் லீவு போடவோ, சிபாரிசுக்கு ஆள் பிடிக்கவோ கூடாது" என்றும் சர்வீஸ் கண்டிஷன் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அந்த மாதிரி ஒரு நிபந்தனையை விதிக்கவில்லை என்றால், இந்த அரசு பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்காக என்று 1,400 அல்ல எத்தனை பேரை ரெக்ரூட் செய்தாலும், பயன் இருக்கப் போவதில்லை. இப்படி எடுக்கப்படும் டாக்டர்களே பிரைமரி ஹெல்த் சென்ட்டர்களுக்குப் போவதற்குத் தயாராக இல்லை. அதற்காகச் சிபாரிசுக்கு ஆட்களைப் பிடிக்கிறார்கள். எனவே தான் மருத்துவ கல்லூரியில் இடம் பெறுகிற மாணவர்கள் அனைவரும் கட்டாயமாக இரண்டு வருஷம் கிராமப்பகுதிகளில் பணி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையைப் போட வேண்டும். வெறும் இரண்டு வருஷம் சர்வீஸ் என்று போட்டால்கூட, சிலர் அதிலேயே 6 மாதம் லீவு போட்டுவிட்டுப் போய் விடுவார்கள். அப்படி இல்லாமல் உண்மையிலேயே இரண்டு வருஷ காலம் கிராமப் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும்படி நிபந்தனை போட வேண்டும். காரணம் ஒரு மெடிகல் கிராஜுவேட்டை உருவாக்குவதற்கு நாம் 75,000 ரூபாய் செலவு செய்கிறோம். அவ்வளவு ரூபாய் செலவு செய்தும், கிராமப்புற மக்களுக்கு இந்த டாக்டர்களால் பயன் இல்லை என்றால், அந்த அளவுக்கு அவர்களுக்காகப் பணம் செலவழிப்பதில் பிரயோசனமில்லை.



1982 மார்ச் 22] [திரு. ஆ. நல்லசிவன்]

அடுத்து, படுக்கைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, மாநிலத்தில் மொத்தம் 28,000 படுக்கைகள் இருப்பதாக இங்கே கணக்குத் தரப்பட்டிருக்கிறது. அதாவது சராசரியாகப் பார்த்தால், 1,800 பேருக்கு இங்கே ஒரு படுக்கை வசதி என்ற அளவில்தான் இது இருக்கிறது. அதிலும் கிராமப் பகுதிகளுக்குப் படுக்கை வசதிகள் எந்த அளவுக்குச் செய்து தரப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தைப் பார்த்தால், மாவட்ட (5,138) மற்றும் வட்டத் (6,155) தலைமையிடங்களில் உள்ள மருத்துவ மனைகளில் மொத்தம் 11,293 படுக்கைகள்தான் இருக்கின்றன. அதாவது கிராமப்புறங்களில் சராசரியாக 3,200 பேருக்கு 1 படுக்கை என்ற அளவில்தான் படுக்கை வசதி செய்து தரப்பட்டிருக்கின்றது. இதில் மற்ற முன்னேறிய மாநிலங்களில் உள்ள நிலைமைகளை இந்த அரசு பார்க்க வேண்டும். நம்மைவிட பின்தங்கிய மாநிலங்களைக் கணக்குக் காட்டி அவர்களைவிட நாம் அதிகமான அளவுக்குப் படுக்கைகள் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்காமல், நமது மாநிலத்தில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது இருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கை போதாது. சென்னை நகரில்தான் அதிகமாக இருக்கின்றது. மாவட்டங்களிலும் வட்டங்களிலும் உள்ள தலைமையிட மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில் 11,000 சொச்சம் படுக்கைகள்தான் இருக்கின்றன. அதாவது 48 சதவீதம்தான் மாவட்டங்களில் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் படுக்கைகளின் எண்ணிக்கை எப்படி போதும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, அவுட் பேஷண்ட்கள் மருத்துவ மனைகளுக்கு மிக அதிகமான அளவில் வருகிறார்கள். இதன் காரணமாக டாக்டர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், நோயாளி கியூ வரிசையில் தன்னிடம் வந்ததும், நோயாளிகளின் நாடியைக்கூடப் பிடித்து பார்க்க நேரமில்லாமல் உனக்கு என்ன வியாதி என்று நோயாளியையே கேட்டு மருந்து எழுதிக் கொடுக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வெளியே வந்து நோயாளி என்ன டாக்டர் இவர், என்னுடைய கையைக்கூட பிடித்துப் பார்க்கவில்லை, என்ன நோய் என்று கேட்டுவிட்டு, மருந்து எழுதிக் கொடுத்துவிட்டாரே என்கிறார்கள். டாக்டர்கள் இப்படிச் செய்வதற்குக் காரணம் அந்த அளவுக்கு அங்கே அவுட் பேஷண்ட்கள் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. அதற்குத் தகுந்த டாக்டர்களின் எண்ணிக்கை இல்லை. எனவே அவர்கள் எப்படியாவது 10 மணிக்குள் அந்த கியூவில் இருப்பவர்கள் அனைவரையும் பார்த்து முடிக்க வேண்டும் என்று இப்படி நடந்து கொள்கிறார்கள். டாக்டர்கள் முன்னாலும் நோயாளிகளின் கியூ வரிசை நிற்கிறது, மருந்து விநியோகம் செய்கிற இடத்திலும் பெரிய கியூ

வரிசை நிற்கிறது. எனவே அவுட்-பேஷண்ட்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி டாக்டர்கள் மற்றும் பார்மசிஸ்ட்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் செய்யவில்லை என்றால், ஜனங்களின் மருத்துவத் தேவையை எந்த வகையிலும் நிறைவு செய்ய முடியாது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நான் சிறையில் பல வருஷம் இருந்திருக்கிறேன். அதைப்போலவே நோயாளியாகவும் ஆஸ்பத்திரியில் இருந்திருக்கிறேன். இதன் காரணமாக இந்த இரண்டு இடங்களிலும் வழங்கப்படுகிற உணவுப் பொருள்களின் தரத்தைப் பற்றியும் அளவைப்பற்றியும் எனக்கு நன்றாகத் தெரியும். இந்த இரண்டு இடங்களிலும் விநியோகத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருள்கள் எந்த அளவுக்குத் திருடு போகின்றன என்பதும் எனக்குத் தெரியும். சிறைச் சாலையிலும் பார்த்திருக்கிறேன், சிறைச்சாலையிலிருந்து நோயாளியாக ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகி இருந்தபோதும், அங்கேயும் பார்த்திருக்கிறேன். பெரும் அளவில் அங்கெல்லாம் சாப்பாடு திருடு போகிறது. இதற்குக் காரணம் அங்கே பணியாற்றும் சிப்பந்திகளுக்குப் போதிய வருமானம் இல்லாததுதான். இரவால் அவர்கள் நோயாளிகளின் உணவிலும், சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் உணவிலும் கை வைக்கிறார்கள். இதையெல்லாம் முறையாகக் கண்காணிக்க தாலுக்கா ஆஸ்பத்திரிகளிலும், சிறைச்சாலைகளிலும்கூட சர்வகட்சி உறுப்பினர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அங்கே இருக்கிற குறைகளைச் சொல்லவில்லை என்றாலும், அதில் உள்ள மற்ற ஒருவராவது உண்மை நிலைமையை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வார்கள். எனவே உணவு விஷயத்தில் அரசு உடனடியாக தாலுக்கா மருத்துவ மனைகளில் சர்வ கட்சியைச் சார்ந்த கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக இன்றையதினம் பல நோயாளிகள் வீட்டிலிருந்து தங்கள் சொந்த உணவைக் கொண்டு வந்து சாப்பிடுகிறார்கள். இது நமது நாட்டுப் பழக்கமாகிவிட்டது. வசதி இருப்பவர்கள் பரவாயில்லை. இப்படிச் செய்யலாம். ஆனால் வசதி இல்லாதவர்கள் நிலைமை என்ன ? மருந்தும் ஆகாரமும் ஆக இரண்டும் சேர்ந்தால்தான் வியாதி குணமாகும். கொடுக்கிற உணவு கணக்குப் போட்டுக் கொடுக்கப்படுகிறது. அதில் பாதிக்கு மேல் திருடு போனால், எப்படி நோயாளியின் நோய் குணமாகும்? எனவே இந்த வகையில் அரசு உடனடியாக கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.





அடுத்து, இன்ஃபன்ட் மார்ட்டாலிட்டி என்கிற சிறு குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகரித்து வருகிற நிலைமையைக் காண்கிறோம். 1979 ஆம் ஆண்டில் 1,000 குழந்தைகளுக்கு 98 என்று இருந்த நிலை மாறி, 1980 ஆம் ஆண்டு 1,000க்கு 100 என்ற அளவுக்கு அது உயர்ந்திருக்கிறது. குடும்பக் கட்டுப் பாட்டில் தமிழ் நாடு முதலிடம் பெற்றிருக்கிறது. அதாவது குழந்தைகள் பெறுவதில் மிகவும் குறைவான அளவை நாம் எட்டியிருக்கிறோம். வரவேற்கக்கூடியதுதான். ஆனால் அதே நேரத்தில் குழந்தைகளின் இறப்பு விதமும் அதிகரிக்கிறது என்றால், அது சரியல்ல. அதிலே நாம் முதலிடத்தைப் பெறுவது கூடாது. அதிலும் கூட இங்கே இருக்கிற நிலைமையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் தமிழ் நாடு முன்னணியில் இருக்கிறது என்று பெருமையாகப் பேசிக் கொள்கிறோம். அதில்கூட இந்தச் சமுதாயத்தில் இன்னும் 'மேல் டாமினேஷன்' இருக்கிற காரணத்தால் ஆண்கள் அதிகமான அளவுக்கு இந்த அறுவை சிகிச்சையை மேற்கொள்ளாமல் பெண்களை இதில் ஈடுபடுத்துகிறார்கள். டியூபெக்டமிக்குத் தான் அதிகமாக ஆட்கள் இருப்பார்கள். காரணம் குடும்பத்திற்கு ஆண்தான் தலைவன் என்றிருக்கிற காரணத்தால், இந்தப் பொறுப்பை பெண்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று செய்துவிடுகிறோம். எனவே இப்படிப்பட்ட நிலையில் சிறு குழந்தைகளின் இறப்பு விதம் அதிகமாகிக் கொண்டிருப்பதைத் தடுக்க வேண்டும். அதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மருந்துக் கட்டுப்பாடுப் பிரிவு தனியாகப் பிரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விஷயம். ஆனால் அரசுத் துறையில் தயாரிக்கப்படும் மருந்து எபெக்டிவ் ஆக இல்லை என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசு அதை ஜாயின்ட் செக்டாரில் "தாதா' பார்மசூட்டிகல்ஸ்" நிறுவனம் மூலமாகத் தயாரிக்கிறார்கள் என்று நினைக்கிறேன். டயாபெட்டிஸ் நோய்க்கு மாத்திரைகள் அரசாங்கப் பொது மருத்துவ மனையில் தரப்படுகின்றன. அந்த மாத்திரைகளை ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் வாங்கி சாப்பிட்டால், அதற்குப் பிறகு ரத்தத்தில் சர்க்கரை அதிகமாக இருக்கிறதே தவிர குறையவில்லை. இது அரசு மாத்திரைகளை வாங்கிச் சாப்பிடுவதால் வருகிறது. ஆனால் ஸ்டிரிப்பில் வருகிற தனியார் தயாரிக்கும் மாத்திரையை வாங்கிச் சாப்பிட்டால், டையபெட்டிஸ் கண்ட்ரோல் ஆகிவிடுகிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் டையபெட்டாலஜி டிபார்ட்மென்ட்டில் செக் அப் செய்து கொள்ளலாம். கேட்டால் அரசு மாத்திரைகளுக்கும் ஸ்டிரிப்பில் உள்ள மாத்திரைகளுக்கும் ஒரே பவர்தான் என்று சொல்லுகிறார்கள். நானே சாப்பிட்டுவிட்டுச் சொல்கிறேன், அந்த அரசு மாத்திரைகள் உண்மையிலேயே எபெக்டிவ் ஆக

இல்லை. வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு பேஷண்ட்டுக்கு ஒரு மாதம் அரசு மாத்திரையைக் கொடுத்துப் பார்க்கட்டும், பிறகு ஸ்டிரிப்பில் உள்ள மாத்திரையைக் கொடுத்துப் பார்க்கட்டும். இப்படி நடைமுறையில் கொடுத்துப் பார்த்தால், அரசு நிறுவனம் தயாரிக்கிற மாத்திரைகளுக்குப் பவர் இல்லை என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். எனவே அரசு தயாரிக்கும் மருந்து வகைகளைப் பொறுத்தவரையில், அதில் முறையான கண்காணிப்பு இருக்க வேண்டும் என்பதோடு தரமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கடைசியாக, நர்சஸ் பிரச்சினைபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையைக் குறித்து நான் ஏற்கெனவேகூட குறிப்பிட்டிருக்கிறேன். தற்போது பேஷண்ட்டுகளுக்கும் நர்சுகளுக்குமிடையே உள்ள விகிதம் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னால் தீர்மானிக்கப்பட்டதாகும். அதாவது எத்தனை பேஷண்ட்டுகளுக்கு ஒரு நர்ஸ் இருக்க வேண்டும் என்று 40 ஆண்டுகளுக்கு முன்னால் தீர்மானிக்கப்பட்டது இன்றுவரை மாற்றப்படாமல் அப்படியே இருக்கிறது. இதை மாற்றி அமைக்க வேண்டும் என்று "போர் கமிட்டியும்" அதற்குப் பின்னால், நியமிக்கப்பட்ட முதலியார் கமிட்டியும் அரசுக்கு அறிக்கைகளைத் தந்திருக்கின்றன. ஆனாலும் இதுவரை அந்த விகிதம் திருத்தியமைக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல. நோயாளிகளில் 200 ஆண்களுக்கு ஒரு பெண் நர்ஸ் இருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கூட இங்கே குறிப்பிட்டு இதை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதில் நியாயம் இருக்கிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதோடு மாணவ நர்சுகளுக்கு மாதம் ரூபாய் 115 மட்டுமே ஸ்டைபெண்டுத் தொகை அளிக்கப்படுகிறது. நாங்கள் ஒரு சிறிய கம்பெனி வைத்து நடத்துகிறோம். குறைந்த அளவு வாழ்க்கைத் தரத்தை வைத்துக் கணக்கிட்டால் கூட, ஒரு நாளைக்கு 6 ரூபாய் என்று ரூ. 180 தருகிறோம். ஆனால் ரூபாய் 115 மட்டும் உதவித் தொகையாகக் கொடுத்துவிட்டு இது அவர்களுக்குப் போதும் என்று அரசு எப்படி கருதுகிறது என்று எனக்குப் புரியவில்லை. எனவே இந்தத் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நர்சஸ் பயிற்சிக்காக தற்போது ஆண்களை எடுப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது. இது மாற்றப்பட்டு இந்தப் பயிற்சிக்கு ஆண்கள்கூட அனுமதிக்கப்பட வேண்டும் என்று பெண்களே அதிகமாக உள்ள நர்சஸ் அசோசி





யேஷனைச் சார்ந்தவர்களே கேட்கிறார்கள். குறிப்பாக, மன நல மருத்துவ மனை, சைக்கியாட்ரிக், அறுவை சிகிச்சை, பால் வினை நோய்கள்; நகரும் மருந்தகங்கள், சிறைச்சாலைகள் ஆகிய பிரிவுகளுக்கெல்லாம் ஆண்களே நர்சுகளாக இருக்க வேண்டும். அப்போதுதான் சரியாக இருக்கும் என்று அவர்கள் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதைப்போலவே பதவி உயர்வு கொடுக்கும்போதும் 3 பெண்களுக்குப் பதவி உயர்வு கொடுத்தால், ஒரு ஆணுக்குப் பதவி உயர்வு கொடுப்பது என்ற முறையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் சமமாகப் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இவைகளெல்லாம் ஏற்கெனவே அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கும். இவற்றையெல்லாம் அரசு முறையாக ஆராய்ந்து பார்த்து, இவைகளுக்கு உரிய தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கைகளுக்காக நர்சஸ் அசோசியேஷனைச் சார்ந்தவர்கள் வரும் காலத்தில் ஒரு அதிருப்தி வாரம் கொண்டாட இருக்கிறார்கள். இப்போதெல்லாம் இவைகள் இந்தச் சர்க்காரின் காதில் விழாது. ஆனால் அவர்கள் ஆர்ப்பாட்டம், ஸ்டிரைக் என்று ஈடுபட்டால், இப்படிச் செய்கின்றார்களே என்று குறை சொல்வதில் பயன் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

பல வருடங்களாக உள்ள பிரச்சினைகள் நிறைவேறாதபோது, "அதிருப்தி யாகும்" என்று கூறி அவர்கள் "கறுப்புக் கொடியை" அணிந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கடுத்த நிலைமைக்கு அவர்கள் போகும்போது நோயாளிகள் பாதிக்கப்படுவார்கள். நோயாளிகளைப்பற்றிக் கவலை ஏற்படுவதால், அந்த நர்சஸ் அசோசியேஷன் கோரிக்கையைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகிய துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சில கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு கொடுத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்று பல புதிய திட்டங்களை வகுத்து அல்லது ஏற்கெனவே இருக்கின்ற திட்டங்களை முறைப்படுத்துவதன் மூலம் பெருமளவிற்கு பொது மக்களுக்கான நல்லவைகளைச் செய்ய முடியும் என்ற உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் திட்டம் முழுமையாகப் பலன் தருகின்ற வகையிலே செயல்பட வேண்டிய அத்தனையும் செய்தாக வேண்டும்.

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 22

என்னைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களோடு பல கருத்து வேறுபாடுகள் உண்டு என்றாலும், இன்றைக்கு இந்தத் துறையைப் பொறுத்தவரையில், அவர் தெரிவித்த பல கருத்துக்களை நான் அப்படியே ஏற்றுக்கொள்கிறேன் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை நகரைப் பொறுத்தவரையில், எல்லா வியாதிகளுக்கும், அது ஜுரமாக இருந்தாலும் அல்லது வேறு பல வியாதிகளாக இருந்தாலும், எல்லாவற்றிற்கும் பெரும்பாலும் ஒரே இடத்தில் இருக்கின்ற மருத்துவமனைக்குத்தான் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. எல்லோரும் அந்த ஒரு மருத்துவ மனையிலேயே இருந்து பெற்றாக வேண்டுமென்ற நிலை இருப்பதால், இருக்கின்ற நான்கைந்து மருத்துவ மனைகளிலும் மிகப் பெரும் நோயாளிகள் கூட்டம் எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. இவற்றைப் பரவலாகப் பிரிக்க முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதன் காரணமாக படுக்கை கிடைக்க முடியாமல், பாய் விரித்துப் போட்டு படுக்க வைக்கும் நிலைமையும், அதுகூட இல்லாமல் அவதிப்படுகின்ற நிலைமையும் தலைநகர மருத்துவமனைகளிலே இருக்கும்போது, மருத்துவ மனைகள் எந்த அளவிற்குச் சுத்தமாக (clean) இருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே நாம் எவ்வளவுதான் ஆர்வம் காட்டினாலும் கூட, இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்யாத வரையில், மருத்துவ மனைகளை சுத்தமாக வைத்துக்கொள்ள முடியாத நிலை தொடரும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த நிலையிலிருந்து நாம் விடுபட வழி கண்டாக வேண்டும்.

இன்னுமொன்று பொல்யூஷன் (Pollution) சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்பாடு அடையச் செய்தல், அதைக் கெட்டுவிடாமல் காப்பாற்றுவது என்பது. அரசு பொது மருத்துவ மனையைப் பொறுத்தவரையில், அதில் நுழைந்து எவ்வாறுதான் மக்கள் புதிய வியாதிகள் இல்லாமல் வெளி வருகிறார்களோ என்பது ஆச்சரியம்தான். தண்ணீரைப் பொறுத்தவரையில், பொல்யூஷன் (pollution) இருக்கிறது. ஆஸ்பத்திரியில் இட வசதி, படுக்கை வசதி ஆகியவை மிகக் கேவலம். அமைச்சருக்குத் தெரியாதது அல்ல. சென்னையிலுள்ள மருத்துவ மனைக்குள் மூக்கைப் பிடிக்காமல் சென்று வர முடியாது. அந்த அளவிற்குச் சுகாதாரக் கேடுகள் மலிந்திருக்கின்றன. அதைத் தவிர்க்க முடியாத நிலை இருக்கிறது. இதற்காக நிறையப் பணம் செலவு செய்து சுற்றுச் சூழ்நிலையை ஒழுங்குபடுத்தினால்தான், மருத்துவ ரீதியாக மற்றப் பிரச்சினைகள் தீரும், திட்டங்கள் செயல்பட வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1982 மார்ச் 22] [திரு. க. இராமமூர்த்தி]

இன்னுமொன்று. மருத்துவ மனைகளில் பணியாற்றுகின்ற மருத்துவர்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். வெளியே தனியாகப் பயிற்சி செய்துகொண்டு அரசாங்க மருத்துவர்களாகவும் எப்படி இருக்கிறார்கள் என்பதையும் சொன்னார்கள். அது உண்மையுங்கூட. சில ஆண்டுகளுக்கு முன்னால் சில டாக்டர்கள் பொது மருத்துவ மனைக்குள் சென்றுவிட்டால், வெளியே வர மாட்டார்கள். அங்கிருக்கின்ற மற்ற அப்பாரட்டஸ்களை (Apparatus) வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு மிகச் சாதாரண டாக்டர்கள் கூட பெரிய டாக்டர்கள் போல செயல்பட முடியும் என்ற அளவிலே அங்கு எக்விப்மென்ட்ஸ் (equipments) இருக்கின்றன. வெளியே பெரிய டாக்டர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். மருத்துவத் துறையில் இப்படி அவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு செயல்பட முடியும் என்பதற்கு இடம் கொடுக்கக் கூடாது. குறைந்தபட்சம் ஒன்றை வைக்க வேண்டும். பத்துப் பதினைந்து ஆண்டுகள் பணியாற்றியிருந்தால், அதற்குப் பிறகு அவர்கள் தனிப் பயிற்சி வைத்துக்கொள்ளக் கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டும். பயிற்சி பெற்று பத்துப் பதினைந்து ஆண்டுகளாக அனுபவம் பெற்று, அரசாங்கச் சலுகைகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு அனுபவம் பெற்ற பிறகு, தனியார் மருத்துவமனையோடு தொடர்பு கொண்டிருப்பதால்,—பணம் சம்பாதிப்பது என்பது வேறு—அது பொது மக்களுக்குப் பாதகமாக அமைகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (Hospital Corporation) "ஆஸ்பத்திரி கார்ப்பரேஷன்" அமைப்பதைப்பற்றிச் சொன்னார்கள். அது எப்படி இயங்குவது என்று தெளிவாகச் சொன்னால், அதைப்பற்றி நாங்கள் எண்ணிப் பார்க்க முடியும். ஆனால் என்னுடைய அனுபவத்திலிருந்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். டில்லியிலே குடும்பக் கார்டு சிஸ்டம் என்ற அடிப்படையிலே ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். சில குறிப்பிட்ட, (Housing Board Colony) ஹவுசிங் போர்ட் காலனிகள், குறிப்பிட்ட பகுதிகள் என்று பிரித்து, அந்தப் பகுதிகளில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சராசரியாக மாதம் ஒன்றுக்கு இவ்வளவு என்று குறைந்தபட்சக் கட்டணத்தை வைத்து, அந்தக் குடும்பத்திலே யார் யாருக்கு என்னென்ன வியாதி என்று (Card System) கார்ட் சிஸ்டம் வைத்து அவ்வப்போது வேண்டிய மருத்துவ வசதிகளைச் செய்கிற அளவிலே வாய்ப்பு இருந்து கொண்டிருக்கிறது. அந்த முறையைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு பகுதியாக இங்கேயும் அண்ணா நகர், ஷெனாய் நகர் போன்ற பகுதிகளில் செயல்படுத்த முயற்சி செய்தால், ஒருவேளை மருத்துவ மனைகளில் ஒரே இடத்தில் சென்று மக்கள் குவிவதைத் தடுக்க முடியும் என்று கருதுகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1982 மார்ச் 22

முதல் முறையாக நகரங்களிலிருந்து கிராமப்புற புறநகர் பகுதிகளுக்கு விரிவடைகிற வகையிலே அதிகமான பணத்தைச் செலவிட்டு மருத்துவ சுகாதார நிலையங்களை, மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காட்டி வருகிற ஆர்வத்தை நான் வரவேற்கிறேன். அதற்காக நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதைப்போல, மிகப் பெருமளவில் சாலை விபத்துக்கள் ஏற்படுவது தென்னாற்காடு மாவட்டத்தில்தான். அதுவும் விழுப்புரம், திண்டிவனம் பகுதியில்தான் மிக அதிகம். அங்கே சில திட்டங்களைத் துவங்க இருக்கிறார்கள் என்பதற்காக நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது எப்படி இருந்தாலும், தாலுக்காத் தலைமை மருத்துவ மனையில் இரத்த வங்கிகள் இல்லை, எக்ஸ்ரே யூனிட் இல்லை, ஆப்பரேஷன் தியேட்டர் இல்லை, ஆகவே அங்கே முழுமையான பலனை யாரும் பெற முடியவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற வாய்ப்புகளை முதலில் ஏற்படுத்த வேண்டும். என்ன காரணத்தாலோ அதைத் தள்ளிப்போட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் உள்ள தலைமை மருத்துவ மனைகளில் இந்த மூன்று அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தால்தான், மக்களுக்கு முழுமையான பலன் கிடைக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னுமொன்றுக்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டத்தில், டானிடா ('Danida) திட்டத்தின் கீழ் பல பஞ்சாயத்து ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து முழுச் சுகாதார வசதிகள் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கியிருப்பதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாவட்டங்களில் உள்ள எல்லாப் பஞ்சாயத்து ஒன்றியங்களையும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். மாநிலத்திலேயே தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்கள் தான், மிகப் பெரிய அளவில் வியாதிகளுக்கு இலக்காகிக் கொண்டிருக்கின்ற நிலைமைகள் அமைந்திருக்கின்றன.

(மாற்றுத் தலைவர் திருமதி பத்மாவதி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

(பிற்பகல் 12-10)

வெப்பமிலிலேயிருந்து, மலேரியாவிலேயிருந்து, டைபாய்டிலே இருந்து எந்த நோயாக இருந்தாலும், இந்த இரண்டு மாவட்டங்களிலேயும் அவைகள் பெருகிக்கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 22] [திரு. க. இராமமூர்த்தி]

அடுத்ததாக, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையிலே, நாம் இதிலே எவ்வளவு முனைப்பைக் காட்டுகிறோம், எப்படிச் செயல்படுத்துகிறோம் என்று பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே வெற்றி அடைந்திருக்கிறோம் என்று அவருடைய அறிக்கையிலே தந்திருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆனால் இந்தத் துறையிலே எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் எந்த அளவுக்கு பொறுப் பற்றவையாக இருக்கின்றன என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வீடுகளிலேயே நடக்கின்ற பிரசவங்களில் குழந்தைகள் பிறக்கின்றன. மருத்துவ மனைக்கே செல்லாமல் அப்படி வீடுகளிலேயே குழந்தை பிறந்தால், அவர்களுக்கு குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை அமுல்படுத்தக் கூடாது என்று அரசாங்கத் துறையிலேயிருந்து ஒரு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. இதை எப்படி அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இது எப்படி இயங்கிக்கொண்டிருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. இந்தத் தடுப்பு முறை கிராமப்புறங்களிலே தெரிகிற நிலை இல்லை. எனவே அவர்கள் அங்கிருந்து நகரங்களை நோக்கி வந்தால், நம் மருத்துவ மனைகளிலே கொடுக்க முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும்போது, கிராமத்திலேயே அவர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு முறையை அமுல்படுத்த முடியவில்லை. வீட்டிலே பிரசவம் நடந்தால், இத்திட்டத்தை அவர்களுக்கு அமுல்படுத்தக்கூடாது என்று அமைச்சர் அவர்களுடைய துறையிலேயிருந்து 'சர்குலர்' அனுப்பியிருக்கிறார்கள். இந்தத் துறையைப்பற்றி நாம் கவலைப்படுவது மட்டுமல்ல, அந்தத் துறையினர் எந்த அளவுக்குப் பொறுப்பில்லாமல் இருந்துகொண்டு பணியாற்றுகின்றார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்றுதான் இந்த உதாரணத்தை எடுத்துச் சொல்கிறேன். இதற்கு அரசு பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தோடு மட்டுமல்ல, கிராமப்புறங்களிலே மருத்துவமனைகள் இல்லாத இடத்தில் குழந்தை பிறப்பு பார்ப்பதற்கு என்று தனியாகப் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அதற்கு என்றே நாம் பயிற்சி கொடுத்து வருகிறோம். அவர்கள் கிராமப்புறங்களிலே அந்தப் பணிகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பயிற்சிகளைக் கொடுத்து, அந்தத் திறமையுள்ளவர்களை வைத்துக்கொண்டு இன்னொரு பக்கம் மருத்துவ மனையிலே குழந்தைகள் பெற்றுக்கொள்ளவில்லை என்றால், அவர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையிலே, குடும்பநல சிகிச்சைகள் செய்யக்

கூடாது என்று. அந்தத் துறையிலேயிருந்து உத்தரவு போடுகின்றார்கள். அந்த நிலையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் எப்படி செயல்படுத்தப்படுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. இந்தமாதிரியான சீர்கேடுகளைச் சீர்படுத்த வேண்டும். அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் ஒரு வலிமையைச் சேர்த்துக்கொண்டு, எங்கேயும் எதையும் செய்யலாம் என்ற நிலைமை இருக்கிறது. இதை இப்போதே கவனிக்கவில்லை என்றால், அந்த உணர்வு எல்லோருக்கும் வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மூளை நோயைப் பொறுத்தவரையில், எங்களுடைய மாவட்டத்திலே அது அதிகமாகப் பரவியிருக்கிறது. அதற்கு மூல காரணங்களைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்களே தவிர, ஒரு முடிவுக்கு வரவில்லை. அதிலே நாம் ஒரு முடிவிற்கு வந்தாக வேண்டும். நம் கையிலே இல்லை. தொற்று நோயாக வருகிறது என்று சொல்கிறார்கள். இதிலே மருத்துவத் துறை நல்ல கவனம் செலுத்த வேண்டும். கடைசி வரையிலே நம் கையிலே இல்லை என்று சொல்லிக் கை கழுவி விடுவது சரியல்ல. அது மருத்துவத் துறையின் முன்னேற்றத்தின் மீது ஒரு பழியாக அமைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது பொதுச் சுகாதாரம். இதைப் பொறுத்தவரையில், எவ்வளவு தான் நாம் பணம் செலவு செய்தாலும், பொதுச் சுகாதாரம் முன்னேறவில்லை. இந்த நிலைமை நீடித்தால், நாம் மேலும் வளர முடியாமல் போய்விடும். இன்றைக்காவது கோடைக்காலம் வந்துகொண்டிருக்கிறது. மழைக் காலத்திலேகூட வரக்கூடாத வியாதிகள் எல்லாம் வந்து அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே வந்தன. மழைக்காலத்திலே அம்மை இருந்தது. மழைக்காலத்திலே காலரா நோய் இருந்தது. ஆங்காங்கே ஒன்றிரண்டு கேஸ் வந்தது. மழைக்காலத்திலே மலேரியா, டைபாயிட் எல்லாம் வந்தது. பலவிதமான நோய்கள் வந்து கொண்டிருந்தன. நான் இதை எதற்காகச் சொல்கின்றேன்? பொதுச் சுகாதாரத்திற்காக நாம் எவ்வளவோ செலவு செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் அது முறையாகச் செலவு செய்யப்படுகின்றதா என்பதில் எல்லோருக்கும் சந்தேகம் இருக்கிறது. அது ஒழுங்காகச் செலவு செய்யப்படுகின்றதா என்று பார்க்க வேண்டும். காரணம் நம்முடைய (District Health Office) டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர்களைப் பொறுத்தவரையிலே, அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். நான் உரிமையோடு சொல்லிக்கொள்கிறேன். தென்னாற்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் இந்த மாவட்டங்களிலே D.H.O. ஆக இருக்கின்றவர்கள் எப்படி வேலை பார்க்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். எல்லாத் துறைகளிலேயும் இந்தத்



குறை இருக்கிறது. அந்த நிலைமைகள் இருக்கின்றன. இந்தப் பதவிகளுக்கு வருகின்றவர்கள் சென்னையில் தொடர்பு உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வேலையைப் பார்ப்பதில்லை. சென்னைக்கு வருவதும் போவதுமாக இருக்கிறார்களே தவிர, தங்கள் வேலையைப் பொறுப்பாகப் பார்ப்பதில்லை இதுதான் அவர்களுடைய தொழில். இதிலே தொடர்பு உடையவர்களாக வருகிறார்கள். கடைசியாக வேலையை விட்டுப் போகும்போது, சென்னையிலே வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொள்கிறார்கள். கடைசியிலே சென்னையை நிரந்தரமாக ஆக்கிக்கொள்கின்றார்கள். அந்தப் பகுதிகளில் வேலை பெற்றுக் கொண்டு விடுகின்றார்கள். அரசியலில் செல்வாக்கு பெற்றவர்கள் மூலமாக அவ்வாறு செய்துகொள்ளுகின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் இருக்கின்றார்கள். அந்தக் காரணத்தினால் அரசு தருகின்ற மருந்துகள் எல்லாம் பயன்படுவதில்லை. அவர்கள் வேலையை அவர்கள் செய்வதில்லை. அதனாலே சுகாதாரச் சீர்கேடுகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. நகராட்சி மன்றங்களிலே, பஞ்சாயத்து ஒன்றியங்களிலே இந்த நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். திண்டிவனத்திலே ஒவ்வொரு வீதியிலும் நடந்து போக வேண்டும். மூக்கைப் பிடிக்காது போக முடியாது. இவ்வளவு சுகாதாரக் கேடுகள் இருக்கின்றன. அங்கே திண்டிவனத்திலே கிடங்குக் காலனியிலே ஒரு மாடு அடிக்கின்ற இடம் அமைந்திருக்கின்றது. அது நகராட்சி மன்றத்தினுடைய அனுமதி இல்லாமல் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதிலே நாள்தோறும் 300-லிருந்து 400 மாடுகள் வரை அடிக்கப்படுகின்றன. அதுவும் இன்றைக்கு சட்டபூர்வமான எந்த அனுமதியும் இல்லாமல் நடக்கிறது. அதை எப்படி நடத்த முடியும் பல பெட்டிஷன்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே மாடுகளை மடக்குவதற்குக்கூட இடம் இல்லை. மாடுகளை வெட்டிய பிறகு அவைகளின் இறைச்சியைப் போடுவதற்குக்கூட இடம் இல்லை. அப்படி தெருவிலே போடுவதுபோல் போட்டு வைத்திருக்கிறார்கள். இரத்தத்தை, தோலைப் போட இடம் கிடையாது. கிட்டத்தட்ட இரண்டு நாட்கள், லாரிகள் வந்து ஏற்றிக்கொண்டு போகவில்லை என்றால், அந்த நகரமே முழுவதும் நாறிப் போய்விடும். யாருமே ஊரில் இருக்க முடிவதில்லை. அந்த அளவுக்கு நாறிப் போய்விடும். இத்தனைக்குப் பிறகும் அந்த வியாபாரம் நடந்துகொண்டிருக்கிறது. ஏதோ ரூபாய் வியாபாரம் என்று சொல்கின்றார்கள். அது எந்த வியாபாரமாக இருந்தாலும் சரி. இவ்வளவையும் தாண்டி அதை அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் தெரியாமல்

இல்லை. தெரிந்துதான் இருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. அவர்களுக்கு வேண்டிய அதிகாரம் இருக்கிறது. அவர்கள் அங்கே நிரந்தரமாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்போது, நாம் எப்படி நாட்டு மக்களுக்குச் சுகாதாரத்தைத் தர முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதை பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

சென்னையிலே குடிசை மாற்று வாரியத்ினுடைய குறிக்கோளை, இலக்கை அடையவில்லை, வெற்றி பெறவில்லை என்ற நிலை இருக்கிறது. இருந்தாலும் கூட இருக்கின்ற நிலைமைகளை உணர்ந்து, அதற்கு வேண்டிய பணியாளர்களை நாம் அதிகப்படுத்த வேண்டும். அந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும். அதைச் சரிவர செய்ய இயலாத வரையிலே நாம் சுகாதாரமாக இருக்க முடியாது. லாயிட்ஸ் ரோட்டிலே வந்து பார்க்க வேண்டும். அங்கே முனிசிபல் ஸ்கூல் பக்கம் வந்து பார்க்க வேண்டும். அந்தப் பக்கம் போகவே முடியாது. போவது இருக்கட்டும். அந்தப் பக்கம் போய்ப் பார்க்கவே முடியாது. போவது என்பது இரண்டாவது. ஆகவே பணியாளர்களை அதிகப்படுத்தியாக வேண்டும். அதை முறைப்படுத்தியாக வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நேரம் இல்லை. கடைசியாக ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். தென் ஆற்காடு மாவட்டத்திலே, மாவட்டத் தலைமை மருத்துவ மனையைப் பொறுத்தவரையிலே, நம்முடைய மாநிலத்திலே இன்டென்சிவ் கேர் வார்டு Intensive Care Ward இல்லாமல் இருக்கிறது. தலைமை மருத்துவ மனையில் கடலூரில் இல்லை என்று எனக்குத் தகவல். அந்த வார்டு இல்லாத மாவட்டங்களில் இதுவும் ஒன்று என்று சொல்லலாம். அதிலே ஒரு அலட்சியம் காட்டுகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள்கூட சொன்னார்கள். பாண்டிச்சேரி ஜிப்மர் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிச் சொல்வது வேறு. இங்குள்ள மருத்துவ மனைக்குப் போவதை விட கடலூர் மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை பெறுவதை அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலேயே இந்த நிலைமை என்றால் மற்ற இடங்களில் என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு உடனடியாகப் பரிகாரம் காண வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து எல்லா மாவட்டங்களிலும் ஏறத்தாழ மருத்துவக் கல்லூரிகள் அமைத்துகொண்டிருக்கின்றன. தென் ஆற்காடு மாவட்டத்தில் ஏற்கெனவே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருக்கின்ற காரணத்தினாலே, கல்லூரிகள்



வாராமல் போய்விட்டது. இன்ஜினியரிங் கல்லூரி கூட வரவில்லை. அது ஒரு காரணமாக இருக்கிறது. ஆனால் மருத்துவக் கல்லூரிக்கு அதை ஒரு காரணமாகச் சொல்லக்கூடாது. கடலூரிலே இருக்கின்ற மருத்துவ மனையில், கல்லூரிக்குத் தேவையான படுக்கைகள், 500 படுக்கைகள் வசதி இருக்கின்றது. அது மட்டுமல்ல, பலவிதமான நோயாளிகள் அங்கே வந்துகொண்டிருக்கின்ற நிலைமைகள் இருப்பதால், இந்த ஆண்டாவது அல்லது அடுத்த ஆண்டாவது இந்தக் கல்லூரியைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பொதுவாக இந்தத் திட்டங்கள் நிறைவு தருவதாக இருந்தாலும்கூட இதைச் செயல்படுத்துகின்ற முறைகளிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் தனியான கவனம் அல்லது போதிய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று சொல்லி, பொது சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் நன்கு செயல்படுத்தக் கூடியவர்களை அந்தந்தப் பகுதிகளில் நியமித்தால் தவிர, செயல்படக் கூடியவர்கள் செயல்பட்டால் தவிர, எந்தவிதமான கம்ப்ளெயின்ட் அவர்கள் மீது சென்றாலும்கூட அவர்கள் அங்கேயே தான் இருப்பார்கள் என்ற செல்வாக்கோடு இருப்பவர்களை அந்தப் பகுதிகளில், பதவிகளில் நியமித்து பொதுச் சுகாதாரத்தை நாட்டுக்குத் தர முடியாது. பொதுவான வியாதியை வேண்டுமானால் குறையாமல் தருவதற்கு அது துணையாக இருக்குமென்று சொல்லி முடிக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கைக் குறிப்புகளின்மீது எனது கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மக்கள் நல்வாழ்வின்கீழ் ரூ. 74-45 கோடியும், மருத்துவத்தின்கீழ் ரூ. 76.56 கோடியும், ஆக 151 கோடி ரூபாய் அளவிற்கு இந்தத் துறைக்கு ஒதுக்குகிறோமென்று பெருமைப்பட்டுக் கொள்ளும் நேரத்தில், இந்த இலாகா எப்படி இருக்கிறதென்று பார்த்தால், இன்னும் டி.எம்.எஸ். பதவி நிரப்பப்படாமல் இருக்கிறது. கே.எம்.சி.யில் ஒரு டீன் நியமிக்கப்படவில்லை. ஸ்டேன்லி மெடிகல் காலேஜில் ஒரு டீன் பதவி நிரப்பப்படாமல் இருக்கிறது. இந்த நிலையில் எவ்வளவு கோடி ரூபாய் செலவழித்தாலும், அங்கே ஆட்கள் இல்லாவிட்டாலும், ஏதோ எப்படியோ வேலை நடக்கும் என்ற எண்ணத்தில் இந்த இலாக்கா செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று எண்ணும் நேரத்தில், எந்த அளவிற்கு இந்த இலாக்கா மீது இந்த அரசாங்கம் கவனம் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, உள்ளபடியே நான் வருத்தப்

படுகிறேன். எவ்வளவு சாதிக்கிறோமென்பது அல்ல பிரச்சினை. அந்த சாதனைகளின் பலன் மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்க்க வேண்டும். 151 கோடி ரூபாய் இதற்கு ஒதுக்குகிறோம் என்று சொன்னாலும் அந்த நிதி எப்படியெல்லாம் விரயமாக்கப்படுகிறது, எப்படி சாதனைகள் அமைகின்றன என்று எண்ணும்போது, என்னால் உள்ளபடியே வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை.

இந்த மாநில மக்கள் தொகையைப் பொறுத்து சரியான புள்ளி விவரத்தை இவ்வளவு பெரிய அரசாங்கத்தால் கொடுக்க முடியவில்லை என்பதை நினைக்கும்போது, வேதனைப்படுகிறேன். ஒரு இடத்தில் 4.8 கோடி என்று ஒரு குறிப்பு. இன்னொரு இடத்தில் 4.11 கோடி மக்கள் என்று ஒரு குறிப்பு. இப்படிப்பட்ட புள்ளிவிவரத்தைக்கூட சரியாகக் கொடுக்க முடியாத அளவிற்கு இந்த இலாக்கா அதிகாரிகள் அலட்சிய மனப்பான்மையோடு இருப்பதைப் பார்த்து, இவர்களெல்லாம் எதற்காக அதிகாரத்தில் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இவர்கள் உண்மையைச் சொல்லியிருக்கிறார்களா என்றால், இல்லை. உண்மைக்கு மாறான புள்ளி விவரங்களை இந்த அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலே, நோக்கங்களைச் சொல்லுகிறார்கள். கிராமங்களில் எல்லோருக்கும் மருத்துவ வசதி, ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அதன் கிளை நிலையங்கள், நடமாடும் சுகாதாரக் குழுக்கள், சிறு சுகாதார நிலையங்கள், மாவட்ட மருத்துவ மனைகள்—வட்டார மருத்துவ மனைகள்—இப்படிப்பட்ட மனைகள் மூலம் எல்லாம் செய்கிறோம் என்று சொன்னாலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களை அதிகமாக ஆக்கப் போகிறோமென்று சொன்னாலும், அரசு கட்டும் கட்டிடங்களுக்கான செலவை அதிகரிக்கிறோம் என்று சொன்னாலும், எந்த அளவிற்கு வளர்ச்சி இருக்கிறதென்று பார்க்க வேண்டும். கி. பி. 2000-க்குள் இந்த நாட்டிலே நோயற்ற வாழ்வு வந்து விடும் என்று சொல்லும் நேரத்தில், இன்றைய தினம் 405 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருப்பது, கி. பி. 2000 ஆண்டில் 700-க்கும் அதிகமாக, வளரு நீலகிரி மாவட்டத்தில் நெல்லக்கோட்டை, நெடுகுலாவிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் வருமென்ற விவரத்தை இந்தக் குறிப்பில் பார்க்கும்போது, அமைச்சரவர்கள் குறிப்பிடுகிற அந்த இலக்கை எப்போது எட்டப் போகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 740 ஆரம்ப சுகாதார நிலையங்கள். கி.பி. 2000 ஆண்டில் இருக்க வேண்டுமென்ற இலக்கை எப்போது எட்டப் போகிறோமென்று கணக்குப் போட்டுப் பார்க்கிறேன். இதே வேகத்தில் போனால் இன்னும் 50 ஆண்டுகள் வேண்டும். அந்த அளவிற்கு திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறோமென்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. 5,000 மக்களுக்கு சிறு சுகாதார நிலையம் என்று சொல்லுகிறார்கள். 3,000



ரூபாய் முதலில் மானியம் கொடுக்கிறோம், முதல் 3 மாதங்களுக்கு அதற்குப் பிறகு 5,000 ரூபாய். மறுபடியும் 3,000 ரூபாய் எப்போது கொடுக்கிறோமென்றால், தணிக்கை செய்த பின்னாலே கொடுத்திருக்கிறோமென்று சொல்லுகிறார்கள். தணிக்கை எப்போது செய்வது, நிதி எப்போது வருவது, மருந்துகள் எப்போது வழங்குவது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்படித்தான் புள்ளி விவரங்கள் கொடுக்கிறார்கள்.

264 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க இங்கே நிதி வழங்கப்பட்டிருக்கிறதென்றாலும், 192 சிறு சுகாதார நிலையங்கள்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று அறிக்கை கொடுத்திருந்தாலும், நோய்கள் பற்றிக் குறிப்பிடும்போது, கொள்ளை நோய்கள் இந்தச் சமுதாயத்தைப் பாதிக்கிறதென்று தெரிவிக்கும் நேரத்தில் ஒரு புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். வாந்தி பேதி பற்றி குறிப்புகள் தரும்போது, கொள்ளை நோய் ஒழிப்பு, தடுப்புத் திட்டங்களை வெற்றியுடன் நிறைவேற்றுவதன் மூலம், இக்கொள்ளை நோயினால் ஏற்படும் இறப்புகள் மற்றும் நலிவுகள் பெருமளவுக்குக் குறைந்துள்ளன என்ற வாசகம் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த அளவிற்கு அது குறைந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். 1979 ஆம் ஆண்டிலே நோயாளிகள் 1,336 பேர்கள், இறந்தவர்கள் எண்ணிக்கை 38. 1980 ஆம் ஆண்டிலே குறைக்கிறோமென்று சொல்லிக்கொண்டு, நோயாளிகள் எண்ணிக்கை 3,461. இறந்தவர்கள் 74. ஆக குறைக்கத்தான் திட்டம் தீட்டுகிறோம். ஆனால் நோய்கள் அதிகமாகின்றன. இறந்தவர்கள் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே போகிறது. இதுதான் அந்த இலாக்கா சாதனை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

மலேரியா பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1981ல் 71,517 பேர்களுக்கு அந்த நோய் வந்தது என்றும், அதில் 63 சதவிகிதம் சென்னையிலே உள்ளவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லும் நேரத்திலே, எந்த அளவிற்கு சென்னை சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதை அமைச்சரவர்களின் புள்ளி விவரங்களே காண்பிப்பதால் அதைப்பற்றி மேலும் விளக்க விரும்பவில்லை. அதைப் போக்க சென்னை நகரத்தை 3 பகுதிகளாகப் பிரிக்கிறோமென்று சொல்கிறார்கள். எப்போது பிரிக்கப் போகிறார்கள்? எப்போது கொசுக்களை ஒழிக்கப் போகிறார்கள்? எப்போது சென்னையிலே மலேரியாவை ஒழிக்கப் போகிறார்கள் என்று ஒன்றும் அறிவிக்கப்படவில்லை. நடைமுறையிலே குழுவை நியமித்து, அவர்கள் 3 மாதங்களுக்கு ஒரு முறை கூடி முடிவெடுப்பதற்குள் இப்போது 63 சதவிகிதப் பாதிப்பு மாறி, எல்லோருக்கும்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 மார்ச் 22

மலேரியா காய்ச்சல் வந்தே தீருமென்ற நிலை வரக்கூடாதென்பதற்காக வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மூளைக் காய்ச்சல் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1,305 பேர்கள் 1981லே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்ற கணக்கு இருக்கிறதா என்றால் இல்லை. இவ்வளவு பெரிய இலாக்காவை வைத்துக்கொண்டு, இந்த நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் கணக்கு கொடுக்க முடியவில்லை என்றால், அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து, முத்தடுப்பு ஊசித் திட்டம். தொண்டை அடைப்பான், கக்குவான், இசிவு நோய் ஆகியவற்றைத் தடுக்க முத்தடுப்பு ஊசி போடுகிறோம், நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்—எந்த அரசாங்கமாக இருந்தாலும், இதைச் சொல்லிக்கொண்டு வருகிறது. பார்க்கிறோம். 142 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இந்த நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டு, இப்போது 200 ஆக அது உயர்ந்திருந்தாலும், இன்னும் 205 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்த ஊசிகள் போட நடைமுறை நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று பார்க்கும்போது, பாதிக்கும் மேற்பட்ட மக்கள் இந்த நோயிலிருந்து பாதுகாக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. 1980-81-ல் 4,23,000 பேர்களுக்கு இந்தத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 1981-82 டிசம்பர் வரையில் 2,56,000 பேர்களுக்கு ஊசி போட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு கணக்கை வைத்துப் பார்க்கும்போது, டிசம்பருக்குள் 3 லட்சம் பேர்களுக்கு ஊசி போட்டிருக்க வேண்டும். பணம் அதிகமாகக் கொடுத்தும், அதிக நிதியை ஒதுக்கியும், இப்படிப் பணி செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தும், சாதனைகளைப் பார்க்கும்போது, கடந்த ஆண்டைவிடக் குறைவாக இருக்கிறதென்பதைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

மகப்பேறு காலத்தில் ஊட்டச் சத்து—எந்தப் பக்கத்தில் பார்த்தாலும் ஊட்டச் சத்து குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து. தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து. திரும்பத் திரும்ப 5, 6 இடங்களில் இதை நிரப்பியிருக்கிறார்கள். இந்த ஆட்சி வருகின்ற காலத்தில் தேர்தல் மெனிபெஸ்டோவில் சொன்னார்கள். மகப்பேறு காலத்தில் தாய்மார்களுக்கு 3 மாதங்களுக்கு 50 ரூபாய் வீதம் கொடுப்போமென்று சொன்னார்கள். இப்போது எவ்வளவு என்றால், கருத்தரிக்கத்தக்க பருவத்திலுள்ள 15—45 வயது மகளிர் மொத்த மக்கள் தொகையில் சுமார் 20 சதவிகிதம்—இவர்களுக்குத்தான் ஊட்டச் சத்து கொடுக்கிறோமென்று சொல்லுகிறார்கள்.



1982 மார்ச் 22]

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிகிற வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அப்படியானால் இந்த ஊட்டச் சத்துணவினால் ஏற்படக்கூடிய பயன் என்ன என்பதை அறிய வேண்டும். ஏழைத் தாய்மார்களுக்காகக் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? அந்தத் திட்டம் இதில் வருகிறதா? அப்படி என்றால் தாய்மார்களுக்கு இத் திட்டத்தை அமுல்படுத்த எவ்வளவு செலவாகும் என்பதைத் தெரிவித்திருக்க வேண்டாமா!

அடுத்து, சிறு குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் இந்திய ரீதியில் பார்த்தால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், சாதனை செய்திருக்கிறோம் என்று சொல்லியிருந்தாலும்கூட, உள்ளபடியே அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. காரணம் 1976 ஆம் ஆண்டு ஆயிரத்திற்கு 120 பேர் இறந்திருக்கிறார்கள். நகரத்தில் 81 என்று சொல்லியிருக்கிறார்கள். இணைத்துப் பார்த்து 108 என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல 1977 ஆம் ஆண்டு, 1978 ஆம் ஆண்டு பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். ஊரகத்தையும், நகர்ப்புறத்தையும் இணைத்துப் பார்த்து 108 என்று சொல்லியிருப்பது எப்படிப் பொருந்தும்? இது குறித்து தெளிவுபடுத்த வேண்டும்.

அடுத்து, ஊட்டச் சத்துணவு அளிக்க உலக வங்கியின் உதவியையும் பெறப் போவதாகவும், தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் கூடுதல் ஊட்டச் சத்துள்ள உணவு அளிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதை பிரைமரி ஹெல்த் சென்டர்களில் தயாரிக்கிறார்களா, அல்லது தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனைகளில் தயாரிக்கப் போகிறார்களா அல்லது டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனைகளில் தயாரிக்கப் போகிறார்களா என்பது பற்றிய விவரம் இல்லை. கொடுக்கப் போகிறோம், உணவு தயாரிக்கப் போகிறோம் என்று சொன்னால் இன்னின்ன வகையிலே தயாரிக்க இருக்கிறோம், இன்னின்ன வகையிலே வழங்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்க வேண்டாமா? ஐந்து கட்டத்தில் செயல்படுத்தப் போகிறோம் என்றும் முதல் கட்டமாக மதுரை மாவட்டத்தில் கொட்டாம்பட்டியில் மேற்கொள்ளப் பட்டது என்றும் புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது கட்டத்தில் மதுரை மாவட்டத்தில் 32 இடங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்தப் போவதாகவும், மூன்றாவது கட்டத்தில் அதாவது இந்த ஆண்டு 32 வட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதாகவும்

சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் 1982-83 ஆம் ஆண்டு வரைதான் இது பற்றித் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான்காவது கட்டம் பற்றி, அதாவது 1983-84 பற்றி, தெரியாத நிலையில் இருக்கிறோம். அது போல் ஐந்தாவது கட்டம் பற்றியும், அதாவது 1984-85 பற்றியும், தெரியாத நிலையில் இருக்கிறோம். நான்காவது, ஐந்தாவது கட்டத்தில் இன்ன மாவட்டத்தில், இன்ன வட்டங்களில் செயல்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்க வேண்டாமா? அதுபற்றிய தெளிவு இல்லை. நான் அமைச்சரை இதற்காகக் குறை சொல்ல மாட்டேன். அந்த அளவுக்கு இந்த இலாகாவில் தெளிவுள்ள அதிகாரிகள் இருக்க வேண்டும். இலாகாவில் கவலையில்லாத, அக்கறையில்லாத அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே தான் இப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் இருக்கின்றன.

அடுத்து, கலப்படம் பற்றிப் பேசுகிறோம். அது ஒழிக்கப்பட வேண்டுமென்று சொல்கிறோம். சென்ற முறை மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவன் அவர்கள் இது சம்பந்தமாக இதே அவையில் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த நான் 'கட்டாயம் இதுசம்பந்தமாக ஒரு கடுமையான சட்டம் வரும்' என்று எதிர்பார்த்தேன். அப்படி அவர்கள் பேசியதற்குப் பிறகு கூட, நடைமுறையில் குற்றங்கள், குறைகள் இதில் குறையவில்லை. சென்ற ஆண்டு 1,600-க்கு மேல் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. எடுக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 1,600க்கு மேல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 490 பேர்களுக்கு மட்டும் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. 169 பேர்களுக்குச் சிறு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. 1,600 பேர் கலப்படம் செய்திருக்கிறார்கள் என்று சொன்ன பிறகு, அவர்களுக்கு தண்டனை வழங்கப்படவில்லை என்று சொன்னால், இதுபற்றி எண்ணிப் பார்க்க வேண்டாமா? கலப்படம் ஒழிந்தால்தான், இந்த நாட்டு மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்வு கிடைக்கும். பல இடங்களில் கலப்பட உணவைச் சாப்பிடுவதால் குழந்தைகளுக்குக்கூட எத்தகைய நிலை ஏற்படுகிறது என்பதை நாம் பார்த்து வருத்தப்பட்டிருக்கிறோம். கலப்படத்தைக் குறைக்க கடுமையான சட்டங்கள் இதுவரை போடப்படவில்லை. இப்போதைய சட்டங்கள் அவர்களை ஊக்குவிப்பதுபோல் இருக்கின்றன. எனவே கலப்படத்தை ஒழிக்க இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, நல்வாழ்வு கல்வி பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நல்வாழ்வுக் கல்வி என்பதுபற்றி உண்மையிலேயே படித்துப் படித்துப் பார்த்தேன். இது ஏன், யாருக்கு, இதன் தத்துவம் என்ன, என்பது பற்றியெல்லாம் விளக்கம் இல்லை. 'நல்வாழ்வுக் கொள்கைகளையும், திட்டங்களையும் நன்கு புரிந்து கொண்டு அரசின் குறிக்கோளை அடைய இப்படி நல்வாழ்வுக் கல்வி கொடுத்து



லட்சியத்தை எய்துகிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை போல் இது இருக்கிறதோ என்று எண்ணக்கூடிய அளவுக்கு இது இருக்கிறது. இதுபற்றிய கொள்கை என்ன? திட்டம் என்ன என்பது பற்றிச் சொல்லியிருக்க வேண்டாமா? சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட இதுபற்றித் தெரிய முடியவில்லையென்று சொன்னால் அதுபற்றி விவரம் கொடுக்கப்படவில்லையென்று சொன்னால், பிறகு யாருக்குத்தான் அதைக் கொடுக்கப் போகிறார்கள்? சுகாதார மேம்பாட்டுப் பணிகளுக்காக, மோட்டார் வேன்களுக்காக ஒரு தனி இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இலாகாவிடம் 100 வண்டிகள் இருக்கின்றன. இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் வேன்கள் இந்த இலாகாவிடம் இருப்பது குறித்து பெருமைப்படுகிறேன். ஆனால் குறிப்பிட்ட காரியத்துக்கு இந்த வேன்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எத்தனை பிரைமரி ஹெல்த் சென்டர்களில் இருக்கக்கூடிய ஜீப்புகளை எல்லாம் அங்கு இருக்கக்கூடிய டாக்டர்கள் எதற்கு எதற்கெல்லாமோ பயன்படுத்துகிறார்கள் என்கிற விஷயம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. இந்த வேன்களுடைய எண்ணிக்கை, செலவாகின்ற பெட்ரோல், பராமரிப்புச் செலவு இவற்றையெல்லாம் பார்த்தால், இதற்கு ஆகின்ற பணத்திலே பாதியைக்கொண்டு கிராமப்புற ஏழையெளிய மக்களுக்கு மருந்து வாங்கிக் கொடுத்து, அவர்களுடைய நோயைக் குறைப்படுத்தலாம் என்கிற யோசனையை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி வேன்களின் எண்ணிக்கையை எண்ணி எண்ணிப் பெருமைப்படுவதைக் காட்டிலும் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழையெளிய மக்களின் நோயாளிகளின் நோயைக் குணப்படுத்துகிற வகையில் பிரைமரி ஹெல்த் சென்டர்களில் இருக்கக்கூடிய வேன்கள் பயன்பட வேண்டும். சினிமா கொட்டகைகளுக்கும், நாடக அரங்குகளுக்கும் செல்ல அரசாங்க வேனைப் பயன்படுத்துவது கூடாது. அப்படிப் பயன்படுத்துகின்றவர்கள் மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுற்றுப்புறத் தூய்மை பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவுதான் "தூய்மை" பற்றி அரசு சொல்லியிருந்தாலும்கூட, சுற்றுப்புறத் தூய்மை எந்த அளவுக்குக் கெட்டிருக்கிறது என்பது, இன்றைக்கு ராணிப்பேட்டை பகுதிக்குச் சென்று பார்த்தால், தெரியும். ராணிப்பேட்டையில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வருகிற கழிவு நீர் தெருவெல்லாம் ஓடுகிறது. இதனால் அங்குள்ள விவசாயிகள் நெல் பயிரிட முடியவில்லை. பொதுமக்கள் நடக்க முடியவில்லை. நல்ல தண்ணீரையும் அது கெடுத்து விடுகிறது. இப்படி இந்த 20 ஆம் நூற்றாண்டில் நடப்பதை அதிகாரிகள் இன்ஸ்பெக்ஷன் பண்ணி

கண்டு பிடித்திருக்க வேண்டாமா? இதில் தலையிட்டு நல்லதொரு முடிவை எடுத்திருக்க வேண்டாமா? அதனால் இன்றைக்கு எவ்வளவு பெருக்குத் தொந்தரவு ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கேட்க யார் இருக்கிறார்கள், யாரும் கேட்க முடியாது என்கிற தைரியம் இருப்பதால்தான், இப்படிப்பட்ட சாதாரண சிறிய விஷயங்களில்கூட அரசு நடவடிக்கை எடுக்க முடிய வில்லை. அதே சமயத்தில் சென்னையிலும் நாம் பார்க்கிறோம். எத்தனை லாரிகள், எத்தனை அரசு வண்டிகள் புகையைக் கக்கிக்கொண்டே ஓடுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பூந்தமல்லி ஹைரோடு வழியாக அவருடைய காரில் போய்க்கொண்டிருக்கும்போது வெளியே பார்த்தால் தெரியும் எத்தனை லாரிகள், பஸ்கள், இதர வண்டிகள் எல்லாம் புகை கக்கிக்கொண்டே செல்கின் றன. இவைகளிலிருந்து வருகிற புகை சமுதாயத்திற்கு எவ்வளவு பெரிய பாதகத்தை ஏற்படுத்தும் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 10 ஆண்டுகள் பயன்படுத்திய பஸ்கள், லாரிகள் போன்றவற்றை 'கன்டம்' (Condemn) பண்ண வேண்டும். அல்லது குறைந்தபட்சம் மாற்றி யமைக்க வேண்டும். இந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் இத்தகைய குறைபாடுகளைப் போக்க முடியாது. செல்வாக்கு உடையவர்கள் டிராபிக் இன்ஸ்பெக்டரிடம் காரைக் கொண்டுபோய்க் காட்டாமலேயே—காரைக் கொண்டுபோய் காட்டியதாகச் சொல்லி—லைசன்ஸ் வாங்குகிற நிலைமை. இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் சமுதாயத்தைக் கேவலப் படுத்துவதாக உள்ளன.

சென்னை மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சிப் பிரிவை ஆரம்பிப்பதாகவும் பட்ட மேற்படிப்பை ஆரம்பிப்பதாகவும், தனியே பல்கலைக் கழகமாக ஆக்கு வதாகவும் ஆட்சியில் இருப்பவர்கள் ஒவ்வொரு தடவையும் சொல்லிக் கொண்டேயிருக்கலாம். ஒவ்வொரு ஆண்டும் கொள்கை விளக்கக் குறிப்பு அவையில் வைக்கப்படும்போதும் இதைப்பற்றிச் சொல்லுகிறார்கள். ஆனால் அவற்றைக் கொண்டுவர எங்கே தடங்கல் இருக்கிறது? யார் மறுக்கிறார்கள்? இதுவரை அரசு இது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை என்ன? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏன் டெல்லிக்குச் சென்று, அங்கு உட்கார்ந்து, இது பற்றிப் பேசி, ஏன் இவைகளைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கக்கூடாது? ஏனென்றால் அதைக் கொண்டு வருகிறோம், இதைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லிக் கொண்டேயிருப்பதை விட 'செய்து முடிப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும்' என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குழந்தைகளுக்கான மருத்துவமனைகளிலுள்ள படுக்கைகளைப் பொறுத்தவரை யில், 250 லிருந்து 500 ஆக படுக்கையின் எண்ணிக்கையை உயர்த்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் பிறந்து கொண்டிருக்





கிற வேகத்தைப் பார்த்தால், இப்படி எண்ணிக்கையை 250லிருந்து 500 ஆக உயர்த்தியிருப்பது போதுமா என்று கேட்டால், போதாது ஸ்டான்லி மருத்துவ மனையில் கூட இத்தகைய வசதியை அதிகமாக ஆக்க வேண்டும். காரணம் அது ஏழையெளிய மக்கள் அதிகமாக வசிக்கக் கூடிய பகுதியை யுடையது. அதுபோல் தண்டையார்பேட்டை, பெரம்பூர் போன்ற பகுதி களில் எல்லாம் குழந்தைகள் வசதிக்காக இத்தகைய மருத்துவ மனைகள் கட்டப்பட வேண்டும்.

அடுத்து, தற்போது 8 செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன என்றும், செவிலியர் பயிற்சிக்குள்ள 675 இடங்களை 690 இடங்களாக அரசு இப்போது அதிகரித்துள்ளது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, 15 இடங்களை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் 500 பேர்களையாவது அதிகமாக எடுத்து பயிற்சி கொடுத்தால், நன்றாக இருக்கும். இப்போது கூடுதலாக்கப் பட்டுள்ள இடங்கள் போதாது. இன்னும் இந்த இடங்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் நர்சிங் படிக்க முன்வருபவர்களுக்கு வாய்ப்பளித்தவர் களாவோம். நம் நாட்டில் இன்றைக்கு தமிழகத்தில் நர்சிங் கோர்சை முடித்தவர்களுக்கு வேலை கொடுக்க எத்தனையோ இடங்களில் தயாராக இருக்கிறார்கள். அதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு இந்தத் துறைக்கென்று 151 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது. ஆனால் அதே சமயத்தில் மருத்துவ ஆராய்ச்சிக்கென்றும் ஒரு குறிப்பிட்ட பணத்தை ஒதுக்குகிறோம். எத்தனையோ விதம் விதமான நோய்கள் இன்றைக்கு நாட்டு மக்களைப் பாதிக்கின்றன. இதற்கென்று அதிகப் படியாகப் பணம் ஒதுக்கினால்தான், அந்தப் பணத்தைக் கொண்டு ஆராய்ச்சி யில் ஈடுபட்டு, புதிய புதிய நோய்களைத் தடுப்பதற்கான, ஒழிப்பதற்கான வழி வகைகளை, மருத்துவ முறைகளைக் கண்டு பிடிக்க முடியும். ஆனால் இப்போது இதற்காக 8 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. இதற்கென்று அதிகமாக நிதி ஒதுக்குவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்து ஆவன செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

புறநகர் மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவையொட்டி சென்னையிலே பல இடங்களிலே புறநகர் மருத்துவ மனை களைத் திறந்தோம். ஆனால் 3 ஆண்டு காலமாக பெரம்பூரிலே திறக்கப் போகிறோம் என்று சொல்லி—1981-82லே ஒரு மருத்துவ மனையைக் கட்ட

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 மார்ச் 22

ஒதுக்கீடு அளிக்கப்படும் என்று சொன்னாலும்கூட, அதுபற்றிய திட்டவட்டமான அறிவிப்பு இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது. 1982-83ல் உபகரணங்கள் வாங்க 220.78 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வளவு பெரிய தமிழ் நாட்டில் 220 இலட்சம் ரூபாய், அதாவது ஏறக்குறைய 2 கோடி ரூபாய் என்பது எந்த அளவுக்குப் போதுமானது என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். நான் திருநெல்வேலிக்குப் போய் அங்கே இருக்கும் இன்டென்சிவ் கேர் யூனிட்டுக்குப் போனேன். அங்கே ஒரு 'மானிடர்.' கூட இல்லை. அவ்வளவு பெரிய பட்டப் படிப்பு, மற்றும் மருத்துவ மனை இருக்கக்கூடிய மெடிக்கல் காலேஜில் இருக்கக்கூடிய இன்டென்சிவ் கேர் யூனிட்டிலே, ஒரு நோயாளிக்கு 'ஹார்ட் அட்டாக்' வந்தால், ஒரு நெஞ்சு வலி வந்தால், அந்த நோயாளியினுடைய நோயைச் சரியாகப் புரிந்துகொள்ளக்கூடிய கருவிகள் இல்லை என்று சொன்னால், நாம் இவ்வளவு பணம் செலவழித்தும் என்ன பயன்? எவ்வளவோ இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து கருவிகளையெல்லாம் வாங்குகிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டாலும், அந்தக் கடைக்கோடியிலே திருநெல்வேலியிலே இருக்கும் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலே கூட இப்படிப்பட்ட கருவிகள் இல்லையே என்பதை எண்ணிப் பார்க்கும்போது, வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை. அதுமட்டுமல்ல, நாங்கள் திருச்செந்தூருக்குச் சென்றோம். அங்கே ஒரு தாலுகா மருத்துவ மனை இருக்கிறது. அங்கே ஆப்பரேஷன் செய்யும்போது, மயக்கம் கொடுக்கும் முறைகள் கிடையாது. முதுகிலே ஊசியைப் போட்டுவிட்டு, அவர்கள் ஆப்பரேஷன் செய்கிறார்கள். அதனுடைய விளைவு என்னவென்பதை என்னைவிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாகப் புரிந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இப்படிப்பட்ட குறைகள் எல்லாம்கூட இந்த நூற்றாண்டிலே இருக்கின்றன என்று சொன்னால், இவைகளைப் போக்க வேண்டாமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப்போலவே படுக்கைகளையெல்லாம் அதிகப்படுத்தியிருக்கிறோம். எவ்வளவு தான் முன்னேற்றம் செய்திருக்கிறோம் என்று சொன்னாலும், வட ஆற்காடு மாவட்டத்திலே ஆற்காடு தாலுகாவிலே கலவை என்ற ஒரு சிற்றூரை எடுத்துக்கொண்டால், அதன் சுற்றுவட்டாரத்திலே 15—20 மைல்களுக்கு மருத்துவ மனைகள் இல்லாத இடத்திலே அங்கே 10 படுக்கைகளாக இருப்பதை 30 படுக்கைகளாக ஆக்குங்கள் என்று மாவட்ட அதிகாரி அவர்கள் எழுதியும்கூட, பரிந்துரை செய்தும்கூட, அங்கே இருக்கும் மக்கள் வேண்டியும் கூட. இப்போது இருக்கும் நிலைமை என்னவென்றால், அங்கே இப்போது இருக்கும் அந்த 10 படுக்கைகள் கூட இயங்க முடியாத அளவுக்கு என்ன செய்ய



1982 மார்ச் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

முடியுமோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளிலேதான் அங்கே இருக்கும் டாக்டர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் உண்மையிலேயே அங்கே வளர்ச்சிக்கான பணிகள் நடைபெறுகின்றனவா என்று கேட்டால், இல்லை என்ற நிலைதான் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே 'டேனிடா' உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நலத் திட்டத்தை 14.40 கோடி ரூபாய் செலவிலே ஐந்தாண்டுத் திட்டம் என்ற வகையிலே அறிவித்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஏதோ ஒரு வெளிநாட்டு அல்லது 'டேனிடா' உதவி போட்டு இப்படிப்பட்ட ஒரு திட்டம் வருவதைப்பற்றி உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன், வரவேற்கிறேன் என்று சொன்னாலும்கூட, இந்தத் திட்டம் இரண்டு மாவட்டங்களுக்கு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பரவலாக என்று ஆக்கியிருந்தால் கூட, இந்தத் திட்டத்தினுடைய உதவி எல்லா மாவட்டங்களுக்கும் எல்லா மாவட்ட மக்களுக்கும் கிடைத்திருக்கும். ஒரு சமயம் நினைத்திருக்கலாம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் அதற்குப் பிறகு ஐந்தாண்டு கால அளவிலே வேறு எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்கலாம் என்று திட்டங்கள் போடும்போது நினைத்திருக்கலாம். அதுபற்றி கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் புள்ளி விவரங்கள் கொடுப்பதிலேதான் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பயனடைபவர்கள் 70 இலட்சம் பேர்கள், கிராமங்கள் 3,230 என்று சொல்லியிருக்கிறார்கள். அடுத்தபடியாக, முதலிலே சொன்னதை மறந்து விட்டார்களோ என்னவோ தெரியாது அல்லது தெரியாமல் செய்து விட்டார்களோ என்னவோ. அடுத்தபடியாக பக்கம் 21லே சொல்லியிருக்கிறார்கள், இரண்டு மாவட்டங்களிலே குடிநீர் வழங்க வகை செய்யும் திட்டம், 3,640 கிராமங்களில் வசிக்கும் 18 இலட்சத்து 27 ஆயிரம் பேர்களுக்குக் குடிநீர் வழங்க வகை செய்யப்படும் என்று சொல்லி ஒரு பக்கத்திலே ஏறக்குறைய 2 இலட்சம் பேர்கள் என்றும் இன்னொரு பக்கத்திலே 18 இலட்சம் பேர்கள் என்றும் இன்னொரு பக்கத்திலே கிராமங்கள் 3,230 என்றும், குடிநீர் என்று வரும்போது 3,640 என்றும் இப்படிப் புள்ளி விவரங்கள் கொடுத்துக் கொண்டிருப்பது எந்தவிதமான உதவி புரியும் என்று தெரியவில்லை. இது உண்மையானதா என்றும் புரியவில்லை. அதுமட்டுமல்ல, ரூபாய் 35.04 கோடி நிதி உதவியுடன் மத்திய அரசின் மூலம் டேனிடாவிடமிருந்து போடப்பட்டுள்ளது இந்தக் குடிநீர் வழங்கு திட்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குடிநீர் வழங்கக்கூடிய காரியத்தைக்கூட இப்போதுதான் நான் கேள்விப்படுகிறேன், நம்முடைய ஹெல்த் டிபார்ட்மென்ட் செய்கிறது என்று. அந்த நல்ல காரியத்தை இப்படி இரண்டு மாவட்டங்களில் செய்யும்போது, மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் இந்த வசதியை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கண் சிகிச்சை முகாம் என்பதை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிகச் சிறப்பாக தமிழகத்திலே அமுல்படுத்தி, கிராமப் பகுதிகளுக்கு பெரிய பெரிய டாக்டர்களையெல்லாம் போகச்சொல்லி, அங்கே ஏழைகளுக்கு ஆப்பரேஷன் செய்து, கண்ணாடிகள் வழங்கினார்கள். சிலர் அப்போது கேலி பேசினார்கள். அதில் ஊழல் என்றெல்லாம் சொன்னார்கள். அதைப்போல இப்போது செய்வதிலும் ஊழல் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஏனென்றால் நல்ல காரியங்கள் செய்யும்போது, அதிலே ஊழல் இருக்கிறது என்று முன்னர் சொல்லியிருந்தாலுங்கூட, அதையே திருப்பி நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஒரு இலாக்காவிலிருந்து ஒரு திட்டம் போடுகிறார்கள். இந்த ஆண்டுக்கு 20 ஆயிரம் பேர், அதாவது 1978-79-ல் 20 ஆயிரம் பேருக்குச் செய்ய வேண்டும் என்று இலக்கு வைக்கிறார்கள். ஆனால் எத்தனை பேருக்குச் செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், 12,124 பேர்களுக்குத்தான். 1979-80-லே 25 ஆயிரம் பேர்களுக்குச் செய்ய வேண்டும் என்பது இலக்கு. ஆனால் செய்திருப்பது 10,887 பேர்களுக்கு. அதைப்போலவே 1980-81லே 20 ஆயிரம் பேர்களுக்குச் செய்ய வேண்டும் என்பது இலக்கு ஆனால் செய்தது 12,220 பேர்களுக்குத்தான். நான் கேட்கிறேன், செய்வதற்குத் தானே திட்டம் போடுவது. இலக்கு என்று போட்டுவிட்டு அதைச் செய்யவில்லை என்று சொன்னால், அதற்கு யார் பொறுப்பு ? ஒரு மெமோ கொடுத்திருக்கிறார்களா ? ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? எதற்காக இந்த அரசாங்கம் சட்டமன்றப் பேரவையிலேயும், சட்டமன்ற மேலவையிலேயும் புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறது ? ஏன் இப்படிச் சாதனைகளைக் குறைக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை. அப்படிக் கேட்பதற்கு இந்த அரசுக்கு நேரம் இல்லை. வேறு எத்தனையோ வேலைகள் இந்த அரசாங்கத்திலே இருப்பவர்களுக்கு இருக்கின்றன. இப்படி கேட்காத காரணத்தினால்தான், இந்த இலாக்கா இன்றையதினம் குட்டிச் சுவராகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழு நோயாளிகள்பற்றிக் குறிப்பிடும்போது இங்கே சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டினுடைய மக்கள் தொகை 4 கோடியே 11 இலட்சம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆரம்பத்திலே 4 கோடியே 86 இலட்சம். ஆனால் தொழுநோய் வரும்போது அந்த ஜனத்தொகையின் அளவு கூட குறைந்து விடுகிறது. அப்படிக் கொடுக்கும்போது, அந்தப் புள்ளிவிவரத்திலே 1970-லேயிருந்து 1981 வரையிலே இருப்பது 4.8 கோடி ஜனத்தொகை. இப்போது தொழுநோய் பற்றிப் பரிசோதனை செய்து பார்த்தவர்களுடைய எண்ணிக்கையைப் பார்த்தால் 7 கோடியே 72 இலட்சத்து 66 ஆயிரம் என்று





இருக்கிறது. இந்தக் கணக்கு எப்படி வந்தது என்று எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் சட்டமன்றப் பேரவையிலே சொன்னதை நான் பார்த்தேன். ஏதோ செய்தவர்களுக்கெல்லாம் திரும்பத்திரும்ப நாங்கள் சோதனை செய்தோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியே இருந்தாலும்கூட, 4.8 கோடி மக்கள் வாழும் ஒரு நாட்டிலே ஒரு 10 ஆண்டு அல்லது 11 ஆண்டு கால அளவிலே எத்தனை முறை ஒரு நோயைப் பார்த்தார்கள், ஒவ்வொரு குடும்பத்தையும் பார்த்தார்களா ? இரண்டு முறை எல்லோரையும் பார்த்துவிட்டார்களா ? இவ்வளவு புள்ளிவிவரம் எப்படி வந்தது ? இதைப்பற்றியெல்லாம் யார் கவலைப்படப் போகிறார்கள் ? ஏதோ ஒரு புள்ளிவிவரத்தைத் தருவோம் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே அதிகாரிகள் தருவார்களேயானால், அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காச நோய்த் தடுப்புத் திட்டத்தைப்பற்றி 7—9—1981 வரை 10.31 இலட்சம் காச நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு சிகிச்சைக்கு அனுப்பப்பட்டனர் என்று சொல்லியிருக்கிறார்கள். 3,651 படுக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் ஏழைகள், அவர்களுடைய வறுமையின் காரணமாக, ஏழ்மையின் காரணமாக, சத்துணவு இல்லாததன் காரணமாக 9 பேரிலே ஒருவருக்குக் காச நோய் பரவியிருப்பதாக வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட நோய் பரவியிருக்கும் இந்த நாட்டிலே 3,651 படுக்கைகள் போதுமானதுதானா? இன்னும் ஒரு 500 படுக்கைகளைச் சேர்ப்பதன் மூலம் இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியாதா என்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1982-83-லே 35 இலட்சம் பள்ளி செல்வோர் குழந்தைகளுக்கு ஆய்வு செய்ய திட்டம் என்று முதலிலே அச்சடித்திருக்கிறார்கள். பிறகு என்ன காரணத்தினாலோ அதைப் பேனாவினாலே அடித்திருக்கிறார்கள். நான் நினைக்கிறேன், ஒரு வேளை அந்த திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று முதலில் நினைத்திருக்கலாம். அதற்குப் பிறகு செய்ய முடியாது என்று நினைத்து விட்டிருக்கிறார்களோ என்னவோ என்று தோன்றுகிறது. தமிழ் நாட்டிலே காச நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் 31—12—1981 முடிய 181.36 இலட்சம் பேர்களுக்கு பி. சி. ஜி. ஊசி போடப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தேதி வரையிலே 181.37 இலட்சம். ஆனால் 1981 ஆம் ஆண்டு குறியீடு 13.5 இலட்சம் என்று சொல்லி மாறு விதமான புள்ளிவிவரங்களைக் கொடுத்து, ஒரு பக்கத்திலே 181 லட்சம் என்றும், இன்னொரு பக்கத்திலே 13 லட்சம் என்று கொடுத்திருந்

தானும்கூட இந்த 181 லட்சம் என்பது இதுவரையிலே மருத்துவத் துறையிலே ஒரு 10 முதல் 15 ஆண்டு காலமாகச் செய்திருப்பது தான் என்று நான் நினைக்கிறேன். அந்தப் புள்ளி விவரங்களையும் இதோடுகூட போட்டு குழப்பியிருக்க வேண்டுமா என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காச நோய்த் தடுப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு அளிக்கும் உதவியைப் பொறுத்தவரையில், 1979-80லே ரூபாய் 8.3 இலட்சம் நிதி வழங்கியதாகவும், 1980-81-லே ரூபாய் 7.65 இலட்சம் நிதி மத்திய அரசு கொடுத்ததாகவும், 1981-82-லே ரூபாய் 4.75 இலட்சமாக அது குறைந்திருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஏன் குறைந்தது? அதைக் கேட்டுப் பெறுவதற்கு டி எம் எஸ் இல்லை. மற்ற அதிகாரிகள் இல்லை. நினைவுபடுத்தக்கூட போதுமான ஆட்கள் இல்லை. ஆகவேதான் இந்த நிதியின் அளவு குறைந்திருக்கிறதே தவிர, இல்லாவிட்டால் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், நிச்சயமாக மத்திய அரசு தமிழகத்தினுடைய நிலைமையை எண்ணிப் பார்த்து செய்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த அரசு கேட்டிருந்தால், கண்டிப்பாகக் கொடுத்திருப்பார்கள். கேட்காத காரணத்தினால் தான் இந்த அளவிற்கு பாதியாகக் குறைத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஹோமியோபதி கல்லூரியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது என்ற காரணத்தினாலேயோ என்னவோ, அதை மூடுவதற்கு இந்த அரசு முடிவெடுத்திருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. அந்த அளவுக்கு சீர்கேடடைந்த நிலையிலே அந்தக் கல்லூரி இருக்கிறது. மாணவர்கள் 31 பேர்களுக்கு அங்கே இடம் கொடுக்கிறோம் என்று சொன்னாலும், அவர்கள் 4 ஆண்டுக் காலம் அங்கே பயிற்சி பெறுகிறார்கள் என்று சொன்னாலும், அந்த மாணவர்கள் எல்லாம் இன்னை தினம் ஹாஸ்டல் இல்லாமல், லேபரட்டரி வசதி இல்லாமல் அவர்களுக்குப் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல் இருந்து கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. அவர்கள் எல்லாம் இன்றைய தினம் தங்களைப் பட்டதாரிகளாக ஆக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்குச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே பேசும்போது, இதை எப்படியாவது டி. எம் ஈ பக்கத்திலே சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். காரணம் அந்த மாணவர்கள் எல்லாம் பயிற்சிக்கு குரோம்பேட்டைக்குப் போகிறார்கள் என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், இதை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் சொல்லியிருக்கக்கூடும். ஆனால், தயவுசெய்து இதை மாற்ற வேண்டாம். டி எம் ஈ சைடுக்கு மாற்ற வேண்டாம். ஏனென்



றால், இங்கிருந்தால் அது சென்னையிலே இருக்கும். டி எம் ஈ. சைடுக்கு மாற்றினால் அவருக்கு இருக்கிற பல்வேறு விருப்பு வெறுப்பு காரணமாக அதை நாகர்கோவில் பக்கம் மாற்றினாலும் மாற்றுவார். ஏனென்றால் அவருக்கு யாரையாவது பிடிக்கவில்லை என்று சொன்னால், அவரை நாகர்கோவிலுக்குப் பக்கம் மாற்றுவது வழக்கம். ஆகவே, இப்போது ஹோமியோபதி கல்லூரியை அந்த டி. எம் ஈ. சைடிலே சேர்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

(பிற்பகல் 12—50)

அடுத்து, குடும்ப நலத்திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது மாநிலத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியிருக்கும் இலக்கு 1,82,000 பேர்களாகும். ஆனால் கடந்த ஜனவரி மாதம் வரை நாம் அறுவைச் சிகிச்சை செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை 1,23,893. இதைச் சரியான முறையில் பர்சன்டேஜ் வகுத்துச் சொல்வதற்குக்கூட அந்தத் துறையில் ஆள் இல்லாமல் இருப்பது மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையாகும். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்றால், இது குறித்த புள்ளிவிவரத்தைக் கொடுக்கும்போது, "அளிக்கப்பட்ட இலக்கில் 83 சதவிதம் நாம் வெற்றி கண்டிருக்கிறோம்" என்று அரசின் புள்ளி விவரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் குறிப்பிடுகிறேன் என்றால், இதுகுறித்த புள்ளிவிவரத்தைக் கொடுக் கணக்கைப் போட்டுப் பார்த்தால், இது 73 சதவிதம்தான் வருகிறது. இப்படி மத்திய அரசு இந்த இலக்கை எட்ட வேண்டுமென்று நமது அரசுக்குச் சொல்லி அந்த இலக்கை நாங்கள் எட்டியிருக்கிறோம் என்று இந்த அரசும் சொல்லி, அதைச் சதவிதமாகச் சொல்லும்போது, எதற்காக 73 சதவிதம் என்று இருப்பதை 83 சதவிதம் என்று மாற்றிச் சொல்லப்படுகிறது என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

சித்த மருத்துவம்பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். எங்கள் கட்சிப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் சித்த வைத்தியத்தில் ஒரு டாக்டரேட் வாங்கியதுபோல், அவ்வளவு தெளிவாகவும் விளக்கமாகவும் பேசியிருக்கிறார். அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆனால் சித்த வைத்தியத்திற்காக பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லி, அப்படி ஒதுக்கிய பணத்தைக்கூட செலவழிக்காமல் இருக்கிற நிலைமையைப் பார்க்கும்போது, இனிமேலாவது ஒதுக்கும் பணத்தைச் சரியாகச் செலவழிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிச் சாதனைகளைப்பற்றிய குறைபாடுகளை எடுத்துச் சொல்லும்போது, ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் தயவு செய்து தவறாக நினைக்கக்கூடாது.

இந்தத் துறை எந்த அளவுக்குத் தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் இங்கே நான் சுட்டிக்காட்ட வேண்டும் என்றால், இன்றைய தினம் எனக்குக் கொடுத்திருக்கிற நேரம் போதாது. நாள் முழுவதும் கொடுத்தால்கூட போதாது என்ற காரணத்தால் சிலவற்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாணவர்கள் கல்லூரிகளில் சேர்க்கப்படுவதைப்பற்றி மற்றவர்கள் குறிப்பிட்டார்கள். நாம் எம். பி பி எஸ் அட்மிஷன்பற்றி இங்கே பேச முன்வரவில்லை. அதுபற்றிய வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அதிலே பேச வேண்டிய இடத்தில், பேச வேண்டிய நேரத்தில் பேசிக்கொள்ளலாம் என்பதால், அந்த விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் தமிழ்த் தியாகிகளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு இரண்டு இடம் ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்கிறேன். எந்தத் தமிழ் அறிஞருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு இந்த இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள் ? தமிழறிஞர்களுடைய குடும்பத்திற்கு இரண்டு இடம் என்று சொல்லிவிட்டு, அப்படி எந்தத் தமிழ் அறிஞர் விட்டுக் குழந்தைகளுக்கு இந்த இரண்டு இடம் கொடுக்கப்பட்டது என்பது தெரியாத நிலையில் தமிழ் நாடு இருப்பது சரியல்ல. நல்ல எண்ணத்தோடு சொல்லப்பட்ட அந்தத் திட்டம் உண்மையில் பயனில்லாமல் போய்விடக் கூடாதே என்பதற்காகத்தான் நான் கேட்கிறேன். அப்படிப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களின் பெயர்களை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே ஆந்திர மாநிலத்திலிருந்து வருகிறவர்களுக்கு இரண்டு இடம் ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது இரண்டு இடம்தானா அல்லது அது மூன்று இடமாக மாறியிருக்கிறதா ? அப்படி மாறியிருக்கிறது என்றால், அதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலில் விளக்கமாகக் குறிப்பிடுவார்கள் என்று கருதுகிறேன்.

எம்.எஸ்., எம்.டி. போன்ற மேல் பட்டப்படிப்புக்கான அட்மிஷன் குறித்து அரசு ஆணையிடுகிறது. அதில் கவர்மெண்ட் சர்வீசில் இருப்பவர்களுக்கு 40 சதவீதம் ஒதுக்கப்படும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், "ஒன்று உத்திரவு போடாமல் உங்கள் இஷ்டம்போல் கொடுங்கள், அல்லது உத்திரவு போட்டால் அதைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சாதாரண உணர்வை யாவரு பெறுங்கள்." 40 சதவீதம் கவர்மெண்ட் சர்வீசில் இருப்பவர்களுக்கு இடம் ஒதுக்கப்படும் என்று சொன்னது உண்மையிலேயே பின்பற்றப்





பட்டதா ? இதைத்தான் நான் கேட்கிறேன், எம்.டி. (செஸ்ட் டிசீஸ்)— டி.பி.க்கு 3 இடங்கள் என்று அறிவித்துவிட்டு, அந்த 3 இடங்களுமே சர்வீஸ் கேண்டிடேட்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 100-க்கு 100 சர்வீஸ் கேண்டிடேட்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது—இது ஒரு பக்கம்.

இன்னொரு பக்கத்திலே எம். எஸ். (ஆர்த்தோ)க்கு 6 இடம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் சர்வீஸ் கேண்டிடேட்டுக்கு கொடுத்ததோ ஒரே ஒரு இடம். 40 சதவிகிதம் என்று உத்தரவிட்ட பிறகு இரண்டு பேர்களுக்கு அல்லவா இடம் கொடுத்திருக்க வேண்டும். ஒரு மாணவருக்கு மட்டுந்தான் உண்மையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது $10\frac{1}{2}$ சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி அரசு போடுகிற ஆணையைக்கூட அரசே மதிக்கவில்லை என்றால், அதற்குப்பிறகு இந்த இலாக்காவையும் இந்த அரசையும் யார்தான் மதிக்கப்போகிறார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள் ?

ஒரு குற்றச்சாட்டை நான் ஆணித்தரமாக அதே நேரத்தில் பொறுப் பேற்றுக்கொண்டு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். டாக்டர் ஹம்சவேணி என்பவர் மேல்பட்டப் படிப்பு படிக்க வேண்டும் என்று விரும்புகிறார். அவர் ஒரு டி.ஜி.ஓ. பட்டம் பெற்றவர். திருநெல்வேலியில் இருப்பவர். அவர் எம்.டி. பட்டப் படிப்பிற்காக விண்ணப்பம் போடுகிறார். இடம் கிடைக்குமோ கிடைக்காதோ என்று நினைக்கிறார். இப்படி இப்படியெல்லாம் போனால் இடம் கிடைக்கும் என்று அறிந்துகொண்டு அவர் சென்னைக்கு வருகிறார். வேண்டியவர்களைப் பார்க்கிறார். கிட்டத்தட்ட அதற்காக ரூ. 40,000 வரை செலவழிக்கிறார். ஆனால் அதற்குப் பிறகும், அவருக்குப் பணம் தேவைப்படுகிறது. வேண்டுமானால், யார், எப்படி, எங்கே என்று கேட்டால், நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். எந்த முறையில் விசாரணை நடத்துவதாக இருந்தாலும், நான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, நடக்க வேண்டியது எல்லாம் நடந்துவிட்டது, போக வேண்டியதெல்லாம் போய்விட்டது என்று சொல்லிக் கொண்டிருப்பது எப்படிச் சரியாகும் ? அவருக்குப் பழக்கம் இருக்கிற காரணத்தால் அதைத் தெரிந்து கொண்டிருக்கலாமே தவிர, குற்றச்சாட்டைச் சொல்லுகிறபோது விஷயத்தை முழுமையாகச் சொல்ல வேண்டும் என்று, துணைத் தலைவர் அவர்களே, தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அந்த முறைகளைப்பற்றித் தெரியாதவன் அல்ல நான். அவரைவிட எனக்குக் கொஞ்சம் அதிகமாகவே தெரியும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் என்ன சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் ? பெயரைச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறாரா ? பணம் யாருக்குப் போயிற்று என்று சொல்ல வேண்டுமென்று விரும்புகிறாரா ? என்ன வேண்டுமென்கிறார் ? ஆதாரத்தோடு சொல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : அப்படிச் சொல்வதென்றால், நான்கூட சொல்ல முடியும். 1972ஆம் ஆண்டிலிருந்து என்னிடத்தில் பெரிய பட்டியலே இருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தாராளமாகச் சொல்லலாமே.

திரு. எஸ். ஆர். இராதா : அவையில் எதையாவது சொல்லும்போது ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்று ஒரு முறை இருக்கிறது. எதையாவது சொல்வதென்றால், நான் கூட 1972 லிருந்து சொல்ல முடியும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : 1972லிருந்து என்ன, 1962லிருந்துகூட சொல்லலாம். நாங்கள் தயார். இந்த அவையில் நான் நாகரிகம் கருதி பெயரைச் சொல்லவில்லை. எப்படிப்பட்ட சூழ்நிலையில் இது நடந்தது என்பதை நான் ஆதாரத்தோடு சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசாரிப்பதாக இருந்தால், நானே அந்த விண்ணப்பதாரரை அவருடைய வீட்டிற்குக்கூட அனுப்பி வைக்கிறேன். விசாரிக்கட்டும். அவர் தனக்கு சீட் கிடைக்கவில்லை என்று சொல்லி ஹைகோர்ட்டுக்குப் போனார். அங்கே அரசாங்கம் தவறு செய்துவிட்டது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீலில் போனது. அங்கே சுப்ரீம் கோர்ட்டில் இந்த அம்மையாருக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. ஆனால் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்ட பிறகுங்கூட அந்த அம்மையாருக்கு இடம் கொடுக்கவில்லை. எதற்காகச் சொல்கிறேன் என்றால் சுப்ரீம் கோர்ட்டுக்கு இந்த வழக்குப் போகவே இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறாரா ? நான் ஆதாரங்களையே இங்கே தருவதற்குத் தயாராக இருக்கிறேன். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இவர்கள் ஆட்சியிலே ஒருவர் சீட்டு வாங்குவதற்கு சுப்ரீம் கோர்ட் வரை போக வேண்டியிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பு கொடுத்த பிறகுங்கூட, இந்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை மதிக்கவில்லை என்றால், இவர்கள் இனி யாரைத்தான் மதிக்கப் போகிறார்கள் அது மட்டுமல்ல, எப்போது பார்த்தாலும் 1972, 1972 என்று சொல்லிக்





கொண்டிருப்பதில் பயனில்லை. நான் ஒன்றும் அதற்காகப் பயந்துவிட மாட்டேன். ஏதோ பெரிய ஆயுதமாக இதைப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள். அப்படியே இருந்தாலும் நான் கேட்கிறேன், “ தாங்கள்தான் ஊழல் பேர்வழிகள் என்று சொன்னீர்கள். நீங்கள்தான் உத்தமர்களாயிற்றே. இதையே நீங்களும் செய்யலாமா ? நீங்கள் செய்கிறீர்களே என்று நாங்கள் சொன்னால், உங்கள் ஆட்சியில் இப்படி நடக்கவில்லையா என்று கேட்கிறீர்கள். ” வாதத்திற்காக நான் சொல்கிறேன், “ இதைச் செய்வதற்காகவா நீங்கள் வந்திருக்கிறீர்கள். இப்படிப்பட்ட ஊழல்கள் உங்கள் ஆட்சியில் மலிந்துள்ளன என்பது மட்டுமல்ல, வேறு பல முறைகேடுகளும் இருக்கின்றன. ”

டாக்டர் விட்டல் என்பவர் 1981 ஆம் ஆண்டு எம். எஸ்.க்கு செலக்ஷன் செய்யப்பட்டார். அவர் எம்.பி.பி.எஸ். பலமுறை தோல்வி கண்டவர் பெயில் ஆனவர். எம்.பி.பி.எஸ்சில் முதல் முறையிலேயே தேர்ச்சி பெற்றிருந்தால் தான் அவர்களுக்கு இடம் கொடுக்கப்படும் என்று சொல்லிவிட்டு, அப்படி இல்லாமல், பலமுறை தோல்வி கண்ட அவரை—அது முதலாவது ஆண்டாக இருக்கலாம் அல்லது இரண்டாவது ஆண்டாக இருக்கலாம் எப்படியோ பெயில் ஆனவர் அவர்—அவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம் ? எனவேதான் இப்படிப்பட்ட முறைகேடுகள் பல நடந்திருக்கின்றன என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பி.ஜி. கோர்சுக்கு 9ஆம் தேதி விளம்பரம் செய்கிறார்கள். 10ஆம் தேதியிலிருந்து எம்.எம்.சி.யில் விண்ணப்பங்கள் கிடைக்கும், 11ஆம் தேதி ஸ்டான்லியில் விண்ணப்ப பாரங்கள் கிடைக்கும். இதற்குக் கடைசி நாள் 11-3-1982 என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இடையில் இரண்டு நாட்கள் விடுமுறை. இதையெல்லாம் எங்கள் பேராசிரியர் அவர்கள் பேரவையில் எடுத்துச் சொன்ன பிறகு இப்போது கடைசித் தேதியை 22ஆம் தேதிவரை நீட்டித்து அறிவிப்பு வெளி வந்திருக்கிறது என்று அறிகிறேன். அப்போதும் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். 22 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் கொடுக்கலாம் என்றால், 1ஆம் தேதிக்குள் எப்படி இன்டர்வியுவை முடிக்கப் போகிறார்கள் ? 1 ஆம் தேதியிலிருந்து அந்த கோர்ஸ் துவங்கப்படும் என்று எப்படி அறிவிக்கிறார்கள் ? அந்த அளவுக்கு என் அவசரம் வந்தது ? 1ஆம் தேதியே கோர்ஸ் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றால், முன்கூட்டியே விளம்பரப்படுத்தியிருக்கக்கூடாதா ? போதுமான அவகாசம் கொடுத்திருக்கக் கூடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன். திருநெல்வேலி, கன்யாகுமரி போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் பேப்பர்களைப் பார்த்து விளம்பரத்தைப் பற்றித் தெரிந்துகொண்டு, அந்த அளவுக்குக் குறுகிய காலத்தில் எப்படி விண்ணப்பங்களைப் போட முடியும் என்று கருதுகிறார்கள் ? இல்லை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 மார்ச் 22

யென்றால் சொல்லிவிடட்டும். "நாங்கள் ஏற்கெனவே யார் யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டோம். அவர்கள் யார் யார் என்று எங்களுக்குத் தெரியும். அவர்கள் மட்டும் விண்ணப்பம் போட்டால் போதும். அவர்களுக்குத்தான் இந்த உத்தரவு போட்டிருக்கிறோம்" என்றாவது சொல்லிவிடட்டும். இப்படிக் குறுகிய காலத்தில் விண்ணப்பங்களைக் கோரி, இன்டர்வியூவை முடித்து, செலக்ஷனை முடித்து 1-ஆம் தேதியிலிருந்து கோர்ஸ் தொடங்கப்படும் என்றால், எப்படி எங்களாலே ஏற்றுக்கொள்ள முடியும்?

கடந்த ஆண்டு டிப்ளமா கோர்ஸ்க்கு ஓராண்டுக் காலம் படிக்க வேண்டிய பாடங்களையெல்லாம் 4 மாத காலத்தில் முடித்திருப்பதை இந்தியன் மெடிகல் கவுன்சில் குறிப்பிட்டு, நமது அரசாங்கத்தையும் டி எம் இ அவர்களையும் மற்ற அதிகாரிகளையும் எச்சரித்திருப்பதாக அறிகிறேன். ஆக "ஓராண்டுக் காலப் படிப்பை 4 மாத காலத்தில் சொல்லிக் கொடுத்தால், அதை நாங்கள் எப்படி ரெகக்னைஸ் செய்வது, அப்படிச் செய்ய மாட்டோம்" என்று சொல்லுகிற அளவுக்கு இந்தியன் மெடிகல் கவுன்சில் சொல்லியிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கிறபோது தமிழகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்று கேட்கத் தோன்றுகிறது. கடந்த ஆண்டு எம். பி. பி. எஸ். தேர்வில் நாங்கள் ஊழல் என்று சொன்னபோது இல்லை என்று மறுத்தார்கள். இப்போது அமைச்சர் அவர்களே ஓரளவுக்கு அதை ஒப்புக்கொண்டு மார்க் லிஸ்ட்டில் ஊழல் இருக்கிறது என்று 12, 13 பேரைக் கண்டு பிடித்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த மாநிலத்தைப்பற்றி அரசு கவலைப்படாமல் கேரளத்திலிருந்தும் கருநாடகத்திலிருந்தும் வந்தவர்களுக்கு இடம் கொடுத்தது. இப்போது அதில் 12, 13 பேர் மார்க் லிஸ்ட் திருத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பாராட்டுகிறேன். இந்த மாதிரி இங்கிலாந்தில் ஒருமுறை நடைபெற்ற போது, அவர்கள் ஒரு முறையைக் கடைப்பிடித்தார்களாம்:

(பிற்பகல் 1—00)

இங்கிலாந்து நாட்டிலே யார் யார் ஃஎப் ஆர் சி எஸ் படிப்புக்குப் போனார்களோ அவர்களையெல்லாம் கேரளாவில் ஊழல் நடந்திருக்கிறது என்று தெரிந்தவுடனே கேரளாவிற்குப் போங்கள் என்று திருப்பி அனுப்பினார்கள். அதைப் போலவே இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், இடம் பெற்றிருந்தால், அவர்களை அந்த மாநிலத்திற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இந்த நாட்டிலே மருந்துகள் தயாரிப்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். தயாரிக்கும் மருந்துகள் தரமான மருந்துகளாக இல்லையென்று. இருக்கலாம். அதைவிட நான் ஒன்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோபப்படமாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒரு குடும்பத்திலே இருப்பவர்கள் தொழில் செய்யக்கூடாது என்று சொல்பவன் அல்ல நான். ஒவ்வொருவருக்கும் ஒரு தொழில் இருக்கும். ஆனால் அமைச்சருடைய சகோதரர் மருந்து தயாரிக்கும் கம்பெனியின் ஏஜெண்டாக இருக்கிறார். எந்தெந்த கம்பெனிகளில் என்றால், ரெடிகுலர் ஃபார்மாசூடிக்கல், தெர்மோகோலார், விம், அசோக் பார்மசூடிகல், மோனோடிராம் லெபாராட்டரிஸ் போன்ற கம்பெனிகளுக்கு ஏஜெண்டாக இருக்கிறார். ஏஜெண்டாக இருப்பது கூட தவறல்ல. அவர் ஏஜெண்டாக இருக்கக்கூடிய நிறுவனங்கள் தயாரிக்கக்கூடிய மருந்துகள் தரமான மருந்துகள்தானா என்பதை யார் பரிசோதித்தார்கள்? அமைச்சருடைய சகோதரர் ஏஜெண்டாக இருந்தால், மருந்துகள் தரமாக வருமா? அவர் தனியாகச் செல்கிறார். பல டாக்டர்களைக் கட்டாயப்படுத்துகிறார். டாக்டர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள். அவர்கள் எப்படி மாறியிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். அந்த டாக்டரின் பெயர் சுப்பராமன். சுப்பராமனுக்கும் தமிழ் நாட்டுக்கும் நிறைய சம்பந்தம் போதும். டாக்டர் சுப்பராமன் இன்றைய தினம் எம். டி. (செஸ்ட் டிசிஸ்)க்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் எவ்வளவு கெட்டிக்காரர் என்பதற்காகச் சொல்கிறேன். அவருக்கும் இடம் வேண்டும். அதற்கு முன்னால் தன்னுடைய மகளின் நாட்டியத்தை நடத்த தாஜ்கோரமண்டல் ஓட்டலில் ஏற்பாடு செய்திருக்கிறார். இதற்கு யார் யாரை அழைத்திருக்கிறார் என்றால், எம்.டி.(செஸ்ட் டிசிஸ்) குழுவில் உட்காருகிறவர்களை அந்த டான்சுக்கு அழைத்திருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட போயிருக்கிறார். தாஜ்கோரமண்டல் ஓட்டல் விழாவில் பங்குகொண்டு பரிசுகூட அளித்திருக்கிறார். அமைச்சர் அவர்கள் விழாவுக்குப் போகக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர் விழாவுக்குப் போனதன் பலன் டாக்டருக்கு சீட் கிடைத்தது. இதனால்தான் கிடைத்தது என்று நான் சொல்லவில்லை. அவருக்குத் தகுதியிருக்கலாம். அல்லது வேறு சில தகுதிகள் இருக்கலாம். ஆனால் அந்த டாக்டர் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சகோதரர் ஏஜென்சி எடுத்திருக்கக்கூடிய நிறுவனங்கள் என்னென்ன மருந்துகளைத் தயாரிக்கின்றனவோ அதைத்தான் நோயாளிகள் வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த உரிமை கிடையாது. ஆனால் டாக்டர் சுப்பராமன் எழுதிக் கொடுத்திருக்கிற பிரிஸ்கிரிப்ஷன் சீட்டுக்கள் எத்தனையோ என்னிடத்தில் இருக்கின்றன. அதிலே இந்த மருந்துகளைக் குறிப்பிட்டு எழுதி அனுப்புகிறார்

என்றால், இது முறைதானா நல்லதுதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஒரு டாக்டர் என்பது மட்டுமல்ல அதைப் போலவே மோகன்ராஜ் இருக்கிறார். அவருக்கும் அதுதான் வேலை. தமிழ்நாடு பார்மாசூடிகல்ஸ் எந்தெந்த மருந்துகளைத் தயாரிக்கிறதோ அதையெல்லாம் வாங்க வேண்டும் என்று நோயாளிகளுக்குச் சிபாரிசு செய்யக்கூடிய டாக்டர்கள் பட்டியல் ஏராளமாக இருக்கின்றது. டாக்டர் மனோகரன் இருக்கிறார்; அவருடைய மனைவியும் இருக்கிறார். இந்த மருந்துகளை எழுதிக் கொடுத்தால் எம். டி., எம். எஸ். கிடைக்கலாம் என்று அவர்கள் நினைக்கக்கூடாது. அப்படி அவர்கள் நினைக்க அரசாங்கமும் அமைச்சர் அவர்களும் இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். அது தனியார் செய்த வேலை.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ளவர்களும் இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அச்சுறுத்துகிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். ஒருவேளை இப்படிச் செய்தால் வேறு ஊருக்குப் போகாமல் சென்னையிலேயே மவுண்ட் ரோடிலேயே இருக்கலாம் என்ற எண்ணம் இருக்கலாம். அரசாங்கத்தின் ஒருபகுதியாக, அட்டானமஸ் பாடியாக இருக்கக்கூடிய தமிழ்நாடு மின்சார வாரியத்திலே இருக்கக்கூடிய அந்தக் கிளினிக்கிலேகூட நம்முடைய அமைச்சர் அவர்களுடைய சகோதரர் ஏஜென்சி எடுத்திருக்கக்கூடிய மருந்துகளைத்தான் வாங்குகிறார்கள் என்றால்—மருந்துகளை வாங்குவது பற்றி ஆட்சேபணை செய்யவில்லை—அமைச்சருடைய சகோதரராக இருந்துகொண்டு இப்படி அரசாங்கத்தைப் பயன்படுத்துகிறாரோ என்று சந்தேகிக்கக்கூடிய அளவிற்கு நடந்து கொள்ளலாமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்)

அதற்கடுத்து கடைசியாகச் சொல்ல விரும்புவது ஒன்று. துணைத் தலைவர் அவர்களே, முடித்துக்கொள்கிறேன். எவ்வளவோ பேச வேண்டும் என்று நினைத்தாலும் தாங்கள் முதலிலே சொல்லியிருப்பதை மனதிலே வைத்து வேகமாகப் பேசுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் எதிர்க்கட்சியிலே இருக்கும்போது, ஒருமுறை ஆற்காட்டிற்கு வந்தார்கள். பொதுக்கூட்டத்திலே பேசினார்கள். எந்த ஊருக்கு வந்தாலும், " அந்த ஊர் எம். எல். ஏ. ஊழல் " என்று பேசுவது அவருடைய வழக்கம். அப்படிப் பேசுகிறபோது,



இந்த ஊர் எம்.எல்.ஏ. என்று என்னைக் குறிப்பிட்டு, " சென்னை நகரிலே, அண்ணா நகரில் பெரிய மாளிகையை 67 வாசற்படி வைத்துக் கட்டியிருக்கிறார், எதற்காக அவருக்கு ஓட்டு போட்டீர்கள் ? " என்று கேட்டார்கள். பொறுப்புள்ள தலைவர் அப்படி பேசியிருந்தாலும், அந்த வீட்டை எப்படிக் கட்டினேன் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டது. இதைச் சொல்லுவதற்குக் காரணம், அப்படியெல்லாம் அன்றைய தினம் பேசினார்கள். தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டினாலும், அது ஊழல், இலஞ்சம் என்று பேசப்பட்டது.

இன்றைய தினம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களுக்கு வசதி இல்லை என்று சொல்லமாட்டேன். அவருக்கு வருமானம் இல்லையென்றும் சொல்லமாட்டேன். அவர்மீது ஆயிரம் குறைகளைச் சொன்னாலும், தனிப்பட்ட முறையில் எனக்கு அன்பு உண்டு. இன்றைய தினம் அவர்கூட ஒரு மருத்துவ மனையைக் கட்டுகிறார். அமைந்தகரையில் மருத்துவ மனை கட்டுகிறார். அது எத்தனை இலட்சம் ரூபாய் பெறும் என்பதைக்கூட நான் பேச விரும்பவில்லை. தி. மு. க. ஆட்சிக் காலத்தில் சட்டமன்ற உறுப்பினர் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டினாலே ஊழல் என்று சொன்னவர்கள், ஆட்சிப் பொறுப்பிலே இருந்துகொண்டு பெரிய மருத்துவ மனையைக் கட்டும்போது நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திமுக ஆட்சியில் இருந்தபோது நாங்கள் செய்ததெல்லாம் ஊழல், அதற்குப் பெயர் இலஞ்சம் என்று சொன்னது உண்மையாக இருக்குமானால், சென்னை நகரத்திலே எழும்புகின்ற மருத்துவ மனைக்குச் சொந்தக்காரராக இருப்பவர் இதை எப்படிச் செய்தார், இதிலே எவ்வளவு அடித்தார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் யார் வேண்டுமானாலும் தொழில் செய்யட்டும், ஆனால் தமிழ்நாட்டைக் கொள்ளையடிக்க யாரும் முயற்சி செய்யக்கூடாது, சுரண்ட முயற்சி செய்யக்கூடாது. எந்தத் தொழிலைச் செய்கிறவர்களாக இருந்தாலும், இந்தக் கொள்கையைப் பின்பற்றி இந்தச் சமுதாயத்தை வாழ வைக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இறுதியாகப் பேசிய எனது இனிய நண்பர் திரு. ஆற்காடு வீராசாமி உட்பட நல்ல பல யோசனைகளை, கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதிலே

பல கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்துக்களாக இருந்தாலும், சிலவற்றை ஆதாரத்துடன் மறுக்கக்கூடிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன்.

முதலிலே விவாதத்தைத் துவக்கிய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கு பல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக "Intake of Medical students should be increased" என்று சொன்னார்கள் என்று நினைக்கிறேன்.

1,500 மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் இடம்பெற வேண்டும் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய அகில இந்தியக் கொள்கை என்னவென்றால் மருத்துவர்களை அதிகப்படுத்துவதைவிட பாரா-மெடிகல் பெர்சனலை அதிகப்படுத்துவதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதுதான். அது பலனுடையதாக இருக்கும் என்பதுதான் அகில இந்தியக் கருத்தாக இருக்கிறது. அதே கருத்தைத்தான் தமிழக அரசும் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் பலர் குறிப்பாக திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் கூட, செவிலியர்களை அதிகமாக எடுக்க வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதுதான் இந்த அரசாங்கத்தின் கருத்து. சென்ற மூன்று, நான்கு ஆண்டுகளாக செவிலியர்களின் எண்ணிக்கையை 350-லிருந்து 600 ஆக உயர்த்தியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், ஏ.என்.எம்.எஸ., மல்டி-பர்ப்பஸ் ஒர்க்கர்ஸ், பாரா மெடிகல் பெர்சானல் போன்ற எல்லாப் பகுதியினரின் எண்ணிக்கையையும் உயர்த்தியாக வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 1-10)

ஆகவே இது அரசாங்கத்தினுடைய கருத்து. இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். நல்ல ஒரு யோசனையைச் சொன்னார்கள். இந்த தலைமை மருத்துவ மனைகள் பற்றிப் பேசுகின்றபோது, அருமையான யோசனைகளைச் சொன்னார்கள். இது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய யோசனை. நான் ஏற்கெனவே சென்ற ஆண்டுகூட சில குறிப்புகளைக் கொடுத்து இதைப் பற்றி ஆராய வேண்டும் என்று நம்முடைய அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். படிப்படியாக மாவட்ட மருத்துவ மனைகளுக்கு நாம் கல்லூரியினுடைய அந்தஸ்த்தைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு அங்கே இருக்கக்கூடிய படுக்கைகள் அங்கு செய்ய வேண்டிய சிகிச்சைகளையெல்லாம் உயர்த்த வேண்டும் என்பதற்கு வேண்டியவற்றைச் செய்து கொண்டிருக்கிறோம்.

முதல் கட்டமாக அதற்காக ஹவுஸ் சர்ஜன்ஸ் போடுகிறோம். ஹவுஸ் சர்ஜன்கள் இப்போது கல்லூரிகளிலே நியமிக்கப்படுகிறார்கள். அது திருச்சி மாவட்ட மருத்துவ மனையாக இருந்தாலும் சரி, தென் ஆற்காடு மாவட்ட மருத்துவ மனையாக இருந்தாலும் சரி, சேலம் மாவட்ட மருத்துவ மனையாக இருந்தாலும் சரி, அந்தந்த மருத்துவமனைகளிலே ஹவுஸ் சார்ஜன்களைக் கொண்டு வந்து வைக்கவிருக்கிறோம். அவர்களையே பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்தால், அது சிறப்பாக இருக்கும். இது முதல் கட்டமாக செய்ய இருக்கிறது. அடுத்து போஸ்ட் கிராஜுவேட் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியன் மெடிகல் கவுன்சில் இடத்தில் கூட பேசியிருக்கிறார்கள். அவர்களும் ஒத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்து இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். அனாட்டமி மைக்ரோ பையாலஜி பற்றியெல்லாம் சொன்னார்கள். அதற்கு யாரும் சரியான வகையிலே வருவது கிடையாது. அதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது நம்முடைய கருத்துக்கு உடன்பாடானதாக இருக்கிறது. இந்தத் துறையிலே வரக்கூடியவர்களுக்கு சாதாரணமாக மற்றத் துறைகளிலேயிருந்து இந்தத் துறைக்கு வரக்கூடியவர்களுக்குச் சம்பளம் குறைகிறது. பாதி அளவுக்குக் குறைந்து விடுகின்றது. அப்படி அவர்களுக்குச் சம்பளத்தைக் குறைக்க வேண்டாம். அவர்கள் எவ்வளவு சம்பளம் வாங்குகின்றார்களோ அவ்வளவு சம்பளமே இருக்கட்டும் என்று உத்தரவு போடுவதற்கான குறிப்புகளை நாம் அனுப்பியிருக்கிறோம். விரைவிலே அதற்கான உத்தரவுகள் போடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி உத்தரவு போடப்பட்டதும் உறுப்பினர்களுக்கெல்லாம் தகவல் சொல்கிறேன். இப்படி ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன். அனாட்டமி மைக்ரோ பையாலஜி நான்-பிராக்டிஸ் செய்யக்கூடிய, நான்-கிளினிக்கல் ஸ்டடி என்று சொல்லக்கூடிய இந்தப் படிப்பை அந்தத் துறையிலே பிராக்டிசாக ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்ததாக இங்கே கிச்சன்பற்றிச் சொன்னார்கள். சமையல் அரங்கம் பற்றிச் சொன்னார்கள். சமையல் அரங்கம் சரியான வகையிலே இல்லையென்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். அதற்காகக்கூட நாங்கள் நடவடிக்கை எடுத்து ரூ. 1.5 லட்சத்திலே ஒரு மாடர்ன் கிச்சன் அமைக்க உத்தரவு போட்டிருக்கிறோம். அது வெகு விரைவில் செய்யப்படும். அதைச் செய்வதற்காக ரூ.1,11,850 தொகை ஒதுக்கியிருக்கிறோம். ஜி.ஓ.நெ. 2290, தேதி 19-12-1981-ல் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அது நடைமுறைபடுத்தப்படும். அது மட்டுமல்ல, சேலத்தில் ஒரு கல்லூரியில் ஒரு கிச்சன் பார்த்தேன். அந்த மாடர்ன் கிச்சன் ஸ்டீமில் இயங்குகிறது. ஒரே நேரத்தில் கிட்டத்தட்ட 10 இடங்களில் சென்று

சமையல் செய்யக்கூடியதாக இருக்கும். அதைப் பார்த்துச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதனையும் செய்வோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

டிப்ளமோ இன் லெப்ரஸிக்காக நாம் உடனடியாக மத்திய அரசோடு தொடர்புகொண்டு, இந்த ஆண்டுக்குள்ளேயே அந்தக் கோர்ஸை இங்கே ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே அஷ்யூரன்ஸ்ஆகத் தருகிறேன்.

அடுத்தபடியாக மெடிகல் ரிசர்ச்பற்றி மதிப்பிற்குரிய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசினார்கள். மெடிகல் ரிசர்ச் என்பதுபற்றி நான் ஏற்கெனவே இரண்டொரு நிகழ்ச்சிகளிலே சொல்லியிருக்கிறேன். நாம் அதற்கு ஏராளமான தொகை ஒதுக்கியிருக்கிறோம். அதை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மெடிகல் ரிசர்ச்சிலே நிறைய கவனம் செலுத்த வேண்டும். மாண்புமிகு திரு. வீராசாமி அவர்கள்கூட சொன்னார்கள். மாண்புமிகு அங்கத்தினர் எல்லாம் சொன்ன கருத்துக்களை மனதிலே வைத்துக் கொண்டு, நிச்சயமாக அதற்கு உடனடியான ஏற்பாட்டை அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இங்கே ஒரு பிரச்சினையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் எழுப்பினார்கள். அதற்குப் பதில் கொடுக்காமல் நழுவிக்கூடாது என்று சொன்னார்கள். அதற்குப் பதில் தர வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் அதைப் பற்றிச் சொல்வார் என்று நினைத்தேன். ஏனென்றால் அவர் எதிர்கட்சியில் இருப்பவர்கள். அவருக்கு அந்த இலாக்காவைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். He is an expert in a nut shell

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** திரு எஸ் ஆர் இராதா அவர்கள் சிரிக்கின்றார்கள் அதைப்பற்றிப் பரவாயில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா :** திரு. க. இராமமூர்த்தி அவர்கள் சிரித்தார்கள்

**திரு. க. இராமமூர்த்தி :** அங்கத்தினர் அவர்கள் சிரிக்க ஆரம்பித்தார்கள் எதற்காகச் சிரிக்கிறார்கள் என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** I owe an apology if I have hurt his feelings. அதற்காகத்தான் நான் சொல்கிறேன்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரோ ஆளும் கட்சியிலே இருப்பவர்களோ ஏதோ சொல்கிறார்கள் என்பதற்காக நான் வருத்தப்படக்கூடிய நிலையிலே இல்லை. இந்த இலாகாவைப்பற்றி எனக்கு அதிகமாக தெரியும் என்று டாக்டர் அவர்கள் சொல்வார்கள் என்றால், அதைப்பற்றி வருத்தப்படவில்லை. இந்த இலாகாவைப்பற்றித் தெரிந்து கொள்வதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** எதற்காக இதைச் சொல்ல வந்தேன் என்றால் இது ஒரு முக்கியமான விஷயம். அவர்கள் தம்முடைய யோசனையைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்தேன். இது கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய விஷயம். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள்கூட சொன்னார்கள். சட்டமன்றத்திலே பேசவில்லை என்றாலும்கூட, சென்ற ஆண்டு மதிப்பிற்குரிய கிருஷ்ணமூர்த்தி அவர்கள்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்ன கருத்தை அங்கே சொன்னார்கள். அது மாறுபட்ட கருத்து என்று திரு. வீராசாமி அவர்கள் சொன்னார்கள். ஆக இதைக் கொள்கை ரீதியாக அணுகவேண்டியதாக இருக்கிறது. அதை நாம் அலட்சியமாக அணுகக்கூடாது என்பதற்காகச் சொல்கின்றேன். அந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், முன்பு 75 மார்க்குகள் என்று இருந்தது. இதிலேகூட பலர் என்ன நினைத்தார்கள்? 75 மார்க்கு என்று வைவா வோசிக்கு இருந்த மார்க்குகளைக் குறைத்ததாகச் சொன்னார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஹண்டே தான் குறைத்தான் என்று கூட பல குறைபாடுகளைச் சொன்னார்கள். அப்படி வெளியிலே பேசினார்கள். பலபேர் அது குறித்து குறைபட்டார்கள். இந்த மன்றத்திலே அல்ல. இதிலே 75 என்று இருந்ததை 30 என்று ஆக்கியதற்காக திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் வாழ்த்தினாலும், அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது, அதை 30 ஆகக் குறைத்ததைப் பற்றி பழி சொன்னாலும், அதையும் நான் ஏற்றுக் கொள்ள முடியாது. அந்த டெசிஷனே முழுக்க முழுக்க சுப்ரீம் கோர்ட், ஹைக்கோர்ட் டெசிஷன். இது நம்முடைய மதிப்பிற்குரிய ஜஸ்டிஸ் மோகனுடைய ஜட்ஜ்மெண்டில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு இந்த மாதிரி 75 மார்க்குகள் கொடுத்தது நியாயமற்றது என்று பல பேர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள். எத்தனை பேர் என்று இங்கே குறிப்பிடுகிறது. ஒரு 40, 50 பேர்கள் இருக்கும். அவர்கள் கோர்ட்டுக்குப் போன உடனே என்னைப்பற்றிக் காட்டமாக பத்திரிகையிலே போடப்பட்டது. பார்த்தீர்களா இந்த அமைச்சரை எதிர்த்து எத்தனை பேர்கள் கோர்ட்டுக்குப்

போனார்களா என்று. அவர்கள் எதற்காகப் போனார்கள் என்றால் பெரும்பான்மையானவர்கள் கொள்கைப் பிரச்சினையில் போனார்கள். ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்றால்

I will quote :

" ......proceeded to allocate 75 marks under various heads. Had it ever been said that such an allocation is bad? My answer is in the negative. The only thing that could be said in favour of the petitioners is the ruling in Nischi Moha versus the State of Jammu and Kashmir in AIR 1980-SC-1975. There, the oral interview carried 33 1/3 per cent of the total marks which was held to be arbitrary. But here the oral interview carries 27.3 per cent which is certainly far less than 33 1/3 per cent. One significant thing that requires to be noted is that at no point of time, till this ruling in W.P. No. 1304/1979, had the Supreme Court ever laid down what would be the proper percentage. For the first time, therefore, it came to be categorically laid down that allocation of more than 15 per cent...... ".

(பிற்பகல் 1.20)

நான் எதற்காக இதைத் தெளிவுபடுத்துகிறேன் என்றால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன் என்றால், இதைப்பற்றி எனக்குத் தனியான எண்ணங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். அந்த வகையிலே சட்டசபையிலே எதிர்க் கட்சியில் இருந்தபோது பேசியிருக்கிறேன். அரசாங்கத்திலே ஒரு கொள்கையை முடிவு செய்ய வேண்டுமென்றால், அத்தனை பேர்களுடைய உணர்வுகளையும் கருத்துக்களையும் மதித்து, அந்த வகையிலே செய்ய வேண்டும். இங்கே என்ன ஆகிவிட்டதென்றால், ஒரு பக்கத்தில் ஆர்பிட்ரிநஸ் என்று குறை கூறுகிறார்கள். ஒரு பக்கத்தில், மார்க்கைக் குறைத்தார்கள் என்ற பெரிய தவறு சொல்லப்படுகிறது. 75-ஐ, 30 ஆகக் குறைத்ததற்கு நான் குற்றவாளி என்று சொல்லப்படுகிறது. you cannot blow hot and cold in the same stretch.

குறைப்பதைப்பற்றி நாம் மகிழ்ச்சியடைகிறோமோ, அப்போது இந்தப் பிரச்சினை வராது. மகிழ்ச்சியடையவில்லையா, ஆர்பிட்ரிநஸ் என்ற பிரச்சினை வராது. நமக்குத் தனியாக 'டிஸ்கிரிஷனரி பவர்' இருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். 30 மார்க்—டிஸ்கிரிஷனரி பவரில் இருக்கிறது. ஒரு காலத்தில் 75 ஆக இருந்தது. அப்போது யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்க வாய்ப்பு





இருந்தது, சவுகரியமாக இருந்தது. இப்போது பாதிக்கு மேலே குறைந்திருக்கிறது. ஆகவேதான், ஊழல், ஊழல் என்று நம்முடைய நண்பர்கள் சொல்லும் நேரத்தில், அதை மக்கள் அப்படியே எடுத்துக்கொண்டு, அதன் மூலம்—மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னது மாதிரி—தவறாக, அனாவசியமாக நாம் பழி வாங்கிக்கொள்ள வேண்டுமா என்று எண்ணி, இப்படிப்பட்ட முடிவெடுத்தால்கூட நன்றாக இருக்குமென்ற எண்ணம் எனக்குத் தோன்றுகிறது. பிரதான எதிர்க் கட்சியிலே இருக்கக் கூடிய உறுப்பினர்களுடைய எண்ணம் என்ன என்பதைத் தெளிவுபடுத்தினால், நிச்சயமாக அரசாங்கம் இதை ஆராயத் தயாராக இருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : எதிர்க் கட்சியிலே இருக்கக்கூடிய நாங்கள் சொல்லும் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், நடைமுறைப்படுத்துவதாக இருந்தால், நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : துணைத் தலைவரவர்களே, நான் கேட்பது சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனபோது 75 மார்க் ஆர்ப்பிட்ரரி என்று கருதப்பட்டது. இப்போது 30 மார்க் என்று ஆக்கியிருக்கிறோமென்று சொல்லலாம்; 30 மார்க் வேண்டாமென்று அமைச்சரவை முடிவு செய்வதை யார் தடுக்கிறார்கள்? அந்தக் கேள்விக்கு வரமாட்டேன் என்கிறார்கள். திரு. வீராசாமி சொன்னால் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா? திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னால், அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா? திராவிட முன்னேற்றக் கழகம் இதை எதிர்த்தால்கூட, நாங்கள் கேட்கிறோம். அதற்குப் பதில் சொல்ல வேண்டும். 30 மார்க் என்றால் கூட, வேண்டியவர்களுக்குக் கொடுக்கும் நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் சொல்ல வேண்டும். அப்போது 75 மார்க், இப்போது 30 மார்க் என்று சொல்லுகிறார்கள். 30 மார்க் இருந்தாலும், தப்பு செய்ய வாய்ப்பு இருக்கிறது. அரசு தப்பு செய்கிறது என்று மக்கள் நினைக்க வாய்ப்பு இருக்கிறது. அந்த 30 மார்க் கூட வேண்டாம். ஏற்கெனவே மாணவர்கள் பெற்ற மார்க் அடிப்படையிலே அல்லது என்ட்ரன்ஸ் எக்சாமினேஷன் அடிப்படையிலே தேர்ந்தெடுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதை அரசு ஒத்துக்கொள்கிறதா? கேபினெட் இது குறித்து முடிவெடுக்கக் கூடாதா? இதற்கு சுப்ரீம் கோர்ட் குறுக்கே நிற்கிறதா? திரு. வீராசாமியிடம் இதைக் கேட்டால் பிரயோசனமில்லை. உங்களுக்குத் தனிக் கொள்கை இருக்கிறது. இதற்கு மட்டும் ஏன் திரு. வீராசாமியிடம் கேட்க வேண்டும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதில் பெரும்பாலானவர்கள் ஒரு கருத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் . . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, வீராசாமி ஒரு கருத்தைச் சொன்னால் பரவாயில்லை என்று சொன்னால், எங்கள் கட்சிக் கருத்தைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். நான் கேட்க விரும்புவது, எதிர்க் கட்சிகளுக்கு இவ்வளவு மரியாதை கொடுத்துப் பேசுவது உண்மையாக இருந்தால், நாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், இங்கே கருத்து சொல்லத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : உறுப்பினரவர்கள் சொன்ன பிறகுதான் ஏற்பதா, இல்லையா என்பது வரும்.
" unless I know, how can I express my opinion ".

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, தெளிவாகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்லுகின்ற கருத்தை, நாங்கள் கட்சி அடிப்படையிலே ஏற்றுக்கொள்ள முடியாதென்று சொன்னாலுங்கூட, இன்று நாட்டிலே நடைபெறுகிற இவ்வளவு முறைகேடான சூழ்களைப் பார்க்கும்போது, அவர் சொல்லும் அந்த லட்சியத்தை இந்த அரசாங்கம் பின்பற்றுமானால், என்டரன்ஸ் எக்ஸாமினேஷன் வைத்தால் திராவிட முன்னேற்றக் கழகம் முழு மனதோடு அதை வரவேற்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் ஹண்டே அவர்கள், 'ஏன் இவ்வளவு பழி என்றெல்லாம் நினைக்கிறேன்' என்று சொன்னார்கள். எனவே, அடுத்த ஆண்டு இதை அமுல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தக் கருத்தைச் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்போது தெளிவாகக் கருத்து சொன்னதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை அவருடைய கட்சிக் கருத்தாக ஏற்றுக்கொள்கிறேன். அவர்களுடைய தலைவர்களைக் கலந்து ஆலோசித்துச் சொல்கிறார்களா என்பது தெரியாது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இதிலே இப்படிச் சொல்வதன்மூலம் பொறுப்பிலிருந்து நழுவக்கூடாது. நிச்சயமாக எங்களுடைய கட்சித் தலைவர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளச் செய்யும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். நாட்டிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் பலவிதமாகப்



பேசப்படுவதைத் தவிர்க்க இந்தக் கொள்கையை எல்லோரும் சேர்ந்து ஏற்றுக்கொள்வோம். இதை எங்கள் கட்சித் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள என்னால் முடிந்த அளவிற்கு முயற்சி செய்து, அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க உறுதியை இந்த அவையிலே தருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இந்தக் கருத்து சொன்னதற்காக நான் நன்றி சொல்லுகிறேன். அவர்களுடைய கருத்து நமக்கு உடன்பாடு என்று சொல்லவில்லை. அவருடைய மனதிலே பட்டதைச் சொல்லியிருக்கிறார்கள். For the intellectual honesty he has my compliment அந்த வகையிலே இந்தக் கருத்து நிச்சயமாக ஆராயத்தக்க கருத்து என்று சொல்லி, அரசாங்கத்தின் முடிவைப் பிறகு சொல்கிறேன்.

பல வகையிலே இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், தெளிவாக ஒரு யோசனை வந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன் . . . .

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வலியுறுத்திக் கேட்டார்கள். இப்போது எங்களுடைய கட்சித் தலைவர்கள் பற்றிக்கூடச் சொன்னார்கள். அதற்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, நான் அந்த உத்தரவாதத்தையும் தருகிறேன். அதற்குப் பிறகு அரசாங்கம் தன்னுடைய கருத்தைப் பிறகு அறிவிக்கும் என்பதைவிட, இலாக்கா அமைச்சர் அவர், முடிவு எடுக்கும் இடத்தில் இருக்கிறார்கள், இப்போது அதை அறிவிப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : பெரிய கட்சி பிரதான எதிர்க் கட்சி ஒரு கருத்து கூறும்போது, அதை மதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் தெளிவாகச் சொல்லுகிறார்கள். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று அவர்கள் கேட்கும்போது, ஆளும் கட்சிக்கும் ஒரு லைன் இருக்க வேண்டுமல்லவா? அவர்களைக் கமிட் செய்ய வைக்கிறீர்கள். என் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல மறுக்க வேண்டும்?

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்தப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், இப்போது தெளிவான, அடிப்படையான கருத்து உருவாகிக் கொண்டிருக்கிறது. இதிலே உடனடியாகப் பதில் சொல்வதற்கில்லை. ஏனென்றால் மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கலந்து யோசித்துச் செய்யவேண்டிய விஷயம். இருந்தாலும் ஒரு விஷயம் சொல்கிறேன். இங்கே இது எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்கிற அந்த "பேக்கிரவுன்ட்" பற்றிக் கொஞ்சம் சிந்தித்தாக வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவரவர்களே, குறிப்பிட்ட பிரச்சினை பற்றி நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதைப்போலவே அதை ஒட்டியது என்பதால், ஒன்றைத் தெளிவு படுத்திவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். டிஸ்கிரிஷனரி கோட்டா என்ற அளவில் குறிப்பிட்ட துறையில் உள்ளவர்களுக்கு விரும்பினால் ஒதுக்குவது என்ற நிலை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்வதானால், தமிழுக்குத் தொண்டு புரிந்தவர்களுக்கு இடம் ஒதுக்குவது என்பது இருக்கிறது. அதிலேகூட பல தவறுகள் நடந்திருப்பதாக அல்லது அதற்குரியவர்கள் உரிய முறையிலே இடம் வாங்கவில்லை என்று தகவல்கள் வந்திருக்கின்றன. எனவே டிஸ்கிரிஷனரி கோட்டாவைக் கைவிட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, I have gathered the opinion of hon. Members. I will just sum it up: இது எப்படி உருவானது என்பதைப் பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது 75 மார்க்குகளாக இருந்தது. அப்போது வாகிட்ட நேரத்தில் அவர்கள் சொன்ன கருத்தைச் சொல்கிறேன்.

(பிற்பகல் 1-30)

பல நேரங்களில் இப்படிப் போடப்படுகிற மார்க்கினுடைய அடிப்படையில் ஒரு பெரிய பிரச்சினை இப்பொழுது இருக்கிறது. அவர்களுடைய ஆப்டிட்யூடைப்



பார்க்க இதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். 75 என்று இருந்தது இப்பொழுது 30 ஆகக் குறைந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 75 மார்க்ஸ் என்று இருந்தது. அதுதான் இப்போது 30 மார்க்ஸ் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் சொல்ல வேண்டுமென்றால்—தனி மனிதனுடைய விருப்பு வெறுப்புக்காக அப்போது 75 மார்க்ஸ் என்று வைத்திருந்ததை இப்பொழுது 30 ஆகக் குறைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது அதை அறவே நீக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், திரு. பக்தவத்சலம் அவர்கள் எல்லாம் முதலமைச்சர்களாக இருந்த நேரத்தில், நான் எதிர்க் கட்சியில் இருந்தபோதே, இதுபற்றிக் கருத்துக்கள் சொல்லப்பட்டன. 75 மார்க்ஸ் வைத்திருப்பது மாணவனுக்கு எவ்வளவு தூரம் கிராமத்திற்குச் சென்று பணி செய்யக்கூடிய எண்ணம் இருக்கிறது என்பதை அறிவதற்காகத்தான். பயிற்சியை முடித்தவுடன் அவனுக்கு கிராமத்திற்குச் சென்று பணி செய்யக்கூடிய மனோநிலை இருக்கிறதா அல்லது சென்னையிலேயே டாக்டர் பணி செய்ய வேண்டுமென்ற மனநிலை இருக்கிறதா என்பதையெல்லாம் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு அளவுகோலாகத்தான் இதை வைக்கலாமென்று அப்போது சொன்னார்கள். இப்பொழுது இதுதான் தமிழகத்தில் ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இதுபற்றிச் சொன்னார்கள். கிராமப் புறங்களில் மருத்துவர்களின் பற்றாக்குறையை 550-லிருந்து 160 ஆகக் குறைத்திருந்தாலும், அந்த அளவுக்குக்கூட இன்னும் கிராமப்புறங்களில் மருத்துவர் பதவிகளை நிரப்ப ஆட்கள் கிடைக்கவில்லை. அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட மருத்துவர்களை அதிகமாகப் பெருக்குவதைவிட 'பேரா மெடிக்கல் பெர்சானல்'ஐ அதிகப்படுத்த ' முக்கியத்துவம் கொடுக்கலாம் என்கிற அடிப்படையிலே கருத்துக்களைச் சொன்னார்கள்.

(திரு. ஆ. நல்லசிவன் இருக்கையிலிருந்து எழுந்தார்).

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 மார்ச் 22

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் பொறுமையோடு நான் பேசி முடியும்வரை இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்)

**திரு. ஆ. நல்லசிவன் :** இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ' டாக்டர் பயிற்சியை முடித்த பிறகு அவர்கள் கிராமங்களுக்குப் போகிற ஆப்டிட்யூட் பற்றி இதன் மூலம் தெரிந்துகொள்ளலாம் ' என்கிற கருத்தைச் சொன்னார்கள். இதற்காக 75 மதிப்பெண்கள் முதலில் வழங்கப்பட்டு வந்தது. இப்போது 30 மதிப்பெண்கள் வழங்கப்பட்டு வருகிறது. இப்படி பல ஆண்டுகள் மார்க்ஸ் வழங்கியதன் பேரில் இந்த ஆப்டிட்யூட் மதிப்பெண்கள் பற்றிய முடிவை அரசு தெரிந்து கொண்டதா ? கிராமங்களுக்குச் சென்று பணி புரியும் ஆப்டிட்யூட் உள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு, பயிற்சியை அவர்கள் முடித்த பிறகு, அதன் அடிப்படையில் அவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றக் கூடிய ஆப்டிட்யூட் இருக்கிறதா ? அது இல்லையென்று தெரிந்துவிட்ட நிலையில் அதற்குப் பிறகும் இதை நியாயப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிக்கிறார்களே, இது சரிதானா ? ஆப்டிட்யூட் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும், அவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணி புரிய வில்லையே. ஆகவே ' ஆப்டிட்யூட் ' என்பது முடியாத ஒன்றை முடிவுபண்ணி, நியாயப்படுத்திப் பேசுவது சரியல்ல. கேபினட்டில் இதுபற்றிப் பேசுகிறோம் என்று சொன்னார். அது நியாயம்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** உறுப்பினர் கருத்தை அவர்கள் சொல்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அதுபோல் நான் சொல்கிற கருத்தை உறுப்பினரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கூட எனக்கு உரிமை இல்லையா ? எனக்கு இருக்கிற உரிமையின் அடிப்படையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லுகிறேன். அன்றைக்குச் சொன்ன கருத்துக்களை இன்றைக்கு மாற்றாகச் சொல்கிறேன் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்வளவு



1982 மார்ச் 22] [திரு. ஆ. நல்லசிவன்]

காரம் 75 மார்க்ஸ் ஆப்டிட்யூட்டுக்காக என்றும், 30 மார்க்ஸ் ஆப்டிட்யூட்டுக்காக என்றும் வைத்த பிறகு கூட, நிலைமை இது என்றால், இந்த ஆப்டிட்யூட்டே இல்லை என்றால், எப்படிப்பட்ட நிலை இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதைக் கூட தெரியாமல் அதையும் சென்னையில் இருப்பவர்களுக்கே கொடுத்து விட்டால், நிலைமை என்ன ஆகும் நான் சென்னை பட்டதாரி ஆசிரியர்கள் தொகுதியைச சார்ந்தவன்—கிராஜுவேட் கான்ஸ்டிட்யூவென்சியைச் சார்ந்தவன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. நல்லசிவன் இருக்கையிலிருந்து எழுந்தார்.)

மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து கொஞ்சம் பொறுத்துக்கொள்ளவேண்டும். நான் பேசிய பிறகு அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஒரு கட்சி என்று எடுத்துக்கொண்டால், மாநிலம் பூராவும் உள்ள தொகுதிகளும் சமம் தான். அரசு என்பது மாநிலம் பூராவுக்கும்தான் உள்ளது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** I do not have the lung power that Thiru Nallasivan has. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போல் எனக்கு அவ்வளவு சப்தமாகப் பேசக்கூடிய சக்தி இல்லை. நான் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். அவர்கள் கேட்பதற்கெல்லாம், பூராவுக்கும் நான் பிறகு பதில் சொல்கிறேன் உறுப்பினர் பேசும்போது எவ்வளவு பயங்கரமாகப் பேசினார்கள். அப்போதெல்லாம் நான் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்கவில்லையா ? தயவு செய்து நான் சொல்வதைக் கேட்க வேண்டும். நான் பொறுமையாக பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்கிற அடிப்படையில் தேர்ந்தெடுத்தால்—சென்னையில் உள்ளவர்களையே தேர்ந்தெடுத்து விட்டால் அதன் நிலைமை, அதன் விளைவு எப்படிப் போகும் என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து நான் இதுகுறித்து முடிவெடுக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. கிராமப்புறங்களில்

இருக்கிறவர்களுக்கு ஆப்டிட்யூட், தன்மை இருக்கிறது என்கிற அடிப்படையில், அவர்களை நம்பி, அந்தவகைய எண்ணத்தில் மார்க்குகளை ஒதுக்கி, தேர்ந்தெடுத்துக் கொண்டதற்குப் பிறகே நமக்கு இவ்வளவு மருத்துவர்கள் பற்றாக்குறை கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் இருக்கிறது. ஆகவே தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்கிற அடிப்படையை ஏற்றுக்கொண்டால், இதில் பாதி கூட கிராமப்புறங்களுக்கு மருத்துவர்கள் வரமாட்டார்கள். இப்போது 20 சதவிகிதம் மக்களுக்காக, 80 சதவிகிதம் டாக்டர்கள் நகர்ப்புறத்தில் இருக்கிறார்கள். அதேசமயத்தில் 80 சதவிகித மக்களுக்காக 20 சதவிகித டாக்டர்கள் கிராமங்களில் இருக்கிறார்கள். இது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், இருக்கிற நிலைமை. ஆகவேதான் நான் இதைச் சொல்கிறேன். ஆனால் மற்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டோம் என்றால் 85 சதவிகித டாக்டர்கள் 15 சதவிகித மக்களுக்காக இருக்கிறார்கள். இங்கு 15 சதவிகித டாக்டர்கள் 85 சதவிகித மக்களுக்காக இருக்கிறார்கள். பீகார், உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் எல்லாம் இதுதான் நிலைமை.

Tremendous concentration of doctors in Bombay City

பம்பாயைப் பொறுத்தவரையில், நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது. மகாராஷ்டிராவில் இருக்கிற மொத்த டாக்டர்களில் பாதிபேர் பம்பாயில் மட்டும் இருக்கிறார்கள். அங்கேயெல்லாம் என்ன முறை என்பதை நாங்கள் பார்க்கவில்லை, இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் போன்ற நல்லெண்ணம், நல்லுள்ளம் கொண்ட கிராமப்புறத்தை சிந்திக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு வைக்கிறேன். இந்தக் கருத்துக்களையெல்லாம் ஆராய வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் இந்த நேரத்தில் இதைச் சொல்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் நர்சஸ் பற்றி பல கருத்துக்களைச் சொன்னார்கள். ஏற்கனவே நாம் அவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மேல் நர்சஸ் நியமிப்பது பற்றியும் சொன்னார்கள். இதுபற்றி சுருக்கமாக நான் ஒரு குறிப்பைப் படித்து விடுகிறேன்.



" Admission of male candidates was suspended about 25 years ago, namely, on 29th November 1957. It was revived only 3 years ago and further extended. It is not necessary to have nurses in Psychiatric Hospitals, except in the criminal section where they are required to give injections and administer drugs. For the promotion of nurses, nursing superintendents to the post of Nursing Tutor Grade II. the ratio of one man to every 3 women nurses has been stopped. This was felt necessary as men nurses were not residents and hence could not look after the welfare ".

இது ஒரு கொள்கை ரீதியாக எடுக்க வேண்டிய முடிவு. மாண்புமிகு உறுப்பினருக்கு சிலர் குறிப்புகளைக் கொடுத்திருப்பார்கள். கொடுத்தவர்கள் யார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உண்மை நிலைமை என்ன என்பதைச் சொல்கிறேன். நர்சஸைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு ஒருவர் தலைவராக இருக்கிறார். அவர்தான் இப்படிப்பட்ட பிரச்சாரத்தைப் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பெண் செவிலியர்களுக்கு இவர் சொல்லிக் கொடுக்கிறார். ஆண்களுக்கு இருக்கக்கூடிய செவிலியர் பதவிகள் போதாது என்று இவர்கள் ஆவல் முறையிடக் கூடிய அளவில் இருக்கிறார்கள். இதை நான் பகிரங்கமாகச் சொல்கிறேன். இவர்களுக்காக 'பெண் நர்சஸ் வாதாடத் தான் வேண்டுமா? 95 சதவிகிதம் பெண் நர்சஸ் இருக்கிற ஒரு பெரிய இயக்கம் ஆண் நர்சுகளுக்காக வாதாடுகிறது.

" Some sort of threatening is going on. Some sort of blackmailing is going on "

என்று நான் சொல்கிறேன். அப்படி இல்லையென்றால், இப்படி அவர்கள் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பரிவுடன் நர்சஸ் கோரிக்கைகளை இந்த அரசு கவனிக்கும். ஆனால்

'If they think that they can hold the entire nursing profession to ransom, it is not correct and the Government will not take it easy'.

என்கிற அளவிற்கு ஏதோ இந்த அரசை இயக்கத்தின் மூலம் மிரட்டலாம் என்று சொன்னால் அல்லது இந்த நர்சுகளுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லாமல் செய்யலாம் என்று முயற்சி செய்தால், அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு நர்சுகளுக்காக ஏறக்குறைய 1 கோடி 10 லட்சம் ரூபாய் செலவில் இரண்டு பெரிய கட்டடப் பிரிவுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். இதைக் கட்டுவதற்கு மட்டும் இவ்வளவு தொகையை அரசு ஒதுக்கியிருக்கிறது. 'at one stroke of the pen' இதை ஒரே ஒரு உத்தரவின் மூலம் செய்திருக்கிறோம். அதோடு கூட நர்சஸ் எண்ணிக்கையையும் கூட உயர்த்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு டி.எம்.இ. சைடில் 2621 பேரும், டி எச் எஸ் மற்றும் பேமிலி பிளானிங் வெல்பேர் சைடில் 2561 பேரும் பணியாற்றுகிறார்கள்.

'Head Nurses, Nursing Superintendents Grade I and II. Graduate Nurses are appointed and Nursing Tutors Grade I and II. Tutors in Nursing and Readers in Nursing.

Scales of pay: Nurses 450–20–590–25–740–30–800.

Head Nurse Graduate 525–25–675–30–855–35–925.

Nursing Superintendent Grade II 600–30–750–35–890–40–1,050.

என்கிற அடிப்படையிலே அவர்களுக்கு கிரேடுகளும், சம்பளங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த அரசு, ஏற்கனவே நான் சொன்னது மாதிரி எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இவர்களுக்காக ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறோம். யாரும் சொல்லாமலேயே, ஒரு கோரிக்கையும் விடாமலே இதைச் செய்திருக்கிறோம். டி.எம்.இ., மன், ஹெல்த் செக்ரட்டரி ஆகிய 3 பேர் அடங்கிய ஒரு கமிட்டியைப் போட்டு

'Director of Medical Education. Health Secretary and Dean of General Hospital—to go into the entire working of. promotion of the nurses'

என்கிற அடிப்படையில் அவர்களுடைய பிரச்சினைகள் சம்பந்தமாகப் பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறோம். என்னென்ன [illegible]

(பிற்பகல் 1-40)

அவர்களுக்கு டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ் என்லார்ஜ் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நர்சுகளுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இருக்க





வேண்டிய தேவையில்லை. அவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவது மிகவும் அவசியம். அப்போதுதான் load of work குறையும். அதற்காக என்று நாம் உடனடியாக ஆயிரம் அல்லது இரண்டாயிரம் என்று பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை உயர்த்தினால், அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பயிற்சியின் தரம், ஸ்டாண்டர்டு, குறைந்துவிடும். அதையும் இப்போது நாம் கவனித்துக்கொண்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக—மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவன் அவர்கள் ஆனரரி டாக்டர்கள் பற்றிச் சொன்னார்கள். 'ஆனரரி டாக்டர்கள்' பிரச்சினை குறித்து கொள்கை ரீதியிலே நம்முடைய கேபினெட்டிலே ஒரு முடிவெடுத்தோம். ஏனென்றால் பல கருத்துக்கள் இருக்கக்கூடும் என்பதனால் அதற்குப் பிறகு பல ஆண்டுகளாக இருக்கும் அனுபவத்தைப் பார்க்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கும் இந்த அனுபவம் இருக்கும் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று நான் அன்றைக்கு எதிர்க்கட்சியிலே இருந்தபோது, பேராசிரியர் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, நாங்கள் பேசினோம். இது உடனடியாக எடுக்கக்கூடியது அல்ல, எடுப்பதிலே பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. சில நேரங்களிலே நமக்கு 'ஆனரரி டாக்டர்கள்' தேவைப்படுகிறார்கள் என்கிற எண்ணம் வருகிறது. அங்கே நல்ல பயிற்சி பெற்ற பலர் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரையும் நாம் இழந்துவிடுவது நல்லதா என்பதுதான் பிரச்சினை. அந்தப் பிரச்சினை வரும்போது, ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது. இந்த 'ஆனரரி டாக்டர்கள்' மருத்துவ மனைகளை தங்களுடைய சொந்தப் பயனுக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் ஒரு வாய்ப்பு இருக்கிறது, நாம் அதைத் தடுத்தாக வேண்டும் என்று திட்டவட்டமாகச் சொல்லி உத்தரவு போட்டிருக்கிறோம். தவறு நடந்தால் வழக்குகள் வேண்டுமானாலும் போடுங்கள், யார் எப்படிப்பட்ட டாக்டராக இருந்தாலும், அவர்கள் ஃபுல் டைம் அரசாங்க டாக்டர்களாக இருந்தாலும் சரி, ஆனரரி என்ற முறையிலே கௌரவ டாக்டர்களாக இருந்தாலும் சரி, அரசாங்க மருத்துவ மனைகளைத் தவறாக துஷ்பிரயோகம் செய்யக்கூடிய டாக்டர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லும் கருத்திலே எனக்கும் நூற்றுக்கு நூறு உடன்பாடு உண்டு. ஏனென்றால் அதிலே தயவு தாட்சண்யம் இருக்கக்கூடாது என்பதற்காக நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது செயலாளராக இருக்கும் அவர்களிடத்திலே இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறோம். நீங்கள் இதை நேரடியாகப் பார்த்து, தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்

சொல்லியிருக்கிறோம். மேலும் நீங்கள் இதுபற்றி எடுக்கும் நடவடிக்கைகளை வெளி உலகிற்குத் தெரிவியுங்கள் என்றும் இந்த அரசின் மூலமாக அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். இது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஆனரரி டாக்டர்களாக இருந்தாலும் மற்ற டாக்டர்களாக இருந்தாலும், மருத்துவமனைகளைத் தங்களுடைய சொந்த நலத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். இங்கே அட்வைசரி கமிட்டி பற்றிப் பேசப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் மதுரையைப்பற்றிப் பேசினார்கள். அங்கே மற்ற கட்சிகளைச் சார்ந்த 3 உறுப்பினர்களை வைத்திருக்கிறோம். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். அவர்தான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்—அவரிடத்திலே பேசியிருக்கிறேன். 3 பேர்களை நாம் நேரடியாக நியமித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்களையும் அதிலே இருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். திரு. சங்கரய்யா அவர்களையும் இருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அவர்கள் ஒரு கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள்; என்னவென்றால் "எனக்கு வேறு வேலை இருக்கிறது. ஆகவே, எனக்குப் பதிலாக வேறு ஒருவரைப் போடுங்கள்" என்று இன்னொரு பெயரைக் கொடுத்திருக்கிறார். அதை நான் அனுப்பிக் கொடுத்திருக்கிறேன். திருமதி ராதா தியாகராஜன் என்ற சமூக சேவகியையும் நியமித்திருக்கிறோம். இங்கே எத்தனை பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது கூட பிரச்சினையல்ல. எந்த நேரத்திலே எந்தக் காரியத்தை வேண்டுமானாலும் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் பேசினார்கள். பேசின உடனே ஒரு கடிதத்தைக் கொடுத்து, தொலைபேசி மூலமாக என்ன நிலைமை இருக்கிறது என்று கேட்டறிந்து உடனடியாகச் சொல்லியிருக்கிறேன். We are very sensitive to the opinions of the legislators. ஆகவே இதிலே எந்த விதத்திலேயும் தனிப்பட்ட முறையிலே பிரச்சினைகள் வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இரண்டு முக்கியமான பிரச்சினைகள்பற்றிச் சொன்னார்கள். திண்டிவனத்திலே இருக்கக்கூடிய நிலைமைகளைப்பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் கூட கேள்விப்பட்டேன். நான் அங்கே சென்ற நேரத்திலே அங்கே இருக்கும் ஹெல்த் ஆபீசரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன். முனிசிபல் கமிஷனர் அவர்களை அழைத்து, இப்படி ஒரு தவறான நிலைமை நடந்து கொண்டிருப்பதாக அறிந்தேன்; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூட சொன்னார்கள், அதைக் கவனிக்க





வேண்டும் என்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இப்போது மீண்டும் இங்கே சொன்னதிலிருந்து அது இன்றும் கவனிக்கப்படாமல் இருக்கிறது என்று புரிகிறது. ஆகவே, செக்ரட்டேரியேட்டிலிருந்து உடனடியாக இதைக் கவனிக்கச் சொல்லி, தேவைப்பட்டால் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கக்கூடச் சொல்லலாம்.

இன்னொன்றும் சொல்லியிருக்கிறேன் அங்கே 'ப்ளட் பாங்க்'-க்குத் தண்ணீர் இல்லை என்று சொன்னார்கள். நான் நான்கைந்து நாட்களுக்கு முன்னாலேயே இதை மாண்புமிகு உறுப்பினர் திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் கேட்பார்கள், அதற்கு நான் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று சொல்லி, டாக்டர் வேணுகோபால் அவர்களை அனுப்பி, உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறேன். எவ்வளவு ஆழமாகப் போனாலும் தண்ணீர் கிடைக்கவில்லை, அதற்கென்று வேறொரு திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. விரைவில் அதைச் செய்து அதற்கான பதிலையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு அனுப்புவேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு பெரிய பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அது நம்முடைய இலாக்காவிலே நடைபெறுகிற தவறு என்ற அளவிலே அவர்கள் பேசுகிறபோது நான் குறுக்கிடவில்லை. Family Planning-ஐப் பொறுத்தவரையில், என்னிடம் இருப்பதை நான் படித்துவிடுகிறேன், அதாவது அவர் சொன்னது உண்மைதான், ஆனால் அந்த உண்மைக்குக் காரணம் வேறு

It has been observed that the patient who delivered outside has been selected for tubectomy operation and proposals are sent for the payment of ex-gratia amounts in spite of repeated instructions. The Government of India had issued strict instructions forbidding operations to such cases and disciplinary action to be initiated against the medical officer who performed the operation.

இதுதான் உத்தரவு வந்திருக்கிறது. அதைப்பற்றி நான் கேட்டதற்கு எனக்குக் கிடைத்திருக்கும் தகவல், மத்திய அரசிலிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. என்னவென்றால், Family Planning operationகளுக்கு வெளியே டெலிவரி செய்துவிட்டு அவர்கள் ஆப்பரேஷன் செய்ய வேண்டும் என்று வந்தால் அவர்களை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று மத்திய அரசு கடிதம் அனுப்பியிருக்கிறது. அதுபற்றி நாம் அவர்களோடு

தொடர்பு கொண்டு அப்படிச் சொல்வது நியாயமானதல்ல, இப்படிச் செய்வதால், உண்மையாகவே ஆப்பரேஷன் செய்துகொள்ள வேண்டும் என்று விரும்பக்கூடியவர்களுக்கே ஒரு வாய்ப்பில்லாமல் போய்விடும் நிலை ஏற்படும் என்ற அடிப்படையிலே நமக்கும் மத்திய அரசுக்கும் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. மத்திய அரசிலிருந்து ஆல் இந்தியா அளவிலே ஒரு கைட்லைன்ஸ் (guidelines) கொடுத்திருக்கிறார்கள். இந்த உண்மைகளைப் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பு இழந்தவர்கள் யாராவது ஒருவர் அவ்வாறு சுற்றறிக்கை எழுதியிருப்பார்கள் என்று நம்புகிறேன். அந்தத் தவறைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். நிச்சயமாகத் திருத்துவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மத்திய அரசின் முடிவு ஒரு பக்கம் இருந்தாலும், மாநில அரசு அதுபற்றிய ஒரு முடிவை எடுப்பதற்கு முன்னதாகவே எப்படி அந்த அதிகாரி இப்படிப்பட்ட சுற்றறிக்கையை அனுப்பினார் என்பதுதான் பிரச்சினை. இந்த மாநிலத்தினுடைய ஒரு அதிகாரியால் எப்படி அந்தச் சுற்றறிக்கையை அனுப்ப முடிந்தது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** உடனடியாக அவர்களிடம் இதுபற்றி விளக்கம் கேட்டோம். நான் சேலத்திற்குப் போகும்போது, அங்கே உள்ள டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீசர் வருத்தப்பட்டார். இப்படி டெப்யூட்டி டைரக்டர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்று சொல்லி வருத்தப் பட்டார். விசாரித்ததில் இப்படி ஒரு சமாதானம் சொல்லியிருக்கிறார். என்ன வென்றால் மத்திய அரசினுடைய கடிதத்தின் அடிப்படையிலே எழுதியிருக் கிறேன் என்று சொன்னார்கள். நான் இப்போது சொல்கிறேன்.

Thiru K. RAMAMOORTHY : It is a policy matter and it must have been brought to the notice of the Government or Minister concerned. How is it that the officer has acted for himself even without referring it to the higher officers or the Minister concerned?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நான் யாரையாவது காப்பாற்ற வேண்டும் என்று சொல்லவில்லை. அவர்கள் நேரடியாக இருக்கும் நிலைமையைச் சொல்லியிருக்கிறார்கள். டெப்யூட்டி டைரக்டர் ஆஃப் ஃபேமிலி பிளானிங் என்று ஒரு போஸ்ட் இருக்கிறது. ஆல் இந்தியா அளவிலே பேமிலி பிளானிங் டிப்பார்ட்மெண்ட் இருக்கிறது.

Department to Department letter. If it is Government to Government letter, it would have been brought to my notice. Because it is Department to Department, it has not been





brought to my notice. I checked it up with the Deputy Director. He showed me the letter and immediately I asked the Secretary to write to the Central Government and rectify the mistake because I did not agree with that.

அவர்கள் தாங்களாகவே ஆப்பரேஷன் செய்து கொள்கிறோம் என்று முன்வரும்போது அந்த வாய்ப்பை நாம் இழந்துவிட்டு நிற்கக்கூடாது. நம்முடைய புள்ளிவிவரம் குறையக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். அதேநேரத்தில் இன்னொரு விஷயத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஃபேமிலி பிளானிங் புள்ளிவிவரம் 73 சதவிகிதம் என்று சொன்னார்கள். அது ப்ரப்போர்ஷனல் டார்கெட். ஒரு வருஷத்திற்கு இவ்வளவு டார்கெட் என்ற வகையிலே, அதாவது 1 இலட்சத்தி 82 ஆயிரம் என்று சொல்லும்போது, அந்த 10 மாத காலத்திற்கு எவ்வளவு இருக்கிறது என்று போட்டு, அதைத்தான் எடுத்திருக்கிறார்கள். எனக்கு இப்போது இருக்கும் லேட்டஸ்ட் இன்ஃபர் மேஷனைப் பார்த்தால்—அதுபற்றி நான் சட்டமன்றப் பேரவையிலே 11 ஆம் தேதி பேசினேன், இன்று 22 ஆம் தேதி பேசுகிறேன்—இந்த இடைப்பட்ட காலத்திலே அந்தப் புள்ளிவிவரம் வேகமாக முன்னேற்றம் அடைந்திருக்கிறது. 99.9 per cent we are sure to reach the target. அதற்கப்புறம் சொன்னால், மத்திய மினிஸ்டர் கூட இங்கே வந்து 'செலி பிரேட்' பண்ணுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். இது ஒரு satisfactory பதிலாக இருக்கும் என்ற முறையிலே சொல்கிறேன்.

அடுத்தபடியாக, ட்ரக் கண்ட்ரோல் பற்றிச் சொன்னார்கள். 'ஜெனரல் ஹாஸ்பிட்டலிலே இருக்கும் மருந்துகளுக்கு யார் பொறுப்பு ' என்று கேட்டார்கள். அதற்காகத்தான் இப்போது ஹாத்தி கமிட்டியின் ரிப்போர்ட் அடிப்படையிலே, தனியாக ஒரு டைரக்டரைப் போட்டிருக்கிறோம்.

We have separated the Drug Control Director. He does not have to answer any other Director, his is not subordinate to D.M.S. or D.M.E. he is subordinate to Health Secretary. ஆகவே, Hathi Committee report is the only solution for that.

(பிற்பகல் 1.50)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, புள்ளிவிவரம் தரும்போது அது சரியாக இருக்க வேண்டும் என்பதுதான். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் முழுமையாக வெற்றி பெற்றிருந்தால், நான் அதைப் பாராட்டுகிறேன். அது

வேறு விஷயம். ஆனால் புள்ளிவிவரத்தைத் தரும்போது, தமிழ் நாட்டிற்குக் கொடுக்கப்பட்ட இலக்கு 1,82,000 பேர் என்று சொல்லிவிட்டு, கடந்த 10 மாதங்களில் செய்திருப்பது 1,23,000 என்று சொல்லிவிட்டு, அதையே சதவிகிதத்தில் கணக்கிடும்போது, 83 சதவிகிதம் என்று தவறாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதுதான் நான் சொன்ன கருத்து.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** உண்மைதான். நமக்குக் கொடுக்கப்பட்ட இலக்கு 1,82,000 பேர். அதில் 10 மாதத்தில் 1,23,000 பேர் செய்திருக்கிறோம் என்றால், அதில் ஒரு வருஷத்திற்கு எவ்வளவு சதவிதம் என்று பார்க்கக்கூடாது, 10 மாதத்திற்கு எவ்வளவு சதவிதம் என்று பாருங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். 6 மாதத்திற்கு ஒரு முறை நாம் ரெவ்யூ செய்கிறோம். அப்போது லட்சம் பேருக்கு நாம் அறுவை சிகிச்சை செய்திருக்கிறோம் என்றால், நாம் அதிகாரிகளைப் பாராட்டுகிறோம். காரணம் அது 100 சதவிதத்திற்கும் அதிகமாக இருக்கும். அந்த அடிப்படையில் 10 மாத காலத்திற்கு நாம் செய்திருப்பதைக் கணக்கிட்டால், அது 83 சதவிகிதம் ஆகிறது. அதாவது மாதத்திற்கு இவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்தால், இது சரியாக விளங்கும். 10 மாதத்திற்குரிய டார்கெட்டில் எவ்வளவு செய்திருக்கிறோம் என்பதன் அடிப்படையில்தான் அந்த பர்செண்டேஜைச் சொல்லியிருக்கிறோம். அதை இன்னும் கொஞ்சம் கிளியராகப் போட்டிருந்தால், இந்தக் கன்பியூஷன் வந்திருக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது போட்டிருப்பது 10 மாதத்திற்கான ப்ரபோர்ஷனல் டார்கெட். இன்னும் 2 மாத காலத்தில் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கூட 'அச்சீவ்' செய்யலாம் என்றுதான் நான் நம்புகிறேன்.

அடுத்து, கண் சிகிச்சையைப் பொறுத்தவரை, குறைபாடுகளைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கொஞ்சம் வேகமாகச் சொல்லியிருந்தாலும் அதைக் குறித்து எனக்கு எந்தவிதமான வருத்தமும் இல்லை. அவர் இங்கே ஒரு கருத்தைச் சொன்னதன் விளைவாக நான் அவையில் ஒரு நல்ல சந்தோஷமான செய்தியைக் கொடுக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கண் சிகிச்சை முகாம் எண்ணிக்கைகள் படிப்படியாகக் குறைந்து கொண்டே இருந்தது. சென்ற ஆண்டு ரெவ்யூ மீட்டிங் போது பார்த்தபோது 12,000 தான் செய்திருந்தார்கள். குறைந்தது 20,000 ஆவது செய்யவில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்ன மாதிரி "We will take disciplinary action" என்று சொன்னேன். என்னைப் பற்றி நண்பர்கள் தமாஷாகச் சொல்லுவார்கள். அமைச்சரை ஏதாவது ரிப்பனுக்கு அழைக்க வேண்டும் என்றால் கண் சிகிச்சை முகாமுக்கு வாருங்கள் என்று கூப்பிடுங்கள். கண்டிப்பாக



வந்து விடுவார் என்று சொல்வார்கள். அதுமட்டுமல்ல, நானே பல அமைச்சர்களிடம் இதற்காகத் தேதி வாங்கிக் கொடுத்து, அவர்களுக்கு உற்சாகம் கொடுக்க வேண்டும் என்று பல நேரங்களில் செய்திருக்கிறேன். இப்போது ஏறத்தாழ 10,000 செய்திருக்கிறார்கள். 20,000 கண்டிப்பாக முடிந்து விடும். 200, 300 அதிகமானாலும் ஆகலாம். செங்கற்பட்டு மாவட்டம் பக்கத்தில் இருப்பதால், நான் அடிக்கடி போய்ப் பார்க்க முடிந்தது. அதைப்போலவே தென்னார்க்காடு மாவட்டம் 3,000 வரை வந்திருக்கிறது. 100 அல்லது 200 தான் குறையும். இன்னும் 2 கேம்ப் அங்கே இருக்கிறது. ஆகவே அந்த அளவுக்கு எட்டிவிட முடியும். ஆனால் என்னுடைய ஆசை 40,000 செய்ய வேண்டும் என்பதாகும். ஆசை மட்டும் இருந்தால் போதாது. இதில் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். காரணம் நமக்கே ஒரு பயம் உண்டு. கொஞ்சம் அவசரப்பட்டு ஒரு கேஸ் கெட்டுப்போய்விட்டால், அது பெரிய பிரச்சினையாகி, பலர் அதைப்பற்றிப் பேசுகிற அளவுக்குப் போய் விடும். நமக்கு ஏமாற்றத்தை உருவாக்கிவிடும் வாய்ப்பு ஏற்படும் என்பதால், ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது.

அடுத்து, இறப்பு சதவிகிதத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஒட்டுமொத்தமாக 'டெத் ரேட்' குறைந்துகொண்டுதான் இருக்கிறது. உங்களிடம் பாராட்டுதல்களை எதிர்பார்த்து நான் இங்கே எதையும் சொல்ல விரும்பவில்லை. உண்மையிலேயே இறப்பு விகிதத்தைக் குறைப்பதில் நாம் ஒரு சாதனையையே ஏற்படுத்தியிருக்கிறோம். சிறு குழந்தைகளின் இறப்பு விகிதத்தில் நம்முடைய சாதனை போதாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும், அது இந்த ஆண்டு 98 என்ற அளவில் இருக்கிறது. சென்ற ஆண்டு 100 க்கு 100 என்று இருந்தது இந்த ஆண்டு 98 என்ற அளவுக்கு வந்திருக்கிறது. அதே நேரத்தில் இறப்பு விகிதத்தைப் பொறுத்த வரையில், கீழ்க்கண்டவாறு இருக்கிறது :—

1975ல் இறப்பு விகிதம்—15 (1000க்கு)
1976ல் ,, —14.7 ,,
1977ல் ,, —13.7 ,,
1978ல் ,, —12.8 ,,
1979ல் ,, —12,00 ,,
1980ல் ,, —12.9 ,,

ஏற்கெனவே இந்த விகிதம் குறைந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்திருந்தும் இப்போது அதிகாரிகளிடம் இந்தக் குறிப்புகள் தேவை என்று கேட்டு வரவழைத்தேன். அந்தப் புள்ளிவிவரங்களைத்தான் நான் இங்கே படித்தேன்;

அவை சரியாக இருக்கும் என்றுதான் நான் நம்புகிறேன். அந்த வகையில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.
நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து, கலப்படம்பற்றிப் பேசினார்கள். ஒரு பிரச்சினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்காது என்று நம்புகிறேன். பழைய சட்டத்தில் இருக்கிற விதிகள் அவ்வளவு கடுமையாக இல்லாமல் இருந்தது. இப்போது மத்திய அரசு புதிய சட்டம் ஒன்று கொண்டு வந்திருக்கிறது. அந்தச் சட்டம் வந்த பிறகு, கலப்படம் செய்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அதிகமான தண்டனை பெறுகிற வாய்ப்பு நிறைய இருக்கிறது. நாமேகூட ஹைகோர்ட்டுக்கு எழுதினோம். இதையும் நாம் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டியிருக்கிறது.

Without impinging on the rights of the Supreme Court பார்த்துக் கொள்ள வேண்டும். We brought it to the attention of the Court 'கன்விக்ஷன்' வாங்குவதில் சங்கடம் இருக்கிறது. கன்விக்ஷன் வாங்க வேண்டும் என்ற நிலைமை உருவாகி இருக்கிறது என்றெல்லாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்களும் அதைப் பார்க்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

கழிவு நீரைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டு, இராணிப்பேட்டையில் இப்படியெல்லாம் இருக்கிறது என்று சொன்னார்கள். கழிவு நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை, எங்களுக்கு எந்தவிதமான தாட்சண்யமும் கிடையாது, யாருக்கும் தாட்சண்யம் காட்டவும் இல்லை. ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் இதைச் செய்யவில்லை என்றால், உங்களுடைய லைசென்சுகள் ரத்து செய்யப்படும் என்று வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள அத்தனை தொழிற்சாலைகளுக்கும் நாங்கள் உத்தரவு போட்டுவிட்டோம். அதற்குப் பிறகு ஒரு படையாக அவர்கள் எங்களிடம் வந்தார்கள். நானும் பிற தொழில்கள் அமைச்சர் அவர்களை அழைத்து அவர்களோடு உட்கார்ந்து பேசினேன். நாம் இதில் இரண்டு பக்கத்தின் நிலைமைகளையும் பார்க்க வேண்டியிருக்கிறது. நாங்கள் அரசாங்கத்திலிருந்து இன்னின்ன உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறோம். நீங்கள் இன்னின்னது செய்ய வேண்டும் என்று அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னோம். அதற்குப் பிறகு அவர்கள் இன்னும் ஒரு 6 மாதம் தவணை வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களின் கருத்துக்கள் நிச்சயம் பயன்படக் கூடியவை.





I hope and trust the views expressed will be taken note of by all the persons, both the industrialists ........ மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர். இராணிப்பேட்டையிலும் மற்ற இடத்திலும் இருக்கிற பிரச்சினைகள் அவருக்கு நன்கு தெரியும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் தமிழ் நாடு முழுவதற்குமாகத்தான் சொன்னேன். குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் இத்தகைய தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. இதன் காரணமாக இந்தக் கழிவுநீர் பல கிராமங்களில் உள்ள குடிநீரையே பாதித்திருக்கிறது. மக்களுக்குச் சரியான குடிநீரே கிடைக்கவில்லை என்ற சூழ்நிலைதான் அங்கே இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** கன்னியாகுமரியில் அம்பாடி என்டர்பிரைசஸ் என்று இருக்கிறது. அதைப்பற்றிக்கூட ஒரு கேள்வி வந்த போது நான் பதில் கொடுத்திருக்கிறேன். இப்போது இருக்கிற ஒரு சௌகர்யம் என்னவென்றால், இந்த ஆண்டு புதிய சட்டம் வந்திருக்கிற காரணத்தால், அரசாங்கம் இந்த வகையில் அதிகமான அதிகாரத்தைப் பெற்றதாக இருக்கிறது. என்வைரான்மெண்ட்டல் பொல்யூஷனைத் தடுக்க அதிகாரம் இருக்கிறது.

கொட்டாம்பட்டி திட்டம் ஒரு அருமையான திட்டம். அது ஒரு இன்டகிரேட்டட் ஸ்கீம் 'பப்ளிக் ஹெல்த்' மற்றும் 'சோஷல் வெல்பேர்' இரண்டும் இணைந்து செயல்படுத்தும் திட்டம். பப்ளிக் ஹெல்த்தின் பணமும் இன்புட்டும் (input) அதில் இருக்கின்றன. ஆக இந்த இரண்டு டிபார்ட்டுமெண்டுகளும் சேர்ந்து, 6 மாவட்டங்களுக்காக எடுத்துக் கொண்டிருக்கிற புதிய முயற்சி இது. இதில் என்ன நடந்தது என்றால், இதற்கான பணத்தை உலக வங்கி தருகிறது. ஆகவே அவர்களே 'கைடுலைன்ஸ்' தருகிறார்கள். அவர்கள் திட்டவட்டமாகப் பார்த்துவிட்டுத்தான் உதவி செய்கிறார்கள். அவ்வப்போது நேரில் வந்து பார்த்துவிட்டுத்தான் உதவி செய்கிறார்கள்.

"You prepare all the infrastructure. எப்படி செய்யப் போகிறீர்கள் என்று எங்களிடம் சொல்லுங்கள். ஸ்டாபிங் பேட்டர்னை இனியாராகப் போட்டுக் கொடுங்கள்." என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு அதை ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்தில் ஓராண்டுக் காலத்திற்கு நடைமுறைப்படுத்திப் பார்த்து அது வெற்றி பெற்ற பிறகு மற்ற இடங்களுக்கும் அதை விரிவுபடுத்தலாம் என்று சொல்லப்பட்டது.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 மார்ச் 22

Everything is constantly monitored by the World Bank people. They come very frequently and they are very intelligent people.
உலக வங்கியைச் சார்ந்தவர்கள் மிகவும் சாமர்த்தியசாலிகள். எங்களுக்கு யார் உதவி செய்கிறார்கள் என்பது பிரச்சினையல்ல. ரஷ்யா கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறோம், வேறு யார் கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறோம். அதில் எனக்கு அலர்ஜி இல்லை . . .

திரு. ஆ. நல்லசிவன் : எனக்குக்கூட அதில் ஒன்றும் அலர்ஜி இல்லை. என்னுடைய அரசியல் பொருளாதாரக் கருத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள், ஆனால் உங்களுடைய அரசியல் பொருளாதாரக் கருத்தை ஏற்றுக் கொள்கிறவர்கள்கூட இத்தனை கண்டிஷன்களோடு உலக வங்கி உதவியை வாங்குவது தவறு என்று சொல்லியிருக்கிறார்களே என்றுதான் நான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே,
Let us not bring in the Central Budget Controversy here
எனவே அதை இதோடு விட்டுவிடுகிறேன்.

அடுத்து, யாருக்கு நல்வாழ்வுக் கல்வி என்று கேட்டார்கள். அதாவது ஹெல்த் எஜுகேஷன் யாருக்கு என்று கேட்கப்பட்டதால், அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதாவது "(1) பொதுமக்கள், (2) ஆக்சிலரி ஹெல்த் ஒர்க்கர்ஸ், (3) பாரா மெடிகல் ஒர்க்கர்ஸ், (4) ஹாஸ்பிடல் ஹெல்த் எஜுகேஷன் டு பேஷண்ட்ஸ் அண்டு தேர் அட்டெண்டண்ட்ஸ்" ஆக இவர்களுக்கெல்லாம் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவரங்களையெல்லாம் இங்கே போடவில்லை என்று நினைக்கிறேன். அவைகளையும் போட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். புத்தகம் பெரிதாக இருந்தால், யாரும் படிக்கமாட்டார்கள் என்று போடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி எவ்வளவு பெரிதாக இருந்தாலும், படிக்கிறார் என்பதை நான் அறிவேன். அதில் எனக்குச் சந்தேகமில்லை.

அடுத்து, இன்னொரு கேள்வி கேட்டார்கள். அதாவது வாட்டர் சப்ளை கொடுக்கிற கிராமங்களின் எண்ணிக்கைக்கும் டானிடாவில் சொல்லப்பட்டிருக்கிற புள்ளிவிவரத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். இதைப் பொறுத்தவரையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது



1982 மார்ச் 22] [டாக்டர் எச். வி. ஹண்டே]

(பிற்பகல் 2.00)

The number of villages for water-supply takes into consideration the coverage under TWAD Board already done. They include habitations with water-supply, whereas the coverage given under Health programme are revenue villages. That is the reason for differences in the figures of beneficiaries also.

அந்த வகையிலே இன்னுமொரு விஷயத்தைச் சொல்லுகிறேன். இது ரொம்பவும் ஹாஸ்யமாக இருக்கும். இரண்டு மாவட்டம்தானா என்று கேட்டார்கள். 6 மாவட்டங்கள் உலக வங்கித் திட்டத்தின் கீழ். இரண்டு மாவட்டங்கள் டானிடா திட்டத்தின்கீழ். தமிழக சர்க்கார் உடனடியாக ஐந்தாயிரம் பேர் உள்ள எல்லா கிராமங்களுக்கும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை ஏற்படுத்தப் போகிறது. விட்டுப் போன கிராமங்களில் படிப்படியாக ஏற்படுத்தவிருக்கிறோம். ஒரு நல்ல செய்தி. எவ்வளவு கோபமாகப் பேசினாலும், இது குறித்து பாராட்டுவார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பாராட்டினார்கள்.

முதலில் மத்தியப் பிரதேசத்திற்குத்தான் உத்தரவு போட்டார்கள். டானிஷ் பிரதமர் வந்தபோதுதான் அந்த புராஜெக்டுக்கு கையெழுத்துப் போடப்பட்டது. நம்முடைய திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் கொஞ்சம் கூட கவலைப்பட்டமாதிரி தெரியவில்லை ஒரு காலக் கட்டத்திலே. இப்போது உடனடியாக 'எடுக்க வேண்டுமென்று சொல்லி, பிறகு 9 மாதங்களுக்குப் பிறகு வேகமாக பைலை 'புஷ்' பண்ணி, அங்கே ஒருவரை அனுப்பிய பிறகு, கையெழுத்துப் போட்டார்கள்.

Our agreement takes place 9 months after the agreement of Madhya Pradesh. அதற்குப் பிறகு 6 மாதங்களுக்குள்ளே நில ஆர்ஜிதத்தை இரண்டு மாவட்டங்களில் 9 ஒன்றியங்களில் முடித்துவிட்டு அரசாணையை துரிதமாக வெளியிட்டு வேலை செய்திருக்கிறோம். பிறகு அவர்கள் மானிட்டர் பண்ண வந்தார்கள். நான் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கும் கடிதம் எழுதினேன். சேலம் மாவட்டத்தில் 28 ஆம் தேதி துவக்கினோம். 7 ஆம் தேதி கடலூரில் துவக்கினோம். எல்லா உறுப்பினர்களுக்கும் நானே நேரிடையாகக் கடிதம் எழுதினேன். இதிலே எல்லா உறுப்பினர்களும் கூடிட வேண்டுமென்று விரும்பினேன். இதிலே ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற பிரச்சினையே இல்லை. ஒன்றியங்களைக் கூட நாம் தேர்வு செய்யவில்லை. டேனிடா

எக்ஸ்பெர்ட் தேர்வு செய்திருக்கிறார்கள். இது ஒரு அருமையான திட்டம். ஆனால் நம்முடைய செயல்முறையைப் பார்த்து, அவர்கள் அத்தனை பெரும் மகிழ்ச்சி அடைந்து ரூபாய் 16.5 கோடி திட்டத்திற்குப் பதிலாக இன்னும் கொஞ்சம் கூடுதலாக, அதாவது 30 கோடி ரூபாயைக் கொடுக்கக் கூடிய அளவிற்கு அவர்கள் திருப்தி அடைந்திருக்கிறார்கள். மற்றவர்களுக்குச் சங்கடம் வரும் என்பதால், இன்னும் சில விஷயங்களை நான் சொல்லவில்லை.

They were so satisfied.

"You had been so fast. We would like you to think in terms of water now, if it comes in the Health Project." என்று சொன்னார்கள்.

ஆகவே அந்த வகையிலே செய்திருக்கிறோம். இப்படி பல திட்டங்களைச் சொல்லிக் கொண்டே போனால், நிறைய நேரம் ஆகும்.

மலேரியா எராடிக்கேஷனைப் பொறுத்த வரையில், 8.53 இலட்சம் ரூபாயில் சென்ட்ரல் ஸ்கிம் இருக்கிறது. இதிலே கொஞ்சம் ஏமாந்திருந்தால், 'மிஸ்' பண்ணியிருப்போம். இதைப்பற்றி என்னிடம் ஒரு ஆபிசர் சொன்னார். உடனடியாக பைலை தேடிக் கண்டுபிடித்து 17-3-1982 அன்று உத்தரவு போட்டு ரூபாய் 8.53 இலட்சம் ரூபாய்க்குத் திட்டம் போட்டிருக்கிறோம். அதிலே ஸ்டீர்-அப் இரண்டாயிரம், பார்வார்ட் கன்ட்ரோல் வண்டிகள் 15, 24 ட்ரெய்லர்கள், ஆக அது ஒரு பெரிய திட்டமாக இருக்கிறது. மலேரியா ஒழிப்பு என்பது சென்னை நகரத்திலே பெரிய பிரச்சினையாக இருக்கிறது. பணம் நாம் கொடுக்க வேண்டியிருப்பதால் சென்னை நகரத்திற்காக கிட்டத் தட்ட 20 இலட்சத்து 99 ஆயிரம் என்றும், ஆக மொத்தமாக 25 இலட்சம் என்றும் கொடுத்திருக்கிறோம். அதை சட்டசபையிலே கூட அறிவித்திருக் கிறேன். அது நல்ல வகையிலே நடைபெறும் என்று கருதுகிறேன்.

தொழுநோய் பற்றி மிகத் தெளிவாக 'நோட்' அனுப்புகிறேன். அதைப் பற்றிப் பத்திரிகையிலே கூட எழுதியிருக்கிறார்கள். 7 கோடி பேர் பாதிக்கப் பட்டிருக்கிறது என்று போட்டார்கள். பத்திரிகையிலே அப்படித்தான் எழுதுவார்கள். அதிலே தப்பில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நாங்கள் கண்டுபிடித்து அந்த எண்ணிக் கையைப் போடவில்லை. நீங்கள் கொடுத்திருக்கிற புத்தகத்தில்தான் அப்படி இருக்கிறது. புத்தகத்திலே பார்த்தால் 7 கோடி 21 இலட்சம் பேருக்குத் தொழுநோய் பரிசோதனை செய்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். 4.8 கோடி மக்கள் தொகை இருக்கும்போது எப்படி இந்த எண்ணிக்கை வந்தது. என்று கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதைப்பற்றிச் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினருக்கும் பேராசிரியருக்கும் கூட ஒரு 'டீட்டெய்ல்ட் நோட்' அனுப்புகிறேன். 'இன்டென்சிவ் செக்-அப்' செய்திருக்கிறோம்.



தொழுநோய் சம்பந்தப்பட்ட முழு வேலையையும் மத்திய அரசினர் கண்காணிக் கிறார்கள். மத்திய அரசின் டாக்டர் பிரபு (Prabhu) இதைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதை மானிட்டர் செய்வ தற்காக திரு. மணி, அடிஷனல் செக்ரட்டரி, யூனியன் ஹெல்த் டிப்பார்ட்மென்ட் என்பவரை அப்பாயின்ட் செய்திருக்கிறார்கள். அவர்கள் எல்லா மாநில அதிகாரிகளையும் உட்கார்ந்திருக்கிற இடத்திலேயே, இருந்து மானிட்டர் செய்கிறார். சமீபத்தில் நடந்த அனைத்திந்திய அளவிலான கூட்டத்தில் நம்மைப் பாராட்டி

"the most commendable work as far as leprosy detection is concerned—90 per cent detection is going on in Tamil Nadu" என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே மிக நல்ல முறையிலே செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன். ஒரு நோயாளியை நான்கைந்து தடவை மாற்றி மாற்றி பரிசோதித்துப் பார்க்கிறோம். 'பேசஞ்சர் பாப்புலேஷன்' என்று சொல்லுவோம். அது உண்மையான மக்கள் தொகையைவிட அதிகமாக இருக்கும். ஏனென்றால் திரும்பத் திரும்ப அவர்களே போய்க் கொண்டிருப்பார்கள். ஆகவே அந்த முறையில் பார்த்துத்தான் இந்த புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்வீஸ் காண்டிடேட்டைப்பற்றிச் சொன்னார்கள். எம்.டி. (சோஷல் டிசீஸ்)-க்கு மூன்று இடங்கள்தான். மூன்று சர்வீஸ் கேண்டிடேட்டுகளை நியமித்துவிட்டோம் என்று சொன்னவுடனே நான் பைல்களை உடனே வரவழைத்துப் பார்த்தேன். எம்.டி. (செஸ்ட் டிசீசுக்கு) மூன்று பேர் செலக்ட் செய்திருக்கிறார்கள். மூன்று பேரும் சர்வீஸ் கேண்டிடேட்டுகள்தான். நான் நான் சர்வீஸ் கேண்டிடேட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள் என்று கைட்லைன்ஸ் கொடுத்திருக்கிறேன். இருப்பதைச் சொல்லுகிறேன், தயவு செய்து யாரும் தவறாக நினைத்துக்கொள்ள வேண்டாம். சென்ற ஆண்டு இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் நான்-சர்வீஸ் கேண்டிடேட்டுகள். பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். டாக்டர் வி. குழந்தைவேலு ஒருவர். இதை நான் சொல்லும்போது குற்றச்சாட்டாக நினைக்க வேண்டாம். எம்.பி.யின் பெயரை இந்த அவையில் பயன்படுத்துகிறேன் என்று நினைக்க வேண்டாம். இருக்கின்ற உண்மை உலகத்திற்குத் தெரிய வேண்டும் என்பதால் சொல்லு கிறேன். இன்னொருவர் டாக்டர் எ. கலாநிதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவர்கள் இருவரும் நான்-சர்வீஸ் கேண்டிடேட்டுகள். எம்.டி., செஸ்ட்

டிசியல்) பிரைவேட் பிராக்டீசுக்குத் தேவையில்லை. சர்விஸ் கேண்டிடேட்டுகள் மேலும் புரமோஷன் பெறுவதற்காகப் பயன்படுகிறது. ஆகவேதான் சர்விஸ் கேண்டிடேட்டுகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

To set right the injustice done to the service candidates last year, we have given guidelines to select service candidates and, therefore, three service candidates were selected.

அடுத்து என் மீது குற்றம் சாட்டப்பட்டது குறித்து, டாக்டர்கள் மகள் நடன அரங்கேற்றத்திற்குப் போகக் கூடாதுதான் இது நல்ல 'அட்வைஸ்'. இது எனக்கு ஒரு இஷ்டம் இல்லாத வேலை. அந்த 3 மணி நேரத்தை வேறு எதற்காவது ஒதுக்கி பயன்படுத்த முடியும். முடியாது என்று "பிளீஸ்" என்று கேட்டுக் கொண்டால், போகமாட்டேன் என்று உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது கூட பலபேர் தினமும் எதாவது நிகழ்ச்சிகள் இருக்கிறதே, வர வேண்டும் என்று குறைபட்டுக்கொள்கிறார்கள். அப்படி தொல்லை செய்து நேரம் வாங்குகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் யாராவது அதை வைத்துக்கொண்டு துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்றால், நிச்சயமாக அது ஒத்துக்கொள்ளக்கூடிய காரியமல்ல.

(பிற்பகல் 2-10)

Interview மார்க்குகளைப் பார்த்தேன். இங்கே போட்டிருக்கிறது திரு. எம். எஸ். சுப்பராமன் He has got four out of six அங்கத்தினர்கள் சொன்னதற்குப் பிறகு அதைப்பற்றிப் பார்த்தேன். இத்தோடு சேர்ந்து இன்னொன்றைச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய சகோதரனைப்பற்றிச் சொன்னார்கள். அவன் சமாசாரம் பற்றிச் சொன்னார்கள். எங்கள் குடும்பம் ஒரு பெரிய குடும்பம். நாங்கள் ஏழு பேர்கள் இருக்கிறோம். எல்லா விவரங்களையும் நான் ஏன் சொல்கிறேன் என்றால் எல்லாம் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். என் தகப்பனார் இந்த பேமிலி பிளானிங்கில் சீரியசாக இல்லை. ஆனால் இப்போது எங்களுக்கு 2, 2 பேர்கள்தான் இருக்கிறார்கள். என் சகோதரன் ஐ. ஏ. எஸ் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. எழுதி பெயில் ஆனவன். அவன் எங்கள் பேமிலியிலே ஒரு பிரில்லியண்ட் பாய். அவன் என் எலெக்ஷனுக்காக வேலை செய்தான். அண்ணா நகர் தேர்தலில் அவன் எனக்கு சீப் எலெக்ஷன் ஏஜெண்டாக இருந்தான். அதன் காரணமாகக் கொஞ்சம் கோபப்பட்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. நான் அந்தப் பணியை அப்போது அவனிடம் ஒப்படைத்து விட்டேன். இன்றைய தினம்கூட நான் அவனுக்கு சொல்லியிருக்கிறேன். எந்த கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கும் போகக்





கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறேன். அதை மீறினால் நிச்சயமாக என்ன செய்வேன் என்று தெரியாது என்று சொல்லியிருக்கிறேன். அதைப் பற்றி நான திட்டவட்டமாகச் சொல்லிவிட்டேன். அரசாங்க மருத்துவ மனைகளை எந்தக் காரணத்திற்கும் பயன்படுத்தக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். அவன் மெடிகல் ரெப்ரசன்டேடிவ் ஆக 10 வருடங்களாக இருந்து கொண்டிருக்கிறான். கொஞ்சம் வசதியாக இருந்தவன்தான். இன்றும்கூட அவன் ஸ்கூட்டரிலேதான் போகிறான். பகலும் இரவும் உழைக்கிறான். எல்லா டாக்டரிடமும் போய் பார்க்க வேண்டி இருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள்கூட ஒரு டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் வைத்திருக்கின்றார்கள். நான் அதைத் தப்பாகச் சொல்லவில்லை. அந்த இன்ஸ்டிட்யூட் ஓகோ ஓகோ என்றுதான் நடந்துகொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அதைப்பற்றி நான் தப்புச் சொல்லவில்லை. அப்படி நாம் ஒரு தொழிலைச் செய்வது, வைத்திருப்பது நல்லதுதான். அரசியலை வைத்துக் கொண்டு கண்டி நம்முடைய பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளக் கூடாது. எந்த காரணத்தைக் கொண்டும் நாம் அதைப் பயன்படுத்தக் கூடாது. அதுதான் என்னுடைய அழுத்தந்திருத்தமான கருத்து. நாம் பிழைக்க வேண்டுமென்றால், அரசியலுக்கு வரவேண்டிய நிலை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பத்திரிகையிலே எழுதியது பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. நான் வருத்தப்படுகிறேன். அவர்கள் கேட்கின்ற சந்தேகத்தையெல்லாம் நான் விளக்குகிறேன். அதையெல்லாம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இருந்தாலும்கூட என்னைப் பொறுத்தவரையில், சொல்கின்றேன். ஒரு காலத்திலே நான் ரூ. 12,500 வரையில் இன்கம்டாக்ஸ் கட்டினேன். அண்ணன் பி. டி. பி., என். வி. என். மதிப்பிற்குரிய பேராசிரியர் எல்லாம் எதிர்க்கட்சி வரிசையிலே உட்கார்ந்திருந்தோம். அப்போது வாங்கிய 5959 அம்பாசிடர் கார் இருக்கிறது இப்போதும். அதை நல்ல கண்டிஷனில் தான் வைத்திருக்கிறேன். அதை இன்னும் விற்கவில்லை. திடீரென்று வேண்டுமென்றால் இருக்கட்டும் என்று வைத்திருக்கிறோம். அந்த வண்டியில் ஏறாதவர்கள் கிடையாது. எல்லோரும் ஏறியிருக்கிறார்கள். 1958-59 லேயே ஏறியிருக்கிறார்கள். எனக்கு அதில் எவ்வளவோ சந்தோஷம்தான். அந்த அளவுக்கு நாம் பழகியிருக்கிறோம். இன்றைக்கு நாம் அரசியலிலே நாலு காசு சம்பாதிக்க வரவில்லை. அரசியலுக்கு வந்து விட்டோம் என்றால், தியாக உள்ளத்தோடு இருக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். டிஸ்பென்சரியிலே இருந்தால் என்னால் நிறைய சம்பாதிக்க முடியும். அதிலே கொஞ்சம் கூட கஷ்டமில்லை. 2 வருடத்தில் ரூபாய் 12 ஆயிரம் அளவுக்கு இன்கம்டாக்ஸ் கட்டியிருக்கிறேன். அப்படி. என்றால் என்னுடைய இன்கம் என்னவாக

இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். அதிலே நான் பிளாட் வாங்கினேன். இரண்டு கிரவுண்ட் நிலத்தை வேளச்சேரியிலே வாங்கினேன். அதை அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டேன். பினாமி டிரான்சாக்ஷன் எல்லாம் எனக்குத் தெரியாது. I am not interested in it. ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்தேன். உபரியாக இருக்கக்கூடிய நிலத்தை, வேண்ட் சிலிங்லே அந்த இரண்டு கிரவுண்ட் எனக்குத் தேவையில்லை என்று சொல்லிவிட்டு கொடுத்துவிட்டேன். வாங்குங்கள் என்று அப்போது ஒருவர் உத்தரவு செய்தார். அதனால் வாங்கிவிட்டேன். அதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று ரெவின்யூ அமைச்சர் அவர்களிடம்கூட சொல்லியிருக்கிறேன். அதுமட்டுமல்ல, என்னுடைய வாழ்க்கையைப் பற்றி அங்கத்தினர் சொல்கின்றார்கள். நான் ஏதோ பெரிய மருத்துவமனை கட்டியிருக்கிறேன் என்று எழுதியிருக்கிறார்கள், சொல்லியிருக்கிறார்கள் அதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. நான் 1973-ல் குறிப்பிட்டிருக்கிறேன். என்னுடைய குறிப்பை சட்டசபையிலே வைத்திருக்கிறேன். 31—3—1973-லே கொடுத்திருக்கிறேன். 40 ஆயிரம் ரூபாய் பிளாட், ஷெனாய் நகர் பிளாட், அதுபோல வேளச்சேரி பிளாட் ஆயிரம் ரூபாய் என்று கொடுத்திருக்கிறேன். அந்த இடம் பற்றியெல்லாம் எல்லோருக்கும் தெரியும். அதையெல்லாம் போட்டோஸ்டேட் பிரதி எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை. நான் பூராவையும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறுக்கிட வேண்டாம். என்னுடைய 'கான்சென்ட்ரேஷன்' போய்விடும். கடைசியாகக் கேட்டுக் கொள்ளலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : என்னுடைய வார்த்தைகளை அநேகமாக அமைச்சர் அவர்கள் உன்னிப்பாகக் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இன்றைய தினம் முதலமைச்சராக இருக்கின்ற திரு. எம். ஜி. ஆர். அவர்கள், அன்றைய தினம் ஆட்சியிலே இருந்த எங்களைப் பார்த்து, வீட்டு வசதி வாரியம் மூலமாகக் கட்டிய ஒரு வீட்டை, நானும் இன்கம்டாக்ஸ் கட்டுகிறேன் என்று தெரிந்திருந்தாலும்கூட, "67" வாசல் வைத்து கட்டியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் ஊழல் செய்கின்றார்கள் என்று பேசினார்களே, அதைத்தான் சுட்டிக் காட்டுவேன். நான் கூறுவதை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அப்போது அப்படியெல்லாம் பேசினார்கள். பிரச்சாரம் செய்தார்கள். நான் அப்படி எதுவும் பேசவில்லை. அந்த இலக்கணம் எனக்குப் பொருந்துமா என்று கேட்டேன். ஏனென்றால் இலக்கணம் வகுப்பவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதைத்தான் சொன்னேனே தவிர, டாக்டர் ஹண்டே அவர்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவருக்கிருக்கின்ற பிராக்டீஸ் பற்றியும் எனக்குத் தெரியும், அதைப்பற்றி விவாதிப்பது





பது என்பது வேறு. நான் அந்த விவாதத்திற்குள்ளே போகவில்லை. ஆனால் இப்படியெல்லாம் சொன்னவர்கள் இன்று ஆட்சியிலே இருந்துகொண்டு இந்த விளக்கம் செய்தால் இப்போது அந்த இலக்கணம் பொருந்துமா என்று கேட்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் இப்போது பேசுவது வேறுவிதமாக இருக்கிறது. அதற்கு ஒரு காரணத்தைக் குறிப்பிட்டு ஏதோ ஒன்று பேசுகிறார். ஆனால் நான் அதிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்: அவர் முதலமைச்சர் அவர்கள் பற்றிச் சொன்னால் ஏதோ ஹண்டே வீடு கட்டுவதனாலே ஆற்காடு வீராசாமி வீடு கட்டலாம் என்று இன்றைக்கு நிரூபிக்க வேண்டுமென்று ஒரு முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் சொல்வது முதலமைச்சர் அவர்கள் கூட்டத்தில் பேசினார்கள். நான் என்னுடைய விளக்கத்தைத் தந்திருக்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஏன் புது விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் என்று தெரியவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அங்கத்தினர் அவர்கள் குற்றம் சொல்வதாக இருந்தால், அமைச்சர் அவர்கள் மீது பகிரங்கமாகச் சொல்லலாம். அமைச்சர் அவர்கள் பில்டிங் கட்டுகிறார்: அது இவ்வளவு லட்சம் ரூபாய் பெருமானம் இருக்கிறது ஆற்காடு வீராச்சாமி அவர்கள்கூட பேசும்போது ஒரு நாள் சொன்னார்கள். நான் குடியிருக்கின்ற வீட்டின் சொந்தக்காரருக்கு நோட்டீஸ் அனுப்புகிறாரா? இன்று சொன்னார்கள் அண்ணா நகரில் வீடு இருக்கிறது. எனக்கு ஒரு சந்தேகம். அவர் சொந்த வீட்டிலே குடியிருக்கிறாரா அல்லது குடியிருக்கின்ற வீட்டிலே சொந்தம் கொண்டாடுகிறாரா? அது எனக்குப் புதியவில்லை. அதனாலே அவர் அந்த பிரச்சினையைக் குழப்ப வேண்டாம். அவர் மீது குற்றச்சாட்டு இருந்தால் என்ன குற்றச்சாட்டு என்று சொல்லட்டும் அதுதான் முறை.

திரு ஆற்காடு நா வீராசாமி : அதையெல்லாம் விவாதிக்க நான் தயார். எந்த வீட்டிலே நான் இருக்கிறேன் என்று சொல்ல வேண்டும் என்றால், இதுதான் முக்கியம் என்றால் விவாதிக்கலாம். நான் சொல்லும்போது அதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்: என்னுடைய பேச்சை எடுத்துப் பார்த்தால், குறிப்பிலே பார்த்தால் தெரியும்.

[1982 மார்ச் 22

திரு. எஸ். ஆர். இராதா : அவர் பெரிய 'பில்டிங்' கட்டினார். அண்ணா நகரிலே இவ்வளவு லட்சம் ரூபாய் போட்டு வீடு கட்டியிருக்கிறார் என்று சொல்லலாம். அதில் குற்றச்சாட்டு இருந்தால், அதை எடுத்துச் சொல்லலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவ மனை கட்டப்பட்டு வருகிறது.. பல லட்சக்கணக்கான ரூபாய் மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது என்று என்னுடைய பேச்சிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற நேரத்தில் சொன்னார்கள். 'ஊழல் செய்து, லஞ்சம் வாங்கி வீடு கட்டுகிறார்களே' என்று சொன்னார். அந்த இலக்கணம் அமைச்சர் அவர்களுக்குப் பொருந்துமா என்றுதான் கேட்கிறேன். அதிலே ஒன்றும் நான் மறைக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் குறுக்கிட விரும்புகிறார்கள். இங்கே சொல்ல வேண்டியதையெல்லாம் பேசி முடித்து விடுகிறேன். குறுக்கிட வேண்டாம். அப்படி குறுக்கிடாமல் இருந்திருந்தால், இந்த காண்ட்ரோவர்சி இல்லாமல் இருந்திருக்கும். அங்கத்தினர் அவர்கள் கேட்கும்போது, நான் பதில் சொல்கிறேன். இதிலே மூடி மறைக்க வேண்டியது எதுவும் இல்லை. நான் அரசியலுக்கு வந்த பிறகு சில தியாகங்களைச் செய்தாக வேண்டும். நான் அரசியலிலே இல்லை என்றால், எவ்வளவோ சம்பாதிக்க முடியும். வாழ்க்கையை ஒரு மாதிரியாக நடத்தலாம். அரசியலுக்கு வந்த பிறகு, தியாகம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. நேரம் இல்லாததால், இத்துடன் அடுத்து எம். எஸ். ஆர்த்தோபடிக் சர்வீஸ் கேண்டிடேட் பற்றியதை விட்டு விடுகிறேன். மேஜர் சப்ஜெக்ட்டுக்கு வருகிறேன். அத்துடன் முடித்துக் கொள்கிறேன். நாம் அரசியலுக்கு வந்த பிறகு கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கின்றேன். அது எல்லோருக்கும் பொருந்தும். 1971-லே கூட நான் சட்டசபையிலே கணக்குக் கொடுத்திருக்கிறேன். அந்த 40 ஆயிரம் பற்றியும் கணக்குக் கொடுத்திருக்கிறேன். உபரியாக இருக்கக்கூடிய அந்த 2 ஏக்கர் நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். ரெவின்யூ அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். "அதை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்குத் தேவையில்லை" என்று சொல்லியிருக்கிறேன். மத்திய அரசு அர்பன் லேண்ட் சீலிங் சட்டத்தைக் கொண்டு வந்து அமுலாக்கியபோது சொன்னேன். I am proud of it. I am not interested in benami transaction.



1982 மார்ச் 22] [டாக்டர் எச். வி. ஹண்டே]

நமக்கு அந்த நிலம் எதற்கு என்று கொடுத்துவிட்டேன். டால்ஸ்டாய் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

"All that is beneath the ground is 6 feet."

அது மட்டுமல்ல பிரச்சினை. இப்போது நான் ஆனந்தமாக இருக்கிறேன். இன்னும் அரசியல் எத்தனையோ வருடங்களுக்கு நடக்க வேண்டும். இன்னும் எத்தனையோ பேர்கள் வர இருக்கிறார்கள். இப்படி இருந்தால், அவர்கள் அரசியலுக்கு வருவதற்குப் பயப்படுவார்கள். அந்த மாதிரி நிலைமைகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இன்கம் டேக்ஸ் கட்டியிருக்கிறேன். அதிலும் எனக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. எவ்வளவு கட்ட வேண்டுமோ அதைக் கட்டிவிட்டு கணக்குக் கொடுத்திருக்கிறேன்.

(பிற்பகல் 2-20)

பேங்க் பேலன்ஸ் இருக்கிறது. 20,000 ரூபாய் இருக்கிறது ஓப்பன் அக்கவுண்ட்தான். டிஸ்பென்சரி அக்கவுண்ட் புத்தகம் பார்க்கலாம். டேபிளில் ஓப்பனாக இருக்கும். டிஸ்பென்சரி கட்டிடம் இப்போதுகூட கட்டலாமா என்ற எண்ணம் வருகிறது, ஆசை வருகிறது. பல பகுதிகள் அப்படியே இருக்கின்றன. இப்போது கட்ட வேண்டுமென்ற எண்ணமே எனக்கில்லை. கால்கோள் விழா—அஸ்திவாரம் போட்டது எல்லோருக்கும் தெரியும். அவருடைய நண்பர்களுக்குத் தெரியும். அவர்கள் எனக்கும் நண்பர்கள். நாங்கள் எல்லோரும் பங்காளிகள் மாதிரி (சிரிப்பு) இவர்கள் சொந்தக்காரர்கள் நம்மிடம் வருகிறவர்கள். திரும்ப கிடைப்பது கஷ்டமில்லை. அதைக் கன்வெர்ட் பண்ணி, பூதாகாரமாகச் செய்ய வேண்டியதில்லை. 2, 3 ஆண்டுகளாகக் கட்டி வந்திருக்கிறோம். எவ்வளவு கட்டியிருக்கிறோம் என்பதையெல்லாம் They are going to check it. இதில் பிரச்சினையே கிடையாது. எல்லாம் ஓப்பன்தான். இப்போது நிறுத்தி வைத்திருக்கிறேன். பணம் இருக்கிறது. கட்ட வேண்டாமென்று இருக்கிறேன். ஒன்றும் செய்யாமலே செய்கிறார்கள். செய்துவிட்டு என்? அப்படியே இருக்கட்டும் பார்க்கலாம். என் டிஸ்பென்சரி இருக்கும் ரெண்டட் பில்டிங்குக்குப் போகிறேன். அப்படிப் போகலாமா, அமைச்சராக இருந்துகொண்டு போகலாமா என்று கேட்கிறார்கள். அங்கே சன் வேலை செய்கிறான், டாக்டர்கள் இருக்கிறார்கள். அதனால் எனக்கு என்ன நன்மை கிடைக்கிறதென்றால், அங்கேதான் சந்தி. அங்கே ஏழைகள் வருகிறார்கள். பலர் வருகிறார்கள் 'ஓல்ட் ஏஜ்' பென்ஷனுக்கு வருகிறார்கள். உடனே திரு பிரபாகர், எம். எல். ஏ.விடம் அனுப்பி அல்லது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜேப்பியார், எம். எல். சி. யிடம் அனுப்பி கையெழுத்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று

சொல்லும்போது, ஏழைகளுக்குச் செய்யும்போது, மன நிறைவு, மகிழ்ச்சி ஏற்படுகிறது. பல பேர்களுக்கு உதவி செய்கிறோம். ப்ரியாக மருந்துகள் கொடுக்கிறோம். அரை ரேட்டில் கொடுக்கிறோம். அப்படிச் செய்வதில் தப்பில்லை. மந்திரி பதவியை பயன்படுத்தி, துஷ்பிரயோகம் செய்தால் தவறு. நம்முடைய பேஷண்டுகளுக்கு லெட்டர் கொடுக்காதீர்கள் என்று சொல்லியிருக்கிறேன். யாராவது எம். எல். ஏ. அல்லது அரசியல் ரீதியாக வருகிறவர்களுக்கு லெட்டர் கொடுங்கள் என்று இந்த அளவிற்குக் கட்டுப்பாட்டுடன் இருக்கின்ற ஹண்டேயைப் பற்றி ஒரு வார்த்தை, ஆற்காடு வீராசாமி அவர்கள், பரவாயில்லை, ஹண்டே மந்திரியானாலும்கூட எவ்வளவு எச்சரிக்கையாக இருக்கிறான் என்று சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். என்றாவது ஒருநாள் அவரிடம் பாராட்டு வாங்கப் போகிறேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல. என்னுடைய குடும்பத்தைப் பற்றியெல்லாம்—எழுதியிருக்கிறார்கள்—அதைப்பற்றிப் பேசவில்லை. என்னுடைய உள்ளம் எப்படி இருக்கிறதென்பதற்குச் சொல்ல வேண்டும். 1962-ல் நான் அரசியலில் இல்லை. தங்கத்தைப்பற்றி எந்தவித இன்ட்ரஸ்டும் எனக்கு இல்லை. என் திருமணத்தில் எனக்கு மொத்தமாகக் கிடைத்தது ஒரு மோதிரம்தான், கல்யாணத்தில். 1961-62 சைனிஸ் அக்ரெஷன். ஜவஹர்லால் நேரு அவர்கள் தங்கம் வேண்டுமென்று சொன்னார்கள் " We will utilise it for buying latest machinery " என்று சொன்ன நேரத்தில்

The only thing was the wedding ring that I had. " Reserve Bank, Madras—31st October 1962—" Received from Shri H. V. Hande, the undermentioned article as donation to National Defence Fund :—

Description of article : One ring

Weight : 5.7 grams.

Sd. 31—10—1962 "

This is how we had been functioning. But, if we are suspected for everything and anything.

ஜெனரலாகச் சொல்கிறேன். என்னவாகுமென்பதைச் சொல்கிறேன். திரு. ஆர் வெங்கட்ராமன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது சொன்னார்கள். அதைச் சொல்கிறேன்.

" Ultimately, politics has come to such a low and dirty level. It is no longer politics of a decent level but it has become unfortunately, in parts, gutter-politics. . . It was on record . . . If this goes unabated, politicians as a class will lose credibility before the public. This is a note of warning which



no politician can afford to miss because already the credibility of politics is coming down very fast " " We are unnecessarily strengthening the bureaucrats "

போகிற போக்கில் என்னவாகுமென்றால் politicians credibility போய் விடும். உறுப்பினர் அவர்களுடைய பத்திரிகையில் என்னுடைய கம்யூனிட்டி பற்றி எழுதினார்கள். ஹண்டே ஐயர் என்று போட்டார்கள். எனக்குப் பூணூல் கிடையாது. பிறந்தது பிராமணன்தான். That was my misfortune. அப்பா, அம்மா தப்பு. எனக்குப் பூணூல் கிடையாது. தீவிர பகுத்தறிவாளன். என்னுடன் 2 நாட்கள் இருந்தால்— I am a tremendous rationalist. நீங்கள் பயப்படுவீர்கள். The wholo World ir meaning less என்ற வாதத்தை திரு எம். என் ராய் அவர்கள் சொன்னபோது, அதை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். என்னுடைய குணம் பற்றி, என்னுடைய ரேஷனலிசம் பற்றித் தெரிந்து, பிறப்பிலே துரதிருஷ்டமாக இருந்தாலும், அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பெத்துநாயக்கன் பேட்டையில் என்னை அவரிடம் அறிமுகப்படுத்தியபோது, முன்பே காணாமல் போய்விட்டேனே என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள் அன்போடு.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சரவர்கள் இப்படி ஒரு பேச்சை அமைத்துக்கொள்வதாக இருந்தால், நாங்களும் பேச முடியும். அண்ணா பற்றி அமைச்சரவர்கள் என்ன சொன்னார்கள் என்பது ரிக்கார்டில் இருக்கிறது. வேண்டாம். அமைச்சரவர்கள் இங்கே தன்னிலை விளக்கம் கொடுக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன். அண்ணா பற்றிச் சொல்லும்போது இன்னும் ஒன்று சொல்கிறேன். அண்ணா பற்றி என்னென்ன, எப்போது சொல்லியிருக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்பவில்லை. அடுத்து, நான் எழுதியதுபோல் சொல்லுகிறார்கள். பத்திரிகையில் வரும் எல்லாச் செய்திகளுக்கும் நான்தான் பொறுப்பு என்றால், ஒவ்வொரு பத்திரிகைக்காரர்களும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் இருக்கிறார்கள் அவர்கள் விருப்பத்தை எழுதுகிறார்கள். அது வேறு விஷயம். யாருடைய மனதையும் புண்படுத்த எழுதவில்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதே மாதிரி ஒருவர் சொன்னார் அண்ணாவைப் பற்றித் தப்பாகச் சொன்னதாகச் சொன்னார்கள். Immediately I had the courage to go to the Court. I had that courage. Courageous politics நடத்துபவன் நான். ஆளும் கட்சியில் இருப்பதால், கொஞ்சம் தன்னடக்கத்தோடு இருக்கிறேன். யாரோ ஒரு அம்மாள் சொன்னார்கள், பழைய அமைச்சர். உடனே கோர்ட்டுக்குப் போனேன். இதுவரை ஒரு முடிவும் வரவில்லை.

It is $1\frac{1}{2}$ years since I filed the case. It is *sub judice*.

பேராசிரியர் அவர்களே அன்று என்ன சொன்னார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. அண்ணாவைப் பற்றி குறை சொல்லவில்லை, கணக்கில் தவறு நடந்திருக்கிறதென்று சொல்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. ஆசைத் தம்பி அவர்களுக்கு எதிராக 1971-லே தேர்தலில் நின்றேன். அப்போது ஒரே ஒரு பேச்சுகூட அண்ணாவைப்பற்றி நான் பேசியது இல்லை பார்த்தால் தெரியும். எல்லோருக்கும் ஆச்சரியம். எல்லோரும் கேட்டார்கள், அண்ணா பற்றி ஒன்றும் எதிர்த்துச் சொல்லவில்லையே என்று.

I cannot say it. This tongue will not say it. I have not talked a word against him.

சில தவறுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அதிலே தெளிவாக இருக்கிறேன். எந்த நேரத்திலும் சொல்லவில்லை. எப்படிச் சொல்ல முடியும்? அண்ணா மறைவின்போது வேதனையோடு நானும், திரு. அரங்கண்ணல் அவர்களும் உட்கார்ந்திருந்தோம். எத்தனை தடவை அண்ணாவிடம் நீங்கள் அழைத்துப் போயிருக்கிறீர்கள் அங்கே. young man என்று so many சர்ட்டிபிகேட்டுகள் வாங்கியிருக்கிறேன்.

In the Assembly I have got so many certificates from him.

பூனை தன் குட்டியைக் கவ்வுகிற மாதிரி பேசுகிறேன் என்று பல சான்றிதழ்களை அண்ணா அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறேன். ஆகவே கம்யூனிஸ்ட் என்றால், அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பார்களா? எந்த நேரத்தில் அப்படி கேட்டிருக்கிறேன்?

கன்னடம் பேசுகிறேன் என்கிறார்கள். தெலுங்கு படித்திருக்கிறேன். தெலுங்கு உங்களைவிட அழகாகப் பேசுகிறேன். உங்களைப் புண்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. உங்களைவிட தெலுங்கு நன்றாகப் பேசுகிறேன் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

I speak better Telugu. I am going to give speeches also in Telugu. ரெயில்வேயில் கூப்பிட்டிருக்கிறார்கள். தெலுங்கில் பேசுகிறேன். தப்பு இருந்தால் திருத்திக் கொள்வேன்.
politicians as a class will lose credibility.
எல்லோருக்கும் சொல்கிறேன். Political parties may come and political parties may go; men may come and men may go; but the Executive will become stronger. That is why my submission is. . .

இதுமாதிரி பண்ணுவதால் யாராவது அதிகாரிகள் தவறு செய்தால், அவர்களை ஊக்குவித்து, நம்முடைய சண்டையில், அவர்கள் தப்பித்துக் கொள்ளும் நிலைமை இருக்கிறது. உங்களைப் புண்படுத்த இதைச் சொல்லவில்லை.





(பிற்பகல் 2-30)

நீங்கள் இருக்கும் நேரத்தில் இதைச் சொல்ல வேண்டுமென்றுதான் இவ்வளவு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். ஆகவே உங்களைவிட சாமர்த்தியமாக வாதாடக்கூடியவன் என்றல்ல.

நாம் அத்தனை பேரும் ஒன்றாக இருந்துகொண்டு, எதிர்க் கட்சியிலே இருந்து கொண்டு கருத்துக்களைப் பரிமாறியிருக்கிறோம் 1967-ல் நடைபெற்ற சம்பவம் எல்லாம் தெரியும். நமக்குத் தொல்லை கொடுத்தவர்களை எல்லாம் உட்கார வைத்து, 'காபி, டிபன்' எல்லாம் கொடுத்திருக்கிறோம். எங்கோ அடி கொடுக்க, இப்படி எல்லாம் பேசுவதன் மூலம், அதனால் ஏற்படுகிற விளைவுகள் என்னென்ன என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை ஒட்டியது இல்லை என்றாலுங்கூட, லஞ்சம் என்ற வார்த்தை வந்ததால் தான், குடும்பத்தை இழுத்ததால்தான் சொல்கிறேன். இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டதற்குப் பிறகும், எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்து ஒத்துழைப்பு கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் கூறி அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருக்கமாக எந்த அளவுக்கு எதிர்க் கட்சிகளுக்கு அறிவுரை சொன்னார்களோ அதே அறிவுரை ஆளும் கட்சிக்கும் உண்டு. அரசியல்வாதிகளைப்பற்றிக் குற்றம் சாட்டியது, ஊழல் பேசியது எல்லாம் முதலில் எங்கிருந்து வந்தது என்பதை எண்ணிப் பார்த்தால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டதல்ல என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** ஆகவே நாங்களும் அந்த வழியைப் பின்பற்றுகிறோம் என்பது சரியல்ல. எங்காவது தவறு நடந்தால், அதைச் சொல்லலாம். அது தவறில்லை. அப்படிச் சொல்வதை ஆதாரத்தோடு சொல்லலாம். இங்கே சில விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள். அவற்றுக்கு நான் விளக்கம் கொடுக்க முடிகிறது. இங்கே அப்படி நான் விளக்கம் கொடுக்கவில்லை என்றால், சிலவற்றை எழுத்து மூலம் தருகிறேன். அப்போது சந்தேகம் எல்லாம் தீரும். இவ்வளவு பெரிய நிர்வாகத்தில் சில தவறுகள் நடக்கும். அரசியல்வாதிகள் நூற்றுக்கு நூறு புனிதமானவர்கள் என்று சொல்ல முடியுமா? ஆனால் எங்காவது தவறுகள் நடைபெற்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் அதை இங்கே சொல்வதன் மூலம் வருங்காலத்தில் இன்னும் எச்சரிக்கையாக இருப்போம். இனிமேல் குறைபாடுகள் வராமல்

பார்த்துக்கொள்வோம். இன்னும் நல்ல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதன் மூலம் பல காரியங்களை நாங்கள் செய்ய முடியும். இந்தத் துறையைப் பொறுத்தவரையில், ரொம்ப வருத்தப்பட்டு, இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம். ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருந்தால், அவற்றை ஏற்றுக்கொண்டு, செய்திருக்கிறோம். 'பர்ஸ்ட் இம்பேக்ட்'ஐ நல்ல முறையில் செய்திருக்கிறோம். 'Danida Project. Rs. 30 crores project' பல புரோஜெக்டுகளைப் பூர்த்தி செய்தது அனைவருக்கும் பெருமையாக இருக்கிறது. 'நேரடியாக வந்தார்கள்' என்றெல்லாம் சில சந்தர்ப்பங்களில் சொல்கிறார்கள். இப்படி எல்லாம் சொல்வதன் மூலம் பல காரியங்களைச் செய்வதற்கு அது தடையாக இருக்கிறது. இன்னும் நிறைய நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இவ்வளவு தூரம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதால் சொல்கிறேன். எவ்வளவு தவறு, எப்படி நடக்கிறது, ஏன் நடக்கிறது என்பதைச் சொன்னால் அதைப் போக்குவதாகச் சொன்னதால், சொல்கிறேன். டாக்டர் ஹம்சவேணி விவகாரம் பற்றி இங்கே நான் விவாதிக்க விரும்பவில்லை. அவர்கள் பெற்று எடுத்த பிள்ளைகள் கூட அந்த அம்மையாருக்குப் பைத்தியமோ என்று சந்தேகப்படும் அளவுக்கு அவர்கள் இன்னல் அடைந்திருக்கிறார்கள். இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களையெல்லாம் அழைத்து கேட்டறிந்தால் போதும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அந்த அம்மையாருக்கு 'சீட்' கொடுத்தாயிற்று.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்).

ஒரு நிமிஷம் தயவுசெய்து பொறுமையாக இருக்க வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நேற்று வரையில் வரவில்லை.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நேற்று வரையில் வரவில்லை என்பது எந்த அளவுக்கு சரி என்பது பற்றித் தெரியவில்லை. அது சம்பந்தமாக 'நோட்' எழுதி அது செக்கரட்டரிக்குப் போய்விட்டது.

'I must thank the hon. Member Thiru Veerasami. . because I do not know 'I want immediately a note about Dr. Hamsaveni . . ' என்று எழுதினேன். Dr. Hamsaveni has been given a seat but she has not joined' என்று எனக்கு செக்கரட்டரியிடமிருந்து குறிப்பு வந்திருக்கிறது.



That is the note I have got from the Secretary. இந்த குறிப்பின்படி அவர்களுக்கு அது போயிருக்க வேண்டும். அவர்களுடைய அட்ரஸ் எனக்குத் தெரியாது. நேற்று வரையில் அவர்களுக்கு அது வரவில்லையென்று சொன்னால், ஒருவேளை அட்ரசில் ஏதாவது மாற்றம் இருந்தாலும் இருக்கலாம். எனக்கு வந்த குறிப்பை நான் சொல்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதிகாரிகள் அமைச்சர் அவர்களையும் நம்மையும் ஏமாற்றுகிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா ? அவர்களுடைய கணவனை ஊரில் விட்டு விட்டு அவர்கள் இங்கே இருக்கிறார்கள். கடிதம் எப்போது வந்தாலும் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் அதிகாரிகள் சொல்வது எந்த அளவு உண்மை என்று எனக்கு புரியவில்லை. டெல்லி வரை அந்த அம்மையார் சென்று எவ்வளவோ கஷ்டப்பட்டு தீர்ப்பு வாங்கி வந்திருக்கிறார்கள். உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்றால், அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு இது வரை 'ஜாயின்' பண்ணாமல் இருப்பார்களா ?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்).

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** 'I am coming to this point ........ After the Supreme Court's Judgment. she has been given a seat in the Madras Medical College." ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்).

கொஞ்சம் பொறுமையோடு இருக்க வேண்டும். ஒரே ஒரு மிஸ்டேக்கைச் சொல்லி விடுகிறேன். She has also joined. 'She has not joined' என்று படித்தேன். 6—2—1982 அன்று she has also joined. She has joined. Now, if this is wrong, we will take action against the officer who has given the information. If this is right, will you give a correction statement?

**Thiru K. RAMAMOORTHY :** If it is wrong, that is an issue relating to the privilege of the House.

**The Hon. Dr. H. V. HANDE :** I am passing the responsibility on to the Officer and we will take action.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அந்த அம்மையார் அவர்கள் சேர்ந்திருந்தால், நிச்சயம் நான்

பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்; அவர்கள் எவ்வளவு தூரம் கஷ்டப் பட்டார்கள் என்பதை விளக்கத் தேவையில்லை. நேற்று முன்தினம் வரை யில், எனக்குத் தெரிந்தவரையில், அவர்கள் சேரவில்லை.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** ஒரு சின்ன திருத்தம். அதிகாரி கள் கொடுத்த குறிப்புபடி அவர்கள் 6—2—1982 அன்று சேர்ந்திருக்கிறார்கள். 'The correct information is this. Let the records be kept straight. We understand from the authorities that she has joined on 6th February 1982' அப்படி அவர்கள் ஜாயின் ஆகவில்லையென்று சொன்னால், அப்போது கண்டிப்பாக 'We will take action against the Officer' ஆனால் ஆர்டர் போட்டும் அவர்கள் ஜாயின் பண்ணாதிருந்தால், ஒரு கரக்ஷன் ஸ்டேட்மென்ட் மூலம் மாண்புமிகு உறுப்பினர் 'correction' என்று சொன்னால் போதும். Now I understand that she has joined'. இரண்டாவது இன்னொரு கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த அம்மையாருக்கு இன்னல்கள் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதுகுறித்து நிச்சயமாக நான் விசாரித்து அதுபற்றிய முழு விவரத்தையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதுகுறித்து நான் கவலைப் படவில்லை. யாரை யார் ஏமாற்றினாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக் கப்படும். ஆகவே நல்ல காரியங்களுக்கு இந்த அரசு என்றைக்கும் துணை யாக இருக்கும் என்று சொல்லி, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ராஜாஜி ஆஸ்பிட்டல் பற்றிய கமிட்டி பற்றிச் சொன்னார்கள். முழு அளவில் இர்ரிகேஷனுக்கு, மின்சார வாரியத்திற்கு எல்லாம் போடுவது போல் கமிட்டி போட்டிருக்க வேண்டாமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** முழு அளவில் பேமிலி பிளானிங்கைப் பொறுத்தவரையில், ஹை லெவல் கமிட்டி ஒன்று ஏற்கெனவே இருக்கிறது. இந்தக் கமிட்டி 3 மாதங்களுக்கு ஒரு முறை 'மீட்' பண்ணு கிறது.

'once in three months we are meeting. . we will consider it with all seriousness because'
அப்படி ஒரு கமிட்டி அமைப்பது நல்லது. பல விஷயங்களை அது டிஸ்கஸ் பண்ண வாய்ப்பு இருக்கும்.

'It is a good suggestion. It will definitely be considered by the Government'



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

**(பிற்பகல் 2-37)**

## 6 அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

Nil.

### *B. Reports, Notifications and Other Papers.*

93. Demand Nos. 1, 11, 41 and 46—Policy Notes on Land Revenue, District Administration, Relief on account of Natural Calamities and Compensation and Assignment, 1982–83. (Tamil and English)

94. Performance Budget on Revenue Department, 1982–83. (Tamil and English)

95. Policy Note on Irrigation, 1982–83. (Tamil and English)

96. Review of the activities of the Public Works Department (Buildings Branch) for the year 1981–82. (Tamil and English)

97. Note on Demand for Buildings Grants for 1982–83. (Tamil and English)

98. A booklet on Periyar–Vaigai Improvement Project. (Tamil and English)

99. Statement of the follow-up action on the suggestions and observations made by the Members of the Legislature during the discussion on the Demand on "Irrigation" for 1981–82. (Tamil and English)

100. Performance Budget on Irrigation and Ground Water, 1982–83. (Tamil and English)

* 101. Errata to Policy Note on Supplement to Demand No. 19—Sewerage and Water Supply, 1982–83. (Tamil and English)

---

* Circulated to all M.L.Cs. on 20th March 1982.

## இணைப்பு I.

(380 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

9—3—1982 அன்று தடம் எண் 505-ல் சென்னையிலிருந்து சேலம் சென்று கொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக மிகை சொகுசுப் பேருந்து எண் வி. 345, காலை சுமார் 10-15 மணியளவில் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு முன்னால் தெற்கு பெரு நெடுஞ்சாலையில் செல்லும்போது அங்கு கூடியிருந்தவர்களால் நிறுத்தப்பட்டது. பேருந்திலுள்ள பயணிகள் யாவரும் கீழே இறக்கப்பட்டபின் கூட்டத்தினர் அருகாமையில் கிடைத்த கீற்று போன்றவற்றை பேருந்தினுள் குவித்து தீயிட்டனர். இச்சம்பவம் நடந்த சில நேரத்திற்குள்ளாக மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு உட்புறம் இருந்த தியணைப்பு படையினர் வந்து தீயை அணைத்தபோதிலும், பேருந்தின் கூண்டு இருக்கை போன்றவைகள் எரிந்து சாம்பலாயின. கூண்டு கட்டுவதற்கான அடித்தளப் பகுதியும் ' (Chassis) கூண்டுகளின் கம்பிகள் மட்டுமே மீதமிருந்தன. இச்சம்பவத்தினால் மேற்படி பேருந்தின் ஓட்டுனர் முகத்திலும், மூக்கிலும் கல்லடிபட்டு காயமுற்றார். பயணிகள் எவருக்கும் காயமில்லை. அவ்வழியே சென்னையிலிருந்து தஞ்சவூர், இராமேஸ்வரம் சென்று கொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான வி. 328, வி. 164 என்ற மற்ற இரண்டு பேருந்துகளின் கண்ணாடிகளையும் கூட்டத்தினர் சேதப்படுத்தி நட்டம் உண்டாக்கினார்கள். இச்சம்பவத்தின் விளைவாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளுக்கு ரூபாய் 4 இலட்சத்து 10 ஆயிரம் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான விவரம் பின் வருமாறு :—

| | சேதாரம் ரூ. |
|---|---|
| 1. பேருந்து எண் வி. 345 தீயிட்டது | 4,00,000-00 |
| 2. பேருந்து எண் வி. 328 கண்ணாடி உடைக்கப்பட்டது | 4,000-00 |
| 3. பேருந்து எண் வி. 164 கண்ணாடி உடைக்கப்பட்டது | 6,000-00 |
| மொத்தம் | 4,10,000-00 |



## இணைப்பு II.

(381 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையின்படி, தஞ்சாவூர் வடக்கு வாசல் சாலையில் உள்ள செயின்ட் அந்தோனி சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சில சிறுவர்களுக்கு 9—3—1982 அன்று மோர் சாதமும், உலர்ந்த மீன் தூளும், வெங்காயமும் சேர்த்து தயாரிக்கப்பட்ட கறியும் உண்ட பின்னர் வயிற்றில் வலியும், வாந்தியும் ஏற்பட்டது. அவர்கள் சிகிச்சைக்காக உடனடியாக தஞ்சாவூர் ராஜா மிராஸ்தார் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மேற்படி இல்லத்தில் 372 சிறுவர்கள் உள்ளனர். அவர்கள் தஞ்சாவூர் வடக்கு வாசல் சாலையில் உள்ள செயின்ட் அருளானந்தம் நடுநிலைப் பள்ளியில் பயின்று வருகிறார்கள். அவ்வில்லத்தின் பொறுப்பினை நிர்வகிக்கும் சகோதரி (sister) நோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, 100-க்கும் அதிகமான சிறுவர்களை 9—3—1982 அன்று ராஜா மிராஸ்தார் மருத்துவ மனையில் சேர்த்தார்கள். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட 111 சிறுவர்களில், 17 சிறுவர்களுக்கு I. V. Fluic ஊசி முதலிய தீவிர சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. மற்ற சிறுவர்களுக்கு ஊசி, பானர்கன் (Panargan) முதலிய சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எல்லா சிறுவர்களும் 10—3—1982 அன்று காலை 9-00 மணியளவில், மருத்துவ மனையிலிருந்து திருப்பியனுப்பப்பட்டார்கள். எல்லா சிறுவர்களும் ஆரோக்கியமான நிலையில் இருக்கின்றனர். உபயோகிக்கப்பட்ட பொருட்கள் நகராட்சி சுகாதார அதிகாரியால் எடுக்கப்பட்டு, சோதனைக்காக கிண்டி கிங் இன்ஸ்டிடூட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சி சுகாதார அதிகாரி இல்லத்தைப் பார்வையிட்டு, தொத்துநோய் பரவாமல் தடுப்பதற்கும், தண்ணீரைச் சுத்தப் படுத்துவதற்குமான நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தார்.

உணவு இல்லங்கள் மற்றும் அனாதை இல்லங்கள் ஆகியன சுகாதார ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன. இது குறித்து தகுந்த அறிவுரைகள், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநரால் வழங்கப்படுகின்றன. உணவு இல்லங்கள், உணவுப் பொருட்கள் பாதுகாப்பு அறை, மற்றும் சமையல் பாத்திரங்களின் நிலை ஆகியன ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும், உணவினைக் கையாளுவோரது சுகாதாரம், சமையல் அறையின் தூய்மை, உணவுப் பொருள்களை பாதுகாப்பது மற்றும் சமைத்த உணவினை கையாளுவது, பித்தளை பாத்திரங்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை ஈயம் பூசுதல், கறை படிந்த அலுமினிய பாத்திரங்களை நீக்கிவிடுதல் ஆகியன குறித்த நேரடி அறிவுரைகள் சுகாதார ஆய்வாளர்களால் வழங்கப்படுகின்றன.

## இணைப்பு III.

(386 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

மருத்துவம் குறித்த கொள்கை பற்றிய முக்கிய கூறுகளை இந்த அவையின் முன் வைக்க விழைகிறேன்.

1. தோற்றுவாய்:

கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற இயக்கத்தை செயல் படுத்துவதே இவ்வரசின் முதன்மையான குறிக்கோளாகும். இம்மாநிலத்தில் வாழும் குடிமக்கள் அனைவரும் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஆக்கபூர்வமான வாழ்க்கையினை ஏற்று நடத்த அனுமதிக்கும் வகையில் அவர்களது நல்வாழ்வுத் தரம் மேம்படையச் செய்வதே இதன் பொருளாகும்.

2. இந் நோக்கத்தை கருத்திற்கொண்டு, கிராமப்புறங்களிலும், நகர குடிசைப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் சுகாதார பாது காப்பு நிலையை மேம்படுத்துவதற்கு இவ்வரசு மிகப் பெரிய அளவில் முயற்சி களை செய்துகொண்டு வருகிறது.

இதன் மூலம் நாளடைவில் சுகாதார மேம்பாடு அடைந்தோர்க்கும், சுகாதார மேம்பாடடையாதோர்க்கும் இடையே உள்ள வேறுபாடு குறைக்கப் படும் எனவும் கருதுகிறது.

3. சுகாதாரப் பாதுகாப்புப் பணிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளான—கட்டிடங்கள் கட்டுதல், அதிக படுக்கை வசதிகளை வழங்குதல்—மிக நுட்ப மான மருத்துவக் கருவிகளை வாங்கித் தருதல், சிறப்பு மருத்துவச் சிகிச்சை வசதிகளை வழங்குதல், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர் களது எண்ணிக்கையை அதிகப்படுத்தித் தருதல், வழங்கப்பட்டு வரும் மருத்துவப் பணிகளை மேம்படுத்துதல், சமூகத்தின் மிக மிக ஏழைப் பிரிவின ருக்கும் போய்ச் சேரமுடியும் என்ற கருத்தினையொட்டியே இவ்வரசு நட வடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சுகாதாரத் திற்கென கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்யப்படுவதன் மூலம் இது புலனாகும். 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 731 இலட்சம் மதிப்பில் மேம்பாடுகள் வழங்க கருதப்பட்டிருக்கின்றன.

1982-83 ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கக் கருதப்பட்டுள்ள திட்டங்களில் முக்கியமானவை கீழே தரப்படுகின்றன :—

(1) சென்னை குழந்தை நல நிறுவனத்தின் படுக்கைகளின் எண்ணிக் கையை 250-லிருந்து 500-க்கு உயர்த்துதல்.



(2) ரூ. 44 இலட்சம் செலவில் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தலை ஸ்கான்னர் கருவி (Head Scanner) வழங்குதல்.

(3) ரூ. 107 இலட்சம் செலவில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவ மனையில் முழு அளவு உடல் ஸ்கான்னர் கருவி ( Whole Body Scanner) வழங்குதல்.

(4) சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் தலைக்காய சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தித் தருதல்.

4. சென்னை மருத்துவக் கல்லூரியை, பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமாக உயர்நிலைப்படுத்துவதற்கான நடவ டிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு வருகிறது. மேலும் மருத்துவப் பல்கலைக் கழகம் தனியாக ஒன்று ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. தேவையான கருத்துருக்களை உருவாக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

5. சாலை விபத்துக்களில் பலியாகிறவர்களுக்கு முக்கியமான மருத்துவ மனைகளில் சிறப்புப் பிரிவுகளை அமைத்தும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு மருத்துவப் பெட்டிகளை அளித்தும் மிக மிக விரைவாக மருத்துவ நிவாரணம் வழங்கக் கருதி இவ்வரசு விபத்து மற்றும் அவசரப் பணிகள் திட் டத்தினை உருவாக்கி செயல்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. மிக குறுகிய நேரத்தில், மிக அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு, பலியா கிறவர்களை எடுத்துக்கொண்டு செல்ல ஆம்புலன்ஸ் ஊர்தி வசதி நடை முறைக்கு வர இருக்கிறது. இத்திட்டம் இந்திய அரசின் பாராட்டினைப் பெற்று, இந்திய அரசே பிற மாநிலங்களில் செயல்படுத்த பரிந்துரை செய் திருக்கிறது.

6. இவ்வரசு குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தொடர்ந்து அதிக முக்கியத்துவம் காட்டி வருகிறது. நடப்பு ஆண்டில் அறுவை சிகிச்சை களிலும் ஏனைய குடும்பத் திட்ட முறைகளிலும் எய்திய சாதனை, சென்ற ஆண்டைவிட சிறந்த முறையில் இருக்கிறது. சென்னை மற்றும் மதுரையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தொண்டு நிறுவனங் களின் ஒத்துழைப்புடன் நடைபெற்றுவரும் லாப்ரோஸ் கோபிக் முறையிலான அறுவை சிகிச்சை முறை நடப்பு ஆண்டின் சிறப்பு அம்சமாகும். குடும்ப நலத் திட்டத்தில் அடங்கிய கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடுவது அவர்களது சுகாதாரப் பாதுகாப்பினை மேம்படுத்துவது ஆகிய மகப்பேறு மற்றும் குழந்தை நலத் திட்டத்திற்கு தொடர்ந்து உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

7. மருத்துவக் கல்வித்துறையில் சிறப்புப் பிரிவுகளில் ஒரு குறிப்பிடத் தகுந்த மேம்பாடு அடையப்பட்டிருக்கிறது. இந்திய மருத்துவக் குழு கூட இதனை அங்கீகரித்திருக்கிறது.

8. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு கோரிக்கைகளில் அடங்கிய செலவின் விபரங்கள் பிற்சேர்க்கை 1-ல் தரப்படுகின்றன

## மருத்துவக் கல்வித் துறை.

1. மருத்துவக் கல்லூரிகள் :

தற்சமயம், மாநிலத்தில் 8 அரசு மருத்துவக் கல்லூரிகளும், ஒரு அரசு பல் மருத்துவக் கல்லூரியும் இருக்கின்றன. அவைகளில், 3 மருத்துவக் கல்லூரிகளும், அரசு பல் மருத்துவக் கல்லூரியும் சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சிய 5 மருத்துவக் கல்லூரிகளும் மாவட்டங்களில் உள்ளன. தாலுகா மருத்துவ மனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு கற்பிக்கவும், பயிற்சி அளிக்கவும் போதுமான அளவு மருத்துவத்தில் சிறப்புத் தகுதி பெற்றவர்கள் வேண்டும் என்பதற்காக பட்ட மேற்படிப்பிற்கான இட ஒதுக்கீட்டினை உயர்த்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. பட்டப்படிப்பு பட்ட மேற்படிப்பு மற்றும் உயர்நிலை சிறப்புப் பட்ட வகுப்புகள் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை இரண்டில் உள்ளன.

(2) செவிலியர் பயிற்சி :

தற்போது 8 செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. செவிலியர் பயிற்சிக்குள்ள 675 இடங்களை 690 இடங்களாக அரசு இப்போது அதிகரித்துள்ளது. மேலும் ஒரு புதிய பயிற்சிப் பள்ளி திருநெல்வேலியில் துவங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் ஜனவரித் திங்கள், ஜூலைத் திங்கள் ஆகிய இரண்டு பயிற்சிப் பிரிவுக்கு மாணவிகள் அனுமதிக்கப்படுகின்றனர். 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் செவிலியர் பயிற்சிக்கு 345 மாணவிகள் அனுமதிக்கப்பட்டனர். 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பயிற்சிக்கு 345 மாணவிகள் அனுமதிக்கப்படுவார்கள். செவிலியர் பயிற்சி பள்ளிக்கான இட நெருக்கடியை எளிதாக்க இரண்டு பிரிவுக்கும் உள்ள 690 இடங்கள் கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளன :—





| வரிசை எண்ணும், செவிலியர் பயிற்சி பள்ளியுள்ள இடங்களும். | மாணவிகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| (1) | (2) ஜனவரி. | (3) ஜூலை. |
| 1. அரசு பொது மருத்துவமனை, சென்னை | 65 | 65 |
| 2. அரசு கஸ்தூரிபா காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ மனை, சென்னை | 25 | 25 |
| 3. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, தஞ்சாவூர் | 35 | 35 |
| 4 கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் | 35 | 35 |
| 5. அரசு தலைமையிட மருத்துவமனை, திருச்சி | 50 | 50 |
| 6. அரசு தலைமையிட மருத்துவமனை, சேலம் | 50 | 50 |
| 7. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை | 40 | 45 |
| 8. அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை | 45 | 40 |
| | 345 | 345 |
| | மொத்தம் : | 690. |

இப்பயிற்சியின் காலம் 3½ ஆண்டுகளாகும். பொது செவிலியர் பயிற்சியான மூன்று ஆண்டுகள் முடிந்தவுடன் ஆறு மாத கால மகப்பேறு பயிற்சிக்காக செவிலியர் மாணவிகள் மகப்பேறு பயிற்சி நிலையங்களில் நியமிக்கப்படுவர். உதவித் தொகை பெறும் செவிலியர் இடங்களான 340 கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளன :

| மகப்பேறு பயிற்சி நிலையங்கள் (1) | இடங்கள் (2) |
|---|---|
| 1. மகப்பேறு மற்றும் மகளிர் நோய் இயல் நிறுவனம் மற்றும் அரசு பெண்கள் குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை | 89 |
| 2. அரசு கஸ்தூரிபா காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை | 78 |

| | |
|---|---|
| 3. அரசு இராஜா சர் பிராகுதார் மருத்துவமனை, தஞ்சாவூர் | 50 |
| 4. அரசு இராஜா சர். இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை | 39 |
| 5. அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை | 51 |
| 6. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, கோயம்புத்தூர் | 35 |
| | 340 |

வெற்றிகரமாக பயிற்சியை முடித்தபின் செவிலியர் பயிற்சியில் பட்டயமும், மகப்பேறு பயிற்சியில் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

1981 ஆம் ஆண்டு மார்ச் திங்களில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் தலைமையிட மருத்துவமனை, திருச்சி செவிலியர் பயிற்சி பள்ளிக்கும் அதோடு இணைந்த மாணவர் விடுதிக்கும் முறையே ரூ. 47.70 இலட்சம் மற்றும் ரூ. 47.80 இலட்சம் செலவில் கட்டிடங்கள் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## (b) இயன் மருத்துவம்:

1968 ஆம் ஆண்டில், உலக அளவில் உள்ள இயன் மருத்துவப் பயிற்சியின் தரத்திற்கொப்ப இயன் மருத்துவப் பட்டயப் படிப்பின் இரண்டு ஆண்டு பயிற்சி மூன்று ஆண்டாக அதிகரிக்கப்படுத்தப்பட்டது. சென்னை-83-ல் உள்ள கே. கே. நகர் மறுவாழ்வு மற்றும் செயற்கை உறுப்பு பொருத்தும் நிலையத்தோடு இணைந்த இயன் மருத்துவப் பயிற்சிப் பள்ளியில் ஒவ்வோராண்டும் 10 உதவித் தொகை பெறும் மாணவர்கள் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். 1981 ஆம் ஆண்டு ஜூலையில், 10 உதவித் தொகை பெறும் மாணவர்களும் மற்றும் 7 உதவித் தொகை பெறாத மாணவர்களும் பயிற்சிக்கு அனுமதிக்கப் பட்டனர். 1981-ம் ஆண்டு நவம்பரில், இயன் மருத்துவப் பயிற்சிக்குரிய உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 100—120-லிருந்து ரூ. 115—130 ஆக உயர்த்த ஆணையிடப்பட்டது.

### பொது உடல் நல செவிலியர் பட்டயப் படிப்பு:

1980 ஆம் ஆண்டு ஜனவரியில் பல்வேறு திட்டங்களுக்காக கூடுதல் பொது உடல் நலச் செவிலியர்களை அடைய சென்னை மருத்துவக் கல்லூரியிலுள்ள செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் 10 மாதங்களைக் கொண்ட பொது உடல் நல



செவிலியர் பட்டயப் படிப்பு தொடங்க அரசு ஒப்புதல் அளித்தது. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து, 20 பணி புரியும் மாணவர்கள் இப் பட்டயப் படிப்புக்கு அனுமதிக்கப்படுகின்றனர். 1981 ஆம் ஆண்டு செப்டம்பரில் இப்பயிற்சி நடத்த ரூ. 13,000 செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியது.

## (d) சுகாதார பணியாளர்கள் (பெண்கள்) பயிற்சி வகுப்புகள்.

நவம்பர் 1979-ல் பல்நோக்குப் பணியாளர் திட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுப் படிப்பான மகப்பேறு மற்றும் செவிலியர் பயிற்சியை 18 மாதம் பயிற்சியாக மாற்றி அரசு ஆணையிட்டது. ஏற்கனவே வேலூர், சேலம், திருச்சி மற்றும் திண்டுக்கல் தலைமை மருத்துவ மனைகளில் செயல்படும் மகப் பேறு மற்றும் செவிலியர் பயிற்சி பள்ளிகள் தவிர, காஞ்சிபுரம், கடலூர், நாகப் பட்டினம், இராமநாதபுரம் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள தலைமை மருத்துவ மனைகளில் 5 புதிய மகப்பேறு மற்றும் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போதுள்ள 4 பயிற்சி நிலையங் களில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையை 120-லிருந்து 240 ஆக உயர்த்து வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது 19—8—1980 நாளிட்ட சமூக நலத் துறை அரசாணை எண், 653-ல், ரூ. 99.48 லட்சத்தில் பழைய பயிற்சி பள்ளி களிலும் புதிய பயிற்சி பள்ளிகளிலும் கட்டிடங்கள் கட்டவும், ஆணையிடப் பட்டது. அப்பயிற்சிப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் முடியும் தருவாயில் உள்ளது. பழைய 4 பள்ளிகளில் 6 மாதத்திற்கு 240 மாணவர்களும், புதிய 5 பள்ளிகளில் 6 மாதத்திற்கு 150 மாணவர்களும் சேர்க்கப்படுகிறார்கள். ஆக ஓர் ஆண்டிற்கு 780 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். மேலும் நான்கு பயிற்சிப் பள்ளிகளை ஈரோடு, புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் திறக்க அரசு ஆலோசித்து வருகிறது.

## (e) டி. பார்மசி படிப்பு :

தற்சமயம் டி. பார்மசி பட்டயப் படிப்பு மதுரை மருத்துவக் கல்லூரியில் 125 மாணவர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலும், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலும் ஆண் டொன்றுக்கு, ஒவ்வொரு கல்லூரியிலும் 60 மாணவர்கள் விதம் சேர்த்துக் கொண்டு டி. பார்மசி வகுப்பு நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ் வகுப்புகள் நடந்து வருகின்றன.

## (f) மற்றைய படிப்புகள் :

மேற்குறிப்பிட்டதைத் தவிர, துப்புரவு ஆய்வாளர் படிப்பு, கண்வரையாளர் பயிற்சிப் படிப்பு, கதிர்வீச்சு உதவியாளர் படிப்பு, இருட்டறை உதவியாளர் படிப்பு, எலும்பு முறிவு சிகிச்சை, ஆய்வுக்கூட நுண்ணறிவு படிப்பு, ஆய்வுக்கூட

நுண்ணறிவாளர் தரம் 2 படிப்பு, கண் சிகிச்சை உதவியாளர் படிப்பு மற்றும் பல் மருத்துவ நுட்பனர் படிப்பு ஆகியவை பல்வேறு மருத்துவக் கல்லூரியிலும், சென்னை கிண்டியிலுள்ள தடுப்பு மருத்துவ கிங் நிலையத்தில் நடத்தப்படுகின்றன. மருத்துவ ஆவணங்கள் காப்பாளர் படிப்பையும் அரசு மீண்டும் துவக்கியுள்ளது :—

(g) பி.எஸ்ஸி. செவிலியர் பயிற்சி:

அடிப்படை பி.எஸ்ஸி செவிலியர் பயிற்சி சென்னை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படுகிறது. ஆண்டுக்கு 20 பணி புரியும் மாணவிகளும், 10 மற்ற மாணவிகளும் அனுமதிக்கப்படுகின்றனர்.

3. மருத்துவ ஆராய்ச்சி :

1982-83-ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 8.37 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(4) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் :

(a) புறநகர் மருத்துவமனைகள் :

சென்னை மாநகரின் சுற்றுப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்கென அமைக்கக் கருதப்பட்டுள்ள ஐந்து புறநகர் மருத்துவ மனைகளுள் மூன்று கே. கே. நகர், அண்ணா நகர், தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் 100 படுக்கைகளோடு இயங்கி வருகின்றன. 1981-82 ஆம் ஆண்டில் பெரம்பூரில் ஒரு புறநகர் மருத்துவமனை கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது

(b) கேட்பியல் பிரிவுகள் அமைத்தல்:

1981-82 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் திருநெல்வேலி தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள மருத்துவ கல்லூரிகளின் காது, மூக்கு, தொண்டை துறையில் மூன்று கேட்பியல் பிரிவுகளை ரூ. 2.16 லட்சம் செலவில் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(C) மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அவைகளைச் சார்ந்த மருத்துவ மனைகளின் மேம்பாடு.

(1) மருத்துவக் கருவிகள் :

1981-82 ஆம் ஆண்டில் பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு கருவிகள் வாங்குவதற்காக ரூபாய் 71 21 லட்சம் ஒப்பளிக்கப்பட்டது.





இதன் விவரம் பிற்சேர்க்கை 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 1982-83-ல் ரூபாய் 220.78 இலட்சம் மதிப்புள்ள கீழ்க்கண்ட உபகரணங்கள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி மருத்துவ கல்லூரிக்கு உபகரணங்கள் வாங்குதல். | 1.00 |
| 2. மதுரை மருத்துவக் கல்லூரியில் உள்ள நச்சுக் கிருமி பரிசோதனைக் கூடத்திற்கு உபகரணங்கள் வாங்குதல். | 20.00 |
| 3. சென்னை பல் மருத்துவக் கல்லூரிக்கு உபகரணங்கள் வாங்குதல். | 5.00 |
| 4 தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தலையிலுள்ள நோய் கண்டறியும் ஸ்கானர் என்ற கருவி வாங்குதல். | 43.85 |
| 5. இராயப்பேட்டையிலுள்ள அரசு மருத்துவமனையில் தலைக்காய பிரிவிற்கு உபகரணங்கள் வாங்குதல். | 6.00 |
| 6 கே. கே. நகரிலுள்ள 'செயற்கை அவயவங்கள் பொருத்தும் மற்றும் மறுவாழ்வு நிறுவனத்திற்கு 300 எம்.ஏ.-எக்ஸ் கதிர் கருவி வாங்குதல். | 2.82 |
| 7. எட்டு மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவ மனைகளுக்கு உபகரணங்கள் வழங்குதல். | 10 00 |
| 8. உடல் முழுவதும் நோய் கண்டறியக்கூடிய ஸ்கானர் கருவி மதுரை இராஜாஜி மருத்துவ மனைக்கு வழங்குதல். | 107.11 |
| 9. மதுரை இராஜாஜி மருத்துவமனையில் உள்ள செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிலையத்திற்கு உபகரணங்கள் வாங்குதல். | 15.00 |
| 10. காரப்பேட்டை அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவ மனைக்கு கருவிகள் வழங்குதல். | 10.00 |

[1982 மார்ச் 22

(2) கட்டிடங்கள் :

இம்மாநிலத்திலுள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை மேம்படுத்த 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 416.98 இலட்சம் மதிப்பில் பல்வேறு கட்டிடப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் விவரங்கள் பிற்சேர்க்கை 4-ல் தரப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் கீழ்க் கண்ட கட்டிடம் கட்டும் பணிகள் ரூபாய் 341.62 இலட்சம் மதிப்பில் அமுல் படுத்தப்படவிருக்கின்றன :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை இராஜாஜி மருத்துவ மனைகளில் செவிலியர் பயிற்சியாளர்களுக்கும் செவிலியப் பணியாளர்களுக்கும் கூடுதல் தங்குமிடம் வசதி செய்து தருதல். | 103.00 |
| 2. சென்னை குழந்தைகள் நல நிறுவனம் குழந்தைகள் மருத்துவமனையில் 250 படுக்கைகளை 500 படுக்கைகளாக உயர்த்தும் கட்டிடம் கட்டுதல். | 173.24 |
| 3. சென்னை மனநோய் மருத்துவமனையில் பெண்கள் மனநோய் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைத்தல். | 6.00 |
| 4. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகளுக்காக 20 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல். | 7.00 |
| 5. தாம்பரம் உருக்கிநோய் மருத்துவமனையில் வெளி நோயாளிகள் மார்புச் சிகிச்சை வெளி நோயாளிகள் பிரிவு அமைத்தல். | 5.00 |
| 6. அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் உள்ள (ஏ) மற்றும் (பி) பிரிவு அறுவை அரங்கிற்குச் சில கூடுதல் வசதிகள் அளித்தல். | 0.61 |
| 7. மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் நான்காவது மற்றும் ஐந்தாவது அறுவை அரங்குகளுக்கு இடையில் காரிடர் வசதி செய்து கொடுத்தல். | 1.57 |



1982 மார்ச் 22]

| | |
|---|---|
| 8. சென்னை மருத்துவக் கல்லூரி மருந்தாக்கியல் துறையில் உள்ள சிறிய பரிசோதனைக்கூடத்தில் தூசி புகாமலிருக்க தக்க குளிர்வசதி ஏற்படுத்துதல். | 030 |
| 9. தஞ்சாவூர் அரசு ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் காத்திருக்கும் கூடம் ஒன்றைக் கட்டித் தருதல். | 0.80 |
| 10. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திறந்த வெளிக் கிணறு தோண்டுதல் மற்றும் மேல் நிலைத் தொட்டி ஒன்று அமைத்தல். | 3.00 |
| 11. மதுரை மருத்துவக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்திற்குள் நுழையும் மழைத் தண்ணீரைத் தடுப்பதற்கான கல் கட்டு வடிகால் அமைத்தல். | 1.50 |
| 12. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பிரிட்டிஷ் அரசால் இலவசமாக வழங்கப்பட்ட நடமாடும் மருத்துவப் பிரிவு வண்டியை நிறுத்தி வைப்பதற்கான தற்காலிக கொட்டகைகள் கட்டுதல். | 0.41 |
| 13. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவைகளுக்கு தனித்தனியே மின் இணைப்பு அமைப்பது. | 0.84 |
| 14. சென்னை அரசு பொது மருத்துவமனை, ராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, ஓட்டேரி திருவொட்டீஸ்வரர் காச நோய் மருத்துவ மனைகளுக்கு மின் உற்பத்தி கருவி வழங்குதல். | 13.44 |
| 15. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் எல்லா வசதிகள் கொண்டு விளக்கும்படி நீராவி சலவை நிலையம் ஒன்று அமைத்தல். | 3 00 |
| 16. மதுரை மாவட்டம் பாலரெங்காபுரம் அரசு மருத்துவ மனையில் சலவை நிலையம் ஒன்று கட்டித் தருவது. | 0.35 |
| 17. அரசு பொது மருத்துவ மனையில் இருதய மற்றும் மார்புக்கூடு சிகிச்சைப் பிரிவில் உள்ள அறுவை அரங்கத்திற்கும் அறுவை சிகிச்சைக்கு பிந்திய சிகிச்சைப் பகுதிக்கும் சன்னல் அமைப்பு சீர்வளி வசதி அமைத்துக் கொடுத்தல். | 0.52 |

[1982 மார்ச் 22

| | |
|---|---|
| 18. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள 10 படுக்கைகள் கொண்ட நிப்புண் சிகிச்சைப் பகுதியையும் 500 எம். ஏ. எக்ஸ் கதிர் பிரிவு அறையையும் சீர்வளி வசதி செய்து தருவது. | 2.04 |
| 19. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் நிப்புண் சிகிச்சைப் பகுதி கட்டுதல். | 12.00 |
| 20. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 50 மாணவர்கள் தங்குவதற்கான தங்கும் விடுதி கட்டிக் கொடுத்தல். | 5.00 |
| மொத்தம் | 341.63 |

5. கிண்டி கிங் நிலையம்.

கிண்டி கிங் நிலையம் இம்மாநிலத்தின் மிகப் பெரிய பொது சுகாதாரச் சோதனைக்கூடமாகும். இது ஒரு கல்வி போதனை மற்றும் ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. இந்நிறுவனத்தில் பலவகைப்பட்ட தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நிறுவனம் காலரா தடுப்பு மருந்து போன்றவைகளை பல மாநிலங்களுக்கு வழங்கி அதற்கான விலையைப் பெறு கிறது. வெறிநாய் தடுப்பு மருந்திற்கு அதிகமாக தேவை ஏற்பட்டுள்ளதால், இந்நிறுவனம் வெறிநாய் தடுப்பு மருந்து உற்பத்தி செய்ய துவங்கியுள்ளது.

2. 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பில் மருத்துவக் கருவிகள் மற்றும் இரசாயனங்கள் இந்நிறுவனத்திற்கென வழங்க கருதப்பட்டுள்ளது.

மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத் துறை.

1. மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவ மனைகள்.

கிராமப்புற மக்களின் மருத்துவ வசதியை விரிவாக்குவதற்காக தற்போது இருக்கும் மாவட்ட வட்ட மற்றும் வட்டமல்லாத மருத்துவ மனைகளில் படுக்கை வசதியை அதிகரித்தல், அதிக அளவு சிறப்பு மருத்துவ வசதி ஏற்படுத்துதல் ஆகியவைகளே மருத்துவ சிகிச்சை பணிகளின் மிக முக்கிய பங்காகக் கருதப்படுகிறது



1982 மார்ச் 22]

(a) மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளின் மேம்பாடுகள்:

இம்மாநிலத்தில் 5,138 படுக்கை வசதிகள் கொண்ட 15 மாவட்ட தலைமை மருத்துவ மனைகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. 1981-82 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மருத்துவ மனைகளில், படுக்கை வசதி அதிகரிக்க அரசு அனுமதித்துள்ளது:

| | | |
|---|---|---|
| திருப்பூர் | 104 இருந்து | 300 வரை. |
| தர்மபுரி | 150 இருந்து | 300 வரை. |
| இராமநாதபுரம் | 215 இருந்து | 300 வரை. |
| திண்டுக்கல் | 267 இருந்து | 300 வரை. |
| காஞ்சிபுரம் | 257 இருந்து | 300 வரை. |

1981-82 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்கு ரூ. 104.21 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. திட்டங்களின் விவரம் பிற்சேர்க்கை 5-ல் தரப்பட்டுள்ளது.

மேலும் 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 26.00 இலட்சத்திற்கான திட்டங்களை மேற்கொள்ள அரசு கருத்தில் கொண்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்).

| | |
|---|---|
| 1. வேலூர் மற்றும் ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மின் உற்பத்தி சாதனம் அமைக்க. | 7.00 |
| 2. காஞ்சிபுரம் மற்றும் கடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனையில் உயர்அழுத்த சாதனம் அமைத்தல். | 9.00 |
| 3. வேலூர் மற்றும் திருப்பூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்ள சவக் கிடங்குகளுக்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்தல். | 5.00 |
| 4. நாகப்பட்டினம் அரசு மாவட்ட தலைமையிட மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை அரங்குகளில் குளிர் சாதன வசதி அமைத்தல். | 5.00 |
| | 26.00 |

[1982 மார்ச் 22

(b) வட்ட தலைமையிட மருத்துவ மனைகளின் மேம்பாடுகள்.

1981-82 ஆம் ஆண்டில் ரூ. 24.54 இலட்சத்திற்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற அரசு அனுமதித்தது. திட்டங்களின் விவரம் பிற்சேர்க்கை 5-ல் தரப்பட்டுள்ளது.

மேலும் 6,152 மொத்த படுக்கைகளுடன் 116 வட்ட மருத்துவ மனைகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. 1981-82 ஆம் ஆண்டில் கூடுதலாக 150 படுக்கைகள் பல்வேறு வட்ட மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டது.

தற்போது 1982-83 ஆம் ஆண்டில் பல்வேறு வட்ட மருத்துவ மனையில் 144 படுக்கை வசதிகள் சேர்க்க அரசு கருத்தில் கொண்டுள்ளது.

1982-83 ஆம் ஆண்டில் ரூ. 43.99 இலட்சத்திற்கான புதிய திட்டத்தை அரசு மேற்கொள்ள எண்ணியுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1. தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஆகிய அரசு வட்ட மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே பிரிவு கட்டுதல். | 2.00 |
| 2. தஞ்சை மாவட்டம் நன்னிலம் அரசு மருத்துவ மனையில் 16 கூடுதல் படுக்கைப் பிரிவு கட்டுதல் | 2.50 |
| 3. கோயம்புத்தூர் மாவட்டம் தாராபுரம் அரசு மருத்துவமனையில் 32 படுக்கை வசதிகள் கொண்ட பிரிவு, எக்ஸ்ரே நவீன சமையல்கூடம், அறுவை மருத்துவ இடங்கு பிரிவு கட்டுதல். | 7.00 |
| 4. புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு மருத்துவ மனையில் 32 படுக்கைக் கட்டிடம் இரத்த சேமிப்பு வங்கி மற்றும் சோதனைக்கூடம் கட்டுதல். | 7.53 |
| 5. வட ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவு கட்டுதல். | 2.20 |



1982 மார்ச் 22]

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 6. வட ஆற்காடு மாவட்டம் ஆற்காடு அரசு மருந்தகம் கூடுதல் 24 படுக்கைகள் கட்டிடம், எக்ஸ்ரே பிரிவு, அறுவை அரங்கு, சமையல்கூடம் கட்டுதல். | 11.90 |
| 7. கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை அரசு மருத்துவ மனையில் 24 படுக்கைப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, சோதனைக்கூடம் கட்டுதல். | 5.30 |
| 8. திருநெல்வேலி மாவட்டம், எட்டயாபுரம் அரசு மருத்துவமனையில் கூடுதல் 20 படுக்கை வசதி பிரிவு, அறுவை சிகிச்சை அரங்கு, சமையல்கூடம் ஆகியவைகள் கட்டுதல். | 5.56 |
| மொத்தம் | 43.99 |

(c) வட்டமல்லாத மருத்துவ மனைகள் மற்றும் மருந்தகங்கள் மேம்பாடுகள் :

மொத்தம் 2,125 மற்றும் 243 படுக்கை வசதியைக் கொண்ட 113 வட்டமல்லாத மருத்துவ மனைகளும், 194 அரசு மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

1981-82 ஆம் ஆண்டில் ரூ. 15.88 இலட்சத்திற்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற அரசு அனுமதித்தது. இத்திட்டங்களின் விவரம் பிற்சேர்க்கை 5-ல் கூறப்பட்டுள்ளது.

1981-82 ஆம் ஆண்டில் 30 படுக்கைகள் இந்த மருத்துவ மனைகளுக்கு சேர்க்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில் கூடுதலாக 48 படுக்கைகள் சேர்க்க அரசு கருத்தில் கொண்டுள்ளது.

மேலும் வட்டமல்லாத மருத்துவ மனைகளுக்கும் மருந்தகங்களுக்கும் கீழ்க்கண்ட மேம்பாட்டு திட்டங்களை செய்ய எண்ணியுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1. இராமநாதபுரம் மாவட்டம் வாட்ராப் அரசு மருத்துவ மனையில் 16 கூடுதல் படுக்கை வசதி பிரிவு கட்டிடம் கட்டுதல். | 2.50 |

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2. தர்மபுரி மாவட்டம் இராயக்கோட்டை அரசு மருந்தகத்தில் 10 படுக்கை வசதி கொண்ட கட்டிடம் கட்டுதல். | 3.40 |
| 3. பெரியார் மாவட்டம் காங்கேயம் அரசு மருத்துவமனையில் 8 படுக்கை வசதி கொண்ட மகப்பேறு பிரிவு மற்றும் அறுவை அரங்கு கட்டுதல். | 2.30 |
| 4. திருச்சி மாவட்டம் பள்ளப்பட்டி அரசு மருத்துவமனையில் 20 படுக்கை வசதி கொண்ட பிரிவு பேறு கால அறை மற்றும் அறுவை அரங்கு ஆகியவைகள் கட்டுதல். | 5.75 |
| 5. நோயாளிகள் வருகை அதிமானதையொட்டி வேலைப்பளு அதிகமானதால் பல்வேறு அரசு மருத்துவ மனைகளுக்கு கூடுதலாக 40 உதவி மருத்துவர்கள் பதவி ஏற்படுத்துதல். | 6.55 |
| மொத்தம் | 20.50 |

(d) சிறப்புச் சிகிச்சைத் துறைகள் ஆரம்பித்தல்.

கிராமப்புற மக்களுக்கு சிறந்த மருத்துவ வசதிகள் அளிக்க வேண்டும் என்பதை கருத்திற் கொண்டு போதனை வசதியில்லாத மருத்துவ மனைகளில் கூடுதலான சிறப்பு சிகிச்சை துறைகள் ஆரம்பிக்கப்படுவது மிகவும் அவசியமாகும். இதனைக் கருத்திற்கொண்டு 1981-82 ஆம் ஆண்டில் பலவித சிறப்புத் துறைகள் ஆரம்பிக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய திட்டங்கள் பிற்சேர்க்கை பட்டியல் 5-ல் தரப்பட்டுள்ளன. மேலும் 1982-83 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளது :—

(1) ஸ்ரீவில்லிப்புத்தூர், திருப்பத்தூர், அம்பாசமுத்திரம், சங்கரன் கோவில், திண்டிவனம், விருத்தாசலம், மேட்டூர் அணை, உசிலம்பட்டி, திருவண்ணாமலை, பழநி, கிருஷ்ணகிரி, மற்றும் கூடலூர் முதலிய இடங்களி லுள்ள மருத்துவமனைகளில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல்: (ரூ. 7.62 இலட்சம்)

(2) குடியாத்தம், மன்னார்குடி, காரைக்குடி, திண்டிவனம், மேட்டூர் அணை மற்றும் ஸ்ரீரங்கம் மருத்துவமனைகளில் கண் நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல். (ரூ. 4.86 இலட்சம்)



(3) குளித்துறை மற்றும் குளித்தலை மருத்துவமனைகளில் பல் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல். (ரூ. 6.82 இலட்சம்)

(4) கோபிசெட்டிபாளையம் மற்றும் கும்பகோணம் மருத்துவமனைகளில் பால் வினை நோய்ச் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல். (ரூ. 0.74 இலட்சம்)

(5) திருவாரூர் மற்றும் கோவில்பட்டி மருத்துவமனைகளில் காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல். (ரூ. 1.36 இலட்சம்)

(6) திண்டிவனம் மற்றும் விருதுநகர் மருத்துவமனைகளில் முடநீக்கு சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல். (ரூ. 1.71 இலட்சம்)

1982-83 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இடங்களில் மருந்தகங்கள் திறக்க அரசு கருதியுள்ளது:—

1. கல்லிடைக்குறிச்சி (திருநெல்வேலி மாவட்டம்)
2. கலசப்பாக்கம் (வடாற்காடு மாவட்டம்)
3. திருப்பாலைக்குடி (இராமநாதபுரம் மாவட்டம்)
4. வளிகம் (தருமபுரி மாவட்டம்)
5. பேரிகை (தருமபுரி மாவட்டம்)
6. எம்பல் (புதுக்கோட்டை மாவட்டம்)

(e) விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை.—சாலை விபத்து, தீ விபத்து, விஷம் குடித்தல், நீரில் மூழ்குதல் போன்றவைகளில் சிக்கியவர்களுக்கு உடனடியாக தகுந்த மருத்துவ உதவி அளிப்பதற்காக அரசு "விபத்து மற்றும் அவசர மருத்துவப் பணிகள்" என்ற திட்டத்தினை 1980-81-ல் நான்கு மாவட்டங்களில் துவக்கியது. இதன்கீழ் 11 மருத்துவ மனைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இத்திட்டம் 1981-82-ல் மேலும் நான்கு மாவட்டங்களுக்கு ரூ. 66 இலட்சம் செலவில் விஸ்தரிக்கப்பட்டது. ஆகவே தற்பொழுது 8 மாவட்டங்களில் உள்ள 22 மருத்துவ நிலையங்கள் மூலம் இந்த அவசர சிகிச்சைப் பணி செய்யப்படுகிறது.

1982-83-ல் இத் திட்டத்தை ரூ. 34.28 இலட்சம் செலவில் சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் 6 மருத்துவ மனைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

[1982 மார்ச் 22

### கிராமங்களில் பற்பாதுகாப்பும் பாம்புக்கடி மருத்துவமும்.

கிராம மக்களின் பல் பாதுகாப்புக்காக பற்பொடி இலவசமாக வழங்கப்படும். பாம்புக்கடிக்கு உடனடி மருத்துவ வசதி அளிக்க ஊநீர் மருந்து ஆரம்ப சுகாதார மற்றும் கிளை நிலையங்களுக்கு அளிக்கப்படும்.

### (f) டேனிடா உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நலத் திட்டம்.

சேலம், தென்னாற்காடு மாவட்டங்களில் ரூ. 14.40 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஐந்தாண்டுகளுக்கு நிறைவேற்றப்படவிருக்கிற இத் திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. சேலம், தென்னாற்காடு ஆகிய இரு மாவட்டங்களில் கிராமப்புற மக்களின் குறிப்பாக நலிந்த பிரிவினரின், நல்வாழ்வு-குடும்பநல நிலைமைகளை உயர்த்துவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

| | |
|---|---|
| பயனடையக்கூடிய கிராமப்புற மக்களின் எண்ணிக்கை. | சேலம், தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள 70 இலட்சம் பேர். |
| கிராமங்களின் எண்ணிக்கை | 3,230 |
| வளர்ச்சி வட்டாரங்களின் எண்ணிக்கை. | 69 |
| திட்டக்கால அளவு | 1981-86 |
| திட்டச் செலவு | ரூ. 14.40 கோடி. |

இந்திய அரசும் டென்மார்க்கு அரசும் 1—8—1981 அன்று செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி டென்மார்க்கு அரசு இத் திட்டத்திற்கு ரூ. 12.71 கோடி நிதியுதவியளிக்க இசைவு தெரிவித்துள்ளது. இத் திட்டத்தில், சுகாதாரப் பணிகளுடன், குடும்ப நலம், குடிநீர் வழங்கல், துப்புரவு, சத்துணவு, பயிற்சி, புதிய திட்டங்கள், தகவல் தொடர்புப் பணிகள் மற்றும் சமுதாயநல நிதி ஏனைய திட்டப் பணிகளும் நிறைவேற்றப்படும். இத் திட்டப் பணிகள் அனைத்திலும் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் ஈடுபாடு கொண்டு பங்கேற்க வேண்டும் என்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. முதலாண்டில், சேலம் மாவட்டத்தில் 4 வளர்ச்சி வட்டா



1982 மார்ச் 22]

ரங்களிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் 5 வளர்ச்சி வட்டாரங்களிலும் ஆக, பின்வரும் ஒன்பது வளர்ச்சி வட்டாரங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:—

| சேலம் மாவட்டம். | தென்னாற்காடு மாவட்டம். |
|---|---|
| (1) | (2) |
| 1. குளத்தூர். | 1. மைலம். |
| 2. ஏற்காடு. | 2. மங்களூர். |
| 3. கொங்கணாபுரம். | 3. நல்லூர். |
| 4. சேந்தமங்கலம். | 4. பண்ருட்டி. |
| | 5. ஓரப்பாளையம். |

2. இரண்டாமாண்டில் சேலம் மாவட்டத்தில் 19 வளர்ச்சி வட்டாரங்களிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் 17 வளர்ச்சி வட்டாரங்களிலும் ஆக மொத்தம் 36 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் செயற்படுத்தப்படும்.

| சேலம் மாவட்டம். | தென்னாற்காடு மாவட்டம். |
|---|---|
| (1) | (2) |
| 1. கடையாப்பட்டி. | 1. கடலூர் |
| 2. ஓமலூர். | 2. குறிஞ்சிப்பாடி |
| 3. மேச்சேரி. | 3. புவனகிரி |
| 4. நங்கவள்ளி. | 4. கொமராட்சி. |
| 5. சங்ககிரி. | 5. விருத்தாசலம். |
| 6. எடப்பாடி. | 6. கள்ளக்குறிச்சி. |
| 7. எலச்சிப்பாளையம். | 7. சின்னசேலம் |
| 8. திருச்செங்கோடு. | 8. ரிஷிவந்தியம். |
| 9. தலைவாசல். | 9. சங்கராபுரம். |
| 10. அயோத்தியாபட்டினம். | 10. தியாகதுர்க்கம். |
| 11. பனமரத்துப்பட்டி. | 11. உளுந்தூர்ப்பேட்டை. |
| 12. வீரபாண்டி. | 12. திருநாவலூர். |
| 13. பேத்தநாயக்கன்பாளையம். | 13. கண்டமங்கலம். |
| 14. கங்கவள்ளி. | 14. காணை. |
| 15. நாமகிரிப்பேட்டை. | 15. மரக்காணம். |
| 16. வெண்ணந்தூர். | 16. செஞ்சி. |
| 17. புதுச்சத்திரம். | 17. மேல்மலையனூர். |
| 18. பரமத்தி. | |
| 19. எருமைப்பட்டி. | |

வேலைவாய்ப்பை உருவாக்குதல்.—முதலாண்டில் இத்திட்டத்தின் வாயிலாக உருவான வேலை வாய்ப்புகள் வருமாறு :—

| தொடர் எண்ணும் விவரங்களும். | எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. மாநிலத் திட்ட அமைப்பு | 29 |
| 2. மாவட்டத் திட்ட அமைப்பு, சேலம் | 35 |
| 3. மாவட்டத் திட்ட அமைப்பு, கடலூர், தென்னார்க்காடு | 35 |
| 4. கட்டுமானப் பணிக்கான பணியாளர்கள் | 50 |
| 5. சுகாதாரப் பணிகள் | 333 |
| 6. சத்துணவுத் திட்டம் | 263 |
| மொத்தம் | 745 |

3. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகளுக்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது :—

(1) 58 சுகாதார துணை நிலையங்களைக் கட்டுதல் (சேலம் மாவட்டத்தில் 28, தென்னார்க்காடு மாவட்டத்தில் 30).

(2) 20 சுகாதாரப் பார்வையாளர் (பெண்) குடியிருப்புகள் கட்டுதல் (சேலம் மாவட்டத்தில் 9, தென்னார்க்காடு மாவட்டத்தில் 11).

(3) 95 கூடுதல் சுகாதாரத் துணை நிலையங்களை ஏற்படுத்தல் (சேலம் மாவட்டத்தில் 29, தென்னாற்காடு மாவட்டத்தில் 66).

(4) 95 கூடுதல் சுகாதார துணை நிலையங்களில் பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் திட்டத்தைக் கொண்டு வருதல். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சுகாதார துணை நிலையத்திலும், ஏனையோருடன் பல்நோக்குச் சுகாதாரப் (ஆண்) பணியாளர் ஒருவர், பல்நோக்கு சுகாதார (பெண்) பணியாளர் ஒருவர், பெண் ஏவலர் ஒருவர் ஆகியோரும் இருப்பர். ஒவ்வொரு நான்கு துணை நிலையங்களுக்கும், சுகாதார (பெண்) பணியாளர்களின் பணியை மேற்பார்வையிடுவதற்காக சுகாதார மேற்பார்வையாளர் (பெண்) ஒருவரும், சுகாதாரப் (ஆண்) பணியாளர்களின் பணியை மேற்பார்வையிடுவதற்காக சுகாதார மேற்பார்வையாளர் (ஆண்) ஒருவரும் இருப்பர்.





(5) சேலம் மாவட்டத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்திலும் முதலாண்டில் திட்டம் செயல்படுத்தப்படும் வளர்ச்சி வட்டாரங்களில் 352 'தாய்'களுக்குப் பயிற்சியளித்தல்.

(6) மாநில, மாவட்ட, வளர்ச்சி வட்டார, கிராம நிலைகளில் திட்டத்தில் சம்பந்தப்பட்ட பணியாளர் அனைவருக்கும் மாதிரிப் பயிற்சி முறையை வகுத்தல்.

(7) சேலம், குளத்தூர் வளர்ச்சி வட்டாரத்திலுள்ள பன்னவாடைக் கிராமத்தில் 100 வீடுகளுக்கு 100 கழிப்பறைகள் கட்டித் தருவதன் மூலம் துப்புரவுத் திட்டத்தைச் சோதனை முறையில் செயல்படுத்தல்.

(8) குளத்தூர் (சேலம் மாவட்டம்), மைலம் (தென்னார்க்காடு மாவட்டம்) ஆகிய முன்னோடி வளர்ச்சி வட்டாரங்களில் சோதனை முறையில் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தல்.

(9) சேலம் மாவட்டத்தில் மூன்று புதிய திட்டங்களை மேற்கொள்ளுதல்.

(10) திட்ட தகவல் தொடர்புப் பணியை செயல்படுத்தல்.

(11) சமுதாய நல நிதி உதவியுடன் மூன்று திட்டங்களைச் செயல்படுத்தல்.

4. மேற்சொன்ன திட்டங்களை செயல்படுத்துவதற்கான செலவு 1982-83 நிதியாண்டிலும் தொடரும். இதைத் தவிர, இத்திட்டத்தின் கீழ் வரும் பணிகள் வரும் நிதியாண்டில் விரைவுபடுத்தப்படும். மற்றும், 1982-83-ல் சேலம் மாவட்டத்திலுள்ள 19 வளர்ச்சி வட்டாரங்களில் கூடுதலாக 125 சுகாதாரத் துணை நிலையங்களையும் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள 17 வளர்ச்சி வட்டாரங்களில் 183 சுகாதாரத் துணை நிலையங்களையும் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. 1982-83-ல் 308 சுகாதாரத் துணை நிலையங்கள், 156 சுகாதார பார்வையாளர்கள் (பெண்) குடியிருப்புகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் 14 பொது மருந்தகக் கட்டடங்கள், 20 மருத்துவ அதிகாரிகள் குடியிருப்புகள், வட்ட மருத்துவ மனையில் 2 குழந்தைகள் நோய் மருத்துவ வார்டுகள், 2 மகப்பேறு வார்டுகள், 4 அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் ஆகியவற்றைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

5. இரு மாவட்டங்களில் 3,640 கிராமங்களில் வசிக்கும் 18,27,000 பேர்களுக்குக் குடிநீர் வழங்க வகை செய்யும் கிராமப்புற குடிநீர் வழங்கல் துணைத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. அடுத்த நான்காண்டுகளுக்குள் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசின் மூலம் "டேனிடா"விடமிருந்து ரூ. 35.04 கோடி நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 22

(g) **அரசு இலவச கண் சிகிச்சை முகாம்.**—கண் நோய் மற்றும் கண்புரை நோய் போன்றவற்றினால் கிராமங்களில் அவதிக்குள்ளாகும் மக்களின் துயர் துடைப்பதற்கு 1972-ல் அரசு இலவச கண் சிகிச்சை திட்டத்தை தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் ஐந்து நடமாடும் கண் மருத்துவப் பிரிவுகள் அமைக்கப்பெற்று சென்னையிலே இரண்டும், கோவை, மதுரை மற்றும் தஞ்சாவூர் பகுதிகளில் ஒரு பிரிவு வீதம் மூன்றும், மருத்துவம் மற்றும் மருத்துவம் சேரா—களப்பணியாளர்களைக் கொண்டு மாநிலம் முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கண்புரை அறுவை சிகிச்சைக்கும் ரூபாய் 94 வீதம் அரசு செலவிடுகிறது. இதில் ரூபாய் 50 இக் கண் சிகிச்சை முகாம்களை அமைப்பதற்கும், உணவு, போக்குவரத்து, துப்புரவு போன்ற செலவினங்களைச் சரிக்கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் விடப்படுகிறது. மீதி உள்ள ரூபாய் 44 கண்ணாடிகள் வழங்குவதற்கும், இதர மருத்துவ செலவுகளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

இக் கண் சிகிச்சை முகாம்களில் சிகிச்சை பெறுபவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்க அவர்களுக்கு ரூபாய் 3-லிருந்து ரூபாய் 5 பெறுமான தற்காலிக கண்ணாடிகள் அறுவை சிகிச்சை முடிந்த உடன் வழங்கப்படுகின்றன. இம்முகாம்களிலே சிகிச்சை பெற்றவர்கள் ஆறு வாரங்களுக்குப் பின்னர் மீண்டும் பரிசோதிக்கப்பட்டு ரூபாய் 15 பெறுமான நிரந்தரமான கண்ணாடிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

சென்ற ஆண்டின் குறியீட்டளவாகிய 20,000-ஐ இவ்வாண்டில் (1981-82) 40,000 என உயர்த்தப்பட்டு மாவட்ட வாரியான குறியீடுகள் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசால் நிர்ணயிக்கப்பட்ட இக்குறியீட்டினை செவ்வனே நிறைவேற்றிடும் பொருட்டு மாவட்ட ஆட்சியாளர்கள் இக்கண் சிகிச்சை முகாம்களை தடங்கலின்றி நடத்துவதற்கு தேவைப்படும் பணத்தை மாவட்ட ஆட்சியாளர்களே மாவட்ட கருவூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ள அரசு அதிகாரம் அளித்துள்ளது. இதற்கு முன்னால் மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநரே இக் கண் சிகிச்சை முகாம்களுக்கான முன் பணத்தைப் பெற்று, மாவட்ட ஆட்சியாளருக்கு விநியோகித்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இப் புதிய முறை, கண் சிகிச்சை முகாம்கள் அமைக்கும்போது ஏற்படும் தாமதத்தை தவிர்க்க உதவும்.



1982 மார்ச் 22]

சாதனைகள்.

(கடந்த மூன்று ஆண்டுகள்).

| ஆண்டு. | குறியீடு. | நடைபெற்ற கண் சிகிச்சை முகாம்களின் எண்ணிக்கை. | சிகிச்சை பெற்ற புற நோயாளிகள் எண்ணிக்கை. | கண் புரை சிகிச்சை செய்தோர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1978-79 .. | 25,000 | 59 | 89,148 | 12,124 |
| 1979-80 .. | 25,000 | 50 | 65,769 | 10,887 |
| 1980-81 .. | 20,000 | 61 | 83,237 | 12,776 |
| 1981-82 .. | 20,000 | 56 | 86,504 | 14,615 |
| (15-2-1982 முடிய). | (பின்னர் இரட்டிப்பாக்கப்பட்டது.) | | | |

தேசிய கண்நோய் தடுப்புத் திட்டம்.

1—4—1981 முதல் மைய அரசின் நூறு சதவீத உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டம் இதுவாகும். 18—6—1980 முதல் "நடமாடும் கண்நோய் தடுப்பு மருத்துவப் பிரிவு" ஒன்று மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் தொடங்கப் பெற்றுள்ளது. மதுரை, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் இப்பிரிவின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான மருத்துவரும் மற்றும் மருத்துவம் சேரா களப்பணியாளர்களும் நியமிக்கப்பட்டு 1980-81 ஆம் ஆண்டிலிருந்து இது செயல்பட்டு வருகிறது.

மேலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலுள்ள கண் மருத்துவப் பிரிவு 75 படுக்கைகள் கொண்ட பிரிவாக விரிவாக்கப்படவும், கண் மருத்துவப் பிரிவு, மாநில ஆலோசனைக் குழு மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு போன்றவைகள் ஏற்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மருத்துவக் கல்லூரியில் அமைந்துள்ள நடமாடும் கண் மருத்துவப் பிரிவுக்கு தேவையான 1,50 இலட்சம் பெறுமான உபகரணங்களும், மற்றும் 'சிறு பேருந்தும்' மைய அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கண் மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்த முன்வரும் தானியங்கும் இயக்கங்கள், சமூக நிறுவனங்களுக்கு இம்முகாம்களில் கண் அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் நபர் ஒன்றுக்கு ரூபாய்

60-ம், ஒவ்வொரு முகாமுக்கும் ரூபாய் 12,000 மைய அரசு உதவியாக அளித்து வருகின்றது. "மத்திய கண் மருத்துவ நடமாடும் பிரிவு" (மதுரை) சமூக நிறுவனங்கள் துணையோடு இதுவரை 572 கண் அறுவை சிகிச்சையினை நடத்தி உள்ளது. மைய அரசின் திருத்தியமைக்கப்பட்ட நடைமுறை கொள்கைக்கு ஏற்ப "கண் மருத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி" ( (Ophthalmic Assistants Course) மதுரை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிகளில் முறையே 5—9—1981, 1—10—1981 அன்றும் தொடங்கப்பட்டு இவைகளில் 15 மாணவர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மைய அரசின் தேசிய கண் நோய் தடுப்புத் திட்டம் புறநகர்ப் பகுதியிலும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இது நூறு சதவீத மைய அரசின் உதவி பெறும் திட்டம் ஆகும். கீழ்க் குறிப்பிட்டுள்ள மாவட்ட மருத்துவ மனைகள் இத்திட்டத்தின் உதவியின் கீழ் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அரசு மருத்துவமனை. காரைக்குடி நாத்தான், இராமநாதபுரம் மாவட்டம்.
அரசு மருத்துவமனை, திருவில்லிப்புத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.

அரசு மருத்துவமனை, பழநி, மதுரை மாவட்டம்.

அரசு மருத்துவமனை, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

இம்மருத்துவ மனைகளுக்குத் தேவையான கருவிகள் மைய அரசினால் வழங்கப்பட்டு, மேலே கண்டுள்ள மருத்துவமனைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தகுதி பெற்ற கண் மருத்துவர்கள் இம்மருத்துவ மனைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக கீழ் குறிப்பிட்டு உள்ள மாவட்ட மருத்துவமனைகள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளது:

அரசு மருத்துவமனை, பொள்ளாச்சி.

அரசு மருத்துவமனை, மேட்டூர் அணை.

அரசு மருத்துவமனை, கிருஷ்ணகிரி.

அரசு மருத்துவமனை, கூனூர்.

இம்மருத்துவ மனைகளுக்குத் தேவையான உபகரணங்களும் மைய அரசினால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தகுதி பெற்ற கண் மருத்துவர்கள் இம்மருத்துவ மனைகளில் நியமிக்கப்பட்டும் வருகின்றனர். கீழ்க்



குறிப்பிட்டுள்ள மருத்துவ மனைகளும் இத் திட்டத்தின் மூன்றாவது கட்டத்தின் கீழே தேர்வு செய்யப்பட்டு, மைய அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி உள்ளது.

1. அரசு மருத்துவமனை, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

2 அரசு மருத்துவமனை, கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

3. அரசு மருத்துவமனை, திருச்செந்தூர், திருநெல்வேலி மாவட்டம்.

(h) எக்ஸ் கதிர் கருவிகள் :

மருத்துவக் கல்லூரிகளை சாராத மருத்துவ மனைகளில் கதிர் வீச்சு மூலம் நோய் கண்டறியவும், மற்றும் தற்பொழுது இல்லாத உயர் ரக உபகரணங்கள் தேவைக்கு ஏற்ப அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1981-82-ல் பாய்ல்ஸ் கருவி, அறுவை சிகிச்சைக்கான ஹைட்ராலிக் மேஜைகள், டயதெர்மி கருவிகள் போன்றவை ரூபாய் 2.84 இலட்சத்திற்கு வாங்கப்பட்டு மருத்துவக் கல்லூரியைச் சாராத மருத்துவ மனைகளுக்கு வழங்கப்பட்டன.

மேலும் 1981-82-ல் 100 எம். ஏ. எக்ஸ் கதிர் கீழ்க்கண்ட மருத்துவ மனைகளுக்கு அவைகளின் எதிரே குறிக்கப்பட்டுள்ள செலவில் வாங்கி வழங்கப் பட்டுள்ளன :—

| | |
|---|---|
| 1. அரசு மருத்துவமனை, வாணியம்பாடி | 1,30,920 |
| 2. அரசு மருத்துவமனை திருவள்ளூர் | 1,30,920 |
| 3. அரசு மருத்துவமனை, குமாரபாளையம் | 1,30,920 |

1982-83-ல் கீழ்க்கண்ட மருத்துவ மனைகளுக்கு எக்ஸ் கதிர் கருவிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| 1. அரசு மருத்துவமனை, உளுந்தூர்பேட்டை 100 எம்.ஏ. | 1,30,920 |
| 2. அரசு மருத்துவமனை, டெங்கனிக்கோட்டை 50 எம்.ஏ. | 49,664 |
| 3. அரசு மருத்துவமனை, திருவாடானை 100 எம்.ஏ. | 1,30,920 |
| 4. அரசு மருத்துவமனை, பட்டுக்கோட்டை 200 எம்.ஏ. | 1,68,000 |

5. அரசு மருத்துவமனை, செஞ்சி 100 எம்.எ. 1,30,920

6. அரசு மருத்துவமனை சோழவந்தான் 50 எம்.எ. 49,664

தமிழ்நாட்டில் தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்.

மத்திய அரசின் தேசிய தொழு நோய்த் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் தொழு நோய் திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. முக்கிய பணிகளாக தொழு நோயாளிகளை கண்டு பிடித்தல், தொழு நோயின் விளைவுகளைப்பற்றி சுகாதார கல்வி மூலம் விளம்பரம் செய்வதாகும். பெருமளவு பொது மக்களிடையே சோதனை மூலமும், பள்ளிச் சிறுவர்களிடையே சோதனைகள் மூலமும் நோயாளிகளைக் கண்டு பிடித்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இத்தகைய சிகிச்சைகளுக்காக சிகிச்சை முறையை மாற்றி பரிசீலிக்கப் பட்டு நடமாடும் சிகிச்சைப் பிரிவுகளாக்கி ஒவ்வொரு நடமாடும் சிகிச்சைப் பிரிவிலும் ஒரு மருத்துவ அதிகாரியும் ஏனைய மருத்துவ சம்பந்தப்பட்ட அலுவலர்களும் சாலை ஓரங்களிலும், கிராமப் புறங்களிலும் சென்று சிகிச்சை அளிக்கின்றனர். இதனால் ஒரு நோயாளி அதிக தூரம் நடந்து சென்று சிகிச்சை பெறுவதைத் தடுத்து அதிகபட்சம் மூன்று மைல்களுக்குள்ளாகவே சிகிச்சை பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இந் நோய் பரவுதல் 1977-ம் ஆண்டில் 1,000 பேரில் 20 ஆக இருந்தது. 1981-ல் 1,000 பேரில் 14.03 ஆகக் குறைந்துள்ளது. இந் நோயின் பாதிப்பு 1977-ல் 1,000 மக்களுக்கு 3.1 ஆக இருந்தது. 1981-ல் 1,000-க்கு 1.7 ஆக குறைந்துள்ளது. களப் பணியிலும், வழி முறைகளிலும், தீவிரமான பயிற்சி வெற்றிகரமாக மேற்கொண்டவர்களால் இத்திட்டம் அடிமட்ட அளவில் செயல் படுத்தப்படுகிறது. வெற்றிகரமாக பயிற்சி முடித்த பின்னர் இப் பணியில் நியமிக்கப்படுகிறார்கள்.

தொழு நோய் திட்டத்தின் அடிப்படை ஊழியர்களான தொழு நோய் ஆய்வாளர்களுக்கு கீழ்க்கண்ட இடங்களில் 6 மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப் படுகிறது :—

1. அரசு தொழு நோய் கல்வி மற்றும் சிகிச்சை நிலையம், திருக்கோவிலூர், தென் ஆர்க்காடு மாவட்டம்.

2. ஹேமர்ஜாக் அரசு தொழு நோய் மையம், போலம்பாக்கம்.



3. புனித தாமஸ் மருத்துவமனை மற்றும் தொழு நோய் மையம், செத்துப்பட்டு, வடாற்காடு மாவட்டம்.

4. செப்பிலியன் தொழு நோய் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், கரிகிரி, வடாற்காடு மாவட்டம்.

இத் திட்டத்தின்கீழ்ப் பணியாற்றும் எல்லா பணியாளர்களுக்கும், பணியை மேற்கொள்ளும் முன் பயிற்சி அளிக்கப்படுகிறது. மருத்துவ அதிகாரிகளுக்கு சைதாப்பேட்டையிலுள்ள வெள்ளி விழா மருத்துவ மனையில் குறுகிய கால பயிற்சி அளிக்கப்படுகிறது. 1980-81 ஆம் ஆண்டில் 80 மருத்துவ அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமப்புற சிகிச்சை அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நகர்ப்புறமும் கிராமப்புற பகுதிகளும் சிகிச்சையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. களப் பணிகளை நன்கு கவனிக்கும் பொருட்டு தற்காலிக மருத்துவ மனை பிரிவுகள் ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் திறக்கப்பட்டன. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் இறுதியில் தொழு நோய் கட்டுப்பாடு திட்டத்தில் கீழ்க்கண்ட தொழு நோய் நிலையங்கள் செயல் பட்டத் தொடங்கின:—

| | |
|---|---|
| 1. தொழு நோய் கட்டுப்பாட்டு நிலையங்கள் | 58 |
| 2. சிகிச்சை மற்றும் கல்வி நிலையம் | 1 |
| 3. ஆய்வு கல்வி மற்றும் சிகிச்சை நிலையங்கள் | 132 |
| 4. தொழு நோய் பயிற்சி நிலையங்கள் | 4 |
| 5. தற்காலிகமாக தங்கி சிகிச்சை பெறும் வார்டுகள். | 25 |
| 6. தனியார் நிறுவனங்கள் | 25 |
| 7. அரசு மானியம் பெறும் தனியார் நிறுவனங்கள் | 2 |
| 8. மறு உறுப்பெறச் செய்யும் ரணச் சிகிச்சை நிலையங்கள். | 9 |
| 9. மாவட்ட தொழு நோய் அலுவலர்கள் அலுவலகம். | 13 |
| 10. நகர்ப்புற நிலையங்கள் | 48 |
| 11. தொழு நோய் ஆய்வு நிலையம் | 8 |

[1982 மார்ச் 22

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு தமிழ் நாடு அரசுக்கு 1979-80 ஆம் ஆண்டிற்கு 36.00 இலட்சமும் 1980-81 ஆம் ஆண்டிற்கு 30.00 இலட்சமும் கீழ்க்கண்ட நிலையங்கள் தொடங்குவதற்காக வழங்கியது:—

| | |
|---|---|
| 1. தற்காலிகமாக தங்கி சிகிச்சை பெறும் வார்டுகள். | 23 |
| 2. நகரத் தொழு நோய் கட்டுப்பாடு நிலையங்களை மேம்படுத்துதல். | 2 |
| 3. மாவட்ட தொழு நோய் அலுவலர்கள் அலுவலகத்தை மேம்படுத்துதல். | 6 |
| 4. பழைய தொழு நோய் கட்டுப்பாட்டு பிரிவை கட்டுதல். | 6 |
| 5. தொழு நோய் மறுவாழ்வு அபிவிருத்தி பிரிவு | 1 |

மேற்கண்ட நிலையங்கள் அனைத்தும் மேல் நிலை நிலையங்களாக மாற்றப்பட்டு விட்டன. தற்காலிக மருத்துவமனை பிரிவுகளும் தொழு நோய் பிரிவுகளும் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளன.

1981-82 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு தற்காலிக இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும் மத்திய அரசு நிதி உதவி 50 சதவிகிதத்திற்குப் பதிலாக 100 சதவிகிதம் அளிக்கும் என்று தெரிவித்துள்ளது. 1981-82 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 40.80 இலட்சம். 1981-82 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட செயற் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| 1. மருத்துவர் அல்லாத மேற்பார்வையாளர் | 5 |
| 2. மாவட்ட தொழு நோய் மருத்துவ அதிகாரி | 1 |
| 3. மாவட்ட தொழு நோய் அதிகாரியின் அலுவலகம் மேம்படுத்தல். | 1 |
| 4 மாதிரி கணக்கெடுப்பு மற்றும் நிர்ணய பிரிவு. | 1 |
| 5. மாற்று வாகனங்கள் அளித்தல் | 2 |
| 6. பழைய பிரிவுகளை புதுப்பித்தல் | 1 |



1982 மார்ச் 22]

தொழு நோய் தடுப்புத் திட்டம் தொடர்த் திட்டமாக உள்ளபடியால் தொழு நோயாளிகளைக் கண்டறிய சோதனைகள் நடத்தப்படுகிறது. அவ்வாறு சோதனைக்கான புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 1. தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகை. | 4,11,00,000 |
| 2. தேசிய தொழு நோய் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட மக்கள் தொகை. | 3,81,00,000 |
| 3. மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை | 7,80,000 |
| 4. 1981 நவம்பர் முடிய கண்டு பிடிக்கப்பட்ட நோயாளிகள். | 7,50,000 |
| 5. சிகிச்சையின் கீழ் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை. | 5,50,000 |
| 6. நோயினின்று குணமடைந்து அனுப்பப் பட்டவர்களின் எண்ணிக்கை. | 99,513 |
| 7. குணமடைந்து, நிலையத்தில் மருத்துவ சிகிச்சையிலும் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை. | 92,668 |

1978 ஆம் ஆண்டு பள்ளிக் குழந்தைகளிடையே தீவிர மருத்துவ சோதனை மேற்கொள்ளப்பட்டது. பள்ளிக் குழந்தைகளிடையே செய்யப்பட்ட மருத்துவ பரிசோதனையின் புள்ளிவிவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | 1978 | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| சோதனை செய்யப்பட்ட பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கை. | | 14,30,214 | 17,79,721 | 18,06,851 | 24,08,140 |
| நோய் உள்ளவர்களாக கண்டுபிடிக்கப் பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை— | | | | | |
| பழைய | .. | 4,767 | 9,489 | 14,630 | 14,897 |
| புதிய | .. | 11,282 | 12,258 | 9,741 | 12,353 |

பள்ளியில் சேர்க்கும்போதே பள்ளிக் குழந்தைகளுக்கு தொழு நோய் கண்டிருக்கிறதா என்று அறிந்து அதற்கான தொடர் நடவடிக்கை மேற், கொள்ளப்படும்.

பள்ளி செல்லும் குழந்தைகளிடையே தொழு நோய் உள்ளதா என கண் டறிய, 1982-83 ஆம் ஆண்டில் கிராம, நகர்ப்புற பகுதிகளில் உள்ள பள்ளி களில் படிக்கும் 35 இலட்சம் குழந்தைகளை பரிசோதிக்க கருதப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் சிகிச்சை அளிக்கும் நாட்களைக் குறைக்க பல்வகை மருந்துகள் கொடுக்கும் சிகிச்சை முறை கொண்ட முன்னோடி சோதனை ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.



தொழு நோய் திட்டத்தில் மேற்கொண்ட பணிகளின் ஒப்புநோக்கு புள்ளி விவரங்கள்.

| | | 1970 | 1971 | 1972 | 1973 |
|---|---|---|---|---|---|
| 1. | சோதனை செய்யப்பட்ட மக்கள் தொகை (லட்சத்தில்) .. .. .. | 12·3 | 20·8 | 20·01 | 31·89 |
| 2. | கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. | 26,181 | 47,487 | 31,955 | 40,654 |
| 3. | கண்டுபிடிக்கப்பட்ட புதிய நோயாளிகள் (1000-க்கு) .. .. .. .. | 21·3 | 22·8 | 16·0 | 12·7 |
| 4. | மொத்தத்தில் தெரியவந்த நோயாளிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) .. .. | .. | .. | .. | 1·94 |
| 5. | சிகிச்சையின்கீழ் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) ... ... | .. | ... | ... | 1·38 |
| 6. | மேற்பார்வையின்கீழ் உள்ளவர்கள் (லட்சத்தில்) .. .. | .. | .. | ... | 7·8 |
| 7. | சோதனை செய்யப்பட்ட பள்ளிக் குழந்தைகள் (லட்சத்தில்) .. .. .. | .. | .. | .. | .. |
| 8. | பள்ளிக் குழந்தைகளில் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. .. .. | .. | .. | .. | .. |
| 9. | பழைய நோயாளிகள் (1,000—க்கு) .. | .. | .. | .. | .. |
| 10. | புதிய நோயாளிகள் (1,000-க்கு) ... | .. | .. | .. | .. |

தொழுநோய் திட்டத்தில் மேற்கண்ட பணிகளின் ஒப்பு நோக்கு புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| | 1974 | 1975 | 1976 | 1977 |
|---|---|---|---|---|
| 1. சோதனை செய்யப்பட்ட மக்கள் தொகை (லட்சத்தில்) .. .. .. | 36.62 | 56.01 | 89.39 | 107.19 |
| 2. கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. | 45,003 | 61,788 | 50,929 | 60.000 |
| 3. கண்டுப்பிடிக்கபட்ட புதிய நோயாளிகள் (1,000க்கு) .. .. .. | 12.3 | 11.00 | 5.7 | 5.6 |
| 4. மொத்தத்தில் தெரியவந்த நோயாளிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) .. .. | 2.2 | 4.8 | 5.5 | 5.9 |
| 5? சிகிச்சையின் கீழ் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) .. .. | 1.61 | 3.8 | 4.4 | 4.7 |
| 6. மேற்பார்வையின் கீழ் உள்ளவர்கள் (லட்சத்தில்) .. .. .. | 8.78 | 11.5 | 13.6 | 14.9 |
| 7. சோதனை செய்யப்பட்ட பள்ளி குழந்தைகள் (லட்சத்தில்) .. .. | .. | .. | .. | 3.5 |
| 8. பள்ளிக் குழந்தைகளில் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள். .. .. .. | .. | .. | .. | 1,159 |
| 9. பழைய நோயாளிகள் (1,000-க்கு) .. | .. | .. | .. | 20.4 |
| 10. புதிய நோயாளிகள் (1,000-க்கு) .. | .. | .. | .. | 3. |



தொழுநோய் திட்டத்தில் மேற்கொண்ட பணிகளின் ஒப்புநோக்க புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி

| | 1978 | 1979 | 1980 | 1981 நவம்பர் வரையில். |
|---|---|---|---|---|
| 1. சோதனை செய்யப்பட்ட மக்கள் தொகை (லட்சத்தில்) .. .. .. | 103.95 | 92.8 | 97.6 | 104.1 |
| 2. கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. | 58,327 | 41,683 | 29,968 | 250.79 |
| 3. கண்டுபிடிக்கப்பட்ட புதிய நோயாளிகள் (1,000-க்கு) .. .. .. | 5.6 | 4.5 | 3.0 | 2,4 |
| 4. மொத்தத்தில் தெரியவந்த நோயாளிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) .. .. | 6.3 | 7.0 | 7.3 | 7.5 |
| 5. சிகிச்சையின் கீழ் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை (லட்சத்தில்) .. .. | 4.9 | 5.2 | 5.3 | 5.5 |
| 6. மேற்பார்வையின் கீழ் உள்ளவர்கள் (லட்சத்தில்) .. .. .. | 16.6 | 16.6 | 17.8 | 20.5 |
| 7. சோதனை செய்யப்பட்ட பள்ளிக் குழந்தைகள் (லட்சத்தில்) .. .. | 14.3 | 17.8 | 18.6 | 24.3 |
| 8. பள்ளிக் குழந்தைகளில் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. .. .. | 16,049 | 21,748 | 24,371 | 272.50 |
| 9. பழைய நோயாளிகள் (1,000-க்கு) .. | 18.5 | 15.5 | 15.0 | 14.03 |
| 10 புதிய நோயாளிகள் (1,000-க்கு) .. | 2.1 | 1.9 | 1.7 | 1.4 |

[1982 மார்ச் 22

## (1) காச நோய்த் தடுப்புத் திட்டம்.

காச நோயைத் தடுக்கும் பொருட்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசிய காச நோய் தடுப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மாவட்ட காசநோய் தடுப்புத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மேற்கண்ட மாவட்ட காசநோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் காசநோய் நோயாளிகளுக்கு நோய் கண்டுபிடிப்பதும், சிகிச்சையும் இலவசமாக எல்லா அரசு மருத்துவ மனைகளிலும், அரசு மருந்தகங்களிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் அளிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் மாவட்ட காச நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு (20—9—1981 வரை) 10.31 லட்சம் காச நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டனர். மருத்துவமனைகளில் தங்க வைத்து அளிக்கப்படும் சிகிச்சையானது காச நோயால் தீவிரமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே தேவையானது. தமிழ் நாட்டில் எட்டு அரசு காச நோய் மருத்துவமனைகளும், மூன்று தனியார் நிறுவனங்களும் உள்ளன. மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் சில தாலுகா மருத்துவ மனைகளிலும் காச நோயாளிகளுக்கு அவசரச் சிகிச்சைக்காக சில படுக்கை வசதிகள் உள்ளன. மொத்தத்தில் தமிழ்நாட்டில் 3,651 படுக்கைகள் காச நோயாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

காச நோயை கண்டுபிடிக்கும் திட்டத்தை தீவிரப்படுத்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள தொழில் நுட்பர்களும் சளி மற்றும் இரத்த பரிசோதனை செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பி.சி.ஜி. ஊசி போடும் திட்டம் காச நோய்த் தடுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். தமிழ்நாட்டில் 23 பி.சி.ஜி. குழுக்கள் மாவட்ட காசநோய் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இக் குழுக்கள் வீடு வீடாகச் சென்று இளம் வயதினர்களுக்கு பி.சி.ஜி. ஊசிகளை போடுகின்றனர். புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு பி.சி.ஜி. ஊசி தாய்-சேய் நல விடுதிகளிலும் குழந்தைகள் வார்டுகளிலும் போடப்படுகின்றன. தமிழ்நாட்டில் மாவட்ட காச நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 31—12—1981 முடிய 181.26 லட்சம் பேர்களுக்கு பி. சி. ஜி. ஊசி போடப்பட்டுள்ளது. 1931 ஆம் ஆண்டின் குறியீடு 13 லட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் 13.35 லட்சம் நபர்களுக்கு பி. சி. ஜி. ஊசி போடப்பட்டுள்ளது.



1982 மார்ச் 22]

தமிழகத்தில் இரண்டு காச நோய் விளம்பர பிரிவுகள் உள்ளன. இவ்விரண்டு பிரிவுகளும் காசநோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், சேரி பகுதிகளிலும் காசநோய் பற்றிய திரைப்படங்களை காண்பித்து மக்களுக்கு காச நோய்களை களைவதற்கு வேண்டிய வசதிகள் உள்ளன என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

தமிழ்நாடு காசநோய் கழகம், சென்னை, வழங்கிய நன்கொடையைப் பயன்படுத்தி 1981-82ல் ரூ. 90,000 செலவில் 12 படுக்கைகள் கொண்ட ஒரு காசநோய் பிரிவை ராசிபுரம் அரசு மருத்துவமனையில் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு காசநோய் கழகம், சென்னை வழங்கிய நன்கொடையை முழுதும் பயன்படுத்தி மருத்துவ பணி மற்றும் குடும்பநலத் துறை இயக்குநரின் கருத்துருவை ஏற்று ரூபாய் முறையே 1,00,000 செலவில் அரக்கோணத்திலும் ரூ. 1,00,000 செலவில் திருப்பத்தூரிலும், ரூ. 75,000 செலவில் ஆரணியிலும் பத்து படுக்கைகள் கொண்ட பிரிவுகள் கட்ட ஆணையிடப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

காச நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ், மாநில அரசுக்கு மத்திய அரசு காச நோய் தடுப்பு மருந்துகள், பி.சி.ஜி. ஊசி, நுண்கதிர் கருவிகள், ஓடல்கா புகைப்படக் கருவி, நுண்உருப்பெருக்கி, பி.சி.ஜி. பெட்டி முதலியன வழங்குகின்றது. மேற்கண்ட பொருள்களை மத்திய அரசு மாவட்ட காசநோய் மையங்களுக்கு பொருள்களாகவே வழங்குகின்றது. காசநோய் தடுப்பு மருந்தும், மற்றும் ஏனைய கருவிகள் வழங்குவதிலும் மத்திய அரசு மொத்த தேவையில் 50 சதவிதம் ஏற்றுக்கொள்கிறது. மாநில அரசு மீதியுள்ள 50 சதவிதம் செலவினத்தை ஏற்றுக்கொள்கிறது. மத்திய அரசு சுகாதார இயக்குநர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தின்படி தமிழ்நாட்டிற்கு காசநோய் தடுப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கிய உதவிகளின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 1979-80 | 8.34 |
| 1980-81 | 7.65 |
| 1981-82 | 4.75 |

தமிழ்நாடு காசநோய் கழகமும், அதனுடன் இணைக்கப்பட்ட மாவட்ட கழகங்களும் காசநோய் பில்லைகள் விற்பனையின் மூலம் திரட்டிய **தொகை** பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 1977-78 | 9.37 |
| 1978-79 | **11.57** |
| **1979-80** | **7.06** |
| **1980-81** | **9.14** |

நாட்டிலுள்ள காச நோய் கழகங்களில் தமிழ்நாடு காச நோய் கழகம், அதிகப்படியான பணத்தை காசநோய் பில்லைகளை விற்பதன் மூலம் திரட்டியதற்காக மேலே குறித்த ஆண்டுகளுக்கான சுழற் கேடயத்தை பரிசாக இந்திய காசநோய் கழகத்திலிருந்து பெற்றுள்ளது. தமிழ்நாடு காச நோய்க் கழகம் கடந்த 11 (பதினொரு) ஆண்டுகளாக இப்பரிசைப் பெற்றுள்ளது. இந்திய காச நோய் கழகம் தமிழ்நாடு காசநோய் கழகத்திற்கு காசநோய் தடுப்புப் பணிகளில் 1980-81-ல் சிறப்பான பணியை ஆற்றியதற்கு "போய்மோகன்சிங் பரிசு" என்ற பரிசையும், தகுதிச் சான்றிதழையும் வழங்கியுள்ளது. கடந்த 30 முகாம்களில் அனைத்து மாநில காசநோய் கழகங்களின் ஒட்டுமொத்தமான சேகரிப்பு ரூபாய் மூன்று கோடியாகும். இதில் தமிழக காசநோய் கழகத்தின் சேகரிப்பு ஒரு கோடி ரூபாயாகும். காசநோய் தடுப்புப் பணிகளில் தமிழ்நாடு காசநோய் கழகம் எப்பொழுதும் முன்னணியில் நிற்கிறது.

(பி) தனியார் மருத்துவ நிலையங்களுக்கான மானியங்கள்.

தனியாரால் நடத்தப்பட்டு வரும் மருத்துவ நிலையங்களுக்கு உதவியாக மானியம் வழங்கப்பட்டு வருகிறது. நம் மாநிலத்தில் கீழ்க்கண்டவகையான மானியங்கள் வழங்கப்படுகின்றன :—

தனியார் மருத்துவ நிலையங்களுக்கான பராமரிப்பு மானியம்.

மருத்துவப்பணி மற்றும் மக்கள் நல்வாழ்வு இயக்குநரின் பரிந்துரையின் பேரிலும் மற்றும் தணிக்கைப் பட்டியலுடன் இம்மானியம் வழங்குவதைப் பற்றியும் அதை உபயோகப்படுத்தும் வரையறைகளையும் ஆய்வுக் குழுவினரின் திருப்தி தெரிவிப்பதின் பேரிலும் இம்மானியம் வழங்கப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் (ஜனவரி 1982 வரை) 38 நிறுவனங்கள் சுமார் ரூபாய் 22.30 லட்சம் அளவில் பராமரிப்பு மானியமாக பெற்றுள்ளது.



1980-81 ஆம் ஆண்டில் செங்கிப்பட்டியிலுள்ள மகாத்மா காந்தி நினைவு உருக்கி நோய் நிலையம் ஏற்கனவே பெற்றுவந்த ரூ. 58,000 மானியத் தொகையிலிருந்து ரூ. 1.00 லட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

2. கட்டிட மானியம்.—இம்மானியமானது தனியார் மருத்துவ நிறுவனங்கள் மருத்துவ வசதிக்காக கட்டப்படும் கட்டிடங்களுக்கு ஆகும் தொகையில் பாதியையோ அல்லது அரசால் குறிப்பிடப்படும் அதிகபட்ச தொகையாகவோ வழங்கப்படுகிறது. இவ்வாண்டில் கீழ்க்கண்டவாறு ரூபாய் 9.92 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| (1) புற்றுநோய் நிறுவனம், அடையாறு | 6.15 |
| (2) தானே முன்வந்து இயங்கும் சுகாதார நிலையம் அடையாறு. | 3.53 |

3. கருவிகள் மானியம்.—இம்மானியமும் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு கருவிகள் வாங்குவதற்காக அக்கருவியின் விலையில் பாதி தொகை வழங்கப்படுகிறது. இம்மானியமானது இந்நிறுவனங்கள் கருவியை வாங்கியவுடன் அதற்கான கணக்குகளுடன் தணிக்கைப் பட்டியலையும் சமர்ப்பித்த பிறகே வழங்கப்படுகிறது.

4 தனியார் தொழுநோய் நிறுவனங்களுக்கான தலைவீத மானியம்:

இம்மானியமானது தனியார் தொழுநோய் நிலையங்களில் சிகிச்சை பெற்றுவரும் தொழுநோய் நோயாளிகளுக்கு ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 25 வீதமும் அவர்களைச் சார்ந்துள்ள ஆதாரமான குழந்தைகளுக்கு ரூ. 12 வீதமும் மாதாமாதம் வழங்கப்படுகிறது. மேலும் தொழுநோய் தொண்டு நிறுவனங்களில் அளிக்கப்படும் தொற்று நோய் சிகிச்சைக்காகவும், தொழுநோய் புனர்வாழ்வு அறுவை சிகிச்சைக்காகவும் மற்றும் தொழுநோய் சிகிச்சையல்லாத வெளிபுண்கள் சிகிச்சைக்காகவும். மேற்கூறிய தலைவீத மானியம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசிடமிருந்து இதுபோன்று 11 (பதினொரு) நிறுவனங்கள் இம்மானியத்தைப் பெற்று வருகின்றன. 1981-82 ஆம் வருடம் ரூ. 2.02 லட்சம் இதற்காக வழங்கப்பட்டுள்ளது.

ஹோமியோபதி.

ஹோமியோபதி கல்வியும், ஹோமியோபதி மருத்துவ முறையும், தமிழ்நாடு ஹோமியோபதி மருத்துவ முறை மற்றும் ஹோமியோபதி மருத்துவ அலுவலர்கள் சட்டம் 1971-ன்படி இயங்கி வருகிறது.

[1982 மார்ச் 22

ஹோமியோபதி மருத்துவ முறைக்கு முக்கியத்துவம் அளிப்பதற்கும், மேலும் இம்முறையை தமிழகத்தில் அபிவிருத்தி செய்வதற்காகவும், இவ்வரசு ஹோமியோபதி மருத்துவ முறையை அங்கீகரிக்கப்பட்ட முறையாக ஆணையிட்டுள்ளது. மேலும் சென்னை கீழ்ப்பாக்கத்தில் 25 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு அரசு ஹோமியோபதி கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை செயல்பட்டு வருகின்றன. இங்கு ஹோமியோபதி முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இக் கல்லூரியில் நடத்தப்பட்டு வரும் 6 மாத உட்பயிற்சியுடன் கூடிய 4 வருட டி.எச்.எம்.எஸ் (D.H.M.S.) பட்டய படிப்புக்கு ஆண்டுதோறும் 21 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

இம்மருத்துவ மனையில் நோய்களைக் கண்டுபிடிக்கவும், அவற்றிற்குத் தக்க சிகிச்சை அளிக்கவும் எக்ஸ்-ரே மற்றும் மருத்துவ பரிசோதனை வசதிகள் உள்ளன.

1980-81 ஆம் வருடத்தில் திறக்க உத்தேசிக்கப்பட்ட ஆறு ஹோமியோபதி மருந்தகங்களில், மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, இம்மருந்தகங்கள் 1982-ம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் செயல்பட்டு வருகின்றன.

மேலும் ஹோமியோபதி கல்லூரி மாணவர்களுக்காக, ஒரு கல்லூரி ஊர்தி இவ்வருடத்தில் வாங்கப்பட்டது.

1982-83 ஆம் வருடங்களில் செயல்படுத்த எண்ணியுள்ள திட்டங்களின் விபரங்கள் :

அரசு ஹோமியோபதி மருத்துவ கல்லூரியில் ஹோமியோபதி மருத்துவத்தில் பட்ட படிப்பு ஏற்படுத்தும் திட்டம் உள்ளது. மேலும் அங்கு ஹோமியோபதி மருத்துவ முறையில் மருந்தாளுனர் படிப்பும் ஏற்படுத்தும் திட்டம் உள்ளது.

1980-81-ல் இரண்டு மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளில் ஏற்படுத்தப்பட்ட ஹோமியோபதி மருந்தகங்களை தவிர, 1981-82-ல் மேலும் ஆறு மாவட்ட மருத்துவமனைகளில் ஹோமியோபதி மருந்தகங்கள் திறக்கப்பட்டன.

தற்போது எஞ்சிய மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளில் ஹோமியோபதி மருந்தகங்கள் திறக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டு அதன்படி 1982-83-ல் கீழ்க்கண்ட ஏழு மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளில் ஹோமியோபதி மருந்தகங்கள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை.

2. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, தர்மபுரி.



1982 மார்ச் 22]

3. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.
4. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, உதகமண்டலம்.
5. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, ஈரோடு.
6. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, திருப்பூர்.
7. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, காஞ்சிபுரம்.

## 2. குடும்ப நலத் திட்டம்.

குடும்பநலத் திட்டம் மத்திய அரசின் முழு நிதி உதவியைக் கொண்டு நடத்தப்படுகின்ற ஒரு திட்டமாகும். திட்டமிட்ட வளர்ச்சியின் ஓர் அங்கமாக இத்திட்டம் திகழ்ந்து வருகிறது. திங்கள் ஒன்றுக்கு ஒரு மில்லியன் என்ற கணக்கில் நமது நாட்டின் மக்கள் தொகை பெருகி வருகிறது. இந்த நிலையில் மக்கள் தொகை பெருகிச் சென்றால் இந்நூற்றாண்டின் முடிவில் மக்கள் தொகை 1065 (ஆயிரத்து அறுபத்தைந்து) மில்லியனை எட்டிவிடும். நாட்டின் திட்டமிட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கு மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் தேவையை உணர்ந்து அரசு மத்திய அரசின் பொறுப்பேற்கும் திட்டமாகக் குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி வருகிறது. குறைந்த அளவுத் தேவைகள், தாய்சேய் நலத்திட்டம் ஆகியவற்றிலிருந்து பிரிக்க முடியாத உடல்நலக்காப்பின் ஒரு பகுதியாக இத்திட்டம் அமைந்துள்ளது.

குடும்பநலத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் தமிழகம் எப்போதுமே முன்னணியில் விளங்குகிறது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி நமது மாநிலத்தில் நிலவும் மக்கள் தொகை சீராக அமைந்துள்ளது நமக்கு நிறைவைத் தருகிறது. இந்நாட்டில், தமிழகம் மட்டும்தான் ஆண்டொன்றுக்கு மிகக் குறைந்த, அதாவது 17.23 சதவித மக்கள் தொகை வளர்ச்சியைக் கொண்டுள்ளது. பிறப்பு விகிதம் ஆயிரம் பேருக்கு 28.1 சதவிதமாகக் குறைந்துள்ளது.

இறப்புவிகிதம் ஆயிரத்துக்கு 12 என்ற கணக்கில் உள்ளது. குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 112-லிருந்து 98 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கருத்தடை செய்துகொண்ட தகுதி வாய்ந்த தம்பதியரின் சதவிகிதம் 28.6 ஆகும். கருத்தடை செய்துகொள்ளும் தகுதி வாய்ந்த தம்பதியினரின் சதவிகிதத்தை அதிகரித்து, அதன்மூலம் வளர்ச்சி விகிதத்தையும் பிறப்பு விகிதத்தையும் மேலும் குறைக்க வேண்டும் என்பதே தற்போதைய நோக்கமாகும். அந்த நோக்கில், தாய்-சேய் நலப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டும், சுகாதாரப் பாதுகாப்பு, மருத்துவ பாதுகாப்பு திட்டங்களைச் செயற்படுத்தும் முறைகளைச் செம்மைப்படுத்தியும் குழந்தைகள் இறப்பு விகிதத்தையும், குறைப்பதில் நாட்டம் செலுத்தப்படும்.

குடும்பநலத் திட்டம் தமிழ்நாட்டில் எந்தவித கட்டாயமும் இன்றி, மக்களைத் தூண்டுவதின் வாயிலாகச் செயற்படுத்தப்படுகிறது. இது தொடர்பாக தகுதி வாய்ந்த தம்பதியர், நிலையான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றி 'சிறு குடும்ப கோட்பாட்டை' பின்பற்றும் வகையில் குடும்பநலத் திட்டம் பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தி ஊக்குவிப்பதற்கான முனைப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அதிக அளவில் மகளிர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள முன்வருவதே குடும்பநலத் திட்டத்தின் இப்போதுள்ள நிலை. எனவே, மாவட்ட மருத்துவ மனைகளில், கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பிறகு கண்காணிக்கப்படும் பிற்காப்புப் பிரிவுகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது. பிரிட்டன் உதவித் திட்டத்தின் கீழ் 15 வட்ட மருத்துவ மனைகளிலும், 31 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய பிற்காப்பு மருத்துவ வசதிகள் உள்ளன. இவற்றைத் தவிர, மருத்துவக் கல்லூரி இணைந்த 9 மருத்துவ மனைகளிலும், 2 தொண்டு நிறுவனங்களிலும், 14 மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளிலும், கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய மருத்துவ வசதித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்சொன்னவற்றைத் தவிர, 5 அரசினர் வட்ட மருத்துவ மனைகளிலும் உள்ளாட்சி மன்றங்கள் நடத்தி வருகின்ற 5 நிலையங்களிலும், தொண்டு நிறுவனங்கள் நடத்தி வருகின்ற 2 நிலையங்களிலும், கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய பிற்காப்பு மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

1981-82 ஆம் ஆண்டில், நகர்ப்புற குடும்பநல நிலையங்கள் 31-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 14 மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளில் 20 படுக்கைகள் கொண்ட கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கும் பிந்திய பிற்காப்பு மருத்துவ வார்டுகள் கட்டுவதற்கு அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. அந்த மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் கட்டுமானப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

1981-82 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு நிர்ணயித்த இலக்கில் சனவரித் திங்கள் வரையில் அடைந்த சாதனை வருமாறு :



| குடும்ப நலத் திட்ட முறைகள். | மத்திய அரசு நிர்ணயித்த இலக்கு. | 1982 ஆம் ஆண்டு சனவரி இறுதிவரையிலான சாதனை. | கடந்த வருட சனவரி மாதத்திய இறுதிவரையிலான சாதனை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அறுவைச் சிகிச்சை | 1,82,000 | 1,23,89[illegible] | 1,11,912 |
| கருத்தடை வளையங்கள் பொருத்துதல | 47,800 | 2[illegible],6[illegible] | 26,0[illegible] |
| மரபு முறையிலான கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோர் | 1,58,300 | 58,796 | 71,0[illegible]0 |
| கருத்தடை மாத்திரைகள் உட்கொள்வோர் | 31,900 | 3,711 | |

1981-82 ஆம் ஆண்டிற்காக மத்திய அரசு நிர்ணயித்த இலக்கான 1,82,000 அறுவைச் சிகிச்சைகளின் விகிதாசார இலக்கில் 1982 சனவரி இறுதி வரையில் 83 சதவிகிதம் எய்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் தொண்டு நிறுவனங்களின் உடன் உழைப்புடன், அரசு மருத்துவமனைகளில் தீவிர குடும்பநலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகளிருக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சையில் "லெப்பிராஸ்கோப்பிக் (Laproscopic Technique) பின்பற்றப்படுகிறது. நடப்பு ஆண்டிக்கான திட்ட இலக்கை முழுவதும் எய்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

குடும்பநலத் திட்டத்தின் வெற்றிக்கு ஊக்கமாக தாய்-சேய் நலத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு, தாய்-சேய் ஆகியவர்களுக்கு ஊட்டச் சத்துணவின்மையால் ஏற்படும் இரத்த சோகையைத் தடுத்தல், குழந்தைகளுக்கு கண் குருடாவதைத் தடுத்தல், ஆகிய திட்டங்களுக்குத் தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். தவிர பச்சிளங் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுதல், பள்ளி வயதடையா குழந்தைகளுக்குத் தொண்டை அடைப்பான், கக்குவான், நரம்பிசிவு நோய் ஆகிய நோய்களைத் தடுக்க தடுப்பூசி போடுதல், கருவுற்ற தாய்மார்களுக்கு நரம்பிசிவு நோய் ஏற்படாமல் இருக்க தடுப்பூசி போடுதல் போன்றவைகளுக்கும் முதன்மை அளிக்கப்படும்.

தடுப்பூசி.—குடும்பநலத் திட்டத்தின் அங்கமாக தாய்-சேய் நலத் திட்டத்தில் தடுப்பூசி மற்றும் பிற சுகாதார வசதித் திட்டங்களும் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தாய்கள்.—1981-82 ஆம் ஆண்டில், 5,000 தாய்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. நடப்பு ஆண்டில் அந்த இலக்கு முழுமையாக நிறைவேற்றப்படும்.

மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல்.—மகப்பேற்றுக்குத் தொடர்ந்து ஆளாவது மகளிரின் உயிருக்குக் கேடாகும். எனவே, தொடர்ந்து கருத்தரித்தலைத் தடுக்கும்வண்ணம் அவர்களுக்கு ஆலோசனை வழங்க தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில், மருத்துவ முறையில் கருவைக் கலைப்பதற்கான வசதிகள் 1971 ஆம் ஆண்டு மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல் சட்டத்தின்படி செய்து கொடுக்கப்படுகின்றன.

தற்போது 159 அரசு மருத்துவ நிலையங்களிலும், 34 தனியார் மருத்துவ நிலையங்களிலும் இவ்வசதிகள் உள்ளன. 1981 டிசம்பர் வரை 31,121 பேருக்கு மருத்துவ முறையில் கருக்கலைப்பு செய்யப்பட்டுள்ளது.

லெப்ராஸ்கோபி (Laprascopy)

தற்போது இக்கருத்தடை முறை ஆர்.எஸ்.ஆர்.எம். மகப்பேறு மருத்துவ மனை, சென்னை. தாய்-சேய் நல மருத்துவமனை, சென்னை, அரசினர் இராஜாஜி மருத்துவமனை, மதுரை ஆகியவற்றில் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த நவீன முறையில் மருத்துவ அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கும் பயிற்சி நிறுவனங்களாக இம் மூன்று நிறுவனங்களையும் அரசு அண்மையில் அங்கீகரித்துள்ளது. இந்த நவீனமுறை கருத்தடை வசதியினை போதனா மருத்துவ மனைகளுக்கும் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளுக்கும் விரிவாக்கம் செய்ய அரசு கருத்திற் கொண்டுள்ளது.

தனியார் மருத்துவர்கள் மருத்துவ நிலையங்களின் பங்கு.

தனியார் மருத்துவர்களையும் குடும்பநலத் திட்டத்தை வகுப்பதில் ஈடுபடுத்தும் இத்திட்டம் மத்திய அரசால் வகுக்கப்பட்டதாகும். இத்திட்டத்தின்கீழ், தனியார் மருத்துவர்களும் குடும்பநலப் பணிகளை ஆற்றுவதோடு அதற்கென செலவிடும் தொகையை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தனியார் மருத்துவர்கள் குடும்பநலத் தொண்டினை இலவசமாகச் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஆண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை, மகளிருக்குக் கருத்தடை வளையம் பொருத்துதல் ஆகியவற்றுக்காகும் செலவினங்களுக்காக மருத்துவர்களுக்கு முறையே ரூ. 30, ரூ. 5 அனுமதிக்கப்படுகிறது.

உதவி மானியங்கள்.

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் குடும்பநலத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, மாநில அரசு மூலமாக, மத்திய அரசு உதவி மானியங்களை வழங்கி வருகிறது.

குடும்பநலப் பிரச்சாரமும், கருத்தடை ஆதரவாளர்களுக்கு அளிக்கப்படும் புத்தறிவு பயிற்சி முகாம்களும்.



குடும்பநலத் திட்டத்தை வெற்றியாகச் செயற்படுத்துவதில் குடும்பநலக் கல்வியும், பிரச்சாரமும் பெரும் பங்கு வகிக்கின்றன. 1981 அக்டோபர் திங்களில் தமிழ்நாடு முழுவதும், தேசிய குடும்பநல இருவார விழா கொண்டாடப்பட்டது. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் சென்னையில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் குடும்ப நலத் திங்களாக கொண்டாடப்பட்டது. குடும்ப நலத் திட்டம் குறித்து "கல்யாணத்துக்கு ஒரு நிபந்தனை" என்ற செய்தி விளக்க வண்ணப்படம் தயாரித்து வெளியிடப்பட்டது. தகுதி வாய்ந்த தம்பதிகளுக்கு அறிவுறுத்தி வைக்காமலிப்பதற்காக விளம்பரங்கள், சுவர் ஓவியங்கள், விளம்பரத் தட்டிகள், பேருந்துகளில் விளம்பரப் பலகைகள், பொருட்காட்சிகள், படக் காட்சிகள் போன்றவற்றின் மூலமாகவும், கருத்தடை ஆதரவாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் (1025-க்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தியதின் மூலம்) பிரச்சாரப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மகளிருக்கான கருத்தடை.

கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு ரூ. 85-ம் ஆடவர்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு ரூ. 75-ம் மான்யமாக இம்மாநிலத்தில் அளிக்கப்படுகிறது. மத்திய அரசு இவ்விரு சிகிச்சைகளுக்கு ரூ. 70 மட்டுமே நிர்ணயித்தது. "மருந்துகள்—கட்டுப்போடுதல்", "உணவு", "போக்குவரத்து" ஆகிய செலவினங்களுக்காக வரையறுக்கப்பட்ட தொகை 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. கருத்தடை அறுவை சிகிச்சை ஒவ்வொன்றிற்கும் மருத்துவ துணைப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும் ஊதியம் தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு.

1980-81 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவு ரூ 907.69 இலட்சமாகும். 1981-82 ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ. 998.31 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் குடும்பநலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 942.94 இலட்சமாகும்.

பிற்சேர்க்கை 1.

மாநில வரவு-செலவுத் திட்டமும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு செலவினங்களும்.

1982-83 ஆம் ஆண்டுக்கான கோரிக்கை 18. மருத்துவம் மற்றும் கோரிக்கை 19. மக்கள் நல்வாழ்வு இவைகளின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 151 கோடியாகும். இதில் கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகியவற்றின் கீழ் ரூ. 38 கோடியும் அடங்கும். இது வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,370 கோடியில் 11 விழுக்காடாகும்.

மருத்துவக் கோரிக்கையின் கீழ் 1982-83க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பல்வேறு நிலைப் பணிகளுக்குச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

1982-83-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

| | திட்டமில்லாத செலவினம். | திட்டச் செலவினம். மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். | மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள். (50:50) | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| 259. அரசு மருத்துவ நிலையங்களின் கட்டடப் பராமரிப்பு, சீர்செய்தல் பணிகளுக்கான செலவு. | 1,10,00 | .. | .. | .. | 1,10 00 |
| 280. மருத்துவம்— | | | | | |
| (1) கல்வி .. .. .. | 7,42 16 | 42,78 | .. | 4,42 | 7,59,31 |
| (2) பயிற்சி .. .. | 34,92 | 18,08 | .. | 11 | 53,16 |
| (3) ஆராய்ச்சி .. .. | 3,87 | 3,13 | 1,37 | .. | 8,37 |
| (4) மருத்துவ நிவாரணம் (மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவ மனைகள் சேர்ந்து). | 48,69,72 | 5,19,31 | 36 65 | 1,71 | 54,27,39 |
| (5) ஹோமியோபதி மருத்துவம். | 9,88 | 3,89 | .. | .. | 13,73 |
| (6) இந்திய முறை மருத்துவம். * | 76,24 | 1,16,21 | 3,66 | .. | 1,96, 1 |
| (7) பிற இனங்கள் .. .. | 9,59,37 | 8,48 | .. | .. | 9,67,85 |
| 288. சமூக பாதுகாப்பு மற்றும் நலம். | 72,76 | .. | .. | .. | 72,76 |
| திருப்பி வசூலிப்பவை .. | .. | .. | .. | .. | 8,00 |
| பெரு மொத்தம்—கோரிக்கை 18. மருத்துவம். | 68,88,92 | 7,11,88 | 41,68 | 6,24 | 76,56,72 |

*இந்திய மருத்துவம் பற்றிய குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.

*மக்கள் நல்வாழ்வுக் கோரிக்கையின் கீழ் 1982–83-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பல்வேறு நிலைப் பணிகளுக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்க விவரங்கள் பின்வருமாறு:—

1982–83-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

(ரூபாய் ஆயிரத்தில்)

| | திட்டமில்லாத செலவினம். | திட்டச் செலவினம். மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். | மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள். (50:50) | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 259. மக்கள் நல்வாழ்வு நிலையங்களுக்கான கட்டட பராமரிப்பு, சீர் செய்தல் பணிகளுக்கான செலவு .. .. | 9,00 | .. | .. | .. | 9,00 |
| 230. மருத்துவம்—ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதலியன | 8,06,96 | 4,38,94 | 1,74 | .. | 12,47,64 |
| 281. குடும்பநலம் .. .. | .. | .. | 13,13,76 | .. | 13,13,76 |
| 282. (1) மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவு .. .. | 5,64,69 | 1,34,46 | .. | 2,99,59 | 9,98,74 |
| (2) கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல் .. | (—)48,99 | 33,25,32 | 5,00,00 | .. | 37,76,33 |
| கூட்டுக—திருப்பி வசூலிப்பவை | .. | .. | .. | .. | +1,00,00 |
| பெருமொத்தம். கோரிக்கை—19 | 13,31,66 | 38,93,72 | 18,15,50 | 2,99,59 | 74,45,47 |

*மக்கள் நல்வாழ்வு பற்றிய குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்காக செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1982–83-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

| | திட்டமில்லாத செலவினம். | திட்டச் செலவினம். மாநிலத் திட்டம். | திட்டச் செலவினம். மைய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். | திட்டச் செலவினம். மைய அரசு உதவி செய்யும் திட்டங்கள். (50:50) | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| வருவாய் கணக்கில் செலவு: | | | | | |
| மானியக் கோரிக்கை | | | | | |
| 28. சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகங்களும். | | | | | |
| 280. மருத்துவ நிவாரணம்: | | | | | |
| (உள்ளாட்சி மன்றங்களின் மகப்பேறு நிலையங்களுக்கு பராமரிப்பு மானியம் உட்பட). | 1,20,00 | 6,50 | .. | . | 1,26,50 |
| 30. சமூக நலம்: | | | | | |
| தமிழ்நாடு சத்துணவு திட்டம் பொது சுகாதாரம். | .. | 1,21,70 | .. | .. | 1,21,70 |
| 37. பொதுப்பணி-மருத்துவம் மக்கள் நல்வாழ்வுக் கட்டிடங்கள். | 6,90 | 3,41 | .. | .. | 10,31 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு: | | | | | |
| மருத்துவம் குடும்பநலம், மக்கள் நல்வாழ்வு, துப்புரவு, குடிநீர் வழங்கல் கட்டிடப் பணிகள். | 51,02 | 11,72,05 | 2,12,93 | 61,26 | **14,97,26** |
| 680. மருத்துவம் குறித்த கடன்கள் | 20 | .. | .. | .. | 20 |
| 682. மக்கள் நல்வாழ்வு, துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த கடன்கள். | 7,34,07 | 20,07,27 | .. | .. | 27,41,34 |
| மொத்தம் .. .. | 9,12,19 | 33,10,93 | 2,12,93 | 61,26 | 44,97,31 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1982–83-ல் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக்காக செலவிடப்படும் தொகை ரூ. 196 கோடியாகும்.

[1982 மார்ச் 22

5. எல்லா தலைப்புகளின் கீழும் (280. மருத்துவம், 281. குடும்பநலம், 282. மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவு, 480. மருத்துவ மூலதனச் செலவு, 481. குடும்பநல மூலதனச் செலவு, 482. மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவு மூலதனச் செலவு) மருத்துவம், மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவுக்கான (குடிநீர் வழங்கலைச் சேர்க்காமல்) 1982-83 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு:—

| | பொறுப்பேற்ற செலவினம். | 1982-83-ல் புதிதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள் (ரூபாய் ஆயிரத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|
| மாநிலத் திட்டம் | 20,25,68 | 7,30,25 | 27,55,93 |
| மத்திய அரசு பொறுப்பு ஏற்பவை | 15,68,37 | .. | 15,68,37 |
| மத்திய அரசு உதவி செய்பவை (50:50) | 3,67,09 | .. | 3,67,09 |

6. 1932—83 ஆம் ஆண்டில் புதிதாக ஒப்பளிப்பு வழங்கக் கருதப்பட்டுள்ள திட்டங்களின் விவரம் துறைவாரியாக கீழே தரப்படுகிறது:—

| துறை. | மொத்தச் செலவு. | 1982-83ல் செலவு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. மருத்துவக்கல்வி | 498.02 | 338.24 |
| 2. மருத்துவப் பணி மற்றும் குடும்பநலம் | 199.99 | 136.71 |
| 3. ஆரம்ப சுகாதார நிலையங்கள் .. .. | 66.61 | 146.89 |
| 4. மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து | 34.16<br>+ 1.73 | 17.36<br>+ 1.03 |
| 5. இந்திய மருத்துவம் .. | 47.08 | 41.37 |
| 6. சுற்றுப்புற துப்புரவு .. | 5.00 | 5.00 |
| 7. மாநில சுகாதார போக்குவரத்து அமைப்பு. | 46.08 | 44.68 |
| மொத்தம் .. | 898.67 | 731.28 |



1982 மார்ச் 22]

1982-83 ஆம் ஆண்டில் ரூ. 731.28 இலட்சம் இத்துறைக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இத்தொகை எல்லாத் துறைகளுக்கும் ஒதுக்கப்பட்ட தொகைகளைவிட அதிகமாகும். இது 51,77.76 இலட்சத்தில் 14 விழுக்காட்டினைக் காட்டும்.

† குறியீடு திட்டமில்லாத செலவினத்தைக் குறிக்கும்.

பிற்சேர்க்கை 2.

பட்டப் படிப்புகள்.

| படிப்பின் பெயர். | கால அளவு. | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| எம். பி. பி. எஸ். .. | 5½ ஆண்டுகள் (உட்பணி பயிற்சி உட்பட) | 1051 |
| புதுமுக மருத்துவப் படிப்பு | (1981-82 ஆம் ஆண்டு மட்டும்) | 105 |
| பி. பார்மசி .. | 4 ஆண்டுகள் | 56 |
| பி. டி. எஸ். | 4 ஆண்டுகள் | 45 |
| பி. எஸ்ஸி, செவிலியர் | 2½ ஆண்டுகள் பணிபுரிவோர் | 20 |
| | தனியார் | 10 |

பட்ட மேற்படிப்பு மற்றும் உயர்நிலை சிறப்பு வகுப்புகளுக்கான பட்டியல் :

பட்டப் படிப்பு.

| படிப்பின் பெயர். | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| எம்.டி. | 240 |
| எம்.எஸ். | 141 |
| எம்.சி.எச். | 31 |
| டி.எம். | 17 |
| எம். பார்மசி | 3 |
| எம்.டி.ஏ. | 18 |

பட்ட மேற்படிப்பு பட்டய படிப்பு வகுப்புகள்.

| | | |
|---|---|---|
| டி.ஜி.ஓ. | | 82 |
| டி.எல்.ஓ. | | 48 |
| டி.ஓ. | | 36 |
| டி.எம்.ஆர்.டி. | (D.M.R.T.) | 8 |
| டி.எம்.ஆர்.டி. | (D.M.R.D.) | 24 |
| டி.ஏ. | | 52 |
| டி. ஆர்தோ. | | 26 |
| டி.சி.எச். | | 74 |
| டி.டி.சி.டி. | | 12 |
| டி.வி. | | 20 |
| டி.சி.பி. | | 9 |
| டி.டி. | | 16 |
| டி.ஐ.பி.எம். | | 4 |
| டி.பி.எம். | | 16 |
| டி.பி.எச். | | 10 |
| எல்.பி.எச். | | 1 |

பிற்சேர்க்கை 3.

1981-82 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட மருத்துவக் கருவிகள் விபரம் :—

(ரூபாய் இலட்சத்தில்)

1. பேச்சு மற்றும் காது கேளாத ஊனமுற்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் நிலையத்திற்கு கருவிகள் வாங்குதல் 2.62

2. சென்னை அரசு பொது மருத்துவமனையில் செயற்கை சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சைப் பிரிவிற்கு கருவிகள் வாங்குதல் 15.60

3. கீழ்க்கண்ட 8 மருத்துவமனைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு அல்ட்ராஸானிக் கருவி வாங்குதல் 16.98

(அ) ஆர்.எஸ்.ஆர்.எம். மகப்பேறு மருத்துவ நிலையம், சென்னை.

(ஆ) கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை.



(ரூபாய் இலட்சத்தில்)

(இ) மகப்பேறு மகளிர் நோய் இயல் நிலையம் மற்றும் பெண்கள் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

(ஈ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.

(உ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.

(ஊ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.

(எ) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு.

(ஏ) அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை.

4. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு உபகரணங்கள் வாங்குதல் 3.25

5. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள நரம்பியல் பிரிவிற்கு உபகரணங்கள் வாங்குதல். 2.86

6. அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவிற்கு உபகரணங்கள் வாங்குதல் 2.55

7. அரசு இராயப்பேட்டை மருத்துவமனையிலுள்ள முட நீக்கியல் மருத்துவ சிகிச்சை பிரிவிற்கு உபகரணங்கள் வாங்குதல் 0.95

8. காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா புற்று நோய் சிகிச்சை நிலையத்திற்கு இரத்த சேமிப்பு வங்கிக்காக உபகரணங்கள் வாங்குதல் 10.58

9. சென்னை அரசு மகப்பேறு மகளிர் நோய் நிலையம் மற்றும் பெண்கள் குழந்தைகள் மருத்துவமனைக்கு உபகரணங்கள் வாங்குதல் 2.78

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 10. சென்னை அண்ணா நகரிலுள்ள புறநகர் மருத்துவமனைக்கு உபகரணங்கள் வாங்குதல் | 4.69 |
| 11. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு விபத்து மற்றும் அவசர பணிகள் சிகிச்சைக்காக உபகரணங்கள் வாங்குதல் | 3.00 |
| 12. மதுரை மருத்துவக் கல்லூரியில் நச்சுக்கிருமி யியல் பரிசோதனைக் கூடத்திற்கு உபகர ணங்கள் வாங்குதல் | 5.40 |
| மொத்தம் | 71.21 |

பிற்சேர்க்கை 4

கட்டிடத் திட்டங்கள்.

1981-82 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களும் ஒப்புதல் அளிக் கப்பட்டுள்ளது:—

| | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் செயற்கை அவையவங்களைப் பொருத்தும் நிலை யமும், மறுவாழ்வு கட்டிடமும் கட்டுவது | 24.50 |
| 2. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மைய கிருமி நோய் அழிவு பகுதி கட்டுவதற்கு | 2.76 |
| 3. சென்னை கஸ்தூரிபாய் தாய்சேய் நல மருத்துவ மனையில் குளிர்சாதன பிணவறை கட்டுவதற்கு | 3.71 |
| 4. சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் பல அடுக்கு கொண்ட குழந்தைகள் சிகிச்சைப் பகுதி கட்டுவ்தற்கு | 199.00 |
| 5. சென்னை பெரம்பூரில் 100 படுக்கைகள் கொண்ட வெளி வட்டார மருத்துவமனை கட்டுவது | 170.81 |





| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 6. தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் டீசல் ஜெனரேட்டர் அமைப்பது சம்மந்தமாக | 1.10 |
| 7. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஸ்டாண்டுபை ஜென ரேட்டர் அமைப்பது | 4.00 |
| 8. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பகுதி கட்டுவது | 10.00 |
| 9. மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நுண் உயிரியல் ஆய்வுக்கூடம் கட்டுவது | 1.00 |
| மொத்தம் | 416.98 |

பிற்சேர்க்கை 5.

1981-82 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மருத்துவக் கல்லூரிகளோடு இணைந் திரா மருத்துவமனைகளுக்குரிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட் டுள்ளது:—

(ரூபாய் இலட்சத்தில்)

மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகள்.

| | |
|---|---|
| 1. ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனையில் உயர் அழுத்த சாதனம் அமைத்தல் | 4.35 |
| 2. திண்டுக்கல், உதகமண்டலம், தர்மபுரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் | 13.00 |
| 3. ஈரோடு, காஞ்சிபுரம், திண்டுக்கல் மற்றும் நாகப் பட்டினம் ஆகிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள சவக் கிடங்கிற்கு குளிர் சாதன வசதி அமைத்தல் | 7.12 |
| 4. ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனையில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டுதல் | 5.11 |

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 5. திருப்பூர், தர்மபுரி, இராமநாதபுரம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய அரசு மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் குறைந்தபட்ச 300 படுக்கை வசதி கொண்ட கட்டிடம் கட்டுதல் | 64.22 |
| 6. புதுக்கோட்டை மற்றும் தர்மபுரி, அரசு மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளில் தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு அமைத்தல் | 3.20 |
| 7. உதகமண்டலம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் கூடுதல் பணியாளர் களுடன் 15 படுக்கைகள் கொண்ட சிறப்புப் பகுதி ஏற்படுத்தித் தருதல் | 3.20 |
| 8. திண்டுக்கல், தர்மபுரி, தூத்துக்குடி, இராமநாத புரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு பிண ஊர்தி வழங்குதல் | 4.00 |
| மொத்தம் | 104.21 |

வட்ட தலைமையிட மருத்துவ மனைகள்.

| | |
|---|---|
| 1. தர்மபுரி மாவட்டம், ஹோசூர் அரசு மருத்துவ மனையில் கூடுதலாக 57 படுக்கைகள் கட்டுதல் | 9.93 |
| 2. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கு கட்டுதல் | 0.97 |
| 3. கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு பிரிவை விரி வாக்குதல் | 0.80 |
| 4. தர்மபுரி மாவட்டம், அரூரில் 24 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை கட்டுதல் | 10.63 |
| 5. திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் கூடுதல் பணியாளர்களுடன் 20 படுக்கைகள் அதிகரித்துத் தருதல் | 0.66 |



(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 6. தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு அரசு மருத்துவமனையில் கூடுதல் பணியாளர் களுடன் 20 படுக்கைகள் அதிகரித்துத் தருதல் | 1.55 |
| மொத்தம் | 24.54 |

வட்டமல்லாத அரசு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்.

| | |
|---|---|
| 1. வீரகனூரில் 6 படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனை கட்டுதல் | 0.86 |
| 2. காடிகுப்பத்தில் புதிய அரசு மருத்துவமனை கட்டுதல் | 1.70 |
| 3. கன்னியாகுமரி மாவட்டம், சிங்களயார்புரியில் உள்ள அரசு மருந்தகத்தை 4 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்நிலைப் படுத்தல் | 0.05 |
| 4. திருவரங்கம் அரசு மருத்துவமனையில் தேவை யான கூடுதல் பணியாளர்களுடன் மேலும் 3 படுக்கைகள் அதிகப்படுத்தித் தருதல் | 0.70 |
| 5. தென்னார்க்காடு மாவட்டம், கண்டமங்கலத்தில் தேவையான பணியாளர்களுடன் 7 படுக்கை கள் கொண்ட புதிய மருத்துவமனையை திறத்தல் | 0.49 |
| 6. மூக்குப்பேரி அனுக்கூர், அம்மாபட்டினம், அஞ் செட்டி ஆகிய இடங்களில் புதிய மருந்தகங்கள் திறத்தல் | 1.82 |
| 7. சேலம் மாவட்டம், வீரகனூரில் புதியதாக மருந்தகம் திறத்தல் | 0.97 |

மலைவாழ்ப் பகுதிகளில் அரசு மருந்தகம் திறத்தல்.

| | |
|---|---|
| 8. சேலம் மாவட்டம், அருனூத்து மலையில் அரசு மருந்தகம் திறத்தல் | 3.17 |

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 9 தென்னார்க்காடு மாவட்டம், சிரப்பட்டுவில் அரசு மருந்தகம் திறத்தல் | 3.95 |
| 10. கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் அரசு மருந்தகத்தை கூடுதல் பணியாளர்களுடன் 16 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றித் தருதல் | 2.17 |
| மொத்தம் | 15.88 |

சிறப்புச் சிகிச்சைத் துறைகள் ஆரம்பித்தல்.

| | |
|---|---|
| 1. பத்மநாபபுரம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ மனைகளில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் | 1.70 |
| 2. நிலக்கோட்டை, பல்லடம் மற்றும் தாராபுரம் அரசு மருத்துவ மனைகளில் பல் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் | 0.90 |
| 3. கரூர், பட்டுக்கோட்டை மற்றும் பெரியகுளம் அரசு மருத்துவ மனைகளில் கண் நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் | 1.68 |
| 4. தென்காசி, திருப்பத்தூர் மற்றும் விருதுநகர் அரசு மருத்துவ மனைகளில் பால்வினை நோயியல் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் | 1.24 |
| மொத்தம் | 5,52 |

மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

1. தோற்றுவாய்.

"கி.பி. 2000-த்திற்குள் அனைவருக்கும் நல்வாழ்வு" என்ற இயக்கத்தை தீவிரமாக செயல்படுத்துவதே இவ்வரசின் முதன்மையான குறிக்கோளாகும் இம்மாநிலத்தில் வாழும் குடிமக்கள் அனைவரும் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும ஆக்கபூர்வமான வாழ்க்கையினை ஏற்று நடத்த அனுமதிக்கும் வகையில் அவர்களது நல்வாழ்வுத்தரம் மேம்படையச் செய்வதே "இதன் பொருளாகும.



2. சென்னை பெருநகர், மாவட்ட மற்றும் வட்ட தலைமையிடங்களில் வாழும் மக்களுக்குத் தேவையான சுகாதார பாதுகாப்பு நடவடிக்கை இவ்விடங்களில் பரவி அமைந்திருக்கும் மருத்துவ நிலையங்களின் மூலம் தேவையான அளவு கவனிக்கப்படுகிறது. ஆயினும் மாநிலத்தின் மொத்த மக்கட் தொகையான 48 மில்லியனில் ஏறக்குறைய 32 மில்லியன் மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இந்த கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்கும், அவர்கள் நல்ல உடல் நிலையுடன் வாழ்வதற்கும், அவர்களுடைய சுகாதார நிலையை மேம்படுத்துவது என்பது மிக முக்கியமாகிறது என்பதால், இந்த அரசின் கவனம் எல்லாம் இந்த பரந்த எண்ணிக்கைக் கொண்ட கிராமப்புற மக்களுக்கு மிகச் சிறந்த மருத்துவ வசதிகளும், சுகாதாரப் பாதுகாப்பும் வழங்கப்படுவதை உறுதிபடுத்துவதிலேயே இருக்கிறது. இதன் மூலம் பெருவாரியான மக்களுக்கு பெருவாரியான நன்மைகள் அளிக்க உதவுவதோடு மட்டுமின்றி சுகாதார மேம்பாடடைந்தோர்க்கும், சுகாதார மேம்பாடடையாதோர்க்கும் இடையே நிலவும் ஏற்றத் தாழ்வினையும் குறைக்க உதவும் எனவும் கருதுகிறது. அரசின் இவ்வெண்ணம், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அதன் கிளை நிலையங்களை அமைத்ததிலிருந்தும், நடமாடும் சுகாதார குழுக்களை ஏற்படுத்தியதிலிருந்தும், சிறு சுகாதார நிலையங்களை தோற்றுவித்ததிலிருந்தும் பிரதிபலிக்கிறது.

3. இதைத் தவிர, மக்கள் நல்வாழ்வுப் பணி செயல்பாடுகளின் முக்கிய குறிக்கோள் நோய்கள் ஏற்படுவதற்கு சாதகமாக இருக்கும் சூழ்நிலைகளை அறவே நீக்குவதையும்; நலமான முறையில் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்துவதற்கு உதவும் சூழ்நிலைகளை வளர்ப்பதையும் கொண்டு விளங்குகிறது. இதைக் கீழ்க்கண்டவைகளை எய்துவதின் மூலம் அடைய முடியும் :—

(1) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்.

(2) நல்ல சாக்கடைத் திட்டம்.

(3) சுற்றுப்புற மாசினைக் கட்டுப்படுத்தி, சுற்றுப்புறத் தூய்மையினை நிலையான அளவில் பராமரித்தல்.

(4) சமூகத்தின் மிகத்தாழ்ந்த இன மக்களின் சத்துணவுத் தரத்தினை மேம்படுத்துதல்.

(5) சிறந்த தனிநபர் உடல் நலம்.

(6) மக்கள் தொகை பெருக்கக் கட்டுப்பாடு.

[1982 மார்ச் 22

(7) சமுகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சத்துணவு குடும்பநலம் உட்பட சுகாதாரக் கல்வியினைக் கொண்டு, அறியாமை மூட நம்பிக்கைகளை நீக்குதல்.

4. சாதாரண நோய் நீக்கப் பணிகள் எளிதில் மக்களுக்குக் கிடைக்கப் பெற வேண்டும். மக்கள் நல்வாழ்வுப் பணிகளின் அமைப்பில் எளிதில் பரவக் கூடிய மற்றும் பரவாத நோய்களைத் தடுத்தலும், கட்டுப்படுத்தலும் முக்கியத்துவம் தரப்பட வேண்டும். சமுதாயத்தின் மக்கள் நல்வாழ்வுத்தரம் மேம்பாடு அடைவதற்கான இந்தக் குறிக்கோளை எய்துவதற்கு சமூகத்தின் அனைத்துத் தரப்பட்ட மக்களின் ஈடுபாடும், ஒத்துழைப்பும் அவசியம் ஆகும். சமுதாயத்தின் மக்கள் நல்வாழ்வுத் தரத்தினை கால கிரமமாக மதிப்பீடு செய்ய, மக்கள் நல்வாழ்வு நற்பணிகளின் தொகுப்பினைச் சேகரிப்பதும், மதிப்பீடு செய்வதும் அவசியமாகும்.

5. மேலே சொன்ன குறிக்கோள்களைக் கருத்திற் கொண்டு கடந்த காலத்தில் இவ்வரசு அநேக நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கிறது. அவைகளில் தாய்-சேய் நலம் அடங்கிய சமுதாய மக்கள் நல்வாழ்வு பாது காப்பு வழங்குதல், மக்களின் சத்துணவுத் தரங்களை உயர்த்துதல், தொற்று நோய்களைத் தடுத்தலும், கட்டுப்படுத்தலும் உணவுக் கலப்படத்தைத் தடுத்தல், கலப்பட மருந்துகளின் விற்பனையைத் தடுத்தல், மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்களின் உற்பத்தியையும், விற்பனையையும் கட்டுப்படுத்தி தரத்தை நிலை நிறுத்தல், சுற்றுப்புற சுகாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் சுற்றுப்புறம் மாசு அடைவதை குறைத்தல், பிறப்பு இறப்பு பதிவு செய்வதை கட்டாயப்படுத்தல் மற்றும் மக்களின் நல்வாழ்வுத் தரத்தை உயர்த்தும் பொருட்டு நல்வாழ்வுடன் வாழ்வதைப் பற்றிய தகவல்களை விளம்பரப் படுத்துதல் முதலியவை அடங்கும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயக்குநரகம்.

(1) கிராம சுகாதாரப் பணிகள்.

மருத்துவ சிகிச்சை அளிப்பது ஆரம்ப சுகாதார நிலையங்களின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அதன் சுற்று வட்டாரத்திலுள்ள பொது மக்களுக்கு மருத்துவ பரிசோதனை, ஆலோசனை, மருந்துகள் போன்றவைகளை உள் நோயாளிகளுக்கும், வெளிப்புற நோயாளி களுக்கும் வழங்குவது மட்டுமல்லாமல் சமுதாய சுகாதாரப் பணிகளான, மலேரியா, மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம், தடுப்பூசி, குடும்பநலம் மற்றும் சுகாதாரத்தை பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வழி செய்கிறது.



1982 மார்ச் 22]

2. தமிழ்நாட்டில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இவைகளோடு 9 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே 1980-81ல் 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வந்தன. 1981-82ல் கூடுதலாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுக்கான திட்டத்தின் கீழ் இரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக நமது மாநிலத்தில் 405 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1982-83ம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மேலும் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

3. மேற்குறிப்பிட்ட 405 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 267 நிலையங்கள் அரசு கட்டிய கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. அதில் 192 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாளர் குடியிருப்பு கட்டிடங்கள் கட்டப்பட்டு உள்ளன. எஞ்சியுள்ள 138 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தக கட்டிடங்களும் 213 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பணியாளர் குடியிருப்பு களும் கட்டப்பட வேண்டியுள்ளது. அரசு கீழ்க்கண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டிடம் மற்றும் ஊழியர் குடியிருப்பும் கட்ட அனுமதித்துள்ளது.

1. கோதநல்லூர் கன்னியாகுமரி மாவட்டம்

2. செல்லம்பட்டி மதுரை மாவட்டம்.

3. நெல்லாக்கோட்டை நீலகிரி மாவட்டம்

4. நெடுகுளா. நீலகிரி மாவட்டம்

4. 1979-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தகக் கட்டிடம் பணியாளர் குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் கட்டவும் மேலும் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாளர் குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் கட்டவும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுற்றுச் சுவர் கட்டவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

5. மீண்டும் 1980ம் ஆண்டு 17 ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருந்துக் கட்டிடம், பணியாளர் குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

6. 1981-82 லிருந்து ஆண்டொன்றுக்கு ரூபாய் 14,000-த்திலிருந்து ரூபாய் 20,000 ஆக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் வாங்க அரசு அனுமதி தந்துள்ளது. இது 1982-83ம் ஆண்டுக்கும் பொருந்தும்.

7. 1981ம் ஆண்டு மே மாதம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான லினன், படுக்கை விரிப்புகள் மற்றும் கருவிகள் வாங்க ரூபாய் 2.27 லட்சங்களை அரசு அனுமதித்துள்ளது. பழுதுபார்க்க இயலாத நிலையிலுள்ள நான்கு ஊர்திகளுக்கு பதிலாக புதிதாக நான்கு ஊர்திகள் வாங்கவும் அரசு ஒப்பளித்துள்ளது.

(2) நடமாடும் மருத்துவப் பணிகள்.

மொத்த மக்கள் தொகையில் சுமார் 80 சதவீத மக்கள் கிராமப் புறங்களில் வசிப்பதால் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு விரிவான மருத்துவப் பணிகள் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கம். ஆரம்ப சுகாதார நிலையம், கிராமப்புற மக்களுக்கு மருத்துவ சேவை செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் கிராமப் புறங்களுக்குச் செல்ல சில நடைமுறை இடர்பாடுகள் ஏற்பட்டதால் அதை நீக்கவும் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு மிக அருகில் மருத்துவ வசதிகள் கிடைக்கவும் 1977-78 ஆம் ஆண்டு முதல் முதலாக இத்திட்டம் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.

2. மூன்று மருத்துவ அதிகாரிகளும், மூன்று மருந்தாளுநர்களும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. ஒரு மருத்துவ அதிகாரி வெளிப்புற நோயாளிகளை ஆரம்ப சுகாதார நிலையத்தில் தங்கியிருந்து காலையிலும் மாலையிலும் கவனித்துக் கொண்டிருப்பார். எஞ்சியுள்ள இரண்டு மருத்துவ அதிகாரிகள் நோய் தீர்ப்பு, நோய்த் தடுப்பு பணிகளை கிராமங்களுக்குச் சென்று கவனிப்பார்கள். இவ்வாறாக ஒரு வார காலத்திற்குள் முழு வட்டாரமும் கவனிக்கப்படும். சிக்கலான நோயுள்ளவர்கள் மருத்துவ மனைகளிலுள்ள சிறப்பு மருத்துவர்களிடம் காண்பிக்கும்படி அனுப்பப்படுகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கிராம நலக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இக்குழுவின் உறுப்பினர்கள் சுகாதாரக் கல்வியைப் பரப்புவதிலும் மக்கள் நல்வாழ்வு பணிகளுக்கு ஒருமித்த மக்கள் ஆதரவைத் திரட்டுவதிலும் உதவி புரிவர்.



3. 1978-79ல் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 1979-80ம் ஆண்டு மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 1981-82ல் இன்னும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இவ்வாறாக 249 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4. 1981-ம் ஆண்டு புதிதாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக 12 மோட்டார் ஊர்திகள் வாங்க அரசு பணித்துள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் மருந்துகள் வாங்குவதற்காக இம்மாதிரி நடமாடும் சுகாதார குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ரூபாய் 15,000 ஆக இருந்தது ரூபாய் 20,000 ஆக உயர்த்தப்பட்டது. இது 1982-83 ஆம் ஆண்டுக்கும் நீடிக்கும்.

(3) மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் :

நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைவாழ் மக்களின் சுகாதார வசதிகளை விரிவாக்கும் நோக்குடன் உதகமண்டல வட்டாரத்திலுள்ள தூணேரியில் 1976-ம் ஆண்டில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், 1977-ம் ஆண்டு கூடலூர் வட்டாரத்திலுள்ள நெல்லக்கோட்டையில் மேலும் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

2. 1981-82-ல் மேலும் இரண்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் குன்னூர் வட்டத்தில் கோல்லக்கோம்பையிலும் மற்றும் கோத்தகிரி வட்டத்தில் கட்டபெட்டியிலும் நிறுவ அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

(4) மேல்நிலைப்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

அடிப்படை சுகாதார வசதிகளை கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு விரிவாக்கும் நோக்குடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சிக்கலான நோய் உள்ளவர்கள் முதன்மையான மருத்துவ ஆலோசனைகள் பெற அருகிலுள்ள மருத்துவமனையிலுள்ள சிறப்பு மருத்துவரிடம் அனுப்பப்பட வேண்டிய காரணத்தால் கிராமப்புறங்களில் மருத்துவமனைகள் தேவைப்படுகின்றன. இந்நோக்குடன் அரசு 1981-82 ஆம் ஆண்டு மாவட்டத்திற்கு ஒன்றாக 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை தேவையான பணியாளர்களுடனும் உபகரணங்களுடனும் மேல்நிலைப்படுத்தும் ஆணைகளைப் பிறப்பித்தது. இதற்கான கட்டிடங்கள் கட்டுவதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது. இக்கட்டிடம் கட்டும் வேலையை பொதுப்பணித்துறை மேற்

கொண்டுள்ளது. இக்கட்டிடம் கட்டப்பட்டவுடன் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்பட்டு நிலையங்கள் செயல்படத் துவங்கும். இதன்மூலம் ஏழை எளிய கிராமப்புற மக்களுக்கு உயர்தரமான மருத்துவ வசதிகள் கிடைக்கும். மேலும், 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை 1982-83-ல் ரூ. 140.49 இலட்சம் செலவில் மேல்நிலைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

(5) கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் :

அல்மா ஆடா உடன்படிக்கையின்படி கி.பி. 2000 ஆண்டிற்குள் மக்கள் தொகை பெருக்கத்தை கருத்தில் கொண்டு நிறைந்த அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படலாமென்று கணக்கிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் 50,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற விகிதத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய மக்கட் தொகை பெருக்கத்தை கணக்கில் கொண்டு பார்க்கும்போது, மாநிலத்தில் 740 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படும்.

2. இதன்படி 1981-83 ஆம் ஆண்டில் 80 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

(6) சிறு சுகாதார நிலையங்கள் :

மக்களுக்கு விரிவான நல்வாழ்வு பாதுகாப்பு பணிகளை கூட்டுறவு அடிப்படையில் அளிக்க தொண்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

2. 5,000 மக்களுக்கு ஒரு சிறு சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனம் ஆண்டொன்றுக்கு ரூ. 18,000 மொத்த செலவில் சுகாதாரப் பணிகள் வழங்க ஏற்பாடு செய்யும்.

3. இந்நிலையத்தில் ஒரு பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒரு முழு நேர ஆண் மற்றும் பெண் சுகாதாரப் பணியாளர்கள், மூன்று முதலுதவியாளர்களும் அமர்த்தப்படுவர். மருந்துகளுக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 ஒதுக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு மொத்த செலவான ரூ. 18,000-ல் 50 சதவிகிதம் தொகையான ரூ. 9,000-ஐ மாநில அரசும் மைய அரசும் சம விகிதத்தில் அளிக்கின்றன.



4. தொண்டு நிறுவனம் நன்கொடைகள் பெறுவதன் மூலமோ அல்லது பயனடைபவர்களிடமிருந்து பணம் வசூலிப்பதன் மூலமோ, எஞ்சியுள்ள 9,000 ரூபாய் செலவை ஏற்கும். சிறு சுகாதார நிலையங்கள் தொடங்க தொண்டு நிறுவனங்கள் தேவையான கட்டிடம், சாதனங்கள், மேசை, நாற்காலிகள் முதலியவற்றை தங்கள் நிதியிலிருந்து ஏற்படுத்திக் கொள்வார்கள். தொண்டு நிறுவனங்களின் நிதி பற்றாக்குறையை தவிர்க்கக் கருதி அரசு பின்கண்டவாறு மூன்று தவணைகளில் ரூ. 9,000 மானியத் தொகையை வழங்குகிறது.

1. முதல் தவணைத் தொகையான ரூ. 3,000 ஏப்ரல் மே மாதங்களில்.

2. இரண்டாவது தவணைத் தொகையான ரூ. 3,000 செப்டம்பர் அக்டோபர் மாதங்களில்.

3. மூன்றாவதும் இறுதியுமான தவணைத்தொகை ரூ. 3,000 கணக்குகள் ஆய்வு செய்யப்பட்ட பிறகு.

5. விலைவாசிகளின் உயர்வைக் கருத்தில் கொண்டு தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கும் மான்யத் தொகையை ரூபாய் 18,000-லிருந்து ரூபாய் 27,000 ஆக உயர்த்தவும் இத்தொகையை மாநில அரசு, மத்திய அரசு, மற்றும் தொண்டு நிறுவனம் சமமாக பகிர்ந்து கொள்ளும் திட்டம் ஒன்றினை மத்திய அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

6. இதுவரை அரசு 264 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க ஆணைகள் வழங்கியுள்ளது. தற்போது 192 சிறு சுகாதார நிலையங்கள் இயங்குகின்றன.

**மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரகம்.**

1. கொள்ளை நோய்கள் கட்டுப்பாடு :

குடல் சார்ந்த நோய்களான வாந்திபேதி, கடுமையான குடற் அழற்சி, டைபாய்டு, மஞ்சள் காமாலை நோய்களும் மலேரியா, யானைக்கால், மூளைக் காய்ச்சல், தொழுநோய், காச நோய், போன்றவை தமிழ்நாட்டில் பரவுகின்ற பெரிய தொற்று நோய்களாகும். இத்தகைய கொள்ளை நோய் ஒழிப்பு தடுப்பு திட்டங்களை வெற்றியுடன் நிறைவேற்றுவதன் மூலம், இக்கொள்ளை நோயினால் ஏற்படும் இறப்புகள் மற்றும் நலிவுகள் பெருமளவுக்கு குறைந்துள்ளன.

(1) வாந்திபேதி.—வாந்திபேதி, மஞ்சள்காமாலை மற்றும் குடல் அழற்சி முதலான தொற்று நோய்கள் நீர்நிலைகளில் நோய் தொற்று தோன்றுவதால் பரவுகின்றன. இந்நோய்களை கண்டறிந்து ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள கண்காணிப்பு முறை தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு முறையினால் மிகுதியான நோயாளிகள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களின் தொகை வருமாறு :—

| ஆண்டு. | வாந்திபேதி நோயாளிகள் எண்ணிக்கை. | வாந்திபேதியினால் இறந்தோர் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1979 | 1336 | 38 |
| 1980 | 3461 | 74 |
| 1981 | 1918 | 32 |

1981 ஆம் ஆண்டு வாந்திபேதியினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் இறந்தோரின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உடலில் நீர் வறட்சி ஏற்பட்டுள்ளதால் நிகழும் இறப்புகளைத் தவிர்ப்பதற்கு வாய் வழியாக சாத்தன்மையூட்டக்கூடிய உப்புக்களைக் கொண்டு நோயாளிகளுக்கு அவரவர் வீடுகளிலேயே அளிக்கத்தக்க எளிய சிகிச்சைமுறை பரப்பப் பட்டுள்ளது. இந்த மாத்திரைகள் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. வருகின்ற ஆண்டுகளில் இந்த சிகிச்சை முறை மாநிலத்திலுள்ள ஆரம்ப சுகாதார கிளை நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளின் பணியாளர்கள் மூலமாக தீவிரப்படுத்தி பிரபலப்படுத்தப்படும்.

(2) பிளேக்.—தமிழ்நாட்டில் 1965 ஆம் ஆண்டு முதல் மனிதர்களை பாதிக்கும் பிளேக் நோய் அறவே இல்லை. ஆயினும் இந்நோய் பரவும் பகுதிகளில் காட்டெலிகளிடையே இந்நோய் காணப்படுகிறது. எனவே நமது மாநிலத்தில் வட ஆற்காடு, பெரியார், தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களான ஏற்கனவே பிளேக் நோய் பரவி வந்த பகுதிகளில் எலிகளிடையே வருகின்ற பிளேக் நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(3) மலேரியா முறைகாய்ச்சல்.**—1958 ஆம் ஆண்டில் இருந்து தமிழ்நாட்டில் தேசிய மலேரியா ஒழிப்புத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.



அடிப்படை நல்வாழ்வுப் பணியாளர்கள் கிராமப்பகுதிகளில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை சென்று இரத்த மாதிரிகளைச் சேகரித்து ஆய்வு செய்து மலேரியா நோயைக் கண்டறிந்து அவ்வாறு கண்டறியப்பட்ட எல்லா மலேரியா நோயாளிகளுக்கும் மலேரியா தடுப்பு மருந்து கொடுத்துச் சிகிச்சையளித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மலேரியா பரவுதலைத் தடுப்பதற்காக புழுப்பருவக் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளைத் தெளித்தல் ஆகியவற்றின் மூலம் கொசு உற்பத்தியாகும் இடங்களைக் குறைத்தல் முதலியன இத்திட்டத்தில் அடங்கும்.

தமிழ்நாட்டில் குறிப்பிட்ட நகரங்களிலும், கிராமங்களிலும், மட்டுமே மலேரியா பரவுகிறது. தர்மபுரி, வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களின் பெண்ணையாற்றை ஒட்டிய கிராமங்கள் மற்றும் ராமேஸ்வரம் தீவு உட்பட இராமநாதபுர மாவட்டக் கடற்கரை ஓரக்கிராமங்கள் ஆகியவற்றிலும் மலேரியா பரவியுள்ளது. சேலம், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி நகராட்சிப் பகுதிகளிலும் சென்னை மாநகராட்சியிலும் மலேரியா உள்ளது.

1981 ஆம் ஆண்டில் மொத்தம் 71,517 மலேரியா நோயாளிகள் பதிவாகியுள்ளனர். மாநிலத்தில் பதிவான மொத்த நோயாளிகளில் 63 சதவீதத்தினர் சென்னை மாநகரத்தில் இருந்தனர். 1978-81 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

| ஆண்டு. | தமிழ்நாடு முழுவதும். | சென்னை மாநகர். |
|---|---|---|
| 1978 | 76,227 | 29,953 |
| 1979 | 95,009 | 33,460 |
| 1980 | 73,381 | 36,193 |
| 1981 | 71,517 | 44,951 |

இத்துறை மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கைகளின் விளைவாக இராமேஸ்வரம் தீவில் மலேரியா நோய் தோன்றுவது குறைந்து வருகிறது. 1981 ஆம் ஆண்டில் இராமேஸ்வரம் தீவில் மொத்தம் 4,224 பேர் மலேரியா நோயாளிகள் எனப் பதிவாகி உள்ளது. ஆனால் 1980 ஆம் ஆண்டில் 9,541 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

1981 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் குமாரபாளையம் நகரத்துக்கு மத்திய அரசின் நகர்ப்பகுதி மலேரியா ஒழிப்புத் திட்டம் விரிவுபடுத்தப் பட்டது. இத்திட்டம் ஏற்கனவே சென்னை மாநகர், சேலம், இராசிபுரம்,

எண்ம்பிள்ளை, ஆத்தூக்குடி, ஈரோடு, வேலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் ஆகிய நகரப் பகுதிகளில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இந்நகரங்களில் புழுப்பருவக் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. சென்னை மாநகரத்தைப் பொறுத்தமட்டிலும் மலேரியா குழுவின் பரிந்துரைகளின்படி சிறப்பு நடவடிக்கைகள் பற்றி எடுத்துக் கூறவும் திட்டத்தை மேற்பார்வையிடவும் என ஒரு செயற்குழு (Task Force) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. நகரில் பெருகி வரும் மலேரியா தொல்லையை சமாளிக்க மாநகரம் மூன்று பகுதிகளாக அதாவது (1) நோய் கடுமையாக உள்ள 36 கோட்டங்கள், (2) நோய் சாதாரணமாக உள்ள 34 கோட்டங்கள், (3) நோய் குறிப்பிடத்தக்க அளவில் இல்லாத 80 கோட்டங்கள் என பிரிக்கப் பட்டுள்ளது. முதல் மற்றும் இரண்டாவது பகுதிகளில் தீவிர மருந்து, புகை அடித்தல் முதலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு சிறப்பு நோய் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(4) யானைக்கால் நோய்.

இந்நோய் க்யூலெக்ஸ் என்ற வகை கொசுக்களினால் பரப்பப்படுகிறது. இந்நோய் தொற்று மிகுதியாக உள்ள பகுதிகளில், யானைக்கால் நோய் கட்டுப் பாட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தேசிய யானைக்கால் நோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 1981-82 ஆம் ஆண்டில் 19 நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள், 33 சிகிச்சை நிலையங்கள், ஒரு யானைக்கால் நோய் ஆய்வுப் பிரிவு முதலானவை தொடர்ந்து செயல்படலாயின.

இவ்வாண்டில் (1981 ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரை) பரிசோதனை செய்யப்பட்ட 3,58,836 பேர்களில் 8,160 பேர் இந்நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளதாகவும், 1,532 பேர் நோயினால் அவதியுறுவதாகவும் கண்டறியப் பட்டது. இவர்களுக்குச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இப் பகுதிகளில் க்யூலெக்ஸ் கொசு உற்பத்தியைக் குறைப்பதற்கான நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது.

(5) மூளைக்காய்ச்சல் :

மூளைக்காய்ச்சல் நோய் ஜப்பானிய நோய் நுண்ணுயிர் 'பி' என்ற கிருமியினால் ஏற்படுகிறது. இந்நோய் கிருமிகள் பறவைகள், பன்றிகள், ஆகியவற்றிடமிருந்து க்யூலெக்ஸ் என்றவகைக் கொசுக்களால் மனிதர்க்கு பரப்பப்படுகிறது. இவ்வகை கொசுக்கள் நெல் வயல்களிலும், பாசனக் கால்வாய்களில் மெல்ல ஓடும் நீரிலும் பெருமளவில் உற்பத்தியாகின்றது. 1981



செப்டம்பர் மாதத்தில் தென்னார்க்காடு, வடஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் மூளைக்காய்ச்சல் மிகுதியாக தோன்றியதாக அறிவிக்கப்பட்டது. 1981-ல் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்தத் தொகை 1,305. இந்நோயை கட்டுப்படுத்தவும் பரவுவதைத் தடுக்கவும் உடனடி தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந் நோய்க்குக் குறிப்பிட்ட சிகிச்சை இல்லை என்பதால் பாதிக்கப்பட்ட நோயாளி களுக்கு நோய் அறிகுறிகளுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டது.

(6) நரம்புச் சிலந்தி நோய் :

நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்டம், திட்டத்தில் சேரா வேலை யாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1960 ஆம் ஆண்டில் மொத்தம் 13,712 நரம்புச் சிலந்தி நோயாளிகள் பதிவு செய்யப்பட்டனர். 1981 ஆம் ஆண்டில் இத்தொகை 2 ஆக குறைக்கப்பட்டது. இது ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாகும். சில ஆண்டுகளில் தமிழ்நாடு நரம்புச் சிலந்தி நோயிலிருந்து முழுவதுமாக விடுபட்டுவிடும்.

| ஆண்டு. | ஆய்வு செய்த கிராமங்களின் எண்ணிக்கை. | கண்டறிந்த நோயாளிகளின் எண்ணிக்கை. | சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1980 | 4 | 4 | 4 |
| 1981 | 1 | 2 | 2 |

இப்பகுதிகளில் திட்ட வேலை செய்யும் களப்பணியாளர்கள் தண்ணீரில் பூச்சிக்கொல்லி மருந்திடல் மற்றும் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தல் ஆகியவற்றுடன் சமுதாயத்தில் நல்வாழ்வுக் கல்வி விளக்கமும் அளித்து வருகின்றனர்.

(7) யாஸ் நோய் ஒழிப்புத் திட்டம் :

சேலம் மாவட்டம் ஆத்தூரில் யாஸ் நோய் ஒழிப்புத் திட்ட பிரிவு செயல் பட்டு வருகிறது. இப்பிரிவு யாஸ் நோயாளிகளையும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களையும் கண்டறிந்து நோயாளிகளுக்கு

சிகிச்சை அளிப்பதுடன் இப்பகுதியில் மலைப் பகுதி மக்களிடையே நல்வாழ்வுக் கல்வி விளக்கமும் அளித்து வருகிறது. இத்திட்ட சாதனை விவரம் வருமாறு :—

| ஆண்டு. | ஆய்வு—மறு ஆய்வு செய்யப் பட்ட கிராமங் களின் மற்றும் கிளைக் கிராமங் களின் எண்ணிக்கை. | ஆய்வு செய் யப்பட்ட எண்ணிக்கை | கண்டறிந்த நோயாளி களின் எண்ணிக்கை. | சிகிச்சை பெற்ற நோயாளி களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1980 | 145 | 14,157 | 57 | 38 |
| 1981 | 134 | 8,768 | 40 | 49 |
| (நவம்பர் வரை) | | | | |

(8) சந்தைகளும்-விழாக்களும் :

மாநிலத்தில் பல்வேறு சந்தைகளும், திருவிழாக்களும் நடைபெற்றுள்ளன. இச்சந்தைகள், விழாக்களின்போது செய்யப்பட்ட துப்புரவு ஏற்பாடுகள், நல்வாழ்வுத்துறை அலுவலர்களால் மேற்பார்வையிடப்படுகின்றன. சந்தைகள், திருவிழாக்களில் செய்யப்பட்ட விரிவான துப்புரவு ஏற்பாடுகளின் பயனாக கொள்ளை நோய்கள் ஏதும் தோன்றி பரவவில்லை. குறிப்பாக தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத் துவக்க விழா, எட்டயபுரம் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா ஆகியவற்றில் நல்வாழ்வு தடுப்பு மருந்து இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் உள்ளாட்சி நல்வாழ்வு அதிகாரிகள் விரிவான துப்புரவு ஏற்பாடுகளை செய்தனர். இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இவ்விழாக்கள் கொள்ளை நோய்கள் தோன்றி பரவும் தொல்லை ஏதுமின்றி இனிது நடைபெற்றது.

2. வறட்சி துயர்துடைப்பு நடவடிக்கைகள் :

பருவ மழை உரிய காலத்தில் பெய்யாததால் பல கிராமங்கள் வறட்சிக்கு ஆளாயின. பொதுவாக இத்தகைய வறட்சி காலங்களில் சூலுற்ற தாய்மார்கள், சிறு குழந்தைகள், பள்ளிக் குழந்தைகள் ஆகியோர் எளிதில்



ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டு அதன் விளைவாகப் பல நோய்களுக்கு ஆளாகின்றனர். தமிழக அரசு தடுப்பு மருந்து என்ற தலைப்பின்கீழ் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துணைச் சத்துணவு, மருந்துகள், தொற்றுத்தடை மருந்துகள், அம்மைப்பால் வழங்குதல் போன்ற துயர் துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ. 100 இலட்சம் வழங்கியது. பாதிக்கப்பட்ட பகுதி மக்களின் நல்வாழ்வு நிலையைப் பராமரிக்க இந் நடவடிக்கைகள் பெரிதும் உதவியாக இருந்தன. சிகிச்சைக்கான மருந்துகள் என்ற தலைப்பின்கீழ் 50 இலட்ச ரூபாய்க்கு வகை செய்யப்பட்டது.

3. விரிவுப்படுத்தப்பட்ட தடுப்பு ஊசித்திட்டம் :

கீழ்க்காணும் நோய்களினால் ஏற்படத்தக்க நலிவு மற்றும் இறப்பின் அளவை உயர்ந்த அளவு எண்ணிக்கையுள்ள குழந்தைகளுக்கு முறைப்படி தடுப்பூசி போடுவதன்மூலம் குறைப்பதே விரிவுப்படுத்தப்பட்ட தடுப்பூசி திட்டத்தின் குறிக்கோளாகும். அவையாவன :—1. தொண்டை அடைப்பான், 2. கக்குவான் இருமல், 3. இசிவு நோய், 4. காச நோய், 5. இளம்பிள்ளை வாதம், 6. தட்டம்மை, 7. டைப்பாய்டு காய்ச்சல், சூலுற்ற தாய்மார்களுக்கும் இசிவுநோய் தடுப்பூசி போடப்படுகிறது.

இத்திட்ட சாதனை வருமாறு :

(1) இளம்பிள்ளை வாதம் :

மூன்று மாதம் முதல் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இத் திட்டத்தின்கீழ் வாய்வழி இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்து மூன்று தவணைகளாகவும் பின்னர் ஊக்குவிப்பு அளவாகவும் தரப்படுகிறது. செய்து முடித்த பணிகளின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | இலக்கு. | அளிக்கப்பட்ட தடுப்பு மருந்தின் அளவு |
|---|---|---|
| 1980 81 | 4,00 இலட்சம் குழந்தைகள். | 5.20 இலட்சம் தவணைகள். |
| 1981 82 | 1.70 ,, | 2.98 இலட்சம் தவணைகள் (டிசம்பர் 81 வரை) |

(2) முத்தடுப்பூசி சிறப்புத் திட்டம் :

தமிழ்நாட்டில் 1964-ல் தொண்டை அடைப்பான், கக்குவான், இசிவு நோய் தடுப்பிற்காக மூன்று நோய்த் தடுப்பூசித் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் முதலில் 142 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அவற்றின் கிளை நிலையங்களிலும் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டம் இப்போது 200

ஆரம்ப சுகாதார நிலையங்களில் நல்வாழ்வுப் பணியாளரால் நிறைவேற்றப் பட்டு வருகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் 4 முதல் 8 வார கால இடை வெளியில் 3 தவணைகளாக முத்தடுப்பூசி போடப்படுகிறது.

1980-81, 1981-82 ஆண்டுகளில் இத்தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை வருமாறு :

| ஆண்டு. | தடுப்பூசி போடப்பட்டோர் எண்ணிக்கை. |
|---|---|
| 1980-81 | 4,23,000 |
| 1981-82 (டிசம்பர் 81 வரை) | 2,36,182 |

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இயலாமை தடுப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக முத்தடுப்பூசி இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து, தட்டம்மை தடுப்பு மருந்து ஆகிய தடுப்பூசிகள் போடப்பட்டன. 1982 சனவரியில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1,01,151 குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதத்தடுப்பு மருந்து முதல் தவணை கொடுக்கப்பட்டது. 62,685 குழந்தை களுக்கு முத்தடுப்பு ஊசி போடப்பட்டது. மேலும் 16,155 குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது.

**(3) தட்டம்மை தடுப்பு ஊசித் திட்டம் :**

விரிவுபடுத்தப்பட்ட தடுப்பூசித் திட்டத்தின்கீழ் தட்டம்மையினால் ஏற்படத்தக்க நலிவு மற்றும் இறப்பினைத் தடுக்கும் நோக்கத்துடன் தட்டம்மை தடுப்பூசி போடும் திட்டமும் நிறைவேற்றப்படுகிறது. 9 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரையிலான எல்லா குழந்தைகளுக்கும் தட்டம்மை தடுப்பூசி போடப்படுகிறது. இதற்குமுன் தட்டம்மையினால் பாதிக்கப்படாத குழந்தைகளுக்கு ஒரு தவணை தடுப்பு மருந்து கொடுக்கப்படுகிறது. இத் திட்டம் இன்னமும் இந்திய அரசினரால் மேற்கொள்ளப்படவில்லை என்ற போதிலும் தட்டம்மை தடுப்பூசி திட்டம் பொதுநல நிறுவனங்களினால் ஏற்று நடத்தப்படுகிறது. இத்திட்டம் 1979 அக்டோபர் முதல் அனைத்துலக ரோட்டரி சங்கங்களினால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 7,60,000 தவணை மருந்துகள் இதற்கென பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 1982-83-லிருந்து இத்திட்டத்தை பொது சுகாதார இயக்குநரகம் இந்த நிறுவனத்துடன் இணைந்து விரிவுபடுத்தப்பட்ட தடுப்பூசித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தக் கருதியுள்ளது.

**(4) டைபாய்டு காய்ச்சல் :**

இத்தடுப்பூசித் திட்டத்தின்கீழ் 5 முதல் 6 வயதான பள்ளியில் சேரும் குழந்தைகளுக்கு டைப்பாய்டு காய்ச்சல் தடுப்பூசி அளிக்கப்படுகின்றன.



இத்திட்டத்தின் கீழான சாதனை விவரம் வருமாறு :—

| ஆண்டு. | பயன்பெற்றோர். |
|---|---|
| 1979-80 | 0.78 இலட்சம் |
| 1980-81 | 2.50 இலட்சம் |
| 1981-82 | 4.06 இலட்சம் (டிசம்பர் 81 வரை). |

**(5) பள்ளிக் குழந்தைகளுக்கு இசிவுநோய் தடுப்பூசி:**

இத்திட்டம் 1981 நவம்பரில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 10 வயது மற்றும் 16 வயது பள்ளிக்குழந்தைகள் இசிவு நோய்த் தடுப்பூசி அளிக்கப்படுகின்றனர். இவ்வயதினருக்கு முறையே 1.5 இலட்சம் மற்றும் 1.0 இலட்சம் பேருக்கு இத்தடுப்பு மருந்து அளிக்க வேண்டுமென இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. 1982 சனவரி வரை 4.30 இலட்சம் பேருக்கான தவணை மருந்துகள் வரப்பெற்று வழங்கப்பட்டுள்ளன.

**(6) குளிர்பதன வசதி :**

குழந்தைகளுக்கு கொடுக்கப்படும்வரை தடுப்பு மருந்துகள் வீரியம் குறை யாமல் இருப்பதற்காக அவை குளிர்ப்பதன அறை (Cold room) ஆழ் உறை பனிக்கலம் (Deep Freezer) குளிர்ப்பதனப் பெட்டி (Refrigerator) முதலானவற்றில் சேமித்து வைக்கப்படுகின்றன. அவை இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லப்படும்போது தடுப்பு மருந்துக் கலங்களில் (Vaccine Carriers) எடுத்துச் செல்லப்படுகின்றன. இதற்கென 1981-82 ஆண்டில் 31 குளிர்ப்பதனப் பெட்டிகளும் (Refrigerator) 6 ஆழ் உறைபனிக்கலம் (Deep Freezer) வழங்கப்பட்டுள்ளன.

**4. மகப்பேறு மற்றும் சேய் நலப் பணிகள் :**

மாநில நல்வாழ்வுத் திட்டங்கள் அனைத்திலும் இத்திட்டம் உயர் முன் னுரிமை பெறுகிறது. கருத்தரிக்கத்தக்க பருவத்திலுள்ள 15-45 வயது மகளிர் மொத்த மக்கள் தொகையில் சுமார் 20 சதவிகிதமாகவும் 16 வயதுக் குட்பட்ட குழந்தைகள் சுமார் 40 சதவிகிதத்தினராகவும் உள்ளனர். இவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாடுகள் மற்றும் தொற்று நோய்கள் முதலான ஆபத்துக்களுக்கு எளிதில் ஆளாகத் தக்கவாறு உள்ளனர்.

**குறிக்கோள் :**

1. தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துணவுக் கல்வி உள்பட நல்வாழ்வுக் கல்வி விளக்கமளித்தல் மற்றும் அவர்களின் பேறு காலம், பிரசவ காலம் மற்றும் பிரசவத்துக்குப் பிந்திய காலம் ஆகிய காலங்களில் உடல் நலப் பரிசோதனை செய்தல்.

2. எல்லா குழந்தைகளுக்கும் சிறு குழந்தைப் பருவ கவனிப்பு, பள்ளிப் பருவத்துக்கு முந்திய கவனிப்பு மற்றும் பள்ளி நலப் பணிகள் ஆகியவற்றுக்கு வகை செய்தல்.

3. தாய்மார்கள் மற்றும் குழந்தைகளிடையே நலிவு மற்றும் இறப்பினைக் குறைப்பதற்காக இவ்விரு தரத்தினருக்கும் தடுப்பூசி போடுவதன் மூலம் நோய்த் தடுப்பு பணி புரிதல்.

கிராமப் பகுதிகளில் மகப்பேறு மற்றும் சேய் நலத் திட்டங்கள், அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது பின்தங்கிய பகுதி திட்டம், பல்நோக்கு நல்வாழ்வுப் பணியாளர் திட்டம் ஆகியவற்றின் கீழ் வரும் அரசு மகப்பேறு நிலையங்கள் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள், அவற்றின் கிளை நிலையங்கள் மூன்றுக்கு அவை செய்யும் செலவில் 1/3 பகுதியை மாநில அரசிடமிருந்து மானியமாக பெறுகின்றன. எஞ்சியுள்ள நிலையங்கள் இந்திய அரசின் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் 100 சதவிகித மானியம் பெறுகின்றன.

இப்போது தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளில் ஊராட்சி ஒன்றியங்களால் அமைக்கப்பட்டுள்ள 2,814 நிலையங்கள் உட்பட மொத்தம் 3,693 மகப்பேறு நிலையங்கள் உள்ளன. நகரப் பகுதிகளில் 128 நகராட்சி மகப்பேறு இல்லங்களும் 372 நகராட்சி மகப்பேறு நிலையங்களும் உள்ளன.

**5. பள்ளி நல்வாழ்வுத் திட்டம்:**

இத்திட்டம் 153 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 30 நகராட்சிகளிலும் நிறைவேற்றப்படுகிறது. மருத்துவ அலுவலர்கள் மற்றும் நல்வாழ்வுப் பார்வையாளர்கள் அடங்கிய குழு பள்ளிக் குழந்தைகளின் உடல் நல மதிப்பீட்டை நடத்துகின்றன. இவ்வுடல் நலப் பரிசோதனைகளின்போது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் உடன் இருத்தல் ஊக்குவிக்கப்படுகிறது. ஏனெனில் நல்வாழ்வுத் கல்வி விளக்கமளிப்பதற்கு இந்த சந்தர்ப்பம் பயன்படுத்திக் கொள்ளப்படலாம். உடல் நலக் குறைவுக்கான அறிகுறிகளுள்ள குழந்தைகளுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறப்பு சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் பெரிய மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

இப்பள்ளிகளில் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சில எளிய நல்வாழ்வு மற்றும் நோய்கள் பற்றிய விபரங்களும் அவர்களின் உடல்நலத்தைப் பேணி பாதுகாத்துக்கொள்ளும் வழிமுறைகள் பற்றியும் சில அடிப்படை





உண்மைகளைக் கற்பிக்க நல்வாழ்வுக் கல்வி விளக்கமும் அளிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் நல்வாழ்வுக் கல்விக் கொள்கைகளை அவர்களுடைய அன்றாட வகுப்பறைப் பாடங்களுடன் பின்னர் இணைத்துக் கொள்வார்கள். 1981-82 ஆண்டில் (31 டிசம்பர் வரை) உடல்நலப் பரிசோதனை செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 2,08,937, 1982-83 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் 7.20 இலட்சம் குழந்தைகளை பரிசோதனை செய்து ஒவ்வொரு குழந்தைக்கும் தனி நல்வாழ்வுப் பதிவுரு வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

6. மக்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல் :

தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் உட்பட மக்களில் நலிந்த பிரிவினரின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்துவதற்கு கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன:—

1. ஒருங்கிணைந்த சேய் நல வளர்ச்சித் திட்டம்.

2. கல்ராயன் குன்றுகளில் மலைவாழ் மக்கள் நல்வாழ்வுத் திட்டம்.

3. வைட்டமின் 'ஏ' மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குழந்தைகளிடையே ஏற்படும் பார்வை இழப்பை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்

4. சிறப்பு ஊட்டச் சத்துத் திட்டம் மற்றும் திருத்தப்பட்ட சிறப்பு ஊட்டச் சத்து திட்டம்.

5. நடைமுறை ஊட்டச் சத்துத்திட்டம்.

6. தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட ஊட்டச்சத்துத் திட்டம்.

7. டானிஷ் உதவி பெறும் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்திட்டம்.

ஒருங்கிணைக்கப்பட்ட சேய்நல வளர்ச்சித் திட்டம் :

இத்திட்டம் தர்மபுரி மாவட்டம் தள்ளி வட்டாரத்திலும் மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டாரத்திலும் சென்னை மாநகரின் குடிசைப் பகுதிகள் சிலவற்றிலும் தொடங்கப்பட்டது.

திட்டத்தின் நோக்கங்களாவன :

1. 0-6 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வு நிலையை மேம்படுத்துதல்.

2. குழந்தையின் மன உடல், சமூக வளர்ச்சி முறையாக அமைய அடித்தளம் அமைத்தல்.

[1982 மார்ச் 22

3. குழந்தை இறப்பு, நலிவு ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் பள்ளியிலிருந்து இடையில் நின்றுவிடுதல் ஆகியவற்றைக் குறைத்தல்.

4. குழந்தை நல வளர்ச்சியை மேம்படுத்த இத்திட்டத்தை திறம்பட நிறைவேற்றுவதற்கு பல்வேறு துறைகளையும் ஒருமுகப்படுத்துதல்.

5. தாய்மார்களுக்கு உரிய ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி விளக்கம் அளிப்பதன்மூலம் குழந்தையின் ஊட்டச்சத்து தேவைகளையும் சாதாரண நல்வாழ்வுத் தேவைகளையும் திறம்பட நிறைவு அடையச் செய்தல்.

இக்குறிக்கோள்களை அடைய கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப் படுகின்றன :—

1. பள்ளிப்பருவ முன்னிலைக் கல்வி
2. குறை நிரப்பு ஊட்ட உணவு
3. தடுப்பு ஊசி
4. மருத்துவப் பரிசோதனை
5. சிறப்பு சிகிச்சைக்கு அனுப்புதல்
6. ஊட்டச் சத்து நல்வாழ்வுக் கல்வி விளக்கம்
7. தாய்மார்களுக்கு முதியோர் கல்வி வழங்கி அதன் மூலம் அவர்களை தேசிய வாழ்வில் ஈடுபடுத்துதல்.

1976ல் தொடங்கப்பட்ட இத்திட்டம் 1981-82 ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது.

7. கல்ராயன் குன்றுகளில் மலைவாழ் மக்கள் நல்வாழ்வுத் திட்டம்.

கல்ராயன் குன்றுகளிலுள்ள 103 கிராமங்களில் வாழும் மக்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். மருத்துவ நல்வாழ்வுப் பணியாளர்கள் அடங்கிய நடமாடும் மருத்துவப் பிரிவு கால முறைப்படி இக்கிராமங்களுக்கென்று மலைவாழ் மக்களுக்கு மருத்துவ மற்றும் நோய்த்தடுப்புப் பணிகளையும் புரிகிறது.

8. வைட்டமின் 'ஏ' மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குழந்தைகளிடையே ஏற்படும் பார்வையிழப்பைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப் படுத்துதல்.

இத்திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைமுறை ஊட்டச்சத்து திட்டம் நிறைவேற்றப்படாத ஒரு வட்டாரத்தில் நிறைவேற்றப்படுகிறது. தாய்மார்கள் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துணர்வு தொடர்ந்து இருக்கத்



1982 மார்ச் 22]

தேவைப்படும் கல்வி விளக்கத்தை அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். ஊரகப் பகுதி வாழ் மக்களின் நலனுக்குத் தேவைப்படும் கல்விச் சாதனங்களும் பொருட்களும் வழங்கப்படுகின்றன. உள்ளூரில் கிடைக்கத் தக்க ஊட்டச்சத்துமிக்க உணவுகளை உட்கொள்ள வேண்டியதன் இன்றியமையாமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டினால் உண்டாகும் நோய்களைத் தடுத்தல் ஆகியவைபற்றி நல்வாழ்வுப் பணியாளர்கள் விளக்கமளிக்கின்றனர்.

9. சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம்.

நகர்ப்புற குடிசைப்பகுதிகள் மற்றும் மலைப்பகுதிகள் ஆகிய இடங்களில் வாழ்கின்ற சூலுற்ற தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பள்ளிப்பருவமடையாக் குழந்தைகள் ஆகியோரின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவது இத்திட்டமாகும். இத்திட்டம் 2 மாநகராட்சிகள் 33 நகராட்சிகள் மற்றும் 15 ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் செயல்படுத்தப் படுகிறது.

(1) திருத்தப்பட்ட சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம் :

இத்திட்டம் சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகள், புதுக்கோட்டை நகராட்சி ஆகியவற்றில் 79 நிலையங்களைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினால் 6 மாதம் முதல் 6 வயது வரையிலுள்ள குழந்தைகள் பயன் பெறுகின்றனர். குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை, வைட்டமின் 'ஏ' திரவம் மற்றும் இரும்புச் சத்து, போலிக் மாத்திரைகள், தடுப்பூசிகள் ஆகியவை உட்பட்ட மருத்துவ வசதிகளும் ஒரு வாரத்துக்குத் தேவைப் படுகின்ற வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருளாக 700 கிராம் பாலாஹார் கோதுமை கொடுக்கப்படுகிறது.

(2) கேர் நிறுவனத்தின் உணவு வழங்கு திட்டம் :

மக்கள் தொகையில் நலிந்த பிரிவினராக உள்ள பள்ளிப் பருவமடைந்த குழந்தைகள், சூலுற்ற தாய்மார்கள் மற்றும் தாய்மார்கள் ஆகியோரிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை ஒழிக்கும் நோக்கத்துடன் கேர் நிறுவனம் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 80 கிராம் தானியங்கள் மற்றும் 7 கிராம் எண்ணெய் வீதம் இலவசமாக வழங்குகிறது. இவ்வாறு ஆண்டில் 300 நாட்களுக்கு 3,322 உணவு வழங்கு நிலையங்களில் இத்தகைய உணவு வழங்கப் படுகிறது. இந்நிலையங்களில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் நடத்தும் நிலையங்களும் அடங்கும். இத்திட்டத்தினால் சுமார் ஒரு இலட்சம் பேர் பயனடைகின்றனர். (இவர்களுள் 80,000 பேர் பள்ளிப் பருவமடையாக் குழந்தைகள். பேறு காலத்துக்கு முந்திய மற்றும் பிந்திய தாய்மார்கள் பெருகியோர் ஆவர்.)

**10. பிறப்பு இறப்புப் பதிவு :**

பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைச் சிறந்த முறையில் வகுத்து நிறைவேற்றுவதற்கு நம்பத்தக்க பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம் தேவையாகும். தமிழ்நாட்டில் பிறப்பு-இறப்புப் பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 18-ன்கீழ் பதிவுப்பணி நடைபெற்று வருகிறது. குடிமுறைப் பதிவுகள் மேம்பாடு அடைய மக்களிடையே தேவையான பிரச்சாரம் செய்யவேண்டி உள்ளது. மக்கள் தொகையின் நம்பத்தக்க பிறப்புவிதம் இறப்புவிதம் ஆகியவற்றை மதிப்பிட மாநிலத்தில் மாதிரி பதிவுத் திட்டம் நடத்தப்படுகிறது.

**சிறு குழந்தை இறப்பு :**

1978-ம் ஆண்டில் அனைத்திந்திய அடிப்படையில் சிறு குழந்தை இறப்புக் கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது. அந்த ஆய்வறிக்கையின்படி நாடு முழுவதுக்குமாக சிறு குழந்தை இறப்பு விதம் ஊரகப்பகுதிகளில் உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு 136 ஆகவும் நகர்ப்பகுதிகளில் உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு 70 ஆகவும் உள்ளது. தமிழ் நாட்டின் ஊரக மற்றும் நகர்ப்பகுதிகளுக்கான 1976 முதல் 1980 ஆண்டு வரையிலான காலத்துக்கு சிறு குழந்தை இறப்பு விதம் வருமாறு :—

சிறு குழந்தை இறப்பு விதம் (உயிருடன் பிறந்த ஒவ்வொரு 1000 குழந்தைகளுக்கு)

| ஆண்டு. | ஊரகப்பகுதி. | நகர்ப்பகுதி. | இணைந்தது |
|---|---|---|---|
| 1976 | 120.0 | 81.8 | 108.5 |
| 1977 | 130.7 | 73.3 | 113.4 |
| 1978 | 116.4 | 60.3 | 99.6 |
| 1979 | 111.1 | 63.3 | 9[illegible].8 |
| 1980 | 115.7 | 62.7 | 10[illegible].2 |

**11. பலநோக்கு நல்வாழ்வு பணியாளர் திட்டம் :**

தேசிய மலேரியா ஒழிப்பு பராமரிப்புத் திட்டம், பெரியம்மை ஒழிப்புத் திட்டம், தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் முதலான பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. இத்திட்டங்கள் அந்தந்த திட்டப் பணியாளர்களால் 10,000 லிருந்து 20,000 மக்கட் தொகைக்கு ஒருவர் என்ற விதத்தில் இருந்து நிறைவேற்றப்படுகின்றன. இப்பணியாளர்கள் அனைவரும்



பலநோக்கு நல்வாழ்வு பணியாளர்களாக ஒருங்கிணைக்கப்பட்டு இவர்களின் மூலமாக எல்லா நல்வாழ்வுத் திட்டங்களையும் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் மக்கள் தொகையில் குறிப்பிட்ட ஒரு சிறு பகுதியினருக்கு அதாவது 5,000 பேருக்கு ஒருவர் விதம் இருந்து அவர்களின் நல்வாழ்வுத் தேவைகளைக் கவனித்துக்கொண்டு சமுதாயத்தில் சிறு நோய்களுக்குச் சிகிச்சை அளித்து நல்வாழ்வு பணி புரிவார்கள்.

ஒவ்வொரு 4 ஆண் நல்வாழ்வுப் பணியாளர்களுக்கு ஓர் ஆண் மேற்பார்வையாளரும், ஒவ்வொரு 4 பெண் நல்வாழ்வுப் பணியாளர்களுக்கு ஓர் பெண் மேற்பார்வையாளரும் இருப்பர்.

செங்கற்பட்டு, தென்னார்க்காடு, மதுரை, கன்னியாகுமரி, சேலம் மாவட்டங்களில் இத்திட்ட நிறைவேற்றத்துக்கு அரசு ஒப்பளித்துள்ளது. இம்மாவட்டங்களில் அமர்த்தப்படுவதற்காக 718 கூடுதல் துணைச் செவிலியர்கள், மற்றும் 177 கூடுதல் நல்வாழ்வுப் பார்வையாளர்கள் அமர்த்தப்படுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை 691 துணைச் செவிலியர் மற்றும் 177 நல்வாழ்வு பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். திருச்சிராப்பள்ளி, சேலம், திண்டுக்கல் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள துணைச் செவிலியர் பயிற்சி நிலையங்கள் சேர்க்கைத் தொகையை 30-லிருந்து 60 ஆக இரட்டிக்கவும், கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், காஞ்சிபுரம் நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஆண்டுதோறும் 60 பேருக்கு பயிற்சி அளிக்கத்தக்க 5 புதிய பயிற்சி நிலையங்களைத் தொடங்கவும் அரசு ஒப்பளிப்பு வழங்கி உள்ளது. மேலும் நான்கு பள்ளிகளைத் தொடங்க கருதப்பட்டுள்ளது.

**12. தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட ஊட்டச்சத்துத் திட்டம் (உலக வங்கி உதவியுடன்)**

தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட ஊட்டச்சத்துத் திட்டம் உலக வங்கியின் உதவி பெறுகிறது. 32 மில்லியன் டாலர்களுக்கான கடன் ஒப்பந்தம் 12-5-1980ல் கையெழுத்தானது. உலக வங்கியின் ஆய்வுக்குழுக்கள் 1980 மே மாதத்தில் ஒன்றும், 1980 நவம்பர் மாதத்தில் ஒன்றுமாக இரண்டு குழுக்கள் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தன.

**குறிக்கோள் :**

குழந்தைகள் இறப்பு விதத்தை 25 சதவிகிதம் குறைக்கவும், குழந்தைகளிடையே சத்துக் குறைபாட்டு விளைவுகளைக் குறைப்பதும், கருத்தரித்த மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டு சோகை நோய் தோன்றுதலைக் குறைப்பதும், இத்திட்டத்தின் நோக்கமாகும்.

[1982 மார்ச் 22

திட்ட நிறைவேற்றம் :

மாநிலத்தில் இத்திட்டத்திற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட 1. மதுரை, 2. செங்கற்பட்டு, 3. வடார்க்காடு, 4. இராமநாதபுரம், 5. திருநெல்வேலி, 6. புதுக்கோட்டை முதலான மாவட்டங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளின் திறனையும் பரப்பையும் செறிவையும் அதிகப்படுத்த எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட உள்ளன. கருத்தரித்த மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பள்ளிப் பருவமடையாக் குழந்தைகள் முதலான ஊட்டச்சத்துக் குறைபாட்டு ஆபத்துக்கு ஆளாகக் கூடிய அனைவருக்கும் ஊட்டச் சத்து பற்றிய பணிகள் சென்றடையவும், ஊட்டச் சத்து தரத்தை மேம்படுத்தவும், இத்திட்டம் வழிவகுக்கும். பள்ளிப் பருவமடையாக் குழந்தைகளிடையே ஏற்படும் இறப்பில் 90 சதவிகிதம் 3 வயதுக்கு குறைந்தவர்களிடையே ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தின் கீழ் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் குறியீட்டின் உள்ளடக்கமெனக் குறிப்பிட செய்யப்பட்டுள்ளது. 3 வயதுக்குக் குறைந்தவர்களிடையே ஏற்படும் இறப்பில் 75 சதவிகித அளவு ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் இரு புதுமைக் கூறுகள் வருமாறு :

1. ஊட்டச்சத்து நிலைக் கண்காணிப்பு முறை ஏற்படுத்தப்பட்ட திட்ட மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளின் தகுதியுள்ள எல்லாக் குழந்தைகளும் கண்டறியப்பட்டு கால முறைப்படி அவர்களின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுதல்.

2 குழந்தை போதுமான அளவு ஊட்டச்சத்து நிலையை அடையும் காலம் வரை தொடர்ந்து கூடுதல் சத்துணவு அளித்தல் மற்றும் திட்டத்திற்கு உட்பட்ட பகுதி குடும்பங்களில் வீட்டு உணவுப் பழக்கங்களில் நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்களுக்கு ஊட்டச்சத்துக் கல்வி விளக்கமளித்தல் ஆகியவை :—

திட்டத்தின் கூறுகள் :—

1. நல்வாழ்வுப்பணி
2. ஊட்டச்சத்து வழங்குதல்
3. குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் கூடுதல் உணவு தயாரிப்பு
4. [illegible] மதிப்பீடு
5. ஊட்டச்சத்துக் கல்வி விளக்கம்.



1982 மார்ச் 22]

நல்வாழ்வுப் பணிகளை வழங்குவது நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏனைய கூறுகள் பிற துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்பப் பயிற்சி, அமைப்பு முறை மேம்பாடு, ஒவ்வொரு 5,000 மக்கட் தொகைக்கும் 1 வீதம் புதிய கிளை நிலையத்துக்கான கட்டிடம் கட்டுதல், ஊர்திகள் கருவிகள் தட்டுமுட்டுப்பொருட்கள் (மேசை நாற்காலிகள்) மருந்துகள் முதலியன வழங்குதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட பணிகளை காலமுறைப்படி ஊரக மக்களின் வீடுகள் தோறும் சென்று வழங்குதல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டது இத்திட்டத்தின் நல்வாழ்வு பற்றிய கூறாகும்.

முதல் மூன்று ஆண்டுகளுக்கான வேலை முறை :

இத்திட்டம் 5 கட்டங்களாக நிறைவேற்றப்படும்.

முதற் கட்டம்.—மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி வட்டாரத்தில் 1980-81 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. (முன்மாதிரித் திட்டம்) :

இரண்டாவது கட்டம் (1981-82)

மதுரை மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட சேய் நல வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படும் திலக்கோட்டை வட்டாரம் நீங்கலாக ஏனைய 32 வட்டாரங்களிலும் நடைபெறும்.

மூன்றாவது கட்டம் (1982-83) :

இராமநாதபுரம் மாவட்டத்தில் 32 வட்டாரங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 வட்டாரங்கள்.

நான்காவது கட்டம் (1983-84) :

அடுத்த 45 வட்டாரங்கள்.

ஐந்தாவது கட்டம் (1984-85) :

ஏனைய 50 வட்டாரங்கள்

13 உணவில் கலப்படம் செய்தலை தடுத்தல் :—

உணவுப் பொருட்களில் கலப்படம் செய்தல் சமூகத்திற்கு இழைக்கப்படும் கடுமையான தீமையாகும். நல்வாழ்வு திட்டங்கள், மற்றும் நல்வாழ்வுக் கல்வி வழியாக இத்தீங்கினைக் கட்டுப்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தொழில் நுட்ப வழிமுறை விளக்கம், மற்றும் தொழில் நுட்ப உணவுக் கட்டுப்பாடு நிர்வாகம் சட்டப்படி நல்வாழ்வு இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் இவருக்குத் துணையாக ஒரு துணை இயக்குநர் மற்றும் உணவுக்கட்டுப்பாட்டு அமைப்பு உள்ளன.

வெளியகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் பகுப்பாய்வகங்களும் இயங்குகின்றன. [illegible] நிலையத்திலுள்ள அரசு பகுப்பாய்வாளர் அலுவலகம், கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் உணவு பகுப்பாய்வகங்கள் ஆகியவற்றிலும்

[1982 மார்ச் 22

சட்டப்படிக்கான உணவு பொருள் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. பாளையங்கோட்டை உணவு பகுப்பாய்வகத்தில் சட்டம் சாரா உணவு மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. சேலம் உணவு பகுப்பாய்வகம் அமைப்பு நிலையில் உள்ளது. சென்னையில் உள்ள பொது பகுப்பாய்வகம் (Public Analyrt Laboratory) சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. சென்னை தேனாம்பேட்டையில் உள்ள உணவு மற்றும் மருந்து பகுப்பாய்வகம் மருந்து மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதுடன் சட்டம் சாரா உணவுப் பொருள் மாதிரிகள் மற்றும் ஆய்வு உணவு மாதிரிகளையும் பகுப்பாய்வு செய்கிறது.

சட்டம் செயல்படும் இடங்கள் :

1980-ம் ஆண்டு வரை திருத்தப்பட்ட 1954 ஆண்டு உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம், 3 மாநகராட்சிகளிலும் எல்லா 98 நகராட்சிகளிலும், 8 நகரியங்களிலும், இரு இராணுவப் பகுதி வாரியங்களிலும் அதாவது தமிழ் நாட்டின் பெருநகர் மற்றும் நகர்ப்பகுதிகளின் 100 சதவித பரப்பையும் உள்ளடக்கி செயல்படுத்தப்படுகிறது.

264 சிறு நகரப்பகுதிகளிலும் 69 ஊராட்சி ஒன்றியங்களின் ஊரகப்பகுதி களிலும், உணவுப்பொருள் மாதிரி எடுப்பு வேலைக்கென்று சட்டத்தின்கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளூர் நல்வாழ்வு அதிகாரிகள்.—

நகரப் பகுதிகளில், மாநகராட்சி நல்வாழ்வு அலுவலர்கள் நகராட்சி நல் வாழ்வு அலுவலர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் ஆகியோரும் ஊரகப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் ஆகியோரும் உள்ளூர் நல்வாழ்வு அதிகாரிகளாகப் பணிபுரிகின்றனர்.

கடந்த மூன்றாண்டுகளில் உணவுப்பொருள் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்ட புள்ளிவிவரம் வருமாறு :—

| [illegible] | 1970—80 | 1980-81 | 1981—82 (31 டிசம்பர் வரை) |
|---|---|---|---|
| பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 16994 | 19,530 | 15 179 |
| கலப்படம் செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 2404 | 2349 | 1,654 |
| அபராதம் விதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை. | 735 | 677 | 490 |
| சிறைத்தண்டனை அளிக்கப் பட்டோரின் எண்ணிக்கை. | 334 | 197 | 169 |
| வரவு வந்த அபராதத் தொகை. | ரூ. 4,5[illegible] | 2,0[illegible] | 2,[illegible] |



1982 மார்ச் 22]

14. பூவிருந்தவல்லி மக்கள் நல்வாழ்வு நிறுவனம் :

பூவிருந்தவல்லி மக்கள் நல்வாழ்வு நிறுவனத்தில் 1. பணி, 2; பயிற்சி, 3; ஆராய்ச்சிப் பகுதிகள் உள்ளன. 1978 ஆம் ஆண்டில் நல்வாழ்வுப் கல்வி ஆசிரியர் பயிற்சிப்பிரிவும், மாணவர் நல்வாழ்வுக் கல்விப்பிரிவும், இந்நிறு வனத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன.

பூவிருந்தவல்லி நல்வாழ்வுப் பிரிவின் குறிக்கோள்களாவன :

1. செறிவாக நல்வாழ்வு பணிபுரிவதன் மூலம் ஊரகப் பகுதிகளில் நல் வாழ்வு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

2. நன்கமைந்த பணியாளர் அமைப்பு மற்றும் அவர்களின் பணியின்மூலம் ஊரக மக்களின் நல்வாழ்வு மற்றும் பல்வேறு நலன்களையும் எவ்வாறு மேம் படுத்த முடியும் என்பதைச் செயல்மூலம் விளக்கிக் காட்டுதல்.

3. நல்வாழ்வு பற்றிய எல்லாத் தன்மைகளையும், மருத்துவ மற்றும் நல் வாழ்வுப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளித்தல்.

இந்நல்வாழ்வு பிரிவு 1,28,092 மக்கள் தொகையுள்ள 62 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ள 39 ஊர்களுக்குப் பணி புரிகிறது. இப் பிரிவின் பணியைப் பெருக்குவதற்காக 1958 ஆம் ஆண்டில் ஒரு ஊரக நல் வாழ்வு நிலையம் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் மருத்துவ மற்றும் நல்வாழ்வு பணியாளர்களுக்கு மக்கள் நல்வாழ்வு பற்றிய அனைத்துத் தன்மைகளையும் மிகவும் தேவைப்படுகின்ற பயிற்சி வசதியினை அளிக்கிறது.

பணிப்பயிற்சி நிலையம் :

குறிக்கோள் :

1. ஆரம்ப நல்வாழ்வு நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ மற்றும் நல் வாழ்வுப் பணியாளர்களுக்கு பணிக்காலப்பயிற்சி அளித்தல்.

2. நல்வாழ்வு பணியாளர்களிடையே குழுவாக இணைந்து பணிபுரியும் பழக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் அவரவர் பணி அவை தொடர்பான பிரச்சினைகள் பற்றிய பயிற்சி அளித்தல்.

3. ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்களுக்கு ஊரக நல்வாழ்வு வேலையில் நடைமுறைக் களப்பணி பயிற்சி அளித்தல்.

4. பல்வேறு நல்வாழ்வு திட்டங்களின் தேவைக்கு பல்வேறு வகை நல்வாழ்வுக் கல்வி முறைகள் மற்றும் சாதனங்களைப் பயன்படுத்தும் வகைகளைக் கற்பித்தல்.

ஆண்டுதோறும் 4 தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதிக்கும் 6 வாரகால பயிற்சி அளிக்கப்படும்.

மேலும் தமிழ்நாடு நல்வாழ்வு பணிகளில் புதிதாக அமர்த்தப்படுகின்ற நல்வாழ்வு அலுவலர்களுக்கு 3 வார காலத்துக்கு குறுகிய காலப் பயிற்சி ஒன்று நடத்தப்படுகிறது.

ஆராய்ச்சி—செயல் திட்டம் :

செங்கற்பட்டு, மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களில் 4 ஆராய்ச்சி மற்றும் செயல் திட்டங்கள் அமைந்துள்ளன.

இவற்றின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பட்டியல் வருமாறு :—

தன்னிறைவுத் திட்டம்.—இத்திட்டம் ஊரக மக்களின் பொது நல்வாழ்வு நிலையை மேம்படுத்தவும் ஊரக சுற்றுப்புறத் துப்புரவை மேம்படுத்தவும் அமைந்தது. எல்லா மாவட்டங்களிலும் தன்னிறைவுத் திட்ட வட்டாரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்களில் 4 இருக்கை கொண்ட சமுதாய கழிப்பிடங்களைக் கட்ட டிசம்பர் 1980-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

2. U.N.D.P. துப்புரவுத் திட்டம்.—நகராட்சி பொறியாளர்களுக்கு நல்வாழ்வு பொறியாளர்கள் கழிப்பிடம் கட்டுதல் பற்றிய விளக்கம் அளிக்கின்றனர். இத்திட்டம் மண் துப்புரவு திட்டத்திற்கும் வழிமுறை விளக்கமளிக்கிறது. மேலும் தமிழ்நாட்டில் உணவுப் பண்டங்களைக் கையாள்வோர் பற்றிய ஆய்வையும், இரத்த சோகை பற்றிய ஓர் ஆய்வையும் நடத்தி உள்ளது. சமுதாயத்தில் குறிப்பாக நடந்த பிரிவினரிடையே பரவியுள்ள இரத்த சோகையின் அளவைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கு இரத்தச் செம்மை பரிசோதனை மூலம் இரத்தசோகை பற்றிய ஆய்வு நடத்தப்பட்டது. சமுதாயத்தில் இரத்தசோகையின் அளவைக் கண்டறிந்த பின்னர், பரிசோதனைக் காரியங்களுக்காக உடலுக்கு ஊட்டமூட்டும் சத்து மாத்திரைகளை வழங்குவதற்கு ஆராய்ச்சி செயல் திட்டம் கருதியுள்ளது.

15. நல்வாழ்வுக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவு :

மாநிலத்திலுள்ள பல்வேறு பள்ளி ஆசிரியர்களுக்கு நல்வாழ்வுக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்கு நல்வாழ்வுக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவைத் தொடங்க அரசு 1970-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.



குறிக்கோள் :

சமுதாயத்திலும், பள்ளிகளிலும். நல்வாழ்வு மேம்பட ஆசிரியர்களின் கடமை பற்றி உணர்த்தவும் புரிந்து கொள்ளவும் வகை செய்தல்.

திட்டமிடல் மற்றும் நிறைவேற்றல் :

இப்பயிற்சித் திட்டத்தில் அறிஞர் கலந்துரையாடல், குழு விவாதம், ஒலி, ஒளி கருவிகள் பயன்படுத்துதல், களசெய்முறை விளக்கம், முதலான பல்வேறு கல்வி முறைகளை பொருத்தமான முறையில் தேர்ந்தெடுத்து பின்பற்றப் படுகிறது. பல்வேறு நல்வாழ்வுக் கல்வி தொழில்நுட்பத் திறமைகளில் வல்லுனர்களாக உள்ளவர்களைக் கொண்டு விரிவுரைகளுக்கு ஏற்பாடு செய்து இப்பயிற்சித்திட்டம் மேலும் பயனுள்ளதாக அமைய வழி செய்யப்படுகிறது. கருத்துரை விளக்க வகுப்புகளில் எடுத்துக் கூறப்பட்ட நல்வாழ்வுப் பொருட்களைப்பற்றி மேலும் நல்ல முறையில் புரிந்து கொள்வதற்கு வசதியாக பயிற்சியாளர்கள் பல்வேறு நல்வாழ்வு நிறுவனங்களுக்கு அழைத்துச் செல்லப் படுகின்றனர். இதுவரை பி.டி. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 103 பேர்களுக்கு 6 தொகுதிகளாக பயிற்சி அளிக்கப்பட்டது, மேலும் பல்வேறு உயர்நிலை மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் 33 பேருக்கு இரண்டு தொகுதிகளாக பயிற்சி அளிக்கப்பட்டது.

1981-82 ஆண்டில் பிற வேலைகளாவன :

1. பள்ளி மற்றும் சமுதாய நல்வாழ்வுத் திட்டம்,

2. பள்ளி நல்வாழ்வு அட்டைப்பற்றிய பரிசோதனை (School Health Card)

3. சமுதாயம் மற்றும் பள்ளி சார்ந்த நல்வாழ்வுப் பணியாளர்களுக்கான S.C.E.R.T. நடத்திய கருத்தரங்கம்.

1982-83-ல் ஒரு கருத்தரங்கம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஏற்கனவே பயிற்சி பெற்ற சில தலைமை ஆசிரியர்களும் கலந்து கொள்வார்கள். ஆசிரியர் பயிற்சி படிப்பின் பாடத்திட்டத்தை சீராய்வு செய்வதே கருத்தரங்கின் நோக்கமாகும்.

மாணவர் நல்வாழ்வுக் கல்விப் பிரிவு :

இப்பிரிவு சொறிநோய், இரத்த சோகை, மாலைக்கண், வாய்ப்புண் (மைனாவாய்), காசநோய், மஞ்சள்காமாலை, மலேரியா, யானைக்கால் நோய் மற்றும் பிறப்பு இறப்புப் புள்ளி விவரம் முதலான பல்வேறு பொருள்பற்றி கல்விச்சாதனம் தயாரித்துள்ளது. மக்கள் தொகை பெருக்கம் பற்றி ஆரம்ப நடுநிலை உயர்நிலைப் பள்ளிகளுக்கான மாதிரி பாடங்களுக்கு பின்னணி தகவல்களைத் தயாரித்து வழங்குகிறது. 2, 3, 4, 5 வகுப்புகளுக்கு கேர்

[1982 மார்ச் 22

நிறுவனம் தயாரித்த நல்வாழ்வுக் கல்வி வெளியீடுகளைச் சீராய்வு செய்து வருங்கால மறுபதிப்புக்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி உள்ளது.

16. நல்வாழ்வுக் கல்வி :

மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து இயக்கத்தின் மாநில நல்வாழ்வுக் கல்வி நிலையம் கீழ்க்கண்ட நோக்கத்துடன் நல்வாழ்வுக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1. மக்கள் தங்களின் நல்வாழ்வு பிரச்சினைகளை அறிந்து கொள்ள உதவுவது.

2. மக்களுக்கு கி.பி. 2000 ஆண்டுகளுக்குள் நல்வாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் நல்வாழ்வுக் கல்வி அளித்து உதவுவது.

3. நல்வாழ்வுப் பணியாளர்கள் நல்வாழ்வுக் கொள்கைகளையும், திட்டங்களையும் நன்கு புரிந்து கொண்டு, திட்டக் குறிக்கோளை அடைய நல்வாழ்வு கல்வியின் மூலம் உதவுதல்.

4. மக்கள் தங்களின் சொந்த முயற்சிகளிலும் கூட்டுறவு முயற்சியிலும் முடிவெடுத்து தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள உதவுவதில் நல்வாழ்வுப் பணியாளர்களுக்குத் தக்க பயிற்சி அளித்தல்.

மக்களுக்கு நல்வாழ்வுக் கல்வி சிறு குழு விவாதம் மூலமாகவும், தனிப்பட்டவர்களைச் சந்திப்பதன் மூலமாகவும் நல்வாழ்வுக் கல்விச் சாதனங்களைக் கொண்டு விவாதிக்கப்படுகின்றது. இது ஆக்கத் திட்டபணிகளுக்கு பல்வேறு வழிமுறைகளில் உதவுகின்றது.

நல்வாழ்வு கல்வியின் பணிகள் பல்வேறு திட்டங்களில் அந்த அந்த திட்ட அலுவலர் மூலம் கீழ்க்கண்டவாறு நிறைவேற்றப்படுகின்றன :—

1. ஆரம்ப சுகாதார நிலையங்களில் நல்வாழ்வுக் கல்வி பற்றிய செயல்முறை விளக்கம் அளித்தலும் பயிற்சி கொடுத்தலும் மற்றும் மாவட்டங்களின் பின்தங்கிய பகுதிகளிலும் மலைப் பகுதிகளிலும் நல்வாழ்வு கல்வி பற்றிய முக்கியத்துவம் குறித்து அறிக்கை தருதல்.

2. 20 அம்ச பொருளாதார திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து சோமங்கலம் கிராம சீரமைப்பு ஆக்கப் பணியில் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக் கல்வி கொடுக்கப்பட்டு வருகின்றது.



1982 மார்ச் 22]

3. ஆரம்ப பள்ளி ஆசிரிய ஆசிரியைக்கு பயிற்சி.

4. நல்வாழ்வுக் கல்விப் பயிற்சி எல்லா நிலைகளிலும் அதாவது களபணியாளர்களுக்கும் பலநோக்கு பணியாளர்களாக பயிற்சி பெறுபவர்களுக்கும் மற்றும் நல்வாழ்வுத் துறையை சார்ந்த அனைத்துப் பணியாளர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றது.

5. தேசிய மாணவர் சேவைத் திட்டத்தில் மாணவர்களுக்கு சமுதாய சத்துணவுத் திட்டம் நல்வாழ்வில் அவர்கள் பங்கு போன்றவைகளுக்கு பயிற்சி அளித்தல்.

6. நகர்ப்புற மருத்துவமனைகளில் நல்வாழ்வு கல்வி பயிற்சி மற்றும் எல்லா மாவட்டங்களிலும் ஏனைய இடங்களிலும் பொருட்காட்சி அமைத்தல்.

7. தனியார் துறை நிறுவனத்தினருக்கும், சிறு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் நல்வாழ்வுக் கல்வி அளித்து உதவுதல்.

## IV. மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகம்.

ஹாதி கமிட்டியின் பரிந்துரைகளின்படி இம்மாநிலத்தில் ஒரு மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியை தலைவராக கொண்டு தனித்துறையாக அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் நேரடி கட்டுப்பாட்டில் மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகம் தனியாக செயல்பட வேண்டுமென அரசு முடிவெடுத்து அதன்படி ஆணையிட்டது. தற்போதைய அமைப்பின்படி மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியை தலைவராகக் கொண்டு மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகம் தனித்துறையாக 26—11—1981 முதல் இயங்கி வருகிறது. அவருக்கு உதவியாக சென்னையில் இரண்டு துணை மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகளும் மற்றும் 10 உதவி மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகளும், 59 மருந்து ஆய்வாளர்களும் இந் நிர்வாகத்தில் உள்ளனர். உரிமங்கள் வழங்கும் அதிகாரங்களை பரவலாக்கும் பொருட்டு இப் புதிய அமைப்பில், மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகத்தின் தலைவர் என்ற முறையில் மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி இந்நிர்வாகத்தின் முழு நிர்வாக பொறுப்பினையும் ஏற்று நடத்துவார். மேலும் அவர் அரசினரால் நியமிக்கப்பட்ட எல்லா மருந்து ஆய்வாளரையும் நிர்வகிக்கும் அதிகாரியாக விளங்குவார். ஒரு துணை மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி ஹோமியோபதி தவிர மற்ற மருந்துகளை தயாரிக்க அனுமதிக்கும் உரிமங்களை வழங்கும் அதிகாரியாகவும், மற்றொரு துணை மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி ஹோமியோபதி ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிக்க அனுமதிக்கும் உரிமங்களை வழங்கும் அதிகாரியாகவும் அமைவார்கள்;

உதவி மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் மருந்துகள் விற்பனை செய்ய அனுமதிக்கும் உரிமங்களை வழங்கும் மற்றும் மருந்து தயாரிக்க அனுமதிக்கும் உரிமங்களை புதுப்பிக்கும் அதிகாரங்களையும் உடையவர்களாவார்கள். இம் மாநிலம் பத்து பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு உதவி மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியும், அவரவர் பகுதிகளில் மருந்துகள் விற்பனை செய்ய அனுமதிக்கும் உரிமங்களை வழங்கும் பொறுப்பை உடையவர்களாவர்.

பரிசோதனைக்கு எடுக்கப்படும் மாதிரி மருந்துகள், தேனாம்பேட்டையிலுள்ள மருந்து பரிசோதனை கூடத்திலும், கிண்டியிலுள்ள கிங் நிலையத்திலும் பரிசோதிக்கப்படுகின்றன.

காவல் துறையினர் உதவியுடன், கலப்பட மருந்துகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும் இந்நிர்வாகத்தில் ஒரு தனி பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## V. மாநில சுகாதார போக்குவரத்து அமைப்பு இயக்குநரகம்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பல இயக்குநரகங்களால் செயல்படுத்தப்படும் பல்வேறு சுகாதாரம் மற்றும் மருத்துவப் பணிகளில் மொத்தம் 1,516 மோட்டார் வண்டிகள் உள்ளன. செயலற்று போகும் வண்டிகளின் எண்ணிக்கையை மிகக் குறைந்த அளவில் வைத்துக்கொள்ள, மோட்டார் வண்டிகளில் பராமரிப்பு மற்றும் சேவை ஆகியவற்றை மாநில சுகாதார போக்குவரத்து நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்நிறுவனத்திற்கு சென்னை, மதுரை, சேலம் ஆகிய இடங்களில் மூன்று மண்டல பழுது பார்ப்பு நிலையங்களும் திருச்சிராப்பள்ளியில் ஒரு மத்திய பழுது பார்ப்பு நிலையமும் மாவட்ட தலைமையிடங்களில் 15 நடமாடும் பழுது பார்ப்பு நிலையங்களும் உள்ளன.

மோட்டார் வண்டிகளில் நடமாட்டத்தை அதிகரிப்பதற்கும், செயலற்ற நிலையிலுள்ள வண்டிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்குமாக, பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறையின் ஒரு அங்கமாக இருந்த மாநில சுகாதார போக்குவரத்து நிறுவனத்தை 1981 ஜூலை திங்களில் தனியாக பிரித்து ஒரு இயக்குநரின் கீழ் ஒப்படைக்கப்பட்டது. இவ்வியக்குநரகம் மாநில அரசின்கீழ் இயங்கி வருகிறது. மாநில சுகாதார போக்குவரத்து அலுவலர் மாநில சுகாதார போக்குவரத்து இயக்குநராக மாற்றப்பட்டுள்ளார். இவருக்கு மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனத்தின் இயக்குநரைப் போல் அதிகாரங்களை பயன்படுத்தலாம் என்றும் அரசு பணித்துள்ளது.



1982-83ம் ஆண்டில் மோட்டார் வண்டிகளை பழுது பார்க்கவும் பராமரிக்கவும் கீழ்க்கண்ட 6 மாவட்டங்களில் பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்காக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

1. தென்னாற்காடு மாவட்டம்.
2. பெரியார் மாவட்டம்.
3. தஞ்சாவூர் மாவட்டம்.
4. இராமநாதபுரம் மாவட்டம்.
5. திருநெல்வேலி மாவட்டம்.
6. நீலகிரி மாவட்டம்.

இவற்றிற்கு தேவையான தொழில் நுட்ப பணியாளர்களை அமர்த்துவதற்கு தொடரும் செலவாக ரூ. 5.18 இலட்சமும் கருவிகள் அமைக்க ரூ. 80,000-ம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

செயல்பட உகந்ததல்ல எனக் கருதப்படும் பழைய வண்டிகள் இந்நிறுவனத்தின் கீழ் ஏராளமாக உள்ளன. அரசு இவ்வண்டிகளை படிப்படியாக மாற்றி வருகிறது. 1980-81ல் இது போன்ற 100 வண்டிகள் மாற்றப்பட்டு புது வண்டிகள் வாங்கப்பட்டன. 1982-83ல் 20 வருடங்களுக்கு மேல் பழக்கமுள்ள மேலும் 50 வண்டிகளை மொத்தம் ரூபாய் 40.10 இலட்சம் செலவில் மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தனி இயக்குநராக மாற்றப்பட்டதின் விளைவாக வண்டிகளை பயன்படுத்தும் விழுக்காடு கணிசமாக உயர்ந்துள்ளது. கீழே குறிப்பிட்டுள்ளவாறு, 1-1-1981ல் 70.4 சதவிகிதமாக இருந்த வண்டிகள் பயன்படுத்தல் விழுக்காடு 1—1—1982-ல் 82 சதவிதமாக உயர்ந்துள்ளது

| | எண்ணிக்கை. | செயல்படுபவை. | விழுக்காடு. |
|---|---|---|---|
| 1 1.81 | 1528 | 1076 | 70.4% |
| 1.1.82 | 1516 | 1244 | 82% |

1982-83ல் உத்தேசிக்கப்பட்டுள்ள 6 பழுதுபார்ப்பு நிலையங்களும் செயல்படுத்தப்பட்டவுடன் வண்டிகளை பயன்படுத்துத் திறன் மேலும் உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## VI. சுற்றுப்புறத் தூய்மை கெடுதலை தடுத்தல்.

கடந்த சில ஆண்டுகளாக, தொழிற்சாலைகளின் வளர்ச்சி மிகுந்துள்ளது. அதன் பயனாக தொழிற்சாலைகள் திட, திரவ மற்றும் வாயு கழிவுப் பொருட்களை அதிகமாக வெளியிட்டு சுற்றுப்புறத் தூய்மையை கெடுத்துக் கொண்டிருக்கின்றன. எனவே சுற்றுப்புறத்தை பேணிக்காப்பதும் தூய்மை கெடுதலை கட்டுப்படுத்தவும் தடுத்தலும் மிகவும் அவசியமாக உள்ளது.

2. தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் சுற்றுப்புறம் மாசடைவதை கட்டுப்படுத்த, நீர்பகுப்பாய்வகங்கள் இரண்டு (ஒன்று கிண்டியிலும், மற்றொன்று கோவையிலும்) உள்ளன. நகராட்சிகள், நகர பஞ்சாயத்துக்கள், புகைவண்டி நிலையங்கள், சிறைச்சாலைகள், மருத்துவமனைகள், விமான நிலையங்கள், முதலியவைகளில் உள்ள நீரின் மாதிரிகளை எடுத்து பரிசோதித்து வருவதுடன் இப்பகுப்பாய்வகங்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர், தொழிற்சாலைகளின் கழிவு நீர், மற்றும் சாக்கடைநீர் முதலியவைகளை பகுத்து ஆராய்ச்சி செய்கிறது. புதிதாக வழங்கப்படும் குடிநீர் திட்டங்களிடமிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

3. மாநிலத்தில் துரிதமாக தொழில்மயமாதல் நடைபெறுவதால் அதனால் எதிர்காலத்தில் சுற்றுப்புறத்திற்கு ஏற்படும் தீமைகள் குறித்து, பொதுச்சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநர் அதிக கவனம் செலுத்தி வருகிறார். தோல் பதனிடும் தொழிற்சாலைகள், எரிசாராயத் தொழிற்சாலைகள், உரத் தொழிற்சாலைகள், சிமெண்ட் ஆலைகள், அனல் மின் நிலையங்கள் முதலியவைகளில் இருந்து வெளிவரும் கழிவுப் பொருட்களின் தன்மைபற்றி கவனம் செலுத்தப்படுகிறது. இந்த ஆலைகள் தொடங்குவதற்கு முன்பாக, பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரிடமிருந்து சுகாதாரச் சான்றிதழ் (Health Clearance Certificate) பெற வேண்டும். இச்சான்றிதழ் கொடுப்பதற்கு முன்பாக அத்தொழிற்சாலை வெளியிடும் கழிவுப் பொருட்கள், தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வசதிகள், சுற்றுப்புறம் முதலியனபற்றி ஆராயப்படுகிறது.

4. சுகாதாரச் சான்றிதழ் கொடுக்கும் பொழுது, தொழிலின் தன்மை, இடம், அளவு, வெளியிடப்படும் கழிவுப் பொருட்களின் குணம், கழிவுப் பொருட்களை தூய்மைப்படுத்தும் முறை, அப்புறப்படுத்தும் முறை, அப்புறப் படுத்தும் இடம் முதலியன, இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் அளவு கோலுக்கு பொருந்தி உள்ளனவா என்பதுபற்றி பரிசீலிக்கப்படுகிறது. இதன்படி 1930 ஆம் ஆண்டில் 103 சுகாதாரச் சான்றிதழ்களும், 1931 ஆம் ஆண்டில் 131 சுகாதாரச் சான்றிதழ்களும் தொழிற்சாலைகளுக்கு கொடுக்கப் பட்டுள்ளது.





5. சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகளில் முக்கியமானதொன்று மாசுப் பிரச்சினையாகும். இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தொழிற்சாலைகளிலிருந்து சுத்திகரிக்கப்படாமல் வெளியாகும் கழிவுப் பொருட்களாலும், பூச்சிக் கொல்லி மருந்துகள், ரசாயன உரங்கள் உபயோகிப்பதனாலும், சுற்றுப்புறம் மாசுபடுவதை ஆராய்வதற்காக தமிழக அரசு 1972 ஆம் ஆண்டு சூழல் நலவியல்துறையை நிறுவியுள்ளது. இத்துறையில் தலைமைப் பொறியாளர் நிலையில் ஒரு தனி அலுவலரும், ஒரு நிர்வாகப் பொறியாளர், இரண்டு உதவி நிர்வாகப் பொறியாளர்களும் உள்ளனர். இத்துறை ஆலோசனை கூறும் அமைப்பாக செயல்படுகிறது.

6. மாநிலத்தில் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதற்குக் காரணமாக உள்ள தொழிற்சாலைகள் சூழல் மாசுறுவதைத் தவிர்க்க என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளன என்பதை அறிய இத்துறை அத்தொழிற்சாலைகளைப் பார்வையிடுகிறது. அரசிடமிருந்து வரும் மாசுப் பிரச்சினைகளை ஆராய்ந்து, தடுப்பு நடவடிக்கைகள் பற்றித் தேவையான ஆலோசனை கூறுகிறது. உற்பத்தி செய்யும் பொருட்கள், மூலப் பொருட்கள், உபயோகிக்கும் தண்ணீர் அளவு, கழிவுகளின் தன்மை மற்றும் அளவு, சுத்திகரிப்பு முறைகள் முதலியன பற்றி தொழிற்சாலைகளிடமிருந்து விபரங்கள் சேகரித்து ஒரு விபரப்பட்டியலை இத்துறை தயாரித்து வருகிறது. 5,000 மற்றும் அதற்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள உள்ளாட்சி நிறுவனங்களில் தண்ணீர் மற்றும் வடிகால் வசதி பற்றிய விபரங்களையும் இத்துறை சேகரித்து வருகிறது.

7. 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதல் கட்டுப்படுத்தல்) சட்டம் ஒன்றை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது. தமிழக இரு சட்டமன்றங்களும் இந்த சட்டத்தை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. நீர் மாசுபடுவதைத் தடுக்க ஒரு சட்டபூர்வமான வாரியம் அமைக்க இந்த சட்டம் வழி செய்கிறது. அதன்படி 27-2-1982 லிருந்து செயல்பட [illegible] தமிழக நீர் தூய்மை கெடுதல் மற்றும் கட்டுப்படுத்தல் வாரியம் ஒன்றை அமைத்துள்ளது. சூழல் மாசுறுவதைத் தடுக்க 1982-83 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வாரியம் "1977 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதல்-கட்டுப்படுத்தல்) செஸ்" சட்டத்தையும், 1981 ஆம் ஆண்டு காற்று (தூய்மை கெடுதல்-கட்டுப்படுத்தல்) சட்டத்தையும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பை நிர்வகிக்கும்.

8. சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதுகாப்பது, பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த பணியாகும். பல்வேறு துறைகளின் செயல்களையும் இணைத்து நடத்துவதற்கு ஓர் உயர்மட்ட குழு அவசியமாகும். மாநிலத்தில் சுற்றுப்புற

[1982 மார்ச் 22

சூழல் பற்றிய கொள்கைகளை வகுப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்கவும் வளர்ச்சிப் பணிகள் சுற்றுப்புறச் சூழலுடன் இணைந்துள்ளதா என்று பரிசீலிக்கவும், தமிழக அரசு சூழல் நலவியல் கழகம் என்ற ஓர் உயர்மட்டக் குழுவை நிறுவியுள்ளது. மேதகு ஆளுநர் இதன் தலைவராகவும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இதன் துணை தலைவராகவும் உள்ளனர். தனி அலுவலர் சூழல் நலவியல் துறை இதன் உறுப்பினர்-செயலாளர் ஆவார். சூழல் நலவியல் துறை இக்கழகத்தின் அலுவலகமாகப் பணி புரிகிறது. இதுவரை இக்கழகம் 8 முறை கூடியுள்ளது. 20 இலட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு பற்றியும் அதைத் தடுக்கும் நடவடிக்கைகள் பற்றியும் இக்கழகம் ஆய்வு செய்கிறது.

9. பறவைகள் மோதலினால், விமானங்களுக்குத் தொல்லைகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்க விமான நிலையங்களைச் சுற்றியுள்ள சுற்றுப்புறம் சுத்தமாக இருக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு மக்கள் நல்வாழ்வு துறை ஆணையர் மற்றும் செயலாளரைத் தலைவராகவும் மற்றும் 23 பேர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ' விமான நிலைய சுற்றுப்புற பாது காப்புக் குழு " ஒன்று 1980-ல் அரசால் நிறுவப்பட்டுள்ளது. விமான நிலையம்/விமானப் படை விமான நிலையங்களிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ள சுற்றுப்புறங்களைக் காக்க தேவையான நடவடிக்கைகளைப் பற்றி இக்குழு ஆராயும். இக்குழு, தனது முதலாவது கூட்டத்தை 28-1-1982 ஆம் தேதி நடத்தி, எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய செயல்கள் குறித்து விவாதித்து முடிவு செய்தது.

10. தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியிடப்படும் கழிவு நீரைத் தூய்மைப்படுத்தும் பிரச்சினையை ஆராய்வதற்கு அரசு ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளது. அக்குழுவின் அறிக்கை அரசுக்கு கிடைத்தபின் சிறிய தோல் தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் முதலியோர்களுக்கு ஏற்படுகின்ற தொல்லைகளை களைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

செவ்வாய்க்கிழமை, 1982 மார்ச் 23.

பங்குனி 10, துன்மதி—திருவள்ளுவராண்டு 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள் 193 மற்றும் 194-ஐ ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

#### ஜேப்படி குற்றங்கள்.

* 193 வினா—திரு. சி. ரா லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 முதல் 1980 முடிய சென்னை நகரில் ' ஜேப்படி ' குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் நீதிமன்றங்களில் தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்):** (அ) 1271.

(இ) 1025.

* 194 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

' ஜேப்படி ' குற்றங்களைக் குறைப்பதற்கு காவல்துறையினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) :** நகரம் முழுவதிலும் 85 பஸ் நிறுத்துமிடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு சீர் உடை அணிந்த காவலர்களையும், சாதா உடையில் காவலர்களையும் நியமித்து ஜேப்படி திருடர்களைக் கண்காணித்துப் பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஓடும் பஸ்களில் பல்லவன் பேருந்து கழகம் ஒவ்வொரு மாதமும் அளிக்கின்ற 30 பஸ் அனுமதி சீட்டுகளை உபயோகித்து சாதா உடையில் காவல் அதிகாரிகளும், காவலர்களும் சுற்றி வருகின்றனர். பஸ்களில் பயணம் செய்யும் ஜேப்படித் திருடர்களைப் பிடிக்கவும் இத்தகைய திருட்டுகளைத் தடுக்கவும் இது பெருமளவில் உதவியாக இருக்கிறது.

இவையன்றியில் திருவிழாக்கள், கண்காட்சிகள் போன்ற அதிக அளவில் மக்கள் கூடும் இடங்களிலும் சாதா சீருடைக் காவலர்கள் சோத்து சென்று இத்தகைய குற்றங்கள் நடைபெறாமல் தடுத்து வருகின்றனர்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அரசே ஜேப்படிக் குற்றங்களைத் தடுக்கச் செய்துள்ள ஏற்பாடுகளை வரவேற்றாலும் கூட, இந்த ஜேப்படிக் குற்றங்கள் இன்னும் போதுமான அளவிலே கட்டுப்படுத்தப்படாமல், குறிப்பாக சென்னை நகரில் நெரிசல் மிகுந்த பகுதிகளில் அல்லது நெரிசல் அதிகமாக உள்ள பேருந்துகளில், இரயில்களில் ஜேப்படி மிகவும் அதிகமாக நடைபெறுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டவாறு, காவலர்களைக் குறிப்பிட்ட இடங்களில் நிறுத்தி ஜேப்படி செய்வதைத் தடுக்க ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னாலும், அந்தக் காவலர்கள் கூட தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை. ஜேப்படிக் குற்றம் செய்பவர்களுக்குக் கொடுக்கும் தண்டனை மிகவும் குறைவாக இருப்பதால், அவர்கள் அதைத் திரும்பத் திரும்பச் செய்யும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கும் தண்டனையின் அளவை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தினால், அவர்களுக்கு ஒரு எச்சரிக்கை உணர்வு ஏற்பட்டு, அந்தக் குற்றங்களில் ஈடுபடாமலிருக்க வாய்ப்பு ஏற்படும் நிலை இருப்பதால், அவர்களுக்குக் கொடுக்கும் தண்டனையின் அளவைக் கடுமையாக்கும் அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் ஆழ்ந்து பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றுதான். காவலர்களை நியமித்திருந்தாலும், இன்னும் அவர்கள் சிறப்பான முறையிலே பணியாற்ற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றார்கள். இப்போது இருக்கும் நிலைமையில், 1978-79, 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளின் எண்ணிக்கையைப் பார்த்தால், 1978 ஆம் ஆண்டு 606 வழக்குகள் ஆகவும், 1979 ஆம் ஆண்டு 717 வழக்குகளாகவும், 1980 ஆம் ஆண்டு 638 வழக்குகளாகவும், 1981 ஆம் ஆண்டு 483 வழக்குகளாகவும் ஆகி இப்போது ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. ஆகவே, இன்னும் கொஞ்சம் கண்காணிப்பு தேவை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். இந்த நிலைமைகளையெல்லாம் பரிசீலித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.





**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதிக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக ஜேப்படிக்காரர்கள் யார் யார் என்ற பட்டியலை காவல் துறையினர் மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பது உண்மை. அப்படி யார் யார் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற முழு விவரங்களும் இருப்பதால்,— அப்படி விவரங்கள் இருந்தும் சிலரிடம் ஏற்பட்டுவிட்ட பழக்கத்தின் காரணமாக அல்லது சில பல பலகீனங்களின் காரணமாக அவர்கள் குற்றம் செய்யும் போது வழக்குகளைப் பதிவு செய்யாமல் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளையும் தவிர்க்கும் அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** ஜேப்படித் திருடர்கள் யார் யார் என்பது காவல் துறையினருக்கு ஓரளவுக்குத் தெரிந்ததுதான். அவர்கள் தொடர்ந்து அந்தக் குற்றத்தைச் செய்து வந்தாலும் கூட, ஒவ்வொரு குற்றத்திற்கும் அவர்களைப் பிடித்து, கேஸ் போட்டு குற்றத்தை நிரூபித்துத்தான் தண்டனை வாங்கிக் கொடுக்க முடியுமே தவிர, வேறு வழியிலே அவர்களுக்குத் தண்டனை கொடுக்க முடியாது. தொடர்ந்து ஜேப்படிக் குற்றம் புரிந்ததற்காக தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்கூட ஒருசிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படி சிலரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வதன் மூலமாக அதைக் கண்டு மற்றவர்கள் திருந்துவார்கள், அப்படிப்பட்ட தவறுகளைச் செய்யாமல் இருப்பார்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மேலும் பொதுமக்களும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நம்முடைய ஜேப்பை நாம்தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வு வேண்டும். அவசர அவசரமாக பஸ்களிலே வரும்போது, அலுவலகங்களுக்கு வரும்போது, பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும்போது, பஸ்களிலே நெரிசல் மிகுந்து இருக்கும் நிலை உருவாகிறது. அந்த நிலைமை அவர்களுக்கு வாய்ப்பாகிவிடுகிறது. அலுவலக நேரத்தைக்கூட மாற்றியமைத்தோ, அல்லது பள்ளிக்கூடங்களை அவர்கள் விரும்பினால் 10 மணிக்குத் தொடங்கும் நிலைக்கு மாற்றி வைத்துக்கூட, இப்படிப்பட்ட நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கலாம். இருந்தாலும் நாம்தான் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஜேப்பு இருக்கும் வரையில் இந்த ஜேப்படி இருக்குமோ என்ற அளவிலே இந்த நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமைகளையெல்லாம் பார்த்து நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 1979-80 மற்றும் 1980-81-ல் இருக்கும் கணக்கைப் பார்த்தால், குற்றங்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்று சொன்ன

னார்கள். பொதுவாகவே ஜேப்படித் திருடர்களிடத்திலே பணத்தைப் பறி கொடுப்பவர்கள் பெரும்பாலும் புகார் செய்வதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்கள் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிதான். என்றாலும் கூட, இந்தக் குற்றங்கள் பெரும்பாலும் நம்முடைய ஊழியர்கள் அல்லது கம்பெனியிலே பணியாற்றுபவர்கள் சம்பளம் வாங்கும் நாட்களிலேதான் அதிகமாக நடக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையைக் கருதி, மாத இறுதியிலேயும், மாதத்தின் முதல் வாரத்தி லேயும் பஸ், இரயில் போன்றவைகளிலே போலீஸ் பந்தோபஸ்தை அதிகப் படுத்தி இந்த ஜேப்படியைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் கருத்துப்படி, சம்பளம் பெறும் நாள் என்பது மிகவும் முக்கிய மானது. நாம் பாதுகாப்பு ஏற்பாடுகளை—பந்தோபஸ்துகளை ஏற்படுத்த வேண்டும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். ஊழியர்களின் சம்பளம் என்று வரும்போது, அவர்களுக்கு 700 ரூபாய் மாதச் சம்பளம் இருக்குமானால், கிட்டத்தட்ட அவர்களின் கையிலே 400 ரூபாய்தான் வரும். ஏற்கெனவே வாங்கிய கடனுக்கான பிடித்தங்கள் எல்லாம் போக இவ்வளவு தொகை வரும்போது, அதையும் முழுவதுமாக இழந்துவிடும்போது, வெளியே சொல்வது அவமானம் என்ற நிலையிலே அவர்கள் சொல்வதில்லை. இன்னும் சிலர் பக்கத்திலே இருக்கும் கிராமங்களிலேயிருந்து தங்களுடைய பெண் ணுக்கு திருமணத்திற்குத் தேவைப்படும் பொருள்களை வாங்க வேண்டும் என்று வரும்போது கூட, அவர்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்து வைத்திருக்கும் ஒருசில பொருட்களைக்கூட இழந்துவிடுகிறார்கள். ஆகவே, நாம் இப்போது இருக்கும் கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டும். குற்றங்கள் குறைந்து வருகின்றன என்பது ஆறுதல் அளிக்கக்கூடிய செய்தி அல்ல— அதைப்பற்றி நாம் மகிழ்ச்சியடையவில்லை—குறைந்துகொண்டு வருகின்றன என்றாலும், நாம் முழுமையான கண்காணிப்பிலே கொண்டு வந்து இந்தத் தவறுகளைக் குறைக்க வேண்டும். மேலும், என்னுடைய வேண்டுகோள் நாமே இதிலே மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதுதான். மிகவும் பரந்த மனப்பான்மையோடு பிறர் நம்முடைய பொருள்களை எடுக்க மாட்டார்கள் என்ற எண்ணத்திலே நாம் இருக்கக்கூடாது. நாம் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** நாம் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜேப்பு களைப் பொறுத்தவரையில், முன்பக்கத்திலே இருக்கும் பாக்கெட்டுக்கள்





பாதுகாப்பானதா அல்லது நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வைத்து இருப்பதைப்போல பக்கவாட்டில் இருக்கும் பாக்கெட் மிகவும் பாது காப்பானதா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இதைப் பதிலாக நினைக்க வேண்டாம். பெரியார் அவர்களும், இராஜாஜி அவர்களும் உள் பாக்கெட் டிலேதான் வைப்பார்கள்.

(முற்பகல் 9-40)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** காவல் துறையைச் சார்ந்த காவலர்கள் 'மப்டி' என்று சொல்லப்படும் சாதாரண உடையில் சென்று சோதனைகளை மேற்கொள்ளுவதாகவும், இதற்காக என்றே பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருப் பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஜேப்படி நடைபெற்ற உடனே சில பகுதிகளில் உள்ள காவல் துறையினரிடம் சென்று சொன்னால்—நான் சிலரை மட்டும்தான் குறிப்பிடுகிறேன், எல்லோரையும் சொல்லவில்லை—அந்தக் காவலர்கள் புகாரையே அலட்சியப்படுத்து கிறார்கள். உடனடியாக அதன் மீது நடவடிக்கை எடுப்பதில்லை. பொது வாகவே பொதுமக்களிடம் ஒரு எண்ணம் இருக்கிறது. அதாவது சில ஜேப்படிக்காரர்களுக்கும், ஒரு சில காவலர்களுக்கும் இந்த விஷயத்தில் உடன்பாடு இருப்பதாகவும், இருவருக்கிடையே ஒத்துழைப்பு இருப்பதாகவும் எண்ணம் இருக்கிறது. அப்படிப்பட்ட கருத்து அரசுக்குத் தெரியுமா ? திருவள்ளுவர் சொன்னதைப்போல் ஒற்றர்களுக்கே ஒற்றர்களை நியமித்து இதனைக் கண்காணிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நான் ஏற்கெனவே குறிப்பிட்ட தைப்போல், நாம் கண்காணிப்பைப் பலப்படுத்த வேண்டும். இன்னும் கூடுத லான அளவுக்குக் காவலர்களை நாம் நியமிக்க வேண்டும். அவர்கள் எத்தகைய உடைகளில் சென்று கண்காணிக்க வேண்டும் என்பதை நாம் அவ்வப்போது தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு ஆணையிட்டுச் செய்ய லாம். இன்னார்தான் இத்தகைய ஜேப்படிகளை இந்தப் பகுதியில் செய் வார்கள் அல்லது செய்திருக்க முடியும், அல்லது செய்கிறார்கள் என்ற கணக்கு அல்லது விவரம் காவல் துறையினருக்குத் தெரியும். என்றாலும்கூட சில நேரங்களில் இது ஒரு வதந்தியாக, வாய்மொழிச் செய்தியாகத்தான் வருகிறது. இழப்புக்கு ஆளானவர்கள், காவல் துறையிடம் புகார் கொடுப்ப தில்லை. இழந்த தொகை வெறும் ரூ. 100 தானே அல்லது ரூ. 200 தானே என்று சிலர் கருதுகிறார்கள். இன்னும் சிலர் இதை வெளியே சொல்லி புகார் கொடுப்பதையே அவமானமாகக் கருதுகிறார்கள். இதைப்போய்

எப்படி காவல் துறையினரிடம் சொல்லுவது என்றுகூட சிலர் விட்டுவிடுகி றார்கள். அதை நாம் ஒரு குற்றமாகக் கருதி அதைத் தடுப்பதற்காக எச்ச ரிக்கையாக நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும். எதாவது ஒரு சம்பவம் நடந்து அதுபற்றி ஒரு குறிப்பிட்ட காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், என்ன நட வடிக்கை எடுத்தீர்கள் என்று நாம் கேட்க முடியும். இப்படிப்பட்ட குறைகள் ஓரிரண்டு இடங்களில் இருக்கத்தான் செய்யும். மிகச் சிறிய தொகையே ஜேப்படி செய்யப்பட்டாலும்கூட, காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுக்கும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். படித்த வர்களேகூட ரூ. 100 தானே போனால் போகிறது என்று புகார் கொடுக்காமல் விட்டுவிடுகிறார்கள். இவ்வாறு அலட்சியப்படுத்தாமல் இவைகளை சமூகக் குற்றங்கள் என்ற அடிப்படையில் பார்ப்பதோடு, இப்படிப்பட்ட ஜேப்படி செய்பவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உணர் வோடு ஒவ்வொருவரும் செயல்பட்டால்தான், வழக்குகள் முழுமையாகப் பதிவு செய்யப்பட்டு, அவைகள் கண்டு பிடிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

## *Awarding Selection Grade to Teachers under Backward Classes Department.*

*195. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that Teachers under the Backward Classes Department, have been awarded Selection Grade only from 1978; and

(b) if so, the action proposed to be taken to award Selection Grade, from the date it was awarded to the Teachers under the Education Department?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) பிற்பட்டோர் நலத் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் கல்வித் துறையில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களைப் போலவே தேர்வு நிலை வழங்கப்பட்டு வருகிறது.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே மதுரை மாவட்டத்தில் உள்ள பிற்பட்டோர் நலத் துறையைச் சார்ந்த கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகளில் பணியாற்றும் 15 பட்டதாரி ஆசிரியர்களுக்கு 1—4—1973 லிருந்தே தேர்வுநிலை வழங்கப்படவில்லை. எனவே இது





குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து அவர் களுக்கும் அதே தேதியிலிருந்து அந்தச் சலுகையை வழங்குவதற்கு முன்வரு வாரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்பட்ட ஆணைகளையொட்டி, பிற்படுத்தப்பட்ட நலத்துறைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் அதே விகிதத்தில் அதே தேதியி லிருந்தே தேர்வு நிலை வழங்கப்பட்டு விட்டது. 1—1—1971 முதல் வழங்கப் பட்டுவிட்டது. சமூக நலத்துறை அரசாணை எண் 661, நாள் 16—7—1973 கல்வித் துறையில் 31—3—1973 அரசாணை எண் 519—பிற்பட்டோர் நலத் துறை பள்ளிகளில் பணி புரியும் பி.டி. ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் (முதல் நிலை), சிறப்பாசிரியர்கள் ஆகியோருக்கு 10 ஆண்டுக்காலம் பணி முடிந்த உடன், கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட தைப்போல், 1—4—1973 முதல் தேர்வு நிலை வழங்கப்பட்டுவிட்டது. இதே போல் பிற்பட்டோர் நலத் துறைப் பள்ளிகளில் பணிபுரியும் செகண்டரி கிரேடு (இடைநிலை) ஆசிரியர்கள், ஹையர் கிரேடு (உயர்நிலை) ஆசிரியர்களுக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் அவர்கள் 10 ஆண்டுக் காலம் பணி முடிந்த உடனே கல்வித் துறையில் கொடுக்கப்பட்டதைப்போல் தேர்வு நிலை 1—4—1974 முதல் கொடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர பிற்பட்டோர் நலத் துறைப் பள்ளிகளில் பணிபுரியும் தேர்வு நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் மற்ற வர்களுக்கு அளிக்கப்பட்டதைப்போல் தேர்வு நிலை 1—4—1975 முதல் கொடுக்கப்பட்டு விட்டது. ஆகவே ஆணையின்படி கொடுக்கப்பட்டுவிட்டன. யாருக்காவது கொடுக்கப்படாத சூழ்நிலை இருக்குமானால், தனியாக அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது குறித்து நடவடிக்கை எடுக்க லாம்.

திரு. பா. ரா. தாமஸ்: பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் கள்ளர் நலப் பள்ளிகளில்—மதுரை மாவட்டத்தில் மட்டும்—பணிபுரியும் 15 பி.டி. ஆசிரியர்களில் 15 பேருக்கு, அவர்களின் பணி தேர்வாணைக் குழுவினால் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டு, கடந்த 8, 9 ஆண்டுகளாக வரன்முறைப்படுத்தப்படாத காரணத்தால், 1—4—1973 லிருந்து, அவர்கள் பட்டதாரிகளாக இருந்தும் 10 ஆண்டுக் காலம் பணி முடித்திருந்தும் தேர்வு நிலை வழங்கப்படாமல் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு—இது குறித்து அரசின் ஆய்வு தீவிரமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது—அவர்களுக்கும் 1—4—1973-லிருந்தே தேர்வு நிலை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கல்வித் துறையில் அரசுப் பள்ளிகளில் தரப்படுகிற அதே நிலை மற்ற பிற்பட்டோர் நலப் பள்ளிகளிலும், குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் தரப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், வேறு பிரச்சினைகளின் அடிப்படையில் இந்த 11 ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை இன்னும் வழங்கப்படவில்லை என்றால், அதைக் குறித்து கல்வித் துறைதான் கவனித்து தக்க முடிவெடுக்க வேண்டும். பொதுவாக இருக்கிற உத்தரவின் அடிப்படையில் எல்லோருக்கும் வழங்கப்படுகிறது. தேர்வாணைக் குழுவினுடைய தன்மையின் அடிப்படையில் அவர்கள் ஏற்றுக்கொண்டால்தான், இதைச் செய்ய முடியும் என்றால், இதுகுறித்து கல்வித் துறைதான் முடிவெடுக்க வேண்டும். கல்வித் துறையில் அப்படிச் செய்யலாம் என்றால், அவர்களுக்கும் தேர்வு நிலை வழங்குவதில் தடை ஏதும் இருக்காது.

## Tamil Nadu Raffle Tickets.

*196. Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that several lakhs of rupees that should have been paid to prize-winning tickets in Tamil Nadu Raffles, remain unpaid :

(b) if so, the reasons therefor; and

(c) whether it is a fact that the unsold tickets remaining with the Government are being excluded at the time of the Draw?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை@ சட்டமன்ற மேலவையில் வைக்கப்பட்டுள்ளது.

(உ) ஆம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இதுபோன்ற பரிசுச் சீட்டுகளுக்குப் பரிசு விழுந்த உடனே 10 நாளைக்குள் அதற்குரிய தொகையை பரிசு விழுந்தவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு வாங்கவில்லை என்றால், மீண்டும் ஒரு முறை குலுக்கல் நடத்தப்பட்டு பரிசளிக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா ?

---

@ 705 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மீண்டும் குலுக்கும் சூழ்நிலை ஏற்படாது. பரிசு விழுந்தவர்கள் வந்து தாமதத்திற்கான காரணகாரிய விளக்கங்களைச் சொல்லி பரிசுத் தொகையை வாங்கிக்கொண்டு செல்வதற்காகவே அவகாசம் தரப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: சில வழக்குகள் நீதிமன்றத்திலிருக்கிற காரணத்தாலும், உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்பாததன் காரணமாகவும் பரிசுத் தொகை தரப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரை நீதிமன்றத்திற்குச் சென்று தீர்க்கப்படாத நிலையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு? முறைப்படி விண்ணப்பம் அனுப்பாதவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ? இன்றைய தேதியில் எத்தனை பேருக்கு எவ்வளவு பரிசுத் தொகை இன்னும் வழங்கப்படாது இருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக நீதிமன்றங்களுக்குச் சிலபல வழக்குகள் போயிருக்கின்றன. தங்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று கேட்டு பலர் கோரியதன் காரணமாக தகராறு ஏற்பட்டு அதன் அடிப்படையில் பல வழக்குகள் நீதிமன்றத்திற்குப் போயிருக்கின்றன.

| | ரூபாய். |
|---|---|
| 1977-78 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்த பரிசுத் தொகை. | 1,67,80,000 |
| 1977-78 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த தொகை. | 1,16,90,380 |
| 1977-78 ஆம் ஆண்டில் வாங்கப்படாது இருக்கும் தொகை. | 50,79,670 |
| 1978-79 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்த பரிசுத் தொகை. | 1,93,20,000 |
| 1978-79 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த தொகை. | 1,82,16,750 |
| 1978-79 ஆம் ஆண்டில் வாங்கப்படாது இருக்கும் தொகை. | 11,03,250 |
| 1979-80 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்த பரிசுத் தொகை. | 2,17,90,000 |

| | |
|---|---|
| 1979-80 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த தொகை. | 1,57,92,610 |
| 1979-80 ஆம் ஆண்டில் வாங்கப்படாது இருக்கும் தொகை. | 59,97,390 |
| 1980-81 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை | 1,87,80,000 |
| 1980-81 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட மொத்த தொகை. | 1,45,23,730 |
| 1980-81 ஆம் ஆண்டு வாங்கப்படாது இருக்கும் தொகை. | 42,56,270 |

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பரிசுச் சீட்டு வாங்குவோர் அனைவரும் பத்திரிகைகளைப் பார்த்து, தங்களுடைய பரிசுச் சீட்டுகளுக்குப் பரிசு விழுந்திருக்கிறதா என்று பார்க்கக்கூடிய வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். பரிசு விழுந்த விவரத்தை அவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. பரிசு விழுந்த பிறகும்கூட, இதன் காரணமாக அவர்கள் விண்ணப்பங்களை அனுப்ப இயலாமல் இருக்கிறார்கள். எனவே பரிசுச் சீட்டின் அடிக்கட்டையில் ஏதேனும் ஒரு ஏற்பாட்டைச் செய்து, அதில் வாங்குவோரின் முகவரியைக் குறிப்பிட்டு, பரிசு விழுந்தவுடன் அரசுத் தரப்பிலிருந்தே அவர்களுக்கு ஒரு அறிவிப்பு தருகிற முறையை அரசு கொண்டு வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய செயற்குறிப்பு ஏதுமில்லை. அதனால் ஏற்படும் விளைவுகள், சிரமங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

### *Enhancement of Festival Advance to Pensioners.*

* 197. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the Festival Advance allowed to Government Servants and Teachers under Aided Managements, has been enhanced from Rs. 250 to Rs. 500; and

(*b*) if so, whether there is any proposal to enhance this amount to pensioners?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம். அரசுப் பணியாளர்களுக்கும், மானியம் பெறும் நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் பண்டிகை முன்பணம் ரூ. 500 அல்லது 2 மாத ஊதியம் இவற்றில் எது குறைவோ அந்தத் தொகைக்கு உயர்த்தப்பட்டுள்ளது

(இ) இல்லை.

(முற்பகல் 9-50)

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, அரசு நல்ல முறையில் 250 ரூபாயாக இருந்த முன்பணத்தை ரூபாய் 500 ஆக உயர்த்தியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கிற அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் விழாக் காலங்களில் தங்கள் தேவையை முன்னிட்டு முன்பணத் தொகையை உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி அனுதாபத்துடன் ஆராய்ந்து சற்று உயர்த்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்போது அவர்கள் ஓய்வூதியமாக நூறு ரூபாய் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். முன்பணமாக ரூபாய் 100 தருகிறோம். இதனால் மாதம் ஒன்றுக்கு பத்து ரூபாய் பிடிக்க வேண்டியிருக்கிறது. 200 ரூபாய் வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்றால், மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் பிடிக்க வேண்டி வரும். பிறகு 80 ரூபாய்தான் மாதம் அவர்களுக்கு ஓய்வூதியமாகப் போய்ச் சேரும். ஆகவே அவர்களுடைய நிலைமையைக் கருதித்தான் நூறு ரூபாய்க்கு மேல் பண்டிகை முன்பணம் தரவேண்டாம் என்ற கொள்கையை வைத்திருக்கிறோம். இப்போது ஓய்வூதியத்தை 125 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். ஆகவே எந்த அளவிற்கு முன் பணத்தை உயர்த்தலாம் என்பதைத் தனியாக ஆராய வேண்டும். அவர்கள் அதிகமாக வாங்குவதன் மூலம் திருப்பிக் கொடுக்க வேண்டியதை பத்து மாதங்களில் பிடிக்க வேண்டியிருப்பதால், அதிகமான தொகையைப் பிடிக்க வேண்டியிருக்கும். இதனால் இடர்ப்பாடு ஏற்படும் என்பதால், குறைவான ஓய்வூதியம் இருப்பதால், பண்டிகை முன்பணம் வழங்குவது ஓரளவிற்கு வரன்முறைப்படுத்தப்படுவது நல்லது என்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அரசாங்கம் 125 ரூபாயாக உயர்த்தியிருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விழாக் காலங்களில் பணம் வாங்க வேண்டுமென்றால், வெளியே வட்டி கொடுக்க

வேண்டியிருக்கிறது. ஆகவே அரசு 200 ரூபாயாக உயர்த்தினால், அவர்களுக்கு நலம் பயக்கும். அந்த முறையில் சற்று அனுதாபத்துடன் பரிசிலனை செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உயர்த்துவதுபற்றி இல்லை, உயர்த்தலாம். அதிகமாகப் பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதால் சங்கடம் அவர்களுக்கு ஏற்படும் என்ற நிலையில், அரசு ஆராய்ந்து வருகிறது. எந்த அளவிற்குப் பிடித்தாலும் பரவாயில்லை என்று சொன்னால், அதைப்பற்றித் தனியாக ஆராயலாம்.

## *Appointment of Government Pleaders.*

* 198. Q.—THIRU G. VASANTHA PAI: Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(a) whether it is a fact that there has been an increase in the appointments of the number of Government Pleaders in the Madras High Court;

(b) whether they have been allotted Court-wise; and

(c) whether it is a fact that the drafting of Counter Affidavits of the Government, is done by two or more Government Pleaders, who do not appear or assist the Government Pleaders, pleading in Courts?

THE HON. THIRU C. PONNAIYAN: (a) Yes. This was with reference to the increase in the volume of work to be handled.

(b) The allotment of work is subject-wise but so far as Writs are concerned, Courts-wise.

(c) One Special Government Pleader has been appointed exclusively for the preparation of draft Counter affidavits. He is being assisted by two Government Advocates.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister recall the two recent instances where the High Court came down on the Secretaries to Government for filling false affidavits? May I bring to the notice of the Hon. Minister that this contingency could be avoided, if there is co-ordination between the drafting counsel and the pleading counsel in Court? As the Hon. Minister has just now stated, I am told that it is Court-wise that the Government Pleaders are appointed and when a





case is transferred from one court to another, the new Government Advocate does not know what has happened before and instructions are not properly given to him, with the result that this sort of things happens and the Secretaries to Government come to grief. May I inform the Hon. Minister that the old system of State Counsel as well as Crown Solicitor was abolished because of this trouble ? Now it is being revived in this form.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், தற்போது நடைமுறையில் குறைபாடுகள் இல்லை. இதற்கு முன்னால் ஓராண்டுக் காலமாக தேக்க நிலையில் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை 843. ஈராண்டுக் காலமாக தேங்கிய நிலையில் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை 234 என்ற நிலை இருந்தது. அப்போது கவுண்டர் தயார் செய்ய தனியாக வழக்குரைஞர் இல்லாத நிலையில் ஆர்கியுயிங் கவுன்சலே அதைத் தயார் செய்ய வேண்டியிருந்தது. இரண்டு வருஷ காலத்தில் கிட்டத்தட்ட 294 வழக்குகளில் கவுண்டர் கூட ஃபைல் பண்ண முடியாத நிலை இருந்தது. Pendency of cases has been increasing day by day. இதனால் அரசுக்கும் பாதிப்பு, பொது மக்களுக்கும் பாதிப்பு என்பதால், 1974 ஆம் ஆண்டிலே முன்னாள் அட்வகேட்-ஜெனரல் திரு. கோவிந்தசாமிநாதன் அவர்களின் ஆலோசனையின் பேரில், அரசு சார்பிலே கவுண்டர்களைத் தயார் செய்ய வழக்குரைஞர்கள் இல்லையென்றாலும் கூட, டெபுடி செக்ரட்டரி என்ற நிலையிலே சிவில் சைடுக்கு ஒன்றும் கிரிமினல் சைடுக்கு ஒன்றும் என்று இரண்டு நீதிபதிகளைப் போட்டிருக்கிறார்கள். பிறகு அந்த முறையை மாற்றி பழைய முறையைக் கொண்டு வந்தபோது, ஆண்டுக்காண்டு நூற்றுக்கணக்கான வழக்குகள் தேங்கிய நிலையில் இருந்தன. ஆர்கியுயிங் கோர்ட்டில் கவுண்டர் தயார் செய்ய நேரம் இல்லாததால், கவுண்டர்களைத் தயார் செய்வதற்காக ஸ்பெஷல் கவர்ன்மெண்ட் பிளிடரை நியமித்திருக்கிறோம்

He is also being assisted by other Government advocates. அப்படி போட்ட பிறகு ஓராண்டுக் காலமாக தேங்கியிருந்த வழக்குகள் 843, ஈராண்டுக் காலமாகத் தேங்கியிருந்த வழக்குகள் 234 என்ற எண்ணிக்கை குறைக்கப்பட்டு, இன்றைக்கு 63 என்ற நிலை இருக்கிறது. நான்கைந்து மாதங்களில் இந்தத் தேக்க நிலை குறைக்கப்பட்டுவிட்டது. அரசு நலன் கருதி இந்த முறையை அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும். ஒரு கோர்ட்டிலிருந்து நீதிபதி மாறுவார்கள், நீதிமன்றங்கள் அப்படியேதான் இருக்கும்.

Court will continue. Judges may change. The cases would continue to be in the same court. In certain circumstances, one or two cases may be transferred from one court to another court.

அப்படி வருகிறபோது மாற்றம் செய்யப்படுகிற வழக்குகளைப் பொறுத்த வரையில் தனியாக கவர்ன்மென்ட் அட்வகேட்ஸ் இருக்கிறார்கள். அவர்கள் கவுண்டர்களைத் தயார் செய்யும் கவர்ன்மென்ட் பிளீடரிடமிருந்து சம்பந்தப்பட்ட டாக்குமெண்டுகளை வாங்கிப் படித்துத்தான் செய்தாக வேண்டும். கவுண்டர்களைத் தயார் செய்வதைப் பொறுத்தவரையில், அரசுத் தரப்பிலே இருந்து கொடுக்கிற ஆதாரங்கள், பாரா-வைஸ் ரிமார்க்ஸ்,

Also the legal points will be gone into by the Special Government Pleader who prepares the counter affidavit. He would be handing over all these thin.gs to the counsel arguing.
சீனியர் வழக்குரைஞர்களை வைத்து வழக்குகளை நடத்துவதுபோல் Advocate-General -உம் வழக்குகளை நடத்துகிறார். அவர் வழக்கை நடத்தும்போது He is not preparing the counters. Counters are prepared by other Government advocates. Thty are being handed over to the Advocate-General who in turn argues the matter.
என்ற நிலை இருக்கிறது. இந்த முறையில் வழக்குகள் தேங்கும் நிலையில் இல்லாமல் இருக்கிறது.

Pendency of cases results in a lot of loss both to the Government and the public at large
என்ற காரணமாக இந்த முறை கொண்டுவரப்பட்டது. இது நல்ல முறையில் இருந்து வருகிறது.

THIRU G. VASANTHA PAI: May I suggest that instead of one Government Pleader being appointed for preparing counters, the Government might consider the appointment of one person for each pleading counsel so that there may be as many drafting counsels as there are pleading counsels and there will be co-ordination between them? I am fully aware that there is lot of pendency because counters have not been filed in the past, but one man cannot do the work in relation to 2000 cases. Will the Government consider the appointment of as many members of the Bar as drafting counsels as there are pleading counsels now, to ensure that there is co-ordination between the pleading counsel and the drafting counsel?



THE HON. THIRU C. PONNAIYAN: Sir, there is some force in the suggestion given by the hon. Member. This would be considered by the Government.

திரு க. இராமமூர்த்தி: மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் கேட்டபோது, தப்பான, பொய்யான அஃபிடவிட் நீதிமன்றத்திலே கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அது உண்மையா? அரசாங்கம் தெரிவிக்கின்ற கருத்துக்களுக்காக வாதாடத்தான் அரசு வழக்கறிஞர்கள் இருக்கிறார்களே தவிர, பொய்யான வழக்கு மூலங்களையும், பிரமாணப் பத்திரங்களையும் கோர்ட்டில் பதிவு செய்ய அல்ல. அப்படிச் செய்த வழக்குரைஞர்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தவறான தகவலை அரசு செயலர் தான் தந்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பை அவர்கள் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அது எந்த வழக்கு என்ற சரியான தகவல் இல்லை. போதிய தகவல் இல்லாததால், மறுதரு தகவல் கூறியிருக்கலாம். இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான்
Special Government Pleader who would be often in touch with the concerned Secretaries who will be able to fully acquaint him with the facts.
என்ற புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபற்றி முழு விவரம் தற்போது இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இந்தியாவிலேயே தமிழகம்தான் வழக்குகளைத் தீர்ப்பதில் முன்னணியில் இருக்கிறது என்ற குறிப்பைப் பார்த்தேன். ஆனால் அரசு வழக்குரைஞர்கள் தமிழகத்தில் குறை என்று தெரிகிறது. ஆகவே கூடுதல் வழக்குரைஞர்களை நியமித்து வழக்குகளை விரைவில் தீர்க்கும் எண்ணம் அரசுக்கு உண்டா? மேலும் கோர்ட் நடவடிக்கைகள் முழுவதும் தமிழில் ஆகிவிட்டால், வழக்குகள் விரைவில் தீர்க்கப்பட்டுவிடும் என்ற எண்ணம் அரசுக்கு உண்டா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எந்த நீதிமன்றத்தைக் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை. அவர் சொல்வது உயர் நீதிமன்றம் என்று கருதுகிறேன். உயர் நீதிமன்றத்திற்கு தற்போது ஓரளவுக்கு அந்த எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது. நம்மிடம் தற்போது ஒரு கவர்ன்மென்ட் பிளீடர்,
Two Advocates to assist the Special Government Pleaders,
4 அடிசனல் கவர்ன்மென்ட் பிளீடர்ஸ், அப்புறம் 5 அசிஸ்டெண்ட் கவர்ன்மென்ட் பிளீடர்ஸ் என்ற அளவிலே சிவில் வழக்குகளைப் பொறுத்து இருந்து

கொண்டிருக்கிறார்கள். வழக்குரைஞர்கள் எண்ணிக்கையை ஓரளவுக்கு அதிகப்படுத்த வேண்டுமென்பதை இந்த வழக்குகளுடைய பென்டன்சி இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு அரசு அவ்வப்போது ஆராய்ந்து வருகிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதையும் கருத்தில் கொண்டு ஆராயும்.

தமிழைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். கிரிமினல் நீதிமன்றங்களிலே மட்டுமே தமிழ் தீர்ப்பு மொழியாக இருக்கிறது. தமிழிலே தற்போது நடப்பு ஆண்டிலே சிவில் நீதிமன்றங்களிலேயும் அதைக் கொண்டு வந்திருக்கிறோம். தமிழ் மொழியினை எல்லா இடத்திலும் கொண்டு வருவதால், பென்டன்சி ஆஃப் கேசஸ் குறைந்துவிடும் என்று அரசு கருதவில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. தற்போதுகூட 108 ஸ்பெஷல் அடிஷனல் அசிஸ்டென்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்ஸ், கிரேட் 2, என்று அமைத்து வேலைகள் துரிதமாக நடத்துவதற்கு வழி செய்திருக்கிறோம். புரோகிபிஷன் கேஸ்களை விசாரிக்க 21 நீதிமன்றங்களையும், 21 அசிஸ்ட்டேண்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்களையும் அமைத்து, பணிகளை துரிதமாக முடிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## *Water Supply for Tindivanam Municipality.*

* 199. *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the water-supply for Tindivanam Municipality is inadequate; and

(b) if so, the action taken in this regard?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) ஆம்.

(இ) குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்யும் ஆய்வு வேலைகள், நடைபெற்று வருகின்றன.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தற்போது திண்டிவனத்திற்குக் குடிநீர் பற்றாக்குறை இருந்து கொண்டிருப்பதற்குக் காரணம் இரட்டணையிலிருந்து இன்னொரு கிணற்றுக்கு மின்சார இணைப்புத் தந்து தண்ணீர் எடுக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி முயற்சி செய்யப்பட்டதா ? அதில் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப் படாமல் அங்கே இருப்பவர்கள் யாராவது தடுத்தார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1975-லேகூட அதிகமாகத் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் கோடைக்காலத்தில் ஆற்றுப்படுகையில் நீர் மட்டம் கீழே போய்விடுகிறது. அத்தோடு நீர் ஊற்றுக் கிணற்றில் நீரின் அளவும் குறைந்துவிடுகிறது. அதை மனதில் வைத்துக்கொண்டு 1978 பிப்ரவரி மாதம் 8 ஆம் தேதி ரூ. 22 ஆயிரம் கொடுத்து ஆய்வுப் பணிகள் செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அது முடிந்தபிறகு ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அறிக்கை தயாரானதும், அரசின் ஒப்புதலுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும். அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற புதிய திட்டங்களை விரைவில் நடைமுறைப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். முழு விவரம் அமைச்சர் அவர்களுக்கு வரவில்லை என்று நினைக்கிறேன். இரட்டணையிலிருந்து பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய தண்ணீரை மேலும் அதிகமாகப் பெறுவதற்கு ஏற்ற வகையில் கூடுதல் மின் இணைப்புக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டும் அங்கே இருக்கின்ற ஒரு பெரிய மனிதர் குறுக்கிட்டதன் விளைவாக சட்டத்திற்குப் புறம்பாக அவரை சமாதானப்படுத்தாமல் இந்த வேலையில் இறங்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிலேயிருந்து எல்லா அதிகாரிகளும் தலையிட்டதன் விளைவாக, அந்த மின் இணைப்பு கொடுப்பது தவிர்க்கப்பட்டிருக்கிறது. அதனால் கடந்த இரண்டு மாதத்திற்கு மேலாக அந்தப் பகுதிகளில், திண்டிவனத்தில் நகர்பகுதியிலே வறட்சியாக, பஞ்சமாக, குடிதண்ணீர் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதைப்பற்றித் தகவல் வரவில்லை என்றால், அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தொண்டியாற்றில் இக்குடிநீர் திட்டத்தின் தலைமையிடம் இரட்டணை என்ற இடத்தில் இருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் 'ஆய்வு நடைபெற்றுவருகின்றது' என்பதுதான். இடையிலே ஏதோ நடந்ததாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். தடைகள் ஏற்படுவதாகவும், அதற்கு சமாதானப் படுத்துவது என்றெல்லாம் சொன்னார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** அந்தப் பெரிய மனிதரை சமாதானம் செய்யாமல் தண்ணீர் கொடுக்க வேண்டாம், மின் இணைப்பு கொடுக்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிலிருந்து எல்லோரும் தலையிடுவதனாலே அப்படியே அது நிற்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அதுபற்றி தகவல் என்னிடத்தில் இல்லை. எல்லாம் சுமுகமாக இருப்பதுபோலத்தான் விவரக் குறிப்பு இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதைக் கொண்டு அதைப்பற்றி உடனடியாக விசாரித்து ஆவன செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## குளத்துசேரியில் அரிசன குடியிருப்புக்கு கையகப்படுத்தப்பட்ட நிலம்

* **200 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், குளத்து சேரிக்கு மேல்பக்கம் அரிசன குடியிருப்புக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு ஒரு வருடமாகியும் நிலப்பட்டா வழங்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை ?

(உ) குடியிருப்புக்குரிய விலை அரிசன மக்கள் செலுத்தி எவ்வளவு காலமாகிறது ?

(எ) உடனடி நிலம் சரி செய்து தரப்பட வேண்டுமென்று மக்களின் சார்பில் முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஐ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டம், வடிவீஸ்வரம் கிராமம் (நாகர்கோவில் நகரம்) டி.எஸ். என் 12/9-13, 12/9-14, 12/9-16, 12/9-17 (12/9—13—2-35-500 ஏக்கர்) அவார்டு என் 3/79-80, 3—9—1979-ன்படி நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. நிலப்பட்டா இன்னும் வழங்கப்படவில்லை.

(இ) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர் மேற்படி நிலத்திற்கு மனைப்பிரிவை Lay out திருநெல்வேலி நகர புனரமைப்பு அதிகாரிக்கு 8—6—1979-ல் அனுப்பினார். அவர் எடுத்துக்கூறிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து மாவட்ட ஆட்சியாளர் 23—2—1980, 18—8—1980, 24—4—1981 ஆகிய தேதிகளில் திருப்பியும் அனுப்பியுள்ளார். ஒப்புதல் மாவட்ட ஆட்சியரால் எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) நிலச்சொந்தக்காரர்கள் கிரயத் தொகையைப் பெற ஆட்சேபணை தெரிவித்ததால் நிலக்கிரயமான ரூ. 19,233.75 நாகர்கோவில் சப்-கோர்ட்டில் 17—10—1978-ல் செலுத்தப்பட்டிருக்கிறது.

(எ) ஆம்.



(ஐ) மனைப்பிரிவு அனுமதி கிடைக்க கடைசியாக நில விபரங்களை 24—4—1981-ல் மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி புனரமைப்பு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அவர் கடைசியாக 24—11—1981-ல் மாவட்ட ஆட்சியரால் நினைவூட்டப்பட்டுள்ளார். அவரது அனுமதி மாவட்ட ஆட்சியரால் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகும் பட்டா வழங்குவதிலே மூன்று ஆண்டுக் காலம் தாமதம் ஏன் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் ? மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும், அவர்களுக்குக் கீழே இருக்கக்கூடிய அதிகாரிகளிடத்திலும் இந்தக் கடிதப் போக்குவரத்து அளவிலேயே இந்த விஷயம் இருக்குமானால், ஆர்ஜிதம் செய்வதிலே தாமதமிருக்குமானால், ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இதில் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருந்தும்கூட, பட்டா வழங்க மட்டும் ஏன் மூன்று ஆண்டுக்காலம் எடுத்துக்கொள்ள வேண்டும் ? உடனடியாக அரசாங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே எங்கே நிலம் ஆர்ஜிதம் செய்திருந்தாலும், ஆறு மாதத்திற் குள்ளாகப் பட்டா வழங்கப்பட வேண்டும் என்று வைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ள குறைகளைப் போக்க முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** நான் ஏற்கெனவே பதிலிலே விடை அளித்திருப்பதுபோல, புனர் அமைப்பு அதிகாரி, டவுன் பிளானிங் ஆபிசரிடமிருந்து அறிக்கை வருவதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்திருப்பது போன்று பிரச்சினைகள் எங்கெங்கே உள்ளன என்பதைப் பற்றி ஆராய்ந்து அதன் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கருத்துச்சொல்கின்ற பகுதியைப் பொறுத்து, விரைவில் பட்டாக்கள் வழங்கப் படும். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலே இதுபோன்ற பிரச்சினைகள் எங்கெங்கு உள்ளன என்பதைப்பற்றி ஆராய்ந்து ஆவன செய்ய அரசு சித்தமாக இருக்கிறது.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எழுந்தார்கள்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் முடித்துவிடுகிறேன். அதற்குப் பிறகு பேசுங்கள். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### ஓர் உறுப்பினருக்குத் தொலைபேசியில் வந்த மிரட்டல் குறித்து.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னால் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். கடந்த 20 நாட்களாக எனக்கு ஒவ்வொரு நாளும் காலையிலே சில நாட்களிலும் பகல் முழுமையும் பல நேரங்களிலே மிரட்டுகின்ற அளவிலே மிகவும் கேவலமான வார்த்தைகளைப் போனிலே சொல்லி யாராவது திட்டிக்கொண்டிருக்கின்ற நிலை இருந்துகொண்டிருந்தது. யார் என்றால் பெயரையும் சொல்வதில்லை. இடமும் தெரியவில்லை. இதற்குப் பிறகு பொறுக்க முடியாது, இப்போது வீட்டில் யாரும் ஆண்கள் இல்லாமல் பெண்கள் மட்டும் இருக்கின்ற காரணத்தினால், தகவல் கொடுப்பதற்கு போலீஸ் கமிஷனர் ஆபிசிற்கு போன் செய்தேன். போலிஸ் டிமாண்ட் இருப்பதால், அங்கே யாரும் இல்லாத நிலையிலே, என்னுடைய கம்ப்ளெயிண்ட்டை எடுத்துக்கொள்ள முடியவில்லை. அதற்கு மாறாக 100 எண்ணுக்கு அந்தத் தகவலைக் கொடுக்கும்படி எனக்குத் தெரிவித்தார்கள். அங்கே போன் செய்து 100 எண்ணில் கம்ப்ளெயிண்ட் எடுத்துக்கொண்ட பிறகு, ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு கமிஷனர் அவர்கள் ஆபிசுக்குப் போன் செய்து கமிஷனரை அழைத்துச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். இங்கே கம்ப்ளெயிண்ட் எடுத்துக் கொள்வதற்குக்கூட முடியவில்லை. பொறுப்பான இடத்தில் கம்ப்ளெயிண்ட் கொடுத்த பிறகும், அதைக்கூட எடுத்துக்கொள்ளாத நிலையிலே பதில்தான் வந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள்தான் பாதுகாப்புத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவருடைய தொலைபேசி எண்ணைக் கொடுத்தால், கண்டிப்பாக அதைக் கண்டுபிடிப்பதில் பிரச்சினை இராது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லி, நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### 22—3—1982 அன்று எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வினாத்தாள் தவறாகக் கொடுக்கப்பட்டது குறித்து

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம், ஆற்காடு நா. வீராசாமி ஆகியோர் சென்னையில் **22—3—1982 அன்று எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வினாத்தாள் தவறுதலாகக்**



**கொடுக்கப்பட்டது குறித்து** ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதிகளின்கீழ் வருகிறதென்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, சென்னை, திருவல்லிக்கேணி, முஸ்லீம் மேல் நிலைப் பள்ளியிலே எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு நேற்று முதல் நடைபெறுகிறது. மாநிலம் பூராவும் தேர்வு நடைபெறும் அடிப்படையில், அங்கேயும் நடத்தப்படுகிறது. அந்தத் தேர்விலே 23 ஆம் தேதி—இன்று—வழங்க வேண்டிய வினாத் தாள்களை நேற்று வழங்கியிருக்கிறார்கள். அப்படி வழங்கியதற்குப் பின்னாலே, வழங்கப்பட்டது தவறு என்று மாணவர்கள் படித்து அறிந்த பிறகு, அந்தத் தாள்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நேற்று என்ன வழங்க வேண்டுமோ அதை—தமிழ் இரண்டாம் தாள் முதலில் வழங்கியிருக்கிறார்கள், அதற்குப் பிறகு தமிழ் முதல் தாள் வழங்கியிருக்கிறார்கள். தேர்வு நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பிறகு அந்த மாணவர்கள் அதைப் படித்துவிட்டார்கள் என்பதாலே மாணவர்கள் 150 பேர்களும், ஆசிரியர்கள் 75 பேர்களும்—பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள்—வெளியிலே செல்லக்கூடாது என்று சொல்லி, வகுப்பறையிலேயே அடைத்துவைத்து, அந்தப் பள்ளியிலேயே காவல் துறையினரால் சிறை வைக்கப்பட்டது போன்ற சூழ்நிலையை ஏற்படுத்தி, அவர்கள் வெளியிலே சென்றுவரக்கூட வாய்ப்பு இல்லாமல் செய்திருக்கிறார்கள். அங்கேயே உணவு அளிக்கப்பட்டிருக்கிறது. போதிய கழிப்பறை வசதி இல்லாததால், பக்கத்திலுள்ள முருகேசன் மேன்சன் போன்ற இடங்களுக்கு, கால்வர் கைதியை அழைத்துவருவதுபோல, காவலர்களோடு மாணவர்களை அழைத்துவரும் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்தத் தகவல்களை எல்லாம் சொல்லுவது முறைதானா ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இன்றைக்குத்தான் தேர்வு நடக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சன்னல் வழியாகப் போட்டார்கள், அதைப் பார்த்தார்கள் என்பது வேறு விஷயம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவரவர்களே, மாண்புமிகு * உறுப்பினர் அவர்கள் ஓர் ஆசிரியர் பிரதிநிதி. இதிலே சில குறைபாடுகள் இருக்கலாம். நடவடிக்கை எடுத்து, அரசு அறிக்கை தர இருக்கிறது.

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[திரு. கா. இராசா முகமது] [1982 மார்ச் 23

பொது நன்மை கருதி, வினாத்தாள் பற்றிக் கூறியதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்குவது நல்லது. பொதுவாக, என்ன நடந்தது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னால் நல்லது. அரசு மீது குற்றம் சொல்லுகிறார்கள் என்று சொல்லவில்லை. பொது நன்மை கருதிச் சொன்னால் நல்லது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாத்தாள் வெளியானது பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன தகவல்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். பத்திரிகையிலும் அது வெளி வர வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் முதல்நாள் தேர்வுக்குச் சென்ற மாணவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படாமல் இருந்தார்கள், அதனால் ஏற்பட்ட சில நிலைமைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள் பொது நன்மை கருதி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எப்படி இது அந்த விதியின்கீழ் வருகிறதென்பதை மாத்திரம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்ல வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அமைச்சரவர்கள், ஆசிரியர் பிரதிநிதி என்று சொல்லும்போது, ஆசிரியர்களைக் குறை சொல்லுவதற்காக இதைச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட எண்ணத்தில் சொல்லவில்லை. பொதுவாக ரகசியமாக நடைபெற வேண்டிய தேர்வு இது. முறைகேடு இதில் ஏற்படக்கூடாது. நாட்டு மக்களுக்கு நம்பிக்கை வேண்டும். அந்த முறையில் இருப்பதற்கு மாறாக, இன்று நடந்திருக்கிறது. அதுமட்டுமல்ல. கல்விக் கொள்கைக் குறிப்பில் பேசும்போது குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். கல்வித் துறை உறங்கிக் கொண்டிருக்கிறது, எழுப்பி விடுங்கள் என்று சொன்னேன். அந்த உறக்கத்தின் காரணமாக முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அனுப்பியவர்கள் தவறா, ‘ பேக் ’ பண்ணியவர்கள் தவறா, விநியோகித்தவர்கள் தவறா—இதெல்லாம் இருக்கிறது. ஆகவே அதிகாரிகள் மட்டத்தில் அந்த இலாக்காவிலே தவறுகள் நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தவிர்க்க என்ன செய்யலாமென்பதை ஆராய்ந்து, இப்படிப்பட்ட முறைகேடுகள் பின்னால் நடக்கக்கூடாது என்பதற்காகவும், மாநிலம் பூராவும் நடக்கும் தேர்வு இது, இதனால் அரசுக்கு அவப் பெயர் உண்டாகும் என்பதாலும், இதுபற்றி விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 23]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதுபோல, நேற்றைய தினம் சென்னையில், திருவல்லிக்கேணி பகுதியில் இருக்கக்கூடிய முஸ்லீம் உயர் நிலைப் பள்ளியில் 150 மாணவர்கள் தேர்வு எழுத உட்கார்ந்த நேரத்தில் 23 ஆம் தேதி கொடுக்க வேண்டிய வினாத்தாள்களைக் கொடுத்ததோடு மட்டுமல்ல, அப்படிக் கொடுத்து ஒரு மணி நேரம் கழித்து தவறாகக் கொடுத்து விட்டோமென்று உணர்ந்து அங்கே பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் மற்றும் தேர்வாளர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி, எல்லாக் கதவுகளையும் மூடி, மாணவர்கள் நேற்றையதினம் எழுத வேண்டிய வினாத் தாளைக் கொடுத்து எழுதச் சொல்லி, அதற்குப் பிறகு வீட்டுக்கு அனுப்பாமல், பள்ளியிலேயே அடைத்து வைத்தார்கள். பள்ளிக்குச் சென்ற மாணவர்கள் இன்னும் வீடு திரும்பவில்லையே என்று பெற்றோர்கள் பள்ளிக்கெதிரே முகாமிட, அவர்கள் முகாமிட்டதில் எங்கே கலகம் விளைவிக்கப்படுமோ என்று எண்ணி, ஏராளமான காவல் துறையினர் குவிக்கப்பட்டு, அதற்குப் பிறகு மாணவர்கள் கதி என்னவாயிற்றோ என்று பதட்ட நிலை ஏற்பட்டபோது, மாணவர்களுக்குப் பகல் உணவு அளிக்கப்பட்டது என்றும், இரவு உணவு இங்கேதான் அளிக்கப்படுமென்றும், அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட மாட்டார்கள் என்றும் கருத்து சொன்ன நேரத்தில், பெற்றோர்கள் பதறிப் போயிருக்கிறார்கள். இன்றைக்கு வீட்டுக்கு அனுப்பாவிட்டால், 23 ஆம் தேதி எழுத வேண்டிய பாடங்களைப் படிக்க முடியாதே என்று சொன்னபோது, அதற்கான பாடப் புத்தகங்களைக் கடைகளிலிருந்து வாங்கிக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலுங்கூட புதிய பாடப் புத்தகங்களை வைத்துக்கொண்டு எவ்வளவு சிறந்த மாணவனும் படிக்க முடியாது. ஒரு ஆண்டு படித்த புத்தகத்தில்தான் நோட்ஸ், குறிப்புகள் எழுதியிருப்பார்கள். அந்தப் புத்தகங்களைப் பெற்றோர்கள் கொடுத்த நேரத்தில் அதை அனுமதிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஒவ்வொரு பெற்றோருக்கும்தான் கஷ்டம் தெரியும். சில தாய்மார்கள் அந்தப் பள்ளியின் எதிரிலே கண்ணீரும் கம்பலையுமாய் அழுது கொண்டிருக்கிறார்கள். ‘மாணவர்கள் எதிர்காலம் பாழடைந்துவிட்டது என்பதோடு பள்ளியில் கைதி போல ‘ போலீசார் புடைசூழ, உறுப்பினரவர்கள் குறிப்பிட்டது போல, அன்றாடக் காலைக் கடன்களை முடிக்க முடியாத நிலைக்கு மாணவர்கள் ஆளாக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கது. இப்படிப்பட்ட நிலை உருவாக்கப்பட்டதற்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடித்து உரியவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசுத் தேர்வுக்கு ஓர் ஆணையர் இருக்கிறார். அவர் பொறுப்பில் உள்ள இலாக்காவில் இப்படிப்பட்ட தவறு எப்படி நடந்தது என்பதைக் கண்டறிந்து, மாணவர்கள் தங்கள் 16 ஆம் வயதில் ஒரு நாள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டது போன்ற உணர்வைப் பெற வேண்டிய இக்கட்டான சூழ்நிலையை உண்டாக்கியதால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் எதிர்காலத்தில் உருவாகாமல் இருக்க, இந்த அவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவரவர்களே, திருவல்லிக்கேணி முஸ்லிம் உயர்நிலைப் பள்ளியில் 129 மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி தமிழ் தேர்வு எழுதுகிறார்கள். 22—3—1982 ஆம் தேதி தமிழ் முதல் தாளுக்குப் பதிலாக இரண்டாம் தாளை மாணவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். இந்தத் தவறை உடனே நிவர்த்தி செய்து சரியான முதல்தாள் 15 நிமிடங்களுக்குள் கொடுக்கப்பட்டது. இந்தத் தவறுக்குப் பொறுப்பான டிப்பார்ட்மென்டல் ஆபீசர் திரு. பெருமாள், தேர்வு இயக்ககக் கண்காணிப்பாளர்கள் திருமதி கிருஷ்ணவேணி, திருமதி ஹில்டாஜான் இருவரும் சஸ்பென்ஷனில் வைக்கப்பட்டுள்ளார்கள். இதில் சம்பந்தப்பட்ட மற்றவர்களையும் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டாம் தாள் சில மாணவர்களுக்குத் தெரிந்துவிட்டதால், மாணவர்களை வெளியே அனுப்பினால், பேப்பர் பரவலாக 'அவுட்' ஆகிவிடக் கூடாதே என்ற நல்லெண்ணத்தில் 129 மாணவர்களுக்கும் பள்ளியிலேயே 22 ஆம் தேதி இரவு தங்க வைத்து, அவர்களுக்குச் சாப்பாடு மற்ற வசதிகள் செய்யப்பட்டு வைக்கப்பட்டார்கள். 22—3—1982 இரவு முழுவதும் தேர்வுத் துறை அலுவலர்களும் பள்ளிக் கல்வித் துறை அலுவலர்களும் பள்ளியிலேயே இருந்தார்கள். மாணவர்களின் பெற்றோர்களும் பள்ளிக்கு வந்து மாணவர்களை மகிழ்ச்சியுடன் பார்த்துச் சென்றார்கள். இன்று அதாவது 23—3—1982 காலை 10 மணிக்கு இரண்டாம் தாளில் தேர்வு எழுதியவுடன் அவர்கள் அனைவரும் வெளியே அனுப்பப்படுவார்கள்.

மாநிலம் முழுவதும் 3.2 இலட்சம் மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி தேர்வு எழுதுவதால், இம்மாணவர்களை திருவல்லிக்கேணி முஸ்லிம் உயர் நிலைப் பள்ளியிலிருந்து 22—3—1982 பிற்பகல் வெளியே அனுப்பியிருந்தால் தமிழ் இரண்டாம் தாள் 'அவுட்' ஆகி மறு தேர்வு (ரீ எக்ஸாமினேஷன்) நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். இந்த மாதிரி மறு தேர்வு நடத்துவது



மிகவும் கடினம். மாநிலம் முழுவதிலுமுள்ள 3.2 இலட்சம் மாணவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருப்பார்கள். திருவல்லிக்கேணி முஸ்லிம் உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கோ பெற்றோர்களுக்கோ இதனால் பெரும் பாதிப்பு ஒன்றுமில்லை. மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் வேளா வேளைக்கு சாப்பாடு, டிபன், காபி சப்ளை செய்யப்பட்டதோடு அல்லாமல், 23—3—1982 அன்று நடைபெறும் தமிழ் இரண்டாம் தாள் தேர்வை எழுதுவதற்காக 'தமிழ் இலக்கணப் புத்தகம்' ஒன்றும் ஒவ்வொரு மாணவருக்கும் இலவசமாக 'சப்ளை' செய்யப்பட்டது. இந்த நடவடிக்கை மாநிலம் முழுவதிலும் உள்ள 3.2 இலட்சம் மாணவர்கள் மறு தேர்வு எழுதும் தொல்லைக்கு உட்படுத்தப் படுவதைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையே ஆகும். எனவே, இதுகுறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதுபற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான என் அனுமதியை மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

**அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் நியமனம் குறித்து.**

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"அரசியலமைப்புச் சட்டத்தின் 50 ஆம் பிரிவிற்கு முரணாக நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் நியமனம் குறித்து".

**மாண்மிகு. திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, அவைமுன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** அரசியலமைப்புச் சட்டத்தின் 50 ஆம் பிரிவில்

"The State shall separate the Judiciary from the Executive in the public services"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறைப்படி தான் நிர்வாகத் துறை

@ 705 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

களிலிருந்து இரண்டாம் பிரிவு மாஜிஸ்டிரேட்டுகளை நியமித்திருக்கிறார்கள். ஏற்கெனவே 55 விழுக்காடு டைரக்ட் ரெக்ரூட்மெண்ட்-க்கு என்றும் 45 விழுக்காடு நிர்வாகத் துறையிலிருப்பவர்களுக்கு என்றும் விதிமுறை இருப்பது உண்மைதானா ? அது பின்பற்றப்படவில்லை என்பது உண்மை தானா ? அதுபற்றி அரசினர் என்ன கூறுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** 11:9 என்கிற முறை தான் இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இருக்கின்ற விதியும் இதுதான். 1965 ஆம் ஆண்டிலிருந்து இந்த 11 : 9 என்ற முறை பின்பற்றப்படவில்லை. நேரடியாக சர்விசில் இருந்தவர்களை, வெட்டிரினரி, பி.டபிள்யூ., ஹெல்த் போன்ற துறையில் இருந்தவர்களை, தபாலில் பட்டப் படிப்பு படித்து முடித்தவர்களையெல்லாம்கூட தேர்ந்தெடுத்து இந்தப் பதவியில் அமர்த்தி விட்டார்கள். இது உண்மைதான். இதைத் திருத்தியமைக்க இந்த அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தத் தேர்வைப் பொறுத்த வரையில் எக்சிகியூட்டிவ் வர்சஸ் ஜுடிஷியரி என்பதல்ல பிரச்சினை. உயர் நீதிமன்றம் தான் இதைச் செய்திருக்கிறது. இதை அரசு செய்யவில்லை. ஆனால் ஜுடிஷியல் துறையில் பணியாற்றுகின்ற கிளார்க் போன்றவர்களைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். வழக்கறிஞர்களாக உள்ளவர்களை மட்டும் பார்த்துத் தேர்ந்தெடுக்கவில்லை. அதையும் இரண்டு நீதிபதிகள் அடங்கிய ஒரு குழு தான் தேர்ந்தெடுத்திருக்கிறது. இப்போது 5 : 1 என்கிற அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்க வேண்டும், அந்த ஒன்றையும் கூட சட்டத் துறையிலிருந்து தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற விதி முறையைக் கொண்டு வந்திருக்கிறோம்.

திரு. பா. ரா. தாமஸ் : ஒருங்கிணைந்த திட்டம் என்கிற முறையில் 5 : 1 என்கிற விகிதத்தில் நடைமுறைப்படுத்தப்போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது எப்போது அமுலுக்கு வரும் ? விரைவில் அமுலுக்கு வருமா ? இந்த விகிதாசாரத்தை அமுலுக்குக் கொண்டுவரும்போது, ஏற்கெனவே தற்காலிகமாக இருப்பவர்கள் மாற்றப் படுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்காலிகமாக 1965 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டு, 15 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் பெற்றவர்களை நாம் திருப்பி அனுப்ப முடியாது. அவர்கள் பாரில் இருக்கிற வழக்கறிஞர்களை விட அதிகமாக அனுபவம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அப்படிப் பட்டவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள். ஆனால் மேற்கொண்டு 150 பேரை நியமிக்க இருக்கிறோம். அப்படி நியமிக்கும்போது, இந்த 5 : 1 என்கிற முறை





பின்பற்றப்படும். Integration of Judiciary என்ற திட்டத்தின்கீழ் a Sub-Magistrate would be elevated to the cadre of First-Class Magistrate and he will be designated as District Munsif-*cum*-Judicial Magistrate. He will be enabled to try both First and Second Class offences as well as Civl side cases,

என்கிற முறையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

5. அரசின் தீர்மானங்கள்.

(1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் ? (1) ஒழுங்கு

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1982 மார்ச் 23

முறை விதிக்கிணங்க, 1983 ஆம் நிதியாண்டிற்கான உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன் :—

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும், நேரமும் | 25—3—1982 காலை 10-30 மணி |
| வேட்பு மனுக்கள் சரி பார்ப்பதற்கான நாளும், நேரமும் | 25—3—1982 காலை 11-30 மணி |
| வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும் | 27—3—1982 காலை 10-30 மணி |

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

(2) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும் "

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி 1982-83 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2 (1) ஒழுங்கு



1982 மார்ச் 23]

முறை விதிக்கிணங்க, 1982-83 ஆம் நிதியாண்டிற்கான அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன் :—

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும் நேரமும். | 25—3—1982 காலை 10-30 மணி |
| வேட்பு மனுக்கள் சரி பார்ப்பதற்கான நாளும் நேரமும். | 25—3—1982 காலை 11-30 மணி |
| வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும் நேரமும். | 27—3—1982 காலை 10-30 மணி |

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஆறு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

6. பிற்பட்டோர் மற்றும் ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது விவாதம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'பிற்பட்டோர் மற்றும் ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறை' குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின்மீது பொதுவான விவாதம் நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீதும் கருத்துக்களைச் சொல்லலாம். தனித் தனியாக முன்மொழியப்பட்டு, தனித் தனியாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் பதிலளிக்கப்படும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள பிற்பட்டோர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள பிற்பட்டோர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

---

@ 707 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

திரு. ஏ. ஜே. தாஸ் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள், முதலில் 1982-83 ஆம் ஆண்டுக்கான ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் துறை சம்பந்தப்பட்ட ஒன்றிரண்டு கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டு மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால், ஆதி திராவிடர்களில் 21.81 சதவிகிதத்தினரும், பழங்குடியினரில் 9.02 சதவிகிதத்தினரும் கல்வி அறிவு பெற்றவர்கள் ஆவார்கள். இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைப் பொறுத்தவரையில், 30 சதவிகிதத்தினர் கூட இன்னும் கல்வி அறிவு பெறவில்லை. நாம் விடுதலை அடைந்து 35 ஆண்டுகள் ஆகியும் கூட ஆதி திராவிடர்களில் பாதித் தொகைக்கு மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள், கல்வி வசதிகள், பள்ளி வசதிகள் போன்றவற்றைக் கூட இன்னும் முழுமையாகச் செய்து கொடுக்க முடியவில்லை. ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டிருந்த சமுதாயம் இன்றைக்கு பல வகைகளிலும் 18 சதவிகித வாய்ப்பை, நன்மையைப் பெற அரசு வழிவகை செய்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10—30)

தமிழக அரசு ஏறக்குறைய 25 சதவிகிதம் அரிசனங்கள் இந்த நன்மையைப் பெற வகை செய்ய வேண்டும். 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 114.04 கோடி பொதுத் துறையிலேயிருந்து ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்காக எடுத்துக் கொள்ளப்படும் என்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன். பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த ' ஸ்டேட் வெல்ஃபேர் கமிட்டி ' இப்போது இயங்க வில்லை, அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 18 சதவிகிதம் வேலைவாய்ப்புக்

@ 750 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



களைப் பொறுத்தவரையில், இன்னும் சில இலாக்காக்களில் அந்த இடங்கள் பூர்த்திசெய்யப்படாமல் இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ' ஹரிஜன் இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் சென்டர் ' ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட வேண்டும். சில இடங்களில் இன்றையதினம் பொதுவாக இருந்தாலும், அவைகளில் சேர்ந்து படிப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஹரிஜன் இன்டஸ்ட்டிரியல் டிரெயினிங் சென்டர்களை ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அமைத்தால், அவ்வாறு அமைக்கப்படும் அந்த சென்டர்களுக்கு ஹரிஜன மாணவர்கள் அதிகமாகச் செல்ல முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி அளிக்கும் வகையில் இருக்கும் திட்டத்தோடு அவர்களுக்குத் தொழில் கல்வியும் இணைத்து அளிக்க வேண்டும். இப்போது இருக்கும் ஹரிஜன் ஹௌசிங் கார்ப்பரேஷன் விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதற்கு சென்னையிலேயும் ஒரு அலுவலகம் இருப்பதாகத் தெரிகிறது. ஹரிஜன் ஹௌசிங் கார்ப்பரேஷன் விழுப்புரத்திலே இருப்பதால், அங்கே யிருந்து தினமும் அதிகாரிகள் இங்கே சென்னைக்கு வரும் நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக பணம் வீண் விரயம் செய்யப்படுகிறது. ஹரிஜனங்களின் நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் இந்த அதிகாரி களின் போக்குவரத்துக்குத்தான் பயன்படும் நிலைமை இருக்கிறதே தவிர, மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் இல்லை என்பதைத் தெரிவித்து, இந்த நிலைமைகளைச் சீர்திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாணவ-மாணவியருக்கு வழங்கப்படும் சீருடையைப் பொறுத்தவரையில், ஆண்டு ஒன்றுக்கு இரண்டு சீருடைகளைத்தான் வழங்கு கின்றார்கள். இரண்டு சீருடைகள் மட்டும் கொடுப்பதால், அவைகள் ஒரு வருஷத்திற்குள்ளாகவே கிழிந்து போய்விடுகின்றன. அப்படி கிழிந்த உடையோடு அவர்கள் பள்ளிக்குப் போகும்போது, அதைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருக்கிறது. ஆகவே, ஒரு ஆண்டுக்குக் குறைந்தது நான்கு ஜதை சீருடைகளையாவது கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தைகளுக்கு நண்பகல் உணவு கொடுக்கும் பணிக்காக இப்போது 35 முதல் 40 பைசா கொடுக்கிறோம். குழந்தைகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்குச் சத்துணவு கொடுக்க வேண்டும் என்றெல்லாம் நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த குழந்தை

களுக்குக் குறைந்த செலவிலே கொடுக்கும் பகல் உணவு மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, அதற்கு என்று கொடுக்கும் பணத்தை அதிகப்படுத்தி அவர்களுக்கு நல்ல முறையில் பகல் உணவு கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு வருஷமும் பள்ளிகள் திறந்தவுடனேயே பாடப் புத்தகங்களைக் கொடுக்க வேண்டும் என்று நாம் சொல்லிவருகிறோம். அப்படி பாடப் புத்தகங்கள் கொடுப்பதற்காக நாம் ஆண்டுதோறும் பண ஒதுக்கீடும் செய்கிறோம் என்றெல்லாம் சொல்கிறோமேயொழிய, அந்த ஏழைக் குழந்தைகளுக்குக் குறித்த நேரத்தில், அதாவது பள்ளிக்கூடங்கள் திறந்தவுடனேயே, அந்தப் புத்தகங்கள் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, அவர்கள் தங்களுடைய பெற்றோர்களைத் துன்புறுத்தும் நிலை தான் இருக்கிறது. வாத்தியார் அவர்கள் "புத்தகம் இல்லாமல் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டாம் என்று எங்களிடம் சொல்லியிருக்கிறார், ஆகவே, உடனடியாக புத்தகம் வாங்கித் தர வேண்டும்" என்று அந்தப் பிள்ளைகள் பெற்றோர்களைத் துன்புறுத்து கிறார்கள். ஆகவே, பள்ளிக்கூடங்கள் திறந்தவுடனேயே அந்தக் குழந்தை களுக்குப் புத்தகங்களைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டப்படிப்பு படித்து வரும் பட்டதாரிகளுக்கு வழங்கும் சலுகைகளைப் பொறுத்தவரையில், அவர்கள் செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணம், மற்றும் அவர்களின் அலுவலகத்திற்குத் தேவைப்படும் மேஜை நாற்காலி போன்றவைகளை வாங்க அவர்களுக்கு 1,500 ரூபாய் வழங்குவதை நான் பாராட்டுகிறேன். இருந்தாலும் அப்படி வழங்கப்படும் அந்தத் தொகையை ரூ. 2,000 என்ற அளவிற்கு உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் இல்லங்களை எடுத்துக்கொண்டால், அங்கே வசதிக் குறைவுகள் இருக்கின்றன. எத்தனையோ முறைகள் அதிகாரிகளிடத்திலே அதுபற்றி எடுத்துச் சொல்லியும், அவர்கள் அதுபற்றி கவலைப்படாமல் இருப்பதால், அந்த மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று அமைச்சர் அவர்களைக் கூட சந்திக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அதிகாரிகள் இந்த நிலைமைகளின் மீது உடனடியாக கவனம் செலுத்தி அங்கே இருக்கும் பிரச்சினைகளை கவனிக்க, தக்க அறிவுரைகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





பகுதிநேர சிற்றாசிரியர்களின் நியமனம்பற்றி நான் மிகவும் பாராட்டு கிறேன். ஹரிஜன மாணவர்களைப் பொறுத்தவரையிலும், அவர்களுடைய குடும்பத்தினர் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருப்பதால், அந்தக் குழந்தைகளை அதிகமான அளவிலே படிக்க வைக்க முடியாமல் இருக்கும் இந்த நிலைமையில் இந்த ஆசிரியர்களை நியமித்திருப்பதுபற்றி நான் மிகவும் பாராட்டுகிறேன்.

உழவு மாடுகளை வாங்கவும், பாசனக் கிணறுகளைத் தோண்டவும் உதவித் தொகை அளிப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் கருவிகளை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 6.50 இலட்சம் தொகை போதுமானதாக இல்லை. ஆகவே, இந்தத் தொகையின் அளவை இன்னும் கொஞ்சம் உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழிலுக்கு வழங்கப்படும் கடனைப் பொறுத்தவரையில், 1982-83 ஆம் ஆண்டிற்கு மொத்தத்தில் 11.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இது யானைப் பசிக்குச் சோளப் பொரி என்ற வகையிலே தான் இருக்கிறது. ஆகவே, குறைந்தது 25 லட்சம் ரூபாயாவது இதற்காக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு சிறப்பு உதவியாக 9.56 கோடி ரூபாயை 1980-81 ஆம் ஆண்டு வழங்கியது. குடும்ப நலனை நோக்கமாகக் கொண்ட திட்டங்களின்கீழ் 4.23 கோடி ரூபாய் தான் செலவு செய்யப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் அதற்காக ரூ. 8.18 கோடி ரூபாய் பெறப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் 10.20 கோடி ரூபாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, மத்திய அரசு வழங்கும் இந்தச் சிறப்பு உதவி ஆதி திராவிட மக்களுக்குப் போய்ச் சேர்ந்து நிரந்தரமான பலன் கிடைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அப்படி நிரந்தரமான முறையிலே பலன் கிடைக்கும் அளவுக்கு நடவடிக்கைகள் எடுப்பது சம்பந்தமாக அவர்களுக்கென்று பல தொழிற் சாலைகளைத் தொடங்க வேண்டும். அதன் காரணமாக அவர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்புக்கள் கிடைத்து அதன் மூலம் ஊதியங்கள் கிடைக்க வழி ஏற்படும். ஏதோ அவர்களுக்கு என்று மத்திய அரசின் மூலம் கிடைக்கும் அந்தச் சிறிய உதவிகள் காரணமாக இப்போது அவர்களுக்கு எந்தவிதமான பயனும் ஏற்படாத நிலைமைதான் இருக்கிறது. நிரந்தரமான முறையிலே, அவர்களுக்கு ஒரு 'அசட்' என்று சொல்லக்கூடிய நிலைமையிலே, அவர்களுக்கென்று கிடைக்கும் இந்தக் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொண்டு தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நிரந்தரமான முறையிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, தேவைப்படுமானால்

கூட்டுறவுத் துறை மூலம், தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள உயர் மட்டக் குழுவுக்கு நிர்ணயித்துள்ள ஆறு மாத கால அளவை மூன்று மாத காலமாகக் குறைத்து அவர்களிடமிருந்து தேவையான பரிந்துரைகள் பெற்று, அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா வழங்கும் நிலைமையைப் பார்க்கும்போது, அல்லது வீடு கட்டிக்கொடுக்கும் நிலைமையைப் பார்க்கும்போது, கிராமங்களிலே அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கிறோம். அங்கேயெல்லாம் நாம் போகும்போது சாலையோரங்களிலே அந்த வீடுகள் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் அந்த வீடுகளிலே ஒருவர் கூட இருப்பதில்லை. காரணம் அரசாங்கமே அவர்களை எங்கெங்கேயோ ஒதுக்கி வைக்கும் நிலை இருக்கிறது. அவர்களுக்கு நாம் வீடு கட்டிக் கொடுக்கும்போது, அவர்கள் எங்கே வேலை செய்கிறார்களோ, எங்கே அவர்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களோ அந்தப் பகுதிகளாகப் பார்த்துத்தான் நாம் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். அந்தமாதிரி பார்த்துச் செய்தால் தான், அவர்களுக்கென்று நாம் பணம் ஒதுக்கிச் செய்யும் அந்தத் திட்டங்கள் வீண் விரயமான நிலைக்குப் போகாமல் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும்; ஆகவே, அந்த வகையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனம் வீட்டு வசதி மட்டுமல்ல, தொழில் புரிபவர்களுக்கு மேற்படி நிறுவனம் அளிக்கும் உதவிகளில் அரிஜனங்களுக்கு என்னென்ன உதவிகள் கிடைக்கின்றன, என்னென்ன நன்மைகள் கிடைக்கின்றன என்று பார்த்தால், அந்த நிறுவனம் அளிக்கும் உதவிகள் பற்றி விவரங்களே கூட அந்த மக்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, அந்த உதவிகள் இந்த மக்களுக்குத் தெரியக்கூடிய வகையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏதோ திட்டங்கள் போடுகிறோம், அதற்காக பணச் செலவு செய்கிறோம், ஹரிஜன மக்களின் வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்று பல முறைகளைக் கையாண்டு கொண்டிருக்கும்போது, அந்தத் திட்டங்களின் விவரங்கள் அந்த மக்களுக்குச் சரியான முறையிலே தெரிந்தால்தான், அவற்றின் பலன்களை அவர்கள் பெற முடியும். ஆகவே, அந்த வகையிலேயும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



துப்புரவுப் பணியாளர்களை எடுத்துக்கொண்டால், கர்நாடகத்தைப் பொறுத்தவரையில், 10 ஆண்டுகளுக்கு முன்னாலே அவர்கள் கையாலேயே 'அவற்றை' யெல்லாம் எடுத்துக்கொண்டிருந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி, மனிதனை மனிதனாக மதிக்கும் அளவிலே அவர்களுக்கு இன்றைய தினம் புதிய முறையிலே பலவிதமான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்திலும் சிறிய சிறிய திட்டங்கள் என்ற வகையிலே அவர்களுக்கு நிதி ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் அவைகள் போதுமானதாக இல்லை. சமுதாயத்திலே அவர்கள் இழிவான தொழிலைச் செய்கிறார்கள் என்ற நினைப்பு இருக்கிறது. அப்பேற்பட்ட மக்களுக்கு அவர்கள் சமுதாயத்திலே நல்லமுறையில் வாழ இந்த அரசு வகைசெய்ய வேண்டும். தீண்டாமை ஒழிப்பைப் பொறுத்தவரையில், இன்றையதினம் 8,000 வழக்குகளைப் பதிவு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு 4,045 வழக்குகளில் நீதிமன்றம் தண்டனை வழங்கியிருக்கிறது. மீதி இருப்பவைகளின் மீதும் இந்த இலாக்கா துரிதமான முறையில் நடவடிக்கை எடுத்து எவ்வளவு சீக்கிரம் தண்டனைகளை வாங்கிக்கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வாங்கிக் கொடுத்தால் அந்த மக்களுக்கு நீதி கிடைக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு ஆதி திராவிடப் பெண்ணை ஒரு முதலியார் பையன் திருமணம் செய்து கொள்ளுகிறான் அல்லது ஒரு நாயுடு பெண்ணை ஒரு ஆதி திராவிட மகன் திருமணம் செய்து கொள்கிறான் என்றால், அவர்களெல்லாம் சமுதாயத்தில் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய பெற்றோர்களால் வீட்டைவிட்டுத் துரத்தப்படுகிற நிலை ஏற்படுகிறது. அதன் காரணமாக அவர்கள் எங்கே போய் என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள். என்னதான் படித்திருந்தாலும்கூட, அவர்களுக்கு வேலை கிடைக்காத நிலை இருக்கிறது. எனவே இத்தகைய நிலைமைகளைப் போக்க கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படி உடனடியாக வேலை வாய்ப்பு கொடுப்பதன் காரணமாக, படித்த இளைஞர்கள் சமுதாயத்தில் உயர்ந்த ஜாதி என்று சொல்லப்படுகிற ஜாதியைச் சார்ந்த இளைஞர்கள் கலப்புத் திருமணம் செய்துகொள்ள அதிக அளவில் முன்வருவார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, எம்.பி.பி.எஸ் தேர்வுக்கு முதல் ஆண்டுத் தேர்வுக்கு ஆறு சதவிதம் ஒதுக்கப்பட்டிருப்பதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே விகிதத்தில் எஞ்சினியரிங் வகுப்புகளுக்கும் ஒதுக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இந்த அரசு பல நன்மைகளை ஆதி திராவிடர்களுக்குச் செய்திருக்கிறது. இந்த வகையில் இரு மான்யக் கோரிக்கைகளையும் நான் பாராட்டி வரவேற்கிறேன்.

என்னதான் அரசு நன்மையைச் செய்தாலும், சமுதாயத்தில் அவர்களுக்கான அந்தஸ்து சமமாக இல்லை என்ற பெரிய குறை இருக்கிறது. இத்தகைய குறைகளைப் போக்க நான் ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் பெரிய பெரிய ஆலயங்கள் நிறைய இருக்கின்றன. ஒவ்வொரு ஆலயமும் ஒவ்வொரு காலனியை, தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கும் பகுதிகளை தத்து எடுத்துக்கொண்டு, அந்த ஆலயங்களில் உள்ள பணிகள் அவ்வளவையும் அவர்களுக்கே கொடுத்து செய்யும்படி விட வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாக, சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் மறையும். தங்களையும் மற்றவர்கள் மதிக்கிறார்கள் என்ற உணர்வு, தங்களை யாரும் வெறுக்கவில்லை என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படும். சமீபத்தில் மீனாட்சிபுரத்தில் நடைபெற்றவைகளை நாம் அறிவோம். தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேண்டிய சலுகைகளையெல்லாம் நாம் கொடுத்திருந்தாலும், அவர்கள் அந்த நன்மைகளையெல்லாம் பெற்றுக் கொண்டு, முஸ்லிம்களாக மாறுகிற நிலையைப் பார்த்தோம். அவர்களெல்லாம் எதற்காக முஸ்லிம்களாக மாறினார்கள் ? அவர்களுக்குச் சமுதாயத்தில் சம அந்தஸ்து இல்லை, அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற நிலை அல்லது உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. அத்தகைய நிலைமைகள் மாறுவதற்கு உடனடியாக தமிழகத்தில் உள்ள ஆலயங்கள் காலனிகளைத் தத்து எடுத்துக் கொண்டு சமுதாயத்தில் அவர்களுக்கு சமநீதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்மையைச் செய்தால்மட்டும் சம அந்தஸ்து கிடைப்பதில்லை என்று சொல்லி, அவர்களுக்கு சமநீதி கிடைக்க வழிவகைகளை இந்த அரசு காணவேண்டும் என்று கூறி அமைகிறேன்.

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுவதில் நான் பெருமையடைகிறேன். பொதுவாக, நான் எதைப் பேச ஆரம்பித்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி போன்றவர்கள் புதிய விளக்கங்களைத் தருவதும் அதைக் கேட்டு நான் பதில் அளிப்பதுமான சந்தர்ப்பம் உருவாகிறது என்பதால் . . .





**திரு. க. இராமமூர்த்தி :** இதில் இருக்கிற சங்கடம் என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் எதையாவது பேசுகிற இடமாக இதை நினைத்துக்கொண்டு வந்துவிடுகிறார். அதுதான் நிலைமை. இதைத்தான் பேச வேண்டும் என்ற ஒரு உணர்வோடு வந்தால், இங்கே வம்பே இருக்காது.

**திரு. ஜேப்பியார் :** "எதையாவது" என்ற சொல்லுக்கு இலக்கணமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள்தான் இருக்கக்கூடும். இருந்தாலும் அவர் நல்ல விவரம் தெரிந்தவர். அகில இந்திய ரீதியில் பெரிய கட்சியாக இருப்பதில் பெரும் பொறுப்பில் இருக்கிறவர். அவர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரச்சினையில் சில புதிய விளக்கங்களைக் கொடுக்கிறபோது, அது மற்ற மாநிலங்களுக்கும் தேவையாக இருக்கும் என்று நான் கருதுவதால், ஒரு கருத்தை அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஜே. தாஸ் அவர்கள் பேசும்போது, ஆதி திராவிடர்களுக்காக என்று தனியாக இடத்தில் வீடுகளைக் கட்டுகிறார்கள். மற்ற இடங்களில் ஜாதி இந்துக்கள் இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் ஒன்றாக ஒரு இடத்திலேயே இணைத்துக் கட்டக்கூடாதா என்றெல்லாம் அவர் இங்கே கேட்டார். உண்மையிலேயே நல்ல கேள்வியை அவர் இந்த மன்றத்தில் எடுத்து வைத்திருக்கிறார். ஆனால் இதற்குப் பதில் கிடைக்க வேண்டிய இடம், அவர் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி ஆளுகிற டெல்லியாகும். அதிலும் குறிப்பாக டெல்லி செங்கோட்டையாகும். அங்கே இந்தக் குரல் எழுப்பப்படுமானால், இது உண்மையிலேயே நல்ல கேள்வி என்ற அடிப்படையில் சரியான பதில் கிடைக்கும்.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், "ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க விரும்புகிறோம். அதாவது ஜாதியும் இருக்க வேண்டும், மதமும் இருக்க வேண்டும், 'ஆனால் பேதங்கள் மட்டும் இருக்கக்கூடாது"—இதுதான் இன்றைய காங்கிரஸ் கட்சியின் பயங்கரமான ஆயுதம். ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் என்று சொல்வதுதான் அவர்கள் பழக்கம். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள், "ஜாதி மதம் அற்ற சமுதாயத்தை—அதாவது ஜாதியும் இல்லாத மதமும் இல்லாத சமுதாயத்தை—உருவாக்க வேண்டும்" என்று சொல்லுகிறோம். இதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியோ, "ஜாதியும்

இருக்க வேண்டும், மதமும் இருக்க வேண்டும், ஆனால் பேதம் மட்டும் இருக்கக்கூடாது" என்று சொல்கிறது. இதைத்தான் காங்கிரஸ் கட்சி தெளிவாக இந்த நாட்டுக்குச் சொல்கிறது.

1975 ஆம் ஆண்டு இந்த நாட்டில் "மிசா" கொண்டு வரப்பட்டபோது, "ஆதி திராவிட மக்களுக்குச் சில பொது இடங்களில், 'உணவு அருந்துகிற இடங்களில் தண்ணீர் குடிப்பதற்குக்கூட வசதிகள் அளிக்கப்படுவதில்லை. தண்ணீரை வாயில் வைத்துக் குடிப்பதற்கு அனுமதிக்கப்படாமல் கையிலே ஊற்றிக் குடிக்கச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை சில மாநிலங்களில் மிகவும் கடுமையாக இருக்கிறது. இதற்கெல்லாம் விடிவு காலம் வர வேண்டாமா? ஆக அந்த அடிப்படையில்தான் இது கொண்டு வரப்படுகிறது" என்று பேசப்பட்டது. இன்றைக்கு அந்த நிலைமை மாறியிருக்கிறதா என்றால், இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள்கூட பல இடங்களில் சொல்லியிருக்கிறார். ஆதித் திராவிடர்களுக்கு என்று காலனிகள் நகரத்தை விட்டு ஒதுக்குப்புறமாக அமைந்திருக்கின்றன. அவைகளெல்லாம் என்றைக்கு நகரங்களோடு இணைத்துக் கட்டப்படவிருக்கின்றன என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால் முக்கியமான இந்தக் கருத்தைச் செயல்படுத்த வேண்டிய இடம் டெல்லியில் இருக்கிற செங்கோட்டையாகும். எல்லாக் கட்சிகளையும் வென்றுவிட்டு, தனிக் கட்சியாக டெல்லியில் ஆட்சி நடத்துகிற திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தப் பிரச்சினையில் முன்னின்று ஆதித் திராவிட மக்களும் மற்ற மக்களும் இணைந்து வாழும் வகையில் ஒரு திட்டத்தைத் தயாரித்துச் செயல்பட வேண்டும். இப்போது 20 அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன், இந்தத் திட்டத்தையும் அவர்கள் சேர்த்து, உலகத்தில் நாம் அனைவரும் ஒன்றாக இருக்கும் இடமாக இந்த நாடு இருக்க வேண்டும் என்று செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மகாத்மா காந்தி அடிகள் கூட ஒருமுறை ஆதி திராவிடர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது "இவர்கள் கடவுள்களின் குழந்தைகள்" என்று குறிப்பிட்டார். அப்படி வேறு யாரையும் சொல்லவில்லை. ஹரிஜனங்களை மட்டும் கடவுள்களின் குழந்தைகள் என்று சொன்னார். அவர்களுக்கு மட்டும்தான் அந்தப் பட்டத்தைக் கொடுத்தார். ஆதி திராவிடர்கள் என்றால், நமக்கு மூத்தவர்கள், முன்னவர்கள். ஆகவே அவர்களோடு உறவு வைத்துக்கொள்ள வேண்டும், அப்படி உறவு வைத்துக்கொள்வது சாலச் சிறந்தது என்று கருதுகிற காலம் வர வேண்டும். ஆனால் இந்த நாட்டில் மூத்தவர்களாக, முன்னவர்களாகத் தோன்றியவர்களை, காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் இந்த நாட்டில் பாகுபடுத்தி அவர்களுக்காகவே ஒரு பிரிவை வைத்துக்



கொண்டிருக்கிறது. அதைப்போல வேறு எந்தக் கட்சியையும் நாம் இந்த நாட்டில் பார்க்க முடியாது. லீக் என்றும், தாழ்த்தப்பட்டவர்களான அரிஜனங்களுக்கு என்று தனிப் பிரிவு என்றும் காங்கிரஸ் கட்சியில்தான் நாம் பார்க்க முடியும். ஆக தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனி உருவத்தைக் கொடுத்து பெரிய ராஜாங்கம் நடத்துகிற கட்சியே காங்கிரஸ் கட்சி ஒன்றுதான்.

திரு. ஏ. ஜே. தாஸ் : தாழ்த்தப்பட்டவர்களின் நன்மையை வேகமாகவும் சிறப்பாகவும் கவனிக்க வேண்டும் என்று கட்சியில் ஒரு பகுதியை உருவாக்கியிருக்கிறார்களே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார் : அந்த விளக்கத்தை நான் ஏற்றுக் கொண்டாலும் காங்கிரஸ் கட்சி இதில் ஒரு முன்னுதாரணமாக இருக்கிறது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. காங்கிரஸ் கட்சியில் ஜாதிப் பிரச்சினைகள் இன்னும் மறைக்கப்பட முடியவில்லை, மறுக்கப்படவுமில்லை. அந்தக் கட்சியில் சேருகிறபோதே, நீ என்ன ஜாதி என்று கேட்கிற ஒரே இயக்கம் காங்கிரஸ் பேரியக்கமாகும். அதுதான் இப்படிப்பட்ட வகையில் வழி காட்டுகிறது . . .

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹரிஜனங்கள் தனியாகப் பிரிந்து வாழ்கிற நிலை இருக்கக்கூடாது, காலனிகள், சேரிகளாக தனியாக இருக்கக்கூடாது என்று முதன் முதலாகக் குரல் கொடுத்து அவைகள் நகரங்களோடு இணைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னவரே பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்—இந்தியாவின் முதல் பிரதமர்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. மத்திய அரசு இந்தத் துறையில் எதைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. மத்திய அரசு இந்த வகையில் எதைச் செய்ய வேண்டுமென்றாலும், மாநில அரசுகள் மூலமாகத் தான் செய்ய வேண்டும். மாநில அரசு அதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அதற்கு மத்திய அரசு துணையாக இல்லாமல் இருந்தால், அது குறை. அல்லது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு முயற்சிகளை மேற்கொண்டு செயல்படுத்தும்போது அதை மத்திய அரசு பாராட்டாமல் இருந்தால், அதுகூட ஒரு குறை. இவை இரண்டுமில்லாமல் இதை மத்திய அரசுதான் செய்ய வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசிடம் இந்தத் திட்டத்தை ஒப்படைத்துவிட முற்பட்டு, அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள மறுத்தது என்றால், அது குறை. இந்த மூன்றில் எதுவுமில்லை. இத்தகைய சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் எதைக் குறையாகக் கருதுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு உறுப்பினர் ஜாதியைப் பற்றிச் சொன்னார். நான் ஒன்றைச் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். சமீபத்திலே நடந்த மீனவர் பேரணிக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் எவ்வளவு தூரம் துணை புரிந்தார் என்பதும், போலீஸ் அனுமதியைப் பெறுவதற்கு துணை புரிந்தார் என்பதும் அவருக்கே தெரியும். ஆகவே ஜாதியைப் பற்றி அவர் அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் சொன்னதற்கும் இதற்கும் கொஞ்சம் மாறுபாடு இருக்கிறது. தங்கள் கட்சியில் தாழ்த்தப்பட்டவர்கள் நலனுக்காகவே அப்படி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். வேறு எந்தக் கட்சியிலும் அப்படி இல்லை.

* திரு. க. இராமமூர்த்தி : அகில இந்திய அடிப்படையில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு என்று ஒரு தனிப் பிரிவை காங்கிரஸ் கட்சி வைத்திருக்கிறது. சமூக ரீதியாக அவர்களை மிக மிக அமுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று காங்கிரஸ் கட்சி உணர்ந்த காரணத்தாலே, காந்தியடிகள் இருந்த போது, அவர்களுக்காக தனியாகக் காரியங்களைச் செய்ய பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்கள் எந்தக் குறைகளைச் சொன்னாலும், எங்கள் கட்சியில் அதற்கு முழு அதிகாரத்தோடு தாப்படுகிற தனிக் கவனத்தைப் போல வேறு எந்தக் கட்சியிலும் இல்லை. அரிசனங்களுக்குள்ளே புகுந்து பணியாற்றி சிலவற்றை ஆராய்ந்து சொல்ல தனித் துறை தேவைப் படுகிறது. ஆட்சியிலே தனித் துறை வைத்துக் கொண்டிருக்கிற பல அரசியல் கட்சிகள் தங்களுடைய கட்சியில் வைத்து முன்னேற்றக் காரியங்களைச் செய்ய முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது உண்மையாக இருந்தால், அதுவே அவருடைய கட்சியின் கருத்தாக இருந்தால், அவர்களது ஆட்சியில் அரிசனங்களுக்காக தனித் துறையே தேவையில்லையே.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அரிசனங்கள் என்பதை தமிழ்நாடு அரசு ஆதி திராவிடர் என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறது. அந்தப் பெயரையே உறுப்பினரும் சொல்லலாம்.

* திரு. க. இராமமூர்த்தி : அரிசனங்கள் என்பதை நான் மாற்றிச் சொல்வதற்கு இயலாத நிலையில் இருக்கிறேன். அது காந்தியடிகள் வைத்த பெயர். இதிலே எங்களைச் சார்ந்திருக்கிற அரிசனங்கள் தெளிவாக



இருக்கிறார்கள். எங்களுடைய கட்சி முடிவு எடுக்கும் வரையில், எங்கள் கட்சித் தலைவர் முடிவு எடுக்கும் வரையில் இதை நாங்கள் மாற்ற முடியாது. 'ஆதி திராவிடர்' என்ற வார்த்தையை எத்தனை பேர் ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே அரசாங்கமே அரிசனங்களுக்காக தனியாக ஒரு முறை தேவையென்று கருதக் கூடிய நிலையில், அரிசனங்களின் சமுதாய நலப் பணிகளுக்காக ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி, அதனுடைய பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறது. அது போல மற்ற கட்சிகள் வைத்துக் கொள்ளவில்லையென்றால், அதை நான் குறை சொல்லவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அப்படி இல்லை என்று நினைக்கிறேன். ஆனால் அங்கே திரு. ஜேப்பியார் மீனவர்களுக்கு உதவுவதற்கு இருக்கிறார். அரிசனங்களுக்கு உதவ யார் இருக்கிறார்கள் என்று தெரிய வில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மீனவர்கள் ஒரு சாதியினர் என்று திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி தவறாகக் கருதிக்கொள்ள வேண்டாம்.

திரு. க. இராமமூர்த்தி : நான் குறிப்பிட்ட பேரணியை நடத்தியவர்கள் குறிப்பிட்ட இனத்தை, சாதியைச் சேர்ந்தவர்கள்தான்.

திரு. ஜேப்பியார் : வன்னியர்கள் கூட பேரணியை நடத்தியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : வன்னியர்கள் பேரணியை நடத்தியிருக்கிறார்கள் என்றால், அதிலே எனக்குத் தொடர்பு இல்லை.

திரு. ஆ. நல்லசிவன் : வன்னியர் பேரணிக்குத் தலைமை தாங்கியவர் ஒரு காங்கிரஸ் எம்.பி. ஒன்று வன்னியர் பேரணியை நடத்திய எம்.பி. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல என்று சொல்ல வேண்டும், அல்லது ஜாதி அடிப்படையில் பேச காங்கிரஸ்காரர்களை நாங்கள் அனுமதிக்கிறோம் என்று சொல்ல வேண்டும். இரண்டிலே எதைச் சொல்லுகிறார் திரு. இராமமூர்த்தி ?

திரு. க. இராமமூர்த்தி : காங்கிரஸ்காரர்கள் அப்படி ஈடுபட்டிருந்தால், அதிகாரபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது காங்கிரஸ் கட்சி. அதைப் போல திரு. ஜேப்பியார் மீது நடவடிக்கை எடுக்க அண்ணா தி.மு.க, தயாரா ?

**திரு. ஜேப்பியார் :** ஜாதியின் பெயரால் எந்த மாநாட்டையும் நான் நடத்தியது கிடையாது. மீனவர் என்பது ஜாதி அல்ல, தொழில்தான்.

* **திரு. சோ. ஆறுமுகம் :** நான் ஒரு பொதுவான கருத்தை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மிகப் பின்தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் சில கோரிக்கைகளை வைத்து ஊர்வலம், மாநாடு போன்றவற்றை நடத்துகிறார்கள். அப்படி நடத்துகிறபோது, சம்பந்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களை அழைக்கிறார்கள். அப்படி அவர்கள் அழைக்கும்போது போகாவிட்டால், அவர்களுடைய விரோதத்தைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டி நேருமோ என்ற நிலையில் தமிழகத்திலே சில பேர் போகிறார்கள். அப்படிப் போகும்போது, ஜாதியை வளர்க்க வேண்டுமென்ற அளவிலே போகிறார்கள் என்று மற்றவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மீனவர்கள் ஊர்வலத்தைப் பொறுத்த வரையில், கோரிக்கை வைத்து அந்த அளவிலே திரு. ஜேப்பியாரை அணுகி மனுவைப் பெற்றுக் கொள்ளுங்கள் பரிசீலனைக்கு என்று சொல்லியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அவர் துணையாக இருந்ததோடு மட்டுமல்லாமல், போலீஸ் பாதுகாப்பை வாங்கித் தந்திருக்கிறார். மற்ற மாநில மாநாடுபற்றி எனக்குக் கவலையில்லை. என்னைப் பொறுத்தவரையில், நான் சேர்வதில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கொள்கைக் குறிப்பு, யார் யாருக்கு எந்தெந்த ஜாதி என்பதைப் பற்றியதல்ல. ஆதி திராவிட மக்களை எப்படி உயர்த்துவது என்பது குறித்துதான் கொள்கைக் குறிப்பு அதுபற்றி மட்டும் பேச வேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திரும்பவும் மீனவர்களை ஜாதி என்று ஆக்கி ஜாதிப் பேரணி என்று ஆக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஊரில் வேறு ஜாதிக்காரர்கள் மீன் பிடிக்கும் தொழிலைச் செய்கிறார்கள். அங்கே இருக்கிறவர்கள் கூட இதிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். வன்னியர்கள் போன்ற பல ஜாதியினர் அங்கே வந்திருக்கிறார்கள். வன்னியர் பேரணி என்பது வேறு, இது வேறு. ஆகவே இரண்டையும் இணைத்துப் பேசுவது நல்லதல்ல.



* **திரு. க. இராமமூர்த்தி :** நான் இணைக்கவில்லை. அவர்கள்தான் இணைத்தார்கள். மீனவர்கள் தொழில் என்று சொன்னார்கள். ரொம்ப சாமர்த்தியமாக வார்த்தையில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். மீனவர்கள் எத்தனையோ பட்டப் பெயர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். செட்டியார், வன்னியர் உட்பட எல்லாப் பட்டப் பெயரையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜாதி என்ற அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களை பேரணியை நடத்தியவர்கள் அணுகினார்கள். அதிலே தப்பில்லை. அதற்காக அனுமதி பெறுவதற்காக துணை நின்று போலீசார் அனுமதி வாங்கிக் கொடுத்தது எனக்குத் தெரியும். அதற்கு மேல் தகவல் வேண்டுமானாலும் சொல்லுகிறேன்.

**திரு. ஜேப்பியார் :** துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை அவைக்குத் தருகிறார். போலீசாரோடு தொடர்பு கொண்டேன் என்பது பொருந்தாது. இது உரிமை மீறலாகும். பார்த்துக் கேட்டேனா, கடிதம் எழுதினேனா என்பதை விளக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** அதற்காக உங்களோடு அவர்கள் விவாதித்தார்கள். நீங்கள் 'போன்' செய்தீர்கள். அதற்குப் பிறகு வேறு என்ன தகவல்கள் வேண்டும் ?

**திரு. ஜேப்பியார் :** உண்மையிலேயே இது உரிமைப் பிரச்சினையாக வருகிறது. "போன் செய்து கேட்டேன்" என்ற உண்மைக்குப் புறம்பான தகவலை சபைக்குத் தெரிவித்திருக்கிறார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** உறுப்பினர் தான் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னதற்குப் பிறகு தொடர்ந்து அது பற்றிய கருத்துக்களைச் சொல்லுவது நல்லதல்ல.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சாதிப் பிரச்சினைகள் வெகுவாக ஏற்பட்டு கலவரங்கள் இருக்கும் சூழ்நிலையில். இந்த மேலவையில் அவரவர் சாதி சம்பந்தமாகப் பேசிய சொற்றொடர்கள் பாதகமாக அமையும். ஆகவே அப்படிப் பேசிய சொற்றொடர்களை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைக்குப் பொருந்தாத வார்த்தைகள், சொற்றொடர்கள் இடம் பெறவில்லை. ஆகவே அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டியதில்லை.

திரு. ஆர். டி. சீத்தாபதி : அவைக்குப் பொருந்தாத வார்த்தைகள் என்று சொல்ல முடியாது என்றாலும், நாட்டிற்கு இப்போது நடைபெற்ற விவாதங்கள் தேவைதானா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இதனால் ஒன்றும் வந்து விடாது.

திரு. செ. முத்துசாமி : அமைச்சரவையிலேயே ஆதி திராவிடர் அமைச்சர் என்று ஒருவரை வைத்து காரியங்களை ஆற்றிக் கொண்டிருக்கும்போது, கட்சியிலே ஒரு பிரிவை வைத்துக்கொண்டிருப்பதும், அதற்காக விவாதம் ஏற்படுத்துவதும் என்ன நியாயம் ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆதிதிராவிடர் நலனில் மற்ற நலன்கள் குறுக்கே வரவேண்டாம்.

திரு. ஜேப்பியார் : ஆதி திராவிடர் நலனிலிருந்து மற்ற நலன்கள் இருக்கின்றன. ஆகவேதான் இணைத்துப் பேசிக்கொண்டிருக்கிறேன். இன்னுமொன்றை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டவன் நான். பள்ளிக்கூடம் செல்லும் போது, வழிப்பாதையில் போகக் கூடாது, தண்ணீர் குடிக்கும்போது சொம்பில் தரக்கூடாது, கையில்தான் ஊற்ற வேண்டும் என்ற பல கொடுமைகளுக்கு பழக்கப்பட்டிருக்கிறேன். இன்னும் அந்தக் கொடுமைகள் தீர்ந்திருக்கிறதா என்றால், இல்லை. சில பேர் அவர்களை இணைத்து வைத்துக்கொண்டு, அவர்களுக்காக தனிப் பிரிவை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுவதன் மூலம் இத்தகைய கொடுமைகள் அகற்றப்பட்டதா என்று விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பிரச்சினையை ஆரம்பித்து வைத்தேன். அவர்களுக்கு முக்கியத்துவம், முன்னுரிமை தருவதாகப் பேச்சிலே

(முற்பகல் 11-00)

பேசிவிட்டு அந்த அளவிலேயே வைத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றிச் சொல்வதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் இந்த நேரத்தில் எடுத்து வைத்து விவாதத்தைத் திசை திருப்பிப் பார்த்தேன். நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எப்போதுமே வாடிக்கையாகக் கொஞ்சம் வேகமாகப் பேசிவிட்டு, அதற்கு அப்புறம் ஒரு வார்த்தை சொல்வார்கள். "உங்கள் பேச்சிலே வார்த்தை ஜாலங்கள்தான் இருக்கும்" என்று சொல்லிவிட்டு உட்கார்ந்துவிடுவார்கள். அது வாடிக்கை ஆகிவிட்டது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், அகில இந்திய ரீதியிலே உள்ள கட்சியிலே



ஒரு பெரிய பொறுப்பிலே இருப்பவர்கள் அவர்கள். அவர்கள் ஏதாவது சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆணித்தரமான கொள்கைகளைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஒன்றுமே சொல்லவில்லை. அதற்கு மாறாக, அவர்கள் வைத்திருக்கின்ற கொள்கைப்படி ஆதிதிராவிட மக்கள், அரிசன மக்கள் பெறவேண்டிய உரிமைகளைப் பெற வேண்டும். "அந்த உரிமைகளைப் பெறுவதற்காகத்தான், நிலைநாட்டுவதற்காகத்தான் தனிப் பிரிவாக வைத்திருக்கிறோம்" என்றும் "எங்களுக்குள்ளே பேதம் இல்லை" என்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு நாமே உள்ள உண்மைகளை மறைப்பதாக இருக்கிறது. அந்த நிலை இருக்கிறது. எனக்கு அங்கேயிருந்து தக்க பதில் வரவில்லை.

மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பின்னர், இன்றைக்கு கோயில்களில்—எங்கே பார்த்தாலும் 50, 100 என்று நாங்கள் ஆரம்பித்ததல்ல, அவை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஆரம்பித்து வைக்கப்பட்டதுதான்—திருமணங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தத் திட்டம் இன்றைக்கு எவ்வளவோ விரிவடைந்திருக்கின்றது. கோயில்களிலே இலவசத் திருமணங்கள் நடக்கின்றன. சில நேரங்களிலே திருமணங்கள் என்று மேற்கொள்ளுகின்றபோது, அந்தத் திருமணங்கள்பற்றி காவல் நிலையத்திற்குப் புகார் செய்யப்பட்டு, ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஆண்கள் அல்லது வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள், திருமணம் நடக்கும்போது, அங்கு வந்து கொடுமைப்படுத்துகின்ற சூழ்நிலைகள் இருந்தன. இதுபோன்றவைகளைப்பற்றி நாம் பல நேரங்களில் கேள்விப்பட்டிருக்கிறோம். அதற்கு பின்னாலே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் எல்லாம் பகுத்தறிவுத் திருமணங்கள், கலப்புத் திருமணங்கள் இவைகளை சட்ட பூர்வமானதாக ஆக்கிய பின்னர், திருமண மேடைகளில் அந்த மாப்பிள்ளையையும் பெண்ணையும் சட்டபூர்வமாக கணவன்-மனைவியர் ஆக்கியதால், காவல் நிலையத்தினுடைய கட்டுப்பாட்டிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலைமையில் 20 அம்ச திட்டத்தை நாங்கள் வரவேற்றிருக்கிறோம். நானே பேசியிருக்கிறேன். இன்றைக்கு இந்த மக்களுக்கு ஒன்றுமே செய்ய முடியவில்லை. இவர்கள் சிரமப்படுகிறார்கள். அவர்கள் சொன்னார்கள், "மாநில அரசு சிபாரிசு செய்ய வேண்டும். மாநில அரசு அதைச் செய்ய வேண்டும். அதைச் செய்தால் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். நாங்கள் அதை அகில இந்திய ரீதியிலே பார்த்துக்கொள்வோம்" என்று விவாதத்திற்குச் சொல்கின்றார்கள். அது ஒரு விவாதமாக இருக்கலாம். நான் சொல்வது இந்தியாவை ஆளக்கூடிய, கடைசியாகச் சட்டங்களை உருவாக்கக்கூடிய அந்த மாமன்றத்திலேயே,

[திரு. ஜெப்பியார்] [1982 மார்ச் 23

இன்றைக்கு காங்கிரஸ் கட்சி பெருவாரியாக ஆளுகின்ற காரணத்தினாலே, நிறைவேற்றலாம். தமிழ் நாட்டில் 100 கலப்பு திருமணங்கள் இலவசமாக கோயில்களில் நாம் நடத்துகிறோம். அந்தச் செலவுகளை கோயில் பணத்திலே செய்கிறோம். அந்த அடிப்படையிலே இந்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்து பொதுவாக இந்தமாதிரி திருமணங்களை உருவாக்கினால், அது எவ்வளவு பெரிய நன்மையாக இருக்கும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் மேல் இடங்களில் நடக்கின்ற கூட்டங்களுக்குப் போகும்போது அங்கே எடுத்துச்சொல்லலாம். அப்படிப்பட்ட நேரங்களிலே, இந்த முறை விளக்கமாக வரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: இந்த பகுத்தறிவுத் திருமணங்களை கோயில்களிலேதான் நடத்த வேண்டுமா ? பகுத்தறிவுத் திருமணங்களை நடத்தி வைப்பதற்கு வேறு இடம் இல்லையா ? பகுத்தறிவுத் திருமணங்கள் என்று சொல்லிக்கொண்டு, கோயில்களிலே நடத்துவதற்கு என்ன காரணம் ? அதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் விளக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

திரு. ஜெப்பியர் : கோயிலில் வருகின்ற வருமானத்தை வைத்து அந்தப் பணத்தை எடுத்து அதற்காக செலவு செய்கிறார்களே தவிர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் அடிப்படையிலே தான், இந்தத் திருமணங்களை கோயில்களிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக பகுத்தறிவை விட்டுவிடவில்லை. அவர்களேதான் திருமணங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. நா. வீராசாமி : அத்தோடு இன்னொன்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கோயில்களிலே அரிசனங்களே நுழையக் கூடாது என்று ஒரு நிலை இருந்தது. அதையெல்லாம் போக்கி, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் கோயில்களிலே திருமணங்கள் செய்துகொள்வது என்பதால், இந்த சமுதாயத்திலே இருக்கின்ற சாதியை ஒழிப்பதற்குக்கூட இந்தத் திட்டம் சிறந்த இடத்தைப் பெறுகிறது. ஆகவேதான் அதைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் கூறுவது, ஜாதியை ஒழிப்பதற்கு அவர்களை ஆத்திகர்கள்



1982 மார்ச் 23]

[திரு. ஆ. நல்லசிவன்]

ஆக்கி கோயில்களில் திருமணம் நடத்தவேண்டுமா ? நம் தமிழகத்தில் நாத்திகத்தின் அடிப்படையிலே முடியாமல், அவர்களை ஆத்திகர்களாக ஆக்கித் தான் திருமணம் நடக்கிறதா ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஆத்திகர்கள் ஆக்கித்தான் அங்கே காரியங்கள் நடைபெறுகின்றன என்பதல்ல. அங்கே பலர் ஆத்திகர்களாகவும் இருக்கின்றார்கள். இன்னொன்று கோயில்களிலே வசதி இருக்கின்றது. பணம் இருக்கிறது. அந்தக் கோயில் பணம் ஒரு காலத்தில் வேறு எது எதற்கோ செலவு செய்யப்பட்டது. ஆனால் அது இப்போது இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்குச் செலவு செய்கின்ற இடமாக இருக்கிறது. ஆகவே தான் அந்தத் திருமணங்கள் அங்கே நடக்கின்றன.

திரு. ஜெப்பியார் : ஆக அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட நாட்டிற்கு முன்மாதிரியாக இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே சொல்வதிலே நான் பெருமை அடைகிறேன். ஆதி திராவிட மக்கள் எல்லாம் ஒதுக்கப்பட்ட நேரத்திலேகூட ஆதிதிராவிட மக்களின் தலைவாக அகில இந்திய ரீதியிலே, இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்குகின்ற போது மகாத்மா காந்தி அடிகளுடன் இருந்து அதை உருவாக்கிய டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இருந்தார்கள். அவருடைய படத்தை இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைமையகத்திலே மையமாக வைத்திருக்கிறோம். அதை நாங்கள் எண்ணிப்பார்க்கிறோம். இதை அரசியல் கட்சிகள் எண்ணிப்பார்க்கலாம். அந்த அரசியல் கட்சியில் அகில இந்திய அளவிதே இதை ஏற்றுக்கொள்கின்றதா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அளவிலே இதை ஏற்றுக்கொள்கின்றதா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதனுடைய தலைமை படுத்திக்கொண்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள் கிறேன். ஆதி திராவிட மக்களுடைய பிரச்சினைகள் இன்னும் இருக்கின்றன. சில இடங்களிலே கை கட்டி நிற்கவேண்டிய நிலை இருக்கின்றது. காலிலே போட்டிருக்கின்ற செருப்பைக் கழட்டி வைக்க வேண்டும். அரசியல் கட்சியிலேகூட ஐயா இருக்கிறார்கள் என்று சொல்லி, அடிமைப்படுகின்ற மாதிரி இருப்பதைப் பார்க்கிறோம். அரசியல் கட்சிகளிலேகூட நாம் இதை நடைமுறைப்படுத்த தவறவிட்டிருக்கிறோம். நிறைய செய்திருக்கிறோம் என்று அவர்கள் சொல்கின்றார்கள். நிறைய செய்திருக்கிறோம் என்று நாங்களும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இப்படித் தனித்தனியாகச் சொல்லிக்கொண்டிருக்கின்ற நிலைமை மாறி, ஒட்டுமொத்தமாக அவர்களுடைய வாழ்க்கையிலே என்ன பிரச்சினை, எப்படிப்பட்ட பிரச்சினை, என்று ஆராய வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே புகைப்படங்களைப் பார்க்கின்ற போது பிரமிப்பதாக இருந்தது. எங்கே பார்த்தாலும் புகைப்படங்கள். ஆதிதிராவிட மக்களுக்கு என்று ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டியிருக்கிறோம் என்று சொன்னார்கள். எங்கே பார்த்தாலும் புகைப்படங்கள். ஏழு ஆயிரம், எட்டு ஆயிரம், பத்து ஆயிரம் ரூபாய் என்று செலவிட்டு கட்டியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறது. அது எல்லாம் நின்றிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நான் படித்துப் பார்த்திருக்கிறேன். இதிலே இன்னொன்றை நான் தெளிவாக்க விரும்புகிறேன். அப்படி கட்டப்பட்ட எத்தனை வீடுகளில் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் ? குடியேறியவர்கள் எத்தனை பேர்கள் ? அப்படி கட்டப்பட்ட வீடுகள் எப்படிப்பட்ட முறையிலே கட்டப்பட்டன ? ஏன் அதிலே மக்கள் குடிபோக மறுக்கிறார்கள் ? இதையெல்லாம் மறந்துவிட்டார்களா ? அதை அவசரப்பட்டு அவசரக்கோலத்திலே செய்துவிட்டார்களா ? அன்றைக்கு திட்டமிட்டபோது, இதைப்பற்றியெல்லாம் பார்த்தார்களா ? இதையெல்லாம் எடுத்துச்சொன்னால், ஒரு குற்றச்சாட்டாகச் சொல்வதாகக் கருதுவார்கள். அந்தக் காலத்திலே ஆதிதிராவிடர்களுக்கு ஒன்றுமே இல்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எங்கோ ஒரு வீடு கட்டப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பெருவாரியான வீடுகள் கட்டப்பட்டன என்றார்கள். அவர்கள் கட்டினார்கள். அது விளம்பரப் படுத்தப்பட்டது. புகைப்படம் எடுத்துக்காட்டப்பட்டது. புள்ளிவிவரங்கள் தரப்பட்டன. இத்தனை வீடுகளில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பது தான் கேள்வி. இன்றைக்கு வீடுகள் கட்டுவதை விட, தொழில் மையம் அமைத்து அந்தத் தொழில்கள் வளருவதன் மூலம் வேலைகள் கொடுக்கலாம். வீடுகள் கட்டித்தருகின்ற பணத்தை மூலதனமாகப் போட்டு தொழில்களை அமைத்துக் கொள்ளலாம். அந்த வீட்டுக்குள்ளேயே பட்டினி கிடந்து சாவதா ? இந்த வீடு கட்டுகின்ற பணத்தை வைத்து அங்கே வாழ்கின்ற தொழில் மையத்தை உருவாக்க முடியாதா ? தொழில் வளர்ந்து அதற்குப் பின்னாலே அந்த வீடுகள் அதிகமாக்கப்படலாம் என்ற சிந்தனைகூட பரவலாக இருக்கிறது. இது எல்லோரும் பேசுகின்ற பேச்சாகவே இருக்கிறது. நாம் ஆறு ஆயிரம், ஏழு ஆயிரம் ரூபாய் என்று செலவழித்து கட்டிக்கொடுத்து விடுகிறோம். கோடிக்கணக்கிலே போட்டு கட்டிக்கொடுத்துவிடுகிறோம். அவர்கள் வேலைக்கு எங்கே போவது ? அவர்களுக்கு வீடு கட்டித் தருகிறார்களே, அவர்களுக்கு வேலை தருகிறார்களா ? வீடு கட்டிய இடங்களிலே தொழில் மையங்கள் உருவாக்கலாமே என்றும் அப்படி தொழில் மையங்கள் உருவாகின்றபோது, அவை வளர்ந்துகொண்டிருக்கின்றபோது, அந்த வீடுகளைக் கட்டலாமே என்ற சிந்தனையையும் வைத்திருக்கிறார்கள். அது மேலோங்கியிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாங்கள்



நிறைய கட்டிவிட்டோம். ஆக்கபூர்வமான அளவில் வீடுகள் கட்டியிருக்கிறோம். அந்தத் திட்டத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அந்த வீடு கட்டுவதைக்கூட நிறுத்திவிட்டார்கள் என்று சொல்லக்கூடும். ஆனால் அன்றைக்குக் கட்டப்பட்ட வீடுகள் அவர்கள் வாழ்வதற்குத் தகுதியற்றதாக இருக்கிறது என்று சொல்லும்போது, அதற்கும் மேல் வசதி செய்வதற்கு பணம் தேவைப்படுகிறது. அப்படி பணம் தேவைப்படுகின்ற போது, எவ்வளவு பணத்தை வைத்து வசதியோடு வீடுகள் கட்ட முடியும் என்பதை நினைவிலே அரசு கொள்ளாமல் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூட ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். கல்லூரிகளிலே, பள்ளிகளிலே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு ஜாதிப் பிரச்சினை இருக்கிறது. ஒவ்வொரு ஜாதிக்கும் ஒரு பிரிவு என்று இருக்கிறது. தொழிற் சங்கங்கள் கூட வளர்ந்துவிட்டன. அகில இந்திய அளவிலே இருந்தாலும் சரி, அகில உலக அளவிலே இருந்தாலும் சரி, ஜாதிச் சண்டை, தொழிற் சங்கங்கள் எல்லாம் உருவாகிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் இதை மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். தொழிற் சங்கங்களில்கூட பல பிரிவுகள் இருக்கின்றன.

(முற்பகல் 11-10)

அது புரையோடி, பரவிக்கொண்டிருக்கிறது. சில கட்சிகள் தலைமையில்கூட இருக்கின்றன. சில சங்கங்களிலே இருக்கின்றன . . .

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு விவாதத்தைக் கூறி முடிப்பார் என்று நினைக்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கிராமப்புறங்களிலே, மற்றவர்கள் வசிக்கும் இடங்களில் எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி முடித்தால் நன்றாக இருக்கும்.

திரு. ஜேப்பியார் : அதைச் சொல்ல அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் புள்ளிவிவரங்கள் சொல்லுவார்கள். ஆதி திராவிட மக்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் மின்சாரத்தைப் பார்த்திருக்க மாட்டார்கள். ஓலைக் குடிசைகளுக்கு மின்சாரம் போட முடியுமா என்ற நிலைமை இருந்தபோது, 2½ ரூபாய் செலவிலே ஒரு மாதம் பூராவும் மின்சாரம் பயன்படுத்தும் அளவிற்கு லட்சக் கணக்கான குடிசைகளுக்கு, அதிலும் குறிப்பாக ஆதி திராவிட, பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஏராளமான மின் இணைப்பு புரட்சித்

தலைவர் அவர்கள் அரசு தந்து, அவர்களும் மற்றவர்கள்போல் வாழ்க்கையிலே ஏற்றத்துடன் வாழ முயற்சிகள மேற்கொள்ள அரிய திட்டங்களை அரசு மேற்கொண்டிருக்கிறது.

சாதிமதமற்ற சமுதாயம் உருவாக்குவதற்காக எல்லாக் கட்சிகளும் இந்தக் கோட்பாடுகளை எங்களுக்காக ஏற்றுக்கொள்ள வேண்டாம், உலகத்திற்காக ஏற்றுக்கொள்ள வேண்டும். சாதிமதமற்ற சமுதாயத்தை உருவாக்க எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பாடுபட வேண்டுமென்று கேட்டு, ஆதிதிராவிட, பழங்குடி மக்களுக்குச் செய்திருக்கிற, செய்ய இருக்கிற பல நல்ல காரியங்களை நான் பாராட்டி, மேலும் அவர்களைப் பிரிக்காமல், அகில இந்திய ரீதியில் அவர்கள் இணைந்து வாழ்வதற்குப் பாடுபட வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஆதித் திராவிட மக்களுடைய நலன் பற்றிப் பேசுகின்றபோது நண்பர்கள் பலர் கருத்துக்களைச் சொன்னார்கள் . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினரவர்கள் பேசுகிறாரா அல்லது விவரம் கேட்கிறாரா ?

திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் உரையின்மீது விவாதம் நடக்கிறதா அல்லது ஆதி திராவிடர் நலத் துறை கொள்கைக் குறிப்பின்மீது விவாதம் நடக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் அப்போதே குறுக்கிட்டுச் சொல்லியிருக்க வேண்டும்.

திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து : துணைத் தலைவரவர்களே, கொள்கைக் குறிப்பின்மீது நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்களின் பெயர் இல்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேச வேண்டுமென்றால், கொரடா மூலம் பெயர் கொடுத்து, பேசுவதற்கு அனுமதியுங்கள். அடுத்து யார் பேச வேண்டுமோ அவரை அழைத்தால், விரைவிலே கொள்கைக் குறிப்பின்மீதான விவாதம் முடியும்.



* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத் துறை கொள்கைக் குறிப்புமீதும், பிற்பட்டோர் நலத் துறை கொள்கைக் குறிப்புமீதும் ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்லுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஜாதியற்ற சமுதாயம் நாட்டிலே உருவாக வேண்டு மென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆதி திராவிடர்கள் ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டுமென்றோ, பிற்பட்டோர் பிற்பட்டோராக இருக்க வேண்டுமென்றோ யாருமே விரும்புவதில்லை. ஆனால் அமுக்கி வைக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அடக்கி வைக்கப்பட்டவர்கள் முன்னேறு கின்ற வகையிலே அவர்களுக்கு என்று சில சலுகைகளைத் தர வேண்டுமென்ற அடிப்படையிலே அவர்களைப் பற்றி விரிவாக விவாதித்து, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். ஆகவே அதைப்பற்றி எடுத்துச் சொல்லும்போது, இவர்கள் இந்த ஜாதிக்காரர்களோ, இவர்களுக்கு வக்காலத்து வாங்கிச் சொல்லுகிறார்களோ என்று மற்றவர்கள் விமர்சனம் செய்தால், அது நம்முடைய நாட்டுக்கு நலமாக இராதென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆதி திராவிடர் நலத் துறை கொள்கைக் குறிப்பின்மீதான விவாதத்தில் நான் அரசியல் பேச விரும்பவில்லை. ஆசிரியர்களுடைய குறை இதிலே நிறைய இருக்கிறது. அந்த அடிப்படையிலே என்னுடைய கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறையிலே 843 தொடக்கப் பள்ளிகளும், 79 நடுநிலைப் பள்ளிகளும், 21 உயர்நிலைப் பள்ளிகளும், 4 மேல்நிலைப் பள்ளிகளும் ஆக மொத்தம் 947 பள்ளிகள் இருக்கின்றன. மாணவர் இல்லங் களுடன்கூடிய தொடக்கப் பள்ளிகள் 109-ம், நடுநிலைப் பள்ளிகள் 11-ம், உயர்நிலைப் பள்ளிகள் 2-ம், மேல்நிலைப் பள்ளிகள் 3-ம் இருக்கின்றன. மாணவர் இல்லங்கள் இல்லாத பள்ளி ஒன்று என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளி தொடக்கப் பள்ளியா, உயர்நிலைப் பள்ளியா, மேல்நிலைப் பள்ளியா என்ற விவரமில்லை. அந்த விவரத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக ஆதி திராவிடர் நலத் துறையைப் பொறுத்தவரை, ஆசிரியர் களுக்கு அந்தத் துறையிலே இருக்கக்கூடிய குறைபாடுகளை இப்போது இருக்கின்ற அமைச்சரவர்கள் மிகத் துரிதமாகப் பரிசீலித்து, அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நான் உண்மையிலேயே அதைப் பாராட்டுகிறேன். அந்தத் துறை சிறப்பாக நடக்கிறதென்ற பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் சில ஆலோசனைகளைச்

சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை ஏற்று, அவற்றைச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டுமென்று, துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். மாவட்டந்தோறும் அரிசன நலத் துறைப் பள்ளிகளின் நிர்வாகங்களெல்லாம் இப்போது வருவாய்த் துறையுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. வருவாய்த் துறையிலே இருப்பவர்களுக்கு அவர்கள் பணியை ஆற்ற அவகாசம் இருக்கிறதே தவிர, இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்ய அவகாசமில்லை. ஆகவே அரிசன நலத் துறைப் பள்ளிகளை ஒரே யூனிட்டாக மாநில ரீதியில் மாற்றி, அதை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இயக்குநர் அவர்களின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர வேண்டும். வருவாய்த் துறையிடம் ஒப்படைக்காமல், இயக்குநரின் நேரடி நிர்வாகத்தில் கொண்டுவர வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையின்கீழ் மேல்நிலைப் பள்ளிகள் நான்கு இருக்கின்றன. 1978-க்குப் பின்னாலே மேல் நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட்ட பிறகு, +2 வகுப்புகள் சிறப்பாக நடப்பது அவசியமென்று உணர்ந்தாலும், சேலம் மாவட்டத்தில் முல்லுக்குறிச்சி, நெல்லை மாவட்டத்தில் நல்லம்மாள்புரம், குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை இந்த மூன்று மேல்நிலைப் பள்ளிகளிலே தலைமை ஆசிரியர்கள் இல்லை. முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. அந்தத் துறையிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல், தலைமையாசிரியர்கள் இல்லாது, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லாது மேல்நிலைக் கல்வி நடக்கிறதென்றால், அந்தக் கல்வியின் தரம் எப்படி உயருமென்று கேட்க விரும்புகிறேன். அரசு ஆணை 720, கல்வித் துறை, நாள் 28—4—1981-ல் போடப்பட்ட அரசாணை அரிசன நலத் துறையில் பின்பற்றப்படவில்லை என்பதை எடுத்துக் காட்டி, இந்தக் குறைபாட்டை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் பயின்றால், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கும், 500 மாணவர்கள் பயிலும் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கும் இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன நலத் துறையிலே நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை நிறைய சொல்லப்பட்டது. நடுநிலைப் பள்ளிகள் 79 இருக்கின்றன. அந்தப் பள்ளிகளில் ஏவலர்கள், காவலர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் இருந்தால்தான், பள்ளிகள் சரியாகச் செயல்படும். அவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கல்விச் சுற்றுலாவிற்கு, உயர் நிலைப் பள்ளி ஒன்றுக்கு 1,000 ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். உயர் நிலைப் பள்ளிக்கு 1,000 ரூபாய் ஒதுக்கியிருப்பது ஆண்டாண்டாக வழக்கமாக ஒதுக்கப்படும் தொகையாகும். இப்போதும் அதையே ஒதுக்கியிருக்கிறார்கள். அது போதாது. ஆயிரம் ரூபாய் என்பதை 2,000 ரூபாயாக உயர்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல நடுநிலைப் பள்ளி தொடக்கப் பள்ளி மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்ல 1,000 ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்கள் வெளி உலகம் தெரியாத சூழலில் வளர்க்கப்பட்டவர்கள். அவர்கள் கல்விச் சுற்றுலா சென்றால்தான், பொது அறிவு வளருமென் அந்தப் பள்ளிகளுக்கும் 1,000 ரூபாய் ஒதுக்கியும், உயர் நிலைப் பள்ளிகளுக்கு உயர்த்தியும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலாவிற்கு என தனி ஊர்தி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறை கல்விப் பிரிவுக்கு, இப்போது இருக்கும் இயக்குநரின்கீழே கல்வி இலாக்கா சார்பில் துணை இயக்குநர் இருக்கிறார். அதை வரவேற்கிறேன். அப்போதுதான் அது சிறப்பாகச் செயல்படும். மாவட்டங்களிலும் மாவட்டக் கல்வி அதிகாரி, பள்ளித் துணை ஆய்வாளர்களை அந்தத் துறை நியமிக்க வேண்டும். அரிசன நலத் துறையிலே மாவட்டக் கல்வி அதிகாரிகள், பள்ளித் துணை ஆய்வாளர்கள் இருந்தால்தான், சிறப்பாகச் செயல்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துறை

(முற்பகல் 11-20)

யிலுள்ள ஆசிரியர்களில் தகுதி வாய்ந்தவர்களை அப்படிப்பட்ட பணிகளில் நியமிக்க வேண்டும். பள்ளிகளில் இன்றைக்கு சரிவர ஸ்டேஷனரி சப்ளை செய்யப்படுவதில்லை. சப்ளை செய்யப்படாத பள்ளிகளில் சப்ளை செய்ய முயற்சிக்க வேண்டும். போதிய அளவு சப்ளை செய்யப்படாத பள்ளிகளுக்கு சப்ளையின் அளவை உயர்த்த வேண்டும்.

மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே பள்ளிகளில் இத்திட்டம் ஒப்பந்த முறையில் அமுல்படுத்தப்பட்டு வந்தது. இப்போது இந்தப் பொறுப்பைத் தலைமையாசிரியர்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள் இதனால் தலைமையாசிரியர்கள் மாணவர்களுக்கு உணவைத் தயாரிக்கத்தான் முடிகிறது. கல்வியின் தரத்தை உயர்த்த அவர்கள் அதில் கவனத்தைச் செலுத்த முடியவில்லை. 100 கோடி ரூபாய் செலவிட்டு 2 வயது முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கும் திட்டத்தை அமுல்படுத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மதிய உணவுத்

திட்டத்திற்கு இப்போது ஒவ்வொரு மாணவனுக்கும் குறைந்த அளவு செலவு தான் செய்யப்படுகிறது. ஆனால் சத்துணவுத் திட்டத்தை அமுல்படுத்தும் போது, மதிய உணவுத் திட்டத்தில் கொடுப்பதை விட இதில் கொடுக்கப்படும் உணவு சத்துணவாக இருக்கும். ஆதலால் மதிய உணவுத் திட்டத்தையும், சத்துணவுத் திட்டத்தையும் ஒன்றாக்கி இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், மதிய உணவுத் திட்டத்தை விட சத்துணவுத் திட்டத்தில் நல்லமாதிரி உணவு அளிக்கப்பட்டால், சத்துணவு அளிக்கப்படும் இடத்திற்கு மாணவர்கள் ஓடிவிடுவார்கள். பள்ளிஇருக்கு அருகிலேயே இத்திட்டத்தை செயல்படுத்தி பள்ளி மாணவர்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டும் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக தலைமையாசிரியர் கள் பொறுப்பிலிருந்து மதிய உணவை மாற்ற வேண்டும் ; கல்வித் தர உயர்வு கருதி நடைமுறைப்படுத்த வேண்டும் தலைமையாசிரியர்களிடத்தில் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கக்கூடாது.

அடுத்து, காப்பாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் 24 மணி நேரமும் சிறைக் கைதிகளைப்போல பள்ளிகளிலேயே இருக்க வேண்டியிருக்கிறது. அவர் களுக்குக் குடியிருப்பு வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். 24 மணி நேரமும் அவர்கள் பள்ளியில் இருப்பது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. எட்டு மணி நேரம் என்றால், அவர்களுக்கு வசதியாக இருக்கும். அந்த வகையில் உதவிக் காப்பாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மேல் நிலைப் பள்ளி, உயர் நிலைப் பள்ளி, இப்படிப்பட்ட பள்ளிகளில் பணியாற்றுகின்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரி யர்கள் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் தனித்தனியாக மாநில அளவில் பணி மூப்புப் பட்டியலொன்று தயாரிக்க வேண்டும். அதனடிப்படையில் பதவி உயர்வு அளிக்க வேண்டும் இப்போது பணி மூப்புப் பட்டியல் அடிப்படையில் பதவி உயர் கொடுக்கப்படாததால், பணிக் காலம் மிகவும் குறைவாக உள்ளவர் கள் கூட பணிக்காலம் அதிகமாக உடையவர்களைவிட அதிகமான அளவில் பதவி உயர்வு பெற்று விடுகிறார்கள். இதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, கல்லூரி விடுதிகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். இந்தத் துறையில் உள்ள ஆசிரியர்களை இப்பதவியில் நியமிப்பதால், சாதாரணமாக ஆசிரியர்களுக்குரிய சலுகைகளான தேர்வை நடத்துவது, பேப்பர்களைத் திருத்துவது போன்ற பணிகளை இழந்து பண இழப்புக்கு





ஆளாகிறார்கள். எனவே வருவாய்த் துறை, நலத் துறை போன்ற துறைகளில் அதிகாரிகளாக இருப்பவர்களை கல்லூரி விடுதிகளில் நியமித்து காப்பாளர் களாக இப்போது அங்கு பணியாற்றுபவர்களை ஆசிரியர்களாக மீண்டும் நியமிக்க வேண்டும்.

அடுத்து, அரசு ஆணைகளைச் செயல்படுத்துவதைப் பொறுத்தவரையில், அவ்வப்போது காலா காலத்தில் செயல்படுத்தி வந்தாலும் கூட, சில நேரங்களில் காலதாமதம் ஏற்பட்டுவிடுகிறது. அதைத் தவிர்க்க கல்வித் துறையில் ஆணைகள் வெளியிடப்படும். அதே வேளையில் இத்துறையிலும் ஆணைகள் வெளியிடப்பட வேண்டும். ஆசிரியர்களை இத்துறையில் அடிக்கடி மாறுதல் செய்கிறார்கள். எல்லாப் பகுதியிலும் இப்படிச் செய்யவில்லை. சில மாவட்டங்களில் இப்படிச் செய்கிறார்கள். ஜாதி, மதம், பணம் இவற்றின் அடிப்படையில் பணிபுரிந்துகொண்டிருக்கின்ற ஆசிரியர்களை ஆண்டின் இடையிலேயே கூட மாறுதல் செய்கிறார்கள். இதுகுறித்து அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றன என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமை களையெல்லாம் அரசு தவிர்க்க வேண்டும். அதுபோல் காலாகாலத்தில் மாணவர்களுக்கு சிலேட்டுகள், புத்தகங்கள், நோட்டுகள் போன்றவை வழங்கப்பட வேண்டும். இதற்குரிய ஏற்பாட்டினை விடுமுறைக் காலத்திலேயே செய்து, பள்ளிக்கூடம் திறந்ததும் வழங்க வேண்டும். பள்ளிக்கூடம் திறந்த பிறகு, 6 மாதம், 9 மாதம் கடந்த பிறகு வழங்குவது சரியல்ல.

நலத் துறை அலுவலகத்தைப் பொறுத்தவரையில் பார்த்தால், அது தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக இருக்கிறதல்லவா, அதனால் தான் எங்கோ ஒரு மூலையில் கொண்டு வைத்திருக்கிறார்களோ என்கிற சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் நலத் துறை அலுவலகம் எங்காவது ஒரு மூலையில் தான் இருக்கிறது. அதைத் தேடித் தேடித் தான் கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது. கடைசியில் பார்த்தால், எங்காவது லெட்ரின் இருக்கிற பகுதியில் தான் இருக்கிறது. இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். போர்டைப் படித்துப் பார்த்த உடனேயே இதன் முக்கியத்துவம் தெரியும் வகையில் இருக்க வேண்டும். எல்லோரும் பார்க்கும்படியான, முக்கியமான இடத்தில் இந்த அலுவலகம் இருக்க வேண்டும். அனைத்து ஆசிரியர்களுக்கும் இத்துறையைப் பொறுத்தவரையில், குடியிருப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உள்ளபடியே ஒன்றை நான் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர்களுக்கு எல்லா உரிமையும் வேண்டும். அவர்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும். அதற்காகத் தான் நாம் அவர்களுக்கு (புரட்டக்ஷன்) பாதுகாப்பு தந்திருக்

கிறோம். இன்ன ஜாதி என்று ஜாதியின் பெயரைச் சொன்னாலேயே உடனே அப்படிச் சொன்னவர் மீது வழக்கு போடலாம். ஆனால் சில இடங்களில் அதிகாரிகளுக்குக் கீழே இருக்கிற சில ஊழியர்கள் அல்லது மேல் மட்டத்திலே இருப்பவர்களுக்குக் கீழே இருப்பவர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஆதி திராவிடர்களுக்கு பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக்கூட வழங்கப் பட்டிருந்த பாதுகாப்பு சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். வேண்டுமென்றே அந்தச் சட்டத்தை வேண்டாதவர்கள் மீது பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். அதற்கு ஆதாரம் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்க வேண்டும். குறைபாடுகளைக் களைந்து ஆதி திராவிட நலத் துறையைச் சிறப்பாகச் செயல்பட வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பிற்பட்ட நலத் துறையைப் பொறுத்தவரையில், ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்கிறேன். ஒரு ஜாதியின் பெயரைச் சொன்ன உடனேயே சொன்னவர் அந்த குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர் தான் என்பதல்ல. சில ஜாதிகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்றன. சோழிய வேளாளர் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. இந்தப் பிரிவு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவருக்கு 'இவர் இந்த ஜாதியைச் சார்ந்தவர்தான்' என்று சான்றிதழ் தந்தால், அதை தாசில்தார் அல்லது வருவாய்த்துறை அதிகாரிகளிடம் சென்று காட்டி, 'கம்யூனிட்டி சர்ட்டிபிகேட்' வேண்டுமென்று கேட்டால், அப்படிப்பட்ட ஒரு சான்றிதழைத் தருவது நடைமுறையில் வழக்கமாக இருந்து வந்தது. இப்போதுகூட பல பகுதிகளில் இப்படிப்பட்ட வழக்கம் இருக்கிறது. ஆனால் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பொறையாறு பகுதியிலுள்ள சோழிய வேளாளர் சங்கத்தார் குறிப்பிட்ட இந்த நபர் சோழிய வேளாளர் தான், அவர் பிற்படுத்தப்பட்டவர் தான் என்று கொடுக்கின்ற சான்றிதழின் அடிப்படையில், அங்குள்ள ரெவின்யூ அதிகாரிகள் 'கம்யூனிட்டி சர்ட்டிபிகேட்' வழங்க மறுக்கிறார்கள். "எஸ்.எஸ்.எல்.சி. புத்தகம் அல்லது வீட்டுப் பத்திரம் போன்றவைகளைக் கொண்டு வாருங்கள், அவைகளில் சோழிய வேளாளர் என இருந்தால்தான் ஏற்போம், இவைகளை ஏற்க மாட்டோம்" என்று ரெவின்யூ அதிகாரிகள் சொல்லுகிறார்கள். தாங்கள் தரும் சான்றிதழ்களுக்கு அந்த சங்கத்தினர் பொறுப்பேற்கவும் தயாராயுள்ளனர். எஸ்.எஸ்.எல்.சி. படிக்காத வர்களுக்கு இந்தச் சான்றிதழ் தேவைப்பட்டால், அவர்களுடைய நிலைமை என்ன? ஜாதிச் சான்றிதழ் தர நாங்கள் பொறுப்பேற்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட ஜாதியினர் இப்படிப்பட்ட சலுகை யைப் பிற்பட்டவர்கள் பெறுவதைப் பொறுக்கமாட்டாமல், உயர் ஜாதிக் காரர்கள் எனப்படுபவர்கள் அதிகாரிகளாக உள்ளதால், காழ்ப்புணர்ச்சியுடன்





இப்படி மறுத்து வருவதாகப் புகார் வந்திருக்கிறது. ஆகவே பழைய முறையில் 'கம்யூனிட்டி சர்ட்டிபிகேட்' வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி அவர்கள் ஜாதிச் சான்றிதழ் கொடுக்க மறுத்து வருவதால், தாசில்தார் அலுவலகம் முன்பும், ரெவின்யூ அலுவலர் அவர்கள் அலுவலகம் முன்பும் உண்ணாவிரதம் இருக்க ஏற்பாடு செய்திருப்பதாக துண்டு அறிக்கை கூட அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே இத்தகைய சீர்கேட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிற்பட்டோரிலும் மிகப் பிற்பட்டோர் அதாவது மோஸ்ட் பேக்வர்ட் என்று இருக்கிறார்கள். 1957-58-ல் தயாரிக்கப்பட்ட பிற்பட்டோர் பட்டியலில் கூட இதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பிறகு 1969 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு பிற்பட்டோரையும் மிகப் பிற்பட்டோரையும் குறித்து நிலையையும் ஆய்வு செய்து அறிக்கை தர ஐ.சி.எஸ். அதிகாரி சட்டநாதன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழுவின் அறிக்கை கூட வெளியிடப்பட்டது. அதிலே என்ன சொல்லப் பட்டிருக்கிறது என்பதைச் சொல்கிறேன். மிகப் பிற்படுத்தப்பட்டவர் களுக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் அளவு சலுகைகளை கல்வி, பொருளாதார, வேலைவாய்ப்புகளில் அளித்து அவர்களுக்கு போதிய வாய்ப்பு தர வேண்டும், எப்போதும் மிகப் பிற்படுத்தப்பட்டவர் களுக்கு முதலிடம் தர வேண்டும் என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் மிகப் பிற்படுத்தப்பட்டவர் களுடைய பட்டியலில் சிலவற்றை இங்கே படிக்க விரும்புகிறேன். அம்பலக்காரர், ஆண்டிப்பண்டாரம், பெஸ்தா சிவியர், பட்ராஜி, போயர் ஒட்ட, தாசரி, தொம்மாரா, ஏரவல்லார், இசைவேளாளர், ஜம்புவானோடை, ஜங்கமர், ஜோகி, கொங்கு செட்டியார், கொராச்சா, குலாலர், குன்னுவ மன்னாடி, குறும்பர், குருகினி செட்டி, மருத்துவர் அல்லது நாவிதர், மோன்டு, கொல்லர், மவுண்டன் செட்டி, மகேந்தர மேத்ரா, முட்டலகம் பட்டி, நரிக்குறவன், நோக்கர், வன்னிகுலக்ஷத்ரியர், பரவன், மீனவர் தோவது பர்வதராஜகுலம், வேட்டுவகவுண்டர், சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவ, சோழியசெட்டி, தெலுங்குப்பட்டி செட்டி, தொட்டிய நாய்க்கர், தொண்டைமான், வலையன், வண்ணான், வேட்டைக்காரன், யோகீஸ்வரர் போன்ற பிரிவுகள் மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்று வரையறுக்கப்பட்ட பட்டியலில் இருக்கின்றன. இவர்களுக்கெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படுவது போல் சலுகைகள் வழங்க வேண்டுமென்று இந்தக் குழு அறிக்கை கொடுத்திருக்கிறது. அதை சிலர் இன்றையதினம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லப்

படுகிறது. ஆகவே மிகப் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்ற மக்களை முன்னுக்குக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1971-72 வரை பிற்பட்டவர்கள் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் என்கிற முறையில் பட்டியல் வெளியிடப்படும் நிலைமை இருந்து வந்தது. இப்போது அந்த முறை மாறியிருக்கிறது. கல்வி, பொருளாதார, உத்தியோக வாய்ப்புகளில் அவர்களுக்கு என்று உள்ள உரிமையை அளிக்க வேண்டும். பிற்பட்டோர் நலத் துறையும், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவும் சில நேரங்களில் அப்பட்டியலை வெளியிடுகின்றன. சில நேரங்களில் வெளியிடாமல் இருக்கிற நிலை இருந்து வருகிறது. இன்றைக்கு பிற்படுத்தப்பட்டோருக்காக 50 சதவிகிதம் ஒதுக்கப்படுகிறது. இதில் 25 சதவிகிதத்தை மிகப் பிற்படுத்தப் பட்டோருக்கு வழங்குவதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிவெடுத்து வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு பிற்பட்டோர் நல வாரியம், நிதி வாரியம் போன்றவற்றின் முடிவுகளை உடன் அமுல்படுத்த வேண்டும். ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள சலவைத் தொழிலாளர், சவரத் தொழிலாளர், போயர், நரிக்குறவர், மீனவர், அச்சனி வேளாளர் போன்ற பிரிவினர் 'எங்களுடைய பெயர் தவறுதலாக பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுவிட்டது. எங்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேருங்கள்'' என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

இப்போது பிற்பட்டோர் நலத் துறையிலே மாணவர்களுக்கான இல்லங்கள் இருக்கின்றன. அந்த இல்லங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட விருக்கிறது என்றாலும் கூட, என்னுடைய தொகுதியின் சார்பிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன். தஞ்சாவூரிலே உள்ள பட்டுக்கோட்டை கல்வி மாவட்டத்திலேயுள்ள முத்துப்பேட்டையிலே பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆண்கள் மேல்நிலைப் பள்ளி என்ற அளவிலே பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. மூன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவியர்கள் அங்கே படிக்கிறார்கள். அவர்கள் நீண்ட தூரத்திலே இருக்கும் இடங்களிலிருந்து அந்தப் பள்ளிக்கு வந்து படிக்க



வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறார்கள். போக்குவரத்து வசதி இல்லாத இடங்களிலிருந்தும் வந்து படிக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களிலேயிருந்து வந்து படிக்க ரொம்ப சிரமப்படுகிறார்கள். ஆகவே, முத்துப்பேட்டையிலே பிற்படுத்தப்பட்டோர் மாணவ-மாணவியர் விடுதி ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே என்னுடைய ஊரான தலைஞாயிறை எடுத்துக் கொண்டால், அது மிகவும் பின்தங்கிய பகுதி, அதாவது 'மோஸ்ட் பேக்வேர்ட் ஏரியா'. அங்கே இருக்கும் பள்ளியில் வெகு தொலைவிலிருந்து மாணவர்கள் வந்து படிக்கிறார்கள். ஆகவே, பல்வேறு பகுதிகளிலேயிருந்து வரும் மாண வர்களுக்கு வசதியாக அங்கேயும் ஒரு விடுதி தொடங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாகை கல்வி மாவட்டத்தைச் சார்ந்த திருநெய்ப்பேர் என்ற ஊரிலே ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கே வந்து பயிலும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் பிற்படுத்தப்பட்டோராகவும், தாழ்த்தப் பட்டோராகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் வசதி அளிக்கும் வகையிலே அங்கேயும் ஒரு விடுதி கட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திலே அறந்தாங்கி கல்வி மாவட்டத்திலே சிவட்டூர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அது ஒரு தீவிலே இருப்பதுபோல இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வந்து படிக்கும் மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும் பெரும்பாலான மாணவர்கள் அங்கே வந்து படிப்பதற்கு போதிய வசதியின்மையால், அவர்கள் வந்து படிக்கவில்லை. ஆகவே, அங்கேயும் ஒரு விடுதி தொடங்க வேண்டும் என்று சொல்லி, என்னு டைய இந்த வேண்டுகோள்கள்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரை வான நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, நான் பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றிதெரிவித்து, அமைகிறேன்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பிற்பட்டோர் நலத் துறை, ஆதி திராவிடர் பழங்குடி மக்கள் நலத் துறைக் கான கொள்கைக் குறிப்பின் மீது நடக்கும் விவாதத்திலே கலந்துகொண்டு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதற்கண் பிற்பட்டோர் நலத்துறை கொள்கைக் குறிப்பு மீது சில கருத்துக்களைச் சொல்கிறேன். பிற்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை எப்போதுமே நல்ல எண்ணம் உடையவர்கள் பாராட்டுவார்கள். கடந்த சில

ஆண்டுகளில், பிற்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காக பல்வேறு நிலைகளில் எடுத்திருக்கும் நடவடிக்கைகள், அவர்களுடைய முன்னேற்றத்திற்காகச் செய்யப்பட்டிருக்கும் நிதி ஒதுக்கீடு, சலுகைகள் இவைகளைக் கொண்டு பிற்பட்டோர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஓரளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் பிற்பட்ட சமுதாயத்திற்காக எந்த இலட்சியத்துடன் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதோ, எந்த எண்ணத்தின் அடிப்படையிலே அந்தச் சலுகைகள் அளிக்கப்படுகின்றனவோ அந்தச் சலுகைகளைப் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அத்தனை பேரும் பயன்படுத்திக் கொண்டு சமூக-பொருளாதார முன்னேற்றத்தை அடைந்திருக்கிறார்களா என்று ஒரு கேள்வியைக் கேட்டால், பதில் திருப்திகரமான நிலையில் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்களுக்குக் கொடுக்கப்படும் இந்தச் சலுகைகளை அந்த வகுப்பைச் சார்ந்த ஒரு சிலர் மட்டும் பயன்படுத்திக் கொண்டு முன்னேறியிருக்கும் நிலைமையும், அதே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வேறொரு சிலர் அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு இன்னும் முன்னேறாமல் இருக்கும் நிலைமையும் இருக்கிறது. அதை அரசு மறுக்க முடியாது. இந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டு இதுவரையிலும் முன்னேறாமல் இருப்பவர்களுக்கு அரசு என்ன செய்ய வேண்டும் என்பதுதான் இனிமேல் அரசினுடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். இவ்வளவு சலுகைகளைக் கொடுத்தும் ஒரு சிலர் மட்டும் ஏன் பயன்படுத்திக் கொள்ளவில்லை ? அப்படி பயன்படுத்திக் கொள்வதிலே ஏதாவது முட்டுக்கட்டை இருந்தால், இந்தச் சலுகைகள் ஒதுக்கீடுகள் போன்றவைகள் செய்வதிலே, இந்தக் கொள்கையிலே ஏதாவது குறைபாடுகள் இருக்கின்றனவா என்று கண்டறிந்து, அவற்றைப் போக்க முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில வகுப்புகள் அல்லது ஜாதியைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குத் தனி ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்கிறார்கள். அப்படிக் கேட்கும் போது அவர்கள் ஏதோ ஜாதி உணர்வின் அடிப்படையிலேதான் அப்படிக் கேட்கிறார்கள் என்று நினைக்கக்கூடாது. அந்த ஜாதி நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அது முன்னேறாமல் இருந்ததன் விளைவாக ஏற்பட்ட உணர்வுக் கொந்தளிப்பின் விளைவாகத்தான்—அவற்றின் காரணமாகத்தான் அப்படி அவர்களுக்காகத் தனி இயக்கங்களை வைத்துக்கொண்டு கேட்கும் நிலை இருக்கிறதே தவிர வேறல்ல. அவைகள் உண்மையிலேயே ஜாதி வெறியில் நடைபெறும் இயக்கங்கள் அல்ல. இவ்வாறு தமிழ்நாட்டிலே ஒருசில இருக்கின்றன. அப்படி இருக்கும் அந்த இயக்கங்களின் பின்னணி, குறிக்கோள்,



அதற்கான காரணங்கள் என்னென்ன என்பதைக் கண்டறிந்து அப்படிப்பட்ட வகுப்பினருக்குத் தனி ஒதுக்கீடு செய்வது அவசியமானால், அதன்மூலம் அவர்கள் முன்னேற வாய்ப்பு இருக்குமானால், அரசு அப்படிச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேலவையிலே குறிப்பிட்டதைப்போல, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக என்று ஏற்கெனவே இருந்த தனிச் சலுகைகள், திட்டங்கள், ஒதுக்கீடுகள் போன்றவற்றை மீண்டும் செயல்படுத்தி, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் —— முன்னேறாத வகுப்பினரைச் சேர்ந்த அவர்களைக் கை தூக்கிவிடுவதற்கு, அவர்களை முன்னேற்றுவதற்கு அவர்களின் கல்வி, பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு நாம் துணை செய்ய முடியுமா என்ற கருத்தைக் குறித்து அரசு ஒரு நல்ல முடிவு எடுக்காவிட்டால், நாளுக்குநாள் இந்த இயக்கங்களுடைய எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போகும் நிலை ஏற்படும். அப்படி வளர்ந்துகொண்டு போகும் போது, அந்தப் பிரச்சினைகளை அரசு சந்தித்துத் தீரவேண்டிய ஒரு நிலைமை வரும். ஆகவே, இதிலே அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜாதி அமைப்பு மாநாடுபற்றிச் சொன்னார்கள். நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவன் அல்ல, இன்றையதினம் உதட்டளவிலே நாம் ஜாதி ஒழிப்பைப்பற்றிப் பேசினாலும் கூட, நம்மாலே உள்ளத்தளவிலே ஜாதியை ஒழிக்க முடியவில்லை. அது மிகப் பெரிய கேள்விக் குறி. வேண்டுமானால் நாம் உதட்டளவிலே சொல்லிக்கொள்ளலாம். அவரவர்களுக்கு அவரவர்களுடைய இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வு இருக்கிறது. சில நேரங்களிலே பாசத்தின் அடிப்படையிலே கைதூக்கிவிட வேண்டும் என்ற அந்த உணர்வும் இருக்கிறது. இன்னும் சிலர் அந்த உணர்வைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைத் தூண்டிவிட்டு அதன்மூலமாக ஆதாயம் தேடும் நிலைமையும் இருக்கிறது. இந்த ஜாதி உணர்வை இன்றைக்கு எல்லாக் கட்சிகளும் பயன்படுத்திக்கொள்கின்றன. இதற்கு எந்தக் கட்சியும் விதிவிலக்கல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: அரசியல் கட்சிகள் ஜாதியைப் பயன்படுத்துகின்றன என்று சொல்லுவதைவிட ஜாதிகள் அரசியல் கட்சிகளை ஆக்ரமிக்க வேண்டும், என்ற நிலைமைக்கு வந்திருக்கின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: ஆகப் பார்த்தால், இரண்டும் ஒன்றுதான். அரசியல் கட்சிகள் ஜாதியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அந்த முயற்சியிலே இருக்கும்போது, அதை சாதிக்காரர்கள் பயன்

படுத்துகிறார்கள் என்ற நிலைமையும் இருக்கிறது. இரண்டும் கிட்டத்தட்ட Recifroca என்ற அளவிலேதான் இருக்கிறது. ஜாதி மாநாடுகளிலே சில அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள். அதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் அப்படிப்பட்ட மாநாடுகளில் கலந்து கொள்ளும் போது கூட, இன்னின்ன கருத்துக்களைத்தான் சொல்ல வேண்டும் . . . .

திரு. க. இராமமூர்த்தி : ஜாதி மாநாடுகளிலே அமைச்சர்கள் கலந்து கொள்வதில் தவறில்லை. ஜாதி மாநாடுகள் நடத்தி எந்தக் கட்சிக்கு யார் தலைவராக இருப்பது, யார் அமைச்சராக இருப்பது என்று ஜாதி மாநாடுகள் நிர்மாணிக்க ஆரம்பித்தால், அது அரசியலாகவும் இருக்காது, ஜாதியாகவும் இருக்காது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஜாதி உணர்வுகள் காரணமாக ஏதாவது மாநாட்டிலே அப்படிச் செய்திருக்கலாம். அண்மையிலே நமது மதிப்பிற்குரிய சிவாஜி கணேசன் அவர்கள் எம். பி. பதவியைப் பெறுவதற்காக டெல்லிக்குச் சென்றபோது அவர்களை வாழ்த்தி அனுப்பப் போஸ்டர்கள் ஒட்டியபோதும் பிறகு மீண்டும் அவர் வரும்போது அவரை வரவேற்கும் அளவிலே போஸ்டர்கள் ஒட்டியபோதும் அவர்மீது அபிமானம் உள்ளவர்கள் அவர்களைக் குறித்து, வருங்கால அமைச்சர் அவர்களே, வருங்கால முதலமைச்சர் அவர்களே என்றெல்லாம் கூட போஸ்டர்கள் போட்டிருக்கிறார்கள். அவர்மீது அபிமானம் உள்ளவர்கள் போட்டு விட்டார்கள் என்பதற்காக அது. காங்கிரஸ் கட்சியினுடைய கருத்து என்று சொல்லிவிட முடியாது.

திரு. க. இராமமூர்த்தி : சிவாஜி கணேசன் அவர்கள் போகின்றபோதோ, வருகின்றபோதோ அவர் எந்தக் கட்சியிலே எப்படி இருக்க வேண்டும் என்று யார் விரும்புகிறார்கள் என்பது வேறு. ஆனால் ஜாதி மாநாட்டைக் கூட்டி காங்கிரஸ்சிலே இவர்தான் இருக்க வேண்டும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இவர்தான் இருக்க வேண்டும் அல்லது இந்த ஜாதியைச் சார்ந்தவர் கழகத்திலே இவர்தான் இருக்க வேண்டும் அல்லது அந்த ஜாதியைச் சார்ந்தவர் தான் இருக்க வேண்டும் என்ற அளவிலே ஒரு ஜாதியைச் சார்ந்தவர்கள்தான் தலைமைக்கு வரவேண்டும் என்று முயற்சி செய்வது ஜாதி உணர்வுகளை வளர்ப்பதாக இருக்காது. அது சமுதாய அமைதியைக் கெடுப்பதாகத் தான் இருக்கும்.



மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டுபேருமே ஒருவருக்கொருவர் பதில் சொல்லிக் கொண்டிருப்பது எந்த மரபின் அடிப்படையிலே என்று தெரியவில்லை. எந்த மரபின் அடிப்படையில் இந்தச் சபையை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அரசின் தாப்பிலே விளக்கம் சொல்வதைப் போல சொல்லிக் கொண்டிருக்கிறார். கொள்கை ரீதியிலே ஒரு கட்சியைக் குறிப்பிட்டோ அல்லது ஒரு உறுப்பினரைக் குறிப்பிட்டோ கருத்துக்களைச் சொல்லும்போது, அதற்கு பதில் சொல்லலாமே தவிர அவர் சொல்லும் ஒவ்வொரு கருத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்ல. நமக்கும் நிறைய கருத்துக்கள், எண்ணங்கள் இருக்கின்றன. அந்த ஒரு நடைமுறை வந்துவிட்டால், யாருமே சரியாகக் கருத்துக்களைச் சொல்ல முடியாது ; இப்படி விவாதத்திலேதான் போய்க் கொண்டிருக்கும் நிலைமை வரும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இவைகளையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் அந்தந்த ஜாதியைச் சார்ந்த கூட்டம் நடக்கும்போது, அந்தந்த ஜாதியின்மீது இருக்கும் அபிமானத்தால் சிலர் நம்மைச் சார்ந்தவர்கள் கல்வி அமைச்சராக வந்தால், நம்மைச் சார்ந்தவர்கள் முதலமைச்சராக வந்தால், என்ன என்று பேசுவது ஜாதி உணர்வின் அடிப்படையிலே. ஆனால் அது வரவேற்கத்தக்கதல்ல.

திரு. க. இராமமூர்த்தி: அபிமானம் என்பது வேறு. பேசுவது என்பது வேறு. ஆனால் ஏதோ பாதுகாப்பு என்ற அளவிலே நடப்பது என்பது வேறு.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எதைக் கண்டோ பயந்துபோய் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 11.40)

திரு. க. இராமமூர்த்தி : நான் பேசுவது வெளியே முழுக்கத் தெரிய வேண்டும் என்றுதான் இங்கே நான் பேசுகிறேன். இரகசியமாக இருக்க வேண்டும் என்று இங்கே பேசவில்லை. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதத்தின்போது எழுந்த சந்தேகத்தைத்தான் நான் கேட்டேI have never assumed the powers of the Government; nor do I like to assume it. அதை நான் விரும்பவுமில்லை, ஏற்பதுமில்லை. சில சந்தேகங்களைக் குறித்து அரசு சார்பில் கேட்காமல்

இருப்பது குறையாக இருக்கலாம். நான் அந்தச் சந்தேகங்களைக் கேட்பதாலேயே அது அரசின் குரலாக வந்துவிடாது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** அப்படிப்பட்ட எண்ணத்தில் நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்பதே அரசின் குரலாக இருக்கும் என்று நான் சொல்லவில்லை. ஓர் உறுப்பினர் பேசும்போது அவருடைய எண்ணம் ஒவ்வொன்றிற்கும் பதில் சொல்லுவதைப்போல இங்கே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது என்பது எப்படி மரபாக இருக்கும் என்றுதான் கேட்டேன். அதுவும் இந்தச் சம்பவத்தை மட்டும் வைத்துக் கொண்டு நான் சொல்லவில்லை. ஒரு கட்சியைச் சார்ந்தவர் ஒரு கருத்தைச் சொல்லுகிறபோது, நிச்சயமாக மற்ற கட்சியைச் சார்ந்தவர் தங்கள் கட்சியின் கொள்கை இதுதான் என்று விளக்கம் சொல்லலாம். ஆனால் இங்கே நடப்பது ஏதோ ஒரு "கான்வர்சேஷனில்" உட்கார்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் கருத்து பரிமாறிக் கொள்வதைப் போல் இருக்கிறதே. இதுவே இங்கே நடைமுறையாக வந்துவிடக் கூடாதே என்றுதான் நான் குறிப்பிடுகிறேன்.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்:** நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், நம் மனப்பான்மையில் ஒரு மாறுதல் ஏற்பட வேண்டும். அப்படிப்பட்ட அடிப்படையான மாறுதலை உள்ளத்திலே ஏற்படுத்த வேண்டுமென்றால் அதை எல்லோருக்கும் கல்வியைக் கொடுத்துத்தான் செய்ய முடியும். கல்வியைத்தவிர வேறு எதன் மூலமாகவும் இதைச் செய்ய முடியாது. தொடக்கப் பள்ளியிலிருந்து, உயர் நிலைப் பள்ளியிலிருந்து, மேல் நிலைப் பள்ளியிலிருந்து அனைத்து மட்டங்களிலும் நான் தெளிவாகச் சொல்ல முடியும். அங்கே உள்ள எந்த மாணவர்களிடமும், எந்த விதமான ஜாதி உணர்வும் ஏற்படுவதில்லை. அதற்கு மேல் கல்லூரிகளுக்குச் சென்ற பிறகுதான் சில ஜாதியைச் சார்ந்தவர்கள் மாணவர்களைப் பிடித்துக் கொண்டு தங்களுடைய ஜாதி இயக்கங்களில் ஈடுபடுத்துகிறார்கள். மாணவர்களாக இருக்கும்வரை உள்ளத்தில் தெளிவாக இருக்கிறார்கள். இதுதான் உண்மை. இதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். எனவேதான் சொல்கிறேன், கல்வி நிலையங்களைப் பொறுத்த வரையில் அங்கெல்லாம் ஜாதிகள் நுழையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அனைத்துக் கட்சிக்காரர்களின் பொறுப்பாகும். அதற்கு அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முன்வராவிட்டால், கல்வி நிலையங்களில் ஜாதி உணர்வுகள் தலை தூக்க ஆரம்பித்து, அதன் காரணமாக சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் அல்லது வேதனைப்படத்தக்க சம்பவங்கள் நடைபெற ஆரம்பித்துவிடும்.



கல்லூரியில் ஜாதிச் சண்டைகள் காரணமாக கொலை நடந்த சம்பவங்களைக் கூட நாம் அறிவோம். எனவே இதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூட்டுப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, கல்வி நிலையங்களில் எந்தக் காரணத்தைக் கொண்டும், ஜாதியை நுழைப்பதில்லை என்ற முடிவுக்கு வர வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் நான் வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

அடுத்து, மத்திய அரசு பிற்படுத்தப்பட்டோர் நலன்களைக் குறித்து ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்காக "மண்டல் கமிஷன்" என்ற ஒரு கமிஷனை நியமித்தது. அந்தக் கமிஷன் தன்னுடைய அறிக்கையை டிசம்பர் 1980-லேயே சமர்ப்பித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் 340 வது பிரிவு (3) ல் "இவ்வாறு அமைக்கப்படும் கமிஷன்களின் அறிக்கையையும், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கைகளையும் நாடாளு மன்றத்திலும், மாநிலங்களின் அவையிலும் வைக்க வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது நாம் மார்ச் 1982-ல் இருக்கிறோம். மண்டல் கமிஷன் அறிக்கையைப்பற்றி மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது, அந்த அறிக்கை என்னவாயிற்று என்று மாநில அரசு கேட்டதா என்று எனக்குத் தெரியவில்லை. இந்தக் கமிஷனை டெல்லியில் இருப்பவர்கள் நியமிக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அது அவர்களைச் சார்ந்த விஷயம் என்று விட்டுவிடக் கூடாது. இந்தியாவில் உள்ள அனைத்துப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன்களைப் பொறுத்து ஆய்வு செய்வதற்காக அந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டது. எனவேதான் மத்திய அரசோடு மாநில அரசு தொடர்புகொண்டு, அந்த அறிக்கையின்மீது மத்திய அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டது என்று கேட்டு, இங்கேயும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது ஏதோ மத்திய அரசுக்கு மட்டும் சம்பந்தப்பட்ட விஷயம் என்று ஒதுக்கி விட்டுவிடக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

அரசியல் சட்டத்தின் பிரிவு 16(4)ன்படி எந்தப் பிற்படுத்தப்பட்ட குடிமக்கள் அரசு அலுவலகங்களில் போதிய பிரதிநிதித்துவம் பெறாமல் இருக்கிறார்கள் என்று அரசு கருதுகிறதோ அப்படிப்பட்ட மக்களுக்கு அரசுப் பதவிகளில் தனியான ஒதுக்கீடு செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆக அரசியல் சட்டத்தின் விதிப்படி இப்படிப்பட்ட முறையை யாரும் தடுக்க முடியாது என்று திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்கும்போது, மத்திய அரசு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஏன் எந்தப் பதவிகளிலும் சலுகை அளிக்கவில்லை, ஏன் அவர்களுக்காக மத்திய அரசு பதவி

களில் தனியான ஒதுக்கீடு செய்யவில்லை என்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்க வேண்டும். எனவே இதைக் குறித்தும் மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு பிற்படுத்தப்பட்டவர்களுக்காக என்று மத்திய அரசு அலுவலகங்களின் பதவிகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டவர்கள் நலத் துறையில், இறுதியாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாணவர்களுக்கான உதவித் தொகையை வழங்கும் போது, அவர்கள் அதைப் பெறுவதில் தற்போது மிகப் பெரிய சங்கடங்கள் இருக்கின்றன. இதைக் குறித்து நான் மேலவையில் ஏற்கெனவே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன். பிற்படுத்தப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு என்று ஒரு அடையாள அட்டை கொடுக்கலாமா என்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று முன்பு எங்களிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் ஏன் இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது என்று தெரியவில்லை. மாணவர்களின் பெயர், அவர்களின் ஜாதி, வருவாய் ஆகியவைகள் அடங்கிய அட்டைகளை அவர்களுடைய புகைப்படங்களோடு ஒட்டிக்கொடுத்துவிட்டால், ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் ஸ்காலர்சிப் பெறுவதற்காக அதிகாரிகளிடம் சென்று கையெழுத்து வாங்கிக் கொண்டு வருவதில் சந்திக்கும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்க முடியும். தற்போது அவர்கள் அதிகாரிகளிடம் கையெழுத்து வாங்குவதற்குள் எவ்வளவு சங்கடத்தைத் தாங்க வேண்டியிருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும்: அவர்கள் எத்தகைய அவதிகளை அடைகிறார்கள் என்பதும், அதற்காக அவர்கள் எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்பதும் அவர் அறியாததல்ல. எனவே இந்த அடையாளச் சீட்டுத் திட்டத்தை வருகிற கல்வியாண்டிலிருந்தாவது செயல்படுத்துவதன் மூலம் பிற்படுத்தப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தங்களுக்குரிய சலுகைகளைப் பெறுவதில் ஏற்படும் தொல்லைகளைத் தவிர்க்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையைப் பொறுத்தவரையில், சில முக்கியமான கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன். இந்தத் துறைக்கென்று முக்கியமான பணிகளாக மூன்று பணிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதாவது கல்வி அளிப்பது, இரண்டாவது வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டை உருவாக்குவது, மூன்றாவது பொதுச் சுகாதாரம் மற்றும் வீட்டு வசதியைத் தேடித் தருவது என்பனவாகும். இதில் நான் கல்வியைப்பற்றிப் பேச விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசிய



கருத்துக்களை தவிர்த்து நிர்வாக நடைமுறை சம்பந்தமான சில கருத்துக்களை மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இதுகுறித்து நான் ஏற்கெனவே ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களிடமும் அதிகாரிகளிடமும் பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால், அவரிடமிருந்து தெளிவாக ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆதித் திராவிட நலத் துறையின் கீழ் இயங்குகிற பள்ளிகள் வருகிற கல்வி ஆண்டிலிருந்து கல்வித் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும், அதுபற்றி பரிசீலனை செய்யப்படும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் மேலவையில் தெரிவித்தார். திருச்சியில் பத்திரிகையாளர்களின் கூட்டத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாக ஒரு கருத்து அண்மையில் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. அதாவது வருகிற கல்வியாண்டிலிருந்து ஆதி திராவிட நலத் துறைப் பள்ளிகளை கல்வித் துறையில் ஏற்று நடத்தத் தீர்மானித்திருப்பதாக அந்தச் செய்தியில் போடப்பட்டிருக்கிறது. ஆக, அரசின் பரிசீலனையில்தான் இது இருக்கிறதா அல்லது இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, அரசு ஒரு கொள்கை ரீதியான முடிவெடுத்திருக்கிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் விளக்கம் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்தப் பள்ளிகள் அனைத்தையும் கல்வித் துறையின் கீழ் ஏற்றுக் கொள்வதை நான் கொள்கை ரீதியாக ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன். ஆனால் அப்படியே கல்வித் துறையின் கீழ் எடுத்துக் கொள்வதானாலும், ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் இந்தப் பள்ளிகள் அனைத்தையும் ஒரு தனி யூனிட்டாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையிலேயே ஒரு தனிப் பிரிவாக இவை நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இப்போது கிடைக்கிற சலுகைகள் தொடர்ந்து கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இல்லையென்றால், நலத்துறையின்கீழ் இருக்கிற பள்ளிகளில் உள்ள ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சம் இருக்கிறது. எனவே ஆரம்பக் கட்டத்திலிருந்தே இவைகளைத் தனியாக— ஒரு சில ஆண்டுகளுக்காவது வைத்திருக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அதோடு இன்னொரு கருத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நலத் துறைப் பள்ளியில் பி.டி. அசிஸ்டென்ட் மற்றும் டியூட்டர்-கம்-வார்டன்ஸ் என்ற பதவிகள் சமநிலையில் இருக்கின்றன. சில நலப் பள்ளி

களில் பட்டதாரி ஆசிரியர்கள் டியூட்டர்-கம்-வார்டன்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு பதவிகளுமே (Inter-transferable) என்ற முறையிலே இத்தகைய மாற்றங்கள் நடைபெறுகின்றன. அதன் காரணமாக பட்டதாரி ஆசிரியர்கள் விடுதிகளில் தற்போது வார்டன்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய பள்ளிகளை கல்வித் துறையின் கீழ் கொண்டு வரும்போது, தற்போது ஹாஸ்டல்களில் பணியாற்றும் டியூட்டர்-கம்-வார்டன்கள் கல்வித் துறையின் கீழ் இருப்பார்களா அல்லது நலத்துறையின்கீழ் இருப்பார்களா ? பள்ளிகள் மட்டுமே கல்வித் துறையின் கீழ் இருக்குமா அல்லது விடுதிகளும் கல்வித் துறையின் கீழ் இருக்குமா என்று தெரியவில்லை. ஒருவேளை விடுதிகள் மட்டும் நலத்துறையின்கீழ்தான் இருக்கும் என்றால், அங்கே இருக்கிற டியூட்டர்-கம்-வார்டன்களாகப் பணியாற்றுபவர்களில் விடுதிகளில் பணியாற்ற விரும்பாமல், ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களில் அங்கே பணியாற்ற விரும்பாமல் பள்ளிகளில் ஆசிரியர்களாக பணியாற்ற விருப்பம் தெரிவித்தால் அவர்களையெல்லாம் பள்ளிகளுக்கே அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆக வார்டன்களாக வேலை செய்ய விருப்பமில்லாதவர்களை மீண்டும் ஆசிரியர்களாக பள்ளிகளுக்கே அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் டியூட்டர்-கம்-வார்டன்களாகப் பணியாற்றுகிறவர்கள் படுகிற தொல்லைகளைப் பற்றி நான் நன்றாக அறிவேன். அவர்கள் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாகப் பல காரியங்களைச் செய்யத் தூண்டப்படுகிறார்கள். அதுபற்றிய விரிவான விவாதத்திற்கு நான் போக விரும்பவில்லை. கல்விப் பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு ஆசிரியர்களாக இருக்க விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு அரசு ஒரு opticn. கொடுக்கவேண்டும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஹரிஜன நலத் துறையில் கல்விப் பிரிவிற்காக ஒரு துணை இயக்குநர் இருக்கிறார். கல்விக்காக கல்வித் துறையில் இருந்து அனுப்பப்பட்ட அதிகாரி அவர். நலத் துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும் முழுக்க முழுக்க அரசு ஊழியர்களாவார்கள். அவர்களுக்கு இத்தனையாண்டு காலமாக ஏதாவது பதவி உயர்வு வழங்கப்பட்டதா என்றால் இல்லை. சில ஆண்டுகளாக நான் வற்புறுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இது பற்றி விவாதித்து இறுதியில் ஒரு முடிவெடுக்கப்பட்டது. அதாவது முதலில் பரிட்சார்த்தமாக தென்னார்க்காடு மாவட்டத்தில் 3 பள்ளித் துணை ஆய்வாளர்கள் பதவிகளை ஏற்படுத்தி, அது செயல்படும் நிலையைப் பார்த்து, அதன் சாதக பாதகங்களைப் பார்த்து, பின்னர் மற்ற இடங்களுக்கு விரிவுபடுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்காக 5.11.1981ல் அரசாணை எண்



844 போடப்பட்டது. ஆனால் அந்த 3 பள்ளித் துணை ஆய்வாளர்கள் பதவிகளும் கல்வித் துறையிலிருந்துதான் நிரப்பப்பட வேண்டும் என்று அந்த அரசாணையில் போடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11—50)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

அதைப் பற்றிய மறுப்பை நான் 4—12—1981 அன்று சமூக நலத் துறை செயலாளருக்கு அனுப்பினேன். 11—12—1981 அன்று அதற்கான பதில் வந்திருக்கிறது. அந்த ஆணையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துவிட வேண்டுமென்று அதில் கேட்டிருந்தேன். பள்ளித் துணை ஆய்வாளர் பதவிக்கு ஏன் கல்வித் துறையிலிருந்து போடுகிறார்கள் ? அது பதவி உயர்வுக்குரிய பதவி அல்ல.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஏற்கெனவே அதிக நேரம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். இருந்தாலும் முடித்து விடுகிறேன். டெபுடி இன்ஸ் பெக்டர் பதவிக்குத் தேவையான அடிப்படைத் தகுதி என்னவென்றால், டி. ஓ. டெஸ்டும், அக்கவுண்ட் டெஸ்டும்தான். இந்த இரண்டு டெஸ்டுகளையும் 'பாஸ்' பண்ணியிருந்தால் அவர்களை நாம் நியமிக்கிறோம். It is a combined cadre. ஆகவே டெபுடி இன்ஸ்பெக்டர் தேர்விலும், அக்கவுண்ட் டெஸ்டிலும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் நலத் துறையிலேயே இருக்கும்போது அவர்களை அந்தப் பணிக்குத் தேர்ந்தெடுக்காமல் கல்வித் துறையிடம் ஒப்படைத்திருப்பது என்ன நியாயம் என்பதுதான் கேள்வி. இன்றுவரை அந்த அநீதி களையப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கொடுக்கும்போது, இதுகுறித்து நல்ல செய்தியைச் சொன்னால் நான் மகிழ்ச்சி அடைவேன். அந்த ஆணையைத் திரும்பப் பெற்று மீண்டும் நலத் துறையிலேயே இருந்து ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறைக்குக் கல்வி அதிகாரிகள் பதவியை ஏற்படுத்த வேண்டும் என்றும், கல்வித் துறையிலிருந்து அனுப்புகிற டெபுடி டைரக்டர் பதவிகளைக் கூட நலத் துறையிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து நிரப்ப வேண்டும் என்றும், கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது குறித்தும் பரிசீலித்து நல்ல முடிவு எடுக்க வேண்டும். நகராட்சிகளிலும்

மாநகராட்சிகளிலும் கல்வி அதிகாரிகள் பதவிகளை ஏற்படுத்தி அவைகளைச் செம்மையாக நடத்தி வருகிறார்கள். அந்த நல்ல ஏற்பாட்டை இங்கேயும் ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளியின் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எவ்வளவுதான் திட்டங்கள் போட்டு பணத்தை ஒதுக்கினாலும், அந்தப் பணம் உருப்படியாகப் போய்ச் சேருகிறதா என்பதை தயவு செய்து அரசு பரிசீலனை செய்ய வேண்டும். பல பள்ளிகளில் இட வசதி கிடையாது, மேசை, நாற்காலிகள் கிடையாது, கரும்பலகைகள்கூட கிடையாது. கரும்பலகை இல்லாமல் எப்படி பாடத்தை நடத்துவது? Blackboard is the most essential aspect of education. கரும்பலகை இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே ஒவ்வொரு பள்ளிக்கும் கரும்பலகையை அளிக்க வேண்டும்.

இப்போது மதிய உணவுத் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அதிலே நலப் பள்ளி ஆசிரியர்களை ஈடுபடுத்துகிறோம். ஆனால் கல்வித் துறையிலே ஆசிரியர்கள் இந்தப் பணிகளில் ஈடுபடுவதில்லை. ஆசிரியர்களும், தலைமையாசிரியர்களும் இப்படிப்பட்ட பணிகளில் ஈடுபடும்போது, கல்விப் பணி பாதிக்கப்படுகிறது. இந்தப் பணியிலிருந்து ஆசிரியர்களை விட்டுவிட வேண்டும். இதற்கென்று தனியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கல்வித் துறையில் உள்ள மைய சமையல் அறைகளுடன் இதை இணைத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையில் மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரிபவர்களுக்கு என்று தனியாகப் பணி விதிகள் இருக்கின்றன. அந்த விதிகள் நலத்துறையினருக்கும் பொருந்தும். ஆனால் அவைகள் செயல்படுத்தப்படுவதில்லை. கல்வித் துறையில் வெளியிடப்பெற்ற பணி விதிகளை நலத் துறைப் பள்ளிகளுக்கும் அமுல்படுத்த வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகத்திலே எந்த அளவிற்குத் தேக்கம் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நலத் துறையில் 4 மேல் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அப்பள்ளிகளில் தொழில் கல்வியை ஆரம்பிப்பதில் ஆரம்பத்தில் ஆர்வம் காட்டவில்லை. பெரிய முயற்சிக்குப் பிறகு 1978—79ஆம் ஆண்டில் செயலகப் பயிற்சியைத் துவங்க குறிப்பு அனுப்பப்பட்டது. அதற்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். பிறகு மானியம் வழங்கப்படாததால், இடையிலே ஆண்டு இறுதியில், வகுப்புகள்





மூடப்பட்டு வேறு வகுப்புகளுக்கு மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள். பிறகு தாமதமாக 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. இது போதாது என்று தெரிவித்த பிறகு, 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. (அரசாணை எண் 703, நாள் 11—9—1980). ஆனால் இன்றுவரை அந்தச் செயலகப் பயிற்சிக்கான கருவிகள் வாங்கப்படவில்லை. உதாரணத்திற்குச் சிதம்பரத்திலே உள்ள இரண்டு மேல் நிலைப் பள்ளிகள், அரசு நந்தனார் ஆண்கள் மேல் நிலைப் பள்ளி, அரசு நந்தனார் பெண்கள் மேல் நிலைப் பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளிலும் இப்படிப்பட்ட தேக்க நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேச வேண்டும். அதற்குப் பிறகு இரு அமைச்சர்கள் பதில் அளிக்க வேண்டும். ஆகவே விரைவாக முடிக்கவும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கூடுதலாகப் பேச வேண்டும் என்று கேட்டு தனிப்பட்ட முறையிலே அனுமதி வாங்கிவிட்டேன். முக்கியமான செய்திகளை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். Physics, Chemistry போன்ற பாடங்களை நடத்தும் ஆசிரியர் பதவிகள் சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் அதாவது தேர்வுக்கு 15 நாள் இருக்கும்போது தான் பூர்த்தி செய்யப்பட்டன என்றால், மாணவர்கள் எப்படி படிப்பார்கள்? சிதம்பரம் நந்தனார் பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் Biton, ஆசிரியருக்கான பதவி இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

மேல் நிலைப் பள்ளிகளில் அறிவியல் கூடங்களை ஏற்படுத்துவதற்காக 29—2—1982 அன்று போட்ட அரசாணையில் 6.2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ரூ. 1.57 இலட்சம் என்ற நிதியில் ஒதுக்கப்பட்டிருக்கிறது — அரசாணை எண் 158, நாள் 29.2.1980. அறிவியல் கூடங்கள் கட்டும் பணி என்னவாயிற்று என்று தெரியவில்லை. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்குப் பிறகும் நிதியைப் பயன்படுத்தாமலிருந்தால், மாணவர்கள் எப்படி முன்னேறுவார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

சிதம்பரத்திலே சுவாமி சகஜானந்தா என்பவரைத் தெரியாதவர்களே இல்லை. சமுதாய வளர்ச்சிக்காக தன்னுடைய வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டு தன்னுடைய காலத்திலே இரண்டு பள்ளிகளைத் துவக்கினார்,

மாநிலத்திலேயே அவைகள் மாடல் பள்ளிகளாக இருக்கின்றன. "கான்வென்ட்" என்ற முறையில் சிறந்த கல்வி அளிக்கும் கல்விக் கூடங்களாக ஆரம்பிக்கப்பட்டன. ஆண்கள் பள்ளியில் மூவாயிரம் பேரும், பெண்கள் பள்ளியில் 1,400 பேரும் இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், தொடக்கப் பள்ளியிலேயே ஆயிரம் மாணவர்கள் இருக்கிறார்கள். ஆகமொத்தம் 5,400 மாணவர்கள் ஒரே வளாகத்தில் படிக்கிறார்கள். இவர்களுக்குப் போதிய குடிநீர் வசதியில்லை. போதிய இடவசதியில்லை. குடிநீர் வசதிக்காக 90,000 ரூபாய் ஒதுக்கப்பட்டதாகத் தெரிய வந்தது. ஆனால் இன்னும் குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். இந்த மாதிரி காரியங்கள் நடைபெறும்போது, எப்படி ஆதி திராவிட சமுதாயத்தை முன்னேற்றுவது என்று நினைக்கும்போது, வருத்தமாக இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த மாநிலத்திலேயே மிகச்சிறந்து திகழ வேண்டிய பள்ளியில் இட வசதிகள் இல்லாமல் தண்ணீர் வசதி இல்லாமல் சுமார் 6,000 மாணவர்கள் அவதிப்படும் நிலைமைகளை உணர்ந்து வேண்டிய வசதிகளை உடனடியாகச் செய்து தரவும் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை உடனடியாகச் செலவு செய்யவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு நிகழ்ச்சியை இந்தச் சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அரசு ஆண்கள் நந்தனார் மேல் நிலைப் பள்ளியில் உள்ள சுப்பிரமணியம் என்ற தலைமையாசிரியர் தன்னுடைய வாழ்க்கையை மாணவர்களின் நலனுக்காக அர்ப்பணித்துக்கொண்டு, வாரத்தில் ஏழு நாட்களும், ஞாயிற்றுக் கிழமையில்கூட பள்ளியில் இருப்பதைப் பார்க்கலாம். அவர் திருமணம் கூட செய்து கொள்ளவில்லை. அந்த அளவிற்கு தன்னுடைய வாழ்க்கையை மாணவர்களின் நலனுக்காக தியாகம் செய்து அந்த மாவட்டத்திலே இருக்கின்ற மக்களுடைய, சமுதாயத் தலைவர்களுடைய, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பாராட்டைப் பெற்றவர். அவர் தலைமையாசிரியராக இருந்த காலத்திலே எப்படி மிகப் பெரிய சமுதாய மாற்றத்தைச் செய்தார் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆதி திராவிடர்களுக்காக இருக்கின்ற அப்பள்ளிகளில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்கூட போய்ச் சேர மாட்டார்கள். அவர்களுக்கென்று 20 சதவீதம் ஒதுக்கீடு செய்திருந்தாலும், அங்கே சென்று சேர்ந்தால், இழுக்கு என்று நினைத்த காலம் உண்டு. ஆனல் இவர் தலைமையாசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, அப்பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்தி



90, 95 சதவீதம் ரிசல்ட் எடுக்க கடுமையாக உழைத்து, ஞாயிற்றுக் கிழமையிலும் பள்ளிக்கு வந்து தியாக உணர்வோடு பணியாற்றியதன் பயனாக சிதம்பர நகரத்தில் இருக்கின்ற செல்வாக்கு படைத்தவர்களும், உயர்ந்த ஜாதிக்காரர்களும், சமுதாயத்தில் மேட்டுக்குடியில் இருந்தவர்களும், தங்களுடைய பிள்ளைகளை போட்டி போட்டுக்கொண்டு அந்தப் பள்ளியில் சேர்க்க சிபார்சுகளைப் பிடித்து மாறுதல் நிலைமை உண்டாயிற்று. இதுதான் சமுதாய மாறுதல். இந்தச் சமுதாய மாற்றத்திற்குக் காரணமாக இருந்த அந்தத் தலைமையாசிரியர் மாற்றப்பட்டிருக்கிறார். சென்ற ஆண்டு இதுபற்றி அமைச்சர் அவர்களிடம் விளக்கமாகச் சொன்னேன். அதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் சொல்லி சங்கடத்தை உண்டாக்க விரும்பவில்லை. அதையெல்லாம் விவரமாக அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லுகிறேன். தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவர் மாற்றப்பட்டிருக்கிறார். அமைச்சருக்குத் தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது. அவர் மனம் நொந்து ராஜினாமா செய்யப்போவதாகச் சொல்லியிருக்கிறார். சமாதானப்படுத்தி அப்படிச் செய்ய வேண்டாமென்று ஆலோசனை சொல்லியிருக்கிறோம்.

(நண்பகல் 12—00)

அப்படிப்பட்ட தலைமையாசிரியர் அந்தப் பள்ளிக்கூடத்திலே இருந்து வந்த பிறகு, என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அதிகாரிகள் மூலம் தெரிந்துகொள்ளலாம். இந்த ஒரு ஆண்டிலே என்ன நிலைமை என்று பார்த்தால் தெரியும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் எப்படி இந்த மாணவர் சமுதாயத்தை முன்னேற்றுவது என்பதை இந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாம் எண்ணிப் பார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இதுபோன்ற நிகழ்ச்சிகள் அரசினுடைய கவனத்திற்கு வரும்போது, அவற்றை கவனிக்க வேண்டும். இனிமேல் அவை வாராமல் தடுப்பதற்கும் இதுவரையில் நியாயம் நீதி வழங்கப்படாமலிருந்தால், அந்த நியாயத்தையும், நீதியையும் வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இதைச் சொல்கிறேன்.

புதிய செயலாளர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு, சில நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்லி, அவர்கள் அதில் தக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அதற்கு மகிழ்ச்சியடைகிறேன். அவருக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் இப்படி நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாகத்

நான் இந்தத் துறையினுடைய பெருமையை உயர்த்த முடியும். இந்தத் துறையின் மூலமாக வளர வேண்டிய, வாழ வேண்டிய, முன்னேற வேண்டிய ஆதி திராவிடர்கள் முன்னேறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இல்லாவிட்டால் இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாயை நாம் ஒதுக்கீடு செய்து செலவழித்தாலும் சரி, இதற்காக எத்தனை கோடிக்கணக்கான திட்டங்களைப் போட்டாலும் சரி, இந்தத் திட்டங்களுடைய பலன்கள் அந்த ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேராவிட்டால், அந்தப் பள்ளிக்கூடங்களிலே படிக்கின்ற மாணவர்களுக்குப் போய்ச் சேராவிட்டால், நாம் எதிர்பார்க்கின்ற சமுதாய இலட்சியம் நிறைவேற முடியாது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன். நான் சொல்லிய இந்தக் கருத்துக்களின்மீது அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அடுத்து, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். கல்வித் துறையிலே இருப்பதைப்போல, மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னதைப்போல, நலத்துறையிலேயும் கல்வித் துறையிலே இருக்கின்ற நியதிகளைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நலத்துறையிலே உள்ள பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கான மாநில அளவிலே பணி மூப்புப் பட்டியல் இதுவரையில், வெளியிடப்படவில்லை. இப்போது இருக்கின்ற டெபுடி டைரக்டர் அவர்கள் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கு என் பாராட்டுக்கள். அந்தப் பணி மூப்புப் பட்டியலை விரைவாக வெளியிட வேண்டும். அது வராமல் இருப்பதால் ஏற்படக் கூடிய நிர்வாக இடர்ப்பாடுகளை, குறைபாடுகளைச் சரி செய்ய வேண்டும். அதை வெளியிடவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுத்து ஆவன செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். சிதம்பரத்திலே உள்ள நந்தனார் பள்ளிகளிலே இருக்கக்கூடிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அந்தப்பகுதியிலே இந்தப் பள்ளிகள் மாநிலத்திலே மாடல் கல்லூரிகள் போல் இருக்கின்றன. சிதம்பரத்தில் அரிசனங்களுக்காக இரண்டு கல்லூரிகளை உறைவிட வசதிகள் பொருந்திய கல்லூரிகளை ஆண்களுக்கொன்று பெண்களுக்கொன்று உருவாக்க வேண்டும். அதிலே அதிகமான அளவுக்கு ஆதி திராவிட சமூகத்தைச் சார்ந்த மாணவ மாணவியர்கள் படிக்க வேண்டும். அவர்களுக்கு அதிகமான இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். அவர்கள் முன்னேறுவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று



மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவரை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளுக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி மீண்டும் நினைவுபடுத்தி நியாயத்தையும், நீதியையும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத் துறையின் பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும், ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறைப் பொறுப்பு ஏற்றிருக்கின்ற நலத் துறை அமைச்சர் அவர்களும் மேலவையிலே வைத்திருக்கின்ற இரு கொள்கைக் குறிப்புகளின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலும் நிறைய பிழைகள் இருக்கின்றன. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு கொடுத்துவிட்ட பிறகு. அதற்கான திருத்தங்கள் எங்களுக்கெல்லாம் அனுப்பப் பட்டு அதை நான் பார்த்தேன். அதிலே இவர்கள் திருத்தங்கள் நிறையக் கொடுத்திருக்கிறார்கள், நம்முடைய நிதியமைச்சர் அவர்களைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரிந்த காரணத்தாலே தெரிவித்துக்கொள்கிறேன். எழுத்துக்கு எழுத்து, வார்த்தைக்கு வார்த்தை அவர்கள் சொல்லி நாமெல்லாம் சிந்திக்கக் கூடிய வகையிலே இருப்பவர்தான். ஆனால் அவர்கள் தமிழ் நாட்டினுடைய நிதி அமைச்சராக பெரும் இலாகாவினுடைய பொறுப்பை கவனிக்கக் கூடியவர்கள். இந்தப் பிற்பட்டவர்கள் நலத் துறையினுடைய குறிப்புகள் அச்சிடப் பட்டு, அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு இங்கே கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குறிப்புகளை அவர் எப்படி படிக்காமல் விட்டுவிட்டார் என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பல திருத்தங்களுக்குப் பின்னாலேகூட இதிலே 14-வது பக்கத்திலே ஒரு பிழை இருக்கிறது. அதைப் படித்துப் பார்த்துவிட்ட பிறகு, என்னாலே புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. பிறகுதான் இதை படித்து அதைத் தெரிந்துகொள்ள வேண்டிய அளவுக்கு பிழைகள் இதிலே நிரம்ப இருக்கின்றன. இதை நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், தமிழகத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மக்கள், இன்று 1981-வது ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு வெளி வராவிட்டாலும் அது வந்த பிறகு 50 சதவிகிதத்திற்கு மேல் இருக்கக்கூடிய மக்களுடைய நலனை கவனிக்க வேண்டியவராக அவர்கள் இருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே இந்தத் துறையை அவர்கள் எந்த அளவிற்கு கவனிக்க வேண்டும் அவர்கள் இதிலே எந்த அளவிற்கு அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலம் தனியாகப் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக ஒரு இலாகாவையே உருவாக்கிய காலமாகும். அதுமட்டுமல்லாமல் இந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக தனியாக ஒரு அமைச்சரையும் நியமித்து இதற்காக நிதி ஒதுக்கீட்டையும் செய்து, இன்றைய தினம் அது வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. ஆனால் தமிழகத்திலே பெரும்பான்மையாக இருக்கக்கூடிய இனம் நலிந்த நிலையிலே இருக்கக்கூடிய பிற்பட்ட மக்களுடைய நலனைக் கவனிக்க தனியாகவே ஒரு அமைச்சர் இருக்க வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏன் தனியாக ஒரு அமைச்சரைப் போடவில்லை என்பது பற்றி எனக்குத் தெரியாது. அவர்களிடத்திலே பதவிக்கு ஆள் இல்லை என்று நான் சொல்லமாட்டேன். பதவி கொடுத்தால்தான் பதவிப் பிரமாணம்கூட எடுப்பேன் என்று சில பேர்கள் இருந்த செய்தியையும் நான் படித்திருக்கிறேன், பார்த்திருக்கிறேன். ஆகவே பதவிக்கு ஆட்கள் இருப்பார்கள். அப்படி இருந்தும் இந்தத் துறை கவனிக்கப்படாமல் விட்டுவிட வேண்டும் என்ற அலட்சியப் போக்கிலே இருக்கிறார்கள் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கழக ஆட்சி இருந்த காலத்தில், எப்படித் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் நலனில் நாம் கவனம் செலுத்தினோமோ அதுபோல பிற்படுத்தப்பட்ட மக்களைக் கைதூக்கி விட்டு, அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், சட்டநாதன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை அமைத்து மாநிலம் பூராவும் விசாரணை நடத்தி அதன் அறிக்கையை 1970-லே கொடுத்தார்கள். அந்த அறிக்கையிலே பல்வேறு கோரிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கணக்கிடப்படாமல் இன்றைக்கும் இருந்துகொண்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். இதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிக்கையைக் கொடுத்த உடனேயே, அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவிகிதம் என்பதை மாற்றி மற்ற துறைகளிலே கல்விச் சலுகைகளைப் பொறுத்தவரையில் 18 சதவிகிதம் என்றும் பிற்பட்ட சமுகத்தினருக்கு 25 சதவிகிதம் என்று இருந்தது 31 சதவிகிதம் என்றும் உயர்த்தப்பட்டது.

(பிற்பகல் 12-10)

இன்றைய தினம் 51 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். நான் பாராட்டுகிறேன். ஆனால் அந்த அறிக்கையிலே இன்னும் சொல்லப்பட்டிருக்கிற பல கொள்கைகள் நிறைவேற்றப்படாமல்





இருக்கக்கூடிய காரணத்தாலேதான், இன்று தமிழகத்தில் தங்களுடைய வகுப்பைச் சேர்ந்த வீட்டுப் பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கவில்லை, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்றவைகளில் இடம் கிடைக்கவில்லை என்ற மன ஏக்கத்தோடு இருக்கிறார்கள். இன்றையதினம் தமிழகத்தில் எப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். பன்னெடுங்காலமாக தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கிறார்கள்: பன்னெடுங்காலமாக தமிழகத்திலே தமிழர்களாலேயே அமுக்கிவைக்கப்பட்டுள்ள இந்த வகுப்பினருக்கு முக்கியத்துவம் வேண்டுமென்று நீதிக் கட்சி தோன்றுவதற்கு முன்பு பெரியார் அவர்களும், அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களும் குரல் கொடுத்து, வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்காகப் போராட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு, கொள்கைகள் வகுத்து, அவற்றைப் பெற்ற உரிமை திராவிட பாரம்பரியத்திற்கு உண்டு.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, சில பிரச்சினைகள் எழுந்தன. காங்கிரசில் ஏன் அரிசன பிரிவு என்று இருக்கிறதென்று கேட்க, அதற்கு திரு. இராமமூர்த்தி அவர்கள் அரிசன் நலனைப் பாதுகாக்கத்தான நாங்கள் அப்படி ஒரு பிரிவு வைத்திருக்கிறோமென்று சொல்ல, "அரிசன் என்று பெயர் வைத்து, ஒரு சாதியை ஏன் எதற்கு இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்; அதை நீங்கள் மாற்றவில்லை; நாங்கள் ஆதி திராவிடா என்று சொல்லிவிட்டோம், இப்படி சாதி பெயரிலே இருக்கக்கூடாது என்பது தான் எங்களுடைய இலட்சியம்; அதுதான் பேரறிஞர் அண்ணாவின் கொள்கை" என்று பேசினோம். தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் இல்லாவிட்டால், என்னதான் இந்தியா என்று பேசினாலும், தமிழ் நாட்டிலே சமத்துவக் கொள்கையை எடுத்துச் சொன்னாலும், இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும், முன்னேறிய வகுப்பினரும் தமிழ் நாட்டில் கைகோர்த்துக்கொண்டு, தோளில் கை போட்டுக்கொண்டு, சகோதர பாசத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலை உருவாகியிருக்காது. அந்த நிலை உருவாகியிருப்பதற்குக் காரணம், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் எடுத்துக் கொண்ட பெரு முயற்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட மாநிலங்களில்தான் காந்தி பிறந்தார், நேரு பிறந்தார். அங்கு பெரும் அரசியல் தலைவர்கள் பிறந்தார்கள். ஆனால் இன்றைக்குச் செய்தித்தாளில் பார்க்கும்போது, ஒரு ஊரிலே தாழ்த்தப்பட்ட மக்களைத் தீ வைத்துக் கொளுத்தினார்கள் அல்லது கொன்றார்கள் என்ற செய்தியைப் பார்க்க முடிகிறது. ஆனால் தமிழ்நாட்டில் அங்கொன்றும், இங்கொன்றும் தனிப்பட்ட முறையிலே

தகராறுகளாக உருவெடுத்து, பிறகு அதற்கு வர்ணம் பூசப்படும் சூழ்நிலைதான் இருக்கிறதே தவிர வேறல்ல. அந்த அளவிற்குப் பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் ஒரு சமுதாய மாற்றத்தை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையிலேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எப்படி 18 சதவிகிதம் இருக்கிறதோ, அவர்களுக்கு வேலைவாய்ப்பு, மற்ற துறைகளிலே எப்படி ஒதுக்கீடு செய்யப்படுகிறதோ அதைப்போல பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, வகுப்பு அடிப்படையிலே செய்யாவிட்டாலும், அந்த வகுப்புகளைச் சேர்ந்த வர்களுக்கு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி அல்லது உத்தியோகங் களில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் கிடைக்க வேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்கினார்கள். அதைத்தான் கலைஞர் அவர்கள் பின்பற்றினார்கள். நெருக்கடி நிலையில் அப்படிச் செய்யக்கூடாதென்று சொன்னாலுங்கூட, அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, எந்த வகையிலும் அவர்கள் பாதிக்கப்படாமல் பாதுகாத்துக்கொண்டிருந்த சூழ்நிலை அன்றைக்கு இருந்தது. ஆனால் இன்றையதினம் அப்படி கவனிக்கப்படாமல், பிற்படுத்தப்பட்ட மக்களிலே கொஞ்சம் முன்னேறியவர்கள், வசதி வாய்ப்பு படைத்தவர்கள், அரசியல் செல்வாக்கு பெற்றவர்கள் அல்லது பொருளாதாரத்தில் கொஞ்சம் முன்னேறி யவர்கள் மிகப் பெரும்பான்மையான நிலையில் இருக்கிற வகுப்பினருக்குக் கிடைக்கும் உரிமைகளைத் தட்டிப் பறித்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகி இருப்பதால், இன்றைக்கு பல அமைப்புகளிலிருந்து கோரிக்கைகள் உருவாகி கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான்கூட செய்தித்தாள் மூலமாக ஒன்றை அறிந்தேன். ஏற்கெனவே நூற்றுக்கும் மேற்பட்ட வகுப்பினர் பிற்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்ற நிலையில், மேலும் பலர் தங்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்கிறார்கள் ; இன்னும் சிலர் எங்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறச்செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்கள். பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கோரும் 27 சமூகத்தினருடைய முறையீடு அரசின் பரிசீலனையில் இருப்பதாக 'தினமணி' பத்திரிக்கையில் ஒரு செய்தி 8-3-1982 அன்று வெளி வந்திருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தேன். ஏற்கெனவே சட்டநாதன் அறிக்கையில், பிற்பட்டோர் பட்டியலில் நூற்றுக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள், இதிலே சிலர் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்று அவர் சுட்டிக்காட்டுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும், திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் எடுத்துச் சொன்னது போன்று, வன்னியகுல ஷத்திரியர், அக





முடையர், கைக்கோளர், மறவர், கம்மாளர், மருத்துவர், ஒட்டர், போயர், பர்வதகுல மீனவர், சாணார், கிராமணி ஒட்டர், வலையர், வண்ணார், யாதவர், இப்படி போன்ற வகுப்பினர் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். அவர்கள் ஏழ்மையான நிலையில் இருக்கிறார்கள்.

திரு. சி. இராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, தறிநெசவாளர் களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

திரு. சோ. ஆறுமுகம் : தேவாங்கரையும் சேர்த்துக்கொள்ளலாம்; பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் குறிப்பிட்ட சதவிகிதத்தை மிகவும் பின்தங்கிய இவர்களுக்கு ஒதுக்கி, வேலை வாய்ப்புகளில், மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்றவை களில் இடம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சொன்ன வகுப்புவாதப் பிரதி நிதித்துவம்தான் நம்முடைய கொள்கை. அது திராவிட இயக்கத்தின் வரலாறுங்கூட. வகுப்புவாத பிரதிநிதித்துவம் என்ற அடிப்படையிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படும்போது, நூற்றுக்கு மேற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுக்கொண்டு, அந்த ஒதுக்கீட்டைப் பெறுகிறார்கள். இதைச் சொல்லும்போது என்னை வன்னியர் என்று நினைத்துக்கொண்டாலும் அல்லது ஒட்டர், கைகோளார், சாணார், சலவைத் தொழிலாளி, முடி திருத்துபவர் இவர்களைப்பற்றிப் பேசினாலும், ஒருவேளை ஆறுமுகம் அப்படியோ என்ற கேள்வி வரக்கூடும். அதை நான் தமிழன் என்ற உணர்வோடு ஏற்றுக்கொள்கிறேன். நாம் அனைவரும் தமிழர்கள். அந்த அடிப்படையில் என்னைத் தாழ்த்தப்பட்டவன் , என்று சொன்னாலுங்கூட அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளக்கூடியவன் நான். இந்த வகுப்பினரும் சம அந்தஸ்து, சம பங்கீடு பெற வேண்டுமென்றால், இவர்களுக்கென்று ஒரு சதவிகிதத்தை ஒதுக்கிட வேண்டுமென்று திரு. சட்ட நாதன் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் கேரளா, ஆந்திரா, கர்நாடகா, காஷ்மீர் மாநிலங்களில்கூட ஒவ் வொரு வகுப்பிற்கும் மக்கள் தொகை அடிப்படையில் வாய்ப்புகள் கொடுப்ப தன்மூலம் ஜாதி எண்ணம் தோன்றாமல், நம்முடைய எண்ணிக்கைக்கேற்ப இடம் கிடைக்கிறதென்ற திருப்தி ஏற்படுகிறது.

(பிற்பகல் 12—20)

அவர்கள் ஜாதிச் சங்கங்களை நடத்தமாட்டார்கள். அவர்கள் நடத்த மாட்டார்கள் என்ற அடிப்படையில் கேரளாவில், கர்நாடகாவில், ஆந்திராவில், காஷ்மீரில் எல்லாம் நடந்துகொண்டிருக்கக் கூடிய சூழ்நிலைகள் மாதிரி இங்கு

ஏற்படவேண்டும். அந்த அடிப்படையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா இவர்களின் கொள்கை வெற்றிபெற வேண்டுமானால், ஒவ்வொரு வகுப்பினருக்கும் அவர்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்ய இந்த அரசு முயற்சிக்க வேண்டும். கன்வெல்கர் கமிட்டி கூட அந்தப் பரிந்துரையைச் செய்திருக்கிறது. அதைத்தான் சட்டநாதன் அறிக்கையும் சிபாரிசு செய்திருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட கோரிக்கைகளை நாம் நிறைவேற்றுகிறபோது, இன்றைக்குத் தமிழகத்தில் பல இடங்களில் கலவரங்கள் ஏற்படுகின்றன. ஜாதிக் கலவரங்களும் தமிழகத்தில் ஏற்படுகின்றன. பிற்பட்டவர்களுடைய நலனை அரசு பாதுகாக்கவில்லை. தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த மண்ணின் மைந்தர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டபோது, 'நானும் மண்ணில் மைந்தன் தான்—நானும் மன்றாடியார் பரம்பரைதான்' என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால், மன்றாடியார் பரம்பரைக்குத்தான் சலுகைகள் அதிகமாக அளிக்கப்படுமா என்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு எண்ணம் மாண்புமிகு முதலமைச்சருக்கு வரலாமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தச் சூழ்நிலையில், எப்படிப்பட்ட நிர்பந்தத்தால் இந்தக் கருத்தைச் சொன்னார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்குப் பொதுவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜாதி, மத பேதத்திற்கு அப்பாற்பட்டுத்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அவர்களை 'மலையாளி' என்று சொல்லக்கூடிய ஒரு கோணல்தனமான பிரச்சினைக்கு இழுத்ததால் தான், அந்தப் பிரச்சினை எழுந்ததால்தான், வரலாற்றுச் சான்றை ஆதாரமாகக் குறிப்பிட்டு அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஜாதிப் பெயரைச் சொல்லுவது பெருமைக்காக என்று அவர்கள் என்றைக்கும் கருதியதில்லை.

**திரு. சோ. ஆறுமுகம் :** அப்படிப்பட்ட பிரச்சினை வந்தபோது நான் திராவிடன் என்று அவர் சொல்லியிருந்தால், நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டிருப்போம். 'நானும் மன்றாடியார் பரம்பரை' என்று அவர்கள் சொல்லியதால்தான் பிரச்சினையே வருகிறது. 'நான் பண்பாட்டால், கலாசாரத்தால், மொழியால், இனத்தால், மதத்தால் திராவிடன்' என்று அவர்கள் சொல்லியிருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன்.



மத்திய அரசைக் கேட்டு அவ்வாறு தீர்மானம் போட்டால், கோபித்துக் கொள்ளுமே அல்லது எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இந்த அரசு இருக்கக்கூடாது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட மக்களையும், பிற்படுத்தப்பட்ட மக்களையும் என்றைக்கும் தாழ்த்தப்பட்ட நிலையிலேயே பிற்படுத்தப்பட்ட நிலையிலேயே வைத்திருக்க விடமாட்டோம் என்கிற உறுதியை இந்த அரசு எடுக்க வேண்டும். இன்றைக்கு மத்திய அரசு நிறுவனங்களில் குறிப்பாக தேசியமாக்கப்பட்ட வங்கிகளில் இன்னும் இது போன்ற அமைப்புகளில் எல்லாம் நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அவர்களுக்கு எண்ணிக்கையின் அடிப்படையில், ஒதுக்கீட்டின் அடிப்படையில் இடங்கள் கிடைக்கின்றனவா என்பது தெரியவில்லை. மண்டல் கமிட்டியின் அறிக்கை வெளிவந்தால், நிச்சயம் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏராளமான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகும். அந்தக் கமிட்டியினுடைய ரிப்போர்ட் அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையை ஊட்டுவதாக இருக்கிறது. இதுபற்றி இதிலே ஈடுபட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களேகூட கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு ஏதோ காரணத்திற்காக, குறிப்பாக வட மாநிலங்களில் இருக்கக்கூடிய சூழ்நிலை காரணமாக, அதை ஏற்கத் தயங்கினாலுங்கூட தமிழகத்தைப் பொறுத்தவரையில் அது அவசியமான ஒன்று, தேவையான ஒன்று என்பதைச் சொல்லி வற்புறுத்திப் பெறவேண்டும். இதற்கு சேலம் இரும்பாலையைக் கொண்டுவர போராடினோமே, இறுதியில் கொண்டாடினோமே, அதுபோல ஆகட்டும் அல்லது எந்த வகைப் போராட்டமாக இருந்தாலும் சரி. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இதற்காக முயற்சி எடுத்தால், அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறது. இங்கே மேலும் 27 சமூகங்களைச் சார்ந்தவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதுபற்றி பரிசிலனையில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது ஏற்கெனவே இருப்பவர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டும். மேலும் தேவையானால் அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இன்றைக்குக் கன்னியாகுமரி மாவட்டத்தில் எழுந்துள்ள பிரச்சினைபற்றி ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12—40)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடியும்வரை, அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சோ. ஆறுமுகம் :** 'காணிக்காரர்கள்' என்ற அந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையிலே மலைவாழ் பழங்குடி

மக்களாகவே அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிலே தங்க
ளுக்கு நிலம் தேவை என்று கோரிக்கை எழுப்பப்பட்டு திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சி இருந்தபோது, அவர்களுக்கு வன இலாக்காவிலிருந்து, வன
இலாக்கா தேவையில்லை என்று சொன்ன பகுதிகளில் அவர்களில் ஏறத்தாழ
2,500 குடும்பங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் ஒதுக்கீடு
செய்யப்பட்டதும் அந்த நிலம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று
சொல்லி, கிணறு வெட்டுவதற்கும், பம்புசெட் வைப்பதற்காகவும் கடன் தர
வேண்டும் என்று வங்கிகளுக்கு உத்தரவிட்டு, அவர்களும் கடனைப் பெற்று
இப்படிப்பட்டக் காரியங்களுக்குப் பயன்படுத்தினார்கள். திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது, அதற்குப் பின்னர் வந்த
வர்களால் அவர்களுக்குப் பட்டா கொடுப்பது நிறுத்தப்பட்டது. பின்னர்
அவர்களுக்குப் பட்டா தரப்படவில்லை. பட்டா தரப்படாததோடு மட்டுமல்ல,
மேலும் அவர்கள் எழுப்பிய பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்படவும்
இல்லை. அந்தக் காணிக்காரர்களுக்கு, அந்தப் பழங்குடி மக்களுக்கு என்று
ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவிலே அந்த வகுப்பைச் சார்ந்த ஒருவர்
உறுப்பினராகவும் இருந்தார். ஆனால்; பின்னர் அவர் இறந்து விட்டார்.
அவருக்குப் பதிலாக அந்த ஆலோசனைக் குழுவிலே பின்னர் ரோஸ்மேரி என்ற
அம்மையாரைப் போட்டார்கள். அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும்
மற்றும் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒன்றுகூடி அந்த அம்மை
யாரைப் போடக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்துங்கூட, அவர்களையே
நியமித்தார்கள். ஆனால் அந்த வகுப்புக்கும் அந்த அம்மையாருக்கும்
தொடர்பே கிடையாது. அந்த அம்மையார் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்
என்ற ஒரே காரணத்திற்காக அவரை நியமித்தார்களோ என்னவோ.
அவரைப் போட்டுவிட்ட பிறகு. எந்த எந்த காணிக்காரர்களுக்கு முன்பு நிலம்
கொடுக்கப்பட்டதோ, அவர்களிலே ஒரு 10 ஆயிரம் பேர்கள் பயன்பெற
வேண்டும் என்ற அளவுக்கு நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததோ, அந்த
நிலைமைகள் மாற்றப்பட்டு, அந்த நிலங்கள் எல்லாம் இன்றைக்கு வேறு
ஆட்களுக்குப் பட்டா கொடுக்கும் நிலை இருக்கிறது என்பதை மிகவும்
வேதனையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சிக் காலத்திலே இந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய
வேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு இந்த ஆட்சி பொறுப்
பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, அந்தத் திட்டங்களைச் சரியாகச் செயல்
படுத்தவில்லை என்ற என்னுடைய குற்றச்சாட்டைச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே வேலை வாய்ப்புக்காக காத்துக்





கொண்டிருக்கும் மக்களுடைய எண்ணிக்கையைப் பார்த்தால், மற்ற எல்லா
மாநிலங்களையும்விட தமிழகத்தில்தான் இந்த நிலைமை அதிகமாக இருக்
கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம். அதிலும் அதிகமாகக் காத்துக்
கொண்டிருப்பவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த
வன்னியர், மறவர், கள்ளர், மீனவர், ஒட்டர், போயர், வண்ணார், நாவிதர்
போன்றவர்கள்தான் இதிலே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்
போல, தாழ்த்தப்பட்ட மக்களும் இன்றைக்கு நகர்ப்புறங்களிலே இருப்பவர்கள்
எப்படியோ நிலைமைகளைச் சமாளித்துக்கொண்டிருந்தாலும்கூட—கிராமப்
புறங்களிலே எங்களை அணுகுகிற போதுதான் அவர்களுடைய நிலைமையை
நாங்கள் நேரடியாகப் பார்த்துப் புரிந்துகொள்கிறோம். இன்றைக்குக் கிராமப்
புறங்களிலே தாழ்த்தப்பட்டவர்களில் வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்
களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கிறது. அவர்களுக்கு எல்லாம்
இன்றைக்கு வேலை கிடைக்கவில்லை என்ற குரல் இன்றைக்கு எழுந்து
கொண்டே இருக்கிறது. ஆகவே, அதற்கான என்ன மாற்று ஏற்பாடுகளை
இந்த அரசு செய்யப்போகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நக்சலைட்டுகள் என்ற பெயரிலே, திருப்பத்தூரிலே, வட
ஆற்காடு மாவட்டத்திலே அல்லது வேறு பல பகுதிகளிலே 40க்கும் 50க்கும்
மேற்பட்டவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால்,
அதிலே இறந்தவர்கள் வன்னியர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும்தான்
என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்
நிலை இன்றைக்குத் தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான்
சொல்லிக்கொள்கிறேன். அதுவும் இன்றையதினம் தாழ்த்தப்பட்ட மக்கள்,
பிற்படுத்தப்பட்ட மக்கள் மிகவும் துன்பத்திற்கு ஆளாகிக்கொண்டிருக்
கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். பொது
வாக ஏற்கெனவே இந்தப் பிற்பட்டோர் நலத் துறைக் கொள்கைக் குறிப்பிலே
சொல்லியிருப்பதைக்கூட, 1970ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சி வந்தபிறகு என்னென்ன நிலைமைகள் இருந்து வந்தனவோ அவைகள்
தான் இதிலேயும் இருக்கிறதே தவிர, புதியதாக ஒன்றும் இல்லை என்று
சொல்லி, இந்த இலாகாவுக்கு, அதாவது பிற்பட்டோர் நலத் துறைக்குத்
தனியாக அமைச்சர் ஒருவரை ஏற்படுத்தி இதிலே இருக்கும் பிரச்சினைகளை
உடனடியாக கவனிக்க வேண்டும். பிற்பட்டோருக்குப் பாதுகாப்புத் தர
வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், ஆதி
திராவிட துறை என்பது ஏற்கெனவே அரிசனத் துறை என்று இருந்து, பிறகு

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபோது தாழ்த்தப்பட்டோர் இலாக்கா என்று ஆரம்பித்து, இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபிறகு, ஆதி திராவிடர் நலத்துறை என்ற அளவிலே பெயரை மாற்றியிருக்கிறார்களே தவிர, அந்தத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனில் முன்னேற்றம் ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த மக்களின் நல்வாழ்வுக்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கும் அமைச்சர் அவர்கள் இளைஞர். அவர்கள் மிகவும் வேகமாகச் செயல்பட வேண்டும். இந்தத் துறையைத் தனியாக அவர் கையிலே வைத்திருக்கும்போது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரிலே சென்று பார்க்கவேண்டும். இதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் தொகையை மக்கள் பயன் படுத்துகிறார்களா என்பதையும் பார்க்க வேண்டும். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போதும் சுட்டிக் காட்டினார்கள். அந்த அலுவலகத்திலே இருக்கும் சூழ்நிலை, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்று இருக்கும் பள்ளிக்கூடங்களின் நிலைமை, அவர்களுக்கு அங்கே வழங்கப்படும் உணவு, அவர்களுக்கு அளிக்கப்படும் உடை இவைகளையெல்லாம் பார்த்தால், மிகவும் வேதனையாகத்தான் இருக்கிறது. அந்த ஒதுக்கப்பட்ட மக்களில் இன்னும் 3 சதவீதம், அல்லது 4 சதவீதம் பேர் தமிழகத்திலே ஒரு காலத்திலே செல்வாக்கு பெற்றிருந்தவர்கள், தீண்டாமை என்ற அடிப்படையில் ஜாதி உணர்வை ஏற்படுத்தியதால், இந்த நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலைமைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி, தாழ்த்தப் பட்ட மக்களின் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்கள், அவர்களின் இல்லங்கள் சுத்தமாக இருக்கும் வகையிலே அவர்களுக்கு ஆற்றும் பணிகள் சிறப்பாக அமையவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்தப் பிள்ளைகளுக்கு இப்போது கொடுக்கப்படும் இரண்டு சீருடை போதாது; ஆகவே இப்போது வழங்குவதோடு இன்னும் இரண்டு சீருடைகளைச் சேர்த்து வழங்க வேண்டும் என்றும், இந்தக் காரியங்களை வேகமாகச் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் திரு. சட்டநாதன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல வன்னியர், மறவர், நாவிதர், முக்குலத்தவர், வண்ணார் போன்றோருக்கும் 15 சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.





திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்த மன்றத்திலே பேசும்போது ஆதி திராவிடர் என்று அரசாங்கம் அறிவித்திருந்தாலுங்கூட, நான் அரிசன் என்றுதான் சொல்லுவேன், அது காந்தியார் சொன்னது என்று சொல்லி, பேசினார்கள். நான் பாயின்ட் ஆஃப் ஆர்டராகக் கேட்க விரும்புகிறேன். தமிழ்நாடு என்று பெயர் சூட்டியிருக்கும் இந்த மாநிலத்தின் பெயர் ஒரு காலத்திலே சென்னை இராச்சியம் என்று இருந்தது. சென்னை இராச்சியம் என்று நேரு சொன்னார், அதனாலே நான் தமிழ் நாடு என்று ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொன்னால், தமிழக அரசு முறைப்படுத்தியிருக்கிற. . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் அரிசனங்கள் என்று சொல்லியே தீருவேன். ஆதி திராவிடர் என்று சொல்லவே மாட்டேன் என்று. . .

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கேட்டார்கள். 'இராமமூர்த்தி அமைச்சராக இருந்து கேட்கிறாரா என்று எனக்குச் சந்தேகம்' என்று கேட்டார்கள். இப்போது ஆளும் கட்சித் தரப் பிலேயிருந்து வருகின்ற இந்த சந்தேகத்திலிருந்து நான் அமைச்சராக இருக் கிறேனோ இல்லையோ அவர்கள் (ஆளும் கட்சியினர்) அமைச்சராக என்னை மதிக்கிறார்கள் என்பதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படியே ஆக்கப்பட்டுவிட்டால், அதிலே தவறு ஒன்றும் இல்லை.

(பிற்பகல் 12—40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத் துறைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு மேலவையின் உறுப்பினர்களுடைய பார்வைக்கு வைக்கப் பட்டு, உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். எதிர்த்தரப்பில் 6 பேர்கள் மட்டுந்தான் இருக்கிறார்கள் என்றாலும், அவர்களிடம் தனியாக காரண காரிய விளக்கங்களைச் சொல்லி விடலாமா என்று எண்ணினாலும், அமைச்சர் என்ற முறையில் நான் சிலவற்றை விளக்க வேண்டிய கட்டப்பாடு இருக்கின்ற காரணத்தால், சில பல விளக்கங்களை மட்டும் நான் இங்கே தர விரும்புகிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்புகளில், இந்தத் துறை எந்த அளவில் இருந்தது என்பதும், எந்த அளவுக்கு இப்போது இத்துறை வளர்ச்சியுற்று இருக்கிறது என்பதும், எதிர்காலத்தில் இன்னும் வளருவதற்கான வசதி வாய்ப்புகள் எந்த அளவுக்கு, எத்தகைய கூறுபாடுகளின் அடிப்படையில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதும் ஏற்கெனவே இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வப்போது எழுப்புகிற ஐய வினாக்கள், அறியா வினாக்கள், அறியும் வினாக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கேட்கும்போதெல்லாம் விடை பகர்வதன் மூலமாகத் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதும் இப்போது நீண்ட நெடிய விளக்கங்களைச் சொல்வதற்கு எத்தகைய அவசியத்தையும் ஏற்படுத்த வில்லை என்றாலும், ஒரு சில விளக்கங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக் களின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக் களைக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, இத்துறை ஒரு தனி அமைச்சர் கையில் இருந்தால் நல்லது என்று கருத்தைத் தெரிவித்தார். இந்தத் துறையை நான் கேட்டு வாங்கவில்லை ! மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தெந்த அமைச் சர்களிடம் எந்தெந்தத் துறைகளை ஒப்படைக்கலாம் என்று பார்த்து, "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்" என்பதற்கேற்ப ஒப்படைக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களின் கருத்தை ஏற்று, இந்தத் துறையை என்னிடமிருந்து எடுத்து வேறு ஒரு அமைச்சரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்தால், அதற்கு நான் தங்கு தடையாக இருக்க மாட்டேன் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னிடத்தில் நிதித் துறையும், உணவுத்துறையும், மின்சாரத் துறையும், பிற்பட்டோர் நலத் துறையும், சட்டமன்றத் துறையும் இருக்கிற காரணத்தால், என்ன பெயர்வைத்து அழைப்பது என்று பார்க்கும்போது, 6 பெயர்களையும் வைத்து அழைப்பது என்பது இயலாத காரியம் என்ற காரணத்தால்தான், ஏதேனும் ஒரு துறையைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்ற அடிப்படை யில் என்னை நிதி அமைச்சர் என்று சொல்கிறார்கள். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், உள்துறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இருப்பதால், தனியாக 'ஹோம் மினிஸ்டர்' என்று ஒரு அமைச்சர் இல்லை. ஆகவே உள்துறை அமைச்சர் என்று ஒருவர் இல்லாத காரணத்தால், அதற்கு முக்கியத்துவம் இல்லை என்று ஆகிவிடாது. அந்த அடிப்படையில்தான் நிதி யமைச்சர் கையில் பிற்பட்டோர் நலத் துறை இருப்பது நல்லது என்று





கருதித்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இத்துறை என்னிடம் இருப்பதால், என்னுடைய மனச்சாட்சிக்கு ஏற்ற வகையில் பார்த்துச் செயல்படும்போது, இத்துறைக்கு எந்தக் கேடும் ஏற்பட்டு விடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அறிக்கையில் சில பல பிழைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். எதிர்பாராத வகையில் சில பிழைகள் ஏற்படக்கூடும். எழுத்துப் பிழை, சொற் பிழை, பொருட் பிழை, இலக்கணப் பிழை, எண்ணைப் பிழை, கருத்துப் பிழை என்று பல்வேறு பிழைகள் ஏற்படலாம். எண்ணைப் பிழை அல்லது கருத்துப் பிழை ஏற்பட்டால் அதைப்பற்றி விளக்கம் தந்து திருத்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால் திருத்திக்கொள்ளலாம். ஆனால் இங்கே சில பல சொற் பிழை களை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அறிக்கை அச்சாவதற்கு முன்தான் நான் பார்க்க முடியும். அது அச்சடிக்கப்பட்ட பிறகு, எப்படி அச்சேற்றியிருக்கிறார்கள் என்பதைக்கூட ஒவ்வொரு அமைச்சரும் பார்த்துக்கொண்டு வருவது என்பது இயலாத காரியம். இதை யெல்லாம் அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்கள் கவனித்துக்கொள்கிறார்கள். நாங்கள் கவனிப்பதில்லை. என்னிடம் டைப் அடிக்கப்பட்ட நிலையில் கொண்டு வருகிறார்கள். அப்போதுதான் பார்க்கிறேன். அச்சடித்த பிறகு அச்சுக் கோர்ப்பாரால் பிழைகள் ஏற்படலாம். அதை ஆங்கிலத்தில் 'பிரின்டர்ஸ் டெவில்' என்று சொல்வார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், "மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற வேண்டும்" என்று போட வேண்டும் என்று சொன்னால் அச்சுக் கோர்ப்பவர் அதில் ஒற்றெழுத் தைப் போடாமல் வெறும் "லகரத்தை" மட்டும் போட்டுவிட்டால், அதன் விளைவு என்னவாகும் என்றால், "மாணவர்கள் கலவியில் தேர்ச்சி பெற வேண்டும்" என்றாகிவிடும். அப்படி ஒரு பயங்கரமான நிலைமையே உருவாகி விடும். எனவே அப்படிப்பட்ட பிழைகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். ஆனால் சிலவற்றை நாம் பொருட்படுத்த வேண்டிய இல்லை. எண்ணைப் பிழை அல்லது கருத்துப் பிழை இருந்தால், அதை நாம் திருத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். விளக்கங்களை அளிப்பதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 23

பிற்பட்டோர் நலத் துறையைப் பொறுத்தவரையில், நீண்ட நெடுங்காலமாகத் தமிழகம் அதில் தனிக்கவனத்தைச் செலுத்தி வருகிறது. பிற்பட்டோர் நலத்துறையானாலும் சரி, அது தாழ்த்தப்பட்டோர் நலத் துறையானாலும் சரி, அவற்றில் தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்கு வாழ்வளிக்கிற தன்மையை நீதிக் கட்சி தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 1927ஆம் ஆண்டு முதலே மேற்கொண்டிருக்கிறோம். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொண்டுவரப்படுவதற்கு முன்னாலேயே அதற்காகத் தனியாகச் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு இங்கே நீதிக் கட்சி கொண்டு வந்ததன் காரணமாகத்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு முன்னோடியாக இருக்கும் தன்மையை நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம். அந்த வகையில் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கருத்துக்களைச் சமுதாயத்தில் எடுத்துச் சொல்லி, அதில் இருக்கிற நியாயங்களை மக்களுக்கு எடுத்து உணர்த்தி, சமுதாயத்தில் வீழ்த்தப்பட்டவர்கள் வளருவதற்கான வழி வகைகளைத் தேட வேண்டும் என்று சொன்ன காரண காரியங்களை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், அவைகள் அரசால் பின்பற்றப்பட்டு வருகிற காரணத்தால்தான், நாம் இன்றையதினம் இந்தியாவிலேயே ஒரு எடுத்துக்காட்டாக விளங்க முடிகிறது. மற்றவர்களுக்கெல்லாம் நாம் ஒரு முன் மாதிரியாக விளங்குகிற தன்மையை இதன் காரணமாகத்தான் பெற்றிருக்கிறோம்.

ஆயிரமாயிரம் ஆண்டுக்காலமாக சாத்திரங்களின் பெயரால், வகுப்புகளின் பெயரால், சட்டதிட்டங்களின் பெயரால், சமுதாயச் சட்டதிட்டங்களின் பெயரால், சம்பிரதாயங்களின் பெயரால் மற்றும் வேறு பல பழக்க வழக்கங்களின் பெயரால் ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு கல்வி நலன்கள்கூட தரப்படாமல் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும், தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் வைக்கப்பட்டவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்று எந்தக் காரணத்தின் அடிப்படையில் அவர்கள் ஒடுக்கப்பட்டார்களோ அந்தக் காரணத்தின் அடிப்படையில், அவர்களுக்குக் கைகொடுத்து அவர்களைத் தூக்கிவிட்டால்தான் அவர்கள் நிலை உயரும் என்றுதான் அவர்களுக்குச் சலுகைகளை அளிக்கிறோம். அவர்களுக்கு என்று ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தை ஒதுக்கி வைக்க வேண்டிய தன்மை அதன் காரணத்தால்தான் ஏற்பட்டது.



1982 மார்ச் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பள்ளத்தில் சில பேர் தள்ளப்பட்டு விட்டார்கள் என்றால், அவர்கள் பள்ளத்திலிருந்து கரைக்கு வர வேண்டும் என்று விரும்புகிறபோது, கரைக்கு மேலே இருப்பவர்கள் ஓரளவுக்குக் கையை நீட்டினால்தான், பள்ளத்தில் விழுந்திருப்பவர்களும் ஓரளவுக்குக் கையை நீட்டி எம்பினால்தான், அவர்களைப் பள்ளத்திலிருந்து தூக்கிவிட முடியுமே தவிர, கரையில் இருப்பவர்கள் பள்ளத்தில் இருப்பவர்களைப் பார்த்து "எழுந்து வா, எழுந்து வா" என்று சொல்லிக்கொண்டிருந்தால் மட்டுமே அவர்களால் எழுந்து வர முடியாது. கரைமேல் இருப்பவர்கள் பள்ளத்தில் விழுந்துபட்டவர்களுக்குக் கைகொடுத்து தூக்குவது போல்தான் பிற்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக என்று 50 விழுக்காடு என்றும் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு 18 விழுக்காடு என்றும் ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

ஒரு பக்கத்திலே ஜாதிகளை ஒழிக்க வேண்டுமென்றாலுங்கூட ஜாதியை ஒழிப்பதற்கான உணர்வின் அடிப்படையில் அத்தகைய நிலை ஏற்பட்டாலும்கூட, சான்றிதழ்கள் மற்றவைகளை வழங்கும்போது, வீழ்ந்துபட்ட சமுதாயத்திலிருந்து ஒரு சிலராவது வளர வேண்டும், அப்போதுதான் சமுதாயத்தில் ஒரு பரவலான நிலைமை ஏற்பட முடியும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு தேவைப்படுகிறது. ஒதுக்கீடு தேவைப்படுகிறபோது, அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் வகுப்பைச் சார்ந்தவர்கள் என்றும், தாழ்த்தப்பட்டவர்கள் வகுப்பைச் சார்ந்தவர்கள் என்றும், பழங்குடியைச் சார்ந்தவர்கள் என்றும் கண்டறிவதற்கான அடையாளம் தேவைப்படுகிறது. மற்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர், திரு. சி. ரா லெட்சுமி காந்தன் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, அத்தகைய வேறுபடுத்தும் எண்ணம் வேறு எந்த வகையிலும் ஏற்படாத அளவுக்குத்தான் அரசு பார்த்துக்கொண்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக கல்வி நிலையங்களில் ஏற்படாத அளவுக்கு அரசு கட்டிக் காத்துக் கொண்டிருக்கிறது. அப்படியும் சில பல இடங்களில் அப்படிப்பட்ட எண்ணங்கள் ஏற்படுமானால் , பெரியவர்கள், முதியவர்கள் மற்றும் சான்றோர்கள் முன்னால் நின்று இத்தகைய நிலைமைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வதோடு, அதை உசுப்பிவிடாமல், தூண்டி விடாமல் பார்த்துக்கொண்டால்தான், எதிர் காலத்தில் நாட்டில் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வடமாநிலங்கள் பலவற்றைப் பார்த்தால், அங்கெல்லாம் இரண்டு வகுப்பாகத்தான் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஒன்று பார்வர்டு, மற்றது பேக்வர்டு. பேக்வர்டு என்று சொல்லுகிறபோது, தாழ்த்தப்பட்டவர்கள்,

பழங்குடி மக்கள் ஆகிய அனைவரையும் சொல்கிறார்கள். ஆக பழங்குடிகளையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் மட்டுமே பிற்பட்டவர்கள் என்று ஆக்கிவிட்டு, மற்றவர்கள் அத்தனை பேரையுமே ஒரே பட்டியலில் "பார்வர்டு" என்று கொண்டுவந்து விடுகிறார்கள். ஆனால் தமிழகத்தில் மட்டும்தான் நீண்ட நெடுங்காலமாக, முற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் என்றும், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி சமுதாய மக்கள் என்றும் மூன்று பிரிவாக பிரித்திருக்கிறோம். இதன் காரணமாகத்தான் ஓரளவுக்காவது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வாய்ப்பு வசதிகளைச் செய்ய முடிந்தது. தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பகுத்தறிவுக் கருத்துக்களை விதைத்ததன் காரணமாக, அந்தக் கருத்துக்களில் நியாயம் இருந்ததன் காரணமாக, அவைகளுக்கெல்லாம் மறுப்புரை சொல்ல முடியாத நிலைமை இருந்ததன் காரணமாக, அவைகளை எதிர்க்க வேண்டும் என்ற உணர்வு பலருக்கு இருந்தாலும் கூட இவைகளெல்லாம் வேண்டாம் என்று சொல்லுகிற அளவுக்கு தமிழகத்தில் ஒருவர்கூட சுட்டு விரலை நீட்டி எழுந்து பேச முடியாத காரணத்தால் இன்றையதினம் அவர்களுக்கு ஓரளவுக்கு வசதி வாய்ப்புக்களை நம்மாலே தேடித் தர முடிந்தது. இந்த நிலைமைகளைப் பார்த்த வட மாநிலங்களைச் சார்ந்த சிலர் தமிழகத்தைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்பினார்கள். பீகாரிலும், குஜராத்திலும் நம்மைப் பின்பற்றி பிற்பட்டோருக்கு என்று தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்தி உயர்ந்த வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடி மக்கள் என்று மூன்று பிரிவாகப் பிரிக்க ஆரம்பித்ததும், அங்கே இருக்கிற உயர் ஜாதிக்காரர்கள் அதை எதிர்த்துப் போராட்டமே நடத்துகிற சூழ்நிலை அங்கெல்லாம் ஏற்பட்டது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தப் பாகுபாடு செம்மையான முறையில் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், ஒரு தலைமுறைக்கு முன்னால் அல்லது இரண்டு தலைமுறைக்கு முன்னால் இருந்த மக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இப்போதிருப்பவர்கள் அறிவுத் திறனில் ஆற்றல் திறனில் மிகச்சிறந்தவர்களாக விளங்குகிற சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அந்த முறையில்தான் நாம் பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

(பிற்பகல் 12—50)

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பிற்பட்டோர் பட்டியலைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அதிலே 177 வகுப்பினர் இணைக்கப்பட்டுள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சட்டநாதன்



குழு அறிக்கையைப்பற்றி இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். பிற்பட்டவர்கள் நிலையைக் கண்டறிய, அவர்களுக்குச் செய்ய வேண்டிய நிலைமைகள் என்னென்னவென்று புரிந்துகொள்ள, என்னென்ன மாற்றங்கள் செய்தால் நல்லது என்று அறிந்துகொள்ள அந்தக் குழு அமைக்கப்பட்டு, ஆராய்ந்து பல்வேறு தன்மைகளை ஓர் அறிக்கையாக அரசுக்கு அளித்தது. அந்த அறிக்கையினுடைய அடிப்படையில் இருக்கிற கருத்துக்கள் அத்தனையையும் அரசே பரிசிலித்து, எதையெதை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம் சாத்தியப்படக்கூடியதாக இருக்கும், நாட்டிற்கும் பிற்பட்ட மக்களுக்கும் நன்மையாக இருக்கும் என்று அரசு பரிசிலித்து மதிப்பு அளித்து வருகிறது. அந்த அறிக்கை 1971ஆம் ஆண்டு அரசுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அறிக்கையை அளித்தபிறகு, அதிலுள்ள நூற்றுக்கணக்கான பரிந்துரைகளை "இன் டோட்டோ" ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலையில்லை. ஆராய்ந்து பார்த்து அதனுடைய நிலைமைகளைப் புரிந்துகொள்ள, தெரிந்துகொள்ள அரசுக்கு உதவியாக இருக்கும் என்றுதான் அறிக்கைகள் பெறப்படுகின்றன. அந்த அறிக்கையின் அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1976 வரையில் நானும் அந்த அமைச்சரவையில் இருந்தேன். 1971 முதல் 1976 வரையில் இருந்த சூழ்நிலையை ஆராய்ந்து சில பல நிலைமைகளை எடுத்தோம். அதற்கு முன்பு இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் பெயர் அந்தப் பட்டியலில் இருந்தது. சட்டநாதன் குழுவினர் சிலவற்றை உள்ளடக்கி, குறிப்பிட்ட வகுப்புகளுக்கு வந்து 177 வகுப்புகள் என்று குறுகிய முறையில் அமைக்கப்பட வேண்டும் என்று வைத்தார்கள். அதை அரசு ஏற்று ஓரளவிற்கு பல உட்பிரிவுகளை உள்ளே கொண்டுவந்து சேர்த்து 177 ஆக இருப்பது நடைமுறைக்குச் சௌகரியமாக இருக்கும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதே மாதிரியாக விகிதாசாரத்தை உயர்த்த வேண்டும் என்ற நிலை வரும்போது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 சதவிதமாக இருப்பதால், 16 சதவிதமாக இருந்தது 18 சதவிதமாக உயர்த்தப்பட்டது. ஏற்கெனவே பிற்பட்ட மக்களுக்கு 25 சதவிதம் ஒதுக்கீடு என்று இருந்தநிலையை திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டபோது, 31 சதவிதம் என்று உயர்த்தியதும் சட்டநாதன் குழு கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலேதான். அதற்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப்பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த 31 சதவிதத்தை 50 சதவிதமாக உயர்த்தி நடைமுறைப்படுத்தி வரும் பாங்கினை இந்த அவையினர் நன்கு உணர்வார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 23

சட்டநாதன் கூறிய கருத்துக்கள்பற்றிச் சில பிரச்சினைகளை குறிப்பிட்டிருக்கிறார்கள். பிற்பட்ட வகுப்பினரில் முற்போக்கு அடைந்த, வசதி வாய்ப்புப் படைத்தவர்கள் பல பேர் இருக்கிறார்கள். ஆகவே பிற்பட்டவர்கள் என்ற வகையிலே ஒதுக்கீடு செய்கின்றபோது, ஏற்கெனவே வாய்ப்பும் வசதியும் பெற்றவர்கள் அதிகமான எண்ணிக்கையில் இடங்களைப் பெறுகிறார்கள் என்பதால், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் இந்த வாய்ப்பைப் பெற முடியாமல் போகிறார்கள் என்ற கருத்தை சட்டநாதன் தன்னுடைய முடியாமல் போகிறார்கள் என்ற கருத்தை சட்டநாதன் தன்னுடைய அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். குறிப்பாக முற்போக்கு அடைந்து வாய்ப்பு வசதிகளைக்கொண்ட ஒரு பத்துப் பன்னிரண்டு வகுப்பினரை இந்தப் பட்டியலிலிருந்து எடுத்து விடலாம் என்றும், மீதி வகுப்பினரை வைத்துக்கொண்டு இடம் ஒதுக்கீடு செய்தால் உண்மையாக மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்குப் போய்ச் சேரும் என்றும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இன்னின்ன வகுப்பினரை எடுத்து விடலாம் என்று அவரே சொல்லியிருந்தால், அந்தக் கருத்தின் அடிப்படையிலே எடுத்துவிடலாம். ஆனால் பொதுவாகப் பத்துப் பன்னிரண்டு வகுப்பினரை எடுத்துவிட வேண்டுமென்று சொல்லும்போது, ஆரம்பத்திலே உள்ளே நுழைந்தவர்கள் எப்படி வெளியே போகத் தயாராக இருப்பார்கள் என்ற சங்கடம் வருகிறது. ஏற்கெனவே இந்த அவையில் எடுத்துத் தெரிவித்த மாதிரி, 27 வகுப்பினர்களை இந்தப் பிற்பட்ட வகுப்புப் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு வசதிகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று சொன்னேன். இன்னும் அவர்களையெல்லாம் சேர்க்கிறபோது இந்த 50 சதவிதம் பரவலாக்கப்படுகிற சூழ்நிலை வரும். நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் தங்களையும் சேர்க்க வேண்டும் என்று கேட்கிறார்கள். வெள்ளாளர்கள் தங்களைச் சேர்க்க வேண்டுமென்கிறார்கள். வெள்ளைக்காரன் காலத்திலே, மிகமிகத் தாழ்த்தப்பட்டவர்களாக வாழ்ந்த, கல்வி வசதிகள் பெறாமல் இருந்த, பொருளாதார வசதிகள் இல்லாமல் இருந்த, அன்றாடம் உழைத்து உடல் உழைப்புத் தந்து மண்வெட்டி எடுத்துக்கட்டி, மெழுகி, பெருக்கி இப்படிப்பட்ட பணிகளைச் செய்து அதன்மூலம் பொருளாதாரத்தை ஈட்டி அந்த அளவிற்கு வாழ்க்கை நடத்தியவர்கள்தான் மிகவும் பிற்பட்ட வகுப்பினராகக் கருதப்பட்டார்கள். வசதி வாய்ப்பற்ற அப்படிப் பட்டவர்கள் உள்ளபடியே காப்பாற்றப்பட வேண்டுமென்ற உணர்வு ஏற்படுகிறது.

நூற்றி எழுபத்தேழு பிற்பட்ட வகுப்பினர் அப்பட்டியலில் இருக்கின்றனர் என்றாலும், இதிலே மிகவும் பிற்பட்டவர்கள் என்று கருதப்படுகிற, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, முடி திருத்துபவர்,



1982 பிப்ரவரி 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சலவைத் தொழிலாளர், போயர், வண்ணான், வேறுபல வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆக 39 வகுப்பினர் மட்டும் மிகவும் பின்தங்கியவர்கள் என்று வைக்கப்பட்டிருக்கிறது. ஆக இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னபடியும், நானும் ஆராய்ந்து பார்த்தபடியும், இப்போது இருக்கிற சூழ்நிலையில் 50 சதவிதம் ஒதுக்கியிருப்பது உள்ளபடியே நல்ல ஊக்கம் தந்திருக்கிறதென்பது நன்றாகத் தெரிகிறது. ஐம்பத்தியாறு சதவிதம் பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் வருகிறார்கள். மேலும் ஓப்பன் காம்பிடிஷன் என்று சொல்லப்படுகிற அந்த 32 சதவிதத்திலும் எல்லா வகுப்பினர்களும் போட்டி போடலாம் என்கிற நிலைமை வருகிறபோது, மகிழ்ச்சி கொள்ளத்தக்கதாக, பாராட்டத்தக்கதாக, போற்றத்தக்கதாக இருப்பதோடு, இதிலேயும் ஒரு 18, 19, 20 சதவிதம் என்ற அளவிற்கு பொறியியல் கல்லூரியிலும் மருத்துவக் கல்லூரியிலும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் வரும்போது ஆக மொத்தம் 68 சதவிதம், 69 சதவிதம் இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் வருகிறது. பொறியியல் கல்லூரிகளிலும், எஸ்.எஸ்.எல்.சி. போன்ற பாடங்களிலும் முதல் மாணவனாக பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அமையத்தக்க அளவிற்கு போட்டி போட வசதி வாய்ப்புகளைத் தந்தால், அறிவுத் திறன் ஆகியவை கட்டாயம் வளரும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே வாய்ப்பு வசதிகளைக் கொடுக்க வேண்டுமென்று சொன்ன அடிப்படையிலே 50 சதவிதம் இப்போது தந்து கொண்டு இருக்கிறோம். பதினெட்டு சதவிதம் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு ஒதுக்கித் தருகிறோம். நாம் இப்போது சட்டத்துறையைக் கலந்து ஆலோசித்து ஒன்றை எண்ணிக்கொண்டிருக்கிறோம். 1981ஆம் ஆண்டு சென்சஸ் கணக்கு இன்னும் நமக்கு வந்து சேரவில்லை. இப்போது 1971ஆம் ஆண்டு சென்சஸ் கணக்கைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறோம். 1981 ஆம் ஆண்டு சென்சஸ் கணக்கு விரைவிலே வந்தால் அந்தக் கணக்கைப் பயன்படுத்தலாம். பதினெட்டு மிகவும் பிற்பட்ட வகுப்பினருடைய எண்ணிக்கையைப் பார்த்து, நூற்றியெழுபத்தியேழு வகுப்பினரிலிருந்து இந்த வகுப்பினரைப் பிரித்து இவ்வளவு சதவிதம், 25 சதவிதம் அல்லது 24 சதவிதம் அல்லது 33,20,2 என்று கணக்கிட்டு மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு 25,24 சதவிதம் என்று வைத்துவிட்டு இதிலே 39 வகுப்பினர் போட்டி போடலாம் என்று வைத்து, மீதியுள்ள மற்ற வகுப்பினர் பிற்பட்டவர்கள் பட்டியலில் இருக்கலாம் என்று ஏற்படுத்தினால், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த அச்சத்திற்கு இடம் இல்லாமல் போகும். இப்படிச் செய்தால் சட்டத்திலே பாதகம் ஏற்படுமா அல்லது உச்சநீதி மன்றம், உயர்நீதி மன்றம் தடை விதிக்குமா என்பதையெல்லாம் ஆராயச் சொல்லியிருக்கிறேன். சட்ட குறுக்கீடு வராத அளவிற்கு, நோக்கை நிறைவேற்றுவதற்கு எந்த முறையைக் கையாளலாம் என்று

யோசிக்கும்படி சொல்லியிருக்கிறேன். கோளாவில் ஈழவர்களுக்கென்று தனியாக ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் ஆராயும்படி சொல்லியிருக்கிறேன். வசதி ஏற்பட்டால் இந்த 50 சதவிதத்தை இரண்டாகப் பிரித்து இரண்டு டியாக வைத்தால், அதாவது 24, 20 சதவிதம் போட்டி போடுகிற வசதியும் மற்ற பிற்பட்டவர்கள் ஒரு சதவிதத்தில் போட்டி போடுகிற வசதியும் ஏற்படுத்தினால், நான்கு டியர்கள் வரக்கூடும். ஓப்பன் காம்பிடிஷன், அதற்குப் பிறகு பிற்பட்ட மக்கள், அதற்குப் பிறகு மிகவும் பிற்பட்ட மக்கள், அதற்குப் பிறகு தாழ்த்தப்பட்ட மக்கள் என்று நான்கு பிரிவுகளாக வைக்கலாம் என்ற ஆலோசனையைப்பற்றி விரைவிலே முடிவு எடுக்கும் சூழ்நிலைய விரைவுபடுத்த வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

இருக்கின்ற வசதி வாய்ப்புகளுக்கேற்ப செய்து கொண்டிருக்கிறோம். 1970-க்குப் பிறகு வாய்ப்பு வசதிகள் வரவில்லையென்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். எந்த அரசையும் குற்றம் சொல்லவில்லை. ஒவ்வொரு அரசும் அவர்கள் காலத்திலே இயன்றதைச் செய்திருக்கிறார்கள். அதற்கேற்ற படி இந்த அரசும் செய்திருக்கிறது. 1969-70ஆம் ஆண்டில் ரூபாய் 8.21 கோடி இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். 1982-83ஆம் ஆண்டுக்கு ரூபாய் 90.41 கோடி நாம் ஒதுக்கியிருக்கிறோம்.

(பிற்பகல் 1—00)

உதாரணத்திற்குச் சொல்கிறேன். 1981-82லே ரூ. 8 கோடியே 7 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். 1982-83லே ரூ. 9 கோடியே 41 லட்சம் ரூபாய் என்று இருக்கின்ற தன்மைக்கேற்ப, நாம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். 1969-70ல் பள்ளி மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித்தொகை தந்து நாம் படிக்க வைக்கின்ற அளவிலே 42,515 பேர்களுக்குத் தந்தோம் என்று சொன்னால், 1980-81லே 1,07,073 பேர்களுக்குத் தருகிறோம். இது வளர்ச்சியைக் காட்டுகிறதே தவிர வீழ்ச்சித் தன்மையைக் காட்டவில்லை. கல்லூரியிலே 40,050 பேர் அளவுக்கு உதவிச் சம்பளம் பெற்றார்கள் என்றால், 1980-81-ல் 94,456 பேர்கள் உதவித் தொகை பெற்றார்கள். அப்போது ரூ. 1.61 லட்சம் உதவித் தொகையாக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால், இப்போது 2.76 லட்சம் ரூபாய் என்று ஒதுக்கப்பட்டு வருகிறது. 397-க்கு மேற்பட்ட விடுதிகளை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த விடுதிகளை ஆண்டுக்கு ஆண்டு தேவைக்கேற்ப, நிதி வசதிக்கேற்ப அதிகரிக்கிறோம். இந்த ஆண்டிலே 40 விடுதிகள் பிற்பட்டவர்களுக்கு, 3 விடுதிகள் குற்றப் பாம்பரையிலேயிருந்து



சொன்னால், 1980-81-லே 1,07,073 பேர்களுக்குத் தருகிறோம். இது வளர்ச்சி நீக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுத்தித் தருகின்றோம். அதற்கான செயற் குறிப்பைப்பற்றி இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். அதே மாதிரி ஏற்கெனவே 31 சதவிகிதத்திற்கு உட்பட்டு சர்விஸ் கமிஷன் எழுதினாலும் சரி, தேர்ந்தெடுக்கப்பட்ட வகையிலும் சரி, பொறியியல் கல்லூரி அல்லது மருத்துவக் கல்லூரி மற்ற இடங்களில் எம்.எஸ்சி., எம்.ஏ., பி.எஸ்சி., போன்ற வகுப்புகளில் இடம் பெறுவதாக இருந்தாலும் சரி, அந்த 31 இடம் என்பதை 50 இடங்களாக மாற்றியதன் காரணமாக, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் அதிகமான வாய்ப்பு வசதிகளைப் பெறுகிறார்கள். அவர்கள் வசதிகள் குறைந்து விடவில்லை என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சோழிய வெள்ளாளர்கள் சங்கங்கள் கொடுக்கும் சான்றிதழ்கள் பேரில், ஜாதிச் சான்றிதழ்கள் வழங்கவேண்டும் என்ற பொறுப்பை தாசில்தார் அவர்களுக்குத் தரலாம் என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தச் சங்கம் கொடுக்கின்ற சான்றிதழை மட்டுமே நம்பி, அந்தச் சான்றிதழைக் கொடுத்துவிட முடியாது. வேண்டுமானால் அதை ஒரு ஆதாரமாக வைத்துக்கொண்டு செய்யலாம். அதற்கு மேற்கொண்டு விசாரணை நடத்தி அதனைத் தருவதற்கு முயற்சிகளைச் செய்யலாம் என்று சொல்லுகிறேன். அது புறக்கணிக்கப்படவில்லை. அதையே நம்பி விடுவதற்கில்லை. அதன் பேரில் விசாரணை நடத்திய பிறகு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அது மட்டுமல்லாமல், அவர்கள் தஸ்தாவேஜுகள் மற்ற ஆதாரங்கள் காட்டுவார்களானால், அதை வைத்துக்கொண்டு சான்றிதழ் வழங்கலாம். வேறு பல ஆதாரங்கள் கொடுத்தாலும் விசாரணை செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

ஒரு குறிப்பிட்ட பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு என்றே இடம் ஒதுக்க வேண்டும் என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே ஒரு பகுதியினரைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்கிறோம், பழங்குடியினர் என்று சொல்கின்றோம். இருந்தாலும் அதிலே பல்வேறு பிரிவினர் இருக்கின்றார்கள். அதிலேயே உட்பிரிவினர்கள் இருக்கின்றார்கள். நாம் பழங்குடியினர் என்றால், அதிலும் பிரிவுகள் இருக்கின்றன. அதுபோலவே தாழ்த்தப்பட்டவர்கள் என்றால், அதிலும் பிரிவுகள் இருக்கின்றன. அதிலே ஒரு பெரிய பட்டியலே இருக்கின்றது. அப்படிப் பட்டியல்கள் என்று வருகின்றபோது, பழங்குடியினர் என்று சொல்கின்றோம். பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று

சொல்கின்றோம், பல வகுப்பினரை ஒன்று சேர்த்துதான் அப்படிச சொல்கின்றோம். மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றுதான் ஒதுக்கீடு செய்ய வேண்டுமே தவிர, ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனித்தனியாக ஒதுக்குவது நடைமுறை சாத்தியமாக இருக்காது என்பது மட்டுமல்ல, அதிலே பல சங்கடங்கள் ஏற்படும். அந்தச் சூழ்நிலையையும் நாம் பார்க்க வேண்டும். மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அதிகச் சலுகை வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்பற்றி முதலிலேயே நான் குறிப்பிட்டுக் கூறினேன். தற்போது தமிழ்நாட்டில் 397 விடுதிகள் இருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் விடுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். தற்போது தமிழ் நாட்டில் மொத்தமாக 397 விடுதிகள் இருக்கின்றன. பிற்பட்டோர் நலத் துறை மூலம் இவை நடத்தப் படுகின்றன. இதிலே தஞ்சாவூரிலே 32 விடுதிகள் அரசாங்கத்தால் நடத்தப் படுகின்றன. 11 விடுதிகளை அரசின் உதவியுடன் தனியார் நடத்தி வருகிறார்கள். முத்துப்பேட்டை விடுதியில் 50 மாணவர்கள் இருக்கிறார்கள். அது அரசால் நடத்தப்பட்டு வருகிறது. அதுபோன்று பட்டுக்கோட்டையில் 50 மாணவியர் இருக்கின்றார்கள். அது அரசின் மாணவியர் இல்லம் என்று நடத்தப்பட்டு வருகின்றது. இது அரசின் உதவியுடன் தனியார் மூலம் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற 40 விடுதிகள்கூட, எங்கே விடுதிகள் இல்லையோ, எந்தெந்த இடங்களில் பத்து அல்லது 15 மைல் என்று நடந்துவந்து படிக்க வேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றதோ அங்கே கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். யாரோ கேட்கிறார்களே என்று யாருக்கும் தர வேண்டாமென்று சொல்லியிருக்கிறோம். எந்தச் சலுகையும் இதில் கொடுக்க வேண்டாம். இந்த 40 விடுதிகளையும் எங்கே கொடுத்தால் நல்லது என்று படுகிறதோ, அங்கே அவர்களுக்குத் தரும்படியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்தத் தன்மையில்தான் நாம் பல்வேறு வாய்ப்பு வசதிகளைச் செய்துகொண்டு வருகிறோம்.

மேலும் சில ஜாதிகள் வருகின்றன. தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியினர் என்ற பட்டியலிலே பிரிவுகளைச் சேர்க்க வேண்டுமென்றால், அதை மத்திய அரசுதான் செய்ய வேண்டும். நாமாகச் செய்ய முடியாது. பிற்படுத்தப் பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றால், தமிழக அரசு சேர்க்கலாம். அதிலே இருக்கின்ற சங்கடங்கள், நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, பல பிரிவுகளைச் சேர்க்கச் சொல்கின்றார்கள். நான் சென்சஸ் எடுக்கும் போதே இப்படி பிற்பட்டவர்களாகச் சேர்க்கக்கூடியவர்களைப்பற்றிய விவரங்





களைச் சேர்த்து சென்சஸ் எடுத்து குறிப்புகள் தரும்படி எழுதிக் கேட்டேன். அது நமக்குச் சௌகரியமாக இருக்கும் என்று கேட்டேன். அதிகாரிகளுக்கு எழுதிக் கேட்டபோது அவர்கள் பதில் அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் குறிப்பை எல்லாம் தனியாகச் சேர்க்க முடியாது, பொதுவாகத்தான் செய்வோம் என்று பதில் எழுதிவிட்டார்கள். இப்படிச் சில வகுப்பினரைச் சேர்ப்பது என்றால், ஏற்கெனவே இருக்கின்றவர்களுக்குச் சலுகைகள் குறையும். ஒரு 5 பேர்கள் இருக்கின்ற இடத்திலே 15 பேர்கள் என்று ஆகி விட்டால், ஒவ்வொருவருக்கும் பிரித்துக் கொடுக்கும்போது இன்னும் கொஞ்சம் கொஞ்சம் என்று ஆகிவிடும். பட்டியல் அதிகமாக அதிகமாக, சேர்க்கச் சேர்க்க உள்ளபடியே பெற வேண்டியவர்கள் பெற முடியாமல் போய்விடும் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து, உள்ளபடியே சமுதாயத்தில் பின்தங்கியவர்கள், வாழவே வகையற்றவர்கள், உழைப்பினால் தான் வாழ முடியும் என்ற நிலையிலே இருப்பவர்களுக்கு மட்டும் கவனித்துச் செய்ய வேண்டும். அதற்காகத்தான் சென்சஸ் ரிப்போர்ட்டை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அது வந்த பிறகு, ஒரு தனி நபர் குழு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் அவர்களை மட்டும் வைத்துச் செய்ய விரும்பினோம். அப்படி அவரை மட்டும் வைத்து இந்தப் புள்ளி விவரங்களைத் திரட்டுவது கடினம் என்று குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் பேரில் ஒரு குழு அமைத்து அதில் அலுவலாளர்கள் அமைத்து, இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் சேகரிக்கப்பட இருக்கிறது. அப்படி சேகரிக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி உட்கார்ந்து ஆராய்ந்து அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆராயலாம். நான் முதலிலே சொன்னபடி, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சலுகை தர வேண்டும் என்ற அளவில், பிற்படுத்தப்பட்டோர் நல மேம்பாட்டுக் குழுவின் மூலம் 10 கோடி ரூபாய் மூலதனத்துடன் ஆரம்பிக்கலாம் என்று கருதி, எடுத்த எடுப்பிலேயே ஒரு கோடி ரூபாய் தருவது என்று குறிப்பிட்டிருக் கிறோம். அவர்கள் ஒரு கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். இன்னும் இரண்டு கூட்டங்கள் கூடுமானால், மிக மிகப் பின்தங்கியவர்களுக்கு, வசதி இல்லாமல் இருப்பவர்களுக்கு, பிற்பட்டவர்களாக இருந்து வாழ்க்கையிலே தூக்கிவிடப்பட வேண்டுமென்ற நிலையில் இருப்பவர்களுக்கு, எந்த அளவுக்குக் கடன் உதவி கொடுக்கலாம், எந்த அளவுக்கு இடவசதி, வேறு வசதிகளையெல்லாம் செய்யலாம், எந்த அளவுக்குத் தொழில் நுட்ப உதவி கொடுத்து ஊக்கம் கொடுக்கலாம் என்பதை அவர்கள் ஆராய்ந்து அறிக்கை தரவிருக் கிறார்கள். அப்படி ஆராய்ந்தறிந்த பிறகு, இந்த அரசு தக்க நடவடிக்கை களை மேற்கொள்ளும்.

இங்கே மாண்புமிகு அங்கத்தினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்து அதற்கு விடைகள் அளித்தும் இருக்கிறேன். அந்தக் கருத்துக் களுடைய அடிப்படையிலே, இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று சொல்லி மாண்புமிகு அங்கத்தினர்கள் ஆங்காங்கே தனித்தனியாக எடுத்துச்சொன்ன கருத்துக்களை உரிய அதிகாரிகள் குறிப் பெடுத்து வைத்துக்கொண்டு அதற்கு என்னென்ன தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று கருத்தைச் சொல்லி, வாக்குறுதியைத் தந்து, என்னுடைய உரையை இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் இந்த உதவித் தொகையைப் பெறும்போது, அவர்கள் படுகின்ற வேதனையை நான் சுட்டிக்காட்டி, அவ்வாறு உதவித் தொகை பெறும்போது, ஒவ்வொரு ஆண்டும் 'கம்யூனிட்டி சர்டிபிகேட்' என்று இருப்பதற்குப் பதில், நிரந்தரமாக ஒரு அடையாள அட்டையைக் கொடுத்து, அவர்களுக்கு ஏற்படுகின்ற அத்தக் குறைகளைக் குறைத்து விடலாம் என்று சொன்னேன். அதைக் குறித்து அரசினுடைய பரிசிலனையில் இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வருகின்ற ஆண்டிலாவது அதை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? மண்டல் அறிக்கையை வெளியிட வேண்டும். அதற்கு மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு கடிதம் எழுதியிருக்கிறதா? இதுவரையில் இல்லையென்றால், இனிமேலாவது அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, ஒவ்வொரு பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் இப்படி ஒரு அடையாள அட்டை இருக்கின்ற சூழ்நிலை ஏற்படும் என்றால், அது வரவேற்கத் தகுந்த ஒன்றுதான். அது ஆய்விலே இருக்கிறது. அதை இறுதிப்படுத்துவது இந்த ஆண்டிலா அல்லது அடுத்த ஆண்டிலா என்று என்னால் சொல்லிவிட முடியாது. அந்த அளவில் அமைத்துவிட்டால், அது மிகமிக நல்லது. ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு சங்கடப் படுவதைவிட இப்படி வருவது ஒரு நல்ல ஏற்பாடு. இது அடுத்த ஆண்டில் வருவது என்பது காலத்தைப் பொறுத்திருக்கிறது. விரைவிலே நடை முறைப்படுத்துகின்ற அளவுக்குச் செய்யலாம்.



மண்டல் அறிக்கைபற்றிக் குறிப்பிட்டார்கள். அதன் நிலைபற்றி என்னிடம் விவரக்குறிப்பு இல்லை. அதைப்பற்றி பதில் எழுதியிருந்தால், அது வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கின்ற முயற்சிகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல ஒரு அறிவிப்பை இங்கே கொடுத்ததற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட மக்களில் மோஸ்ட் பேக்வேர்ட் என்று தனியாகப் பிரித்து, அதற்காக சில ஒதுக்கீடுகளைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்கின்ற அதே நேரத்தில், அந்த யோசனை பரிசிலனையில் இருக்கின்ற நேரத்தில், அதிலே 39 வகுப்பினர்கள் இடம் பெறுவார்கள் என்ற கருத்தையும் இங்கே வெளிப்படுத்தினார்கள். அதைக் கொண்டுவரும்போது, சட்டநாதன் அவர்கள் சொல்லிய 15 வகுப்பினர்களை மட்டும் சேர்க்க வேண்டும். அந்த அறிக்கையிலே உள்ளவர் களுக்கு தனியாக ஒதுக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்

(பிற்பகல் 1-10)

கிறேன். ஆகவே இப்படி ஒதுக்கீடு செய்கிறபோது, இதிலேயும் அதிகமான வகுப்பினரை இடம் பெறச் செய்து, உரிய வாய்ப்பை மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறவர்களுக்குக் கிடைக்காமல் தடுப்பதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதிகமாகச் சேர்ப்பதைக் குறைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்பற்றிச் சொன்னார்கள். அதில் நான்-அஃபிஸியல் 2 பேர்கள் போட்டிருக்கிறார்கள். 5 பேர்களை யாவது போட வேண்டும். எல்லோரும் அதிகாரிகளாக இருக்கிறார்கள். அறிக்கையிலே பார்த்தேன். சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் இதில் இடம் பெறக்கூடிய அளவிற்கு அமைச்சரவர்கள் கவனம் செலுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே கூறியபடி, ஏற்கெனவே 3 தட்டுகள் இருக்கின்றன. 4 தட்டுகளாகக்கூட அமைக்கலாம். அப்படிச் செய்தால், பல சங்கடங்கள் வரும். மிகவும் பின்தங்கிய 39 வகுப் பினரை இதன்கீழ் கொண்டு வந்து, நடைமுறைப்படுத்தினால், அதற்குப் பிறகு மேலும் ஒரு உட்பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்றால், அதைத்

தனியாகக் கவனிக்கலாம். இப்போது வைத்தால், எல்லோருமே அதில் நுழையத்தான் முனைவார்கள். சிபாரிசு செய்து அதில் சேர்த்துக்கொள்ளுங்கள் என்றுதான் சொல்லுவார்கள். 39 வகுப்பினருக்கு முதலில் வழிவகை செய்து, 2, 3 ஆண்டுகள் நடைமுறைப்படுத்திய பிறகு, அதில் என்ன சிக்கல் வருகிறதென்பதைப் பார்த்து, முடிவு செய்யலாம். இப்போது 39 மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்யலாமென்பதை ஆராயலாம். பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் உறுப்பினர்கள் இடம் பெறுவதுபற்றிச் சொன்னார்கள். அதுபற்றி ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்படும் வீடுகளில், அல்லது கொடுக்கப்படும் மனைகளில் ஆதி திராவிட மக்கள், மலை ஜாதி மக்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறதென்று கேட்டார்கள். அவர்களுக்கு 10 சதவிகிதம் ஒதுக்கப்படுகிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் ஒதுக்கீடு செய்து, எல்லா வாய்ப்புகளும் தருகிறோம். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகிதம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அதைப்போல 18 சதவிகிதம், 50 சதவிகிதம் ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கு வீடுகளை வழங்கிட அமைச்சரவர்கள் முயற்சி எடுப்பாரா, எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது ஒரு சிக்கலான பிரச்சினை. ஆழமாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

* மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் அவையின்கண் வைக்கப்பட்டிருக்கக்கூடிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது ஏறத்தாழ 5 உறுப்பினர்கள் பங்குகொண்டு, தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரையில், அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அனைத்துக் கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு செயலாற்றும் என்பதை முதலிலே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழக அரசின் கொள்கைகளும், ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய திட்டங்களும் அவையின்கண் வைக்கப்பட்டிருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பிலே மிகத் தெளிவாக



எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றை மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகப் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அவற்றின்மீது அவர்கள் எந்த உணர்வின் அடிப்படையிலே அந்தக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்களோ அந்தக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் அரசு அதில் கவனம் செலுத்தி செயலாற்றத் தயங்காது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் விவாதத்திலே பங்குகொண்டு, கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இந்த அறிக்கையின்மீது உறுப்பினர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் ஒரு சிலவற்றுக்கு மட்டும் நான் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் அரசினுடைய ஆய்விலே இருக்குமென்பதை முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், ஆதி திராவிட மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பல்வேறு வகையான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல ஆண்டுகளாக ஆதி திராவிட நலத் துறை தொடர்ந்து செயலாற்றி வருகிறது. பல்வேறு அரசுகள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதும், குறிப்பாக இந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்பதற்காக, தொடர்ந்து இந்த இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு அதிகமான சலுகைகளும், கவனமும் செலுத்தி, செயல்பட்டு வந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இந்தத் துறையின் மூலமாக இந்த இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு நேரடியாக அதிகப்படியான சலுகைகளும், அதிகப்படியான கவனத்தையும் செலுத்தி செயலாற்றி வருகிறோமென்பதையும், இந்த அரசைப் பொறுத்தவரையில், அந்தக் கண்ணோட்டத்தில் இயங்கி வருகிறதென்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே விவாதத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் கருத்துக்களின் வாயிலாக தமிழக அரசு, குறிப்பாக இந்தத் துறை கல்வியில் அதிக நாட்டத்தை, கவனத்தைச் செலுத்த வேண்டுமென்ற உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில்; ஆதி திராவிட நலத் துறை மூலமாக ஏற்கெனவே ஒதுக்கியிருக்கக்கூடிய மொத்த நிதியளவில் மூன்றில் இரண்டு பங்கு கல்விக்காகச் செலவிடப்பட்டு வருகிறதென்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள்

திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும், திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அரசைப் பொறுத்தவரையில், அதிகமான கவனம் செலுத்தி, இந்தத் துறையின் மூலமாக நடத்தும் கல்வி நிலையானது நல்ல தரத்துடன் இருக்க வேண்டுமென்ற உணர்வோடும், அதனை மேலும் உயர்த்த வேண்டுமென்ற உணர்வோடும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறதென்பதை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கல்வித் துறையின் மூலமாக ஒரு மாற்றத்தைச் செய்தோமானால்தான், உள்ளபடியே இந்த இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஒரு சமுதாய மாற்றத்தைச் செய்ய முடியுமென்ற உணர்வின் அடிப்படையிலே இந்த அரசு இதிலே அதிகமான கவனத்தைக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆதி திராவிட நலத் துறையில் 1,073 பள்ளிகள் இன்றைக்கு இயங்கி வருகின்றன என்பதையும் அதிலே 33,531 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். 1981-82-ஐப் பொறுத்தவரையில், இந்த மாணவர்களுக்கு உதவித் தொகையாக ஏறத்தாழ 352.87 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்பதையும் அதனால் 50,949 மாணவ மாணவியர் பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறையின் மூலமாக ஏறத்தாழ 681 மாணவர் இல்லங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு இந்த மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு இருக்கின்ற குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், அத்தகைய குறைகள் இல்லாத வண்ணம், அதிலே தனி அக்கறை செலுத்தி, அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவாதத்திலே கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் பேசும்போது, மாணவ, மாணவியருக்கு அளிக்கப்படுகிற உதவித் தொகையோடு மட்டுமின்றி, இலவசப் புத்தகங்கள் காலத்தில் கிடைக்கவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அதே கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அரசு சார்பாக அளிக்கப்படும் இலவசப் புத்தகங்கள் ஒவ்வொரு ஆண்டுத் துவக்கத்திலும்—இந்த ஆண்டைப் பொறுத்தவரை — 30—6—1982-க்குள் மாணவர்களைச் சென்று அடைய வேண்டுமென்று இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



(பிற்பகல் 1-20)

இதற்கு முன்பு கல்வித் துறையில் இருக்கின்ற மாவட்டக் கல்வி அதிகாரிகள் மூலம் இது வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு இந்த நிலையை மாற்றி மாவட்ட ஆதி திராவிட அலுவலர்கள் மூலம் கல்வித் துறை உட்பட, அந்தத் துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் படிக்கின்ற இவ்வினத்து மாணவர்கள் உட்பட வழங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இரண்டு துறைகளின்கீழ் இயங்குகின்ற பள்ளிகளிலும் புத்தகங்கள் வழங்குவதற்கான பொறுப்பை மாவட்ட ஆதி திராவிட அதிகாரிகளிடம் ஒப்படைத்திருக்கிறோம். அந்த வகையில் ஆணையிட்டு, காலா காலத்தில் புத்தகங்களையும் வழங்க வேண்டும், மாணவர்களை அவை சென்றடைய வேண்டும் என்கிற முறையில், பிரத்தியேக ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது இந்தத் துறையின்கீழ் இயங்குகின்ற பள்ளிகள் கல்வித் துறையில் இணைக்கப்பட உள்ளன என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் திருச்சியில் பேசியதாகத் தெரிவித்தார்கள். இந்தத் துறையிலுள்ள பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவைகளை கல்வித் துறையோடு இணைக்க வேண்டும், சேர்க்க வேண்டும் என்ற உணர்வு பன்னெடுங்காலமாக தமிழகத்தில் இருந்து வருகிறது. ஆனால் அதுகுறித்து இதுவரை எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. தற்போதுகூட இதனைக் கல்வித் துறையோடு இணைப்பது நல்லதா என்கின்ற வகையில் அரசு உணர்வினைக் காட்டியிருப்பது மட்டுமின்றி, தற்போது இதுகுறித்து ஆய்வுகளும் செய்யப்பட்டு வருகின்றன. அதிலே முடிவொன்றும் எடுத்துவிடவில்லை.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் லெட்சுமிகாந்தன் அவர்களும், மீனாட்சிசுந்தரம் அவர்களும் கல்வித் துறையின் மூலம் இயங்கி வருகின்ற பள்ளிகளில், துணை ஆய்வாளர்கள் பற்றி கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல், அவர்கள் பல்வேறு சமயங்களில் இதுகுறித்து என்னோடு பேசும்போது சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் எடுத்திருக்கும் முடிவின் அடிப்படையில், தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு பரிட்சார்த்தத் திட்டமாக இதைச் செயல்படுத்த இருக்கிறோம். அதன் மூலம் நாம் பெறுகின்ற அனுபவத்தின் அடிப்படையில், அது எப்படிச் செயல்படுகிறது என்பதை உணர்ந்து, தொடர்ந்து மற்ற பள்ளிகளுக்கும் செயல்படுத்தலாம் என்கிற வகையில் அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது. தற்போது

கல்வித் துறையைச் சார்ந்தவர்கள் மூலம் பல்வேறு பதவிகள் நிரப்பப்படுகின்றன என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலும், ஆதி திராவிட நலப் பள்ளிகளில் பணி புரிகிற ஆசிரியர்கள் என்னைச் சந்தித்து அளித்த கோரிக்கைகளின் அடிப்படையிலும் கல்வித் துறைச் செயலாளரோடு கலந்து பேசி, அத்தகைய குறைபாடுகள் எதுவும் இல்லாமல் அதற்கு ஆவன செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன்.

ஆதி திராவிட நலப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், பணி மூப்புப் பட்டியல் வெளியிடப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அது தற்போது தயாரிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் இந்தப் பணி மூப்புப் பட்டியல் அடிப்படையில் மேல் நிலைப்பள்ளிகளுக்கும், உயர் நிலைப் பள்ளிகளுக்கும், மற்ற பள்ளிகளுக்கும் தலைமையாசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சிதம்பரம் நந்தனார் பள்ளிக்கு எல்லா அடிப்படை வசதிகளையும் செய்து தரவேண்டும் என்ற அடிப்படையில், இரண்டு மேல் நிலைப் பள்ளிகளுக்கும், குடிநீர் வசதி செய்து கொடுக்க 97 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துககொள்கிறேன். தற்போது இந்தத் தொகை குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. திண்டிவனம் சூப்பிரன்டென்டிங் என்ஜினியர் மூலம் இப்பணியை மேற்பார்வையிட தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது விரைவு படுத்தப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் பேசும்போது, வீட்டு மனைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். தற்போது அரசு மூலம் வழங்கப்படுகின்ற வீட்டு மனைகள் ஒதுக்குப் புறத்தில் இருக்கின்றன என்றும், அவர்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்ற நிலை இருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், தமிழக முதல்வர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், புதிதாக ஒதுக்கப்படுகின்ற இடங்கள் மற்ற இனத்தார் வசிக்கிற இடத்திற்கு அருகாமையில் இருக்க வேண்டும் என்கிற வகையில் பிரத்தியேகமாக ஆணையிட்டுள்ளார்கள். நஞ்சையைப் பொறுத்தவரையில், கையகப்படுத்தக் கூடாது என்று அவர்கள் பிரத்தியேகமாக ஆணையிட்டிருப்பதற்குக் காரணம் இருக்கிறது. பெரும்பாலும் நஞ்சை நிலங்கள் குடியிருப்புகளுக்கு மிக தூரத்தில் இருக்கின்றன. ஆகவே அவற்றைக் கையகப்படுத்தி இவர்களுக்கு நாம் ஒதுக்குகின்றபோது,





ஒதுக்குப்புறத்தில் இவர்கள் போகிற சூழ்நிலை ஏற்படும். அங்குதான் இடம் பெறுவார்கள். அப்படிப்பட்ட உணர்வின் அடிப்படையில்தான் நஞ்சை நிலங்களைக் கையகப்படுத்தக் கூடாது என்று எங்களுடைய புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், புதிதாக அரசின் சார்பாக துவக்கப்படுகின்ற அரசு சார்ந்த அலுவலகங்கள் அல்லது நிறுவனங்கள் கூட ஆதி திராவிடர் குடியிருக்கின்ற பகுதியில் திறக்கப்பட வேண்டுமென்று அரசு பிரத்தியேகமாக ஆணையிட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஜேப்பியார், தாஸ் போன்றவர்கள் எல்லாம் பேசுகின்றபோது, ஆதி திராவிடர் நலத் துறைக்கென்று வழங்கப்பட்டு வருகிற உதவிகள், தொகைகள் போதாது என்று சொன்னார்கள். மேலும் இவைகளுக்கு ஒதுக்குகிற தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றும், குறிப்பாக மத்திய அரசின் மூலம் தரப்படுகின்ற சிறப்பு நல உதவி மூலம் மேலும் தொழில் துறையிலே இந்த மக்களை மேம்படுத்த வேண்டுமென்ற கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாடு சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் முடிந்திருந்தும் கூட, வேறு எந்த ஒரு முதலமைச்சரும் செய்யத் துணியாத ஒரு மாபெரும் திட்டத்தை, புரட்சிகரமான திட்டத்தை எங்களுடைய புரட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், மத்திய அரசின் சிறப்பு நிதி உதவியின் மூலம் கிடைக்கின்ற உதவியைக் கொண்டு தமிழக ஆதி திராவிட வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் புதிய தொழிற்சாலைகளை அமைக்க வழிவகைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆதி திராவிட நலத் துறையின் மூலம் பல ஆண்டுகளாக நாம் ஏற்கெனவே இந்தமாதிரி நிதி உதவி அளித்து வருகிறோம். சிறு தொழில்கள் செய்ய வட்டியில்லா கடன்களும், உழவு மாடுகள், கறவை மாடுகள் வாங்க உதவிகளும் பன்னெடுங்காலமாகக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இருந்தாலும் கூட இந்த சமுதாயத்திலுள்ள மக்களுக்கு நிரந்தரமாக வருமானம் அமையவில்லை. அவர்களுக்கு நிரந்தரமாக வருமானம் அமைய வேண்டுமென்ற நல்லுணர்வால், மத்திய அரசின் சிறப்பு நிதி உதவி மூலம், ஆதி திராவிட வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் இன்றைக்கு அந்தந்த மாவட்டங்களில் கிடைக்கக்கூடிய கச்சாப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த மாவட்டங்களிலேயே அவை சம்பந்தமான சிறு சிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்கான வழிவகைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் நிதி உதவியைக் கொண்டு

5 ஆதி திராவிடர் குடியிருப்புகளில் கால்நடை மருத்துவமனைகளை ரூபாய் 7.45 லட்சம் செலவில் அமைக்க இருக்கிறோம். அதுமட்டுமின்றி, ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்த உழவர்களுக்கும் அவர்களுடைய வாழ்விலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த ரூ. 14.95 லட்சம் செலவில் பூச்சி மருந்து, விதை போன்றவற்றை முழுச் சலுகையில் வழங்க திட்டமிட்டிருக்கிறோம். ஆதி திராவிட நலத் துறையைப் பொறுத்தவரையில், அந்தந்த மாவட்டத் தொழில் கழகங்களின் மூலம் சுயமாகத் தொழில் செய்ய வேண்டுமென்று விரும்புகிறது. ஆதி திராவிட மக்களுக்கு உதவ 14 லட்சம் ரூபாயை நாம ஒதுக்கீடு செய்து, மாவட்டத் தொழில் கழகங்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அதுபோல் ஆதி திராவிடர் நெசவாளர் சங்கங்கள் அமைக்கவும் ரூபாய் 44.59 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இராமநாதபுரம மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு புதிய நூற்பாலையை ஏறக்குறைய 4 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்த இருக்கிறோம். அதற்காக 2 கோடி ரூபாய் அளவில் மானியமாக ஆதி திராவிட வீட்டு வசதிக் கழகத்தின் மூலம கொடுக்க இருக்கிறோம். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இதன்மூலம் அங்குள்ள ஏறத்தாழ 400 ஆதி திராவிட மக்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைக்கும். அதுமட்டுமல்லாமல், புதுக்கோட்டையில் அறந்தாங்கியிலும், மதுரையில் தேனியிலும், தர்மபுரியிலும் கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஒவ்வொன்று வீதம் அமைக்க 33.75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இதன் மூலமாக

(பிற்பகல் 1.30)

ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலையிலும் ஏறத்தாழ 225 பேர்கள் அதிலும் முழுமையாக ஆதி திராவிட மக்கள் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும் என்ற வகையிலே கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர் திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலே பட்டா நிலங்களைப் பெற்றிருக்கும் ஆதி திராவிட மக்கள், குறிப்பாக பொருளாதார ரீதியிலே மிகவும் பின்தங்கிய நிலையிலே இருப்பவர்களுக்கு, நீர்ப்பாசன வசதி இல்லாத ஒரு சூழ்நிலை இருப்பதால், அவர்கள் வைத்திருக்கும் அந்தப் பட்டா நிலங்களைத் தரிசாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமையை உணர்ந்து, அரசு முன்னோடியாக 1982-83ல் 5 மாவட்டங்களிலே 2 ஆயிரம் துளைக் கிணறுகளை, ஏற்படுத்தி ஏறத்தாழ 200 இலட்சம் ரூபாய் செலவிலே 10 ஆயிரம் ஆதி திராவிட குடும்பங்கள்





பயன்படும் அளவிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில் காலனிகளைத் தயாரிக்கும் ஏழை அருந்ததியர்களுக்கு அவர்களின் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தும் வகையில் பெரும்பாலும் பாதசாரிகள் செல்லும் பகுதியில் சரியான முறையிலே இருப்பதற்குக் கூட இடம் இல்லாமல் இன்னலுறும் நிலைமைகளை உணர்ந்து, அரசே அவர்களுக்கு பங்குகளையும், தோல் தைக்கும் தையல் இயந்திரங்களையும் இலவசமாக வழங்க இருக்கிறது என்பதையும், இதனால் ஏறத்தாழ 500 பேர்கள் பயனடைவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக ஏறத்தாழ அரசு 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இந்த விவாதத்திலே பங்கு கொண்டு ஆதி திராவிட மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற உணர்வோடு தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள், அவற்றை இந்த அரசு கவனத்திலே கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த உணர்வின் அடிப்படையிலே தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்களோ, அந்த உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து அந்தக் கருத்துக்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நலத் துறையிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பணி மூப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தயாரிக்கப்பட்டிருக்கும் அந்தப் பணி மூப்புப் பட்டியல் வெளியிடப்பட்டால்தான், ஆசிரியர்கள் பார்த்து, அதிலே ஏதாவது குறைகள் இருந்தால், அவற்றைத் திருத்துவதற்கான வாய்ப்பு ஏற்படும். கல்வித் துறையிலே இந்த முறை நடைமுறையிலே இருக்கிறது. ஆகவே, ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். நலத்துறை இந்தப் பட்டியலை விரைவிலே வெளியிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தின் கீழ் சிதம்பரம் நந்தனார் கல்வி நிலையத்தில் 5,400 மாணவர்கள் படிக்கிறார்கள் ; அவர்களிலே சுமார் 3,000 பேர்கள் விடுதியிலே தங்கிப் படிக்கிறார்கள், அவர்களுக்கு வாரம் ஒருமுறை தான் மருத்துவ வசதி அளிக்க அங்கே டாக்டர் ஒருவர் வருகிறார் ; ஆகவே, அங்கே படிக்கும் 5,400 மாணவர்களின் சுகாதாரத்தைக் கருதி அந்த வளாகத்திற்கு உள்ளேயே ஒரு மருத்துவரை நியமிக்கவோ அல்லது அரசு மருத்துவ மனையிலே உள்ள ஒரு கிளையை அங்கே துவங்கவோ அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை அரசு பரிசிலனை செய்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாங்கள் இங்கே எடுத்து வைத்த கோரிக்கைகளிலே சிலவற்றை நிறைவேற்றி அறிவிப்பு செய்தார்கள். பணி மூப்புப் பட்டியல், டெப்யூட்டி இன்ஸ்பெக்டர் நியமனம் ; அதுகூட ஆசிரியர்கள் கேட்கின்ற வகையிலே செய்ய முயற்சி ; இவைகளுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாத பள்ளிகளைப்பற்றி நான் குறிப்பிட்டேன். அந்தப் பள்ளிகளிலே எல்லாம் உடனடியாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும் இந்தத் துறையிலே எத்தனை ஆசிரியர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்ற விவரத்தையும் முடிந்தால் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் நிச்சயமாக அரசின் பரிசீலனையில் இருப்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்களை உடனடியாகக் கவனத்திலே கொண்டு இந்த அரசு நிறைவேற்றும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : அரிசன வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்த வரையில் விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அது இயங்கி வருகிறது. நடைமுறையிலே, அரிசன மக்கள் சென்னைக்கு வர வசதியாக இருக்கிறது. விழுப்புரம் போவதற்கு வசதியில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் பேசும்போதும், இந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். ஆகவே, அதுகுறித்து அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : ஆதி திராவிட வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஆதி திராவிடர்கள் அதிகமாக வசிக்கும் பகுதியிலேதான் அந்தக் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலேதான் விழுப்புரத்திலே அந்தக் கழகத்தை அமைத்திருக்கிறோம். தற்போது அதை சென்னைக்கோ அல்லது வேறு எந்த இடத்திற்கோ மாற்றும் எண்ணம் இல்லை.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, மீண்டும் அவை நாளை முற்பகல் 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-35)

## 7. அவை முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

136. Notification issued with G.O. Ms. No. 9, Law, dated the 18th January 1982 regarding appointment of the first day of February 1982 as the date on which the provisions of sub-section (1) of section 4-B shall come into force in respect of Civil Courts Subordinate to the High Court. [Laid on the table of the House under section 6 of the Tamil Nadu Official Language Act, 1956 (Tamil Nadu Act XXXIX of 1956).]

137. Notification issued with G.O. Ps. No. 43, Commercial Taxes and Religious Endowments, dated the 8th January 1982 regarding an amendment to the Notification published as Commercial Taxes and Religious Endowments Department Notification No. II (1)/CT&RE/54/78, dated the 25th February 1978. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).

138. Notification issued with G.O. Ps. No. 175, Commercial Taxes and Religious Endowments, dated the 15th February 1982 regarding reduction in rate from four per cent to three per cent multipoint in respect of the tax payable by any dealer on the sale of polyster staple fibre manufactured by the Indian Organic Chemicals Limited, Manali, Madras. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

### B. *Reports, Notifications and Other Papers.*

102. Demand No. 5—Policy Note on Stamps Administration. (Tamil and English).

[1982 மார்ச் 23

103. Demand No. 6—Policy Note on Registration Department. (Tamil and English).

104. Policy and Programmes of the Tamil Nadu Khadi and Village Industries Board, 1982–83. (Tamil and English).

105. Policy Note on Dairy Development Department and Milk Supply Schemes, 1982–83. (Tamil and English).

106. A booklet entitled 'The Tamil Nadu Co-operative Milk Producers' Federation'. (Tamil).

107. Performance Budget on Department of Sericulture, 1982–83 (Tamil and English).

108. A booklet entitled " தமிழகத்தில் பட்டுத்தொழில் ". (Tamil).

109. A booklet entitled " சிறுதொழில்களுக்கு சிட்கோ வின் சிறப்பான சேவை 1982. ". (Tamil).

110. Policy Note on Administration of Justice, 1982–83. (Tamil and English).

111. Fifteenth Report of the Committee on Public Undertakings on the Reports (Commercial) of the Comptroller and Auditor-General of India for the years 1976–77 and 1977–78. (Tamil).

112. Sixteenth Report of the Committee on Public Undertakings on the Paragraphs pertaining to Certain Departments in the Reports (Civil) of the Comptroller and Auditor-General of India for the years 1976–77 and 1977–78 (Tamil).

113. Industrial Policy and Programmes (Major Industries), 1982–83. (Tamil and English).

114. Industrial Policy and Programmes (Rural and Small Industries) 1982–83. (Tamil and English).

115. Performance Budget on Sugar Industry, 1982–83. (Tamil and English).



1982 மார்ச் 23]

## இணைப்பு I

(600ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 196-க்கான விடையைக் காண்க.)

1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் மீண்டும் துவங்கப் பட்டதிலிருந்து நடைபெற்ற 48 குலுக்கல்களிலும் பரிசு பெற்ற பரிசுச் சீட்டு உடையவர்களின் பரிசு விண்ணப்பம் வரப் பெற்றவுடன், அவை பரிசீலிக்கப் பட்டு முறையாக இருந்தால், உடனுக்குடன் பரிசுத் தொகைகள் வழங்கப் படுகின்றன. பரிசுச் சீட்டு விதிகளின்படி பரிசு பெற்ற சீட்டுடையவர்கள் பரிசினைக் கோரிப் பெற வேண்டும். உரிமையில் தாவாக்கள் ஏற்படுகின்ற சமயத்தில், தாவா தீர்ந்த பின்னரே பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. மேலும், பரிசு பெற்ற சீட்டுடையவர்கள் பரிசுத் தொகையைக் கோரி விண்ணப்பம் கொடுக்காததால்தான் பரிசுத் தொகை வழங்கப்படாமல் தொகைகள் சேர்ந்துள்ளன.

## இணைப்பு II

(617ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட்டுகள் 26-5-66-ல் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் நிலைக்கு உயர்த்தப்பட்டனர். எனவே, அதற்குத் தக்கபடி பணிவிதிகளை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. அத்தகைய பணிவிதிகள் 26—5—66 நாளிலிருந்து அமுலுக்கு வந்ததாக, 16—7—73 நாளிட்ட அரசாணையில் வெளியிடப்பட்டன. இதற்கிடையில், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகளை, முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகளாகத் தரம் உயர்த்தி, மாவட்ட முன்சீப் பதவித்தரத்தோடு ஒருங்கிணைக்கும் செயற்குறிப்பு, அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வந்தது. இந்தச் சூழ்நிலையில், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகளுக்கும், மாவட்ட முன்சீப் பதவிகளுக்கும், முறையே 1966, 1975 ஆண்டுகளிலிருந்து தேர்வாணைக் குழு மூலம் முறையான நியமனங்கள் செய்யப்படவில்லை. எனினும், அவ்வப்பொழுது ஏற்படும் காலியிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக, தமிழ்நாடு மாநில மாஜிஸ்டிரேட்டுகள் (Tamil Nadu State Magisterial Service) விதி 13-ன் கீழ், அரசின் பல்வேறு துறைகளில் உள்ள சட்டக் கல்வி பயின்ற நபர்களை நேர்முகத் தேர்வு நடத்தி உயர்நீதி மன்றம் தேர்ந்தெடுத்து, அரசின் ஒப்புதல் பெற்றபின், முழுவதும் தற்காலிக அடிப்படையில், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளாகப் பணி அமர்த்தியது. ஒருங்கிணைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்பே, தேர்வாணைக் குழுவின் மூலமாக முறையான நியமனங்கள் செய்ய இயலும்.

3. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில், பல நீதிமன்றங்கள் நடுவர்கள் இல்லாமல் இருந்தன. எனவே, பொது மக்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தவிர்ப்பதற்காக, நடுவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருந்தது. பல மாவட்டங்களில் உள்ள வழக்கறிஞர் சங்கங்களும், காலியாக உள்ள இடங்களுக்கு விரைவில் நடுவர்களை நியமிக்க அரசைக் கோரினர். எனவே காலியிடங்களை நிரப்புவதற்காக, உயர்நீதி மன்றம் அதற்குரிய விண்ணப்பங்களைப் பெற்று, நேர்முகத் தேர்வு நடத்தி 52 நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தமிழ்நாடு நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் பணி விதி 13-ன் கீழ், தற்காலிகமாக இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டாக நியமனம் செய்வதற்கு ஒப்புதல் வழங்கும்படி 9—4—1981 அன்று அரசைக் கேட்டது. உயர்நீதி மன்றம் அனுப்பிய செயற் குறிப்பை அரசு பரிசீலித்ததில், 35 நபர்கள் மட்டுமே முழுத்தகுதி பெற்றிருந்தனர் என்று தெரிய வந்தது. எனவே முழுத்தகுதி பெற்றிராத 17 நபர்களுக்கும் ஒப்புதல் வழங்காது, முழுத்தகுதி பெற்றுள்ள எஞ்சியுள்ள 35 நபர்களை மட்டும் தற்காலிக இரண்டாம் வகுப்பு குற்றவியல் மாஜிஸ்ரேட்டாக நியமிக்க 24—4—9181 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 918-ல் அரசு ஒப்புதல் அளித்தது.

4. மேற்சொன்ன 35 நபர்களில் 24 நபர்கள் தலைமைச் செயலகப் பணியையும், 5 பேர் உயர்நீதிமன்றத் துறைப்பணியையும், 5 பேர் நீதித்துறைப் பணியையும், ஒருவர் நன்னடத்தைத் துறையையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

5. மாநில வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நீதிப் பேராணை மனுவின் மீது, உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள ஆணையில், உயர்நீதிமன்றம் மறு உத்திரவு பிறப்பிக்கும் வரையில், தற்பொழுது தற்காலிகமாகப் பணியாற்றிவரும் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் பணியையும், தற்காலிகமாக பணியாற்றி வரும் மாவட்ட முன்சிப்புகளின் பணியையும் முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கக் கூடாது என்று மட்டுமே அரசுக்குத் தடை விதித்துள்ளது. மேற்சொன்ன தடை உத்தரவில், தற்காலிகமாக நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் பதவிகளுக்கோ அல்லது மாவட்ட முன்சிப் பதவிகளுக்கோ, ஏற்கெனவே பணிவிதிகளில் வழிவகை செய்துள்ளபடி, தற்காலிக நியமனங்கள் செய்வதுபற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

6. ஒருங்கிணைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டபின், நீதித்துறைப் பதவிகளுக்கு தேர்வாணைக்குழுவின் மூலம் விரைவில் நேரடித் தேர்வு மூலமாகவும், பணிமாற்றம் மூலமாகவும், முறையே 5:1 என்ற விகிதத்தில், பெரும்பான்மையான இடங்களில் பணியமர்த்தப்படுவர்.





7. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 50-ல் அரசுப் பணிகளில், நிர்வாகத் துறையிலிருந்து நீதித் துறையைப் பிரிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் நிர்வாகத் துறையும், நீதித்துறையும் வெகுகாலமாகத் தனித்தே இயங்கி வருகின்றன. அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 234, 237 மற்றும் 309 ஆகியவற்றில் வழிவகை செய்யப்பட்டுள்ளபடியேதான், தமிழ்நாடு நீதித்துறை பணிவிதிகளும் தமிழ்நாடு மாஜிஸ்டிரேட் பணிவிதிகளும் இயற்றப்பட்டன. அவைகளில் ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டுள்ளபடிதான், மாஜிஸ்டிரேட் பதவிக்கும், மாவட்ட முன்சிப் பதவிக்கும் தற்காலிக நியமனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, இந்த நியமனங்களில், அரசியல் அமைப்புப் பிரிவு—50 புறக்கணிக்கப்பட்டுள்ளது என்ற கூற்று பொருத்தமுள்ளதாகாது.

## இணைப்பு III

(621 ஆம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### பிற்பட்டோர் நலத்துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக 1982-83 ஆம் ஆண்டுக்கான ரூபாய் 9,22,67,000 மானியக் கோரிக்கையை நான் இம் மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் ஆகியோரின் நலனுக்காக தமிழக அரசு முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ள பணிகள் 1982-83 ஆம் ஆண்டில் எடுக்கவிருக்கும் முன்னேற்றப் பணிகள் ஆகிய விவரங்களைக் கீழே தருகிறேன்.

2. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்புவரை பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்கான திட்டங்கள் தொழிலாளர் நல ஆணையாளரால் ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றுடன், ஒருங்கே கவனிக்கப்பட்டு வந்தன. பின்னர் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலம், காவல் துறையினரால் கவனிக்கப்பட்டு வந்தது. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளில் ஆதி திராவிடர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டு, ஆதி திராவிடர்கள், பழங்குடிகள், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர், பிற்பட்டோர் ஆகியோரின் நலன்கள் அத்துறையால் கவனிக்கப்பட்டன. பிற்பட்ட வகுப்பினர், மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் என்பதன் காரணமாக அவர்களுடைய முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் வகையில், பிற்பட்டோர் நலத்துறை புதியதாக ஏற்படுத்தப்பட்டு 1969 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது.

[1982 மார்ச் 23

அதுவரை ஆதி திராவிடர் நலத்துறையால் கவனிக்கப்பட்டு வந்த பிற்பட்டோர் நலம், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலம் தொடர்பான பணிகள் இத்துறைக்கு மாற்றப்பட்டன.

3. இத்துறை இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. மாவட்டங்களில் மே 1974 ஆம் ஆண்டுவரை இத்துறையின் வேலைகளை மாவட்ட நல அதிகாரிகள் கவனித்து வந்தனர். 1974 ஆம் ஆண்டு, மே திங்கள் 17 ஆம் நாளிலிருந்து துணை ஆட்சியாளர் பதவி நிலையில் மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அதிகாரிகள் மாவட்ட ஆட்சியாளரின் நேரடிப்பார்வையில் பணி புரிகின்றனர்.

பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப் பற்றி ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரின் தலைமையில் 'மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக்குழு' ஒன்று இயங்கி வருகிறது. இக்குழு 1974 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் திருத்தி அமைக்கப்பட்டது. இக்குழுவை மீண்டும் திருத்தி அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது. இதுபோன்று மதுரை மாவட்டத்தில் பிரமலைக்கள்ளர் சமுதாய முன்னேற்றத்திற்கு ஆலோசனைகூற மதுரை மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் ஒரு தனிக்குழு செயல்பட்டு வருகிறது.

4. பிற்பட்டோர் முன்னேற்ற நலனுக்கென 1971-72 முதல் தனியாக மானியக் கோரிக்கை ஏற்படுத்தப்பட்டது. 1967-68-ல் பிற்பட்டோர் வகுப்பினர் நலனுக்கான ரூ. 1,61,40,000 ஆக இருந்த மானியத்தொகை ஆண்டுதோறும் வளர்ந்து 1982-83-ல் ரூ. 9,22,67,000 ஆக எட்டியுள்ளது. இது பிற்பட்டோர் நலனுக்கென அரசு மேற்கொண்டுவரும் தீவிர நடவடிக்கைகளைக் காட்டுகிறது.

5. மேலும் இந்த தனி ஒதுக்கீடு தவிர இம்மாநில அரசு மேற்கொள்ளும் பல்வேறு பொதுத்திட்டங்கள் பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் கருதியே செயலாக்கப்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவையில் கூற விரும்புகிறேன். இந்தத் துறையின் முக்கியமான பணிகள் சிலவற்றைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

6. (i) படிப்பு உதவித்தொகை.—பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் கல்வி கற்க போதிய வசதியின்மையால்தான் பிற்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள் எல்லோரும் அறிவர். அவர்களுடைய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, கல்வி மேம்பாட்டிற்கு வழி வகை செய்வது மிக அவசியம். எனவே பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்ற மரபினர்



1982 மார்ச் 23]

பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும், கல்வி வசதிக்காக படிப்பு உதவித்தொகை மற்றும், உண்டி, உறையுள், வசதிகள் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும் குற்ற மரபினர் பட்டியலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் இந்த இனத்து மாணவர்களுக்கு மூன்றாம் வகுப்பு வரை பாடப்புத்தகங்கள் இலவசமாக கல்வித்துறை மூலம் அளிக்கப்படுகின்றன. இந்த உதவித்தொகை பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 5,000-க்குள் இருக்கவேண்டும். இந்தப் புதிய வருமான வரம்பு 1981-82 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

உதவித்தொகை பெற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். ஆனால் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட அனைத்து மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒரு இலட்சம் ரூபாயுடன், 1948—49-ல் தொடங்கப்பட்டு 609 மாணவர்களுக்குப் பயனளித்

பின்னர் இத்தொகை 1949-50 ஆம் ஆண்டில் ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்ந்ததில் 2,908 மாணவர்கள் பயனடைந்தனர். 1960-61-ல் 19,900 மாணவர்களுக்கு ரூபாய் 41 இலட்சம் செலவழிக்கப்பட்டது.

( ) கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் படிப்பு உதவித்தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் காட்டும்:—

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | படிப்பு. | படிப்பு. | ரூபாய் இலட்சங்களில்.) |
| 1969-70 | 41,361 | 2828 | 21.16 |
| 1970-71 | 53,769 | 3173 | 25.55 |
| 1971-72 | 60,614 | 3805 | 30.85 |
| 1972-73 | 67,771 | 4638 | 34.29 |
| 1973-74 | 65,876 | 4338 | 34.38 |
| 1974-75 | 60,661 | 4673 | 35.66 |
| 1975-76 | 61,845 | 3964 | 28.64 |

[1982 மார்ச் 23

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1976-77 | 57,026 | 3985 | 33.65 |
| 1977-78 | 1,10,639 | 4183 | 29.80 |
| 1978-79 | 1,84,772* | 3901 | 31.08 |
| 1979-80 | 1,72,486 | 6939 | 33.60 |
| 1980-81 | 1,65,829 | 6398** | 35.16 |
| 1981-82 | 1,40,104 | 4620 | 23.06 |
| 1981 டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை. | | | |

* இந்த ஆண்டில் 1977-78 ஆம் ஆண்டு அடக்கம்.

** 1978-79 ஆம் ஆண்டு ஹையர் செகன்டரி படிப்பு படித்த மாணவர்களுக்கான உதவித்தொகைகள். அரசாணை பெறப்பட்ட பின்னர் 1979-80 ஆம் ஆண்டில்தான் சேர்த்து வழங்கப்பட்டது. ஆதலால் 1979-80-ல் பயன்பெற்றோர் எண்ணிக்கை மிகுந்துள்ளது. ஆனால் 1980-81 ல் அங்ஙனம் உதவித்தொகை சேர்த்து வழங்கப்படவில்லை. ஆதலின் பயன்பெற்றோர் எண்ணிக்கை அதிகமாக இல்லை.

பிற்பட்ட வகுப்பினர்.

| | | | |
|---|---|---|---|
| 1969-70 | 42,515 | 48050 | 160.89 |
| 1970-71 | 74,842 | 59,407 | 201.20 |
| 1971-72 | 92,694 | 76,281 | 290.50 |
| 1972-73 | 1,04,486 | 87,652 | 324.65 |
| 1973-74 | 94,032 | 80,025 | 318.80 |
| 1974-75 | 88,897 | 86,494 | 331.68 |
| 1975-76 | 90,620 | 71,433 | 317.08 |
| 1976-77 | 80,372 | 78,741 | 295.00 |
| 1977-78 | 1,07,501 | 74,469 | 291.53 |
| 1978-79 | 1,02,490 | 66,314 | 264.83 |
| 1979-80 | 1,02,672 | 1,03,911 | 261.61 |
| 1980-81 | 1,07,073 | 94,456 | 275.49 |
| 1981-82 | 71,532 | 66,485 | 177.63 |

(1981 டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை.)



1982 மார்ச் 23]

குறிப்பு.—(1) 1977-78 ஆம் ஆண்டு முதல் பள்ளிக் கல்வி மாணவர்களுக்கான உதவித்தொகை பொருள் வடிவில் வழங்கப்பட்டது. அதாவது சிறப்பு மற்றும் தேர்வுக்கட்டணங்கள் நேரிடையாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் செலுத்தப்பட்ட பின் எஞ்சியுள்ள உதவித்தொகைக்கு பாடப் புத்தகங்களாக வழங்கப்படுகிறது.

(2) 1978-79 ஆம் ஆண்டில் இவ்வுதவித் தொகையின் பயனடைந்தோர் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதற்குக் காரணம் உதவித்தொகை வழங்க பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளைப் பாகுபடுத்த மைய அரசின் விளக்கமும், அரசு ஆணையும் காலம் கடந்து பெறப்பட்டமையாகும்.

(3) 1979-80 ஆம் ஆண்டில் கல்லூரி வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை 40,000 ஆக அதிகரித்துள்ளது. ஆனால் செலவினத்தில் அதன் மாறுதல் காட்டப்படவில்லை. காரணம் முந்தைய ஆண்டுகளில் கல்லூரி விடுதிகளில் தங்கியிருந்த புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு விடுதி வசதியுடனான உதவித்தொகை வழங்கப்பட்டது. ஏனெனில் ப்ளஸ் 1, மற்றும் ப்ளஸ் 2 மாணவர்கள் மேல் நிலைப் பள்ளிகளைச் சார்ந்திருந்தனர். மேலும் இப்பள்ளிகளில் அவைகளுக்கான சொந்த விடுதிகள் பொதுவாக நடத்தப்படுவதில்லை.

(4) 1978-79 ஆம் ஆண்டு ஹையர் செகன்டரி படிப்பு படித்த மாணவர்களுக்கான உதவித்தொகைகள் அரசாணை பெறப்பட்ட பின்னர் 1979-80 ஆம் ஆண்டில்தான் சேர்த்து வழங்கப்பட்டது. ஆதலால் 1979-80 ல் பயன் பெற்றோர் எண்ணிக்கை மிகுந்துள்ளது. ஆனால் 1980-81 ல் அங்ஙனம் எந்த படிப்பிற்கும் உதவித்தொகை சேர்த்து வழங்கப்படவில்லை. ஆதலின் பயன் பெற்றோர் எண்ணிக்கை அதிகமாக இல்லை.

(iii) மேற்கண்ட விவரங்கள் பிற்பட்டோர் கல்வி வளர்ச்சிக்காக புதிதாக இத்துறை தொடங்கப்பட்ட பிறகு உதவித் தொகையினால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதைக் காட்டும். மேலும், கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், பட்டமேற்படிப்பு மற்றும் சட்டம் போன்ற படிப்புகளுக்கும் உதவித்தொகை வழங்கப்படுகிறது. தகுதிபெற்ற பின்தங்கிய வகுப்பு மாணவர்களும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களும், படிப்பு உதவித் திட்டத்தினால் பயன்பெறுகின்றனர். மேலும் பட்டயக் கணக்கர் (சார்ட்டர்டு

அக்கவுண்டன்ட்) பயிற்சிக்காக 1973-74 ஆம் ஆண்டு முதல் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பின் வருமாறு:—

| வருடம். | உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1973-74 | 32 |
| 1974-75 | 40 |
| 1975-76 | 47 |
| 1976-77 | 72 |
| 1077-78 | 68 |
| 1978-79 | 67 |
| 1979-80 | 65 |
| 1980-81 | 61 |
| 1981-82 | 28 |

1981-டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை.

1982-83 ஆம் ஆண்டிற்கு ரூ. 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(4) பிற்பட்ட வகுப்பு மாணவர் பெற்றுவரும் உண்டி, மற்றும் உறைவிடச் செலவுகள் 1971-72 ஆம் ஆண்டிலிருந்து கீழ்க் கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும், படிப்பு வகையும். | சென்னையில் | | வெளியூர்களில் | |
|---|---|---|---|---|
| | பி.வ. * | கு.ப.நீ.இ. ** | பி.வ. * | கு.ப.நீ.இ. ** |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ஒவ்வொரு மாதத்திற்கான ரூபாய்.) | | | |
| 1. கலை, விஞ்ஞானம், சட்டம் .. | 60 | 70 | 50 | 55 |
| 2. மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் ஆகியவை .. .. | 60 | 75 | 55 | 70 |
| 3. தொழில் நுட்பக் கல்வி .. .. | 50 | 60 | 45 | 50 |



(5) உதவித் தொகை வழங்குவதற்காகக் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| | செலவு 1980—81 | மதிப்பீடு 1981-82 | திருத்திய 1981-82 | மதிப்பீடு 1982-83 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூபாய். ஆயிரத்தில். | | | |
| பிற்பட்டோர் வகுப்பு மாணவர்கள் | 2,95,85 | 2,99,17 | 2,99,17 | 3,28,78 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள். | 38,85 | 39,12 | 38,51 | 43,82 |
| மொத்தம் | 3,34,71 | 3,38,29 | 3,37,68 | 3,72,06 |

*பி. வ. — பின்தங்கிய வகுப்பினர்.

**கு. ப. நீ. இ. — குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.

7 (அ) படிப்புக்கட்டணச்சலுகைகள்.—மேல்நிலைப் பள்ளிப் படிப்பு வரை (பிளஸ் 2) சாதிப் பாகுபாடில்லாமல் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் (பிளஸ் 2 தமிழை போதனா மொழியாகக்கொண்டு கல்வி கற்கும் மாணவர்கள் எந்த விதமான படிப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் மேல்நிலைப் படிப்பில் (பிளஸ். 2) ஆங்கிலத்தை போதனா மொழியாகக்கொண்டு கல்வி கற்கும் மாணவர்கள் படிப்புக் கட்டணமும் செலுத்தவேண்டும். ஆதி திராவிடர், பழங்குடிமக்கள், மற்றும் பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த, ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக்கொண்டு மேல்நிலைப் பள்ளி கல்வி கற்கும் மாணவர்கள், தமிழ்நாடு கல்வி விதிகள் 92 ன் கீழ் வழங்கப்படும் படிப்புக் கட்டணச் சலுகைகள் பெறத் தகுதியுடையவராவர்.

மேல்நிலைப் பள்ளி (பிளஸ். 2) வகுப்புக்குமேல் படிக்கும் மாணவர்களுக்கு கல்வித் துறையின் மூலமும், பிற்பட்டோர் நலத் துறையின் மூலமும் சம்பளச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:— ஆண்டு ஒன்றுக்கு

முழுச்சம்பளச் முழுச்சம்பளச் அரைச்சம்பள ரூபாய் 1,500

1982 மார்ச் 23

| வருமானப் பிரிவு. | மிகவும் பிற்பட்ட வகுப்பினர். | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | பிற்பட்ட வகுப்பினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு | முழுச்சம்பளச் சலுகை தமிழ் நாடு கல்வி, விதி எண் 92-ன் படி. | முழுச்சம்பளச் சலுகை தமிழ் நாடு கல்வி விதி எண் 92-ன் படி. | அரைச்சம்பள சலுகை தமிழ் நாடு கல்வி விதி எண் 92-ன் படி மிகுந்த அரைச் சம்பளம் இத் துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,501 முதல் 5,000 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | மூன்று பிரிவினருக்கும் அரைச் சம்பளச் சலுகை பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. | | |

7. (ஆ) கடன் உதவித்தொகை.—தொழில் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவ—மாணவிகளுக்கு அவரவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூபாய் 5,001 லிருந்து ரூபாய் 10,000 க்குட்பட்டு இருந்தால், வருடத்திற்கு ரூபாய் 500 வீதம் ஒரு குறிப்பிட்ட படிப்பிற்கு படிக்கும் காலம் முழுவதற்கும் அதிக பட்சம் ஐந்து வருட காலத்திற்கு ரூபாய் 2,500-க்கு மேற்படாது இத்துறையின் மூலமாக கடன் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்தப் புதிய வருமான வரம்புகள் 1981-82 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளன.

8. அரசு மாணவர் இல்லங்கள்.—மாணவர்கள் கல்வி பயில வசதியாக இருக்கும்பொருட்டு அரசினர் உணவு விடுதிகள் திறக்கப்பட்டு பராமரிக்கப்



1982 மார்ச் 23]

பட்டு வருகின்றது. இவ் விடுதிகளில் பல்வேறு வகுப்பு மாணவர்கள் கீழ்க் கண்ட விகிதத்தில் சேர்க்கப்படுகின்றனர் :—

| | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக் கான விடுதிகள். | பின்தங்கிய வகுப்பின ருக்கான விடுதிகள். | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் விடுதிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (விழுக்காடு) | | |
| பிற்பட்ட வகுப்பினர் | 10 | 65 | 20 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | 60 | | |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 25 | 25 | 75 |
| இதர வகுப்பினர் | 5 | 10 | 5 |
| மொத்தம் .. | 100 | 100 | 100 |

பெற்றோர்/பாதுகாவலர்களின் ஆண்டு வருமானம் ரூபாய் 5,000-க்கு மிகைப் படாது இருக்கும் மாணவர்கள் இவ்விடுதிகளில் சேர்வதற்கு தகுதி படைத்தவர்கள் ஆவார்கள்.

(2) பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காகவும், குற்ற மரபினர் பட்டியலி லிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்காகவும் நடத்தப் பெறும் விடுதிகளின் விவரங்கள்.

| ஆண்டு. | பிற்பட்ட வகுப்பினர். | | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் | |
|---|---|---|---|---|
| | விடுதிகள் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை. | விடுதிகள் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1969-70 | 11 | 979 | 37 | 3619 |
| 1970-71 | 28 | 2144 | 46 | 4039 |
| 1971-72 | 82 | 5333 | 46 | 4369 |
| 1972-73 | 123 | 7608 | 46 | 4369 |
| 1973-74 | 144 | 9348 | 54 | 5099 |
| 1974-75 | 177 | 11210 | 54 | 5099 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1975-76 | 196 | 12060 | 53* | 5069 |
| 1976-77 | 215 | 13305 | 51 | 4919 |
| 1977-78 | 227 | 14065 | 57 | 5219 |
| 1978-79 | 237 | 14565 | 57 | 5219 |
| 1979-80 | 261 | [illegible]5533 | 60 | 5369 |
| 1980-81 | 295 | 1[illegible]63 | 62 | 5469 |
| 1981-82 | 335 | 172[illegible] | 62 | 5469 |
| | | 19263 | | |

* தேவையான மாணவர்கள் இல்லாதத[...]ான விடுதிகள் பிற்பட்ட வகுப்பு பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோருக்க[...] மாணவர்களுக்கான விடுதிகளாக மாற்றப்பட்டன.

[...]னால் மூன்று குற்ற மரபினர் [...] கல்லூரி மாணவர்களும்

(3) மேலே குறித்த 397 விடுதிகளில் 55 விடுதிக[...]க்குக் குறைந்தபட்ச கானவை. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்க[...]ன்றிய இரண்டாம் மரச் சாமான்கள் (பர்னிச்சர்) வசதி செய்து தரும் திட்டத்[...] மரச் சாமான்கள் கட்டமாக 1981-82 ஆம் ஆண்டில் 6,000 மாணவர்களுக்கு [...] வசதி செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[...]ங்க மாணவர்கள்

(4) 1982-83 ஆம் ஆண்டில் மேலும் நாற்பது பிற்பட்ட [...]வர் விடுதி விடுதிகளும், மூன்று குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாண[...] களும் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[...]ஆண்டில்

(5) இந்த 440 விடுதிகளையும் பராமரிக்க 1982-83 ஆம் [...] ரூபாய் 2,66,68,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

1981-82 ஆம் ஆண்டு முதல் மேற்படி விடுதிகளில் மாணவர்களுக்கு [...] பட் படிக்கப்படும் உணவுச் செலவுத் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

| (1) | சென்னை ரூபாய் (2) | வெளியூர் ரூபாய் (3) |
|---|---|---|
| 1. கல்லூரி மாணவர் விடுதிகள் | 95 | 85 |
| 2. தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் | 95 | 85 |
| 3. இதர விடுதிகள் | 60 | 60 |

குறிப்பு 1.—(1) அனைத்து மாணவியர்க்கும் மேற் குறித்த தொகையை விட அதிகமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றும், மலைப்பிரதேசங்களில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ள வர்களுக்கு மேலும் ரூபாய் ஒன்றும் அதிகம் அளிக்கப்



படுகிறது. மேலும், சில்லரைச் செலவுகளுக்காக ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூபாய் 2 வீதமும் ஒவ்வொரு மாணவியர்க்கும் மாதம் ரூபாய் 1 வீதமும் அளிக்கப்படுகிறது.

அரசு உணவு இல்லங்களில் இது நாள் வரை ரூபாய் 55 மற்றும் ரூபாய் 65 வீதம் மாதத்திற்கு சம்பளமும், இலவச உணவும் பெற்று வந்த சமையற்காரர்கள் அனைவருக்கும் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் 150-5-200-10-300 என்ற சம்பள விகிதத்தில் எல்லா இதர படிகளும் சேர்ந்து சம்பளமும் விடுதிகள் திறந்திருக்கும் காலங்களில் இலவச உணவும் வழங்கவும் உத்தர விடப்பட்டுள்ளது.

(5) மாணவர் விடுதிக்கான கட்டிடங்கள்.—மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்கள் கட்டும் பொறுப்பைத் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுக்கொண்டு தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த விடுதிகளில் 25 விடுதிகள் முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. 1981-82 ஆம் ஆண்டில் மூன்று மாணவர் விடுதிக் கட்டிடங்கள் கட்ட ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கப்பட்டு கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. 1982-83 ஆம் ஆண்டில் இவ் வேலைகளை முடிக்க ரூபாய் 9.05 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9 (1) பள்ளிகள்.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்காக செயல்பட்டு வரும் 276 பள்ளிகள் விவரம் மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளது :—

| மாவட்டங்கள். | மேல்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை. | மேல்நிலைப் பள்ளிகள் மாணவ/மாணவியர். | உயர்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை. | உயர்நிலைப் பள்ளிகள் மாணவ/மாணவியர். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 வடாற்காடு | .. | .. | .. | .. |
| 2 தென்னாற்காடு | .. | .. | .. | .. |
| 3 மதுரை (க. சீ.) | 2 | 1,357 | 8 | 1,609 |
| 4 இராமநாதபுரம் | .. | .. | .. | .. |
| 5 திருநெல்வேலி | .. | .. | .. | .. |
| 6 சேலம் | .. | .. | .. | .. |
| 7 பெரியார் | .. | .. | .. | .. |
| 8 கோவை | .. | .. | .. | .. |
| 9 தர்மபுரி | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 2 | 1,357 | 8 | 1,609 |

[1982 மார்ச் 23

| மாவட்டங்கள். | நடுநிலைப்பள்ளிகள் | | ஆரம்பப்பள்ளிகள் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ/மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ/மாணவியர். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 வடஆற்காடு | .. | .. | 4 | 473 |
| 2 தென்னாற்காடு | .. | .. | 1 | 310 |
| 3 மதுரை (க. சி.) | 30 | 12,628 | 207 | 29,076 |
| 4 இராமநாதபுரம் | 1 | 390 | 5 | 1,041 |
| 5 திருநெல்வேலி | 1 | 322 | 9 | 1,482 |
| 6 சேலம் | 1 | 179 | 1 | 195 |
| 7 பெரியார் | 1 | 350 | 1 | 99 |
| 8 கோவை | .. | .. | 1 | 59 |
| 9 தர்மபுரி | 2 | 255 | 1 | 125 |
| மொத்தம் .. | 36 | 14,115 | 230 | 32,869 |

| | | | |
|---|---|---|---|
| மொத்த பள்ளிகள் | .. | .. | 276 |
| மொத்த மாணவர்கள் | .. | .. | 49,941 |

(2) மதுரை மாவட்டத்தில் கருக்கட்டான்பட்டி மற்றும் கே. பெருமாள் பட்டி ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகள் ஓலைக்கூரையின் கீழ் மற்றும் வாடகைக் கட்டிடத்திலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு ரூபாய் 7.50 இலட்சம் செலவில் கட்டடங்கள் 1981-83 ல் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் பொது வாழ்வில் எல்லா நிலைகளிலும் கலந்து கொள்ளவும் அவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்கப் பெறவேண்டும் என்கிற கொள்கைக் கிணங்க தற்போது பிற்பட்ட வகுப்பினர் நல இயக்கம் நடத்தி வருகிற அனைத்துப் பள்ளிகளும், கல்வித்துறைக்கு மாற்றப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

கல்விச் சுற்றுப்பயணம்.—ஒவ்வொரு ஆண்டும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பொது அறிவு மற்றும் பாட அறிவு வளர்வதற்காக கல்விச் சுற்றுப்பயணம் அழைத்துச் செல்லப்படுகின்றனர்,



1982 மார்ச் 23]

பகுதி நேரப் போதனை.—பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவ/மாணவியர் உணவு இல்லங்களில் சேர்ந்து படிக்கும் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்பு மாணவ/மாணவியரின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காகவும், அவர்கள் சமூகத்தில் மற்ற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு சரிசமமான அறிவினைப் பெறவும் எல்லா உயர்நிலைப்பள்ளி விடுதிகளிலும், பகுதிநேரப் போதனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

10. மதிய உணவு :—குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் தம் வறுமையின் காரணமாக பள்ளிகளில் தொடர்ந்து படிப்பதில்லை. அவர்கள் பள்ளிகளை விட்டுச் செல்லாமல், இருப்பதற்கு தூண்டுகோலாக இப்பள்ளிகளில் அம்மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப் படுகிறது. திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அரசினர் அல்லாத தனியார் பள்ளிக்கூடங்களில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள் பெரும் பகுதியினராக இருக்கின்ற காரணத்தால் அம்மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் மதிய உணவு அளிக்கப் பட்டு வருகிறது. இதனால் மாணவர்கள் தொடர்ந்து படிக்க ஊக்கம் ஏற்பட்டுள்ளது. அரசு இதற்கான அதிகச் செலவினைத் தவிர்க்க அம்மாணவர்களுக்கு (கேர்) நிறுவனத்தின் மூலமாக மதிய உணவு வழங்கும்படி உத்தர விட்டுள்ளது. இது அரசுப் பள்ளிகளில் மார்ச் 1975 முதற்கொண்டும் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் சனவரி திங்கள் 1976 ஆம் ஆண்டு முதற்கொண்டும் நடைமுறையில் உள்ளது. 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 10,90,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

11. உணவு மானியங்கள் : (1) தனிப்பட்ட நபர்களாலும், சமூக நல நிலையங்களாலும், நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு 1955-56 ஆம் ஆண்டு வரை ஆதி திராவிடர் நலத்துறை உணவு மானியம் வழங்கி வந்தது. 1956-57 ஆம் ஆண்டு முதல் இம்மாதிரி தனியாரின் உணவு விடுதிகளைப் புதியதாக அங்கீகரிக்க வேண்டாம் என்று அரசு முடிவு செய்து தேவையான இடங்களில் அரசே விடுதிகளைத் திறந்து வருகின்றது. மற்றும் ஒழுங்காகப் பராமரிக்கப்படாத தனியார் விடுதிகளையும், அரசே எடுத்து அரசாங்க விடுதிகளாக மாற்றி நடத்திவருகின்றன. தற்பொழுது பிற்பட்டோர் நலத்துறை உதவி பெறும் தனியார் உணவு விடுதிகள் 48 உள்ளன. இவைகளுக்கு உணவுச் செலவுக்காக பத்து மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டு முதல் சென்னை மற்றும் மாவட்ட, வட்டத் தலைநகரங்களில் உள்ள மாணவர்களுக்கு மாதம் 1-க்கு தலா ரூபாய் 45 ஆகவும் மற்ற இடங்களில் உள்ள விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு மாதம் 1-க்கு தலா ரூபாய் 40 ஆகவும் 1981-82 முதல் உயர்த்

தப்பட்டுள்ளது. இதற்கென 1981-82 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 8.41 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள விடுதிகளின் விவரம் கீழ்வருமாறு :—

| மாவட்டத்தின் பெயர் | அங்கீகரிக்கப்பட்டுள்ள விடுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| சென்னை | 5 |
| செங்கல்பட்டு | 4 |
| வடஆற்காடு | 2 |
| தென்னாற்காடு | 3 |
| தஞ்சாவூர் | 14 |
| திருச்சிராப்பள்ளி | 2 |
| மதுரை | 10 |
| இராமநாதபுரம் | 2 |
| திருநெல்வேலி | 3 |
| கோயம்புத்தூர் | 1 |
| பெரியார் | 1 |
| நீலகிரி | 1 |
| மொத்தம் | 48 |

உணவு மானியம் பெறும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 2,500-லிருந்து ரூபாய் 5,000-க்கு 1981-82 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 10,27,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(2) கல்லூரிப்படிப்பு கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இவ் வுணவு மானியம் வழங்கப்படுவதில்லை. இந்த மாணவர்கள் அங்கீகரிக்கப் பட்ட கல்லூரியைச் சார்ந்த விடுதிகளில் தங்கிப் படித்தாலும், கல்லூரியினர் அங்கீகாரம் செய்த விடுதிகளில் தங்கி படித்தாலும் கல்வித்துறையினர் அல்லது



ஆதி திராவிடர் நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறையின் அங்கீகாரம் பெற்றுள்ள விடுதிகளில் தங்கிப் படித்தாலும், அவர்களுக்குப் படிப்பு உதவித் தொகையுடன் உணவுச் செலவுக்கான தொகை வழங்கப்படுகிறது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளின் விபரம் பின்வருமாறு:—

| வரிசை எண். | மாவட்டம். | விடுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | சென்னை | 4 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 1 |
| | மொத்தம் | 5 |

தற்போது புதிதாக எந்தத் தனியார் விடுதியையும், அங்கீகரிப்பதில்லை என அரசு முடிவெடுத்துள்ளது. இம்மாணவர்களுக்கு உணவு மற்றும் உறையுகு தொகை பத்தி 6 (4)-ல் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் வழங்கப்படுகிறது.

(3) 1982-83-ல் திருச்சி மாவட்டம் தேவராயனேரியில் உள்ள நரிக் குறவர் காலனியில் உள்ள சமூகக்கூடத்தில் ஒரு சமையல் அறையும் உண்ணும் அறையும் கட்டப்பட உள்ளது. இதற்காகும் செலவு ரூபாய் 15,000.

12. புத்தகங்களும், எழுது பலகைகளும். அரசினர் நடத்தும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோர் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் புத்தகங்களும், எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்வாறு இலவச உதவி பெற்ற மாணவர்கள் 1969-70-ம் ஆண்டில் 7,600 பேர்கள், இதனால் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துள்ளது. ஆரம்பப் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகம் மற்றும் எழுது பலகைகளும் நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்குப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் அளிக்கப்படுகின்றன. இதனால் 1981-82 ஆம் ஆண்டில் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 48,584 ஆகும். 1982-83 ஆம் ஆண்டில் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 50,000 ஆக உயரலாம்.

13. (1) சீருடைகள் வழங்குதல்—மதுரை மாவட்டம் நீங்கலாக, இதர மாவட்டங்களில் உள்ள குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத் தவர்களுக்கான பள்ளிகளில் 1 முதல் ஐந்து வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும்

இரண்டு முறை சீருடைகள் வழங்கப்படுகின்றன. முதல் முறை பள்ளி ஆரம்பித்தவுடன் அல்லது தீபாவளிக்கு முன்பாகவும், இரண்டாவது முறை பொங்கல் சமயத்திலும் வழங்கப்படுகிறது. முதன் முதலாக இவ்வாறு இலவசச் சீருடைகள் வழங்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில் 1969-70 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அப்பொழுது கள்ளர் வகுப்பினர் பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு முறை மட்டும் சீருடைகள் வழங்கப்பட்டன. இப்பொழுது இருமுறை வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1972-73 ஆம் ஆண்டில் ரூபாய் 3,91,000-ம் 1973-74 ஆம் ஆண்டில் 8,06,000 ரூபாயும், 1974-75 ஆம் ஆண்டில் 6,58,000 ரூபாயும், 1975-76 ஆம் ஆண்டில் 10,39,000 ரூபாயும், 1976-77 ஆம் ஆண்டில் 8,94,000 ரூபாயும், 1977-78 ஆம் ஆண்டில் 10,47,000 ரூபாயும், 1978-79 ஆம் ஆண்டில் 9,37,000 ரூபாயும், 1979-80 ஆம் ஆண்டில் 9,08,000 ரூபாயும், 1980-81 ஆம் ஆண்டில் 14,25,000 ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் நலப்பள்ளிகளில் நடைமுறையில் இருந்து வருவதுபோல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கான பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இரண்டு செட் சீருடைகள் 1981-82 ஆம் ஆண்டு முதல் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 20,86,000 ரூபாயும், 1982-83 ஆம் ஆண்டில் 21,06,000 ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 1971-72 ஆம் ஆண்டு முதல் அரசினர் நடத்தும் பிற்பட்ட வகுப்பு மாணவர் உணவு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் ஆண்டுதோறும் இரண்டு முறை சீருடைகள் அளிக்கப்படுகின்றன. இதற்கு 1973-74 ஆம் ஆண்டில் 1,67,000 ரூபாயும், 1974-75 ஆம் ஆண்டில் 2,16,000 ரூபாயும், 1975-76 ஆம் ஆண்டில் 2,38,000 ரூபாயும், 1976-77 ஆம் ஆண்டில் 2,98,000 ரூபாயும், 1977-78 ஆம் ஆண்டில் 3,03,000 ரூபாயும், 1978-79 ஆம் ஆண்டில் 3,80,000 ரூபாயும், 1979-80 ஆம் ஆண்டில் 4,05,000 ரூபாயும், 1980-81 ஆம் ஆண்டில் 5,33,000 ரூபாயும் செலவிடப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 6,41,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் 7,04,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்தல்.—கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும் தாங்கள் எடுத்துள்ள பாடத்தில் அதிகத் திறமை பெற 1975-76 ஆம் ஆண்டு முதல் தனிப்பயிற்சி திட்டம்



நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. இதற்கு 1981-82 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 40,000 ஒதுக்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டு ஒன்றுக்கு எட்டாவது மற்றும் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் மற்றும் அடுத்த அதிக மதிப்பெண் பெறும் மாணவ/மாணவியருக்கு முதல் மற்றும் 2-வது பரிசு வழங்க ரூபாய் 4,000 ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பின் தங்கிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கும் மாணவியர் ஒருவருக்கும் தலா ரூபாய் 500 மதிப்பில் பரிசு வழங்கப்படுகின்றது. மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகளின் மதிப்பு :—

| | ரூபாய் |
|---|---|
| பள்ளி இறுதித் தேர்வு—முதற்பரிசு | 100.00 |
| இரண்டாவது பரிசு | 50.00 |
| எட்டாம் வகுப்பு—முதல் பரிசு | 50.00 |
| இரண்டாவது பரிசு | 10.00 |

14. ஆசிரியர்கட்கு விடுகள்.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக நடத்தப்படும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஒரு திட்டம் உள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆசிரியர்க்கும் ரூபாய் 10,000 மதிப்பில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் 13 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 1.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

15. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் அரசு உயர் பணிகளுக்கான சிறப்பு பயிற்சிக்கூடம்.—1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களை இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் உயர் அரசு பணிகளுக்கான தேர்வுகள் எழுத பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

[1982 மார்ச் 23

பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் கடந்த ஆண்டுகளில் நடந்த யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் கலந்துகொண்டு தேறிய மாணவர்கள் விவரங்கள் பின்வருமாறு :—

| அணி எண். (1) | ஆண்டு. (2) | சேர்க்கப்பட்டவர்கள் எண்ணிக்கை. (3) | யு.பி.எஸ்.ஸி. தேர்விற்குச் சென்றவர்கள். (4) | நேர்முகத் தேர்விற்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். (5) | நேர்முக தேர்விற்குப்பின் இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். (6) | ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். (7) | மத்திய அரசுப் பணிகள். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1971-72 | 12 | 8 | 3 | . . | . | . . |
| 2 | 1972-73 | 57 | 34 | 6 | 1 | . . | 2 |
| 3 | 1973-74 | 46 | 33 | 4 | 1 | 1 | . . |
| 4 | 1974-75 | 55 | 46 | 8 | . . | 1 | 2 |
| 5 | 1975-76 | 60 | 52 | 3 | . . | 1 | . . |
| 6 | 1976-77 | 40 | 35 | 2 | 1 | . . | . . |
| 7 | 1977-78 | 42 | 38 | 1 | . . | . . | 1 |

புதிய முறை

| அணி எண். (1) | ஆண்டு. (2) | பூர்வாங்கத் தேர்வில் சேர்க்கப்பட்டவர்கள். (3) | அதில் தேறியவர்கள். (4) | யு.பி.எஸ்ஸி தேர்விற்குச் சென்றவர்கள். (5) | நேர்முகத் தேர்விற்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள். (6) | நேர்முகத்தேர்வில் இறுதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். (7) | ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். (8) | மத்திய அரசுப் பணிகள். (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1978-79 | 48 | 12 | 16 | 12 +14* 4 | | | |
| 9 | 1979-80 | 49 | *22 | *27*22* | +5* 6 | 1 | . . | 1 |
| 10 | 1980-81 | *42+90 | 8+4 | 4+4 | | . . | . . | 2 |

முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன

* வெளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

** துணைப் பயிற்சி நிலையத்தில் சேர்க்கப்பட்டவர்கள்.



1982 மார்ச் 23]

இது தவிர, இந்நிலையத்தில் பயிற்சி பெற்ற 19 மாணவர்கள் பல்வேறு துறைகளில் கீழ்க் கண்டவாறு பதவி பெற்றனர் :—

| | |
|---|---|
| 1. துணை ஆட்சியாளர்கள் | 3 |
| 2. இனை வணிகவரி அலுவலர் | 1 |
| 3. துணைப் பேராசிரியர்கள் | 7 |
| 4. ரிசர்வ் வங்கி பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அரசு உடைமையாக்கப்பட்ட வங்கிகள் (இளநிலை அலுவலர்) | 3 |
| 5. வருமானவரி முதல் வகுப்பு அலுவலர் | 1 |
| 6. காப்பீட்டுக் கழகம் பயிற்சி அலுவலர் | |
| 7. மாவட்டக் கல்வி அலுவலர் | |
| 8. கல்வெட்டுக்கலை உதவி அலுவலர் (கர்நாடக அரசு) | |
| 9. என்ணெய் மற்றும் இயற்கைவாயு கழகம். | |

சென்னையில் உள்ள இந்தப் பயிற்சிக் கல்லூரிக்கு இறுதித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்து அனுப்புவதற்காக மதுரை, திருநெல்வேலி, கோவை, திருச்சி ஆகிய ஒவ்வொரு நகரங்களிலும் 50 மாணவர்களைக் கொண்ட ஒரு மாலை நேர துணைப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து அங்கு பூர்வாங்கத் தேர்வுக்கு மாணவர்களைத் தயார்படுத்த அரசு ஆணை பிறப்பித்தது. இந்தத் துணைப் பயிற்சி நிலையங்கள் 1981 ஆம் ஆண்டில், மதுரை, திருச்சி, கோவை ஆகிய இடங்களில் துவக்கப்பட்டன. போதிய மாணவர் இல்லாததால், திருநெல்வேலியில் துவக்கப்படவில்லை.

துணைப்பயிற்சி நிலையங்களில் 1981 ஆம் ஆண்டு பயிற்சி பெற்றவர்களின் விவரங்கள் கீழ் வருமாறு :—

| | |
|---|---|
| கோயம்புத்தூர் | 29 |
| மதுரை | 28 |
| திருச்சி | 33 |
| | 90 |

1982 ஆம் ஆண்டில் கோவை, மதுரை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு நகரங்களிலும் துணைப்பயிற்சி நிலையங்கள் செயல்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் இந்திய அரசின் தேர்வாணைக்குழு நடத்தும் அகில இந்தியத் தேர்வுகளில் ஒன்றான தேசிய பாதுகாப்பு கல்லூரித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு தனிப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதில் 15 பிற்பட்ட மாணவர்களுக்கும் 15 ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுக்கும் இடம் அளிக்கப்படுகிறது. அம்மாணவர்களுக்கு கைச் செலவுக்காகவும், போக்குவரத்துச் செலவுக்காகவும், மாதம் ரூபாய் 40 வழங்கப்படுகின்றது. இப்பயிற்சியில் பலன் பெற்றவர்கள் எண்ணிக்கை வருமாறு :—

3 2 1

| வ. எண். | அணி எண். | வருடம். | அனுமதிக்கப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பிற்பட்டவர்கள் | தாழ்த்தப்பட்டவர்கள். | பிற்பட்டவர்கள் | தாழ்த்தப்பட்டவர்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 1 | 73.74 | 6 | 3 | .. | .. |
| 2 | 2 | 74.75 | 15 | 7 | 2 | .. |
| 3 | 3 | 75.76 | 15 | 6 | 1 | .. |
| 4 | 4 | 76.77 | 14 | 2 | .. | .. |
| 5 | 5 | 77.78 | 15 | 1 | 2 | .. |
| 6 | 6 | 78.79 | 12 | 3 | 3 | .. |
| 7 | 7 | 79.80 | 11 | 5 | .. | .. |
| 8 | 8 | 80.81 | 5 | 1 | .. | .. |
| 9 | 9 | 81.82 | 13 | 2 | .. | .. |

16. பொருளாதார வளர்ச்சி : இத்திட்டத்தின் கீழ் முடிதிருத்துவோருக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அவரவர் தொழில்களைச் செய்துவர தொழில் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1971-72 வரை வெளி மாவட்டங்களிலும், 1971-72 முதல் சென்னை உட்பட எல்லா இடங்களிலும் அமுலாக்கப்படுகின்றன. சென்ற ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்தோரின் எண்ணிக்கை.

| ஆண்டு | பயன் அடைந்த நபர்கள் |
|---|---|
| (1) | (2) |
| 1969-70 | 1,542 |
| 1970-71 | 1,512 |
| 1971-72 | 1,633 |
| 1972-73 | 1,654 |
| 1973-74 | 4,081 |
| 1974-75 | 3,961 |





| ஆண்டு | பயன் அடைந்த நபர்கள் |
|---|---|
| (1) | (2) |
| 1975-76 | 3,506 |
| 1976-77 | [illegible] |
| 1977-78 | 4,095 |
| 1978-79 | 7,248 |
| 1979-80 | 8,000 |
| 1980-81 | 8,000 |

(2) 1981-82 ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடு இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 19,42,000-ம், 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 19,42,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவை தவிர சலவைத் தொழிலாளர்கள் இயக்கும் சலவையகம் நடத்த பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து கடன் பெறுவதற்காக ஒவ்வொரு நபருக்கும் ரூபாய் 165 மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் ரூபாய் 1,050 மதிப்பளவில் சலவையகம் தொடங்குவதற்கு வங்கியிலிருந்து கடன் பெற வசதியாக சலவைத் தொழிலாளர்களுக்கு மேற்படி தொகையில் 20 விழுக்காடான ரூபாய் 210 மான்யமாகவும் வழங்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1,000 அடையாள ஒதுக்கீடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போயர்களுக்கு இலவசத் தொழில் கருவிகள் வழங்கும்பொருட்டு 1979-80-க்கு ரூபாய் 25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஒரு செட் தொழில் கருவிகளின் விலை ரூபாய் 100 ஆகும். 1981-82 முதல் ரூ. 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம் முதலில் சேலம், தென் ஆற்காடு, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் அமுல் நடத்தப்பட்டது. இது 1979-80 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு, வடாற்காடு, தர்மபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 38,000-ம், 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 76,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை சென்னை தவிர இதர எல்லா மாவட்டங்களுக்கும் 1982-83 ஆம் ஆண்டிலிருந்து பயனடைவோர் எண்ணிக்கை 250-லிருந்து 500 ஆக உயர்த்தி விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. சலவைத் துறைகள் கட்டுதல்.—சலவைத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைத் திறம்படச் செய்வதற்கு சில இடங்களில் சலவைத்துறைகள் தேவையாக உள்ளன. இவைகளை சுகாதார முறைகளில் அமைப்பதற்காக

பேரூராட்சிகளுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மொத்தச் செலவில் பாதித் தொகை கடனாகவும், மீதித் தொகை மானியமாகவும் வழங்கப்படுகிறது. தமிழ் நாட்டில் இதுவரை 57 உள்ளாட்சி மன்றங்களுக்கு சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

1980-81 ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சிகளையும், இந்தத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற அங்கீகரித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(4) சென்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 3 பொது நோக்கு பொறியியல் பணி மனைகள் குற்ற மரபினர் பட்டியிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களின் உயர்வு கருதி தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவைகள் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டம் செக்கானூரணியிலும், திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம் புதூரிலும் அமைந்துள்ளன. இவை தொழில் வணிகத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் 21—2—1981 வரை இருந்தன. தற்போது இவைகள் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் அவர்கள் நேரடி பராமரிப்பின் கீழ் கொணரப்பட்டுள்ளன. இவைகளில் பற்றவைத்தல், சேர்த்தல் ஆகிய துறைகளில் 18 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் நலத்திற்காக கீழ்க்கண்ட இடங்களில் தொழிற்பயிற்சிக் கூடங்கள் நடத்தப்படுகின்றன :—

(1) தையல் மற்றும் ஆயத்த ஆடைகள் பயிற்சிக்கூடம் ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்.

(2) தையற் பயிற்சிக்கூடம், செக்கானூரணி, மதுரை மாவட்டம்.

(3) பிரம்பு மற்றும் நார்ப்பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம் (1) தக்கலை, (2) குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

மேலும் 1978-79 ஆம் ஆண்டில் தையல் பயிற்சி அளிப்பதற்காக புதியதாக 5 தையல் பயிற்சிக்கூடங்கள் கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு நிலையம் ஒன்றில் 20 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது :—

கிருஷ்ணன் கோவில்—கன்னியாகுமரி மாவட்டம்.

அஜீஸ்நகர் குடியிருப்பு—தென்னாற்காடு மாவட்டம்.

கம்பம்—மதுரை மாவட்டம்.

கடலாடி—இராமநாதபுரம் மாவட்டம்.

தேவர் குளம்—திருநெல்வேலி மாவட்டம்.

இப்பயிற்சி கூடங்களையும், பொதுநோக்கு பொறியியல் பணி மனைகளையும், பராமரிப்பதற்காக ரூபாய் 5.79 இலட்சம் 1980-81-ல் செலவிடப்பட்டது.



1981-82 ல் திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 6.59 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1982-83-ல் இதற்காக ரூபாய் 6.73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. விவசாயம் :—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கிணற்றுக்கு ரூபாய் 2,500 வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. 1981-82 க்கு திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 1.67 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் 47 நபர்கள் பயனடைந்தனர். 1982-83 மதிப்பீட்டில் ரூபாய் 1,67,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

18. வீட்டுவசதி :—1956-57 ஆம் ஆண்டு முதல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக கடன் மற்றும் மானிய அடிப்படையில் வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. முன்னர் ஒரு வீடு ரூபாய் 1,200 மதிப்பில் கட்டப்பட்டது. இதில் கடன் ரூபாய் 300 மானியம் ரூ. 900. 1975-76 ஆம் ஆண்டிலிருந்து வீடு கட்டுவதற்கான மொத்தத் தொகை ரூபாய் 2,700 ஆக உயர்த்தப்பட்டது. இதில் ரூபாய் 2,025 மானியமாகவும் ரூபாய் 675 பொருளாகவோ, உழைப்பாகவோ, பணமாகவோ பயனடைவோர் பங்காகவும், இருந்தது. இத்தொகை 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 4,300 ஆக உயர்த்தப்பட்டது. இதில் மானியம் ரூபாய் 3,225 ஆகவும் பயனடைவோர் பங்கு ரூபாய் 1,075 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளில் 665 மற்றும் 302 வீடுகள் தாட்கோ நிறுவனம் மூலமாக கட்டுவதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. கட்டுமான தளவாடங்களின் விலைகள் மற்றும் கூலி உயர்வு காரணமாக ஒரு வீட்டிற்கு அனுமதிக்கப்பட்ட தொகையை ரூபாய் 4,300-லிருந்து மேலும் உயர்த்தும் யோசனை பரிசீலனையில் உள்ளது.

19. குழந்தைகள் காப்பகம் :—அஜீஸ் நகர் குடியிருப்பில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளை சரியாகப் பராமரிக்கும் பொருட்டு அஜீஸ் நகரில் 5 குழந்தை காப்பகங்கள் 1977-78 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டுள்ளன. இவை சமூக நலத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. இவைகளுக்கான செலவினை பிற்பட்டோர் நலத்துறை ஏற்கிறது. ‘கேர்’ நிறுவனத்தின் உதவியும் இவைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இவைகளில் 350 தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. ஐந்து பால சேவிகைகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1981-82 திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 17,000-ம், 1982-83-க்கு ரூபாய் 17,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

[1982 மார்ச் 23

20. தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் :—பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் 'தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்' என்ற அமைப்பை நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீடு ரூபாய் 100 வீதம் 10 இலட்சம் சம பங்குகளாக ரூபாய் 10 கோடி வரையறுக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் தலைவராக சமூக நலத்துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் இருப்பார். அக்கழகத்தில் கீழ்க்கண்ட நபர்கள் பொறுப்பாளராகவும் அங்கத்தினர்களாகவும் இருப்பார்கள் :—

(1) பிற்பட்டோர் நல இயக்குநர், சென்னை—நிர்வாக இயக்குநர்.
(2) ஆணையர் மற்றும் செயலாளர், நிதித்துறை—அங்கத்தினர்.
(3) ஆணையர் மற்றும் செயலாளர், தொழில்துறை—அங்கத்தினர்.
(4) ஆணையர் மற்றும் செயலாளர், விவசாயத்துறை—அங்கத்தினர்.
(5) மற்றும் (6) தனியாக நியமிக்கப்படும் அங்கத்தினர்கள் இருவர் (அரசு சார்பற்றவர்).

இக்கழகத்தின் நோக்கங்கள் பின் வருமாறு :—

(1) பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக குறைந்த வட்டிவிகிதத்தில் பொருளாதார தொழில் முயற்சிகளுக்கு மார்ஜின் தொகை (மார்ஜின் மனி) அளித்தல்.

(2) பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக வர்த்தக வணிக் தொழில் ரீதியான பல திட்டங்களை நேரிடையாகவும், மறைமுகமாகவும் மேற்கொள்ளுதல்.

இக்கழகம் அரசு நிதி பெறுவதுடன், வங்கிகள், இதர நிறுவனங்கள் மற்றும் இதர வகையில் நிதி உதவி பெற்று இயங்கும். இக்கழகம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற ஏனைய திட்டங்களில் தீவிர முறையில் பங்கேற்கும்.

இம்மேம்பாட்டுக் கழகம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டப்படி தனியார் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 25—2—1982 அன்று மேற்படி மேம்பாட்டுக் கழகத்தின் இயக்குநர்களின் முதல் கூட்டம் நடத்தப்பட்டது. கர்நாடக மாநில பின்தங்கிய மற்றும் சிறு பான்மையோர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் ஆந்திரப் பிரதேச பின்தங்கிய வகுப்பினர் கூட்டுறவு நிதிக் கழகம் ஆகியவற்றில் ஏற்கெனவே அமுலாக்கப்பட்டு வரும் திட்டங்களை விவாதித்து அம்மாதிரித் திட்டங்களை தமிழ் நாட்டின் பின் தங்கிய வகுப்பினருக்கும் சிறந்த வகையில் பயனளிக்குமாறு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.



1982 மார்ச் 23]

21. வீட்டு மனைகள் கையகப்படுத்துதல் :—பின் தங்கிய வகுப்பினருள், ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்காக வீட்டு மனை கையகப்படுத்தி வழங்கும் திட்டம் தற்பொழுது செயல்பட்டு வருகிறது. பின் தங்கிய வகுப்பினரில் சிலர் ஆதி திராவிட மக்களைவிட நலிந்த நிலையில் உள்ளனர். இத்தகைய ஏழை மக்களுக்கு குறிப்பாக தொழில் அடிப்படையிலான பிற்பட்ட வகுப்பினரான ஒட்டர், நாவிதர், வண்ணார், நரிக்குறவர் முதலானோருக்கு இலவச வீட்டு மனைகள் வழங்க நிலங்கள் கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1982-83 ஆம் ஆண்டிற்கும் ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக பிற்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனவே பிற்பட்டோர் நல மானியக்கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்.

## அட்டவணை-'அ'

### கொள்கை விளக்கக் குறிப்பு 1982-83 ஆம் ஆண்டு

### 1982-83 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

மொத்தம் 9,22,67

நிர்வாகத்தில்-53,31 திட்டத்தில்—8,69,36

| திட்டங்களின் பெயர். | ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,25,65 | | திட்டத்தில் இல்லாதவை 643,,71 | |
|---|---|---|---|---|
| | பிற்பட்ட வகுப்பினருக்காக. | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. | பிற்பட்ட வகுப்பினருக்காக. | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
| உதவித்தொகை | 10,14 | 7,41 | 318,64 | 36,41 |
| பள்ளிகள் | ... | 1,32 | ... | 1,20,11 |
| மதிய உணவு | ... | 3,52 | ... | 7,38 |

| திட்டங்களின் பெயர். | ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,70,62 | | திட்டத்தில் இல்லாதவை 6,74,20 | |
|---|---|---|---|---|
| | பிற்பட்ட வகுப்பினருக்காக | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. | பிற்பட்ட வகுப்பினருக்காக. | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
| புத்தகம் மற்றும் துணி | 4,49 | 21,34 | 2,55 | 4,35 |
| உணவு மானியம் | 51 | .. | 9,58 | 18 |
| விடுதிகள் | 1,08,73 | 22,83 | 1,03,41 | 31,71 |
| பல்கலைகழகத்திற்கு மானியம் | .. | .. | 300 | .. |
| ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | 1,35 | .. | .. |
| விவசாயம் | .. | 1,67 | .. | .. |
| தொழிற்பயிற்சி | 27 | 5,09 | 79 | 58 |
| இலவசக் கருவிகள் | 20,19 | 31 | .. | .. |
| குடிநீர் | .. | .. | .. | 52 |
| சலவைத் துறை | 1,25 | .. | .. | .. |
| தனிப்பயிற்சி நிலையம் | .. | .. | 3,97 | .. |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு வீடுகள் வட்டு | .. | 1 | .. | .. |
| மனைகள் ஆர்ஜிதம் | 15,00 | .. | .. | .. |
| சிறப்பு பயிற்சி | .. | .. | 40 | .. |
| பட்டயக் கணக்கர் படிப்பு | .. | .. | 40 | .. |
| சிறந்த மாணவர்களுக்கு பரிசு | 4 | .. | .. | .. |
| குழந்தைகள் காப்பகம் | .. | 17 | .. | .. |
| விடுதிகள் கட்டுதல், சில்லரை வேலைகள் | 1 | .. | .. | .. |
| மொத்தம் .. .. | 1,60,63 | 65,62 | 4,42,74 | 2,00,97 |





**அட்டவணை—'ஆ'**

**அரசு பிற்பட்டோர் விடுதிகள்**

**1981-82**

சென்னை மாவட்டம்—

| | மொத்தம் |
|---|---|
| 1. கல்லூரி மாணவர் விடுதி, தென் சென்னை | 105 |
| 2. கல்லூரி மாணவர் விடுதி, தியாகராயநகர் | 105 |
| 3. கல்லூரி மாணவர் விடுதி, வடசென்னை | 105 |
| 4. தொழிற் பயிற்சி மாணவர் விடுதி, சென்னை-10 | 75 |
| 5. மாணவியர் விடுதி, திருவான்மியூர் | 120 |
| 6. மாணவியர் விடுதி, திருவல்லிக்கேணி | 70 |
| 7. கல்லூரி மாணவியர் விடுதி, சென்னை | 50 |
| 8. மாணவர் இல்லம், வடசென்னை | 50 |

செங்கல்பட்டு மாவட்டம்—

| | |
|---|---|
| 9. கல்லூரி மாணவர் விடுதி, காஞ்சிபுரம் | 100 |
| 10. கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்பட்டு | 50 |
| 11. கல்லூரி மாணவர் விடுதி, திருத்தணி | 50 |
| 12. மாணவர் விடுதி, வங்கலூர் | 50 |
| 13. மாணவர் விடுதி, கனகம்மாசத்திரம் | 50 |
| 14. மாணவர் விடுதி, மதுராமங்கலம் | 25 |
| 15. மாணவர் விடுதி, சாலவாக்கம் | 25 |
| 16. மாணவர் விடுதி, பெரிய பாளையம் | 50 |
| 17. மாணவர் விடுதி, கருங்குழி | 30 |
| 18. மாணவர் விடுதி, அத்திமாஞ்சேரிபேட்டை | 50 |
| 19. மாணவர் விடுதி, பாதிரிவேடு | 50 |
| 20. மாணவர் விடுதி, சுண்ணாம்புக்குளம் | 40 |
| 21. மாணவர் விடுதி, சோமங்கலம் | 25 |
| 22. மாணவர் விடுதி, ஊத்தி | 50 |

செங்கல்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 23. மாணவர் விடுதி, வாலாஜாபாத் | 200 |
| 24. மாணவியர் விடுதி, வாலாஜாபாத் | 60 |
| 25. மாணவியர் விடுதி, மதுராந்தகம் | 40 |
| 26. மாணவியர் விடுதி, திருத்தணி | 50 |
| 27. மாணவர் விடுதி, ஆவடி | 50 |
| 28. மாணவர் விடுதி, மதுராந்தகம் | 50 |
| 29. மாணவர் விடுதி, பேரம்பாக்கம் | 50 |
| 30. மாணவர் விடுதி, மாளாம்பதி | 50 |

வடாற்காடு மாவட்டம்—

| | |
|---|---|
| 31. கல்லூரி மாணவர் விடுதி, குடியாத்தம் | 50 |
| 32. கல்லூரி மாணவர் விடுதி, செய்யார் | 60 |
| 33. கல்லூரி மாணவர் விடுதி, வேலூர் | 50 |
| 34. கல்லூரி மாணவர் விடுதி, வாணியம்பாடி | 50 |
| 35. கல்லூரி மாணவியர் விடுதி, வாலாஜாப் பேட்டை | 50 |
| 36. மாணவர் விடுதி, பொன்னை | 50 |
| 37. மாணவர் விடுதி, திருவண்ணாமலை | 50 |
| 38. மாணவர் விடுதி, திருப்பத்தூர் | 50 |
| 39. மாணவர் விடுதி, குடியாத்தம் | 50 |
| 40. மாணவர் விடுதி, ஜோலார்பேட்டை | 50 |
| 41. மாணவர் விடுதி, ஆரணி | 50 |
| 42. மாணவர் விடுதி, போளூர் | 50 |
| 43. மாணவர் விடுதி, செங்கம் | 50 |
| 44. மாணவர் விடுதி, ஆற்காடு | 50 |
| 45. மாணவர் விடுதி, வந்தவாசி | 50 |
| 46. மாணவியர் விடுதி, செங்கம் | 50 |
| 47. மாணவர் விடுதி, அரக்கோணம் | 50 |
| 48. மாணவர் விடுதி, பேரணாம்பட்டு | 50 |
| 49. மாணவர் விடுதி, கே. வி. குப்பம் | 50 |



வடாற்காடு மாவட்டம்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 50. மாணவர் விடுதி, பேரணமல்லூர் | 50 |
| 51. மாணவர் விடுதி, சேத்துப்பட்டு | 50 |
| 52. மாணவர் விடுதி, வேட்டவலம் | 50 |
| 53. மாணவியர் விடுதி, காவேரிப்பாக்கம் | 50 |

தென்னாற்காடு மாவட்டம்—

| | |
|---|---|
| 54. கல்லூரி மாணவர் விடுதி, கடலூர் | 75 |
| 55. கல்லூரி மாணவர் விடுதி, திண்டிவனம் | 50 |
| 56. கல்லூரி மாணவர் விடுதி, விருத்தாச்சலம் | 150 |
| 57. கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர் | 50 |
| 58. மாணவர் விடுதி, விருத்தாச்சலம் | 100 |
| 59. மாணவர் விடுதி, பெண்ணாடம் | 90 |
| 60. மாணவர் விடுதி, பெரியகுப்பம் | 70 |
| 61. மாணவர் விடுதி, சேத்தியாத்தோப்பு | 140 |
| 62. மாணவர் விடுதி, திருநாவலூர் | 50 |
| 63. மாணவர் விடுதி, சிறுபாக்கம் | 75 |
| 64. மாணவர் விடுதி, கம்மாவரம் | 50 |
| 65. மாணவர் விடுதி, தேவபண்டலம் | 50 |
| 66. மாணவர் விடுதி, சோமந்தர்குடி | 50 |
| 67. மாணவர் விடுதி, வடக்கநேந்தல் | 50 |
| 68. மாணவர் விடுதி, தொழுதூர் (தற்போது புவனகிரி) | 85 |
| 69. மாணவர் விடுதி, பரங்கிப்பேட்டை (தற்போது புவனகிரி) | 40 |
| 70. மாணவர் விடுதி, தியாகதுர்க்கம் | 50 |
| 71. மாணவர் விடுதி, இல்லோடு | 50 |
| 72. மாணவர் விடுதி, சித்தலிங்கமடம் | 50 |
| 73. மாணவர் விடுதி, ஆனந்தபுரம் | 50 |
| 74. மாணவர் விடுதி, சிதார் | 50 |
| 75. மாணவர் விடுதி, ப. முட்லூர் | 50 |
| 76. மாணவர் விடுதி, மஞ்சக்கொல்லை | 50 |
| 77. மாணவர் விடுதி, சின்னசேலம் | 50 |
| 78. மாணவர் விடுதி, சித்தேரிப்பட்டு | 50 |
| 79. மாணவர் விடுதி, அன்னியூர் | 50 |

[1982 மார்ச் 23

தஞ்சாவூர் மாவட்டம்

| | |
|---|---|
| 80. கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்-1 | 175 |
| 81. கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்-2 | 175 |
| 82. கல்லூரி மாணவர் விடுதி, கும்பகோணம் | 50 |
| 83. கல்லூரி மாணவர் விடுதி, திருவாரூர் | 50 |
| 84. கல்லூரி மாணவர் விடுதி, மாயூரம் | 50 |
| 85. கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர் | 40 |
| 86. மாணவர் விடுதி, பேராவூரணி | 50 |
| 87. மாணவர் விடுதி, மகாதேவப்பட்டிணம் | 50 |
| 88. மாணவர் விடுதி, மன்னார்குடி | 100 |
| 89. மாணவர் விடுதி, நீடாமங்கலம் | 175 |
| 90. மாணவர் விடுதி, உம்பளச்சேரி | 40 |
| 91. மாணவர் விடுதி, வேதாரண்யம் | 50 |
| 92. மாணவர் விடுதி, ஆலத்தூர் | 40 |
| 93. மாணவர் விடுதி, கன்னத்தான்குடி | 50 |
| 94. மாணவர் விடுதி, மாயூரம் | 75 |
| 95. மாணவர் விடுதி, மதுக்கூர் | 50 |
| 96. மாணவர் விடுதி, செம்பனார் கோவில் | 50 |
| 97. மாணவர் விடுதி, பூம்புகார் | 50 |
| 98. மாணவர் விடுதி, களி | 50 |
| 99. மாணவர் விடுதி, பாபநாசம் | 50 |
| 100. மாணவியர் விடுதி, வலங்கைமான் | 50 |
| 101. மாணவியர் விடுதி, நன்னிலம் | 40 |
| 102. மாணவியர் விடுதி, குற்றாலம் | 50 |
| 103. மாணவியர் விடுதி, ஈச்சாங்கோட்டை | 50 |
| 104. கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம் | 50 |
| 105. மாணவர் விடுதி, நாகப்பட்டினம் | 50 |
| 106. மாணவர் விடுதி, திருவிடைமருதூர் | 50 |
| 107. மாணவர் விடுதி, வைத்திஸ்வரன் கோயில் | 50 |
| 108. மாணவர் விடுதி, திருவோணம் | 50 |
| 109. மாணவர் விடுதி, முத்துப்பேட்டை | 50 |
| 110. மாணவர் விடுதி, மணக்குடி | 50 |
| 111. மாணவியர் இல்லம், பட்டுக்கோட்டை | 50 |



1982 மார்ச் 23]

சேலம் மாவட்டம்

| | |
|---|---|
| 112. கல்லூரி மாணவர் விடுதி, சேலம் சந்திப்பு | 100 |
| 113. கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல் | 40 |
| 114. கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல் | 55 |
| 115. மாணவர் விடுதி, எலம்பிள்ளை | 90 |
| 116. மாணவர் விடுதி, சொங்கனாபுரம் | 70 |
| 117. மாணவர் விடுதி, மகுதலேனா சத்திரம் | 80 |
| 118. மாணவர் விடுதி, கண்ணங்குறிச்சி | 50 |
| 119. மாணவர் விடுதி, தாரமங்கலம் | 70 |
| 120. மாணவர் விடுதி, தீவட்டிப்பட்டி | 70 |
| 121. மாணவர் விடுதி, எடப்பட்டி | 70 |
| 122. மாணவர் விடுதி, எருமைப்பட்டி | 70 |
| 123. மாணவர் விடுதி, எலச்சிப்பாளையம் | 70 |
| 124. மாணவர் விடுதி, மல்லசமுத்திரம் | 70 |
| 125. மாணவர் விடுதி, வாழைப்பாடி | 50 |
| 126. மாணவர் விடுதி, ராமாபுரம் | 40 |
| 127. மாணவர் விடுதி, ஆட்டையாம்பட்டி | 50 |
| 128. மாணவர் விடுதி, ஆதனூர் | 50 |
| 129. மாணவர் விடுதி, காத்தப்பாடி | 75 |
| 130. மாணவர் விடுதி, வரகனூர் | 50 |
| 131. மாணவர் விடுதி, தாராமங்கலம் | 50 |
| 132. மாணவர் விடுதி, காளாக்குறிச்சிபுதூர் | 50 |
| 133. மாணவர் விடுதி, முள்ளுக்குறிச்சி | 50 |
| 134. மாணவர் விடுதி, மங்களாபுரம் | 50 |
| 135. மாணவர் விடுதி, விட்டம்பாளையம் | 55 |
| 136. மாணவர் விடுதி, சேலம் | 50 |
| 137. மாணவர் விடுதி, கொளத்தூர் | 50 |

1982 மார்ச் 23]

தர்மபுரி மாவட்டம்

| | |
|---|---|
| 138. கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி | 150 |
| 139. மாணவர் விடுதி, ஹோசூர் | 50 |
| 140. மாணவர் விடுதி, சிங்காரப்பேட்டை | 50 |
| 141. மாணவர் விடுதி, பாலக்கோடு | |
| 142. மாணவர் விடுதி, போச்சம்பள்ளி | 50 |
| 143. மாணவர் விடுதி, ஊஞர் | 50 |
| 144. மாணவர் விடுதி, தோகரப்பள்ளி | 40 |
| 145. மாணவர் விடுதி, காரிமங்கலம் | 40 |
| 146. மாணவர் விடுதி, அன்செட்டி | 50 |
| 147. மாணவர் விடுதி, பெண்ணாகரம் | 50 |
| 148. மாணவர் விடுதி, மாரண்டஹள்ளி | 50 |
| 149. மாணவர் விடுதி, கோணங்கிநாயக்கன்ஹள்ளி | 50 |
| 150. மாணவர் விடுதி, கோட்டப்பட்டி | 50 |
| 151. மாணவியர் விடுதி, பாப்பாரப்பட்டி | 50 |
| 153. மாணவர் விடுதி, திருமால்வாடி | 50 |
| 154. மாணவர் விடுதி, மொரப்பூர் | 50 |
| 155. மாணவர் விடுதி, கெலமங்கலம் | 50 |
| 155. மாணவியர் விடுதி, லலிகம் | 50 |
| 155. மாணவியர் விடுதி, கெலமங்கலம் | 50 |
| 156. மாணவியர் விடுதி, லலிகம் | 50 |
| 157. மாணவர் விடுதி, பேரிகை | 50 |
| 158. மாணவர் விடுதி, சூலகிரி | 50 |
| 159. மாணவர் விடுதி, குன்னத்தூர் | |

கோயம்புத்தூர் மாவட்டம்

| | |
|---|---|
| 160. கல்லூரி மாணவர் விடுதி, கோயம்புத்தூர் | 100 |
| 161. கல்லூரி மாணவர் விடுதி, திருப்பூர் | 100 |
| 162. மாணவர் விடுதி, தொண்டமுத்தூர் | 60 |
| 163. மாணவர் விடுதி, மேட்டுபாளையம் | 50 |



1982 மார்ச் 23]

கோயம்புத்தூர் மாவட்டம்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 164. மாணவர் விடுதி, சொக்கபாளையம் | 50 |
| 165. மாணவர் விடுதி, உடுமல்பேட்டை | 50 |
| 166. மாணவர் விடுதி, பல்லடம் | 50 |
| 167. மாணவர் விடுதி, பெத்திக்குட்டை | 50 |
| 168. மாணவர் விடுதி, கிணத்துக்கடவு | 50 |
| 169. மாணவர் விடுதி, ஆனைமலை | 50 |
| 170. மாணவர் விடுதி, கோட்டூர் | 50 |

பெரியார் மாவட்டம்

| | |
|---|---|
| 171. கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு | 50 |
| 172. கல்லூரி மாணவர் விடுதி, கோபிசெட்டிபாளையம் | 100 |
| 173. மாணவர் விடுதி, பெருந்துறை | 50 |
| 174. மாணவர் விடுதி, சத்தியமங்கலம் | 60 |
| 175. மாணவர் விடுதி, குருவாரெட்டியூர் | 40 |
| 176. மாணவர் விடுதி, அத்தியூர் | 40 |
| 177. மாணவர் விடுதி, கோபிசெட்டிபாளையம் | 50 |
| 178. மாணவியர் விடுதி, புஞ்சைபுளியம்பட்டி | 50 |
| 179. மாணவர் விடுதி, புஞ்சை புளியம்பட்டி | 50 |
| 180. மாணவர் விடுதி, சிவகிரி | 50 |
| 181. மாணவர் விடுதி, சென்னிமலை | 50 |
| 182. மாணவர் விடுதி, தாராபுரம் | 50 |
| 183. மாணவர் விடுதி, காங்கேயம் | 50 |

நீலகிரி மாவட்டம்

| | |
|---|---|
| 184. கல்லூரி மாணவர் விடுதி, உதகமண்டலம் | 100 |
| 185. கல்லூரி மாணவியர் விடுதி, உதகமண்டலம் | 50 |
| 186. மாணவர் விடுதி, கூனூர் | 30 |
| 187. மாணவர் விடுதி, தேவர்சோலை | 40 |

[1982 மார்ச் 23

நீலகிரி மாவட்டம்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 188. மாணவர் விடுதி, அம்பமூலா | 50 |
| 189. மாணவர் விடுதி, உதகமண்டலம் | 50 |
| 190. மாணவர் விடுதி, எருமடு | 50 |

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| | மொத்தம் |
|---|---|
| 191. கல்லூரி மாணவர் விடுதி, தென்னூர், திருச்சி | 100 |
| 192. கல்லூரி மாணவர் விடுதி, காஜாமலை, திருச்சி | 125 |
| 193. கல்லூரி மாணவர் விடுதி, கரூர் | 40 |
| 194. கல்லூரி மாணவர் விடுதி, அரியலூர் | 40 |
| 195. கல்லூரி மாணவியர் விடுதி, உறையூர், திருச்சிராப்பள்ளி | 50 |
| 196. மாணவர் விடுதி, கல்லக்குடி | 50 |
| 197. மாணவர் விடுதி, திருவெரும்பூர் | 100 |
| 198. கல்லூரி மாணவர் விடுதி, புதூர் | 75 |
| 199. மாணவர் விடுதி, ஜெயங்கொண்டான் | 50 |
| 200. மாணவர் விடுதி, பெரம்பலூர் | 50 |
| 201. மாணவர் விடுதி, லாலாப்பேட்டை | 75 |
| 202. மாணவர் விடுதி, பஞ்சப்பட்டி | 50 |
| 203. மாணவர் விடுதி, கண்ணனூர் | 50 |
| 204. மாணவர் விடுதி, துங்காபுரம் | 50 |
| 205. மாணவர் விடுதி, அரியலூர் | 75 |
| 206. மாணவர் விடுதி, மருவத்தூர் | 100 |
| 207. மாணவர் விடுதி, மணப்பாறை | 100 |
| 208. மாணவர் விடுதி, பொன்பரப்பி | 50 |
| 209. மாணவர் விடுதி, வி. களத்தூர் | 40 |
| 210. மாணவர் விடுதி, குலக்காந்தம் | 40 |
| 211. மாணவர் விடுதி, உடையார்பாளையம் | 50 |
| 212. மாணவர் விடுதி, செட்டிக்குளம் | 50 |
| 213. மாணவர் விடுதி, திருமழப்பாடி | 50 |



1982 மார்ச் 23]

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 214. மாணவியர் விடுதி, மேட்டுப்பாளையம் | 20 |
| 215. மாணவியர் விடுதி, இராமலிங்கபுரம், திருச்சிராப்பள்ளி | 80 |
| 216. மாணவர் விடுதி, தரகம்பட்டி | 50 |
| 217. மாணவர் விடுதி, கூத்தூர் | 50 |
| 218. மாணவர் விடுதி, நொய்யல் | 50 |
| 219. மாணவர் விடுதி, திருமானூர் | 50 |
| 220. மாணவர் விடுதி, டி. பழூர் | 50 |
| 221. மாணவர் விடுதி, தோகைமலை | 50 |

புதுக்கோட்டை மாவட்டம்

| | |
|---|---|
| 222. கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை | 175 |
| 223. கல்லூரி மாணவர் விடுதி, (கூடுதல்) புதுக்கோட்டை | 75 |
| 224. மாணவர் விடுதி, திருமயம் | 50 |
| 225. மாணவர் விடுதி, ஆலங்குடி | 40 |
| 226. மாணவர் விடுதி, விராலிமலை | 75 |
| 227. மாணவர் விடுதி, இலுப்பூர் | 50 |
| 228. மாணவர் விடுதி, வடக்காடு | 50 |
| 229. மாணவர் விடுதி, சுப்ரமணியபுரம் | 50 |
| 230. மாணவர் விடுதி, மணல்மேல்குடி | 50 |
| 231. மாணவர் விடுதி, பொன்பதி | 40 |
| 232. மாணவியர் விடுதி, அறந்தாங்கி | 40 |
| 233. மாணவர் விடுதி, ஆவுடையார்கோயில் | 50 |
| 234. மாணவர் விடுதி, திருக்காளம்புதூர் | 50 |
| 235. மாணவர் விடுதி, அண்டக்குளம் | 50 |
| 236. மாணவியர் விடுதி, அரிமளம் | 50 |
| 237. மாணவர் விடுதி, கீரமங்கலம் | 50 |
| 238. மாணவர் விடுதி, கீரனூர் | 50 |
| 239. மாணவர் விடுதி, காரம்பக்குடி | 50 |

[1932 மார்ச் 23

தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி

| | மொத்தம் |
|---|---|
| **மதுரை மாவட்டம்** | |
| 240. கல்லூரி மாணவர் விடுதி, மதுரை | 50 |
| 241. கல்லூரி மாணவர் விடுதி, திண்டுக்கல் | 50 |
| 242. கல்லூரி மாணவர் விடுதி, மேலூர் | 50 |
| 243. கல்லூரி மாணவியர் விடுதி, மதுரை | 40 |
| 244. மாணவர் விடுதி, அலங்காநல்லூர் | 104 |
| 245. மாணவர் விடுதி, திருநகர் | 80 |
| 246. மாணவர் விடுதி, கல்லாக்குளம் | 110 |
| 247. மாணவர் விடுதி, தர்மபுரி (பெரியகுளம் தாலுகா) | 60 |
| 248. மாணவர் விடுதி, பெரியகுளம் | 80 |
| 249. மாணவர் விடுதி, சேக்காப்பட்டி | 75 |
| 250. மாணவர் விடுதி, திருமங்கலம் | 50 |
| 251. மாணவர் விடுதி, மேலவளவு | 50 |
| 252. மாணவர் விடுதி, போடிநாயக்கனூர் | 120 |
| 253. மாணவர் விடுதி, கி. வாடிப்பட்டி | 80 |
| 254. மாணவர் விடுதி, அச்சம்பட்டி | 70 |
| 255. மாணவர் விடுதி, மட்டப்பாறை | 40 |
| 256. மாணவர் விடுதி, பாப்பாநாயக்கன்பட்டி | 55 |
| 257. மாணவர் விடுதி, தே. பெருமாள்பட்டி | 50 |
| 258. மாணவர் விடுதி, எழுமலை | 50 |
| 259. மாணவர் விடுதி, கருங்காலக்குடி | 50 |
| 260. மாணவர் விடுதி, பழனி | 50 |
| 261. மாணவர் விடுதி, சின்னாளப்பட்டி | 90 |
| 262. மாணவியர் விடுதி, சின்னாளப்பட்டி | 60 |
| 263. மாணவியர் விடுதி, பேரையூர் | 50 |
| 264. மாணவியர் விடுதி, தி. கல்லுப்பட்டி | 50 |
| 265. மாணவியர் விடுதி, ஆண்டிப்பட்டி | 50 |
| 266. மாணவர் விடுதி, கூடக்கோயில் | 50 |
| 267. மாணவர் விடுதி, வெம்பர்பட்டி | 50 |
| 268. மாணவர் விடுதி, கோடைக்கானல் | 50 |
| 269. மாணவர் விடுதி, வேடப்பட்டி | 50 |
| 270. மாணவர் விடுதி, நெய்காரப்பட்டி | 50 |



1932 மார்ச் 23]

| | மொத்தம் |
|---|---|
| **இராமநாதபுரம் மாவட்டம்** | |
| 271. கல்லூரி மாணவர் விடுதி, விருதுநகர் | 50 |
| 272. கல்லூரி மாணவர் விடுதி, இராமநாதபுரம் | 100 |
| 273. கல்லூரி மாணவர் விடுதி, சிவகங்கை | 40 |
| 274. மாணவர் விடுதி, கண்டரமாணிக்கம் | 30 |
| 275. மாணவர் விடுதி, வடக்கு மூத்திரம் | 50 |
| 276. மாணவர் விடுதி, திருக்கோஷ்டியூர் | 70 |
| 277. மாணவர் விடுதி, காரியாப்பட்டி | 40 |
| 278. மாணவர் விடுதி, புதுவயல் | 50 |
| 279. மாணவர் விடுதி, திருத்தங்கல் | 60 |
| 280. மாணவர் விடுதி, மண்டலமாணிக்கம் | 40 |
| 281. மாணவர் விடுதி, கூமாபட்டி | 50 |
| 282. மாணவர் விடுதி, பரமக்குடி | 50 |
| 283. மாணவர் விடுதி, பெரியகோட்டை | 50 |
| 284. மாணவர் விடுதி, செயத்தூர் | 50 |
| 285. மாணவர் விடுதி, தேவிப்பட்டினம் | 50 |
| 286. மாணவர் விடுதி, சாயல்குடி | 50 |
| 287. மாணவியர் விடுதி, பாகனேரி | 30 |
| 288. மாணவியர் விடுதி, நாட்டரசன்கோட்டை | 40 |
| 289. மாணவியர் விடுதி, தேவகோட்டை | 50 |
| 290. மாணவியர் விடுதி, குள்ளூர் சந்தை | 75 |
| 291. மாணவியர் விடுதி, பிரான்மலை | 50 |
| 292. மாணவியர் விடுதி, காரியபட்டி | 50 |
| 293. மாணவர் விடுதி, பெருநாளி | 50 |
| 294. மாணவர் விடுதி, மண்டபம் | 50 |
| 295. மாணவர் விடுதி, நரிக்குடி | 50 |
| 296. மாணவர் விடுதி, ராஜபாளையம் | 50 |
| 297. மாணவர் விடுதி, திருவாடானை | 50 |
| 298. மாணவியர் விடுதி, இராமேஸ்வரம் | 50 |
| 299. மாணவர் விடுதி, ஜோகில்பட்டி | 50 |
| 300. மாணவர் விடுதி, மானாமதுரை | 50 |

[1982 மார்ச் 23

| | மொத்தம் |
|---|---|
| **திருநெல்வேலி மாவட்டம்** | |
| 301. கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி | 50 |
| 302. கல்லூரி மாணவர் விடுதி, திருநெல்வேலி | 50 |
| 303. கல்லூரி மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை | 40 |
| 304. மீனவர் மாணவர் விடுதி, தூத்துக்குடி | 150 |
| 305. மாணவர் விடுதி, ஏருவாடி | 30 |
| 306. மாணவர் விடுதி, பனிக்க நாடார் குடியிருப்பு | 150 |
| 307. மாணவர் விடுதி, சாமிநாதபுரம் | 49 |
| 308. மாணவர் விடுதி, மோப்பாளையம் | 50 |
| 309. மாணவர் விடுதி, இடிந்தகரை | 90 |
| 310. மாணவர் விடுதி, மணப்பாடு | 70 |
| 311. மாணவர் விடுதி, விளாத்திகுளம் | 40 |
| 312. மாணவர் விடுதி, பழவூர் | 50 |
| 313. மாணவர் விடுதி, எட்டையாபுரம் | 50 |
| 314. மாணவியர் விடுதி, புதூர் | 75 |
| 315. மாணவியர் விடுதி, நாங்குநேரி | 40 |
| 316. மாணவியர் விடுதி, தூத்துக்குடி | 50 |
| 317. மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை | 50 |
| 318. மாணவர் விடுதி, பேட்டை | 50 |
| 319. மாணவர் விடுதி, கூட்டப்புலி | 50 |
| 320. மாணவர் விடுதி, கழுகுமலை | 50 |
| 321. மாணவர் விடுதி, இடைக்கல் | 50 |
| 322. மாணவியர் விடுதி, பனிக்கநாடார் குடியிருப்பு | 50 |
| 323. மாணவியர் விடுதி, கருங்குளம் | 50 |
| 324. மாணவியர் விடுதி, கூட்டப்புளி | 50 |
| 325. மாணவியர் விடுதி, சங்கர்நகர் | 50 |
| 326. மாணவர் விடுதி, பேட்டைக்குளம் | 50 |
| 327. மாணவர் விடுதி, ஊவரி | 50 |



1982 மார்ச் 23]

| | மொத்தம் |
|---|---|
| **கன்னியாகுமரி மாவட்டம்—** | |
| 328. கல்லூரி மாணவர் விடுதி, நாகர்கோவில் | 50 |
| 329. கல்லூரி மாணவர் விடுதி, குழித்துறை | 50 |
| 330. கல்லூரி மாணவியர் விடுதி, அகதீஸ்வரம் | 50 |
| 331. மாணவியர் விடுதி, குளச்சல் | 50 |
| 332. மாணவியர் விடுதி, குலசேகரம் | 50 |
| 333. மாணவியர் விடுதி, பதப்பாண்டி | 50 |
| 334. மாணவியர் விடுதி, தக்களை | 50 |
| 335. மாணவர் விடுதி, ஆரல்வாய்மொழி | 50 |

### சுருக்கம்

| | | |
|---|---|---|
| 41 | கல்லூரி மாணவர் விடுதிகள் | 3,260 |
| 14 | கல்லூரி மாணவியர் விடுதிகள் | 665 |
| 231 | உயர்நிலைப் பள்ளி மாணவர் விடுதிகள் | 12,813 |
| 48 | உயர்நிலைப் பள்ளி மாணவியர் விடுதிகள் | 2,450 |
| 1 | தொழிற்பயிற்சி விடுதி | 75 |
| 335 | | 19,263 |

### அட்டவணை ' இ '.

### அரசு குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர் விடுதிகள்

**1981-82**

| | மொத்தம் |
|---|---|
| **செங்கல்பட்டு மாவட்டம்—** | |
| 1. மாணவர் விடுதி, பல்லாவரம் | 50 |
| **வடாற்காடு மாவட்டம்—** | |
| 2. மாணவியர் விடுதி, பி. எல். தண்டா | 50 |

கோயம்புத்தூர் மாவட்டம்—

| | |
|---|---|
| 3. மாணவர் விடுதி, அவினாசி | 50 |
| 4. மாணவர் விடுதி, திருப்பூர் | 50 |

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

| | |
|---|---|
| 5. மாணவர் விடுதி, இருதயபுரம், திருச்சிராப்பள்ளி | 50 |
| 6. மாணவர் விடுதி, மேலமாயனூர் | 50 |

புதுக்கோட்டை மாவட்டம்—

| | |
|---|---|
| 7. மாணவர் விடுதி, கந்தர்வ கோட்டை | 50 |
| 8. மாணவர் விடுதி, புதுக்கோட்டை | 44 |
| 9. மாணவர் விடுதி, பொன்னமராவதி | 50 |

மதுரை மாவட்டம்—

| | |
|---|---|
| 10. தொழிற் பயிற்சிப் பள்ளி விடுதி, கே. புதூர், மதுரை | 100 |
| 11. மாணவர் தொழிற் பயிற்சி விடுதி, தேனி | 50 |
| 12. மாணவர் விடுதி, திருமங்கலம் | 150 |
| 13. மாணவர் விடுதி, திண்டுக்கல் | 180 |
| 14. மாணவர் விடுதி, உசிலம்பட்டி | 650 |
| 15. மாணவர் விடுதி, ஞான ஒளிவுபுரம், மதுரை | 60 |
| 16. மாணவர் விடுதி, செக்கானூரணி | 200 |
| 17. மாணவர் விடுதி, நாடார்மங்கலம் | 120 |
| 18. மாணவர் விடுதி, உத்தமபாளையம் | 150 |
| 19. மாணவர் விடுதி, வத்தலக்குண்டு | 140 |
| 20. மாணவர் விடுதி, கடமலைக்குண்டு | 60 |
| 21. மாணவர் விடுதி, பாப்பாப்பட்டி | 80 |
| 22. மாணவர் விடுதி, ராஜதானி | 70 |
| 23. மாணவர் விடுதி, அல்லிநகரம் | 60 |
| 24. மாணர் விடுதி, மேலக்கால் | 50 |
| 25. மாணவர் விடுதி, விளாம்பட்டி | 50 |
| 26. மாணவர் விடுதி, போடி | 50 |
| 27. மாணவர் விடுதி, தும்மக்குண்டு | 50 |





| மதுரை மாவட்டம்—தொடர்ச்சி | மொத்தம் |
|---|---|
| 28. மாணவர் விடுதி, கம்பம் | 50 |
| 29. மாணவர் விடுதி, ராயப்பன்பட்டி | 50 |
| 30. மாணவர் விடுதி, வெள்ளையம்மாள்புரம் | 50 |
| 31. மாணவியர் விடுதி, உசிலம்பட்டி | 650 |
| 32. மாணவியர் விடுதி, திருமங்கலம் | 125 |
| 33. மாணவியர் விடுதி, சின்னமனூர் | 100 |
| 34. மாணவியர் விடுதி, கம்பம் | 50 |
| 35. மாணவியர் விடுதி, செக்கானூரணி | 50 |
| 36. மாணவியர் விடுதி, கூடலூர் | 50 |
| 37. மாணவியர் விடுதி, திண்டுக்கல் | 50 |
| 38. மாணவர் விடுதி, கூடலூர் | 50 |
| 39. மாணவர் விடுதி, விளாத்தூர் | 45 |

இராமநாதபுரம் மாவட்டம்—

| | |
|---|---|
| 40. மாணவர் விடுதி, கோவிலாங்குலம் | 50 |
| 41. மாணவர் விடுதி, கமுதி | 150 |
| 42. மாணவர் விடுதி, அருப்புக்கோட்டை | 100 |
| 43. மாணவர் விடுதி, நைனார்கோயில் | 75 |
| 44. மாணவர் விடுதி, முதுகுளத்தூர் | 100 |
| 45. மாணவர் விடுதி, பொம்மநேந்தல் | 50 |
| 46. மாணவர் விடுதி, கடலாடி | 60 |
| 47. மாணவர் விடுதி, மேலக்கிடாரம் | 50 |
| 48. மாணவியர் விடுதி, அருப்புக்கோட்டை | 50 |
| 49. மாணவியர் விடுதி, கமுதி | 50 |
| 50. மாணவியர் விடுதி, முதுகுளத்தூர் | 50 |

திருநெல்வேலி மாவட்டம்—

| | |
|---|---|
| 51. மாணவர் விடுதி, கயத்தார் | 50 |
| 52. மாணவர் விடுதி, கோவில்பட்டி | 60 |
| 53. மாணவர் விடுதி, சங்கரன்கோயில் | 110 |

திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி

| | |
|---|---|
| 54. மாணவர் விடுதி, அம்பாசமுத்திரம் | 75 |
| 55. மாணவர் விடுதி, பாளையங்கோட்டை | 75 |
| 56. மாணவர் விடுதி, தென்காசி | 60 |
| 57. மாணவர் விடுதி, வீரகேரளம்புதூர் | 30 |
| 58. மாணவர் விடுதி, வெள்ளாங்குளம் | 30 |
| 59. மாணவர் விடுதி, வன்னிக்கோநேந்தல் | 30 |
| 60. மாணவர் விடுதி, சாயமலை | 30 |
| 61. மாணவர் விடுதி, வாசுதேவநல்லூர் | 50 |
| 62. மாணவியர் விடுதி, சங்கரன்கோவில் | 50 |

சுருக்கம்.

| | | |
|---|---|---|
| 46 | உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதிகள் | 3,894 |
| 14 | உயர்நிலைப்பள்ளி மாணவியர் விடுதிகள் | 1,425 |
| 2 | தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் | 150 |
| | மொத்தம் | 5,469 |





அட்டவணை 'ஈ'

அ. பிற்பட்டோர் நலத்துறை மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநரின் கீழ் நடப்பவை:—

| தொழிற்பயிற்சிக் கூடங்கள் (1) | துவங்கப் பட்ட வருடம். (2) | பயிற்சி யாளர் களின் எண் ணிக்கை. (3) | உதவிப் பணம். (4) |
|---|---|---|---|
| 1 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, முதுகுளத்தூர், இராமநாதபுரம், | 1961 | 30 | 45 |
| 2 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, செக்காணூரணி, மதுரை. | 1968 | 15 | 45 |
| 3 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, வீரகேரளம்புதூர் திருநெல்வேலி. | 1955 | 15 | 45 |
| 4 பிரம்பு பயிற்சி நிலையம், தக்கலை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 15 | 30 |
| 5 தும்பு பயிற்சி நிலையம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம் | 1960 | 25 | 30 |

ஆ. சமூக நல இயக்குநரின் கீழ் நடத்தப்படுவன:—

| | | | |
|---|---|---|---|
| 1 தையல் மற்றும் ஆய்த்த ஆடை நிலையம், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி. | 1970 | 20 | 30 |
| 2 தையல மற்றும் எம்ப்ராய்டரி நிலையம், செக்காணூரணி, மதுரை. | 1971 | 50 | 30 |
| 3 தையல் பயிற்சி நிலையம் ஊமங்கலம், தென்னாற்காடு மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 4. தையல் பயிற்சி நிலையம் கம்பம் மதுரை மாவட்டம் | 1978 | 20 | 30 |
| 5. தையல் பயிற்சி நிலையம் கடலாடி, இராமநாதபுரம் மாவட்டம் | 1978 | 20 | 30 |
| 6. தையல் பயிற்சி நிலையம், தேவர் குளம், திருநெல்வேலி மாவட்டம் | 1978 | 20 | 30 |
| 7. தையல் பயிற்சி நிலையம், கிருஷ்ணன் கோவில், கன்னியாகுமரி மாவட்டம் | 1978 | 20 | 30 |

## இணைப்பு IV

[622 ஆம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக்குறிப்பைக் காண்க]

ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத் துறை.

மானியக் கோரிக்கை எண் 31.

கொள்கை விளக்கக் குறிப்பு (1982-83).

"ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலன்" என்ற தலைப்பின் கீழ் 1982-83 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 31-ல் ரூபாய் 4,110.31 இலட்சம் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச் சட்டமன்றப் பேரவையினை வேண்டுகிறேன்.

2. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகை 412 இலட்சமாகும். இதில், ஆதி திராவிடர் 73.16 இலட்சம் பேர்; பழங்குடியினர் 3.11 இலட்சம் பேர். மொத்த மக்கட் தொகையில் இது முறையே 17.76 சதவிதமும் 0.76 சதவிதமும் ஆகும். தமிழ் நாட்டின் மொத்த மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 39.05 சதவிதம். இதில் கல்வி அறிவு பெற்ற ஆதி திராவிடர் 21.81 சதவிதமும் பழங்குடியினர் 9.02 சதவிதமும் ஆவர்.

3. தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு கொண்டுவந்த பலமுனைத் திட்டங்களின் கீழும், கல்வி, வேளாண்மை, கால் நடை வளர்ப்பு, வருவாய், கூட்டுறவுத் தொழில் போன்ற பல பொதுத் துறை திட்டங்களில் ஏனைய பொதுமக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறையினர் செயற்படுத்தி வரும் நலத் திட்டங்களின் பலனையும் இவர்கள் பெறுகின்றனர்.

4. ஆதி திராவிடர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தைத் தீவிரப் படுத்த புதிதாகக் கொண்டுவரப்பட்ட உட்பகுதித் திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப் பட்டு வருவதை இந்த அவையினர் நன்கறிவர். ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலனுக்கென கொண்டு வரப்பட்ட சிறப்பு உட்பகுதித் திட்டத்தின் நோக்கங்களாவன—

(i) ஆதி திராவிடர்களில் பாதிபேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். இவர்கள், வறுமை நிலையிலிருந்து விடுபட்ட நல்ல நிலைமைக்கு வர ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உதவுதல்.

(ii) ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ஆதி திராவிடர் குடியிருப்பு களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின் வசதி, சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதி முதலியவற்றை செய்து கொடுத்தல்.



இவ்விரண்டு நோக்கங்களையும் எய்த, இதர வளர்ச்சித் துறைகளின் முயற்சியையும் நிதி வாயில்களையும் ஒருங்கு திரட்டி பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின்கீழ் பொதுத் துறையிலிருந்து குறைந்தது 18 சதவித நன்மையை ஆதி திராவிடர்கள் பெற அரசு வழி வகுத்துள்ளது. இதற்காக ஒவ்வொரு வளர்ச்சித் துறைக்கும் திட்ட இலக்கும், நிதி இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இதன் விவரங்கள் இணைப்பு எண் IX -ல் குறிக்கப்பட்டுள்ளன. திட்டங்களின் முன்னேற்றத்தைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திட்ட இலக்கையும் நிதி இலக்கையும் செயல் முறை நிதி இலக்குகளை நிர்ணயிக்குமாறு வளர்ச்சித் துறைகள் அனைத்தும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இச் சிறப்பு உட் பகுதி திட்டம் பிரிக்க இயலாத துறைகளிடமிருந்து உதவி கணக்கெடுக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 18 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இவர்களில் பாதி பேர் அதாவது 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களின் வறுமை நிலையைப் போக்கி மேம்பாடுற்ற நிலைமைக்குக் கொண்டுவர ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட கால கட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1.8 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் மேம்பாடுற்ற நிலைமைக்குக் கொண்டு வரப்படுவர் 1980-81 ஆம் ஆண்டில் பொதுத் துறையிலிருந்து ரூபாய் 71.64 கோடி ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் பொதுத் துறையிலிருந்து ரூபாய் 83.04 கோடி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 114.04 கோடி பொதுத் துறையிலிருந்து ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. பழங்குடியினர் நலனுக்காக பழங்குடியினர் நலத்துறைத் திட்டத்தின் கீழ் தனித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வி, பொருளாதார முன்னேற்றம், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் ஏனைய திட்டங்களின் கீழ் உள்ள இயல்பான துறைத் திட்டங்களுடன் இத்திட்டங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர பழங்குடியினரான மலைசாதியினருக்கான புதிய மேம்பாட்டு திட்டம் ஒன்றும் உள்ளது. பழங்குடியினர் நலத் துறைத் திட்டம் செயல்முறைக்கு வந்த பிறகு பழங்குடியினர் மேம்பாட்டுப் பணிகளில் நல்லதொரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூபாய் 345.25 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 393.65 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

6. இந்திய அரசுப் பணி அலுவல் நிலையிலுள்ள இயக்குனரின் தலைமையின்கீழ் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை செயற்பட்டு வருகிறது. பொது நிர்வாகத்தில் இவருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர் பதவித்

தாத்தில் உள்ள இணை இயக்குனர் ஒருவர் உள்ளார். நேர்முக உதவியாளர் ஒருவரும் உள்ளார். கல்வித் தொடர்பான திட்டங்களில் இவருக்கு உதவியாக கல்வித்துறை துணை இயக்குநர் உதவி புரிகிறார். கணக்குப் பிரிவில் கணக்கு அலுவலர்கள் இருவர் இயக்குனருக்கு உதவியாக இருக்கின்றனர். பல்வேறு கூட்டுறவுத் திட்டங்களை பொறுத்தமட்டில் துணை கூட்டுறவுப் பதிவாளர் ஒருவர் இயக்குனருக்கு உதவுகின்றார். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர்களின் நேரடிப் பொறுப்பில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துகின்றனர். மாவட்ட அளவில் சிறப்பு உட்பகுதித் திட்டத்தின் செயல் முறையை ஆய்ந்து கண்காணிப்பது மாவட்ட ஆட்சியாளரின் தனிப் பொறுப்பாகும். குடி உரிமைகள் கண்காணிப்புச் சட்டத்தை முறையாக செயற்படுத்துவதும் மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

7. ஆதி திராவிடருக்கு சிறப்பு உட்பகுதித் திட்டத்தையும் குடி உரிமைகள் கண்காணிப்புச் சட்டத்தையும் செம்மையாக செயல் படுத்தியதின் விளைவாக ஆதிதிராவிடர், பழங்குடியினரின் சமூக-பொருளாதார வளர்ச்சி வேகம் பெற்றுள்ளது. இதனால் ஆதி திராவிடர் பழங்குடியினர் நல இயக்குநர் அலுவலகத்தினர் அதிக பொறுப்பேற்றுள்ளனர். இதுவரை ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்குநர், இயக்குனர் அலுவலகத்தின் வரவு செலவு திட்டத்தில் இடம் பெற்றுள்ள நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டும் பொறுப் பேற்றிருந்தார். இட ஒதுக்கீடு, அரசு பொதுத்துறை நிறுவனங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் ஆதிதிராவிடருக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப் படுவதை ஆய்வு செய்து கண்காணிக்கவும் உயர் அதிகாரக் குழுவின் உறுப்பினர் செயலாளர் என்ற முறையில் பொறுப்பேற்றுள்ளார். இதுபோன்று சிறப்பு உட்பகுதித் திட்டம் குடி உரிமைகள் கண்காணிப்புச் சட்டம், பழங்குடியினர் நலத் துணைத் திட்டம் ஆகியவை செயற்படுத்தப்படுவதை ஆராய்வது ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரின் தலையாய பொறுப்பாகும். சிறப்பு உட்பகுதித் திட்டமும் குடி உரிமைகள் கண்காணிப்புச் சட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவையும் செவ்வனே செயற்படுத்தப்படுவது குறித்து அரசுக்குத் தெரிவிக்கும் பொறுப்பையும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்குநரும், மாவட்டங்களிலுள்ள அத்துறை அதிகாரிகளும் ஏற்பார்கள்.

### ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத் திட்டங்கள்.

8. ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகை தவிர "மூலதனச் செலவு" என்ற தலைப்பில் ரூபாய் 550.03 இலட்சமும், "கடன்களும் முன் பணங்களும்" என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 73.61





இலட்சமும், "கொத்தடிமை" என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 0.26 இலட்சமும், சாட்டியவை என்பதில் ரூபாய் 2.02 இலட்சமும் 1982-83 இல் ஒதுக்கப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்திட்டத்திற்காக மொத்தம் ரூபாய் 4,736.23 இலட்சம் ஒதுக்கப்படும். ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலனுக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள பணிகளை பின் வரும் மூன்று பெருந் தலைப்புகளில் வகைப்படுத்தக்கூடும்.

1. கல்வி.
2. வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு.
3. பொதுச் சுகாதாரம், வீட்டு வசதி.

அ. கல்வி—

9. ஆதிதிராவிடர்—பழங்குடியினர் மேம்பாட்டிற்கு உறுதுணையாக அமைவது கல்வி நலமாகும். தற்போது ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கென்றே உள்ள தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் அவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்கும் பொறுப்பானது ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகையின் பெரும் பகுதியானது கல்விக்காகச் செலவிடப் படுகிறது. எடுத்துக் காட்டாக 1981-82 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 2,702.17 இலட்சம் ஒதுக்கப்பட்டதில், ரூபாய் 1,791.25 இலட்சம் கல்விக்காக செலவிடப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூபாய் 4,285.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்வதென கருதப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 2,117.58 இலட்சம் கல்விக்காகச் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

படிப்புதவித் தொகை :

10. மெட்ரிக் படிப்புக்கு முந்திய, பிந்திய படிப்புப் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இப்படிப் படிப்பு உதவித் தொகை பெற ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிறிஸ்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களின் பெற்றோர்/காப்பாளரின் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 3,000 ஆகும். ஆனால், 1981-82 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிறிஸ்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களின் பெற்றோர்/காப்பாளரின் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து படிப்புதவித் தொகை பெறுவதற்கு (இந்து) ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு 1—7—1981 முதல் ரூபாய் 9,000 லிருந்து ரூபாய் 12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

11. படிப்புதவித் தொகை வழங்கும் நடைமுறையைச் சீரமைத்து இத் தொகையை தேசியமயமான வங்கிகள் மூலமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

**மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்பு :**

12. இல்லங்களில் தங்கிப் பயிலாத மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்திய படிபபிற்காகப் படிப்புதவி தொகை எதும் தற்போது வழங்கப்பட வில்லை. ஆனால், மெட்ரிக் படிப்பிற்கு முந்திய படிப்பு வரையுள்ள பள்ளி களில் இருக்கும் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் ஆதி திராவிடர், பழங் குடியினர், கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்குத் தங்கிப் பயில்வதற்காக 1981-82 ஆம் ஆண்டில் தங்கிப் பயிலும் மாணவர் ஒரு வருக்கு வழங்கப்படும் தொகை விதத்தை திங்கள் ஒன்றிற்கு ரூபாய் 10 ஆக உயர்த்தப்பட்டதால், உணவு, தங்குவதற்குரிய கட்டணங்கள் வகையில் ஆண் டொன்றுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 250-லிருந்து ரூபாய் 300 ஆக உயர்ந்துள்ளது.

மாணவர் இல்லம் இல்லாத பள்ளிகளில் படிப்புதவித் தொகைக்குப் பதிலாக முதல் III வகுப்பு பயிலும் மாணவர்களுக்குக் கல்வித்துறையும் VI முதல் X வரை பயிலும் மாணவர்களுக்கு இத்துறையும் மெட்ரிக் படிப்பிற்கு முந்திய படிப்பிற்கான பாட நூல்களை வழங்குகின்றன. இச்சலுகை ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர் களுக்கு அவர்களுடைய பெற்றோரின்/காப்பாளரின் வருமான வரம்பைக் கருதா மல் அளிக்கப்படுகிறது. இதைத் தவிர இந்த மாணவர்களுக்காகச் செலுத்தப் படும் தேர்வுக் கட்டணம், சிறப்புக் கட்டணத் தொகை அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. 1980-81 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 7.79 இலட்சம் மாணவர்கள் பயன் அடைந்தனர். ரூ. 1,29.15 இலட்சம் செலவிடப்பட்டது. 1981-82-ல் (31—1—1982 வரை) இத்திட்டத்திற்காக ரூபாய் 99.55 இலட்சம் செலவிடப் பட்டது. 7.89 இலட்சம் மாணவர்கள் இதனால் பயன் பெற்றனர்.

**மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு—மத்திய அரசு :**

13. தற்சமயம் மேல்நிலைப் பள்ளியிலும் கலைக் கல்லூரியிலும் தொழிற் படிப்பு, தொழில் நுட்பப் படிப்பும் பயிலும் இந்து ஆதி திராவிடர்/பழங்குடி யினர் மாணவர்களுக்கு மத்திய அரசின் படிப்புதவித் தொகை வழங்கப்படு கிறது. மெட்ரிக் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில் படிக்கும் மாணவர் களுக்கு, அவர்களுடைய பெற்றோரின்/காப்பாளரின் ஆண்டு வருமானத்தைக் கருத்திற்கொள்ளாமல் படிப்புக் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது.



மாணவர் இல்லத்தில் தங்கிப் படிப்போர், மாணவர் இல்லத்தில் தங்காமல் பயில்வோர் ஆகிய இருசாராருக்கும் படிப்புதவித் தொகையானது வழங்கப்படு கிறது. 1980-81 இல் மாநில அரசு விதிமுறைகளின்படி மேற்படித் திட்டத்தின் கீழ் 8,229 மாணவர்கள் பயன் பெற்றனர். ஆதி திராவிடர்களுக்காக ரூபாய் 42.44 இலட்சம் செலவிடப்பட்டது. மத்திய அரசின் விதிமுறைகளின்படி 39,214 ஆதி திராவிடர் மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக 1980-81 ஆம் ஆண்டில் ரூபாய் 278.10 இலட்சம் செலவிடப்பட்டது. 1981-82-ல் (31—1—1982 வரை) மத்திய அரசு விதிமுறைகளின்படி 40,691 ஆதிதிராவிடர் மாணவர்களுக்காக ரூபாய் 316.48 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இது போலவே பழங்குடியினருக்காக ரூபாய் 2.08 இலட்சம் செலவிடப்பட்டது. 255 மாணவர்கள் பயனடைந்தனர்.

**மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகை :**

மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட கல்வி பயிலும் மாணவர்கள், கிறித்தவர் களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள், ஒரு குடும்பத்தில் ஒரு சமயத்தில் இருவர் மட்டுமே பயனடைந்து அதற்கு மேற்பட்டுள்ளவர்களுக்கு மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியில்லாதவர்கள் அனை வரும் அவர்களுடைய பெற்றோரின்-காப்பாளரின் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 6,000 ஆக இருந்தால் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்புதவித் தொகையை மாநில அரசிடமிருந்து பெறுகின்றனர். 1980-81 இல் 8,229 மாணவர்கள் பயனடைந்தனர். ரூபாய் 42.44 இலட்சம் செலவிடப்பட்டது. 1981-82 (31—1—1982 வரை) 6,430 மாணவர்கள் பயனடைந்தனர். ரூபாய் 19.68 இலட்சம் இதற்காகச் செலவிடப்பட்டது.

**செயலூக்கத் திட்டம் :**

14. கல்வியில் சிறப்படைந்த மாணவர்களுக்கு இத்திட்டத்தில் தொடர்ந்து பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றிபெறும் ஆதி திராவிடர் மாணவர் (ஆண்கள்) இருவருக்கும் கிறித்தவராக சமயம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர் (ஆண்கள்) இருவருக்கும் கல்லூரிக் கல்வியைத் தொடர்வதற்கு உதவியளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றிற்கு (விடுமுறைக் காலம் உட்பட) ரூபாய் 60 கல்விச் சிறப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. அம்மாணவர்கள் மாணவர் இல்லத்தில் தங்க வேண்டும் என்ற நியதியோ அல்லது அவர்களுடைய பெற்றோரின் வருமானத் திற்கு வரம்போ இத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்படவில்லை. 10 பிளஸ் 2 3 என்ற கல்வி முறை கொண்டுவரப்பட்ட பின்னர், 10 ஆம் வகுப்பில் முதலாவ

[1982 மார்ச் 23

தாகவும் இரண்டாவதாகவும் வெற்றிபெறும் ஆதிதிராவிடர் (ஆண்கள்) மாணவர்களுக்கும், கிறித்துவ சமயத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கும் 1978-79 ஆம் ஆண்டு முதல் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர் மாணவியர் கிறித்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவியர், பழங்குடி மாணவ மாணவியர் ஆகியோருக்கும் இத்திட்டத்தில் படிப்புதவித் தொகை வழங்கப்படுவது நீட்டிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுத் தேர்வில் மிக அதிகமாக மதிப்பெண்களையும் அதற்கு அடுத்த அதிகமான மதிப்பெண்களையும் ஒரே மாதிரியாகப் பெறும் மாணவர்கள் இருவருக்கு மேற்பட்டு இருப்பார்களேயானால் அவர்களுக்கு இப்படிப்புதவித் தொகை முழுவதும் (பரிசுத் தொகை முழுவதும்) மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அவர்களுடைய உணவுக் கட்டணம், மாணவரில்ல வாடகைக் கட்டணம் ஆகியவற்றைக் கழித்துக் கொள்ளாமல் வழங்கப்படுகிறது.

1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூபாய் 3.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

*காந்தியடிகள் நினைவு படிப்புதவித் தொகை :*

15. கல்வியிற்சிறந்த இந்து ஆதி திராவிடர் வகுப்பு மாணவர்களுக்கு வழக்கமாக அளிக்கப்படும் படிப்புதவித் தொகையுடன் "காந்தியடிகள் நினைவு சிறப்பு உதவித் தொகை"யானது வழங்கப்படுகிறது. 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மேல் நிலைக் கல்வித் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு இப்படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு மாணவரும் ஒரு மாணவியும் தெரிந்தெடுக்கப்படுவர். படிப்புதவித் தொகை முதலாண்டிற்கு ரூபாய் 1,500-ம் அடுத்து வரும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூபாய் 1,000 வீதமும் வழங்கப்படுகிறது.

*தகுதி—வருவாய்—பரிசுத் திட்டம் :*

16. கிறிஸ்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோரின் நலனைக் கருதி, 'காந்தி நினைவுப் பரிசுத்' திட்டத்தைப் போன்றே இப் பரிசுத் திட்டம் 1976-77 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கிறித்தவ மதத்திற்கு சமயம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவரும் ஒரு மாணவியும், பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவரும் ஒரு மாணவியும் இப் பரிசுத் திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.



1982 மார்ச் 23]

*தகுதிக்கென்று வழங்கப்படும் தனி மானியம் :*

17. 1976-77 முதல் 1979-80 வரை பள்ளி இறுதித் தேர்விலும், புகுமுக வகுப்புத் தேர்விலும 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெற்றுள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் கிறித்துவ மதத்திற்கு சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தகுதி மானியமாக ரூபாய் 300 ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. 10 பிளஸ் 2 3 என்ற கல்வி முறைப் பாடத் திட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு 1980-81 ஆம் ஆண்டு முதல் பள்ளி இறுதித் தேர்விலும் (10 ஆண்டு பாட முறைத் திட்டம்) மேல் நிலைக் கல்விப் படிப்பின் இரண்டாம் ஆண்டிற்குரிய தேர்விலும் 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதத்திற்கு சமயம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்தத் தகுதி மானியமானது வழங்கப்படுகிறது. 1982-83 இல் திட்டத்திற்காக ரூபாய் 9.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

*கடன் படிப்புதவித் தொகைகள் :*

18. பொறியியல், வேளாண்மை, மருத்துவம் முதலிய தொழிற் கல்வி கற்கும் மாணவர்கள் அவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகையைவிட அதிகப்படியான தொகையினை செலவிட வேண்டியுள்ளது. எனவே அரசு இதனைப் பரிசீலித்து நிதியுதவி தேவைப்படும் மாணவர்களுக்குக் கடன் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. 1974-75 ஆம் ஆண்டு முதல் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கும் கடன் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டு முதல் இத் திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கையும் இதற்குச் செலவிடப் பட்ட தொகையும் வருமாறு:—

| ஆண்டு. | ஆதி திராவிடர்கள் பழங்குடியினர். | | கிறிஸ்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர்கள். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. | எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1979—80 | 4,912 | 36.09 | 153 | 0.83 |
| 1980—81 | 6,015 | 57.78 | 153 | 1.19 |
| 1981—82 (31—12—81 வரை), | 4,485 | 31.61 | 158 | 0.94 |

[1982 மார்ச் 23

ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூபாய் 61.00 இலட்சமும், கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூபாய் 1.01 இலட்சமும் 1982-83 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் நீரடி வசதியற்ற கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், திராவிடர்கள் அல்லாத வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பைக் கற்பதற்காக வழங்கப்படுவதற்கு 60 படிப்புதவித் தொகைகளை மத்திய அரசு இம்மாநிலத்திற்கு ஒதுக்கியது. இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப் பட்டது. 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள் :

19. (அ) ஆதி திராவிடர்கள் : இம்மாநிலத்தில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் 947 உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1. தொடக்கப் பள்ளிகள் | 843 |
| 2. நடுநிலைப் பள்ளிகள் | 79 |
| 3. உயர்நிலைப் பள்ளிகள் | 21 |
| 4. மேல்நிலைப் பள்ளிகள் | 6 |
| மொத்தம் | 947 |

இப்பள்ளிகளில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய வகுப்பைச் சேர்ந்த சுமார் 1.67 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். ஆதி திராவிடர் நல மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகளுக்கும், பழங்குடியினர் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

(ஆ) பழங்குடியினர்

இத்துறையால் பழங்குடியினர் நலத்திற்காக 126 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு தொடக்கப் பள்ளிகள். | 109 |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு நடுநிலைப் பள்ளிகள் | 11 |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு உயர் நிலைப் பள்ளிகள். | |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு மேல் நிலைப் பள்ளிகள். | 3 |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் சேர்ந்தில்லாத பள்ளி. | 1 |
| மொத்தம் | 126 |



1982 மார்ச் 23]

மேற்சொன்ன மாணவர் இல்லங்களுடன் கூடிய பள்ளிகளில் இலவசமாக உணவு வழங்குதல் என்னும் திட்டத்தின்கீழ் 7,643 மாணவர்கள் பயனடைகிறார்கள்.

1981-82 ஆம் ஆண்டில் பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு தொடக்கப்பள்ளிகள் 12 புதியதாக திறக்கப்பட்டுள்ளன.

1981-82 ஆம் ஆண்டில் ஒரு தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாகவும் 2 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

1982-83 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் நலத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், 9 ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாகவும் 4 உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய ஒரு அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. 1982-83 இல் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கும், பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசுப் பள்ளிகளுக்கும் கூடுதலாகப் பல்வேறு பட்டஆசிரியர்களை நியமிக்கக் கருதப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் நலத்துறை நடத்தும் இப்பள்ளிகளுக்குக் கட்டிட வசதி, நூலக வசதி, ஏனைய வசதிகளுக்கு வகை செய்வதற்காக 1980-81-ல் ரூபாய் 1 கோடி செலவில் அனுமதிக்கப்பட்ட திட்டம் ஒன்று தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது. 1982-83-ல் சென்னை மாநகரிலுள்ள புளியந்தோப்பில் 8 வகுப்பறைகளுடன் கூடிய பள்ளிக் கட்டடம் கட்ட திட்டமிடப் பட்டு உள்ளது. இதற்காக ரூபாய் 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு 1982-83-ல் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

20. மாணவ, மாணவியருக்கு உடைகள் வழங்குதல் :

ஆதி திராவிட பழங்குடியினர் நலப் பள்ளிகளில் அல்லது அரசினர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர் அனைவருக்கும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு ஜதை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

4 முதல் 10 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலுகின்றவர்களும் அரசினர் ஆதி திராவிட நல மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலுபவர்களுமான மாண வர்களுக்கு இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 1 முதல் 8 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவரா யிருப்பினும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகிறது. இந்த இரண்டு ஜதை உடைகளும் கல்வி ஆண்டு தொடக்கத்திலேயே வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசுப் பள்ளி ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் ஆகியவற்றைச் சேர்ந்த சாரணர்களுக்கும், சாரண பயிற்றுநர்களுக்கும் சீருடைகள் வழங்க 1982-83 ஆம் ஆண்டில் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1.28 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

21. கல்விச் சுற்றுலா.

மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக் கொள்ளுவதற்கு வசதி அளிக்கும் வண்ணம் ஆதி திராவிடர், பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர் களை முக்கியமான இடங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கான திட்டம் 1969-70 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ் வொரு பள்ளியிலிருந்தும் 40 மாணவர்களை கல்விச் சுற்றுலாவில் அழைத்துச் செல்வதற்கு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும், ரூபாய் 1,000 வழங்கப்படுகிறது. இதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர், பழங் குடி மாணவர்களுக்காக ரூபாய் 0.35 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட் டுள்ளது.

22. நண்பகல் உணவு.

ஆதி திராவிட நலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. மாணவர்கள் பள்ளிக்குத் தவறாது வருகை தர அவர் களை ஊக்குவிப்பதும், பொருளீட்டுவதற்காக மாணவர்களை அவர்களது பெற்றோர்கள் இதர வேலை பார்க்க அழைத்துச் செல்வதைத் தவிர்ப்பதும் நண்பகல் உணவு அளிப்பதன் நோக்கமாகும்.

"கேர்" நிறுவன உணவுத் திட்டத்தின்கீழ் கல்வித் துறை ஒரு கல்வி யாண்டில் 85 நாட்களுக்கு ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 80 கிராம் உணவு தானியம் வழங்கி வருகிறது. எஞ்சியுள்ள 135 நாட்களுக்கு நுகர் பொருள்



வாணிபக் கழகத்திடமிருந்து ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 22 காசு என்ற விதத்தில் கொள்முதல் செய்யப்படும் அரிசியைக் கொண்டு மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. 947 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்குவதற்காக 1982-83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 46.36 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

23. மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் எழுது பலகைகள் முதலியவற்றை வழங்குதலும் பள்ளிகளுக்குச் சாதனங்கள் வழங்கு தலும் :

இம்மாநிலத்தில் ஆதி திராவிடர்களுக்காகவும் பழங்குடியினருக்காகவும், 1,073 பள்ளிகளை இத்துறை நடத்தி வருகிறது. இக் கல்வியாண்டில் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலப் பள்ளிகள் திறக்கப்பட்ட பிறகு, இப்பள்ளி களில் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் அதனைக் கருத்தில் கொள்ளாமல் அவர்களுக்குப் பாடப் புத்த கங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுதுபலகைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டதின்கீழ், 1981-82 ஆம் ஆண்டில் 1.74 இலட்சம் மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 29.85 இலட்சம் நிதி ஒக்கம் செய்யப்பட்டுள்ளது.

24. ஆசிரியர்களுக்கான இல்லங்கள் :

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் களுக்குச் சமவெளிகளில் ரூபாய் 15,080 செலவிலும், மலைப் பகுதிகளில் ரூபாய் 17,000 செலவிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதுவரை 182 ஆசிரியர் இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 4.44 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் ஆசிரியர்கள் குடியிருப்புகளைப் பராமரிப்பதற்கான செலவும் அடங்கும்.

25. குழந்தைகள் காப்பகம் :

1977-78 ஆம் ஆண்டிலிருந்து 1980-81 ஆம் ஆண்டுவரையில் ஒவ் வோராண்டும் 50 என்ற விதத்தில் குழந்தைக் காப்பகங்களை ஏற்படுத்த அரசு அனுமதித்து வந்துள்ளது. 200 குழந்தைக் காப்பகங்களை ஏற்படுத்த உத்திர விடப்பட்டுள்ளது. குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றிலும் 70 குழந்தைகள் உள்ளனர். பணி புரியும் மகளிரின் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பினை அவர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வதும், வளர்ந்து வரும் வயதில் அவர்களுக்கு தூய சுகாதாரமான நல்ல பழக்க வழக்கங்களைக் கற் பிப்பதும், பள்ளிப் படிப்பைத் தொடாமல் பள்ளிகளிலிருந்து இடையே நின்று

விடுவதைக் குறைப்பதற்கு உதவும் வண்ணம் அக்குழந்தைகளுக்குப் பள்ளி செல்லும் பழக்கத்தை உருவாக்குவதும் இதன் நோக்கமாகும். 3-5 வயதுள்ள குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். பள்ளி செல்லும் வயதடையும் நிலைக்கு முன்னரே அக்குழந்தைகளுக்குச் சத்துணவு அளிப்பதும் இதன் நோக்கமாகும். இதற்காக 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5.77 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**26. தட்டச்சு சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் :**

தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லையாதலால், தட்டச்சர் சுருக்கெழுத்தர் பதவிகளில் அவர்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள 18 சதவீத இடங்களை நிரப்ப இயலாது போகிறது. இதனைக் கருத்திற்கொண்டு தனியார் நடத்தும் வணிகக் கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்தில் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு செயல்பட முனைந்தது. இத்திட்டத்தின்படி 950 மாணவர்களுக்கு தட்டச்சுப் பயிற்சியும், 475 மாணவர்களுக்கு சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 4.13 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**27. சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி :**

சட்டத் தொழிலை மேற்கொள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினரைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சட்டத் தொழிலை மேற்கொள்ள விரும்புகிற சட்டம் பயின்ற பட்டதாரிகள் ஐவருக்கு (ஆதி திராவிடர், பழங்குடியினர்) 1974-75 முதல் அரசு கீழ்க்கண்ட நிதி உதவியை அளிக்கிறது.

(i) வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம், வழக்குரைஞர்கள் அறைக்கான வாடகைக் கட்டணம் முதலியவை வகையில் ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூபாய் 750 கடன்.

(ii) புத்தகங்கள், மேசை, நாற்காலி முதலியவை வாங்க ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூபாய் 750 உதவித் தொகை.

**28. கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம் :**

கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம், அரசியல், கணிதம், போன்ற பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, சென்னை மாநகரில், "மாணவர்களுக்காக" ஒரு நிலையமும், மாணவிகளுக்காக ஒரு நிலையமும், ஆக இரண்டு நிலையங்கள் இரு திங்கள் காலத்திற்கு



செயல்பட்டன. இந்த வசதி, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. 1976-77 ஆம் ஆண்டில் 189 கல்லூரிகள் அனைத்திற்கும் இந்தப் பயிற்சி வசதி ஓராண்டில் இரு திங்கள்கட்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கான கால அளவில் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூபாய் 1,000 ஒருமித்தத் தொகை கொடுக்கப்படும். 1982-83லும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கட்டுப் பாட்டின் கீழுள்ள தொழில் நுட்ப நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடி மாணவர்களுக்கும் இச்சிறப்புப் பயிற்சித் திட்டத்தை 1982-83 ஆம் ஆண்டில் அரசு நீட்டியுள்ளது. இம் மாநிலத்திலுள்ள ஏழு பொறியியல் கல்லூரிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆணையிட்டது.

**மாணவர் இல்லங்கள் :**

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. எழும் தேவை, நிதி நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் புதிய மாணவரில்லங்கள் திறக்கப்படுகின்றன. தனியார் மாணவர் இல்லங்களும் அரசினால் ஒவ்வோராண்டும் படிப்படியாக நிர்வாகத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள விகிதாசாரங்களின்படி ஆதிதிராவிடர், பழங்குடி நல மாணவர் இல்லங்களில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஆதிதிராவிடர் மாணவரில்லங்கள்

| | சதவிதம் |
|---|---|
| (1) | (2) |
| ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் | 74 |
| பிற்பட்ட வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தினர் | 20 |
| முன்னிலை வகுப்பினர் | 5 |
| மலைவாழ் பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் : | |
| ஆதிதிராவிடர்கள் | 30 |
| மலைவாழ் பழங்குடியினர் | 60 |
| பிற்பட்டோர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையினர் | 10 |

1980-81 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கென்று 646 மாணவர் இல்லங்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் 40,535 மாணவர்கள் இருந்தனர். மாணவர் இல்லங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் 10 சதவிதம் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு அனுமதித்து 1981-82 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பழங்குடியினரைப் பொறுத்த மட்டில் 20 மாணவர் இல்லங்கள் உள்ளன. இதில் மொத்தம் 895 மாணவர்கள் உள்ளனர். 1981-82 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர்களுக்காக 15 புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றில் 600 மாணவர்கள் இருந்தனர். ஆதி திராவிடர்களுக்காக 15 புதிய மாணவர் இல்லங்களைத் திறப்பதற்கு 1982-83 ஆம் ஆண்டில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

புதிய மாணவரில்லங்கள் நிறுவுவதற்கும், 681 மாணவரில்லங்களைப் (ஆதிதிராவிடர்களுக்கு 661, பழங்குடியினருக்கு 20) பராமரிக்கும் பொருட்டும் 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 432.10 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசு ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர் இல்ல மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு, மாணவர் ஒருவருக்கு ரூபாய் 2 என்ற விதத்தில் விளையாட்டுப்பொருட்கள் வழங்குவதற்கான செலவிற்கு அரசு தொடர்ந்து ஒப்புதல் அளித்து வருகிறது.

ஆதி திராவிடர் மாணவர்கள் தங்கியுள்ள அரசு இல்லங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண விதங்கள் பின்வருமாறு :—

| மாணவர் இல்லங்களின் வகை. (1) | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ஆகும் கட்டணம். (2) |
|---|---|
| | ரூ. |
| 1. சென்னை நகரிலுள்ள அரசு கல்லூரி மாணவ/மாணவியர் இல்லங்கள், சென்னை மாநகரிலுள்ள அரசு தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்கள் | 95 |
| 2. வெளியூர்களிலுள்ள அரசு கல்லூரி மாணவர்/மாணவியர் இல்லங்கள், அரசு தொழிற் பயிற்சி மாணவர் இல்லங்கள் | 80 |
| 3. உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள். | 60 |





பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் பழங்குடியினர் மாணவர் இல்லங்களுக்கும் அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண விதங்களின் விவரம் வருமாறு :—

வகை. (1)

| வகை. (1) | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கான வீதம். (2) |
|---|---|
| | ரூ. |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகள், பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் | 45 |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு உயர்நிலைப் பள்ளி; மேல்நிலைப் பள்ளி | 60 |

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட ஆதி திராவிடர் மாணவர் இல்லங்கள், பழங்குடியினர் மாணவர் இல்லங்கள், பழங்குடியினர் மாணவர் இல்லத்துடன் கூடிய அரசு பள்ளி ஆகியவற்றுக்கு பழைய சமையல் பாத்திரங்களுக்குப் பதிலாக 1982-83-ல் புதிய பாத்திரங்கள் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

பழங்குடியினர் மாணவர் இல்லத்துடன் கூடிய அரசு பள்ளி, பழங்குடியினர் இல்லங்களில் உள்ளவர்களுக்குக் கர்ணம் மேசைகள் வழங்க 1982-83 ல் கருதப்பட்டுள்ளது.

மலைப் பகுதியிலுள்ள ஆதி திராவிடர் பழங்குடியினர் அரசு மாணவர் இல்லங்களில் உறங்குவதற்கு சிமின்டால் ஆன படுக்கை இருக்கைகள் 1982-83 இல் கட்ட கருதப்பட்டுள்ளது.

அரசு இல்லங்களிலுள்ள மாணவர்களுக்கு கட்டுப்பாட்டு விலைகளில் இன்றியமையாப் பொருள்களை வழங்குதல்.

30. இத்துறை நடத்திவரும் இந்த இல்லங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலைகளில், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கப்படுகின்றன.

### மாணவர் இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல்.

31. 681 அரசு இல்லங்களில் (அதாவது ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு 661, பழங்குடி மாணவர்களுக்கு 20) 133 மாணவர் இல்லங்கள் (ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 119, பழங்குடி மாணவர்களுக்கு 14) அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன. பழங்குடி மாணவர்களுக்கான இல்லங்களைக் கட்டும் பணியை ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இது வரையில் ஆதி திராவிடர்களுக்காக 236 மாணவர் இல்லங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி நல்கியுள்ளது.

1981-82 ஆம் ஆண்டிற்கான மாணவர்-மாணவியர் இல்லங்கள் திட்டமிட்டபடி கட்டப்பட்டு வருகின்றன.

1981-82 இல் கன்னியாகுமரி மாவட்டம், பத்துக்காணியிலும், சேலம் மாவட்டம் ஏற்காட்டிலும் பழங்குடியினர் மாணவியர் இல்லங்கள் கட்டும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவ மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 245 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

32. பகுதி நேர சிற்றாசிரியர்கள்.—ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்கள் தேர்வுகளைச் சிறப்பாக எழுதத் துணைபுரியும் பொருட்டு பகுதி நேர சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இத்தகைய பகுதி நேர சிற்றாசிரியர்கள் பதவிகள் 248 உள்ளன. இவைகளைத் தவிர (அதாவது 248 பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகள் தவிர( கல்லூரி மாணவர் இல்லங்களுக்காக மூன்று பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகளும், தென் ஆர்க்காடு மாவட்டம் சிதம்பரத்திலுள்ள நந்தனார் அரசு மாணவர்/மாணவியர் இல்லங்களுக்காக ஐந்து பதவிகளும் உள்ளன. அக்டோபர் முதல் நாள் தொடங்கி ஓர் ஆண்டில் ஆறு மாதங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள். மேல்நிலைக் கல்வி புதியதாகத் தொடங்கப்பட்டதால் ஒன்பதாவது, பத்தாவது வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பதினைந்தும் அதற்கு மேற்பட்டும் உள்ள உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்களில் பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதற்காக 1982-83 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1.37 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



33. தனியார் நடத்தும் இல்லங்களுக்கான உதவித் தொகை.

ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்களுக்கான அரசு இல்லங்களைத் தவிர, ஆதி திராவிடர் மாணவர்களுக்காக 41 இல்லங்களையும் (உதவித் தொகை பெறுபவை) பழங்குடி மாணவர்கள் தங்கிப் பயிலும் இல்லங்கள் இணைந்த நான்கு பள்ளிகளையும் தொண்டு நிறுவனங்கள் நடத்தி வருகின்றன.

உதவித் தொகை பெறும் இல்லங்களுக்கு உணவு மானியத் தொகையை 1981-82 ஆம் ஆண்டிலிருந்து அரசு உயர்த்தியுள்ளது. சென்னை மாநகரிலுள்ள மாணவர் இல்லங்கள், மற்றும் மாவட்ட, வட்ட தலைமை இடங்கள், நிலை-II நகராட்சிகளிலுள்ள உதவித் தொகை பெறும் அனைத்து இல்லங்களுக்கும் ஒவ்வொரு மாணவருக்கான கட்டணங்களும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 35 ஆக இருந்ததை ரூபாய் 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஏனைய இடங்களிலுள்ள அனைத்து மாணவர் இல்லங்களுக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30 லிருந்து ரூபாய் 40 க்கு உயர்த்தப்பட்டுள்ளது. தனியாரால் நிர்வகிக்கப்படும் நான்கு பழங்குடி மாணவர் தங்கிப் பயிலும் இல்லம் இணைந்த பள்ளிகளுக்கான மானியம் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 36 லிருந்து ரூபாய் 46 க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கென 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 11.66 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

## II வேலைவாய்ப்பும் பொருளாதார மேம்பாடும்.

### வேளாண்மை.

34. உழவு மாடுகள் வாங்கவும் பாசனக் கிணறுகள் தோண்டவும் உதவித் தொகை.

ஆதி திராவிடர்கள், பழங்குடியினரின் வாழ்க்கை நிலையை மேம்பாடு அடையும் பொருட்டு உழவு மாடுகள், விதைகள், பிற வேளாண்மை கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் 600 ரூபாய் என்ற வீதத்தில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. பாசனக் கிணறுகளுக்கான உதவித் தொகையைப் பெருக்கும் நோக்கத்துடன் பாசனக் கிணறு வெட்டுவதற்காக உதவித் தொகை அளிக்கும் திட்டத்தை அரசு மாற்றி அமைத்துள்ளது. அதன்படி கிணறு வெட்டுவதற்காகும் மொத்தச் செலவில் 1/3 பாகம் உதவித் தொகையாகவும், 2/3 பாகம் நிலவள வங்கியிலிருந்து பெறும் கடனாகவும் கொள்ளப்படும். பாசனக் கிணறுக்கான கடனுதவி வணிக வங்கிகளிடமிருந்தும் பெறப்படும் என்று அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது. பயனடைவோர் ஒருவர் பெறும் உதவித் தொகையின் உயரளவு ரூபாய் 5,000 ஆகும். 1982-83 இல்

இதற்காக ஆதி திராவிடர்களுக்கு ரூபாய் 5.59 இலட்சமும், பழங்குடியினருக்காக ரூபாய் 1.61 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை தவிர இந்த இனங்களுக்காக கிறித்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்கு ரூபாய் 0.95 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் நிறுவனம் பெருமளவில் பாசனக்கிணறுகளைத் தோண்டும் திட்டத்தை மேற்கொண்டுள்ளதால் 1982-83 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என கருதப்படுகிறது.

**35. தோட்டக் கலை.**

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லி மலை, சின்னக் கல்ராயன் மலை, பெரிய கல்ராயன் மலை ஆகிய இடங்களில் (தோட்டக்கலையை மேம்படுத்துவதற்கு இந்த இடங்களில் தட்ப-வெட்ப நிலை சாதகமாக உள்ளது) வாழும் பழங்குடி மக்களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு தருமபுரி தோட்டக் கலை-மலைத் தோட்டப் பயிர் இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. ஆத்தூர் தோட்டக் கலை உதவி இயக்குநர் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். இதற்கு ஆதி திராவிடர் பழங்குடியினர் நல நிதியிலிருந்து நிதி உதவியானது அளிக்கப்படுகிறது. இத் திட்டத்தின்படி பழங்கள், காய்கறிகள் முதலியவற்றை வெற்றிகரமாகவும், கணிசமான வருமானம் தரத்தக்க வகையிலும் உற்பத்தி செய்வதற்காகப் பழங்குடியினருக்கு நடைமுறை ஆலோசனை, அறிவுரை தொழில் நுட்ப உதவி ஆகியவை அளிக்கப்படுகின்றன. பழங்கள் உணவுக்கு சுவையூட்டும் பொருள்கள், காய்கறிகள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கான பொருள்கள் அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. சுமார் 8,714.56 ஏக்கர் பரப்பளவு இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்காக, 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**36. தொழில் கருவிகளை இலவசமாக வழங்குதல்.**

கருமார், தச்சர், தையல் தொழில்கள் மற்றும் இதர 18 தொழில்களில் தொழில் நுட்பப் பயிற்சிப் பெற்ற ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள், கிறித்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்கள் ஆகியவர்களுக்குக் கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்கும் திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1982-83 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 6.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றின் விலைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டிருந்த உச்ச வரம்பு நீக்கப்பட்டுள்ளது.



**37. சிறு தொழில் கடன்:**

சைக்கிள் கடைகள், ஓட்டல்கள் (சிற்றுண்டிச்சாலைகள்) மளிகைக் கடைகள், அச்சகம் முதலியவை போன்ற முப்பத்தொரு (31) தொழில்களை நடத்துவதற்காக ஆதி திராவிடர்களுக்கு சிறு தொழில் கடன் வழங்கும் திட்டம் 1968-69-லிருந்து தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது. கடன் தொகை வரம்பானது தொழில் வகைகளுக்கு ஏற்ப ரூபாய் 125லிருந்து ரூபாய் 15,000 வரை வழங்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்காக ரூபாய் 10.00 இலட்சமும், கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்காக ரூபாய் 1.00 இலட்சமும், பழங்குடியினருக்காக ரூபாய் 0.50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைக் கருத்தில் கொண்டு 1982-83 ஆம் ஆண்டில் இத் திட்டத்தை உகந்தவகையில் திருத்தியமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**38. பயிற்சி நிலையங்கள் :**

வேலைவாய்ப்பு பயிற்சித் துறையிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூபாய் 25 பெறும் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த பயிற்சியாளர்களுக்கு ஆதி திராவிடர் நல நிதியிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூபாய் 20 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் பெறும் பயிற்சி உதவித் தொகை மொத்தம் ரூபாய் 45 ஆகிறது. ஆதி திராவிடர் மாணவர் அனைவருக்கும் ரூபாய் 55 பயிற்சி உதவித் தொகையும், பழங்குடி மாணவர்களுக்கு ரூபாய் 32.50 பயிற்சி உதவித் தொகையும் தொடர்ந்து வழங்கப்படுகின்றது. தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி உதவித் தொகை 1—8—1980 ஆம் நாளிலிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 45 என்பது ரூபாய் 55 ஆக அதிகரிக்கப்பட்டு உள்ளது.

1982-83 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூபாய் 1294 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.

**கூட்டுறவு.**

**39 (அ) ஆதிதிராவிடர்கள்:**

தொழில் துறையில், ஆதி திராவிடர்கள் துரிதமாக முன்னேற வசதி செய்து கொடுக்கும் நோக்கோடு குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், பயிற்சி நிலையங்கள், பயிற்சி-உற்பத்தி நிலையங்கள், பணி நிலையங்கள் பலவற்றை

அரசு நிறுவியுள்ளது. இவை இத்துறையில் போதிய தொழில் நுட்ப அறிவைப் பெற்று உள்ள தொழில்-வணிக இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர், தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியம் ஆகியவர்களால் நடத்தப்படுகின்றன. இந்நிலையங்களையும் சங்கங்களையும் நடத்துவதற்குத் தேவையான செலவுத் தொகை ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறையால் ஏற்கப்படுகிறது.

### மத்திய அரசு சிறப்பு உதவி.

40. சிறப்பு உட்பகுதி திட்டத்தைச் செயற்படுத்துவதற்கென கூடுதல் உதவியாக மத்திய அரசு சிறப்பு உதவியை வழங்குகிறது. 1980-81 ஆம் ஆண்டில் மத்திய அரசின் சிறப்பு உதவியாக ரூபாய் 5.56 கோடி வழங்கப்பட்டது. ஒருங்கிணைந்த கிராமப் பகுதி வளர்ச்சித் திட்ட முறையைப் போலவே பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மூலம் சுமார் 50,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவியாக அமைய மாவட்ட கிராம வளர்ச்சி முகவாமைப்புகளிடம் இத்தொகை வழங்கப்பட்டது. இத்தொகையைக் கொண்டு, 15—2—1982 ஆம் நாள் வரையில் குடும்ப நலனை நோக்கமாகக் கொண்ட திட்டங்களின் கீழ் 4.23 கோடி ரூபாய் செலவில் 67,433 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மையும் வேளாண்மை தொடர்பான பணிகளும்தான் ஆதி திராவிடர்களின் முதன்மைப் பணியாக இருந்தபோதிலும், இப்பணிகளில் அவர்கள் ஆண்டு முழுவதும் ஆதாயம் ஈட்டத்தக்க அளவில் தொடர்ந்து ஈடுபட இயலாது. மேலும் நகர்ப்பகுதிகளில் வாழும் ஆதி திராவிடர்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்திக் கொண்டு வரவும், அவர்களுடைய வாழ்க்கைத் தொழில் முறையைப் பலதிறப்படுத்தவும், வருவாய் ஈட்டும் தொழில்கள்/தொழில் பிரிவுகள்/தொழிற்பேட்டைகள் முதலியவற்றை ஏற்படுத்துவதன் மூலம் நிலையான சொத்தாக அவர்களுக்கு அமைய பயன்படுத்தப்பட வேண்டும் 'என்று தீர்மானிக்கப்பட்டது. திட்டங்களுக்கு நிதியுதவி செய்ய 1981-82 ஆம் ஆண்டில் மத்திய அரசால் வழங்கப்பட்ட மத்திய அரசு சிறப்பு உதவித் தொகையைத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனத்திடம் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. 8.04 கோடி ரூபாய் செலவிலான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய அரசு சிறப்பு உட்பகுதித் திட்டத்தில் ஏற்படும் மொத்தச் செலவு 12.28 கோடி ரூபாயாகும். இதனால் சுமார் 77,817 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடைந்தன. 1981-82 ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசின் சிறப்பு உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில்



இதுவரையில் மத்திய அரசிடமிருந்து 8.18 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து மத்திய அரசு சிறப்பு உதவித் தொகையாக 10.20 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம் மாநிலத்துள்ள ஆதிதிராவிடர்களின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்காக, சிறப்புக் கூட்டுத் திட்டம் நீங்கலாக மூன்றாண்டுத் திட்டம் ஒன்றை வகுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. திட்டங்களை வகுக்கத் தலைமைச் செயலாளர் தலைமையில் உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள 376 வளர்ச்சி வட்டாரங்களைச் சேர்ந்த ஆதிதிராவிடர் குடியிருப்புக்களை குறித்த அடிப்படைப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களை கணக்கிடு பொறியின் மூலம் தொகுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. கணக்கிடு பொறி மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்ட புள்ளி விவரங்கள் அடுத்த ஆறு திங்கள் கால அளவில் கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வகுக்கப்படும் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதிக்கு வகை செய்யப்படும்.

41. (ஆ) பழங்குடியினர்.

பழங்குடியினரை சுரண்டல்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் பொருட்டும், காடுபடு பொருட்களைப் பழங்குடியினர் விற்பனை செய்வதற்கு இயலும் பொருட்டும், அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டும், அவர்களுக்கென இம் மாநிலத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை அரசு அமைத்துள்ளது. தற்போது பழங்குடியினருக்காக, 3 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 4 வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், 2 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை உள்ளன. நியாயமான வட்டி விதத்தில் நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலம் பழங்குடியினருக்கு மாற்றுக் கடன் வசதிக்கு வகை செய்வதற்காகப் பழங்குடியினர் பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 12 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச் சங்கங்கள் உற்பத்திக்காகக் கடன் வசதியை அளிப்பதோடு மட்டுமின்றி, நுகர்வோர் கடன் வசதிகளையும் அளிக்கின்றன. வேளாண்மை இடுபொருட்களை வழங்குவது குறித்து செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்துவதற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மலை வாழ் பழங்குடியினருக்கு உதவும் பொருட்டு சிறு தொழில்களைத் தொடங்குவதற்குரிய திட்டம் ஒன்று தனியாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்.

42. வேலைக் குறைவாக உள்ள காலங்களில் ஏழை ஆதி திராவிடர்களுக்கு உதவி புரிதல், அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை அளித்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்திலுள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த ஆதி திராவிடர் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு கால்நடைக்கு 1,500 ரூபாய் என்ற விகிதத்தில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. அவ்வுறுப்பினர் ஒவ்வொரு ஒவ்வொருவரும் ஒரு கால்நடைக்கு ஆதி திராவிடர் நல நிதியிலிருந்து 500 ரூபாய் உதவித் தொகையையும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 1,000 ரூபாய் கடன் தொகையும் பெறத் தகுதியுடையவராவர். ஒவ்வோர் உறுப்பினரும் இரு கால்நடைகளை வாங்குவதற்கு மட்டுமே மேற்கூறிய உதவியைப் பெறத் தகுதியுடையவராவார். இத்திட்டத்திற்காக ஆதி திராவிடர்கள், கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்கள் ஆகியோருக்கு வழங்க 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 17.72 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

43. பயிற்சி-வேலை வாய்ப்பு—தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்விற்குப் பயிற்சியளித்தல்.

ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், சமயம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன், ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வு எப்பொழுதெல்லாம் நடத்தப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அத்தேர்வினை எழுத விண்ணப்பித்துள்ளவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் 5 மாதங் கட்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபாய் 45 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 1976-77 ஆம் ஆண்டு வரை இம்மாநிலத்தில் 15 நிலையங்கள் செயல்பட்டன. 1977-78 முதல் 1981-82 ஆம் ஆண்டுகளில் தொகுதி பணிக்கான தேர்வை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தாததால் மேற்கூறிய கால அளவில் இத்திட்டம் செயல்படவில்லை. இருப்பினும், 1982-83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 0.02 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

44. அனைத்திந்திய அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதி திராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தேர்விற்கு முன்பயிற்சி அளிக்கும் நிலையம்.—இந்திய ஆட்சி பணி, இந்திய



காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுக்குத் தேர்விற்கு முன்-பயிற்சி அளிக்கும் நிலையம் 1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்நிலையம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இப் பயிற்சிக்கு இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்நிலையத்துடன் இணைக்கப்பட்ட மாணவர் இல்லம் ஒன்றும் உள்ளது. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு உணவுக் கட்டணமாக ரூபாய் 100 வழங்கப்படுகின்றது. இந்த தொகையை அதிகரிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அனைத்திந்திய பணிகளுக்கான தேர்வுகளில் தேறிய ஒவ்வொருவருக்கும் ரூபாய் 1,000 மானியம் அளிக்கப்படும். இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 41 மாணவர்கள் அனைத்திந்தியப் பணிகளில் நியமிக்கப்படுவதற்கு இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்னையிலுள்ள தேர்வுக்கு முன்-பயிற்சி அளிக்கும் நிலையத்திற்குத் துணையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் துணை நிலையங்கள் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

## II] பொது நல வாழ்வு நிலை—வீட்டு வசதி.

45. வீட்டுமனைகள் வழங்கும் திட்டம் :—

எங்கெல்லாம் அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ, அங்கெல்லாம் இந்த நிலங்கள் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக ஆதி திராவிடர்கள்/பழங்குடியினருக்கு வீட்டு மனைகளாக வழங்கப்படுகின்றன. அரசு நிலங்கள் இல்லாதபோது, 1894 ஆம் ஆண்டு நிலங்களைக் கையகப்படுத்துதல் 1-ஆம் சட்டத்தின்கீழ் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி ஆதி திராவிடர்கள்/பழங்குடியினருக்கு வீட்டு மனைகளாக வழங்கப்படுகிறது.

தகுதி வாய்ந்த குடும்பம் ஒன்றிக்கு வழங்கப்படுகின்ற ஒவ்வொரு வீட்டு மனையின் அளவு 3 செண்ட் ஆகும். 1949 ஆம் ஆண்டிலிருந்து 1981-82 ஆம் ஆண்டு வரையில் (31—12—1981 ஆம் நாளன்று இருந்தவாறு) 3,78,213 மனைகள் வழங்குவதற்குரிய 23,695,53 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதில் 3,19,897 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. எஞ்சியுள்ள பட்டாக்கள் விரைவில் வழங்கப்படும். 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர்க்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு ரூபாய் 935.21 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இயன்ற வரையில் சாதி இந்துக்கள் வாழ்கின்ற குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர் வீட்டு மனைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 125.00 இலட்சம் நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்னும் உணர்வைப் போக்கவும், எல்லா வகுப்பு மக்களிடையே உள்ளத்தளவில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும், உண்மையிலேயே நலிந்த பிரிவினர் அனை வருக்கும் உதவி புரியவும், ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைகளை வழங்கு தல்/வீடு கட்டக் கொடுத்தல் என்னும் திட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட வீட்டு மனைகளில் கட்டப்பட்ட வீடுகளில், ஆதி திராவிடர்கள், பிற்படுத்தப் பட்ட வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள், உயர்வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள் ஆகியோருக்கு முறையே 80 சதவீதம், 10 சதவீதம், 10 சதவீதம் என்று ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1982-83 ஆம் ஆண்டில் தேசிய கிராமப்பகுதி வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவதற்காக கையகப்படுத்தப் பட்ட மனைகளை சமப்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனை வருக்கும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### 46. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சி நிறுவனம் :

இந்நிறுவனம் 1973-74 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆதி திராவிடர் களுக்கு மீனவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருதல், மாணவர் இல்லங்கள்/ பள்ளிக் கட்டிடங்கள், சமுதாய கூடங்கள் ஆகியவற்றைக் கட்டுதல் ஆகிய பணி, இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கும் இந்நிறுவனம் பொறுப்பு வகிக்கிறது. இந்நிறுவனம் இப்பணியை நிறைவேற்ற இயலும் பொருட்டு, ஆதிதிராவிடர் வளர்ச்சி நிறுவனத்திற்கு மாநில அரசு முதலீடு செய்து, நிதியுதவி அளிப்பதற்காக, மாநில அரசுக்கு மத்திய அரசு உதவி புரியும் திட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. பங்கு முத லீட்டில் 49 சத வீதத் தொகையை மத்திய அரசும், 51 சதவீதத் தொகையை மாநில அரசும் அளிக்கின்றன. இத்தொகை, வறுமைக் கோட்டிற்குக் கீழே யுள்ள ஆதிதிராவிடர்களுக்கு உதவி புரியவதற்குரிய பொருளாதார மேம்பாட் டுத் திட்டங்களில் தொடக்கச் செலவுத் தொகையாகப் பயன்படுத்தப்படும். ஆதி திராவிடர்கள் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஆதாயம் தரும் தொழில்களைத் தொடங்குவதற்காக மொத்தச் செலவில் 25 சதவீதத் தொகை, இந்தத் தொடக்கச் செலவுத் தொகையிலிருந்து 4 சதவீத வட்டிக்கு அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இது தொடர்புடைய திட்டங்களின்கீழ் அளிக்கப்படும் உதவித் தொகையோடு மேற்கொண்டும் அளிக்கப்படும் பய னாகும். ஆதி திராவிடர்களுக்கு நிறுவனங்கள் எளிதில் நிதியுதவி பெறுவதை இது உறுதிப்படுத்துகிறது. 1981-82 திருத்திய மதிப்பீட்டின் படி ரூபாய் 2.98



கோடி ரூபாய் மூலதன பங்கு தொகையாக கருதப்பட்டு, இத்தொகையில் ரூபாய் 0.98 கோடி 1980-81 ஆம் ஆண்டிற்கு பொருந்தும். இதற்காக 1982-83 ஆம் ஆண்டிற்கு இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகரப் பகுதியிலும், கிராமப் பகுதிகளிலும் வாழும் ஆதி திராவிடர்களுக்கு உதவி புரிய இயலும் பொருட்டு இந்திய அரசு வழங்கும் மத்திய சிறப்பு உதவியைப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல், தொழிற் பேட்டைகளை மேம்படுத்துதல், தொகுதித் திட்டங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றைக் கவனிக்க அந்த மத்திய சிறப்பு உதவியைத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனத்திடம் அளிப்பது என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது. மேற்கூறிய இந்நிறுவனம் இந்த மேம்பாட்டு வளர்ச்சிப் பணியைக் கவனிக்க இயலும் வண்ணம் இந்நிறுவனத்தின் நிர்வாகப் பணியாளர்கள் அமைப்பில் வளர்ச்சிப் பிரிவு ஒன்று கூடுதலாக ஏற்படுத்தப் பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகளை கவனிக்க 15 மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் பதவிக்கு அனுமதி வழங்கப்பட் டுள்ளது. துவக்கச் செலவுத் தொகையும் அதற்கு ஈடான வங்கி கடனும் உரிய முறையில் உரிய காலத்தில் அளிக்க உதவி செய்யும் பொருட்டு பயனடை யோரைத் தெரிந்தெடுத்தல், விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்தல் ஆகிய வற்றிற்குத் தொடர்புடைய வளர்ச்சி வட்டாரங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஏனைய முகவரமைப்புகள் ஆகியவற்றோடு, மேற்கூறிய இந்த மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் தொடர்பை ஏற்படுத்துவர். மேற்கூறிய இந்நிறுவனம் 1981-82 ஆம் ஆண்டில் 2.22 கோடி ரூபாய் தொடக் கச் செலவுத் தொகையைக் கொண்டு 43,291 குடும்பங்களுக்கு உதவி புரிய இயன்றது. மேலும், மேற்கூறிய இந்நிறுவனத்திடம் அளிக்கப்பட்டுள்ள மத்திய சிறப்பு உதவியை அதிக அளவிற்கு பயன்படுத்த உறுதி செய்ய இந்நிறுவனம் நகர்ப்பகுதிகள், கிராமப் பகுதிகள் ஆகியவற்றில் வாழும் ஆதி திராவிடர்களுக்காகத் தொழிற்பேட்டைகள், தொழில் பிரிவுகள், வருமானம் ஈட்டித்தரும் ஏனைய திட்டங்கள் ஆகியவற்றைத் தொடங்குவதற்காக எல்லாத் துறைகளுடனும் தொடர்பை ஏற்படுத்தி வருகிறது.

சமுதாயக் கூடங்கள், பள்ளிக் கட்டிடங்கள், மாணவர் இல்லங்கள் ஆகிய வற்றைக் கட்டும் இந்நிறுவனத்தின் திட்டம் மன நிறைவளிக்கத்தக்க வகையில் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர்களுக்கும், மீன வர்களுக்கும் வீடுகளைக் கட்டித் தருவதற்காக 1981-82 ஆம் ஆண்டில் 300 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டிற் கான வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் 300 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கிராம வீட்டு வசதித் திட்டம்.

கிராம வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கிராம வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 4,000 ரூபாய்ச் செலவில் கிராமப் பகுதிகளில் வீடுகட்டப்படு கின்றது. ஆண்டு வருமானம் 4,200 ரூபாய்க்கு மேற்படாதவரும் இத்திட்டத் தின்மூலம் பயனடைவோருமான ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஒவ்வொரு வருக்கும் வட்டியில்லாக் கடனுக்கும், 1,000 ரூபாய் உதவித் தொகைக்கும் இத் திட்டம் வகை செய்கிறது. ஆதி திராவிடர்கள் பெரும் அளவில் உள்ள இடங் களில் வீடுகட்ட விழையும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேராதவரும் இத்திட் டத்தின்கீழ் உதவித் தொகை பெறத் தகுதியுடையவர் ஆவார். பயன்பெறும் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கும் வழங்கப்படுவதற்காக உதவித் தொகை குறித்து ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நல 1982-83 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 450 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இத்திட்டம் கூட்டுறவுச் சங்கங்கள் (வீட்டு வசதி) பதிவாளரால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 31—1—82 நாள் வரையிலும் 88,934 வீடுகள் கட்டப் பட்டன. இவற்றில் 69,109 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கென கட்டப்பட்டவை யாகும்.

### 47. துப்புரவுப் பணியாளர்கள் பெருக்குவோர் பணி நிலைமை மேம்படுத்துதல் :

துப்புரவுப் பணியாளர்கள் மலக் கூடையை தலைச்சுமையாக எடுத்துச் செல்லும் பழக்கம் நீடித்து வருவது குறித்து இவ்வரசு பெருங்கவலை கொண்டுள்ளது. பெருக்குபவர்களுக்கும், துப்புரவுப் பணியாளர்களுக்கும் தள்ளு வண்டிகள், கையுறைகள், புதை காலணிகள், தட்டுகள், சுரண்டு கருவி கள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவது போன்ற திட்டங்கள் செயற் படுத்தப்பட்டு வருகின்றன. 1977-78 ஆம் ஆண்டில் 432 தள்ளு வண்டிகளும், 216 தட்டுகளும், சுரண்டு கருவிகளும் ரூ. 1.76 இலட்சம் செலவில் வழங்கப் பட்டன. இத்திட்டத்தை செயற்படுத்த 1979-80ல் 2,980 தள்ளு வண்டிகள் வழங்க 58 நகராட்சிகளுக்கும், 390 தள்ளு வண்டிகள், 480 சுரண்டு கருவிகள் ஆகியவற்றை வழங்க 102 பேரூராட்சிகளுக்கும் ரூபாய் 9,66,400 வழங்கப் பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் 250 தள்ளு வண்டிகள், 250 சுரண்டு கருவிகள், தட்டுகள் ஆகியவற்றை ரூ. 1,30,400 செலவில் 53 பேரூராட்சிகளுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.



### 48. குடிநீர் வசதிகள் :

ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், கிறித்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் நல்ல குடிநீர் வழங்குவதற்கென ஆதி திராவிடர் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒரு குடிநீர்க் கிணறு தோண்டுவதற்காகும் உயர் அளவு செலவு வரம்பு ரூ. 7,500 ஆகும். குடிநீர்க் கிணறுகள் தவிர, ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், கிறித்தவர் களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்கள் ஆகியோருக்காக ஆண்டு தோறும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின் கீழ் நிலமட்ட நீர்த்தேக்கங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு நில மட்ட நீர்த்தேக்கம் கட்டவும் ஆழ் கிணறு தோண்டவும் உயரளவு செலவு வரம்பு ரூ. 15,000 லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சாதாரண திறந்த கிணறுகளுக்குப் பதிலாக இயன்ற அளவிற்கு துளைக் கிணறுகள் அமைக்கப்படும், ஆதி திராவிடர் களுக்கும், பழங்குடி மக்களுக்கும், கிறித்துவ மதத்திற்கு சமயம்மாறிய ஆதி திராவிடர்களுக்கும் குடிநீர்க் கிணறுகள் அமைத்துக் கொடுப்பதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 30.64 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கா தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ. 1 கோடி வழங்கப்படவிருக்கிறது.

### 49. மின்வசதி :

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய ஒவ்வோராண்டும் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இதற்கென்று 1957-58 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 31—3—1981 ஆம் நாள் நிலவரப்படி 25,714 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டு விட்டது.

1981-82 ஆம் ஆண்டில், புதிதாக உருவான 888 ஆதி திராவிடர் குடியிருப்பு களுக்கு மின் இணைப்பு அளிக்கப்படவிருக்கிறது.

### 50. சமுதாயக் கூடங்கள் :

ஆதி திராவிடர் குடியிருப்பில் வாழும் மக்கள் திருமணம், கூட்டங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கென்று அக்குடியிருப்புகளில், படிப் படியாக நிறைவேற்றும் திட்டத்தின் கீழ் 1971-72 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொன்றும் ரூபாய் 10,500 செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டித்தரப் பட்டன. 1974-75 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொன்றும் ரூபாய் 15,000 மதிப் பீட்டுச் செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டன. 1980-81 ஆம்

ஆண்டிலும், 1981—82 ஆம் ஆண்டிலும் சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்காக ஏழு இடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்கென, 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

51. சமுதாய நிலையங்கள் :

ஆதி திராவிடர்கள், அவர்தம் குழந்தைகள் ஆகியோரிடையே நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பரவச் செய்யும் பொருட்டு ஆடவர் சமூகப் பணியாளர் ஒருவரும், மகளிர் சமூகப் பணியாளர் ஒருவரும் குற்றேவலர் (பெண்) ஒருத்தி கொண்ட 25 சமுதாய நிலையங்கள் இம்மாநிலத்தில் நடத்தப் பட்டு வருகின்றன. அவர்கள், தங்கள் தலைமையிடத்திலிருந்து 5 முதல் 8 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள கிராமங்களில் தீவிர பிரச்சாரம் செய்கின்றனர். சிறார்களை நீராட்டி, ஆரோக்கியமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் பழக்கத்தையும் அவர்கள் கற்றுக் கொடுக்கின்றனர். இந்நிலையங் களில் மதிய உணவும், பல்வகை வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் ஆதி திராவிடர், பழங்குடியினர் சிறார்களுக்கு வழங்கப்படுகின்றன.

இச் சிறார்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 14 ரூபாய் செலவில் ஆண்டுக்கு இருமுறை உடைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கென 1982-83 ஆம் ஆண்டில் 4.58 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

52. நீர்புற சலவைக் கூடம் :

1978-79 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வண்ணான் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சலவைக் கூடம் அமைத்துத் தரும் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், பேரூராட்சியில் செயற்படுத்தப்பட்டது. 1979-80-ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலும் இரண்டு பேரூராட்சிகளில் (மணவாளகுரிச்சி, அருமனை), நீர்புற சலவைக் கூடங்கள் கட்டிதரப்பட்டன. 1980-81-ல் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆய் குடியிலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டம் பாக்கைக் குளத்திலும் நீர்புற சலவைக் கூடங்கள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 1981-82-ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள மருகனூர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலுள்ள இலத்தூரிலும், நீர்புற சலவைக் கூடங்கள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 0.20 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.



53. தீண்டாமை ஒழிப்பு :

திருத்தி இயற்றப்பட்ட "குடியுரிமைகள் கண்காணிப்பு சட்டம்" 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாள் முதற்கொண்டு நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டம் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படுவதற்காக காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவித்தரத்தில் காவல்துறை அதிகாரி யொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தருமபுரி, சேலம், நீலகிரி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பதிமூன்று சுற்றுக் காவல் படைகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு சுற்றுக் காவல் படையிலும், காவல்துறை இன்ஸ்பெக்டர் ஒருவரும், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும், தலைமைக் காவலர் இருவரும், காவலர் இருவரும் உள்ளனர். 31—3—1981 ஆம் நாள் வரையில் சுற்றுக்காவல் படைகள் 8,600 வழக்கு களைப் பதிவு செய்துள்ளன. இவற்றில், 4,045 வழக்குகளில் நீதிமன்றங்கள் தண்டனை வழங்கியுள்ளன.

குடியுரிமை கண்காணிப்பு சட்டம் தொடர்பான குற்றங்களை பதிவு செய்து துரிதமான வகையில் விசாரித்து முடிவு செய்து நீதி வழங்கிட அரசு திருச்சி ராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட் டத்தில் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க ஆணையிட்டுள்ளது.

இச்சட்டத்தை செம்மையாக செயல்படுத்த அரசுக்கு ஆலோசனை நல்கிட மாநில அளவிலான உயர்நிலைக்குழுவை திருத்தியமைப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

தீண்டாமை கொடுமையினை அகற்றுவதில் தூய்மையும் துப்புரவும் பேருதவியாக அமைவதால் தூய்மையாக துப்புரவுடன் பாமரிக்கப்படும் ஒவ்வொரு வட்டத்து ஆதிதிராவிடர் குடியிருப்பு ஒவ்வொன்றிற்கும் வானொலிப் பெட்டி பரிசாக வழங்கும் திட்டம் ஒன்றும் உள்ளது. இதற்கென 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 0.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை நகர்புறம் நீங்கலாக) தீண்டாமை ஒழிக்க முனைப்பு மேற்கொள்ளும் இரண்டு கிராமங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசின் மதிப்பு 1,000 ரூபாய், இரண் டாவது பரிசின் மதிப்பு 500 ரூபாய் ஆகும். இதற்கென 1982-83 ஆம் ஆண்டு ரூபாய் 0.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் சனவரி திங்கள் 24 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை "தீண்டாமை ஒழிப்பு வாரம்" கொண்டாடப்படுகிறது. இந்த வாரத்தில் தீண்டாமை ஒழிப்பினை மக்களின் கவனத்தை ஈர்த்திட மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் ஆகியோரின் நலனுக்காக ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை எடுத்த நடவடிக்கைகளை விளக்கும் சிறப்பு வெளியீடு ஒன்று, 1978-79-லிருந்து அரசால் வெளியிடப்பட்டு வருகிறது. இதுபோன்று நடப்பாண்டிலும் சிறப்பு வெளியீடு வெளியிடப்பட்டது. தீண்டாமை ஒழிப்புபற்றி விளக்க செய்திப்படம் ஒன்று வெளியிடுவதற்கு அரசு கருதுகிறது.

**54. கலப்புத் திருமணம் :**

சாதி-சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டுள்ள தம்பதிகளுக்கு தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் 1968-69-இல் கொண்டு வரப்பட்டது. கிறித்துவ சமயத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் மக்களுக்கும் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் தேதி முதல் இத்திட்டம் பொருந்துமாறு நீட்டிக்கப்பட்டுள்ளது. தற்போது, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் பின்வரும் பரிசுகளும் சலுகைகளும் பெறத் தகுதியுடையவராவர் :—

( ) 8 கிராம் (14 காரட்டு) எடையுள்ள தங்கப்பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

(() தம்பதிகளின் ஆண்டு வருமானம் 6,000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், திருமணச் செலவு வகையில் 300 ரூபாயும், தேசியமயமாக்கப்பட்ட ஒரு வங்கியில் தம்பதிகளின் பெயரில் கூட்டாக 5 ஆண்டுக் கால வைப்பீட்டுக் கணக்கில் முதலீடு செய்ய 4,000 ரூபாயும் அவர்களுக்கு வழங்கப்படும்.

21—8—1979 முதல் மேற்சொன்ன சலுகைகள் மனைவியை இழந்த/ கணவனை இழந்தவர்களுக்கும் (குழந்தைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி) மணவிலக்கு பெற்றவர்களுக்கும் (குழந்தைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி) நீட்டிக்கப்பட்டுள்ளன. கலப்பு மணம் புரிந்துகொண்ட தம்பதிகளின் பெயரில் கூட்டாக அவர்களின் விருப்பப்படி ஆறு அல்லது ஏழு ஆண்டு காலத்திற்கு தேசிய சேமிப்பு சான்றிதழ்களாக VI அல்லது VII வெளியீடு) ரூபாய் 4,000 ரொக்கத் தொகை வழங்கவும் கருதப்பட்டுள்ளது. ஆனால், அத்தம்பதியர் தேசிய சேமிப்பு சான்றிதழை விற்கவோ, அடைமானம் வைக்கவோ கூடாது. ஆறு ஆண்டுகள் காலத்திற்குள் அவர்கள் பிரிந்துவிட்டால் வட்டி உட்பட சேர்ந்துள்ள தொகை முழுவதும் அரசுக்குச் சேரும்.





( ) கலப்புத் திருமணம் செய்த தம்பதியினருக்குப் பிறக்கும் குழந்தைகள் பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு இணங்க தந்தையின் சாதியோ தாயின் சாதியோ சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர். ஒரு குழந்தை தொடர்பாக அளிக்கப்படும் உறுதிமொழி இத்தம்பதியினரின் மற்றைய குழந்தைகளுக்கும் சாரும்.

( ) 1979-80 ஆம் ஆண்டு முதல் மேல்நிலை வகுப்பில் அல்லது அதற்குச் சமமான வகுப்பில் தேறியவர்களுக்கு ஒருங்கிணைந்த எம்.பி., பி.எஸ்., முதலாம் ஆண்டு பட்டப்படிப்பிற்காக ஆறு இடங்கள், கலப்புத் திருமணத் தம்பதிகளின் பிள்ளைகளுக்கென்று ஒதுக்கப்படுகின்றன.

இத்திட்டம் துவங்கியதிலிருந்து 19—3—1981 வரை பழைய திட்டத்தின் கீழ் 843 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தம்பதியருக்கும் ரூபாய் 4,300 என்ற வீதத்தில் 146 தம்பதியருக்கு ரொக்கமாக வழங்கப்பட்டன.

இத்திட்டத்திற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 2.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது

**55. இறுதிச் சடங்குகளுக்குத் தொகை அளித்தல்.**

ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், கிறித்துவ மதத்திற்கு சமயம் மாறிய ஆதி திராவிடர்கள் குடும்பத்தினரில் ஒருவர் இறந்துவிட்டால் இறுதிச் சடங்குகளுக்காக ரூபாய் 50 நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இக்குடும்பங்களின் எளிய பொருளாதார நிலையையும் வறுமைச் சூழ்நிலையையும் கருத்திற் கொண்டு ஒவ்வொரு ஈமக்கடனுக்கும் இந்த நிதியுதவியளிக்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூபாய் 6.91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**56. ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டங்கள்:**
**(தன்னிறைவுத் திட்டம்)**

இம்மாநிலத்தில் 1979-80 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டு, குறிப்பிட்ட 69 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட 69 வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள குடியிருப்புகளுக்கு பின்வரும் வசதிகளை செய்து கொடுக்க ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை 1980-81 வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 75 இலட்சம் ஒதுக்கியது:—

(1) குடிநீர் வழங்கல்.

(2) ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் இடுகாடுகளுக்கும் இணைப்புச் சாலைகள் போடுதல், சிறு பாலங்கள் அமைத்தல், இடுகாடுகள் அமைத்தல்.

(3) பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.

[1982 மார்ச் 23

இத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 1980-81 ஆம் ஆண்டில் ரூபாய் 66.23 இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக சென்னை மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரைத் தவிர, ஏனைய மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு இத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டம் 1981-82-ல் 150 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப் பட்டது. இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 75 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1982-83 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிலும் இத் திட்டத்திற்காக ரூபாய் 75.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத்திட்டம் :

57 தமிழ் நாட்டிலுள்ள பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகப் பழங் குடியினர் நலத் துணைத் திட்டம் என்று அழைக்கப்படும் சிறப்புத் திட்டம் ஒன்று பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் ஒன்பது பகுதிகளில் அதாவது சேலம் மாவட்டத்தில் கொல்லி மலை, ஏர்க்காடு, கல்ராயன் மலை, அரனூத்து மலை, சேலம் மாவட்டத்திலுள்ள பச்சை மலை, வட ஆற்காட்டில் ஜவ்வாது மலை, தென் ஆற்காட்டில் கல்ராயன் மலை, தருமபுரியில் சித்தேரி மலை, திருச்சிராப்பள்ளியில் பச்சை மலை ஆகிய இடங்களில் செயற்படுத்தப்பட் டுள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலக் கட்டத்தில் வறுமைக் கோட்டுக் குக் கீழே உள்ள 15,000 பழங்குடி குடும்பத்தினரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு உதவி செய்வதே இத்துணைத் திட்டத் தின் மூல நோக்கமாகும். ஆண்டு ஒன்றுக்கு 3,000 பழங்குடியினருக்கு உதவி அளிக்கவேண்டும் என்று குறியீடு வரையறுக்கப்பட்டுள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் துணைத் திட்டத்திற்காக ரூபாய் 2,896 இலட் ச்ம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1980-81-இல் இத் திட்டத்திற்காக ரூபாய் 345.25 இலட்சமும், 1981-82 இல் ரூபாய் 393.65 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டு ரூபாய் 451.36 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தில், தோட்டக் கலை, மண்வளப் பாது காப்பு, சிறு நீர்ப் பாசனம், கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு, வன வளர்ப்பு, கல்வி, பொது நலம், சமூக நலம், கிராமியத் தொழில்கள், பட்டு வளர்ப்பு, சாலைப் போக்குவரத்து, குடிநீர் வழங்கல், மின் இணைப்பு வழங்குதல் ஆகியவை அடங்கும்.

இத் திட்டங்களைச் செயற்படுத்தும் பொறுப்பு தொடர்பான துறைகள் வசம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர்கள், ஒருங்கிணைந்த பழங் குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் தலைமைத் திட்ட ஒருங்கிணைப்பு அதி காரிகளாவர்.





ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் இடம் ஒதுக்கீடு செய்வதற்கான நியதிகள்.

( ) கல்வி நிறுவனங்களில் செயல்பாடு.

58. மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழில் கல்வி நிறு
வனங்கள் உட்பட கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடி
யினருக்கும் உரிய இடம் கொடுக்க 18 சதவீத இடங்கள் ஆதிதிராவிடர்களுக்
கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

1980-81-ல் கலைகள், பட்ட மேற்படிப்பு, மருத்துவம், பொறியியல் முதலிய படிப்புகளில் ஆதிதிராவிடர்/பழங்குடி மாணவர்கள் சேர்த்துக் கொள் ளப்பட்ட விவரங்கள் (சதவீதத்தில்) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | சதவீதம் |
|---|---|
| | 9 |
| இளங் கலை வகுப்புகள் (பட்டப்படிப்பு) | 3 |
| பட்ட மேற்படிப்பு வகுப்புகள் | 18.6 |
| பொறியியல் | 21 |
| பல்தொழில் பயிற்சிப் பள்ளி | |
| வேளாண்மை படிப்புகள் :— | 21.23 |
| பி.எஸ்.சி. (வேளாண்மை) | 25 |
| பி.எஸ்.சி. (தோட்டக்கலை) | 18 |
| பி.ஈ. (வேளாண்மை) | 24.20 |
| பி.வி.எஸ்சி. | 25 |
| பி.எப்.எஸ்சி. | 11 |
| மருத்துவப் படிப்புகள் | |
| (எம்.பி., பி.எஸ்., எம்.டி., எம்.எஸ். முதலியவை) | |

9—3—1982 அன்று இதற்கென அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட குழு ஆதிதிராவிடர் நல அமைச்சரின் தலைமையில் கூடி, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் கலைக் கல்லூரிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களை சேர்த்துக் கொள்வது குறித்து ஆய்வு செய்தது. பல் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில், ஆதிதிராவிடர், மற்றும் பழங் குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் 1971-72-ல் 5.83 சதவீதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர், ஆனால் 1980-81 ஆம் கல்வி ஆண்டில் 21 சத

விதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதைக் கருதிப் பார்த்தால், அவர்களை மேற்கூறிய பல் தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்வது அதிகரித்துள்ளது என்பதை அறியும்போது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. இதுபோலவே பொறியியல் கல்லூரிகளிலும் 1971-72-ல் 4.37 சத விதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர், ஆனால் 1980-81-ல் 18.6 சதவிதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதிலிருந்து பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்று தெரியவருகிறது.

( ) **அரசுப் பணிகளில் நியமனம்.**—மாநில அரசுப் பணிகளில் 18 சத விகித இடங்கள், ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைத் தலைவரும் தலைமைச் செயலகத் துறைகளும் ஆண்டு தோறும் விவரக் கணக்கு ஒன்றை அனுப்பவேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதன் மூலம், இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன அதிகாரிகள் ஒழுங்காகப் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளில் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும், அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் குறித்து ஆராய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், ஆதி திராவிடர் நல அமைச்சரைத் துணைத் தலைவராகவும், ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரைச் செயலாளராகவும் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று செயல்பட்டு வருகின்றது. அரசுத் துறைகளிலும், பொது துறை நிறுவனங்களிலும் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்பட்டுள்ள இடங்கள் (சதவிதத்தில்) வருமாறு :—

| | சதவிதம் |
|---|---|
| அரசுத் துறைகள் | 13 |
| பொதுத் துறை நிறுவனங்கள் | 11 |

**கண்காணிப்புத் துணைக் குழு.**—பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு "உயர் அதிகாரக் கண்காணிப்புக் குழு" ஒன்றை அரசு அமைத்துள்ளது. இது, உயர்நிலைக் குழுவின் நிலையான துணைக் குழுவாகும். ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு குறித்த விதிகளை பதவி உயர்வு, பதவி மாற்றம் மூலம் செய்யப்படும் அனைத்து நியமனங்களுக்கும் பொருந்தச் செய்வது பற்றிய செயற் குறிப்பை இக்குழு ஆய்வு செய்யும். மேலும் பல நிலைகளில் செய்யப்படும் பணி நியமனங்களை மீண்டும் ஆராய்ந்து தற்போதுள்ள நிலையினை மதிப்பீடு செய்து, அரசுப் பணிகளில் ஆதி திராவிடர் பழங்குடியினருக்குப் போதுமான பிரதி நிதித்துவம் கிடைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வழிவகைகளையும் தெரிவிக்கும்.





**59. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம்.**—கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் அடிமைத்தளைகளில் வீழ்ந்துவிடாமல் நல்வாழ்வு வாழ வகை செய்வதில் இந்த அரசு எப்போதும் ஆர்வம் காட்டி வருகிறது. இவர்களுக்குப் மறுவாழ்வு அளிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரையில் தமிழ் நாட்டில் 10 மாவட்டங்களில் 2,929 கொத்தடிமைகள் கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 2,617 பேருக்கு ஏற்கனவே விவசாய நிலம் வழங்கப்பட்டும், வேலை வாய்ப்பு அளித்தும், பயன்பெறும் கடன் வேளாண்மைக் கடன்களும், வழங்கப்பட்டுள்ளன. இதுவரை கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு மறு வாழ்வு அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர, தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலையில் 24,945 கொத்தடிமைத் தொழிலாளர்கள் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். பழங்குடி மக்கள் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டம் மிகப்பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்துடன் செயல்படுத்தினால் கொத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களின் சமூக, பொருளாதார நிலையில் உயர்வர் என அரசு கருதுகிறது.

60. 31 ஆம் எண்ணுள்ள இம்மானியக் கோரிக்கையின்கீழ் ரூபாய் 41.12 கோடி (சாட்டிய செலவு உட்பட) செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதோடு ஏனைய மூன்று மானியக் கோரிக்கையின்கீழ் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்திற்காகச் செலவு செய்யக் கருதியுள்ள தொகைபற்றிய விவரங்கள் வருமாறு :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| மானியக் கோரிக்கை எண் 43 பல்வகை | 0.0026 |
| மானியக் கோரிக்கை எண் 55 பல்வகை மூலதனச் செலவு | 5.5003 |
| மானியக் கோரிக்கை எண் 56 கடன்களும் முன் பணமும் | 0.7361 |
| மொத்தம் | 6.2390 |

ஆதி திராவிடர், பழங்குடியினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக மேற்சொன்ன மானியக் கோரிக்கைகள் அனைத்தின்கீழும் மொத்தத்தில் 47.36 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகவே, இம்மாநிலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து வரும் ஏனைய மக்களைப் போல் ஆதி திராவிடர், பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.

eady, they can be packed and sent. By such an arrange-t, the local people can get some employment opportunities those who are under-employed can get some more money. request that the possibilities in this regard may kindly be explored by the Hon. Minister concerned.

Sir, I have already made a suggestion and I hope that it is on the anvil of action by the State Government. Anyhow, I shall now state it again. Recently, I had been to the Kolli Hills. In the Kolli Hills, a small mini-hydel project can be started to produce about 20 MW of electricity. There are some waterfalls in those hills and making use of them we can produce some electricity. The electricity so produced will be of use to the local people who live in thirteen "Naadu" sin the Kolli Hills. At present, electricity is being taken from the plains to those places in the hills and it is an uphill task. Moreover, the electricity that is now being taken from the plains is insufficient for consumption in the hills and there may also be line losses during transmission. Therefore, if electricity is produced locally in the hills, it will be of great help to the local people. By drawing up many such useful schemes the resources available in Tamil Nadu can be profitably exploited.

With these words, I conclude my speech.

Thiru A. R. DAMODARAN : Sir, the fact that we are dealing with the Policy Note on Industrial Development, the Heavy Industry, the Medium Industry and the Rural and Small Industries and the very fact that the attendance in this House is so poor indicate the lack of interest in the industrial development in Tamil Nadu on the part of the Members of the Legislature. I am only sorry that, while I can understand Members of the Legislature being interested in other matters, even the Hon. the Minister for Rural and Small Industries is not here when the Policy Note is being discussed. Probably he has other engagements outside. But, as I mentioned, when we discuss the Policy Note on a broad policy of the Government, it would be infinitely

preferable to have the Hon. Minister here to clear any do that we may have on the subject. I hope that the Hon. Minister for Heavy Industries will not find it heavy-going report all that we say about small and rural industries to hi Hon. Colleague.

The hon. Member Thirumathi Tara Cherian mentioned that there was something like a lack of rapport between the Government and the industrial community. I do not know whether there is any lack of rapport. But one thing which I would like to mention is that this Note on Industrial Development does not contain a single paragraph about the Hon. Minister having had any consultation with the industrialists in our State about the development of heavy and medium industries which requires the support of the industrial community in our State. The Hon. the Labour Minister, in his Policy Note on Labour which we shall be discussing day-after-tomorrow, has mentioned about staff welfare associations, labour welfare associations, labour canteens, etc. I should surely think that a note on the industrial policy should also contain a number of paragraphs at least about what discussions the Minister has had with the Chambers of Commerce and Industry on the question of industrial development in Tamil Nadu. I would like to stress this point which I have stressed often in the past that while it may not be possible for the Hon. the Chief Minister, in the midst of his multifarious activities and responsibilities, actively to shoulder the responsibility of holding discussions with the industrial groups, it is of paramount importance for the Hon. the Minister for Heavy and Medium Industries to act as an active protaganist to convince his Colleagues in the Cabinet of the various difficulties which industrialists are facing in our State in starting new industries, in developing existing industries and the expansion of existing industries. I am not pleading for a Consultative Committee of legislators on industrial development because, as I have said, the Hon. Ministers will not find any good response from the legislators. I do not cast any reflection on the legislators but that is the actual fact. I would plead with





வாழ்ந்து படுத்தியிருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர்களுக்காகத்தான் கொண்டிருக்கிறோம், தொழிலாளர் நலன்தான் முக்கியம் என்று சொல்லி, அவர்களுடைய வாழ்விற்கு உத்தரவாதம் வேண்டுமென்ற வகையிலே போராட்டம் இந்த நாட்டிற்குத் தேவையில்லை, பேச்சுவார்த்தைகளின் மூல ஆகவே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம், கடுமையான உழைப்பின் மூலம்தான் ஒரு நாடு உயர முடியும் என்பதால் கடுமையான உழைப்பின் மூலமும், பேச்சுவார்த்தைகளின் மூலமும்தான் உரிமைகளைப் பெற வேண்டும் என்ற உன்னதமான இலட்சியத்தைத் தாங்கியிருக்கிற, புனிதமான தலைவர் புரட்சித் தலைவர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் இருக்கின்ற இந்த ஆட்சி தொழிலாளர் நலனைப் பாதுகாக்கிறது என்று சொல்லி அமைகிறேன் வணக்கம்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல இலாக்காவின் கொள்கைக் குறிப்பின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த அரசினுடைய தொழிலாளர் விரோதக் கொள்கைபற்றி, ஏற்கெனவே 1981 ஆம் ஆண்டு பிப்ரவரியில் நாங்கள் சட்டமன்றப் பேரவையிலேயே ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து பேசியிருக்கிறோம். அதிலே அன்றைக்கிருந்த கருத்தை மாற்றிக்கொள்ளக்கூடிய அளவிற்கு இந்த அரசினுடைய கொள்கையில் மாற்றம் இல்லை. 'இண்டஸ்ட்ரியல் ரிலேஷன்' என்ற விஷயத்தில் இந்த அரசாங்கத்தின் அணுகுமுறை மோசமாக இருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்து. எதிர்க் கட்சியில் இருப்பதால், இப்படிச் சொல்ல வேண்டுமென்ற சாங்கியத்திற்காக நான் இதைச் சொல்லவில்லை. சில ஆதாரங்களை வைத்துக்கொண்டுதான் சொல்லுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது "கான்கிரீட் ஃபாக்டர்ஸ்" அடிப்படையிலே அதை மறுத்தால், நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

உதாரணமாக, போராட்டம் என்றாலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பனுக்கு என் உடம்பில் எரிச்சல் வருகிறது என்று தெரியவில்லை. போராட்டம் என்று சொல்லியே சில பேர் வாழ்கிறார்கள் என்று சொல்லும்போது, அவர் ஒரு குறிப்பிட்ட கோஷ்டியைப் பற்றிச் சொல்லலாம். போராட்டம் என்பது வேறு யாரும் தூண்டுவது அல்ல.

டாக்டர் இரா. சனார்த்தனம்: துணைத் தலைவர் அவர்களே, "உடம்பு எரிச்சல்" என்று சொல்வதை [illegible]டிலும், "உள்ளத்திலே ஏன் வேகம் வருகிறது" என்று கேட்டால், பொருத்தமாக இருக்கும்.

திரு. ஆ. நல்லசிவன் : அதை நான் திருத்திக்கொள்கிறேன். போராட்டம் என்பது யாரோ ஒரு சிலர் தூண்டிவிடுவதால் ஏற்படுகிறது என்ற கண்ணோட்டம் இருப்பதால், போராட்டத்தைத் தூண்டிவிட்டு ஒரு சில பேர் உண்மையிலேயே வாழ்கிறார்கள் என்று அரசியல்வாதிகள் கருத்து பரிமாறிக் கொள்வதை நாம் பார்க்கிறோம். எதிர்க் கட்சியிலே இருக்கும்போது, நீங்களே ஒரு காலத்திலே அப்படிப் பேசியிருக்கிறீர்கள். ஒரு காலத்திலே உங்களுக்கு அது தேவைப்பட்டிருக்கிறது. உங்களுக்காக அல்ல, தமிழ்நாட்டு மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற நீங்களே தலைமை தாங்கியிருக்கிறீர்கள். அப்போது அது நல்ல உபாயமாக இருந்தது இப்போது போராட்டம் என்றால், கசப்பாக இருக்கிறது. இடம் மாறியதால் ஏற்படும் தோஷம் என்றே கருதுகிறேன். போராட்டம் என்றால், இவ்வளவு தூரத்திற்குப் பயப்பட வேண்டியதில்லை.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே "இண்டஸ்ட்ரியல் ரிலேஷன்ஸ்" பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இண்டஸ்ட்ரியல் ரிலேஷனில் ஒரு பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று காட்ட இந்த இலாக்கா முயற்சிக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள் பேசும்போது, போராட்டம் வேண்டாம், பேச்சுவார்த்தை மூலமாக முடிக்கலாம், ஆனால் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டேன் என்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். இந்தப் புத்தகத்திலே, 'இண்டஸ்ட்ரியல் ரிலேசன்ஸ்' நன்றாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தாலும், அரசே கொடுத்திருக்கிற புள்ளி விவரங்கள் அதை மாற்றிச் சொல்லுகின்றன. உதாரணத்திற்கு இந்தப் புத்தகத்திலேயே ஒரு கணக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆர்கனைஸ்ட் லேபர் 8 இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்றும், அன்-ஆர்கனைஸ்ட் செக்டரில் 5½ இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்றும் ஆக மொத்தம் 13½ இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்றும் கணக்கு கொடுத்திருக்கிறார்கள். இப்போது 1982-ம் ஆண்டில் இருக்கிறோம். ஆகவே 1981 ஆம் ஆண்டு கணக்கைத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. 1981 ஆம் ஆண்டுக் கணக்கின்படி, இந்த 13½ இலட்சம் பேரில் ஒரு இலட்சத்து 86 ஆயிரம் பேர் பாதிக்கக்கூடிய அளவிற்கு இண்டஸ்ட்ரியல் லாக்-அவுட், ஸ்டிரைக் நடந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் 15 சதவிகிதம் தொழிலாளர்கள் 1981 ஆம் ஆண்டிலே லாக்-அவுட், ஸ்டிரைக் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அரசு கொடுக்கும் விவரமே சொல்லுகிறது. அது மட்டுமல்லாமல் இந்த ஒரு இலட்சத்து 86 ஆயிரம் பேரில், 1 இலட்சத்து 30 ஆயிரம் பேர் பஞ்சாலை, இன்ஜினியரிங் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட ஸ்டிரைக், லாக்-அவுட்டால் பாதிக்கப்பட்டிருக்



கள் நல்ல முறையில் கவனம் செலுத்த முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். முதலில் ஒரு குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும்போது ஒரு திருவிழா வைப்போல கொண்டாடி ஆசிரியரிடம் அனுப்புகிற ஒரு முறை முன்பு இருந்தது. அந்த முறையில் இதில் கவனம் செலுத்த நாற்றங்கால் கல்வி முறை வழிவகை காண வேண்டும்.

அடுத்து, கல்லூரிகளில் பயிற்று மொழிபற்றி நாம் முடிவு கண்டாக வேண்டும். சட்டக் கல்வியைப் பொறுத்தவரையில், தேர்வை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதலாம். தமிழில் படிக்கின்ற அளவில் மாணவர்கள் சேர்கிறார்கள். அதுபோல் ஒரு குறிப்பிட்ட அளவில் மாணவர்கள் ஆங்கிலத்தில் சேர்கிறார்கள். யார் ஆங்கிலத்தில் படிக்கிறோம் என்று சேர்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் இன்றைக்கு தேர்வைத் தமிழில் எழுதுகிற நிலையைப் பார்க்கிறோம். தமிழில் அவர்கள் எளிதில் எழுத முடிகிறது. தங்கள் எண்ணத்தைத் தாய்மொழியில் தெளிவாகத் தெரிவிக்க முடிகிறது. இதைப் பார்க்கும்போது, யார் எப்படித் தான் முயன்றாலும் கூட, தாய் மொழி மூலம் கல்வி பயில்பவர்களை யாரும் தடுக்க முடியாது. உளப்பூர்வமாக உணர்ந்துள்ள நமது அரசு இதுகுறித்து விரைவில் முடிவெடுக்க வேண்டும். ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தையும் மறந்து விடக் கூடாது. இன்றைக்கு எந்த முறையில் நம்முடைய கல்வி இருக்கிறது என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. எம்.ஏ. படித்தவர்கள் வேலைக்குச் சென்றால், அவர்கள் முறையாகப் படிக்க முடியவில்லை என்று சொன்னால், இத்தனை ஆண்டுகள் அவர்கள் ஆங்கிலம் படித்தும், சரியாகப் படிக்க முடியவில்லை என்று சொன்னால், அவர்கள் கற்ற கல்வியிலுள்ள குறைதான் அது. அதனால் ஆங்கிலத்தில் கற்றுத் தருவதைப் பொறுத்தவரையிலும், ஒரு நல்ல வழிமுறையைக் காண வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : வேலைக்குச் செல்பவர்கள் அதற்கு வேண்டிய மொழியைக் கற்க வேண்டுமென்ற உணர்வை மாண்புமிகு உறுப்பினர் வெளிப் படுத்துகிறாரா ?

டாக்டர் இரா. சனார்த்தனம் : நாம் படிக்கின்ற கல்வி நமக்குப் பயனளிக்க வேண்டும். ஷேக்ஸ்பியர், மில்டன் போன்றவற்றைப் படிப்பதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. ஆனாலும் நம்முடைய தேவையை உணர்ந்து கல்வியைக் கற்கும் முறை தான் நமக்குத் தேவை.

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1982 மார்ச் 20

(முற்பகல் 9-50)

இந்த அரசு, ஏதோ பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் வருகின்ற மாணவர்களை மட்டும் கவனிக்கவில்லை. கல்வியிலே எந்த அளவுக்கு இந்த அரசு அக்கறை காட்டுகிறது என்பதை பள்ளிசாராக் கல்வியில் எவ்வளவு அக்கறை காட்டுகின்றது என்பதிலிருந்தே புரிந்துகொள்ளலாம். பள்ளி சாராக் கல்விக்காக இப்போது 988 மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிவகாசியைப் பொறுத்தவரையில், அங்கே இளம் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புகின்றார்கள். அந்தப் பகுதிக்குச் சென்று அங்கே உள்ள சிறுவர்களையும், சிறுமிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, அவர்களின் நிலைமையை அறிந்த பிறகு, இப்போது அந்தப் பகுதியிலே 30 பள்ளி மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இப்போது தொழிலாளர் கல்வி நிலையங்கள் அமைக்கும் முயற்சியிலும் இந்த அரசு ஈடுபட்டிருக்கின்றது. அதுசம்பந்தமாக இப்போது ஒன்று தொடங்கினாலும், விரைவில் அப்படி பல நிலையங்களை அமைத்து பலருக்கு இதனால் பயன் அளிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முதியோர் கல்வியை எடுத்துக்கொண்டால், இப்போது முதியோர் கல்வியிலே 68 ஆயிரம் பேர் பயன்பெறுகின்றார்கள். மாலைக் கல்லூரிகளின் மூலம் எட்டு ஆயிரம் பேர்கள் பயன்பெறுகின்றார்கள். மேலும் அஞ்சல் வழி கல்வி மூலம் ஒரு இலட்சம் அளவுக்கு மாணவர்கள் பயன்பெறுகின்றார்கள். முறையான கல்வி பெறாத 21 வயதடைந்த அனைவரும் படிக்கத்தக்க பல்கலைக் கழக வகுப்பு, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திலே ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் ஏறத்தாழ 14,000 பேர்கள் பயனடைந்து வருகின்றனர்.

தனியார் பள்ளிகளையும், கல்லூரிகளையும் எடுத்துக்கொண்டால், அங்கெல்லாம் பிரச்சினைகள் இருக்கின்றன. திருநெல்வேலி, நாலும்மாவடி—காமராஜர் பெயரில் உள்ள மேல் நிலைப் பள்ளி, கும்பகோணம் ஸ்ரீசரஸ்வதி பாடசாலா பெண்கள் மேல் நிலைப் பள்ளி, தென்னாற்காடு குறிஞ்சிப்பாடி எஸ்.கே.வி. மேல் நிலைப் பள்ளி, அவனாசிலிங்கம், சாரதா, எஸ்.ஐ.இ.டி. போன்ற கல்லூரிகளில் குறைபாடுகள் இருந்தாலும், தமிழகத்திலே இருக்கின்ற ஆயிரக்கணக்கான கல்லூரிகளைப் பார்க்கும்போது, இந்தப் பிரச்சினைகளின் அளவு மிகவும் குறைவாக இருப்பது மகிழ்ச்சிக்குரியது. இருக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்பட நல்ல வழிமுறைகளைக் காண வேண்டும். அரசைப் பொறுத்தவரையில், மிகவும் எச்சரிக்கையாக இருப்பதற்கு நன்றி. வெசிலி மேல் நிலைப் பள்ளியிலே பாதிக்கப்பட்டவர் ஒரு சிறுபான்மையினர்.



1982 மார்ச் 20] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அவர் தலைமையாசிரியராக வரும் வாய்ப்பையும் இழந்தவர். அவருக்குப் பதவி அளிக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் நிர்வாகம் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறது. இப்போது அவர்களுக்கெல்லாம் ஒரு நம்பிக்கை. நம் நாட்டில் நீதிமன்றத்திற்குப் போனால் நீதி கிடைக்குமா என்பது ஒரு பக்கம் இருந்தாலும், நீதிமன்றத்தின் தீர்ப்பு வருவதற்கே கொஞ்சம் கால்தாமதம் ஆகும். அதற்குள்ளாகவே ஆசிரியர் ஓய்வு பெற்றுவிடுவார் என்ற காரணத்தினாலே இதை ஒரு வாய்ப்பாக பலர் பயனபடுத்துகிறார்கள். ஆனால் பள்ளிக் கல்வி இயக்குநர், மானியத் தொகையை நிறுத்தலாம் என்று இந்த அரசு 1981 நவம்பர் 18 ஆம் நாள் அரசாணை பிறப்பித்தது. குறிப்பாக சிறுபான்மையினர் பள்ளிகள் அரசின் கொள்கையை ஏற்க வேண்டும் என்ற அளவிலே இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை நாம் அனைவரும் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நண்பகல் உணவுத் திட்டம் என்பது ஒரு நல்ல திட்டம். 1 முதல் 8 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மாணவர்கள் 21.11 இலட்சம் பேர்கள் இதனால் பயன்பெறுகிறார்கள். இப்போது 'கேர்' நிறுவனம் கொடுக்கும் உதவியை நிறுத்தும் நிலையில் நாம் அதற்கென்று தரும் உதவியின் அளவை அதிகப்படுத்த வேண்டும். அதைப்போல், 100 கோடி ரூபாய் திட்டமும் நல்ல பலனை அளிக்கும். இது அரசினுடைய நல்ல மன நிலையைக் காட்டுவதாக இருக்கிறது. நம்முடைய நாட்டிலே இருக்கிற நிலைமையைப் பார்க்கும்போது, வறுமை, ஏழ்மை ஆகியவைகளின் கொடுமையான நிலைமையைப்பற்றி மால்கம் ஆதிசேஷையா அவர்கள் ஒரு நூலுக்கு எழுதிய முன்னுரையிலே எழுதுகின்றார்கள். என்னவென்றால்

"Of the 540 million people living in the country, one quarter, that is, 130 million men, women and babies go to bed hungry every night. If the present situation is not corrected, we would have 12 million hungry people in the State by 1980".

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சத்துணவு இல்லாத நிலையைப்பற்றி, அந்த நூலை எழுதிய டாக்டர் இராஜம்மா தேவதாஸ் அவர்கள்

"Tamil Nadu has the lowest mean per capita daily consumption of calories and proteins among the thirteen States listed—36 grammes of protein and 1498 calories as against the all-India mean of 53 and 1985 and the allowance of 42 and 2400 recommended by the ICMR."

என்று குறிப்பிடுகிறபோது, நம்முடைய குழந்தை

களுக்கு இன்னும் எவ்வளவு சத்துணவு தேவை என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அடுத்து,

" In Tamil Nadu, as of 1971, there are 59.9 laklıs of children below 4 years of age. This number is expected to increase to 68.7 lakhs by 1986. There are 40 lakhs pre-school children in the 2 to 4 years age-group and it is expected that this will increase to 46 lakhs by 1986." என்று இந்த அளவுக்குப் பிள்ளைகள் பெருகப் போகிறார் கள் என்பது தெரிகிறது. அந்த நிலையில் இந்த 2 வயதிலிருந்து 4 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி வழங்கும் பெரும் பொறுப்பை இந்த அரசு எடுத்திருப்பது பாராட்டுதலுக்குரியது.

தமிழ் நாடு பாடநூல் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், சொல்ல வேண்டுமானால், அந்த நிறுவனத்தின் இந்தப் பெயர் மாற்றப்பட வேண்டும். பாடநூல் என்பதிலிருந்து பலர் இது ஏதோ படிக்கின்றவர்களுக்கு உட்பட்ட விவகாரம் என்றுதான் இதைப்பற்றி நினைக்கும் நிலை இருக்கிறது. ஆகவே, இதை 'தமிழ்நாடு நூல் நிறுவனம்' என்று பெயர் வைத்து அழைப்பதே பொருத்தமானதாகும். அவர்கள் அரிய பல பணிகளை ஆற்றுகின்றார்கள். குறிப்பாகச் சொன்னால், இவ்வளவு பெரிய நூல் அறிஞர் கே. கே. பிள்ளை அவர்கள் 'தமிழக வரலாறும்—மக்கள் பண்பாடும்' என்ற நூலை எழுதியிருக்கி றார்கள். அதனுடைய விலை ரூ. 9 தான். அதே நேரத்திலே தனியார் ஒருவர் ஒரு நூலை எழுதியிருக்கிறார். அவர் மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் கடிதத்தில் 8-வது பகுதியை வெளியிட்டிருக்கிறார். அதன் விலை ரூ. 12. ஆனால் இந்த நூலின் விலை ரூ. 9, ஆகவே, இந்தப் பாட நூல் நிறுவனம் அறிஞர் அண்ணா அவர்களின் நூல்களையும் மற்ற அனைத்து சிறந்த நூல்களையும் வெளியிட வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊட்டியிலே பாலிடெக்னிக் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை இப்போது மத்திய அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாக அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். பாலிடெக்னிக்கில் வெளிநாட்டு மாணவர்கள் அதிகமாகப் படிக்கும் அளவிலே அவர்களுக்கும் இடம் ஒதுக்க வேண்டும். அறிவியல் அருங்காட்சியகம் அமைக்கப்படும்போது, வெளிநாடு களிலே எப்படி அமைக்கிறார்கள் என்று பார்த்து, அந்த அடிப்படையிலே அமைக்க வேண்டும். மேலும், இதுபற்றி மறைந்த மேதை ஜி. டி. நாயுடு அவர்கள் எப்படி அமைத்தார்கள் என்பதையெல்லாம் பார்த்து, அந்த வகை யிலேயும் செய்ய வேண்டும்.



திரு. எஸ். ஆர். இராதா : 'திராவிடன்' என்று சொல்லியிருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். 'பண்டாடியார்' திராவிட இனத்தில் வரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்களா ?

திரு. சோ. ஆறுமுகம் : நான் இதுகுறித்து பேசியபோது மாண்புமிகு உறுப்பினர் அவையில் இருக்கவில்லை என்று கருதுகிறேன். இப்படியெல்லாம் சொல்வதன்மூலம் நாட்டில் ஜாதிக் கலவரம் வரும், அதற்கான சூழ்நிலை இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு தமிழ்நாடு பிற்பட்டோர் நல பொருளா தார மேம்பாட்டுக் கழகம் என்ற ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இதுபற்றி அறிக்கையிலே நான் பார்த்தேன். அதில் தொழில் செய்ய எந்த அளவுக்கு ஒவ்வொருவருக்கும் முதலீடு தரப் போகிறார்கள் என்கிற விவரம் தெளிவாக இல்லை. பின்னால் ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து விவரம் தரக்கூடும். இப்படிப்பட்ட கழகங்களை அமைப்பது என்பது பெயரளவில் நின்று விடக்கூடாது. செயலளவில் அது இருக்க வேண் டும். சில நேரங்களில் திட்டங்களை அறிவிப்பதும், பிறகு அதை நடைமுறைப் படுத்த முடியாது என்று சொல்வதும் போன்ற நிகழ்ச்சிகள் கடந்த 4 ஆண்டுக் காலமாக நடைபெற்றுக்கொண்டு வரக்கூடிய சூழ்நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் பிற்பட்ட மக்களுக்குச் செய்யப்போகிறோம் என்று அறிவித்துவிட்டு, பிறகு நிறுத்திவிடக் கூடாது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் சில சலுகைகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் மீனாட்சிசுந்தரம், லெட்சுமிகாந்தன் போன்றோர் ஏற்கெனவே சொல்லிவிட்டதால், நானும் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. அவர்களுக்குச் செய்வதுபோல் பிற்பட்டவர் களுக்கும் பல காரியங்களைச் செய்ய வேண்டும். தொழில் செய்ய வாய்ப் பளித்தல், பொருளாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். இன்று நாம் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு சென்னை நகரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம். இங்கே சில அடிப்படைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தாழ்த்தப்பட்டவர் களுக்கு ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் நில ஆர்ஜிதம் செய்வதாகக் குறிப்பிட் டார்கள். தாழ்த்தப்பட்டவர்களுடைய குடியிருப்பு ஊருக்கு மத்தியில் இருக்க

வேண்டுமென்று விரும்புகிறோம். வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகளை, பல விலை மதிப்பில் கட்டுகிறோம். அதிலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, சென்னை நகரைப் பொறுத்தவரையில், எவ்வளவு வீடுகளை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால்தான் அதிலே இருக்கிற உண்மை நிலை என்ன என்கிற விவரம் தெரியவரும். அவர்களுடைய இடத்தை எல்லாம் வெளி மாநிலத்தவர்களும், முன்னேறிய வகுப்பினரும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் இத்தகைய வாய்ப்புகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கொடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஒவ்வொரு பிரிவினருக்கும் இத்தனை சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் டிரைப் போன்ற பிரிவினருக்கு இவ்வளவு சதவிகிதம் என்று ஒதுக்கப்படுகிறது. அதற்கு அடுத்து மாநில அரசு, மத்திய அரசு ஊழியர்களுக்கு என்று ஒரு பிரிவை வைத்து ஒதுக்கிறோம். எஸ். சி. & டி. அவர்களுடைய ஒதுக்கீட்டைப் பெறுகிறார்கள். அவர்களுக்காக, என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், 10 2/3 சதவிகிதம் ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொண்டாலும்கூட, இப்படி ஒதுக்கப்படுகிற இடம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதா, சரியாக அது நிறைவேற்றப்படுகிறதா என்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இதிலே வாய்ப்பளிக்க வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டநாதன் கமிட்டி பற்றி, கன்வெல்கர் கமிட்டி பற்றியெல்லாம் பேசினார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் சில அனுகூலங்களை அதிகாரங்களை மாநில அரசு பெற்றிருக்கிறது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கின்ற சில மேட்டித்தான் சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த வகையில் மண்டல் கமிட்டியினுடைய ரிப்போர்ட்டை மத்திய அரசு இன்னும் ஏன் வெளியிடவில்லை என்று கேட்க வேண்டும். அந்த வகையில் அதை உடனடியாக வெளியிட வேண்டுமென்று சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் தீர்மானம் கொண்டுவர இந்த அரசு தயக்கம் காட்டக்கூடாது.



அடுத்தபடியாக, விளையாட்டைப் பொறுத்தவரையில், ஒலிம்பிக் விளையாட்டுகளிலே எவ்வளவு மெடல்கள் வாங்குகிறார்கள் என்பதைப் பார்த்துத்தான் ஒரு நாட்டின் வளர்ச்சி இருக்கிறது என்ற நிலை இப்போது இருக்கும்போது, சிறிய நாடுகள் பல பதக்கங்களையெல்லாம் பெற்றுக் கொண்டிருக்கும்போது, அதுபற்றி தமிழக அரசு இப்போது எடுத்திருக்கும் நல்ல முயற்சியால் தமிழ் நாட்டு மாணவர்களும் அதிலே வெற்றி பெற்று நல்ல பலனடைவார்கள் என்று நான் நம்புகிறேன்.

சாரணர் இயக்கத்தைப் பொறுத்தவரையில், சென்னையிலே கண்ணகி சிலைக்கு அருகிலே இருக்கும் சாரணர்கள் நிலையத்திலே மாணவர்கள் தங்கும் இல்லம், உணவு விடுதி அமைத்தால், அது மாணவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். ஆவணக் காப்பக வெளியீட்டிலே நீல்பாவை இயக்கம் பற்றி அண்ணல்தங்கோ அவர்களுடைய கருத்துக்களை வெளியிட்டிருப்பதற்கு மகிழ்ச்சி. பிற மாநிலங்களிலே தமிழின் வளர்ச்சிக்காக பல்கலைக் கழகங்களுக்கு நாம் உதவுவதோடு அங்கிருக்கும் தமிழ்ச் சங்கங்களுக்கும் நாம் உதவ வேண்டும். அவர்கள் நூலகம் போன்றவைகளை அமைக்கவும் நாம் உதவி செய்து தமிழை வளர்க்க வேண்டும். செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலி போன்றவை வெளியிடும் முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் பலருக்கு அகர முதலி என்றால் என்னவென்று தெரியாது. அது Dravidian Etymological Dictionary 'பர்ரோ'—'யமுனோ' முதலில் என்ற பேராசிரியர்கள் எல்லாம் 15-16 ஆண்டு காலம் ஆராய்ச்சி செய்து 5 ஆயிரம் ஆங்கிலச் சொற்களை தமிழிலே வெளியிட்டதன் விளைவு என்னவென்றால், ஜப்பான் பேராசிரியர் ஊனோ என்பவர் இதைக் கொண்டு தமிழிலேயிருந்து எத்தனை ஜப்பான் சொற்கள் தோன்றின என்று ஆராய்ந்து அறியும் வகையிலே உதவியது. ஆகவே, இந்த அரிய முயற்சியும் பாராட்டுதலுக்குரியது. பாவாணர் அவர்களுடைய பெயரை நூலகங்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வைத்து, பாவாணருடைய எண்ணங்களை வெளிப்படுத்தி அவர் கண்ட கருத்துப்படி தமிழ் திராவிடத்தின் தாய்—இந்தோ–ஐரோப்பா ஆரியத்தின் மூலம் என்பதும்—ஞால முதல் மொழி தமிழ், இதனை உலகமெல்லாம் பரப்பும் காலம் வரப்போகிறது என்ற மகிழ்ச்சியோடு, கல்விக் கொள்கையிலே இந்த அரசு சிறந்த பணியாற்றுகிறது என்றும், இது "கல்வி கொள்கையிலே இந்த அரசு சிறந்த பணியாற்றுகிறது என்றும், இந்தக் கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பேடு அதை விளக்குவதாக உள்ளது என்றும், இது "கல்வி சிறந்த தமிழ் நாடு, புகழ் எம்.ஜி.ஆர். ஆளும் தமிழ் நாடு" என்று கூறி, அமைகிறேன்.

THIRU A. R. DAMODARAN. Hon. Chairman, Sir, it gives me very great pleasure to participate in the discussion on the Policy Note on Education which has been placed on the table of the House.

Before I refer to some matters mentioned in the Policy Note, may I first express my plea regarding the functioning of the Consultative Council on Education. We wanted a Consultative Council on Education because we felt that many detailed issues which could not be referred to in the Legislative Council could be tackled in the Consultative Council. But, unfortunately, the Consultative Council met only twice and this was later superseded by all-party meetings on issues connected with education. I would like to make a plea to the Hon. Minister that, while we have no objection to all-Party meetings being convened on important issues pertaining to education, the importance of the Consultative Council should not be minimised. Considering the spate of grievances that have been mentioned by the teachers' representatives and by others connected with education, I would plead with the Hon. the Minister for Education to make the Consultative Council more business like, to meet once in three months on a scheduled date, so that many important issues could be tackled and discussed in that Council.

(முற்பகல் 10-00)

Sir, my hon. Friend Dr. Janarthanam mentioned that the Budget allocation for education was quite adequate, considering the resources position of Tamil Nadu. He has also mentioned, by reading from a quotation, that a doubt has crept in whether all that we are spending is reaching the poorer sections of the people. If he has offered this excuse as a justification for the reduction in the allocation for education, probably as a member of the ruling party, he is on right lines. But, we on this side feel that in spite of the increase in revenue in Tamil Nadu, the Budget allocation for education has been marked down to a certain extent. It may not be considerable but it is certainly marked down and today according to the Policy Note, it is only 21.3 per cent that is earmarked under Demand No. 17—Education. I will not refer to medical education, etc. In absolute terms, there has been a reduction in allocation for education in terms of percentage, though in quantum of money allocated, it may have gone up by about Rs. 30 or 40 crores. I would plead with the Government to ensure that the Budget allocation for education is not below 25 per cent because, I would like to remind,

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1982 மார்ச் 24.

பங்குனி 11, துன்மதி—திருவள்ளுவராண்டு-2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட இரு வினாக்களும் முதலில் எடுத்துக்கொள்ளப் படும்.

### Tirunelveli-Kanyakumari Railway Line

* 206 Q.—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government are aware that railway employees, students and members of the public of the four southern districts of Tamil Nadu, have been protesting and agitating against the proposal of the railway administration, to detach the Tirunelveli-Kanyakumari Railway Line from the Madurai Railway Division and attach the same to the Trivandrum Railway Division ;

(b) whether the Government are also aware that all the economic benefits, that are expected to accrue through the New Port of Tuticorin, may not be forthcoming to Tamil Nadu, if the Railway Section is taken away from the Madurai Railway Division ; and

(c) if so, the action proposed to be taken by the Government in the matter?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) (இ) & (உ) ஆம். திருநெல்வேலி கன்னியாகுமரி இரயில்வே பிரிவை மதுரை கோட்டத்திற்குள்ளேயே வைத்துக் கொள்ளும்படி மத்திய அரசை எவ்வளவோ வற்புறுத்தியும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த இருப்புப்பாதைப் பிரிவை திருவனந்தபுரம் இரயில்வே கோட்டத்தில் இணைப்பதன் மூலம் தமிழகத்தில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எவ்வளவுதான் அந்தப் பகுதியில் வருவாய் வந்தாலும் இரயில்வே போக்குவரத்து மூலம் வரும் அவ்வளவு வருவாயும் அந்த மாநிலத்திற்கு மாற்றப்படக்கூடிய சூழ்நிலை இருப்பதால், இந்தப் பிரச்சினை குறித்து தமிழக அரசு அனைத்துக் கட்சிகளையும் கூட்டி, மீண்டும் மத்திய அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்து, திருநெல்வேலி—கன்னியாகுமரி இருப்புப்பாதையை, மீண்டும் மதுரை கோட்டத்தில் சேர்க்கும் கருத்தை வலியுறுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கெனவே இத்தகைய நிலைமைகளையெல்லாம் அறிந்துதான், இதில் ஒரு முடிவெடுப்பதற்கு முன்னாலேயே கடுமையாக வாதாடி எப்படியாவது இரயில்வே அமைச்சகம் இதைச் செய்யவேண்டும் என்று அவர்களைக் கட்டாயப்படுத்துகிற வகையில் முயற்சிகளை மேற்கொண்டோம். இதற்காக நான் ஒருமுறை நேரில் போய் பேசிவிட்டு வந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அனைத்துக் கட்சிகளின் சார்பில் பேசியிருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சொல்லிப் பேசியிருக்கிறார்கள். இவ்வளவுக்குப் பிறகுதான் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பதால், இது குறித்து மேலும் பேசுவதில் பயன் ஏதும் உண்டாகும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் தமிழக அரசும் சேர்ந்து உரிய நடவடிக்கைகளை எடுத்தும்கூட, மத்திய அரசு இந்த விஷயத்தில் தமது கருத்தை ஏற்காமல், தமிழகத்திற்குத் தீமை விளைவிக்கும் முறையில் முடிவெடுத்து அமுல்படுத்தியிருப்பதால், தமிழக அரசே முன்னின்று ஒரு கிளர்ச்சித் திட்டத்தை உருவாக்கி, மத்திய அரசுக்கு நமது எண்ணத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்து மீண்டும் தமிழகத்திற்கு இந்த உரிமையைப் பெற்றுத் தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஒரு அரசே கிளர்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளக் கூடாது என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஆதரிப்பார் என்று நம்புகிறேன். அப்படி அரசே கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று செய்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைச் செய்யக் கூடாது என்று சொல்லுவார் என்றுதான் நான் கருதுகிறேன். முறையாக தமிழக அரசு மத்திய அரசுக்கு தமது கருத்தை எடுத்துச் சொல்லி, தமது அக்கறையை அவர்களுக்குப் புலப்படுத்தியிருக்கிறோம். அதற்குப் பிறகும் இத்தகைய முடிவை அவர்கள் எடுத்திருக்கிற காரணத்தால், கிளர்ச்சிதான் வளர்ச்சிக்கு உதவும் என்று இந்த அரசு கருதவில்லை.



டாக்டர் இரா. சனார்த்தனம் : ஊட்டி இரயில் போக்குவரத்துப் பிரிவு அடங்கியுள்ள ஓலவக்கோடு டிவிஷனிலும் இத்தகைய பிரச்சினை இருக்கிறது என்பதை அரசு அறியுமா ? இதன் காரணமாக அங்கே இருக்கிற தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அது சம்பந்தமான விவரங்கள் என்னிடம் இல்லை. எனினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், அதுவும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : கிளர்ச்சி ஏதும் தேவையில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்குப் பதிலாகத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுச்சிநாள் கொண்டாடினார்கள். அதே அடிப்படையில் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தமிழக அரசு ஒரு எழுச்சிநாள் கொண்டாட முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அவர் சார்ந்திருக்கிற கட்சியும் முழுமையாக ஒத்துழைப்பைக் கொடுக்குமானால், எழுச்சிநாளைக் கொண்டாடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் இங்கே இருப்பவைகளை வேறு இடங்களுக்கு மாற்றுகிறோம் என்று சில நேரங்களில் சொல்லப்படுகிறது. கேரளப் பகுதியில் இருப்பவைகளை இங்கே தமிழகத்திற்கு மாற்றுவதன் காரணமாக அத்தகைய ஒருமைப்பாடு வராதா ? சின்னஞ்சிறு கேரளப் பகுதி இரயில்வே போக்குவரத்தை எப்போதும் தன்னுடைய ஆளுகைக்குள்ளேயே வைத்துக்கொண்டிருப்பது என்பது நீண்ட காலமாக இருக்கிற ஒன்றாகும். எனவே இந்த முறையை மாற்றி அந்தப் பகுதிகளை மீண்டும் தமிழகத்தோடு சேர்க்க வேண்டும் என்று தமிழக அரசு தன்னுடைய எண்ணத்தை மத்திய அரசுக்கு வெளிப்படுத்தி இதில் வெற்றி தேடித்தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இக்கேள்வி மத்திய அரசிடம் கேட்கப் பட வேண்டும். அந்த வகையில்தான் பலமுறை தமிழக அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தியது என்பதை ஆணித்தரமாக முன்பே குறிப்பிட்டேன். அதை மீண்டும் செய்வதால் அவ்வளவு பயன் இருக்காது என்றுதான் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன்.

## Share in Profit to Workers

*207 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Cheran Transport Corporation workers will be given a share in the Rs. 75 lakhs profit, earned by the Transport Corporation from body-building for Government Vehicles ; and

(*b*) if so, whether the workers in the other Transport Corporations in Tamil Nadu will also be given a share in the profit earned by such Transport Corporations ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : சில மாதங்களுக்கு முன் பத்திரிகையில் பார்த்த செய்தியின் அடிப்படையில் நான் இந்த வினாவை எழுப்பினேன். அதாவது, போக்குவரத்துத் துறையில் உள்ள தொழிலாளர்கள் சிறந்த முறையில் பணியாற்றுகிறார்கள் என்றும், "பாடி பில்டிங் யூனிட்" மூலம் மிக அதிகமான வருவாயை அவர்கள் ஈட்டுகிறார்கள் என்ற காரணத்தால், லாபத்தை அவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கும் முறை மேற்கொள்ளப்படும் என்றும் பத்திரிகையில் பார்த்தேன். எனவே இத்தகைய கருத்து அரசின் ஆய்வில் இப்போது இல்லை என்றாலும், போக்குவரத்துத் துறைப் பணியாளர்கள் சிறந்த முறையில் பணியாற்றி அதிகமான வருவாயை ஈட்டுகிற காரணத்தால், வருகிற லாபத்தில் ஒரு பகுதியை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் திட்டத்தை இனியாவது அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : வருகிற லாபத்தில் பங்கு கொடுக்கும் திட்டம் நம்மிடம் எங்கேயும் இல்லை. ஆனால் அவர்களின் பணிக்கு ஏற்ப, அவர்கள் செய்யும் கடுமையான உழைப்புக்கு ஏற்ற வகையில் தான் ஊதியமும் போனசும் கொடுக்கப்படுகின்றன. எனவே வருகிற லாபத்தில் பங்கு



கொடுக்கும் திட்டம் இல்லை. இதை உருவாக்கவும் முடியாது. காரணம் தொழிலாளர்கள் இதில் பங்குதாரர்கள் அல்ல. அவர்கள் தொழிலாளர்கள் தான்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சேரன் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள தொழிலாளர்கள் வேகக் கட்டுப்பாடு கருவிகளையும் தயாரிக்கிறார்கள். இது போன்ற சிறந்த பணியாற்றும் பணியாளர்களுக்கு வேறு விதத்தில் ஊக்கம் தருகிற முயற்சி ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ? அவர்கள் கலைக் குழுக்களையெல்லாம்கூட வைத்து நடத்துகிறார்கள். அவைகளை வளர்த்துக்கொள்வதற்கு ஏதேனும் புதிய திட்டங்கள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நம்முடைய முக்கியமான பணி, பேருந்துகளை இயக்குவது, அவைகளை நல்ல முறையில் வைத்துக் கொள்வது. அதில் நாம் வெற்றி பெற வேண்டும் என்பதில்தான் நாம் அக்கறை காட்ட வேண்டும். மற்றவைகள் எல்லாம் செகண்டரியாக வைத்துக் கொள்ளப்பட்டிருப்பவை. எனவே அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதில் முழு கவனம் செலுத்தினால், நம்முடைய முக்கியமான பணியில் திறமை குறைந்துவிடும் என்ற காரணத்தால், தற்போது இருக்கிற முறையே நீடிக்கப்படும்.

## நகராவைப் பள்ளிகளுக்கு ஆசிரியர் பதவிகள்.

* 201 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980—81-ல் நகராவை மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர் நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்ட ஆசிரியர் பதவிகள் எத்தனை?

(இ) இவைகளில் நிரப்பப்படாமல் திருப்பித் தரப்பட்ட பதவிகள் ஏதேனும் உண்டா ?

(உ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 96.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 1980-81 ஆம் ஆண்டுக்காக அனுமதிக்கப்பட்ட இந்த 96 பதவி இடங்களில் மேல் நிலைப்பள்ளிகளுக்கு எத்தனை பணியிடங்கள் ஒதுக்கப்பட்டன ? உயர்நிலைப் பள்ளிகளுக்கு என்று எத்தனை பணியிடங்கள் ஒதுக்கப்பட்டன ? ஒதுக்கப்பட்ட இந்தப் பணியிடங்கள் அனைத்தும் 1980-81 ஆம் ஆண்டிலேயே நிரப்பப்பட்டனவா அல்லது அந்த ஆண்டு அவைகள் நிரப்பப்படாமல் அடுத்த ஆண்டில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று துறையின் அனுமதி கோரிப் பெறப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்கள், மற்றும் மேல் நிலைப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்கள் குறித்து தனித்தனியான விவரம் என்னிடம் இல்லை. மொத்தமாக 96 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டன. அதில் 1980-81 ஆம் ஆண்டில் 88 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் பாக்கியிருக்கும் 8 பணியிடங்களும் நிரப்பப்பட்டன. ஆக, 96 இடங்களும் நிரப்பப்பட்டு விட்டன.

திரு. செ. முத்துசாமி : 1980-81 ஆம் ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட இந்தப் பணியிடங்கள் அந்த ஆண்டிலேயே நிரப்பப்படாததன் காரணமாக, மாணவர்களின் கல்வித் தரம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இந்த ஆண்டு முதற்கொண்டாவது அனுமதிக்கப்படுகிற ஆசிரியர் பணியிடங்கள் அனைத்திலும் அனுமதி உத்தரவு கிடைத்த உடனே நியமனம் செய்யப்படும் முயற்சிகளை உள்ளாட்சி நிறுவனங்களும், நகராட்சிமன்றங்களும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இத்தகைய பணியிடங்களை நிரப்புவதற்காக நாம் வேலைவாய்ப்பகங்களைக் கேட்கும்போது, உரிய நேரத்தில் அவர்களிடமிருந்து நமக்குப் பட்டியல்கள் வந்து சேருவதில்லை என்பது ஒரு காரணம். அடுத்து, இத்தகைய பதவிகளுக்கான ஆசிரியர்கள் உடனடியாகக் கிடைப்பதில்லை என்பது இன்னொரு காரணம். ஆக இந்த இரு காரணங்களினால்தான், நான் குறிப்பிட்ட 8 ஆசிரியர் பணியிடங்கள் அந்த ஆண்டில் நிரப்பப்படாமல், காலந்தாழ்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.



*Pensionary benefits to retired Panchayat Union employees.*

202 Q.—Thiru A. R. Damodaran (on behalf of Thiru G. Swaminathan) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that granting of pensionary benefits to retired employees of Panchayat Unions, who were erstwhile servants of defunct District Boards, such as Health Assistants, is under the consideration of the Government ; and

(*b*) if so, whether any decision has been taken on the same ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இது பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக ஆசிரியர்களிலே கூட மாவட்டக் கழகங்களிலிருந்து வந்தவர்களுக்கு, ஓய்வூதியம் இல்லாதவர்களுக்கு, குறைந்தபட்ச ஓய்வூதியம் தரப்பட்டிருக்கிறது. அது இப்போது 125 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே இதிலே பணியாற்றிய மருத்துவ உதவியாளர்களுக்குக் குறைந்தபட்ச ஓய்வூதியம் என்ற வகையிலே உடனடியாக ஏதேனும் ஒரு அரசு முடிவு எடுத்து அதை அமுல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அட்-ஹாக் பென்ஷன் கொடுப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதுவும் 1—4—1977-க்கு முன்னால் ஊராட்சி மன்றம், பேரூராட்சி ஆகியவற்றில் பணியாற்றிய மருத்துவ ஊழியர்களுக்காகத்தான் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இதிலே எறத்தாழ 225 பேர்கள் இருக்கிறார்கள் என்றாலும், இதற்காக ஓராண்டிற்கு சுமார் மூன்றரை இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அரசு உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

## Ad hoc pensioners.

* 203 Q.—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether ad hoc pensioners, who were in service in Municipalities and who retired from service prior to 14th January 1970, have been granted a minimum pension of Rs. 100 with effect from 16th April 1980 ;

(b) whether any representation has been received from such pensioners that they should be granted this minimum pension with effect from 1st April 1978, as in the case of all Government Pensioners and regular Municipal Pensioners, who retired after 14th January 1970 ; and

(c) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க விதிகளில் இடமில்லை. எனி னும் 'அட்ஹாக்' ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கிறது. இது முதலில் ரூ. 25 ஆக இருந்தது. பின்னர் ரூ. 35 ஆகவும், அதன் பிறகு ரூ. 50 ஆகவும் உயர்த்தப்பட்டு, 16—4—1980 முதல் ரூ. 100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உயர்வை முன் தேதியிலிருந்து கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கை ஏற்கத்தக்கதல்ல.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the fact that in the case of Government pensioners, Municipal pensioners, etc., the minimum pension has now been increased and since the number of these employees who had retired prior to 1st April 1970 is rapidly dwindling because most of them are dying, may I, out of compassion, request the Hon. Minister to consider this sympathetically because many of them are undergoing great hardship ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது போன்ற நிலை மற்ற துறைகளிலும் ஏற்பட்டுவிடக் கூடுமோ என்ற ஐயப்பாடு அரசுக்கு இருக்கிறது. 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்" கொடுக்க வேண்டுமென்று சொன்னால், எல்லோருக்கும் எல்லாக் காலங்களிலும் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், கண்டிப்பாக முடியாது. There must be a deadline for it. அதற்காக ஒரு தேதி குறிப்பிட்டு, அந்தத் தேதி யிலிருந்து கொடுத்தாக வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். அதற்கா



1—4—1970-க்குப் பிறகு இருப்பவர்களுக்குக் கொடுக்கக் கூடிய நிலை இருக் கிறது. அதற்கு முன்னால் இருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பது இயலாத காரியம்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. Minister has used a very appropriate phrase. They have reached a deadline. That is what I am also saying. They are very nearly approaching the line of death. That is why I wanted him to show some consideration.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் தவறுதலாக 1970 என்று குறிப்பிட்டு விட்டேன். 1—4—1978-க்கு முன்னால் 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுப்பது முடியாது என்று எனக்குக் குறிப்புகள் கொடுத்திருக் கிறார்கள். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் மீண்டும் மீண்டும் வலியுறுத்து வதால், மீண்டும் பரிசீலனை செய்யலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தம் : இந்த ஊழியர்களுக்குக் குறைந்தபட்ச ஓய்வூதியமாக 100 ரூபாய் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். இப்போது அரசு ஊழியர்களுக்கும் மற்ற ஓய்வு பெற்றவர்களுக் கும் 125 ரூபாயாக ஓய்வூதியத்தை உயர்த்தியிருப்பதாக மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் படித்தார்கள். ஆகவே இவர் களுக்கும் உயர்த்தப்பட்ட 125 ரூபாயைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தற்போது அதுபோன்ற தகவல் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல 125 ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்குமென்று சொன்னால், கண்டிப் பாகப் பரிசீலனை செய்யப்படும்.

## திருச்சிராப்பள்ளி நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்துதல்.

* 204 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் மாநகராட்சியாக செயல் படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) இது பற்றி அரசு இன்னும் ஒரு முடிவு எடுக்கவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : திருச்சிராப்பள்ளி நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்துகிறபோது, இப்போது இருக்கின்ற நகரப் பகுதியை மட்டும் இதிலே சேர்ப்பதாக அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா அல்லது வேறு சில ஒன்றியப் பகுதிகளையும் இதிலே சேர்க்க உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பக்கத்திலே இருக்கக் கூடிய ஸ்ரீரங்கம் நகராட்சியையும் இதிலே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற பொன்மலை நகராட்சியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், இன்னும் சில ஊராட்சிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவை அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி : நகராட்சிகளை மாநகராட்சிகளாக ஆக்குவதன் மூலம் என்ன கூடுதலான பயன் மக்களுக்குக் கிடைக்கிறது ? வரிதான் கூடுதலாகிறது என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ? என்ன கூடுதலான பணி மக்களுக்குச் செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூடுதலான நன்மை என்று சொல்லும்போது, சேர்மெனாக இருக்கிறவர் மேயராக ஆகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு வெளிப்படையாக, பச்சையாகச் சொல்லிவிட்டீர்களே ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இரண்டாவது. அடிப்படைத் தேவைகள் அதிகமாக்கப்படுகின்றன. எப்போதுமே கார்ப்பரேஷன் என்று வருகிறபோது, சாலை வசதிகள், மின் விளக்கு வசதிகள், பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. ஸ்டார் ஓட்டல்களை நடத்துவதைப் போலத்தான் இன்று மாநகராட்சிகள் முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற அடிப்படையிலும், வருமானத்தின் அடிப்படையிலும் அதே நோத்தில் மக்கள்தொகை கணக்கின் அடிப்படையிலும் வருமானத்தின் அடிப்படையிலும் இவைகள் செய்யப்படுகின்றன.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : திருச்சிராப்பள்ளியில் உள்ள நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்த அரசு உத்தேசித்து அதற்குரிய திட்டங்களை வகுத்து பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும், அனுமதிக்கு அனுப்பப் பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. மாநகராட்சியாக ஆக்குவதற்குரிய முன்னோடிப் பணிகள் என்று அரசு ஆற்றியிருக்கின்ற பணிகள் என்னென்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : முன்னோடிப் பணிகள் என்று எதுவும் நடத்தவில்லை. பாரதிதாசன் பல்கலைக் கழகம் அங்கே கொண்டு வரப்பட இருக்கிறது. அதற்காக ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டு தெரு மின் விளக்குகள் நல்ல முறையில் ஏற்படுத்தி, சாலைகளைப் பராமரித்து, வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எப்போதுமே நகராட்சியை மாநகராட்சி அந்தஸ்துக்கு உயர்த்தும்போது, முன்கூட்டியே செய்ய வேண்டியதில்லை. மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டதற்குப் பிறகுதான், அதற்கு வேண்டிய வசதிகளை அரசாலே செய்ய முடியும்.

திரு. சி. இராமலிங்கம் : வட ஆற்காடு மாவட்டத்திலே, ஆற்காடு நகராட்சி, ராணிப்பேட்டை நகராட்சி, வாலாஜாபேட்டை நகராட்சி என்று மூன்று நகராட்சிகள் இருக்கின்றன. வாலாஜாபேட்டை நகராட்சி தோன்றி நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. ஆகவே இந்த மூன்று நகராட்சிகளையும் ஒன்றாக இணைத்து வாலாஜாபேட்டை மாநகராட்சி என்று ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படிப்பட்ட எண்ணம் இப் போதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், வாலாஜா பேட்டை பழம்பெரும் நகராட்சியாக இருந்தாலும், அதனுடைய நிதி நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இருப்பதால், மாநகராட்சி அந்தஸ்து கொடுப்பது என்றால், அது தற்போது இயலாத காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 மார்ச் 24

டாக்டர் இரா. சனார்த்தனம் : அதைப் போலவே சேலம், நெல்லை ஆகிய இடங்கள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் மாநகராட்சியாக ஆக்க வில்லையென்றாலும், கிரேட் ஒன்று, கிரேட் இரண்டு என்ற அளவிலே ஆக்கி பல * * * உருவாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மேயர்கள் எல்லாம் * * * ஆகக் கூடாது என்றுதான் விரும்புகிறோம். மேயர் என்ற அந்தஸ்து பெரிய அந்தஸ்து. வணக்கத்திற்குரிய மேயர் (வொர்ஷிப்புல்) என்றுதான் கூப்பிடு கிறோம். * * * என்று தனியாக ஆக்குவது அவருடைய அந்தஸ்தைக் குறைப்பதாக ஏற்பட்டுவிடும். அப்படிப்பட்ட நிலை பின்னாலே ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான் எங்களுடைய எண்ணம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்த வார்த்தையைக் கூட நீக்கிவிட லாம். * * * என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படு கிறது.

திரு. க. இராமமூர்த்தி : திருச்சி நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப் படும் என்பது பல ஆண்டுக் காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. அப்படி உயர்த்துவதிலே என்ன தடை இருக்கிறது ? எதனாலே காலதாமதம் ஆகி றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தடை ஒன்றுமில்லை. மாநக ராட்சியாக உயர்த்த வேண்டுமென்று சொன்னால், எந்தெந்தப் பகுதிகளை எடுத்துக்கொள்வது என்பது போன்ற பல பிரச்சினைகளைப் பரிசீலனை செய்துதான் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். அதன் காரணமாகத்தான் காலதாமதமே தவிர, வேறு தடை ஒன்றுமில்லை.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1982 மார்ச் 24]

*Government Hospitals having Blood Bank facilities.*

* 205 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the names of the Government Hospitals in South Arcot district, which have Blood Bank facilities ; and

(*b*) the number of them, which are in working condition ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : கீழ்க்கண்ட அரசு மருத்துவ மனைகளில் இரத்த சேமிப்பு வங்கி வசதிகள் உள்ளன :—

(1) அரசினர் தலைமை மருத்துவமனை, கடலூர்.

(2) அரசினர் காமராஜர் மருத்துவமனை, சிதம்பரம்.

(3) அரசினர் மருத்துவமனை, விழுப்புரம்.

(4) அரசினர் மருத்துவமனை, உளுந்தூர்ப்பேட்டை.

(5) அரசினர் மருத்துவமனை, திண்டிவனம்.

(6) அரசினர் மருத்துவமனை, விருத்தாசலம்.

இரத்த சேமிப்பு நிலையம்

(1) அரசினர் தலைமை மருத்துவமனை, கடலூர்.

(2) அரசினர் காமராஜர் மருத்துவமனை, சிதம்பரம்.

(3) அரசினர் மருத்துவமனை, விழுப்புரம்.

(4) அரசினர் மருத்துவமனை, உளுந்தூர்ப்பேட்டை.

ஆகியவை நடைமுறையில் உள்ளன.

(5) திண்டிவனம் அரசினர் மருத்துவமனையில் உள்ள இரத்த சேமிப்பு நிலையம் நல்ல தண்ணீர் தேவைக்காக இயங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(6) விருத்தாசலம் அரசினர் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. குளிர்சாதனப்பெட்டி செப்பனிட வேண்டியிருப்பதால், இயங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட் டுள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த திண்டிவனம் மருத் துவ மனையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கை களுக்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே இப்போது

சமுதாயத்தில் மோஸ்ட் பேக்வேர்ட் என்று பிரிப்பது போல, மாநிலத்திலே மோஸ்ட் பேக்வேர்ட் பகுதிகளிலே உள்ள தாலுக்கா தலைமை மருத்துவ மனைகளைப் பிரித்து உதவி செய்யலாம். செஞ்சி, கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர் போன்ற பகுதிகளில் வியாதி அதிகமாக இருக்கின்றது. அதைப்பற்றித் தனியாக கவனம் செலுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிளட் பாங்கைப் பொறுத்தவரையிலே, இப்போது அரசாங்கத்தினுடைய நிலைமை, ஏற்கெனவே நாம் நியமித்திருக்கக் கூடிய பிளட் பாங்குகள் ஒழுங்காக வேலை செய்வதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும். நான் கூறியுள்ள பதிலேகூட இரண்டு இடங்களிலே வேலை செய்யவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன். Since the water facilities available at the Government Hospital, Tindivanam are not suitable for the functioning of blood-bank, the King Institute authorities have requested to arrange other sources of water-supply. Action has been taken to provide bore-well at the Government Hospital, Tindivanam. The Commissioner of Tindivanam Municipality has been requested to permit, from the Municipal protected water-supply, connection to get the fresh water for the functioning of the blood-bank. அந்த வகையிலே நாம் அங்கே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, கொள்கை விளக்கத்திலே நான் பேசுகின்ற போது, சொல்லியபடி, அதை இன்னும் விரைவாகச் செய்ய இருக்கிறார்கள். அதற்கான முடிவுகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். விருத்தாசலத்தைப் பொறுத்தவரையில், அங்கே இயங்கிக்கொண்டிருக்கிறது என்றுதான் கருதிக் கொண்டிருந்தேன். நான் பார்த்த நேரத்திலே ஏதாவது கோளாறு இருந்து கொண்டிருக்கிறது. ரெபிரிஜிரேட்டர் வேலை செய்யவில்லை. Let us consolidate the gains. நமக்குக் கிடைத்திருப்பதை நாம் செய்வோம். இந்த இலாகாவைப் பொறுத்த வரையில், ஒருங்கிணைந்த இலாகாவாகக் கூட மாற்றி அமைத்திருக்கிறோம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னது போல, எல்லாத் தாலுக்கா மருத்துவ மனைகளிலும் கொண்டு வரலாம் என்று அந்தக் குறிக்கோளைக் கொண்டு வந்துவிட்டு, அதைப் பேப்பரிலே போட்டுவிட்டு, அதன்பிறகு அது வேலை செய்யாமல் இருந்தால், சரியாக இருக்காது. கொஞ்சம் எச்சரிக்கையாகவே படிப்படியாகச் செய்யலாம்.



**திரு. க. இராமமூர்த்தி :** ஆப்பரேஷன் தியேட்டர்கள் எந்தெந்த மருத்துவ மனைகளில் இயங்குகின்றனவோ அந்த மருத்துவ மனைகளிலேயாவது இந்த ரத்த சேமிப்பு வங்கிகள் முறையாகச் செயல்படுகின்றனவா என்பதைக் கவனிக்க அரசு முன்வருமா? அது செயல்படவில்லை என்றால், அதை உடனடியாகச் செயல்பட வைக்காமல் இருக்கின்ற மருத்துவ மனை உயர் அதிகாரிகள் எந்தெந்த மாவட்டத்தில் யார் யார் இருக்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்த பிளட் பாங்குகளைப் பொறுத்தவரையில், அதிக கவனம் செலுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதே நேரத்தில் ஒவ்வொரு தாலுக்கா மனையிலும்கூட, பெரும்பான்மையான மருத்துவ மனைகளிலே ஆப்பரேஷன் தியேட்டர்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. சில இடங்களில் பிளட் டிரான்ஸ்பியூஷன் நடைபெறுகிறது. இது எப்படி நடக்கிறது என்றால் ப்ளட் பாங்குகளிலேயே ரத்தம் வைக்காமல், யார் யார் டோனர்ஸ் என்று லிஸ்ட் வைத்துக் கொள்கிறார்கள். அந்த ரத்தத்தை ஸ்டோர் செய்யக் கஷ்டமாக இருந்தாலும் அல்லது பிளட் பாங்கு இயங்குகின்ற இடங்கள் தகுதியுள்ள இடங்களாக இருந்தாலும்கூட, யார் யார் டோனார்ஸ் என்று லிஸ்ட் வைத்திருக்கிறார்கள். அவர்கள் குரூப் ஏ, பி, ஓ என்ன என்று குறித்து வைத்திருக்கிறார்கள். எங்கே எந்த குரூப் இருக்கிறது என்று வைத்திருக்கிறார்கள். யூனிவர்சல் டோனார்ஸ் என்பது குறித்துக் கூட லிஸ்ட் வைத்திருக்கிறார்கள் நாம் அவர்களை உடனடியாக அழைத்து வந்து பிளட் எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : Sir, the main difficulty is that in the blood banks they are not able to store blood because of the absence of refrigeration facilities. May I request the Hon. Minister to provide kerosene-refrigerators or diesel-refrigerators to these hospitals because the power-driven refrigerators will not be able to work during the summer season and storage of blood is not possible in these institutions?

THE HON. DR. H. V. HANDE : Sir, we will definitely examine the suggestion in all seriousness.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ரத்த சேமிப்பைப் பொறுத்த மட்டில், வாலண்டரியாக ரத்தம் பெறுவதற்கு, மாணவர்கள், வாலண்டரி ஆர்கனைசேஷன் எல்லாவற்றையும் ஊக்குவிப்பதற்கு என்று தமிழக அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது? பிரிட்டிஷ் கவுன்சிலிலிருந்து ரத்த சேமிப்பு பற்றி ஏதோ கருத்து சொன்னதாகச் சொல்கிறார்கள். அது என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நாம் ரத்த சேமிப்பு பாங்கைப் பொறுத்தவரையிலே, நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். திட்டவட்டமான சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இதுவரையில் ரத்த சேமிப்பு என்று தனி அதிகாரியை நியமிக்காமல், அந்தந்த இடத்திலே நேரடியாக ரத்த சேமிப்பு டிபார்ட்மெண்ட் என்று ஜெனரல் ஆஸ்பத்திரியிலே, ஸ்டான்லி ஆஸ்பத்திரியிலே இருக்கிறது. Assistant Director for Blood Transfusion ஆக டாக்டர் செல்வி எம். ஆர். ராஜாமணி, கிங் இன்ஸ்டிட்யூட்-ல் இருக்கக்கூடியவரை, இந்தத் துறையிலே அனுபவம் உள்ளவரை அசிஸ்டெண்ட் பிளட் டிரான்ஸ்பியூஷன் அதிகாரியாக நியமித்திருக்கிறோம். தமிழகத்திலே இருக்கக்கூடிய அந்தத் துறையில் ஒருங்கிணைந்து வேலை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, பிரிட்டிஷ் கவுன்சிலிலிருந்து வந்திருக்கக்கூடிய உயர்மட்ட அதிகாரி Mr. W. G. Lockheed, Top grade Scientific Officer from the National Blood Transmission Service, South-Western Regional Transmission Centre, Bristol, U. K. அவர்கள் வந்தார்கள். அவர்களுடைய கருத்து என்னவென்றால், அங்கேயெல்லாம் 100 சதவிகிதம் வாலண்டரியாக பிளட் பாங்கிற்கு பிளட் கிடைக்கிறது. நம் நாட்டிலே பெய்ட் டோனார்ஷிப்தான் இருக்கிறது. 1974-ல் 14.3 சதமாக வாலண்டரி டோனார்ஸ் இருந்தது. பெய்ட் டோனார்ஸ் 85.7 சதவிகிதம். வாலண்டரி டோனர்ஸ் 1976-ல் 30.99 பெர்சன்ட், பெய்ட் டோனார்ஸ் 69.01 சதவிகிதம். இப்படிப் படிப்படியாகக் குறைந்து வருகிறது. 1981 ஆம் ஆண்டிலே 'பெயிட் டோனார்ஸ்' எண்ணிக்கை 13,200 ஆக உயர்த்தப்பட்டது. 40.71 சதவிகிதம் பெயிட் டோனர்ஸ் என்று 69,29 லிருந்து குறைந்திருக்கிறது. இந்த வாலண்டரி டோனேஷன் என்பது வளர்ந்த நாடுகளிலே அதிகமாக உண்டு. அதுபோல வாலண்டரி டோனேஷன் தமிழகத்திலேகூட வெகுவேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



## ஆய்வாளர் மாளிகைகள்.

* 208 வினா—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்தில் நகரங்கள் தவிர மற்ற இடங்களில், பொதுப்பணித் துறை நிர்வாகத்தின்கீழ் இருக்கும் 'ஆய்வாளர்கள் மாளிகைகள்' மாவட்ட வாரியாக எத்தனை ?

(இ) அவற்றில் பயன்படுத்த முடியாத நிலையில் பழுதுபட்டு இருப்பவை மாவட்ட வாரியாக எத்தனை ?

(உ) அவைகளைப் பழுதுபார்த்து பயணிகள் தங்கும் நிலைமையினை உருவாக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(எ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** ஒரு விவர அறிக்கை @ மேலவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை ஆய்வாளர் மாளிகைகள் திருச்சி மாவட்டத்தில் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், தென் ஆற்காடு மாவட்டத்தில் வானமாதேவியிலுள்ள ஆய்வாளர் மாளிகை தங்குவதற்குத் தகுதியற்றதாகிவிட்டது. எனவே, அந்த ஆய்வாளர் மாளிகை 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இடிக்கப்பட்டுவிட்டது என்றும் தரப்பட்டிருக்கிறது. அந்த இடத்திலே உள்ள மாளிகை தகுதியற்றது என்பதால், இடிக்கப்பட்டதா அல்லது யாருமே அங்கு தங்க வராததால் இடிக்கப்பட்டு விட்டதா ? மீண்டும் அதைக் கட்டுகின்ற உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே ஆய்வாளர் மாளிகை என்று குறிப்பிட்டிருப்பது சர்கியூட் ஹவுசாக இருக்கிறது. இடிக்கப்பட்ட அந்த ஆய்வாளர் மாளிகை பல வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. பராமரிப்பு இல்லாமல் இருந்தது. அங்கு தங்குவதற்கு ஆள் வராமல் இருந்ததால்தான், இடிக்கப்பட்டிருக்கிறது. தேவை என்றால், அதை ஆய்வு செய்யலாம்.

---

@ 895 896 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆய்வாளர் மாளிகைகள் பல இடங்களில் பாழடைந்தே காணப் படுகின்றன. அவற்றுக்கு நிதி ஒதுக்கம் குறைவு என்ற அளவில் அவைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லையா ? இவற்றிற்காக இந்த பட்ஜெட்டிலே ஒதுக் கப்பட்டிருக்கும் நிதி ஒதுக்கம் எவ்வளவு ? அது விரைவாகக் கிடைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறைக் கட்டிடங்கள் பராமரிப்புக்கு என்று சரியான அளவில் தொகைகள் ஒதுக்கப்படாமல் முன்பு இருந்திருக் கிறது. அந்தக் காலத்தில் அந்த நிலை இருந்தது. அந்த கட்டிடத்தின் விலை மதிப்பையொட்டி ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் தொகை காணாது இருந்தது. இப்போது பிளின்த் ஏரியா பேசிசில் ஒதுக்கப்பட்டு அதிகபட்ச பணம் ஒதுக்கப்பட்டு, பொதுப் பணித் துறைக் கட்டிடங்கள், ஆய்வாளர் மாளிகைகள், அரசுக் கட்டிடங்கள் ஆகியவற்றைப் பராமரிக்க வேண்டும் என்ற அளவில் 1979-80-ல் ரூ. 10.34 லட்சமும் 1980-81-ல் ரூ. 10.11 லட்சமும் பராமரிப் புக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, மாநிலத்தில் சில முக்கியமான நகரங்களில் மட்டும் பயணியர் மாளிகைகள் அமைக்கப்படு கின்றன. பல முக்கியமான நகரங்களில் பயணியர் மாளிகைகள் அமைக்கப் படவில்லை. ஆய்வு மாளிகைகள் இருப்பதை மாற்றி, புதிய திட்டத்தின் கீழ் எல்லா முக்கிய நகரங்களிலும் பயணியர் மாளிகைகள் அமைக்க அரசு பரிசிலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** சர்க்கியூட் ஹவுஸ், ஆய்வு மாளிகைகள் கட்டப்படுவதன் நோக்கம், சுற்றுப்புறத்தில் பொதுப் பணித் துறை சம்பந்தமாக வேலை நடந்தால், அங்கே வரும் அதிகாரிகள் தங்கு வதற்காகத்தான். நகரங்களில் சர்க்கியூட் ஹவுஸ் கட்டப்படுவதன் நோக்கம், முக்கியமான பிரமுகர்கள் வந்தால், அவர்கள் லாட்ஜுக்குப் போகாமல், அங்கே தங்குவதற்காகத்தான், குறைந்த வாடகையில் தங்கு வதற்குத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொது மக்கள், உல்லாசப் பயணிகள் தங்குவதற்கு சர்க்கியூட் ஹவுஸ், ஆய்வு மாளிகைகள் கட்டப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் சீதப்பால், தடிக்காரன்கோணம், மூளகுமேடு ஆகிய 3 இடங்களில் உள்ள ஆய்வாளர் மாளிகைகள் பழுது பார்க்கும் நிலைக்கு அப்பாற்பட்டிருக்கின்றன. இவை களில் யாரும் தங்குவதில்லை, எனவே இவைகளைப் பழுது பார்க்கும் செயற் குறிப்புகள் ஏதுமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. பழுது பார்த்திருந் தால், தங்க வருவார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. எனவே அந்த ஆய்வாளர் மாளிகைகளைப் பழுது பார்த்து, அவற்றைத் தங்குவதற்கு ஏற்றதாக மாற்றும் உத்தேசம் அரசுக்குண்டா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** அதிகாரிகள் அவற்றைப் பயன் படுத்துகிற சூழ்நிலை உருவானால், அதை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

**திரு. செ. முத்துசாமி :** பட்டியலைப் பார்க்கும்போது, சேலம் மாவட்டத் தில், நகரமல்லாத பகுதியில், 4 இருக்கின்றன. சேந்தமங்கலம் என்ற ஊரில் ஏற்கெனவே இருந்தது பழுதடைந்து முற்றிலும் இடிந்துவிட்டது. அதைக் கட்ட அரசு முன்வருமா ? ஊராட்சி ஒன்றியத் தலைநகரங்களில், மக்கள் முன்னேறிக் கொண்டிருக்கும் நிலையில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு பயணிகள் விடுதி கட்ட கொள்கை அடிப்படையில் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** ஒவ்வொரு ஊராட்சி ஒன்றி யத்திற்கும் தேவை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். ஏறக்குறைய ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பொதுப் பணித் துறை, ஹைவேஸ் அல்லது பில்டிங்ஸ் துறையின்கீழ் இருக்கிறது. இல்லாத இடங் களைக் குறிப்பிட்டு, தேவை என்று சொன்னால், அதிகாரிகள் வருகிறார்கள் தங்குகிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

(1) கடலூர் நகராட்சிக் கடைகளின் வாடகையை உயர்த்தத் தீர்மானித்திருப்பது குறித்து.

THIRU A. R. DAMODARAN: Sir, I wish to call the attention of the Minister for Local Administration to a matter of urgent public importance, namely; the proposal of the Cuddalore Municipal Authorities to raise the rent on all Municipal shops by 50 per cent with effect from 1st April 1982 and the consequent hardship caused to tenants of such buildings due to this exorbitant increase in rent and the need to decrease the levy of additional rent from 50 per cent to 10 per cent of existing rent.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, the Hon. Minister has mentioned that he has now reduced it to 30 per cent, for which we are deeply obliged. But, may I request the Hon. Minister, instead of raising it by 50 per cent and 30 per cent, whether he cannot increase it by 5 per cent every year after this 3 year period? Secondly, may I know whether the three year period cannot be extended to five years? In 1977-78 these shops were let out in auction. They were not given just like that. They were let out in auction after the emergency of 1976-77 and so, the increased rentals were paid. Instead of increasing the rental suddenly, if the Government could increase it by 5 per cent every year, the traders will be able to adjust themselves to the increased levy. May I request the Government to consider this?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 1977-78-ல் இந்தக் கடைகளெல்லாம் வாடகைக்கு விடப்பட்டன. விடப்பட்டதற்குப் பின்னாலே அதற்குரிய வாடகைகள் ஏற்றப்படவில்லை. எனவே 5 ஆண்டுகளுக்கு ஏற்றாமல், 3 ஆண்டுகளுக்குத்தான் ஏற்றியிருக்கிறோம். ஆகவே

@ 897-898 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது



தான் 1982 லிருந்து 1985 வரை, 3 ஆண்டுகளுக்கு 30 சதவிகிதம் என்று குறைத்து, ஏற்றப்பட்டிருக்கிறது. 3 ஆண்டுகளுக்குக் கணக்குப் பார்த்தால், வருடத்திற்குப் பத்து சதவிகிதம் தான் வரும். ஒரு வருடத்திற்கு 10 சதவிகிதம் என்ற முறையில்தான் வரும். 10 சதவிகிதம்கூட இல்லாமல், அந்த அளவிற்கு வாடகையை உயர்த்தாமல் விடுவதென்பது சரியாக இராது. எல்லா நகராட்சிகளிலும் வருமானம் குறைவாக இருக்கிறது. வருமானத்தை அதிகரிக்க வேண்டுமென்றால், this is the only source and there is no other source for the Municipality to raise their income. That is the position now அதனால்தான் இப்போது 30 சதவிகிதம் ஏற்றியிருக்கிறோம். மேலும் 5 ஆண்டுகள் என்று இருந்ததை 3 ஆண்டுகள் என்று குறைக்கக் காரணம், விலைவாசி நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டிருக்கிறது, 3 ஆண்டுகளுக்குப் பின்னால் மீண்டும் இதே நிலையை உருவாக்கி 30 சதவிகிதமோ அல்லது வருடம் ஒன்றுக்கு 10 சதவிகிதமோ உயர்த்தலாமென்ற யோசனையோடுதான் இது செய்யப்பட்டிருக்கிறது.

(2) சென்னை நகரில் நிமோனியா வியாதி பரவியிருப்பது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் கவனத்தை ஈர்க்கிறேன்.

"சென்னை நகரில் சிறு குழந்தைகளைப் பயங்கரமாகப் பாதிக்கக்கூடிய 'நிமோனியா' என்ற கடும் வியாதி பரவியிருப்பது குறித்து".

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் 'சென்னை நகரத்தில்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தரப்பட்டிருக்கிற அறிக்கையிலே பட்டினப்பாக்கம், இராயப்பேட்டை மருத்துவமனைகளில் அது குறித்து எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே 842 நோயாளிகள் 10—3—1982 முதல் 25—2—1982 முடிய சிகிச்சை பெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் 23 குழந்தைகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. செப்டம்பர் 1981 முடிய 25, 31, 24 குழந்தைகள் பயன் பெற்றதாகவும், பருவத்தின் சாதாரண

@ 899-112 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

நிகழ்ச்சி என்றும், இது பரவாயில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மருத்துவ மனை தவிர வேறு மருத்துவ மனைகளில் இப்படிப் பட்ட நோய்களுக்குச் சிகிச்சைபெற சேர்க்கப்பட்டவர்கள் எத்தனை பேர், அவர்களில் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், இறந்தவர்கள் இருக்கிறார்களா, அப்படி இருந்தால் அப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்காமல் இருக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றிய விவரங்கள் இதில் இல்லை. நம்முடைய செயலகத்தில், மருத்துவத் துறையில் பணியாற்றும் உதவியாளர், திரு. இரத்தினம் என்பவருடைய பெண் குழந்தை பேபி சுபாஷினி எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று, 8—2—1982-ல் 'டிஸ்சார்ஜ்' செய்யப்பெற்று, 9—2—1982-ல் இறந்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது. சாதாரண நோய் தான் என்றும், பயங்கரமானது அல்ல என்றும் அறிக்கை தரப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையைத் தயாரித்தவர்கள் மிகக் கவனத்தோடு தயாரிக்கவில்லையா ? இறந்த நிகழ்வுகள் இருக்கின்றனவே, இப்படி இறந்தவர்கள் வேறு எத்தனை பேர் ? இதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிப்பட்ட நோயாளிபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழந்தை 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்ட பிறகு, இறந்திருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். டிஸ்சார்ஜ் செய்த நேரத்தில் உள்ள குறிப்புகள் கொடுத்தால், எந்தக் கண்டிஷனில் டிஸ்சார்ஜ் செய்திருக்கிறார்கள் என்பதை ஆராய்ச்சி செய்யலாம். டிஸ்சார்ஜ் செய்யும்போது நன்றாக இருக்கும் குழந்தை, போனதற்குப் பிறகு வேறு ஏதாவது காம்ப்ளிகேஷன்ஸ் வந்து, இறந்திருக்கலாம். அந்தத் தனிப்பட்ட கேஸ் பொறுத்து முழு விவரம் கொடுத்தால், நான் உடனடியாக விவரங்களை உறுப்பினரவர்களுக்குத் தரத் தயாராக இருக்கிறேன். யாராவது தவறு செய்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் அது சவுகரியமாக இருக்கும்,

இன்னொரு கேள்வி, சென்னையிலே எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதென்று கேட்டார்கள், இந்தக் கேள்வி கேட்பார் என்று தெரிந்துதான், இக் குறிப்புகளை நேற்றையதினம் வாங்கி வைத்திருக்கிறேன். நிமோனியா





என்ற அந்த வியாதி இப்போது அவ்வளவாக இல்லை. 10 ஆண்டுகளுக்கு முன்பு அது பெரிய வியாதியாக இருந்தது. 'ஆன்ட்டி பயாடிக்' எல்லாம் இருப்பதால், இப்போது அது குறைந்திருக்கிறது.

Stanley Medical College Hospital :
In September 1981, respiratory infection : 91 ;
post-measles broncho-pneumonia : 30 ;
In October 1981, respiratory infection : 83 ;
post-measles broncho-pneumonia : 13 ;
In November 1981, respiratory infection : 52 ;
post-measles broncho-pneumonia : 7 ;

(முற்பகல் 10-10)

1981 டிசம்பரில் ரெஸ்பிரேட்டரி இன்பெக்ஷன் 46.

Broncho-Pneumonia 5.

ஜனவரி 1982-ல் ரெஸ்பிரேட்டரி இன்பெக்ஷன் 57.

Broncho-Pneumonia 14.

அதே மாதிரி இன்ஸ்டிட்யூட் ஆப் சைல்ட் ஹெல்த்தில்' நிறைய குழந்தைகள் சிகிச்சைக்காக வருகின்றன. சாதாரணமாக ஒரு ஆண்டுக்கு 4 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரம் பேர் வரை வந்துகொண்டிருக்கிறார்கள். 1981-ல் 3,961 பேர் வந்திருக்கிறார்கள். அதுபோல் கீழ்ப்பாக்கம் மருத்துவ மனைக்கு 1981-ல் மொத்தம் 584 பேர் நிமோனியா நோய்க்காக வந்திருக்கிறார்கள். மற்ற கேசஸ் 46. கஸ்தூரிபாய் காந்தி ஆஸ்பத்திக்கு மே 1981-ல் வந்த நிம்மோனியா கேசஸ் 36. Post-measles and Broncho-Pneumonia போன்ற நோய்களுக்காக வந்தவர்களுடைய மொத்த எண்ணிக்கை 466. அதுபோல் அரசுப் பொது மருத்துவமனைக்கு 1981-ல் வந்த கேசஸ் 47. 'நோ டெத் ரிப்போர்ட்' என்று தான் எல்லா இடங்களிலிருந்தும் தகவல் கொடுத்திருக்கிறார்கள். டிஸ்சார்ஜுக்குப் பிறகு ஒரே ஒரு இடத்தில்தான் இறந்திருப்பதாக இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் ஆராய்ந்து பார்த்து முழு விவரத்தையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் நோயாளிகள் இருக்கிறார்களே, என்ன காரணத்தால் இந்த நோய் வருகிறது ? இந்த நோய் வருவதற்கு முன்கூட்டியே அதைத் தடுக்கக்கூடிய வகையில், தடுப்பு ஊசி சிகிச்சை போன்ற வழிவகைகள் மருத்துவத்தில் இருக்கிறதா ?

[1982 மார்ச் 24

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நிம்மோனியா நோய் என்பது ஒரு ஆர்காளிசத்தால் வரக்கூடியது. இதை முன்கூட்டியே தடுக்க தடுப்பூசி இல்லை. சாதாரணமாக பிச்சில் ஜில் என்று அடிக்கக்கூடிய காற்று பட்டால் கூட வரும். முன்பே இந்த நோய் குறைவாகத் தான் இருந்தது. இப்போது இந்த நோய் வருவது மிகவும் குறைவாக ஆகிவிட்டது. ஆனால் வெளிநாடுகளில் எல்லாம் இது ஒரு டிரெட்புல் டிசீஸ். (dreadful disease) அமெரிக்காவில் எல்லாம் இந்த நோய் பெரிய அளவில் இருக்கிறது. ஒட்டுமொத்தமாகக் கொடுத்திருக்கக்கூடிய புள்ளிவிவரத்தை நான் இங்கே சொல்வேன். இவ்வளவு பெரிய சென்னை நகரிலேயே இவ்வளவு பேருக்குத்தான் இந்நோய் வந்திருக்கிறது.

### 3. 1981-82 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இப்போது இறுதி துணை நிதி நிலை அறிக்கை உறுப்பினர்களின் கையில் இருக்கிறது. இந்த இறுதி துணை நிதி நிலை அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதைப்பற்றி மட்டும்தான் பேசக்கூடிய உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்பது மரபு, அது தான் முறையும் கூட. ஆகவே இதில் சொல்லப்பட்டிருப்பவைபற்றி மட்டும் உறுப்பினர்கள் கருத்துக்களைக் கூறி, விவாதத்தில் பங்கு கொண்டு உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கிறேன். நிதி நிலை அறிக்கையில் உள்ளவற்றையெல்லாம்பற்றி இப்போது விவாதிக்க வேண்டாம். இதில் இருப்பதைப்பற்றி மட்டும் உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசி விரைவில் முடிக்க ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. லெட்சுமிகாந்தன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன். பொதுவாக எல்லோருக்கும் சொல்வேன், திரு. லெட்சுமிகாந்தன் அவர்களுக்கு மட்டுமல்ல (சிரிப்பு)

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். கல்வித் துறை மற்றும் சட்டமன்றத் துறை ஆகிய இரண்டு துறைகளைப் பற்றி மட்டும் முக்கியமான சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதில் கல்வித் துறை சம்பந்தமாக எதிர்பாராத செலவினங்கள் என்று சொல்லி, பல்வேறு தலைப்புகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது விவர அறிக்கையில் தெளிவாக இருக்கிறது. இதிலே முக்கியமான



1982 மார்ச் 24] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

ஒதுக்கீடு சென்ற ஆண்டு இளநிலை ஆசிரியர்களுக்கும் இடை நிலை ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய பயிற்சிக் காலத்திற்கு கூடுதல் ஊதிய உயர்வு—இன்கிரிமென்ட்—தருவதற்காக செலவு செய்யப்பட்ட 12.51 கோடி ரூபாய் சம்பந்தப்பட்ட தலைப்பு ஆகும். இந்த ஒரு சலுகையைப் பொறுத்தமட்டில், இது அநேகமாக வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத சலுகையாகும். இந்தச் சலுகையை ஆசிரியர்களுக்குக் கொடுத்ததன் மூலம் இந்த அரசு ஆசிரியர்களைப் பெருமைப்படுத்தியிருக்கிறது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 10 ஆண்டுகளாகக் கேட்கப்பட்ட சலுகை இப்போதுதான் இந்த அரசால் தரப்பட்டிருக்கிறது. அதற்காக வேண்டி, இந்த 12.51 கோடி ரூபாய் ஒதுக்கீடு இந்த இறுதி துணை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருப்பதற்கு, ஆசிரியர்கள் சார்பில் அரசைப் பாராட்டுகிறேன். இந்த இன்கிரிமென்ட் கொடுக்கப்பட்டது எதற்காக என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இடை நிலை ஆசிரியர்கள், இள நிலை ஆசிரியர்கள் பெற்றுள்ள பயிற்சிக் காலத்திற்கு என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இடை நிலை ஆசிரியர்கள், இள நிலை ஆசிரியர்கள் பெற்றுள்ள பயிற்சிக் காலத்திற்கு என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதேபோல் பயிற்சி பெற்ற இதர பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்கள் உயர் நிலைப் பள்ளிகளில், மேல் நிலைப் பள்ளிகளில் எல்லாம் பணியாற்றுகிறார்கள். இந்த ஆசிரியர்களுக்குரிய கல்வித் தகுதியை நம்முடைய அரசு வலியுறுத்தி தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. இன்றைக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கு பி. டி. பயிற்சி அவசியம். அதுபோல் தமிழ் ஆசிரியர்களுக்கு டிப்ளமோ பயிற்சி அவசியம். உடல் பயிற்சி ஆசிரியர்களுக்கு டிப்ளமோ அல்லது ஓராண்டு டிகிரி அவசியம். அதுபோல் கலை, கைத்தொழில் ஆசிரியர்கள் ஈராண்டு பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அப்படி அவர்களுக்குரிய பயிற்சியைப் பெறாவிட்டால், அவர்கள் ஆசிரியர் நியமனத்திற்குரிய தகுதியுடையவர்களல்ல. இடைநிலை, இளநிலை ஆசிரியர்களுக்கு அவர்களுக்குரிய பயிற்சியை முடித்ததற்காக அந்தக் காலத்திற்கு இன்கிரிமென்ட் வழங்கப்பட்டதுபோல், அதே பள்ளிகளில் பணியாற்றுகிற அதே பயிற்சியையொத்த பயிற்சியை முடித்திருக்கின்ற ஆசிரியர்களுக்கும் இன்கிரிமென்ட் வழங்க வேண்டும். அதற்குரிய வகையில் ஆணை வழங்கப்பட்டு, இன்கிரிமென்ட்டும் வழங்கப்பட்டிருந்தால், பிரச்சினையே வந்திருக்காது. எப்போதுமே ஆசிரியர்கள் புதிதாகக் கோரிக்கைகளை வைப்பதில்லை. அரசு அறிவிக்கிற அறிவிப்பில் ஏதாவது சில தரப்பினருக்கு சலுகைகள் விடுபட்டிருந்தால், அதை உடனே அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதுதான் அவர்களுடைய பழக்கமாக இருக்கிறது. அந்த வகையில் இப்போதும் கோரிக்கை

வைக்கப்பட்டிருக்கிறது. இளநிலை, இடைநிலை ஆசிரியர்களுக்கு அவர்களுடைய பயிற்சி காலத்திற்கு என்று ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டு, எப்படி அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதோ அதேபோல, உயர் நிலை, மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றக் கூடிய முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும், தமிழ் ஆசிரியர்களுக்கும், உடல் கல்வி இயக்குநர்களுக்கும், ஓவிய ஆசிரியர்களுக்கும், கலை மற்றும் கைத் தொழில் (ஆர்ட்ஸ் மற்றும் கிராப்ட்ஸ்) ஆசிரியர்களுக்கும் இன்னும் இது போன்று இருக்கிற பிரிவினருக்கெல்லாம் வழங்க வேண்டும். இவர்களுக்கும் இந்த நிதி ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கி 1—6—1981 முதல் வழங்கப்படும் என்கிற ஒரு வார்த்தை சேர்க்கப்பட்டிருந்தால், ஆசிரியர்கள் எல்லாம் பெருமைப்பட் பார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கியதன் வாயிலாக ஏற்பட்ட செலவிற்கு 4 கோடியே 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட் டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் கல்வியிலே மிகப் பெரிய நிர்வாகச் சீர்திருத்தம் என்பதால், இதற்காக அரசைப் பாராட்டு கிறேன். இவ்வாறு ஒரு லட்சம் பேர் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டிருக் கும் அதேசமயத்தில், அங்கே ஒரு 'இரட்டை ஆட்சி முறை' நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரா மல் இருக்க முடியாது. பள்ளி சொத்துக்கள், கட்டிடங்கள் எல்லாம் உள் ளாட்சித் துறைக்குச் சொந்தம், ஆசிரியர்கள் அரசுக்குச் சொந்தம் என்கிற முறையில் அங்கு இரட்டை ஆட்சி முறை இருக்கிறது. இதை மாற்றி ஆசிரியர் களும், பள்ளிகளும், சொத்துக்களும் கல்வித் துறைக்குச் சொந்தம் என்கிற முறையில் கொண்டு வர வேண்டும் அப்போதுதான் நிர்வாகக் குறைபாடுகள் குறையும். அதற்கேற்ற வகையில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இள நிலை ஆசிரியர்கள் இடை நிலை ஆசிரியர்களாக தங்க ளுடைய தகுதியை உயர்த்திக்கொள்ள அஞ்சல் வழி கல்வி பெற, 10 ஆயிரம் பேர் பயிற்சி பெற, இந்த இறுதி துணை நிதி நிலை அறிக்கையில் நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களுடைய கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதுபோல், மேல் நிலைப் பள்ளி களில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஈர்க்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக் கும்—அதாவது இன்டக்டட் டீச்சர்ஸ்—அவர்களுடைய தகுதியை உயர்த்திக்





கொள்ள இப்படிப்பட்ட பயிற்சி தேவை. அவர்கள் 4 ஆண்டுகளாகப் பணி யாற்றி வருகிறார்கள். அவர்களுடைய பயிற்சிக்காக எந்த நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. இந்தக் குறைபாட்டையும் சீர் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஈர்க்கப் பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஓராண்டு பயிற்சி தர நிதித் துறை ஏற்பாடு செய்ய வேண்டும், அதற்காக என்று நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கென்று சில ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால் அதில் கூட ஒரு குறைபாடு இருக்கிறது. முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கல்லூரிகளில் 700 ரூபாயிலிருந்து ஊதியம் ஆரம்பிக்கிறது. ஆனால் அதே முதுகலைப் பட்ட தாரி ஆசிரியர்கள் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றினால், 675 ரூபாய் தான் ஆரம்ப ஊதியம். இன்றையதினம் கல்லூரிக் கல்வி பள்ளிக்கூடங் களுக்கு வந்து விட்டது என்று இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கல்லூரிகளிலுள்ள ஊதியம் மட்டும் பள்ளிகளுக்கு வரவில்லையே? இதை ஏன் நிதித் துறை சீர் செய்யக் கூடாது?

அதேபோல பகுதி நேர ஆசிரியர்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பகுதி நேர தொழில் ஆசிரியர்களுக்கு 150 ரூபாய் வீதம் தான் நிதி ஒதுக் கீட்டுக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு மாதத்திற்கு 150 ரூபாய் என்று ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருப்பது போதாது. தொழில் கல்வி ஆசிரியர்களாகப் பணியாற்றுகிற ஆசிரியர்களுடைய பணி எப்படிப்பட்டது என்பது கல்வித் துறைக்கு மிக நன்றாகத் தெரியும். அப்படி இருந்தும் அவர்களுடைய பணி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. அவர் களுடைய பணியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அவர்களுடைய பணியை முழு நேரப் பணியாக்கி, நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஈர்க்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாதம் 25 ரூபாய் என்று இருந்த சிறப்பூதியத்தை 40 ரூபாயாக உயர்த்தி, அதற்காக இந்த நிதி

(முற்பகல் 10-20)

ஒதுக்கீட்டிலேயே வழிவகை செய்யப்பட்டிருப்பதற்கு என்னுடைய பாராட்டு தலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே ஒரு குறை. அப்படி ஈர்க்கப் பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் 25 ஆக இருந்ததை 40 ரூபாயாக உயர்த்தியபோது அதே சமநிலையிலே உள்ள மற்ற ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களை மறந்து விட்டார்கள். அவர்கள் எண்ணிக்கையில் மிகச் சிலரே

உள்ளனர். இவர்களுடைய சம நிலையிலே இருப்பவர்களுக்கும் இந்தச் சலுகையை விரிவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்,

ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கப்படுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதற்கும் என்னுடைய வரவேற்பையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சிறப்பு நிலைபற்றி அண்மையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போது, இந்தச் சிறப்பு நிலை விடுபட்டுப் போனவர்களுக்கும் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்; அதையும் நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அந்தச் சிறப்பு நிலை கொடுக்கப்பட்டபோது, மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைகளின் காரணமாக 20 ஆண்டு பணிக்காலத்தின் அடிப்படையிலே 1—10—1978-லே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் சென்ற ஆண்டு ஒரு பகுதியினருக்கும் இப்போது இன்னொரு பகுதியினருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி காலதாமதமாக அறிவித்ததால் ஏற்பட்ட இழப்பு ஒரு புறமிருக்க அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யும்போது, ரூ. 5, ரூ. 10, ரூ. 15 என்ற அளவிலே தான் ஊதிய உயர்வு இருக்க வேண்டும் என்று அரசாணை நிதித்துறையிலிருந்து கல்வித் துறை மூலமாகப் போடப்பட்டது. அப்படிச் செய்திருப்பதால், ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு ஊதிய இழப்பு ஏற்பட்டது. ஆகவே, இந்தக் குறையையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதைச் சரி செய்து அவர்களுக்குக் குறைந்த பட்சம் ஒரு ஊதிய உயர்வு கொடுக்கும் வகையிலே ஆணையை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளி ஆசிரியர்களுக்கான ஈட்டிய விடுப்பை 3 நாட்களிலேயிருந்து 10 நாட்களாக உயர்த்தியிருக்கிறார்கள். இப்போது ஈட்டிய விடுப்பு இருக்கிறது என்று சொன்னால், அதை 'சரண்டர்' செய்து அதற்கான பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் 280 நாட்கள் வேலை செய்தால், 33 நாட்களை அவர்கள் ஈட்டலாம் It is an 'Earned Leave'. வேலை செய்த நாட்களினுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலே அவர்களுக்கு ஈட்டிய விடுப்பு கொடுக்கப்படுகிறதே தவிர, வேலை செய்யாத நாட்களுக்குக் கிடையாது. 280 நாட்கள் வேலை செய்யும் அவர்களுக்கு 33 நாட்கள் ஈட்டிய விடுப்பு என்று சொன்னால், 200 நாட்கள் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்சம் 30 நாட்களாவது ஈட்டிய விடுப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டோம். ஆனால் இப்போது வேலை செய்யும் நாட்களிலே 20 நாட்களை



யும் கூட்டி மொத்தம் 220 நாட்கள் வேலை நாட்கள் என்று வைத்து 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு என்று வைத்திருப்பது பல புதிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்காக வழி வகுப்பதாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், ஒன்று இந்த அறிவிப்பை மாற்றி 200 வேலை நாட்களுக்கு 23 நாட்கள் ஈட்டிய விடுப்பு என்ற அடிப்படையிலே சலுகை தரவேண்டும் ; இல்லாவிட்டால் அரசு ஊழியர்களைப் போலவே ஆசிரியர்களும் 280 நாட்கள் வேலை செய்யத் தயார் ; அப்படி வேலை செய்தால், அரசு ஊழியர்களைப் போலவே 33 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஆசிரியர்களுக்கும் கிடைக்கும் என்று அறிவிப்பு செய்ய வேண்டும் ; இவ்வாறு இல்லாமல் இரண்டுக்கும் மாறுபட்ட வகையிலே ஒரு அறிவிப்பைச் செய்து பிரச்சினைக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இதிலே கல்லூரி ஆசிரியர்கள் கூட விடுபட்டிருக்கிறார்கள் ; அவர்களுக்கும் இந்தச் சலுகையை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நடுநிலைப் பள்ளி பி. டி. தலைமையாசிரியர்களுக்கு சிறப்பு ஊதியம்—Duty Allowance தரப்பட வேண்டும் என்பது பற்றிய கோரிக்கை இருக்கிறது. அந்தக் கோரிக்கையை நிதித் துறை நல்முறையிலே பரிசீலனை செய்து ஒரு நல்ல அறிவிப்பைக் கொடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் பதவிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற வகையிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பல 'பள்ளிக்கூடங்களிலே ஆசிரியர்கள் இல்லாமல் மாணவர்களுடைய நலன் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவரங்கள் எல்லாம் என்னிடத்திலே நிறைய இருக்கின்றன. நேரம் இல்லாத காரணத்தால், அவைகளை இப்போது தெரிவிக்கவில்லை. ஆசிரியர்கள் இல்லாததால், மாணவர்களின் நலன் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே மக்கள் பிரதிநிதிகள் எல்லோரும் இதைப்பற்றிக் குறைபாடாகச் சுட்டிக்காட்டிப் பேசி வருகிறார்கள் என்பதையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, எவ்வளவு ஆசிரியர் பதவிகள் தேவையோ அவ்வளவு பதவிகளையும் ஏற்படுத்தி, இந்தப் பிரச்சினையைப் போக்க நமது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இனி ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்படியே ஒன்று, ஒன்று என்று சொல்லி, மூன்றுக்கு மாண்புமிகு உறுப்பினர் வந்திருக்கிறார்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இப்போது பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் Finance Officer என்று ஒரு பதவியை ஏற்படுத்தி அவர் அரசின் பிரதிநிதியாக அங்கே இருக்கிறார். தணிக்கைத் துறையின் மூலமாக பல்கலைக் கழகங்களுடைய கணக்கும் தணிக்கை செய்யப்படுகிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பல்கலைக் கழகத்தின் தணிக்கை அறிக்கையிலே முக்கியமான குறைபாடுகள் இருக்கின்றன. 1979-80 ஆம் ஆண்டிலே அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய Deficit ரூ. 17.52 இலட்சம். ஆனால் இன்று வரை மொத்தமாக அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய நிகரப் பற்றாக்குறை, Total Deficit, 40,28,403 ரூபாய் என்று நம்முடைய தணிக்கைத் துறை குறிப்பிட்டிருக்கிறது. இவ்வாறு பற்றாக்குறை வந்திருப்பதற்குக் காரணமாக பல்வேறு ஒழுங்கீனங்களையும், குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி, அரசாணைகள் எவ்வாறு மீறப்பட்டிருக்கின்றன, அதன் காரணமாக பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு சுமார் 40 இலட்சம் ரூபாய் நிகரப் பற்றாக்குறை வந்திருக்கிறது என்று தணிக்கை அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசும் அந்தப் பல்கலைக் கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வதால், அந்தப் பல்கலைக் கழகத்தின் வரவு செலவுக் கணக்கிலே இருக்கும் குறைபாடுகளைப்பற்றி மிகவும் விரிவான அளவிலே—தணிக்கை அறிக்கையிலே சுட்டிக் காட்டியிருக்கும் அடிப்படையிலே—அரசின் சார்பிலே அங்கே பிரதிநிதியாக இருக்கும் Finance Officer அவர்களுக்கு அறிவுரை வழங்கி, இந்தக் குறைபாடுகளையெல்லாம் சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கொண்டும் இந்தமாதிரி தவறுகள் நடக்காமல் இருப்பதற்கும் தக்க முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்,

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே புல கோரிக்கைகளை வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது நான்காவது.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரயில்வே பாஸ் பிரச்சினை இருக்கிறது. இப்போது கொடுக்கும் வசதி போதுமானதாக இல்லை. கூப்பன் வழங்குவது எங்களுக்குப் போதவில்லை. உத்தரப் பிரதேசத்தில் இருப்பதைப் போல, மாநிலத்திற்கு உள்ளே சென்று வர உச்சவரம்பு இல்லாமல் பாஸ் வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பேருந்திலே ஆண் உறுப்பினர்கள் சென்றால், மனைவியை மட்டும் தான் அழைத்துச் செல்லலாம். ஆனால் பெண் உறுப்பினர் சென்றால், அவருடைய உறவினர்களில் ஒருவரை அழைத்துச் செல்லலாம் என்று இருக்கிறது. இந்த விஷயத்திலே பெண் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமை ஆண் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படவில்லை. ஆகவே, பெண் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பது போன்ற இந்தச் சலுகையை ஆண் உறுப்பினர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஐந்தாவது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியிலே ஒரு அலுவலகத்தை வைத்துக்கொள்வதற்கும், அங்கே ஒரு உதவியாளரை நியமித்துக்கொள்வதற்கும் அரசு அனுமதி அளித்து அதற்கான உதவியைச் செய்ய வேண்டும். சட்டமன்றம் சம்பந்தப்பட்ட பணிகளையும், தொகுதி சம்பந்தப்பட்ட பணிகளையும் செய்வதற்கு இந்த அமைப்பு மிகவும் அவசியம் என்பதை நாங்கள் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். இது அநேகமாக எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தும் என்ற வகையிலே சொல்கிறேன். ஆகவே, இதையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே பரிசீலனை செய்து நல்ல சாதகமான அறிவிப்பைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சட்டமன்ற கட்சி அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதியும், உதவியாளர், கடைநிலை ஊழியர் போன்ற வசதியும் செய்து தரவேண்டும் என்று தெரிவித்து, பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN: Sir, I think the Hon. the Finance Minister has achieved new pinnacles of fame by presenting a supplementary demand for 500 crores of rupees, a feat that has not been done by any Finance Minister since the establishment of our free nation.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

The reason for this is obvious that after August 1981, we have had no opportunity to consider supplementary demands and it is difficult for us to discuss details of the various items of expenditure covered by this enormous demand. I would like to cover one or two matters and I am glad that the Hon. the Minister for Registration is in the lobbies—— and he will be able to hear me. He has provided under Grant 6 for New Services, namely, the establishment of four Special District Registrars in the Registration Department to quicken up the cases which come up under section 47 (a) of the Stamp Act, 1899. Sir, recently by a Government Order the Government of Tamil Nadu have increased the valuation—have issued certain guidelines for increasing the value of the lands, agricultural, non-agricultural, urban and non-urban, throughout the State of Tamil Nadu. What has happened is that entirely arbitrary values have been fixed to the extent of 3 to 4 times the value that already existed. This is causing enormous hardship in the Registration Department because not a single document is being registered without being referred to the R.D.O. for valuation or to the Special Registration Officer. In a place like Erode, for example, the value, according to guidelines fixed is Rs. 100 to Rs. 150 per square foot which means an acre of land in Erode is expected to cost Rs. 44 lakhs.

(முற்பகல் 10-30)

The registration stamp charges are approximately Rs. 4,80,000 to register an acre of land in Erode. Coming nearer home to my own home-town, in Cuddalore, where the sale value of land is Rs. 3.50 per square foot, the Registration Department has fixed a value of Rs. 10 per square foot. The result is that all those who wish to register documents are unable to do so because the document is kept pending for re-valuation by the Revenue Divisional Officer. Now, this Revenue Divisional Officer is not going to accept very different values. So, invariably we will have to go to Courts to fix the market value of the land. I would request the Hon. Minister in charge of Registration to consult all the local bodies and find out why such exorbitant values have been fixed for the registration of documents. If at all they have to take into account a certain increase in the market value, they should at least bring down the rate of levy of stamp duties so that it bears some reasonable relation to the cost of registration. The Registration Stamp Duty does not affect only the rich people. Even a person who registers 25 cents of land in a village will be affected by this measure. I would request the Hon. Minister to revise these guidelines which have been arbitrarily fixed.





Sir, my next request is to the Hon. the Minister for Law who has said that 15 more Courts are being sanctioned in Tamil Nadu. He has also announced that a Sub-Court is being established in Villupuram. Over the past three years, many Sub-Courts have been established in South Arcot district. It is in a way welcome because it is expected to bring some assistance to the litigants. But, may I point out that even in starting such Sub-Courts, it should be phased in such a manner that the concentration of legal luminaries in certain towns like the district headquarters is not unduly disturbed? We have a heavy concentration of Advocates in the district headquarters like Cuddalore where there are over 250 practising Advocates. If the Government suddenly establish Sub-Courts even in Taluk headquarters, it causes a great deal of disturbance and loss of employment to these Advocates who have been practising for over 20 years. Although the proposal to establish a Sub-Court at Villupuram is welcome in view of the heavy pendency in that area, may I request the Hon. the Law Minister at least to ensure that the Accidents Claims Tribunal which has been located at Cuddalore is not changed or bifurcated into two divisions because already the proposal establish more Courts is causing some distress?

Sir, my next request is to the Hon. the Minister for Housing. The Hon. the Minister for Housing is having very heavy portfolios under his command. He is looking after Labour, Housing, Water-supply, Sewerage, M.M.D.A., Urban Development, etc. In fact, I wonder sometimes how he is able to carry this heavy load. But he has a remarkable composure. Here, in the Council itself, I have brought to his notice a particular problem which I shall state presently. Many Urban Housing Societies including the one at Kurinjippadi and also the one at Sulur in Coimbatore district have brought this problem to my notice. The Hon. the Minister for Housing issued a Government Order in 1981 stating that all Urban Housing Societies were not expected to receive fresh loan

applications for the construction of houses from the 1st May 1981. He has sanctioned 9 crores and odd of rupees as loan to the Registrar of Housing Co-operatives but I would like to point out that out of this Rs. 9 crores, not even Rs. 65 lakhs have been disbursed to the Urban Housing Societies. Not only that; we have receive applications prior to the 30th April 1981, and I may tell him that from the 30th April right up to the 28th February 1982 all the applications that are received from persons who have already completed the first phase of house construction, the second or the third phase of construction, have not been complied with and we have not been able to disburse loans because we have not obtained refinance facilities from the Central Housing Society.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாத இறுதிக்குள் எல்.ஐ.சி யிடமிருந்து பணம் வாங்கப்பட்டுவிடும். அதற்கான பேச்சுவார்த்தைகள் முடிந்து விட்டன. "அபெக்ஸ் பாடி" மூலம் அது அனுப்பப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, this sort of answer is expected from the Hon. Minister. But, I would like to point out that he is now responsible for the past 10 months for increasing the indebtedness of urban house-holders who incurred debts, who have incurred interest charges have incurred debts, for 10 months because the Hon. Minister thought that he should divert 8½ crores of rupees to rural housing. This sort of discrimination in housing administration is hurting all the house-owners in urban areas and all of them are not necessarily rich people since there are Government employees and local board employees. I would request the Hon. Minister not to carry out such executive instructions. The trouble is that we do not have an elected body in the Central Housing Society and the Hon. Minister is easily able to issue such directives through his special officers. Until the position is improved by having elections, I do not think he is going to budge an inch and sanction additional loans. Anyhow I am grateful for his assurance and I hope he will see that loans are disbursed before 31st March so that we may be able to satisfy the demand.





One more point and that is about the loans and advances. The Hon. Minister has given here a list of loans and advances amounting to Rs. 187 crores to various departments of the Government. If it had been capital expenditure incurred for the creation of assets, I would have had no quarrel with the Hon. the Finance Minister. But I find that in the year 1981-82, he has sanctioned loans and advances which can be, only theoretically, termed 'Loans and advances', because I do not think there is any chance of their being repaid. The loans and advances to the State Electricity Board amount to Rs. 70 crores, to the Civil Supplies Corporation Rs. 25 crores and to Road Transport Corporation Rs. 33.40 crores. Now, if the loans and advances to the Civil Supplies Corporation are for the construction of godowns and creation of assets, I would not have quarrelled with the Government, but this is all going down the drain. The Government are trying to subsidise departments which were working profitably two or three years ago. Why is it that the Government have to give money from the general exchequer by way of subsidy to the State Electricity Board? The Electricity Board today supplies power only for 2 or 3 hours in the day. There is a case for reducing power rates and not for increasing power rates considering the efficiency of the Electricity Board. Sir, if the Government continue in that fashion of giving subsidies and doles to public corporations, because these are not the only Corporations and there are half a dozen losing Corporations—Southern Structurals Rs. 3.96 crores—the amount of money that has been wasted under 'Loans and Advances' is stupefying and as one who considers that the expenditure of public money should be related to some cost-benefit ratio, I must express the consternation of all tax-payers at the frittering away of the revenues of the Tamil Nadu Government.

(முற்பகல் 10-40)

A sum of Rs. 25 crores is being given to the Civil Supplies Corporation to cover the cash loss of that Corporation. Another sum is being given to the Road Transport Corporations. If it had been for the purchase of chasis, I would not have minded it. But this again is to cover the cash losses of the Road Transport Corporations. The Hon. the Finance Minister is noted for his financial prudence and I am sure that his hand must have shivered when he signed the allocations for these various Departments. I would plead with him that instead of continuing

to waste public resources in this fashion, the Government should set guidelines as the Government of India have done. These public sector Corporations must either pay their way or some drastic action must be taken to ensure that they do not depend on the general Exchequer for such vast transfer of funds. The Hon. Minister has a case when he says that he has lost something about Rs. 35 crores on the distribution of rice through the public distribution system operated by the Civil Supplies Corporation. But I cannot understand why our Electricity Board and the Road Transport Corporations should also depend on the general Exchequer for this. As I was just explaining to the Hon. the Minister for Local Administration, the Government are producing greater difficulties for themselves by not taking quick economic decisions. When there is an increase in the price of fuel, it may mean an increased cost of Rs. 10 crores to the Road Transport Corporations. Instead of increasing the fare by 5 paise a few years back, they will wait for two years and then increase it by 25 paise and immediately an agitation starts. The same is the story with the Elecricity Board. I would only request the Hon. the Minister for Finance, because he is now having considerable difficulty in balancing his Budget, that he should insist on certain performance criteria from these organisations which are frittering away the very difficult resources that are gathered from tax-payers. Thank you.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு இறுதி துணை மதிப்பீடுகள் மீது ஒரு சில கருத்துக்கள் மட்டும் சொல்ல விழைகின்றேன். துணை மதிப்பீடு என்பதால், விரிவாகப் பேச வேண்டிய அவசியம் இராது, நேரம் இராது. குறிப்பாக சில வேண்டுகோள்களை மட்டும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் எதிர்பார்த்ததெல்லாம் அகவிலைப் படியைப் பற்றி. நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அகவிலைப் படியை மத்திய அரசு தன் ஊழியர்களுக்கு எப்போது வழங்குகிறதோ அதையொட்டி அப்போதே மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவதற்குரிய அறிவிப்பு தரப்படும் என்று உறுதிமொழியை சட்டப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அகவிலைப்படியைப்பற்றிக் கேட்ட போது சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே அவர் டில்லிக்குச்



சென்றுவிட்ட காரணத்தாலே, இங்கே உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னபோது, பொறுப்பிலே இருந்த அமைச்சர்கள், நிதியமைச்சர் டில்லிக்குச் சென்றிருக்கிறார்கள், அவர்கள் திரும்பி வந்ததற்குப் பின்னால் அதைச் சொல்லுவார்கள் என்பதைப் போல இங்கே குறிப்பிட்டார்கள். திரும்ப வந்த நிதியமைச்சர் அவர்கள் இன்று சொல்லுவார், நாளை சொல்லுவார், நாளை மறுநாள் சொல்லுவார் என்ற ஏக்கத்தோடு அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நிதியமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக ஒன்றைத் தெரிவிக்கிறேன். மத்திய அரசு நான்கு அகவிலைப் படி உயர்வை வழங்கியிருக்கிறது. அந்த நான்கு அகவிலைப் படி உயர்வையும் மாநில அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உடனடியாக வழங்கியாக வேண்டும். அப்படி வழங்கும்போது மற்றொரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். மத்திய அரசு தன் ஊழியர்களுக்கு வழங்கிய உயர்வை ஏப்ரல் முதல் தேதி முதல் பணமாக வழங்கலாம் என்றும், மற்ற நிலுவைகளை குறிப்பிட்ட காலத்திற்கு நலநிதியிலே இணைத்துவிடலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஊழியர்களுடைய ஊதியத்திற்கும் மாநில அரசு ஊழியர்களுடைய ஊதியத்திற்கும் இடையே பெரிய வேறுபாடு இருக்கிறது. இந்த மாநிலத்தில் உள்ள அரசு ஊழியர்கள் வாங்கும் ஊதியம் மத்திய அரசு ஊழியர்கள் வாங்கும் ஊதியத்தைவிட மிகவும் குறைவு. ஆகவே அவர்கள் சிரமப்படுகிற நிலையிலே இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஆகவே நான்கு அகவிலைப்படித் தவணைகளை உடனடியாக வழங்குவதோடு மத்திய அரசினர் செய்ததைப் போல நலநிதியில் சேர்த்துவிடாமல், விலைவாசியால் பாதிக்கப்பட்டிருக்கிற, நிதிநிலை அறிக்கையில் போடப்பட்டிருக்கிற வரியால் பாதிக்கப்பட்டிருக்கிற அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் காப்பாற்றுகிற வகையிலே அதை ரொக்கமாக அதே தேதியிலிருந்தே கொடுக்க வேண்டும். இரண்டு மாதம் கழித்து என்று சொல்லாமல், அறிவிக்கின்ற நாளிலிருந்து என்று சொல்லாமல், எந்தத் தேதியிலிருந்து மத்திய அரசு வழங்கியிருக்கிறதோ அந்தத் தேதியிலிருந்தே வழங்கும் அறிவிப்பை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இப்போதே பதில் சொல்லும் போது தர வேண்டுமென்ற வேண்டுகோளை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சார்பிலே தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட கோரிக்கைகளுக்காக என். ஜி. ஜி. ஓ. சங்கத்தினர் போராட்டத் திட்டத்தை அறிவித்து போராட இருப்பதாக அறிகிறேன். ஆகவே இப்படிப்பட்ட அறிவிப்பு தருவதன் மூலமாக அரசு ஊழியர்கள் மத்தியிலே நிலவும் அதிருப்தியைத் தடுக்க வாய்ப்பாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய தலைமையில்தான், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஓய்வுபெறும்போது பத்தாயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தைப் பரிசீலிப்பதற்கென்று, ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி ஏற்கெனவே இதே பேரவையிலேயே நான் கேள்வி கேட்டபோது, நிதியமைச்சர் அவர்தான் ஒரு பதிலைச் சொன்னார்கள். அதாவது "பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது, அந்தக் குழு ஒரு முறை கூடியது, அதற்குப் பின்னாலே கூடவில்லை, அதைப்பற்றி அறிவிப்பு விரைவிலே வரும்" என்று அவர் பதில் சொல்லி ஓராண்டு ஆகிறது. குழு அமைப்பது என்பது காலதாமதப்படுத்துவதற்காகவும், பிரச்சினைகளை கிடப்பிலே போடுவதற்காகவும்தான் என்று கருதப்படுகிற எண்ணத்தை ஊர்ஜிதம் செய்வது போல அந்தக் குழு இன்னும் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் இது குறித்து ஒரு முடிவிற்கு வரவில்லையென்று எண்ணும்போது, மிகவும் வருத்தமாக இருக்கிறது. நாங்கள், ஓய்வுபெறும்போது பத்தாயிரம் ரூபாய் வர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தது 1976 ஆம் ஆண்டு. விலைவாசி உயர்ந்துவிட்ட நிலையில் பத்தாயிரம் ரூபாய் கேட்டது மிகவும் குறைவு என்று கருதி, பத்து சவரன்களாவது தர வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க முடிவு எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவிற்கு உயர்ந்துவிட்டன விலைவாசிகள். ஆகவே ஓய்வுபெறும்போது பத்தாயிரம் ரூபாய் வழங்குவது குறித்து பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட அந்தக் குழு என்ன முடிவு எடுத்திருக்கிறது? அதை எப்போது அமுல்படுத்தப் போகிறார்கள்? அதிலே ஒரு நல்ல முடிவை எடுத்து, இப்போதே அறிவித்துவிட வேண்டும் என்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சார்பிலே வேண்டிக்கொள்கிறேன்.

மற்றொன்று போனஸ் வேண்டுமென்ற கோரிக்கையாகும். போனஸ் என்பது பட்டுவாடா செய்யப்படாத ஊதியம் என்று தத்துவம் எல்லாம் கூறப்படுவது அனைவருக்கும் தெரியும். பல்வேறு துறைகளிலே போனஸ் இன்றைக்கு வழங்கப்படுகிறது. வீட்டுவசதி வாரியத்தினுடைய அமைச்சர் அவர்கள் கூட இங்கே அதைப்பற்றிப் பேசும்போது, வீட்டு வசதி ஊழியர்களுக்கு நாங்கள்தான் முதன் முதலாக போனஸ் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறோம் என்று பெருமையோடு சொன்னார்கள். அந்தப் பெருமை நிதியமைச்சர் அவர்களுக்கு வரக்கூடாதா? அந்தப் பெருமை கல்வியமைச்சர் அவர்களுக்கு வரக்கூடாதா? ஆகவே வீட்டு வசதி வாரியத்தில் உள்ள ஊழியர்களுக்கு வழங்கியிருக்கும் போனசை கல்வித் துறையிலே உள்ள ஆசிரியர்களுக்கும், மற்றும் அரசு ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும். ஒரு



துறைக்குக் கொடுக்கப்படுகிற சலுகை மற்ற துறைகளில் இல்லையென்ற பாகுபாடு இல்லாமல், இதை வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

ஆசிரியர்களுக்காக வீட்டுவசதி வாரியம் அமைக்கப்பட்டுவிட்டது என்று சென்ற ஆண்டே அரசின் சாதனை மலரிலும், அனைத்துப் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் தரப்பட்டுவிட்டன. அதுபற்றி பல முறை குறிப்பிட்டிருக்கிறேன். அரசுச் செலவிலே அப்படி விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு உண்மைக்கு மாறான தகவல் தரப்பட்டிருக்கிறது என்ற சூழ்நிலை இருக்கலாமா? எப்போது அமைக்கவிருக்கிறீர்கள்? சாதனைப் பட்டியலில் விளம்பரப்படுத்திவிட்டு உண்மையிலேயே ஏற்படுத்தாமல் இருப்பதால், ஆசிரியர்களிடையே வேதனையை ஏற்படுத்தியிருக்கிறீர்கள் என்று சொல்வேன். அதைப் பற்றிப் பரிசீலிப்பதாகவும், வீட்டு வசதி வாரியத்திடம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பதாகவும் கல்வியமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆகவே அது குறித்த முடிவையும் இப்போது தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஈட்டிய விடுப்பு பற்றிக் குறிப்பிட்டார்கள்: ஏன் இந்தக் கோரிக்கையை வைத்தோம் என்ற நிலை எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கோரிக்கை வைத்ததன் உள்நோக்கம் என்ன என்பதைப்பற்றி அதிகாரிகள் உணர்ந்து கொண்டார்களோ என்னவோ தெரியவில்லை. 20 நாட்கள் வேலை நாட்களை அதிகப்படுத்தி பத்து நாட்கள் ஈட்டிய விடுப்பு தந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது மோசமான சிக்கலை உருவாக்கியிருக்கிறது. ஆசிரியர்கள் வேலை செய்யத் தயார். என்.ஜி.ஜி.ஓ. க்களுக்கு உள்ள வேலை நாட்களையே தாருங்கள், அவர்களுக்குத் தந்திருக்கிற ஈட்டிய விடுப்பையும் தாருங்கள், அப்போது பணியாற்ற ஆசிரியர்கள் தயார் என்பதை ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொரு விஷயத்தைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மத்திய அரசு அண்மையிலே ஓர் அறிவிப்பை வெளியிட்டிருப்பதாக பத்திரிகையிலே பார்த்தேன். மத்திய அரசின் அனுமதியில்லாமல் மாநில அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வை அளிக்கக் கூடாது என்று அறிவித்திருப்பதாக பத்திரிகையில் பார்க்க நேர்ந்தது. மத்திய அரசு தன் ஊழியர்கட்கு வழங்கும் ஊதியத்தை மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கவில்லையென்றால், இது இந்தியா தானா, ஒருமைப்பாடு உள்ள இந்தியாதானா, எல்லோருக்கும் சம

வாய்ப்பு தரக்கூடிய ஒரு நாடு தானா என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஒருமைப்பாடு வேண்டுமென்று சொல்லிக்கொண்டு மத்திய அரசு ஊழியர்களுக்கு ஒருவிதமான ஊதியமும், மாநில அரசு ஊழியர்களுக்கு வேறுவிதமான ஊதியமும் தந்தால், ஒரே வீட்டிலே குடியிருக்கிற ஒருவர் மிக சுகமாகவும் இன்னொருவர் சங்கடமான நிலையிலும் இருக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கு உள்ள ஊதியத்தின் அளவிற்கு மாநில அரசு ஊழியர்களுக்கும் உயர்த்துகிற வரையில் மத்திய அரசுக்கே கூட தடை விதிக்கிற உரிமை இல்லை. அப்படிப்பட்ட உரிமை இருக்கக் கூடாது. அதை நாம் அரசு சார்பிலே எதிர்த்து எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஊதியக் குழு நியமித்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. அடுத்த ஊதியக் குழுவை நியமிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. அதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே ஊதியக் குழுவை நியமியுங்கள் என்ற வேண்டுகோளை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

பட்டினப்பாக்கத்திலே, அரசு ஊழியர்கள் குடியிருப்பு இருக்கிறது. நான் கூட இந்த அவையிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பேசுகின்றபோது நிமோனியா வியாதிபற்றிச் சொல்லி, அரசு ஊழியர் குழந்தை இறந்துவிட்டதைக் குறிப்பிட்டுக் காட்டினேன். அந்தப் பகுதியிலே குடியிருக்கக்கூடிய ஊழியர்களுடைய குழந்தைதான் இறந்திருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், நம்முடைய வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள், அதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அந்தக் குடியிருப்புகளில் ஃபேன்கள் நன்றாக ஓடவில்லை. ரிப்பேருக்காக எடுத்துச்செல்லப்பட்ட மின் விசிறிகள் எல்லாம் மீண்டும் பொருத்தப்படவில்லை. ஒரு ஆண்டுக்கு மேலாக மின் விசிறிகள் இல்லாமல் இருக்கின்றன. அது மட்டுமல்ல, குடிநீர் கிடைப்பதிலே தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அது நிவர்த்தி செய்யப்படாததனால், அங்கே நல்ல குடிநீர் (டிரிங்கிங் வாட்டர்) கிடைக்காத நிலைமை இருக்கிறது. அங்கே அரசு ஊழியர்கள் குடும்பத்தினர்கள், அவர்கள் குழந்தைகள் எல்லாம் நிமோனியா போன்ற வியாதிகளினாலே பாதிக்கப்படுகிறார்கள். அதைச் சரி செய்ய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, என்னுடைய தொகுதியாகிய பூம்புகாரிலே . . .



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் ஓராண்டு காலமாக இப்படி இருப்பதாகச் சொல்கிறார்கள். பட்டினப்பாக்கம் என்னுடைய வீட்டிற்கு மிக சமீபத்தில்தான் இருக்கிறது. ஊழியரோ ஒரு சங்கமோ யாருமே இதைப்பற்றி என்னிடத்தில் புகார் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இதைப் பற்றிச் சட்டமன்றத்திலே பேச வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எங்களையே உபயோகித்துக் கொண்டால், விரைவாகக் காரியம் முடிந்துவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உறுதிமொழிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சங்கத்தில் இருப்பவர்களோ, சாதாரணமானவர்களாக இருக்கின்றவர்களோ, ஊழியர்களோ எவரும் அமைச்சர் அவர்களைப் பார்த்து எதுவும் சொல்ல பயப்படுகிறார்கள் என்று ஏற்கெனவே அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** என்னைப் பார்த்தாலே பயப்படுகிறார்கள் என்று சொல்லவில்லை. சும்மா சொல்கிறார்கள். நான் எங்கே என்னைப் பார்த்தால் பயப்படுகிறார்கள் என்று சொன்னேன். நான் ரொம்ப நல்லவன், மெதுவானவன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் இதை அவர்களிடத்திலே சொல்லிவிடுகிறேன். மேலவையிலே பேசுவதற்கு என்னிடம் கொண்டு வந்து தகவலைத் தருபவர்களிடம் நேரடியாகவே அமைச்சர் அவர்களைப் பாருங்கள் என்று நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் பயன்படுவேன் என்றுதான் சொல்லியிருப்பார்கள். பயப்படுகிறார்கள் என்று சொல்லியிருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இப்போது நிமோனியா பற்றிப் பேசுகின்ற நேரத்திலேதான் குறிப்பு வந்தது. அதையும் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடம் காட்டினேன். அவர் இந்தப் பக்கம் திரும்பி, அது அந்த அமைச்சர் துறையைச் சார்ந்தது என்று சொன்னார். அதற்குப்

பின்னாலே அவரைப் பார்த்துப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவேதான் இப்போது அதை எடுத்து வைத்தேன். அதை நிவர்த்தி செய்வதாகச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, பூம்புகாரிலே பேரவைக் கல்லூரி ஒன்று இருக்கிறது. அந்தக் கல்லூரி அறநிலையத் துறையின் கீழ் நிருவகிக்கப் படுகின்ற ஒரு கல்லூரியாக இருக்கிறது. அந்த பூம்புகார் கல்லூரியிலே இருக்கின்ற நிர்வாகம் முழுக்க முழுக்க சீர்கேடடைந்திருக்கிறது. அப்படி சீர்கேடடைந்திருக்கின்ற காரணத்தினாலே, அங்கே ஊழியர்கள், ஆசிரியர்களெல்லாம் அங்கே இருக்கின்ற நிர்வாகத்தை அணுகி அணுகி குறைபாடுகளை எடுத்துச் சொன்ன பிறகுகூட, அவற்றை நிவர்த்தி செய்யாத காரணத்தினாலே, அவர்கள் 17—3—1982-லிருந்து தொடர் உண்ணாவிரதப் போராட்டம் செய்கிறார்கள். அது கல்லூரிப் பணியாளர்கள் கூட்டமைப்பு சார்பிலே நடைபெறுவதாக அறிவிப்பு தரப்பட்டிருக்கின்றது. நிர்வாகச் சீர்குறைவுகளுக்கு ஒன்றிரண்டு மட்டும் நான் கூறிக்கொள்கிறேன்.

பூம்புகார் கல்லூரியில் நன்கொடைகள் வாங்கப்படுவது தவறு என்று கண்டித்து சென்னைப் பல்கலைக் கழகம் இனிமேல் அப்படி வாங்கக்கூடாது என்று 1977-ல் எச்சரித்த பிறகுகூட, தொடர்ந்து ஆசிரியர்களிடம் வேலைக்காகவும், மாணவர்களிடம் அட்மிஷனுக்காகவும் பல லட்சக்கணக்கான ரூபாய் வசூலிக்கப்படுகிறது. இன்றைக்கும் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்குப் புறம்பாக இருப்பவர்கள், சுட்டிக் காட்டுகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்து பழி வாங்குகின்ற முறையில் நிர்வாகத்தினர் இருக்கின்றார் கள்; அவர்களை வேலையிலிருந்து நீக்கிக் கொண்டிருக்கிறார்கள் அல்லது அற நிலையத் துறையின் கீழ் இயங்குகின்ற கல்லூரியாக இருந்தாலும், அந்த அற நிலையத் துறையினுடைய கமிஷனர் அதாவது ஆணையாளர் அவர்கள் அதிலே பங்கு பெறாமல் இருப்பதாலே, ஆட்சிக் குழுத் தலைவராக இல்லாது அவர்கள் அந்த நிர்வாகத்தை நினைத்த வழியில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கல்லூரி கமிட்டி கூட்டங்கள் பல ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருக்கின்றது. அந்த நிர்வாகம் சீர்கேடான நிலையில் இருக்கின்றது. அந்தச் சீர்கேடுகளையெல்லாம் எடுத்துச் சொல்ல நேரம் இல்லை. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பழிவாங்கப் பட்ட ஊழியர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்றும், அந்தக் கல்லூரியை அரசே ஏற்க வேண்டுமென்றும் அங்கே கோரிக்கைகள் வைத்து 17—3—1982-லேயிருந்து தொடர் உண்ணாவிரதம் நடத்திக் கொண்டிருக் கிறார்கள். இதிலே அரசே முடிவெடுத்து, ஊழல்கள் மிகுந்த கல்லூரிகளை



யும், கல்வி நிறுவனங்களையும் அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே அறிவித்ததுபோல, அக்கொள்கைக்கு ஏற்ப இந்த ஊழல் மிகுந்த பூம்புகார் கல்லூரியை அரசே எடுத்து நடத்த வேண்டும். அந்தப் பழி வாங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டுகோளை விட்டு அமைகிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மான்யக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு நான் மகிழ்ச்சி கொள்கிறேன். இங்கே மாண்புமிகு அங்கத்தினர் அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் பேசிவிட்டுப் போய்விடக்கூடாது என்று சொல்கிறார்கள். கடைசி வரையிலும் இருப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஓய்வு பெற்றால் ரூ. 10 ஆயிரம் என்பது பற்றிப் பரிசீலிக்க ஏற்கெனவே ஒரு குழு நிதி அமைச்சர் அவர்கள் தலைமையிலே இருக்கிறது. இதுவரையிலே அதிலே முடிவு எடுப்பதற்கு வேறு தடைகள் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் தலைமைச் செயலாளர் அவர்களும், இரண்டாவது செயலாளர் அவர்களும் சேர்ந்ததுதான் குழு. அதைப் பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதையும், அதற்கு ஆசிரியர்கள் ஆலோசனையைக் கேட்டால் தாங்கள் தரவும் தயாராக இருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். அரசு முடிவெடுக்காத நிலையில் காலதாமதம் ஆகிறது என்ற நிலைமை அமைந்துவிடக் கூடாது என்பதையும் குறுகிய காலத்தில் வந்துவிடும் என்று அறிவித்திருந்தும் இன்னும் வராமல் இருக்கிறது என்பதையும் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மின்சார வாரியத்தில் ஊழியர்களிடமிருந்தே மாதம் 5 ரூபாய் என்று வாங்கி ஒரு நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் பரிசீலிக்க வேண்டும். மாதம் 10 ரூபாய் வாங்கிக் கொண்டு ரிட்டையர் ஆகின்றவர்களுக்கு நிதி கொடுப்பதை யாரும் அதிகமாக ஆட்சேபிக்கப் போவதில்லை. அரசாங்கத்தினுடைய கஜானாவிற்கும் பணம் வரும் என்ற அளவில் அந்தத் திட்டத்தை விரைவில் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அகவிலைப் படியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். அவருடைய பதிலிலேயே அதைப்பற்றி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், கல்வித் துறை பற்றிச் சொல்கிறேன். அதில் நிர்வாக மாற்றங்கள் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக தற்போதைய நிதி அமைச்சர் கல்வி அமைச்சராக இருந்த காலத்திலேயே இந்த ஆசிரியர் இல்லங்கள் தொடங்கப்பட்டன. இன்றைய நிதி அமைச்சர் அவர்கள் அன்று

[திரு. செ. முத்துசாமி] [1982 மார்ச் 24

கல்வித் துறை அமைச்சராக இருந்தபோதே இவை தொடங்கப்பட்டன. ஆசிரியர் இல்லங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டுவதற்கு வேலைகள் தொடங்கப்பட்டன. சில மாவட்டங்களில் அவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. பல மாவட்டங்களில் ஆசிரியர் இல்லங்கள் கட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே அதற்கு நிதியை ஒதுக்கி அத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்திலே 2½ லட்சம் ஆசிரியப் பெருமக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு எந்த இல்லமும் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். இதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ரூ. 10 லட்சம் ஒதுக்கிச் செய்வதாகச் சொன்னதை விரைவாகச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, பி.எட். ஆசிரியர் தகுதி பெற்று செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றவர்களுக்கு, புலவர் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பதவி உயர்வும் இல்லாமல் இருக்கின்றார்கள். அருகிலே இருக்கக்கூடிய ஆந்திராவிலே, இங்கேயிருந்து பிரிந்து சென்று இருக்கின்ற மாநிலத்திலே, இடைநிலை இடத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் மொழி ஆசிரியர்கள் அத்தனை பேர்களுக்கும் பதவி உயர்வுக்கு வழி செய்திருக்கிறார்கள். நிதி அமைச்சர் கல்வி அமைச்சராக இருந்த காலத்திலேயே ஹையர் கிரேட் இடத்திலே பணியாற்றுகின்ற தகுதி பெற்றவர்களை செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக உயர்த்துகிறோம் என்று அண்ணா அவர்கள் தலைமையிலே இந்த அவையிலே சொல்லி ஒரு நல்ல அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். அன்றைக்குத் தொடங்கி வைத்த அந்தத் திட்டம் 5 ஆயிரம் போஸ்ட்டுகளுக்கு இன்றைக்கு நிறைவு பெற்றிருக்கிறது. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இடை நிலைப் பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அந்த ஆசிரியர்களுக்கும், ஆந்திர மாநிலத்தினைப்போல, நிதி ஒதுக்கி அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்தாற்போல், ஏ.ஈ.ஓ.க்கள் என்று இந்த பஞ்சாயத்து யூனியன்களில் வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான பயிற்சி கொடுக்காததால், அந்த நிர்வாகம் சரியாக இல்லை. இப்போது போடப்பட்டிருக்கின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கும், பள்ளித் துணை ஆய்வாளர்களுக்கும் மத்தியிலே ஒரு உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எந்தவிதமான சீனியாரிட்டி முறையும் இல்லாமலே இவர்கள் போடப்பட்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எந்த அடிப்படையிலே போடப்பட்டிருக்கிறது என்று கேட்டுக்



1982 மார்ச் 24] [திரு. செ. முத்துசாமி]

கொண்டிருக்கிறார்கள் கல்வித் துறையில் நிர்வாக மாற்றம் என்று வந்தால், அது பஞ்சாயத்து யூனியனாக இருந்தாலும் சரி, அது ஏ.ஈ.ஓ. மூலமாகக் கொடுப்பதாக இருந்தாலும் சரி, ஊதியம் கொடுக்க அரசாங்கம்தான் நிதி ஒதுக்குகிறது. அதை ஆணையாளரே தர வேண்டும் என்று சொல்லும்போது, அவர்கள் "எங்களால் முடியாது, எங்களிடம் எழுத்தர்கள் இல்லை, அந்தப் பதிவேடுகள் இல்லை, அவைகள் அங்கே ஒப்படைக்கப்பட்டுவிட்டன" என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே இதிலே நிதித் துறை முடிவெடுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பு ஜில்லா போர்டு பள்ளிகளை அரசு எடுத்தபோது, அரசே தந்திருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைகளைக் கொடுக்க வேண்டும். எல்லாவற்றையும் உடனே செய்ய வேண்டும். அதற்கான பைல் நிதித் துறையிலேதான் இருக்கிறது. அதற்கு உடனே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கு ஒரு ஆணையிட வேண்டும், முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

அடுத்தாற்போல், பட்ஜெட்டிலே போஸ்ட்ஸ் ஒதுக்குகிறார்கள். ஆசிரியர் பணியிடங்களை ஒதுக்குகிறார்கள். ஒதுக்கிய இடங்கள் போதாது என்பது வேறு. ஆசிரியர்—மாணவர் விகிதம் அரசாணையின்படி செயல்படுத்தப் படவில்லை என்பது குறைபாடு. 20,000 பணியிடங்கள் ஒதுக்க வேண்டிய இடத்தில், நிதிநிலைக்கேற்ப 2,000 பணியிடங்களை அரசு ஒதுக்கியிருக்கிறது. இந்த நிலையில், அந்தப் பணியிடங்களை நிரப்புகின்றபோது, சில மாதங்களை நிதித் துறை எடுத்துக்கொள்கிறது. இந்த அவையில் நிறைவேற்றிய பிறகு, இப்படி நடக்கிறது. நிதியமைச்சரவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோதும் அந்த நிலைமை இருந்திருக்கிறது. இப்போது நிதியமைச்சராக இருக்கும் கால கட்டத்தில், ஜூன் மாதம் பிள்ளைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கும் நிலை ஏற்படுகிறது. நிதி ஒதுக்கியும், பணம் ஒதுக்கியும், 2,000 ஆசிரியர்களை மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தர நியமிக்க விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இடங்களை ஒதுக்கிய பிறகு, குறிப்பிட்ட மாதங்களுக்குள், 30 நாட்களுக்குள், 15 நாட்களுக்குள் கல்வித் துறை நியமனங்களைச் செய்ய 'அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ்' வேண்டும். ஏன் சொல்லுகிறேன் என்றால், வேலையில்லாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எத்தனை போஸ்ட் சாங்ஷன் ஆகிறதென்று முன்னாலேயே வந்துவிடுகிறது. கல்வித் துறையிலே அதற்கான இன்டர்வியூவை முன்னாலேயே நடத்த வேண்டியதுதானே. ஆணையிட 2 மாதங்கள், டைரக்டருக்கு எண்ணம் வர 2 மாதங்கள், சி.ஈ.ஓ. இன்டர்வியூ செய்ய

[திரு. செ. முத்துசாமி] [1982 மார்ச் 24

2 மாதங்கள் இப்படி பல மாதங்களாகி, கல்வி ஆண்டு முடியும்போது, அந்தப் பதவிகளை நிரப்பும் நிலைமை ஏற்படுகிறது. நிதியை நாம் ஒதுக்குகிறோம். அதைப் பயன்படுத்தாமல் இருக்கும் நிர்வாக நிலைமையைச் சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதித் துறை அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் பிரச்சினைகள் தீர்க்கப்பட ஆசிரியர் பணிக் குழு ஒன்று அமையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அரசு ஊழியர்களுக்கு ஜாயின்ட் சர்வீஸ் கவுன்சில் என்று இருக்கிறது. தேர்தல் காலத்தில், 1977-ல், வாக்குறுதி தந்திருக்கிறார்கள், ஆசிரியர்கள் பிரச்சினை தீர தனிக் குழு அமைக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த வகையில் 'டீச்சர்ஸ் சர்வீஸ் கவுன்சில்' அமைக்க வேண்டுமென்றும், அது கல்வி அமைச்சரவர்களின் தலைமையில் இருக்க வேண்டுமென்றும், அவர்கள் பிரச்சினைகளில் தீர்வு காண நிதித் துறை செயலாளர், கல்வித் துறை செயலாளர், துறை இயக்குநர்கள் அதில் இருக்க வேண்டுமென்றும், எல்லாச் சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர் சங்கம் எப்படி அமைய வேண்டுமென்றும், அங்கீகாரம் எப்படி வழங்க வேண்டுமென்றும் கல்வித் துறையிலே அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் போடப்பட்டிருக்கிற அரசாணை வருவதற்கு முன்னால், அனுபவ பாத்யதையாக, இன்னின்ன சங்கங்கள் பிரதிநிதித்துவப்படுத்தலாமென்று ஆர்.டி. & எல்.ஏ. துறை 3 சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்த நிலைமைகளை, இந்த ஆணை வந்த பிறகு, கட்டுப்படுத்தி, குறை தீர்க்கும் நாள் நடத்த முடியாமல் இருக்கிறது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் குறை தீர்க்கும் நாள் நடத்தப்பட்டது. அதைப்போல கல்வி மாவட்ட அளவில் குறை தீர்க்கும் நாளை ஏற்படுத்த வேண்டுமென்றும், பிரதிநிதித்துவம் உள்ள சங்கங்களை அனுமதித்து, ஏற்கனவே உள்ள விதிமுறைகளை ஏற்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பிரச்சினை குறித்து சட்டசபையிலே நல்முறையிலே பதில் சொல்லப்பட்டது. ஏற்கனவே ஒரு பள்ளிக்கூடம், ஒரு கல்வி நிறுவனம் திறக்க ஒரு தேதிக்கு முன்னால் விண்ணப்பிக்கப்பட்டது. அனுமதி கொடுத்தபோது சட்டம் மாறிவிட்டது. ஆனால் 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' போட்டு, விண்ணப்பித்த தேதியில் என்ன நிபந்தனை இருந்ததோ அந்த நிபந்தனையின் அடிப்படையில் அனுமதிக்கும் எண்ணம்



1982 மார்ச் 24] [திரு. செ. முத்துசாமி]

இருக்கிறதென்பதைப் பாராட்டுகிறேன். அதே நடைமுறையை இந்தச் சங்கங்கள் விஷயத்தில் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே 'ரெப்ரசன்ட்' செய்த சங்கங்களுக்கு அந்த அனுபவபாத்தியதை வழங்க வேண்டும் என்றும், புதிய சங்கங்களுக்கு நீங்கள் மாற்றத்தைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். கொடுத்தால் எல்லோருக்கும் அங்கிகாரம் கொடுங்கள். இல்லையென்றால் ஏற்கனவே உள்ள நிலைபோல எல்லோரையும் ஒன்றாக வையுங்கள். அங்கிகாரம் ஆன சங்கம் தான்தான் அதிகாரி போன்று இருக்கிறது. ஆளும் கட்சி எம்.எல்.ஏ. க்கள் தான் இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள்' என்று கேட்பார்கள் என்று சொல்வதைப் பார்க்கிறோம். எம்.எல்.ஏ. கூட பரவாயில்லை என்று சொல்லும் அளவிற்கு, இவர்கள் அதிகாரிகளை மிரட்டும் பாங்கு வந்திருக்கிறது. இதை எங்கே போய்ச் சொல்ல முடியும்? அவையில்தான் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : அவர்கள் மிரட்டியது ஆசிரியர்களையா அல்லது வேறு அதிகாரிகளையா ?

திரு. செ. முத்துசாமி : ஆசிரியர் சங்கத்திலே உள்ளவர்கள், அங்கிகரிக்கப்பட்ட சங்கம் என்று சொல்லப்படுகிறதே அந்தச் சங்கத்தின் நிர்வாகிகள் சென்று, 'நீ ஒழுங்காகச் செய்கிறாயா, இல்லையா, உன்னை மாற்றட்டுமா'. என்று சொல்லும் நிகழ்வுகள் நடந்திருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். . . .

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, அவர்கள் ஆசிரியர்களா, வேறு பணியில் உள்ளவர்களா ?

திரு. செ. முத்துசாமி : ஆசிரியர் சங்கம், அந்தச் சங்கத்தின் பொறுப்பாளிகள், அவர்கள் ஆசிரியர்களாகவும் இருக்கிறார்கள். தெளிவுபடுத்துகிறேன். அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படும்போது, மற்ற ஆசிரியர்களுக்குப் பாதகமாக, ஆசிரியர்களுக்கு எதிராக ஈடுபடும் சூழ்நிலை ஏற்படுகிறதென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, எல்லாச் சங்கங்களையும் ஒரேமாதிரியாக வைக்கும் நல்லதொரு கொள்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிர்வாகச் சீர்திருத்தப் பிரச்சினை. அரசுக்கு ஒரு குறிப்பிட்ட பிரச்சினை வந்தால், குறிப்பிட்ட காலத்திற்குள் அதில் முடிவெடுக்க வேண்டுமென்ற நல்ல சீர்திருத்தத்தைக் கொண்டு வாருங்கள். ஒவ்வொரு கால கட்டத்திலும் வளர்ந்து கொண்டிருக்கிறோம். எனவே பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியில் அணுகுகிற முறையில் ஒரு காலகட்டத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். அதிகாரிகள் மாநாட்டில் அதை முடிவு செய்து, அவர்களே முடிவெடுத்து, அவர்களே செயலாற்றட்டும்.

பாரதி நூற்றாண்டு விழா நடக்கிறது. 'இனி ஒரு விதி செய்வோம், அதை எந்த நாளும் காப்போம்' என்று பாரதி சொன்னான். இந்த நேரத்தில், 'இனி ஒரு விதி செய்து, அதை எந்த நாளும் அதிகாரிகள் காப்பாற்றும்படியாக மேலாண்மை செய்வோம்' என்று அமைச்சரவை சரியான தத்துவமாக ஏற்றுக்கொண்டு, விஞ்ஞான ரீதியாக விரைந்து முடிவுகளை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எத்தனை நல்ல நோக்கத்தோடு பணத்தை நாம் ஒதுக்கிச் செய்தாலும், கீழே இருப்பவர்கள் சரியாகச் செய்யாவிட்டால், ஆட்சியிலே எந்தக் கட்சி உட்கார்ந்திருக்கிறதென்று எண்ணாமல், யார் உட்கார்ந்தாலும் நிர்வாக அமைப்பிற்குச் சரியான முறையில் லகானை ஒழுங்காகப் பிடிக்கும் ஆற்றலான அமைப்பு முறை இல்லாவிட்டால், அதிகார வர்க்கம் நன்மைகளைக் கொண்டு வந்து சேர்க்காது. கல்வித் துறையிலே, கடைசி வரை அப்படி நன்மைகள் மக்களைப் போய்ச் சேருகின்றனவா என்று பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. அதை இந்த அமைச்சரவைக்குச் சொல்லத் தேவையில்லை. குறிப்பாக நிதியமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, நல்லதொரு நிர்வாகச் சீர்திருத்தத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பிரச்சினைகளில் தீர்வு காண அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆரம்பக் கல்வியிலே இன்றைக்கு சீர்திருத்தம் என்ற முறையிலே பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்கள், அரசு ஊழியர்களாக்கப்பட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களாக விட்டுவிட்டால் நல்லதென்று நினைக்கும் நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு கல்யாணக் கடன் கிடையாது, சைக்கிள் லோன் கிடைக்கவில்லை. ஒரு நிர்வாகத்திலிருந்து இன்னொரு நிர்வாகத்திற்கு வரும்போது, அதாவது அரசு ஊழியர்களாக வந்தால், அதிகப் பயன் கிடைக்கும் என்று கருதினோம். நான் உள்பட எல்லோரும்



அப்படிக் கருதினோம். நிலைமை என்னவென்றால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று பிரச்சினைகளைச் சொன்னால், தீருவதில்லை. பஞ்சாயத்து யூனியன் ஆணையர் தவறு செய்தால், அவ்வப்போது தீர்க்கப்பட்டன. இன்று நிர்வாகத்தில் அடிஷனல் டைரக்டரைக் கூடுதலாகப் போட்டும், கூடுதலான நிதியை ஒதுக்கியும், பிரச்சினைகள் ஒழுங்காகத் தீர்க்கப்படவில்லை. டி. ஈ. ஓ. விடம் கேட்டால் அதிகாரமில்லை என்கிறார், பி.ச.ஓ. விடம் கேட்டால் அதிகாரமில்லை என்று சொல்லுகிறார். நிர்வாகம் மாற்றியமைக்கப்பட்டபோது சரியான கொள்கைகளோடு மாற்றியமைக்கப்படாததால் பிரச்சினைகள் சேர்ந்துவிட்டன. அதனால் ஆசிரியர்களிடையே அதிருப்தி இருக்கிறது. அவற்றைத் தீர்க்க வேண்டுமென்றும், விரைவான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஹை பவர் கமிட்டி அமைக்கப்பட்டு, அவர்கள் பரிந்துரையின்படி பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கினார்கள். அந்த அறிக்கை என்னவாயிற்று? அரசாணையிடும்போது, 'ஹை பவர் கமிட்டியின் சிபாரிசின்படி.' என்று சொல்லியிருக்கிறார்கள். 16 சங்கங்களையும் அழைத்து சாட்சியம் கேட்டார்கள். நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய அந்தக் கமிட்டி என்னென்ன ஆலோசனைகள் வழங்கியிருக்கிறது என்பதை சட்ட மன்ற உறுப்பினர்களுக்காவது தெரிவிக்க வேண்டாமா? நிதித் துறை சம்பந்தப்பட்டது என்றால், பட்ஜெட் ரகசியம் என்று ஏற்றுக்கொள்ளலாம். நிர்வாக மாற்றத்திற்கு வேண்டிய அறிக்கை. அதை இந்த மன்றத்தில் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு பிரச்சினையிலும் விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆசிரியர்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில்,

(முற்பகல் 11.10)

இது 12 ஆண்டுகளாகத் தீர்க்கப்படவில்லை. இப்போது தான் அவர்களுக்கு செலக்ஷன் கிரேட் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அரசு செய்த தப்பால்தான் அவர்களுடைய சம்பளம் நிர்ணயம் செய்யப்படவில்லை. 1—9—1980-லிருந்து தான் அவர்களுக்கு இன்கிரிமென்ட் கொடுக்கிறோம். செலக்ஷன் கிரேட் கொடுக்கப்படாததால் ஏற்பட்ட தவறு இது. அரசு செய்த தவறால் ஏற்பட்டது இது. அவர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்காமல் காலத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போவது நியாயம் தானா? மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதற்கு பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கீழே இருக்கிற அதிகாரிகள் தப்பு

செய்கிறார்கள். அவர்கள் அதைப் பெறுவதற்கு சட்டப்படி உரிமை இருக்கிறது. அரசு ஆணையும் இருக்கிறது. ஆனால் வெளியிடப்பட்ட அரசாணையை அவர்களைப் பொறுத்தவரையில், அமுல்படுத்தவில்லை. இதை நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 4 ஆண்டுகள் கழிந்த பிறகு, நிதித் துறை இது சம்பந்தமாக ஒரு உத்தரவைப் போடுகிறது. அவர்கள் பெற வேண்டிய அலவன்ஸ், படி போன்றவற்றை அவர்கள் பெறவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில், அரசு போட்ட உத்தரவை அமுல்படுத்தாததால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். அதைப் பரிசீலித்து நிதித் துறை ஆணையிடும்போது, 4 ஆண்டுகள் கழித்து, அதாவது ஆணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து தான் அமுலுக்கு வரும் என்று சொல்வது நியாயம்தானா? தர்மம்தானா? அந்த ஊழியர்கள் என்ன தவறு செய்தார்கள்? அரசு தப்பு செய்ததால் தான் இத்தகைய நிலை ஏற்பட்டது. அவர்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் காலத்திலாவது நிவாரணம் அளிக்க வேண்டுமென்று சொல்லி வாய்ப்பளித்த மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி நிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்கிறேன். இந்திய அரசியல் சட்டத்தின் 205 ஆம் பிரிவிலே ஒரு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு மேலாக ஏதாவது புதிய பணிகளை அரசு மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதற்காக பணம் ஒதுக்கீடு செய்கிற அதிகாரத்தை அந்தந்த மாநில அரசுக்கு வழங்க இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின் வாயிலாக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த வகையில் பெரிய அளவில் 502 கோடி ரூபாய் அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. எவ்வளவு கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியது என்பதல்ல. இந்த அரசின் கொள்கையை எண்ணிப் பார்க்க வேண்டும். சமுதாயத்தின் 'ஒரு கோடியில்' இருக்கிற ஏழையெளிய மக்கள் பயனடைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் இந்த அரசு செயல்படுகிறது. குறிப்பாக ஆதி திராவிடர்களுக்கு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நன்மை செய்ய 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இப்படி ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்திற்காக 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது நல்ல பணி.



அதுபோல் தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள், அதன் மூலம் மிகுந்த பயனடைந்திருக்கிறார்கள். அதற்காக 33.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்குக் கூட்டுறவு நூற்பு ஆலைகள் மூலம் நன்மை செய்ய 153.75 லட்சம் ரூபாய் பங்கு மூலதனமாக அரசு ஒதுக்கியிருக்கிறது. பிற மாநிலங்கள் கூட இதனைப் பயன்படுத்தி தாயகம் திரும்பும் இலங்கை வாழ் மக்களுக்கு உதவி புரிய வேண்டும். மத்திய அரசின் உதவியைப் பெற்று இதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இன்றைக்கு தாயகம் திரும்புகிறவர்களை வெளி மாநிலங்களில் சில அங்கிருந்தும் வெளியேற்றுகின்றன. குறிப்பாக கேரளாவிலிருந்து அண்மையில் பலரை வெளியேற்றியிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு மதுரையில் வசிக்கிறார்கள். தாயகம் திரும்புகிறவர்களுக்கு இந்த அரசு துணிவோடு பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும்.

அடுத்து, பாரதியார், பாரதிதாசன் ஆகிய பல்கலைக் கழகங்களுக்காக 56 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிய பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்த வேண்டுமென்ற முயற்சியில் இந்த அரசு தனக்கு இருக்கின்ற முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி அதே சமயத்தில் மத்திய அரசின் உதவியையும் எந்த அளவிற்குப் பெற முடியுமோ அந்த அளவிற்குப் பெற்று இதைச் செய்ய முடியும் என்ற அடிப்படையில் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வெற்றி பெற்றிருப்பது ஒரு பெரிய சாதனை.

அடுத்து, சாலைகளுக்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. பூந்தமல்லியில் 6 வழிகள் கொண்ட சாலையை ஏற்படுத்துவது நல்ல முயற்சி. இதன் மூலம் ரோடு அகலப்படுத்தப்படும். அதேபோல கிண்டிக்கும் மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கும் இடையே உள்ள ரோட்டையும் அகலப்படுத்த வேண்டும். பல நேரங்களில் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குப் போகிற நேரத்தில் ரோடு அகலக் குறைவாக இருப்பதால், போக்குவரத்து நெரிசல் காரணமாக, நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே, இந்த ரோட்டை அகலப்படுத்த வேண்டும்.

அடுத்து, மதுவிலக்கு ஆயத் தீர்வை சம்பந்தமாக சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், பாண்டிச்சேரிக்கும் தமிழகத்திற்கும் இடையில் 8 அமைக்கப்பட்டிருக்கின்றன. இதில் அரசு மிகுந்த கண்காணிப்புடன் இருக்க வேண்டும். இந்த சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி கண்காணிப்பைத் தீவிரப்படுத்த

வேண்டும். பக்கத்து மாநிலங்களில் வேறு விகிதத்தில் வரி விதித்த இருப்பதால் அல்லது வரி விகிதத்தில் மாற்றம் இருப்பதால், அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்கும் கடத்தல் செய்து ஆயத் தீர்வையை சரியாகச் செலுத்தாமல் அவர்கள் தப்புவதற்கான வழிவகை இருப்பதால், இதில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இலவச பயணச் சீட்டு வசதியைப் பொறுத்தவரையில், நான் சொல்லுகின்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். காரணம் நான் மிகவும் தொலைவிலிருந்து அதாவது ஊட்டியிலிருந்து வருவதுபோல் அவர்களும் மிகவும் தொலைவிலிருந்து அதாவது நாகர்கோவிலிருந்து வந்து கொண்டிருப்பவர்கள். ஆகவே, நாங்கள் இரண்டு பேரும் ஒரே அவசியத்தில் இருப்பவர்கள். அதே சமயத்தில் எங்களையொத்த அளவில் பயணக் கூப்பன்களை செங்கல்பட்டிலிருந்து வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் வழங்குவது சரியில்லை. காரணம் செங்கல்பட்டிலிருந்து வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பயணச் சீட்டுகளை முழுமையாகப் பயன்படுத்துவதில்லை. இரண்டாவது நாங்கள் 'ரிசர்வ்' செய்துவிட்டு பயணம் செய்ய முடியவில்லை என்றால், அதை ரத்து செய்துவிட்டால், அதைத் திரும்ப உபயோகப்படுத்துகின்ற உரிமை எங்களுக்கு இல்லை.

**திருமதி தாரா செரியன் :** செங்கல்பட்டிலிருந்து வருகின்றவர்களுக்கும் எல்லோருக்கும் வழங்குவது போல் பயணச் சீட்டுக் கூப்பன்கள் வழங்க வேண்டும். காரணம் ஏதாவது பிரச்சினை சம்பந்தமாக செங்கல்பட்டில் இருக்கக்கூடிய ஓர் உறுப்பினர் கோயம்புத்தூருக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே செங்கல்பட்டில் இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்குக் குறைத்தால், அவர்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இன்னும் கூடுதலாக அதற்குரிய வாய்ப்பினை உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும். பயணம் ரத்து ஆவதால் நாங்கள் திருப்பிக் கொடுக்கின்ற டிக்கெட்டுகளைப் பொறுத்தவரையில்,





அவைகளுக்குப் பதிலாக மீண்டும் கூப்பன் கொடுக்க வேண்டும். இப்படி நாங்கள் உபயோகப்படுத்தாமல் இருப்பதன் மூலம் அதற்குரிய பணம் திரும்பவும் அரசுக்குத்தான் வருகிறது. நாங்கள் அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக சில நேரங்களில் நாங்கள் ரிசர்வ் செய்துவிடுகிறோம். பிறகு கூட்டத் தொடர் ரத்தாகும்போது நாங்கள் பயணத்தை ரத்து செய்ய வேண்டியிருக்கிறது.

அடுத்து, பிற மாநிலங்களிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு சட்ட மன்றக் குழுக்கள் வருகின்றன. அதற்காக பணம் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. அதற்கு இன்னும் அதிக அளவில் செலவு செய்ய வேண்டும். இப்படி வெளி மாநிலங்களிலிருந்து நம் மாநிலத்திற்கு வருகின்ற சட்ட மன்றக் குழுக்களுக்கு நாம் மிகுந்த மரியாதை தர வேண்டும். இந்தச் சட்ட மன்றக் குழு உறுப்பினர்களுக்கு நாம் நல்ல முறையில் மரியாதை தந்தால் தான், நாமும் வேறு மாநிலங்களுக்குப் போகும்போது நம்மை மரியாதையோடு, நன்றாக கவனிப்பார்கள்.

அடுத்து, வருவாய்த் துறை வாகனங்களைப் பொறுத்தவரையில், அவற்றை டீசலால் ஓடக்கூடியவைகளாக திருத்தியமைக்க வேண்டும். 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் ஆகிவிட்டால், அரசு வாகனங்களை உடனே விற்றுவிட்டு புதிய வாகனங்கள் வாங்க வேண்டும். அப்படி வாங்கும்போது, டீசலால் ஓடக் கூடிய கார்களாகப் பார்த்து வாங்க வேண்டும்.

அடுத்து, பத்திரிகை விளம்பரத்திற்காகவும், பத்திரிகை நிருபர்களுக்காகவும் செய்திருக்கக்கூடிய செலவுகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு இன்றைக்கு நிருபர்களுக்கு டேப் ரெக்கார்டர் வழங்கியிருக்கிறது. சில நேரங்களில் அவர்கள் கருத்துக்களை மாற்றிப் போட்டாலும் கூட, அது ஒருவேளை அவர்களுடைய கவனக் குறைவு காரணமாக இருந்தாலும் கூட, இந்தக் காரியத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தலைவரவர்கள் எப்படி உறுப்பினர்களுடைய கவனத்தை ஈர்க்கிறார்களோ அதுபோல் நிருபர்களுடைய காதுகளையும் ஈர்க்க வேண்டும். (சிரிப்பு)

அடுத்து, பெரியார் விழா நூல்கள் நட்டிருப்பது பாராட்டத்தக்கது. அமைச்சர்களுக்குக் குடியிருப்பு கட்ட 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அமைச்சர்கள் வெளியே எங்கும் வீடு தேடி அலைய வேண்டாம் என்கிற முறையில் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த முயற்சி பாராட்டத்தக்கது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுகள் கட்டி வழங்கப்படுவது போல், நம் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் விடுகள் கட்டிக் கொடுக்கிற முயற்சியில் அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹெலிகேப்டர் வாங்கியிருக்கும் முயற்சி நல்லது. இன்னும் கூடுதல் எண்ணிக்கையில் ஹெலிகேப்டர் வாங்க வேண்டும். நீலகிரியில் நிலச் சரிவு ஏற்பட்ட நேரத்தில், அங்கு பயணம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்ட நேரத்தில், அங்கு என்ன நடைபெற்றது, மக்கள் நிலை என்ன என்பதைப் பற்றி அறிய வெளியேயிருந்து 40 ஆயிரம் ரூபாய் வாடகை கொடுத்து ஒரு ஹெலிகேப்டரைத் தருவித்து நிலச்சரிவு ஏற்பட்ட இடத்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர்களுக்கு மட்டுமா, இல்லை, செயர்மேனுக்கும் ஸ்பீக்கருக்கும் கூட உண்டா? (சிரிப்பு)

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் அது பயணம் செய்ய உதவியாக இருக்க வேண்டும் என்பதை மாண்புமிகு தலைவரவர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். சமீபத்தில் மாண்புமிகு தலைவரவர்கள் கோவைக்குச் சென்ற நேரத்தில் உடல்நலக் கேடு ஏற்பட்டது நம் அனைவருக்கும் தெரியும். மாண்புமிகு தலைவரவர்கள் தயவுசெய்து நீண்ட தூரங்களுக்குக் காரில் பயணம் செய்யக் கூடாது. தொலைவு தூரங்களுக்கு மாண்புமிகு தலைவரவர்கள் விமானத்தில் செல்ல வேண்டும். குறைந்த தூரங்களுக்குக் காரில் பயணம் செய்ய வேண்டும். விமானம் செல்ல முடியாத தொலைவு தூரங்களுக்கு ஹெலிகேப்டரில் செல்ல வேண்டும். விமானம் செல்ல முடியாத இடங்களுக்கு ஹெலிகேப்டர் சர்வீஸ் நடத்த மத்திய அரசை வலியுறுத்தி அனுமதி பெற வேண்டும். அவர்கள் நடத்த முன்வராவிட்டால், நாமே நடத்த வேண்டும்.

அடுத்து, தமிழ் நாடு மீனளத் துறையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் இருப்பதால், அவர்களின் கவனத்திற்கு ஒன்றிரண்டு கருத்துக்களைக் கொண்டு வருகிறேன். மீனளத் துறை சார்பாக எல்லா மாவட்டங்களிலும் மீன் உணவுக் கடைகள் வைக்க வேண்டும். நீலகிரியிலும் வைக்க வேண்டும். வெளிநாடுகளில் எல்லாம் இன்றையதினம் 'Kechuky Chickai' என்கிற நிறுவனம், மிகப் பெரிய அளவில்



பரவியிருக்கிறது. அந்நாடுகளைப்போல், நம் தமிழ் நாட்டிலும் இத்தகைய சத்துணவு வழங்க அங்காடிகளைப் பரவலாக எல்லா இடங்களிலும் திறக்க வேண்டும்.

காவல் துறையினருக்குச் செய்துள்ள நல்ல காரியங்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கேர் நிறுவனத்திற்கும் உதவி புரிந்திருக்கிறோம். அமராவதி சைனிக் பள்ளிக்கு சாமான் வாங்க உதவி செய்திருக்கிறோம். இப்படி சைனிக் பள்ளிக்கு நாம் உதவி வழங்குகிறோம் என்று சொன்னால், அப்படி வழங்கும்போது, நம்முடைய கொள்கையை அவர்களிடம் வலியுறுத்த வேண்டும். இந்தியில் படிப்பை வைத்திருக்கிறார்கள். மத்திய அரசின் அதிகாரத்திற்கு உடன்பட்டிருக்கக் கூடிய ஒரு பள்ளிக்கு மாநில அரசு உதவி செய்யும்போது, மாநில அரசின் கல்விக் கொள்கைக்கு எதிராக அங்குள்ள கல்வி முறை இருக்கக் கூடாது. அதைப் புரிந்து கொண்டு மற்ற பள்ளிகளில் எப்படி விதிமுறைகளை வகுத்து வைத்திருக்கிறோமோ அதே நிலையில் இவர்களும் பள்ளிக்கூடத்தை வைத்துக் கொண்டிருக்க வேண்டுமேயொழிய, இந்த நேரத்தில் 'இரட்டை ஆட்சி' முறைக்கு வழிவகுக்கக் கூடாது. இது குறித்து அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

அடுத்து, கவிஞர் கண்ணதாசன் அவர்கள் நோய்வாய்ப்பட்டதற்கு சிகிச்சையளித்த வகையில் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். அவர்களை நாம் இன்றைக்கு இழந்திருந்தாலும், அவர்களுடைய கவிதைகளும், காவியங்களும் இன்றைக்கும் நம் நெஞ்சில்

(முற்பகல் 11-20)

நிலைத்து நின்று கொண்டிருக்கின்றன. மாணவர்களைப் பொறுத்தவரையில், பள்ளி நாட்களிலே பேருந்துகளிலே அவர்கள் செல்வதற்கு அவர்களுக்குச் சலுகைகளை அளிப்பதைப்போல, பள்ளி விடுமுறை காலங்களிலேயும் அவர்கள் சுற்றுலா செல்வதற்கு வசதியாக அவர்கள் 15 நாட்கள் பேருந்துகளிலே எங்கே வேண்டுமானாலும் செல்லலாம் என்ற வகையிலே வசதி செய்து அதற்காகவென்று அவர்களிடத்திலே ஒரு கட்டணத்தை வாங்கி அவர்கள் பல இடங்களுக்குச் சென்று பார்க்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ மனைகளிலே புதிய கருவிகளை வாங்குவதற்கும், இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே அதற்கான செலவை மேற்கொண்டிருப்பதற்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாரதி நூற்றாண்டு விழா, தமிழ்ப் பல்கலைக் கழகம் என்ற அளவிலே காரியங்கள் எல்லாம் எந்தெந்த இடங்களிலே நடக்கின்றனவோ அந்த இடங்களை மேம்படுத்த வேண்டும். அந்த இடத்திலே இருக்கும் மக்களுக்கு வசதி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இவ்வாறு செய்ய வேண்டும். மதுரையிலே உலகத் தமிழ் மாநாட்டு விழா எடுத்ததால், அந்தப் பகுதி வெகுவாக முன்னேறியிருக்கிறது. குடிநீர் வழங்குதல், துப்புரவு, ரோடு போடுதல், பாதைகள் சீரமைப்பு போன்ற இப்படிப்பட்ட முன்னேற்றப் பணிகளுக்குத்தான் இப்படிப்பட்ட விழாக்களுக்கு என்று ஒதுக்கப்படும் பணத்தில் பெருமளவும் செலவு செய்யப்படுகின்றன என்பதால் மகிழ்ச்சியடைகிறேன்.

நீலகிரி மாவட்டத்திற்கு 2 சுகாதார மையங்கள் ஏற்படுத்த வகை செய்யப்பட்டிருப்பதற்கும், தேயிலை வளர்ப்பவர்களுக்கு உதவித் தொகையாக 5 இலட்சம் ரூபாய் வழங்கவிருப்பது அந்த விவசாயத்திலே ஈடுபட்டிருப்போருக்கு பயன்படும் என்ற வகையிலேயும் நான் அரசைப் பாராட்டுகிறேன்.

விவேகானந்தா பாறைக்கு படகுப் போக்குவரத்து நடப்பதிலே, அங்குள்ள பிரச்சினைகளைப் போக்க வேண்டும் என்று ரூ. 50,000 கொடுத்திருப்பதையும் வரவேற்று, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கை மீதும் மதிப்பீடுகள் மீதும் ஒருசில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். முதலாவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 500 கோடி ரூபாய்க்கு துணை மானியக் கோரிக்கை வரும் என்று எதிர்பார்க்கவில்லை. இது இதுவரையிலே இல்லாத நடைமுறை என்பதோடு அரசாங்கம் செலவு செய்யும் முறைகளிலே ஏதோ தவறு இருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில், கோரிக்கைகள் என்று பல்வேறு அமைச்சர்களிடமிருந்தும் வருகின்றபோது, இந்நிலை தவிர்க்க முடியாததாகப் போய்விடுகிறது என்று சொன்னாலும் கூட, மதிப்பிடும் முறையிலும், செலவிடும் முறையிலும் மான்யக் கோரிக்கைகள் எழுப்பும் முறையிலும் அடிப்படையிலே ஏதோ தவறுகள் அல்லது அவசியமான முறையிலே நிதியைப் பயன்படுத்தாமல்



இருப்பதால் தானோ இவ்வாறு நடைபெறுகிறது என்ற என்னுடைய சந்தேகத்தையும் நான் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதிப்பீடுகளை முறையாகச் செய்யாமல் இருப்பது, உரிய காலத்திலே கொள்கைகளை அறிவிக்காமல் இருப்பது, சட்டமன்றத்திலே அறிவிக்காமல் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுவது யாருடைய விமர்சனத்திற்கும் ஆளாகாமல் சில துறைகள் நடைபெறுகின்றன என்பது தவிர்க்க முடியாமல் போய்விடும் என்பதால், இந்த விஷயத்திலே அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் சில துறைகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். ஆதி திராவிட வீட்டு வசதித் துறையைப் பொறுத்த வரையில், அதுபற்றி எடுத்திருக்கும் கொள்கை நல்ல கொள்கைதான். அதன் அலுவலகம் சென்னையிலே இருக்கக்கூடாது, அதனுடைய அலுவலகங்கள் இங்கே இருக்கக்கூடாது, நகரத்தை விட்டு வெளியே சென்றால், ஜனநெரிசல் குறையும், மேலும் மற்ற இடங்களும் வளர வசதியாக இருக்கும் என்ற முறையிலே கருத்துக்கள் அறிவிக்கப்பட்டன. ஆனால் அது நடைமுறையிலே எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நேற்றைய தினம் இங்கே பேசும்போது, அந்த அலுவலகம் இப்போது விழுப்புரத்திலே இருக்கிறது, அதை சென்னைக்கு மாற்ற முடியுமா என்று கேட்டேன். அந்த அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் முறையை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கண்காணிக்க வேண்டும். அங்கே இருக்கும் அதிகாரிகள் எந்த அளவுக்கு டி. ஏ. வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். அலுவலகம் விழுப்புரத்திலே இருக்கிறது. அதற்காக சேர்மன் (Chairman) ஆபீஸ் சென்னையிலே இருக்கிறது. அங்கே இருக்கும் அலுவலர்கள் எல்லோரும் தினந்தோறும் சென்னைக்கு வந்து டி. ஏ. வாங்கும் நிலைமை இருந்தால், விழுப்புரமும் வளராது, இங்கே சென்னையிலே இருக்கும் ஜன நெரிசலும் குறையாது. அதற்கு மாறாக ஒரு போக்குவரத்துத் துறை போன்றுதான் அது இயங்கிக் கொண்டிருக்குமே தவிர, ஆதி திராவிடர் வீட்டு வசதித் துறையாக அது இயங்காது. ஆகவே, அந்த அலுவலகம் செயல்படும் முறைகளைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே தன்னிறைவுத் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அது நல்ல திட்டம் தான். அது நல்ல திட்டம் என்பதோடு மட்டுமல்ல, கிராம மக்கள் வளர வேண்டும் என்ற வகையிலே துரிதமாக நடவடிக்கை எடுத்து நிறைவேற்றப்படும் திட்டம். நிறைவேற்றும்போது குறைகள் இல்லாமல் இருக்காது என்று சொல்ல முடியாது. எல்லாவற்றையும் அமைச்சர் அவர்களே நேரடியாகச் சென்று பார்த்துச் செய்ய முடியாது. அமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று தண்ணீர்த் தொட்டிகளைக் கட்ட முடியாது. ஆனால் இன்றைக்கு இருக்கும் நிலைமைகளைப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் கிடையாது. மாவட்ட அளவிலே மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் செயல்படுவதே கிடையாது. என்ன நடக்கிறது என்றால், டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அவர்கள் சில அதிகாரிகளைக் கூட்டி வைத்துக் கொண்டு 'சரி; கலைந்து போங்கள்.' என்று சொல்லும் நிலைமை தான் இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்திலே, வடக்கு மாவட்ட வளர்ச்சி மன்றம் கடந்த இரண்டாண்டு காலமாக கூடவே இல்லை. அந்த அளவுக்கு நிலைமைகள் இருக்கும்போது, முழுக்க முழுக்க காரியங்களை அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு இந்தத் திட்டங்களைச் சரிவர அரசு நிறைவேற்றுகிறது என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே, மக்களுடைய பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். மக்கள் பிரதிநிதிகளை அங்கே இணைப்பதன் மூலமாக புதிதாகப் பிரச்சினைகள் வந்துவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக, அதிகாரிகளை தலைவர்களாகப் போட்டு மக்கள் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகப் போடும்போதுதான், இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுகின்றன. ஆகவே, அதிகாரப் பற்று இல்லாதவர்களைத் தலைவர்களாகப் போட்டால்தான், நாம் செயல்படுத்தும் திட்டங்கள் முழுமை பெற முடியுமே தவிர யார் நிறைவேற்றுகிறார்களோ அவர்களையே தலைவர்களாகப் போட்டால், அந்தத் திட்டங்களைச் சரிவர நிறைவேற்ற முடியாமல் உடைந்து போகும் தண்ணீர்த் தொட்டிகள் நடமாட முடியாத சாலைகள் போலத்தான் அந்தத் திட்டங்களின் நிலைமையும் போய் விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்தால், அவைகள் தன்னிறைவுத் திட்டமாக இருக்காது, தனிப்பட்டவர்களுக்கு மட்டுமே நிறைவாக இருக்கும் திட்டமாகத் தான் இருக்கும். இந்த வளர்ச்சித் திட்டங்களின் பலன்கள் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற விருப்பம் முழுமை பெறும் வகையிலே நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, கூட்டுறவுக் கடன்கள் கொடுக்க மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூடுதல் நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்கது. இதுசம்பந்தமாக ஒரு விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது சமீபத்திலே பத்திரிகையிலே வந்த செய்தி. கூட்டுறவுச் சங்கங்களிலே நகைக்குக் கடன் கொடுப்பதை நிறுத்துவது என்ற முடிவுக்கு வந்திருப்பதாகச் செய்தி வந்தது. அல்லது அப்படி நிறுத்துவதற்கு அவசியம் வந்திருப்பதாக செய்தி வந்தது நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், நகைக் கடன்களைக் கொடுப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் முன்வரவில்லை என்று சொன்னால், மீண்டும் இந்த நகைகளை மார்வாடிகளிடம் கொண்டுபோய்க் கொடுத்து, முன்பு தமிழகத்திலே தங்கம் இல்லை என்ற அளவுக்கு வெளியே போய் விட்டதே அந்த நிலைமைகள் மீண்டும் உருவாகிவிடும். மக்களிடத்திலே கொஞ்ச நஞ்சம் இருக்கும் தங்கமும் மாநிலத்துக்கு வெளியே போய்விடும். நிலைமை வரவேண்டாம் என்று சொன்னால், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நகைக் கடன் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கவில்லை என்று சொன்னால், ஏழை விவசாயிகள், விவசாயத்திற்காகப் பணம் தேவைப்படும் போது, தங்களுடைய நகைகளைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டுப் போகும் நிலைமை தான் வரும். மார்வாடிக் கடைகளில் நகைகளைக் கொண்டுபோய் வைத்தால், பெரும்பாலும் அவைகளை மீட்டு எடுப்பதே இல்லை. வட்டியின் அளவு ஏறிக்கொண்டே போய் அந்த நகைகள் மீண்டும் மீட்டு எடுக்கப்படாமல் மூழ்கிவிடும் நிலைமைகள் தான் இருக்கின்றன. சட்டத்தின் மூலமாக எவ்வளவுதான் பாதுகாப்பு கொடுத்தாலும், நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு காரியங்களைச் செய்ய முடியவில்லை என்பதை நாமே நடைமுறையிலே பார்த்துக் கொண்டிருக்கும்போது, கூட்டுறவு மூலமாக கடன் வசதி அளிக்கும் நிலைமையைப் பொறுத்தவரையில், நகை மூலமாகக் கடன்கள் வழங்கும் நிலைமை குறையாத அளவிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேவைப்பட்டால் இன்னும் அதற்கு அதிக அளவிலே நிதி ஒதுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில், இப்போது பாரதியார் பெயரிலே, பாரதிதாசன் பெயரிலே எல்லாம் பல்கலைக் கழகங்கள் துவங்கப்பட்டு, அவற்றுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே இருக்கின்ற பல்கலைக் கழகங்கள் எப்படி இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்

கொள்கிறேன். நம்முடைய தமிழகத்திலே இருக்கும் பல்கலைக் கழகங்கள் சீர்கேடடைந்து போயிருப்பதைப்போல வேறு எங்கும் சீர்கெடவில்லை. கடைசியாகக் கிடைத்திருக்கும் தகவல்படி, பட்டப் படிப்புக்கான தேர்வுகள் இந்த ஆண்டிலே நடைபெறுமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. அதற்காக என்று பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஒரு செமினார் நடத்தியிருக்கிறார்கள். பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது.

(முற்பகல் 11-30)

"As irony would have it, some details about the date of conducting the examinations became clear, during a Seminar on Examination Reforms conducted by the Madras University Teachers Association."

இது 22 ஆம் தேதி பத்திரிகையில் வந்த விவரம். அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

Only if the Sixth Semester candidates agreed to apply for the 5th Semester for which they sat last December ................ The same applies to the fourth and third semesters also.

அதாவது மாணவர்கள் ஏற்கெனவே 5-வது செமஸ்டர் தேர்வை எழுதி விட்டார்கள். அப்படி எழுதிவிட்ட மாணவர்கள் மீண்டும் 6-வது செமஸ்டர் தேர்வையும் எழுத ஒப்புக்கொண்டால்தான், இந்த ஆண்டுக்கான தேர்வுகளை நடத்த முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அவர்கள் 5-வது செமஸ்டர் தேர்வு எழுதினார்களே, அது என்னவாயிற்று என்பதற்கான எந்த விளக்கமும் தரப்படவில்லை. இதன் காரணமாக தேர்வுகளுக்கான தேதி இதுவரை குறிப்பிடப்படவில்லை. இன்னும் 1½ மாதத்தில் தேர்வுகள் முடிந்தாக வேண்டும். ஆனால் தேர்வுகளுக்கான டைம்-டேபிள் இன்னும் வெளியிடப்படவில்லை. காரணம் அதை நிர்ணயிக்க முடியவில்லை. நிர்ணயிக்க முடியாமல் அவர்கள் திண்டாடுகிறார்கள். அந்த அளவுக்குக் கேவலமாக இருக்கிறது. இதனால் என்ன ஏற்பட்டது என்றால், தேர்வுகள் நடைபெறுவது; ஜுன், ஜுலை என்று தள்ளிப் போடப்பட்டு இப்போது அக்டோபர் வரை நீட்டிக்கப்படும் நிலை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகள் நீடிக்குமானால், தேர்வுகள் எப்போது நடத்தப்படும்,



அவைகளுக்கான முடிவுகள் எப்போது அறிவிக்கப்படும்? இந்த மாநிலத்தில் வேறு துறைகளில் கல்வி கற்க விரும்புவோர் எப்படி அவைகளுக்கு உரிய நேரத்தில் விண்ணப்பிக்க முடியும்? வேறு மாநிலங்களுக்குச் சென்று கல்வியைத் தொடருவதாக இருக்கும் மாணவர்களுக்கு நாம் எப்போது தேர்வு முடிவுகளை அறிவிக்கப் போகிறோம் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். சமுதாயத்தின் பரவலான மக்களின் உணர்வுகளை மதிக்காமல் கல்விக்கூடங்கள் பல்கலைக் கழகங்கள் செயல்படுகின்றன என்பதைத்தான் இத்தகைய நிலைமைகள் சுட்டிக்காட்டுகின்றன.

புதிய பல்கலைக் கழகங்கள் தேவை என்கிறோம். மத்திய அரசிடமிருந்து பெருவாரியான பணம் நமக்கு வந்தாக வேண்டும், உரிய அளவுக்கு இன்னும் வரவில்லை என்றெல்லாம் பேசுகிறோம். இப்படிப் பல்கலைக் கழகங்களை உருவாக்குவதில் பல கோடி ரூபாய்களைச் செலவழிக்கிறோம். அந்த எண்ணங்களுக்குக் குறுக்கே நான் நிற்கவில்லை. இவைகளெல்லாம் நியாயமான உணர்வுகள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் பல்கலைக் கழகங்கள் இந்த அளவுக்கு மோசமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா என்றுதான் கேட்கிறேன். இந்த ஆண்டு ஒரு கல்வி ஆண்டே இல்லை என்று சொல்லுகிற அளவுக்குப் பல்கலைக் கழகங்கள் வந்துவிட்ட பிறகு, பல்கலைக் கழகங்கள் ஏன் என்ற உணர்வுதான் நமக்கு ஏற்படுகிறது. எனவேதான் இங்கே பல்கலைக் கழகங்கள் உண்மையில் இயங்கிக் கொண்டிருக்கின்றனவா இல்லையா என்பதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். எண்ணிப் பார்ப்பது மட்டும் போதாது, இப்போது இருக்கிற நிலைமைகளைச் சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், இதன் காரணமாக கல்வித் துறைக்காக நாம் செலவிடுகிற பணம் அவ்வளவும் வீண் என்று நினைக்கக்கூடிய அவசியத்திற்கு நாம் வந்திருக்கிறோம். அது மட்டுமல்ல, இன்னொரு தகவலும் வந்திருக்கிறது

"Separate registration is required when results are available for the fifth Semester. But this was not possible now. It would mean further postponement of final examinations to the middle of October."

அதாவது இப்போது 5-வது செமஸ்டர் தேர்வு நடைபெற்றதில் வேறு பல கோளாறுகள் ஏற்பட்டதன் காரணமாக, அவற்றிற்கான முடிவுகள் அக்டோபர் மாதத்தில்தான் வரும் என்ற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட

நிலைமை நல்லதுதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையில் இருக்கிற இந்தச் சீர்கேட்டை உடனடியாக சீர் செய்ய வேண்டுமென்று அந்தத் துறைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறைக்காகவும் நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறார்கள். மேலும், 150 காவல் நிலையங்களை வைப்பதற்காக நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறார்கள். இது நியாயமானது, வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் காவல் துறையைப் பற்றி அரசு ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டிய அம்சத்தைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் காவல் துறை நிர்வாகம் என்பது மிகவும் சீர்கெட்டிருக்கிறது. It should be streamlined. அந்தத் துறை உடைந்து நொறுங்கிக் கொண்டிருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் நகர்ப்புறங்களில் 50 பேர் அல்லது 100 பேர் ஒன்றாகச் சேர்ந்து காவல் நிலையங்களைத் தாக்கிக் கொள்ளை அடிப்பது அல்லது காவல் துறையினரால் கைது செய்யப்பட்டவர்களை மீட்டு வருவது, போன்ற செய்கைகளில் ஈடுபட்டார்கள் என்று கேள்விப்படுவது வழக்கம். இதற்குக் காரணம் நகர்ப்புறங்களில் இத்தகைய நிகழ்ச்சிகள் பற்றி காவல் துறை முன்கூட்டியே அறிய முடியாத நிலைமை இருக்கிறது என்று நாம் கொள்ள முடியும். ஆனால் இன்றையதினம் சின்னஞ்சிறிய கிராமங்களில்கூட இத்தகைய நிலைமைகள் நடைபெறுவதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். சாதாரண சம்பவங்கள்—இரண்டு திருட்டுக்கள் அல்லது வழியே நடந்து போகிற பெண்ணைக் கேவலமாக அல்லது அசிங்கமாகப் பேசுவது, சினிமா பார்க்கிறபோது ஏற்படுகிற சண்டை, தண்ணீர் குடிப்பதில் ஏற்படுகிற சண்டை—போன்றவைகளெல்லாம் பெரும் கலவரங்களாக மாறி, ஜாதிக் கலவரங்களாக உருவெடுத்து அதன் காரணமாகக் காவல் நிலையங்கள் தாக்கப்படுவதும், அதில் காயமுற்ற ஒரு 30, 40 பேர் மருத்துவ மனைகளில் சேர்க்கப்படுவதும் அதில் ஒன்றிரண்டு பேர் சாவதுமான நிலைமை ஏற்படுகிறது என்றால், இதற்குக் காரணம் என்ன ? இத்தகைய நிலைமைகள் எப்படி கிராமப் பகுதிகளில்கூட ஏற்படுகின்றன ? நாகர்கோயில் பகுதியில் ஏற்பட்ட நிலைமைகளுக்குக்கூட இதுதான் காரணம். இன்றைக்கு இந்தப் பிரச்சினை பெரும் பூதாகாரமாக உருவெடுத்துக் கொண்டிருக்கிறது. இவைகளெல்லாம் ஆரம்பத்திலேயே கிள்ளி





எறிய முடியாதவைகளா என்றால் இல்லை. இதற்குக் காவல் துறையில் ஏற்பட்டிருக்கிற கோளாறுகள்தான் காரணம் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முன்பெல்லாம் ஒரு மாவட்டத்திற்கான உயர் அதிகாரிகளை நியமிக்கும் போது, அதிலும் குறிப்பாக காவல் துறைக்கும், மாவட்ட வருவாய்த் துறைக்குமான உயர் அதிகாரிகளை நியமிக்கும்போது, அரசாங்கம் மிகவும் எச்சரிக்கையாகவும் கவனத்தோடும் நடந்துகொள்ளும். ஒரு மாவட்டத்திற்கு கலெக்டரும், காவல் துறை அதிகாரியும்தான் முக்கியமானவர்கள். அந்த மாவட்டத்தின் அமைதிக்கும் அங்கே நடைபெறும் நடவடிக்கைகளுக்கும் அவர்கள்தான் பொறுப்பானவர்கள். இப்போது நியமிக்கப்படுகிற அனைவரும் தகுதியற்றவர்கள் என்று நான் சொல்லவில்லை. நியமிக்கப்படுகிற அதிகாரிகள் அனைவரும் திறமையுள்ளவர்கள் என்றும் நான் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் சிலரால் மட்டும்தான் சில மாவட்டங்களை நிர்வகிக்க முடியும். சிலரால் மட்டும்தான் சில சூழ்நிலைகளில் சரியான முடிவுகளை எடுக்க முடியும். அதையெல்லாம் கணக்கில் கொண்டு மாவட்டங்களுக்கான அதிகாரிகளை நியமிக்காமல் யாரைப் போட்டால், எந்த மாவட்டம் நிப்பற்றி எரியுமோ, அப்படிப்பட்டவர்களை அங்கே போடுகிற நிலைமை இருக்கிறது; அல்லது போட்டுவிட்டு பிறகும் அவர்களை அங்கிருந்து மாற்ற முடியாத நிலைமை இருக்கிறது. சிலரை சில மாவட்டங்களில் இருக்க வேண்டும் என்று போடுவதன் காரணமாக, அங்கே நாள்தோறும் கலவரம் ஏற்படும் நிலை உருவாகிறது. வெள்ளைக்காரன் காலத்திலிருந்து காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலம் வரை, இது முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. மாவட்ட ஆட்சித் தலைவரையும், காவல் துறை அதிகாரியையும் நியமிக்கும்போது, அவர்களுடைய பின்னணி என்ன, அந்த மாவட்டத்தின் பின்னணி என்ன, அவர்களை அங்கே போடலாமா ? அவர்களாலே அந்த இடத்தை நிர்வகிக்க முடியுமா என்பதையெல்லாம் கருத்தில் கொண்டு நியமித்தார்கள். ஆனால் இப்போது அதில் கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று நான் நம்புகிறேன். அதன் காரணத்தால்தான், பல மாவட்டங்கள் இன்றைக்கு அரசின் கரங்களை விட்டுப் போய்க் கொண்டிருக்கின்றன. அவர்களால் சமாளிக்க முடியவில்லை. ஒருவேளை அவர்கள் மற்ற துறைகளில் சிறப்பு வாய்ந்தவர்களாக இருக்கலாம், கெட்டிக்காரர்களாக இருக்கலாம். அந்தத் தகுதிகளுக்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால்

மாவட்ட நிர்வாகம் என்பது தனி, அதில் கோளாறு இருக்கும் வரையில், அதைச் சமாளிக்க முடியாது. அதன் காரணமாக எந்த அளவுக்குச் சங்கடங்கள் உருவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஓரிடத்தில் சமுதாயத்தில் மிகப் பெரிய மரியாதை உள்ளவர் ஒருவர் வீட்டிற்குச் செல்கிறார்கள். அவர் உடனே வரவில்லை. அவர் கலெக்டருக்காகக் காத்துக் கொண்டிருக்கவில்லை, சப்-கலெக்டருக்காகக் காத்துக் கொண்டிருக்கவில்லை என்ற காரணத்தால், "இவருக்கென்ன இவ்வளவு நேரம்?" என்று சொன்ன உடனே அவர்களை ஊரே சுற்றிக் கொள்கிறது. அதற்குப் பிறகு கலெக்டரையும் சப்-கலெக்டரையும் மீட்டுக் கொண்டு போவதற்கு ஒரு பெரும் படையே வர வேண்டியிருக்கிறது. அன்றைக்கு இது முடிந்து விடுகிறது. அதற்குப் பிறகு அவர்கள் என்றைக்கு இன்னொரு பிரச்சினை வரும், அப்போது தங்கள் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் காட்டலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் இதுதான் நடைபெறுகிறது.

காவல் துறையையும் மாவட்ட நிர்வாகத்தையும் பொறுத்தவரையில், They should be streamlined அவைகள் ஒழுங்குபடுத்தப் படவில்லை என்றால், நாம் எத்தனை புதிய காவல் நிலையங்களைக் கொண்டு வந்தாலும், பயன் இருக்கப் போவதில்லை. ஒவ்வொரு நாளும் கொள்ளை நடக்கத்தான் செய்யும். நூற்றுக்கணக்கில் மாநிலம் எங்கும் கொள்ளைகள் நடக்கத்தான் செய்யும். ஏழை எளிய மக்களின் அவதிகளைப் போக்குவதற்காக நாம் காவல் நிலையங்களை உருவாக்குகிறோம். ஆனால் அவைகள் முழுமையாகச் செயல்படாமல் இருந்தால், அதனால் நமக்கு எந்த நன்மையும் ஏற்படாது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தம் பொறுப்பில் வைத்துக் கொண்டிருக்கும் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கீடு கேட்டிருக்கிறார். இது தேவைதான் என்று சொல்லக்கூடும். இந்தக் கழகத்தின் மூலமாக கிராமங்களில் இருக்கிற உணவுப் பங்கீட்டுக் கடைகளில் நெல்லையும் அரிசியையும் முன்கூட்டியே வாங்கி வைத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நிதி தேவைப்படுகிறது என்று சொல்லலாம். அவசியமேற்படுகிறபோது, நிலைமையைச் சமாளிக்க இத்தகைய ஏற்பாடு தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்தப் பணத்தை வைத்துக்



கொண்டு பல நியாய விலைக் கடைகளில் சாராய பாட்டில்களையும் பிராந்தி பாட்டில்களையும் வாங்கி வைக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இது குறித்து ஆழ்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு தகவலும் எனக்கு வந்திருக்கிறது. அதாவது அப்படி வாங்கப்படுகிற பாட்டில்கள்கூட வெளியே மற்றவர்கள் வாங்குகிற விலையை விட அதிகமான விலை கொடுத்து வாங்கப்படுகின்றன என்று சொல்லப்

(முற்பகல் 11-40)

படுகிறது. ஆகவே அந்தத் தகவலைப் பார்க்கும்போது பணத்தை தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்களோ என்ற அச்ச உணர்வு இருக்கிறது. அந்த தவறை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் களைய வேண்டும். அப்படிப் பட்ட தவறுகள் இல்லையென்றால் மகிழ்ச்சி.

இறுதியாக மேலவைத் துறையைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. வராண்டாக்களில் மேசையைப் போட்டுக் கொண்டு வேலையைச் செய்வது முன்பு சேப்பாக்கத்திலும் எழிலகத்திலும், செவின்யூ போர்டிலும், செக்ரட்டேரியட்டிலும் இருந்தது. எல்லா இடங்களிலும் அது நீங்கிவிட்டது. ஆனால் இப்போது மேலவைத் துறை அலுவலர்கள் வராண்டாக்களில் உட்கார்ந்து கொண்டு வேலை செய்கிறார்கள். ஆகவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கட்டிட வசதியை ஏற்படுத்த வேண்டும். உடனே கட்டிட வசதியை ஏற்படுத்தாவிட்டாலும், இரண்டு, மூன்று அறைகளையாவது இந்தத் துறைக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். எங்களைப் போன்றவர்கள் அங்கே சென்று வராண்டாவில் உட்கார்ந்து பேச முடியவில்லை. டிராவலிங் அலவன்ஸ் செக்கையெல்லாம் அங்கே சென்றுதான் வாங்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : கவுன்சில் டிப்பார்ட்மெண்ட் அலுவலர்கள் வராண்டாவில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின தாழ்வாரத்தில் இல்லையே.

திரு. க. இராமமூர்த்தி : அவையின் தாழ்வாரத்தில் இல்லை. அலுவலக வராண்டாவில்தான் இருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் முறைப்படுத்தியாக வேண்டும். வராண்டாவில் உட்கார்ந்து வேலை செய்வது, நாங்கள் அங்கே சென்று நின்றுகொண்டு பேசுவது போன்ற நிலையைத் தவிர்க்க மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய லைப்ரரியைப் பொறுத்த வரையில், சென்ற ஆண்டுக்குப் பிறகு புதியதாக சில மாற்றங்களை உருவாக்கியிருப்பதற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் இட வசதியைக் கூடுதலாக்கினால் நல்லது. அதோடு மட்டுமல்லாமல், அங்கே போகிறவர்கள் புத்தகங்களாக இருந்தாலும் சரி, அங்கே ஒரே ஒரு பிரதிதான் இருக்கிறது. சில புத்தகங்கள், சட்டப் புத்தகங்களானாலும் சரி, வேறு சில புத்தகங்களாக இருந்தாலும் சரி, அங்கே ஒரே ஒரு பிரதிதான் இருக்கிறது, அவசியம் என்று நாங்கள் ஓடுகிறபோது, ஒன்று அந்தத் துறையின் செயலாளரிடம் இருக்கிறது, அல்லது அமைச்சரிடம் இருக்கிறது, அல்லது வேறு யாரிடமாவது இருக்கிறது என்ற தகவலைத் தருகிறார்கள். அவர்கள் வைத்துக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாததுதான். ஆகவே, எந்தப் புத்தகத்தை வாங்கினாலும், இரண்டு, மூன்று பிரதிகள் வாங்க வேண்டும். ஒன்று சம்பந்தப்பட்ட துறையில் இருப்பவர்களுக்கு இருக்க வேண்டும். ஒரு புத்தகம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வெளியே வழங்க இருக்க வேண்டும். ஆனால் ஒரு புத்தகம் எப்போதும் லைப்ரரியில் இருக்க வேண்டும். அங்கே வந்து உறுப்பினர்கள், மற்றவர்கள் பார்ப்பதற்காக அங்கேயே இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்குச் சில விவரங்கள் சில நேரங்களில் அவசியமாகத் தேவைப்படுகிறது. உதாரணத்திற்கு பஞ்சாயத்து தேர்தல் நடைபெறுவதாக இருந்தபோது, சில விவரங்களைத் தேடித் தேடிப் பார்த்தேன். அப்போது அரசாங்க அதிகாரிகள் எதையும் கொடுக்கக் கூடாது என்ற நிலைமை இருந்தது. அவர்கள் எங்களிடம் பேசக்கூட பயந்தார்கள். எந்தத் துறைக்குப் போனாலும், அரசாணையின் நகல்கள் கூட கிடைக்கவில்லை. ஆகவே நம்முடைய துறையிலேயே தகவல்களைக் கொடுக்க நமக்கென்று ஒரு முழுமையான அளவிலே செயல்படுகிற அளவிற்கு ஒரு ரெஃபரென்ஸ் செக்ஷன் தேவை. நாம் கேட்கக் கூடிய தகவலை பத்து நிமிடத்தில் அல்லது ஒரு மணி நேரத்தில் தருகிற அளவிற்கு 'Fully Equipped Department' இருக்க வேண்டும்.



அதற்கென்று ஒரு அசிஸ்டெண்ட் செகரட்டரியோ அல்லது டெபுடி செகரட்டரியோ நியமித்து நல்ல நிலைமைகளை உண்டாக்க வேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்க வேண்டுமென்றால், அவை ஆரம்பிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகக் கொடுக்க வேண்டும். அதற்கேற்ற முறையிலே செயல்பட டைப்பிஸ்டுகளை அதிகப்படுத்தியாக வேண்டும். சில நேரங்களில் போன் மூலமாகச் சொல்லி, பிறகு வந்து கையெழுத்துப் போட வேண்டிய நிலை ஏற்படுகிறது. அது கூட மாண்புமிகு தலைவர் அவர்களுடைய தாராளத்தினால்தான் அதிலிருந்து நாங்கள் தப்ப முடிகிறது என்றாலும் கூட, இதை முறைபடுத்த வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதற்காக மேசையைத் தட்டிப் பாராட்டலாமா ?

திரு. க. இராமமூர்த்தி : அப்போதுதான் நல்ல முறையில் செயல்பட முடியும் என்பதைச் சொல்லி இறுதியாக ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

உறுப்பினர்களுக்கு சம்பளத்தை உயர்த்தவில்லை என்பதுபற்றிக் கவலையில்லை. ஆனால் சில வசதிகளைச் செய்து தந்தாக வேண்டியது அவசியம். ஜனநாயகக் கடமைகளை ஆற்ற வேண்டுமென்ற நிலைமை வரும்போது, அந்த வசதிகள் இல்லாமல் செயல்பட முடியாது. அதிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கண்டிப்பாக சிக்கன நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை. இதிலே மட்டும் அவர் சிக்கனத்தைக் கடைப்பிடித்தால், மற்றத் துறைகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முடியாமல் போகும் என்பதால், இதிலே தாராளமாக இருக்க வேண்டும். எல்லா மாநிலங்களிலும், தமிழகத்திலே கூட காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது, வீடு இல்லாத சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு மனை வழங்கப்பட்டது. இப்போதுகூட பல மாநிலங்களில், தலைநகரில் வீட்டு மனை இல்லாத சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு மனை கொடுத்திருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூட கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே அந்த முறை இல்லாமல் இருக்கிறது. அதை மீண்டும் உருவாக்கி இங்கே தலைநகரிலே வீடு இல்லாமல் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுக்குத் தேவை என்று கேட்டால், அவர்களுக்குத் தருவதற்கு அரசு தாராளமாக முன்வர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை சட்டமன்றத்தின் முன் வைத்து 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் நாள் இந்த அவையில் ஆற்றிய உரையின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று நிதியமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு நாவலர் அவர்களை இந்த அவையில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பதை விட கொஞ்சம் அதிகமாக அறிந்தவன் என்ற உரிமையை நான் இப்போது எடுத்துக்கொள்வதிலே யாரும் தவறாக நினைக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த அளவிற்குப் பழகியிருக்கிறேன். மாண்புமிகு நாவலர் அவர்கள் பொது வாழ்க்கையானாலும் சரி, தனி வாழ்க்கையானாலும் சரி, ஒரு ரூபாய் செலவு செய்ய வேண்டுமென்று சொன்னாலும் கூட, பயன் உள்ளதுதானா என்று பார்த்து, பயனற்றது என்று தெரிந்தால், ஒரு ரூபாய் நோட்டை மாற்ற வேண்டாம் என்று நண்பர்களாக இருந்தாலும் அறிவுரை சொல்லக் கூடிய, கஞ்சப்பிரமுகர்கள் என்று நம்மால் அழைக்கப்படுகிற நிலையில் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சிக்கனம் என்று சொல்லலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : சிக்கனம் என்று சொன்னாலும், தமிழ் நாட்டிலே அப்படித்தான் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லக்கூடியவர்களில் தந்தை பெரியாருக்குப் பிறகு நமக்குத் தெரிந்தவர்கள் மாண்புமிகு நாவலர் அவர்களும், எங்கள் கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கும் பேராசிரியர் அவர்களும்தான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உவமானத்தைச் சொன்னாலே போதும், சிக்கனம், கஞ்சத்தனம் என்று சொல்ல வேண்டியதில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போலவே சிக்கனமாக இருக்கக் கூடிய நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் 502 கோடி ரூபாய் அளவிற்கு துணை மானியக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கும்போது, உள்ளபடியே இந்த அரசாங்கம் அவரை இப்படி இக்கட்டான நிலைக்கு ஆளாக்கிவிட்டதே என்று எண்ணி வருந்துகிறேன். எப்படி நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் சிக்கனமாக இருக்க விரும்புகிறார்களோ அதைவிட சிக்கனமாக இருந்து அரசாங்கப் பணத்தை வீணாகச் செலவழிக்கக் கூடாது என்று கருதுகிற நிதித் துறை



யின் செயலாளரும், அதற்கேற்ற நிதியமைச்சரும் இருந்துகொண்டு இப்படி ஒரு அறிக்கையை வைத்திருக்கிறார்களே என்று நினைக்கும்போது, இந்த அரசாங்கம் எங்கேயோ கோளாறுகள் செய்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இப்படிக் குறிப்பிடுவதற்கு மாண்புமிகு நாவலர் அவர்கள் நிச்சயம் வருத்தப்படமாட்டார்கள். ஜனநாயகத்தில், சட்டமன்றமும், மேலவையும்தான் மதிக்கப்பட வேண்டிய, போற்றப்பட வேண்டிய அமைப்புகள். இந்த அமைப்புகளுடைய அங்கீகாரம் இல்லாமல், 502 கோடி ரூபாய் அளவிற்குச் செலவு செய்துவிட்டு, பிறகு ஒப்புதலைப் பெறக் கூடிய நிலையை உருவாக்கியிருப்பதற்காக நாங்கள் இந்த அரசாங்கத்தைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. 502 கோடி ரூபாய் துணை மானிய கோரிக்கையில் கேட்கக் கூடிய அளவிற்குக் கட்டாயம் என்னவென்று பார்த்தால், தேவையற்ற செலவுகள், வீண் விரயங்கள், ஊதாரித்தனமான செலவுகள் எப்படி இந்த அரசாங்கத்தில் உருவாகியிருக்கின்றன என்பதை, நிதியமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவர அறிக்கையைப் பார்த்தாலே, புரிந்துகொள்ள முடிகிறது.

தேர்தல் தலைப்பிலே 33 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் அதிகமாகச் செலவு செய்ய ஒப்புதல் கொடுக்கும்போது, அதிலே வாக்காளர் பட்டியல் தயாரித்ததற்காக 11 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவழித்ததாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. தேர்தல் எப்போது நடக்கும் என்று தெரியாத சூழ்நிலை இருந்தாலும்கூட, வரும் என்ற நம்பிக்கையிலே அப்படி செலவுகளைச் செய்திருந்தாலும்கூட, அரசாங்கம் எடுத்தக் கொள்கையின் அடிப்படையில் இப்படி நாட்டிலே தேர்தல் நடக்காத சூழ்நிலை இருக்கும்போது, நடக்காத தேர்தலுக்காக அச்சடித்து வைத்திருக்கிற வாக்காளர் பட்டியலுக்காக 11 இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள் என்ற நிலையைப் பார்க்கும்போது, எப்படி பணத்தை வீண் விரயம் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

(முற்பகல் 11-50)

அடுத்து, சட்டமன்றப் பேரவை காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தினுடைய மாநாட்டிலே கலந்துகொள்வதற்காக, மாண்புமிகு பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மேற்கொண்ட சுற்றுப்பயணத்திற்கு என்று வருகின்ற நேரத்திலே செலவினம் என்ற கருத்திலே சொல்கிறேன். அவர்களைக் குறை சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை, ரூ. 1,15,900 செலவு செய்யப்பட்டது என்று இருக்கிறது. பொதுவாக காமன்வெல்த் பார்லிமென்டரி கூட்டங்களுக்கு ஒன்று சபாநாயகர் போவார். அவர் போகாவிட்டால்,

துணைச் சபாநாயகர் போவார். வெளிநாடுகளுக்குச் செல்வது என்பதும் அதற்கு அரசு அங்கீகாரம் கொடுப்பது என்பதும் ஏதோ பொழுது போக்குக்காகப் போவதுபோல இருக்கிறது என்று சொல்கின்ற ஒரு நிலை தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். உண்மையிலே இந்தப் பயணங்கள் நாட்டிற்குப் பயன் தருவதாக இருந்தால், அப்படிப் போவதிலேகூட எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஏதோ ஷெக்றிஞர்சன் மகாநாட்டில் அழைப்பு என்று சொல்லி, துணைச் சபாநாயகர் போன்றவர்கள் எல்லாம் அரசாங்கத்தினுடைய பணத்திலே பயணம் செல்வதும் அதற்காக இப்படிச் செலவுகள் செய்வதும் தேவைதானா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையிலே மானியக் கோரிக்கையிலே பல [illegible] யிருக்கிறார்கள். மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர் அவர்கள் தலைமையிடப் பணியாளர்கள் என்ற அந்தந் தலைப்பின்கீழ் எரி சாராய ஏற்றுமதி செய்வதில் காணப்படுகின்ற முறைகேடுகளை விசாரிக்கச் செல்லும் குழு என்று சொல்லியிருக்கிறார்கள்—அமைச்சர் சொல்வது "காணப்படுவதாக" என்று கூட சொல்லவில்லை, "காணப்படுகின்ற" என்று திட்டவட்டமாக, ஒரு தீர்ப்பு' எழுதுவதுபோல சொல்லியிருக்கிறார்கள், அந்த முறைகேடுகளை விசாரணை செய்யவேண்டும் என்று சொல்லியிருந்தாலும்கூட, அந்த அளவுக்கு பணம் விரயம் ஆகியிருக்கிறது என்று பார்த்தால், அந்தக் குழுக்கள், அந்தக் கமிஷன்கள் செயல்படவில்லை என்ற நிலை இருக்கும்போது, சம்பளமாக ரூ. 1,58,000 என்றும் அலுவலகத்திற்கு ரூ. 3,32,000 என்றும், அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஊதியமாக ரூ. 2,18,000 என்றும், மொத்தம் ரூ. 7,08,000 ஒதுக்கியிருக்கிறது. அரசாங்கம் ஊழல் செய்தது என்று குற்றம் சொல்கின்ற நேரத்திலே அதைப்பற்றி விசாரிக்கப் போவதாகச் சொல்லி அந்த விசாரணை தொடங்குவதற்கு முன்னாலேயே இவ்வளவு பணம் விரயம் ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். யாருடைய வீட்டுப் பணம் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். மக்கள் கொடுக்கின்ற பணத்தை இப்படியெல்லாம் விரயம் ஆக்கலாமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறைக்கு எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கிறோம். 6,61 76,000 ரூபாய் கூடுதல் நிதி வேண்டும் என்று துணை மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே வேடிக்கை என்னவென்றால், ஒரு பக்கத்திலே அந்தத் துறை எப்படியெல்லாம் செயல்படு





கிறது என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அங்கே சட்டம் ஒழுங்கைக் கண்காணிப்பதற்காக காவலர்கள் வேண்டும், சப்-இன்ஸ்பெக்டர்கள் வேண்டும் என்று தமிழ்நாடு முழுவதும் விண்ணப்பங்கள் கோரி, விண்ணப்பங்கள் வந்து, அந்தத் தேர்வு நடந்து யார் யார் என்று அரசாங்கத்திற்கு அனுப்பக்கூடிய சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "அந்தத் தேர்விலே ஊழல் நடந்திருக்கிறது, அந்தத் தேர்வே தப்பு" என்று சொல்கின்றார். இப்படி இருந்தால், அரசாங்கத்திற்கு விவரம் இல்லாமல் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட செலவுகளை நாம் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒன்று சொல்கிறேன். நம் நாட்டிலே சி.ஐ.டி. இருக்கிறது. இந்த சி.ஐ.டி. மிகத் திறமையான சி.ஐ.டி.-கள். உலகத்திலேயே இன்றையதினம் போற்றப்பட வேண்டுமென்ற நிலையில் இருப்பவர்கள் நம் நாட்டு போலீஸ் துறையினர் தான். அந்த அளவுக்கு இருக்கிறது. வேலூரிலே நடைபெற்றிருக்கின்ற திருட்டு வழக்கில், பஸ் கொள்ளை வழக்கில், வட மாநிலத்திலே ஒரு கிராமத்திலே இருக்கக்கூடிய கொள்ளைக்காரர்களைக் கொண்டு வந்து காண்பித்தார்கள். அப்படிப்பட்ட திறமைமிக்க காவல் துறை இருக்கும்போது, கன்னியாகுமரி மாவட்டத்திலே கலவரம் ஏற்படுகிறது. நான் அந்தக் கலவரத்திற்கான காரணங்களுக்குள்ளே போகவில்லை. நம்முடைய கட்சித் தலைவர் அவர்கள் மற்ற எல்லாக் கட்சித் தலைவர்கள் எல்லாம் அமைதி நிலவ வேண்டுமென்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். அதிலேயும் சில பேர்கள் களங்கம் கற்பித்தார்கள். அதைப்பற்றிக் கவலை இல்லை. இப்படி திறமையானவர்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற நேரத்தில், இரண்டு ஆண்டுகளாகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையை சி.ஐ.டி. க்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்களா இல்லையா என்பது தெரியவில்லை, அதைப்பற்றிக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, இந்த மாதம் முதல் துப்பாக்கி சூடு மண்டைக்காடு புதூர் என்ற இடத்திலே நடைபெற்றது. 6 பேர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய மணவாளக்குறிச்சியிலே இருக்கும் காவல் நிலையத்திலே இது பற்றிப் புகார்கள் சென்றுகொண்டிருக்கின்றன. அங்கேயுள்ள காவல் துறையில் இருக்கக்கூடிய போலீஸ் பந்தோபஸ்து போதாது என்று சொல்லி, மாவட்ட சூப்பிரண்டெண்ட் ஆப் போலீஸுக்கு எழுதுகிறார்கள். தினந்தோறும் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். நிலைமை கட்டுக்கு அடங்காமல் போகிறது. கலவரம் முற்றுகிறது. காவலர்கள் அதிகமாக

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 மார்ச் 24

வேண்டும் என்று கடிதங்கள் போய்க்கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த எஸ்.பி. யினுடைய கவனக் குறைவால், முறைப்படி நடவடிக்கை எடுக்காத தால், காலத்திலே கட்டளைகள் பிறப்பிக்கப்படாத காரணத்தால், அங்கே 6 பேர்கள் இறந்தார்கள். அது மட்டுமல்ல, அதனுடைய விளைவுகள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்திலே இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் கொடுக்கிறோம். அப்படி கொடுத்தால்கூட இந்த இலாகா செயல் படாமல் இருக்கிறது. அப்படி இருந்தால், பலன் யாருக்குப் போய்ச் சேரும் என்பதைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே கல்வித் துறையிலே கூடுதல் செலவு என்று சொல்லி இப்போது நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். நிதி இலாகா எப்போதுமே சுறுசுறுப்பாக இருக்கக்கூடிய இலாகா என்பது மட்டுமல்ல, இந்த ஒரு இலாகாவிலேதான் பிழைகள் வராது. இறுதி மானியக் கோரிக்கைகளைக் கொடுக்கும்போது, புள்ளிவிவரங்களில் பிழைகள் வரும், அச்சிலே பிழைகள் எல்லாம் வரும். ஆனால் இந்த நிதி இலாகாவிலே இன்று எவ்வளவு பிழைகள் வந்திருக்கின்றன என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். கல்வி என்ற தலைப்பிலே எங்களுக்குக் கொடுத்திருக்கின்ற அறிக்கையில், கூடுதலாகத் தேவைப்படுகின்ற பணம் ரூ. 25,63,78,000 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் விவரத் தைப் படித்துப்பார்த்தால், அதில் ரூ. 20,63,78,000 என்பதற்கான விவரங்கள் தான் இருக்கின்றன. ஒரு சமயம் நமக்குத் தெரியாமல் எங்கே இந்த 5 கோடிக்கு தனியாக நமது நிதி அமைச்சர் அவர்கள் ரகஸ்யமாக சொல்லியிருக் கிறார்களோ என்று பார்த்தேன். அவர்கள் ரகஸ்யமாக எதையும் வைப்பார்கள் அல்ல. தமிழிலே இப்படி இருக்கிறது. ஆங்கிலத்திலே எப்படி இருக் கிறது என்று பார்த்தேன். அதிலே சரியாக இருக்கிறது. கல்வித் துறைக்கு ரூ. 20,63,78,000 என்று இருக்கிறது. அதிலே அப்படி குறிப்பிட்டிருக் கிறார்கள். இப்படி ஆங்கிலத்திலே ஒரு குறிப்பு, தமிழிலே ஒரு குறிப்பு என்று வரக்கூடிய அளவிலேதான் இந்த நிதி இலாகா இருக்கிறது, இப்படி நிதி இலாகா செயல்படுகிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கல்வியைப்பற்றிக் குறிப்பிடுகின்ற நேரத்திலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். நாம் கல்விக்காக எவ்வளவோ செலவு செய்கிறோம் அதிலே தனியார்



1982 மார்ச் 24] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கல்லூரிகளை அரசாங்கம் இன்றைய தினம் ஏற்றிருக்கிறது என்றாலும், நாம் எல்லாம் போற்றுகின்ற அந்த பச்சையப்பன் கல்லூரியை அரசாங்கம் ஏற்று அரசாங்க அதிகாரிகளை, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையெல்லாம் அந்தக் குழு விலே நியமித்திருக்கிறார்கள். இன்றையதினம் அந்தக் கல்லூரியும் அறக் கட்டளையும் எந்த அளவுக்கு மோசமாக இயங்குகின்றன என்பதற்கு உதார ணம் சொல்கிறேன். அந்த அறக்கட்டளையை நிர்வகிக்கக்கூடிய செயலாளர் ஆறு மாதமாக வேலைக்குப் போகவில்லை. 5 மாதம் வேலை செய்துவிட்டு அத்தோடு இந்த வேலை வேண்டாம் என்று லீவ் போட்டுவிட்டார். வேறு ஆள் நியமிக்கப்படவில்லை. வேறு இடத்திலே இல்லாவிட்டாலும் பரவா யில்லை. ஒரு அறக்கட்டளையிலே செயலாளர் இல்லாவிட்டால், நிர்வாகம் என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதனுடைய விளைவு என்னவாகும் என்பது நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தான் தெரியும். கொடை வள்ளல் செங்கல்வராயன் அவர்கள் தன் வாழ் நாளிலே சம்பாதித்த கோடிக்கணக்கான ரூபாய்களை எல்லாம் இந்தப் பச்சையப்பன் அறக் கட்டளைக்கு எழுதி வைத்துவிட்டு, தனக்குப் பின்னாலே வருகின்ற சந்ததியினருக்கு,—இதிலே ஒன்றை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும், கோடிக்கணக்கான ரூபாய்களை வைத்துவிட்டு அவர் சந்ததி யினருக்கு—பென்ஷனாக மாதம் ரூ. 100 கொடுக்க வேண்டும் என்று உயில் எழுதி வைத்திருக்கிறார்கள். அவர் லட்சக்கணக்கில் வைக்கவில்லை, கோடிக்கணக்கில் வைத்திருக்கிறார்கள். ஒரு கோடீஸ்வரனுடைய குடும்பத் திலே பிறந்த குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். அவருடைய பேரன் சமீபத்திலே இறந்துவிட்டார். அவருடைய மனைவிக்கு பென்ஷன் போக வேண்டும். அதிகம் கூட இல்லை. இந்த ரூ 100 ஐக்கூட அவர்களுக்கு இந்த ஆட்சியில் அனுப்பவில்லை. அதைக்கூட இந்த அறக்கட்டளையி லிருந்து கொடுக்க முடியவில்லை, அனுப்பவில்லை என்றால் இந்த நிர்வாகம் எந்த அளவிலே இருக்கிறது, செயல்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்த அறக்கட்டளைகளிலே இப்படிப்பட்ட அவல நிலைமைகள் இருக்கக் கூடாது என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவத் துறையிலே ரூ. 6,51,28,000 நிதி தேவை என்று கேட்டிருக்கிறார்கள். பொது மருத்துவ மனையிலே மருந்துகள் வாங்கு வதற்குக் கூடுதல் நிதி ரூ. 21,43,000 வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், நான் பொதுவாக மருத்துவ மனைகளிலே மருந்துகள் வாங்க வேண்டுமென்று சொல்வதிலே தடை சொல்லவில்லை. ஆனால் அப்படி வாங்கப்படுகின்ற மருந்துகள் எல்லாம் முறையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்று பார்க்க

வேண்டும். வாங்கவேண்டிய மருந்துகளை வாங்க வேண்டிய நேரத்திலே வாங்குகின்றார்களா, சரியாகப் பயன்படுத்துகிறார்களா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதை நான் நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே 1981 நவம்பர் 28 ஆம் தேதி, இந்தத் துணை மானியத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றோமே, (அந்த ஆண்டு பற்றி ஒரு குறிப்பை எடுத்துச் சொல்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

"One Lay Secretary, one store keeper and 2 assistants attached to the medical store of the Madras General Hospital have been placed under suspension on charges of irregularities in the purchase of radium.........used in the treatment of cancer. The Lay Secretary is alleged to have placed orders to buy and stock radium . . for the next 10 years without permission from the competent authorities and some irregularities were discovered later."

(நண்பகல் 12.00)

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்திற்கு இந்தச் செய்தி தெரிந்திருக்கலாம். பத்து ஆண்டுகளுக்குத் தேவைப்படுகிற மருந்துகளை, தேவைப்படுகிற பொருள்களை அரசாங்கத்திலே இருக்கக்கூடிய சில அதிகாரிகள் எந்தக் காரணத்தாலோ வாங்கி வைத்துவிடுவதால், இப்படியெல்லாம் அடிக்கடி சட்டமன்றத்தின் மூலமாக நிதியை ஒதுக்கித்தான் தீர வேண்டுமா ; இப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்கக் கூடாதா, அதற்கான நடவடிக்கைகளை எடுக்கக் கூடாதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேளாண்மையைப்பற்றிக் குறிப்பிடுகிற நோக்கில் சொல்லியிருக்கிறார்கள். 29,93,56 ஆயிரம் ரூபாய் கூடுதலாக நிதி வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் நிதி அமைச்சரவர்களிடத்தில் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒரு பக்கத்தில் விவசாயிகளுடைய கடனை ரத்து செய்துவிட்டோம், வட்டிகளை ரத்து செய்துவிட்டோம் என்று சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் இந்த அவையில் பேசும்போதும் சரி, வெளியில் பேசும்போதும் சரி, 200 கோடி ரூபாய்க்குக் கடன்களை ரத்து செய்திருக்கிறோம் என்று பெருமையாகப் பேசுகிறார்கள். அப்படி ரத்து செய்தால், பெருமைப்பட வேண்டிய ஒன்றுதான். கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி





விவரங்களைப் பார்க்கும்போது, வேளாண்மை—20-வது மானியக் கோரிக்கையில் 29 கோடியே 93 லட்சம் ரூபாய் தேவை என்று சொல்லும்போது, வசூலிக்க இயலாதது என்று கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்ட கடன்கள் என்று 19 கோடியே 67 லட்சம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் நினைத்தேன், வேளாண்மையில் இருக்கலாம், கூட்டுறவுத் துறையில் இருக்குமே, அதையும் கணக்கிட்டுப் பார்க்கலாமென்று. பக்கம் 108-ல் சப்-டிவிஷன் 14-ல் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக உழவர்களுக்கு வட்டி நிவாரணம் அளிக்க ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக 29 கோடியே 67 லட்சம்தான் விவசாயிகளுக்குத் தள்ளி இருக்கிறார்களா ? அல்லது உள்ளபடியே 200 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறார்களா என்ற விவரங்களை இந்த அவையில் தருவதன் மூலம் விவசாயிகள் நிம்மதி அடைவதோடு, எங்களைப் போன்றவர்களும் விவரம் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்குமென்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவைப் பொறுத்தவரையில், 79 கோடியே 60 லட்சம் ரூபாய் மேலும் நிதி தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய கூட்டுறவு வங்கிகள் உழவர்களுக்கு உதவி செய்ய 77 கோடியே 99 லட்சம் ஒதுக்கப் போகிறோமென்று சொல்லுகிறார்கள். ஆனால் நாட்டிலுள்ள நிலைமையை மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் கவனத்திற்கு மட்டுமல்ல, அனைவருடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு மாத காலமாக விவசாயிகள் எப்படி வேதனைக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு ஆண்டுக்காலமாக உழைத்து, பயிரிட்ட கரும்பை சர்க்கரை ஆலையில் கொடுத்துவிட்டு, கொடுத்த கரும்புக்குப் பணம் கேட்கும்போது, சர்க்கரை ஆலைகள், பணமில்லை, கூட்டுறவு வங்கிகளை நம்பியிருக்கிறோம், அவர்கள் இன்னும் கொடுக்கவில்லை என்று ஒரு மாத காலமாகப் பணம் கொடுக்காமல் இருக்கிறார்கள் இன்னொரு பக்கத்தில் விவசாயிகள் கரும்பு பயிரிட கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்த விவசாயி என்ன செய்ய முடியும் ? விற்ற கரும்பை விலை கொடுத்து வாங்கிய அரசாங்கம், விலையைக் கொடுத்தால்தான் கூட்டுறவு சங்கத்திற்கு அவன் கட்ட முடியும். அரசாங்கம் என்ன செய்கிறதென்றால், 20ஆம் தேதிக்குள்ளாகக் கட்டாவிட்டால், உங்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்வோமென்று சொல்லி, அங்கேயுள்ள கூட்டுறவு சங்கங்கள் நடவடிக்கைகள் எடுத்து, ஜப்தி நடவடிக்கைகள் நடக்கின்றன. தமிழ் நாட்டிலேதான் நாம் இருக்கிறோம். இந்த அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன, கூட்டுறவு வங்கிகளும் இருக்கின்றன. கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கரும்பைக் கொடுத்த விவசாயிக்கு அவர்கள் பணம் கொடுக்காத நோக்கில், வாங்கிய கட

னைத் திரும்பக் கட்டவில்லை என்றால், ஜப்தி செய்வேன் என்றால், யாரிடத்தில் அவன் கடன் வாங்குவான்? குறைந்தபட்சம் அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில் உடனடியாக ஒரு உத்தரவு பிறப்பித்து, சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு சப்ளை செய்திருந்தால், அந்தப் பணத்தை 'அட்ஜஸ்ட்' செய்து கொள்ள கன்செண்ட் கொடுங்கள் என்று கேட்டு வாங்கி, நிலைமைகளைச் சீர்திருத்த முயற்சிக்க வேண்டும் இந்த நேரத்தில் ஜப்தி நடவடிக்கை நல்லதல்ல. நிதியமைச்சரவர்கள் இதை மனிதாபிமானத்தோடு, விவசாயிகள்மீது அக்கறை வைத்து, இது குறித்து முதலமைச்சர், கூட்டுறவு அமைச்சரவர்களிடத்தில் பேசி, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் ஜப்தி நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு இன்றையதினம் மார்வாடிக் கடையில் பணம் பெற முடியாமல், வங்கியில் கேட்க முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் நிலையைக் கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மானியக் கோரிக்கை 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் என்று சொல்லி, தன்னிறைவுத் திட்டத்திற்கு 13 கோடியே 85 லட்சம் தனியாக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் நிதி இலாக்கா விளக்கம் கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு செலவிற்கும் விளக்கம் கொடுத்திருக்கிறது. சமுதாய நல வளர்ச்சித் திட்டம் பற்றி 1 முதல் 11 பிரிவு வரை விளக்கங்கள் கொடுத்திருக்கிறார்கள், இந்தச் செலவு எதற்கு என்று. 12ஆம் பிரிவு—தன்னிறைவுத் திட்டம் பற்றியது. அதற்கு 13 கோடியே 85 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தாலும், என்ன காரணத்தாலோ விளக்கங்கள் தரப்படவில்லை. அதை நிதி அமைச்சரவர்கள் விளக்கினால் பொருத்தமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவிற்கு 6 கோடியே 36 லட்சம் ரூபாய் நிதி தேவையென்று சொல்லும்போது, மதுரை மாவட்டத்தில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் கட்டிடங்கள் கட்ட 1 கோடியே 60 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் நினைத்துக்கொண்டிருந்தது, சத்துணவுத் திட்டத்திற்காக நாம் ஒதுக்கும் பணம், உணவாகப் போகிறதென்பதுதான். சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்ற கட்டிடங்கள் கட்டப்போகிறோமென்றும், மதுரை மாவட்டத்தில் 1 கோடியே 60 லட்சத்தில் கட்டிடங்கள் எழும்ப இருக்கின்றன என்றும் விவரங்களைப் பார்க்கும்போது, சத்துணவாக அவர்களுக்கு எவ்வளவு போகப் போகிறது, அதனுடைய பெர்சன்டேஜ் என்ன என்ற விவரமில்லை. சத்துணவு கொடுப்பது நல்ல திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டம் பசியோடு, பட்டினி



யோடு, நல்ல உணவு கிடைக்கவில்லையே என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு சத்துணவு கொடுக்கப் போகிறோமென்று அறிவித்துவிட்டு, அது உணவாக இல்லாமல் கட்டிடமாக எழும்பினால், அதற்குப் பிறகு இப்படிப்பட்ட திட்டங்கள் நீட்டிப் பயனில்லை. இப்படிப்பட்ட திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைப் போக்குவரத்துப் பணிகள் என்று 4 கோடியே 10 லட்சம் ரூபாய் கூடுதல் நிதி வேண்டுமென்று கேட்கும்போது, பொதுவாக என்ன கருத்து சொல்லியிருக்கிறார்கள் என்றால், பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்குப் பங்கு மூலதனமாகவும், பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்குப் பங்கு மூலதனமாகவும் ரூ. 2.59 கோடியும் ரூ. 1.50 கோடியும், ஏறக்குறைய ரூ. 4.9 கோடி கொடுக்க இருக்கிறோமென்று அறிவித்திருக்கிறார்கள், வேடிக்கை என்னவென்றால், 2 போக்குவரத்துக் கழகங்களும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாக அறிக்கையில் சொல்கிறார்கள். இப்படி அரசாங்கத்திலே இருக்கக்கூடிய பல்வேறு துறைகள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும்போது, கடனாகக் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். லாபம் வந்தால், கடனைத் திருப்பிக் கொடுப்பார்கள். பங்கு மூலதனம் என்று கொடுத்தால், ஒரு கால கட்டத்தில் அந்தக் கம்பெனி நஷ்டத்தில் இயங்கினால், நாம் போடுகிற மூலதனம் ஜீரோவாக இருக்கும். இன்னும் சொல்லப் போனால், மைனஸ் கணக்கில் இருக்கும். திரும்பி வரும் பணமாக இராது. நஷ்டத்தில் உள்ள இப்படிப்பட்ட நிறுவனங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்வதைவிட, கடனாகக் கொடுங்கள். என்றைக்காவது திரும்பி வரட்டும். கடன் வாங்கியிருக்கிறோம் என்ற உணர்வோடு அவர்கள் பணியாற்றுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பில் 11 கோடியே 86 லட்சம் ரூபாய் நிதி கேட்டிருக்கிறார்கள். அவசரப் பயனுக்கென ஹெலிகாப்டர் விமானம் வாங்க 70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள்கூட எவ்வளவு இன்றியமையாதது என்று சொன்னார்கள். வி.ஐ.பி. அவசரப் பயனுக்கென செல்ல ஹெலிகாப்டர் வாங்க 70 லட்சம் ரூபாய் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவசரமாகக்கூட இருக்கலாம். வேண்டாமென்று சொல்லவில்லை. 70 லட்சமென்ன, ரூபாய் 7 கோடியில் விமானம்கூட வாங்கலாம். இன்னமும் இந்த நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே 56 சதவிகிதம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னமும் பட்டினிச் சாவு இருக்கிறது. அப்படிச்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1982 மார்ச் 24

செத்துவிட்டால், 100 ரூபாய் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லும் இந்த நாட்டிலே, என்றைக்கோ நாட்டிலே ஏற்படும் விபத்தை அவசரம் காரணமாக நாம் போய் பார்க்க ரூ. 70 லட்சம் செலவில் ஹெலிகாப்டர் தேவைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நான் பேசும்போது ஒன்று குறிப்பிட்டேன். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனித்திருப்பார்கள். அன்றைக்கு நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு ஏற்பட்ட நேரத்தில் அந்த மாவட்டம் தமிழகத்திலிருந்து துண்டிக்கப்பட்டது. நீலகிரியில் என்ன ஏற்பட்டது? மக்கள் இருக்கிறார்களா இல்லையா என்று பார்க்க முடியாத நிலை இருந்தது. கோவையிலிருந்து செல்வதற்கு என்ன ஏற்பாடு இருக்கிறது என்று யோசித்துப் பார்த்த நேரத்தில், வேறு இடங்களிலிருந்து ஹெலிகாப்டரைக் கொண்டுவர முடியுமா என்று ஆலோசனை செய்து, திருவனந்தபுரத்திலிருந்து அதைத் தருவிக்க ஏற்பாடு செய்ததில் ஒரு நாள் தாமதம் ஏற்பட்டது. நீலகிரி என் பது என் தொகுதி சம்பந்தப்பட்ட மாவட்டம். அங்கு மக்கள் இருக்கிறார்களா என்ற அச்சம் கூட எங்களுக்கெல்லாம் ஏற்பட்டது. அந்த அடிப்படையில் சிந்தித்துச் செயல்பட்டதால் தான், அதை உடனே தருவித்தோம். அந்த அடிப்படையில் தான் அந்தக் கருத்தைத் தெரிவித்தேன். ஆகவே இப்போதாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலுள்ள உள் உணர்வைப் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நிலச்சரிவு என்பது நீலகிரியில் என்பதல்ல, தமிழகத்தில் எந்தப் பகுதியிலும் வரக்கூடாது. தமிழக மக்களுக்கு அப்படிப் பட்ட ஒரு அவல நிலை, ஆபத்து எந்தப் பகுதியிலும் வரக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை உள்ளவன் நான். அன்றையதினம் அதற்காக ஒரு நாளைக்கு 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருப்பதாக இங்கே சொன்னார்கள். ஆனால் இப்போது 70 லட்சம் ரூபாய் செலவு செய்து இதை வாங்கியிருக்கிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அத்தியாவசியமாக நமக்கு வேண்டும் என் றபோது நமக்குக் கிடைப்பதில்லை, அதனால் தான் வாங்கியிருக்கிறோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** வேண்டுமென்று நினைக்கிறபோது, நமக்கு எதுவுமே உடனே கிடைப்பதில்லை. ஆனால் அது வேலை செய்யவில்லை என்று சொன்னால், அவ்வளவும் வீண். தொடரா செலவு 70 லட்சம் ரூபாய். இனி அது தொடர்பாக ஏற்படுகின்ற தொடர் செலவு எவ்வளவு என்பதை



1982 மார்ச் 24] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

எண்ணிப் பார்க்க வேண்டும். பணியாளர்களுக்கான ஊதியம், மெயின்டெனன்ஸ் செலவு எல்லாம் இருக்கிறது. ஆகவே ஹெலிகாப்டரே கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்த நாட்டிலே எல்லாம் இருந்து விட்டு, அது ஒன்றுதான் இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமை வரும்போது செய்யலாமே தவிர, இதை வற்புறுத்தலாமே தவிர, இப்போது எதுவும் இல்லாத நிலையில் அது வேண்டுமா என்பது தான் என்னுடைய கேள்வி. இப்படிப்பட்ட சூழ் நிலையில் இப்படிப்பட்ட வீண் விரயமான செலவுகள் தேவைதானா? நம்முடைய மக்களுடைய வரிப்பணத்திலிருந்து 187.57 கோடி ரூபாய் கடன் கொடுக்கிறோம். மின்சார வாரியத்திற்கு மட்டும் 65.5 கோடி ரூபாய் கொடுக்கிறோம். பல்வேறு துறைகளுக்கு இந்த வகையில் கொடுக்கிறோம். ஒரு தனி நபர் கடன் வாங்கினால், அந்தக் கடனை அரசுக்குத் திருப்பித் தரவில்லை என்று சொன்னால், அரசு சில பேரிடத்தில் எப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஜப்தி நடவடிக்கை என்பது மட்டுமல்ல, ஹைக்கோர்ட்டுக்குக் கூட போகிறோம். அந்தக் கடனை அவனிடமிருந்து வாங்க எவ்வளவோ முயற்சி செய்கிறோம். 'சீல்' கூட வைக்கிறோம். அப்படியே வேண்டாதவராக இருந்தால், அவர் கடன் வாங்கியிருந்தால், தனிப்பட்டவராக இருந்தால், இல்லை கம்பெனியாக இருந்தால், அதை மூடக் கூட முயற்சி பண்ணுகிறோம். தனியாரிடத்திலிருந்து கடனைப் பெற இப்படிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்கிற ஒரு அரசு தான் கொடுக்கிற பணத்தில் இதுவரை எவ்வளவு வந்திருக்கிறது, இனி வராதது எவ்வளவு, அப்படி வரவில்லையென்று சொன்னால், அதை வரவழைக்க ஏதாவது வழிமுறைகள் இருக்கின்றனவா என்பது பற்றி திட்டம் தீட்டியிருக்கிறதா, நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று பார்த்தால்—நான் சொல்லவில்லை—ஆடிட் ரிப்போர்ட்டில் இதுபற்றி கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. பல நிறுவனங்கள் அரசு கொடுத்த கடனைத் திருப்பி கட்டவில்லை, வட்டி கட்டவில்லை, மூலதனம் வரவில்லை, அந்தக் கம்பெனியில் போட்ட மூலதனப் பங்கைக் கூட காணவில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. யாரை நம்பி இந்த 157 கோடி ரூபாயைக் கடனாகக் கொடுக்கிறோம்? இப்படியெல்லாம் கடன் கொடுப்பதை அரசு தவிர்க்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், அரசின் பணம் வேறு சிலரின் கைக்குப் போய்விடும், அது திரும்ப மக்களுக்குப் போய்ச் சேராது. ஆகவே இப்படி கொடுக்கின்ற பணத்தைக் கொண்டு அரசு திட்டங்களைத் தீட்டி மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அதைப் பயன்படுத்த வேண்டும். இதை நான் அரசுக்கு ஒரு யோசனையாகச் சொல்கிறேன்.

இன்றைக்கு இந்த இறுதி துணை நிதி நிலை அறிக்கையின் மூலம் 500
கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான வழிவகையைச் செய்
திருக்கிறார்கள். அதேசமயத்தில் மத்திய அரசு தன்னுடைய ஊழியர்
களுக்கு 4 அகவிலைப்படி உயர்வை அறிவித்திருக்கிறது. ஆனால் இந்த
மாநில அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு இன்னும் அதை வழங்கவில்லை.
ஒருவேளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, இது
பற்றிச் சொல்லக்கூடும். இன்றைக்கு மாநில அரசு ஊழியர்கள் இந்த 4
டி.ஏ.-யை எதிர்பார்த்து பல பேர் கடன் வாங்கியிருக்கிறார்கள். விரைவில்
இந்த டி.ஏ. அரியர்ஸ் வரும் என்று நம்பி வீட்டிலுள்ள துணி முதற்கொண்டு
தட்டுமுட்டு சாமான்வரை வைத்து கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.
அவர்களுக்கு எந்தவிதமான ஏமாற்றமும் இல்லாமல், இந்த 4 டி.ஏ.-யையும்
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

பணிக்காலத்தில் இறந்தால், 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும் என்று
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் அறிவிக்கப்பட்ட திட்டத்தைத்
தொடர்ந்து ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கும் இதை வழங்க வேண்டு
மென்று அவர்கள் வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசின் ஆண்டுத்
திட்டத்தைப் போல் இறுதி துணை நிதி நிலை அறிக்கைக்கும் கூட 500 கோடி
ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து செலவு செய்திருக்கும் நேரத்தில்
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதில் கொஞ்சம் அவருடைய தாராள
மனதைக் காட்டி இத்திட்டத்தைப்பற்றி அறிவிக்க வேண்டுமென்று கேட்டு
வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி
விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி
நிலை அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டு அதுபற்றி மாண்புமிகு உறுப்
பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் இங்கே வழங்கியிருக்
கிறார்கள். நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்களையெல்லாம் இந்த அறிக்கை
யிலேயே மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இப்படி இருந்தும்
கூட ஒவ்வொரு துறைக்கும் இதை இதைச் செய்ய வேண்டும் என்று வேண்டு
கோள்களையும், கோரிக்கைகளையும் எவ்வளவு தூரம் வைக்க வேண்டுமோ
அவ்வளவையும் வைத்து இங்கேயே 'பதில் சொல்லு' என்று சொல்லக்கூடிய
அளவுக்கு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வழங்கியிருக்
கிறார்கள். அப்படி பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள்





வழங்கும்போது, பல துறைகளைப்பற்றிக் குறிப்பிட்டு கருத்துக்களைச்
சொன்னார்கள். அந்தந்தத் துறைகளில் செய்யப்பட வேண்டியவை, செய்யப்
படாமல் விட்டுப் போனவை, அவற்றில் உள்ள குறைபாடுகள் இப்படி பல
விதங்களில் கருத்துக்களைச் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது மட்டும், அந்த
முறையை மிகவும் நல்லமுறையில் கையாண்டார்கள். ஒவ்வொன்றையும்
பற்றிச் சொல்லுகின்றபோது, அந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட அமைச்
சரை அழைத்து, அந்த அமைச்சருக்குச் சொல்கிறேன், இந்த அமைச்சருக்குச்
சொல்கிறேன் என்று ஒவ்வொரு அமைச்சராகச் சொல்லி இறுதியில் நான்
செய்ய வேண்டியதையும் தனியாகச் சொன்னார்கள். அதுபோல் ஒவ்வொரு
மாண்புமிகு உறுப்பினரும் அந்தந்த அமைச்சருக்கு உரியது என்று குறிப்
பிட்டு அந்தந்த கருத்துக்களைச் சொல்லிவிட்டால், சம்பந்தப்பட்ட அமைச்
சர்கள் அவையில் இல்லாமல் இருந்தாலும் கூட, உரையைப் படித்துப்பார்த்து
விட்டு அந்தந்தத் துறையின் மூலம் அவர்கள் நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக
இருக்கும். அந்த வகையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊரக
அமைச்சருக்கு என்று சொன்னார்கள். தொடர்ந்து சட்ட அமைச்சருக்குச்
சொல்ல வேண்டியதைச் சொன்னார்கள். பிறகு தொழிலாளர் நல அமைச்சர்
அவர்களுக்குச் சொன்னார்கள். அதன் பிறகு, கல்வி அமைச்சர் அவர்களுக்
குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு இறுதியில் எனக்குச் சொல்ல
வேண்டிய கருத்துக்களையும் இங்கே எடுத்து வைத்தார்கள். அவர்கள் பேசும்
போது, பல கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். பல மாண்புமிகு
உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.
இது சொல்லுவதற்கான இடம், சொல்லுவதற்கான நேரமும் கூட என்பதை
ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சொல்லப்பட்ட அனைத்துக்கும் முழு அளவில்
இங்கே பதிலளிக்க இயலாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
என்றாலும் இங்கே எடுத்துச்சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு மதிப்பளித்து,
சம்பந்தப்பட்டவர்களுக்கு அது போய், அந்தந்தத் துறைகள் மூலம் முறைப்
படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்
கிறேன். இந்த நிதித் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற
என்னிடத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் அபாரமாக
நம்பிக்கை வைத்திருப்பதற்கு அவருக்கு உள்ளபடியே நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன். இந்தத் துறையை இயக்கிச் செல்வதற்கு ஏற்ற மன நிலையை,
பக்குவத்தை நான் பெற்றிருக்கிறேன் என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்டி
னார்கள். நிதியைச் செலவழிப்பதிலே எவ்வளவு கண்டிப்பாக இருப்பவன்
நான் என்பதையும், பெரியாருக்கு அடுத்தபடியாக என்று சொல்லி பெருமைப்
படக்கூடிய அளவுக்கு நான் நிதியைச் செலவழிப்பதிலே இருக்கிறேன்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 24

என்பதையும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அப்படிப்பட்ட நிலையில் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்றால், எவ்வளவு அவசியத்தின் அடிப்படையில், இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள். இருந்தாலும் அவர்களே ஒன்றைச் சொன்னார்கள். 'கஞ்சப்பிரபு' ஆக இருக்க வேண்டாம் என்றும் சொன்னார்கள், ஆனால் நான் 'கஞ்சப்பிரபு' ஆக, கஞ்சனாக இல்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். செய்ய வேண்டியதை, செய்யப்பட வேண்டியதை, செய்ய வேண்டிய அளவில் செய்கிறேன். செய்யப்படாமல் இருக்க வேண்டியதற்கு ஊதாரித்தனமாகச் செலவழிக்கவில்லை. ஆனால் செய்ய வேண்டியவற்றிற்கு, செய்ய வேண்டிய அளவில், செய்ய வேண்டிய தன்மையில் இருப்பவைகளுக்கு பொருளாதார அடிப்படையில், எக்கனாமிக் அடிப்படையில் கூறுவார்களே 'சிக்கனக்காரன்' என்று அந்த அடிப்படையில் செலவு செய்கிறேன். அந்த அடிப்படையில் நான் ஒரு நடுத்தர சிக்கனக்காரன். நானோ அல்லது தந்தை பெரியார் ஆகட்டும் சிக்கனக்காரர்களா என்று கேட்டால், நிச்சயம் நடுத்தரமான சிக்கனக்காரர்கள் என்கிற பட்டியலில் தான் வருவோம். ஆனால் ஊதாரித்தனமான செலவு செய்கிறவர்கள் அல்லது கஞ்சத்தனமாகச் செலவு செய்கிறவர்கள் என்கிற பட்டியலில் வரமாட்டோம். அந்த அடிப்படையில் நல்ல காரியங்களுக்கு, ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய அளவிற்கு நிதியை ஒதுக்கீடு செய்து, இதில் அக்கறை காட்டி, ஆட்சியை நடத்திக்கொண்டு வருகிறோம்.

இங்கே பல்வேறு செலவினங்கள் இன்னும் மற்றவைகள் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். விரயமாகச் செலவு செய்யக்கூடாது, வீணாகச் செலவு செய்யக் கூடாது, திட்டமிட்டதற்கு மேல் கூடுதலாகச் செலவு செய்யக் கூடாது என்றெல்லாம் சொன்னார்கள். அப்படிச் செய்யும்போது, வழிமுறைகளில் ஏதாவது தடை இருந்தால், ஒழுங்குபடுத்தப்படும். அந்த அடிப்படையில் பல உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் எந்த முறையில் எல்லாம் ஒழுங்குபடுத்த முடியுமோ அந்த முறையில் நிச்சயம் அரசு ஒழுங்குபடுத்த முயலும் என்பதை நான் இங்கே கூறிக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் ஒன்றைச் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களையும் இதர ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக அரசு மாற்றியிருக்கும்



1982 மார்ச் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அதே வேளையில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மட்டும், கட்டிடங்கள் மட்டும் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றன என்றும் இப்படி இருப்பது 'இரட்டை ஆட்சி முறைக்கு வழிவகுப்பதாகும்' என்றும் சொன்னார்கள். இப்படி ஒரு பொறுப்பு அரசிடமும் இன்னொரு பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்திடமும் இருக்கின்ற முறை சரியல்ல என்ற கருத்தைத்

(பிற்பகல் 12-20)

தெரிவித்திருக்கிறார்கள். 'டிரான்சிஷன் பீரியட்' என்று சொல்லும்போது, அவைகளை சென்ற ஆண்டு திடீரென்று எடுத்துக்கொண்டபோது, அடிப்படைத் தன்மைகளிலே சிக்கல்கள் இருந்தன. அவைகள் இந்த ஆண்டு கூட முடியும் என்ற அளவிலே இல்லை. சில ஆண்டு காலங்களிலேதான் அவைகள் எல்லாம் ஒழியும் என்ற அளவிலே இருக்கிறது. திடீரென்று ஆந்திராவைத் தனி மாநிலமாக பிரித்துவிட்டவுடனே, அன்றையதினம் அத்தனை பிரச்சினைகளும் முடிந்துவிட்டன என்று சொல்லிவிட முடியாது. அதற்குப் பிறகு ஒரு பத்தாண்டு காலம் ஆகிவிட்டது எல்லாப் பிரச்சினைகளும் தீர. அந்த வகையிலேதான் இந்த ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே இருக்கும் ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக ஆக்குவது என்று முதலிலே முடிவு எடுத்துக்கொண்டு, சம்பளம் மற்றும் சலுகைகள் வழங்கும் பொறுப்பை நாம் எடுத்துக்கொண்டு, அங்கே பள்ளிகளுக்குத் தேவைப்படும் கட்டிடங்கள், மற்றவைகள், அவைகளைப் பராமரிக்கும் பொறுப்பு போன்றவைகள் எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களிடம் இருக்கும் வகையிலேதான் இப்போது விட்டு வைத்திருக்கிறோம். எதிர்காலத்திலே அரசாங்கத்தின் சார்பிலே எடுத்துக் கொள்ளும்போது அதற்கான முழுப் பணத்தையும் அரசின் சார்பிலே ஒதுக்கும் நிலைமை வரும். அப்போது சிக்கல்கள் இருக்காது.

பல்வேறு நிலைகளிலே உள்ள ஆசிரியர்கள், அவர்களுடைய தன்மைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் லெட்சுமிகாந்தன், மீனாட்சிசுந்தரம், முத்துசாமி ஆகியோர் இங்கே வழக்கம் போலவே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லவேண்டியவைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளுக்கு, நிதியமைச்சர் என்ற முறையிலே, நேரடியாக நான் தீர்வுகாண முடியாது. அந்தப் பிரச்சினைகள் எல்லாம் கல்வித் துறையினால் ஆராய்ந்தறியப்பட்டு, நிதித் துறைக்கு அனுப்பி வைக்கப்படும்போது, நியாயத்தின் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன உணர்வுகளின் அடிப்படையிலே எந்தெந்தக் கருத்துக்களை எந்தெந்த வகையிலே தீர்க்க முடியுமோ அந்தந்த வகையிலே அவைகள் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எடுத்துச்

சொன்ன கருத்துக்களிலே இருக்கும் குறைபாடுகள், முரண்பாடுகள், செய்யப்பட வேண்டியவைகள் செய்யப்படாமல் இருக்குமானால், அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொல்லியிருப்பதை கல்வித் துறையினர் ஆராய்ந்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு அவைகள் சென்று, அதன் பின்னர், நிதியமைச்சருக்கு வரும்போது, நியாயத்தின் அடிப்படையிலே அவைகள் செய்யப்பட வேண்டும் என்ற தன்மைகள் வரும்போது, கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆனால் பொதுப்படையாகவே சொன்ன கருத்துக்களுக்கு மட்டும் நான் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஈட்டியவிடுப்பு பற்றிச் சொன்னார்கள். அந்தப் பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும். அவைகளிலே எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்று அந்தத் துறையினர் எடுத்துச்சொல்வார்களோ அது நிச்சயமாக ஆராயப்படும். அந்த அளவுக்கு அதிலே இருக்கும் தன்மைகளைப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே அவர்களுக்கும், இவர்களுக்கும் இருந்த வேறுபாடு என்ன? அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருக்கும் தன்மைகள் என்ன? என்ன காரணத்தின் அடிப்படையிலே ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு மூன்று நாட்கள் என்று இருந்ததை 10 நாட்கள் என்று ஆக்கப்பட்டிருக்கிறது? 260 நாட்களுக்கு 33 நாட்கள் ஈட்டிய விடுப்பு என்ற அடிப்படையிலே இவர்களுக்கும் தரப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அது எந்த அளவுக்கு நியாயமாக இருக்கும், அதிலே இருக்கும் சங்கடங்கள், சாதக பாதகங்கள் என்னென்ன என்றெல்லாம் அந்தத் துறையினர் ஆராய்ந்து எடுத்துச்சொல்லும்போது அவற்றைப்பற்றி கவனிக்கப்படும்.

பல்கலைக் கழகங்களிலே நடைபெறும் ஒழுங்கீனங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் லெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும் எடுத்துச்சொல்லியதைப் போல இப்போது பல்கலைக் கழகங்கள் எல்லாம் தன்னிச்சை பெற்ற ஒரு நிறுவனமாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவைகளை 'அட்டானமஸ் பாடி' என்று நாம் சொல்கிறோம். தன்னிச்சை உரிமை கொடுத்திருக்கிறோம். அந்தப் பல்கலைக் கழகங்களின் கணக்கைப் பார்த்து, அவைகளுக்கு 'அட்-ஹாக் கிராண்ட்' என்ற முறையிலே—சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், மதுரை—காமராசர் பல்கலைக் கழகத்திற்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கும் நாம் பணம் ஒதுக்குகிறோம். ஒரு நடைமுறையை வைத்து இந்த அளவிலேதான் கொடுக்க



வேண்டும் என்று சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப் போல அவைகளை அந்தந்தப் பல்கலைக் கழகங்கள் தங்களுடைய இஷ்டப்படி செலவழித்துவிட்டு—கூடுதலாகக் கணக்குகளைக் காண்பித்து, 'எங்களுக்குப் பற்றாக்குறை, டெஃபிசிட் வருகிறது' என்று சொல்லி பணம் கேட்கிறார்கள். அதிலே கண்டிப்பாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே, அவர்களின் கணக்கையெல்லாம் பார்த்து—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று அவர்களின் கணக்கு நிலைமைகளையெல்லாம் தெரிந்துகொள்ள அங்கே ஒரு 'ஃபினான்சியல் ஆபிசர்' இருக்க வேண்டும் என்று சொல்லி, ஒத்துக்கொண்டு, பணம் கொடுப்பதானால் எந்த அடிப்படையிலே கொடுப்பது என்ற நிலைமை வரும்போது, அவர்கள் அடிப்படை நிலைமைகளை மாற்றும்போது ஏற்படும் விளைவுகளில் அரசாங்கம் தெளிவாக இருக்க வேண்டும் என்ற அளவிலே இந்த ஒழுங்குபடுத்தும் முறையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அரசாங்கம் ஒத்துக்கொள்ளும் அளவுக்கு மேல் செலவு செய்யும் சூழ்நிலைகள் வந்தால், அதற்கு பல்கலைக் கழகங்கள்தான் பொறுப் பேற்றுக்கொள்ள வேண்டும், அவைகளை அந்தப் பல்கலைக் கழகங்கள்தான் தாங்கிக்கொள்ள வேண்டுமே தவிர அரசாங்கம் தாங்கிக்கொள்ள முடியாது என்ற அளவிலேதான் இருக்கிறது என்று துணை வேந்தர்கள் கூட்டத்திலே நான் சொல்லியிருக்கிறேன். எந்தவொரு திட்டத்தைக் கொண்டு வந்தாலும், எதைக் கொண்டு வரலாம், எதைக் கொண்டு வரக்கூடாது— என்ன ஃபேக்கல்ட்டி வைக்கலாம், என்னென்ன வைக்கக்கூடாது என்று சொல்வதெல்லாம் அவர்களுடைய உரிமை. அதற்காக இவ்வளவு செலவாகும் என்று கேட்டு நாம் கொடுத்ததற்குப் பிறகு, அவர்கள் இஷ்டம் போல செலவு செய்வதால்தான், இந்தப் பிரச்சினைகள் வருகின்றன. அப்படிப்பட்ட முறையிலே பிரச்சினைகளுக்கு அதிக அளவிலே இடம் கொடுப்பது அண்ணாமலைப் பல்கலைக் கழகம்தான். அதனால் இதிலே மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று துணை வேந்தர் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, பத்திரப் பதிவுகளைப்பற்றிச் சொன்னார்கள். அதுபற்றிய நிலைமைகளை அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்ப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விழுப்புரத்திலே சப்-கோர்ட் அமைத்ததை வரவேற்றாலும் கூட, கடலூரிலே இருக்கும் நிலைமைகளை வேறுபல இடங்களுக்கு மாற்றுவதனால் ஏற்படும் பல்வேறு சங்கடங்களை அவர்கள் சொன்னார்கள். சட்டத்துறை அமைச்சர் அவர்களும், உயர்நீதி மன்றத்தின் யோசனையின் பேரிலே தான்

ஒரு சப்-கோர்ட்டை அமைப்பதாக இருந்தாலும், அந்தக் கோர்ட்டை
ஓரிடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவதை அரசாங்கம் செய்து
விட முடியாது. உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி எந்த
யோசனையை அரசுக்குச் சொல்கிறார்களோ, அதன் அடிப்படையிலேதான்
அரசு காரியங்களைச் செய்கிறது. சட்டத் துறை அமைச்சரும், உயர்நீதி
மன்றமும் கலந்தாலோசிக்கும் முறையிலே மாண்புமிகு உறுப்பினர்
திரு. தாமோதரன் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு மதிப்
பளித்து அதை எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தலாம் என்று ஆராய்ந்து
நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரத் துறைக்கும், நகர்ப்புற வணிகக் கழகத்திற்கும், போக்குவரத்
துத் துறைக்கும் கடனாகவும், பங்கு மூலதனமாகவும் உதவியளிக்கும் தன்மை
களை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்
பினர் திரு. தாமோதரன் அவர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். என்
னுடைய நோக்கம் அவர்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டாம் என்பதுதான்.
ஆனால் இவைகள் எல்லாம், அது மின்சாரத் துறையானாலும் தனியார் துறை
என்று சொன்னால், பெயரளவிலே சிலபல வசதிகளுக்காக—கடன் வழங்கும்
வசதிக்காக—தனியாக ஒரு டிப்பார்ட்மென்ட்டாக வைத்தாலும் வாரியமாக
வைத்திருப்பதற்குக் காரணம் அந்த வசதிகளைச் செய்ய வேண்டும் என்பதற்
காகத்தான். எந்தவொரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று சொன்னாலும்,
அரசாணை பெற்று அல்லது சுற்றாணை வந்ததற்குப் பிறகு தான்
செய்ய வேண்டும் என்ற அளவிலே காலத்தாழ்வு ஏற்படக்கூடாது என்ற
அளவிலே தான் அவ்வாறு செய்யப்பட்டது. ஆனால் அதனுடைய சொந்தக்
காரர் என்று பார்த்தால், நூற்றுக்கு நூறு மாநில அரசுதான் அதனுடைய
சொந்தக்காரர். வாணிபக் கழகமானாலும், போக்குவரத்துக் கழகமானாலும்,
மின்சாரத் துறையானாலும் அப்படித்தான். என்னுடைய நோக்கம்
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நோக்கம் போலத் தான். அதற்குக்
கடன் கொடுக்கக்கூடாது என்பதும், அவைகள் எல்லாம் லாபகரமாக வேலை
செய்ய வேண்டும் என்பதும் தான். ஆனால் பல்வேறு நிலைமைகளிலே
சங்கடங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. மின்சாரத்தைப் பொறுத்தவரையில்,
அதற்கு ஏற்படுகிற இழப்புகளை நாம் சமாளித்து அது தொடர்ந்து நல்ல
முறையிலே செயல்பட ஊக்கம்தர வேண்டும். கடன் தராவிட்டால், மூல
தனப் பங்கு தராவிட்டால், மின்சாரத் துறையினுடைய பணி நின்றுவிடும்.
பணிகள் நின்றுவிட்டால் வளர்ச்சிப் பணிகள் நின்றுவிடும். வேளாண்மை
வளர்ச்சிப் பணிகள் நின்றுவிடும், வணிகம் நடைபெறாது, காமெர்ஸ் இன்னும்





வேறு வளர்ச்சிப் பணிகள் நின்றுவிடும். வணிகம் நடைபெறாது. காமெர்ஸ்
இன்னும் ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டிருக்கும் நிலைமையைப் பார்த்தால்,
ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் 1985 ஆம் ஆண்டு முடிகிற நிலைமையிலேகூட
நமக்கு ஆயிரத்திற்கு சில்லறை மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறையாகத்தான்
இருக்கும். இப்போது போடப்பட்டிருக்கும் திட்டங்களுக்கு மத்திய அரசு
அனுமதி தந்து ஆரம்பித்தாலும் கூட, நம்முடைய மாநிலத்தின் தேவையைப்
பார்த்தால், அப்போது பற்றாக்குறை தான் இருக்கும். அதிலே ஏற்பட்டி
ருக்கும் சங்கடத்தைப் பார்த்து, ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர்
திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்து எனக்கும்
உகந்ததாகத்தான் இருக்கிறது. விலைவாசிகள் ஏறும்போது, பெட்ரோல்
விலை, இரயில்வே ஃபிரைட் போன்றவை ஏறும்போது, நிலக்கரியைக்
கொண்டுவரும்போது அதற்கான கட்டணம் ஏறும்போது, கப்பல் போக்கு
வரத்துக் கட்டணம் ஏறும்போது, சம்பளம் மற்றும் படிகள் தரும் அளவு ஏறும்
போது, அவ்வப்போது மின்சாரக் கட்டணத்தையும் மற்றவைகளையும் நாம்
ஏற்றிக்கொண்டிருக்கும் முறையை ஆரம்ப காலத்திலேயிருந்து நாம் கையாண்டு
வந்திருந்தால், இந்தச் சங்கடங்கள் வந்திருக்காது. 1967ஆம் ஆண்டிலே
மின்சாரத் துறை அமைச்சராக நான் இருந்தபோது, அப்போதே இந்தச்
சங்கடம் பற்றிய நிலைமை வந்தபோது, ஆண்டுக்கு ஒரு பைசா என்ற
அளவிலே நாம் தூக்கினால்தான் சமாளிக்க முடியும் என்றும் எடுத்த
எடுப்பிலேயே 10 காசு என்று தூக்கிவைத்தால் மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும்
என்ற கருத்தையும் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுறும்வரையில்,
அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆண்டுக்கொரு
காசாக உயர்த்திக் கொண்டே வந்திருந்தால் இத்தகைய சங்கடம்
நமக்கு ஏற்பட்டிருக்காது. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள்,
நாம் இப்போதைக்குத்தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறோம், அவர்
களிடம நாம் கருணை காட்ட வேண்டும், எனவே இப்போது வேண்டாம்,
அப்போது வேண்டாம் என்று சொல்லிச் சொல்லியே தள்ளிப்போட வேண்டிய
நிலைமை ஏற்பட்டது. அதற்குப் பின்னால் வந்த அரசும், அதே காரணத்
தால் அதைத் தள்ளிப் போட வேண்டிய நெருக்கடிக்கு உள்ளானது. அதற்குப்
பின்னால் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது
நாடெங்கும் 22 அல்லது 24 காசு மின்கட்டணமாக இருந்தபோது, மேலும் 2

காசு உயர்த்தப்பட வேண்டும் என்று கட்டணத்தை உயர்த்தியதன் காரணமாக, தமிழகத்தில் எப்படிப்பட்ட போராட்டங்கள் ஏற்பட்டன என்பதும், அதன் விளைவுகள் எப்படிப்பட்ட முறையில் அமைந்தன என்பதும், இறுதியில் கட்டண உயர்வை ஒரு காசு அல்லது ஒன்றரை காசு என்று குறைகக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதும் எல்லோரும் அறிந்ததே.

அண்மையில் மின்சார வாரிய நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தின் போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் மின்சார உற்பத்திக்கான செலவைப்பற்றித் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில், புனல் மூலமாகவும், அனல் மூலமாகவும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதோடு வெளி மாநிலத்திலிருந்தும் நாம் மின்சாரத்தை வாங்குகிறோம். ஆக இவைகளையெல்லாம் சேர்த்துப் பார்க்கும்போது நமக்கு ஒரு யூனிட்டுக்கு 44 அல்லது 45 காசு செலவாகிறது. ஆனால் நாம் வேளாண்மக்களிடம் வாங்குவது யூனிட்டுக்கு 15 காசுதான். அதே நேரத்தில் உத்தரப் பிரதேசத்தில் வேளாண் குடியினரிடமிருந்து யூனிட்டுக்கு 25 காசுகள் வசூலிக்கிறார்கள். மேற்கு வங்கத்தில் 24 அல்லது 25 காசு வசூலிக்கிறார்கள். பீகாரிலும் வேறு பல மாநிலங்களிலும் 25 காசுக்கு மேலும் வசூலிக்கிறார்கள். அந்த வகையில் பார்க்கும்போது நமக்கு ஒரு யூனிட்டுக்கு ஆகும் உற்பத்திச் செலவு 45 காசு. ஆனால் நாம் வேளாண் குடியினரிடம் வாங்குவது 15 காசு. இதன் மூலம் ஏற்படுகிற நட்டத்தை மின்வாரியம்தான் தாங்க வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் மின் வாரியம் என்று சொல்ல முடியாது. அவர்கள் மின் கட்டணத்தை ஏற்றத் தயாராக இருக்கிறார்கள். அப்படிச் செய்ய வேண்டாம் என்று அரசாங்கத்திலிருந்து நாம்தான் "அட்வைஸ்" செய்து வருகிறோம். அதன் காரணமாகத்தான் இந்த இழப்பை நாம் ஏற்க வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டு வேண்டாம், அடுத்த ஆண்டு பார்த்துக் கொள்ளலாம் என்றும், இப்போது வேண்டாம், மழைக் காலம் வரட்டும், வெயில் காலம் வரட்டும், ஜூன் மாதம் போகட்டும் என்று அவர்களுக்கு நாம் சொல்லிக்கொண்டே வருவதன் காரணமாக அவர்கள் அதைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வருகிறார்கள். இதன் காரணமாகத்தான் அவர்கள் நட்டத்தைத் தாங்க வேண்டியிருக்கிறது.



இப்போது கூட அனல் மின்சாரத்திற்காகும் செலவு அதிகமாக இருக்கிறது. சென்னையில் உள்ள பேசின் பிரிட்ஜில் உற்பத்தியாகும் அனல் மின்சாரத்தைக் காட்டிலும் தூத்துக்குடியில் உற்பத்தியாகும் அனல் மின்சாரத்திற்கு அதிகச் செலவாகிறது. காரணம் அந்த அளவுக்கு நாம் நிலக்கரியை அனுப்புவதில் கூடுதல் செலவாகிறது.

கேரளத்தில் உற்பத்தியாகும் புனல் மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 18 காசு அல்லது 17 காசுதான் ஆகிறது. அங்கே உற்பத்தியாகும் அவ்வளவு மின்சாரமும் புனல் மின்சாரம்தான். இன்றைக்கு கேரளம் நமக்கு யூனிட் 28 காசு என்ற விலைக்குத் தந்து கொண்டிருக்கிறது. ஏறக்குறைய 10 அல்லது 12 காசுகள் நாம் ஏற்கெனவே அதிகமாகத் தந்துகொண்டிருக்கிறோம். இப்போது அவர்கள் இன்னும் அதிகமான விலையைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். 'டிமாண்டு அண்டு சப்ளை தியரி'-படி, டிமாண்டை அடிப்படையாக வைத்து தற்போது யூனிட்டுக்கு 45 காசு தர வேண்டும் என்று கேரளத்தைச் சேர்ந்தவர்கள் கேட்கிறார்கள்.

இதன் காரணமாகத்தான் தேசிய அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக, நான் கலந்து கொண்டு பேசும்போது, இந்தியாவின் பிரதமர் அவர்களிடமும் மற்றும் அங்கே உள்ள நிதியமைச்சர் அவர்களிடமும் ஒரு கருத்தைத் தெரிவித்தேன். மின்சாரத்தில் பற்றாக்குறை உள்ள மாநிலம் உபரியாக உள்ள மாநிலத்திலிருந்து மின்சாரத்தை வாங்குகிறபோது, அதற்கு ஒரு நியாயமான அடிப்படையில் விலையைப் பெற வேண்டும் என்று வற்புறுத்துகிற நிலையை ஏற்படுத்தி, இதில் மத்திய அரசே தலையிடுகிற சூழ்நிலையை ஏற்படுத்துவது நல்லது, அதற்கான தேவை இருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி, 18 காசு செலவில் உற்பத்தியாகும் மின்சாரத்திற்கு இப்போது கேரளத்தில் உள்ளவர்கள் 45 காசாகக் கேட்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னேன். 45 காசு கொடுத்து வாங்கினாலும், அதற்குப் பிறகு நாம் அதை லைனில் இழுத்துக் கொண்டு வருகிறபோது, 'லைன் லாஸ்' ஏற்படுகிறது, அதுமட்டுமல்ல இடையில் இருக்கிறவர்களும் கொஞ்சம் கொஞ்சம் இழுத்துக் கொள்கிறார்கள், இந்தக் கணக்கையெல்லாம் பார்த்தால், ஒரு யூனிட் மின்சாரத்திற்கு நமக்கு 50 அல்லது 52 காசு என்ற அளவில் செலவாகிறது. இத்தகைய நிலைமைகள் காரணமாக நாம் மின்சார வாரியத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இதன் காரணமாகத்தான் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,500 கோடி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 24

ரூபாய் மின்சார உற்பத்திக்காக மட்டும் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அதன் மூலமாகத்தான் மற்ற துறைகள் நாம் எதிர்பார்க்கிற முன்னேற்றத்தை அடைய முடியும்.

ரஷ்ய நாட்டில் புரட்சியை உண்டாக்கி அதனைச் சிறந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று விரும்பிய லெனின் அதற்காகப் பல்வேறு ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டாலும், அதில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரை மின்சார உற்பத்திக்கு முதலிடம் கொடுத்து "பவர், பவர், பவர்" என்று அறிவித்தான். ஆக அவ்வாறு மின்சாரத்தில் முதலீடு செய்தால்தான், நாடு முன்னேற முடியும் என்ற அடிப்படையில்தான், நாமும் அதிகமான நிதியை மின் உற்பத்திக்காக என்று ஒதுக்கியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, மின்சார வாரியத்திற்குக் கடனாகவும் பெருந் தொகைகளைக் கொடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்ன மாதிரி, மின்வாரியத்திற்குக் கடனைக் கொடுத்து, அதன்மூலம் 12½ சதவிகிதம் அல்லது தற்போது ரிசர்வ் வங்கி அனுமதித்திருக்கிற 16 சதவிகிதம் வட்டியை வாங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. முதலீட்டுக்குப் பணம் கொடுப்பதைவிட, கடனாகக் கொடுக்க வேண்டும் என்றுதான் நானும் விரும்புகிறேன். ஆனால் அதன் காரணமாக மின் வாரியம் இன்னும் அதிகமான இழப்புக்குத்தான் ஆளாகும் எனவேதான் ஓரளவுக்குக் கடன் தந்து, மூலதனப் பங்கிற்கும் நாம் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், என்றைக்காவது ஒரு நாளைக்கு லாபம் வராதா என்ற எண்ணத்தில் இதைக் கொடுக்கிறோம்,

போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில், இருக்கிற நிலைமைகளை நாம் அறிய வேண்டும். 4, 5 பஸ் வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு கட்டுப்படியாகிறது என்பது உண்மைதான். ஆனால் 4,000 பஸ்களுக்கு மேல் நாம் வைத்துக்கொண்டு நடத்துகிற காரணத்தால், அதில் நமக்கு இழப்பு ஏற்படுகிறது. காரணம் தேவையை ஒட்டி பஸ் விடுகிறோமே தவிர, லாபத்தைக் கருதி, கட்டணம் மூலமாகக் கிடைக்கும் லாபத்தை மட்டும் கருதி பஸ்களை விடுவதில்லை. லாபத்தை மட்டும் கருதி விடுவதானால், பல பஸ்களை நாம் நிறுத்த வேண்டும். பல ரூட்டுகளை எடுத்துத்தான் ஆக வேண்டும் அதுமட்டுமல்ல, இப்போதிருக்கிற கட்டணத்தை உயர்த்தினால் தான் ஈடுகட்ட முடியும் என்ற நிலைமைக்கு அவர்கள் வரும்போது, நாம் கடன் தர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இப்போது ரிசர்வ் பேங்க் அட்வைஸ் காரணமாக போக்குவரத்துக் கழகங்களுக்கு அளிக்கப்படும் கடன் தொகைகளுக்கான வட்டி விகிதத்தை அதிகப்படுத்தியிருக்கிறோம். சில இனங்களின்படி மூலதனப் பங்காகவும் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.



1982 மார்ச் 24]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் தெரிவித்த கருத்து இதுதான். 1978, 1979, 1980 ஆம் ஆண்டுக்கான ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் ஒரு கருத்து தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் மற்றும் இது போன்ற 12 துறைகளில் மிகுந்த அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டு, அவைகளுக்குப் போட்ட மூலதனம் எங்கே இருக்கிறது என்று கண்டு பிடிக்க முடியாத வகையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அப்படி மூலதனமே எங்கே இருக்கிறது என்று தெரியாத அளவுக்கு இயங்குகிற நிறுவனங்களுக்கு எதற்காக பங்கு மூலதனம் கொடுக்க வேண்டும்? கடனாகக் கொடுத்தாலாவது ஒரு காலத்தில் வட்டியைத் தள்ளிவிட்டாவது அசலாவது பெறத் தக்க வகையில் நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக்கிறது. எனவே மூலதனமாகக் கொடுப்பதைக் குறைத்துவிட்டு, கடனாகக் கொடுப்பதை அதிகரிக்கலாம் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் இந்தக் கருத்தை வரவேற்கிறேன் என்று ஆரம்பத்திலேயே சொன்னேன். இருந்தாலும் இதைச் செய்யவில்லை என்றால், 15 ஆண்டுகாலம் கழித்து இப்போது எப்படி 19 கோடி ரூபாயை "வெய்வ்" பண்ணினோமோ அப்படிப்பட்ட நிலைமைதான் வரும். கடனாகக் கொடுத்தாலாவது ஓரளவுக்கு அதனைத் திரும்பப் பெற வாய்ப்பு இருக்கிறது என்றாலும் இத்தகைய நிறுவனங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிற காரணத்தால், அவைகள் நலிந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. என்றாலும் மற்ற மாநிலங்களில் உள்ள நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இவைகள் பாராட்டத் தக்க வகையில் செயல்படுகின்றன என்றுதான் சொல்ல வேண்டும். ஆக இத்தகைய நிறுவனங்கள் லாப நட்டக் கணக்கில் நடைபெற வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கமாக இருப்பதால், அதிகமான அளவுக்குக் கடனாகக் கொடுத்து, மிகக் குறைந்த அளவுக்கே பங்கு மூலதனமாகக் கொடுக்கிறோம். வேண்டுமானால் அதற்கான புள்ளி விவரங்களைத் தனியாகப் பின்னால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

THIRUMATHI TARA CHERIAN: Will the Hon. Minister, while on this subject, try to tell us how many of the Corporations undertaken by the Government are on the red year after year? Private businessmen will not allow it to go on in the same manner. Because these Corporations are working under the Government, will the Hon. Minister think of appointing a High Power Consultative Committee to go through the working

[Thirumathi Tara Cherian] [1982 மார்ச் 24

of all the Corporations undertaken by the Government and to set whether they could improve and work better? I know and the Hon. Minister also must know that more than one Corporation are on the red year after year and therefore, it is time that we have a second look into the working of the Corporations undertaken by the Government.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் கூறிய கருத்து சிரிய கருத்துதான் என்பதால் அதனை வரவேற்கிறேன். அவைகளையெல்லாம் ஆராய்ந்து சொல்வதற்கு நாம் சிலபல ஏற்பாடுகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி வைத்திருக்கிறோம். அந்தக் குழுகூட இவைகளைப்பற்றி ஆராய்ந்து சொல்கிறது. அதைப்போலவே பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலும் இவைகளை ஆராய்ந்து சொல்கிறார்கள். இவர்களின் ஆராய்வும் ஆய்வும் எந்த வகையில் இருக்கின்றன என்று பார்த்து நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அத்தகைய குழுக்கள் நிலைமைகளை ஆராய்ந்து இவற்றை இவற்றைச் செய்யலாம் என்றும், இன்னின்னவற்றைச் செய்யக்கூடாது என்றும் சொல்லுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் சொன்ன மாதிரி, இந்தத் துறையில் மிகுந்த அறிவும் அனுபவமும் பெற்றவர்களைக் கொண்ட ஒரு ஹை பவர் கமிட்டி, எக்ஸ்பர்ட் கமிட்டி போடலாம். ஆண்டுக்காண்டு ஏன் இப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்றன? என்ன செய்தால் நல்லது என்பது குறித்து அவர்களிடம் யோசனை கேட்டு அதன் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுப்பது என்பதுகூட நல்லதுதான். எனவே இந்தக் கருத்தை அரசு ஆராயும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் திரு மீனாட்சிசுந்தரம் அவர்களும் அகவிலைப்படி உயர்வைப்பற்றிக் குறிப்பிட்டார்கள், அப்போதே நான் ஒரு கருத்தைத் தெரிவித்தேன்: அதாவது மத்திய அரசின் அறிவிப்பை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று அப்போது அறிவித்தேன். இப்போது மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அதையும் எப்படிக் கொடுப்பது, எந்த வழியில் கொடுப்பது என்பதுபற்றிய ஆராய்ச்சி அங்கேயே இன்னும் முடியாமல் இருக்கிறது. தருகிறேன் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். அதற்கடுத்து ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்: நாமும் நம்முடைய நிதி நிலைமைகளையும் மற்றவைகளையும் பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம்,



1982 மார்ச் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(பிற்பகல் 12-40)

ஆனால் நிதித் துறையோடு தொடர்பு வைத்துக் கொண்டு அந்த தன்மைகளை ஆராயும்படி சொல்லியிருக்கிறேன். ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். நானும் ஆராய்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து முடிவு எடுத்து அது பற்றிய முடிவை அறிவிப்பேன் என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU A. R. DAMODARAN: The Central Government has already outlined how it is going to pay the four instalments of D.A. Till March 31, it is to be credited in Provident Fund Account and from 1st April it is to be paid in cash. I request the Hon. Minister to adopt the same procedure.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிதியமைச்சர் திரு பிரநாப் முகர்ஜி அவர்கள், அதை அறிவித்துவிட்டு, அதுபற்றிய விவரங்கள், குறிப்புகள், விதிமுறைகள் பின்னாலே அறிவிக்கப்படும் என்று அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அங்கேயுள்ள ஊழியர்களில் பெரும்பகுதியினர் நலநிதியிலே சேர்க்கக் கூடாது என்றும், முழுவதையும் பணமாகத் தர வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு சிலர் மட்டும் நலநிதியில் சேர்ப்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்: அது எந்த முறையாக இருந்தாலும், விவரக் குறிப்புகளைக் கேட்பதற்குக் காரணம் அதை ஆராய்ந்து அறிய வேண்டும் என்பதற்காகத்தான். ஆராய்ந்த பிறகு, அந்த முறையை பயன்படுத்துகிறோமா இல்லையா என்பது வேறு. நம்முடைய நிதித் துறை ஒரு முறையைப் பின்பற்றுகிறது. மற்றவர்கள் கடைப் பிடிக்கும் முறையைத் தெரிந்து கொண்டு, முடிவு எடுத்து அறிவிக்க வேண்டுமென்ற முறையில் அதுபற்றி நிதித் துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு, விரைவிலே முடிவை அறிவிப்பேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

*திரு. செ. முத்துசாமி :* மத்திய அரசாங்கம் கொள்கையை அறிவித்ததோடு, மத்திய அரசு ஊழியர்களின் சங்கங்களை அழைத்து வைத்துப் பேசி முடிவு எடுக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. அதைப்போலவே மொத்தமாக நான்கு அகவிலைப் படியையும் மாநில அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குகிறோம் என்று அறிவித்து, இங்கேயிருக்கக் கூடிய அரசு ஊழியர்கள் சங்கத்தை அழைத்துப் பேசி நல்ல முடிவுக்கு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மத்திய அரசு முடிவை அறிவித்துவிட்டு, "யோசனை சொல்லுங்கள், கேட்டு நடக்கிறோம்" என்று சொல்லவேயில்லை. முடிவை அறிவித்துவிட்டார்கள். இவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நான் சொன்னேன். அதை வைத்துக் கொண்டு மாற்றுகிறார்களா, எந்த அளவிற்கு மாற்றுகிறார்கள் என்பது முடிவைப் பொறுத்து இருக்கிறது. ஆனால் இந்த அரசு ஏற்கெனவே தந்து கொண்டு வருகிற முறைகளின் அடிப்படையிலே இது நாம் தர வேண்டிய ஒன்று என்று சொல்லியிருக்கிறேன். நம்முடைய மாநில அரசு தன்மைகளை மற்றவைகளை ஆராய்ந்து அறிந்து முடிவுக்கு வரும் என்று சொன்னேன். நிதித் துறையோடு கலந்து, முதலமைச்சர் அவர்களோடும் கலந்து அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிவிப்பை இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** விரைவிலே என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆக நாள் சொல்லாமல் செய்பவர்கள்தான் பெரியவர்கள். தவிர நாள் சொல்லிவிட்டு செய்யாமல விட்டால், வேறு மாதிரியாகும் என்பதால், "விரைவிலே" என்று சொல்லியிருப்பது எனக்கும் பாதுகாப்பு, உங்களுக்கும் பாதுகாப்பு.

அதைப் போலவே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது பத்தாயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை பலபேர் வைத்து வருகிறார்கள். அதைப்பற்றி ஆராய்ந்து நிலைமைகளை எடுத்துச் சொல்லுவதற்காக குழு என்ற முறையில் நிதியமைச்சரையும், தலைமைச் செயலாளரையும், நிதிச் செயலாளரையும் வைத்து குழுவை அரசு அமைத்தது. அந்தக் குழு அமையாவிட்டாலும், நிதியமைச்சர் என்ற முறையில் நானும், தலைமைச் செயலாளரும், நிதிச் செயலாளரும் ஆகிய மூவரும் சேர்ந்துதான் உட்கார்ந்து பேசி முடிவு செய்ய வேண்டும். ஆனாலும் கூட இத்தகைய நிலைமையை வேறு எந்த மாநிலத்திலாவது தந்திருககிறார்களா, மத்திய அரசில் தந்திருக்கிறார்களா என்று பார்ததில், எங்கேயும் இப்படித் தரவில்லை. ஓய்வு பெற்றவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கக் கூடிய யாரையாவது எடுத்துக் காட்டாக வைக்க முடியுமா என்று பார்த்தால், இன்னும் யாரும் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கவில்லை என்று தெரிகிறது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இந்தத் தன்மைகளின் அடிப்படையிலே 1977 ஆம் ஆண்டிலே ஒரு



திட்டம் வகுக்கப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளாமல் விடுபட்டிருந்தால், தனியாக நாம் கொண்டுவரலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். அடுத்த ஆண்டு ஓய்வு பெறுபவருக்கும், இரண்டாண்டுகள்மட்டும் பணி செய்து ஓய்வு பெறுபவருக்கும், 20 ஆண்டுகள், பத்தாண்டுகள் பணி செய்து ஓய்வு பெறுபவர்களுக்கும் எல்லோருக்கும் பத்தாயிரம் ரூபாய் என்றால், அதிலே குழப்பம், சங்கடம் வருகிறது. இந்தத் திட்டத்திலே ஓரளவிற்கு ஊழியர்களின் பங்கு இருக்க வேண்டும். அதிலே எந்த அளவிற்கு அரசாங்கத்தின் பங்கு இருக்க வேண்டும் என்று கலந்து பேசுவதன் மூலமாக முடிவுக்கு வந்தால், நலமாக இருக்கும். இதையெல்லாம் முதலமைச்சரிடம் தெரிவித்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்களும் ஊழியர்கள் சங்கத் தலைவர்களையும், பிரதிநிதிகளையும் கூப்பிட்டு வைத்துப் பேசி, அதுபற்றி முடிவு எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே முடிவே எடுக்க வேண்டாமென்று சொல்லவில்லை. வேறு எந்த மாநிலமும், மத்திய அரசும் தரவில்லை. மத்திய அரசு திருப்பதி கோயில் மாதிரி என்றால், மாநில அரசு முச்சந்திப் பிள்ளையார் கோயில் மாதிரி இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள், தி.மு.க.-வில் இருக்கும்போது, வேறு எந்த அரசாங்கமும் கொடுக்காத நேரத்தில், அரசு ஊழியர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படிப்பட்டதொரு நல்ல காரியம் மற்ற மாநிலங்களிலே இல்லையென்றாலும், தமிழகத்திலே செய்கிறோம் என்ற அளவிற்கு, அதை நிறைவேற்றினால் நல்லதாகாதா? ஆகவே அதைக் கொஞ்சம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள், மற்ற மாநிலத்திலே தராவிட்டாலும் இங்கே பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்ன கருத்தை நான் வழிமொழிகிறேன். அதே நேரத்தில் ஓய்வுபெற்றால் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதன் மூலம் அரசுக்கு நஷ்டம் ஏற்பட முடியாத அளவிற்கு ஒரு திட்டத்தை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்கள் தந்திருக்கிறார்கள். அதிலே பாகுபாடு இல்லாத வகையிலே எப்படி வழங்க வேண்டுமென்று ஆலோசனை தந்திருக்கிறார்கள். பலமுறை அதுபற்றிப் பேசப்பட்டிருக்கிறது. மாவட்ட அதிகாரிகள் மட்டத்திலே பேச

வேண்டுமென்றாலும், இறுதியாக ஒரு நாளை வரையறுத்து, அதைக் கூட இந்த கூட்டத் தொடர் முடிவு அடைவதற்குள் வெளியிட அமைச்சர் அவர்கள் சற்று தீவிர முயற்சி எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றி நான் முதலிலேயே சொன்னேன். அதைப் படித்துப் பார்த்ததில் எந்த அளவிற்கு யோசனை சொல்லியிருக்கிறார்கள் என்ற தெளிவு எனக்கு ஏற்படவில்லை. உட்கார்ந்து பேசுகிறபோது சில நிலைமைகளைத் தெளிவாகக் கடைப்பிடிக்க வேண்டி வரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும் போது, இறந்துவிட்டால் குடும்பத்தினருக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டதற்காக பாராட்டினார்கள். அதை இன்னும் பல மாநிலங்கள் கடைப்பிடிக்கவில்லை. அதே மாதிரி தன்னுடைய பாராட்டுக்களை இதற்காகவும் ரிசர்வ் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். எப்போது வருகிறதோ அப்போது பாராட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இதில் உள்ள சங்கடங்கள், நிதியாதாரங்கள் ஆகியவற்றைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்திற்கும் சுமை இல்லாமல் ஊழியர்களுக்கும் ஒரு ஆதாயம் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படுமானால், அதற்கான திட்டத்தை வகுப்பதிலே நாம் ஈடுபடலாம். அந்த எண்ணமே கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. தமிழகம் முன்னோடியாக இருக்க முடியும் என்றால், அதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது என்றால், அதை நழுவ விட வேண்டிய அவசியமில்லை. அரசுக்கும் சுமை ஏற்படக் கூடாது, அதே நேரத்தில் ஊழியர்களுக்கும் ஆதாயம் இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு ஃபார்முலா வேண்டும். ஆகவேதான் பேசவிருக்கிறோம். மற்ற சங்கங்களையெல்லாம் அழைத்து வைத்து சாதக பாதகங்களைப்பற்றிப் பேசி திட்டவட்டமான முடிவிற்கு வந்தால், அதற்குப் பிறகு அதை அமுல்படுத்த சரியாக இருக்கும் என்ற முறையிலேதான் அதைப்பற்றி நிதிநிலை அறிக்கையிலே கூட குறிப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வேறுபல பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் பேசியிருக்கிறார்கள். கல்வித் துறையைப்பற்றியும், மற்றவைகளைப்பற்றியும் பேசியிருப்பதற்காக நான் பதில் சொல்லிக் கொண்டிருந்தால், நேரம்





இடந்தராது என்பதால் விட்டுவிடுகிறேன். முழுவதையும் விளக்கமாக, தெளிவாக எடுத்துச் சொல்லுகிற முறையில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அவ்வப்போது ஈடுபட்டு வருகிறார்கள். முதலிலே கூட நான் கவனித்தேன். கல்வி மானியக் கோரிக்கையின் மீது விவாதமா அல்லது துணை மானியக் கோரிக்கையின்மீது விவாதமா என்று கவனித்தேன். மற்றவர்கள் பேசிய பிறகுதான் எனக்குத் தெளிவு ஏற்பட்டது. அந்த அளவிற்கு கல்வித் துறையைப்பற்றி திரும்பத் திரும்ப, தெளிவுபடுத்துகிற அளவிற்கு கருத்துக்கள் வழங்கப்பட்டன. அந்த அளவிற்கு வேறு எந்தத் துறையையும் விட அதிகமான அளவிற்கு கல்வித் துறையில்தான் கவனம் செலுத்தியிருக்கிறோம். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், இங்கே கொள்கை விளக்கக் குறிப்புகள் வருவதற்கு முன்னால், அந்த அவையில் கூட அறிவிக்க முடியாத அளவிற்கு இந்த அவையில் பேசும்போது, சிலபல சலுகைகளை அறிவிப்பதற்காக என்னோடு கலந்து பேசி, அதிலே நியாயம் கண்டதன் காரணமாக உடனடியாகச் செய்திருக்கிறோம். மற்றவர்களுக்கெல்லாம் ஆண்டுக்காண்டு நிதித் திட்டம் போடுகிறோம் என்றால், ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களையும் பொறுத்த வரையில், ஆண்டு முழுவதும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம், அவ்வப்போது செய்து கொண்டிருக்கிறோம்.

இரயில்வே கூப்பன்பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே ஓரளவிற்கு வைத்திருக்கிறோம். அதற்குப் பிறகு இப்போது கட்டணம் எவ்வளவு ஏறியிருக்கிறது என்ற கணக்கைப் பார்க்கும்படி சொல்லியிருக்கிறேன். அதுபற்றிய முடிவை பின்னாலே தான் எடுத்துச் சொல்ல வேண்டும்.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சொல்கின்றபோது, செங்கற்பட்டிலே இருப்பவர்களுக்கும் நாகர்கோவிலிலேயே இருப்பவர்களுக்கும் ஒன்றுதானா என்று கேட்கிறார்கள். அவர்கள் நாகர்கோவிலிலே இருந்தாலும் சரி, செங்கற்பட்டிலே இருந்தாலும் சரி, தஞ்சையிலே இருந்தாலும் சரி, சட்டமன்றத்திற்கு வந்து போகும்போது அவர்களுக்குச் செலவுக்கு படி கொடுத்துவிடுகிறோம். இது எல்லாம் முடித்த பிறகு அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்றுதான் இந்த ரூ. 2,500 கொடுக்கிறோம்.

அவர்கள் நாகர்கோவிலிலிருந்து எங்கே வேண்டுமானாலும் போகட்டும், எங்கு
வேண்டுமானாலும் போகலாம். சட்டமன்றக் கூட்டங்களுக்கு வந்து விட்டுப்
போகும்போது, அவர்களுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்ட
பிறகு, ' ஓவர் அண்ட் அபோவ் ' என்ற அளவில் நான் கூப்பன்களைக் கொடுக்
கிறோம். அதற்கு மேலேயும், போகின்ற தூரத்திற்கு ஏற்ப கொடுக்க
வேண்டும் என்று சொல்கின்றார்கள். அதைப்பற்றித் தனியாக ஆராயலாம்.
அதைப்பற்றி ஆராய்ந்து அறிவிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். அடுத்து, மீன் அங்காடிகள் வைக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

திரு. செ. முத்துசாமி : உறுப்பினர்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய
அளவுக்கு ஒவ்வொரு சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினருக்கு ஒரு
அட்டெண்டர், டைப்ரைட்டிங் மெஷின் உடன் அங்கே ஒரு அலுவலகத்தையும்
ஏற்பாடு செய்து கொடுத்தால், மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வாய்ப்பாக
இருக்கும். அந்த நல்ல யோசனையை ஒவ்வொரு கான்ஸ்டிட்டியுவன்ஸியில்
ஒவ்வொரு இடத்திலே அலுவலகத்தை வைத்து அட்டெண்டர், டைப்பிஸ்ட்
வைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் காலம்
முடிந்தபிறகு உடனே அவர்கள் ஒப்படைத்துவிடுவார்கள். அந்த நடை
முறையைச் செய்தால், மக்களுக்கு நல்ல சேவை செய்வதற்கு ஒரு நல்ல நடை
முறையாக இருக்கும். அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத்
துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இப்போது
ஆலோசனையில் இல்லை. டைப்ரைட்டிங் மெஷின், அலுவலகம் இவற்றுக்கு
என்று கொடுக்கின்றதைவிட, அந்தப் பணத்தை உறுப்பினர்களுக்குப் பண
மாகவே கொடுத்துவிட்டால், அது உறுப்பினர்களுக்குப் பயன்படுகின்ற மாதிரி
இருக்கும். இங்கே கொடுக்கின்ற அறிக்கையையே எத்தனை பேர்கள் படிக்
கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்படி அதிலே எவ்வளவு பேர்கள்
தங்களுடைய எண்ணங்களை, நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறார்
கள் என்பது தெரியும்போது, அந்த டைப்ரைட்டர், கட்டடம் எல்லாம்
கொடுத்து செலவழித்து வேறு யாராவது அனுபவித்துக்கொண்டிருப்பதைவிட
அதைக் கொடுப்பது என்ற முடிவிற்கு வந்துவிட்டால், அவைகளை வழங்கு
வதைவிட அதற்குரிய பணத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுத்து
விட்டால், அதை அவர்கள் வேறு வழியிலேகூட பயன்படுத்திக்கொள்ளலாம்.





அந்த வசதி நமக்குப் பணவசதி மிகமிகப் பெருக்கமாக இருக்கும்போது
செய்யவேண்டிய ஒன்றாகும். நல்ல வசதிவாய்ப்புக்களைப் பெருக்கிக்
கொண்டுதான் வருகிறோம். என்னுடைய எண்ணமோ சட்டமன்றத்திற்கு
புதியதொரு கட்டடம் வேண்டும். அந்த வசதியைச் செய்யவேண்டும் என்று
இருக்கிறது. அதுமாதிரி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் டெல்லியிலே
பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்திருப்பது போல, இங்கே தங்கு
கின்றவர்களுக்குச் சொந்தமாக இருக்கிற மாதிரி செய்யலாம். அந்த இடத்தில்
அவர்கள் தங்குவதற்கும், குளிப்பதற்கும், சாப்பிடுவதற்கும் வசதி இருக்
கின்ற அளவுக்குச் செய்யவேண்டும். அந்த அளவிலே அமைய வேண்டும்.
அப்படிப்பட்ட கட்டிடங்கள் கட்டிவிடுவோமானால், எல்லோருக்கும் அப்படிப்
பட்ட வசதி வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். அவர்கள் தனி வீடு என்று
இருந்துகொண்டு வாடகை கொடுப்பது, கால் பண்ணுவதில் சங்கடம் என்று
எதுவும் இருக்க வேண்டாம். மாண்புமிகு அங்கத்தினர்களாக இருக்கின்ற
வரையிலே, டெல்லியிலே பாராளுமன்ற உறுப்பினர்கள் எப்படி அந்த வீடுகளை
அனுபவித்துக்கொண்டிருக்கிறார்களோ அந்த அளவுக்கு இங்கேயும் செய்ய
லாம். இங்கே இருக்கின்ற ஹாஸ்டலைக்கூட மாற்றலாம். ஓட்டலே
வைத்துக்கூட நடத்தக்கூட உபயோகப்படுத்தலாம். பல கோடி ரூபாய்கள்
நாம் பல காரியங்களுக்குச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு
எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்றுதான் நினைத்துக்கொண்டிருக்
கிறோம். அதற்கும் ஒரு திட்டம் இருக்கிறது. இடம் பார்ப்பதிலேதான்
சங்கடம் வருகிறது. இடவசதி இருந்தால், இரண்டுக்கும் சேர்த்தே ஒதுக்கி
விடலாம். அதை இந்தத் தலைமுறையிலேயே செய்தால் நன்றாக இருக்கும்.
சட்டமன்றத்திற்கு வசதி வாய்ப்பு இருக்க வேண்டும். மாண்புமிகு
அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, இப்போது வராண்டாவிலே கூட
அலுவலகம் நடை பெறுகிறது. லைப்ரரி வசதி நன்றாக இல்லை. இரண்டு
அவையினுடைய உறுப்பினர்கள் கூடிப் பேச வாய்ப்பில்லை. ஒரு அவையைச்
சேர்ந்தவர் இன்னொரு அவையைச் சேர்ந்தவரோடு கலந்து உரையாடுவதற்கு
வாய்ப்பு கிடையாது. இவைகள் எல்லாம் இருந்தால் உறுப்பினர்கள்

அவர்கள் பணிகளைச் செம்மையாகச் செய்ய முடியும். அந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்து நல்ல நூல் நிலையங்கள், லௌன்ஜ் எல்லாம் வைத்துக்கொடுக்க வேண்டும். அவைகளை வசதியானதாக, தனித்தனியாக வைக்கலாம். அதற்குள் யாரும் வராமல் இருக்க வேண்டும். அப்படியும் யாராவது 'விசிட்டர்கள்' வந்தால், அவர்களை உறுப்பினர்கள் போய்ப் பார்ப்பதற்கு வசதி செய்து தரவேண்டும். அதற்கு என்று தனியாக இடம் இருக்க வேண்டும். இந்த வசதிகள் எல்லாம் சிலபல மாநிலங்களில் செய்து தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே இங்கேயும் செய்துதர வேண்டும். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. இங்கே பல கோடிக்கணக்கான ரூபாய்கள் பல காரியங்களுக்காகச் செலவு செய்கிறோம். அப்படிச் செலவு செய்கின்றபோது, இதற்கு என்று ஒரு 10 கோடி, 15 கோடி ரூபாய் செலவு செய்தால், பரவாயில்லை. இது வருகின்ற 100, 150 வருடங்களுக்குப் பயன் படுகிறது. அந்த அளவுக்கு அந்தக் கட்டிடங்கள் இருக்கும். நூறு ஆண்டு காலத்திற்குத் திட்டம் போட்டுச் செய்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் செல வழிப்பதைவிட ஒரு மொத்தமாக திட்டமிட்டுச் செய்யலாம். இடத்தைத் தான் தேடிக் கொண்டிருக்கிறோம். அந்த இடத்திலேதான் தகராறு வரு கிறது. இந்தக் கோட்டைக்குள்ளே பார்த்தோம் என்றால், பல சங்கடங் கள் இருக்கின்றன. இந்த இடம் பெறுவதிலே காலதாமதம் ஏற்பட்டுவருகிறது. இங்கே இல்லாவிட்டால், அரசினர் தோட்டத்திற்குப் போகலாமா என்ற எண்ணம் இருக்கிறது. அது விரைவு படுத்தப்பட்டால், இந்தக் குறைகள் தீரும் என்று கருதுகிறேன். தன்னிறைவு திட்டம்பற்றிச் சொன்னார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் வைத்துக்கொள்வது அல்லது டைப்ரைட்டர் வாங்கிக்கொள்வதற்கான வசதி ஏற்படுத்துவதைவிட, அதற் கான நிதி உதவி செய்துவிடலாம் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கருத்து சொன்னார்கள். அது மிகச்சிறந்த கருத்து. அதை நான் வரவேற்கிறேன். 'மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள்





கூறியது ஒரு நல்ல யோசனை, அதைச் செயல்படுத்தினால் அனைத்து சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் நல்லதாக இருக்கும், அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்,

பஸ் பாஸ் பற்றி நான் ஒரு குறைபாட்டைச் சுட்டிக்காட்டினேன். அந்தக் குறைபாட்டை நீக்குவது மிகவும் சாதாரணமான ஒரு பணி. அதாவது ஆண் உறுப்பினர் பேருந்திலே செல்லும்போது அவருடைய மனைவி மட்டும் தான் கூட செல்லலாம் என்று இருக்கிறது. பெண் உறுப்பினர் பேருந்தில் செல்லும்போது, அவருடைய உறவினர் யார் வேண்டுமானாலும் அவருடன் செல்லலாம் என்று விதியைச் செய்து சென்ற ஆண்டு அந்தச் சலுகையை அளித்தார்கள். பெண் உறுப்பினருக்கு அளிக்கப்பட்ட அந்தச் சலுகையை ஆண் உறுப்பினர்களுக்கும் அளிக்க வேண்டும். அது சாதாரணமான ஒன்று. காரணம் சட்டமன்ற உறுப்பினர்களில் வயதானவர்களும் இருக்கிறார்கள், அவர்கள் சட்டமன்றத்திற்கு வரும்போது, அவர்களுடைய பணிகளைக் கவனித்துக் கொள்ள யாராவது ஒரு உதவியாளரை அழைத்து வருகின்ற நிலை இருக்கிறது. ஆகவே ஆண் உறுப்பினர்களுக்கு அந்தச் சலுகையை அளித்து, மாண்புமிகு அமைச்சர் டாக்டர் அவர்கள் 'சம நீதியை நிலை நாட்டிய நாவலர் நெடுஞ்செழியன்' என்ற பெயரை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. எம். மியாகான் :** நான் தமிழிலேயே பேசுகிறேன். இந்த லவுன்ஜுக்குப் பக்கத்தில்கூட இடம் இருக்கிறது. அந்த இடத்தில் 6 மாடிக்கட்டிடம் கட்டினால்கூட, ஓரளவுக்கு இந்தப் பற்றாக்குறை தீரும். நாம் வேறு இடங்களைத் தேடிக் கொண்டு அதைச் செய்வதற்குள், இந்த இடத்திலே ஒரு 10 லட்சம் அல்லது 15 லட்சம் ரூபாய் செலவு செய்து செய்யலாம். அதற்கு மேல் ஆகாது. அந்த இடத்திலே பவுன்டேஷன் நன்றாக இருக் கும். அதையொட்டி கட்டிடங்களும் இருக்கின்றன. அந்த இடத்தில் ஒரு 6 மாடிக் கட்டடம் கட்டினால் ஓரளவுக்குக் குறைகள் தீரும் என்று நம்பு கிறேன். ஆகவே அதைப்பற்றி ஆலோசனை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

[1982 மார்ச் 24

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாபிலும், அரியானாவிலும் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் வீடு கட்டிக்கொடுப்பதற்கு என்று ஒரு லட்சம் ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். அந்த வீடும் கட்டித் தருகிறார்கள். அதைப்போன்று ஒரு திட்டத்தை இந்த அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தத் திட்டம் இப்போது பரிசிலனையில் இல்லை. இப்போதுதான் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்குப் பின்னால் வேண்டுமானால், வாய்ப்பு வசதிகள் இருந்தால் பார்க்கலாம். அவர்களுக்குக் கடன் கொடுக்கலாமா, அந்த உறுப்பனர் பதவிக் காலம் முடிவதற்குள்ளே அந்தக் கடனை எப்படித் திரும்பப்பெறுவது, அவர்கள் திரும்ப உறுப்பினர்களாக வருவார்களா, அவர்கள் அந்தக் கடனைத் திரும்பக் கட்டிவிடுவார்களா என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். எவ்வளவு கட்டுவார்கள் என்று பார்க்க வேண்டும். அதற்கு என்று எவ்வளவு நிதி ஒதுக்குவது என்று பார்க்கவேண்டும். அதையெல்லாம் யோசிக்க வேண்டும். இப்போதுதான் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி ஆராயலாம். அதற்கான செயற்குறிப்பு பரிசிலனையில் இருக்கிறது என்று கூறமாட்டேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. லெட்சுமிகாநதன் அவர்கள் சொல்லும்போது, 'சம நீதி' என்று சொன்னார்கள். 'சம நீதி' என்று சொன்னாலும் பெண்களுக்கு தனிப் பாதுகாப்பு தந்துதான் ஆக வேண்டும். நம் நாட்டிலேதான் அது இல்லை. பொதுவாக மேலை நாடுகளிலே பெண்களுக்கு அவ்வாறு தந்திருக்கிறார்கள். ஆண்கள்தான் அவர்களுக்குப் பாதுகாப்பாகப் போகிறார்கள். அங்கே உள்ள நடைமுறையில் பெண்கள் முன்னாலே போகிறார்கள். ஆண்கள் பின்னாலே போகிறார்கள். இங்கே போவதுபோல ஆண்கள் பெண்கள் முன்னால் போவதில்லை. நம் நாட்டில் ஒரு தனிப் பண்பை, நாகரிகத்தைப் பின்பற்றுகிறோம். ஆகவேதான் அவர்கள்கூட கணவன் இல்லாவிட்டால், யாரையாவது ஒருவரைத் துணைக்கு அழைத்துவரலாம் என்று சொல்கிறேன். ஆண்களை யாரும் இழுத்துக்கொண்டு போவார்கள் என்று சொல்ல முடியாது. (சிரிப்பு) ஆண்களைப் பொறுத்தவரைக்கும் பரவாயில்லை. ஆனால் பெண்கள் வரும்போது என்ன சங்கடம் வரும் என்றால், அவர்களிடம் கணவன் யார் என்று கேட்டால், சங்கடமாக இருக்கும். ஒரு குடும்பம் என்று பார்க்கிறபோது, முதலில் அவர்கள் மனைவிக்குக் கொடு என்றுதான் சொல்வார்கள்.



1982 மார்ச் 24]

திரு. ஆர். டி. சீத்தாபதி : துணைத் தலைவர் அவர்களே, ஆண்களுக்குத்தான் பாதுகாப்பு தரவேண்டியதாக இருக்கிறது என்பதை மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குடும்பம் என்று வருகின்றபோது, ஒரு உறுப்பினருடைய மனைவி என்று பார்க்கிறபோது அவருடைய மனைவிக்குத்தான் முதலில் சலுகை கொடுக்கவேண்டும் என்று நினைப்பார்கள். அதனால்தான் பெண்களுக்குத் தரவேண்டும் என்று நாம் கருதுகிறோம், பெண்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றார்கள் என்ற அடிப்படையிலேதான் தருகிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். அதைப்பற்றி வேண்டுமானால் ஆராயலாம் என்றாலும்கூட, இப்போது அதைப்பற்றி முடிவு சொல்வதற்கில்லை,

(பிற்பகல் 1-00)

திரு. செ. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள்கூட இதே அவையில் இத்தகைய கருத்து பரிசிலிக்கப்படுகிறது, உறுப்பினரோடு அட்டென்டரை அழைத்துச் செல்லலாமென்ற கருத்தை அரசு பரிசிலித்து வருகிறது என்று சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் கூறியிருக்கிறார்கள். சில மாநிலங்களில் யாராவது ஒருவரை அழைத்துச் செல்லலாமென்று இருக்கிறது. எனவே உறுப்பினர்கள் தங்களுடன் ஒரு அசிஸ்டன்டை அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆராயலாமென்று சொல்கிறேன். கூட அழைத்துக் கொண்டு வருவது ஆணா, பெண்ணா, உதவியாளரா என்பதையெல்லாம் முடிவு செய்ய வேண்டும். முடிவு பாதகமாக இருக்குமா, சாதகமாக இருக்குமா என்று சொல்ல மாட்டேன். ஆராயலாமென்று சொல்லியிருக்கிறேன். இப்படி வேறு ஒரு மாநிலத்தில் இருக்கிறதா என்று பார்க்கலாம். முடிவு எதுவும் இப்போது சொல்லவில்லை. ஆராய்ந்த பிறகு சாதகமாக இருந்தாலும் இருக்கலாம், பாதகமாக இருந்தாலும் இருக்கலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கடன் தள்ளுபடி பற்றிச் சொன்னார்கள். 19 கோடியே 68 லட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்திருக்கிறோமென்று சொன்னார்கள். 192 கோடி என்பது 1977-78 லிருந்து எந்தெந்த வகையில் தள்ளப்பட்டது என்று சேர்த்துப் போட்டது தான். முந்தைய ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 78 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறோம். இந்த ஆண்டுக் கணக்குகளில் துணை மதிப்பீடுகளில் 19 கோடியே 68 லட்சம் ரூபாய் கோரப்படுகிறது. 5 எக்கருக்குக் கீழேயுள்ளவர்களுக்கு, தக்காவிக் கடன் 20, 22 கோடி ரூபாய் கடன் தள்ளப்பட்டதையும் சேர்த்து 192 கோடி ரூபாய் அளவிற்கு வருகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் 19 கோடியே 68 லட்சம் ரூபாய் என்று அதனால் கோரப்பட்டிருக்கிறதென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டம்பற்றிச் சொன்னார்கள். ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் இரண்டு வகையிலே வருவாய்கள் பெற்று வந்தன. ஒன்று வீட்டுவரி மூலம் வருமானம், மற்றொன்று செஸ் மூலமாக அந்தந்த ஒன்றியங்களுக்குக் கிடைக்கும் வருமானம். இதை வைத்துத் தான் ஊராட்சி ஒன்றியங்கள் வசதிகள் செய்துகொள்ள வேண்டியதாக இருக்கின்றன. அது தவிர ஊராட்சி ஒன்றியங்களை ஏ, பி, சி, டி என்று 4 கிளாஸ்களாகப் பிரித்து கிரான்ட் கொடுக்கிறோம். அந்த கிரான்ட் மூலம் வரும் பணம், வீட்டு வரி மூலம் வரும் பணம், செஸ் மூலம் கிடைக்கும் பணம் இவற்றை வைத்து காரியங்களை நடத்தி வந்தன. இப்போதும் அப்படி நடக்கிறதென்றாலும், ஒவ்வொரு கிராமத்திலும் அடிப்படைத் தேவைகள்—குடிநீர், சாலை வசதி, சிறு சிறு பாலங்கள் கட்டுதல், மயானத்திற்கு சாலை வசதி போன்றவைகள் ஏற்படுத்த, 300 மக்கள் இருக்கும் இடத்தில் ஒரு துவக்கப் பள்ளி அமைத்தல், 2½ மைல் சுற்றளவில் ஒரு நடுநிலைப் பள்ளி கட்டாயம் இருக்க வேண்டும், 5 மைல் சுற்றளவில் உயர்நிலைப் பள்ளி இருக்க வேண்டும், 20, 25 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தால் அந்தப் பகுதியில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டும், 30, 40 கல்லூரிகள் இருக்குமிடத்தில் பல்கலைக் கழகம் அமைய வேண்டுமென்று கணக்கு வைத்துப் பார்க்கும்போது, பல இடங்களில் கட்டிடங்கள் கூட அமையாமல் இருக்கும் நிலையை மாற்ற, சிறப்புத் திட்டமாக எடுத்துக்கொண்டு, வழக்கமாக ஒதுக்கப்படுவதைவிட அதிகமாக நிதி வசதி செய்கிறோம். 69 ஒன்றியங்களை எடுத்துக்கொண்டு அதற்கு





39 கோடி ரூபாய் தனியாகச் செலவு செய்தோம். பிறகு 150 ஒன்றியங்களை எடுத்துக்கொண்டு, 80, 85 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கினோம். இந்த ஆண்டு 159 ஒன்றியங்களை எடுப்போமென்று சொல்லி நிதிநிலை அறிக்கையில் 97 கோடி ரூபாய் தனியாக ஒதுக்கியிருக்கிறோம். அதனால்தான் சில பல வசதிகளை கிராமங்கள் பெற்றிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னது போன்று சிலபல குறைபாடுகள் இருக்கலாம். அதிகாரிகளை வைத்துக் கண்காணிக்க பல்வேறு வசதிகள், வாய்ப்புகள் வைத்திருக்கிறோம். ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் தேர்தல்களை நடத்தினால், அவர்களுடைய கண்காணிப்பு சேர்ந்திருக்கும். அந்த வகையிலே எதிர்பார்த்த விளைவுகள் ஏன் ஏற்படவில்லை என்பதை உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் விளக்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சாதாரணமாகக் கிடைக்கும் வருமானத்தைவிட கூடுதலாகக் கிடைக்கிறது. பல ஒன்றியங்களிலே பள்ளிக் கட்டிடங்கள் இனி கட்ட வேண்டாமென்ற அளவிற்குக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. பாலங்கள், பாதை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் உள்ள குறைபாடுகளை அடுத்த ஆண்டு நிவர்த்திக்கலாம். தொடர்ந்து இந்தத் திட்டம் தொடரவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறோம். அந்த வகையிலே வசதிகள், வாய்ப்புகள் செய்யப்படுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தனித் தனியாக சிலவற்றை நான் எடுத்துச் சொன்னாலும், முழு விவரங்களை எடுத்துச் சொல்லவில்லை. இருந்தாலும் உறுப்பினர்களுடைய கருத்துக்களோடு ஒன்றிப் போகிறேன். பணம் வீணாகக் கூடாது என்றும், ஒதுக்கப்படுகின்ற பணம் ஏழை மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்றும் நாம் எடுத்துச் சொல்லுகிறோம். அதிகாரிகள், அலுவலர்களை நம்பித்தான் பல்வேறு காரியங்களைச் செய்யவேண்டியிருப்பதால், இவற்றைச் செய்கிறோம். அதிகாரிகள், மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும்போது, எந்த ஒரு ஏழையும், பாமரனும், சாதாரண மனிதனும் நாம் வஞ்சிக்கப்பட்டுவிட்டோம் என்று ஆகாமல், வஞ்சிக்கப்பட்டுவிட்டோம் என்று வருந்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அத்தனை பேருக்கும் இருக்கிறது என்பதை வலியுறுத்த வேண்டும். வசதி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, அநியாயமாக உபத்திரவத்திற்கு ஆளாக்கப்பட்டுவிட்டோமென்று அவர்கள் வருந்தாத அளவிற்கு நிலைமைகள் ஏற்பட வேண்டும். அதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையிலேதான் காரியங்கள் நடைபெற வேண்டும். சிக்கனமாக நடத்த வேண்டுமென்ற தன்மைகள்

இருந்தாலும், நாளுக்கு நாள் செலவினங்கள் பெருகி வருவதால், அதனை ஈடுகட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம். கடன் வசதி, பங்கு மூலதன வசதி, மின்சார வாரியத்தைக் காப்பாற்ற நிதியுதவி இதுபோன்ற செலவினங்கள் ஏற்படாமல் இருந்தால், டெவலப்மென்ட் ஸ்கீம்களில் அந்தப் பணத்தைச் செலவழிக்கும் வாய்ப்பு இன்னும் அதிகமாக இருக்கும். அவற்றைக் காப்பாற்ற வேண்டியதன் காரணமாகத்தான், அவற்றுக்குச் செலவிட வேண்டிய நிலை இருக்கிறதென்று சொல்லி, உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகியவற்றின் வசதிகள் குறித்து தொடர்ந்து திட்டம் போட்டு செயல்படுத்தினாலும், உடனடியாக வராந்தாவில் அலுவலகம் இருப்பதற்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ரிசர்ச் பிரிவு மேலவைக்குத் தனியாகத் தேவை. அதை ஏற்படுத்த வேண்டும். பல்கலைக் கழக மாணவர்கள் தேர்வு எழுத முடியாமல் அவதிப்படுகிறார்கள். கோடைக் காலம் வருகிறது. தண்ணீருக்குக் கஷ்டப்படும்படியாக இருக்குமென்று சொல்லுகிறார்கள். எனவே தேர்வுகள் உடனடியாக நடைபெற ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போன்று நான் சொல்லுவது நீண்ட காலத் திட்டம். சிலபல ஆண்டுகளாகும். அவர்கள் சொல்லுவது போன்ற சிலபல வசதிகளைச் செய்வதிலே அரசு கவனம் செலுத்தும். நானே ஒரு நாள் அதிகாரிகளை வைத்துக்கொண்டு சுற்றிப் பார்த்துவிட்டேன். செக்ரடேரியட்டில் பல துறைகளை நகர்த்தினால்தான் பேரவை, மேலவைக்கு ஓரளவிற்கு தாராளமாக இருக்கக்கூடும். தலைமைச் செயலாளர் மூலமாக அந்தத் துறைகளை நகர்த்தச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் சில இடங்களைக் காலி செய்தால், நமக்குச் சிலபல இடங்கள் கிடைக்கும். புதிய கட்டிடத்திற்கு சில துறைகளை மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தலைமைச் செயலாளர் கவனித்துக்கொண்டிருக்கிறார் உடனடியாக சிலபல வசதிகளைச் செய்ய கவனமிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



வறட்சி நிலையைப் பற்றி ஆராய்ந்தறிந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிக்கை தரச் சொல்லியிருக்கிறேன். வறட்சி நிலை ஏற்படாதென்றாலும், சில மாவட்டங்களில் அதனுடைய அறிகுறிகள் தோன்றியிருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. எனவே இப்போதே கவனமாக இருந்து, போன ஆண்டு வறட்சியைத் தடுத்து நிறுத்திய அனுபவத்தின் அடிப்படையில், மேலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்னென்ன என்பதை அந்தந்த மாவட்டத்தைப் பொறுத்து அறிவிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து குறிப்புகள், அறிக்கைகள் வந்த பிறகு, அதன் அடிப்படையிலே தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமென்று சொல்லி, அரசு சிறப்பாக, செம்மையாக நடைபெற பல்வேறு கருத்துக்களைச் சொன்ன உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் நேற்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-09)

4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

**Nil.**

*B. Reports Notifications and other papers.*

116. A Review of the Tamil Nadu Police, 1981-82. (Tamil & English).

117. Policy Note or the Administration of the Tamil Nadu Hindu Religious Endowments Act, 1959 (Tamil and English).

118. Policy Note on Labour in Tamil Nadu 1982-83 (Tamil English).

119. Policy Note on Co-operation Department for the year 1982-83. (Tamil & English).

120. A Booklet entitled " Central Co-operative Banks in Tamil Nadu ". (Tamil & English).

121. A Short Note on the working of the Tamil Nadu Co-operative State Land Development Bank Limited as on the 30th June 1981. (Tamil & English).

122. A note on the working of the Tamil Nadu Consumers Co-operative Federation Limited, 1981-82. (Tamil & English).

123. A Booklet entitled " Farmers Friend TANFED. A Co-operative for the Farmers of Tamil Nadu ". (Tamil and English).

124. A Short Note on the working of the Tamil Nadu State Co-operative Bank Limited, as on the 31st December 1981. (Tamil & English).

125. Performance Budget on Industries, 1982-83. (Tamil & English).



## இணைப்பு I

(803 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 208-க்கான விடையைக் காண்க.)

(அ) தமிழகத்தில் நகரங்கள் தவிர மற்ற இடங்களில் (Non Municipal Areas) பொதுப்பணித்துறை நிர்வாகத்தின் கீழ் இருக்கும் ஆய்வாளர் மாளிகைகளின் விவரம் வருமாறு:—

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | ஆய்வாளர் மாளிகைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | 12 |
| 2. | வட ஆற்காடு | 13 |
| 3. | தென் ஆற்காடு | 14 |
| 4. | தஞ்சாவூர் | 28 |
| 5. | திருச்சிராப்பள்ளி | .. |
| 6. | புதுக்கோட்டை | 1 |
| 7. | தர்மபுரி | 8 |
| 8. | கோயம்புத்தூர் | 16 |
| 9. | பெரியார் மாவட்டம் | 2 |
| 10. | மதுரை | 16 |
| 11. | இராமநாதபுரம் | 7 |
| 12. | திருநெல்வேலி | 24 |
| 13. | கன்னியாகுமரி | 16 |
| 14. | சேலம் | 4 |
| | மொத்தம் | 161 |

(இ) அவற்றில் பயன்படுத்தமுடியாத நிலையில் பழுதுபட்டு இருப்பவை பின்வருமாறு :—

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | | ஆய்வாளர் மாளிகைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு மாவட்டம் | .. | 1 |
| 2. | தென் ஆற்காடு மாவட்டம் | .. | 1 |
| 3. | கன்னியாகுமரி மாவட்டம் | .. | 3 |
| | | மொத்தம் .. | 5 |

(உ) மற்றும் (ஊ) : தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு :—

செங்கல்பட்டு மாவட்டம் உத்திரமேரூரில் உள்ள ஆய்வாளர் மாளிகை பழுதுபார்ப்பதற்காக மூடப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் தலைமைச் கட்டிடப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

(2) தென் ஆற்காடு மாவட்டம் வானமாதேவியிலுள்ள ஆய்வாளர் மாளிகை தங்குவதற்கு தகுதியற்றதாகிவிட்டது. எனவே, அந்த ஆய்வாளர் மாளிகை 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இடிக்கப்பட்டுவிட்டது.

(3) கன்னியாகுமரி மாவட்டத்தில் சிதப்பால், தடிக்காரன்கோணம், மூளகுமூடு ஆகிய 3 இடங்களில் உள்ள ஆய்வாளர் மாளிகைகள் பழுது பார்க்கும் நிலைக்கு அப்பாற்பட்டிருக்கிறது. இவைகளில் யாரும் தங்குவதில்லை. எனவே, இவைகளைப் பழுதுபார்க்கும் செயற்குறிப்புகள் ஏதும் இல்லை.



## இணைப்பு

(806 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் விவர அறிக்கை.

நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்கள், கடைகள், காலி நிலங்கள் முதலியவற்றை குத்தகைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு பொது ஏலத்தில் விடப்பட வேண்டுமென்றும் குத்தகைக்காலம் முடிந்தவுடன் மார்க்கெட் நிலவரப்படி வாடகை நிர்ணயம் செய்து நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரின் ஒப்புதலுடன் மேலும் 5 ஆண்டுகளுக்கு குத்தகை நீடிக்கலாம் என்று 1978-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 1977-78 லிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகை தொகையில் எவ்வித உயர்வுமில்லாமல் நகராட்சி சொத்துக்களை குத்தகை தாரர்களுக்கு விட்டதனால் நகராட்சிகள் நிதி நிலைமை பாதிக்கப்பட்டதாலும் நகராட்சிகளின் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாமையினாலும் ஒவ்வொரு ஆண்டும் குத்தகைத் தொகையில் 25 சதவிகிதம் உயர்த்தி வசூலிக்க நகராட்சிகளை அனுமதிக்குமாறும் குத்தகைக் காலத்தை 5 ஆண்டுகளுக்குப் பதில் 3 ஆண்டுகளாக மாற்றியும், மூன்றாண்டின் முடிவில் பொது ஏலத்தில் விடுமாறும் ஆணை பிறப்பிக்குமாறு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அரசை வேண்டியிருந்தார்.

2. அரசு தீவிர ஆய்விற்குப்பின் நகராட்சிகளின் குத்தகைத்தாரர்களுக்கு உதவிபுரியவேண்டும் என்றும் நகராட்சிகளின் நிதிநிலையை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தையும் கருத்தில் கொண்டு நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்கள், கடைகள், காலி நிலங்கள் ஆகியவற்றை முதல் தடவையாக பொது ஏலத்தின் மூலம் 3 ஆண்டுகளுக்குக் குத்தகை விடவேண்டும் என்றும் தற்போதுள்ள குத்தகைக் காலம் முடியும் இனங்களில் குத்தகைத் தொகையில் 50 சதவிகிதத்திற்கு குறையாமல் உயர்த்தி குத்தகைத் தொகை நிர்ணயம் செய்து குத்தகையை நீடிக்கலாம் என்றும் 16—2—1982 இல் ஆணைகள் பிறப்பித்துள்ளன. நகராட்சிக் கடைகள், கட்டிடங்கள் ஆகியவற்றின் குத்தகை தாரர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட 50 சதவிகித குத்தகை உயர்வு அதிக மென்று முறையீடுகள் வரப்பெற்றமையால் அவர்களுக்கு மேலும் உதவிசெய்யும் வகையில் குத்தகை உயர்வை 50 சதவிகிதத்திலிருந்து 30 சதவிதமாகக் குறைத்து 9—3—1982 அன்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

3. தற்போது 30 சதவிகிதம் உயர்த்தியுள்ள குத்தகை உயர்வு 1977—78 இல் நிர்ணயம் செய்து குத்தகைத் தொகையின் மீதான உயர்வாகும். கடந்த 5 ஆண்டுகளாக குத்தகைத் தொகையில் கூடுதல் ஏதுமின்றி அதே தொகையையே குத்தகைத்தாரர்கள் நகராட்சிக்கு செலுத்தி வருவதாலும் தற்போது உயர்த்தப்பட்டுள்ள 30 சதவிகித குத்தகை உயர்வு 1977-78 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட குத்தகைத் தொகையின் மீதான உயர்வே என்பதாலும் இவ்வாறு 30 சதவிகிதம் உயர்த்தி நிர்ணயம் செய்யப்படும் குத்தகைத் தொகை 1982-83 இல் இருந்து மேலும் 3 ஆண்டுகட்குத் தொடர்ந்து இருக்கும் என்பதாலும் இப்பொழுது உயர்த்தப்படும் 30 சதவிகித குத்தகைத் தொகை அதிகமெனக் கருதுவதற்கு இல்லை.

4. குத்தகைத் தொகையை 30 சதவிகிதம் உயர்த்தி தற்பொழுதுள்ள குத்தகைகளை நீடிக்கலாம் என்ற அரசு உத்தரவு எல்லா நகராட்சிகளுக்கும் பொருந்தும். எனவே கடலூர் நகராட்சி அதிகாரிகளும் குறைந்த பட்சம் 50 சதவிகிதத்திற்குப் பதிலாக 30 சதவிகிதம் குத்தகைத் தொகையை உயர்த்தி தற்பொழுதுள்ள குத்தகைகளை நீடிப்பார்கள்.



## இணைப்பு III

(807 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

பட்டினப்பாக்கம் அரசு மருந்தகத்தில் 10—2—1982 முதல் 25—2—1982 முடிய பல்வேறு வயதிற்குட்பட்ட 842 நோயாளிகளுக்குப் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மூச்சிரைப்பு நோய்க்கான சிகிச்சை மேலே குறிப்பிட்ட காலத்தில் 23 குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டது. அது சாதாரண பருவ நிலை காரணமாக ஏற்படும் மூச்சிரைப்பு நோயே ஆகும். அரசாங்க இராயப்பேட்டை மருத்துவமனையில் குழந்தைகள் நலப்பிரிவில் செப்டம்பர் முதல் டிசம்பர் 1981 முடிய "நிமோனியா" காய்ச்சலுக்காக முறையே 25, 31, 20, 24 குழந்தைகள் சேர்க்கப்பட்டார்கள். இது அந்த பருவத்திற்கான சாதாரண நிகழ்ச்சியாகும். இவ்விதமான காய்ச்சலுக்கான சிகிச்சையின் எண்ணிக்கை அதிகம் இல்லை.

Index to

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXXVII (Nos. 1—5)

*19th, 20th and 22nd to 24th March* 1982.

## A


PAGES

ADI DRAVIDAR AND TRIBAL WELFARE—

Performance Budget, 1982-83, laid on the table .. 351

Policy Note on Backward Classes and—, discussion on .. .. .. .. 621—703

Policy Note on—, laid on the table .. .. 351

ADJOURNMENT MOTION *re*—

S.S.L.C. Public Examination held on 22nd March 1982 at Madras, wrong distribution of question paper in .. .. .. .. 612—617

ADMINISTRATION OF JUSTICE—

Policy Note on—, laid on the table .. .. 704

AGRICULTURE—

Booklet on Achievements and Ambitions in—laid on the table .. .. .. .. 351

Booklet on Training-*cum*-Contract Programme, in—laid on the table .. .. .. 351

A—*cont.*

AGRICULTURE—*cont.*

PAGES

Performance Budget, 1982-83, laid on the table .. 351

Policy Note on—, laid on the table .. .. 351

ANANDAM, Thiru V. V. V.—

Policy Note on Education, discussion on .. .. 200—203

ARANGANAYAGAM, the Hon. Thiru C.—

Policy Note on Education, discussion on .. 34, 41, 48, 61, 93, 195, 198, 206, 209, 210—211, 227 235—236, 237, 262, 266, 288, 299, 309, 310—350

Privilege issue *re*—

Circular of Secretary to Government, Education Department and Director of School Education about sending of replies to Members of Legislature 28—29

ARUMUGAM, Thiru S.—

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. 634, 667—678, 693, 694

Policy Note on Education, discussion on .. .. 207, 227, 260

ARUNACHALAM, Thiru K.—

Policy Note on Education, discussion on .. .. 80—87



B

PAGES

BACKWARD CLASSES—

Performance Budget, 1982-83, laid on the table .. 351

Policy Note on—and Adi-Dravidar and Tribal Welfare, discussion on .. .. .. 621—703

Policy Note on—, laid on the table .. .. 351

BRIDGES—

Question *re* Bridge across Kowsigamanathi on outskirts of Virudhunagar on No. 7, Virudhunagar-Sathur National Highways, widening of .. 11

BUILDING GRANTS—

Note on Demand for—for 1982-83, laid on the table 499

BUS(ES)—

Thiruvalluvar Transport Corporation—, Minister's attention called to setting fire to—opposite to Meenambakkam Airport on 9th March 1982 379—380

C

CHAIRMAN, Mr.—

Adjournment motion *re* S.S.L.C. Public Examination held on 22nd March 1982 at Madras, wrong distribution of question paper in .. .. 612—617

Announcement *re*—

Expunction of certain portion of proceedings, dated 5th March 1982 .. .. .. 22—23

House Committee, election of Members to .. 620—621

Obituary reference *re*—

Death of Kripalani, Thiru J. B. .. .. .. 177—178

Policy Note on Education, discussion on .. .. 182, 308, 327, 328

C—*cont.*

CHAIRMAN, Mr—*cont.*

PAGES.

Policy Note on Medical and Public Health, discussion on .. .. .. .. .. 387

Privilege issue *re*—

Circular of Secretary to Government, Education Department, and Director of School Education about sending of replies to Members of the Legislature .. .. .. .. 23, 24, 26, 27, 29

Privileges Committee, election of Members to .. 619—620

Statement of Supplementary Expenditure for 1981-82 (Final), discussion on .. .. 810, 816, 817, 840 851, 853, 854

CINCHONA DEPARTMENT—

Commercial Budget, 1982-83, laid on the table .. 103

Performance Budget, 1982-83, laid on the table .. 103

Policy Note on—, laid on the table .. .. 103

COMMITTEES—

House Committee, election of Members to .. .. 620—621

Privileges Committee, election of Members to .. 619—620

Public Undertakings Committee, fifteenth report of—on report of Comptroller and Auditor-General of India for 1976-77 and 1977-78 laid on the table 704

CO-OPERATION DEPARTMENT—

Policy Note on—, laid on the table .. .. 893



C—*cont.*

PAGES.

CO-OPERATIVE BANKS—

Central—in Tamil Nadu, Book entitled—laid on the table .. .. .. 894

Tamil Nadu State—Limited, Note on working of—as on 31st December 1981, laid on the table .. 894

CORPORATION OF MADRAS—

Question *re* Superintendents and Assistant Inspectors in—belonging to one and the same category, difference in pay scale of .. .. .. 362—363

D

DAIRY DEVELOPMENT DEPARTMENT AND PRODUCERS' FEDERATION—

Policy Note on—, laid on the table .. .. .. 704

DAMODARAN, Thiru A. R.—

Cuddalore Municipality, calling Minister's attention to hardship caused to tenants due to increase in rent on all shops in .. .. .. 806—807

Policy Note on Education, discussion on .. .. 190—200, 235

Policy Notes on Medical and Public Health, discussion on .. .. .. 391—401

Statement of Supplementary Expenditure for 1981-82 (Final), discussion on .. .. .. 817—822, 879

DEMAND NOS. 1, 11, 41, 46—

Policy Notes on Land Revenue, District Administration, Relief on account of Natural Calamities and Compensation and Assignment, 1982-83, laid on the table .. . .. .. .. 499

D—*cont.*

PAGES.

DEPUTY CHAIRMAN, Mr.—

Policy Note on Backward Classess and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. 632, 634, 635, 636, 642, 675, 679, 703

Policy Note on Education, discussion on .. 47, 59, 71, 75, 76, 77, 84, 91, 92, 208, 215, 221, 228, 236, 242, 248, 271, 272

Policy Notes on Medical and Public Health, discussion on .. .. .. 439

Statement of Supplementary Expenditure for 1981-82 (Final), discussion on .. .. 827, 873

DIABETES—

Question *re* in-patients and out-patients receiving treatment daily for diabetes in Government General Hospital, Madras, number of .. .. 375—379

DISTRICT ADMINISTRATION—

Demand Nos. 1, 11, 41, 46, Policy Notes on Land Revenue—, Relief on account of Natural calamities and Compensation and Assignment, 1982-83, laid on the table .. .. .. 499

DOSS, Thiru A. J.—

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 622—628, 631



D—*cont.*

PAGES.

DOSS, Thiru A. J.—*cont.*

Policy Note on Education, discussion on .. .. 350

E.

EDUCATION—

Policy Note on—, discussion on .. .. .. 34—100, 179—350

Policy Note on—, laid on the table .. .. 102

School—, Collegiate—, and Technical—, Performance Budget, 1982-83, laid on the table .. .. 102

ELECTRICITY—

Question *re*—

Card billing system for power consumption in Tamil Nadu, implementation of—, and number of employees newly appointed for .. .. 357—361

Change in—tariff for Temples, Mosques and Churches .. .. .. .. 355—357

Second Thermal Station in Neyveli, Minister's attention called to agitation launched by villagers affected by land acquisition for .. .. .. 30—31

ERADHA, Thiru S. R.—

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. 632, 634, 673, 679

Policy Note on Education, discussion on .. 207, 270—271

Policy Notes on Medical and Public Health, discussion on .. .. .. 451, 452, 460, 489, 490

Statement of Supplementary Expenditure for 1981-82, (Final), discussion on .. .. 833

E.—*cont.*

PAGES.

EXAMINATIONS—

Adjournment motion *re* S.S.L.C. Public Examination held on 22nd March 1982 at Madras, wrong distribution of Question paper in .. .. .. 617—617

EXCISE DEPARTMENT—

Policy Note on State—, 1982-83, laid on the table 103

EXPUNCTION OF PROCEEDINGS—

Announcement *re* expunction of certain portion of proceedings of the Council, dated 5th March 1982 22—23

FESTIVAL ADVANCE—

*See* Loans and Advances

FILM INSTITUTE, TAMIL NADU—

*See* Films

FILM INSTITUTE, TAMIL NADU, ADYAR—

Question *re* number of students studying in—as on 1st December 1981 .. .. .. 1—3

FILMS—

Question *re* "Sivappumalli" and "Thanneer Thanneer", request to Central Government by State Government to ban .. .. 3—8

FISHERIES—

Performance Budget, 1982-83, laid on the table .. 104

Policy Note on—, laid on the table .. .. 103

FOOD—

Policy Note on—situation in Tamil Nadu, laid on the table .. .. .. .. 103

FOREST DEPARTMENT—

Policy Note on—, laid on the table .. .. 103

FORESTS—

Performance Budget, 1982-83, laid on the table .. 103



G

PAGES.

GOMATHI SRNIVASAN, The Hon. Thirumathi—

Orphanage attached to St. John Britto Middle School, Thanjavur, statement *re* stomach ache of children after taking food in the Hostel .. .. 381—382

GOVERNMENT PLEADERS—

Question *re* increase in number of—and drafting of counter Affidavits by .. .. 604—608

H

HANDE, The Hon. Dr. H. V.—

Doctors with similar qualifications working in Rural Dispensaries and Urban hospitals under Government control, statement *re* disparity in pay and allowances of .. .. .. 32, 33—34

Policy Notes on Medical and Public Health, discussion on .. .. .. 386, 387—390, 457—498

HARIJAN COLONY—

Question *re* lands acquired for—west of Kulathucheri, Agastheeswaram Taluk, Kanyakumari district, delay in granting of patta to .. .. .. 610—611

HIGHWAYS DEPARTMENT—

Question *re* upgradation of Deputy Chief Engineer's post in—to that of Superintending Engineer .. 9—10

HINDU RELIGIOUS ENDOWMENTS ACT, 1959—

Policy Note on administration of—, laid on the table 893

HOSPITALS AND DISPENSARIES—

Question *re*—

Dialysis Machine in Stanley Medical College Hospital, Madras, appointment of a qualified Nephrologist to operate .. .. .. 14—17

H—cont.

PAGES.

Government Hospitals with Blood Bank facilities in South Arcot district, names of—and number of—in working condition .. .. 799—802

Treatment for diabetes in Government General Hospital, Madras, number of in-patients and out-patients receiving .. .. .. 375—379

HOUSE COMMITTEE

*See* Committees

HOUSING AND URBAN DEVELOPMENT—

Policy Note on—in Tamil Nadu, laid on the table .. 103

I

INDIAN-MADE FOREIGN SPIRITS (SUPPLY BY WHOLESALE) RULES, 1981—

Amendments to—, notification laid on the table .. 102

INDIAN MEDICINE—

Performance Budget, 1982-83, laid on the table .. 104

INDUSTRIAL POLICY AND PROGRAMMES (MAJOR INDUSTRIES), 1982-83—

Laid on the table .. .. .. 704

INDUSTRIES POLICY AND PROGRAMMES (RURAL AND SMALL INDUSTRIES), 1982-83—

Laid on the table .. .. .. 704

INDUSTRIES—

Performance Budget, 1982-83, laid on the table .. 894



I—*cont.*

PAGES.

INFORMATION AND FILM TECHNOLOGY—

Policy Note on—, laid on the table .. .. 103

INFORMATION *re*—

Anonymous threatening telephonic calls allegedly received by Ramamoorthy, Thiru K., M.L.C. .. 612

INSPECTION BUNGALOWS—

Question *re* number of—under Public Works Department's control, districtwise, and number of—in disrepair .. .. .. 803—805

IRRIGATION—

Policy Note on—, 1982-83, laid on the table .. 499

Statement *re* follow-up action on suggestions and observations made by Members of the Legislature during discussion on Demand on—for 1981-82 .. 499

IRRIGATION AND GROUND-WATER—

Performance Budget, 1982-83, laid on the table .. 499

J

JANARTHANAM, Dr. T. R.—

Policy Note on Backward Classes and Adi-Dravidar and Tribal Welfare, discussion on .. 633

Policy Note on Education, discussion on .. 38, 39, 179—189, 207, 234, 260, 262, 292

Policy Notes on Medical and Public Health, discussion on .. .. .. 404—410

Statement of Supplementary Expenditure for 1981-82 (Final), discussion on .. .. .. 836—842, 864

J—*cont.*

PAGES.

JEPPIAAR, Thiru—

Policy Note on Backward Classes and Adi-Dravidar and Tribal Welfare, discussion on .. .. 628—642

Policy Note on Education, discussion on .. 297

K

KOLANDAIVELU, The Hon. Thiru P.—

Municipal shops in Cuddalore Municipality, statement *re* hardship caused to tenants due to increase of rent on .. .. .. 806—807

KRIPALANI, Thiru J. B.—

Obituary reference *re* death of .. .. .. 177—178

L

LABOUR—

Policy Note on—in Tamil Nadu, laid on the table 893

LAKSHMIKANDHAN, Thiru C. R.—

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 651—667, 692, 701

Policy Note on Education, discussion on .. .. 203—222, 339

Second Thermal Station in Neyveli, calling Minister's attention to agitation launched by villagers affected by land acquisition for .. .. .. 30—31

Supplementary Statement of Expenditure for 1981-82 (Final), discussion on .. .. 810—817, 886—887



L—*cont.*

PAGES.

LAND REVENUE—

Demand Numbers 1, 11, 41, 46, Policy Notes on—, District Administration, Relief on account of Natural Calamities and Compensation and Assignment, 1982-83, laid on the table .. .. 499

LANDS—

Question *re* cultivable—donated to Government Hospitals, names of Hospitals and annual income from .. .. .. .. .. 12—14

LEELAVATHI, Selvi A.—

Policy Note on Education, discussion on .. .. 52—59

Policy Notes on Medical and Public Health, discussion on .. .. .. .. .. 413—416

LEGISLATIVE COUNCIL—

Announcement *re* expunction of certain portion of proceedings, dated 5th March 1982 .. .. 22—23

LEPROSY—

Policy Note on—Beggars Rehabilitation Programme, laid on the table .. .. .. .. 103

LOANS AND ADVANCES—

Question *re* Festival advance to Pensioners, enhancement of .. .. .. .. 602—604

M

MADRAS CORPORATION HIGH SCHOOLS—

*See* Schools

MAGISTRATES—

Judicial Second Class—, Minister's attention called to contravention of Article 50 of Constitution of India in appointment of .. .. .. 617—619

M—*cont.*

PAGES.

MANDAKINI KRISHNAMUTHY, Thirumathi—

Policy Note on Education, discussion on .. 49—52

Policy Notes on Medical and Public Health, discussion on .. .. .. .. 401—404

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Doctors with similar qualifications working in Rural Dispensaries and Urban Hospitals under Government control, Minister's attention called to disparity in pay and allowances of .. .. 32—34

Judicial Second Class Magistrates, calling attention to contravention of Article 50 of Constitution of India in appointment of .. .. .. .. 617—619

Orphanage attached to St. John Britto Middle School, Thanjavur, calling attention to stomach ache of children after taking food in the Hostel .. 381—383

Pneumonia, calling attention to serious attack of—on children in Madras City .. .. 807—810

Police firing during Jallikattu in K.V. Kuppam village near Gudiyatham, calling attention to .. 178—179

Rent on all Municipal Shops in Cuddalore Municipality, calling attention to hardship caused to tenants due to increase in .. .. .. 806—807

Second Thermal Station in Neyveli, calling Minister's attention to agitation launched by villagers affected by land acquisition for .. .. .. 30—31

Thiruvalluvar Transport Corporation bus, calling attention to setting fire to—opposite to Meenambakkam Airport on 9th March 1982 .. .. .. 379—380

MEDICAL—

Policy Note on—, laid on the table .. .. 103

Policy Notes on—and Public Health, discussion on 386—499

MEDICAL EDUCATION DEPARTMENT—

Performance Budget, 1982-83, laid on the table 103



M—*cont.*

PAGES.

MEDICAL OFFICERS—

Doctors with similar qualifications working in Rural Dispensaries and Urban Hospitals under Government control, Minister's attention called to disparity in pay and allowances of .. .. .. 32—34

MEDICAL SERVICES AND FAMILY WELFARE—

Performance Budget, 1982-83, laid on the table .. 103

MEENAKSHISUNDARAM, Thiru K.—

Adjournment motion *re* S.S.L.C. Public Examination held on 22nd March 1982 at Madras, wrong distribution of question-paper in .. .. 612—617

Orphanage attached to St. John Britto Middle School, Thanjavur, calling Minister's attention to stomach ache of children after taking food in the Hostel 381

'Pneumonia', calling Minister's attention to serious attack of—on children in Madras City .. 807—808

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 642, 643
643—651
702

Policy Note on Education, discussion on .. .. 59—76,
.. 80, 89
329

Privilege issue *re* circular of Secretary to Government, Education Department and Director of School Education about sending of replies to Members of the Legislature .. .. .. 23—25
26—27

Supplementary Statement of Expenditure for 1981-82 (Final), discussion on .. .. .. 822—829
880, 881
882

PAGES.

MEMBERS OF THE LEGISLATURE—

Privilege issue *re* circular of Secretary to Government, Education Department, and Director of School Education, about sending of replies to Members of the Legislature .. .. .. 23—29

MIAKHAN, Thiru J. M.—

Supplementary Statement of Expenditure for 1981-82 (Final), discussion on .. .. .. 887

MOTOR VEHICLES TAX—

Concessional rate of tax on vehicle TMX 4573, notification laid on the table .. .. .. 102

Exemption of vehicles not using public roads from—, notification laid on the table .. .. .. 102

MUNICIPAL SHOPS—

Hardship caused to tenants due to increase of rent on—in Cuddalore Municipality .. 806—807

MUNICIPALITIES—

Question *re* Tiruchirappalli Municipality, upgradation as a City Corporation .. .. 795—798

MUTHIAH CHETTIAR, Dr. M.A.—

Policy Note on Education, discussion on .. 249—253

MUTHUSWAMY, Thiru S.—

'Pneumonia', calling Minister's attention to serious attack of—on children in Madas City .. .. 809—810

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 636



PAGES.

MUTHUSWAMY, Thiru S.—*cont.*

Policy Note on Education, discussion on .. 34, 37, 38—49, 76, 91, 92, 207, 209, 236, 242, 328, 337, 339, 344, 350

Policy Notes on Medical and Public Health, discussion on .. .. .. .. 410—413

Orphanage attached to St. John Britto Middle School, Thanjavur, calling Minister's attention to stomach-ache of children after taking food in the Hostel 382, 383

Privilege issue *re* circular of Secretary to Government, Education Department and Director of School Education about sending of replies to Members of the Legislature .. .. 25—26, 27—28

Supplementary Statement of Expenditure for 1981-82 (Final), discussion on .. .. 829—836, 879, 884, 888, 889

Thiruvalluvar Transport Corporation bus, statement *re* setting fire to—opposite to Meenambakkam Airport on 9th March 1982 .. 380

N

NALLASIVAN, Thiru A.—

Police firing at K. V. Kuppam village near Gudiyatham during Jellikattu, calling Minister's attention to .. .. .. 178, 179

Policy Note on Backward Classes and Adi-Dravidar and Tribal Welfare, discussion on .. 633, 638—639

N—*cont.*

PAGES

NALLASIVAN, Thiru A.—*cont.*

Policy Note on Education, discussion on .. 231—249, 264, 340, 341, 342

Policy Note on Medical and Public Health, discussion on .. .. .. .. 416—427, 463, 465, 468, 469, 482, 498

NATURAL CALAMITIES—

Demand Nos. 1, 11, 41, 46, Policy Notes on Land Revenue, District Administration, Relief on account of—, and Compensation and Assignment, 1982-83, laid on the table .. .. .. 499

NEDUNCHEZHIYAN, The Hon. Dr. V. R.—

Policy Note on Backward Classes and Adi-Dravidar and Tribal Welfare, discussion on .. 679—692, 693

Statement of Supplementary Expenditure for 1981-82 (Final), discussion on .. .. .. 866—893

O

OBITUARY REFERENCE *Re*—

Death of Kripalani, Thiru J. B. .. .. 177—178

OFFICAL LANGUAGE ACT, 1956—

Appointment of first day of February 1982 as the date of coming into force of sub-section (i) of section 4B in Civil Courts, notification laid on the table .. .. .. .. .. 703

ORPHANAGE—

Orphanage attached to St. John Britto Middle School, Thanjavur, Minister's attention called to stomach ache of children after taking food in the Hostel 381—383



P

PAGES

PANCHAYAT UNIONS—

Question *re* Pensionary benefits to retired employees of, grant of .. .. .. .. 793

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Adi-Dravidar and Tribal Welfare, Performance Budget, 1982-83 .. .. .. 351

Agriculture, booklet on achievements and ambitions in .. .. .. .. 351

Agriculture, booklet on Training-*cum*-Contact in Programme .. .. .. .. 351

Agriculture, Performance Budget, 1982-83 .. 351

Backward Classes, Performance Budget, 1982-83 .. 351

Central Co-operative Banks in Tamil Nadu, booklet entitled .. .. .. 894

Cinchona Department, Commercial Budget, 1982-83 .. .. .. .. 103

Cinchona Department, Performance Budget, 1982-83 .. .. 103

Committees—

Public Undertakings Committee—

Fifteenth Report of—on Report of Comptroller and Auditor-General of India for 1976-77 and 1977-78 .. .. .. .. 704

Sixteenth Report of—on Reports of Comptroller and Auditor-General of India for 1976-77 and 1977-78 .. .. .. .. 704

Dairy Development Department and Producers Federation, Policy Note on .. .. 704

Demand Nos. 1, 11, 41, 46 Policy Notes on Land Revenue District Administration Relief on Account of National Calamities and Compensation and Assignment, 1982-1983 .. .. 499

P—*cont.*


| | PAGES |
|---|---|
| PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.* | |
| Errata to Policy Note on, Supplement to Demand No. 19, Sewerage and Water Supply, 1982-83 | 499 |
| "Farmers Friend TANFED—A Co-operative for the Farmers of Tamil Nadu", booklet entitled .. | 894 |
| Fisheries, Performance Budget, 1982-83 .. | 104 |
| Forests, Performance Budget, 1982-83 .. .. | 103 |
| General Sales Tax Act, 1959— | |
| Reduction in rate from four per cent to three per cent multipoint in respect of tax on sale of polyster staple fibre manufactured by the Indian Organic Chemicals Limited, Manali, Madras (G.O. Ps. No. 175, Commercial Taxes and Religious Endowments, dated 15th February 1982) .. .. .. .. .. | 703 |
| Indian-Made Foreign Spirits (Supply by Wholesale) Rules, 1981, amendments to—(G.O. Ms. No. 196, Prohibition and Excise, dated 21st August 1981). .. .. .. .. .. | 102 |
| Indian Medicine, Performance Budget, 1982-83 | 104 |
| Industrial Policy and Programmes (Major Industries), 1982-83 .. .. .. | 704 |
| Industrial Policy and Programmes (Rural and Small Industries), 1982-83 .. .. .. | 704 |
| Industries, Performance Budget, 1982-83 .. | 894 |
| Irrigation and Ground Water, Performance Budget, 1982-83 .. .. .. | 499 |




P—*cont.*


| | PAGES |
|---|---|
| PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.* | |
| Khadi and Village Industries Board, Tamil Nadu, Policy and programme of .. .. | 704 |
| Medical Education Department, Performance Budget, 1982-83 .. .. .. .. | 103 |
| Medical Services and Family Planning, Performance Budget, 1982-83 .. .. .. | 103 |
| Metro Water, booklet on—, 1982 .. .. | 103 |
| MOTOR VEHICLES TAX— | |
| Concessional rate of tax on Vehicle TMZ 4573, [G.O. Ms. No. 2743, Home (Tr. I), dated 19th November 1981] .. .. | 102 |
| Exemption of vehicles, not using public roads, from—[G.O. Ms. No. 2742, Home (Tr.I), dated 19th November 1982] .. .. | 102 |
| Note on Demand for Building Grants for 1982-83 | 499 |
| Official Language Act, 1956— | |
| Appointment of first day of February 1982 as the date of coming into force of sub-section (1) of section 4B in Civil Courts (G.O. Ms. No. 9, Law, dated 18th January 1982) .. .. | 703 |
| Public Health— | |
| Performance Budget, 1982-83 on—and Preventive Medicine, Primary Health Centres, State Health Transport Organisation, Drug Control Adminisration and Environmenal Hygiene, laid on the table | 104 |
| Periyar-Vaigai Improvement Project, Booklet on | 499 |
| Police, Review of Tamil Nadu .. .. | 893 |

PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSES—*cont.*

Policy Note on Adi Dravidar and Tribal Welfare, 1982-83 .. .. .. .. 351

Policy Note on Adi Dravidar and Tribal Welfare, 1982-83 ' Annexures to .. .. .. 351

Policy Note on Administration of Hindu Religious Endowments Act, 1959 .. .. 893

Policy Note on—

Administration of Justice .. .. .. 704

Agriculture, .. .. .. .. 351

Backward Classes .. .. .. 351

Cinchona Department .. .. .. 103

Co-operation Department .. .. 893

Education .. .. 102

Fisheries .. .. .. 103

Food situation in Tamil Nadu .. 103

Forest Department .. .. .. 103

Housing and Urban Development in Tamil Nadu 103

Information and Film Technology .. .. 103

Irrigation .. .. 499

Labour in Tamil Nadu .. .. .. 893

Leprosy Beggars Rehabilitation Programme .. 103

Medical .. .. .. 103



PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Policy Note On—*cont.*

Registration Deparment .. .. 704

Stamps Administration .. .. .. 703

State Excise Department .. .. 103

Tourism .. .. .. 103

Working of Stationery and Printing Department 103

Public Health and Preventive Medicine, Primary Health Centres, State Health Transport organisation, Drug Control Administration and Environmental Hygiene, Peformance Budget, 1982-83 104

Public Works Department, review of—for 1981-82 499

Revenue Department, Performance Budget, 1982-83 ·99

Road Development Programmes in Tamil Nadu, Review 1981-82 and Programmes for 1982-83 351

Sales Tax—

Amendment to Notification published as Commercial Taxes and Religious Endowments Department Notification No. II(1)|CT&RE|54|78, dated 25th February 1978 (G.O. Ps. No. 43, C.T. & R.E. Department, dated 5th January 1982) .. 703

Exemption of renewable energy equipments and devices and systems designed to use solar biomass and wind energy, from—(G.O. Ps. No. 1273, Commercial Taxes and Religious Endowments, dated 16th November 1981) 101

Exemption of sale of fresh milk, recombined milk and milk drink for being sold as a beverage from—(G.O. Ps. No. 1340, Commercial Taxes and Religious Endowments, dated 10th December 1981) .. .. 101

PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—cont.

Sales Tax—*cont.*

Exemption of sales of goods manufactured by inmates of Sri Sarada Sevashramam, Pallathur from—(G.O. Ps. No. 1288, Commercial Taxes and Religious Endowments, dated 20th November 1981) .. .. .. 101

Exemption of sale of Spectacles from—(G.O.P. No. 1406, Commercial Taxes and Religious Endowments, dated 24th December 1981) .. 101

Exemption of sale of Zari by Tamil Nadu Zari Limited, Kancheepuram from—(G.O Ps. No. 1219, Commerial Taxes and Religious Endowments, dated 31st October 1981) .. .. 101

Reduction in rate of—for automobile spare parts (G.O. Ps. No. 1176, Commercial Taxes and Religious Endowments, dated 20th October 1981) .. .. .. 101

Reduction in rate of—on tea sold at auction centres of Coimbatore and Coonoor (G.O. Ps. No. 1249, Commercial Taxes and Religious Endowments, dated 9th November 1981) .. 100

School Education, Collegiate Education and Technical Education—Performance Budget, 1982-83 .. .. .. .. 102

Sericulture Department, Performance Budget, 1982-83 .. .. .. 704

"Siru Thozhilkalukku SIDCO-vin Chirappana Sevai 1982", booklet entitled .. .. 704

Small Scale and Cottage Industries Loan and Subsidy Rules, 1956, amendment to—(G.O. Ms. No. 1212, Industries, dated 27th August 1981) 102



PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Statement *re* follow up action on suggestions and observations made by Members of the Legislature during discussion on Demand on Irrigation for 1981-82 .. .. .. .. 499

Sugar Industry, Performance Budget, 1982-83 .. 704

Supplement to Demand No. 19—Sewerage and Water Supply, 1982-83 .. .. 103

Tamil Nadu Agro Industries Corporation Limited, Review for 1981-82 .. .. 102

Tamil Nadu Consumers Co-operative Federation Limited, Note on working of—1981-82 .. 894

Tamil Nadu Co-operative Milk Supply Schemes, 1982-83—booklet entitled .. .. 704

Tamil Nadu Co-operative State Land Development Bank Limited, note on working of—as on 30th June 1981 .. .. .. 894

Tamil Nadu Khadi and Village Industries Board, reconstitution of—(G.O. Ms. No. 1493, Industries dated 2nd November 1982) .. .. 351

Tamil Nadu State Co-operative Bank Limited, note on working of—as on 31st December 1981 .. 894

Tamil Nadu Water Supply and Drainage Board—booklet on .. .. .. .. 103

Thamizhakathil Pattu Thozhil—booklet entitled .. 704

Town and Country Planning Act, 1971—

Detailed Development Plan for Killiyur area, approval of—(G.O. Ms. No. 1417, Housing and Urban Development, dated 27th October 1980) 102

P—*cont.*

PAGES

PENSION—

Question *re*—

*Ad hoc* pensioners who were in Municipal Service and retired prior to 14t January 1970, representation *re* grant of minimum pension with effect from 1st April 1978 .. .. .. .. 794—795

Grant of—to retired employees of Panchayat Unions

PENSIONERS—

Question *re* enhancement of Festival Advance to .. 602—604

PERIYAR-VAIGAI IMPROVEMENT PROJECT—

Booklet on—, laid on the table .. .. 499

PICK-POCKET—

Question *re*—

Action taken by Police Department to reduce caces of picking of pocket .. .. 593—598

Number of persons arrested and convicted in Madras City from 1978 to 1980 for picking of pockets .. .. .. .. 593

POLICE—

Review of Tamil Nadu—, laid on the table .. 893

POLICE FIRING—

Minister's attention called to—during Jallikattu at K. V. Kuppam Village near Gudiyatham .. 178—179

POLICY NOTE ON—

Adi Dravidar and Tribal Welfare 1982-83, Annexures to, laid on the table .. .. .. .. 301



P—*cont.*

PAGES

POLICY NOTE ON—*cont.*

Adi Dravidar and Tribal Welfare 1982-83 laid on the table .. .. .. .. 501

Administration of Justice laid on the table .. 704

Agriculture, 1982-83, laid on the table .. .. 351

Backward Classes, 1982-83, laid on the table .. 351

Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 621—703

Cinchona Department, laid on the table .. 103

Co-operation Department, laid on the table .. 893

Dairy Development Department and Producers Federation, laid on the table .. .. .. 704

Education— .. .. .. .. 34—100

Discussion on .. .. .. .. 179—350

Laid on the table .. .. .. 102

Fisheries, laid on the table .. .. .. 103

Food situation in Tamil Nadu, laid on the table 103

Forest Department, laid on the table .. .. 103

Hindu Religious Endowments Act, 1959, laid on the table .. .. .. .. .. 893

Housing and Urban Development in Tamil Nadu, laid on the table .. .. 103

Information and film Technology, laid on the table 103

Irrigation, laid on the table .. .. .. 499

Labour in Tamil Nadu, laid on the table .. .. 893

Leprosy Beggars Rehabilitation Programme, laid on the table .. .. .. .. 103

PAGES

POLICY NOTE ON—*cont.*

Medical and Public Health, discussion on .. 386—499

Registration Department, laid on the table .. 704

Stamps Administration, laid on the table .. 703

State Excise Department, laid on the table .. 103

Stationery and Printing Department, laid on the table .. .. .. .. 103

Tourism, laid on the table .. .. .. 103

'PNEUMONIA'—

Serious attack of—on children in Madras City, Minister's attention called to .. .. 807—810

PONNAIYAN, The Hon. Thiru C.—

Information *re* anonymous threatening telephonic calls allegedly received by Ramamoorthy, Thiru K., M.L.C. .. .. 612

Judicial Second Class Magistrates, statement *re* contravention of Article 50 of Constitution of India in appointment of .. .. .. 617—619

PRIVILEGE ISSUE *re*—

Circular of Secretary to Government, Education Department, and Director of School Education about sending of replies to Members of the Legislature .. .. .. .. 23—29

PRIVILEGES COMMITTEE(S)—

*See* Committees

PUBLIC HEALTH—

Policy Notes on Medical and—, discussion on .. 386—499



PAGES

PUBLIC UNDERTAKINGS COMMITTEE—

*See* Committees.

PUBLIC WORKS DEPARTMENT—

Question *re* number of Inspection Bungalows under control of—, number of—districtwise and number of—in disrepair .. .. 803—805

Review of—for 1981-82, laid on the table .. 499

Q

QUESTION HOUR—

Dispensed with on 20th March 1982 .. .. 178

QUESTIONS AND ANSWERS—

Anandam, Thiru V. V. V.—

Question *re* Bridge across Kowsiga Manathi on outskirts of Virudhunagar on No. 7 Virudhunagar-Sathur National Highways, widening of .. 11

Correction of answer to supplementary question to starred question 8 on 2nd February 1982 regarding Sirumalai river scheme .. .. 386

Damodaran, Thiru A. R.—

Question *re* *Ad hoc* pensioners who were in Municipal Service and retired prior to 14th January 1970, representation *re* grant of minimum pension of Rs. 100 to—with effect from 1st April 1978 .. .. .. 794—795

Lakshmikandhan, Thiru C. R.—

Question *re*—

Card Billing system for power consumption in Tamil Nadu, introduction of—and number of employees newly appointed for .. .. 355

Deputy Chief Engineer of National Highways Department, upgradation of post to that of Superintending Engineer .. .. 9—10

PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Lakshmikandhan, Thiru C. R.—*cont.*

Question *re—cont.*

Electricity tariff for Temples, Mosques and Churches, change in .. .. .. 355—357

Films, "Sivappumalli" and "Thanneer Thanneer", request to Central Government by State Government to ban .. .. 3—8

Pick-pocketing, action taken by Police Department to reduce .. .. .. 593—598

Pick-pocket, number of persons arrested and convicted in Madras City from 1978 to 1980 593

Teachers for Municipal Higher Secondary Schools and High Schools, number of posts sanctioned during 1980-81 and number of posts surrendered 791—792

Leelavathi, Selvi A—

Question *re*—

Graduate and Tamil Teachers allotted by Government in 1980-81 to Madras Corporation High Schools, number of—and filling up of posts .. .. .. .. 8—9

Superintendents and Assistant Inspectors in Madras Corporation belonging to one and the same category, difference in pay scale of .. 362

Meenakshisundaram, Thiru K.—

Question *re*—

Depot of Cholan Transport Corporation at Thiruthuraipoondi, non-availability of enough space to park buses at .. .. 18—19



PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Meenakshisundaram, Thiru K.—*cont.*

Question *re—cont.*

Fake tickets in buses belonging to Pallavan and Periyar Transport Corporations, detection of issue of—during November 1981 .. .. 19—22

Rameswaram—Dhanushkodi Road affected during 1964 by Cyclone, hardship caused to Tourists and Pilgrims due to non-repair of .. .. 10

Tiruchirappalli Municipality, upgradation as a Corporation .. .. .. 795—798

Travellers' Bungalow at Mohanur, Salem district, under the control of Highways Department, provision of amenities in .. .. 373—375

Muthuswamy, Thiru S.—

Question *re*—Kannamangalam-Reddipalayam link road in Arni Taluk, brininging under control of Highways Department .. .. 363—371

Ramamoorthy, Thiru K.—

Question *re*—

Cultivable lands donated to Government Hospitals, names of hospitals and annual income from 12—14

Film Institute, Tamil Nadu, Adyar, number of students studying in—as on 1st December 1981 .. .. .. 1—3

Government Hospitals with Blood Bank facilities in South Arcot district, names of—and number of—in working condition .. .. 799—802

Treatment for diabetes in Government General Hospital, Madras, number of in-patients and out-patients receiving .. .. .. 375—379

Water-supply for Tindivanam Municipality, inadequacy of .. .. .. 608—610

PAGES

QUESTIONS AND ANSWERS—cont.
Sankaralingam, Thiru, M.—
Question *re*—
Inspection Bungalows under Public Works Department's control, number of—district, wise and number of—in disrepair .. .. 803—805
Lands acquired for the Harrijan Colony, West of Kulathucheri Agastheeswaram Taluk, Kanyakumari district, .. .. .. .. delay in granting of patta to .. .. 610—611
Santosham, Thiru D.—
Question *re*—
Rubber-based Industry in Kanyakumari district, starting of .. .. .. 361
Tamil Nadu Raffle Tickets, prize money remaining unpaid .. .. .. 600—602
Tirunelveli-Kanyakumari Railway Line, agitation against detaching of—from Madurai Railway Division and attaching of—to Trivandrum Railway Division .. .. .. 787—790
Swaminathan, Thiru G.—
Question *re*—
Dialysis Machine in Stanley Medical College Hospital, Madras, appointment of a qualified Nephrologist to operate .. .. 14—17
Retired employees of Panchayat Unions, grant of pensionery benefits to .. .. .. 791—792
Thomas, Thiru P. R.—
Question *re*—
Cheran Transport Corporation, sharing of profit from body building for Government vehicles with workers .. .. .. 790—791
Festival Advance to Pensioners, enhancement of 602—604
Municipal Higher Secondary School, Palani, Madurai district, appointment of Assistant Headmaster for .. .. .. 371—372





PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*
Thomas, Thiru P. R.—*cont.*
Question *re*—
Teachers working under Backward Class Department, award of Selection Grade from the date it was awarded to Teachers under Education Department instead of from 1978 .. .. 598—600
Vasantha Pai, Thiru G.—
Question *re* Government Pleaders, increase in number of—and drafting of Counter Affidavit by 604—608

R

RAFFLE TICKETS—
Question *re* Tamil Nadu—, prize money remaining unpaid .. .. .. .. 600—602
RAGHAVANANDAM, The Hon. Thiru S.—
Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 674, 694
Policy Note on Education, discussion on .. 227
Supplementary Statement of Expenditure for 1981-82, (Final), discussion on .. .. 820, 827
RAILWAYS—
Question *re* Tirunelveli—Kanyakumari Railway Line, agitation against detaching of—from Madurai Railway Division and attaching of the same to Trivandrum Railway Station .. .. .. 787—790
RAJA MOHAMED, The Hon. Thiru K.—
Adjournment motion *re* S.S.L.C. Public Examination held on 22nd March 1982 at Madras, wrong distribution of question papers in .. .. 612—617
Correction of answer to supplementary question to Starred Question 8 on 2nd February 1982 regarding Sirumalai River scheme .. .. 386

R—cont.

PAGES

RAJA MOHAMED, The Hon. Thiru—*cont.*

Police firing during Jallikattu in K. V. Kuppam village near Gudiyatham, statement *re* .. .. 179

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. 621, 655, 656, 672

Policy Note on Education, discussion on .. .. 262

Question-hour, dispensation with—on 20th March 1982 .. .. .. 178

Statement of Supplementary Expenditure for 1981-82 (Final), presentation of .. .. 383—385

RAMACHANDRAN, The Hon. Thiru M. G.—

Policy Note on Education, discussion on .. 259—260, 261, 262, 263—264, 265, 266, 267, 268, 269, 270, 271, 272

RAMACHANDRAN, The Hon. Thiru S.—

Second Thermal Station in Neyveli, statement *re* agitation launched by villagers affected by land acquisition for .. .. .. 31

RAMALINGAM, Thiru C.—

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 671

Policy Note on Education, discussion on .. 77—80



R—*cont.*

PAGES

RAMAMOORTHY, Thiru K.—

Information *re* anonymous threatening telephone calls allegedly received by— M.L.C. .. .. .. 612

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 629, 631—632, 633, 634, 635, 641, 653, 654, 655—656, 679, 702

Policy Note on Education, discussion on .. .. 185, 208 225, 227, 235, 253—276, 292, 297, 298

Policy Notes on Medical and Public Health, discussion on .. .. .. 387, 427—435, 460, 466, 476, 497

Statement of Supplementary Expenditure for 1981-82 (Final), discussion on .. .. 842—853 891

RAMESWARAM-DHANUSHKODI ROAD—

*See* Roads

REGISTRATION DEPARTMENT—

Policy Note on—, laid on the table .. .. 704

REVENUE DEPARTMENT—

Performance Budget, 1982-83, laid on the table .. 499

ROAD DEVELOPMENT PROGRAMMES—

Review of—in Tamil Nadu, 1981-82 and Programmes for 1982-83, laid on the table .. .. .. 351

PAGES

ROAD(S)—

Question *re*—

Kannamangalam—Reddipalayam link road in Arni Taluk, bringing under control of Highways Department .. .. 363—371

Rameswaram—Dhanushkodi—affected during 1964 by Cyclone, hardship caused to tourists and pilgrims due to non-repair of .. .. 10

RUBBER INDUSTRY—

Question *re* starting of—in Kanyakumari district .. 361—362

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Adjournment motion *re* distribution of question papers of S.S.L.C. Examination on a particular subject wrongly in Muslim Higher Secondary School, Triplicane—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House .. .. .. .. 612—617

Privilege issue *re* letters issued by the Secretary, Education Department and the Director of School Education to the effect that replies need not be sent to representations made by Members of the Legislature in their capacity as representatives of unrecognised Association of Teachers—Point raised and ruling deferred .. .. .. 23—29

Statement of Supplementary Expenditure—

Discussion should be only on items included in the Statement of Supplementary Expenditure .. 810

S

SALES TAX—

Amendment to Notification published as Commercial Taxes and Religious Endowments Department Notification No. II(1)|CT&RE|54|78, dated 25th February 1978, notification laid on the table .. .. .. .. .. 703



PAGES

SALES TAX—*cont.*

Exemption of renewable energy equipments and devices and systems designed to use solar biomass and wind energy from—, notification laid on the table .. .. .. 101

Exemption of sale of fresh milk, recombined milk and milk drink for being sold as a beverage from—, notification laid on the table .. .. 101

Exemption of sale of goods manufactured by inmates of Sri Sarada Sevashramam, Pallathur from—, notification laid on the table .. .. 101

Exemption of sale of spectacles from—, notification laid on the table .. .. .. 101

Exemption of sale of Zari by Tamil Nadu Zari Limited, Kancheepuram, notification laid on the table .. .. .. .. 101

Reduction in rate of—for automobile spare parts, notification laid on the table .. .. 101

Reduction in rate from four per cent to three per cent multipoint in respect of tax payable on sale of polyster staple fibre manufactured by Indian Organic Chemicals Limited, Manali, Madras, notification laid on the table .. .. .. 703

Reduction in rate of—on tea sold at auction centres of Coimbatore and Coonoor, notification laid on the table .. .. .. 100

SCHOOLS—

Question *re*—

Madras Corporation High Schools, number of posts of Graduate and Tamil Teachers allotted by Government in 1980-81 to—and filing up of posts .. .. .. .. 8—9

Municipal Higher School, Palani, Madurai district, appointment of Assistant Headmaster for .. .. .. .. 371—372

SEETHAPATHY, Thiru R. D.—
Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 635, 636
Policy Note on Education, discussion on .. .. 262, 271
Statement of Supplementary Expenditure for 1981-82 (Final), discussion on .. .. 889

SERICULTURE DEPARTMENT—
Performance Budget, 1982-83, laid on the table .. 704

SEWERAGE AND WATER SUPPLY—
Errata to Policy Note on 'Supplement to Demand No. 19', 1982-83 .. .. 499
Supplement to Demand No. 19, 1982-83, laid on the table .. 103

"SIRU THOZILKALUKKU SIDCO-VIN CHIRAPPANA SEVAI 1982"—
Booklet entitled—, laid on the table .. .. 704

SMALL SCALE AND COTTAGE INDUSTRIES LOAN AND SUBSIDY RULES, 1956—
Amendment to—, notification laid on the table .. 102

STAMPS ADMINISTRATION—
Policy Note on—, laid on the table .. 703

STATEMENT OF SUPPLEMENTARY EXPENDITURE FOR 1981-82, FINAL—
Discussion on .. .. 810—893
Presentation of .. .. 383—385



STATIONERY AND PRINTING DEPARTMENT—
Policy Note on working of—, laid on the table .. 103

SUGAR INDUSTRY—
Performance budget, 1982-83 laid on the table .. 704

TAMIL NADU AGRO INDUSTRIES CORPORATION LIMITED—
Review of—for 1981-82, laid on the table .. 102

TAMIL NADU CONSUMERS CO-OPERATIVE FEDERATION LIMITED—
Note on working of—, 1981-82 .. 894

"TAMIL NADU CO-OPERATIVE MILK SUPPLY SCHEMES, 1982-83"—
Booklet entitled—, laid on the table .. .. 104

TAMIL NADU CO-OPERATIVE STATE LEVEL DEVELOPMENT BANK LIMITED—
Note on working of—as on 30th June 1981, laid on the table .. 894

TAMIL NADU KHADI AND VILLAGE INDUSTRIES BOARD—
Policy and Programme of—, laid on the table .. 704
Reconstitution of—, notification laid on the table .. 351

TAMIL NADU WATER SUPPLY AND DRAINAGE BOARD—
Booklet on—, laid on the table .. 103

T—*cont.*

PAGES

TANFED—

Booklet entitled "Farmers Friend—A Co-operative for the farmers of Tamil Nadu", laid on the table .. .. .. .. 894

TARA CHERIAN, Thirumathi—

Policy Note on Education, discussion on .. 222—230

Supplementary Statement of Expenditure for 1981-82 (Final), discussion on .. .. 838, 877—878

TEACHERS—

Question *re*—

Graduate and Tamil—allotted by Government in 1980-81 to Madras Corporation High Schools, number and filling up of .. .. 8—9

Number of posts of—for Municipal Higher Secondary Schools and High Schools sanctioned during 1980-81 and number of posts surrendered .. 791—792

Teachers working under Backward Classes Department, award of Selection Grade from the date it was awarded to Teachers under Education Department instead of from 1978 .. .. 598—600

"TAMIZHAKATHIL PATTU THOZHIL"—

Booklet entitled—, laid on the table .. .. 704

TELEPHONES—

Information *re* anonymous threatening telephonic calls received by Ramamoorthy, Thiru K., M.L.C. 612



T—*cont.*

PAGES

THIRUTHRURAIPOONDI DEPOT—

*See* Transport

THOMAS, Thiru P. R.—

Doctors with similar qualifications working in Rural Dispensaries and Urban Hospitals under Government control, calling Minister's attention to disparity in pay and allowances of .. .. 32,33

Judicial Second Class Magistrates, calling Minister's attention to contravention of Article 50 of Constitution of India in appointment of .. 617—619

Policy Note on Education, discussion on .. 87—100, 327—328

TOURISM—

Policy Note on—, laid on the table

TOWN AND COUNTRY PLANNING ACT, 1971—

Detailed Development Plan for Killiyur area, approved, notification laid on the table .. .. 102

TRANSPORT—

Question *re*—

Cheran Transport Corporation, sharing of profit from body building for Government vehicles with workers .. .. .. 790—791

Depot of Cholan Transport Corporation at Thiruthuraipoondi, non-availability of enough space to park buses at .. .. .. 18—19

Fake tickets in buses belonging to Pallavan and Periyar Transport Corporations, detection of—during November 1981 .. .. 19—22

PAGES

TRAVELLERS BUNGALOW—

Question *re* provision of amenities in—at Mohanur, Salem district, under the control of Highways Department .. .. 373—375

VALLIMUTHU, Thiru E. V. R.—

Policy Note on Backward Classes and Adi-Dravidar and Tribal Welfare, discussion on 642

VEERASAMY, Thiru ARCOT N.—

Adjournment motion *re* S.S.L.C. Public Examination held on 22nd March 1982 at Madras, wrong distribution of .. .. 612—617

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 635, 638, 639, 642

Policy Note on Education, discussion on .. .. 90, 208, 262, 265, 276—310, 322

Policy Notes on Medical and Public Health, discussion on .. .. .. .. .. 435—457, 460, 461, 463, 464, 465, 447, 478, 481, 484, 488—489, 490, 494, 495, 497, 497—498

Statement of Supplementary Expenditure for 1981-82 (Final), discussion on 854—866, 877, 881



Y2N.52 N83 N83.187

VENKATESAN, Thiru E. S.—

Thiruvalluvar Transport Corporation bus, calling Minister's attention to setting fire to—opposite to Meenambakkam Airport on 9th March 1982 .. 379—380

VICE-CHAIRMAN (Thiru C. RAMALINGAM)—

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discussion on .. .. 661—663

VIJAYASARATHI, The Hon. Thiru M.—

Policy Note on Backward Classes and Adi Dravidar and Tribal Welfare, discusion on .. .. 622, 694—701, 702

W

WATER SUPPLY—

Question *re* inadequacy of—for Tindivanam Municipality .. .. 608—610

Metro water, booklet on—, 1982 .. .. 103

122063